

அமுதசுரபி


தீபாவளி மலர் '94



விலை ரூ. 40







அமுதசுரபி

தீபாவளி மலர் '94

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே - பாரதியார்

அமுதசுரபி 47ஆவது தீபாவளி மலர் நவம்பர் 1994 இதழின் சிறப்பு இணைப்பாக வெளிவருகிறது.

ஆசிரியர் : கலைமாமணி விக்கிரமன்
பதிப்பாளர் : ஏ.வி.எஸ். ராஜா
கௌரவ இலக்கிய ஆலோசகர் : என்.வி. சுப்பிரமணியன்
மலர் ஆப்செட் அமைப்பு : சிவகுமார்

மலரை அலங்கரித்த ஓவியர்கள் :
அமரர் சில்பி, கோபுலு, ஸுபா, வினு, ஜி.கே. மூர்த்தி, ஜெயராஜ், மாருதி, மாயா, ராமு, மணியம் செல்வன், செல்லம், அரஸ், ராஜகுமாரி, கலைமதி, சி.ஏ. இராமச்சந்திரன், ஸ்யாம், கரோ, சிவகுமார், எழில், வேதா, ஸ்கார்பியோ, சுதர்ஸன், விசு, ராம், கீதா கவிகுமார்.


மேலட்டை ஓவியம் : கோபுலு

மகா பெரியவர், விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், எம்.வி. ஜயராமன், நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பிரபு, சிவகுமார் :
முழுப் பக்க வண்ணப் படங்கள் : யோகா

கட்டுரைகள்

தீபாவளி மலரில் வெளிவந்துள்ள கதைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள் கற்பனையே. யாரையும் சுட்டுவன அல்ல.






சிறுகதைகள்

சித்திரக்கதை

கவிதைகள்





ஓவியம் : அமரர் 'சில்பி'. கூத்தனூர் ஸ்ரீசரஸ்வதி



ஆதிசிவன் பெற்றெடுத்த பிணி மூப்பு இல்லா தமிழ் அன்னையே!

அகத்தியரையும், தொல்காப்பியரையும் சங்கச் சான்றோரையும் பெற்றெடுத்த செந்தமிழ் அன்னையே!

சிந்தையெலாம் இனிக்கும் செல்வங்கள் அருளிய சிந்தாமணியே!

காவிரி தென் பெண்ணை பாலாறு தமிழ் கண்ட வையை பொருனையைப் பேணிப் பாராட்டி வளம் கூட்டும் மேனி செழித்த தமிழ்நாட்டைப் பெற்றவளே!

கள்ளையும் தீயையும் சேர்த்து, நல்ல காற்றையும் வான வெளியையும் சேர்த்து, இளங்கோவடிகளும், நத்தனாரும், கம்பரும், சுந்தரனாரும், பாரதியும், கண்ணதாசனும் தீஞ்சுவை செய்து கொடுத்து அலங்கரிக்கப்பட்ட தெய்வ அணங்கே!

சிங்களம் முதல் தீவு பலவினுஞ் சென்று அங்கு தங்கள் புலிக்கொடி மீன்கொடியும் நாட்டிய சீனமிசிரம் யவனரகம் இன்னும் தேசம் பலவும் புகழ் வீசிக் கலை ஞானம் படைத் தொழில் வாணி பமும் மிக நன்று வளர்த்த வீரத் திருமக்களைப் பெற்று வளர்த்தவளே!

தாரணியெங்கும் புகழ்ச் சாத்திரம் பல படைத்த அறிஞரைப் பெற்றெடுத்துப் பேணி வளர்த்தவளே!

உன் மனத்திற்கினிய மைந்தன் மகாகவி பாரதி நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் பேசியிருப்பதை நீ அறிவாய்.

தாயே! உன்னை

'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மை படைத்தவள்' என்று,

'வானம் அறிந்தது அளந்து அறியும் வல்லமை பெற்றவள்' என்று,

'ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசும் இசை கொண்டவள் என்றும்

பெருமிதத்தோடு பேசிய நின் தவப்புதல்வன் பாரதி,

'தம் கலி நீக்கித் துயரங்கள் போக்கி வாழ்விக்கும்

வரமருள்பவள்' எனும் பெரும் நம்பிக்கையோடு 'வரமருள்' என உன் 'திருவருள்' வேண்டினார்.

மகாகவியின் திருவாக்கை இந்தப் புனித நாளில் உன் கருணை நிறைந்த திருமுன் சமர்ப்பிக்கிறேன்.

தாயே! செல்வம் எத்தனையுண்டோ புவிமீதே அவை யாவும் படைத்த தமிழ்நாடு தொழில் வளத்தில் மேன்மையடைய வேண்டும்.

புத்தம் புதிய கலைகள் பஞ்ச பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் மேன்மைக் கலைகள் தமிழ்நாட்டில் சிறக்க வேண்டும்.

"கூடும் திரவியத்தின் குவைகள் – திறல்
கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் – இவை
நாடும் படிக்குவினை செய்து – இந்த
நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்க – எமை
உய்யக் கொ...டருள வேண்டும் – அடி
உன்னைக் கோடிமுறை தொழுவோம் – இனி
வையத் தலைமையெமக் கருள்வாய் – அன்னை
வாழி! நின்னதருள் வாழி! – சந்திரமன்

என் இலக்கிய வாழ்க்கை



சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

இலக்கியம் என்பது லட்சியம் என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாகும். தூய தமிழில் குறிக்கோள் என்றும் பொருள் கொள்ளலாம். இலக்கியத்தின்படி வாழ்வதென்பது அவ்வளவு சுலபமல்ல, 'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

வாழ்க்கையிலே குறிக்கோள்படி வாழாதவன், அவனே தன்னைக் கெடுத்துக் கொள்கிறான் என்பதே இதன் பொருள்.

அதுபோல், நான் இலக்கியம் என்றால் என்ன என்று தெரிந்து கொள்ளாத காலத்திலேயே இலக்கிய நெறிப்படி வாழ்ந்தேன் என்று உறுதியாகச் சொல்ல முடியும். இதற்கு என் அன்னையே காரணம்.

வறுமை காரணமாக எனது பள்ளிப்படிப்பு மூன்றாம் வகுப்பிற்குள் முடிந்து விட்டது. அதற்கு பிறகு வேலை செய்யப் போனேன். முதலில் நெசவுத் தொழிலாளியாகவும், பின்னர் அச்சுத் தொழிலாளியாகவும் வேலை செய்தேன்.

நான் நெசவுத் தொழிலாளியாக வேலை செய்தது இரண்டு வகைப்பட்டது. சொந்தத்தில் தறி போட்டு தொழில் நடத்தினேன். பின்னர் பிறரிடம் போய் கூலிக்கு வேலை செய்பவனாக இருந்தேன்.

சொந்தத் தொழிலாகப்பட்டது, வீட்டில் எனது தந்தையும் தம்பியும் மது தொழிலில் ஈடுபட்டு இருந்தார்கள். என் தந்தை கள் இறக்கும் தொழிலாளி. தம்பி கள் விற்கும் வணிகன்.

என்னுடைய தாய்மாமன் பெரும் பணக்காரர். அவர் கள்ளுக்கடையின் சொந்தக்காரர். தென்னந் தோப்புகளும் அவருக்கு இருந்தன. கள் இறக்கும் தொழிலாளிக்கு தங்கையைக் கொடுத்துவிட்டு, பின்பு அதையே காரணமாகச் சொல்லி, என் தாயாரை அவர்கள் புறக்கணித்து விட்டார்கள். அதனால் என் அன்னையின் உடன் பிறந்த அண்ணன் - பெரும் பணக்காரராக இருந்தும் என் அன்னையார் ஒரு தொழிலாளியை மணந்த பாவத்திற்காக ரொம்பவும் சிரமப்பட்டார்.

ஆகவே, 'சோஷலிஸம்' என்றால் என்ன என்பதை என் வாழ்க்கைத் துன்பங்களால் அறிந்தேன். பணக்காரர்களின் கொடுமையை, ஒரு தொழிலாளியின் மகனாகப் பிறந்ததால் அறிந்தேன்.

தொழிலதிபர்களிடம் வேலை செய்தபோதும் அறிந்தேன். அதனால் வாழ்க்கையிலே நான் பெரும்பாலும் கைவிட முடியாத ஒரு குறிக்கோளாக சோஷலிஸத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறேன்.

அரசியல் தலைவர், குரு என்றெல்லாம் நான் கருதிய ராஜாஜி அவர்கள், 'சோஷலிஸத்தின் முதல் நம்பர் எதிரி' என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு, 'சுதந்திரா கட்சி'யைத் தொடங்கியபோது, நான் அவருக்கு எதிர் அணியின் முதல் ஆளாக நின்றேன். நான், 'சோஷலிஸத்தை ஒரு நாளும் விட முடியாது' என்றேன்.

'குறிக்கோள்' என்பது இலக்கியத்தில் வருகிறபோது படிப்பதற்குச் சுவையாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் கடைப்பிடிப்பது துன்பங்களையே கொண்டு வந்து குவிக்கும். ஆனால் இலக்கிய நெறிப்படி வாழ்கிறோம் என்கிற மகிழ்ச்சியும் பெருமிதமும் நமக்கு ஏற்படுவது இயற்கை.

சட்டத்தைப் போன்றது இலக்கணம். சரித்திரம் போன்றது இலக்கியம். அதுபோல, சட்டத்தைப் போன்ற இலக்கியமானது திருக்குறள். திருக்குறளைப் படிக்கிறபோது 'இப்படியெல்லாம் வாழ முடியுமா, மனிதன்?' என்று மலைப்பும் திகைப்பும் ஏற்படுகிற போது அப்படியெல்லாம் வாழ்ந்தார்களே என்று - வாழ்ந்தவர்களுடைய சரித்திரத்தை கதை பாவனையில் இலக்கியம் சொல்கிறது; கூறுகிறது.

சமுதாயத்தில் - வாழ்க்கையில் நீதி போன்றது திருக்குறள். அப்படி வாழ்ந்தவர்களுடைய சரித்திரம் போன்றது சிலப்பதிகாரம், இராமாயணம் போன்ற இலக்கியங்கள்.

என் தந்தை கூலித் தொழிலாளியாக - மது அருந்துபவர் என்றாலும், அவர் பொய் சொல்லி எனக்குத் தெரியாது; நான் பார்த்ததில்லை. அதே மாதிரி என் அன்னையார் தெய்வ பக்தியில் தொய்ந்து போனவர் என்று சொல்லலாம்.

இந்தக் காலத்து பாணியில் மூடநம்பிக்கை என்று சொல்லக்கூடிய அளவிற்கு அவர் தெய்வத்திடம் பக்தி கொண்டிருந்தவர்.

நான் பகலில் வேலைக்குப் போய் வந்தால், இரவில் அவர் தெய்வ பக்திப் பாடல்களைக் கூறுவார். தேவாரம், திருவாசகம், திருஅருட்பா போன்ற பாடல்களைச் சொல்வார். அவருக்கு இசை ஞானமுண்டாதலால், நானும் விரும்பி அனுபவிப்பேன்.

பாடல்களை எழுதிக் கொடுத்து 'மனப்பாடம் செய்' என்பார். அப்படித்தான் என் இலக்கிய வாழ்க்கை ஆரம்பித்தது.

பக்தி இலக்கியம்தான் நான் முதலில் அணுகிய பெரிய இலக்கியம். எனக்கு தாய்மொழி மட்டுமல்ல தமிழ்; தாய் போதித்த மொழியும்தான்.

உண்மையில் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஐந்து வயது முடிந்தவுடனேயே ஆரம்பப் பள்ளிக்குப் போகிறான் என்று சொல்கிறார்கள். அது தவறு. குழந்தை பிறக்கும் போதே படிப்பு ஆரம்பமாகிறது. வியாசர் சொன்னார்: 'அபிமன்யு என்ற வீரன் தாயின்

வயிற்றுக் கருவில் இருந்தபோதே மகாபாரத கதையைக் கேட்டான்' என்று. தாயின் வயிற்றில் உருவாகும் கருவிற்குக்கூட உணரும் சக்தி உண்டு என்ற உண்மையைச் சொல்ல அப்படி சொல்லியிருப்பார்.

அதுபோல, வாழ்க்கையில் நான் பட்ட இன்னல்களே எனக்கு இலக்கியம்.

ஒவ்வொருவருக்கும் தாய்தான் முதல் ஆசிரியை; இல்லம்தான் ஆரம்பப்பள்ளி. இப்போது எஜுகேஷனலிஸ்ட் என்று சொல்லிக் கொண்டிருக்கிறவர்களுக்கு இந்த உண்மை புரியவே புரியாது. ஐந்து வயது முடிந்த பிறகுதான் படிப்பே ஆரம்பிக்கிறது என்று நினைக்கிறார்கள். இந்த மூடநம்பிக்கை முடிந்த முடிவாகிவிட்டது.

அவர்கள் 'படிப்பு' என்றால் எழுத்து அல்லது பாடங்கள் மூலம் படிப்பது என்று சொல்கிறார்கள்.

இது மூடநம்பிக்கையின் முதல் படி. நான் இந்த உண்மையை எத்தனையோ துணை வேந்தர்கள் மாநாடுகளில் சொல்லியிருக்கிறேன்; அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இசை இலக்கியங்களை என் அன்னையிடம்தான் செவிவழிக் கல்வியாகப் பயின்றேன். அப்படி தேவாரம், திருவாசகம், திருஅரு . பா போன்ற பக்திப் பாடல்களைப் பயின்றதால் னாளில் மனித வாழ்க்கையில் பக்தி எவ்வளவு பட ன் தரக்கூடியது என்பதையும் அறிந்தேன்.

வேறு மொழியினரைவிட தமிழ் மொழியாளருக்குத்தான் இந்த வாய்ப்புகள் அதிகம்.

பக்தி இலக்கியங்கள் தமிழில் குவியல் குவியலாக இருக்கின்றன. தேவாரம், திருவாசகம், திருஅருட்பா போல் எத்தனையோ ஆயிரம் பாடல்களை நம்மவர்கள் எழுதி இருக்கிறார்கள். அழிந்தவை போக சில ஆயிரம் பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன.

பக்தி இலக்கியங்கள் பாமரனைப் பண்டிதனாக்கும். அவனை மோட்சத்திற்குக் கொண்டு போகிறதோ, இல்லையோ? அது வேறு விஷயம். ஒழுக்கமாக வாழ உதவி புரியும்.

பக்தி இலக்கியங்களைப் படிக்கிறபோது, பள்ளியில் ஆசிரியர்கள் சொல்லித் தரும் பாடத்தை விட - ஊன் உருக, உயிர் உருகப் படிக்கிறோம். அதனால் பக்திப் பாடல்கள் மனதில் படிந்து விடுகின்றன. அது மட்டுமல்ல; ஆன்மாவையே பரிசுத்தப்படுத்துகின்றன.

எல்லா ஜாதியையும்விட இந்து ஜாதிக்கு மார்கழி மாதம் 'பக்தி மாதம்' என்று சொல்வார்கள். வேறு மதத்தாரும் சில மாதங்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதைவிட நமக்கு 'மார்கழி மாதம்' என்றால், பாடியே மகிழ்கிற மாதம் என்றும் சொல்லலாம்.

புற அழுக்கைப் போக்குவதுடன் அக அழுக்கைப் போக்கப் பயன்படுகிறது, இந்த மார்கழி மாதம்.

விடிந்து எழுந்தால் பாட வேண்டும், அல்லது வீதியில் பஜனை கோஷ்டியாக பாடிக் கொண்டே போகிறவர்களின் பாடல்களைக் கேட்க வேண்டும் என்ற ஒரு நியதியை வைத்தார்கள். இதுபோன்ற பக்தியில் இருந்துதான் என் இலக்கிய வாழ்க்கை ஆரம்பித்தது.

டி.வி. சுவாமிநாதன்

ஆறாப் பெருந்துயர்க்கு ஆறுதல் ஏதுமுண்டோ?



மூலத் தனிப் பொருளில் முக்தியில் லயித்துவிட்ட
முனிபுங்குவ புருஷோத்தம
ஆலின் நிழலமர்ந்த மௌனகுரு பூவுலகில்
அவதரித்த திருவடிவே
சீலம் மெய்ஞானம் சித்தசுத்தி கடுந்தவத்தால்
சீர்குலைக்கும் மூத்தகலி
காலத்தின் வினைமாற்றிய காஞ்சித் தவசிரேஷ்ட
கருணாலய நிதியே.

தயையின் விரிகடலாய்
தவத்தின் நெடுவெற்பாய்
வயதென்னும் வரம்பின்றி
வாக்கிறந்த பூரணமாய்

வீற்றுகாட்சி அருளாமல்
விதேஹ முக்திநிலை
ஏற்றுவிட்ட தெதனாலோ?
எங்கும் நீ நிறைந்துவிட்டாய்.

"எல்லோர் இதயத்துள்
எழுந்தருளிக் கோயில் கொண்டாய்
இல்லாத இடமில்லை
இறப்பேது ஞானியர்க்கு?"


"சச்சிதானந்த சாகரத்தில்
சங்கமித்தார் குருதேவன்
அச்சமில்லை அனுக்ரஹத்தின்
அமுத மழை பொழிவார்".


இத்தகைய அற(றி)வுரைகள்
எத்தனைதான் கேட்டாலும்
சித்தத்துப் பெருந்துயரம்
சிறிதளவும் குறைவதில்லை.

பித்துப் பிடித்ததுபோல்
பிருந்தா வனத்தின்முன்
நித்தம் விழிநீர் பொங்க
நெட்டுயிர்த்து நிற்கின்றோம்

சென்னியின் மேல் அருட்கரங்கள்
சென்ற ஆண்டு கூப்பியதும் - எமை

இந்நிலைக்கு ஆளாக்க
என்றுணர வில்லையாம்.





அமுதசுரபி தீபாவளி மலர்'94 • எங்கும் நிறைந்திருக்கும் மஹாப் பெரியவர் • வண்ணப்படம் : யோகா

ஞான அமுதம்


அமுதம் என்றால் அமிர்தம். சுரபி என்றால் காமதேனுவின் பெண். சாமான்யமாக பசுவின் பாலையே நன்றாகக் காய்ச்சிப் பக்குவப்படுத்தி சர்க்கரை, வாசனைத் திரவியம் போட்டு சாப்பிட்டால் அமிர்தம் போல் இருக்கிறது என்பார்கள். சுரபியின் மூலம் வரக்கூடிய அமிர்த மானது தேவர்கள்கூட அருந்தக் கூடிய அமிர்தமாகும். குறிப்பிட்ட காலம் வரை தேவர்களைச் சாகா நிலையை அடையச் செய்கிறது. அதைத் தான் தேவாமிருதம் என்பார்கள். ஞான அமிர்தத்தைப் பருகியவர்கள் உடல் அழிந்தாலும் அவர்கள் என்றுமே சாகா நிலையோடு நித்ய அமரராக விளங்குவர். அப்படிப்பட்டவர்களை எல்லாம் ஞானிகள், மகான்கள் என்று கூறுவார்கள்.


இப்படிப்பட்ட ஞானம் மிருதத்தைப் பருகவேண்டுமென்றால் வேதாந்த, சித்தாந்தக் கருத்துகளையெல்லாம் நாம் அறிந்து கொள்ள வேண்டும். வாயால் சாப்பிடக்கூடிய அமிர்தம் சாகா நிலையைத்






தராது. கேட்கக்கூடிய அமிர்தமொழி களை மனத்தால் நினைத்து புத்தியில் நிலைத்து, அனுபவத்தில் கொணர்ந்து ஆன்ம நிஷ்டையைப் பெறுவதே ஞானம் மிருதம். அப்படிப்பட்ட ஞானம் மிருதத்தை பகவத் கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் ஞானயக்ஞும் என் பதாலும் ஞானதீபம் என்பதாலும் ஆத்மாம்மிருதம் என்பதனாலும் உபதேசித்து உள்ளார்கள். கண்ண பிரானால் ஆரம்பிக்கப்பட்ட தீபா வளித் திருநாளில் பகவத்கீதை மூலம் ஞானம் மிருதத்தைப் பொழிந்த கீதை யின் தத்துவங்களை அறிந்து மனதிலே நிலை நிறுத்தி புத்தியின் மூலமாக நிச்ச யித்துக் கொண்டு ஞானம் மிருத நிலை அடைவதற்கு, கண்ணபிரானைப் பிரார்த்திப்போமாக.





அமுதசுரபி தீபாவளி மலர்'94 ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வண்ணப்படம் : யோகா

சமணப் பேரொளி



சமணத் தத்துவங்களை நான் பெரிதும் விரும்புகிறேன். மதிக்கிறேன். மறுபிறவி ஒன்று இருக்குமானால் நான் ஒரு சமணராகப் பிறக்க வேண்டும்.


– ஜார்ஜ் பெர்னார்ட் ஷா

காலம் நிற்பதில்லை. ஓடிக்கொண்டே இருக்கிறது. மனித வாழ்வும் அப்படித்தான். அந்த ஓட்டத்தில்தான் மனிதனுக்கு எத்தனை ஏற்றத் தாழ்வுகள்! தாழ்வினால் சோர்ந்து போய் விடுகிறான். காரணம் அறியாது கவலையுறுகிறான்; கலங்குகிறான்; கண்ணீர் வடிக்கிறான். துயர் கொண்ட பொழுது துடிக்கிறான். துவண்டு போய் விடுகிறான். துயர் அற்ற வாழ்வே இருக்காதா என ஏங்குகிறான். அப்பொழுதுதான் இறைவனைப் பற்றிய எண்ணமே எழுகின்றது. சிந்தனை சிதைவிலிருந்து விடுபட்டு, செயல்படத் தொடங்குகிறது. சிந்தித்து, சீர்பட்டு மனம் பக்குவம் அடைகிறது, நேர்வழியில் நெஞ்சத்தைச் செலுத்தியதால்! எண்ணங்களைச் சிதறவிடாமல் ஒன்றாக்கி, ஞானவழியில் நடையைத் தொடங்கி, கடும் தவம் புரிகிறான். இறுதியில் அமைதியை அடைந்து மோன நிலையைப் பெறுகிறான். மெய்ஞ்ஞானத்தின் ஒளியைக் கண்டு ஞானி ஆகிறான்.

ஞானி என்றால் யார்? பிறவிப் பெருங்கடலை நீந்திச் சென்று, ஆசைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டு, துயர்கள் எல்லாம் கடந்து நிற்பவர். அவர் உள்ளம் பெரும் உறுதி வாய்ந்தது. காற்றும், மழையும், கானலும், தட்பமும் எப்படி மலையை அசைக்க முடியாதோ, அப்பேர்ப்பட்ட மன உறுதி! அந்நிலையில் பாசத்தை நீக்கி, பற்றை விலக்கி பரம்பொருளையே மனதில் இருத்துவர். அவரையே நாம் மகானாக, மாந்தருள் தெய்வமாகப் போற்றுகிறோம்; வணங்குகிறோம். காலன் அவர் உயிரைப் பறிக்கலாம். காலம் அவரை அழிக்க இயலாது. காலத்தின் எல்லையைக் கடந்தவர் அல்லவா? அவரது கருத்துகள் காலத்தைத் தாண்டி எப்பொழுதும் வானத்து விண்மீன் போல ஒளிவீசிக் கொண்டே இருக்கும்! அதே ஒளிவழி வந்தவர்தான் சமணப் பேரொளியாம், மகாவீரர்.

ஏறக்குறைய இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றினார். இளமையிலிருந்தே ஒழுக்க சீலனாக இருந்தார். தனது முப்பதாம் ஆண்டில் முழுத் துறவறம் ஏற்று 'முனிவர்' ஆனார். மனித வாழ்வு இன்புற, முன்னேற நன்நெறியில் நடப்பது ஒன்றேதான் வழி என்பதை முழுதும் உணர்ந்தார். அந்நெறிதான் மனிதனை எல்லையற்ற உயர்விற்கு அழைத்துச் செல்லும் என்ற அரும்பெரும் கருத்தை மனதில் கொண்டார். அதன் அடிப்படையில் மனிதகுலம் தழைக்க, மேம்பாடு அடைய எளிய கருத்துகளைத் திறம்பட அழகாக உரைக்கின்றார்.

உச்ச நீதிமன்ற நீதியரசர் ச. மோகன்



வாழ்க்கையின் இறுதி எல்லை அமைதிக் கரையைப் போய் அடைதல். அதை அடைந்தால் உலப்பிலா ஆனந்தம் தான். அந்நிலையில் மூப்பு கிடையாது. துயர் இல்லை. வருத்தம் இல்லை. பிணி இல்லை. எல்லாம் அற்ற முழுமை நிலை. அந்நிலையை அடைய என்ன வழி? மூன்றைத் துணைக் கொள்ளுங்கள் என்கிறார் மகாவீரர்.

தூய உள்ளம்

தூய அறிவு

தூய நடத்தை

இவற்றைப் பேணிப் பெறுங்கள். தூய உள்ளம் இல்லாதவர், தூய அறிவைப் பெற இயலாது. தூய அறிவின்றி, தூய நடத்தையைப் பெற இயலாது. தூய நடத்தையே மனிதனின் சிறப்பிற்கு வழிகோலும்.

தூய உள்ளம் பெற மனதைப் பண்படுத்தல் வேண்டும். அன்பின் அணைப்பில் எப்பொழுதும் அது இருக்க வேண்டும். கீழ்க்குடி மக்களுக்கு இதயத்தில் இடம் அளித்தல் ஆகாது. ஆம். அழுக்காறு, அவா, வெகுளி ஆகியவற்றை விரட்டியடிக்க வேண்டும். நல்லெண்ணங்கள் மலரும் பூஞ்சோலையாக மனதை உழுது பயிர் செய்ய வேண்டும். நலம் அனைத்தும் இருக்கும் இருப்பிடம், எங்கேயோ இருக்கிறது என ஏமாறக்கூடாது. நாம் இருக்கும் இடத்திலேயே இருக்கின்றன அனைத்தும். கேடுகளைக் களையும் இடம் இது. நலத்தை நாடும் இடம் இது. துன்பத்தை நாடும் இடம் இது. இன்பத்தை எய்திடும் இடம் இங்கு. அதில் நல்லெண்ண மலர்கள் மலரும்போது வீசும் நறுமணத்திற்கு ஈடு உண்டோ?


மனத் தாய்மைக்கேற்றவாறு வாழ்வின் மேன்மையும் கீழ்மையும் உள்ளத்தில் உள்ள உணர்வுக்கு ஒப்ப, வெளி உலக வாழ்வு வடிவெடுக்கிறது. சூழ்நிலை எத்தகையதானாலும் தூய உள்ளமுடையார் தனக்கு அனுகூலமான தாக்குகின்றனர். பண்பட்ட மனமும் சீரிய வாழ்வும் ஒன்றே!

"நெஞ்சகமே கோயில், நினைவே சுகந்தம்" என்று தாயுமானவர் கூறியுள்ளாரே அதேதான்.

உலகனைத்திலும் நிரம்பி இருப்பது உண்மை. ஒழுங்குப்பாடும் முறைமையும் நேர்மையாக அது மிளிர்கின்றது. மனிதனைச் சார்ந்து உண்மையில்லை. உண்மையைத் துணைக்கொண்டுதான் மனிதனிருக்கிறான். அதைப் புறக்கணித்தால் அவன் தன்னையே அழித்துக் கொள்ள வழி தேடுகிறான். உண்மையைக் கடைப்பிடிக்கிறான். அழிவற்ற தன்மைக்குத் தன்னை ஆயத்தப்படுத்துகிறான். எனவேதான்,

உழைக்காமல் . . .

'கலைமாமணி' ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன்



நடக்கின்ற கால்களிலே அசைவிருக்கும்
நீண்டவழிப் பாதைமட்டும் அசைவதில்லை.
கிடக்கின்ற தண்டவாளம் அசைந்தி டாது
கீழிருக்கும், புகைவண்டி மேலே ஓடும்.

கடக்கின்ற வண்டிகளில் சக்க ரத்தைக்
காணுங்கள் அச்சாணி அசைவ தில்லை
உடனிருக்கும் சக்கரமோ அசையும்; இங்கே
உருளுவதால் அசையாமல் வண்டி ஓடும்.

காகிதங்கள் அசைவதில்லை; மேலி ருந்து
கோடிழுக்கும் தூரிகையால் ஓவி யங்கள்.
வேகிறது என்றாலும் வெயிலில் கூட
உழைப்போர்தம் உடலசைவு உழைப்பே யாகும்
நோகாமல் சிலர்பயனை அனுப விக்க
நாட்டிலிங்கே பலருழைத்துச் சலிக்கின்றார்கள்.
யோகமென நாமிதனைக் கருது வோமா?
யாரிதனை விதித்ததென்று எண்ணு வோமா?

தன் நெஞ்சறிவது பொய்யற்றக

சத்யமேவ ஜயதே, நாந்ருதம்.

- முண்டோபநிஷத்

தூய நடத்தை அவாவை நீக்குதல். வெறுப்பைத் தவிர்க்க வேண்டும். அறியாமையை அகற்ற வேண்டும். பிறர்க்கு நலம் செய்தல் வேண்டும் எக்காலத்தும். பகைவனுக்கு அருள்வாய் என்ற எண்ணம் ஏற்பட வேண்டும் எந்நாளும்!

நடப்பதில், இருப்பதில், கிடப்பதில் அடக்கம் வேண்டும். அதேபோன்றுதான் உண்ணுவதிலும் உறங்குவதிலும் அடக்கம் தேவை. அடக்கம் தோன்ற, பற்றை நீக்குதல் வேண்டும். பற்றுதான் துயரத்தின் அடிப்படை. "உலகிலுள்ள அநீதிகளைப் பற்றிப் பேசாதே. அநீதிகளைக் காணும் குறைபாடு உன்னிடத்தில் இருப்பது குறித்துக் கதறியழு. உன்னிடத்தில் எது இருக்கின்றதோ, அதையே உலகில் நீ காண்கின்றாய். உலகுக்கு உதவி செய்ய நீ விரும்பினால் அதைப் பழி கூறாதே. பழி கூறுவதால் உலகையும், உன்னையும் இன்னும் அதிகமாகக் கீழ்மைப் படுத்துகிறாய். குறை காண்போன் நிறைவை நல்கான்".

எனவேதான் தூய உள்ளத்தால், தூய அறிவால், தூய நடத்தையால் ஒவ்வொருவரும் தன்னையே வெல்ல வேண்டும். பிறரை வென்றவருக்குத் தோல்வி ஏற்படலாம். தன்னையே வென்றவனுக்கு என்றுமே தோல்வியில்லை!

எவ்வளவு சிறந்த கருத்துகள்! நல்வாழ்விற்கு இவை அன்றோ வழிகாட்டிகள்!

மேலும் வழிகாட்டுகிறார் சமணப் பெருந்தகை.

பற்றை நீக்கின் பயமேது? மண்ணால், பெண்ணால், பொன்னால் பற்றற்ற ஒருவரை மயக்க முடியுமா? ஆசையிருந்தால்தானே அல்லல்? பற்று வைத்தவன்தான் பற்றெனும் சூறாவளியில் சிக்கி உழல்கிறான். ஆசையினால் நமக்கு நாமே எல்லை கட்டிக் கொண்டோம். கடலெங்கும் நீந்தி விளையாடுகிற மீன் ஒரு தொட்டிக்குள் கட்டுண்டிருப்பது போன்று ஆசைக்குள் நாம் கண்டுண்டிருக்கிறோம். ஆசையை அகற்றினால், உலகனைத்தும் நம்மோடு உறவாடுவது தெள்ளத் தெளிவாகும்.

திருமந்திரம் வாழ்க்கை மந்திரமாகச் சொல்கிறதே :

"ஆசை அறுமின், ஆசை அறுமின்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்"

இளமை, எழில், செல்வம், யாக்கை இவை யாவும் நிலையற்றன. இவற்றின் மீது பற்றுக் கொண்டு வாழ்க்கையை வீணாக்கலாகாது. இவற்றின் நிலையாமை கண்டு, ஒதுக்கிவிடல் வேண்டும். நிலையாப் பொருளின்மீது எப்பொழுதும் நெஞ்சைச் செலுத்த வேண்டும்.

கடலின் மீது கப்பல் செல்கின்றது, பாய்மரம் விரித்தபடி. அந்தப் பாய் மரத்தின் மீது ஒரு பறவை. பறக்க ஆசைப்பட்டது. பறந்து சுற்றிலும் சென்றது. தங்க எங்கும் இடமில்லை. எங்கும் தண்ணீர். திரும்பவும் பாய்மரத்திற்கே வந்து சேருகிறது. மனித வாழ்க்கையும் இப்படித்தான். நிலையற்ற பொருட்களால் சிறிது நிலை குலைந்தாலும் மீண்டும் நிமிர்ந்து நிறைவு பெற்ற நிலைக்கே வரவேண்டும். வந்த பின்னர் அறம் பேணல் வேண்டும்.

இந்தக் கருத்தை எதிரொலிக்கிறது மணிமேகலை.

உறங்கலும், விழித்தலும் போன்ற துன்மையில்
நல்லறம் செய்தோர் நல்லுல கடைதலும்
அல்லறம் செய்தோர் அரு நரகடைதலும்
உண்டென உணர்தலின் உரவோர் களைந்தார்.

இறுதியாக, முத்தாய்ப்பாகக் கூறுகிறார் முனிபுங்கவர்.

கொல்லாமையை உயிரிலும் மேலாகப் பேணல் வேண்டும். உயிர்கள் அனைத்தும் இறைவனின் வடிவங்கள் என்றால் எந்த உயிரையும் அழிக்க மனிதனுக்கு உரிமையில்லை. அழித்தால் ஆகாது. கொல்லாமையைக் குணமாகக் கொண்டவன் குணக்குன்று! திருக்குறள் இயம்புவதும் இதுதானே :

"கொல்லான், புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்".

மண்ணில் விளைவை உண்டு பண்ண மழை பெய்கிறது. துன்பக் கண்ணீர் உள்ளத்தைத் திருத்திச் செப்பனிடுகிறது. கார்மேகம் சூழ்வது பூமியைக் குளிரச் செய்ய. நனைந்து குளிர்ந்த மண்ணிலிருந்து விதை முளைக்கிறது. துயரம் என்னும் மேகத்திலும் மழையிலும் மூடப்பெற்ற உள்ளம், பேரொளியால் ஞானவிளைவிற்கு ஏற்றதாகிறது. துக்கம் உள்ளத்தை உழுவதே, அதை மென்மையாக்குவதற்குத்தான். எனவே துயரால் கவலையுறவேண்டாம். ஞானோதயம் பிறக்கும் மகாவீரரின் சிந்தனைகளைக் கடைப்பிடிப்போம்!

சமணப் பேரொளியே, எங்களைச் சகதியினின்றும் மீட்டுச் செல்லுங்கள்! அழிவற்ற நிலைக்கு அழைத்துச் செல்லுங்கள், என நெஞ்சுருக வேண்டி நிற்போம்!



டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



ஒரு கவிதை:

"சக்கரத்தின் அச்சில் அதன் முப்பது கால்களும் குவிகின்றன
எது இல்லாத இடமோ அதுதான் சக்கரத்தை உருட்டுகிறது.
களிமண்ணால் பானை உருவாகிறது
எது இல்லையோ அதில்தான் சமைக்கிறோம்.
கதவும் ஜன்னலும் வைத்து வீடு உருவாகிறது
எது ஒன்றுமிலலாமல் இருக்கிறதோ அதைத்தான் உபயோகிக்கிறோம்.
எனவே, இல்லாததை வைத்துக்கொண்டு
இருப்பதைப்பயன்படுத்திக் கொள்"

சீன ஞானி லாட்சூ எழுதிய கவிதை இது - இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்.

படித்தபோது ஒரு கணம் அயர்ந்து விட்டேன்! மனிதர் எப்படி நுட்பமாக விஷயங்களைக் கவனிக்கிறார்; எப்படி மறைந்து கிடக்கும் உண்மைகளை வெளிக்கொணர்கிறார்; எப்படி அதை அன்றாட வாழ்வுக்கு உபயோகப்படுத்தும் வழிமுறைகளைப் பற்றி நம்மைச் சிந்திக்க வைக்கிறார் - அயர்ந்து போனேன்!

சீன ஞானி என்ன சொல்கிறார்? "சக்கரத்தின் நடுவில் வெற்றிடம்; பானையின் உள்ளே வெற்றிடம்; வீட்டு அறையின் நடுவே வெற்றிடம்; அதுதான் பயன்படுகிறது. எனவே, வெற்றிடம் என்று எதையும் அலட்சியப்படுத்தாதே; ஒதுக்கி விடாதே - அதுவும் பயன்படும். உண்மையிலேயே அதுதான் முக்கியம்".

பொதுவாழ்வில் உள்ள தலைவனை, கேள்வி மேல் கேள்வி போட்டு மடக்குகிறார்கள். ஒரு சமயத்தில் அவன் ஒன்றுமே பேசுவதில்லை; அமைதியாக இருக்கிறான். நிசப்தம் நிலவுகிறது. கேட்பவர்களின் மனநிலையே மாறிவிடுகிறது.

ஷெர்லாக் ஹோம்சின் துப்பறியும் கதைகளில் பக்கத்து வீட்டில் ஒரு கொலை நடந்தபோது அடுத்த வீட்டில் இருந்த நாய் குரைக்கவில்லை என்ற செய்தி கிடைக்கிறது. ஷெர்லாக் ஹோம்சின் உதவியாளர் சொல்கிறார், "பக்கத்து வீட்டு நாய் குரைக்கக் கூட இல்லையே!" என்று. "நாய் குரைக்கவில்லை. அதுதான் விஷயம்" என்கிறார் ஹோம்ஸ். "யாரோ நாய்க்கு அறிமுகமானவர்கள், பழக்கப்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள். எனவே...!" என்று எண்ணி சரியான முடிவுக்கு வருகிறார் ஹோம்ஸ்.

ஞானி சொல்கிறார் : "இல்லாததை வைத்துக்கொண்டு இருப்பதைப் பயன்படுத்திக் கொள். சிந்தித்துப் பார்த்தால் பானையும் தேவை; வெற்றிடமும் தேவை."

"இவ்வுலகிலே புலனாகிற - கண்ணுக்குத் தெரிகிற விஷயங்கள் இருக்கின்றன. புலனாகாத விஷயங்களும் இருக்கின்றன. பகலில் நட்சத்திரங்கள் தெரிவதில்லை என்பதற்காக அவை இல்லை என்று அர்த்தமாகாது. அதுபோல கண்ணுக்குப் புலனாகவில்லை என்பதற்காக ஒதுக்கி விடாதே. மறைந்து கிடக்கும் விஷயங்களையும் - சூட்சும உலகையும் கணக்கில் எடுத்துக் கொள். அப்போதுதான் நீ சரியாக வாழலாம்".

வாழும் வழிமுறைகளைச் சொல்வதுதான் சீன ஞானியின் நூல். சீனர்கள் நடைமுறைக்கேற்ப, அதை ஒட்டி

வாழ்பவர்கள் என்று சொல்வார்கள். அதாவது அதிகம் தத்துவம் பேசமாட்டார்கள். "இந்தக் கத்திரிக்காய் சமையலுக்கு உதவுமா?" என்று நேரடியாக விஷயங்களுக்கு வருவார்கள்.

அப்படி அவர்கள் வருவதற்கு அவர்களுடைய இலக்கியம் பெரிதும் துணை செய்கிறது. அதிலே சீன ஞானி லாட்சூவின் நூல் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது.

அவருடைய நூலின் பெயரே வித்தியாசமானது. "பிரபஞ்சப் பாதையில்..." என்று அதை மொழிபெயர்க்கலாம். 'பிரபஞ்ச இயக்கம்' 'பிரபஞ்ச லயம்' என்றும் சொல்லலாம். "இந்தப் பிரபஞ்சம் எந்த விதிகளால் இயங்குகின்றதோ, அதே விதி முறைகள்தான் நம் வாழ்க்கையையும் இயக்குகின்றன. எனவே பிரபஞ்ச இயக்கத்தைப் புரிந்து கொள். வாழ்வில் உபயோகி. அது சரியான பாதையில் உன்னைக் கொண்டு செல்லும்". இந்த நோக்கில்தான் பிரபஞ்ச இயக்கத்தை - அதன் விதிகளை - பலாச்சுளையாக எடுத்து வைக்கிறார்.

நம்மைப் பெரிதும் சிந்திக்க வைக்கிறார். என்று ஒரு விஷயத்தைத் தீவிரமாக மனிதன் சிந்திக்கிறானோ, அன்று அந்த விஷயம் ஆழமாக அவனுடையதாகி விடுகிறது; நினைவில் தேங்கி விடுகிறது. அடுத்த முறை அதை உபயோகித்துப் பயன் பெறுகிறான். அந்த ரீதியில் நம்மைப் பங்கு கொள்ளச் செய்கிறார்; ஈர்க்கிறார். இக்கவிதை நூலை வேகமாகப் படித்துவிட முடியாது! பலமுறை திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும்; பின் யோசிக்க வேண்டும்.

இன்று அமெரிக்காவில் அவர் காட்டும் தத்துவமான 'பிரபஞ்ச இயக்கம்' எப்படி ஒரு நாட்டுத் தலைவன் பின்பற்றப்பட முடியும் என்று அரசியல் நோக்கில் ஆராயப்படுகிறது. பிரபஞ்ச இயக்கம் எப்படித் தொழிலில், எப்படி பௌதிகத்தில், எப்படி மனவியலில், எப்படி அன்றாட வாழ்வில் உபயோகிக்கலாம் என்று நூற்றுக்கணக்கான சுவையான, பயனுள்ள நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1980 இல் பிரிட்ஜோ கேப்ரா (FRITZO CAPRA) என்ற இயற்பியல் விஞ்ஞானி, பௌதிக விஞ்ஞானி, பௌதிகத்தில் - (அதாவது அணுவுக்குள்) பிரபஞ்ச இயக்கம் (TAO OF PHYSICS) என்ற ஒரு புகழ்பெற்ற நூலை எழுதினார். லாட்சூவைப் பற்றிய ஆர்வத்திற்கு அது ஒரு முன்னோடி என்று சொல்லலாம்.

பிரபஞ்ச இயக்கம் என்பதை ஞானி லாட்சூ சீன வார்த்தையில் குறிப்பிடும்போது அது பல்வேறு அர்த்தங்களைக் கொண்ட வார்த்தையாய் இருக்கிறது. 'டௌ' என்று அதைச் சீனமொழியில் குறிப்பிடுவார்கள். அந்த சொல்லுக்கு "உள்ளிருக்கும் சக்தி" என்றோர் அர்த்தம். "மந்திர சக்தி" "பிரபஞ்ச இயக்கத்தின் விதைகள்" என்றொரு பொருள்.

டௌ ('டவ்' என்ற அமைப்பில் உள்ள 'ட'வை மெல்லினம் போல உச்சரியுங்கள்) என்றால் என்ன என்பதை, தனது முதல் கவிதையிலேயே விளக்குகிறார். அவருடைய விளக்கத்தைக் கேட்போம்.

'டௌவை,

பிரபஞ்ச இயக்கம் என்று தெளிவாகச் சொன்னால்

அதன் பரிபூரணத்தைக் கொண்டு வராது.

புரிந்து கொள்வதற்காக அதைப் பெயரிட்டு அழைப்பதோ

அதன் முழுமையை வெளிப்படுத்தாது.

பெயரில்லாததுதான் சொர்க்கத்தையும் பூமியையும் தொடங்கியது.

பெயரிட்டு அழைக்க முயல்வதோ எல்லாவற்றிற்கும் மூலமாய் இருப்பதை

எதிர்பார்ப்புகளையும் ஆசைகளையும் கடந்த மனிதன்,

எப்போதும் புலனுக்கு அப்பாற்பட்டதைப் பார்க்கிறான்.

எதிர்பார்ப்பும், ஆசைகளும் கொண்ட மனிதன்,

புலன்களின் எல்லையில் நிற்கிறான்.

இரண்டின் மூலமும் ஒன்றேதான்.

பெயர்தான் வேறு வேறு.

இரண்டும் சேர்ந்ததை ஆழமான அற்புதம், முழுமை பெற்ற மூலம் என்கிறோம்.

அற்புதம் அதிசயம். மூலம் - மர்மங்கள் நிறைந்தது.

மகத்தான நுட்ப உண்மைகளின நுழைவாயில்".

பூரணம், பரிபூரணம், முழுமை மூலம் - இது அதிசயம் நிறைந்தது. மர்மங்கள் கொண்டது என்று கூறுகிறார் ஞானி லாட்சூ.

நமக்கு உடனடியாக நினைவுக்கு வருவது நம் உபநிடதம்தான். ஈசாவாஸ்யோ உபநிடதத்தில் ஒரு பாடல், ஒரு சுலோகம் :

ஓம் பூர்ணமத பூர்ணமிதம்

பூர்ணத் பூரண முதச்யதே

பூரணஸ்ய பூர்ண மதாய

பூர்ணமேவா வகிஷ்யதே

ஓம்! அது பூர்ணம். (முழுமை கொண்டது)

இதுவும் பூரணம். பூரணத்திலிருந்து பூரணம் எழுகிறது. அப்பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தும் எஞ்சியிருப்பது பூரணமே.

ஞானி லாட்சூவைப் போல நம் உபநிடதமும் பூரணத்தைப் பற்றி, முழுமையைப் பற்றி, மூலத்தைப் பற்றித்தான் பேசுகிறது. பூரணம் மர்மங்கள் நிறைந்த அதிசயம் என்கிறார் லாட்சூ. உபநிடதம் அந்த மர்மத்தை விளக்குவது போல 'பூரணத்திலிருந்து பூரணத்தை எடுத்தால் மிஞ்சுவதும் பூரணமே' என்று புதிர் போடுகிறது. ஒன்றிலிருந்து ஒன்றைக் கழித்தால் ஒன்று எப்படி வரும்? சைபர் அல்லவா வரவேண்டும்?

ஆனால், உபநிடதக்காரரோ ஒன்றிலிருந்து ஒன்றைக் கழித்தால் பாக்கி இருப்பதும் ஒன்றுதான் என்கிறார்! அதாவது அந்த 'ஒன்று' - பூரணம் - நிச்சயம் லாட்சூ கூறுவதுபோல மர்மங்கள் நிறைந்ததுதான்!

ஞானி லாட்சூ நடைமுறை மனிதர் அல்லவா? எனவே அந்த மூலத்திலிருந்து நடைமுறை உலகிற்கு இறங்குகிறார். நமக்கு சில விஷயங்களைத் தெளிவு படுத்துகிறார்.

என்ன சொல்கிறார்?

இந்த மூலத்தில் பற்றும், பற்றற்ற தன்மையும் அடங்கி இருக்கிறது; எதிர்பார்ப்பும் எதிர்பார்ப்பின்மையும் அடங்கி இருக்கிறது. இரண்டும் அந்த மூலத்திலிருந்துதான் வருகின்றன. எதிர்பார்ப்புகளையும் ஆசைகளையும் கடந்த மனிதன் புலனுக்கு அப்பாற்பட்டதைப் பார்க்கிறான். எதிர்பார்ப்பும் ஆசைகளும் கொண்டவன் புலன்களின் எல்லையில் நிற்கிறான்.

அதாவது புலனுக்கு அப்பாற்பட்ட ஓர் உலகம் இருக்கிறது. அதுவும் தேவை.

எதுபோல?

சக்கரத்தின் நடுவில் இருக்கும் வெற்றிடம் போல; பானைக்குள் இருக்கும் வெற்றிடம் போல; கதவு, ஜன்னல், சுவர்கொண்ட அறைக்குள் இருக்கும் வெற்றிடம் போல.

நாம் இந்த உலகில் வாழ்கிறோம். இது புலன்களால் ஆசைப்படும் உலகம்; வாயும் வயிறும் கொண்ட உலகம். எனவே புலன்களால் உணரும் இந்த நிஜ உலகமும் தேவை. அதைப்போல, புலன்களுக்கு அப்பாற்பட்ட உலகமும் நம் வாழ்வுக்குத் தேவை - வாழ்க்கையைச் சரியாகப் புரிந்து கொள்ள.

புலன் உலகிலேயே மூழ்கிவிடுவதா? அல்லது புலனுக்கு அப்பாற்பட்ட நிலையிலே மூழ்கிவிடுவதா?

"தம்பி! மகளே! இரண்டுக்கும் இடையில் தேவைப் படுகிற அளவில் நீ ஓர் எல்லைக்கோடு போடு. அதுதான் வாழ்க்கை".

"புலனுக்கு அப்பாற்பட்ட ஆன்மிக உணர்வுகளும் தேவை. புலன்களுக்கு ஈடுகொடுத்து வாழும் அன்றாட உலகியல் வாழ்வும் தேவை.

"பிறந்திருக்கிறோமே மனித உடலுடன், இவ்வுலகில், அது முக்கியம். இங்குதான் நாம் பயிற்சி பெறுகிறோம்; அறிவு பெறுகிறோம்; வளர்கிறோம்; மேனிலை எய்து கிறோம். பரிணாம வளர்ச்சியின் மேற் படிகளைத் தொடுகிறோம். எனவே இவ்வுலக வாழ்வு முக்கியமானது.

"அதே சமயம் புலனாகாத ஒரு மாபெரும் சக்தி இவ்வுலகை இயக்கிக் கொண்டிருக்கிறது என்ற தெளிவு வேண்டும். அது நமக்குப் பல விஷயங்களைச் சொல்லிக் கொடுக்கிறது என்ற உண்மையும் அவசியம்.

"ஆன்மிக உணர்வுகளை அன்றாட வாழ்வில் கொண்டு வருவதில்தான் - இரண்டும் இணைந்த நிலையில் - வாழ்வதுதான் சரியான வாழ்க்கை". இதைத்தான் அவர் சொல்லாமல் சொல்கிறார்.

பரிணாம வளர்ச்சியில் வளர்ந்து உருவான மேலோர் 'டௌ' என்னும் பிரபஞ்ச இயக்கத்தைப் பார்த்து அதையே தங்கள் வாழ்க்கை முறையாக அமைத்துக் கொள்கிறார்கள்.

அவர் அதிகம் எழுதிவிடவில்லை! 81 கவிதைகளைத் தான் எழுதி இருக்கிறார். அதிலே இந்த அகிலத்தை - அண்ட சராசரங்களை - பிரபஞ்ச இயக்கத்தை உள்ளடக்கி, "வாழும் வழிமுறைகளாக அவற்றை உருமாற்றி உபயோகி" என்கிறார்.

யார் இந்த ஞானி லாட்சூ?

2600 ஆண்களுக்கு முன் வாழ்ந்தவர். சௌ என்ற அரச பரம்பரை அரசாண்டு கொண்டிருந்த காலத்தே வாழ்ந் தவர். அரசின் ஆவணங்களைப் பாதுகாக்கும் பணியிலே இருந்தவர்.

அப்போது அரசியலிலே கொந்தளிப்பு. அங்கே 'சௌ' ஆட்சியின் கீழ் பல்வேறு மாநிலங்கள். ஒவ்வொரு மாநிலத் திலும் தனித்தனி சட்டங்கள். அங்கங்கே தனித்தனித் தலைவர்கள். அரசியல் தலைமையை நோக்கிக் கடும் போட்டி. போரிட்டுக் கொண்டு தங்களையே அழித்துக் கொள்ளும் நிலை. எங்கு பார்த்தாலும் வன்முறை, பகைமை, வெறுப்பு - நாட்டிலே கட்டுப்பாடில்லை.

இப்படிப்பட்ட 'நாகரிகம்' மிக்க மக்களை விட்டுவிட்டு வெளியேற விரும்புகிறார் - ஓய்வு பெற்றதும், வெளியேறும் போது வழியில் ஒருவர் கேட்கிறார்.

"நீங்களோ எல்லாவற்றையும் மேல்நிலையில் இருந்து பார்த்தவர். அறிஞர். தங்களுக்குத் தெரிந்ததை எழுதி வைத்துவிட்டுப் போக வேண்டும். பிறர் இதனால் ஞானம் பெறுவார்கள்" என்கிறார். இப்படிப் பிறந்ததுதான் 'டௌ டே சிங்' என்று அழைக்கப்படும் "பிரபஞ்சப் பாதையில்..." என்ற நூல்.

81 கவிதைகளுக்கும் 810 பக்கங்களில் விளக்கம் கொடுக்க லாம்; அவ்வளவு உபயோகமானவை. எனினும் இது தீபாவளி சமயம். தித்திப்பும் பட்சணமும் "அளவோடு" சாப்பிட வேண்டும். ஞானி லாட்சூ சொல்வதும் அதுதான்.




உனக்கு என் மூலமாக நடக்க வேண்டிய காரியம் ஏதாவது இருக்கா..?

ஆமா சார்.. எப்படி கண்டு பிடிச்சீங்க..?

நீ அதிவினயமாகக் கும்பிடுவதை வைச்சுத்தான்..!

— விசு





இது ஏதோ புது ரகவெடியாம்... மருமகள் கொளுத்தினால்தான் வெடிக்குமாம். மாமியார் கொளுத்தினால் வெடிக்காதாம்...

ஏன் அப்படி..?

ஸ்டவுவுங்கூட மருமகள் கொளுத்தும்போதுதானே வெடிக்குது... அது போல்தான் இதுவுமாம்!







"டூப்ளிகேட் பீரோ சாவி 30 கேட்கி நீங்களே! எதற்கு அத்தனை?"

"ஒவ்வொரு நாளும் எங்கேயாவது சாவியை வச்சிட்டுத் தேடுவது என் மனைவியின் வாடிக்கையாச்சே!"

— சுதர்ஸன்

அகளங்க சசி கோடி பிரகாசம்

பாலகுமாரன்

நமது வாழ்க்கை ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளோடு இருக்கிறது. அண்டை அயலாரோடு ஒப்பிட்டு ஒப்பிட்டு எதிர்பார்ப்புகள் பாசி படர்ந்த குளத்தில் நீராம்பல் பரவுவது போல் கிளைவிட்டுப் படர்கின்றன. மனம் என்னும் தெளிந்த குளம் முடப்பட்டு விடுகிறது.

உயர்வையோ தாழ்வையோ அக்கம் பக்கத்தில் சொல்லிக் கொள்ள முடியவில்லை. உயர்வு சொன்னால் பொறாமைப்படுவார்களோ என்கிற பயம். தாழ்வைச் சொன்னால் வாய்விட்டுச் சிரித்து விடுவார்களோ என்கிற எண்ணம். சூழல் சுமுகமாக இல்லை. சகலரோடும் கலந்து பழக ஆசை. பழகினால் தீது வருமோ என்கிற பயம். இந்த இரண்டுங்கெட்டான் நிலைதான் நரகம்.

அடுத்த தீபாவளிக்கு நிச்சயம் பட்டுப்புடைவை என்று தீர்மானித்து தீபாவளிக்கு மறுமாதமே புடைவைக் கடையில் சீட்டு சேர்ந்து மறு தீபாவளிக்கு ஒரு மாதம் முன்பே என் அம்மா பட்டுப்புடைவை வாங்கினாள்: எனக்கு அப்போது இருபது வயது. சீட்டுப் பணமும் என் தீபாவளி போனஸ் கொஞ்சமும் போட்டு நாலு விரற்கடை ஜரிகை என்று ஆசைப்பட்டு வாங்கினாள். எடுத்து எடுத்துப் பார்த்தாள். வேலைக்காரியிடம் காட்டினாள்.

அடுத்த வீட்டிற்குக் காட்ட பயம். "அதுக்குள்ளயும் தீபாவளி பர்ச்சேஸா? அத்தனை காசு டீச்சருக்கு ஏது?" என்று கேட்டு விடுவார்களோ என்கிற பயம். "இருநூறு ரூபா இருந்தாக் கொடுங்கோ... தீபாவளி முடிஞ்சு தரேன்" என்று கடன்கேட்டு விடுவார்களோ என்கிற அச்சம். வேலைக்காரி அடுத்த வீட்டாரிடம் சொல்ல, அவர்கள் கேட்க, "இல்லை, சும்மா கடைக்குப் போய்ப் பார்த்துட்டு வந்தேன்" என்றாள். "இராமர் கலர்ல காண்ட்ராஸ்ட் பார்டர் போட்டு நிறைய ஜரிகையா வாங்கினேளாமே?"

"எடுத்தேன். பிடிக்கலை. கொடுத்துடப்போறேன்". ஏதோ சொல்லத் தவித்தாள். வற்புறுத்த, காட்டினாள்.

"சுமாரா இருக்கு." அடுத்த வீடு சொல்ல, குமைந்தாள்.

போக வர, "புடைவை மாத்திட்டேளா?" என்று அடுத்த வீடு விசாரிக்க, உள்ளே சபித்தாள்.

நான் அதிகம் யோசித்தது இந்த இருபது வயது காலக் கட்டத்தில் தான்.

தீபாவளியன்று அதே புடைவையில் வர, அடுத்த வீட்டுக் கொண்டைக்காரி "அதே புடைவைதானா? மாத்தலையா? ஒரு மாசம் முன்னாலயே பார்த்துட்டதனால எனக்கு என்னமோ இது பழம் புடைவை போலத் தெரியறது" என்று சொல்லிச் சிரிக்க தீபாவளிப் பட்சணம் கசந்து போயிற்று அம்மாவுக்கு.

உயர்வோ தாழ்வோ சொல்லவே முடியவில்லை எவரிடமும்.

ஒரு மாதப் பத்திரிகை எனக்குத் தந்த காசோலைகள் இரண்டு பவுன்ஸ் ஆயிற்று. அதை நம்பி கைக்காசை அங்கங்கே முடக்கி வைக்க இரண்டு நாள் செலவு தடுமாறிற்று. வங்கியில் கேட்டால் என் ஃபிக்ஸட் டெபாஸிட் தைரியத்தில் நிச்சயம் தருவார்கள். சட்டென்று தங்கையிடம் கேட்டேன்.

"இத்தனை சம்பாதிக்கறே... ரெண்டாயிரம் காசு கூட இல்லாமலா இருக்கே?" காசு நீட்டியபடியே தங்கை கேட்டாள். சிதறிப் போயிற்று மனசு. இதை மனைவியிடம் சொல்ல, அவள் புலம்பிய புலம்பலுக்கு அளவே இல்லை. சிறிய தாழ்வு கூட வெளியே சொல்லிக் கொள்ள இயலவில்லை.

இது தான் வாழ்க்கை. நம் எல்லாருடைய வாழ்க்கையும் இதுவே.

நல்ல உறவுகளே இல்லையா? இருக்கலாம். இருந்தாலும் அங்கே கம்பிமேல் நடப்பதாய் கவனமாய்ப் பேசிப் பழகி இருக்க வேண்டியதாகிறது. நல்லதைச் சிதறடிக்காமல் இருக்க ஒரு கவனம் தேவைப்படுகிறது. வளர வளர, வயது கூடக் கூட, இந்தக் கவனமும் அதிகமாக வேண்டியிருக்கிறது. இந்தக் கவனம் கற்றுக்கொள்ளவே வாழ்க்கையாக இருக்கிறது. இது தெரியாதவர்க்கு தினசரி தோல்வி கிடைக்கிறது.

எனவே வாழ்க்கை என்பது தொடர்பு கொள்ளல். Life is relationship.

அப்பாடா. வாழ்க்கை இன்னதென்று தெரியவே பல வருடங்கள் கடந்து விட்டன.

தெரிந்து விட்டதைச் செயலுக்குக் கொண்டு வருவதெப்படி? கம்பி மேல் நடக்கிற சாமர்த்தியப் பழகலுக்கு ஏது பயிற்சி? இதை யார் கற்றுத்தருவார்கள்?

அடிபட்டு, உதைபட்டு, அவமானப்பட்டும் நாமே தெரிந்து கொள்வதா?... அல்லது எவரிடமேனும் அண்டிப் புரிந்து கொள்வதா? இதற்குப் பள்ளி உண்டோ? ஆசிரியர் தேவையா?

தன்னிலிருந்து புறப்படும் உணர்வுகளான கோபம், ஆத்திரம், காதல் சந்தோஷம் எல்லாவற்றையும் உற்றுக் கவனித்தலே முதல் பாடம்.

தன்னை உற்றுக் கவனிக்கும் தன்மை எதனால் எப்படி வரும்? தியானத்தால் வரும். தியானம் யார் சொல்லித் தருவார்கள்?

சற்று பயிற்சி உள்ள எவரும் சொல்லித்தரலாம். இது சொல்லித் தருவதில் மட்டுமே கை வந்து விடுகிற கலையல்ல. கற்றுக் கொள்வதின் தீவிரத்தைப் பொறுத்த காரியம். கற்றுக் கொள்ளலில் தீவிரம் என்றால் என்ன? எப்படி வரும்? எந்த விஷயம் தீவிரப்படவும் சூழ்நிலையே காரணம். சினிமா பற்றித் தெரிய சினிமாக்காரர்கள் சூழலில் இருந்தால்தான் அது பற்றி நுணுக்கமும் ஆர்வமும் ஏற்படும். வாலிபால் விளையாட்டுக்காரரிடம் சரித்திரம் பற்றி, சோழசாம்ராஜியம் பற்றிப் பேச இயலாது. கல்வெட்டு ஆராய்ச்சியாளரிடம் பேச ஆயிரம் தகவல்கள் தரையில் சிதறும். அறியும் ஆவல் அத்தகவலில் அதிகமாகும்.

அதே விதமாய் தியானம் கற்றுக் கொள்ள, கற்றுக்கொண்ட பிறகு தீவிரம் கொள்ள ஒரு சூழ்நிலை, ஒரு சத்சங்கம் தேவைப்படுகிறது.

இது எங்கே கிடைக்கும்? எவரால் தூண்டப்படும்? எந்தச் சூழ்நிலை அமைதியாய் இருக்கிறதோ, எங்கே எல்லாக் கேள்விகளும் அற்று இறைத்தன்மை நிறைகிறதோ, அங்கு நிச்சயம் தியானக் கூர்மை அதிகமாகும்.

படப்பிடிப்போ, படம் சம்பந்தப்பட்ட விவாதமோ, இல்லாத ஒரு வார இடைவெளி திடுமெனக் கிடைத்தது. கிடைத்த மறுநாள் காஞ்சிபுரம் போனேன்.

மாறுதல் தேடி மட்டுமில்லை. சத்சங்கம் போல ஒன்று ஏற்படலாம் என்கிற நினைப்பில் போனேன். மதியம் கிளம்பி மாலையில் அடைந்து காஞ்சிப் பெரியவர் ஸ்ரீஜெயேந்திரர் முன்பு நின்றேன்.

காஞ்சி மடம் எங்கள் குல மடம். காஞ்சிப் பெரியவர்கள் எங்கள் குல குரு

தலைமுறை தலைமுறையாக ஒரு தொடர்பு எங்கள் குடும்பத்திற்கும் காஞ்சி காமகோடி மடத்திற்கும் உண்டு. என் தலைமுறையில் ஸ்ரீஜெயேந்திரர் அருளால் இந்த உறவு பலப்பட்டது.

மனிதர்களை உத்ஸாகப்படுத்துவதில் ஸ்ரீ ஜெயேந்திர ஸ்வாமிகளுக்கு இணையாக எவரும் இலர். மனசும், புத்தியும் ஒரு முகப்பட்டு பெருமையுடன் இருந்தால்தான் அவர் பேச்சு புரியும். பேசுகிறவரைக் கவனித்துக் கொண்டே, பேச்சுக் கொடுத்துக் கொண்டே மற்றவர்களைக் கவனிப்பதை அவரால் எளிதாகச் செய்ய முடிகிறது.


நான் நமஸ்கரித்து உட்கார்ந்ததும், "போற வழியா?, வர வழியா?" ஸ்ரீ ஜெயேந்திரர் கேட்டார்கள். நான் விழித்தேன்.

"திருவண்ணாமலைக்குப் போற வழியா? இல்லை போயிட்டு வந்து மடத்துக்குள் நுழையறியா?" என்று கேட்டார்கள்.

திருவண்ணாமலை மகான் யோகிராம் சுரத்குமார் மீது எனக்குள்ள ஈடுபாடு அவருக்குத் தெரியும். குலகுருவாக காஞ்சிப் பெரியவர் ஸ்ரீ ஜெயேந்திரர் எங்களுக்கு இருப்பினும் தீக்ஷா குருவாக யோகிராம் சுரத்குமாரை நாங்கள் ஏற்றுக் கொண்டது தெரியும். எங்கேயோ ஓர் இடத்ல ஈடுபாடா இருக்கணும்" என்று சொல்வார்கள்.

"உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்" என்று பதில் சொன்னேன்.

"வட ஆர்க்காட்டுலேர்ந்து டூரிஸ்ட் வருவா. அறுபது எழுபது பேர்.



ஒரே பஸ்ல வருவா. மேல் மருவத்தூர், வள்ளிமலை, பூண்டி, பாலமுருகனடிமையெல்லாம் பார்த்துட்டு காஞ்சிபுரம் வருவா. எங்கே இந்தப் பக்கம்னு கேட்டா உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்னுவா. டூர் ஏற்பாடு பண்றவன் மடத்து வாசல்ல இப்படித்தான் சொல்லணும்னு உத்தரவு போடுவான். "ஒருவேளை அந்த மாதிரி வாசல்ல யாராவது சொன்னாளா?" என்று சொல்லிச் சிரித்தார்.

நான் மறுபடியும் சொன்னதையே சொன்னேன். "உங்களைப் பார்க்கத்தான்" என்றேன். பிறகு குடும்ப சௌகர்யங்களைக் கேட்டார்.

குதிரைச் சக்தி என்பது இன்றைய விஞ்ஞானத்தின் விஷயம் அல்ல. மிகப் பழைமையான விஷயம் என்பதை எடுத்துக் காட்டினார். அறைக்குள் உட்கார்ந்து அரைமணி பேசுவதற்குள் வெளியே பெருங்கூட்டம் கூடியிருந்தது. மற்றவருக்கு இடைஞ்சலில்லாதிருக்க விடை பெற்றுக் கொண்டு வெளியே வந்தேன்.

வெளியே வந்து பால பெரியவரான ஸ்ரீ விஜயேந்திரரைத் தரிசிக்கத் தேடினேன். விஸ்வரூப யாத்திரையாய் சித்தூர் நோக்கிப் போய்க் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அவரைச் சந்தித்து வெகுநாளாயிற்று. தரிசிக்கவேண்டுமென்ற உந்துதல் அதிகமிருந்தது.

என் காரில் நானும், காஞ்சிபுரம் புத்தகக்கடை நண்பர் பசுபதியும் சித்தூர் நோக்கிப் பயணமானோம். இரவு பன்னிரண்டரைக்கு சித்தூர் தாண்டி முப்பது கிலோமீட்டரிலுள்ள எல்லம்பள்ளி என்ற கிராமத்தை அடைந்து, அந்தக் கிராமத்திலிருந்து வெகுதொலைவிலுள்ள சாலையோர ஹனுமார் கோயிலுக்குப் போனோம்.

அது ஒரு குடைவரைக் கோயில். சஞ்சீவி மலையை ஹனுமார் தூக்கிக் கொண்டிருப்பதுபோல ஆறடி உயரப் புடைப்புச் சிற்பம். அருகே ஓர் அடி உயரத்தில் கிருஷ்ணதேவ ராயரும் அவரது மூன்று மனைவிகளும் பாறையை ஒட்டிப் புதிதாய் பதினாறுகால் மண்டபம் கட்டியிருக்கிறார்கள். கொடிமரம் நடக் குழிதோண்டி வைத்திருக்கிறார்கள்.

மண்டபத்தின் ஒரு பகுதியில் திரைகட்டி ஸ்ரீவிஜயேந்திரர் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். சமையலுக்கு ஓர் ஆள். எடுபிடிக்கு வேத பாடசாலை இளைஞர்கள் இருவர். பேச்சுத்துணைக்கு வடமொழிப் புலமையும், மருத்துவப் படிப்பும் பெற்ற நாற்பது வயது டாக்டர் ரிஷிகேசன். பால பெரியவாளின் டெம்போ டிராவலர் ஓட்டும் ரயில்வே ராகவன் எல்லாரும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க, ஆந்திரா போலீஸ் துப்பாக்கியுடன் விழித்துக் கொண்டிருந்தது.

எவரையும் தொந்தரவு செய்யாது நானும் பசுபதியும் ஓய்வெடுத்தோம். காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்து கடன்களை முடித்து, கைப்பம்பில் நீர் வரவழைத்துக் குளித்து, மாற்றுடை உடுத்திக் கொள்ள, மெல்ல விடிந்தது. எங்களுக்கு முன்னரே எழுந்த ஸ்ரீவிஜயேந்திரர் திரையை விட்டு வெளியே வந்தார். தூங்கின சுவடே தெரியாதவராக, கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு உட்கார்ந்தார். பல்வேறு வடமொழிக் கவிதைகளின் தொகுப்பு அப்புத்தகம். வெவ்வேறு காலத்தில் அடையாளம் தெரியாத எவரெவராலோ எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் அச்சுப்பதிப்பாய் மாற்றப்பட்டிருந்தன.

அந்தக் கவிதைகளை உரக்கப் படித்து ஸ்ரீவிஜயேந்திரர் அர்த்தம் சொல்லத் தொடங்கினார். கடவுள் என்கிற தன்மையை விவரிக்க ஒரு கவிதை முயன்றிருந்தது. 'அகளங்க சஸிகோடி" என்கிற வார்த்தைப் பிரயோகம் இருந்தது. களங்கமில்லாத கோடிசந்திரர்களின் ஒளி. என்று கடவுளை வர்ணித்திருந்தது. பிறவி வேண்டாம் என்கிற- மறுபடியும் தாயாரிடம் பால்குடிக்கும் அவஸ்தையை எனக்குத்

தந்துவிடாதே என்கிற- வேண்டு கோள் இருந்தது.

'என்னை என் தீவினையிலிருந்து காப்பாற்ற மாட்டாயா என் இறைவனே! நீ காப்பாற்றுவாய் என்று காத்திருந்தேன். நீ வரவில்லை. வராதுபோனால்தான் என்ன? விஷக்கிருமியை விஷம் என்ன செய்துவிடும்? என் தீவினைகள் என்னை ஒன்றும் செய்துவிடா. ஆயினும் என் இறைவனே! உனக்காக நான் காத்திருக்கிறேன்.' வேறு பாடல் விம்மிற்று.

நான், டாக்டர், பசுபதி மூன்றே பேர். ஸ்ரீவிஜயேந்திரர் இந்தக் கவிதையைப் படித்துவிட்டு அர்த்தம் சொல்ல, எப்போதோ எழுதிய கவிதையை நாங்கள் வாய்விட்டுப் பாராட்டினோம். யார் எழுதிய கவிதையோ, எப்பொழுது எழுதப்பட்டதோ, மனசு எவ்வளவு வேதனைப் பட்டிருந்தால் தம்மை இந்தக்கவிஞர் விஷக்கிருமி என்று வர்ணித்துக் கொண்டிருக்க முடியும்? அவரைச் சுற்றியுள்ள தீவினைகள் அவரை ஒன்றும் செய்துவிடாவாம். அதனாலேயே கடவுளுக்குக் காத்திருக்கிறாராம்.

விடியற்காலை ஐந்தரை மணிக்குத் தொடங்கிய பாடம் ஏழரை மணி வரை நடந்தது. கோயிலுக்குப் பின்னே பெரிய காடு. சுற்றிலும் பெரிய மலைகள். அருகே ட்ரங்க் ரோடு- ட்ரங்க் ரோடு தாண்டியும் காடு. ஜனநடமாட்டமே இல்லாத இடம். காலையின் குளிர். பச்சை வாசனை. ஹனுமார் கோயில் பழைய சாமந்திப் பூக்களின் நெடி. மேல் துணியைப் பிடுங்கும். தெற்கத்திக் காற்று. ஒரு துறவியின் அருகிலே கவிதைகளின் சொல்லாட்சியில் பரிவாரங்களற்ற ஏகாந்தத்தில் மனம் சந்தோஷமாகியது. பிறகு என்னைப் பேசச் சொன்னார்.

புராணங்களை மையமாக வைத்து நான் எழுதிய சிறுகதைகளை அவருக்கு விவரித்துச் சொன்னேன். கைதட்டி ரஸித்தார். பத்தரை மணிக்கு மிகக் குறைந்த உணவு எடுத்துக்கொண்டு என் கார் முன்னே போக, அவர் வேன் பின்னே வர கிராமம் கிராமமாகத் தாண்டிப்போனோம்.

குடிசைப் பகுதிகளில் அங்கங்கே நிறுத்தி பழங்களும், கற்கண்டும் வழங்கினார். நாற்பத்தைந்து தாண்டியிருக்கிற புளிச்சரளா என்கிற கிராமம் போனோம். அந்த நாள் முழுவதும் மனம் வேறு எந்தச் சஞ்சலமும் இல்லாதிருந்தது.

அவருடன் ஏகாந்தமாய் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததே திரும்பத்திரும்ப மனதில் மோதிற்று. காடும்,' காட்டுக்கு நடுவிலிருந்த ஹனுமார் கோயிலுமே மனதில் நின்றன.

'விஷம், விஷக்கிருமியை என்ன செய்யும்? ஆயினும் இறையே நான் காத்திருக்கிறேன்'.

கிட்டத்தட்ட ஒருவாரம் மனதுள் இந்தக்கவிதையே ஓடிக் கொண்டிருந்தது.

தினசரி தியானத்தில் வீட்டிற்குள் அமர 'அகளங்க சஸிகோடி பிரகாசம்'! மனது தேடிற்று.

இதனுள் மனம் பதியும்போது தியானம் தடுமாட்டமில்லாதிருந்தது. தியானம் பலமாக, பேச்சு இனிமையாயிற்று. பேச்சு இனிமையாக உறவுகளில் சிக்கலென்பது இல்லாதிருந்தது.

இதற்கெல்லாம் காரணம் சத்ஸங்கம். குரு என்பவரோடு ஏற்பட்ட ஸங்கம். அதாவது தொடர்பு. நல்ல தொடர்புகளே நம் வாழ்க்கையை நிர்மாணிக்கின்றன. இப்போது கட்டுரையை முதலிலிருந்து படியுங்கள். நான் சொல்ல வந்தது உங்களுக்குப் புரியும். —ஃ

இசையும், இறைவனும்

ஹாலாஸ்யம் கிருஷ்ணமூர்த்தி

பாரதநாடு பழம் பெரும் நாடு, வேத நெறியும், பன்னரு உபநிடதமும் தழைத்த வடமொழிக் கலாசாரமும், பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்து இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதையாம் தமிழணங்கு வளர்த்த பண்பாடும் இரண்டறக் கலந்து மிளிரும் பொன்னொளிர் நாடு.

நம் பாரதப் பண்பாட்டின் ஆணிவேர் இறை உணர்வு ஆகும்.

தோன்றியவை மறைந்து மறைந்தவை தோன்றும், இவ்வண்டப் பகுதியின் அளப்பருந் தன்மையையும் வளப் பெருங் காட்சியையும் ஆராய்ந்து அறிய முற்பட்டு, சிந்தனையில் சிறந்தவர்கள் நம் முந்தையர். அவர்கள் இசையின் மாண்பையும் நன்கு உணர்ந்தவர்கள். இசை கற்றார்க்கும் கல்லாதவருக்கும் ஒருங்கே இன்பம் பயப்பது. குழந்தைகளையும், விலங்கினங்களையும் கூட ஈர்க்கும் தன்மையது. எனவே, மெய்ப் பொருளை நாடும் முறைகளிலே, நம் முன்னோர்கள் நாதோபாஸனைக்கு ஒரு தனிப் பெரும் இடம் அளித்தார்கள். ரிக்குகள் என்ற அழகிய கவிதாரூபத்திலே இறைவனைத் துதிக்க முற்பட்டார்கள். ரிக்வேதம் படைத்த இருடிகள், பின்னர் ரிக்குகளை இசையுடன் பிணைந்து சாம வேதத்தைப் படைத்தனர். நம் சங்கீதத்தின் பிறப்பிடம் சாம வேதம். சங்கீதத்திற்கு அடிப்படையான நாதமோ இறைவனிடமிருந்தே தோன்றியது.

தியாக பிரும்மம் தமது சித்தரஞ்சனி ராகக் கீர்த்தனையில்,

"பரமேச்வரனின் ஸத்யோஜாதம் முதலிய ஐந்து திருமுகங்களிலிருந்து ஸப்த ஸ்வரங்கள் தோன்றின. அந்த நாத வடிவனான சங்கரனை மனத்தாலும் சிரஸாலும் வணங்குகிறேன்" என்று பாடிப் பாடிப் பரவசம் அடைகிறார்.

பண்டைத் தமிழரோ தமிழ்மொழியை இயல், இசை, கூத்து என்று முத்தமிழாக வளர்த்தார்கள். நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய தொல்காப்பியத்தில் இசை பற்றிய குறிப்புகள் பற்பல உள்ளன. முல்லை, குறிஞ்சி, மருதம், செய்தல், பாலை முதலிய ஐந்து நிலங்கட்கும் உரிய வெவ்வேறு பண், யாழ் ஆகியவை பற்றி நுண்ணிய குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரம் மூலம் தொன்மையான தமிழ் இசை பற்றிய அரிய செய்திகள் பலவற்றை அறிகின்றோம். பரிபாடல், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய்மொழி முதலிய நூல்கள் எல்லாம் தமிழிசைக் களஞ்சியங்கள். முத்தமிழ் வளர்த்த பெரியோர்களும் இசையையும் இறைவனையும் ஒன்றாகவே கண்டனர்: தம்பிரானை, அவர் தம் தோழர் சுந்தரர், "ஏழிசையாய், இசைப்பயனாய்" வழுத்தினார். இசையாய் இருப்பவனும் இறைவன். இசைப் பயனாய் இருப்பவனும் அவனே, "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்பது அப்பர் வாக்கு.

மேலும், நம் ஆன்றோர்கள் தாம் வழிபடும் கடவுளர்களை ஆடலிலும், பாடலிலும் வல்லவர்களாகச் சித்திரித்தார்கள். சாம கானத்தினாலே களிப்புறும் சிவபெருமான் "வீணாவாதன கோவிதர்." 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' என்று அப்பரால் புகழப்பட்டவர், "நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்" பிரளய தாண்டவமும் ஆடுவார்; தில்லையுள் கூத்தனாக ஆனந்த நடனமும் புரிவார். சிறந்த சிவபக்தனான இலங்கை வேந்தனால் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் ராவணக்ருத தண்டவ ஸ்தோத்திரமும், பதஞ்சலி மாமுனிவர் அருளிய சம்பு நடனமும் ஐயனின் தாண்டவத்தின் வேகத்தையும் காம்பீர்யத்தையும் தம் ஓசை நயத்தாலேயே படம் பிடித்துக் காண்பிக்கின்றன. முதற்கூறிய தோத்திரம் இவ்வாறு தொடங்குகிறது.

जटाकटाहसभ्राम भ्रमन्निलिपनिर्झरी
विलोकवीचिवल्लरी विराजमान मूर्धनि ।
धगद्-धगद्-धगद्-ज्वलल् ललाटपट्टपावके
किशोर-चंद्र शेखरे रति प्रतिक्षणं मम ॥

ஐயன் விரைவுடன் ஆடுகின்றான். அப்போது சடைமுடி கலைகின்றது.

அவ்வேகத்திலே உயர்ந்தெழும்புகின்ற கங்கையின் துங்க தரங்கங்கள். அவ்வலை வரிசைகளால் ஒளிருகின்றன. சங்கரனின் சிரம், நுதல் விழியின் கனல் தக தக தகவென ஜ்வலிக்கின்றது. இந்த மாதர் பிறைக் கண்ணியானிடம் என் நெஞ்சம் ஒவ்வொரு கணமும், ஈடுபடட்டும்.

அடுத்து, திருநடனத்தின் மற்றும் ஒரு காட்சியைத் தமிழ் இலக்கியத்திலே காண்போம். மெய் சுருங்கி நரம்பெழுந்து குண்டுக் கண்ணுடனும் குழிவயிற்றுடனும் சிவந்த தலைமுடியுடனும் நீண்ட பற்களுடனும் கூடிய பெண் பேய் சீற்றத்துடன் அலறுகின்றது. மற்றும் ஒரு பேய் கொள்ளிக்கட்டையின் கரியை மையாகக் குழைத்துப் பூசுகின்றது. ஆந்தைகள் கிறீச்சிடுகின்றன. ஓம குண்டத்துச் சோற்றை நரி தின்ன, அதைக் கண்டு சினந்து பேய்கள் கைகொட்டி ஆர்ப்பரிக்கின்றன. சுடலைத்தீயில் பிணங்கள் வேகின்றன. இந்தச் சூழலிலே

"தாழ்சடை எட்டு திசையும் வீசி
அங்கம் குளிர்ந்து அலை ஆடும் எங்கள்
அப்பன்இடம் திரு ஆலங்காடே."

என்று இருபத்திரண்டு பீடுடைய பாக்களிலே அச்சம் தரும் மயானக் காட்சிகளையும் அங்கு புனித நடமாடும் ஆலங்காட்டு அடிகளையும் நிழற்படம் போல் நம் கண்முன் கொண்டு நிறுத்துகிறார், "பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் காதல் சிறந்து" சிவன் சேவடியே சேர்ந்த காரைக்கால் அம்மையார்.

வடமொழி சாகரத்திலும், தமிழ் மொழிக் கடலிலும் மூழ்கித் திளைத்த வாலம் அம்மையார் எளிய இனிய பாடலின் ஓரிரு பகுதிகளைப் பார்ப்போம்.

"சடாமுடி கலைந்திட
நிலாப்பிறை தவழ்ந்திட
மகாவெண்கங்கை பொங்கிட
கபாலி நட்டம் ஆடினான்."
"குடாரி சூலம் கையிலே
விடாது சுற்றி மின்னிடத்
தடாதகை
நடாதிபன் வியந்திட"

என்று தொடங்கும் பாடல் அரிய ஆன்மிகச் சிந்தனையுடன் முடிகிறது.

"பாலை மனத்தில் காலை மிதித்துப்
பரமன் நர்த்தனம் ஆடினான்
மேலும் மேலும் ஞான மன்றில்
மூலன் நர்த்தனம் ஆடினான்
காலகண்டன் கருத்திலாட
ஞாலத் துயரம் பறந்ததே."

உலகம் புரக்கும் அன்னை சகல கலாவல்லி!

"பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற் பனுவலும் எண்ணும் பொழுதே எளிது எய்த" அருளுபவள்.

மாணிக்க வீணையை மீட்டி அதில் தோன்றும் நாதரஸபானத்தால் மீண்டும் மீண்டும் உவகை அடைபவளும், ஸரிகமபதநி என்ற ஸ்வராவளியில் கொள்ளை இன்பம் காண்பவளுமான சியாமளையை சங்கீத தேவதையாகப் போற்றுகிறார், கவி காளிதாஸர். அய்யன் தாண்டவம் ஆடினால் நிகழ்வது பிரளயம்; அன்னை லாஸ்ய நடனம் ஆடினால் ஈரேழு புவனமும் பூக்கும். காக்கவும்படும் என்று கருத்தை ஆதி சங்கரர்

सृष्टि स्थिति उन्मुख लास्यकायै समस्तसंहारक तांडवाय
जगज्जनन्यै जगदेकपित्रे नमः शिवायै नमः शिवाय

என்று பாடி வியக்கிறார், "அர்த்தநாரீச்வர்" தோத்திரத்தில். நடையில் நின்றுயர் "நாயகு'னாம் இராமபிரானும் சீரிய இசைஞானம் பெற்றவர் என்று.

गन्धर्वे च भुवि श्रेष्ठः बभूव भरताग्र

வால்மீகி தெரிவிக்கிறார். கண்ணபிரானோ "பாம்புத் தலை மேலே நடம் செயும் பாதத்தினன்" புல்லாங்குழல் கொண்டு வந்து அமுது பொங்கித் ததும்பும் நற்கீதம் இசைப்பான். யமுனா நதி தீரத்திலே மதி நிறைந்த நன்னாளில் அவன் கோபியருடன் ஆடிப்பாடும் அழகை லீலாசுகர் கண்டு களிக்கிறார்.

अङ्गनामङ्गनां अन्तरे माधवो
माधवं माधवं चान्तरेणाङ्गना
इत्थमाकल्पिते मण्डले मध्यगो
सञ्जगौ वेणुना देवकीनन्दनः ॥

இநத அற்புதப் பாடலை, தமிழில் அதே சந்தஸில் அமைத்துத் தந்துள்ளார், ஹா.கிவாலம்.

அங்கனை அங்கனை நடுவிலே ஆயர்கோன்
மங்களன் மங்களன் இடையிலோர் பெண்கனி
இங்ஙனம் குழுமிய இன்பக் கூட்டந்தன்னிலே
செங்கனி வாய்குழல் சீதரன் ஊதினான்.


அப்பமும், முப்பழமும் அமுது செய்யும் தொப்பை அப்பனாம் பேழை வயிற்றுப் பிள்ளையாரும் நர்த்தன கணபதியாக விளங்குவார். ஆனை முகத்தானின் ஆடலிலே அகம் குழைந்த ஆதி சங்கரர்,

"சலங்கை குலுங்கும் சிலம்பார்ந்த பாதம்
நலம் கொள் நடம் செய்தசைந்தாடு காது
வலங்கை இலட்டு வயிற்றாடு பாம்பு
துலங்கீசன் மைந்தன் பதம் போற்றி போற்றி"

என்று கணேச புஜங்கத்தைத் தொடங்குகிறார். நாமும் இத்தீபாவளித் திருநாளில்-

"स्वर-राग सुधा-रस-युत भक्ति
स्वर्गापवर्गमुरा मनसा"

என்றுணர்ந்து, துதிக்க வாயும் நினைக்க நெஞ்சும் தந்து, எண்ணுமாய் எழுத்துமாய், ஏகமாய் அநேகமாய், பண்ணுமாய் சுதியுமாய, பாட்டுமாய், இசையுமாய் விளங்கிடும் ஜோதியை வணங்கி 'யான் எனது' என்பதை மாற்றிடும் வளர்ஞானம் பெறுவோமாக!



ஆன்ம இசை

நா.சீ.வரதராஜன்

அம்பிகையை அனைத்துக்கும் ஆதார சக்தியினை,
நம்பினோர்க்(கு) உதவுகின்ற நல்லமுதப் பேரருளை,

எனக்குள்ளே எனக்குள்ளே இசையாகத் தேர்கின்றேன்.
உனக்குள்ளே, ஏழுலகில் எல்லா உயிர்களிலும்

ஆன்ம இசை மீட்டும் அற்புதம் அவ் அம்பிகையே!
நான்மடிந்த பின்னாலும் நான்மடியா திருப்பதது!

எனக்குள் நான் அமிழுகையில் என்காதில் ஆன்மஇசை
இனிக்கும் உருவின்றி இதயத்தில் புல்லரிக்கும்!

புல்லரிக்கும் போதென்னுள் போதை தலைதூக்கும்.
சொல்விரிக்க முடியாத சுகச்சூடுடல் பரவும்!

சூடு பரவும் சுகம் என்ன? என் முளை
கோடு கிழிக்கும்! குணம் காட்டும் என்புத்தி!

புத்தி தலைதூக்கும் போதில் அந்த மாய இசை
சத்தம் அடங்கிவிடும்! 'தான்' முனைக்க, அது மறையும்.

நம்முள்தான், நம்முள்தான் நாதப் பெருவடிவாய்
அம்மை உறங்குகிறாள்! ஆசையுடன் தானெழுந்து

நாதப் புனலாலே நம்மைக் குளிப்பாட்டும்
போதையுடன் தானுள்ளாள்! போது பிறக்கவில்லை.

நெஞ்சை வெளியிலெலாம் நிறுத்தாமல் முனைந்திங்கே
கொஞ்சம் நீ உள்ளிருட்டில் கூடவிட்டால் அவ்விருட்டில்

நெஞ்சுக்குப் புதுவிழியும் நினைவுக்குப் புதுக்காதும்
விஞ்சையென மேவிவரும்! மெல்ல ஓர் அனுபவத்தின்

தண்மை எரிப்பில் தணலின் குளிப் பாட்டில்
உண்மை ஒளிகாட்டும்! ஒலியங்கே உருக் காட்டும்!


நாதம்தான் பிரம்மம்! நாதம்தான் அவள் வடிவம்!
நாத தனில் பிறக்கும் நளினம்தான் அவள் உடலம்!

நாதம் வெளிக்காற்றில் நலிவுற்றுப் போனதனால்
போதம் தருவதில்லை. பொலிவதனில் தெரிவதில்லை.

ஆன்ம இசைவடிவில் அம்பிகை நம் உடலுக்குள்
தான்புகுந்து கொண்டுள்ளாள். தன்னை வெளிப்படுத்தும்

தருணம் அவளறிவாள்! தத்துவத்தை நாம் புரிந்து,
அருள் நினைந்து, தியானத்தில் அமிழ்ந்(து) உள்ள சாகரத்தின்

அடியாழம் சென்றிட்டால் அங்கே அம் மோன இசை
வடிவாகி அம்பிகையும் வந்து நமை ஆட்கொள்வாள்.


மணி மகுடத்தின் மாணிக்கங்கள்

தமிழ்ப் பணிகளுக்கும், ஆலயத் திருப்பணிகளுக்கும் செட்டிநாட்டு அரசர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் அள்ளிக் கொடுத்தது பல கோடி. வாழையடி வாழையாக அவர் திருக்குமாரர் குமாரராஜாவாக அன்று விளங்கிய முத்தைய்ய வேள் தந்தை விட்ட பணிகளைத் தொடர்ந்தார். சென்னை நகர முதல் மேயராக அமர்ந்து, ஆற்றிய பணிகள் சொல்லில் அடங்கா. அதனால் தான் அவருக்கு, சென்னை மாநகராட்சியில் சிலை – தெருவுக்கு முத்தையா சாலை என்று பெயர் சூட்டினார் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள். முத்தையா செட்டியார் திருக்குமாரர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி, தன் பாட்டனார், தந்தையின் அறச் செயல்களைத் தொடர்வதோடு தமிழகத் தொழில் மகுடத்தில் மாணிக்கப் பரல்களைப் பதித்து வருகிறார். தமிழ்த் தாயின் பெருமைக்குச் சான்றாக வரலாற்றில் விளங்கும் வள்ளல்களின் திருஉருவங்களை வண்ணப்படமாக வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.



ஆற்றங்கரை சொற்கிழத்தி

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்

தமிழக வரலாற்றில் பிற்காலச் சோழர் காலம், பொற் காலம் என்று போற்றப்பெறும். வரலாற்றுப் பேராசிரிய ரான திரு. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியார் தம்முடைய மிகச்சிறந்த நூலான 'சோழர்கள்' என்னும் நூலில் இதனைத் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார். தஞ்சையைச் சுற்றி ஆண்ட குறுநில மன்னர்களான முத்தரையர்களிட மிருந்து தஞ்சையைக் கைப்பற்றிய விஜயாலய சோழன் என்பான் சோழப் பேரரசை நிறுவினான். அவன் வழி வந்த மன்னர்களில் முதலாம் இராசராச சோழனும் முதலாம் இராசேந்திர சோழனும் வரலாற்றில் நிலைத்த புகழ் பெற்றவர்கள் ஆவர். தஞ்சைப் பெருவுடையார் கோயில் முதலாம் இராசராசரின் பெருமையைப் பறை சாற்றிக் கொண்டு இருக்க, கங்கை கொண்ட சோழபுரத் திருக்கோயில் முதலாம் இராசேந்திர சோழனின் வடநாட்டு வெற்றியை விளம்பி நிற்கின்றது. ஒரு காலகட்டத்தில் இச்சோழர் மரபில் ஆண் வாரிசு அற்றுப் போக, சோழர்கள் பெண் கொடுத்த வேங்கி நாட்டிலிருந்து இளவரசர் சோழர் அரியணை ஏறினார். அவரை முதலாம் குலோத்துங்கன் என்று கருதுகின்றார்கள். குல உத்துங்கன் என்றால் இரண்டு குலத்தையும் நழைக்கச் செய்தவன் என்று பொருள் அந்த வகையில தான் பிறந்த வேங்கி அரசர் மரபினையும், தாய்வழிப் பாட்டனாராகிய சோழர் அரச மரபினையும் தழைக்கச் செய்யப் பிறந்தவன் என்பது இதன் பொருள். முதலாம் குலோத்துங்க சோழன் அரியணையில் ஏறுவதற்குக் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக் கூத்தர் துணை நின்றார் என்று சொல்வதுண்டு. இதற்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றாலும் மூவருலாவில், ஒட்டக்கூத்தர் எழுதிய நூலில் சில முக்கிய செய்திகளை அறிய முடிகின்றது.

முதற் குலோத்துங்க சோழன் மகனே விக்கிரம சோழன், விக்கிரமசோழனின் மகனே இரண்டாம் குலோத்துங்க சோழன்; இரண்டாம் குலோத்துங்க சோழன் மகனே இரண்டாம் இராசராச சோழன். இந்த மூன்று பெருவேந் தர்கள் காலத்திலும் ஒட்டக்கூத்தர் பெருமான் அவர்களுக்கு ஆசிரியராகவும் அவர்களுக்குப் புலவராகவும் விளங்கிய காரணத்தால் விக்கிரமசோழன் முடிபுனைந்து கி.பி. 1118 ஆம் ஆண்டினை ஓர் எல்லையாகக் கொண்டு இரண்டாம் இராசராச சோழன் ஆட்சியின் இறுதி ஆண்டான 1173 ஆம் ஆண்டினைப் பிறிதோர் எல்லையாகக் கொண்டு ஒட்டக் கூத்தர் வாழ்ந்த காலம், பன்னிரண்டாம் நூற்றாண்டின் தொடக்க முதல் பிற்பகுதி வரை என்று ஒருவாறு கொள்ளலாம். மேலும் ஒட்டக்கூத்தர் தொண்ணூறு ஆண்டு களுக்கு மேல் வாழ்ந்தவர் என்று கருதப்படுவதனால் இக்காலம் மேலும் உறுதியாகின்றது.

முகப்புப்பட விளக்கம்

சித்திரம் : அமரர் 'சில்பி'

ஒட்டக்கூத்தருடைய இயற்பெயர் கூத்தர் என்பதாகும். இவர் கூத்த முதலியார் என்றும் வழங்கப்பெற்றார். கூத்தர் என்பது தில்லையில் திருக்கோயில் கொண்டுள்ள நடராசப் பெருமானுடைய திருப்பெயர் ஆகும். இவர் பிறந்த ஊர் மலரி என்பது, கீழ்க்காலும் தண்டியலங்கார மேற்கோற் செய்யுளால் தெரியவரும்.


சென்று செவியளக்குஞ் செம்மைய வாய்ச்
சிந்தையுள்ளே நின்றளவி லின்ப நிறைப்பாற்றுள் –
ஒள்வ மலரிவருங் கூத்தனார் மாதர்நோக கொன்று
மணிவருள் கூத்தன்றன் வாக்கு.

மலரி என்பது குறித்து வேறுபட்ட கருத்துகள் வழங்கப்பெறுகின்றன. சிலர் சோழ நாட்டின் ஓர் ஊர் என்பர். சாசனக் கவி சரிதம் கொண்டு மலரி என்பது திருவெறும்பூரின் பழைய பெயர் என்று அறிய வருகிறோம். இக்கருத்தினை வரலாறு, கல்வெட்டு ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் உறுதி செய்கின்றார். இவர் அம்பர் நாட்டைச் சார்ந்தவர் என்று தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்களின் மூவருலா பதிப்புக் குறிப்பிடுகிறது. ஒட்டம் என்றால் பந்தயம் என்றும், ஒட்டுதல் என்றும் இரு பொருள் காண்பர் அறிஞர். இவர் பந்தயம் வைத்துப் பாடுதலில் சிறந்தவர் ஆதலின், தம் இயற்பெயரோடு ஒட்டம் என்னும் சொல் சேர்த்து ஒட்டக்கூத்தர் என வழங்கப்பெற்றார் என்பர். தன்மீது இவர் பாடியுள்ள உலாவிலுள்ள கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி விக்கிரம சோழன் கேட்க, அவ்வாறே அவர் கருத்தை நிறைவேற்றப் பாடியுள்ளமையால் ஒட்டக்கூத்தர் என்னும் பெயர் பெற்றார் என்பர். மேலும் ஒட்டக்கூத்தர் இயற்றிய ஈட்டி எழுபது என்னும் நூல் இவர் கைக்கோளர் எனப்படும் செங்குந்தர் மரபினைச் சார்ந்தவர் என்பதனைப் புலப் படுத்தும். மேலும் இவர் ஈட்டி எழுபது பாடி, வெட்டப் பட்ட எழுபது செங்குந்தர் தலைகளை ஒட்டப்பாடி அவர்கள் உயிர் பெற்றிடச் செய்தார் என்றும் கூறுவர். கலைமகளைத் துதித்துப்பாடிக் கவி செய்தனர் என்றும், கலைமகள் அருளால் உயிர்பெற்று எழுந்த செங்குந்தர்கள் ஒட்டக்கூத்தர் எனப் பட்டம் வழங்கினர் என்றும் அடியிற் காணலாகும் செய்யுள்கள் இரண்டும் தெரிவிக்கின்றன.

கலைவாணி நீயுலகி விருப்பதுவுங்
கல்வியுணர் கவிவல் லோரைத்
தலையாகக் காப்பதுவு மலர்நாவில்
வாழ்வதுஞ்சத் தியமே யன்றோ
சிலைவாண னாலிருந்தா யிரம்புயங்க
ழுனிந்துமுயர் சீவ னுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ்சொ் குந்தருயிர்
பெற்றிடத் தயைசெய் வாயே!

நிலைதந்தா ருலகிறுக்கு ளியாவர்க்கு
மானமதை நிலைக்கத் தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்
திடவென்றே கையிற் றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த
ரென்கவிக்கே விலையா கத்தந்
தலைதந்தா ரெனக்குமொட்டக் கூத்தனெனப்
பெயரினையுந் தான்றந் தாரே!

→




(மேலே) ஸரஸ்வதி கோயில் பிராகாரம்

(கீழே) வீதியிலிருந்து பார்க்கும்போது
கோவில் அளிக்கும்
தோற்றம்.

கூத்தனூர்


சித்திரம்: அமரர் 'சில்பி'



மூன்று சோழப் பெருவேந்தர்களில் ஒருவர் இவருடைய புலமையினையும், தகுதிப்பாட்டினையும் உணர்ந்து அரிசிலாற்றங்கரையில் அமைந்துள்ள ஓர் ஊரினை முற்றூட்டாக வழங்கினார் என்றும், அவ்வூர் இன்றும் ஒட்டக்கூத்தர் பெயரால் 'கூத்தனூர்' என்று வழங்கப்படுகிறது என்றும், அவ்வூரில் கலைமகளுக்கு ஒரு கோயிலை ஒட்டக்கூத்தர் நிறுவி வழிபட்டு வந்தார் என்றும் அறிய வருகிறோம். சைவ சமயத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்த ஒட்டக்கூத்தர் கலைமகள் வழிபாட்டிலும் பெரிதும் ஈடுபட்டார் என்பதனையும் அறிகிறோம். தாம் இயற்றிய பிறிதொரு நூலாகிய தக்கயாகப் பரணி என்ற நூலில் 'ஆற்றங்கரை சொற்கிழத்தி வாழியே' என்று வாழ்த்தியிருப்பது அரிசிலாற்றங்கரையில் அமைந்துள்ள கூத்தனூரில் கோயில் கொண்டு எழுந்துள்ள - இவர் அன்றாடம் வழிபட்ட - கலைமகளேயே குறிக்கும் என்பதனால் இவருடைய கலைமகளின் ஈடுபாடு மேலும் உறுதியாகின்றது. மேலும் தக்கயாகப் பரணியில் காளி, கலைமகளிடம் திருஞானசம்பந்தர் வரலாற்றினைக் கூறுமாறு கேட்பதும், காளியின் கட்டளைப்படி ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றைக் கலைமகள் விரித்துச் சொல்ல, கலைமகள் மனம் மகிழ்வுற்று, தன் அருகில் வீற்றிருக்கும்படி அருளியதாகக் கூறி இருப்பதும், 'தக்கன் முடிந்த கதையைக் கூறும் ஏனைய நூல்களிலிருந்து மாறுபட்டு வீரபத்திரத் தேவர் கலைமகளுடைய நாசியை அரிந்ததாகக் கூறப்படாததுமான செய்திகளால் இவருக்குக் கலைமகள் பாலுள்ள பெரும் பக்தி விளங்கும். அகத்தியரிடத்து இவர் கொண்டுள்ள ஈடுபாடு மிக உயர்வானதாக விளங்குகிறது. இரண்டாம் இராசராசன் இவருடைய உலாவிற்காக உலாவின் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் வழங்கிச் சிறப்பித்துள்ளான் என்ற செய்தியும், அவன் தமிழின்பால் பெரிதும் ஈடுபட்ட மன்னனாக விளங்கினான் என்பதும் ஈண்டு மனங்கொளத்தக்கது.

கூத்தனூர், கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தரின் நினைவை இன்றும் நிலைப்படுத்திக் கொண்டு இருக்க, அவர் அமைத்த கலைமகள் கோயில், அவர் கலைமகள்பால் கொண்ட பெரும் பக்திச் சிறப்பினைப் பறைசாற்றி நிற்கிறது.

"கேட்டவரை போதும்"



கேட்டவரை போதுமெனக்
கேள்விகளே ஓய்வெடுப்பீர்
கிடைத்தபதில் எத்தனைநீர்
எடுத்தபடி போய்முடிப்பீர்?
மீட்டும்வரை இசையிருக்கும்
வீணையுமிம் மெல்லிதயம்
வேதனையின் ஒலியெழுப்பி
வீசுவதேன் சொல்லெதையும்?
ஆட்டும்வரை ஆடுகிறோம்
அடங்குமினிப் போதறியோம்
ஆசைகளை வளர்ப்பதெல்லாம்
பாசமென்னும் சூதறியோம்
காட்டும்வரை யில்நடப்போம்
கால்நடக்கும் போக்கையறி!
கைகொடுக்கும் அருள்உளதேன்
மெய்நடுக்கம் தூக்கியெறி!

தூக்கியெறிந் தால்போதும்
தோள் சுமைப்புண் ஆறிவிடும்
சோர்வகலும் சோதனைகள்
சொப்பனமாய் மாறிவிடும்
ஊக்கமிருந் தால் போதும்
உண்மைகளில் ஊன் உருகும்
ஊற்றுமிருந் தால்போதும்
ஒற்றுமையில் தான்பெருகும்
ஆக்கமிருந் தால்போதும்
ஆற்றலுமே விண்ணதிரும்
ஆணையிருந் தால்போதும்
அன்னையவள் கண்ணெதிரே
நோக்கிலிருந் தால்போதும்
நோன்பிருப்ப தேதுமில்லை
நொடியினிலே அதிசயங்கள்
நூறுவரும் சேதமில்லை

ஏதுமிலா திருந்துவிட்டால்
ஏக்கமில்லை தாக்கமில்லை
ஏமாற்றம் எள்ளளவும்
இழுத்தணைக்கும் போக்குமில்லை
வாதமிலா திருந்துவிட்டால்
வம்புமில்லை வழக்குமில்லை
வார்த்தைகளில் திருந்திவிட்டால்
மானமதற் கிழுக்குமில்லை
பேதமிலா திருந்துவிட்டால்
பெருமையிலை சிறுமையிலை
பெயருமிலா திருந்துவிட்டால்
பிழையுமிலை திறமையிலே
நாதியிலா திருந்துவிட்டால்
நமைஎடுக்கத் தாய்வருவாள்
நம்பும் அறி விருந்துவிட்டால்
நாம்அறியா தேதருவாள்.

மதிஒளி

ஜீவன் முக்தரும் வாயில்லா ஜீவன்களும்

ரா. கணபதி

“பசு இன்னா இப்டி ஒதைக்குது? கன்னு ஊட்டிட்டாப்பல இல்ல இருக்குது? ஆனா, கன்னைத் தறில கட்டின படியேயும் இருக்குதே! இதென்ன, அக்குறும்பு!” என்று அலுத்துக் கொள்கிறார் ஸ்ரீ மடத்து இடையர்.

உள்ளே ஸ்ரீமஹாபெரியவாள் குறும்புக் குழந்தையாகச் சிரித்துக் கொள்கிறார். “பாதி ராத்ரிலே கன்னு ‘அம்மா’ன்னு கத்தித்து. (தம் வயிற்றைத் தட்டிக் காட்டி) அதுக்குப் போறலைன்னு தெரிஞ்சுது. நான்தான் யாருக்கும் தெரியாமப் போய் (தமது ‘திருட்டுத்தன’த்தைத் தாமே ரஸித்து நகைத்து) கன்னை அவுத்துவிட்டேன். அது வயிறு முட்ட ஊட்டித்து. அப்பறம், எங்கேயாவது ஓடிடப் போறதேன்னு பிடிச்சுக் கட்டிட்டும் வந்துட்டேன். அதுதான் கறக்க விடமாட்டேங்கறது!” என்று அருகிருந்த அணுக்கத் தொண்டர்களிடம் கூறுகிறார்.

அந்த நூறாண்டுப் புனித ஜீவிதத்தில் இது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் நடந்த நிகழ்ச்சி.

கன்றை அவிழ்த்து ஊட்ட விட்டு ஆயரை ஆயாஸமுறச் செய்த கண்ணனின் குழந்தை விளையாட்டு! அதுவே அருள் பழுத்த அன்னை விளையாடலுந்தான். ‘கன்றின் குரல் கேட்டுக் கனிந்து வரும் பசு’ என்று பாட்டு. ஆனால் அந்தப் பசுவும் கனிந்து வரமுடியாமல் தறியில் கட்டுண்டிருக்கும் போது, உள்ளே எங்கோவுள்ள கருணா மூர்த்தியை வத்ஸத்தின் குரல் எட்டுகிறது. தீனவத்ஸலன் அருள் பாலிக்கிறான்.

வேதம் வாழ வந்த வித்தகருக்கு வேத வேள்விக்கு உறுதுணையான கோமாதாவிடம் கூடுதலான ஒரு கருணைதான்! ‘யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை’ என்ற ‘திருமந்திர’ மொழிப்படி பசுவுக்குப் புல்லும், அகத்திக் கீரையும் அனைவரும் கொடுக்க வேண்டும் என்பதை அனவரதமும் வற்புறுத்தியவராமிற்றே! மிக எளிசாக, வீட்டுக்கு வீடு காய் கறி நறுக்குத் தோலைச் சேகரித்து மாட்டுக்குப் போட்டால் அதுவே ஒரு பெரும் பணி என்று மீளமீளக் கூறி, ‘கறிகாய்த் தோலி’ என்றே சிலர் புனை பெயர் பெறுமளவுக்கு அவர்களை இப் பணியில் ஆழத் தூண்டியவராமிற்றே!

மாட்டுப் பொங்கலன்று மாடுகளுக்குக் கொம்புக்கு வர்ணம் தீட்டிற்றா, முகத்துக்கு பின்புறத்துக்கும் மஞ்சள், குங்குமம் மட்டித்ததா, நெட்டி மாலை போட்டதா, கறுப்புக் கயிறு கட்டிற்றா என்றெல்லாம் பன்னிப் பன்னி விசாரிப்பார். மாட்டுப் பொங்கலன்று மெய்யாலுமே மாடுகளுக்கென்று பொங்கல் செய்து படைப்பது ஸ்ரீ மடத்தில் வழக்கம். அன்று மாடுகன்றுகளை அவிழ்த்து ஓட விட்டு ஆனந்தமான கோலாஹல ஓட்டப் பந்தயமும் நடக்கும். அத்திருநாளில் இதே போல் மடத்து யானை, குதிரை முதலானவற்றுக்கும் கொண்டாட்டந்தான்.

ஸ்ரீ பெரியவாளே பசுக்களுக்குச் சொறிந்து கொடுத்து அன்பு சொரிவார். தம் திருக்கரத்தால் அவற்றுக்கு வாழைப் பழங்கள் ஊட்டுவார்.

கோசாலையில் வஸிப்பது அவருக்கு அதிப் பிரியம். காந்தி மஹாத்மாவை அவர் பாலக்காட்டு நெல்லிஸ்ஸேரியில் சந்தித்தது கூட மாட்டுக்கொட்டிலில்தான்.

ஒரு சமயம் பெரியவாள், வரும் அடியார்களிடமெல்லாம் அகத்திக் கீரையும் மொந்தம் பழமும் வாங்கி வருமாறு பணித்தபடி இருந்தார். காரணம், அப்போது காஞ்சியில் பல மாடுகள் கோமாரி நோய்க்கு ஆளாகியிருந்தன. தொண்டர்களை அந்நோய் தீரும்வரை, அதாவது சுமார் ஒரு மாத காலம், நோயுற்ற மாடுகள் உள்ள வீடுகளுக்கெல்லாம் சென்று அவற்றுக்கு மருந்தாக அகத்தியும் மொந்தனும் கொடுக்கச் செய்தார்.

✿

ஒரு காலை வேளையில் பதரி சென்று வந்த பக்தரொருவர் பதரி நாராயணப் பிரஸாதமான மஞ்சள் நிறப் பட்டை ஸ்ரீசரணருக்கு ஸமர்ப்பித்தார். அதை பக்தி புஞ்ஜிதமாகக் கண்ணில் ஒற்றி மேலே போர்த்திக் கொண்டு புனித சுந்தரத் திருக்கோலமாகத் திகழ்ந்தார். அப்போது கோசாலைப் பசுவொன்று கன்று ஈனும் தருணம் எனச் செய்தி வர, உடனே பிரஸவ காலத்தில் எதிரெதிர் திசைகளில் தாய், சேய்களின் இருமுக தரிசனம் காண விரைந்தார். அவ்வாறே தரிசித்து கோமாதாவையும் வத்ஸத்தையும் வலம் வந்தவர் பூரித்த இதயத்தராகக் கொட்டிலிலேயே அமர்ந்துவிட்டார்.

பசுக்கள் தண்ணீர் பருகுவதை அன்பு நயனங்களால் பருகிக் கொண்டிருந்த அவரிடம் ஒரு கன்று துள்ளி ஓடிச் சென்றது. புனிதத் திருவுருவின் மீதே அது உராய்ந்து நிற்க, பரிவாரத்தினர் அதைப் பிடித்துக் கட்ட விரைந்தனர். அருளாளர் வேண்டாம் என ஜாடை செய்தார். தீண்டாத் திருமேனி ‘மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம்’ மட்டுமின்றி இருவருக்குமே உள்ளத்திற்கும் இன்பம் என்பதை உய்த்துக் கொண்டிருந்தது போலும்! ஸ்வாதீனம் பெற்ற கன்று பெரியவாளின் உள்ளங்காலை மோந்து, நக்கவும் தொடங்க, உள்ளம் நிறைந்த அவரும் அதன் முதுகைக் கோதிக் கொடுத்தார்.

சரியாக அச் சமயம் வட மதுரையிலிருந்து ஒரு ஸாது வந்தார். ஸ்ரீசரணரின் திருக்கோலம் கண்ட அவரது கண்கள் ஆனந்த பாஷ்பம் பெருக்கின. “பீதாம்பரதாரியாக, பசுக்கள் சூழ, கன்று ஸ்ரீசரணத்தை நக்கக் கொட்டிலில் விளங்கும் என் கோவிந்த கோபாலனைப் பிரத்திபக்ஷமே கண்டேன்!” என்று நாத் தழுதழுக்கக் கூறினார். விட்டுப் போன அம்சமான பச்சைத் துளஸி மாலையும் வர, அதனையும் அணிந்து மா மதுர மூர்த்தியாய்த் திகழ்ந்த பெரியவாள், அந்த மாலையையும், அதோடு காஷாய வஸ்திரத்தையும் சேர்த்து வட மதுரைத் துறவிக்கு அருளினார்.

✿

பெரியவாள் நாளைத் தொடங்கும் போதே முன் நிற்பது கோபூஜைதான்.

இதெல்லாவற்றையும் விட முக்கியமாக ஒன்று, அவர் பிட்சை கொள்ளும் உணவு வகைகளிலேயே முதலில் பாதி பாகம் பசுவுக்கு

என்று எடுத்து வைத்து, அதற்கு அளிக்கப்பட்ட பிறகுதான் அவர் அவற்றை அமுது செய்வார். (பசுவிலிருந்தே கிடைக்கும் பால், தயிர், வெண்ணெய் மட்டும் இதற்கு விலக்கு.)

✿

கோபூஜையை அடுத்து வழிபாடே பெறும் இன்னொரு விலங்கு கஜம். யானையளவு அன்புடன் யானைக்கு அரிசியும் வெல்லமும் கனிகளும் ஊட்டுவார்.

1983-இல் காஞ்சி ஸ்ரீ மடத்தின் மூன்று ஸ்வாமிகளும் ஒன்று சேர்ந்து கர்நூலில் மாபெரும் விழாவாக வியாஸ பூஜை நடத்தியது நினைவிருக்கலாம். அச்சமயம் சேர அப்பகுதிகளில் ஸ்ரீ பெரியவாள் பாதயாத்திரை செய்து கொண்டிருக்க, அவர் சென்ற வழியே ஸ்ரீ மடத்தின் யானை ஒரு லாரியில் அகஸ்மாத்தாகச் செல்ல நேரிட்டது.

இம் மெலிந்த சிறு மேனியரைச் கண்டதுதான் தாமதம். மாபெருய் யானைக்கு இருப்புக்கொள்ளவேயில்லை! ஒரே பிளிறலாகப் பிளிறத் தொடங்கிவிட்டது. டிரைவர் லாரியை நிறுத்தினார். யானை அதிலிருந்தவாறே ஸ்ரீசரணரிடம் தும்பிக்கையை நீட்டியது. துதிக்கையில் அவர் பேரன்புடன் பழங்களை ஊட்டி, அருளுடன் தட்டிக் கொடுக்க, யானை சாந்தமாயிற்று லாரியிலேயே மண்டியிட்டுத் துதிக்கையைத் தூக்கித் தனது பக்தித் துதியாகக் கர்ஜித்தது.

பெரியவாள் டிரைவரிடம் ஜாக்கிரதையாக அதை ஓட்டிச் செல்லப் பணித்தார். லாரி கிளம்பியது.

பார்வை மறையும் வரை யதீந்திரர், கஜேந்திரன் இருவரும் சாந்த அன்பில் பரஸ்பரம் ஒருவர் மீது மற்றவர் பார்வையைப் புதைத்திருந்தனர்.

ஆதிநாளில் பெரியவாளுக்கும் பிரஹ்லாதன் என்ற யானைக்குமிடையே இருந்த உறவு, தீராத இன்பமும் ஆராத சோகமும் நிறைந்ததொரு தனிக்காப்பியம்.

✿

விலங்கினத்திலேயே மிகப் பெரிதான யானையிலிருந்து மிகச் சிறிதான எறும்புவரை அனைத்து உயிரினத்திடமுமே உயிரன்பு பூண்டவர். எவ்வுயிருக்கும் செந்தண்மை பூண்ட உண்மை அந்தணர்.

ஒரு தினம் தரிசனத்துக்கு வந்தவர்களில் ஒருவரை மற்றவர்களுக்குக் காட்டி ஸ்ரீ பெரியவாள் "இவர் ஸஹஸ்ர போஜனம் நடத்தினவர்' (ஆயிரம் பேருக்கு உணவிட்டவர் என்றார்.

அம் மனிதர் ஒன்றும் புரியாமல் தாம் அப்படி ஒன்றும் செய்ததில்லையே என்று தெரிவித்தார்.

ஸ்ரீசரணர் முறுவலித்து, "நான் சொல்லி நீ எறும்புப் புத்துக்கெல்லாம் பிடி பிடியா அரிசி போட்டியோன்னோ? அப்ப ஒரு ஸஹஸ்ரம் என்ன, எத்தனையோ ஸஹஸ்ரம் எறும்புக்கு போஜனம் பண்ணிவைக்கலையா?" என்றார்!

தான தர்மங்கள் செய்யவிரும்பிப் பெரியவாளிடம் அறிவுரை கேட்டவர்கள் உண்டு. அப்போதெல்லாம் எறும்புப் புற்றுக்கு அரிசி போடுவதையும் ஒரு முக்ய தர்மமாக அவர் கூறுவார். "அரிசி மாக் கோலம் போட்டதே குறிப்பா எறும்பை உத்தேசிச்சுத் தான். இப்ப மொக்கு மாவுலே போட்டு அந்த நெடிமிலே எறும்பு கிட்டயே வர முடியாமல் பண்ணிடறா!" என்று அங்கலாய்ப்பார்.

✿

குன்றின் குரல் கேட்டவருக்கு மடத்துக் குதிரையின் குரல் ஓர் இரவு கேட்டது. அது வாய்விட்டுக் கொடுத்த குரல் அல்ல. வயிறு காய்ந்து உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்ட ரகசியக் குரல்தான்! மற்றவர்களுக்கு அது எப்படிக் கேட்கும்? எனவே அவர்களுக்குப் புரியவில்லை, ஸ்ரீ சரணர் அந்த நேரத்தில் அத்தனை விரைவாக மடத்தின் அங்கணம் அங்கணமாகத் தாண்டிக் கொண்டு எதைத் தேடியவாறு எங்கே செல்கிறார் என்று!

யானைக் கொட்டில், மாட்டுக் கொட்டில் எல்லாம் கடந்து சென்ற ஸ்ரீசரணர், "குதிரை எங்கே?" என்றார்.

ஒரு மூலையில் கட்டப்பட்டிருந்த குதிரை தனது 'ஹார்ஸ் ஸென்'ஸில் யஜமான தேவனைப் புரிந்து கொண்டு, "இதோ இருக்கேன்!" என்பதுபோல "ஹ்ர், ஹ்ர்" என்று குரல் கொடுத்தது.

கனிவுடன் அதன் அருகே சென்றார் முனிவர்.

அலறிப் புடைத்துக்கொண்டு அங்கிருந்த ஆள்காரன் ஒருவனும் எழுந்து நின்றான். ஆனால் அவன் குதிரைக்காரன் அல்லன்.

அவனிடம் பெரியவாள், "குதிரைக்குப் பில்லு போடலே? கொள்ளு வெக்கலே? தண்ணி காட்டலே?" என்று கேட்டார்.

"ஆமாம், யஸமான்! அவன் ஒரே குடியா குடிச்சுப் போட்டு எம்மாம் போதுலேந்தோ தூங்கிட்டுக் கெடக்கான்!" என்றான் ஆள்காரன்.

கடமை மறந்த குடிகாரனிடமும் கருணை மறவாத மஹான், "தூங்கறவனை எழுப்ப வேண்டாம். நீயே எல்லாத் தீனியும் போட்டு ஜலமும் வை" என்றார்.

பெரியவாளே கட்டளையிட்டு விட்டதால், அந்த ஆள்காரன் மட்டுமின்றி அவரது பரிஜனங்களில் வேறு சிலரும் சேர்ந்து கொண்டு அந்தப் பரிக்குப் பரிந்து பரிந்து உபசாரம் செய்ததில் அன்றைக்கு அதற்குப் பெரிய அர்த்தஜாமக் கட்டளையேயாக்கும் நடந்தது!

✿

இங்கு குதிரை 'ஹார்ஸ் ஸென்'ஸில் பெரியவாளை அறிந்ததாகக் கண்டோம். பொதுவாகவே வளர்ப்புப் பிராணிகள் எல்லாவற்றுக்குமே அவ் வீட்டுத் தலைவர் யாரென்று, அவர் அவற்றை விசேஷமாகக் கவனிக்காவிட்டாலும் கூட, உள்ளுணர்வினால் தெரியும்; அதனால் அவை அவரிடம் தனியான விச்வாஸம் காட்டும் என்பர். ஸ்ரீ பெரியவாள் குறித்தோ இது ஆயிரம் மடங்கு அடர்ந்து அத்தியந்த ஆன்ம பந்துத்வமாகவே இருந்தது.

இதற்கோர் அரிய எடுத்துக்காட்டு உண்டு. தேனம்பாக்கம் சிவாஸ்தானத்தில் ஒரு சிறு குடிலுக்குள் தம்மைச் சிறை வைத்துக் கொண்டது போலவே ஸ்ரீ பெரியவாள் நீண்ட காலம் இருந்தார். அப்புறம் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஒரு யுகாதியன்று வெளிவந்தார். அப்போது அச் சில ஆண்டுகளை யுகமாகக் கருதிக் காத்திருந்த மானுட பக்தர்கள். "ஜய ஜய சங்கர!" என்றும் "சம்போ, மஹாதேவ!" என்றும் கோஷித்தது பெரிதல்ல. அந்த கோஷத்தையும் விஞ்சி எங்கோ கோஷ்டத்தில் கட்டியிருந்த பசுக்களும் 'ம்மா! ம்மா!' என்று ஆனந்த ஆரவாரம் செய்தன. காலமிலாக் காலமான அந்தப் பகல் வேளையில் சிவாஸ்தான விருக்ஷத்திலிருந்த பக்ஷி ஜாதிகளெல்லாம் உதய காலத்தில் போல ஆர்ப்பரித்தன. பெரியவாளைக் கண்ணாலேயே கண்டிராத நாய்கள் யாவும் கூட வாலைக் குழைத்துக் கொண்டு, 'வள் வள்' குரைப்பு இன்றி, செல்ல 'ஞொய்' இழுவல் இழுத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி ஓடின.

பரம சுத்தமான ப்ரேமையின் காந்த ஈர்ப்பு அப்படிப்பட்டது!

வரதன் கோயிலைச் சுற்றிப் பரிவாரம் விஷ்ணு ஸஹஸ்ரநாமம் ஓதப் பரமர் வலம் வந்த நாள்களில் தவறாமல் ஒரு நாய்ப்பட்டாளமும் ஸாதுவாக உடன் வந்தது பலரும் கண்டு வியந்த காட்சியாகும்!

✿

தி.நகர் பஸுல்லா சாலையிலுள்ள சில பக்தப் பிரமுகர்களின் இல்லங்களுக்கு ஸ்ரீசரணர் விஜயம் செய்த ஒரு சமயம் அவர்களது பிரார்த்தனைகளை அவர் கேட்டுக் கொண்டது மட்டுமல்ல. அந்த பவனி ஆரவாரத்தில் வேறெவரும் கேளாத ஒரு குரலையும் விடாமற் கேட்டபடி இருந்தார்.

"அண்டைப் புறத்துல ஏதோ வீட்டுல ரொம்ப நாழியா நாய் விடாமக் கொலைச்சுண்டிருக்கு. வள(ர்)ப்பு நாய் அப்படி கொலைக்கறதுன்னா, வீட்டுக்காராள்ளாம் எங்கேயோ போய் நெறய நேரமாயிடுத்து, அதுக்கு ஆஹார வேளை தப்பிப் போயிடுத்து; அதோட, சுத்தறதுக்கு அவுத்து விடறதும் தப்பிப் போயிடுத்து-ன்னு தோணறது. போய் அப்படித்தானான்னு பாருங்கோ! அப்படித்தான்னா பிஸ்கெட் வாங்கிப் போட்டுட்டு வாங்கோ! நாய்ப் பழக்கம் உள்ளவா யாராவது இருந்தா, அதைக் காம்பவுண்டுக்குள்ளேயே அவுத்து விட்டுட்டுச் சித்தப் பொறுத்துப் பிடிச்சுக் கட்டிட்டு வாங்கோ" என்று அருகிருந்தோரிடம் அருளாளர் கூறினார்.

சிலர் சென்று பார்க்க, ஸ்ரீ பெரியவாள் சொன்னவிதமே இருந்தது. அவர் பணித்த வண்ணமே அதன் ஆஹார, ஸஞ்சாரங்களை நடத்திக் கொடுத்துவிட்டு அவர்கள் திரும்பிவந்தனர்.


✿

பெற்ற தாய் மகவுதனை மறந்தாலும் தாமே பால் நினைந்தூட்டும் தாயாய்ப் பரிவார் நமது பரமர். அந்தப் பெற்ற தாய் ஒரு நாய் என்பது மேலும் கவனத்திற்குரியது.

மடத்து ஆள் ஒருவனிடம் ஸ்ரீ பெரியவாள் சற்றுத் தொலைவில் நல்ல வெயிலில் வெட்டவெளியில் சுற்றிக் கொண்டிருந்த நாய்க் குட்டிகளைக் காட்டினார். "தாய் நாயைப் பாலுக்காகத் தேடறதுகள். சட்னு பால் எடுத்துண்டு போ. அதுகளை நெழல்லே எடுத்துப் போட்டுட்டு, பால் வெச்சுட்டு வா" என்று கூறி அனுப்பினார்.

அவரைப் பொறுத்த மட்டில் நல்ல வெயிலையும் 'நல்ல' வெயிலாகவே பாவித்துக் கடுங்கோடையில் பாத யாத்திரை புரிவார். அப்படி ஒரு பகலில் அவர் கலவை- காஞ்சீபுரம் மார்க்கத்தில் பெருங்கட்டூர் கிராமத்தில் சென்று கொண்டிருக்கையில் நடுச் சாலையில் மூன்று பச்சிளம் நாய்கள் சுத்திக் கொண்டிருந்ததைக் கண்டார். கருணா பந்தம் என்ற பெருங்கட்டுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டிருந்த வைராகியின் கால்கள் நின்றுவிட்டன. கனிவுடன் குட்டி ஞமலிகளை நோக்கினார். உடன் வந்த பாரிஷதர்களிடம், "பாவம், சின்னச் சின்னக் குட்டிகள்! வெயில்லே தாகம் தாளலை. பால் வெச்சுட்டு வாங்கோ!" என்றார்.

அவசரத் தேவைக்கெனக் கைவசம் வைத்திருந்த பாலை அவர்கள் மர மடக்கொன்றில் விட்டுக் குட்டி நாய்களுக்கு வைத்தனர். ஆவல் ஆவலாக அக் குட்டிகள் 'சளபள' என்று பால் அருந்துவதைக் கனிவோடு கண்டபின்னரே பரமர் பாத யாத்திரை தொடர்ந்தார். →



இந்த நூற்றாண்டு கண்ட நூறு சதவிகித உண்மை ஸந்நியாஸியான பெரியவாள் ஸஞ்சாரம் செய்யும் காலத்தில் இடிந்த மண்டபம், பாழடைந்த கோவில், புழக்கமற்ற குடில் என்று எதில் வேண்டுமானாலும் தங்கிவிடுவார். இதுபோன்ற இடங்களில் பூச்சி பொட்டுகளிலிருந்து ஆரம்பித்து எலி, பாம்பு, பூனை உள்படப் பல உயிரினங்கள் ஏற்கெனவே இருக்கும்தானே? அவற்றுக்குத் தீங்கு விளைவிக்கவே கூடாது என்பதில் நம்பவொண்ணாத அஹிம்ஸையைப் பின்பற்றிய உண்மைத் துறவி அவர். "அதுகள் இருந்துண்டிருக்கற எடத்துல நாம வந்து பூந்துண்டு அதுகளையே அடிச்சுத் தொரத்தினா என்ன நியாயம்?" என்று அடித்துக் கூறிப் பாரிஷதர்களைக் கட்டுப்படுத்தி விடுவார். அஹிம்ஸையில் நிலைத்தவரின் ஸந்நிதியில் கொடிய பிராணிகளும் குரூரத்தை விட்டுவிடும் என்ற யோக சாஸ்திர வாக்குக்கிணங்க அந்த ஜீவராசிகளும் பெரியவாளுக்கு- அவர்தம் பணியே வாழ்வாகக் கொண்ட பாரிஷதர்களுக்குந் தான்- ஊறு விளைவிக்காமலே இருக்கும். (இதுதான் பொது விதி. விலக்காகவும் ஒன்றிரண்டு உண்டு.)

பண்டரீபுரத்தில் பெரியவாள் தங்கியிருந்த இடத்தில் ஒரு பூனை குட்டிகள் போட்டது. 'குட்டிபோட்ட பூனை' எற்ற வசனப்படி தாய்ப் பூனை, இடம் இடமாகக் குட்டிகளை மாற்றிக் கொண்டிருந்தது பாரிஷதர்களுக்கு மிகவும் தொல்லை கொடுத்தது. ஆசாரத்தில் நெருப்பான பெரியவாளுக்கு மடித் தப்பாக ஏதேனும் நடந்துவிடப் போகிறதே என்று கவலைப்பட்டார்கள்.

பெரியவாளோ, "நல்ல மழைக் காலம். குட்டிகளுக்குக் குளிரும்" என்றார். பக்தரொருவர் காணிக்கை செலுத்தித் தமது திருமேனி மீது போர்த்தியிருந்த விலையுயர்ந்த மாங்காய் டிஸைன் சால்வையைக் களைந்து, "இதை அந்தக் குட்டிகளுக்குப் போர்த்து" என்று சீடரிடம் கொடுத்தார்.

முசு முசு மேனிப் பூனைக்குக் குளிருமா? அருள் உள்ளம் இப்படியெல்லாம் கேள்வி கேட்பதில்லை. மயில் உடைகளைத் தரிப்பதில்லை என்று, நன்கறிந்திருந்தும்தான் பேகன் அதற்குப் போர்வை ஈந்தான் என்று பரணர் பாடியது நினைவு வருகிறது:

உடாஅ போரா ஆகுதல் அறிந்தும்
படா அம் மஞ்ஞைக்(கு) ஈத்த எம்கோ
கடா அயானைக் கலிமான் பேகன்

✿

பூனையின் ஜன்ம சத்ருவான எலிக்குந்தான் மித்திரர் நம் பவித்திரர். 'ப்ராணி மித்ர'ப் பட்டம் பெற அவரினும் தகுதி வாய்ந்தவரிலர்!

ஒரு நாள் காலை எலி வளையை அடைப்பதற்காகக் கொத்தனார் வந்தார். யார், என்ன விஷயம் என்று பெரியவாள் கேட்டார். விஷயம் தெரிவிக்கப்பட்டது.

"நமக்கு எலி உபத்ரவம்னா நாமும் எலிக்கு உபத்ரவந்தான்" என்று கூறிய பெரியவாள், "வளையை அடைக்க வேண்டாம்" என்று உத்தரவிட்டு விட்டார்.

வேறு வழியில்லாமல் சிங்கரர் கொத்தனாரைத் திருப்பியனுப்பச் சென்றார்.

பெரியவாள் சொடக்குப் போட்டு அவரை அழைத்தார். "நீங்க கூப்டேளேன்னு காலங்கார்த்தால அந்தத் தொழிலாளி வந்திருக்கான். கூப்பிட்டு வந்தவனை, 'வேலை இல்லை, போ'ன்னு வெறுங்கையா அனுப்பிச்சா என்ன நியாயம்? கூலியைக் குடுத்து அனுப்பு" என்றார் நீதியுருவர்.

✿

எலி வளைகளில் வேர்க்கடலையும், பொட்டுக்கடலையும், வெல்லமும் கலந்து ஒரு முட்டைக்கு மேல் கொட்டச் செய்த ஓர் அதிசயக் கருணைலீலையும் உண்டு!

காஞ்சீபுரத்தை அடுத்துள்ள கீழம்பியில் ஸ்ரீ மடத்திற்குச் சொந்தமான நிலத்திலிருந்து வேர்க்கடலை அறுவடையாகி வந்தது. அத்தனை முட்டைகளையும் மானேஜர் முன்னேற்பாட்டின்படி விலைக்கு விற்றுவிட்டார்.

அதன் பிறகு பெரியவாள் வேர்க்கடலை வந்ததை நினைவு கொண்டு, இருக்கிறதா என்று கேட்டனுப்பினார்.

மடத்துச் சிப்பந்திகளுக்கென்று ஏதும் வைத்துக் கொள்ளாமல் முழுதும் விற்றாகிவிட்டதென்று சொல்ல மானேஜருக்குப் பயமாய் இருந்தது. அதனால் ஆள்களை அனுப்பிக் களத்தில் சிந்திப்போய் தர்மத்துக்கென விட்டு வருவதைப் பொறுக்கியெடுத்துக் கொண்டு வரச் சொன்னார்.

ஆனால் ஆள்கள் போனபோது களம் அடியோடு காலி! அதற்காக அந்தச் சூரர்கள் சும்மா திரும்பி விடவில்லை. வயலிலிருந்த எலி வளைகளைத் துளைந்து பார்த்தார்கள்! அவற்றுக்குள்ளிருந்து அற்பசொற்பமாக இன்றி ஒரு முட்டை கடலையே கிடைத்தது!

சந்தோஷமாக எடுத்து வந்து திருச் சந்நிதியில் சேர்த்தார்கள்.

"இது ஏது?" என்ற அயனான கேள்வி ஐயன் வாயிலிருந்து வந்தது.

'அச்வத்தாமா: ஹத: குஞ்ஜர:' பாணியில், "நம்ம நெலத்துலேருந்து தான் கொண்டு வந்தது" என்று பதில் சொன்னார்கள்.

ஆனால் அங்கே உலகம் அசடு என்று கருதும் ஓர் உண்மைவிளம்பியும் இருந்தான். அவன், "நெலத்துல இருந்த எலி வங்குலேருந்தாக்கும் இத்தனை கடலை தோண்டி எடுத்தது!" என்று கக்கிவிட்டான்.

பெரியவாளுக்கு அது சற்றும் ஏற்கவில்லை. "பாவம்! அல்ப ஜீவன்கள் ஏதோ தங்க வயித்துக்காக எடுத்துண்டு போய் சேமிச்சுவைச்சதையா நாம சூறையாடிண்டு வர்றது?" என்று கேட்டார்.


மானேஜரைக் கூப்பிட்டனுப்பினார். "இந்த வேர்க்கடலையோட இன்னம் பொட்டுக்கடலையும் வெல்லமும் கலந்து அந்த எலி வங்குக்குள்ளேயெல்லாம் போட்டுட்டு வரணும். உடனே ஏற்பாடு பண்ணு" என்றார்.

வேர்க்கடலை பறிமுதல் செய்ததற்கு தாக்ஷிண்ய தக்ஷிணை பொட்டுக்கடலையும் வெல்லமும்! பாகின் மூலச் சரக்கும் பருப்பும் கலந்து கரிமுகத்துத் தூமணியின் ஊர்திக்குப் படைக்கிறார் நமது அருட் பாட்டனார்!

✿

வண்டிகளில் வருவோரை மட்டுந்தான் நாம் கவனிக்கிறோம். வண்டியை இழுத்து வரும் மாடுகளையும் கவனிக்கும், அந்த அருள் நெஞ்சம்! இன்றுபோல் பஸ் வசதி பெருகியிராத முன்னாள்களில் பல கல்கள் தொலைவிலிருந்து வண்டி கட்டிக்கொண்டே பக்தர்கள் பெரியவாளைப் பார்க்க வருவர். அப்போது அவர் பக்தர்களிடம் குசல ப்ரச்னம் விசாரித்த கையோடு வண்டிக் காளைகளுக்குத் தண்ணீர் காட்டவும் உத்தர விடுவார்.

தமது எண்பத்து நாலாம் பிராயத்திலிருந்து தொண்ணூறாம் பிராயம் வரையில் தமிழகம், கர்நாடகம், மஹாராஷ்டிரம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களில் ஸ்ரீ சரணர் புனித சரணம் பரப்பி அற்புத யாத்திரை செய்தாரல்லவா? அப்போது மஹாராஷ்டிரக் கிராமமொன்றில் ஒரு மாடு வெறித்தனமாக அறுத்துக்கொண்டு ஓடி வந்தது. பரிவாரத்தினர் பயந்து நடுங்கினர்.



பெரியவாளோ, "சட்னு அந்த ரெண்டு டின் ஜலத்தையும் எடுத்துண்டு வந்து மாட்டுக்கு வையுங்கோ" என்றார்.

வேனில் வெப்பத்தினால் அப்பகுதியில் சொல்லி முடியா வறட்சி. எப்பாடு பட்டோ இரண்டு டின் நீர் சேந்தி வந்து வைத்திருந்தார்கள்.

வெறித்தனத்தை மட்டுமே மாட்டிடம் மற்றோர் கண்டபோது, அந்த வெறித்தனத்திற்குக் காரணம் அந்த ஜீவனின் பற்றியெரியும் நாவறட்சியே எனக் கண்ட முனிவர் அது படும் பாட்டுக்குமுன் தம் சீடர் பட்ட பாடு பெரிதில்லை என்றுதான் அத்தனை நீரையும் அந்த வாயில்லாப் பிறவிக் காக்கினார்!

✿

மஹாராஷ்டிரத்தில் இன்னோரிடத்தில் ஒரு காலி மாட்டுக்கொட்டிலைத் தமது மாளிகையாக உவந்தார் நமது துறவி வேந்தர். அங்கு ஆடுகளும் கோழிகளும் சுற்றிச் சுற்றி வந்ததால் பாரிஷதர்கள் விரட்டியடித்தார்கள். ஸர்வ பூத தயா மூர்த்தி சொன்னார்: "ஆட்டையும் கோழியையும் வெரட்டலாமா? கோழி ஸுப்ரம்மண்ய ஸ்வாமியோட கொடி இல்லையா? ஆடு அவருக்கு வாஹனம். மயில் மட்டுமில்லாம, ஆனை, ஆடு ரெண்டுங்கூட அவருக்கு வாஹனம். அவர் அக்னி ஸ்வரூபம். அக்னிக்கு ஆடுதான் வாஹனம். ஆசார்யாள்கூட 'புஜங்க'த்துல "நமச்சாக துப்யம்"னு ஆட்டுக்கும் நமஸ்காரம் சொல்லியிருக்கார். 'சாகம்'னா ஆடு. இப்படி ஸ்வாமி ஸம்பந்தப்பட்ட ரெண்டு ப்ராணியை வெரட்ட வேண்டாம். அதுகள் இருந்துண்டிருந்த எடத்துல நான் வந்து ஒக்காந்திருக்கேன். 'நம்மாத்துக்கு விருந்தாளி வந்திருக்காரே!'ன்னு அதுகள் என்னைச் சுத்தி, சுத்தி ப்ரதக்ஷிண மரியாதை பண்றதுகள். ஆகக்கூடி இது உபத்ர வம் இல்லை; உபசாரந்தான்! இப்படியே நடக்கட்டும்!"

ஸ்ரீ பெரியவாள் மனஸாரச் சிரிக்க, பணியாளர்களும் சிரித்தனர்.

✿

ஸாத்விகமான ஆடு, கோழியிடம் மட்டுந்தானா கருணையன்பு? பாம்பிடமும் அதே பரிவு ஸ்ரீ பெரியவாளுக்கு! ஸ்ரீ மடத்திலும், மற்றும் அவரது முகாம்களிலும் பாம்பார் எழுந்தருளிய சந்தர்ப்பம் பல உண்டு. பாம்பு கடித்துவிடப் போகிறதே என்று மற்றவர்கள் பதைக்கும் அச் சமயங்களில் இந்த அதிசய புருஷரோ பாம்பை அடித்துவிடப் போகிறார்களே என்று பதைப்பார்! பெரியவாள் திருவுளமும் அறிந்து, அதோடு நல்ல சாமர்த்தியமும் படைத்தவர்களான பாணாம்பட்டு ஸ்ரீ கண்ணன், (பிற்பாடு துறவு பூண்ட) மேட்டூர் ஸ்ரீ ராஜகோபாலன் போன்றவர்கள் பாம்பைப் பிடித்தோ வேறு விதத்திலோ நயமாக அதை அப்புறப்படுத்தி விடுவார்கள். பெரியவாளும் நிம்மதிச் சிரிப்புப் புரிவார்.

✿

ஆனந்தச் சிரிப்புப் பொங்க ஸ்ரீ பெரியவாள் கண்டு மகிழும் அந்தக் காட்சி என்ன?

அங்கே- எங்கேயென்றால் சௌடாபூரில் அவர் முகாமிட்டுள்ள அங்கே- ஏராளமான புறாக்கள் வந்து கொலு போன்ற ஓர் அமைப்பு நேர்த்தியுடன் அமர்ந்திருந்தன.

தாராளமாக தான்யங்கள் கொண்டு வந்து அவற்றுக்குப் போடும்படி ஸ்ரீ சரணர் கூறினார். அவ்விதமே செய்யப்பட்டது.

ஒயில் நடையும், நாட்டியக் கழுத்தொடிப்புமாக அந்தப் புறாக்கள் நகர்ந்து நகர்ந்து தான்யமணிகளை 'குபுக் குபுக்' செய்வதைப் பார்த்துத்தான் பெரியவாளின் அந்த ஆனந்தம் பொங்கும் சிரிப்பு! குழந்தைகளுக்கு உணவிட்டு மகிழும் தாயாகவும், விநோதக் காட்சி காணும் பச்சைக் குழந்தையாகவும் ஒருங்கே இருக்கிறார் பரம ஞானி.

✿

'ஒரு மணி ஜபம்' என்பதாக நிதமும், அநேகமாக அதிகாலையிலேயே, பெரியவாள் புரியும் அநுஷ்டானம் ஒன்று உண்டு. வானமே விழுந்தாலும் பூமியே பிளந்தாலும் தெரியாமல் ஜப லக்ஷ்யத்தில் ஸ்ரீ சரணர் ஸமாதி கூடியிருப்பார்.

ஒரு நாள் காலை ஸ்நானம், பஸ்ம தாரணமாகி செம்பொற் சோதிச் சிவபெருமான் எனவே பொலிந்து கொண்டு அவர் ஒரு மணி ஜபத்திற்காகப் பல்லக்குக்குள் வந்தமர்ந்தார்.

சரியாக அச் சமயத்தில் ஓர் அடியார் மணக்கும் குண்டு குண்டு மல்கோவாக் கனிகள் நிறைந்த ஒரு கூடையைப் பெரியவாள் முன் காணிக்கையாக்கினார்.

சட்டென்று பெரியவாள் ஒரு கனியைக் கையிலெடுத்துக் கொண்டார்...

இங்கு ஒரு விஷயம் சற்று ஆலாபனை செய்ய வேண்டும். பிராணி மித்ரராகவே நாம் கண்டு வந்த ஸ்ரீ சரணர் பிராணி என்று குறிக்கப்படாத தாவரத்திற்கும் பரம மித்ரர்தான். "மைத்ரீம் பஜத!" பாடலருளிய அவர் சேதனம், ஜடம் ஆகிய அனைத்திடமும் இதய நண்பு பூண்ட விச்வமித்ர மஹரிஷி எனலாம்!

வனப் பகுதிகளிலும் சோலைகளிலும் பூந்தோட்டங்களிலும் தங்குவதில் அவருக்கு அலாதிப் பிரியம். அநேகமாகப் பெரும் அரசியல் தலைவர்கள் அவரைத் தரிசித்தது இதுபோன்ற இடங்களில்தான். ஆலய மூர்த்திகளின் புஷ்ப கைங்கரியத்திற்காக அவர் பணித்ததன் மீது வைத்து வளர்க்கப்பட்ட நந்தவனங்கள் பலப்பல. புஷ்பங்களின் விதவித அழகு, கனிகளின் விதவிதப் புதுமை ஆகியவற்றை வியந்து வியந்து சொல்லிப் பராசக்தியின் ஸ்ருஷ்டி லீலையை ரஸிப்பார்.

தருக்களிடந்தான் அவருக்கு எத்தகைய பந்துத்வம்! தமது நீண்ட நெடுவாழ்வில் எப்போதோ எங்கேயோ தங்கியிருந்த இடத்திலிருந்த மரம், தாம் புரிந்த பூஜைக்குப் பூத்தந்த பூருஹம் பற்றிப் பல ஆண்டுகளுக்குப் பிறகும் அவ்விடத்திலிருந்து வரும் அன்பரிடம் விசாரிப்பார். உதாரணமாக தற்போது 94 வயதான புதுக்கோட்டை வழக்கறிஞர் ஸ்ரீ ஆர்.நாராயணஸ்வாமி ஐயர் அவரது ஊரான ஆரணிப்பட்டியிலிருந்த மகிழ மரம் பற்றி அவர் பெரியவாளிடம் சென்ற ஒவ்வொரு முறையும் பெரியவாள் சௌக்கியம் விசாரித்ததாகச் சொல்கிறார்!

'பூஜிக்க மட்டுமல்ல பூ! அதுவே பூஜைக்குரிய பரமன் ஸ்வரூபம்' என்ற பாவத்தில் தாயுமான ஸ்வாமிகள், "பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி" என்று பாடினாரென்றால், நமது அம்மையப்ப ஸ்வாமியும் பூச்செடியையே லிங்கமாக்கி, அதற்கு நீர் வார்ப்பதையே ருத்ராபிஷேகமாகக் கூறிய ஒரு சந்தர்ப்பம் உண்டு.

பக்தரொருவர் ஸ்ரீ பெரியவாளிடம் தம் தாபத்தைக் கூறிக்கொண்டார். "நம் பக்கத்திலுள்ள பெரிய பெரிய சிவன் கோயில்களில் தேவர்கள், ரிஷிகள், மஹா பக்தர்கள் பூஜித்ததாக லிங்கங்கள் இருக்கின்றனவே, அவற்றுக்கெல்லாம் என் கையாலேயே ருத்ராபிஷேகம் செய்ய வேண்டுமென்று ரொம்பவும் ஆசையாயிருக்கிறது. ஆனால் குருக்கள்மார் தவிர மற்றவர் அப்படிச்

மானிடத்தின் பாட்டு



கடல்கள் கண்டங்களைப் பிரிக்கலாம்
காற்று அவற்றிடையே பாலமிட்டு
உறவினை ஓங்கிப் பாடும்.

மதங்கள் மனிதனைக் கூறிடலாம்
ஆன்மிகம் பிரிவினை நீக்கி
மானிட நேயத்தைப் பாடும்.

சாதிகள் பகைமையை விதைக்கலாம்
சமத்துவம் சண்டையை விலக்கி
நீதியை ஓங்கிப் பாடும்.

வெறியர்கள் போர்களைத் தொடங்கலாம்
சான்றாண்மை வம்பினை ஒழித்து
சாந்தியை ஓங்கிப் பாடும்.

முரண்தான் உலகம்! ஆயினும்
அன்பினைப் பகைமை வென்றிடாது
அறத்தினை அநீதி வென்றிடாது.

அன்புஅறக் கால்களால் மானுடம்
தடைகளை மிதித்தே நடக்கும்
முடிவில் லாதது மானுடம்.

அன்புதான் மானுடப் பாட்டு
தெய்வமும் அமுதமும் அதுதான்
பாடுநீ . . . தோழா . . . பாடு!

செய்ய நம் தக்ஷிண தேசத்தில் அநுமதி மறுக்கப்படுகிறதே!" என்று குறையிரந்தார்.

நீண்ட கால வழக்குகளை மாற்றுவதற்கு ஒருபோதும் மனம் கொள்ளாத பெரியவாள் அவரிடம் கேட்டார்: " ஒனக்குப் புஞ்சை நெலம் இருக்கா?"

"இருக்கு"

"அதுல கெணறு இருக்கா?"

"இருக்கு"

"அப்ப நீ ஒண்ணு பண்ணு. நெலத்துல பல தினுஸு புஷ்பச் செடி பயிர் பண்ணு. முல்லை, மல்லி, இருவாக்ஷி, ரோஜா, சம்பகம், ஜாமந்தி இப்படி ஸ்வாமி பூஜைக்கு ப்ரயோஜனமாறதாப் பயிர் பண்ணு. அந்தச் செடி ஒண்ணொண்ணுமே மஹா க்ஷேத்ரங்கள்ல இருக்கப்பட்ட ஒவ்வொரு சிவலிங்கம்னு நெனச்சு, நீயே கெணத்துலேந்து ஜலம் இழுத்துண்டு போய் அதுகளுக்குக் கொட்டு. அதுவே ருத்ராபிஷேகத்துக்கு ஸமானம். பூத்த அப்பறம் புஷ்பமெல்லாம் சிவன் கோயில்களுக்கே அர்ப்பணம் பண்ணு"

பக்தர் பரம திருப்தியுடன் திரும்பினார்.

✿

அஸ்பர்ச தத்வத்தின் நரவடிவம் என்பதாலோ என்னவோ துறவு பூண்ட நாளாகப் பெரியவாள் ஒரு குழந்தையைக்கூடத் தொடுவது வெகு வெகு அபூர்வமே. அப்படிப் பட்டவர் குழந்தையை இறுகப் பற்றுவது போன்ற வாத்ஸல்யம் காட்டும் ஓரிடமும் உண்டு! கறிகாய்கள், பழ வகைகள் ஸ்ரீ மடத்திற்கு ஸமர்ப்பிக்கப்படுவதுண்டல்லவா? அச் சமயங்களில் ஒரு பட்டாளம் குழந்தைகளைக் காணும் அன்புடனாக்கும் அந்தக் கூடை காய் அல்லது கனியைக் காண்பார். ஓர் அழகுச் சமர்த்துக் குழந்தையை நாம் தாவி எடுத்துக் கொள்வது போல் காயை, கனியைத் தவறாமல் கையில் எடுத்துக் கொள்வார். நாமெல்லாம் செய்வதுபோலல்ல. தலை நிற்காத ஒரு சிசுவை நாம் எப்படி அதன் உடம்பு நம் கையில் அழுந்தப்பதியுமாறு எடுப்போமோ அப்படி அந்தக் காய் அல்லது கனி தமது உள்ளங்கையில் அழுத்தமாகப் பதியுமாறு இறுகப் பற்றி எடுத்துக் கொள்வார்! வைராகியின் புத்ர, பௌத்ர வாத்ஸல்யமாகவே அது தெரியும்!

பல்லாண்டுகள் பெரியவாளுக்கு அணுக்கத் தொண்டுசெய்து ஆயிரமாயிரம் அருள் நிகழ்ச்சிகளை அனுபவித்துக்கூறும் ஸ்ரீ பாலு, "குழந்தைகள் கொலுப் பொம்மைக் காய், பழங்களுடன் எப்படி அன்பாக விளையாடுமோ அதே பாங்கில் பெரியவாள் நிஜமான காய், பழங்களுடன் உறவாடுவார்" என அழகுபடக் கூறுகிறார்...

ஒரு மணி ஜபத்தில் அழுந்த இருந்தவர், தம் முன் அர்ப்பிக்கப்பட்ட மல்கோவா கூடையிலிருந்து இப்படித்தான் வாத்ஸல்யத்துடன் ஒரு பழத்தைப் பற்றி எடுத்தார். அடுத்த விநாடியே புறவுணர்வற்ற நிஷ்டையில் ஜபயோகம் கூடிவிட்டார்.

பரம பாவனமான அவ்வொரு மணி நேரமும் கனி கரத்தே இருந்தது. தெலுங்கில் 'கநிகரமு' என்றால் அன்பு. ஆத்ம ஸமாதியில் அவர் கூடியிருந்த காலத்தில் அவரது கரக்கனி கநிகரமுச் சாற்றாலேயே நிரம்பியிருந்திருக்கும்!

ஜப காலத்தில் அவர் கையில் பழத்தைக் கண்ட பக்தர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அது கிடைக்காதா என அவாவினர். பெரியவாளின் அணுக்கப் பாரிஷதரிடம் அவர்கள் ஒவ்வொருவரும் அப் பழப் பிரஸாதத்திற்காக விண்ணப்பித்தனர். என்ன செய்வதெனப் புரியாமல் அவர் ஒவ்வொருவருக்கும் சம்மதமாகத் தலையாட்டி வைத்தார்.

ஜபம் முடிந்து திருநயனங்கள் திறக்க, அயனான அந்த நொடியில், எங்கிருந்தோ எப்படியோ ஒரு குரங்கு அவர் பக்கலில் வந்து நின்றது.

கர கமலம் மல்கோவாவை அதற்கு நீட்டியது. பரம பாக்கியம் பெற்ற வானரம் அதை வௌவிக் கொண்டு ஓடியேவிட்டது!

ஆதி தம்பதியிடமிருந்து மாங்கனி பெற்ற விநாயகனுக்கு ஆம்ரகரனாக ஒரு மூர்த்தி உண்டு. அவ்வாறு ஸ்ரீசரணர் இருந்து கையில் பிடித்த கனி அனுமந்தனுக்குப் போய்ச் சேர்ந்ததோ? பிள்ளையார் பிடித்தது குரங்குக்குப் போய் முடிந்ததோ?

முடிவில்லாத இந்த அன்புக் காவியத்திற்கு நாமும் மாருதி நிவேதனத்துடன் முடிவு காண்போம்!

ஃ

நானறிந்த ஏவி.எம்

ஏவி.எம் அவர்களை நெருங்கிப் பழகி அறிய முடிந்தது அவருடைய "எனது வாழ்க்கை அனுபவங்கள்" நூலை வானதி பதிப்பகத்தில் வெளியிட்டபொழுதுதான். 'எனது வாழ்க்கை அனுபவங்கள்' முதலில் 'குமுதம்' வார இதழில்தான் தொடர்ந்து சிறுசிறு கட்டுரைகளாக வெளி வந்தது. அதை அப்படியே புத்தகமாகப் போட அவர் பிரியப்படவில்லை. "Facts தெளிவாக இருக்கிறதா என்று சரிபார்த்துப் போடவேண்டும். விரிவான நூலாக வர வேண்டும் என விரும்பினார். நூல் வடிவம் பெறுகிறபோது அது செம்மையாக இருக்க வேண்டும்; சிறப்பாக இருக்க வேண்டும். எனவே பத்திரிகையில் வந்ததை, கவனமாகப் படித்து, தேவையானால் திருத்தித்தான் வெளியிட வேண்டும்" என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

"அதுக்கென்னங்க. நான் யாரையாச்சும் புலவரை அனுப்பி வைக்கிறேன். படிச்சுப் பார்த்துச் சரிசெய்து தரச் செய்கிறேன்" என்று சொன்னேன்.


"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். நீயும் நானுமே போதும். நீயே வந்து படி. நான் 'ஒ.கே' சொன்னால் மேற்கொண்டு தொடரலாம். கட்டுரை உனக்கும் எனக்கும் புரிஞ்சுதுன்னா அது எல்லாருக்கும் புரிஞ்சதுதான். வாழ்க்கை வரலாறு மட்டும் கரெக்டா இருக்கணும். விட்டுப்போனதை நான் சொல்றேன். நீயே எழுதிக்கொள். இதுக்கு எதுக்கு இன்னொருத்தர்? என்ன சரியா? ஆனா நீ ஸ்டுடியோவுக்குப் பலமுறை வரும்படியாக இருக்கும்" என்று கட்டளையிட்டார். சரி என்று ஒப்புக்கொண்டேன். ஏவி.எம். அவர்களுக்கே சொந்தத்தில் மிகப்பெரிய அச்சகம் இருக்கிறது. நினைத்தால் ஆயிரம் நூல்களை அவர்களே தயார் செய்து கொள்ளலாம். இருந்தாலும் அவருடைய வாழ்க்கை வரலாறு நூலைத் தொழில் ரீதியாகவும் வெற்றிகரமாகக் கொண்டு வரவேண்டும் என்கிற எண்ணத்தில்தான் வானதியிடம் கொடுத்தார். எந்தக் காரியமானாலும் 'பர்பெக்ஷன்'தான் அவருக்கு முக்கியம்.

அப்பொழுது ஸ்டுடியோவில் உள்ள ஜப்பான் ஹவுஸில்தான் ஏவி.எம். அவர்கள் இருப்பார்கள். அங்கே போய்விடுவேன். ஒரு நாள், இரண்டு நாள் இல்லை. 300 'ஸிட்டிங்' உட்கார்ந்து 'குமுதம்' இதழில் அவர் வாழ்க்கை அனுபவங்கள் வந்ததை வரிசையாகப் படிப்போம். சில நாள்களில் இரண்டு வரி படிப்பதற்குள் அவர் ரூமில் டெலிபோன் மணி அடிக்கும். அவசர வேலை வந்துவிடும், எழுந்து போய்விடுவார். அன்றைக்கு அவ்வளவுதான். அப்போதெல்லாம் நான் களைத்துச் சோர்ந்து போயிருந் தால் அப்படி ஓர் அற்புதமான வாழ்க்கை வரலாறு - அனுபவக் களஞ்சிய நூலை - வெளிக் கொண்டுவர முடியாமலே போயிருக்கும்.

சினிமாத்துறையில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கு அந்த நூல் ஒரு வரப்பிரசாதம். 'திரைப்பட இலக்கணம்' என்றே சொல்லலாம். இதைப் படித்துவிட்டால் ஒருவருக்குத் தன்னம்பிக்கையும் தைரியமும் நிறைய ஏற்படும்.

'திரைத்தொழிலுக்கு 100 பேர் வருகிறார்கள். ஆனால் 97 பேர் மறுநாளே காணாமல் போய்விடுகிறார்கள். எந்த ஒரு துறையும் நம்மை அழுத்திவிட இடம் கொடுக்கக்கூடாது. முண்டியடித்துக் கொண்டு நாம் அதை அழுத்தி மேலேறி னால்தான் வெற்றிபெற முடியும்' என்று சொல்வார்.

கட்டுரைகளைப் படிக்கத் தொடங்கிய ஆரம்ப காலத் தில் ஏதாவது பிஸினெஸ் கால் வரும். ஜப்பானிலிருந்து, சிங்கப்பூரிலிருந்து, டில்லி, பம்பாயிலிருந்து உடனே நான் அவர் அறையைவிட்டு அப்பால் சென்று விடுவேன். தொழில் துறைக்குத் தடையாக அங்கு இருப்பது சரியில்லை என்று நினைப்பேன்.



ஆனால் நாள்கள் சில ஆகி, என்னையும் அவர் புரிந்து கொண்டபின், பிசினஸ் சம்பந்தமான ஆட்கள் நேரில் வந்தாலும் சரி; என்னைப் போக வேண்டாம் என்று உட்காரச் சொல்லிவிடுவார் "இவன் எனக்கு மிக நல்ல சிநேகிதன். சிநேகிதன் மட்டுமில்லை பிள்ளை மாதிரி. சும்மா சொல்லுங்க" என்று பேச்சைத் தொடங்கி விடுவார். நம்பிக்கை வைப்பது என்று வந்துவிட்டால் ஏவி.எம். அவர்கள் நம்மை நெகிழச் செய்து விடுவார்.

நூல் உருவாகும் சமயம் நாங்கள் பேசும்போது சரவணனும் இராஜேஸ்வரி அம்மையாரும் சில சமயம் அங்கே வருவார்கள். சரவணனிடம் அவர் சொல்வார். "புத்தகத்தை இவர் பொறுப்பிலே விட்டாச்சு. நாம ஒண்ணும் அவருக்கு யோசனை சொல்ல வேண்டிய தில்லை" என்பார். அதுதான் அவருடைய கொள்கை. எந்த வேலையையும் தக்க ஆளைப் பார்த்து ஒப்படைத்து

வானதி திருநாவுக்கரசு

கணக்கில்லா நினைவுகள்

கவிமாமணி இளையவன்

என்னை எனக்குள் காண்கிற பொழுதும்
என்னை நானே ரசிக்கிற பொழுதும்
முன்னர்காணாச் சிலிர்ப்பை உணர்கிறேன்
முண்ட இன்பத் தவிப்பில் மிதக்கிறேன்!

ஆறுபாயும் கரை ஓரத்தில்
அமைதிச் சூழலில் ஒன்றியிருக்கிறேன்;
நறு குருவிகள் நுணுகிப் பறக்கையில்
போர்க்காட்சி எனப் போற்றியிருக்கிறேன்;

சின்னக் குழந்தையின் சிணுங்கலில் கிறங்குவேன்;
சிவப்புத் தாமரை அழகில் மயங்குவேன்;
பின்னலான பூங்கொத்துக்குள்
பிரியமாகிக் கவிதை எழுதுவேன்!

கொட்டில் கன்றின் நெற்றியை நீவிப்
பட்டாய் நினைத்துப் பரவசமாகிறேன்;
திட்டமான பொன்நிற வண்டு
திருவுலாப் போகத் தேடியிருக்கிறேன்!

வணக்கம் தந்தும், வணக்கம் ஏற்றும்
வாழ்க்கைத் தேதியை ஒட்டி வருகிறேன்;
கணக்கில்லாத நினைவினை எல்லாம்
கவிதையாகக் கூட்டி வைக்கிறேன்!

விடுவார். எதுவுமே அவருக்குத் தெளிவாக இருக்க வேண்டும். செய்யும் செயல் யாவும் செம்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புவார்.

ஸ்டுடியோவின் நாடி, நரம்பு அத்தனையும் அவர் கைக்குள் அடக்கம். ஆசியாவிலே மிகப் பெரிய ஸ்டுடியோவான ஏவி.எம். ஸ்டுடியோ – அவர் கையில் வைத்திருக்கும் ஸ்விட்சை அழுத்தினால்தான் ஒவ்வொரு கூடமும் இயங்கும். அன்றைக்கு எவ்வளவு வேலை நடந்திருக்கிறது, அன்றைக்கு எவ்வளவு மின்சாரம் செலவாகியிருகிறது என்பது முதற்கொண்டு தினமும் அவருக்குச் சொல்லியாக வேண்டும். யாரும் நேரில் வரவேண்டிய அவசியமில்லை. காஸெட்டிலேயே அவர் கேள்விகளுக்கு பதில் சொல்லி கேஸட்டை அவருக்கு அனுப்பிவிட்டால் போதும். யாவும் விஞ்ஞானநோக்குடன் புதுமை – புரட்சிகள் செய்ய வேண்டுமெனச் சொல்வார். ஏவி.எம். அளவற்ற தேசப் பற்றுடையவர். தேசம் – தெய்வம் இரண்டும் அவருக்கு இரண்டு கண்கள். விஞ்ஞானம் – மெய்ஞ்ஞானம் இரண்டும் அவரத இரண்டு கரங்கள்.

பொறுப்புணர்வோடு செயல்திட்டங்களை வகுப்பதில் அலாதியான திறமையுடையவர். ஏவி.எம் என்றாலே அசாதாரணமான திறமை என்றுதான் பொருள். பெரும் உழைப்பாளி என்ற கவிமணியின் கூற்றுக்கு இலக்கணமானவர்.

செய்யும் வினைகள் ஒவ்வொன்றும்
திருந்தச் செய்யும் திறம் பெற்றோன்
வரையிற் கொண்ட கருங்கல்லும்
கனகம் சொரியச் செய்திடுவான்
எப்படிச் செய்தால் வெற்றி
பெறுமென் றறிந்த உள்ளம்
தப்படி ஏதும் இன்றித்
தழைக்கின்ற அடிகள் வைப்பான்
சொற்படி கதைகள் ஆடும்
சுவையுள கலைகள்கூடும்
இப்படித் திறமை பெற்றோர்
இருகோடிக் கொருவரே தான்

என்று கண்ணதாசன் இவரைப் பற்றிப் பாடினார்.

கோமகவரர் என்றாலும் அவர் நட்புக்கு ஓர் இலக்கணம். அவரோடு பழகிவிட்டால் பாசத்தினால் திணற அடித்து விடுவார். வியாபாரம் என்று போனால் கண்டிப்பும் கறாரும்தான். தர்மம், தானம் என்று வந்துவிட்டால் வெகு தாராளமாக இருப்பார்.

பெரியவரின் நட்பு – அவருடைய உறவு – கிடைத்தது எனக்கு எத்தனையோ பெரும் செல்வம் கிடைத்ததுபோல நினைக்கிறேன். பல்கலைக்கழகத்தில் போய்ப் பாடம் படிக்காத குறை எனக்கு எப்போதும் உண்டு. நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்று சொல்வார்கள். ஏவி.எம் அவர்களோடும், அவர்கள் குடும்பத்தோடும் பழகி – ஏவிஎம் அவர்களோடு உரையாடி மகிழ்ந்தபோது எனக்குக் கிடைத்த அறிவும் – அனுபவமும் இருக்கிறதே அது எந்தப் பல்கலைக்கழகமும் கற்றுத் தந்திருக்க முடியாது. அவரோடு இருந்த ஒவ்வொரு ஸிட்டிங்கும் மிக மிகப் பயனுள்ள பாடமாக அமைந்தது.

"முயற்சி திருவினையாக்கும்" என்ற தாரக மந்திரத்தை அளித்த மாபெரும் மனிதர். தம் ஓயாத உழைப்பினால் கோடிக்கணக்கில் சம்பாதித்தார். சம்பாதித்த பொருளை எல்லாம் தம் குடும்பம் – பிள்ளைகள் என்று பங்கு போடாமல், அறநிலையங்கள், மருததுவமனைகள், பள்ளிக்கூடங்கள், கல்யாண மண்டபங்கள் இப்படிப் பலவற்றை உருவாக்கி சமுதாய நன்மைக்கு நிரந்தரமாகப் பயன்படும் விதத்தில் செய்துவிட்டார்.

நபிகள் நாயகத்தின் பொன்மொழி ஒன்று உண்டு.

"ஒரு மனிதன் சாகும்போது அவனுடைய செயல்கள் ஒடுங்கிவிடுகின்றன. ஆனால் மூன்று மட்டும் எஞ்சி நிற்கின்றன.

1. அவனுக்குப் பிறகும் தொடர்ந்து நடக்கின்ற அவனுடைய தர்ம காரியங்கள்.

2. எல்லாருக்கும் பயன்படுகின்ற அவனுடைய அறிவு; திறமை.

3. அவனுக்காகப் பிரார்த்தனை செய்யும் அவனுடைய சந்ததிகள்.

ஏவி.எம் அவர்களைப் பொறுத்தவரை இது அவருக்குப் பொருத்தமாக அமைந்த வாசகங்கள். ஏவி.எம் சந்ததியினர் அவருடைய கொள்கைகளையும், கோட்பாட்டினையும் நன்கு கடைப்பிடித்து அவருக்குப் புகழ் சேர்த்து வருகின்றனர்.

கோபுலு - சித்திரக் கலைக்கு ஓர் ஜீவ கோபுரம்

எழுபது வயது நிறைந்த (திரு. எஸ். கோபாலன்) 'கோபுலு' - சித்திரம் வரையத் தொடங்கி இன்று பொன் விழாக் காண்கிறார்கள். சித்திரக் கலைக்குச் சிறந்த தொண்டாற்றி வரும் கோபுலு - ஓர் சித்திரக் கலையெனும் ஆலயத்தின் ஜீவ கோபுரமாகத் திகழ்கிறார்.
அமுதசுரபி ஆசிரியர் கலைமாமணி விக்கிரமனும் பிரபல எழுத்தாளர் ஸ்ரீவேணு கோபாலனும் (புஷ்பா தங்கதுரை) சந்தித்து அவருடன் கலந்துரையாடி மகிழ்ந்தனர்.

'கோபுலு'

"இந்தப் பெயர் ஓவியர் உலகில் மிகவும் மதிப்பு மிகுந்த பெயர். பத்திரிகையில் சித்திரம் வரையும் 'ஆர்ட்டிஸ்ட்'டாகச் சேர்ந்து தம் கலைத் திறமையால உயர்ந்து இன்று சித்திரக் கலைக்கு ஒரு கோபுரமாகத் திகழ்கிறார் திரு. கோபுலு.

சித்திரக் கலையில் இன்று பலவிதப் பகுதிகளைக் காண்கிறோம். வண்ண ஓவியங்கள், 'போர்ட்ரெயிட்' எனப்படும் ஜீவ சித்திரங்கள், நகைச் சுவையைப் பரிமளிக்கும் சித்திரங்கள் (கேலிச் சித்திரங்கள்), அரசியல் கார்ட்டூன்கள், பெரிய பெரிய பானர்கள், விளம்பர டிசைன்கள், கதைகளுக்கு ஏற்ற சித்திரங்கள் என்று பல விதங்கள். மெல்லிய கோட்டுச் சித்திரங்கள் தூரிகைகளால் மட்டுமே வரையப்படும் சித்திரங்கள், கிரேயான் எனப்படும் மெழுகுப் பென்சிலைப் பயன்படுத்தி வரையும் சித்திரங்கள் என்று ஓவியர்கள் தங்கள் திறமையைப் புலப் படுத்தி சித்திரக் கலையை இன்று வளர்த்து வருகிறார்கள்.

இறைவனுக்கு உருவம் கொடுத்தவர் ஓவியர் ரவிவர்மா. அவர் வரைந்த லட்சுமி, சரஸ்வதி, பரமசிவன், மகாவிஷ்ணு படங்களைத்தான் வீட்டில் கண்ணாடி போட்டு வைத்து வணங்குகிறோம்.

அஜந்தா, சித்தன்னவாசல், தஞ்சையிலுள்ள வண்ண ஓவியங்கள் இன்றும் அழியாமல் திகழ்கின்றன.

பல கோயில்களின் மேல்விதானங்களில் வரையப்பட்ட பழைய ஓவியங்கள் பெரிதும் அழிந்து போனாலும் மீதமுள்ள வண்ணங்களே நமக்குப் பிரமிப்பை அளிக்கின்றன. தமிழ் நாட்டில் பல்லவர் கால, சோழர் கால ஓவியங்கள் அந்தக் கால நாகரிகத்தைப் புலப்படுத்துகின்றன.

சிற்பக் கலைக்கும் ஓவியமே அடிப்படை. நாயக்கர் கால ஓவியங்கள், தஞ்சை மராட்டியர் கால ஓவியங்கள், ஆந்திர நாட்டு ஓவியங்கள் என்று பலவித ஓவியங்கள் இன்று பலர் இல்லங்களை அலங்கரிப்பதைக் காணலாம்.

விதவிதமான பட்டாடைத் தலைப்புகளில் அழகிய சித்திர வேலைப்பாடுகளைக் காண்கிறோம்.

சித்திரம் தமிழ் நாட்டின் ஜீவக் கலை. அந்த அழியாக் கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய-ஆற்றி வருகிற ஓவியர்கள் பலர். அவர்களுள் பலருடைய பெயர்கள் மறைந்து விட்டன. பத்திரிகை உலகம் சித்திரக் கலையை வளர்ப்பதில் மிகுந்த ஈடுபாடு காட்டி வருகிறது.



அமுதசுரபி தீபாவளி மலர் மேலட்டை

அட்டைப்படம், கதைகளுக்குச் சித்திரங்கள், துணுக்குச் சித்திரங்கள், இலக்கியக் காட்சிகளை விவரிக்கும் சித்திரங்கள், அரசியல் கருத்துகளை எடுத்துக் கூறும் கார்ட்டூன்கள், கேலிச் சித்திரங்கள், கோயிலில் கருவறையிலுள்ள மூலமூர்த்திகளை வண்ண ஓவியமாக மிளிர வைக்கும் சித்திரங்களை வரையும் சித்திரக் கலைஞர்களை வளர்த்தவை மாத, வார இதழ்களும் அவை வெளியிடும் தீபாவளி மலர்களும்தாம்.

ஒரு கதைக்கோ, நாவலுக்கோ நல்ல சித்திரம் அமைந்து விட்டால் அந்தப் படைப்பு மக்களால் மிகவும் பேசப்படும்.

கள்வனின் காதலி, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலை ஓசை போன்ற 'கல்கி'யின் நாவல்களின் அழகுக்கு அழகூட்டியவை சித்திரங்களே.

சேகர், ரவி, வர்மா, மணியம் போன்ற ஓவிய மேதைகள் இன்று நம்மிடையே இல்லை.


ஆனால் ஓவியக் கலைக்குப் பெருமை சேர்க்கும் திரு. கோபுலு வாழும் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்று நாம் பெருமை அடையலாம்.

ஓவிய மணி திரு. கோபுலு அவர்கள் சித்திரம் வரையத் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

1963 ஆம் ஆண்டு, பத்திரிகை அலுவலகத்திலிருந்து விலகி, விளம்பர நிறுவனத்தில் பணியாற்றத் தொடங்கிய திரு. கோபுலு, விளம்பரத் துறையில் மிகச்சிறந்த நிறுவனமான அட்வேவில் (Adwave) இயக்குநராகப் (1972 முதல்) பணியாற்றும் திரு. கோபுலு முத்திரை பதித்த விளம்பர 'டிசைன்கள்' பலவற்றை உருவாக்கியிருக்கிறார். உம்மிடியார் கம்பெனி, நரசுஸ் காபி, லட்சுமி மில்ஸ் போன்ற நிறுவனங்களின் விளம்பரங்களை இலக்கிய நயத்துடன் படைத்தவர் கோபுலு.

ஸ்ரீராம் ·நிதி நிறுவனங்களின் அடையாளச் சின்னத்தைப் படைத்தது ஒன்றே கோபுலு அவர்களின் திறமைக்கு எடுத்துக்காட்டு.

கலை மணக்கும் தஞ்சையில் 1924 ஆம் ஆண்டு (18.6.24) பிறந்த கோபுலுவின் கலைப் புலமை தஞ்சைப் பெரிய



திரு. கோபுலு சித்திரம் வரையும் தம் பிரத்யேக அறையில்



அமுதசுரபி தீபாவளி மலர் மேலட்டை

கோபுரம் போல் இன்று நிமிர்ந்து நிற்கிறது.

எழுபது ஆண்டு நிறையப் பெற்ற திரு. கோபுலு சித்திரம் வரையத் தொடங்கி இன்று பொன்விழாக் காண்கிறார்கள்.

அமெரிக்கா, ஜப்பான், கொரியா, நெதர்லாண்ட்ஸ், சுவிட்ஸர்லாந்து, கிழக்கு ஆப்பிரிக்கா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செய்தவர் கோபுலு. அங்குள்ள இயற்கை அழகில் மனம் பறிகொடுத்து ஓவியமாகத் தீட்டியும், போட்டோக்கள் எடுத்தும் தம் புலமையை நிலை நாட்டியவர்.

கோபுலு சிறந்த போட்டோ கிராபரும் கூட. நூல்களை நாள்தோறும் படிக்கும் ஆர்வம் கொண்ட திரு. கோபுலு சிறந்த இசை ரசிகர்.

சித்திரக் கலை மேதைக்கு தமிழக அரசு 'கலைமாமணி' என்ற பட்டமளித்துச் சிறப்பித்ததில் வியப்பில்லை.

ஓவியக் கலைக்கு சாகித்ய அகடமி, நோபல் பரிசு, இராசராசன் பரிசு அளிக்கக்கூடுமானால் திரு. கோபுலு அவர்களுக்கு அந்த விருதுகளை வழங்கி அந்தப் பட்டங்கள் பெருமையடையலாம்.

ஓவியம் வரையத் தொடங்கிப் பொன்விழாக் காணும், இக்கலைஞரை எழுபது வயதிலும் சுறுசுறுப்பும், எப்



தஞ்சைப் பெரிய கோயில் - உருவாவதைத் தம் பட்டத்தரசி - பரிவாரங்களுடன் இராஜ ராஜன் காண்கிறார். (அமெரிக்காவில் தன் மகன் இல்லத்தில் இருந்து வரைந்தது)

போதும் மலர்ந்த முகமும், சோர்வே அறியாத பணியும், இனிமையாகப் பழகும் குணமும் கொண்ட திரு. கோபுலு அவர்களை - அவரது வீட்டில் திரு. புஷ்பா தங்கதுரையும் நானும் சந்தித்தோம். மூன்று நான்கு மணி நேரம் பேசியும் பேச்சு முடியவில்லை. எப்படி முடியும்? ஜீவக்கலை பிரம்மா வுடன் பேசுவதற்கு ஒரு யுகம் கூடப் போதுமா? சந்தேகமே.



ஸர் முகம்மது உஸ்மான் பகதூர் (மாலி வரைந்த கேலிச் சித்திரம்)

ஓவியக் கலையின் மேன்மைக்குத் தொண்டாற்றும் திரு. கோபுலு பொன் விழா, வைரவிழா, பவழவிழா கண்டு நூற்றாண்டுகள் சிறப்புடன் வாழ கலை ரசிகர்கள் சார்பில் வாழ்த்துகிறோம்.

அவருடன் கலந்துரையாடியதி லிருந்து சில பகுதிகளை இங்கு அளிப்பதில் பெருமை அடைகிறோம்.

• ● •

ஓவியர் மாலி மீது எனக்கு ஒரே மோகம். 'ஆனந்த விகட'னில் அந் நாளில் வரும் அவர் காரிகேச்சர் களைப் பார்த்து மெய் மறந்திருக் கிறேன்.

அடேயப்பா! அவர் வரைந்த மாங்குடி பாகவதரைப் பார்க்க வேண்டும்! பூதாகார உடம்புடன் பட்டை பட்டையாக விபூதி போட்டுக் கொண்டு இருப்பார்.

அவர் வரைந்த ஸர் முகம்மது உஸ்மானை மறக்க முடியுமா! பலூன் போல உடம்பு! மேலே சின்னத் தலை.

தமிழ்நாட்டில் அதிசயமாக காரிகேச்சர்களை உண்டாக்கியவர் அவர்.

இரண்டாம் யுத்தத்திற்கு முன் என் தந்தை என்னைச் சென்னைக்கு அனுப்பி வைத்தார்.

கும்பகோணம் ஆர்ட் ஸ்கூலில் ஓவியம் பயின்றவன் நான்! ஸ்கூல் தலைமை திரு. குப்புசாமி எனக்கு ஒரு சிபாரிசு கடிதம் கொடுத்தார். சென்னையில் புரசைவாக்கத்தில் தங்கினேன்.

'கேட்டை' என்ற ஆர்ட்டிஸ்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள்! அவருடன் ஓர் அறையில் தங்கினேன்.

மாலி, ரங்காச்சாரி சாலையில் இருந்தார்!

அவரைப் பார்க்கப் போனேன். அப்போது மாடியில் இருந்தார். ஈஸிசேரில் சாய்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். நெற்றியில் குங்கு மம்! அரைக்கை ஜிப்பா! அந்த நாளில் மாரிஸ் கார் வைத்திருந்தார்.

"என்ன வேணும்?" என்ற தோரணையில் கேட்டார்.

"நான் ஓர் ஆர்ட்டிஸ்ட், குப்புசாமி கடிதம் கொடுத்து விட்டிருக்கிறார்!" என்றேன் தயக்கத்துடன்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தார்.

"படம் கொண்டு வந்திருக்கிறாயா?" என்றார்.

"இல்லை" என்றேன்.

"படம் இல்லாம ஏன் வரே? போ! படத்தோடு நாளைக்கு 'ஆனந்த விகடன்' ஆபீஸ்ல வந்து பார்" என்றார்.

பிராட்வேயில் 'ஆனந்த விகடன்' ஆபீஸ்.

போய்ச் சந்தித்தேன்! ஒரே நடுக்கந்தான்!



"கூஜாவும் பையும் சேர்ந்து. வீட்டிலேருந்து கௌம்புகிறபோது, இருபத்திரெண்டு சாமான்தான் ...... இப்போ எண்ணினால் இருபத்திமூணு இருக்கே ...... ஆமாம், அதோ அங்கே என்ன சாமான்? ......"

"அது சாமான் இல்லே, அம்மா! ...... நம்ம சாமா!"

படத்தை வாங்கிப் பார்த்தார். அவருக்குத் திருப்தி அளித்திருக்க வேண்டும்.

இரண்டாவது வாரத்தில் என் படம் அட்டைப் படமாக வந்தது. எனக்கு ஒரே அதிசயம்! அதிர்ச்சி!

அந்த வருடம் தீபாவளிக்குச் சில மாதம் முன்பு மாலி கும்பகோணம் வந்தார்.

என்னை அவர் திருவையாறுக்கு அழைத்துச் சென்றார். அவருடன் சில்பி வந்திருந்தார்.

சில்பியுடன் முதல் அறிமுகம்! இளைஞர்! அவரும் சென்னை ஆர்ட்ஸ்கூலில் பயின்றவர்.

திருவையாற்றில் தியாகப் பிரும்மம் வாழ்ந்த வீட்டுக்கு அழைத்துச் சென்றார்.


அங்கே அந்த மகான் பூஜை செய்த 'இராமர் பட்டாபிஷேகம்' படம் இருந்தது. அந்த தெய்விகப் படத்தை வரையும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

தியாகப் பிரும்மத்தின் சமா ி, அதன் சூழ்நிலை ஆகியவற்றை எ. லாம் சில்பி வரைந்தார்.

இருவரும் தியாகப்பிரும்மம் வீட்டின் திண்ணையில் தான் இரவு களில் படுத்துக் கொண்டோம்.

இரவில் சில்பியும் நானும் நிறையப் பேசிக் கொண்டோம். தூங்குவதற்கு முடியாமல் பெரிய சங்கீதக் கச்சேரி அங்கே! கொசுக்கள் கோஷ்டியாக வந்து பாடின!

தியாகப் பிரும்மம் சமாதி அருகில் பெங்களூர் நாகரத்தினம் அம்மாளைப் பார்த்தேன்.




கோபுலு பல தொடர் கதைகளுக்குச் சித்திரம் வரைந்து கதாபாத்திரங்களுக்கு உயிரூட்டியிருக்கிறார்.



போட்டோக் கலையிலும் வல்லவர். மேல்நாட்டில் அவர் எடுத்த வண்ணப் போட்டோ.



வாஷிங்டனில் திருமணம் நகைச்சுவைக் கதைக்கு உயிரூட்டியவர் திரு. கோபுலு. மிஸஸ் ராக்பெல்லர் பாத்திரம்.





यस्याङ्घ्रियुग्ममनु देववराः प्रपन्नाः
कृष्णस्स एव तव पादयुगं प्रपन्नः ।
किं वर्णयामि तव भाग्यमहो यशोदे
वैकुण्ठतोऽपि परमः व्रजएव आस्ते ॥

யஸ்யாங்க்ரி யுக்மமநு தேவவரா: ப்ரபன்னா:
க்ருஷ்ணஸ்ஸ ஏவ தவ பாதயுகம் ப்ரபன்ன: |
கிம்வர்ணயாமி, தவ பாக்யமஹோ யசோதே
வைகுண்டதோபி பரம: வ்ரஜஏவ ஆஸ்தே ||

'யசோதே! எந்த ஸ்ரீ கண்ணனுடைய கால்களில் பிரம்மா, இந்திரன், வருணன், யமன், குபேரன் முதலிய தேவர்கள் நமஸ்கரிக்கின்றனரோ, அப்படிப்பட்ட ஸ்ரீ கோபாலன (எண்ணெய் தேய்த்துக் கொள்வதற்காக) உனது கால்களைக் கட்டிக்கொண்டிருக்கின்றானே! நீ என்ன புண்யம் செய்தாய்? உனது இடைச்சேரியான நந்தகோகுலம், வைகுண்டத்திற்கு மேல் சிறந்ததாகி விட்டதே!' என்று நாரதர் நந்தகோகுலம் வந்து ஆச்சரியப்பட்டுக் கூறுகிறார்.

யசோதை குழந்தைக் கண்ணனுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டுகிறாள்.



மர்ரே ராஜம் குறைந்த விலையில் காப்பியங்களை வெளியிட்டவர். சங்க இலக்கியங்கள், திருவாசகம் போன்ற நூல்களுக்கு மேலட்டை வரைந்தார் 'கோபுலு.'

தியாகய்யர் மீது பக்தி பூண்டு அவரையே தெய்வமாகத் தொழுது வந்தவர் அவர்!

"குழந்தைகள் எல்லாம் படம் எழுத வந்திருக்கா?" என்று கேட்டார் நாகரத்தினம்மாள்.

மகாராஜபுரம் விஸ்வநாதய்யரையும் அழைத்து வந்திருந்தார் மாலி. அந்த நாளில் விஸ்வநாதய்யர் அவ்வளவாகப் பிரபலமாகவில்லை. அவரை தியாகப் பிரும்மம் சந்நிதியில் மாலி பாடச் சொன்னார். அவர் பாடினார்.

அந்த வருட தீபாவளி மலரில் நான் வரைந்த சித்திரங்கள் யாவும் வந்திருந்தன. எனக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தந்தன.

கும்பகோணத்தில் என் வீட்டிற்கு சில்பியை மாலி அழைத்து வந்தார்.

நான் வரைந்த படங்கள் எங்கள் வீட்டுச் சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தன.

"நீதான் கோபாலனா?" என்று அவர் என்னைக் கேட்டார்.

"நீதான் சீனிவாசனா?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"ரொம்ப நன்னா இருக்கு. நீ போட்ட நாமக்கல் ஆஞ்சநேயர்" என்றார்.

சில்பி என்ற சீனிவாசன் வாழ்க்கையில் சிரமப்பட்டுத்தான் முன்னேறினார்.

சென்னையில் கொத்தவால் சாவடியில் உள்ள கன்னிகா பரமேஸ்வரி தேவஸ்தானம் இலவச உணவு அளித்து வந்தது.

அதில் சாப்பிட்டுவிட்டு, ஆர்ட் ஸ்கூலில் பயின்று வந்தார். தெய்வ நம்பிக்கை அதிகம் உள்ளவர். வாழ்க்கையிலும் அவர் ஓவியங்களிலும் அதன் பாதிப்பு அதிகம்!

'ஆனந்த விகடன்' ஆசிரியர் குழுவில் துமிலன் பணியாற்றினார்.

அந்த நாளில் 'அப்பளாக் கச்சேரி'யைத் தொடர்ந்து எழுதினார்.

என்னைப் பார்த்தபோது, "நீதான் கோபாலனா? நீதான் அந்த அட்டைப் படம் போட்டியா?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்!" என்றேன்.

"உனக்கு 5 ரூபாய் தருவா!" என்றார்.

அந்த நாளில் அது பெரிய தொகை!

சென்னையில் 10 ரூபாயில் ஒருவர் ஒரு மாதம் வாழ்ந்து விடலாம்!

கிராமங்களில் இரண்டு ரூபாய் இருந்தால் போதும்.

புரசைவாக்கத்தில் தங்கி இருந்த போது ஓட்டலில் ஆறு ரூபாய் கொடுத்தால் போதும். இரண்டு வேளைச் சாப்பாடும், ஒரு வேளை டிபனும் மாதம் முழுவதும் கிடைக்கும்.

நான் 'ஆனந்தவிகட'னுக்குப் படங்கள் வரையத் தொடங்கி விட்டேன். மாதம் இருபது ரூபாய் என்னால் சம்பாதிக்க முடிந்தது. மாலி என்னிடம், "ஹாஸ்யப் படம் போடுவியா?" என்று கேட்டார். 'போடுவேன்' என்றேன். வரைந்து காண்பித்தேன். அவருக்குப் பிடித்துவிட்டது.

இரண்டாவது உலக யுத்தம் அப்போது மும்முரமாகியது. சென்னையைக் காலி செய்துவிட்டு மக்கள் தெற்கே சென்றார்கள். 'ஏவாகுவேஷன்' என்பதே எங்கும் பேச்சு.

நான் கும்பகோணம் திரும்பினேன். அப்போதுதான் மாலி அங்கே வந்து என்னைத் திருவையாற்றுக்கு அழைத்துச் சென்றார்.

மாலி ஒரு ஜீனியஸ்!

அவருக்கு, படத்தில் பெரிய ஈடுபாடு கொடுத்தது Saturday Evening Postம் அதில் கார்ட்டூன்கள் வரைந்த டேவிட் லோவும்தான்.

மாலிதான் 'ஆனந்த விகட'னுக்கு அந்தச் சின்னத்தை உருவாக்கியவர்.

காந்தி உருவம், 'பஞ்ச்' படம் ஆகிய இரண்டின் கலவைதான் அந்தச் சின்னம். சின்னத்தின் தலையில் நீட்டிக்கொண்டு நிற்பது கொம்பு.

கும்பகோணத்தில் காந்தி பார்க்கில் தான் எங்கள் சந்திப்புகள்; அரட்டைகள்.

எழுத்தாளர் கி.ரா. கோபாலன் என்னோடு ஆர்ட் ஸ்கூலில் படித்தவர். ஒரு வருடம் ஜூனியர்! நன்றாகப் பாடுவார்!

காலையில் பள்ளியில் தொடங்கும் பிரார்த்தனைப் பாட்டை அவன்தான் பாடுவான். பாரதி பாட்டை உணர்ச்சியோடு பாடுவான். 'ஓம்சக்தி ஓம்' என்ற பாட்டு இன்னும் என் மனத்தில் ஒலிக்கிறது.

ஆர்ட்டிஸ்டாகத்தான் தொடங்கினான். பின்னால் கதை எழுதினான். பெயர் வந்தது.

பின்னால், பாடல்களும் எழுதினார்.

அவரது பாடல்கள் சிலவற்றை ஜி.என்.பியும், வசந்த கோகிலமும் பாடியிருக்கிறார்கள்.

'சிந்தை அறிந்து வாடீ!' என்ற பாடலை எழுதியவர் அவர்தான்.

நிறைய 'வாடீ' பாட்டுகளை அவர் எழுதுவார்.

இவ்வளவு எல்லாம் திறமைகளைக் காண்பித்தும் அவருக்கு வாழ்க்கை கஷ்டமாகவே இருந்தது.

காந்தி பார்க்கில் அரட்டை என்றேன். கி.ரா.கோபாலன் அதில் உண்டு. மணி என்று ஓர் ஆர்ட்டிஸ்ட்! நிறைய ஜோக்ஸ் போடுவார்! ஆர்ட் ஸ்கூலில் படித்தவர்.


தவிர அழகிய நம்பியாப்பிள்ளையிடம் மிருதங்கம் கற்றுக் கொண்டவர்.

ரா.கி. ரங்கராஜன் என் தம்பியின் வகுப்புத் தோழன்! அவரும் இந்தக் குழுவில் உண்டு.

பிரசித்தி பெற்ற கு.ப. ராஜகோபாலனும் எவாகுவேஷனில் சென்னையிலிருந்து வந்து சேர்ந்து கொண்டார். அவரும் ஜமாவில் சேர்ந்துகொள்வார்.

தொண்டரடிப் பொடி என்ற பெயரில் ஒருவர் ஸ்டேஷனரி கடை வைத்திருந்தார். கு.ப.ரா. அங்கே தான் உட்கார்ந்திருப்பார்.

எதிரே 'கணபதி விலாஸ் ஓட்டல்'. அதில் ரேடியோ வைத்திருப்பார்கள். யுத்தம் பற்றிய செய்திகள் ரேடியோவில் ஒலிபரப்பாகும். அசல் சத்தியமூர்த்தி குரலில் யாரோ ஒருவர் செய்தி படிப்பார். செய்தியை



நாங்கள் எங்களுக்குள் விமர்சிப் போம்.

ஜமாவில் இன்னும் மூன்று நபர் களைச் சொல்ல வேண்டும்.

காிச்சான்குஞ்சு நாராயணசாமி ஒருவர்.

அடுத்தது ந. பிச்சமூர்த்தி! இந்தி பண்டிட் அவர்.

சங்கீத வித்வான் ஜானகிராமன் என்று ஒருவர்.

கு.ப.ரா. 'மணிக்கொடி'யில் எழுதிப் பெயர் பெற்றவர். கு.ப.ரா., ந. பிச்சமூர்த்தி போன்றவர்களுக்கு 'கல்கி'யும், 'ஆனந்த விகடன்' எழுத்தாளர்களும் அவ்வளவு பிடிக்காது.

பத்திரிகைகளில், குறிப்பாக 'ஆனந்த விகடன்', 'கல்கி'யில் கதைகளுக்கு படங்கள் வரத் தொடங்கிய காலம் அது!

அந்த நவீனங்களை கு.ப.ரா. போன்றவர்கள் அதிகம் விரும்பியதில்லை. படங்களை 'கமர்ஷியல்' என்பார்கள்!

வேடிக்கை! கு.ப.ராவைப் பிடிக்காது, கி.ரா. கோபாலனுக்கு.

அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் ஒரு சிறந்த ரசிகர்! இலட்சியவாதி. நல்ல வசதி படைத்தவர்.

திருச்சி அருகே இருந்த துறையூரில் ரெட்டியார் நிறையப் பேர் குடியிருந்தார்கள்.

ரெட்டியார் 'மலர் பிரஸ்' வைத்திருந்தார்கள்.

அதில் 'கிராம ஊழியன்' என்ற பத்திரிகை ஆரம்பித்து கு.ப.ரா.வை ஆசிரியராக அழைத்துப் போனார்.

'கிராம ஊழிய'னில்தான் திருலோக சீதாராம் இருந்தார்.

அவர் பின்னர் 'சிவாஜி' பத்திரிகையைத் தொடங்கி திருச்சிக்குப் போய்விட்டார்.

கு.ப.ரா. 'கிராம ஊழிய'னுக்கு கௌரவ ஆசிரியராக வந்தார்.

அவர்தான் தி. ஜானகிராமனை அழைத்து 'கிராம ஊழிய'னில் நாவல் எழுதச் சொன்னார்.

தி. ஜானகிராமன் படித்தவர். பாபநாசம் பள்ளியில் ஆசிரியராக வேலை பார்த்தார். தினமும் ரயிலில் சென்று வருவார்.

மகாமகம் குளத்தின் தென்கரையில் அவர் வீடு இருந்தது. அவரது தந்தையும் புலமை பெற்றவர். காலக்ஷேபம் செய்வார்.

கும்பகோணத்தில் நானும் ஜானகிராமனும் அடிக்கடி சந்திப்போம். மணிக்கணக்காகப் பேசுவோம்.

'கிராம ஊழியன்' பத்திரிகையில் அவர் எழுதிய நாவலுக்கு நான்தான் படம் போட்டேன்.

எனது முதல் 'நாவல்' அனுபவம் அது!

துறையூர் போய் 'கிராம ஊழியன்' ஆபீசில் தங்கி இருப்பேன். அப்போது வல்லிக்கண்ணனும் அங்கே வந்து சேர்ந்திருந்தார். ஓர்

இருட்டு அறையில் உட்கார்ந்திருப்போம்.

இரவில் அவரும் நானும் வெகு நேரம் பேசிக் கொண்டிருப்போம். சில இரவுகள் முழுவதுமே பேசி இருக்கிறோம்.

யுத்தம் முடியவில்லை.

பம்பாயில் ஒரு விளம்பர நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தது. போய்ச் சேர்ந்து விட்டேன். சில மாதங்கள் தான் வேலை பார்த்திருப்பேன்.

எனக்கு விருப்பம் எல்லாம் 'ஆனந்த விகடன்' மீதுதான்.

மாலிக்கு ஒரு கடிதம் எழுதினேன். 'விகட'னுக்கு வரலாமா என்று கேட்டு.

"இப்போது ஆர்ட்டிஸ்ட் இலாகாவை விஸ்தரிக்கிறோம்! உடனே வந்து சேர்!" என்று மாலி கடிதம் எழுதினார்.

சென்னை வந்தேன்.

எஸ்.எஸ். வாசன் என்னைப் பார்த்து, "புத்திசாலிங்க எல்லாம் நம்ப ஊரை விட்டுப் போயிடலாமோ?" என்று சொல்லி வேலையில் அமர்த்திக் கொண்டார்.

'ஆனந்த விகட'னில் நுழைந்தேன். மாலி அங்கே ஓர் ஓவியக் குடும்பத்தையே உண்டாக்கி வைத்திருந்தார்.

ராஜு, தாணு, சில்பி, சித்ரலேகா, சிம்ஹா, கிருஷ்ணமூர்த்தி என்கிற கௌசிகன் எல்லாரும் இருந்தார்கள்.

பிரபலமான 'ரவி' அப்போது 'ஆனந்த விகட'னை விட்டுப் போய் விட்டார்.

ராஜு படம் போடுவதைப் பார்த்து ரொம்ப ஜோவியலாக இருப்பார் என்று நினைப்பார்கள்.

ஆனால் அவர் முகத்தைப் பார்த்தால் எப்போதும் ஸீரியஸாகத் தோன்றும்.

தேவன்தான் அப்போது ஆசிரியர். தும்பிலன் தனிப் பத்திரிகை நடத்தப் போய்விட்டார்.

நான் கல்கியைச் சந்தித்ததே இல்லை. நான் சேர்ந்த சமயம் அவர் அங்கே இல்லை.

வாசன் என்னிடம் அதிகம் பேசியதில்லை. என்னை அவர் recognise பண்ணியதில்லை. அப்போது அவர் அதிகம் ஸ்டுடியோவில்தான் கவனம் செலுத்தி வந்தார்.


தேவன் தமது அறையில் வியர்க்க விறுவிறுக்க உட்கார்ந்து வேலை செய்வார்.

நாரதர் சீனிவாசராவ்தான் குறுக்கெழுத்துப் போட்டிகளைச் சிருஷ்டிப்பார்.

அவசரமாக வருவார்! அவசரமாகப் பேசிவிட்டு உடனே மறைந்துவிடுவார்.

தி.ஸ்ரீ. சுந்தரவரதன் என்பவர் நல்ல எழுத்தாளர்.

'மனைவிமேல் சந்தேகம்', 'கணவன் மேல் சந்தேகம்' என்று கதைகள் எழுதினார்.



வார்த்தைகள் இல்லாமல் 'ஜோக்' சித்திரம் மூலம் சிரிக்க வைப்பார்.

கதையில் மனைவிமேல் சந்தேக மனைவி 30 கடிதங்களைத் தனது ரவிக்கைக்குள் மறைத்துக் கொள்கிறாள்.

'ரவிக்கைக்குள் என்ன இருக்கிறது?' என்று ஒரு வாக்கியம் அந்தக் கதையில் வந்துவிட, அது அந்தக் காலத்தில் 'ரொம்ப மோசம், வக்கிரம்' என்று விமர்சனங்களைக் கிளப்பின.

மாலி ஓர் அருமையான காமிராக்காரர்!

அந்த நாளில் அனிமேஷன் போட்டோக்களை நிறைய எடுத்திருக்கிறார்.

அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் பாடும்போது எழும் பாவங்களை அந்த நாளில் விகடனில் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

'ஆனந்த விகட'னில் உயிர் ததும்பும் போட்டோக்களை எடுத்துப் போட்டவர். குரங்கு, குழந்தை, பாகவதர்கள் என்று எத்தனை சப்ஜெக்ட்களில் படங்கள்!

காமிராவில் அவருக்கு ஒரு வெறி! தாம் சம்பாதித்த பணத்தை, போட்டோக்கள் எடுப்பதிலேயே செலவிட்டுக் கரைத்தார். தமது ஒரே பெண்ணுக்குத் திருமணம் நடத்தினார்.

நீரிழிவு நோய் அவரைப் பெரிதும் பாதித்தது. சென்னையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார்.

துரதிருஷ்டவசமாக அவரது கை விரல்களையும் கால் விரல்களையும் வெட்டி எடுக்க வேண்டி வந்தது.

கைவிரல்களை உபயோகப்படுத்தும் ஓர் ஆர்ட்டிஸ்டுக்கு இதைவிடத் துயரம் எது?

தமது சொந்த ஊரான திருவிசைநல்லூருக்குச் சென்றார். ஆறுமாதம் வாழ்ந்திருந்தார்.

பிறகு கண்களை மூடினார்.

தமிழ்ப் பத்திரிகை உலகை, பழைமையிலிருந்து புது உலகத்துக்குக் கொண்டுவந்த ஒரு மாமேதையின் சகாப்தம் முடிந்தது.

'**க**லா மோகினி' என்ற வித்தியாசமான புதிய பாதையில் தொடங்கி நடத்தியவர், 'சாலி வாகனன்' என்ற புனை பெயரில் எழுதிய வி.ஆர்.ராஜகோபாலன்.

சின்னப் பத்திரிகை அது.

நல்ல வேகமுள்ளவர் சாலிவாகனன். அற்புதமாகக் கவிதை எழுதுவார். 'யோகம்' என்ற காவியம் எழுதுவேன் என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

எழுதாமலே மறைந்து விட்டார்.

டி.கே.சி., 'கல்கி' ரசிக்க மாட்டார்.

"கம்பன் கவிதையைக் காட்டுக்கு அனுப்பிய டி.கே.சி." என்பார்.

ஆச்சரியம் பாருங்கள்.

கு.ப.ராஜகோபாலன், ந. பிச்சமூர்த்தி, திருலோக சீதாராம், சாலிவாகனன் யாவரும் வீட்டில் தெலுங்கு பேசுகிறவர்கள்.

கோபுலு என்று எனக்குப் பெயர் வைத்தது மாலிதான்!

"கோபாலன் வேண்டாம்டா, 'கிருஷ்ணன், கோபாலன்'னு எல்லாப் பெயரிலும் 'னன்' போடறோம். நீ வித்தியாசமாப் போட்டுக் 'கோபுலு'ன்னு போட்டுக்கோ" என்றார். அதைத்தான் நான் பற்றிக் கொண்டேன்.

'ஆனந்த விகட'னில் தேவனின் 'கல்யாணி' தொடர் கதைக்குப் படம் வரைந்தேன்.

லட்சுமியின் பெண்மனம், அரக்கு மாளிகை, கொத்தமங்கலம் சுப்புவின் தில்லானா மோகனாம் பாளுக்கு பெரிய அளவுகளில் படம் போட்டேன்.

'சாவி'யின் 'வாஷிங்டனில் திருமணம்' இதில் சேர்ந்தது.

"விளம்பர நிறுவனத்தில் சேரப் போகிறேன்" என்று வாசனிடம் சொன்னேன்.

"விளம்பரம் ஒரு தனித் துறை! யோசித்துச் செய்!" என்றார். "யோசித்து விட்டேன்!" என்றேன்.

"ரிடெய்ன் தருகிறேன்! விகடனுக்குப் போட்டுக் கொண்டிருங்கள்" என்றார்.

விளம்பர நிறுவனம் தொடங்கி அதில் வேறு விதக் கோணங்களில் ஈடுபட்டு விட்டேன்.

அவ்வப்போது அன்பு, மனத் திருப்தி காரணமாக சில பத்திரிகைகளிலும் படம் வரைந்து கொண்டிருக்கிறேன்.


அநேகமாக எல்லாப் பெரிய பத்திரிகைகளிலும், பெரிய எழுத்தாளர்கள அனைருக்குமே படம் வரைந்து விட்டேன்.

கலைஞர், விக்கிரமன் போன்றோரின் சரித்திர நாவல்களுக்குப் படம் போட்டிருக்கிறேன்.

இனி ஓய்வு எடுக்கலாம் என்று என் விருப்பம்.

அன்றைய ஆர்ட்டிஸ்ட்கள் பலரும் வசதியாக வாழ்ந்ததில்லை. அவர்கள் பலருக்கு நான் உதவி இருக்கிறேன்.

வருங்காலத்தில் எல்லா ஆர்ட்டிஸ்ட்களும் நன்றாகவே வாழ்வார்கள் என்று நம்புகிறேன்.



(கோபுலு - சித்திரக் கலைக்கு ஓர் ஜீவ கோபுரம் சித்திர மடலில் வெளிவந்துள்ள, சித்திரங்களை வெளியிட அன்புடன் அனுமதியளித்த 'கோபுலு' அவர்களுக்கு அவர் திறமை வளருவதற்குக் கூடம் அமைத்துக் கொடுத்த 'ஆனந்த விகடன்' பத்திரிகையிலிருந்து வண்ணப்படங்கள் எடுத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு நன்றி)



டாக்டர் 'லக்ஷ்மி'

வசுமதி ராமசாமி

வெள்ளிக்கிழமை மாலை மூன்று மணிக்கு தெருக்களில் ஆங்காங்கு கூட்டம். கிழவர்கள், குமரர்கள் பெண்கள் சிறு பையன்கள் அனைவருமே கூட்டத்தில் இருப்பார்கள். பத்திரிகை விற்கும் பையன்கள் நிற்பார்கள். கோயில் வாசல், பள்ளிக்கூடவாசல் வீட்டுப் புறம், இப்படி வியாபாரம். 'விகடன்', 'காஞ்சனா' என்ற கூச்சல்.

"லக்ஷ்மி" எழுதிவரும் தொடர் நாவல் காஞ்சனா... அரைமணி நேரத்தில் கூட்டம் கலைந்துவிடும்.

பொற்கொல்லர் அழகாக அருமையாக கலைத் திறனுடன் ஆபரணங்கள் செய்கிறார்கள். ஆனால் அவற்றை அழகிய கண்ணாடிப் பெட்டியில் கடைகளில் வைக்கும்போதுதான் எல்லாரும் பார்த்து மகிழ்ந்து வாங்குகிறோம். அணிந்து கொள்ளுகிறோம்.

டாக்டர் திரிபுரசுந்தரி எழுத்தாளர். பிரபல நாவலாசிரியை டாக்டர் 'லக்ஷ்மி': அருமைச் சிநேகிதி அன்பும் பண்பும் நிறைந்த லக்ஷ்மி. இப்படி மூன்று விதமாக அவர்கள் மேம்பாட்டைக் காணலாம்; உணரலாம்.

சம்சாரியான மத்தியதரக் குடும்பத்தில் 25.3.1921 அன்று பிறந்தவர்கள்.

உள்ளூர்ப் பள்ளியில் எல்லாரையும் போல் படித்தார்கள். படிப்பில் அதிக ஆசை. நம்பிக்கை. எனவே ஊரை விட்டு சென்னையில் வைத்தியக்கல்லூரியில் சேர்ந்து படிக்கத் திடமான எண்ணம். சந்தர்ப்பம் சூழ்நிலை எப்படியிருந்தாலும் விடாமுயற்சியுடன் படிக்க வாய்ப்பு கிடைத்தது.

திரிபுரசுந்தரி பெற்ற பேறு திரு.எஸ்.எஸ். வாஸன் அவர்களை நேரில் சந்தித்துப்பேசும் வாய்ப்பு கிடைத்தது.


கொடை வள்ளல், திரு வாஸன் அவர்கள் 'லக்ஷ்மி' யின் கதை எழுதும் ஆற்றலை அறிந்து கொண்டார்.

சின்னச் சின்னக் கட்டுரை, கதைகள் எழுதச்சொன்னார்கள். அப்பொழுது பேராசிரியர் கல்கி அவர்கள் லக்ஷ்மியின் எழுத்துக்கு ஆதரவு அளித்தார். இந்த சம்பவம் 'லக்ஷ்மி'யின் வாழ்க்கை அமைப்பையே மாற்றி விட்டது.

'லக்ஷ்மி' எழுத்துகளை எல்லாருமே விரும்பிப் படித்தார்கள். திரு.வாஸன் தாராளமாகக் கொடுத்துதவிய சன்மானத் தொகையும் 'ஆனந்தவிகடன்' பத்திரிகை காட்டிய ஆக்கமும், ஊக்கமும் பிரபல எழுத்தாளராக மாற்றியது. எழுத்து நாளுக்கு நாள் மெருகு ஏறியது. சக எழுத்தாளர்கள் பெண்கள் அனைவருமே கதைகளையும் நாவல்களையும் படிக்கும் வாசகர்கள் ஆனார்கள்.

ஆரம்பத்தில் திரு. வாஸன் அவர்கள் வீட்டில் நடந்த நவராத்திரி கொலுவுக்கு திரிபுரசுந்தரி போயிருந்தார். கூட்டம் கலைந்து எல்லாரும் போன பிறகும் இவர் உட்கார்ந்து கொலு பொம்மைகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். அன்பே உருவான திருமதி பட்டம்மாள் வாஸன் திருமதி பாலம்மாள் (வாஸன் அவர்கள் அன்னை) இந்தப் பெண் தனியாக உட்கார்ந்திருப்பதைப் பார்த்து அன்புடன் விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள். அதற்குப்பிறகு திருமதி லக்ஷ்மி அவர்கள் குடும்பத்திலே ஒரு பெண்ணாக இருந்தார்கள். ஹாஸ்டலில் மருத்துவப் படிப்புக்காக இருந்த காலத்தில் கூடவே எழுத்தை வளர்த்துக் கொண்டார்கள்.

அந்தக் காலகட்டத்தில் உழைத்துச் சம்பாதித்து மருத்துவப் பரிட்சையிலும் முதன்மையாகத் தேறிய பெண் இவர்கள் தான் என்று சொல்லும்போது என் கண்களில் கண்ணீர் நிறைகிறது. இத்தகைய முதன்மையான அன்புச் சகோதரியை நான் முதன் முதலில் சந்தித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுகிறேன்.



1947லிருந்து 1953 வரை நாங்கள் பைந்தமிழ்ச் சோலை என்ற ஒரு சங்கம் வைத்து நடத்தினோம். எழுத்தாளர் 'குகப்ரியை' அம்மா அவர்கள் வீட்டில் நடைபெறும். வாரம் ஒரு முறை சந்திப்போம். பேசுவோம்.

அந்த வாரம் கண்டதும் கேட்டதும் என்ற தலைப்பில் பேசுவோம். லக்ஷ்மியும் இந்தச் சங்கத்தில் சேர்ந்தார்கள். மிகவும் அமைப்பாக அவரவர்கள் கருத்தைச் சொல்லுவார்கள். முதல் முறை அவர்களை நேரில் சந்தித்துத் தோழியாகும் வாய்ப்பு கிடைத்தது. அந்தச் சங்கத்தில் நிறைய எழுத்தாளர்கள் தங்கள் அனுபவத்தைப் பற்றிப் பேசுவார்கள். திருமதி லக்ஷ்மி அதிகமாக ஒன்றும் சொல்லமாட்டார்கள்.

"லக்ஷ்மி" அவர்கள் தட்டாரப் பூச்சி போன்றவர்கள் அல்ல. ஆனால் தேனீயைப் போன்றவர்கள். எழுத்தாளர்களின் கருத்துகளைச் சேர்த்துக் கொள்வார். அதற்கு ஓர் உருவம் கொடுத்து எழுதுவார்கள்.


'லக்ஷ்மி'யின் எழுத்துச் சிறப்பைப் பற்றி முக்கியமாக உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

'லக்ஷ்மி'யின் நாவலில் குடும்பம் என்ற பல்கலைக் கழகம் தான் நிலைக்களமாக இருக்கும். 'மிதிலா விலாஸ்' என்ற நாவல் அதற்கு எடுத்துக்காட்டு. அவர்கள் எழுதும் நாவல் காலத்துக்கு ஏற்றபடி அமையும். தெளிந்த நீரோடை போன்ற நடை. பாத்திரங்களை அறிமுகப்படுத்தும் தனித்தன்மை. எங்கே கூட்டத்திற்கு

விழிப்பு

தேவகி முத்தையா

உலகம் பதினான்கிறுக்கும் தாயாகிக் காப்பவளே – நீ
என் இதயத் தாமரையில் முகிழ்த்த ஆகாயத் தாமரையோ?
இல்லாத உறவிற்கு இதுவன்றிப் பெயர் வேறோ?
பொல்லாத எண்ணம்தான் பிறர் மனத்தைப் புண்ணாக்கும்
என் மனத்தின் கற்பனையோ என்னை மட்டும் பாதிக்கும்
உன்னை மறந்தேன் என நினைத்து நீ என்னை மறந்து சென்றாயோ?
நீ குடியிருக்க ஏற்ற இடமில்லை என்று என் மனத்தை வெறுத்தாயோ?
அன்னை உனையன்றி எனக்கு வேறில்லை என்பதனை மறுத்தாயோ?
எனக்கு மனமென்று ஒன்றில்லை என்றுதான் நினைத்தாயோ?
ஒரு கோடிச் சந்திரரின் தண்மை மிகப் பொருந்தியவளே!
அனுவேனும் என் மனத்தைக் குளிர்ச்சி செய்ய மறந்தாயே!
ஓராயிரம் சூரியர்க்கு ஒப்பான ஒளி பொருந்தியவளே!
ஒரு கீற்று ஒளியை என் மனத்தில் புகுத்திவிடத் தயங்கினாயோ?
மின்னாயிரம் ஒரு மெய்வடிவாய் விளங்குகின்ற பெண்ணாளே!
என் மனத்து இருளைப் போக்கிடத்தான் மாட்டாயோ!
அத்தனை உயிர்களையும் அன்புடனே அணைப்பவளே
உன் மகனை எனதென்று உரைத்தேன் என்று பதைத்தாயோ?
இதற்குத் தண்டனையாய் சிலகாலம் உன் முகத்தை ஒளித்தாயோ?
எனதென்று உறவாட நீ தந்த செல்வங்கள்
எழிலான மூவர்கள் எனக்கென்று இங்குண்டு
ஆயர்குலக் கண்ணனுமே உலகியர் அனைவருக்கும் அனபுப் பிள்ளையன்றோ
அவ்வண்ணம் உன்மகனும் எனக்கே எந்நாளும் அருமைக் கண்ணனன்றோ?
வேழமுகத்தனைப்போல் திருமால் மருகனைப்போல் திருஞானசம்பந்தன்போல
அடியார் அனைவருக்கும் உன் பாலன் ஞானக் குழந்தையன்றோ – நீ
பொற்கோயில் அமைத்துக் கொள்ள என்னைப் பித்தாக்கி வைத்தாயோ? உனக்குச்
சொற்கோயில் அமைக்க வேணடும்; என் புத்தியைச் சீராக்கித் தந்துவிடு!
உன் புகழைப் பாடவேண்டும் எனக்கு விழுத்துணையாய் வந்துவிடு!!



திருமணத்திற்குச் சென்றாலும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ரசித்துச் சாப்பிடுவார்கள். எல்லா அனுபவங்களையும் பொறுக்கி நவரத்ன மணி மாலையாகச் செய்து விடுவார்கள். எல்லாவற்றையும் விட சிறப்பான அம்சம் இரவு பகல் என்று பாராமல் எழுதிக் குவிப்பார்கள். தூக்கத்தைத் துறந்து விடுவார்கள். அதனால் அவர்கள் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டது. மூச்சும் பேச்சும் எழுத்து.

'குகப்ரியை' 'லக்ஷ்மி' நான் மூவரும் ஒவ்வொரு கூட்டத்திற்கும் செல்வோம். பிரிந்து போனதில்லை. 'லக்ஷ்மி'யின் எளிமையான தோற்றம் அவர்களிடம் தனி அன்பை வளர்த்தது.

நாங்கள் நெருங்கிப் பழகினோம். 15 ஆண்டுகள் தென்னாப்பிரிக்காவில் குடும்பம் நடத்தி வைத்தியத் தொழிலில் சிறப்பான இடம் பெற்றிருந்த பல சம்பவங்களைச் சொல்லுவார். அங்கிருந்தபடியே, 'விகடன்' தீபாவளி மலருக்குக் கதை அனுப்பத் தவற மாட்டார்கள்.

எங்கள் இந்திய மாதர் சங்கத்தில் இலவசமாக ஏழைப் பெண்களுக்கும் நிறைய வைத்தியம் செய்திருக்கிறார்கள்.

ஒரு சமயம் நான்கு ஆண்டுகள் அவர்களைப் பார்க்க முடியவில்லை. 'தினமணி' பத்திரிகையின் கூட்டம் ஒன்றுக்குப் போயிருந்தேன். 'லக்ஷ்மி' தலைமை வகித்தார். மேடையிலிருந்து கீழே வந்து அணைத்துக் கொண்டு மகிழ்ந்து போனார்கள்.

ராஜாஜி அண்ணா பெண் கமலா கிருஷ்ணசாமி, டாக்டர் விசாலம் போன்றவர்கள் அருமைச் சிநேகிதிகள். லக்ஷ்மியின் மறைவு எனக்கு அளவுகடந்த அதிர்ச்சியாக உடல் நிலை பாதிக்கும் நிலையை ஏற்படுத்திற்று. இருபதாம் நுற்றாண்டில் ஒரு பெண் எழுத்தாளர் இவ்வளவு நாவல்கள் கதைகள் எழுதியதில் திருமதி கோதைநாயகிக்கு அடுத்தவர் டாக்டர் லக்ஷ்மி.

திருமணம் நடந்து அருமையான வாழ்க்கையை நடத்தி ஒரே மகனைப் பெற்ற தாய் டாக்டர் 'லக்ஷ்மி' எழுத்து உலகில் ஒளித் தாரகையான டாக்டர் லக்ஷ்மி குடும்பப் பெண்ணாக வாழ்ந்து பேறு பெற்ற டாக்டர் லக்ஷ்மி- எழுத்தாளர்களுடைய நெஞ்சிலே நிலைத்தவர்கள். மறுபடியும் எழுத்தாளர் 'லக்ஷ்மி' தோன்றுவார்கள். வாழ்ந்து வருவார்கள்.

சீரிய பணிபுரியும் சீனிவாச காந்தி நிலையம்

கங்கா ராமமூர்த்தி



✷ திருமதி அம்புஜவல்லி

கல்லிழைத்த ஒட்டியாணம், வங்கி, கைகளில் பல ஜதை வளையல்கள், கழுத்தில் காசுமாலை, இரட்டை வடம் சங்கிலி, கெம்பு அட்டிகை, காதில் ஜிமிக்கிதோடு, கிளிமாட்டல், பாவுலி, மூக்கில் வைர பேசரி, திருகாணி, தலையில் ராக்கொடி, திருகுபில்லை, பொன் சடைக்குச்சு என்று உச்சி முதல் உள்ளங்கால் வைர தங்க, வைர நகைகளால் அந்த இளம்பெண் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

ஒருநாள் அவள் மகாத்மா காந்தியைச் சந்தித்தாள்.

அணி ஆபரணங்களில் மிகுந்த பிரியம் வைத்திருந்த அவள், தன்னுடைய நகைகளையெல்லாம் தேச நிதிக்காக காந்தியடிகளிடம், மன முவந்து அளித்து விட்டாள்.

மகாத்மா, தம்முடைய "சுவீகாரப் புத்திரிகளுள் ஒருத்தி" என்று அன்புடன் அழைத்த அந்தப் பெண் மணியே பத்மஸ்ரீ அம்புஜம்மாள் ஆவார். அண்ணலின் அன்பைப் பெற்றிருந்த அம்புஜம்மாள், செல்வக் குடும்பத்திலே பிறந்தவர்.

அக்காலத்தில் பிரபல வக்கீலாக விளங்கிய வி. பாஷ்யம் அய்யங்காரின் பேத்தியாக, பழுத்த தேசியவாதியான எஸ்.சீனிவாச அய்யங்காரின் செல்வக் குமாரியாக, அம்புஜவல்லி பிறந்தார்.

வாழ்வில் ஏற்பட்ட சோதனைகள் அம்புஜவல்லியைப் பக்குவப் படுத்தின. தேச சேவையும் மாதர் சேவையுமே தம்முடைய லட்சியங்களாகக் கொண்டு செயலாற்றினார்.

பக்தி, ஞானம், கர்மம் என்ற மூன்றும் இணைந்த சேவா மார்க்கமே சிறந்தது என்று அவர் உணர்ந்தார்.

'அம்புஜம்' என்று கனிவோடு அண்ணல் அழைத்து, தம்முடைய நிர்மாணத் திட்டங்களில் எல்லாம் அவளைப் பங்குபெறச் செய்தார்.

அம்புஜம்மாளின் வாழ்க்கை என்பது பாரத சுதந்திரப் போராட்டத்துடனும் மாதர் சங்கத்தின் வரலாற்றுடனும் ஒன்றியதாகும்.

தேசிய நீரோட்டத்துடன் கலந்து விட்ட அவர் வாழ்வு, பாரத தேசமெனும் மாகடலில் ஒருதுளி என்று கூறலாம்.

சீனிவாச அய்யங்கார் தம்முடைய உயிலிலே "என் பெண் அம்புஜவல்லி நல்ல முறையிலே சமூகப் பணி ஆற்றி வருகிறாள். அதை நான் பாராட்டுகிறேன்" என்று பாராட்டியிருக்கிறார்.

நூற்பது, கதர் விற்பனை செய்வது, அந்நியத்துணிகளைப் பகிஷ்கரித்து ஊர்வலம் செல்வது, காந்திஜியின் கொள்கைகளை எளிய மக்களுக்கு விளங்க வைப்பது, ஹிந்தி மொழியைப் போதிப்பது, தடியடி பட்டுச் சிறை சென்றது... இவ்வாறாக இருந்த அம்புஜம்மாளின் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது.

வார்தா ஆசிரமத்தில் ஒருநாள் அண்ணல் திடீரென அம்புஜம்மாளை அழைத்து, "சென்னையில் மகிளாஸ்ரமம் ஒன்றை நிறுவி, தேசியக் கலாசாரத்தை வளர்க்கும் பணியிலே நீ ஈடுபட வேண்டும். பெண்கள் பயன்பெறும் வகையிலே மொழிக் கல்வியுடன் அவர்களுக்குத் தொழிற் கல்வியும் கற்றுக் கொடுக்கும் பயிற்சிக் களமாக அந்நிறுவனம் இருக்க வேண்டும்" என்றார்.

அவருடைய வேண்டுகோளைக் கட்டளையாக ஏற்று, அதைத் தமது வாழ்வின் குறிக்கோளாகவும் கொண்டு 1946ஆம் ஆண்டில், நிர்மாணத் திட்டம் ஒன்றை அம்புஜம்மாள் செயலாக்கினார்.

தம்முடைய இல்லத்தின் ஒரு புறத்தில் இருந்த நிலத்தில் ஒரு கூடம், சிறிய அறை, வராந்தா – என்ற அமைப்புடன் கட்டடம் ஒன்றைக் கட்டத் தொடங்கினார்.

பால்ய வயது முதலே, பல்வேறு பட்ட பெண்களைச் சந்தித்து, அவர் தம் பிரச்னைகள், வாழ்க்கைக் கோணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்திருந்தார்.

இந்திய மாதர் சங்கத்தோடு இணைந்து செயலாற்றியவர்.

தமிழ்நாட்டில், மாதர் சங்கம் தோன்ற முன்னோடியாக இருந்தவர் அம்புஜம்மாள் எனலாம். இந்திய மாதர் சங்கத்தின் கிளைக்கழகத்தைத் தமது புதிய கட்டடத்தில் தொடங்கி நூற்பு வகுப்பு, ஹிந்தி வகுப்பு, முதியோர் கல்வி வகுப்பு ஆகியவற்றைப் பெண்களுக்கு அறிமுகப் படுத்தினார்.

குடிசைவாழ் மக்களுக்கான ஆதாரக் கல்வியும் இங்கே கற்றுக்



கொடுக்கப்பட்டது. மூதறிஞர் இராஜாஜி போன்ற பெருமக்களின் காலடிபட்ட இடம் சீனிவாச காந்தி நிலையமாகும்.

1948ஆம் ஆண்டில் தொடங்கிய இந்த ஸ்தாபனத்தை, தன் தந்தை, தேசத் தந்தை ஆகிய இருவரின் பெயரையும் இணைத்து "சீனிவாச காந்தி நிலையம்" என்ற பெயர் சூட்டினார். பொதுநலப் பணியாற்றும் தர்மஸ்தாபனமாகப் பதிவு செய்தார்.

டில்லியில் காந்தியடிகளின் உடல் தகனம் செய்யப்பட்ட இடத்திலிருந்து கருகிய புஷ்பம், துளசி, சாம்பல் கலந்த ஒரு பிடி மண்ணை ஒரு கங்கைச் செம்பிலே அடைத்து எடுத்து வந்து அதை நிலையத்தின் எதிரே புதைத்து அதன்மீது துளசி மாடம் கட்டினார்.

மத்திய சமூக நல போர்டின மான்ய உதவியினாலும் நண்பர்களின் நன்கொடை மூலமும், கலைநிகழ்ச்சிகள் நடத்தியதன் வழியாகவும் நிலையத்தின் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வசதியற்ற பெண்களுக்குத் தையல், டைப்ரைட்டிங், பாட்டு, நடனம் கற்றுத் தரப்படுகின்றன. அரசாங்கத் தேர்வுகளுக்கு அனுப்பி, தகுந்த சான்றிதழ்களும் வழங்கப் படுவதால், இங்கே பெண்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ற தொழிலைக் கற்றுப் பயனடைகிறார்கள்.

வசதியற்றவர்களுக்கும் கற்கும் வாய்ப்பை நல்க வேண்டும், அவர்களும் வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற நோக்கில் செயலாற்றி வருகின்றது சீனிவாச காந்தி நிலையம்.

சிறிய அளவிலே செயல்படும் மருத்துவச் சாலை, பாலவாடி, அச்சகம் என்று காந்தியடிகளின் லட்சியங்களை நடைமுறைப்படுத்தும் நிலையமாக இன்றளவும் சேவை செய்து வருகின்றது சீனிவாச காந்தி நிலையம்.

தொடர்ந்து நாற்பத்தேழு ஆண்டுகளாக, பெண்களுக்காக பெண்களாலேயே நடைபெற்று வரும் இந்த சேவா நிறுவனம் ஆற்றிய, ஆற்றிவரும் தொண்டுகளைப் பட்டியலிட்டால், மிகவும் நீண்டுவிடும். பல பெண்களுக்கு உந்துசக்தியாக விளங்கிய அம்புஜம்மாளின் கரங்களை வலுப்படுத்த, ஒரு பெரும் பெண்கள் படையே இருந்தது எனலாம்; இன்றும் இருக்கிறது.

திருமதி சரோஜினி வரதப்பன் திருமதி வசுமதி ராமசாமி, திருமதி சுசீலா பத்மநாபன், திருமதி ராஜலக்ஷ்மி சந்தானம், திருமதி பத்மா சந்தானம், திருமதி ஜெயலக்ஷ்மி குப்புசாமி, திருமதி ராஜம் சுந்தரம் இன்னும் பலர், இந்நிலையத்தைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வளர்க்கின்றார்கள். "தங்களுடைய சொந்த மகளைப் போல" என்று இந்நிலையத்தைப் பற்றித் திருமதி வசுமதி ராமசாமி உணர்ச்சிவசப்பட்டுக் குறிப்பிடுவார்

25 வருடங்களுக்கும் மேலாக, சுப்பு லக்ஷ்மி என்பவர் நிலையத்தின் மேற்பார்வையாளராக இருந்து வருகிறார்.

சுதந்திரத் திருநாள், கிருஷ்ண ஜயந்தி, மகாகவி பாரதியார் தினம், மகாத்மா காந்திஜி பிறந்த நாள், குழந்தைகள் தினம், அம்புஜம்மாள் தினம் - குடியரசு தினம் என்று தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்து விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அவ்வமயம் பல அறிஞர் பெருமக்களின் சொற்பொழிவுகளும் இடம் பெறுகின்றன.

சீனிவாச காந்தி நிலையத்தில் அடியெடுத்து வைப்பவரின் உள்ளத்தில், இந்திய மண்ணின் பெருமையை எண்ணி வியக்க வைக்கும் உணர்வுகள் பொங்கும். இதற்குக் காரணம், நிலையத்தின் நாற்புறமும், தேசியத் தலைவர்களின் படங்கள் நிறைந்திருப்பதேயாகும்.

பரபரப்பான நகரச் சூழலின் நடுவே அமைதியாக பொதுத் தொண்டு புரிந்து பெண்களுக்காகவே சேவை செய்து வரும் அரியதொரு நிறுவனம் சீனிவாச காந்தி நிலையம். விரைவில் பொன்விழாவை நோக்கி நடைபோடுகின்றது, சீனிவாச காந்தி நிலையம்.



மாபெரும் சக்தி மருவத்தூர் அடிகளார்

பூவுலகில், மனிதர்கள் பிறக்கிறார்கள்; மகான்கள் உதிக்கிறார்கள்; சித்தர்களும் ஆன்மிக ஞானிகளும் அவதரிக்கிறார்கள்!

மனிதர்கள், நேர்மையுடனோ... நேர்மையற்றோ உழைத்தோ... உழைக்காமலோ, பிறரை வஞ்சிக்காமலோ... வஞ்சித்தோ வாழ்ந்து, இல்லற வாழ்வை ஏற்று, பிள்ளைகளையும் செல்வங்களையும் பெற்று தன்னலப் பிறவிகளாகவே வாழ்நாளைக் கடத்திக் கடைசியில் மரணமுறுகின்றனர்.

மகான்கள், தங்கள் அளவில் வேதங்களின் மறை பொருள்களையும் யோகங்களையும் கற்றுத் தெளிந்து, ஒழுக்கத்துடன் செம்மையான வாழ்க்கை வாழ்ந்து, மற்றவர்களுக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்து, இவ்வுலக வாழ்வை மகிழ்ச்சியுடன் துறக்கின்றனர்.

சித்தர்களும் ஆன்மிக ஞானிகளும் இவ்வுலகிலேயே மக்களோடு மக்களாக, தாமரை இலைத்தண்ணீர்போல-ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து, மக்களுக்குரிய உதவிகளையும் தொண்டுகளையும் செய்து, அவர்கள் மனம் குளிர்வதைக் கண்டு தாங்களும் மனம் குளிர்கின்றனர்; அவர்கள் முகம் மலர்வதைக் கண்டு தாங்களும் முகம் மலர்கின்றனர். இவ்வுலக வாழ்க்கையையும் பேரின்பப் பேருலக வாழ்க்கையையும் இணைக்கும் பாலமாக விளங்குகின்றனர். இயற்கையின் விதிப்படித் தங்கள் உடலை மண்ணுக்கு அளித்துவிட்டுப்பேரின்ப வீட்டை எய்துகின்றனர்; அதே நேரத்தில், காலத்தை வென்று... காலம் கடந்து, உலக மக்கள் நெஞ்சக் கோயில்களில் கொலுவிருந்து அவர்களை நல்வழியில் செலுத்தி வாழவைக்கின்றனர்!

அவ்வாறு உயர்ந்த சித்தர்களும் ஞானிகளும் இன்றும் நம்மிடையே வாழ்ந்து நமக்கு நன்னெறியைப் போதித்து வருகின்றனர்.

அத்தகைய ஆன்மிக ஞானிகளில் ஒருவரே, மேல் மருவத்தூர் ஆதிப்ராசக்தி பீட நாயகர் அருள்திரு பங்காரு அடிகளார் ஆவார்கள்.

நம் அடிகளார், சித்தர்களின் சித்தர்; ஞானிகளின் ஞானி; குருக்களின் குரு; மகான்களின் மகான்; மகாத்மாக்களின் மகாத்மா! இவ்வளவு பெரிய சிறப்புகளைப் பெற்றிருந்தும், அவர் 'நான் வெறும் தொண்டன்; தொண்டர்களின் தொண்டன்' என்று மிகவும் அடக்கத்துடன் கூறும் போதுதான், இன்னும் உயர்ந்து விளங்குகிறார். அவருடைய பெருந்தன்மையையும் பேருள்ளத்தையும் எண்ணும்போதெல்லாம் நம் கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீரால் பனிக்கின்றன; நம்மையும் அறியாமல் நாம் கைகளைக் கூப்பி, அவர் இருக்கும் திசை நோக்கி நெஞ்சார வணங்குகிறோம்!

அருள்திரு அடிகளார் அவதரித்த திருத்தலம், மேல்மருவத்தூர், சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகத்தை அடுத்து சுமார் பத்தாவது கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள, சிற்றூர்.

இராமனும் கண்ணனும் இயேசுவும் முகமதுநபியும் அவதரித்த இடங்கள், அவர்களால் எப்படிச் சிறப்புற்றுத் திகழ்கின்றனவோ, அவற்றைப் போலவே, நம் அடிகளார் அவதரித்த திருத்தலமாகிய மேல்மருவத்தூரும் பக்தர்களுக்குப் புண்ணிய பூமியாக விளங்குகிறது.

அருள்திரு பங்காரு அடிகளார் என்று யாரும் அவரைக் கூறுவதில்லை; அடிகளார் என்றே அழைக்கின்றனர்; அதைவிட 'அம்மா' என்றே அவரைப் போற்றி வணங்குகின்றனர்.

அகிலாண்ட நாயகியாகிய அன்னை ஆதிபராசக்தியே, அனைவர்க்கும் 'அம்மா' ஆவாள். 'அம்மா'வின் திரு அவதாரமே, அடிகளார். அடிகளாரே, அம்மா! அம்மாவே அடிகளார்!! அம்மாவே அடிகளார் திருவுருவில் இங்கே நமக்குக் காட்சியளிக்கிறார்; வலம் வருகிறாள்; அனைவருடைய துன்பங்ளையும் போக்குகிறாள்!

அதெப்படி, ஓர் ஆண் உருவில் பராசக்தி நடமாட முடியும்?- படித்தவர்களும் படிக்காதவர்களும் அறியாமையால் கேட்கும் கேள்வி, இது!

ஆற்றில் தண்ணீர் ஓடுவதும், அதே தண்ணீர் குளத்திலும் கிணற்றிலும் தேங்கி நிற்பதும் எதனால்? பாடுகின்ற பறவைகளையும் காட்டில் திரிகின்ற விலங்கு



தாமரைக்கண்ணன்

களையும் வசிக்க வைப்பது எது? மேல் நோக்கிய மரங்களைத் தழைக்க வைப்பதும், வான் நோக்கிய மலைகளை நிலைக்க வைப்பதும் யார்? பூவிற்குள் மணமும் புன்மைமிக்க மனிதர்களுக்கு மனமும் வந்தது எப்படி? பல்லாயிரக் கணக்கான கோள்கள் (கிரகங்கள்) பேரண்டவெளியில் சுற்றிக் கொண்டிருந்தும் ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளாதது ஏன்?

எல்லாவற்றிற்கும் காரணம், இயற்கையே என்பர். இயற்கையே சக்தி அல்லவா? சக்திக்குத் தோன்றாத் துணையாக இருப்பது ஆதிபராசக்தி! நல்லார்க்கும் பொல்லார்க்கும் மழை சமமாகப் பொழிவதற்கும்... பூமி சமமாக விளைவதற்கும்... காற்று சமமாக வீசுவதற்கும்... இயற்கைச் சக்தியாகிய அன்னை ஆதிபரா சக்தியே காரணமாகும். நம் அடிகளாரும் இன்னார் இனியர் என்று பிரித்துப் பார்க்காமல் அனைவரையும் அரவணைத்து அன்பு மழையும் ஆசி மழையும் பொழிவதால் அவரை 'அம்மா' என்கிறோம்; அன்னை ஆதிபராசக்தியாக வணங்குகிறோம்!

அது சரி...! அம்மா.. எப்படி அடிகளார் உருவில் வந்து அருள் பாலிக்கிறாள்? இப்படிச் சிந்தித்தால் எளிதில் விளங்கும்!

நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி (மண்) ஆகிய ஐந்து பூதங்களால் ஆனது, இவ்வுலகம் நீர் (இரத்தம்), நெருப்பு (வெப்பம்), காற்று (மூச்சு), ஆகாயம் (மனம்), பூமி (உடல்) ஆகிய பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உருவானவனே, மனிதன்! எனவே, உலகமும் மனிதனும் ஒன்றே! விஞ்ஞானிகளாலும் புரிந்து கொள்ள முடியாத எண்ணிலடங்காத அற்புதங்களும் அதிசயங்களும் உலகில் இருப்பது போலவே, மனித உடலின் உச்சி முதல் உள்ளங்கால் வரை (மூளையில்மட்டும்அல்ல) மருத்துவ மாமேதைகளாலும் கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு இரகசியங்கள் புதைந்துகிடக்கின்றன. எந்த சக்தியால் உலகம் இயங்குகிறதோ அதே சக்தி, சிந்தனை, எதிர்கால நோக்கு, பாதுகாப்புத்தன்மை, ஆன்மிக உணர்வு அனைத்தையும் அளித்து மனிதனையும் இயக்குகிறது.

சாதாரண ஒவ்வொரு மனிதருள்ளும் உலகத்துள்ளும் சக்தி இருக்கிறது – இருந்து இயக்குகிறது. கோடிக்கணக்கான அண்டங்களையும் பல்லாயிரக் கணக்கான பேரண்டங்களையும் சீராக இழுத்துப் பிடித்துச் சுற்றச் செய்து அண்ட சராசரங்களையும் இயக்கும் ஆதி பராசக்தி (உயிர் உள்ளவற்றும் இல்லாத வற்றும்) எங்கெங்கும் நீக்கமற நிறைந்துள்ளாள். அவருக்கு உயர்திணை, அஃறிணை என்னும் திணை வேற்றுமையில்லை. கறுப்பு, வெள்ளை போன்ற நிற வேற்றுமை இல்லை. உயர்வு, தாழ்வு என்னும் பேத உணர்வு இல்லை. மணம், மணமின்மை என்னும் நுகர்வு வேற்றுமை இல்லை! அது போலவே, ஆண், பெண் என்னும் பால் வேற்றுமையும் இல்லை.

அதனால்தான் ஆத்மாக்களுள் பரமாத்மாவாக விளங்கும் அருள்திரு அடிகளார் திருவுருவில் கலந்து அன்னை ஆதிபராசக்தி இவ்வுலக மக்களுக்கு நல் வாழ்வை அருளி வருகிறாள். இதனை நன்கு புரிந்து கொண்டவர்களே, அடிகளாரை 'அம்மா' என்று போற்றுகின்றனர்.

ஒவ்வொரு மனிதரும் ஓர் உலகம் (அண்டம்) என்றால், 'அடிகளார் திருவுரு' அண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னுள் கொண்ட 'பேரண்டம்' ஆகும். பேரண்டத்தை இயக்கும் மகாசக்தியாக அவர் விளங்குவதால், (வைணவத்தின் அடிப்படையான சரணாகதித் தத்துவத்தைப் போலவே) அனைவரும் அவருடைய திருவடிகளில் விழுந்து தங்கள் உடல், உள்ளம், ஆத்மா ஆகியவற்றை அவரிடம் ஒப்படைத்து விட்டு, மன அமைதியோடு வாழ்கிறார்கள்.

அஷ்ட மாசித்துகளும் அடிகளாருக்குக் கை வந்த கலை. மொத்த சித்துகளுமே எட்டுதான்! அவற்றுள் எட்டாவது சித்து, இயற்கையைத் தன் வயப்படுத்துதல்! இதுவரை ஆயிரக்கணக்கான சித்துகளைச் செய்து காட்டி, பக்தர்களைப் பரவசப்படுத்தியுள்ளார். அவர் குளிர் நடுக்கிய ஊட்டியில் வெயில் காயச் செய்ததையும், வெப்பம் கொளுத்திய மதுரையில் வெறும் கால்களுடன் ஊர்வலமாக வந்த தொண்டர்கள் துன்பப்படக்கூடாதே என்று சூரியனை மேகங்களால் மறைத்து நிழல் தந்ததையும் யாராலும் மறக்கவே முடியாது.

சித்து மூலம் உயிருள்ள ஜீவனை வரவழைக்க முடியாது என்பது பொதுவான கருத்து. ஆனால், எத்தனை முறை, தம் வெறுங்கையில் உயிருள்ள வண்டுகளையும் வேறு உயிர்களையும், வரவழைத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துப் பிரமிக்கும் வகையில் பறக்க விட்டிருக்கிறார். இன்னும் எத்தனை எத்தனையோ எண்ணிலடங்கா சித்துகள்!

அடிகளாரின் அருள்வாக்கு எப்போதும் எந்நாளிலும் நூற்றுக்கு நூறு நடைபெறும் சக்தியைக் கொண்டது.

இருபது ஆண்டுகளுக்கு முன், அருள்வாக்கில் "இந்த இடத்தை இன்னொரு திருப்பதியாக்கிக் காட்டுவேன்!" என்றாள், அம்மா! அது நடக்கும் என்று அப்போது அங்கு இருந்தவர்கள் கற்பனை கூட செய்து பார்த்திருக்க முடியாது. அறியாமை நிறைந்த நமக்கு எதுவும் அநுபவப்பட்டால்தான் புரிகிறது. ஆனால், இன்று நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் சாரி சாரியாக வந்து வணங்கும் திருப்பதியாக அல்லவா இக்கோயில் திகழ்கிறது? அடிகளாரின் அருள் வாக்குச் சக்தியே சக்தி!

அடிகளாரின் ஆன்மிக சக்தியையும் ஆன்மிகப் புரட்சியையும் அருட் சக்தியையும் அருள் வாக்குச் சக்தியையும் சித்துகளையும் பொதுநலத்தொண்டுகளையும் எழுத நமக்குப் பெரு ஞானமும், பேரறிவும் வேண்டும். விளக்கமாக எழுதினால் பல்லாயிரம் பல்லாயிரம் பக்கங்கள் எழுத வேண்டும். நம்மால் முடியுமா, எல்லையற்ற அந்தச் சக்தியின் பெருமைகளை விளக்க? என்றாலும், குறிப்பான ஒன்றிரண்டைக் கட்டாயம் தெரிந்து கொள்ள வேண்டும்.

'பறவைகள், விலங்குகள், உலக மாந்தர் எல்லாருடைய உடலிலும் ஓடும் இரத்தம் சிவப்பு நிறமே. எனவே, உயிரினம் ஒன்றே என்று உலகம் முழுதும் உணர்த்த ஆண், பெண் தொண்டர்களைச் செவ்வாடை அணியச் செய்து ஒற்றுமைப்படுத்தினார்; அனைவரையும் சக்திகளாக்கினார்.

சாதி, இன, மொழி, மத வேறுபாடு இன்றி அனைவரும் கருவறைக்குச் சென்று அம்மாவுக்கு அபிடேக ஆராதனைகள் செய்ய வைத்தார். மகளிரே கருவறைப் பூசைகளைச் செய்யும் மாபெரும் புரட்சியை முதன் முதலாகத் தொடங்கினார். மழைக்காக செய்யப்பெற்ற வேள்விப்பூசைகளும் உலக அமைதிக்காக செய்யப் பெற்ற இலட்சக்கணக்கான செவ்வாடைத் தொண்டர்களின் ஆன்மிக ஊர்வலங்களும் உலகம் அறிந்தவை.

தமிழ்ப் புத்தாண்டு விழா, ஆங்கிலப் புத்தாண்டு விழா, ஆன்மிகக் குருவாகிய அடிகளார் பிறந்தநாளின் பெருமங்கல விழா, சித்திரைப் பௌர்ணமி, தைப்பூசம், ஆடிப்பூரம், நவராத்திரி முதலான விழாக்கள் கலச

பூசை, விளக்கு வேள்விப்பூசைகளுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஒவ்வொரு வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, அமாவாசை, கிருத்திகை நாள்களிலும் சிறப்பு அபிடேகம்; மார்கழி முழுதும் 'சக்தி திருப்பாவை' ஓதல்.

இப்பீடத்தின் ஒவ்வொரு விழாவின் போதும் அனைவருக்கும் அன்னதானம், ஆடைக் கொடை, விதவைகள், உடல் ஊனமுற்றோர், ஏழைகளுக்கு உற்ற உதவிகள், உழவுமாடுகள், கறவை மாடுகள் அளிக்கப்படுகின்றன. அடிகளாரே முன்னின்று பீடத்தின் செலவில் ஏழைகளுக்கு இலவசத் திருமணங்களை நடத்தி வைக்கிறார்.

ஆடிப்பூரம், தைப்பூச விழாக்களின்போது தொண்டர்கள் விரதம் இருந்து சக்திமாலை அணிந்து இருமுடி தரித்து நூற்றுக்கணக்கான கி.மீ. தூரம் நடந்தே வந்து காணிக்கை செலுத்துகின்றனர். உடல் உருள்வலம் செய்கின்றனர்.

இலவச மருத்துவமனை, இலவச மருத்துவ சிகிச்சை முகாம்கள் மூலம் பயன்அடைந்துவரும் நோயாளிகள் பல்லாயிரக்கணக்கானோர் ஆவார்.

ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலைய சார்பில் நடைபெற்றுவரும் ஆதிபராசக்தி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, பாலிடெக்னிக், பொறியியற் கல்லூரி, கலவைக் கல்லூரி ஆகியவை பெரும்புகழை ஈட்டி வருகின்றன. 2000 படுக்கை வசதிகளைக் கொண்ட ஆதிபராசக்தி மருத்துவ மற்றும் ஆராய்ச்சி மையமும், சுமார்300 ஏக்கர் பரப்பளவில் ஈசூரில் வேளாண்மை ஆராய்ச்சி மையமும் வடிவமைக்கப்பட்டு வருகின்றன.

ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றங்கள் தமிழகத்தில் 1779, கர்நாடகம், ஆந்திரம், டெல்லி, ஆக்ரா, அஸ்ஸாம் முதலான ஒன்பது மாநிலங்களில் 101 அந்தமான், கொழும்பு, மலேசியா, தென்னாப்பிரிக்கா, மலேசியா, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் 10, இளைஞர் அணி மன்றங்கள் 679 ஆகியன ஆன்மிகப் பணிகளும் அறப்பணிகளும் புரிந்து இயங்கி வருகின்றன. எல்லாவற்றையும் எழுத ஏடுகள் போதா!

அடிகளாரின் துணைவியார் சக்தி திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார் அவர்கள் சித்தர் பீடத்தின் கல்வித்தொண்டுகளுக்கும் மகளிர் மன்றங்களுக்கும் வேள்விப்பூசைகளுக்கும், ஏனையவற்றுக்கும் வழிகாட்டுதலாக இருந்து வெற்றிகரமாக நடத்தி வருகிறார்கள்.

அடிகளாரின் மூத்த திருக்குமாரர் சக்தி அன்பழகன் ஆதிபராசக்தி கல்வி, மருத்துவ,பண்பாட்டு அறநிலைய நிர்வாக இயக்குநராகத் திறமையுடன் செயலாற்றி வருகிறார். இளைய திருக்குமாரர்சக்திசெந்தில்குமார் சித்தர் பீடத்தின் அனைத்துச் செயல்களுக்கும் உறுதுணையாக உள்ளார்.

சித்தர் பீடத்துக்கும், கல்வி, மருத்துவ, பண்பாட்டு அறநிலைக்கும் வித்திட்டு வளர்த்து வரும் மூலகர்த்தா, ஆன்மிகக் குரு அடிகளாரை உலகெங்கும் உள்ள ஏழை எளிய மக்களும் அரசியல் தலைவர்களும், அரசு அதிகாரிகளும்,நீதிபதிகளும் வணங்கி வழிபட்டு நல்வாழ்வு பெற்று வருகின்றனர்.

வாருங்கள், மேல்மருவத்தூர் செல்வோம்! 'அம்மா' அடிகளாரை வணங்கி அவர்தம் அருளாசி பெறுவோம்!

அடிகளாரின் திருவடிகளே சரணம்!

ஓம், சக்தி!



பாலமாகும் கோலங்கள்

இராம. வேம்பு

தூரிகைகள் தொடுவதனால்
துலங்கவரு ஓவியமும்
பாரிலுயர் கலையென்னும்
பகருமொரு அழகுக் கோலம்

இளமை இணைந்ததனால்
இன்பமென மலர்ந்துவிட்ட
வளமான குழவியென
வழங்கிவரு மழலைக் கோலம்

பால்போலே புள்ளிவைத்து
பாங்காகக் கோடி முத்து
பாவையர்கள் போடுவதோ
பயனுள்ள மாக்கோலம்.

செங்கதிரோன் தன் கதிரால்
செக்கரிடும் செவ்வானம்
தங்கநிகர் ஒளிச்சிதறல்
தருவதுமோர் எழிற்கோலம்

உலவிவரு நில வுடனே
ஓங்கியதோர் வான் வெளியில்
குலவிவரு தாரகைகள்
கொடுப்பதுவும் தனிக் கோலம்

கோலமிட்டுக் கும்பிட்டால்
கூடிவரும் மங்கலமாம்
மாலவனின் மனையாளும்
மகிழ்ந்துடனே குடி வருவாள்

கோலமிட்டு வாழ்ந்திடுவோம்
குவலயத்தே எந்நாளும்.
பாலமாகும் அக்கோலம்
பண்பாட்டு மறையினுக்கே!



மனிதநேயம் வரவில்லை!

கவிஞர் நெய்தற்கிழான்

உள்ளம் சுருங்குது உண்மை ஒதுங்குது
உணர்வு வரவில்லை - மான
உறைப்பு வரவில்லை.

கள்ளம் பெருகுது காசு புழங்குது
கனிவு வரவில்லை - அங்கே
பணிவு வரவில்லை.

வாது பெருகுது வம்பு வளருது
வாய்மை வரவில்லை - உள்ள
தூய்மை வரவில்லை.

சூது கவ்வுது சுற்றம் நசுங்குது
சொந்தம் வரவில்லை - இனிய
பந்தம் வரவில்லை.

மோசம் பிறக்குது மூர்க்கம் பெருகுது
முகமன் வரவில்லை - விரிந்த
அகமும் வரவில்லை.

நாசம் பெருகுது பேதம் வளருது
ஞாயம் வரவில்லை - மனித
நேயம் வரவில்லை.

சிலைகளின் சிறப்பு!

பாவலர் சாரதிதாசன்

பெரியவர்கள் சிலைகளிலே
பெருமை மிக்க கலைகளிலே
அரிய உண்மை இருக்குதடா
அறிந்து நட மானிடனே!


கால்சிலம்பைக் கையேந்திக்
கனல் பறக்கக் கொதித்து நிற்கும்
வேல் விழியாள் கண்ணகியின்
வீரம் நல்ல பாடமடா!


தேன் கொடுக்கு மீசையொடு
தெளிவுடனே கைஉயர்த்தித்
தோள் உயர்த்தும் பாரதியின்
தோற்றம் வீர ஓடமடா!


வெண்புறாப் பறக்கவிட்டு
வேற்றுமையை நீக்கவந்த
கண்ணான நேருமகான்
கலைமிளிரும் காட்சியடா!


சிலையிலுள்ள நல்லோரைச்
சிந்தித்துப் பார்த்திருந்தால்
அலைபாயும் மனிதர்மனம்
அமைதி கண்டு மகிழுமடா!












அமுதசுரபி தீபாவளி மலர்'94 45- ஆவது ஸ்ரீமத் அழகிய சிங்கர் வண்ணப்படம் : யோகா


LOGA
NATHAN

'நீயே உன் குரு' என்றவரின் நூற்றாண்டு

கே. அசோகன்



சென்னை அடையாறு அருகே கிரீன்வேஸ் சாலையில் சற்றே ஒதுக்குப்புறமாக அமைந்துள்ள, மரங்கள் சூழ்ந்த, பசும்புல்வெளியைப் பார்த்து நிற்கும் கம்பீரமான கட்டடம் 'வசந்த விஹார்', இந்தியாவில் கிருஷ்ணமூர்த்தி நிறுவனத்தின் தலைமையகம்; உலகப் புகழ்பெற்ற இந்தியச் சிந்தனையாளர்களின் வரிசையில் தனியிடம் வகித்திருந்த கிருஷ்ணமூர்த்தி வாழ்ந்த இல்லம்; எட்டாண்டுகள் முன்புவரை ஒவ்வோர் ஆங்கில வருடத் தொடக்கத்திலும், மோனச் சூழ்நிலையில் அம்மாமனிதரின் சொற்கோவையைக் கேட்பதற்கு, வயது, பால், இனம் போன்ற எந்த வேறுபாடுமின்றிப் பலர் வந்து துய்த்த இடம்; அவர் பிறந்து நூறாண்டுகள், வரும் 1995இல் நிறைவு பெறுவதை முன்னிட்டு, ஆக்கபூர்வமான அலுவல்களுக்குரிய அடிப்படை அங்கே இப்போது போடப்பட்டு வருகிறது.

ஆந்திர மாநிலத்தில் சிறிய நகரான மதனபள்ளியில், தெலுங்கு பிராமணக் குடும்பம் ஒன்றில் அரசாங்க அதிகாரியான நாரணையாவிற்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார், கிருஷ்ணமூர்த்தி. குழந்தைப் பருவத்திலேயே, அவருடைய வித்தியாசமான இயல்பு வெளிப்பட்டது. அவ்வயதிலேயே, தனித்திருத்தல், மௌனம், சுற்றியுள்ள உலகத்தைக் கூர்ந்து கவனிப்பது போன்ற அசாதாரணமான ஆற்றல்கள் அவரிடம் குடிகொண்டிருந்தன. வான்மேக வரைவுகளையும், செடி, கொடிகளையும், எறும்புகளின் இயக்கத்தையும் மணிக்கணக்காக சிறுவன் கிருஷ்ணமூர்த்தி ஊன்றிப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்திருக்கிறார், தந்தை நாரணையா.

சிறு வயதிலேயே, தாயை இழந்தார் கிருஷ்ணமூர்த்தி. பிரும்மஞான சங்கத்தின் (தியசாபிகல் சொஸைட்டி) கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்த அவரது தந்தையார் தம் அலுவலிலிருந்து ஓய்வு பெற்றபிறகு, சென்னை அடையாறில் அச்சங்கத்தின் தலைமை இடத்தில் ஒரு பணியை ஏற்று, அவ்வளாகத்திலேயே குடும்பத்துடன் வசிக்கலானார்.

அச் சங்கத்தின் ஒரு முக்கிய பிரமுகரான லெட்பீட்டர் என்பவர், கடற்கரையில் விளையாடிக் கொண்டிருக்கும் சிறுவன் கிருஷ்ணமூர்த்தியை அடிக்கடி கவனித்துப் பார்க்க நேரிட்டது. அவரது உள்ளுணர்வில் கிருஷ்ணமூர்த்தி, எதிர்காலத்தில் உலகிற்கே குருவாக விளங்கக் கூடியவர் எனத் தோன்றியது. அவரது பரிந்துரைப்படி, பதினான்கு வயதான கிருஷ்ணமூர்த்தியையும், அவருடைய தம்பி நித்யானந்தாவையும் வளர்க்கும் பொறுப்பை, சங்கத் தலைவி அன்னி பெஸன்ட் ஏற்றுக் கொண்டார். இருசகோதரர்களும், மேற்கல்வி பெறவும், மேலைக் கலாசாரம் பயிலவும் லண்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். கிருஷ்ணமூர்த்தி கல்வியில் ஆர்வம் காட்டவில்லை; நித்யா மட்டும் பட்டம் பெற்றார்.

உலகின் ஆசானாக, புதிதாக ஒருவர் உருவாக இருக்கிறார் என்ற கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்த பிரும்மஞான சங்கத்தின் தலைமைக்கு, அந்த இடத்தை நிரப்பப் போகிறவர் கிருஷ்ணமூர்த்தியே என்று உறுதி ஏற்பட்டுவிட்டது; கிருஷ்ணமூர்த்தியைத் தலைவராகக் கொண்ட 'ஆர்ட் ஆஃப் தி ஸ்டார் இன் தி ஈஸ்ட்' எனும் அமைப்பு, அன்னிபெஸன்ட் அம்மையாரால் தோற்றுவிக்கப்பட்டது. உலகநாடுகள் பலவற்றிலும் அதற்கு உறுப்பினர்கள் சேர்ந்தனர். டச்சு நாட்டைச் சேர்ந்த பிலிப் வான் பல்லாண்ட் என்ற செல்வர், 5000 ஏக்கர் நிலப் பகுதி கொண்ட தன் கோட்டை மாளிகையைக் கிருஷ்ணமூர்த்திக்கு அளித்துவிட்டார். கிருஷ்ணமூர்த்தி அதனைத் தன் சொத்தாக ஏற்காமல், அதனை நிர்வகிக்க டிரஸ்ட் ஒன்றை நிறுவினார்.

கிருஷ்ணமூர்த்தியின் தம்பியைக் காசநோய் தாக்கிய போது, சகோதரர்கள் இருவரும், ஆரோக்கியமான சூழலில் வசிக்கும் பொருட்டு, அமெரிக்காவில் கலிபோர்னியாவைச் சேர்ந்த ஓசாய் என்ற இடத்தில் தங்கினர். அங்கே அவருக்கு சில விநோத ஆன்ம அனுபவங்கள் ஏற்பட்டன; அதன் பிறகு அவரிடம் மாறுதல் தெரியத் தொடங்கியது. 1925இல் தம்பி மரணம் அடைந்த போது, பெரும் துயரில் மூழ்கினார் கிருஷ்ணமூர்த்தி. அத்துயரினின்றும் விடுபட்டபோது, அவர் முற்றிலும் மாறிப் போயிருந்தார்.

1928இல், டச்சு நாட்டுக் கோட்டை வளாகத்தில் நடைபெற்ற முகாமில் உரையாற்றுகையில், "உண்மை, பாதையிடப்படாத பூமி போன்றது. எந்த ஸ்தாபனமும், எந்த நம்பிக்கையும் அதனை அடைவதற்குரிய வழியா

காது. எனவே எனக்கு சீடர்கள் என்று எவரும் இல்லை. நீங்களே உங்களிடம் பொதிந்திருக்கும் உண்மையைக் கண்டு கொள்ள முனையுங்கள்" என்று அறிவித்தார்.

அடுத்த ஆண்டிலேயே, ஆர்டர் ஆஃப் தி ஸ்டார் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த அனைத்துச் சொத்துகளையும், உரியவர்கட்கே திருப்பித் தந்து விட்டார்.

1933இல் அன்னிபெஸன்ட் மறைவுக்குப் பின், பிரும்ம ஞான சங்கத்துடனான அவருடைய தொடர்புகள் அனைத்தும் விலகின; சங்கத்தின் சாம்ராஜ்ய அமைப்புகள், அதன் கொள்கைகள் அனைத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார்; சிறு நண்பர் குழாத்துடன் வெளியேறினார்.

இரண்டாம் உலகப் போரின்போது ஓஜாயில் தனித்து விடப்பட்டார்கிருஷ்ணமூர்த்தி; ரோஜாச் செடிகளைப் பயிரிடுவது, பசுக்களைப் பராமரிப்பது போன்ற புறச்செயல்களில் ஈடுபட்டிருந்தபோது, அக மலர்ச்சி பெற்றார். உள்ளும் புறமும் ஒன்றாகக் கண்டார். உலகிற்கு அறிவுறுத்தும் ஆழமான சிந்தனைகள் கிளர்ந்தன; ஆணித்தரமான அறைகூவல்கள் பிறந்தன.

அதுபோது, அருகில் வசித்து வந்த அல்டஸ் ஹக்ஸ்லி என்ற மேதையுடன் கருத்துப்பரிமாற்றங்களை நிகழ்த்தினார். பின்னாளில், அல்டஸ்ஹக்ஸ்லி மறைவதற்குமுன் (1961இல்) ஸ்விட்சர்லாந்தில் கிருஷ்ணமூர்த்தியின் உரையைக் கேட்க நேர்ந்தது, அந்த அனுபவத்தைத் தம் நண்பருக்கு எழுதியபோது, "புத்தரின் பேருரையைக் கேட்பது போலிருந்தது" என்று அவர் குறிப்பிட்டார்.

"மனிதனுடைய தளைகளினின்றும் அவனை முழுமையாக விடுபடச் செய்வதே என் குறிக்கோள்" என்று முழங்கிய கிருஷ்ணமூர்த்தி, அதற்கென உலகமுழுவதும் பொது உரைகள், குழு உரையாடல்கள், தனிநபர் சந்திப்புகள் மூலம் செயல்பட்டார்.

அவரது மேன்மையாலும், கனிவாலும் கவரப்பட்டு, பலதரப்பட்ட மனிதர்களும் அவரை நாடினார்கள்; தத்தமது அவலங்களுக்கு மாற்று தேடினார்கள். எல்லாருக்கும் அவர் காட்டிய வழி ஒன்றுதான்; அது, ஒவ்வொருவரும் தன்னைத் தானே புரிந்துகொள்ள வேண்டும் என்பதே. "நான் உங்களைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக மட்டுமே செயல்படுகிறேன். நீங்கள் உங்களைக் கண்டுகொண்ட பிறகு, கண்ணாடி எதற்கு? யாரும் எவருக்கும் ஆசானாக முடியாது. அவரவரும் தம்மை அறிவதில்தான் வாழ்வின் சிக்கல் அவிழும்" என்றார் கிருஷ்ணமூர்த்தி.

மனித குலத்தின் பிரச்னைகள் குறித்து மதத்தலைவர்கள், விஞ்ஞானிகள், தொழில் நுட்பநிபுணர்கள், உளவியலார், அரசியல்வாதிகள், மாணவர்கள் போன்ற பலருடன் விவாதித்தார், அவர். ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இலங்கை என்று பல திசைகளிலும் அவரது குரல் ஒலித்தது.

எதிர்காலத்தை ஏற்றமுடையதாகச் செய்யும் நோக்கில், அவர் குழந்தைகளுக்கான கல்வியில் உண்மையின் தேடலை வலியுறுத்த விழைந்தார். அதன் விளைவாக, உலகெங்கும் அவருடைய சிந்தனை வழி செயலாக்க, பல கல்வி நிலையங்கள் அமைந்தன.

இந்தியாவில் சென்னை, பெங்களூர், ரிஷிவாலி (ஆந்திரம்), வாரணாசி, உத்தரகாசி போன்ற இடங்களில் பள்ளிகளும், வாரணாசியில் மகளிர் கல்லூரியும், பம்பாயில் குழந்தைகள் நல நிலையமும், கிருஷ்ணமூர்த்தி நிறுவனத்தின் சார்பாக இயங்கி வருகின்றன. புனேயில் ஒரு பள்ளி திறக்கப்பட இருக்கிறது.

இத்தகைய இடங்களில், பள்ளிக் கூடங்கள் மட்டுமின்றி, பக்கத்து கிராமவாசிகளுக்கான இலவச மருத்துவமனைகளும், பண்ணைகள், சுற்றுச் சூழல் பராமரிப்பு திட்டங்கள் போன்றவையும் செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணமூர்த்தி நிறுவனத்தை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அமைப்பாக அங்கீகரித்து, மத்திய அரசு, அதற்குச் செலுத்தப்படும் நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு அளித்துள்ளது; மதனபள்ளியில் அவர் பிறந்த வீட்டை, தேசிய நினைவிடமாகப் போற்றிப் பாதுகாக்கிறது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஸ்பெயின் ஆகிய நாடுகளிலும் கிருஷ்ணமூர்த்தி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

வருடா வருடம் வழக்கமாக பிப்ரவரி மாதத்தில் பம்பாயில் முகாமிடும் கிருஷ்ணமூர்த்தியின் உரைக் கோவை 1986ஆம் ஆண்டில் இடம் பெறவில்லை. மார்ச் மாதம் 'பம்பாய்' என்ற வார இதழில் 'கடைசி உலா' எனும் ஒரு கட்டுரை வெளியாகியது. அதன் ஆசிரியர் அசித் சந்த்மல், கிருஷ்ணமூர்த்தியுடன் நெருக்கம் உடையவர். அந்த ஆண்டு ஜனவரி மாதம் கிருஷ்ணமூர்த்தி சென்னையில் திடீரென உடல்நலிவுற்ற போது அவருடன் தங்கியிருந்த அனுபவத்தையும், அவர் கலிபோர்னியாவிற்கு விரைந்து சென்றபிறகு பிப்ரவரி மாதம் அவருடைய கடைசி நாள்களில் நிகழ்ந்த சந்திப்புகளையும் அதில் விவரித்திருந்தார்.

ஆண்டுதோறும். மூன்று, நான்கு மாத காலம் இந்தியாவில் தங்கும் கிருஷ்ணமூர்த்தி, சென்னையில் தங்குகையில் தினமும் மாலை வேளையில் கடற்கரைக்கு உலாவச் செல்வது வழக்கமாம். அந்த ஆண்டு ஜனவரி மாதத்தில், அமைதியான சூழலில் உரை நிகழ்த்திய பிறகு, அசித் சந்த்மலிடம் "எனக்கு இன்று ஏதோ நேர்ந்தது. என்னுள் எதுவோ புகுந்தாற் போன்ற உணர்வு; அநேகமாக இதுவே என் கடைசி உரையாக இருக்கலாம்" என்றாராம், கிருஷ்ணமூர்த்தி. அதைப் பற்றி அசித்சந்த்மல் விவரிக்கிறார்:

"வசந்த விஹாரிலிருந்து பிரும்மஞானசங்க வளாகத்திற்கு அவர் காரில் செல்கிறார். சங்கத் தலைவி ராதா பர்னியரின் வீட்டிற்கு அருகே இறங்கி, கடற்கரை மணலில் நடக்கிறார். எழுபத்தைந்தாண்டுகளுக்கு முன், வருங்கால ஆசானாக அவர் கண்டறியப்பட்ட அதே இடம். அடையாறு வங்கக்கடலுடன் சங்கமிக்கும் இடம் வரை மௌனமாய் நடந்து செல்கிறார்; கடலையும், வானத்தையும் நின்று நிதானமாய்ப் பார்த்த பிறகு, ஒவ்வொரு திசையிலும் திரும்புகிறார். அவரே அலை கடலாக, விரிந்து பரந்த விண்ணாக, அகன்ற அமைதியாக மாறிவிட்டது போன்ற தோற்றம். பிறரை நடக்கவிட்டுப் பின்னடைகிறார். ராதா பர்னியர் வீட்டைத்திரும்ப அடைந்ததும் மற்றவர்கள் உள்ளே நுழைந்தபிறகும், வெளியே தனிமை கொள்கிறார். நாற்புறமும் மீண்டும் ஒரு முறை திரும்பி நிற்கிறார். மணல்வெளியை, மாக்கடலை, மேல் வானத்தை நோக்குகிறார். விடைபெற்றுக் கொண்டார் போலும்!"

1986 ஜனவரி 22ஆம் தேதி, சாந்தோ பார்லோ நினைவு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட கிருஷ்ணமூர்த்தியின் உடலைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள், கணையத்தில் தொடங்கி ஈரல் வரை புற்றுநோய் பரவிவிட்டதாகத் தெரிவித்தனர். குணமாவதற்கான வாய்ப்பு இல்லையென்று கூறி, மருத்துவ

கவிஞர். பிரபாகர பாபு

வரவின் பின்னே!

☆ எதையேனும் வரவு வைத்தாயா?
வேறொன்றை இழந்திருக்க வேண்டுமே!

☆ ஊதியம் பெற்றாயா?
உழைப்பைத் தந்திருக்க வேண்டுமே!

☆ புகழ்ப் பெற்றாயா?
உன் காலத்தைக் கரைத்திருக்க வேண்டுமே!

☆ சினந்தாயா?
நிம்மதி இழந்திருக்க வேண்டுமே!

☆ குணமடைந்தாயா?
நோவை வென்றிருக்க வேண்டுமே!

☆ காதல் கிடைத்ததா?
இதயம் இழந்திருக்க வேண்டுமே!

☆ இலஞ்சம் பெற்றாயா?
தன்மானம் இழந்திருக்க வேண்டுமே!

☆ அட ஆமாம்!
வர்த்தகத்துக்கு மட்டுமல்ல
வாழ்க்கைக்குமே "இருவழிக் கணக்கு!"

மனையிலிருந்து அனுப்பிவைத்தனர். விவரம் அறிந்த அசித்சந்த்மல், புதுதில்லியில் உள்ள தன் அத்தை புப்புல் ஜெயகர், (இந்தியாவில் கிருஷ்ணமூர்த்தி நிறுவனத்தின் துணைத்தலைவர்) மருமகள் ராதிகா (ரிஷிவாலி பள்ளிக்கூட இயக்குநர்) ஆகியோருடன் அமெரிக்காவிற்குப் புறப்பட்டார்.

கிருஷ்ணமூர்த்தி, அமெரிக்காவிற்குச் செல்லும் முன்பே, இவரிடம் தன் முடிவு பற்றி வெளிப்படையாகப் பேசினாராம்.

பிப்ரவரி முதல்நாள், கிருஷ்ணமூர்த்தி தங்கியிருந்த பைன் காட்டேஜில் அவரைப் பார்த்த அசித் சந்த்மலுக்கு, மூன்று வாரங்களுக்கு முன் அடையாறு கடற்கரையில் நடந்தவரா இவர் என்று அடையாளம் காணமுடியாமல் அவர் ஆகியிருந்தாராம். மறுதினம் சற்றே உடல்நலம் மேம்பட்ட நிலையில் இவரிடம் பேசினாராம். "எதில் நீங்கள் கருத்தூன்றியிருக்கிறீர்கள்?" என்று அசித்சந்மலிடம் அவர் கேட்டதற்கு, சற்றுதயங்கிப் பிறகு "உங் களைப் பற்றித் தான்" என்று பதிலளித்தார். உடனே "நான் போயாகிவிட்டது" என்றாராம், கிருஷ்ணமூர்த்தி.

ஒரு நாள் அவருக்கு உண்மையின் தரிசனத்தைத் தந்த மிளகு மரத்தடியில் அமைதியாக அமர்ந்தார். இன்னும் தள்ளி, தொலைவில் இருந்த குன்றுகளைப் பார்க்க வசதியாக அழைத்துச் செல்லுமாறு கேட்டார். அங்கு சென்று, சுற்றிலும் இருந்த ஆரஞ்சுத் தோப்புகளில் இருந்து வீசிய நறுமணத்தை அனுபவித்தபடி அமர்ந்தவர், விண்ணையும், மலைகளையும் நோக்கி மெல்லச் சிரம் தாழ்த்தினார்.

பிப்ரவரி 14ஆம் தேதி ஒரு பெரும்புயல் வீசிக் களைத்த மறுதினம்; அசித், கிருஷ்ணமூர்த்தியிடம் பேசும் போது, "நீங்கள் என் வாழ்க்கை முழுவதிலும் துணை புரிந்திருக்கிறீர்கள். என்னால் உங்களுக்கு ஏதேனும் உதவி செய்யக் கூடுமா? அதாவது உடல் ரீதியிலான உதவியைச் சொல்லவில்லை. உங்களுக்கு நாங்கள் எல்லாரும் எத்தகைய கைம்மாறு செய்யக் கூடும்?" என்று கேட்டார். அதற்கு கிருஷ்ணமூர்த்தி கண்களை மூடித்திறந்து, புன்னகையுடன், "என் அறிவுரைகளை எவரும் திரித்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினாராம். பிப்ரவரி 16 ஆம் தேதி, கிருஷ்ணமூர்த்திக்கு வலி அதிகமாயிற்று. அசித் சந்த்மலுக்கு அன்றிரவு உறக்கம் வரவில்லை. விவரிக்க முடியாத அச்சமும், தனிமை உணர்வும் அவரைக் கவிந்தன. பின்னிரவில் சற்றே கண் அயர்ந்தபோது, அவரை எழுப்பி, கிருஷ்ணமூர்த்தி சற்று முன் இயற்கை எய்தினார் என்று தெரிவிக்கப்பட்டது.

கிருஷ்ணமூர்த்தியின் உற்ற தோழராயிருந்த மார்க் லீ என்பவரிடம் அவரது உடல் ஒப்படைக்கப்பட்டது; அதுவும் அவர் முன்பே ஏற்பாடு செய்திருந்ததுதானாம். "நான் எப்போதும் சுத்தமாகவே இருந்திருக்கிறேன். என் உடலைச் சுத்தமான துணியால் போர்த்துங்கள். எனக்கென்று சொந்தநாடு கிடையாது. என் உடலை எவ்விதக் கிரியையும் இன்றி எரித்துவிடுங்கள்" என்று கூறியிருந்தாராம் கிருஷ்ணமூர்த்தி. தன் உடைமைகளைப் பிறருக்குத் தந்துவிடும் பழக்கம் கொண்டிருந்த அவர், அந்தக் கடைசிநாள்களில் தன் துணிமணிகள் எல்லாவற்றையும் தன் சகாக்களுக்குப் பகிர்ந்தளித்து விட்டாராம். வென்சுரா மயானத்தில் மின்சார முறையில் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. அவரது அஸ்திக் கலசத்தை எடுத்துக் கொண்டு இந்தியாவிற்குத் திரும்பிவந்தபோது, புதுதில்லியில் புப்புல்ஜெயகரின் வீட்டு வாசலில் இறங்கியதும் பெருமழை பெய்தது; நனைந்து கொண்டே அஸ்திக்கலசத்தைத் தோட்டத்திற்கு எடுத்துச் சென்று, முன்பு ஒரு முறை கிருஷ்ணாஜி உரை நிகழத்திய ஒரு பெரிய மரத்தடியில் வைத்தனர்; உடனே மழை நின்று, சூரியன் ஒளிவீசினான்.

தாம் மறைவதற்கு முன்பு சில ஆண்டுகளாக, கிருஷ்ணமூர்த்தி தன் விருப்பம் ஒன்றை வெளியிட்டு வந்தார். அதாவது, பள்ளிகள் அமைத்து சிறார்களுக்கு நல்வழி காட்டப்பட்டதுபோல், பெரியவர்களுக்கும் ஏதாவது செய்தாக வேண்டும் என்பது அது. குடும்பச் சூழ்நிலை, அலுவல் நெருக்கடி போன்ற பல காரணங்களினால், வந்து தங்குபவர்கள் அவரது அறிவுரைகளை ஆழ்ந்து பயின்று, தியானம் போன்ற திட்டமிட்ட நடைமுறை எதற்கும் உட்படாமல், சுய கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கேற்ற வசதி ஒன்றைச் செய்ய அவர் விரும்பினார். அதற்கென மையங்கள் நடத்தப்பட வேண்டுமென அவர் விழைந்தார்.

அவ்வாறே அவரது மறைவுக்குப் பிறகு, 'ஸ்டடி' என்ற அமைப்புகள், இந்நிறுவனம் சார்ந்த பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. அன்னாரின் நூற்றாண்டு நிறைவையொட்டி, அவர்தம் அறிவுரைகளில் அக்கறை கொண்ட பலரும் அத்தகைய மையங்கள் தொடங்குவதற்கும் ஊக்குவிக்கவும் இந்நிறுவனம் தயாராக உள்ளது.

அவருடைய நூல்களைக் குறைந்த விலையில் வெளியிடுவது, ஒலி, ஒளி நாடாக்கள் மூலம் பதிவாகியுள்ள அவருடைய உரைகளைப் பரப்புவது போன்ற பல திட்டங்களைச் செயல்படுத்த உள்ளனர்; 1995 ஜனவரியில் தலாய்லாமா தலைமையில் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகள் சென்னையில் தொடங்கப்பட உள்ளன.



அஹோபில மடம் 45 ஆவது ஸ்ரீமத் அழகிய சிங்கர்

விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைச் சிறப்புடன் பரப்பி வருகிற அஹோபில மடம், மகா மேதைகளாக விளங்கிய 44 அழகிய சிங்கர்களால் பரிபாலிக்கப்பட்ட ஒன்றாகும். பாண்டித்யம், ஞானம், வைராக்கியம் ஆகிய அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்று 45 ஆவது பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீநாராயண யதீந்த்ர மஹாதேசிகனால் தற்போது பரிபாலிக்கப்படுவது நமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

இவ்வருடம் 45 ஆவது அழகிய சிங்கர் சாதுர்மாஸ்ய விரதத்தை மதுராந்தகத்தில் அனுஷ்டித்தார்கள். நிலத்தில் ஊர்ந்து வாழ்கின்ற பிராணிகளுக்குக் கூடத் தீங்கு ஏற்படக் கூடாது என்பதற்காக மழை காலத்தில் சந்நியாசிகள் ஒரே இடத்தில் தங்கி சாதுர்மாஸ்ய விரதத்தை அனுஷ்டிப்பது வழக்கம். 'அமுதசுரபி' தீபாவளி மலருக்காகச் சிறப்புப் பேட்டி ஒன்றைத் தந்து அருளவேண்டும் என்று வேண்டிக்கொண்டு மதுராந்தகத்தில் சாதுர்மாஸ்ய காலத்தில் 45 ஆவது அழகிய சிங்கரை அணுகினோம். மனமுவந்து அவர்கள் அருளிய பேட்டிக் கட்டுரை இது.

"அறுநூறு ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பைத் தன்னகத்தே கொண்ட அஹோபில மடம் ஆன்மிக வளர்ச்சிக்கு மட்டுமின்றி தேசிய ஒருமைப்பாட்டுக்கும் சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. ஆந்திர மாநிலத்தில் (அஹோபிலம்) தொடங்கப்பட்ட மடமானாலும் அழகிய சிங்கர்களாகத் தமிழகத்தைச் சேர்ந்தவர்களே இருந்து வந்துள்ளனர்.

ஸ்ரீ சடகோப மஹாதேசிகன் சிறந்த பண்டிதர். இவர் கனவில் லட்சுமி நரசிம்மன் தோன்றி, "அஹோபிலத்துக்கு வாருங்கள். உமக்கு துரீயாச்ரமம் தருகிறோம்" என்றார். நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, அஹோபிலத்தில் எழுந்தருளியிருக்கும் லட்சுமி நரசிம்மனை மங்களாசாசனம் செய்தார். லட்சுமி நரசிம்மனே ஒரு சந்நியாசி ரூபத்தில் தோன்றி அவருக்கு சந்நியாச ஆச்ரமம் ஸ்வீகரிக்கும் வகையில் ப்ரேஷ மந்திரத்தை உபதேசித்து மேலும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இராமானுஜரின் சந்நிதியிலிருந்த காஷாயத்தையும், த்ரிதண்டத்தையும் அவருக்கு அருளினார். ஸ்ரீசடகோப ஜீயர் என்ற திருநாமத்தையும் அவருக்குப் பெருமான் சூட்டினார்.

"லட்சுமி நரசிம்மரை ஆராதித்துக் கொண்டு ஸ்ரீவிசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைத் தழைக்கும்படி செய்து வாரும்" என்ற இந்த நியமனம்தான் ஸ்ரீ அஹோபில மட ஸ்தாபனத்தின் மூலசாஸனமாகும்.

"அந்த வழியிலே இன்று நாமும் பெருமாளுக்குப் பணி செய்து வருகிறோம். இந்த பாரத தேசத்தின் கலாசாரம் உயர்வானது. குறிப்பாக இளைஞர்கள் நம்முடைய கலாசாரத்தை விட்டுவிடக் கூடாது. பொதுவாக ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். போட்டி, பொறாமை இருக்கக் கூடாது. உலகம் என்பதே ஒரு குடும்பம். நாம் எல்லாரும் பகவானுக்கு அடியவர்கள். பக்தியின் மூலம் அனைவரும் பக்குவத்தைப் பெறவேண்டும்.

"நான் பெரியவர்களுக்குப் பணிவிடைகளைச் செய்வதைப் பெரும் பாக்கியமாகத்தான் கருதினேன். என்னைப் பொறுத்தவரையில் குடியரசுத் தலைவர் பதவியைவிட அதை மேலானதாகக் கருதினேன். எனவே பெரியவர்களுக்கு உரிய மதிப்பைக் கொடுக்க வேண்டும்" - இது இளைஞர்களுக்கு அழகிய சிங்கர் சொல்லும் யோசனையாகும்.

1966 இல் அஹோபில மடத்தின் ஆஸ்தான வித்வானாக நியமிக்கப்பட்டவர். தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி ஆகியவற்றில் பாண்டித்தியம் மிக்கவர். 45 ஆவது அழகிய சிங்கரின் பூர்வாஸ்சிரமப் பெயர் பி.என். கிருஷ்ணமாச்சாரியார். வந்தவாசியை அடுத்த வில்லிவலம் அவரது பிறந்த ஊர். சென்னையிலிருந்து வெளிவரும் ஸ்ரீந்ருஸிம்ஹப் பிரியா என்னும் ஆன்மிக வைணவ மாத இதழுக்கு இவர் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

இவர் அழகிய சிங்கராகப் பொறுப்பேற்ற பின்னர் பல பணிகளைச் செய்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.


ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று பார்க்கப்படாத மடத்து நிலங்களை எல்லாம் கண்டு வருமானத்துக்கு வழிவகுத்துள்ளார்கள். மடத்து ஊழியர்களுக்கு ரூபாய் 350லிருந்து ரூபாய் 1000, ரூ. 1250 என்று ஊதியத்தை உயர்த்தியுள்ளார்கள். ரூபாய் 3 கோடிக்கு நிதி ஒன்றை ஏற்படுத்தி மடத்தின் பராமரிப்புச் செலவுகளைச் சமாளிக்க உத்தேசித்துள்ளார்கள். ஆழ்வார் திருநகரி கோயில் மேம்பாட்டுக்கு ஒரு லட்சம் அளித்துள்ளார்கள். அஹோபில மடத்தின் குளத்தில் எப்போதும் தண்ணீர் வற்றாது. ஆனால் குளத்தின் படிக்கட்டுகள் சிதைந்துள்ளன. இதனை நிவர்த்தி செய்ய முயற்சிகள் ரூ 12 லட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

45 ஆவது அழகிய சிங்கர் சரணாகதி தத்துவத்தை உபதேசிப்பதே தனி அழகாகும். நடைமுறை வாழ்க்கை சம்பந்தப்பட்ட உதாரணங்களைச் சொல்லி இவர் அருளாசி வழங்குவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றும்! "தீபாவளி என்பது பட்சணங்களைச் செய்து உண்கின்ற பண்டிகையில்லை. இறைவன் மீது மனத்தைச் செலுத்தி இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வர நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் பண்டிகை. பாரத தேசத்துப் பண்டிகைகள் எல்லாவற்றிலும் ஓர் அரும் பொருள் இருக்கும். தீபாவளிப் பண்டிகையில் மக்களுக்கெல்லாம் அஞ்ஞானம் (இருட்டு) விலகி ஞானம் (வெளிச்சம்) பிறக்கட்டும். லட்சுமி நரசிம்மப் பெருமாளின் அருள் எல்லாருக்கும் கிடைக்கட்டும்" என்று வாழ்த்தியருளினார்கள் 45 ஆவது அழகிய சிங்கர்.

— கீழாம்பூர் சங்கர சுப்பிரமணியம்

இடையறாத அன்னை நினைவு பலிக்க...

கர்மயோகி



1. வாயால் ஒரே ஒரு வார்த்தையும் பேசுதல் கூடாது.
2. எந்த சப்தம் கேட்டாலும், சப்தம் மனதைத் தொடுமுன் அன்னையை அழைக்க வேண்டும்.
3. உடல் அசையும் பொழுது, அசையுமிடத்தில் அன்னையைக் காணுதல் அவசியம்.
4. எந்தப் பொருளைத் தொடுமுன்னும் அதன் மீது அன்னையின் உருவத்தைக் காண வேண்டும.
5. கண்ணில் படும் காட்சிகள் மனதைத் தீண்டும் முன் அன்னையின் உருவம் மனத்தைத் தொடவேண்டும்.
6. ஓர் எண்ணம் தோன்றினால் அதை விலக்கி, அன்னை நினைவால் அதை மாற்ற வேண்டும்.
7. எண்ணங்கள் தோன்றுமுன் அன்னை ஒளி மனதில் பளிச்சிட வேண்டும்.
8. ஒரு கவலை மனதில் எழுந்தால், வலிய அதை விலக்கி, அன்னையை அங்கு இனி அக் கவலை எழாவண்ணம் பிரதிஷ்டை செய்யவேண்டும்.
9. ஒரு யோசனை மனதில் தோன்றினால், இதை யோசிப்பதை விட அன்னையை நினைப்பதால் யோசனையால் ஏற்படும் பலன் முழுவதும் ஏற்படும் என்று அன்னையை நினைக்க வேண்டும்.
10. ஒரு காரியம் செய்யும்பொழுது அதைப் பல பாகமாக்கி ஒவ்வொரு பாகத்தை நினைக்கும் முன்னும், மனம் அன்னையை நினைக்க வேண்டும்.
11. நமக்கு நடந்த எந்த நல்ல காரியம் நினைவுக்கு வந்தாலும் உடனே அன்னையை மனதால் நமஸ்கரித்து, நெஞ்சால் நன்றியை உணர வேண்டும்.
12. நமக்கு நடந்த எந்தக் கெட்டது நினைவு வந்தாலும், நினைவைச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்.
13. யார் நினைவுக்கு வந்தாலும், அன்னையை நினைப்பது மேல் என நினைவை மாற்றிக் கொள்ளவேண்டும்.
14. ஏதேனும் எரிச்சல் எழுந்தால், நாம் அன்னையை விட்டு விலகிப் போகிறோம் என அறிந்து, மனத்தின் திசையை மாற்றி, எரிச்சலை அடக்கி, அழித்து, கூடுமானவரை அதைச் சந்தோஷமாக மாற்ற முயல வேண்டும்.
15. ஒரு காரியத்தை மேற்கொள்ளுமுன், அன்னை இதைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார், அவர் இதை எப்படிச் செய்வார் எனக் கருத வேண்டும்.
16. பாசம், பிரியம், ஆசை, வேலையில் ஆர்வம், வேகம். தீவிரம் மனதுள் எழுந்தால் அவற்றை aspirationஆன்மிக ஆர்வமாக மாற்ற வேண்டும்.
17. ஒரு செய்தி கேட்டு கவலை, ஏக்கம், பாரம், உற்சாகம் எழுந்தால், இவற்றையெல்லாம் அனுமதிக்கக்கூடாது, பதிலாக அன்னை நினைவு சந்தோஷம், சுகம், ஆர்வத்தை எழுப்ப வேண்டும் என அறிய வேண்டும்.
18. குறையான காரியங்கள் நினைவு வரும் பொழுது,கவலை ஏற்படாமல் நம்பிக்கை குறையாக இருக்கிறது என அறிந்து, அன்னை நினைவை நம்பிக்கை வளரும் வகையில் கொண்டு வரவேண்டும்.
19. யார் மீது கோபம், பிரியம் வந்தாலும் அதை விட அன்னை நினைவு சிறப்பு என அதை நினைக்க வேண்டும்.
20. கடந்த காலப் பழி வாங்கும் நினைவுகள் எழுந்தால் நாம் அன்னையை நெருங்கமுடியாத தூரத்தில் உள்ளோம் எனப் புரிந்து, பழிவாங்கும் நினைவை அன்னை நினைவால் மாற்ற வேண்டும்.

நினைவு என்பதென்ன என்பது ஒரு பெரிய தத்துவவிசாரம். ஞாபகம் என்பது அனைவருக்கும் முழு அளவில் இருப்பதில்லை. அதிக ஞாபக சக்தி உள்ளவர்களைக் கண்டு உலகம் வியக்கும். ஞாபகமே மனிதன் என்றும் கருதுபவருண்டு. மேல் மனத்திற்குத் (surface mind) தான் ஞாபகம் உண்டா. இல்லையா என்ற பிரச்னை. உள்மனம் (innermind)

அப்பிரச்னையைக் கடந்தது. அதற்கு அத்தனையும் நினைவுண்டு. நம் காதில் படாமல் நம்மைச் சுற்றி எழும் ஒலிகளும் நம் கவனத்தைக் கவராத காட்சிகளும் அங்கு பதிவு செய்யப்படுகின்றன. மீண்டும் அதை நினைவுக்குக் கொண்டு வரும் திறன் உள்மனத்திற்குண்டு. மேல் மனம், உள் மனத்திலிருந்து பிரிக்கப்பட்டு, அறியாமையால் செப்பனிடப்பட்டது. அதனால் அதற்கு, மற்ற அம்சங்களைப் போல, நினைவும் அளவுக் குட் பட்டது. மனத்திற்கு ஒரு மையம் உண்டு. அம்மை யத்திற்கு அக்கறையுண்டு. அந்த அக்கறையில் படும் நிகழ்ச்சிகளை மனம் நினைவிலிருத்தும். மற்றவற்றை நினைவிலிருத்துவதில்லை. நிகழும் பொழுதே நினைவிலிருத்தப்படாதவற்றை, மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருவதில்லை, எனவே இடையறாத நினைவு என்பது எந்த விஷயத்திலும் மனிதனுக்கு இருப்பதில்லை.

நாயன்மார் ஆண்டவனை இறைஞ்சிக் கேட்பது இடையறாத நினைவு. பகவானுடனிருந்த சாதகர் அவர் அறையிலேயே தூங்குவார். 1 மணி நேரம் கூட அறையை விட்டு வெளியில் போகாதவர். தனக்கு ஏதாவது கூறும்படி பகவானைக் கேட்டார்.

இரவும், பகலும், எப்பொழுதும் அகலாத இறைவன் நினைவு வேண்டும் எனப் பிரார்த்திக்கச் சொன்னார். அந்த சாதகர் இறைவன் முன்னா லேயே இரவும் பகலும் இருக்கிறார். இருந்தாலும் கண் முன்னாலிருப்பது, மனத்தில் நிலைத்திருக்கும் என்பதில்லை. மனத்தில் நீங்காமல் பகவான் குடி கொண்டால்தான் நீங்காத நினைவு ஏற்படும். இந்த நினைவு அன்னை மீதிருக்க வேண்டுமெனில் மனத்திற்கு அதிகத் திறன் வேண்டும். எளியவற்றை எளிமையாக நினைவிலிருத்தலாம். சிக்கலானவை, பெரியவை, விளங்காதவை நினைவில் எளிதில் தங்கா. அன்னையை மனத்திலிருத்த முழுத்திறன் — சக்தி — தேவை.

மனம் வேறெதிலும் ஈடுபடாமலிருந்தால் அன்னையை நினைக்க முடியும். மனத்தில் எண்ணம் எழுந்தால், மனத்தின் சக்தியை ஓரளவு எண்ணம் எடுத்துக் கொள்ளும். அதனால் அன்னையை நினைவுபடுத்துதல் கடினம். எண்ணமற்ற மனம் அன்னையை நினைவு கூரத் தேவை. எண்ணமே கூடாது எனில், எண்ணம் பேச்சாக மாறி வெளி வந்தால் அன்னை நினைவு அகலும். எனவே வாயால் ஒரு வார்த்தை பேசினாலும் அன்னை நினைவு விலகும் என்பது உண்மை. மௌனத்தை தபஸ்விகள் நாடியதன் காரணத்தில் இதுவும் ஒன்று. பேசும் அவசியம் ஏற்பட்டால் என்ன செய் வது? அன்னையை நீங்காத நினைவுடன் பெற மனம் விழைந்த பின் பேச்சு தானே அற்றுப் போய், குறைந்து விடும். அன்னை மௌனத்தைப் பாராட்டவில்லை. Controlled speech அளவுடன் பேசுவதையே அன்னை பாராட்டினார். பேசும் சந்தர்ப்பம் எழுந்தால், நாம் பேசினால் அது பேச்சு. பேச்சு மனத்தை அன்னையிடமிருந்து விலக்கும்.எழும் பேச்சைஅன்னைக்குச் சமர்ப்பணம் செய்தால், தேவையான பேச்சுக்கு அவர் அனுமதி யளிப்பார். அது அளவோடுள்ள பேச்சு. இது நாம் பேசுவதில்லை. இது நம்முன் அன்னை பேசுவதாகும். இப் பேச்சு மௌனத்தைக் கலைக்காது, அன்னை நினைவை அதிகப்படுத்தும். இதன்றி நம் மனத்தில் எழும் எண்ணம், சமர்ப்பணமின்றி வெளிவருவது பேச்சு, அது போன்ற சொல் வாயால் ஒன்று கூட வரக்கூடாது.

இடையறாத அன்னை தரிசனம்

நினைவு முதிர்ந்து தரிசனமாகிறது. நினைவு மனத்திற்குரியது. மனத்தின் ஒரு பாகமான எண்ணம் நினைவால் நிறைந்த பொழுது நினைவு நிரந்தர மாகிறது. தரிசனம் காட்சிக்குரியது. அதன் நிலைகள் பல.

நிஷ்டையிலுள்ள தபஸ்வி கண் மூடியிருக்கும் பொழுது அவர் மனம் காட்சிகளைக் காண்கிறது. கண் புலன்; காண்பது மூளை. மூளையில் காட்சிக்கும், ஒலிக்கும், சுவைக்கும் உள்ள நரம்பு மையங்கள் உள்ளன. கண், காட்சியை இந்த நரம்பு மையத்திற்கு அறிவிக்கிறது. மனம் அதைக் காண்கிறது. காண்பது கண் அல்ல. காண உதவும் கருவி கண். சாப்பிடுவது வாய், கையல்ல. சாப்பிட உதவும் கருவி கை. கண் முழுவதும் சரியாக இருந்து, மூளையில் காணும் பகுதி பழுதானால் கண்ணுக்குப் பார்வையிருக்காது. பார்ப்பது மனம், புலன் உதவியால் மனம் பார்க்கிறது. **புலன் உதவியின்றியும் மனம் பார்க்க முடியும்.** அதற்கு மனம் புலனிலிருந்து விடுபட வேண்டும். நிஷ்டை புலனை — கண்ணை — அவிப்பதால், மனம் நிஷ்டையில் விழித்துக்கொண்டு பார்க்கிறது. இது சூட்சுமப் பார்வை. மனம் இது போல் கேட்கும், சுவைக்கும், தொட்டு உணரும், வாசனையறியும்.

மனத்திற்குரிய இத்திறன் உணர்வுக்குண்டு. உணர்வு என்பது பிராணன், vital எனப்படும். ஆசையுள்ள மையம் இது. உணர்வால் இந்த ஐந் தும் புலன்களாக மனம் போல் செயல் படமுடியும். சினிமா பாட்டை நாள் முழுவதும் கேட்டு ரசித்து, அதிலேயே திளைப்பவர் வயிற்றிலிருந்து — நாபி — பாட்டு கிளம்புவதை அறிவார். உணர்ச்சி வசப் பட்ட பக்தர்கள் தாம் வணங்கும் கடவுள்களை இங்கு காண்பதுண்டு. உடலுக்கும் இத்திறனுண்டு. ஐம்புலன்களின் திறனுடையது உடல். நாம் அவற்றை

தம்பி ஸ்ரீனிவாசன்

தீபாவளி



ஆண்டிலே ஒரே தினம்
அருமையாம் தீபாவளி
வேண்டி வேண்டிக் கேட்கினும்
வேறிது போல் நாள் எது?

புதிய புதிய ஆடையாம்
பர்ஸ் பட்டாசு வாணமாம்
முதியவர்கள் வாழ்த்துடன்
முக்கடைக்கத் திண்டியாம்!

நாகரிகம் பெற்ற பின் இழந்துவிட்டோம். உடலால் காண முடியும், கேட்க முடியும். மூலாதாரத்தில் உடல் காட்சிகளைக் காண்பதுண்டு. (அன்னையின் உருவத்தை மூலாதாரத்தில் கண்டால், வியாதி மறையும்). இவை மனத்தின் காட்சி, உணர்வின் காட்சி, உடலின் காட்சிகளாகும். உணர்வு மார்பிலும் காண்பதுண்டு. மார்புக்குப் பின் ஆன்மா - சைத்தியம் - உள்ளது. அங்கு காண்பது, ஆன்மிகக்காட்சி, ஆன்மா பெறும் தரிசனம். நாம் அதையே 'தரிசனம்' என்கிறோம்.

புலன்கள் அவிந்தால் மனம் காட்சியைக் காண்கிறது என்றோம். ஆன்மா எப்பொழுது தரிசனம் காணும்? ஜீவன் கரணங்கள் — மனம், உடல் — மூலம் வெளி நடந்து இயங்குகிறது. அதுவே வாழ்வு. ஜீவன் கரணங்களில் ஈடுபடுவது குறைந்து, அழிந்தால், அதாவது ஜீவன் கரணங்களிலிருந்து விடுபட்டால், விடுதலையடைந்தால், ஆன்மா விழிப்புறும். விழிப்புற்ற ஆன்மா காட்சியைக் காணவல்லது. காட்சி தரிசனமாகும். ஆசிரம தரிசன நாள்களில் சூழல் செறிந்திருக்கும் வேளை என்பதால் தியானத்தில் அன்னை தரிசனம் தருவார். பிறந்த நாள், தரிசனத்திற்குரிய நேரம். தியானம் ஆழ்ந்த நேரம் தரிசனம் கிடைக்கும். விழிப்பான நேரத்தில் கிடைக்கும் அன்னை தரிசனம் பூரண யோகத்திற்குரிய தரிசனம். பூரண யோகம் விழிப்பில் நிஷ்டையை நாடுவதால், விழிப்பிலும் தரிசனம் உண்டு. அது சிறப்பு.

உயர்ந்த மனம் (higher mind) எண்ணத்தை இழந்த நிலையில் ஞானம் பெறுவது. இடையறாத அன்னை நினைவு இம்மனத் திற்குரியது. சத்வ குணமுடையது இம் மனம். முனிவர் நிலைக் குரியது இது. ஒளிமயமான மனம் (illumined mind) ஞானத்தை ஜோதியாகப் பெறுவது. இடையறாத அன்னை தரிசனம் இதற்குரியது. இது ரிஷியின் நிலை. இதற்கடுத்தது யோகியின் நிலை. இங்கு எண்ணமோ, ஒளியோ இல்லை. ஞானம் நேரடியாக உள்ளது. இங்கு அன்னை ஞானம் இயல்பாக அமைந்துள்ளது. நம் ஜீவியம் ஞானமாக மாறுமிடம் இது.

இடையறாத தரிசனம் பெற, முதலில் இடையறாத நினைவு நிலைக்கவேண்டும். மனம் ஆன்மா ஒன்றி லயிக்க வேண்டும். எண்ணங்களும், செயல்களும், மனத்திலிருந்து எழுவதற்குப் பதிலாக, ஆன்மா விலிருந்து எழ வேண்டும். காரணங்கள் — மனம், உயிர், உடல் — தங்கள் முனைப்பை இழந்து அமை தியடைய வேண்டும்.

பொதுவாக காட்சிகள் அகத்தில் எழுந்து, ஆன்மாவையடைய வேண்டும். பொதுவான காட்சி கள் அன்னையாக மாறி, அது ஆன்ம தரிசனமாகி, அன்னை தரிசனமாகி, அடிக்கடி ஏற்பட்டு, நிலை யாக நிரந்தரமாக வேண்டும். இடையறாத நினைவுக்குச் சொல்லிய 20 கருத்தும் இடையறாத தரிசனத்திற்குப் பயன் படும். எந்த சப்தம் கேட்டா லும் அன்னையை நினைக்க வேண்டுமென்றோம். இதற்கு 'நினைப்பை' 'காணவேண்டும்' என மாற்றிக் கொள்ள வேண்டும். அன்னை தரிசனத்தின் வகை பல. வானளாவ அன்னை காட்சியளிப்பதிலிருந்து, உள்ளே தரிசனம் தரும் வரை பல நிலைகள் உண்டு. எல்லாப் பொருளும் அன்னையாகக் காட்சியளிப்பதுவே முடிவான தரிசனம்.

எங்கும் நிறைந்தவன்

மூலம்: ஸ்ரீ அரவிந்தர்,
தமிழில்:
கவிஞர் சக்திக்கனல்



வானத்து நீலம் வடித்தவர் யார்?- கதில்
வட்ட நிலாவைச் சுழற்றுவதார்?
மீனினம் கோள்கள் பலபல விண்வெளி
வீசிப்பந் தாக்கி விடுத்தது யார்?

பச்சைப் பசுவயல் பூக்கள் கனிகள்
பறவைகள் விண்வெளி கோடி அண்டம்
இச்சைப்படி திரிந்தே வரு காற்றை
இறக்கை கட்டிச் சுற்ற விட்டவர் யார்?

பூக்களை நெய்ததில் சித்திர வேலைகள்
பூசி மகரந்தம் சேர்த்தவன் யார்?
தாக்கிடும் மாந்தரின் உள்ளக் குகையினில்
தங்கியிருந்து தளிர்த்தவன் யார்?

மீசை முறுக்கிடும் ஆணழகில் மென்மை
மெல்லிய பூவையர் மெல்லிடையில்
ஆசைக் குழந்தைகள் பேசும் மழலையில்
ஆனந்த வெள்ளம் படைத்தவன் யார்?

புல்லாங் குழலில் இசை வடிப்பான்!- எழிற்
பூக்கள் மலர அவன் சிரிப்பான்!
துள்ளி வரும் வேலைக் கைப்பிடிப்பான்- மழை
தூறில் கோவர்த்தனக் குடைபிடிப்பான்

சிங்கத்தின் தோற்றத்தில் தீமைசெய் நெஞ்சைத்
திருகி எறிந்து அறம் வளர்ப்பான்
பங்கப் படாதொரு போர்க்களத்தில் ஞானப்
பால் எனக் 'கீதை' அமிழ்தளிப்பான்!

நெஞ்சுக்குள்ளே அவன் வாழுகிறான்!- நல்ல
நீதிநெறி சொல்லி ஆளுகிறான்!
அஞ்சல் எனக்கரம் காட்டுகின்றான்- மக்கள்
ஆருயி ரின்பிணி ஒட்டுகின்றான்!

காஞ்சி முனிவரே ஒரு கவிதை!

கவிஞர் வேதம்


தீபா வளிகொண் டாடுமுன்னே
    'தீபம்' ஒன்றைக் கும்பிடுவோம்!
'பூபா ரம்'தாங் கியகாஞ்சிப்
    புனித 'அருளை'ப் பாடிடுவோம்!


பேச்சு தொடங்கும் முன்புஅவர்
    பிறரைப் பார்ப்பார்; அதுகவிதை!
மூச்சை இழுத்த மோனத்தில்
    முகிழ்க்கும் 'சாந்தம்' – ஒரு கவிதை!

"அன்ன தான ஐயருடன்
    ஐம்ப தாண்டு முன்பிருந்த
சென்ன கிருஷ்ணன் தானே நீ?"
    சிரித்துக் கேட்பார்! – அது கவிதை!

இளைய வயதில் 'ஜான்' மன்னர்
    எனும்நா டகத்தில் 'ஆர்தர்' எனும்
இளவ ரசனாய் நடித்தாரே!
    என்றோ 'நடித்த' தும் ஓர் கவிதை.

"எண்ண முடியாப் பிரச்னைகளால்
    என்சொல் நீங்கள் கேட்கவில்லை!
எண்ணி அழாதீர்! 'ஸரி'பண்ணா
    என்தப்(பு) என்ற 'அவர்' – கவிதை!





இதயத்தின் உச்சியில்

பொன்மணி

இமயத்தைத் தூக்கி நிறுத்து
நெஞ்சில் –
இமைக்குள்ளும் உதயமாகும்
உலகம்.

அனுபவத்தைத் தூக்கி நிறுத்து
நெஞ்சில் –
ஆறறிவின் சாரம் சேரும்
உன்னில்.


பழங்கணக்கைத் தூக்கி நிறுத்து
நெஞ்சில் –
பாதையின் முட்கள் மாயும்
வாழ்வில்...

இதயத்தின் வேர்கள் இன்று
இமயத்தைக் கடந்து நிற்க
இனிவரும் கால விழுதுகள்
இந்தியத்தை விரித்துப் பிடிக்க,

நினைவின் கிளை மலர்கள்
தினமும் புதுப்பார்வை மணக்கும்...
வசந்தத்தின் வாசலில்
வாழ்க்கை, நடக்கும் போது

ஒவ்வோர் அடிக்கும்
ஒவ்வோர் உரை எழுதும்..
ஒவ்வோர் உரைக்கும்
ஒவ்வொரு கவிவரையும்...

உங்களுக்கு வேண்டுவது
அந்த உரையா
அல்லது, கவிதையா...?





வயதென்ன தடையா!

கொ.மா.கோதண்டம்

தேனென இனிக்கும் தீங்கனிச் சொற்கள்
மீனெனும் கண்கள் மின்னலாய்ப் பாயும்
கானென வளமே கன்னியின் உடலும்
நானென்ன கிழமா நங்கையை மறக்க?

என்னையே மயக்கும் ஏந்திழை! கண்டதும்
தன்னையே இழந்தேன் சார்ந்ததே இளமை
என்னுயிர் வதைக்கும் இளஞ்சிட்டுக் குருவி
சின்னவள் சிரிப்பில் என்னையே மறந்தேன்.

காதலே செய்யவும் கன்னியை ரசிக்கவும்
சாதல் ஒன்றுதான் தடையாம், வயதோ
ஆதலும் தவறா அங்கென் உள்ளமே
போதலும் அவள்பின் புண்ணிய மல்லவா!



கம்பன் காட்டும் "நடையில் நின்றுயர் நாயகன்"



ஏதோ ஓர் இலக்கினை
இலட்சியக் கருத்தினை
வலியுறுத்துவது தான்
இலக்கியம் என்பர் சான்றோர்.

ஒரு சமுதாயத்தின் விருப்புகள், தேவைகள், நம்பிக்கைகள் முதலியவற்றைப் பயன்படுத்தி நல்ல குறிக்கோளை உருவாக்கிச் சமுதாயத்தை மேம் படுத்துவதில் இலக்கியத்தின் பணி சிறப்பானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே, ஒரு கவிஞன் அல்லது படைப்பாளி ஓர் இலக்கியத்தை உருவாக்குகிறான் என்றால் அந்த இலக்கியத்தின் மூலம், சமுதாயத்திற்கு நல்ல பல குறிக்கோள்களை அவன் உணர்த்துகிறான் என்பது தெளிவு.

இந்த இலக்கணத்தை ஒட்டித்தான் தொன்றுதொட்டு இந்திய மக்களிடையே பரவியுள்ள இராமகாதையை, கவிச்சக்கரவர்த்தி கம்பன் அமுதத்தமிழில் ஓர் ஒப்பற்ற காப்பியமாக வழங்கியிருக்கின்றான். மகாகவி பாரதியாரும்,

"கம்பன் குறிகளால் காட்டிட முயலும்
முயற்சியைக் கருதியும் தமிழச் சாதி
அமரத்தன்மை பெறலாம்"

மாண்புமிகு
இராம வீரப்பன்

என்று பாடியிருப்பதைக் கொண்டு கவிச்சக்கரவர்த்தி தன் இராமாவதாரக் காப்பியத்தில் காட்டியிருக்கிற குறிக்கோள்கள் எவை? அவற்றில் தலையாய குறிக்கோள் எது? என்பதை நாம் கண்டறிந்தால் அது பயனுள்ளதாக அமையும்.

"நடையில் நின்றுயர் நாயகன்" என்று காப்பிய நாயகன் இராமனைப் பாராட்டும் கவிச்சக்கரவர்த்தி கம்பன், தன்னுடைய காவியத்தின் முலம் காட்ட விழைந்த உயர்ந்த குறிக்கோள் மாந்தர்தம் வாழ் வொழுக்கமே என்பது புலனாகிறது.

காவியத்தலைவன் இராம பிரானின் சிறப்பினைக் கூறவந்த இசைப்புலவர் தியாகையர் "ஒக மாட, ஒக பாண, ஒக பத்நி" என்று இராமரின் சிறப்பினைக் கூறுகிறார். ஆம்! "ஒரு சொல், ஒரு வில், ஒரு இல்" இம்முன்றுமே இராமரின் சிறப்பிற்குக் காரணம்.

எனவே, "ஒரு இல்" என்ற ஒப்பற்ற ஒழுக்க நெறியை வற்புறுத்தவே கம்பன் இராமாவதாரக் காவியத்தைப் படைத்திருக்கிறான் என்று தெரிகிறது. அதிலும்,

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு"

என்று வள்ளுவர் வற்புறுத்திய ஒழுக்க நெறியை வற்புறுத்துவதையே குறிக்கோளாகக் கொண்டு, கம்பன் இராம காவியத்தைப் படைத்திருக்கிறான்.

திருவள்ளுவர் "ஒழுக்கமுடைமை" என்ற அதிகாரத்திற்கு அடுத்த அதிகாரமாக வைத்திருப்பது "பிறனில் விழையாமை" என்ற அதிகாரம் ஆகும். உயிரினும் மேலாக ஒழுக்கத்தை மதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ள திருவள்ளுவர் பெருமான், ஒழுக்கக் கேடுகள் அனைத்திலும் மிகவும் மோசமான ஒழுக்கக் கேடு பிறன்மனைவியை விழைவதே என்று தெளிவு படுத்திக் கூறியிருக்கக் காண்கின்றோம்.

"அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரின் பேதையார் இல்"

"எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்"

என்னும் குறள் நெறியை ஆழப் பயின்று, இராமாவதாரக் காவியத்திற்குள் நுழைந்து நாம் பார்ப்போமானால், பிறன்மனை விழையும் குற்றம் புரிபவர்கள் அவர்கள் எத்தனை பெரிய நிலையில் இருப்பவர்கள் ஆயினும், தண்டனைக்கு ஆளாக வேண்டும் என்பதையே இராமாவதாரக் காவியத்தின் வழி கம்பன் காட்டியிருக்கக் காண்கிறோம்.

ஆடவர் பிறர் தாரத்தை விழைவது எவ்வாறு குற்றமோ, அதைப் போலவே மாதர் பிற கணவரை விழைவதும் குற்றமே என்பதை ஆரண்யகாண்டத்தில் சூர்ப்பனகை வரும் படலங்களில் கம்பன் விவரிப்பதையும் காணுகின்றோம்.

இலங்கையையாண்ட இராவணன், முழு முதற் கடவுளான சிவபெருமானோடு ஒப்பிட்டு, வையம் அவனை "இராவணேச்வரன்" எனப் புகழக்கூடிய அளவு பெருஞ் சிறப்புகளைப் பெற்று விளங்கியவன்தான் என்றாலும்,

"வாரணம் பொருத மார்பும்,
வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவருக் கேற்ப
நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும்
சங்கரன் கொடுத்த வாளும்
வீரமும் களத்தே போட்டு
வெறுங்கையே மீண்டு போனான்"

என்று முதல் நாள் போரில் இராவணன் அவமானப்பட நேர்ந்ததையும்

"முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய
பெருந்தவமும் முதல்வன் முன்னாள்
எக்கோடி யாராலும் வெலப்படாய்
எனக்கொடுத்த வரமும், ஏனைத்
திக்கோடு உலகனைத்தும் செருக்கடந்த
புயவலியும் தின்று மார்பில்
புக்கு ஓடி உயிர்பருகிப் புறம் போயிற்று
இராகவன்தன் புனித வாளி"

என்று, முடிவில் இராமபாணம் ஊடுருவ இராவணன் மாண்டு பட நேர்ந்ததையும் கம்பன் காட்டுகிறான் என்றால் என்ன காரணம்? இராவணனுடைய விழ்ச்சிக்கு, கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியைத் தன்மனச் சிறையில் அவன் கரந்து வைத்த பொல்லாக் காமம் அல்லவா காரணம்? இந்தக் குற்றத்திற்காகத்தான் இராமாயணத்தில் இன்னொரு வீரனுக்கும் தண்டனை தரப்படுகிறது.

இராவணனை விடவும் பன்மடங்கு ஆற்றல் மிக்கவன் கிட்கிந்தையின் அரசனான வாலி. அவன் ஒரு மாவீரன். இராவணனையே தன் வாலிலே கட்டி வைத்த பேராற்றல் மிக்கவன். பாற்கடலை அமுதம் பொருட்டுத் தேவர்கள் கடைய முற்பட்ட போது மந்தர மலையைத் தன் வாலில் கட்டிக் கடலைக் கலக்கிய வீராதி வீரன் என்று வர்ணிக்கப்படுபவன்.

இப்படிப்பட்ட ஆற்றல் கொண்டவன் வாலி என்பதை இராமனிடத்தில் அனுமனும் கூறியிருக்கின்றான். ஆனால் அவன் தன் தம்பியின் மனைவி உருமை என்பாளைக் கவர்ந்து கொண்டான் என்பதை அனுமன் கூறக் கேட்கும் போதே இராமன் கொதித்துப் போகின்றான்.

"உருமை என்று இவற்கு உரிய தாரமாம்
அருமருந்தையும் அவன் விரும்பினான்"

என்று வாலியின் அடாத செயலை அனுமன் கூறியவுடன், அன்று ஈரமற்ற தம் சிற்றன்னையினால் தம்பிக்காக தனக்குரிய அரசைத் துறந்த இராமனால், இன்று தம்பியின் மனையாளைக் கவர்ந்த வாலியின் துரோகச் செயலைச் சகித்துக் கொள்ள இயலவில்லை என்று காட்டுகிறான் கம்பன்.

"ஈரம் நீங்கிய சிற்றவை சொற்றனள் என்ன
ஆரம் வீங்குதோள் தம்பிக்குத் தன் அரசு உரிமை
பாரம் ஈந்தவன் பரிவு இலன், ஒருவன் தன் இளையோன்
தாரம் வெளவினன் என்று சொல் தரிக்குமாறு உளதோ?"

என்று வாலியின் துரோகச் செயலைக் கேட்டு இராமன் கொதித்திடுவதை இலக்கியமாக்கிக் காட்டுகிறார் கம்பர்.

வாலியின் பாவச் செயலுக்கு ஏற்ற தண்டனை மரணமே என்று அப்போதே முடிவு செய்து விடுகிறான் இராமன். "ஏழுலகு வந்து தடுத்தாலும் வாலியை வதைத்து, உன் தாரத்தை உனக்கு மீட்டுத்தருவேன்" என்று உறுதியும் கூறிவிடுகிறான் இராமன்.

"உலகம் ஏழினோடு ஏழும் வந்து
அவன் உயிருக்கு உதவி
விலகும் என்னினும் வில்லிடை

வாலியின் வீட்டி
தலைமையோடு நின்தாரமும்
உனக்கு இன்று தருவேன்
புலமையோய் அவன் உறைவிடம்
காட்டு என்று புகன்றான்"

ஆம்! "ஒரு சொல், ஒரு வில், ஒரு இல்" என்ற இலட்சியத்தைக் கொண்டு விளங்கும் இராமபிரான், சுக்ரீவனுக்குத் தந்த தம் ஒரு சொல் மாறாமலே, தம் கோதண்டத்தில் ஓர் அம்பினைத் தொடுக்கிறார். வாலியை வதைக்கிறார். இவ்வாறு வாலியை வதைத்து யாவராயினும் ஒரு இல் என்ற இலட்சியத்தை மறந்தால் அவர்களுக்கு இப்பூலகில் வாழ்க்கை இல், வாழ்வே இல்லை என்ற நீதியையே உணர்த்துகின்றான் நடையில் நின்றுயர் நாயகனாகிய இராமன் மூலம் கவிச்சக்கர வர்த்தி கம்பன்.

"வாலி தன் தம்பி மனையாளைக் கவர்ந்து கொண்ட குற்றத்திற்கான தண்டனைதான் இது" என்று மேலும் தெளிவுபடுத்துகிறான் கம்பன்.

"ஈரம் ஆவதும் இற்பிறப்பு ஆவதும்
வீரம் ஆவதும், கல்வியின் மெய்ந்நெறி
வாரம் ஆவதும், மற்று ஒருவன் புணர்
தாரம் ஆவதைத் தாங்கும் தருக்கும் அதோ"

என்றும் இராமனைப் பேச வைக்கிறான்.

வாலி குரங்குதானே! மனிதருக்குப் பொருந்தக் கூடிய தரும நியாயமென்னும் சட்டத்திற்குள் வாலியைக் கொண்டு வந்து நிறுத்தி, இராமர் வாலியைத் தண்டித்தது சரியா என்று இன்றும் பலர் ஆராய்ச்சி செய்கிறார்கள். இதை எதிர்பார்த்துத்தான் இதே கேள்வியை இராமரிடத்தில் வாலியைக் கேட்க வைத்து பதிலும் அளித்திருக்கிறான் கம்பன்.

கம்பன் தன்னுடைய காவியத்தில் வாலியைக் குரங்காகவும், ஜடாயுவை ஒரு பறவையாகவும் படைத்தான் என்று எண்ண முடியவில்லை. வாலி, சுக்ரீவன், அனுமன், ஜடாயு முதலான பல பாத்திரங் களையும் பகுத்தறிவோடு சிந்தித்துத் தம் கருத்துகளை எடுத்துச் சொல்லக் கூடிய பாத்திரங்களாகப் படைத் திருப்பதிலிருந்தே கம்பன் அவர்களின் உருவங்களைப் பற்றிக் கவலைப்படவில்லை என்பது தெளிவாகிறது. காப்பிய நோக்கத்திற்குப் பாத்திரங்களைப் பயன்படுத்து கிறான்; பாத்திரங்களைப் பேச வைக்கிறான் கம்பன். எனவே, ஒருவனுக்கு ஒருத்தி என்பதே மனித தருமம். பிறன்மனை விழைவது பொறுக்க முடியாத மாபெரும் குற்றம். ஆகவேதான் நடையில் நின்றுயர் நாயகன் ஆகிய இராமபிரான், இராவணனையும் வாலியையும் வதம் புரிந்து அறத்தை நிலை நாட்டுகின்றார். இவ்வாறு "மனித சமுதாயம் கொள்ள வேண்டிய மாபெரும் குறிக்கோள் ஒழுக்கமே" என்று தெளிவுபடுத்தி விடுகிறான் கவிச்சக்கரவர்த்தி கம்பன்.

ஒரு சிறந்த மனிதன் எப்படி ஒழுக்க நெறி நின்று வாழ்ந்திட வேண்டும் என்பதை உணர்த்துவதற் காகத்தான் இறைவனே மனித வடிவில் வந்து தோன்றியதாகவும் இராமகாதை கூறுகின்றது. பெற் றோர் சொல்லைப் போற்றிடவேண்டும்; இன்ப துன்பங்களைச் சமமாய் பாவிக்கவேண்டும்; சகோதர உணர்வுடன் யாவரையும் அரவணைக்க வேண்டும்; இத்தனைக்கும் மேலாக ஒழுக்க நெறி மிக்க தூய வாழ்வு வாழ்ந்திட வேண்டும். இத்தகைய மகத்தான இலட்சியங்களை உணர்த்தவே இறைவன் மனித வடிவிலே வந்து தோன்றினான் என்று காட்டுகின்றான் கம்பன்.

மானுடத்தின் வெற்றி, அவன் ஒழுக்க வாழ்வில்தான் சிறந்து விளங்குகின்றது என்பதை "மானுடம் வென்றதம்மா" என்று வியந்து கூறிப்போற்றுகின்றான் ஒண்பாவில் உயர் கம்பன்.

"தேறினேன் அமரர்க் கெல்லாம்
தேவராம் தேவர் தாமே
மாறிஇப் பிறப்பில் வந்தார்
மானுடராக மன்னோ
ஆறுகொள் சடிலத் தானும்
அயனும் என்றிவர்கள் ஆதி
வேறுள குழுவை எல்லாம்
மானுடம் வென்றதம்மா"

ஆம்! மானுடத்தின் வெற்றி, மனிதன் பேணும் ஒழுக்கமிக்க வாழ்வில்தான் அமைந்து விளங்குகின்றது. ஒழுக்கமே கம்பன் காட்டும் காவியக் குறிக்கோள் ஆகும்.

கலைப்பொழிலன்

இயற்கை நிலை

நீல வானம் கரைந்தே ஒழுகி
நிலத்தில் கடலாய்க் குவியுதோ!
கோலச் சுடர்கள் உருவே மாறி
குளத்தில் மீனாய்க் குளிக்குதோ!

பாவ மெல்லாம் கறுப்பே யாகி
பரந்து இருளாய்ப் படருதோ!
தாவி வந்திடும் புண்ணிய மாக
தண்ணில வதிலே சிரிக்குதோ!

வாடி மாந்தர் விடும்பெரு மூச்சு
வாட்டும் கனலாய்த் தகிக்குதோ!
பாடி ஆடும் பசிய மரங்கள்
பொறாமல் அதற்கு விசிறுதோ!

கோடி மாந்தர் ஆசைகள் பொங்கி
குமைந்து அனலாய் நெளியுதோ!
தேடி உதவும் நல்லறம்போலே
திரிந்து மஞ்சுகள் பொழியுதோ!

நீங்களே உங்களுடைய ஒளிவிளக்கு

அடர்ந்த காடுகளையும், நெடிதுயர்ந்த மலைகளையும் அழகிய நீரோடைகளையும் கடந்து பல காத தூரம் தினமும் நடந்து சென்று, வழியில் பாமர மக்களையும் செல்வர்களையும் பார்த்துப்பேசி, பிறரைக் கட்டாயப்படுத்தாமல் செருக்குணர்வு இல்லாமல் சீரிய நெறிகளைப் பரப்பி வெற்றி பெற்றவர் கௌதமபுத்தர். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகள் மறைந்த பின்னரும் அவர் புகழ் மறையவில்லை; போதனைகள் மறையவில்லை. பிறந்த நாட்டில் பௌத்தர்களின் எண்ணிக்கை குறைந்ததாயினும், இன்னும் அவரது கொள்கை, நெறி, இந்திய மக்களிடையே ஊடுருவிப் பரவி நிலைத்து நிற்கின்றது.

புத்தரின் வாழ்வில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய குணங்களை, இலட்சியங்களைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஒரு நாள் புத்தர் அளவி என்னும் குக்கிராமத்திற்கு வெகு தூரம் நடந்து சென்றடைந்தார். அங்கு வாழ்ந்த கிராம மக்கள் அன்போடு உபசாரம் செய்து உணவருந்துமாறு அவருடைய சீடர்களையும் வேண்டிக் கேட்டனர். உணவு பரிமாறப்பட்டது. வெளியில் ஒரு மூலையில் ஓர் ஏழை விவசாயி உடல் குன்றிக் குறுகிக் களைத்துப் பட்டினியாக அமர்ந்து இருப்பதைப் பார்த்தார் புத்தர்.

ஆ. பத்மநாபன்
முன்னாள் தலைமைச் செயலாளர்



'ஏன் இந்த விவசாயி இவ்வாறிருக்கிறார்? அவருடைய பிரச்சினை என்ன?' என்றெல்லாம் எண்ணினார்; அவரையே அன்போடு அழைத்து விசாரித்தார்.

"தங்களைத் தரிசிக்கப் பல நாள்களாகக் காத்திருந்தேன்; இரவு நெடுநேரம் தங்கள் வருகையை எதிர்நோக்கி இருந்தேன். துரதிர்ஷ்ட வசமாக என்னுடைய காளைமாடு இன்று காலை காணாமற் போயிற்று; அதைத் தேடி அலைந்தேன். அதனால் தூக்கமும் உணவுமின்றி தங்களைத் தரிசிக்க ஓடோடி வந்தேன்" என்று மிகவும் பணிவுடன் அந்த விவசாயி கூறினார். புத்த பெருமான் அந்த விவசாயிக்கும் உணவு கொடுக்கச்செய்து, தானும் தன் சீடர்களும் உண்ட பிறகு அறநெறியைப் போதித்தார். இறுதியில் "பசியோடு இருப்பவனுக்கு உபதேசம் செய்வதால் எவ்விதப் பயனுமில்லை" என்பதையும் விளக்கினார். அந்த ஏழை விவசாயியின் மீது பரிவு கொண்டு, பட்டினிதீர உணவளித்துப் பின்னர் உபதேசமும் செய்த புத்தரின் பரிவு உணர்வை யாவரும் பாராட்டிப் புகழ்ந்தனர்.

ஒரு போது புத்தர் தன் நெருங்கிய சீடர் ஆனந்தாவுடன் பயணம் மேற்கொண்டு செல்லும் வழியில் ஒரு சந்நியாசியின் இருப்பிடத்தை அடைந்தார். அங்கு அந்த சந்நியாசி வயிற்றுக்கடுப்பினால் அவதிப்பட்டுக் கொண்டு அசுத்தமாய், ஆதரவற்றவராய், அலங்கோலமாய் இருப்பதைக் கண்டார். அவரே அந்தச் சந்நியாசியைத் தூக்கி எடுத்துக் கழுவிச் சுத்தம் செய்து படுக்கையில் உட்காரவைத்து, அவருடனேயே சிலகாலம் தங்கியிருந்து அவர் நலமுற்றபின்பு தன்

பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார். புறப் படுவதற்கு முன் அங்கிருந்த மற்ற சந்நியாசிகளைப் பார்த்து "எனக்குப் பணிவிடை செய்வதைவிட பிணி யுற்றிருப்பவர்களுக்குப் பணிவிடை செய்வது மிகச் சிறந்தது: அதுவே என் விருப்பம்" என்று புகன்றார். இதைக் கேட்ட கூட்டமாக இருந்த சந்நியாசிகள் வெட்கப்பட்டனர்; அவரது போதனையால் விவேகம் பெற்றனர்.

புத்தர் வாழ்ந்த காலத்தில் பரத்வாஜ் என்ற பிராமண வகுப்பைச் சார்ந்த பண்டிதர் பெரும் புகழ் பெற்று விளங்கினார். அவர் புத்தரின் கொள்கைகளிலோ அவரது வாழ்க்கை நெறிகளிலோ ஆர்வம் காட்டாதவர். ஆனால் அவருடைய மனைவி, புத்தரின் போதனை களில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். எப்பொழு தும் "புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம் கச் சாமி, சங்கம் சரணம் கச்சாமி" என்று கூறிக் கொண் டிருப்பார். இதனால் பண்டிதருக்கு மனைவி மீது கோபம். அதைவிட புத்தர் மீது கடுங்கோபம் கொண் டிருந்தார். ஒருநாள் கோபம் மிகுதியால் மனைவியை ஏசி, வசைபாடி அடித்தார். கோபம் தணியாதவராய், அகங்காரத்துடன் புத்தர் தங்கியிருந்த இடத்தை நோக்கி ஓடினார், அங்கு புத்தர் மக்கள் மத்தியில் அமர்ந்திருக்கக் கண்டார். அவரை நோக்கிக் கோபமாக "எதை ஒழித்தால் மன அமைதி கிடைக்கும்?" எனக் கேட்டார்.

"முதலில் கோபத்தை ஒழி; அமைதி, மகிழ்ச்சி கிடைக்கும்" என்று புத்தர் அன்புடனும் அமைதியுடனும் கூறினார். பண்டிதர் வெட்கித் தலைகுனிந்து தன் அகங்காரத்தையும் கோபத்தையும் விட்டொழிக்கப் புத்தரின் ஆசியை வேண்டினார்.

இந்தப் பண்டிதரின் உறவினரான இளைஞன் ஒருவன், இழி சொற்களால் புத்தரைக் குறை கூறினான். தகாத வார்த்தைகளால் பழித்துரைத்தான். புன்முறு வலுடன் அவற்றைக் கேட்டுக் கொண்டு அமர்ந்திருந்த புத்தர்,

"மகனே! ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட பரிசை வேண்டாமென்று சொன்னால் அந்தப் பரிசு யாருக்குப் போய்ச் சேரும்?" என்று கேட்டார்.

"இதில் என்ன சந்தேகம்? பரிசு கொடுத்தவரையே சேரும்".

என்று உடனே பதிலளித்தார் அந்த இளைஞர்.

"நல்ல பதில். மகனே! நீ எனக்குக் கொடுத்த இழிசொற்கள் யாவும் எனக்கு வேண்டாம். நீயே வைத்துக்கொள்" என்று புத்தர் சொல்ல அந்த இளைஞன் தன் அறியாமையை எண்ணி வருந்தினான்; திருந்தினான்.

குற்றம் கூறியவர்களையும், அகந்தையாலும், அறியாமையாலும் தகாத சொற்களைச் சொல்பவர் களையும், கேடு செய்பவர்களையும், சாதித் துவேஷம் பார்ப்பவர்களையும் தமது சகிப்புத் தன்மையால், அன்பினால், அறிவுரையால் திருத்தித் தூயவராக்கினார் கௌதம புத்தர்.

ஒரு சமயம் சிரவஸ்தி என்ற ஊரில் வீடுவீடாகச் சென்று யாசகம் கேட்டு வந்தார் புத்தர். ஒரு பிரா மணர் வீட்டுக்கும் சென்றார். பிராமணரோ "மழுக்கைத் தலையுடையவனே! துர்ப்பாக்கியனான சந்நியாசியே! சமூகத்திலிருந்தும் ஜாதியிலிருந்தும் நிராகரிக்கப்பட்ட வனே! அருகில் வராதே. தூரமாக நில்" என்று அலறினார்.

"பிராமணரே! சமூகத்தில் நிராகரிக்கப்பட்டவர் யார் என்று தங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினார்.

"எனக்குத் தெரியாது" என்றார் பிராமணர்.

"வெறுப்பு, மூர்க்கத்தனம், தீயகுணம், அகங்காரம் உடையவன்"

"கருணையில்லாமல் உயிரினங்களையும் மக்களையும் வதைப்பவன்"

"ஈவு, இரக்கமில்லாமல் கிராமங்களையும் குடியிருப்பு களையும் அழித்துக் கொடுமைக்குள்ளாக்குபவன்."

"மற்றவர் பொருளைத் திருடுபவன்".

"பாதையில் தனியாகச் செல்பவனைக் கொள்ளை யடித்துக் கொல்பவன்".

"பணத்திற்காகவும் தன் சுயநலத்திற்காகவும் பொய் சொல்பவன்"

"நல்லதைச் சொல்லாமல் கெட்டதைக் கூறி தவறாக நீதி புகட்டுவோன்".

ஆகியோர் தான் சமூகத்தில் நிராகரிப்பதற் குரியவர்கள். நிராகரிக்கப்படுவோர் என்று சொல்லுவது இவர்களுக்குத்தான் பொருந்தும்; மற்றவர்களுக்கு அல்ல. பிறப்பிலே ஜாதியில்லை. உயர்ந்தவன்; தாழ்ந் தவன் என்ற பாகுபாடில்லை. ஒருவருடைய குணமும் அவர் செய்யும் செயலும் அவரைச் சமுதாயத்தில் உயர்ந்தவராகவும், தாழ்ந்தவராகவும் ஆக்குகிறது. பிறப்பிலே சாதி என்று சொல்லுவதும், வாழ்வில் பிரித்துப்பார்க்கும் பழக்கமும் அறியாமையாலும் அகந்தையாலும் விளைவது; இவை அகலவேண்டும்" என்று புத்தர் அறிவுரை வழங்கினார். பிராமணர் இதைக் கேட்டு மனம் வருந்தித் திருந்தி, புத்தரின் சீடரானார்.

தன்னுடைய போதனைகளை மக்களிடம் கட்டாய மாகத் திணித்துப் பரப்ப வேண்டுமென்பதைப் புத்தர் விரும்பவில்லை. மக்கள் தாங்களாகவே சிந்தித்து மனம் தெளிந்து ஏற்றுக் கொள்ளட்டும்; இல்லையேல் அவசரமோ, அவசியமோ இல்லையென்று மகத்தான நன்னெறியைப் புத்தர் பெரிதும் வலியுறுத்தினார். பிற நெறிகளையும், மதத்தினரையும் மதித்தார். இந்தச் சீரிய பண்பு "சீஹா" என்ற சேனாதிபதியின் வாழ்க்கை நிகழ்ச்சியிலிருந்து தெரிகிறது. வைசாலி குடிஅரசின் முக்கிய சேனாதிபதி சீஹா என்பவர். அதிகாரபலமும், ஜைனமதத்தின் மீது பற்றும் கொண்டவராக விளங்கிய சீஹா மக்களிடம் மிகுந்த மரியாதை பெற்றிருந்தார். அவர் புத்தரைப் பார்க்க வேண்டும், அவருடன் கலந்துரையாட வேண்டும் என்று ஆவல் கொண்டார். அவரைச் சந்திக்க புத்தர் மறுத்து வந்தார். பின்பு அவருடைய விடா முயற்சிக்கும் வேண்டுதலுக்கும் இரங்கிய புத்தர், அவரைச் சந்தித்துப் பேச இணங்கி னார். பல நாள்கள் இருவரும் சந்தித்து உரையாடினர்.

பௌத்த நெறியில் மனம் திளைத்துப் புத்தரின் சீடராக விரும்பினார். ஆனால் புத்தரோ "தாங்கள் ஜைன மதத்தில் நம்பிக்கையுள்ளவர். ஆகவே உடனே மனத்தை மாற்றிக்கொண்டு என்னுடைய நெறிகளை ஏற்க அவசரப்படாதீர்கள்; தீர யோசியுங்கள். கட்டாயம் இல்லாமல் தெளிந்த எண்ணத்துடன் முடிவெடுங்கள்" என்று அறிவுறுத்தினார்.

"தாங்கள் ஓர் அபூர்வ சமயகுரு. பிற சமயத்தினராக இருந்திருந்தால் உடனே என்னை ஏற்றுக்கொண்டு, இதோ, ஜைன மதத்தைச் சேர்ந்த சேனாதிபதி என்னு டைய நெறியைத் தழுவியுள்ளாரென்று ஊரறிய பெருந்

நமத்த பட்டாசுகள்



வெ. இறையன்பு

இன்று தீபாவளியாம்!
பட்டாசு நோம்பியாம்!
ஊரெல்லாம் பட்டாசுச் சத்தம்
காதைப் பிளக்கிறது.

கந்தக மருந்தும், பாஸ்பரஸ் நெடியும்
பழக்கமாகிவிட
தொடக்கத்தில் துணைக்குவந்த
இருமலும் பின் தங்கிவிட
மனசெல்லாம் ஓர் ஏக்கமிருக்கும்.
என் சோட்டுக் குழந்தைகள் எல்லாம்
வெள்ளை வெளேரென
சீருடையணிந்து
பூட்ஸுக்காலுடனும்
முதுகில் புத்தகப்பையுடனும்
பள்ளிக்குச் செல்கையில்
நான் மட்டும்
அழுக்குக் கவுனுடனும்
பழைய சோற்றுத் தூக்குடனும்
ஆலைச் சங்கூத
வேலைக்குப் போகணும்.
எங்கள் ஊரில்,
என்னை மாதிரியே இன்னும்
ஏகப்பட்ட பசங்க
பட்டாசு ஆலைக்குப் போய் வருகிறோம்.
போன வருஷம்
எங்கள் பக்கத்து ஆலையில்
தீப்பிடிச்சு
கனகாவோட அண்ணன்
கருகிப் போனான்.
ஆனால்,
கனகா இன்னமும்
ஆலைககுத்தான் போகிறாள்.

கருகிப் போன
கனகா அண்ணன் மூஞ்சி
எனக்கும்
அவ்வப்போது கனவில் வரும்.
பயமாயிருக்கு.
ஆனால் போகமாட்டேன் என
அப்பாவிடம் சொன்னால் அடிவிழும்.

முதலாளி,
நேற்று எங்களுக்கெல்லாம்
பட்டாசு பாக்கெட்
இனாமாய்த் தந்தார்.
யாருக்கு வேணும் இது?

பட்டென்று வெடிக்கின்ற
பட்டாசைப் பார்த்தாலே
பத்திக்கிட்டு வருது.

நானும் முதலாளி கொடுத்த
பட்டாசைத் தீயிலே போடப்போறேன்.
வெடிக்கறதுக்காக இல்லே...
பொசுக்கறதுக்காக.

"அதிகமா
பட்டாசு வாங்கி காசைக் கரியாக்காதேடா"
பக்கத்து வீட்டு மாமி
பையனிடம் சொல்வது காதில்
விழுகிறது.

பட்டாசால் உங்களுக்குக்
காசு மாத்திரம் கரியாகுது.
எங்களுக்கு?
வாழ்க்கையே சாம்பலாகுதே,
என்ன
செய்யறது?

தீபாவளியாம் தீபாவளி!
கண்ணன் வந்தாராம்
நரகாசுரனைக் கொன்னாராம்...

ஒருத்தரைக் கொன்னாப் போதுமா?

கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்திருப்பார்கள். தாங்களோ என்னைச் சிந்திக்குமாறும், தெளிவான முடிவெடுக்குமாறும் கூறுகிறீர்களே" என்று மிக வியப்புடன் கூறினார். பின்னர் புத்தர், தன் சீடனாக அவரை ஏற்றுக் கொண்டார். அதே சமயத்தில் சேனாதிபதி ஜைனமதத்தினருக்குக் கொடுத்துவந்த சலுகைகள், செய்து வந்த தர்மங்கள் யாவும் நிறுத்தாமல் தொடர்ந்து நடைபெறுமாறு ஏற்பாடு செய்தார்.

கௌதமபுத்தர் தமது எண்பதாவது வயதில் கி.மு.544-வைசாக பூர்ணிமா நாளன்று மகாபரிநிர்வாண மடைந்தார்.

"சக சந்நியாசிகளே! எல்லாம், எல்லாரும், தேய்வதும், அழிவதும் இயற்கை. உங்களுடைய விடுதலை, மீட்சிக்குப் பாடுபடுங்கள். நீங்களே உங்களுக்கு ஒளிவிளக்காகத் திகழுங்கள்" என்று புத்தர் கடைசி அறிவுரையாகப் போதித்தார்.

மனிதன், மனிதனாக வாழ வேண்டும். அவனுக்கு அவன் உள்ளமே கண்ணாடி. அதுவே அவனுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. நன்னெறியுடன் வாழும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி, சமத்துவம், சகோதரத்துவம், என்னும் நற்குணங்களைக் கொண்டு சமுதாயத்திற்குத் தொண்டு செய்வது இன்று நம் நாட்டிலுள்ள மக்கள் அனைவரின் கடமையாகும். அதுவே கௌதமபுத்தருக்கு நாம் செலுத்தும் காணிக்கையாகும்.

வினோபா பாவே மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள ககோடே என்னும் ஊரில் 1895ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி பிறந்தார்.

இந்த ஊர் அந்தக் காலத்தில் இருந்த பரோடா சமஸ்தானத்தில் இன்றைய கோல்பா மாவட்டத்தில் இருக்கிறது.

அவருடைய தந்தையாரின் பெயர் நரகரி சம்புராவ் அம்மாவின் பெயர் ருக்குமணிதேவி.

வீர சிவாஜியின் காலத்தில் மந்திரிகளாக இருந்த பீஷ்வாக்கள் பரம்பரையில் வந்த பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் இவர்கள். இவரது தந்தையார் பரோடா அரசு ஊழியத்தில் சில காலம் இருந்தார்.

பின்னர் பஞ்சாலைப் பொறியியல் (டெக்ஸ்டைல் டெக்னாலஜி) கற்று பக்கிங்காம் கர்னாட்டிக் மில்லில் வேலை பார்த்தார். மேற்கத்திய அறிவியலில் ஆர்வ முடையவர் அவர். பஞ்சாலை நுணுக்கத்தில் பிரபல மாக விளங்கும் காக்கித் துணியை முதன் முதலில் கண்டுபிடித்தவரும் அவரே. ஆராய்ச்சிப் பிரிவில் அவருக்கிருந்த அக்கறை இதன்மூலம் தெரிகிறது.

தமது தாத்தாவிடமிருந்து வினோபா குழந்தைப் பருவத்திலேயே சமுதாய சீர்திருத்தம் மற்றும் மத சகிப்புக் கொள்கைகளில் நாட்டம் பெறும் முதல் பாடத்தைக் கற்றார்.

ஜாதி, மத, பேத, பாவனை இல்லாதவர் அவருடைய தாத்தா. அவருடைய குடும்பத்திற்குச் சொந்தமான சிவன் கோயிலை அக்காலத்தில் அரிஜன மக்களுக்குத் திறந்துவிட்டு ஜாதிப் பிரஷ்டமானவர் அவர்.


வினோபாவின் அம்மா பக்தி பாவனையும் புலன் அடக்க அனுஷ்டானமும் பெற்றவர். எளிமையும் அடக்கமும் உருவானவர். விரதங்களில் தீவிரமுள்ளவர். அன்புடன் அண்டை அயலார்க்கு உதவும் விசாலமான மனது உடையவர்.

அவர் மத அனுஷ்டானங்களில் தீவிரமானவரா யினும் ஜாதி வித்தியாசம் சிறிதும் பாராட்டுவது இல்லை.

குழந்தைப் பிராயத்தின் குணநலன்கள் தம்மிடம் படிவதற்கு அம்மா காரணமாக இருந்தார் என்று வினோபா கூறுவதுண்டு.

அம்மாவை அவர் நினைவுகூர்ந்து பேசத் தொடங்கி விட்டால் அவருடைய கண்களில் நீர் மல்கும்.

"எனக்கு ஏதேனும் சக்தி இருக்குமானால் அது அம்மா கொடுத்த சொத்தே தவிர வேறில்லை.' அவருக்கு நாம பஜனை பாடுவதிலும் பக்த துக்காராம் பாடல்களிலும் நாட்டம் அதிகம்.





"கீதையைப் பக்தியுடன் படித்துப் புரிந்துகொள்ள முயலுவார். எளிமையான முறையில் மராத்தி மொழியில் கீதையைப் படித்து மகிழவேண்டும் என்று அவர் விரும்புவது உண்டு.

"அவ்விருப்பத்ை ,வர் என்னிடம் தெரிவித்தார். அப்போது அவரது ◌ருப்பத்தை நிறைவேற்ற இயலாமல் போயிற்று. அவர் மறைந்த பின்னர் 1930ஆம் ஆண்டில் அதனை நிறைவேற்றினேன்.

"அம்மாவின் நினைவாக மராத்தி மொழியில் வெளியான கீதைக்கு 'கீதாமயி'- கீதைத்தாய் என்று பெயரிட்டேன்" என்று வினோபா அடிகள் உருக்கத்துடனும் மன நெகிழ்வுடனும் கூறுவது உண்டு.

வினோபாவுடன் சேர்ந்து உடன் பிறந்தவர்கள் ஐவர், அவர்களில் ஒருவர் சகோதரி. மணமான சில ஆண்டுகளில் அவர் இறந்துவிட்டார். அனைவருக்கும் இளையவரான தாத்ரேய என்பவர் சிறு பிராயத்திலேயே இறந்துவிட்டார்.

மற்ற மூன்று சகோதரர்களில் வினோபா மூத்தவர். இளையவர்களில் ஒருவரான பால்கோபா பாவே பம்பாய்க்கு அருகிலுள்ள உருளிகாஞ்சன் என்னும் இடத்தில், காந்தியடிகள் நிறுவிய இயற்கை வைத்திய நிலையத்தின் பொறுப்பேற்று அத்துறையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருந்தார்.

மூன்றாவது சகோதரரான சிவாஜிபாவே சிறந்த சம்ஸ்கிருத வல்லுநர். தத்துவமேதை. வினோபா அடிகள் மறைவிற்குப் பின்னர் அவர் பவுனார் ஆசிரமத்தில் தங்கி இருந்தார்.

இந்த மூன்று சகோதரர்களும் சிறிய வயதிலேயே சந்நியாச விரதமெடுத்துக் கொண்டவர்கள்.

"சிறந்த முறையில் இல்லறம் ஏற்று நடத்துகிற ஒருவர் அந்தக் குடும்பத்திற்குப் புண்ணியம் தேடித் தருகிறவர் ஆகிறார்.

"ஆனால் சிறந்த சந்நியாசம் ஏற்று நிறைவேற்றுகிற ஒருவரோ அந்தக் குடும்பத்திற்கு நாற்பத்தி இரண்டு தலைமுறைகளுக்கு வேண்டிய புண்ணியம் பெற்றுத் தருகிறவர் ஆகிறார்" என்று அம்மா கூறுவதுண்டாம்! இவ்வாறு கருதும் தாய்மார்கள் மிக அபூர்வம்.

அம்மாவின் ஆசி இந்த மூன்று சகோதரர்களும் சந்நியாசத்தை ஏற்று நிறைவேற்றுவதற்கு வரப்பிரசாதமாக அமைந்தது.


வினோபாவின் குழந்தைப் பிராயத்து நாமம் விநாயக். முதல் ஒன்பது ஆண்டுகள் வரை அவரது குழந்தைப் பிராயம் அவரது கிராமத்தில் கழிந்தது. பின்னர் வேலை நிமித்தம் தந்தை பரோடாவில் இருக்‌ₑ நேரிட்டதால் குடும்பம் அங்கு குடியேறிற்று.

விநாயக் ஆரம்பப் பள்ளியில் மூன்றாம் வகுப்பில் சேர்ந்தார். வகுப்பில் அவர் எப்போதும் முதல் மாணவராகவே இருந்தார். பரிசுகள் மற்றும் உதவித் தொகையும் பெற்றார்.

"கடவுளுக்கு அடுத்தபடி எனக்கு ஏதேனும் ஒன்றில் நாட்டம் அதிகம் என்றால் அது கணிதசாஸ்திரத்தில் தான்" என்று அவர் கூறுவதுண்டு.

அவர் தமது மாணவப் பருவத்தில் லோகமான்ய திலகரின் வார இதழைத் தவறாது படித்து வந்தார். திலகரின் தீவிர தேசபக்தி கண்டு வியப்புற்றார்.

"சுதந்திரம் என் பிறப்புரிமை" என்று முதல் முழக்கமிட்டவர் அவர் அல்லவா! ஆயினும் அந்தக் காலத்தில் வங்காளத்தில் நடைபெற்று வந்த தீவிர



நோக்குள்ள பயங்கரவாதிகளிடம் அவருக்கு நாட்டம் அதிகம். படிப்பு முடிந்ததும் அந்த இயக்கத்தில் சேர வேண்டும் என்று அவர் கனவு கண்டதுண்டு.

தேச விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக சக மாணவர்களைக் கொண்டு "வித்யார்த்தி மண்டல்" என்று ஒரு சங்கத்தை நிறுவி சுதந்திரப் போராட்டச் செய்திகளையும், நூல்களையும் மாணவர் மத்தியில் புழங்கச் செய்தார்.

மெட்ரிகுலேசன் பரீட்சையில் 1913–ஆம் ஆண்டில் தேறினார். அடுத்து பரோடா கல்லூரியில் இண்ட்ரீமீடியட் வகுப்பில் சேர்ந்தார்.

அந்தக் காலத்தில் பல்கலைக்கழகத் தேர்வு எழுதுவதற்குப் பம்பாய் செல்லவேண்டும். தேர்வு எழுதுவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் ஒருநாள் அவர் தனது படிப்புச் சான்றிதழ்களைத் தீமிட்டுக் கொளுத்தினார். இதைக் கண்டு அம்மா பதறியபோது, "அகந்தையைக் கொளுத்திக் கொண்டிருக்கிறேன்" என்று அமைதியாகப் பதில் கூறினார்.

பின்னர் இன்டர் தேர்வுக்குப் பம்பாய் சென்ற அவர், சூரத்தில் இறங்கி பிரம்ம வித்தையில் நாட்டம் கொண்டு காசியை நோக்கிப் பயணத்தைத் திருப்பினார்.

"தேர்வு எழுதச் செல்லுவதற்குப் பதிலாக நான் வேறு திசை நோக்கிச் செல்லுகிறேன். என்னிடம் உங்களுக்கு நம்பிக்கை உண்டு. அதை நான் காப்பாற்றுவேன். தர்மத்தின் வழியிலிருந்து தவற ‐ாட்டேன். கவலை வேண்டாம்" என்று தந்தைக்குக் கடிதம் எழுதி அனுப்பிவிட்டு காசி நகர் போய்ச் சேர்ந்தார்.

காசியில் அவர் சம்ஸ்கிருதம் படிப்பதில் ஆழ்ந்தார். குறிப்பாக வேதம், உபநிஷதங்கள் கற்பதில் ஆர்வம் காட்டினார்.

அன்னதானச் சத்திரத்தில் கிடைக்கும் எளிய ஒருவேளை உணவே அவருக்கு ஆகாரம். இலவச சம்ஸ்கிருதப் பாடசாலையில் படிப்பு, மீந்த நேரம் முழுவதும் கங்கைக்கரையில் ஏகாந்தமான இடத்தில் உட்கார்ந்து சிந்தனையும் நூல் ஆராய்ச்சியும். இவ்வாறு ஓராண்டு காலம் அங்கு வாழ்ந்தார். அத்தருணத்தில் காசியில் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

அன்னிபெசன்ட் அம்மையார் காசி இந்து சர்வகலாசாலை நிறுவும் அடிக்கல்நாட்டு விழாவை ‐ து நடத்தினார். அவ்விழாவிற்கு லார்டு ஹார்டிஞ் என்ற வைசிராய் தலைமை தாங்கினார். அந்தக் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த சுதேச சமஸ்தான மகாராஜாக்கள் பலர் அதில் கலந்து கொண்டிருந்தனர்.

காந்தியடிகள், முக்கிய பிரமுகர்கள் பொது மக்கள் எல்லாரும் வந்திருந்தனர்.


அந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்த சமஸ்தானாதி பதிகளின் ஆடம்பரமான விழாக்கோலம் காந்தியடி களின் கண்களை உறுத்திற்று. அவர் தமது உரையில் இந்த ஆடம்பரத்தைக் கண்டனம் செய்தார்.

"வறுமையில் வாடும் இந்தத் தேசத்தில், இந்த ஆடம்பர வரவேற்பும் ராஜாக்களின் படாடோபங்களும் கண்டிக்கத்தக்கவை" என்று கூறினார். அத்துடன் "தங்கள் போக்கை அவர்கள் மாற்றிக் கொள்ளாவிட்டால் இந்த மகாராஜாக்களை மக்கள் தூக்கி எறிவார்கள்" என்று எச்சரிக்கையும் விடுத்தார்.

காந்தியடிகளின் இந்தப் பேச்சு கூட்டத்தில் அமர்ந்திருந்த மகாராஜாக்கள் மத்தியில் பெரும் சல சலப்பை ஏற்படுத்திற்று. காந்தியடிகள் தம்மை அவமானப்படுத்தி விட்டதாக வைசிராய் உணர்ந்தார். மகாராஜாக்கள் கூட்டத்தினிடையில் எழுந்து வெளியே சென்றனர். பொதுமக்களோ காந்தியடிகள் தொடர்ந்து பேசவேண்டும் என்று கோரினர்.

இந்நிலையில், அன்னிபெசன்ட் கூட்டத்தை அத்துடன் கலைத்துவிட்டார். இச்செய்தி மறுநாள் தினசரிகளில் கொட்டை எழுத்துகளில் பிரசுரமாயிற்று. இது வினோபா வின் கண்களில் பட்டது. காந்தியடிகள்பால் அவர் மனம் சென்றது. அவரோடு கடிதத் தொடர்பு கொண்டார்.

ஆமதாபாத் சபர்மதி ஆசிரமத்தில் தம்மை வந்து பார்க்குமாறு வினோபாவுக்குக் காந்தியடிகள் அழைப்பு விடுத்தார்.



வினோபா, காந்தியடிகளை 1916 ஆம் ஆண்டில் சந்தித்தார். அப்பொழுது அவருக்கு வயது இருபது.

அவர் சபர்மதி ஆசிரமம் சென்ற சமயம் காந்தி யடிகள் சமையல் அறையில் பாத்திரம் துலக்கிக் கொண்டிருந்தார்.

இந்த வேலைகளுக்கிடையில் அவர்களிடையே முதல் சந்திப்பு நிகழ்ந்தது.

ஆசிரமத்தில் தங்க வினோபாவுக்கு அனுமதி கிடைத்தது.

தேச விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக சக மாணவர்களைக் கொண்டு "வித்யார்த்தி மண்டல்' என்று ஒரு சங்கத்தை நிறுவி சுதந்திரப் போராட்டச் செய்திகளையும், நூல்களையும் மாணவர் மத்தியில் புழங்கச் செய்தார்.

மெட்ரிகுலேசன் பரீட்சையில் 1913ஆம் ஆண்டில் தேறினார். அடுத்து பரோடா கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்தார்.

இந்த நிகழ்ச்சியை, வினோபா நினைவு கூர்ந்தபோது, "என்னிடம் இரண்டு முரண்பட்ட ஆசைகள் இருந்தன. ஒன்று, இமயத்துக்குச் சென்று தவம் இயற்றுவது. மற்றொன்று, வங்காளம் சென்று தீவிர இயக்கத்தில் பங்கு பெறுவது.

நான் காந்தியடிகளைக் கண்டதும் இவ்விரண்டு ஆசைகளும் ஒருங்கே நிறைவேறிவிட்டதை உணர்ந் தேன். ஆசிரமத்தில் சேர்ந்தது முதல், பகலில் கடின மான வேலை, இரவில் ஆழ்ந்த படிப்பு என்று முறைப்படுத்திக் கொண்டேன்."

ஒரு நாள் அதிகாலையில் அவர் தங்கியிருந்த குடிசைக்குள்ளிருந்து உபநிஷத்து சுலோகங்கள் ஒலிக்கும் குரல் கேட்டது.

ஆசிரமவாசி ஒருவர் இதைக் கேட்டு, உள்ளே எட்டிப் பார்த்தார். அப்போது வினோபா தம்மை அறியாது கண்மூடி உட்கார்ந்து சுலோகங்களைப் பாராயணம் செய்த வண்ணம் ஆழ்ந்து இருந்தது தெரியவந்தது.

இந்தச் செய்தி காந்தியடிகளுக்கு எட்டிற்று.

அன்று முதல் காந்தியடிகள் வினோபாவிடம் கீதை ஆராய்ச்சி மாணவரானார்.

"கீதை ஆராயத் தொடங்கியபோது எல்லாம் நான் வினோபாவின் காலடியில் இருப்பதாகவே உணரு கிறேன்" என்று காந்தியடிகள் அவரை 1940 ஆம் ஆண்டில் முதல் சத்தியாகிரகியாக உலகிற்கு அறிமுகப் படுத்தும்போது கூறினார்.

வினோபாவின் ஆழ்ந்த புலமையை அறிந்த மறுநாள் காந்தியடிகள் வினோபாவின் தந்தையாருக்குத் தமது கைப்பட, "உங்கள் மகன் வினோபா என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறார்" என்று எழுதினார்.

அப்பொழுதுதான் வினோபா பற்றிய விவரம் அவரது பெற்றோருக்குத் தெரிய வந்தது. அன்று முதல் அவர் வினோபா ஆனார்.

வினோபா என்பது காந்தியடிகள் அவருக்குச் சூட்டிய பெயர். "என்னிடமிருந்த புரட்சி என்னும் எரிமலை வெடித்துச் சிதறிப்போகாமல், அதனை வழிமுறைப்படுத்தி அதற்கு நிர்மாண ஆற்றலை அளித்தவர் காந்தியடிகள்" என்று வினோபா கூறுவார்.

ஒரு நாள் ஆசிரமத்தில் கக்கூஸ் சுத்தம் செய்யும் தோட்டி ஏதோ காரணத்தால் வெளியூர் செல்ல

நேரிட்டதால், அப்பணியை நிறைவேற்ற தோட்டி தமது மகனான ஒரு சிறுவனை அனுப்பியிருந்தான்.

அச்சிறுவன் மலம் நிரம்பிய வாளியைத் தூக்கமுடியாமல் திணறிக்கொண்டு இருந்ததைப் பார்த்த வினோபா அதைத் தாமே தூக்கிச் சென்று உதவினார்.

இதைக் கண்ட ஆசிரம வாசிகள் "ஒரு பிராமணர் இதைச் செய்வது அநியாயம்" என்றனர்.

அப்போது காந்தியடிகள் வெளியூர்ப் பயணம் சென்றிருந்தார்.

அன்று முதல் வினோபாவை ஆசிரம சமையல் அறைக்குள் நுழைய அனுமதிக்கவில்லை.

வினோபா இது குறித்து வருந்தவில்லை.

சமையலறைக்கு வெளியில் உட்கார்ந்து சாப்பிட்டார்.

அன்று முதல் கக்கூஸ் சுத்தம் செய்யும் பணியைத் தமது பணியாக ஏற்றார்.

இது ஆசிரமவாசிகளுக்கு மேலும் அதிகமாக ஆத்திரம் மூட்டிற்று.

காந்தியடிகள் ஆசிரமம் திரும்பியதும் முதல் வேலையாக ஆசிரமவாசிகள் இக்குற்றச்சாட்டை அவரிடம் கூறிப் பிரலாபித்தனர்.

"வினோபா செய்தது முற்றிலும் சரியானது. இன்று முதல் ஆசிரமத்தில் நாம் அனைவரும் ஆற்றவேண்டிய வேலை முறைகளில் கக்கூஸ் சுத்தம் செய்வதும் இடம் பெற வேண்டும். இதனை ஆட்சேபிக்கிறவர்கள் இன்றே ஆசிரமத்தை விட்டுச் செல்லலாம்" என்றார்.

அவ்வாறே சிலர் வெளியேறினர். அவர்களுள் காந்தியடிகளின் சகோதரியும் ஒருவர்.

காந்தியடிகளுக்கு வினோபாவிடம் இருந்த வாஞ்சையும் மதிப்பும் இதன் மூலம் உயர்ந்தது.

காசியில் சம்ஸ்கிருதம் பயின்று கொண்டிருந்தபோது இடையில் காந்தியடிகளைச் சந்திக்க வந்த வினோபா ஆசிரமத்திலேயே தங்கிவிட்டதால் அப்பயிற்சி முழுமை பெறவில்லை.

எனவே ஓராண்டு கால விடுமுறை அளிக்குமாறு காந்தியடிகளிடம் விண்ணப்பித்தார் வினோபா.

காந்தியடிகள் வினோபாவின் சிரத்தையைக் கண்டு, அவரது வேண்டுகோளை ஏற்று ஆசி கூறி விடை கொடுத்தனுப்பினார்.

1931ஆம் ஆண்டில் காலைப் பிரார்த்தனை முடிந்ததும் வினோபா ஒரே ஒரு மாற்று உடையுடன், வெறும் காலுடன் ஆசிரமத்தைவிட்டு வெளியேறிய தவக்கோலக் காட்சியைக் காந்தியடிகளும் ஆசிரம வாசிகளும் கண்டு கண்ணீர் மல்கினர்.

இவ்விடுமுறை ஆண்டில் வினோபா ஆறுமாத காலம் வாய் நகரில் இருந்த நாராயண சாஸ்திரி என்ற சம்ஸ்கிருத வல்லுநரிடம் பிரம்ம சூத்திரம், பதஞ்சலியோக சூத்திரம், உபநிஷதம், மனுஸ்மிருதி போன்ற ஞான நூல்களைப் பயின்றார்.

அடுத்த ஆறு மாதங்கள் ஊர்தோறும் பாத யாத்திரை செய்து நாட்டு நிலவரத்தையும் கிராமங்களின் நிலையையும் நேரில் கண்டு தெளிந்தார். ஓராண்டின் இறுதியில் அவர் ஆசிரமம் திரும்பினார்.

இதில் உள்ள ஆச்சரியம் என்னவெனில் ஆசிரமத்துக்கு அவர் திரும்பிய வேளை அதே தேதி, அதே மணிக்குச் சரியாக ஓராண்டு கழித்து அமைந்திருந்தது.

"கடவுளுக்கு அடுத்தபடி கணக்கு" என்று வினோபா அடிகள் கூறி வருவார் அல்லவா? அது இதன்மூலம் நிரூபணமாயிற்று.

இதைக் குறிப்பிட்டு காந்தியடிகள், "வினோபா ஒரு நடமாடும் ஆசிரமம்; அவர் சென்ற இடம் ஆசிரமமாகிவிடும்" என்றார்.

ஜம்னாலால் பஜாஜ் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சபர்மதி ஆசிரமத்தைப் போன்ற ஓர் ஆசிரமத்தை வார்தாவில் நிறுவுவதற்காக வினோபாவைக் காந்தியடிகள் அனுமதித்தார்.

வினோபா 1921 ஆம் ஆண்டில் வார்தா வந்தார். வார்தா ஏறக்குறைய பாரதத்தின் மையம் என்றே கூறலாம்.

எனவே வார்தாவில் ஆசிரமம் நிறுவ வேண்டும் என்ற ஜம்னாலால் கோரிக்கையை காந்தியடிகள் ஏற்றார். அதை நிறைவேற்றியவர் வினோபா.

பிற்காலத்தில் சேவாகிராமம் அமைவதற்கு அது வழிகோலியது.

நாகபுரியில் 1923ஆம் ஆண்டில் நடைபெற்ற கொடிப் போராட்டத்தில் வினோபா பங்கு பெற்று சிறைப் படுத்தப்பட்டார்.

காந்தியடிகள் தில்லியில் 1924ஆம் ஆண்டில் இந்து முஸ்லிம் ஒற்றுமை கோரி 21 நாள் உண்ணாவிரதம் மேற்கொண்ட சமயம், அவர் விருப்பத்தின் பேரில் அவருக்கு கீதை வாசித்து உரை கூற வினோபா தில்லி சென்றார்.

விரதம் முடிந்ததும் வார்தா திரும்பி ஆசிரமப் பணியைத் தொடர்ந்தார்.

அதே ஆண்டு காந்தியடிகளின் ஆணையின்படி திருவாங்கூரில் உள்ள வைக்கம் சத்தியாகிரகத்துக்குத் தலைமைதாங்கி நடத்திச் சென்றார்.

அது ஆலயப்பிரவேச சத்தியாகிரகம். அது தீவிரம் பெற்றபோது காந்தியடிகளே அதில் கலந்துகொள்ள நேர்ந்தது.

சத்தியாகிரகம் வெற்றி பெற்றது. ஆலயம் அரிஜன மக்களுக்குத் திறந்து விடப்பட்டது.

காந்தியடிகள் 1932ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் கலந்துகொண்டு பம்பாய் திரும்பியதும் காந்தியும், வினோபாவும் கைது செய்யப்பட்டனர்.

சிறைவாசம் முடித்து ஆசிரமம் திரும்பியபோது அரசாங்கம் ஆசிரமத்தைப் பூட்டி ஜப்தி செய்திருப்பது தெரிந்தது. ஆகவே வார்தாவுக்கு அருகிலுள்ள நால்வாடி என்ற கிராமத்தில் வினோபா ஆசிரமப் பணியைத் தொடங்கினார். ஆசிரமத்தைத் தொடங்குவதற்குக் கிராமவாசி ஒருவர் தமது ஆட்டுத்தொழுவம் ஒன்றை ஒதுக்கித் தந்தார்.

அந்தக் கிராமம் அரிஜனங்களும் விவசாயக்கூலிகளும் நிறைந்த ஊர். அந்தக் கிராமத்தின் வாழ்க்கைத் தரத்தை அவர் ஏற்று வாழ்ந்தார். அங்கு கையினால் நூற்கும் தக்ளி முறையில் சோதனை செய்தார். அவருடைய சோதனைகள் வியக்கத்தக்கவை. மலஜல விஞ்ஞானம் பற்றிய அவருடைய ஆய்வினை காந்திஜி பாராட்டினார்.

வினோபாவின் ஓய்வில்லாத கடின உழைப்பின் காரணமாய் அவரது உடல் நலிவுற்றது.

அவரைச் சில காலம் ஒரு மலைவாசஸ்தலத்திற்கு அனுப்பி ஓய்வு பெறுவதற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள். வினோபா அதை ஏற்கமறுத்தார். தற்செயலாக வார்தா நாம்பூர் சாலையில் இருந்த பவுனார் கிராமத்திற்கு வினோபா வந்தபோது அதுவே தமக்கு ஏற்ற மலைவாச ஸ்தலம் என்பதை உணர்ந்தார்.

அந்தக் கிராமம் "தாம்" என்ற நதிக்கரையில் சற்று மேடான இடத்திலிருந்தது. அங்கு ஜம்லானால் பஜாஜ் ஏற்கெனவே ஒரு சிறு வீடு அமைத்திருந்தார். அதில் 1938ஆம் ஆண்டில் வினோபா குடியேறினார். அதுவே பின்னர் பவுனார் பரம்தாம் ஆசிரமம் என்று பிரசித்தமாயிற்று.

அங்கு ஆசிரமம் நிறுவியபோது "காஞ்சன் முக்தி" என்ற விரதத்தை ஏற்றார். காஞ்சன் முக்தி என்பது பணப்பிடியிலிருந்து விடுதலை பெறுவதாகும்.

ஆசிரமப் பணிக்கு உழைப்பு தானம் பெறுவதே தவிர பணதானம் பெறுவதில்லை என்றும், ஆசிரமத்தில் விளையும் பண்டங்களைத் தவிர வெளியில் இருந்து உணவுப் பண்டம் இறக்குமதி செய்வதில்லை என்றும் விரதம் கொண்டார்.

ஆசிரம நீர்ப்பாசனத்திற்கென்று ஆசிரமவாசிகளே கிணறு தோண்டினார்கள்.

அக்காலத்தில் ஆசிரமப் பிரார்த்தனையும் கூட வேலைசெய்து கொண்டே நடைபெற்றது.

ஆசிரமவாசிகளின் தேவைக்கு அங்கேயே நூற்பும் நெசவும் நடைபெற்றது.

மாடுகளுக்குப் பதில் ஆசிரமவாசிகளே ஏர் இழுத்தனர்; கவலை இழுத்தனர்.

இந்தக் கடுமையான சோதனையை நேரில் கண்டபோது ஜெயப்பிரகாஷ் நாராயண் வினோபாவின் சீடரானார்.

காஞ்சன் முக்தி விரதத்தோடு இறைவன் தரிசனத்தை அனுபவ வாயிலாக உணரும் சாதனை புரியும் "பிரம்ம வித்யா மந்திர்" என்ற தவச்சாலை ஒன்றை வினோபா நிறுவினார்.

பிரம்ம வித்தை பயிலுவது அதன் குறிக்கோள். அதில் ஆண்களும் பெண்களும் இடம் பெற்றனர்.

டாக்டர் ஜாகீர்உசேன் அவர்கள் தலைமையின் கீழ் 1937ஆம் ஆண்டில் ஆதாரக்கல்வி ஆலோசனைக்குழு ஒன்றை காந்தியடிகள் நிறுவியபோது அதற்கு ஆலோசகராக வினோபா பணியாற்றினார்.

வினோபா பிறவி ஆசிரியர். அவர் அளித்த கல்விச் சிந்தனைகள் பிரசித்தி பெற்றவை. அவை பின்னர் நூல் வடிவில் வெளியாகி கல்வி இயக்ககத்தின் மூல நூல் ஆயிற்று.

காந்தியடிகள் 1940ஆம் ஆண்டில் தனிநபர் சத்தியாகிரகத்தைத் தொடங்கிய போது முதல் சத்தியாக்கிரகி யார் என்று உலகம் அறிந்துகொள்ள ஆவலுடன் காத்திருந்தது.

அனைவரும் ஜவாஹர்லால் நேருவின் பெயர் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தனர். காந்தியடிகள் வினோபாவின் பெயரை அறிவித்தபோது, உலகப் பத்திரிகை நிருபர்கள் அவரை அறிந்து கொள்ளத் துடித்தனர்.

டாக்டர் பூவண்ணன்

முடியாதது, கிடையாது!

'என்னால் இதுசெய முடியாது' - எனும்
எதிர்மறைப் பேச்சை விட்டுவிடு
'என்னால் எதுசெய முடியாது?' - எனும்
ஏற்ற கேள்வி கேள் தம்பி!

எள்ளினும் சிறிய எறும்பைப்பார் - அது
எதையும் இழுத்துச் செல்கிறதே!
உள்ளம் திகில் கொண்ட ஊக்கத்தால் - அது
உன்னைக் கூட இழுத்துவிடும்.

புல்லும் வெளியே தலைநீட்ட - இப்
பூமியைத் துளைத்து வழிகாணும்
கல்லும் அதனால் இடம்பெயரும்! - அதன்
காரணம், ஊக்கம், உழைப்பாகும்!

ஊக்கத் தோடு உழை தம்பி - நீ
உயர்வு பெறுவாய். இது உண்மை!
நோக்கம் யாவும் நிறைவேறும் - உனை
நோக்கி உலகம் கைகூப்பும்.

அந்த நாள் வரை அடக்கமாக, உலகம் அறியாத வண்ணம் நிர்மாண ரீதியான புரட்சியும், தவத்தில் வியத்தகு சாதனையும் ஆற்றிக்கொண்டு இருந்த வினோபாவின் புகழ் வானளாவ வெடித்து ஒளி வீசிற்று.

அதிலும் வினோபாவை அறிமுகப்படுத்தி எழுதிய காந்தியடிகளின் கட்டுரை அதற்கு ஓர் அரிய சாதனமாயிற்று. அந்த சத்தியாகிரகத்தில் கைது செய்யப்பெற்று அவர் நாகபுரி சிறையில் தவமியற்றிய காலத்தில் அவர் எழுதிய "சுயராஜ்ய சாஸ்திரம்" சர்வோதய அரசியலுக்கு அரசியல் இலக்கணமாயிற்று.

அதில் ராஜநீதி அகன்று லோகநீதி அதாவது மக்கள் நீதி மலரவேண்டும் என்பதற்கு ஏற்ற அரசியல் சாசனம் ஒன்றை வினோபா வகுத்துள்ளார்.

அந்தக் காலத்தில் வினோபாவைத் தமிழ்நாட்டில் உள்ள வேலூர் சிறைக்கு அரசு மாற்றியது.

அக்காலத்தைப் பயன்படுத்தி அவர் தமிழ்மொழி கற்றுத் தேர்ந்தார். வினோபாவுக்கு இந்திய மொழிகளில் அநேகமாக பெரும்பாலானவற்றில் புலமை உண்டு.

காந்தியடிகள் மறைவிற்குப் பின்னர் வினோபா ஆசிரமத்தைவிட்டு வெளியேறி அடிகள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்தார்.

அவர் காஞ்சன் முக்தி விரதம் மேற்கொண்டிருந்த காரணத்தால் பாதயாத்திரை மேற்கொண்டார்.

ஹைதராபாத் அருகிலுள்ள சிவராம் பள்ளியில் 1951ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் கலந்துகொள்ள பவுனாரிலிருந்து பாதயாத்திரையாக வந்து திரும்பும்போதுதான் அவருக்கு போச்சம்பள்ளி என்ற கிராமத்தில் பூமிதான இயக்கத்தின் தரிசனம் கிடைத்தது.

அந்தக் கிராமத்தின் அரி[illegible]கள் ச[illegible]பில் அன்றைய மாலைக் கூட்டத்தில் [illegible] கொடுப்போர் எவரேனும் இருக்கிறார்களா என்று கேட்டபோது ராமச்சந்திர ரெட்டி என்ற நிலச்சுவான்தார், நூறு ஏக்கர் தானமளிக்க முன் வந்தார்.

அது இறைவனின் அழைப்பாகவே ஒலித்தது.

அன்று முதல் அவரது பாதயாத்திரை பூமிதான யாத்திரையாயிற்று.

போச்சம்பள்ளி மாத்திரமல்ல, அவர் சென்ற அத்தனை கிராமங்களிலும் பூதானம் கிடைத்தது.

அதன் உபநிதிகளாக சம்பத்துதானம், புத்திதானம், சிரமதானம் என்று இவ்வாறு வளர்ந்து ஜீவன்தானமாகப் பெருகிற்று.

உலகம் வாழ்க- என்ற கோஷம் இந்த இயக்கத்தின் கோஷமாகும்.

வினோபா தமிழ்நாட்டில் 1956ஆம் ஆண்டில் பூதான பாதயாத்திரையைத் தொடங்கினார். காஞ்சிபுரத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் ராஜேந்திர பிரசாத், ராஜாஜி போன்றவர்கள் அவருடன் பங்கு பெற்றனர்.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் அவர் பாதயாத்திரை செய்தார். அவருடைய இயக்கம் கண்டு உலகம் வியந்தது.

உலக நாடுகளிலிருந்து அறிஞர்கள் பலர் அவரைக் காணவும் அவரது இயக்கத்தினைத் தெரிந்துகொள்ளவும் விரைந்தோடி வந்தனர்.

காந்தியடிகள் சாதித்த ரத்தம் சிந்தாத அகிம்சாபூர்வமான அரசியல் சுதந்திரத்துக்கு ஏற்ப வினோபாவின் அகிம்சாபூர்வமான பொருளாதார சுதந்திர இயக்கமாக பூதான இயக்கம் அமைந்தது.

மத்திய, மாநில அரசுகள் பூதான இயக்கத்தை அங்கீகரித்து சட்டமியற்றின.

வினோபாவின் பூதான யாத்திரை சமயம் சம்பல் பள்ளத்தாக்கு பகுதியில் இருந்த பிரபல கொள்ளைக் கூட்டத்தினரை அவர் மனம் மாறிச் சரணடையச் செய்த செய்தி பிரசித்தம்.

பாத யாத்திரைக் காலத்தில் புத்தகயாவில் சமன்வய ஆசிரமம், அசாமில் மைத்ரேயி ஆசிரமம் பங்களூரில் விசுவநீடம் ஆசிரமம் போன்ற ஆசிரமங்கள் பலவற்றை அவர் நிறுவினார்.

வியத்தகு நிலப்புரட்சி இயக்கத்திற்குப் பின்னர் அடிகளார் பவுனார் ஆசிரமத்தில் க்ஷேத்திர முக்தி ஏற்று சூக்கும யோகத்தில் ஆழ்ந்தார்.

அடிகள் கீதை மயமாக வாழ்ந்த அனுபூதி நிலையில் கீதையின் போதனைக்கு ஏற்ப- நான் வேறு- இவ்வுடல் வேறு என்ற ஆத்ம- அனாத்ம விவேகத்தின் பயனாக, இப்பூதவுடலை, பழுத்த பழத்தைப்போல் உதிர்த்து இகலோக வாழ்க்கையை நிறைவுபடுத்தி இனிமை எய்தினார்.

இந்நிகழ்ச்சி- பிரம்ம நிர்வாணம்- 1982ஆம் ஆண்டு நவம்பர் 15-ஆம் நாள் தீபாவளி அன்று ஒளி மயமாய் நிறைவேறிற்று.

பாவை ஆடுகின்றாள்!

தங்கவயல் லோகிதாசனார்

பாட லொலிக்க ஆட லரங்கில்
பாவை யாடு கின்றாள்!
பாட லிசைக்கும் ஆடற் கலைக்கும்
பார்வை தேடு கின்றாள்!
கூடப் பிறந்த குங்கும எழிலுடன்
குழைந்து ஆடு கின்றாள்!
சூடத் தகுந்த சுந்தர மலர்களை
சுமந்து ஆடு கின்றாள்!

ஒன்றாம் வாழ்வினில் உள்ளந் தோய்ந்திட
ஒடியும் இடையைக் காட்டி
ரெண்டாம் விழிகளில் தத்துவ மாடிட
நெஞ்சந் தன்னை மீட்டி
மூன்றாம் நெறிகளும் முழுதாய் இனித்திட
மென்னகை இதழில் தீட்டி
நான்கு வேத மாக நின்றவள்
நடனம் ஆடு கின்றாள்!

ஓடியாடிப் பாடு கின்றாள்
உயர்ந்த கலையிது தானாம்!
பாடி யாடித் தாவுகின்றாள்
பரதக் கலையிது தானாம்!
தேடிப்பார்க்கும் பார்வைக் கெல்லாம்
தேவை ஒன்று தானாம்!
கோடி கண்கள் பார்க்கும் பார்வை
கோலம் வரையத் தானாம்!

தீபாவளி நாளும் வருகவே!

புதுவை நித்திலன்



இத்தரை மீதில் பிறந்தது தீபாவளி!
எத்தகைப் பேறும் இனிது மணக்க!
உறுதுயர் நீக்கி உலகம் யாவும்
நல்க இந்நாள் நல்வாழ் வதனை!
தீபாவளித் திருநாள் பொலிவுற மேவிய
எங்கள் தமிழர் நன்னா ளிந்நாள்!
தமிழ்மணங் கமழும் தக்கார் நும்மனை
எழிலுருக் கொண்டு என்றும் சிறக்க!
வாழ்க! வாழ்க! வாழ்க! தீபாவளி
நலமெலாம் கொழிக்க நாளும் வருகவே!

கனவாகி மறைகின்றாள்

கவிஞர். இராணிதாசன்



கனவிடையே அவள் தோன்றிச் சிரிக்கின்றாள்
கண் விழித்தால் மறைகின்றாள்!
காவியத்து நாயகி என் மனதின் "ரதி"யாக
கரும்புச் சுவையை மறுக்கின்றாள்!
மது போதை யூட்டி "ரம்பை"யாக ஆடுகின்றாள்
அன்ன நடை பயின்று நடக்கின்றாள்!
நீல வானின் "ஊர்வசி"யவள் கற் கண்டாய் இனிக்கின்றாள்!
காணும்போது இதழ் கூட்டிச் சிரிக்கின்றாள்!
கன்னியவள் கண் விழித்தால்
கனவாகி மறை கின்றாள்!

மனிதனைத் தேடுகிறேன்!

கு. சண்முகசுந்தரம்

பாலுக்கு ஏங்கியே அழுகின்ற
பச்சிளஞ் சிசுவின் பசிநீக்கும்
பாலுடன் நீரைக் கலக்குகின்ற
பாவியும் இங்கொரு மனிதனாம்!

கண்களை இழந்த குருடர்க்கே
கனிவுடன் சிலர்தரும் காசுகளை
கண்ணிமைப் பொழுதிலே கவருகின்ற
காதகன் இங்கொரு மனிதனாம்!

உண்ணும் உணவுப் பொருள்களிலும்
உயிரினைக் காத்திடும் மருந்தினிலும்
கண்ணெதிரே கலப்படம் செய்கின்ற
கயவன் இங்கொரு மனிதனாம்!

கற்பின் செல்வியாம் கண்ணகியின்
கதையைச் சொன்னபின் கன்னியர்தம்
கற்பினைக் கவர்ந்திடத் துடிக்கின்ற
காமுகன் இங்கொரு மனிதனாம்!

நல்லவை அல்லாச் செயல்களிலே
நாட்டம் மிகுந்துள மாந்தருள்ளே
நல்லதொரு மனிதனைத் தேடுகிறேன்,
நானும் அவனைக் காண்பதென்றோ?

கோளே! நீ நெருங்காதே!

மு. வில்லவன்

எட்டி இருக்கும் கோள்நீதான்
கிட்டே வந்தால் ஆபத்து
தொட்டு உராய வருவாயேல்
முட்டிச் சிதறிப் போவாயே.

நெருங்கி நெருங்கி வந்துநீ
நெடிய விபத்தைத் தருகின்றாய்
நெறியை மாற்றிச் செல்வாயேல்
நாளும் கோள்கள் அழியுமே.

எட்டித் தனியே இருந்தாலே
ஒன்றை ஒன்று சுற்றலாம்
சுற்றி யுள்ள கோள்களும்
சுகமாய் நாளும் வாழுமே.

உலகில் வாழும் மனிதரின்
உயர்ந்த அறிவைக் கொண்டேஉன்
நிலையைக் காண வருவாரே
நீயும் அவற்றை உணரலாம்.

சிக்கனம்

கோவூர் இசைதாசன்

வான்மழையின் சிக்கனந்தான் தூற லாகும்
வால்உடும்பின் சிக்கனமே பல்லி யாகும்
தேன்கூட்டின் சிக்கனந்தான் பூக்க ளாகும்
தேங்காயின் சிக்கனமே இளநீ ராகும்
வான்நிலவின் சிக்கனந்தான் பிறையே யாகும்
வரிப்புலியின் சிக்கனமே பூனை யாகும்
மீன்வலையின் சிக்கனந்தான் தூண்டி லாகும்
மிச்சத்தின் சிக்கனமே சேமிப் பாகும்.

படுப்பதற்குப் பாய்போதும்; பல்து லக்கப்
பசும்வேம்பின் சிறுகுச்சி யதுவே போதும்
உடுப்பதற்கு எளியஉடை போதும்; நித்தம்
உண்பதற்குக் கிடைப்பதுவே போதும்; அள்ளிக்
கொடுப்பதற்கு மனமிருந்தால் போதும்; மாந்தர்
கொள்வதற்கு நல்லவையே போதும்; வாழ்வில்
எடுப்புடனே இருப்பதற்கும் உயர்வ தற்கும்
என்றைக்கும் சிக்கனமாய் இருந்தால் போதும்.

திட்டுத் திட்டாய்!

இமயபாரதி

திட்டுத் திட்டாய் தீவுகளாக
மேகம் அலைகிறது - வெண்
மேகம் அலைகிறது! - முழு
வட்ட நிலவைச் சுற்றிச் சுற்றி
ஆடி மகிழ்கிறது! - துணை
தேடி மகிழ்கிறது!


கண்ணைச் சிமிட்டி வான விண்மீன்
கண்டு களிக்கிறது - அழகைக்
கண்டு களிக்கிறது - புவி
மண்ணை அணைக்கும் மழலை அலைகள்
துள்ளிக் குதிக்கிறது! - நுரை
அள்ளிச் சிரிக்கிறது!

மரங்கள், செடிகள், கொடிகள் யாவும்
மகிழ்ந்தே அசைகிறது! - தென்றல்
வழங்கி ஒலிக்கிறது - மிகு
வறுமைத் தீயில் வதையும் கவிஞன்
வருத்தம் குறைக்கிறது - பசி
வராமல் தணிக்கிறது!

நீர்

— தாமரைச்செல்வி சுந்தர்

கடலினிலே பிறப்பெடுத்து - யாரும்
காணாமல் மேகமாகி
ஒன்றாகக் கூடிப் பேசி - ஊரும்
அறியாத போதமுது
நன்றாக நிலம் நனைத்து - பிறர்
நலமோடு வாழுதற்கு
செய்து விட்டு மீண்டும் - துளி
செருக்கின்றி கடலில் கலக்கும் - நீரே...
எம்தெய்வம் என்பேன்
நினைத்து நினைத்து வணங்கிடுவேன்!



ராஜாஜி மெச்சிய விமர்சனம்

பரந்தாமன்

அறிஞர் அண்ணா முதன் முதலாக திரைக்கதை வசனம் எழுதி வெளிவந்த படம் 'நல்லதம்பி'. கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் தயாரித்தது. தமிழ்த் திரைப்பட வரலாற்றில் அந்நாளில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய படம். இப்படம் பலரது பாராட்டைப் பெற்றாலும் சிலரின் கண்டனத்திற்கும் ஆளாகியது. அதில் நாஸ்திகப் பிரசாரம் இருப்பதாக ஒரு சில பத்திரிகைகள் கூட எழுதின.

அந்தப் படத்தை, பேராசிரியர் கல்கி அவர்கள் பார்த்துவிட்டு, "அன்னையும பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது நமது நாட்டின் பழமொழி. 'மாதுரு தேவோ பவா' 'பிதுரு தேவோ பவா' என்று உபநிஷதம் முறையிடுகிறது. எல்லா நாடுகளிலும் தம் பெற்றோரைத் தெய்வமாகப் போற்றுவது வழக்கமாக இருந்து வருகிறது. புத்தர், இயேசு, காந்திஜி மூவரும் தேசம் வாழ்வதற்காகத் தங்களை அர்ப்பணம் செய்தவர்கள். தீனர்களின் துயரம் தீர்ப்பதற்காக, தாங்கள் எல்லை இல்லா இன்னல்களை அனுபவித்தவர்கள். அவர்களைக் கடவுள்கள் என்று சொல்வது சாலவும் பொருந்தும் என்றும், இன்னும் சில பாராட்டுகளைத் தெரிவித்து 'கல்கி' இதழில் எழுதினார்.

புதுடில்லியில் அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி அதைப் படித்துவிட்டு, இரசிகமணிக்கு எழுதிய 7.6.49 தேதிய கடிதத்தில் "கல்கி' இதழில் 'கர்நாடகம்' என்.எஸ். கிருஷ்ணனின் 'நல்லதம்பி' படத்தைப் பற்றி எழுதி இருக்கும் விமர்சனம் மிகவும் நன்றாக இருந்தது என்று கிருஷ்ணமூர்த்திக்குச் சொல்ல வேண்டும். நல்ல டெக்னிக்கை விரும்புபவர்கள் வேறு படங்களைப் பார்க்கப் போங்கள். நல்ல இலட்சியம், நல்ல நடிப்பு, நல்ல சிரிப்பு - இவற்றை விரும்புகிறவர் 'நல்லதம்பி' படத்தைப் பாருங்கள் என்று மிக அழகாக முடித்திருக்கிறது. இந்த நடை கிருஷ்ணமூர்த்திக்குப் பிறகு யார் எழுதப் போகிறார்கள்?" என்று எழுதியிருந்தார்.

'நல்லதம்பியில் கிந்தனார் கதாகாலட்சேபத்தில் இன்னும் இரசமான விஷயங்கள் பல இருந்த போதிலும் அதில் சிறப்பாக இடம் பெற்றிருந்த இந்திரசபா என்னும் மதுவிலக்கு பிரசாரக் கூத்துக்குத்தான் மிகப்பெரிய வரவேற்பும் பாராட்டும் இருந்தன. அந்தப் படம் வந்த காலத்தில் தமிழ் நாட்டில் பூரண மதுவிலக்கு அமலுக்கு வந்திருந்தது. 1938 இல் ராஜாஜி முதல்வராக இருந்த பொழுது சேலம் மாவட்டத்திலும் பின் வடஆர்க்காடு மாவட்டத்திலும் மதுவிலக்கை நம் நாட்டிலேயே முதன் முதலாகக் கொண்டு வந்தார். பின்பு, ஆட்சி மாறி வந்ததும் ஆங்கில அரசாங்கம் மீண்டும் மதுவை அமலுக்குக் கொண்டு வந்திருந்தது. காங்கிரஸ்காரர்கள் ஆட்சி திரும்பவும் ஏற்பட்டதும் பூரண மதுவிலக்கைக் கொண்டு வந்திருப்பதில் ராஜாஜிக்கு அளவற்ற மகிழ்ச்சி.

அதனால் மதுப்பழக்கத்தில் இருந்து வந்த மக்களுக்கு மாறுதலாக, பொழுதுபோக்குகளை ஏற்படுத்த வேண்டும் என்பது அவருடைய கருத்து. அதனால் அவர் சென்னையில் உள்ள அமைச்சர் பக்தவத்சலத்திற்கு 'நல்லதம்பி' படத்தில் உள்ள மதுவிலக்கு காட்சிகளை நீங்கள்போய்ப் பார்த்துவிட்டு மக்களிடம் நாடெங்கும் பரப்பும் வகையில் ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள் என்று கடிதமெழுதினார். இந்தக் கடிதத்தின் நகலை ஆசிரியர் கல்கிக்கும் அனுப்பி வைத்தார். அவரின் முயற்சியில் பக்தவத்சலம், திரைப் படத் தணிக்கைக் குழுவினர், கல்கி, இன்னும் சில முக்கியமானவர்களும் 'நல்லதம்பி' படத்தைப் போட்டுப் பார்த்தனர்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் "இதுபற்றி ஒரு நல்ல முடிவிற்கு சீக்கிரம் வருகிறோம்" என்று சொல்லிச் சென்றனர். பின் அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் வேறொரு கிராமியப் படத்திற்குப் பாராட்டையும் பரிசையும் அளித்தனர். திரைமறையில் முக்கியமானவர்களின் சூழ்ச்சிகளால் இப்படி நடந்தது என்று பேசிக் கொண்டார்கள். இந்த நிகழ்ச்சிகளால் மிகவும் மனம் நொந்து தனது எதிர்ப்பைக் காட்டும் வகையில் கல்கி அவர்கள் திரைப்படத் தணிக்கைக் குழுவில் இருந்து வந்த தனது அங்கத்தினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டார்.

நல்லதம்பி படத்தில் உள்ள தெருக்கூத்து, முழுக் குடியர்களாக இருந்த ஒரு புருஷனும் மனைவியும், குடியை விட்டுவிட்டு அதன் கேடுகளை எடுத்து நாடெல்லாம் சொல்லி, மற்றவர்களைத் திருத்துவதும், நமது நாட்டில் மட்டுமல்ல, இந்திர லோகத்தில்கூட மதுவை ஒழிக்கப் பிரசாரம் செய்வதையும், இந்திரனைச் சந்தித்து அவனையும் திருத்துவதையும் கருத்தாகக் கொண்ட ஒரு கற்பனைக் கூத்து. அதில் கலைவாணரும் டி.ஏ. மதுரமும் இன்னும் சிலரும் பங்கு கொண்டு நடித்திருந்தனர்.

பைந்தமிழ்ப் பாவலர் நினைவோங்க பல்கலைக் கல்வி ஆலயங்கள்

— குன்றக்குடி பெரியபெருமாள்

இந்திய நாடு விடுதலை பெற்ற போது மிகப் பெரும்பான்மையான மக்களின் முகங்களில் கண்கள் காணப்பட இல்லை. கண்கள் வெறும் புண்களாகவே காட்சி தந்தன.

ஆம்; திருவள்ளுவரின் கருத்துப் படி அப்படித்தான் சொல்ல வேண்டும்.

'கற்றவர் முகத்தில் கண்கள் இருக்கும்; கல்லாதவர் முகத்திலோ கண்களைப் போல இரண்டு புண்கள் தான் இருக்கும்' என்பார் திரு வள்ளுவர்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்"

என்பது திருக்குறள்.

விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டு, படிப்பறிவு கொண்ட பாரத மக்கள் பதினைந்து சதவிகிதத்தினரே இருந் தனர். கல்லாதவரே எல்லா மாநிலங் களிலும் மிகப் பெரும்பான்மையினர்.

கல்வி அறிவைத் தழைக்கச் செய்வதே, இந்திய அரசாங்கத்தின் தலையாய கடமை ஆயிற்று. கல்வித் துறை மாநில அரசாங்கங்களின் ஆளு மைக்கு உட்பட்டதாயினும் நெறிமுறை களையும், நிதியுதவிகளையும் இந்திய அரசாங்கம் அவ்வப்போது வழங்கி, பாரத நாடு முற்றும் பள்ளிகளைப் பெருக்கி, படிப்பறிவு நாள் தோறும் மேலோங்குமாறு பார்த்துக் கொண்டது.

சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக வீற்றிருந்த ஜவஹர்லால் நேரு, அறிவியல், தொழில் நுட்பப் பயிற்சி, ஆராய்ச்சி ஆகிய உயர்கல்வி முறையும் இந்தியாவில் செழுமை பெற வேண்டுமெனச் சீரிய கவனம் கொண்டார். உயர் கல்விக்குரிய பல்கலைக் கழகங்கள், பத்தொன்ப தாம் நூற்றாண்டில் இந்திய நாட்டில் நான்கு மட்டுமே வேரூன்றிக் கிளை பரப்பி இருந்தன. சென்னைப் பல்கலைக் கழகம் (1857) பம்பாய்ப் பல்கலைக் கழகம் (1857) கல்கத்தா பல்கலைக் கழகம் (1857) அலகாபாத் பல்கலைக் கழகம் (1887) ஆகிய நான்கு அவைதான். இருபதாம் நூற்றாண் டின் இருபத்தைந்துக்குள் மேலும் எட்டுப் பல்கலைக் கழகங்கள் உரு வாக்கம் பெற்றன. அந்நிய ஆங்கில அரசாங்கம் 1925ஆம் ஆண்டு, அனைத்துப் பல்கலைக் கழக வாரியம் ஒன்றை (Inter-University Board) தோற்றம் பெற வைத்தது. பன்னி ரண்டு பல்கலைக் கழகங்களுக்கும் பயில்விப்பு நெறிமுறைகளை வாரியம் ஆலோசனைகளாக வழங்கி வந்தது.

1925 முதல் விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டு வரை மேலும் ஐந்து பல்கலைக்கழகங்கள் உருவாயின. ஆக, விடுதலை பெற்ற இந்தியா பதி னேழு பல்கலைக் கழகங்களை உயர் கல்விக்கென உருவாக்கம் பெற்றுத் திகழ்ந்தது.

இந்தியப் பல்கலைக் கழகங் களின் ஆக்கங்களையும், நோக்கங் களையும் வளர்முகப்படுத்துகின்ற குறிக்கோளைக் கொண்டு, 1948ஆம் ஆண்டு, பல்கலைக் கழகக் கல்விக் குழு ஒன்றை (University Education Commission) இந்திய அரசாங்கம் நிய மித்தது. அக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்ப, பல்கலைக் கழக மானியக் குழு (University Grants Commission) 1953 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. பாராளுமன்றத்தில் 1956 இல் மானியக் குழுவிற்குச் சுயாட்சி சட்ட உரிமைத் தகுதி (Autonomous Statutory Status) வழங்கப் பெற்றது. பல்கலைக் கழக ஒருங்கிணைப்பு உயர் கல்வித் தகுதியை நிர்ணயிக்கவும் தேர்வு, ஆராய்ச்சி நெறிகளை உருவாக்கவும், வளர்ச்சிக்குரிய மானியங்களை வழங் கவும், உயர் கல்வித் துறையில் உயரதி காரம் பெற்றுத் திகழ்கிறது பல்கலைக் கழக மானியக்குழு.

தமிழ்நாட்டில், நாடு விடுதலை பெற்றபோது இரண்டே பல்கலைக் கழகங்கள்தான் தழைத்துச் செழித் திருந்தன. சரியாக நூற்று முப்பத் தேழு ஆண்டுகளுக்கு முன்னர், நாட்டின் முதல் மூன்று பல்கலைக் கழகங்களுக்குள் ஒன்றாய், தோற்றத் தின் தொன்மையாலும், தொடர்ந் தாற்றிய அரிய தன்மையாலும் வர லாற்றுப் பெருமைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகமும், தமிழிசை இயக்கத்தின் நாயகரும், தமிழ்மொழி வளர்ச்சிக்குப் புரவலருமான ராஜா அண்ணாமலை செட்டியார் முன் னின்று தோற்றுவித்த அண்ணா மலைப் பல்கலைக் கழகமும் (1929) தமிழகத்தில் இடம் பெற்றிருந்தன.

தமிழகத்தில் அமைந்த அரசாங் கங்கள் படிப்பறிவைப் பெருக்கும் நோக்கத்தில் பள்ளிப்படிப்பை இல் வசமாக்கியும், மாணவருக்கு மதிய உணவளித்தும், கல்வியறிவு செழுமை பெற ஊக்கமும் ஊட்டமும் வழங்கிய தோடு, உயர்கல்வி வளர்ச்சியில் நாட்டம் கொண்டு, 1966ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக் கழ கத்தை நிறுவி, தொடர்ந்து பல்வேறு பல்கலைக் கழகங்கள் உருவாக்கம் கொள்ள வழிவகை செய்தன.

மகாகவி பாரதியின் நூற்றாண்டு 1982ஆம் ஆண்டில் வந்தபோது, கோய முத்தூரில் மருதமலைக்கு அருகே, எழிலார்ந்த நூறு ஏக்கர் நிலப் பரப்பில், "பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப் பாரை உயர்த்திட வேண்டும்" எனும் மகாகவியின் திருவாக்கை மெய்ப்பிக்கும் நோக்கத்தில் "பாரதி யார் பல்கலைக் கழகம்" தோற்றம் பெற்றது.

அதே ஆண்டில், திருச்சிராப் பள்ளியில், புதுக்கோட்டைச் சாலை யருகே, "என்றும் தமிழ் வளர்க! கலையாவும் தமிழ் மொழியால் விளைந்தோங்குக!" எனப் பேசிய பாவேந்தரின் நினைவோங்கப் "பாரதி தாசன் பல்கலைக் கழகம்" உரு வாக்கம் கொண்டது.

"கலைமகள் தன் பூர்வதிசை காணுங்கால் அவள் விழியுள் - வலது விழி தென்மொழியாம் மதியாரோ மதியுடையார்?" எனக்கேட்ட பேராசி ரியர் சுந்தரம்பிள்ளையின் பெய ரமைந்த "மனோன்மணீயம் சுந்தர னார் பல்கலைக் கழகம்" திருநெல் வேலியில் 1990 ஆம் ஆண்டு அமைக்கப் பெற்றது.

தமிழ்க் கவிஞர்களின் திருப்பெயர் களைக் கொண்ட அறிவாலயங்கள், தமிழ்மொழியின் செழுமைக்கு வள மூட்ட வேண்டியது கடமையே அல்லவா? கடமை எந்த அளவு உடைமையாக்கப் பெற்றுள்ளதென் பதைக் கண்டுவர, கொங்கு நாட்டுக் கோவைக்குச் சென்று, சோழநாட்டுத் திருச்சிக்கு வந்து, பாண்டி நாட்டு நெல்லைக்குப் போய்த் திரும்பி னோம். கண்டதையும், கேட்டதையும் காய்தல் உவத்தல் இன்றி இங்கே கொட்டிக் குவித்துள்ளோம்.



பாரதியார் பல்கலைக் கழகம்

கோவை மாநகரிலிருந்து பதினைந்து கி.மீ. தொலைவில், முருகப் பெருமான் வீற்றிருக்கும் மருதமலைக்கருகே, மேற்கு மலைத் தொடரின் பின்னணியில், பரந்த நிலப் பரப்பில் பாரதியார் பல்கலைக் கழகம் அமைந்துள்ள சுற்றுச் சூழல் கண்கவர் காட்சியாய்த் தோற்றம் தருகிறது. நுழைகிறபோது, மகாகவியின் நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் திருவுருவச் சிலை, நம் நெஞ்சை நிமிர்த்திப் பெருமிதம் கொள்ள வைக்கிறது! 'ஏறுபோல் நட' எனக் கூறுவதுபோலும் தோன்றுகிறது.

நேராகத் தமிழ்த் துறைக்கே செல்கிறோம்.

புகழார்ந்த கவிஞரான 'சிற்பி' பாலசுப்பிரமணியம் தமிழ்த்துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். பேராசிரியர் டாக்டர் 'சிற்பி' பால சுப்பிரமணியம் நாம் வருகை தந்துள்ள நோக்கத்தை அறிந்தவுடனேயே, துணைவேந்தர் டாக்டர் எஸ். சுப்பிரமணியத்திடம் நம்மை அழைத்துச் சென்றார். துணைவேந்தரின் அருமை பெருமைகளையும் நம்மிடம் கூறிக்கொண்டே வந்தார்.

பொறியியல் துறையில் உலகளாவிய பெரும்புகழ் பெற்றுள்ள பாரதியார் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எஸ். சுப்பிரமணியன், கோவை பி.எஸ்.ஜி. கல்லூரியில் விரிவுரையாளராக 1959இல் பொறுப் பேற்றுப் படிப்படியாக உயர்ந்து, அதே கல்லூரியின் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார். பல்கலைக் கழகப் பதிவாளராக 1989 முதல் 1991 வரை பணியாற்றியுள்ள அப் பெருமகனார் துணை வேந்தராகப் பொறுப் பேற்று நான்கு மாதங்களே ஆகியுள்ளன. பயில்வதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் பலமுறை வெளி நாடுகள் பலவற்றிற்குச் சென்று வந்துள்ள துணை வேந்தர், பாரதியார் பற்றிய முழுமையான ஆராய்வுக் களமாய்ப் பல்கலைக் கழகம் விளங்க வேண்டியது அவசியமென்றும், விளங்க வைக்க வேண்டிய தேவையான நடைமுறைகளைத் தாம் பேண இருப்பதாகவும் உறுதியுடன் கூறியது நம் உள்ளத்தை மகிழ்வித்தது.

பாரதியார் பல்கலைக் கழகம் 19 துறைகளைக் கொண்டுள்ளது. தமிழ்த் துறை 1985இல்தான் உருவாக்கம் பெற்றுள்ளது. கோவை, நீலகிரி, பெரியார் மாவட்டங்களின் கல்லூரிகள் பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆளுகைக்கு உட்பட்டவை.

கோவையில் உருவாகிய வானம் பாடிக் கவிஞர்களில் ஒருவரான



✹ டாக்டர் 'சிற்பி' பாலசுப்பிரமணியம்



✹ டாக்டர் எஸ். சுப்பிரமணியன்

'சிற்பி' பாலசுப்பிரமணியம், மொழியியல் துறையிலும், ரஷ்ய மொழியிலும் பட்டயம் பெற்றுள்ளார். புத்திலக்கியம், ஒப்பாய்வு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு ஆகிய துறைகளில் திறம் பெற்றுள்ள 'சிற்பி' சங்கப் பாடல்களில் ஆழ்ந்த புலமை கொண்டவராவார். தமிழ் நாட்டு அரசாங்கத்தால் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' அளிக்கப்பெற்று கௌரவிக்கப் பெற்றுள்ளார். 'கபிலர் விருது' 'கவிஞர் கோ' எனும் பட்டம் ஆகிய சிறப்புகளைப் பெற்றுள்ள கவிஞர் 'சிற்பி', சாகித்ய அகடமியின் பொதுக்குழு உறுப்பினராக உள்ளார். 'சிற்பி'யின் பல நூல்கள் பரிசு பெற்றுள்ளன. இத்தகைய சிறப்புகளை அடைந்துள்ள தமிழ்க் கவிஞர், தமிழறிஞர் சிற்பி, பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும்போது, தமிழ் வளர்ச்சிக்கானப் பல்கலைக் கழகச் செயற்பாட்டைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

அரசாங்கம் உருவாக்கியுள்ள 'பாரதி அறக்கட்டளை', பல்கலைக் கழகத் தமிழ்ப் பணிகளுக்கு உறு துணையாக உள்ளது. 'பாரதி-பாரதிதாசன் படைப்புக்கலை' பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப் பெற்றுள்ளன. நூலொன்றும் வெளியிடப் பெற்றுள்ளது. ஆண்டுதோறும் 'பாரதி சொற்பொழிவு' நிகழ்ச்சி தொடர்ந்து பேணப்பட்டு வருகின்றது. 'சிற்பி' போன்ற மாணவர்களால் தமது ஆசிரியர் 'டாக்டர் கா. மீனாட்சி சுந்தரனார் அறக்கட்டளை' உருவாக்கப் பெற்று, அதன் சார்பாகப் பல தமிழ் இலக்கியக் கருத்தரங்குகள் நிகழ்ந்துள்ளன. 'தர்மராஜ் செல்லம்மாள் அறக்கட்டளை' 'கோவைக்கிழார் அறக்கட்டளை' 'ப.சு. மணியம் அறக்கட்டளை' ஆகியவை தமிழ்நாட்டின் புகழார்ந்த தமிழறிஞர்களின் குரல்களைப் பல்கலைக் கழகத்தில் ஒலிக்கச் செய்துள்ளன.

தமிழின் பழமையான இலக்கியங்களிலும், புத்திலக்கியங்களிலும் ஆராய்ச்சி மேற்கொள்ளும் மாணவர்களுக்கு ஆய்வியல் நிறைஞர் (M.Phil) முனைவர் (Doctor) பட்டங்கள் பெறுவதற்கு வழிகாட்டி வருகின்ற பாரதியார் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து, இரண்டு ஆண்டுகளாகச் 'சொல்லடைவு' உருவாக்கி வரும் முயற்சி குறிப்பிடத்தக்கது. 1987ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற தமிழியல் முதுகலையில் (M.A.) ஏறத்தாழ ஐம்பது மாணவர்களுக்குப் பட்டமளித்துள்ள பல்கலைக் கழகம், அறிஞர்கள் டாக்டர் கருணாகரன், தயாளன், சிவசண்முகம் ஆகியோர் வழிகாட்டலில் மொழிபெயர்ப்பியல் துறையைச் செழுமையுறச் செய்து வருகின்றது. மொழி இயல் பற்றியும், மொழிபெயர்ப்புப் பற்றியும் டாக்டர் கருணாகரன் சிறந்த ஆய்வுகள் செய்து, சீரிய பெருமை பெற்றவராவார். சாகித்ய அகடமிக்காக எழுத்தாளர் ஆர். சண்முக சுந்தரம் பற்றிய அறிமுக நூல் உருவாக்கி, மலையாளத்தில் லலிதாம்பிகா அந்தர்ஜனம் படைத்துள்ள 'அக்னி சாட்சி'யைத் தமிழில் மொழிபெயர்த்து, அகடமியின் வேண்டுகோளுக்காகத் தமிழின் தற்காலக் கவிதைகள் தொகுப்பை உருவாக்கிக் கொண்டிருக்கும் பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் 'சிற்பி' பாலசுப்பிரமணியத்தின் காரியங்கள் யாவினுக்கும் கைகொடுத்து உதவும் தமிழறிஞர்கள் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையில் பணியாற்றி வருகின்றனர்.

1985-86களில் தமிழ்த் துறைத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவரும், 'வானம்பாடி' கவிஞர்கள் அமைப்பை உருக்கொள்ள வைத்தவர்களுள் ஒருவரும், புத்திலக்கியத் திறனாய்வுகளில் புகழ் கொண்டவரும், 'முல்லை ஆதவன்' எனப் பெயர் பெற்றவருமாகிய டாக்டர் ரா. சந்திரசேகரன் தமிழ்த் துறையில் இணைப் பேராசிரியராகவும், பாரதியின் நடையியல் பற்றி ஆய்வு செய்து பெருமை பெற்றுள்ள டாக்டர் வ.ஜெயா, நூல்கள் பல வெளியிட்டுள்ள டாக்டர் ஞானசேகரன், 'பொம்மலாட்டம்' பற்றிய ஆய்வில் கீர்த்தி பெற்றுள்ள டாக்டர். சி.மா. இரவிச்சந்திரன் ஆகியோர் தமிழ்த் துறையின் விரிவுரையாளர்களாகப் பொறுப்பேற்றுத் தமிழ்த்துறையை வளப்படுத்தி வருகின்றனர்.


'பாரதியார் படைப்புகளில் சமுதாயச் சிக்கல்கள்' 'பாரதியார் கட்டுரைகளில் உவமை' 'பாரதியார் வசன கவிதைகள் - ஓர் ஆய்வு' 'பாரதியார் - இந்தியா இதழ்க் கட்டுரைகள்' 'பாரதி மொழியியல் நடை ஆய்வு' 'பாரதியாரின் புனைகதைத் திறன்' ஆகிய ஆய்வுகள் மகாகவி பாரதி பற்றியவையாக தமிழ்த் துறையால் வழிகாட்டப்பெற்று மாணவர்களால் ஆய்வேடுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. பண்டை இலக்கியம், புத்திலக்கியம் ஆகியவற்றில் பல நூற்றுக்கணக்கான ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. 1986 முதல் பல ஆய்வுக் கருத்தரங்குகளும், நெறிப்பட்டறைகளும், அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்துள்ளமையை அறிகிறபோது மகிழ்ந்து போகிறோம். "சீரிய முயற்சிகள் சிறந்து மிக்கோங்கு!" எனும் கவியின் திருவாக்கையே பெருவாழ்த்தாகக் கூறி விடை பெறுகின்றோம்.

பாரதிதாசன் பல்கலைக் கழகம்

திருச்சிராப்பள்ளியிலிருந்து பத்து கி.மீ.தூரத்தில், புதுக்கோட்டைப் பெருவழியின் அருகே, 600 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் நுழைவாயிலில், கம்பீரமான இரண்டு யானைகளைக் கொண்ட தோரண வாயில் கலைச் செறிவுடன் விளங்குகின்றது. உணர்ச்சியை, எழுச்சியை, ஊக்கத்தையெல்லாம் கரைத்துக் குடித்துக் கனிந்த கவிஞர் பாவேந்தர், பல்கலைக் கழகத்தின் வானளாவிய கட்டடத்தைப் பின்புலமாகக் கொண்டு, வலக் கரத்தை இடுப்பில் வைத்து, சிலையுருவில் சிங்கம்போல் நிற்கும் தோற்றப் பொலிவு நம்மைச் சிலிர்க்கவைக்கிறது.

திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளின் உயரதிகார ஆளுமையைப் பெற்றுள்ள பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வீற்றிருக்கும் டாக்டர் வீர. முத்துக்கருப்பன், உலகப் புகழ்பெற்ற ஒரு பெரும் ஆய்வாளர்; விஞ்ஞானி! உயிரியல் துறையில் நோய்த் தடைக் காப்பின் நுட்பத்தை உலகறியச் செய்த பெருந்தகை. ஆய்வுகளுக்குரிய மானியத் தொகையாக இதுவரை ரூபாய் ஒரு கோடிக்கு மேல் பெற்றுள்ள துணைவேந்தர், ஏறத்தாழ உலகத்தின் அனைத்து நாடுகளுக்கும் சென்று, ஆய்வரங்கங்களில் ஆய்வுக்கட்டுரைகளை அறிவித்துப் பெரும் புகழும் பெற்றுள்ளார். 'பெறாத பரிசில்லை. வராத சிறப்பில்லை' எனச் சொல்லுமளவிற்குப் பாராட்டிப் போற்றப் பெற்றுள்ள டாக்டர் வீர. முத்துக் கருப்பன், அண்மையில்தான் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பொறுப்பை ஏற்றுள்ளார். "பைந்தமிழ் உணர்வும், பாவேந்தரிடம் ஈடுபாடும் கொண்டுள்ள துணை வேந்தர், தமிழின் செழுமைக்கு, முழுமையான உதவிகளை முயன்று வழங்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது!" என மகிழ்ந்து கூறுகின்றார் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் 'எழில்முதல்வன்' மா. இராமலிங்கம்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத் தமிழியல் துறையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள டாக்டர் மா. இராமலிங்கம் 'எழில் முதல்வன்' என இலக்கிய உலகில் பெரும் புகழ் பெற்றவர். தமிழின் புத்திலக்கியத் துறையிலும், ஒப்பாய்வு, திறனாய்வுத் துறைகளிலும் திறமும் உரமும் பெற்றுத் திகழும் அறிஞர் 'எழில் முதல்வன்' திறனாய்வு, கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு ஆகிய





✵ பேராசிரியர் எழில்முதல்வன்



✵ துணைவேந்தர் டாக்டர் வீர. முத்துக்கருப்பன்


துறைகளில் 22 நூல்களை வெளியிட்டுள்ளார். 1978 ஆம் ஆண்டு வெளியிட்ட 'புதிய உரைநடை' திறனாய்வு நூலுக்கு 1981ஆம் ஆண்டு சாகித்ய அகடமி பரிசும், பாராட்டும் அளித்துச் சிறப்பித்துள்ளது. 'விடுதலைக்குப் பின் தமிழ்ச் சிறுகதைகள்' எனும் 'எழில்முதல்வன்' படைத்த நூலுக்குத் தமிழ்நாட்டு அரசாங்கம், பாரதி நூற்றாண்டில் பரிசளித்துள்ளது.

சாகித்ய அகடமியின் செயற்குழு உறுப்பினராகவும், தமிழ்மொழி ஆலோசனைக் குழுவின் அமைப்பாளராகவும் உள்ள பேராசிரியர் 'எழில் முதல்வன்' இந்திய அளவிலான பல்வேறு அமைப்புகளின் பல்வேறு பொறுப்புகளை வகிக்கிறார். 1990இல் யுகோஸ்லாவியா நாட்டில் நடந்த அக்டோபர் எழுத்தாளர் மாநாட்டிற்கு இந்தியாவின் பிரதிநிதியாக இந்திய அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப் பெற்ற பேராசிரியர், சிங்கப்பூர், மலேசியாவுக்கும் சென்று, தமிழ் நலம் சிறக்கச் செய்துள்ளார். பாவேந்தர் பாரதிதாசன் இப் பெருமகனாரின் கவிதைகளைத் தொடர்ந்து 'குயில்' இதழில் வெளியிட்டு, "எழில் முதல்வன் நல்ல நல்ல செய்யுள் எழுதும் - தொழில் முதல்வன் ஆகின்றான் சூழ்ந்து" என வாழ்த்துக் கவிதை வழங்கியுள்ளார்.

தமிழ்த் துறையில் - 'அறிவியல் தமிழ் இன்றைய நிலை' 'பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் தமிழ்ப்பணி' ஆகிய நூல்களை வெளியிட்டும், கலைச்சொல் தொகுப்பில் ஈடுபாட்டுடன் பணியாற்றியும் வருகின்ற டாக்டர் இராதா செல்லப்பன் இணைப் பேராசிரியராகவும், நடையியல் கட்டமைப்பியல் தொடர்பான மொழியியல் கொள்கைகளைத் தமிழ் இலக்கியங்களுக்குப் பொருத்தியும், மக்கள் தகவல் தொடர்பான கொள்கைகளைத் தமிழில் வெளிவரும் இதழ்களுடன் பொருத்தியும் ஆய்வு மேற்கொண்டு வருகின்ற டாக்டர் அ.ஆவிஸ், பத்து நூல்களுக்கு மேல் வெளியிட்டும், பண்டை இலக்கியம், ஒப்பிலக்கியம், இலக்கிய மரபியல் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டும், பக்தி இலக்கியங்களின் வழியே இந்திய ஒருமைப்பாட்டைப் பேணவும் காக்கவும் செயல்முறைத் திட்டங்களை உருவாக்கியும் வருகின்ற டாக்டர் கி. இராசா, நூலாசிரியரும், நாட்டுப்புறவியல், பக்தி இலக்கியங்கள் ஆகிய இரு துறைகளை ஆய்வுக் களங்களாகக் கொண்டு செயற்பட்டு வருபவருமாகிய டாக்டர் அரு. மருததுரை ஆகிய பெருமக்கள் விரிவுரையாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

பாவேந்தர் பரதிதாசன் ஆய்வடங்கல் தயாரித்தல், பாரதிதாசன் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல், இக்கால இலக்கியத் திறனாய்வுக் கலைச் சொல் அகராதி உருவாக்கல், திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களிலுள்ள கோயில்களைப் பற்றிய விவரங்களைச் சேகரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபாட்டுணர்வுடன் செயலாற்றி வருகின்ற தமிழ்த்துறை, எம்.பில், பிஎச்.டி., ஆய்வுகளுக்கு முன்னுரிமை அளித்தும், ஆண்டு தோறும் பல்கலைக் கழக மானியக் குழுவினரால் நடத்தப்பெறும் தமிழ் ஆராய்ச்சியாளர் மற்றும் விரிவுரையாளர் தகுதிகாண் தேர்வுகட்குச் செல்லும் மாணவர்களுக்குப் பயிற்சி வகுப்புகளை நடத்தியும் வருகிறது. இங்கே, இக்காலத் தமிழ் இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, இந்திய இலக்கிய ஒப்பாய்வு, மொழிபெயர்ப்பியல், அறிவியல் தமிழாய்வு, நாட்டுப் புறவியலாய்வு போன்ற புதிய துறைகளே பெரும்பான்மையும் ஆய்வுக்கு மேற்கொள்ளப் பெறுகின்றன. புதன் கிழமை தோறும் கருத்தரங்கம் நிகழ்கிறது. கருத்தரங்கில் இடம்பெறும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப் பெற்று 'வேள்வி' எனத் தலைப்பிட்டு நூலாக வெளியிட்டுள்ளனர். தமிழ்த் துறையின் வளர்ச்சிக்கு உரியனவற்றை உவந்து வழங்கிய முன்னாள் துணைவேந்தர்கள் டாக்டர் ஞானம், டாக்டர் ச.முத்துக்குமரன், டாக்டர் மணி சுந்தரம் ஆகிய பேரறிவாளர்களைப் பெரிதும் நன்றியோடு தமிழ்த்துறையினர் நினைந்து போற்றுகின்றனர்.

இருபது துறைகளைக் கொண்டிருக்கும் பாரதிதாசன் பல்கலைக் கழகம், "புதியதோர் உலகம் செய்வோம்" எனும் புரட்சிக் கவியின் எண்ணத்திற்கு ஏற்ப, இந்திய அளவில் புகழ் பெற்ற 'சயனோ பாக்டீரியா ஆய்வு' வசதியையும், எரியந்துறைப் பள்ளியையும், நிர்வாக இயல் பள்ளியையும் உருவாக்கம் கொள்ள வைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்திய நாட்டின் புகழ்மிகு 'பட்நகர் அவார்டு' சிறப்பை இயற்பியல் துறை விஞ்ஞானி டாக்டர் எம். லெட்சுமணன் பெற்றிருக்கும் அருமை, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் தனிப்பெருமை.





✸ மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மாதிரி வடிவம்

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம்

திருநெல்வேலியில் 1990ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி கட்டபொம்மன், வ.உ.சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகளின் உயரதிகார ஆளுமையைப் பெற்றுள்ளது. பத்துத் துறைகளைப் பல்கலைக் கழகம் பெற்றிருப்பினும், அவை எல்லாம் ஓரிடத்தில் அமைய இல்லை." எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே!" எனப் பாடுவாரே பேராசிரியர் சுந்தரம் பிள்ளை? அப்படி திருநெல்வேலி நகரின் திசைகள் எங்கும் வாடகைக் கட்டடங்களில் துறைகள் பரவிக்கிடக்கின்றன. நிர்வாகத் துறை தாமிரபரணி ஆற்றங் கரையில், வருவாய்த் துறைக் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவதறிந்து அங்கு செல்கிறோம்.

பல்கலைக் கழக நிர்வாகக் கட்டடத்திற்குள் நுழைந்ததும், முன் வளாகத்தின் இடப்புறத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையின் மார்பளவுச் சிலை வைக்கப் பெற்றுள்ளது. அதன் அடியில் 'மனோன்மணீயம் சுந்தரனார்' என ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பெற்றுள்ள வாசகம், நம் கண்களில் படுகிறபோது, கண்கள் கரிக்கின்றன.

பதிவாளரைப் பார்த்தபின்னர், துணைவேந்தரைக் கண்டு கொள்ளச் செல்கிறோம். முகமலர்ந்து நம்மை வரவேற்கிறார் துணைவேந்தர் டாக்டர் வி. வசந்தி தேவி.

பிலிப்பைன்ஸ் மணிலாப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ள டாக்டர் வசந்தி தேவி, சென்னை இராணி மேரி கல்லூரியில் விரிவுரையாளராகவும், பேராசிரியராகவும் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றியுள்ள டாக்டர் வசந்தி தேவி, பெண்கள் நலத்திலும், முன்னேற்றத்திலும் சிரத்தை கொண்ட சீரிய பெண்மணி. தலைமைப் பொறுப்பிலும், செயலாளர் தகுதியிலும் பல்வேறு பெண்கள் நல இயக்கங்களில் பங்கு கொண்டு, 'எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கே, பெண் இளைப்பில்லை காண்' எனும் உணர்வை மங்கையருக்கு ஊட்டிய மாதரசியாக விளங்கும் டாக்டர் வசந்தி தேவி, ஆசிரியர் இயக்கங்களுக்கும் வாழ்நாளின் தமது அரிய நேரங்களை அர்ப்பணித்துள்ளார். துணைவேந்தரிடம் எழுப்பிய முதல் வினா: "தமிழ்க் கவிஞர் பெயரமைந்த ஒரு பல்கலைக் கழகத்தில், தமிழ்த் துறையே இல்லாதது பெருங்குறை அல்லவா?"

"இப்போதுதான், கடந்த மார்ச்சில், இந்தப் பல்கலைக் கழகம் அங்கீகாரம் பெற்றுள்ளது. பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் கிடைத்தால்தான், முயற்சிகளுக்கெல்லாம் வெற்றி கிட்டும். எங்கள் முயற்சிகளுள் தமிழ்த் துறையைக் கொண்டு வருவதும் ஒன்றுதான்" எனக் கூறிய துணைவேந்தர், நாம் அறிய வந்துள்ள நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு சில செய்திகளைச் சொல்கிறார்.

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம் அண்மையில் 'பாரதி இருக்கை' (Bharathi Chair) ஒன்றை உருவாக்கியுள்ளது. நாடகக் காப்பியம் வழங்கியுள்ள பேராசிரியர்



✸ டாக்டர் வி. வசந்திதேவி

சுந்தரம் பிள்ளையின் குறிக்கோளை நினைவில் கொண்டு, கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நாடகத் துறைப் பயிலரங்கம் ஒன்றை உருவாக்கி, மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து வருகின்றது. ஆங்கிலத் துறையைச் சார்ந்த டாக்டர் வி. பத்மா முன்னின்று டாக்டர் இராமானுஜம், ஞாநி ஆகியோர் துணை கொண்டு பயிலரங்க முகாம்கள் நடைபெற்று வருகின்றன. 'புதிய தமிழ் நாடகாசிரியர்களிடம் பெர்னாட்ஷாவின் தாக்கம்' என்றோர் ஆய்வை, ஆங்கிலத்துறைப் பேராசிரியர் டாக்டர் எஸ். இரவீந்திரநாதன் செய்துள்ளார். பெர்னாட் ஷா - ஜெயகாந்தன் முன்னுரைகளைப் பேராசிரியரே ஆங்கிலத்தில ஒப்பாய்வு செய்திருக்கிறார். ஆங்கிலத்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் ஆர். பாலசந்திரன் கலித்தொகையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். தமிழிசையைப் பேணும் நோக்கத்தில், 'இளைஞர் இசைக்குழு' ஒன்றைப் பல்கலைக் கழகம் உருவாக்கியுள்ளது. 'மனோ புத்தகக் காட்சி' ஒன்றைப் பல்கலைக் கழகம் அண்மையில் நடத்தி மக்களிடையே புத்தகம் வாங்கும் எண்ணத்தை ஊக்குவித்தது. "ஆக, எங்களாலான செயலாக்கங்களை, தமிழ் மொழியின் மேன்மைக்கு ஆற்றிக்கொண்டுதான் இருக்கிறோம்" எனப் புன்னகைகிறார் துணை வேந்தர்.

இந்தியப் பிரதமராக வீற்றிருந்த ஜவஹர்லால் நேரு ஒருமுறை கூறினார் : "இந்த நாட்டின் அணைக் கட்டுகள் நான் வணங்கும் திருத்தலங்கள். இந்த நாட்டின் பல்கலைக் கழகங்கள் நான் வழிபடும் ஆலயங்கள்".

மன்னராட்சியில் உருவாக்கம் பெற்ற திருக்கோயில்கள் அனைத்துக் கலைகளையும் பயில்வித்தன. மக்களாட்சியில் தோற்றம் பெற்றுள்ள ஆலயங்கள் பல்கலைக் கழகங்கள். அவையும் அனைத்துக் கலைகளையும் கற்றுத்தரும் பயிலிடமாக உள்ளன. தமிழ்க் கவிஞர்களின் பெயரமைந்த பல்கலைக் கல்வி ஆலயங்களில் 'தமிழ் மூர்த்தங்கள்' எவ்வாறு பேணப் பெறுகின்றனவென்பதை அறிந்து கொள்வது பயனளிக்கத்தானே செய்கிறது? சொல்லப் போனால், பரவசம் ஊட்டுவதாகவும் அமைகிறது. ◆

கவிதை மரம்



பாதாளத்தில் வேர் பாய்ச்சி
மேக மண்டலங்களைக்
கிளைகளால் கோதி
திசைகளைத் துழாவியபடி
கம்பீரமாக நிற்கிறது
கவிதை மரம்.

நிழல் தேடி வந்தவர்கள்
பல ரகம்.

காற்றுக்குக் கைலாகு கொடுக்கும்
இலைகளின் ஓசையழகில்
லயித்தனர் சிலர்.

வைரம் பாய்ந்த
அடிமரத்தின் உறுதியில்
ஈடுபட்டனர் சிலர்.

பச்சை நரம்போடும்
துளிர்களின் மென்மையில்
அங்காந்தனர் சிலர்.

சின்னச்சின்ன
மயிற் பீலிகளாய்
ஒளிந்து பார்க்கும்
மலர்களல்லவா
மகரந்த சிகரங்கள்
என்று மகிழ்ந்தனர் சிலர்.

மரத்தின் சாரம்
அதன் கனிதானே என
மறுமொழிக்கு
ஏங்கினர் சிலர்.

இலையைக் கசக்கி
மலரைப் பிழிந்து
இரசாயனக் கூடத்தில்
எது இல்லை எது உண்டு
என ஆராய்ந்து
இது இது இம்மரச் சிறப்பென
எடுத்துரைத்தனர் சிலர்

மரத்தின் முழுமையே
அதன் பெருமை என,
புருவம் உயர்த்தினர் சிலர்

அடடா!
தங்கக்குவியல் இதுவென்று
உதிர்ந்த சருகுகளில்
புதைய ஓடினர் சிலர்

நிழலுக்கு வந்தவர்
பேச்சுகள்
சருகுகளோடு
சருகாய்ப் போயின...

சிற்பி

இரு கவி ஓவியங்கள்

சிற்பம் ஒன்று வடித்தாக வேண்டும். அரசன் கட்டளை. உலகத்தின் தாயை அவன் உருவாக்க வேண்டும். அழகாக அமையவேண்டும். அழகென்றால் சாதாரண மான அழகு போதாது. தெய்விக அழகு ஒளிவீச வேண்டும். அன்னையின் தெய்வ உருவை யாராவது கண்டிருக்கிறார்களா? கண்டிருப்பவர்கள் முழுமையாக அந்த வடிவை வருணித்துவிடத்தான் முடியுமோ?

சிற்ப சாத்திரம், அருளாளர்களின் பாடல்கள் இவை தான் அவனுக்குத் துணை.

'கண் என்றும் காணாத கவின் உருவை' எப்படி வடிப்பது..? வெறும் படிப்பு போதாது... காணமுடியாத அந்த வடிவை அவன் காணாது கண்டாக வேண்டும்!

அதே சிந்தனையில், நியமத்துடன் தியானம் செய்தால் தான் ஒருவேளை அது சாத்தியமாகும்.

அவன் பகலும் இரவும் அதே நினைவாகத் தவம் இருந்தான்... சிந்தனை... ஓயாமல் அவன் கைகள் கொண்டு வந்திருந்த கல்லைச் சிற்பமாக்க... அன்னை வடிவாக்க... கல் உரித்துக் கொண்டிருந்தான்... கையில் உள்ள சிறிய உளிதான் அந்த விந்தையை வடித்துக் கொண்டிருந்தது. அவன் மனத்தில் ஓயாத உளைச்சல்!

கண்களால் என்றுமே நேராகக் கண்டிராத கவின் உருவை அவன் காணாது கண்டான்! காணாது கண்ட காட்சியை எண்ணி எண்ணி அவன் உள்ளம் ஓயாது உளைச்சல் நிலையில் இருந்தது! கை உளியின் கூரால் அவன் ஒருவாறு அந்தப் பெண்ணின் வடிவை வடித்து விட்டான்! உலகத்தின் தாய் பெண் வடிவில்தானே அமைய வேண்டும்!


பெண்ணாக வடித்துவிட்டான்... அற்புதமாக அங்கங்கள் அமைந்துவிட்டன. பீடம் அமைத்தாயிற்று... நுட்பமான வேலைப்பாடுகள்... கண் திறத்தல்... சிற்பிகளுக்கு உயிர் போய் உயிர்வரும் பணி! சிற்பத்தின் வெற்றியே கண் திறத்தலில்தான் இருக்கிறது. மிகவும் எச்சரிக்கையுடன், பயபக்தியுடன் அவன் அன்னையின் திருக்கண்களைத் திறந்துவிட்டான்! எந்தக் கருணைக்கண்களால் உலகனைத் தையும் குளிர நோக்கி அவள் அருள் பாலிக்க வேண்டுமோ அந்தக் கண்களைச் சிற்பி உருவாக்கி விழிக்க வைத்து விட்டான். திறந்தும் திறவாமல், மூடியும் மூடாமல்... அற்புதம் நிகழ்ந்துவிட்டது.

தொலைவில் நின்று சிற்பத்தைப் பார்த்தான் சிற்பி!

நாம் வடித்த சிற்பமா இது! நம் கைவண்ணமா இது! இல்லை! இல்லை! அன்னைதானே சிற்ப வடிவம் பெற் றிருக்கிறாள்! அதற்கு நம்மை ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொண்டிருக்கிறாள்!

மேல் துணியை இடுப்பில் கட்டினான் சிற்பி... தரையில் விழுந்து அந்தத் தெய்வ எழிலை. ஆம்! அவன் வடித்த சிற்பத்தை - தன்படைப்பு என்பதையே மறந்து வீழ்ந்து வணங்குகிறான்! அப்படிக் காலடியில் வீழ்ந்து வணங்கும் போது அவனுக்கு ஏற்பட்ட களிப்பு சாதாரணமானதா? இத்தனை காட்சிகளையும் எண்ணி அற்புதமான ஒரு கவிதையாக உருவாக்கி இருக்கிறார், நாட்டுக்கு அவ்வள வாக அறிமுகமாகாத கோபிநாதராவ் என்ற கவிஞர். தஞ்சை மாவட்டத்தில் நான் பதிவுத் துறையில் பணி யாற்றியபோது அவர் சார் ப்திவாளராக இருந்தார். மராட்டியைத் தாய்மொழியாகக் கொண்ட அவர் பாடிய அற்புதமான கவிதை இது!

சிற்பத்துக்கு மட்டுமல்ல... உயர்ந்த எந்தக் கலைப் படைப்பு இலக்கியம்... சிறுகதை... புதினம் எல்லாவற்றுக் கும் பொருந்துவது இது. ஒரு படைப்பாளியின் உள்ளத்தை யும் தன் படைப்பின் வெற்றியில் அவன் அடையும் பெருமிதத்தையும் அற்புதமாக வெளியிடும் கவிதை இது!



பாரதி சுராஜ்

கண்ணொன்றும் காணாத
கவின் உருவைக்
காணாதே கண்டகாட்சி
உள்நின்ற உளைச்சலிலே
ஓயாது கல்உரித்து
உளியின் கூரால்
பெண்ணொன்று வடித்தவனே
பேசுகின்ற தெய்வமாய்ப்
பீடம் ஏற்றி
கண்ணொன்று திறந்தவுடன்
காலடியில் வீழ்ந்து தொழும்
களிப்புத்தானே!



தஞ்சையில் என்றென்றும் நிலைத்திருக்கும்படி பெரிய ஆலயம் கட்ட எண்ணினான் ராஜராஜப் பெருமன்னன்.


மிகச் சிறந்த கற்கோபுரம் அமைய வேண்டும் என்று திட்டமிட்டான்.

பக்கத்தில் மலை ஏதும் கிடையாதே என்று அமைச்சர்கள் பயந்தார்கள்.

கல்லே கிடைக்காத காலம் அது! கற்கோயில் கட்ட முடிவெடுத்துவிட்டான் மன்னன். கற்கள் வந்து குவிந்தன. சாரப்பள்ளம் என்று இன்று அழைக்கப்படும் இடத்திலிருந்து சாரம் அமைத்து, பெருவுடையார் கோபுரம் உருவாகிக் கொண்டிருந்தது.

மன்னன் சொல்லே வேதம்! கனவிலும் நனவிலும் இதே காட்சி... சிற்பிகள் பம்பரமாக வேலை செய்தனர். ஆயிற்று... கும்பாபிஷேகத்துக்கு நாள் குறித்தாயிற்று... தலைமைச் சிற்பி ஓவியம் வல்லவன். அவன் சாரத்தின் மேல் ஏறி விதானத்தில் ஓவியங்கள் வரைந்து கொண்டிருந்தான். அவன் கவனம் முழுதும் தன் ஓவியத்தின் மீது...

பாவம்! அவனுக்கு வெற்றிலை போடாமல் இருக்க முடியாது... அந்த வெற்றிலை பாக்கை வாயில் அடக்கிக் கொண்டு அதன் சாற்றை அனுபவித்துக் கொண்டே அவன் கற்பனைகள் விரியும். மேலிருந்தபடியே அவன் கை நீட்டுவான். உதவியாளன் பக்குவமாக வெற்றிலை மடித்து நீட்டுவான். இப்படி வேலை தடைபடாது நடந்து வந்தது.



வேலையில் மூழ்கி இருந்த சிற்பி, கையை நீட்டினான். வெற்றிலை மடித்துக் கொடுக்கப்பட்டது. வாயில் போட்டால்... இதுவரை கண்டறியாத சுவை... மணமென்றால் அப்படி ஒரு மணம்... வழக்கமாகத் தரும் வெற்றிலையில் இந்த மணம் கிடையாதே.. சிந்தித்தவண்ணம் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்தவன் திரும்பிப் பார்த்தான்.

அங்கே நின்றது அவனது உதவியாளன் அடைப்பக்காரன் அல்ல... மாமன்னனான ராஜராஜன்தான் வெற்றிலை மடித்துக் கொடுத்தவன். அவனுக்கு உரிய வெற்றிலைச் செல்வம் - அப்படித்தான் வெற்றிலைப் பெட்டியை அழைப்பார்கள். - அதிலிருந்துதான் வெற்றிலை மடித்துத் தரப்பட்டிருக்கிறது!

“தாங்களா...? அபசாரம்...” என்று சொல்லிக் குறுகிப் போனான் சிற்பி.

‘ஒன்றும் இல்லை... வேலை தொடர்ந்து நடக்கட்டும். இது என் பாக்கியம்’ என்று கூறி, புன்னகையுடன் நின்றான் மன்னன்.

தமிழகத்தில் மாமன்னர்கள் கலையை வளர்த்த முறை அத்தகையது.

தஞ்சைப் பெரிய கோயில் உருவாகும்போது இப்படி நடந்ததோ என்னவோ!


நான் முன்பு கூறினேனே நண்பர் கவிஞர். கோபிநாத ராவின் கவிதை இப்படி ஒரு காட்சியைக் கற்பனை செய்து பாடி இருக்கிறது.

தஞ்சைப் பெரிய கோயிலைப் போலவே கம்பீரமான, என்றும் நிலைத்து நிற்கும் கவிதை ஓவியம் இது!

கல்லே கிடைக்காத
காலத்தில் கற்கோயில்
கட்டுவேன் என்ற முன்னைச்
சொல்லே ஓர் சூழ்ச்சியாய்ச்
சொப்பனக் காட்சியாய்த்
தொட்ட குறிக் கோளுமாகி
வில்லேந்தும் கையிலே
வெற்றிலைச் சுருள்தாங்கி
வியன் சிற்பிதானும் மகிழ
மல்லார்ந்த திண்டோள்
ராசராசன் செய்த
மாணிக்கக் கோயில் பாரீர்!

அன்பின் ராகம்

அரசுமணிமேகலை





மனிதாபிமானம்
எங்கே
தொலைந்து போயிற்று?
மனத்துக்குள் ஈரம்
ஏன்
வறண்டு போயிற்று?

★ ★ ★

இதயங்களை
எப்போது முதல்
இறைவன்
இரும்பால் செய்து
அனுப்பத் தொடங்கினான்?

★ ★ ★

இன்றைய யுகம்
இயந்திர யுகமாகி
விட்டது...
யுகம் மட்டுமா?
மனிதர்களும் கூடத்தான்!

★ ★ ★

பணத்தின் பின்னால் -
பதவியின் பின்னால் -
ஓடி ஓடி
மனிதனுக்கு
அன்பு நடை,
அமைதி நடை
மறந்தே போய்விட்டது!

★ ★ ★

அன்பின் ராகம்
ஆத்மாவுக்குப்
புரிவதில்லை!
சில்லறைகளின்
சப்தமே
செவிக்குக் கேட்கிறது!

★ ★ ★

கரன்சியை
எண்ணுவதாகத்தான்
கனவுகளே கூட...

★ ★ ★

ஈரம், தியாகம்,
இரக்கம்
இவையெல்லாம்
அவனுடைய
வாழ்க்கை அகராதியில்
வழக்கொழிந்த சொற்கள்!

★ ★ ★

மலர்களை
மிதித்துக் கொண்டே,
மலைப்பாம்புடன்
நடனமாடுவது
என்றைக்கு இவனுக்குப்
புரியும்?

★ ★ ★

லேபிள்

ராஜேந்திரகுமார்

அந்தப் புராதன வீட்டின் வாசலில் நின்று - டையை இறுக்கி ஏற்றி, தலையை அழுத்தி விட்டுக் கொண்டு, சட்டையை நீவிவிட்டுக் கொண்டான் சுதாகர். வயது இருபது வருஷம் சொச்சம். (இதற்குள் காதலிக்க ஆரம்பித்தது தப்போ?)

வீட்டு வாசலை இரண்டுபடி ஏறுவதும் சட்டென்று இறங்குவதுமாக இருந்தவன் –

"எவண்டாவன்?" என்ற கர்ஜனைக்கு நடுங்கிப் போய் ஜன்னலைப் பார்த்தான். அந்தக் கொடுவாள் மீசைக்காரர் "எலே என்ன அது? ஸேல்ஸ்மேனா? எனக்கு எதுவும் வேணாம். நீ போகலாம்." (இவன் ஸ்டைல் டையும், கையிலிருந்த ப்ரீஃப் கேஸும் அவர் கண்களுக்கு ஸேல்ஸ் மேனாக்கிக் காட்டி இருக்கலாம்.)

"என்ன எதிராஜ் சார்! என்னை அடையாளம் தெரியலையா? நான் தான் சுதாகர். உங்க பிரண்டு ஜனாவோட பையன்."

"எந்த - ஓ. ஜனார்த்தனனா? என்ன விஷயம்?"

"உள்ளே வந்து சொல்றேனே."

"வாயேன் பின்னே?"

"கதவு சாத்தியிருக்கே?"

"தள்ளித் திறந்து வா. நான் இங்கே அல்சேஷன்மாதிரி உட்கார்ந்திருக்கிறச்சே கதவைப் பூட்டமாட்டேன். சும்மா வா."

போனான். அந்த எதிராஜுக்கு நரைத்திருந்தாலும், தலைமயிர் பொல்லென்று அடர்ந்திருந்தது. "எப்படியிருக்கான் உங்கப்பன்?" என்றவர் இவன் பதிலை எதிர்பாராமலே "என்ன விஷயமா வந்தே? சும்மா அது வந்து - இது வந்துன்னு சொல்லிகிட்டிருக்காம நேரடியா விஷயத்துக்கு வா. ஒரே வரியில சொல்லு."

"சின்னச் சிக்கல். நான் காதலிக்கிறேன்."

"தப்பேயில்லையே. இதிலென்ன சிக்கல்? அந்த நாள்லேயே உங்க மாமியைப் பார்த்ததுமே பிடிச்சுப் போய் நேரா, கல்யாணம் பண்ணிக்கறியா?' ன்னு கேட்டேன். தலையை ஆட்டிட்டு நின்னா. ஆச்சு. ஆறே மாசத்திலே கல்யாணம். பன்னிரண்டு வருஷத்துக்குள்ளே ஆறு பிள்ளைங்க. அத்தனையும் பொட்டைங்க. இது காதலில்லையா? அப்படி இருக்கணும்."

"கடைசிப் பொண்ணு பேரு என்ன மாமா?"

"ஜோதி."

"அவளை எனக்குக் கொஞ்ச நாளைக்கு இரவல் தர முடியுமா?"

"என்ன சொல்றே?" என்று 'பே' என்று விழித்தார்.

"தப்பா எதுவும் நினைக்காதீங்க. உங்க ஜோதிக்காக எங்கப்பா அம்மா கிட்ட சம்பந்தம் பேசப் போங்க. என் காதலியை உங்க மகளாக் காட்டி எங்க கல்யாணத்தை முடிச்சுத் தரணும் நீங்க."

"ஏம்பா? உன் காதலியோட அப்பா அம்மா என்ன ஆனாங்க?" அநாதையா?"

"அவங்க இருக்காங்க 'சேசு வேன்னு."

"சேசு - கிறிஸ்டியனா?"

"ஆமா. பொண்ணு பேரு லிசா."

"உங்கம்மா ரொம்பவும் கர்நாடகம். தெரியுமில்லே?"

"அதான் என் சங்கடமே. அதனால தான் உங்க பொண்ணுன்னு சொல்லி, கல்யாணத்தை முடிச்சிருங்க. அப்புறம் என்ன கத்தி என்னவாகப் போகுது?"

"அவங்கப்பாம்மா 'எங்க பொண்ணுக்கு கல்யாணம் செய்து வைக்க நீயாரையா?'ன்னு கத்தினா என்ன செய்றது?"

"நோ சான்ஸ். அவங்க பினாங்லே ஷாப்பிங் சென்டர் வைச்சு அங்கேயே செட்டிலான வங்க. இதுதான் இங்கே எம்.ஏ. படிக்க ஹாஸ்டல்ல தங்கி இருக்கு. என் மேலே உயிராயிருக்கிறா. நானும்..."

"சொல்லவே வேணாம். அதான் வழியறதிலேயே தெரியுதே. ஆனாலும் நான் உனக்கு உதவ முடியாது. மன்னிக்கணும்."

"பொண்ணு வேணாம் மாமா! பேரை மட்டும் இரவல் தந்தால் போதும்."

"அதுதான் முடியாதுங்கறேன். என் சின்னப் பொண்ணுக்குக் கல்யாணமாகி அவ பையன் இந்த வருஷம் ப்ளஸ் டு பாஸ் பண்ணிட்டாள்ங்கறது உங்கப்பனுக்கே தெரியுமே."

கொஞ்சநேரம் திருதிருவென்று விழித்து, தலையை உதறிக் கொண்டான் சுதாகர். சொன்னான்: "அப்படியும் விடறதா இல்லே" என்றான் உறுதியாக.

இளம் காலை நேரம். பஞ்சுப் பொதிகளாக மேகக் கூட்டம் யாரோ துரத்துவது போல ஓடிக் கொண்டிருந்த வானத்தில் அவ்வப்போது மின்னல் கோடு போட்டது. எங்கேயோ பெய்யும் மழைக்கு இங்கே குளிர் காற்று சிலிர்க்க வைத்தது. அந்தக் குளிரிலும் வயதுக்கு ஒவ்வாத குட்டை நிஜாரும், பூத்துவாலை பனியனும் காலில் கான்வாஸ் ஷூவுமாக கைப்பிரம்புடன் காலை நடைபயின்றார் அந்த ஜனார்த்தனம்.

பின்னாலிருந்து, "குட்-மார்னிங்" என்ற பழகிய குரல் வரவே பிரம்பைச் சுழற்றித் திரும்பியதும்-

பின்னால் வந்த ஆள் வெலவெலத்துப் போய், துள்ளிக் குதித்துப் பின் வாங்கினான். "என்ன ஜனா! குட்மார்னிங் சொன்னால் அடிக்க வர்றே?"

"முழுசா குட்மார்னிங் சொல்றதுக்கென்ன கேடு? துண்டு துண்டா சொன்னா நாய் குலைக்கற மாதிரி நினைக்கத் தோணுது. என்ன? வேட்டி பனியனோட வாக்கிங் கிளம்பிட்டே? அசிங்கம்."

"வாக்கிங் வரலை. உன்னைத் துரத்தி ஓடிவந்தேன்."

"ஏன்? துரத்த வேற பொண்ணா கிடைக்கல? அசிங்கம் புடிச்ச மனுஷா. என்னைத் துரத்தறே?"

"பெண்ணைத் துரத்தற வயசா எனக்கு? என்ன நீ எவ்வளவு சீரியஸ் விஷயம் சொல்ல ஓடி வரேன். அசால்டா பேசறே?"

"என்ன பேசறே? எதைப் பற்றிப் பேசறே?"

"சைட் அடிக்கிறதைப் பத்திப் பேசறேன். அப்படிப் பார்க்காதே. நான் இல்லே. உன் பையன் சைட் அடிக்கிறான்னு சொன்னேன். நேத்து பஸ்ஸிலே வரேன். பெண்கள் காலேஜ் முன்னால ஸ்டைலா நின்னு போஸ் தரான். தப்பில்லையோ?"

→

"அவன் அப்படியெல்லாம் பண்றவனில்லையே! நான் அவனை அப்படி வளர்க்கலையாக்கும்."

"நான் பார்த்தேன்ங்கறேன்."

"அவனுக்கென்ன தலையெழுத்தா வெளியே அலைய? நான் தான் அவனுக்காக என் தங்கையோட பொண்ணைத் தயாரா வச்சிருக்கேனே!"

ஜனார்த்தனம் வீடு திரும்பிய போது மனைவி முகத்தைப் பார்த்துக் கொஞ்சம் நேரம் 'ஙே' என்று விழித்தார். முறைத்துக் கொண்டிருந்தாள். "என்ன சந்தான லட்சுமி, வாய்வுப் பிடிப்பா? இப்படி விரைச்சுப் போய் இடுப்பைத் தாங்கி நிக்கறே? என்னம்மா ஆச்சு?"

"அலமேலு வீட்டார்கிட்ட என்ன சொன்னீங்க?"

"மொட்டையா அலமேலு வீட்டார்ன்னா எனக்கென்னம்மா தெரியும்?"

"இப்ப வாக்கிங் போனப்ப பார்த்தீங்களே அவர்கிட்ட?"

"குட்மார்னிங்ன்னு முழுசா சொல்லு, நாய் மாதிரி துண்டு துண்டா குலைக்காதேன்னேன். என்ன தப்பு?"

"பொய். பையனைப் பத்தி என்ன சொன்னீங்க?"

"அதுவா!... பையன் பஸ் ஸ்டாண்டிலே நின்னு சைட்டடிக்கிறதா சொன்னான். அதெல்லாம் இருக்காதுன்னேன்."

"சொல்லலாமா! அப்படிச் சொல்லலாமா?"

"பின்னே?"

"வயசுப் பிள்ளை. இப்படியெல்லாம் சிறு மிஷம் பண்ணறன்னாதான் சந்தோஷப்படணும். சரி. அதோட விடாம அவன் கல்யாண விஷயமா பேசினீங்களா?"

"அதுக்குள்ளே உனக்குத் தகவல் வந்தாச்சா?"

"என்ன சொன்னீங்க?"

"உள்ளதைச் சொன்னேன். ஏற்கெனவே என் தங்கை பொண்ணை நிச்சயம் பண்ணி இருக்கேன்னேன். என்ன தப்பு?"

"நடக்கற விஷயமா அது? பத்து மாசம் சுமந்தவ என்னைக் கேட்காம நீங்களா தீர்மானம் செய்தா என்ன அர்த்தம்?"

"சரி. இப்ப கேட்கறேன். என் தங்கை மகள் பாரதிக்கு நம்ம பையனைக் கட்டி வைக்கப் போறேன்."

"நோ. நடக்காது."

"ஏன்னு கேட்கறேன்."

"அவ அக்கா ஒருத்தி முஸ்லிம் பையனைக் கூட்டிட்டு ஓடிட்டா. அந்தக் கறைபட்ட குடும்பத்துப் பொண்ணா? நடக்காது. எனக்கு வர்ற மருமக நம்ம இனத்தைச் சேர்ந்தவளா சுத்தமா இருக் கணும். இல்லேன்னா இல்லை! இப்பவே சொல்லிட்டேன்."

"அடியே வேணாம்டி. ஜாதி பெயர் எல்லாம் சொல்லாதே. ஜாதியை ஒழிச்சு சட்டமே வந்தாச்சு."

"எந்த லோகத்தில இருக்கீங்க? எங்க ஜாதிக்கு இத்தனை இடம் வேணும்னு ஊரே தகராறாயிருக்கு. பேப்பர் பார்க்கிற தில்லையா? என்ன வேணுமானாலும் சொல்லுங்கோ. அந்தப் பொண் வேண்டாம். தெருவோட போறவளைக் கட்டி வைச்சாலும் வைப்பேனே தவிர, வேற ஜாதி காத்துக்கூட என் மகன் பேர்ல பட்டிருக்கக் கூடாது. ஒத்துக்கவே மாட்டேன். தொங்கிடுவேன். புரியறதா?" என்ற அம்மாவின் கண்கள் ஓடி சுற்றிச்சுற்றித் தரையைப் பார்த்தன.

தரையில் விழுந்து கிடந்தான் சுதாகர்.

"டேய்.. சுதா.. என்னடா ஆச்சு?.. குழந்தைக்கு என்ன ஆச்சு பாருங்கோளேன்."

பெற்றோர் மறுப்பார்களே என்று பயந்து, கிறித்தவப் பெண்ணை இந்துப் பெண் என்று அவன் கூறி, நாடகமாட, அவளைப் பெண் பார்க்க அவன் பெற்றோர் வந்தபோது தடுப்புத் திரை விலகி உண்மை வெளியானது எப்படி? கதையைப் படிப்போம்:

சாயங்காலம் சோர்ந்து படுத்திருந்த சுதாகரிடம் வந்தாள் அம்மா. "இந்தா. இந்தக் காப்பியைக் குடிப்பா. ஏண்டா கண்ணா? ஏன் மயக்கம் போட்டு விழுந்து என்னை நடுங்க வைச்சட்டே? ஏதோ தெருவில போகிற பெண்ணைக் கட்டி வைப்பேன்னு சொன்னேனே பயந்துட்டியா? பயப்படாதேடா. அப்படியெல்லாம் பண்ணமாட்டேன். உங்க அத்தை பொண்ணைத் தவிர எந்தப் பெண்ணையும் கட்டி வைப்பேன்."

"நான் காதலிச்ச பொண்ணை?"

"தாராளமா. ஆனா ஒரே கண்டிஷன். நம்மவாளா இருக் கணும்." ஓரக் கண்ணால் பார்த்தாள். "நம்மவாதானே?"

"ஆமாம்."

"அப்ப என்ன? விடு கவலையை. உன் காதலுக்கு நான் உத்தர வாதமே தரேன். ஆமா. பொண்ணு யாரு?"

"நம்ம எதிராஜ் சாரில்லே.... அவங்க வீட்டுப் பொண்."

"என்னடா உளர்றே? அவர் கடைசிப் பொண்ணுக்கே வயசுக்கு வந்த பொண்ணு இருக்காளே. அவளா?"

"இல்லே. அவங்க உறவுக்காரப் பெண். அப்பா அம்மா வெளி நாட்டில இருக்காங்க. இது ஹாஸ்டல்ல படிக்கிறது. நல்ல பையனா பார்த்துக் கல்யாணத்தைச் செய்து வைக்கச் சொல்லி பெத்தவங்களே பொறுப்பை இவர்கிட்டே விட்டிருக் காங்களாம். அதான்."

"பரவாயில்லே. நல்ல குடும்பம் தான். பொண்ணை உனக்குப் பிடிச்சிருக்கில்லே?"

"ரொம்.... ம்.... ம்....ம்...ப."

"அதுக்கேன் இப்படி இழுக்கிறே? சரி. வெள்ளிக்கிழமை பெண் பார்க்க வர்றோம்னு சொல்லியனுப்பு. டேய்.. டேய்... டிபன் சாப்டுட்டுப் போடா."

"கீப் இட் வார்ம். வந்து சாப் பிட்டுக்கறேன்."

"ஏய்... ஏய்... ஏய்..."


போய்விட்டான்.

கல்லூரி காண்டீனில் ஒரு குளிர் பான பாட்டிலில் போட்ட இரண்டு ஸ்ட்ராக்களின் வழியே போட்டி போட்டு உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள் சுதாகரும், லிசாவும். பாட்டில் காலியாகி விட்டது தெரிந்ததும், நிமிர்ந்த லிசா கேட்டாள். "ஆனாலும், உனக்கு இந்தக் கஞ்சத்தனம் கூடாது. இரண்டு புட்டி வாங்கக் கூடாதா? நான் ஒரே தரம் தான் உறிஞ்சினேன். அதுக்குள்ளே பாட்டிலை காலி பண்ணிட்டியே. ஏன்தான் இப்படி கஞ்சத்தனம் பண்றியோ?"

"கஞ்சத்தனமில்லே லிசா! நாளைக்கு பையன்களை எல்.கே. ஜியில சேர்க்க பணம் வேணாமா? அதுக்குத்தான் சேர்க்கிறேன்."

"ஜீஸஸ். கல்யாணமே தொங்கறது.. அதுக்குள்ளே பையன்கள் அட்மிஷன் வரை திட்டம் போடறியா? ஓ! ஜீஸஸ்!"

"இத பார் லிசா! கொஞ்ச நாளைக்கு இந்த ஜீஸஸ், கிராஸ் போட்டுக்கிறது எல்லாத்தையும் மறந்தாகணும். எங்க அம்மா இந்துவில எந்த ஜாதின்னாலும் கூட பரவாயில்லை, வேற மதத்தவங்க மட்டும் கூடாதுன்னு அடம் பிடிக்கிறாங்க!"



"அதுக்காக எங்க ஜீஸஸை மறந்து 'முருகா'ன்னு சொல்லச் சொல்றியாக்கும். நத்திங் டூயிங்."

"நிரந்தரமில்லை. தாலி ஏறுகிற வரை. 'ப்ளீஸ்'" கெஞ்சினான். அவள் கைகளைப் பிடித்து 'விடாப்பிடி' யாகக் கெஞ்சினான்.

"சரி சரி. கெஞ்சாதே. நான் என்ன செய்யணும் சொல்லு. நேரே உங்க மம்மிகிட்ட வந்து, "ஹாய் மாமியாரே"ன்னு கால்ல விழுந்து ஆசீர்வாதம் வாங்கவா?"

"அம்மா தாயே! அப்படி எதுவும் செய்து வைக்காதே. எங்க குடும்ப நண்பர் எதிராஜ் என்கிறவர் வீட்டில கொண்டு விடறேன். வெள்ளிக் கிழமை எங்கப்பா அம்மா பெண பார்க்க வருவாங்க. அப்ப உன்னை அவரோட மச்சினியோட ஓரகத் திக்கு சின்ன மாமியாரோட வீட்டுக் காரரோட தம்பியோட...'

கையமர்த்தினாள் லிசா. "இரு இரு. இவ்வளவு பெரிய உறவு எல்லாம் ஞாபகம் வச்சுக்கறது கஷ்டம். அவங்க உறவுக்காரப் பொண்ணுன்னு மட்டும் சொல்றேன்."

"அது போதும். மீதியை நான் பார்த்துப்பேன். கல்யாணமான கொஞ்ச நாள்ல நானே அம்மா கிட்டச் சொல்லிடறேன். கொஞ்ச நாள் கத்துவாங்க. அப்புறம் எல்லாம் சரியாயிடும்."

"ஏன்? என்னை வயத்துப் பிள்ளை யோட துரத்தவா? அதெல்லாம் நடக்காது. உங்கம்மாவுக்குச் சொன்ன அப்புறம்தான் எல்லாம். அதுவரை நீ நீதான். நான் நான் தான். மைண்ட் யூ."

'திக்' கென்று விழித்தான் சுதாகர்.

அந்தப் புராதன வீட்டில் பாவாடை தாவணியில் தடுக்கித் தடுமாறி நடந்து பழகினாள் லிசா. 'நோ. என்னதானிருந்தாலும் ஜீன் ஸிலும், ஸ்கர்ட்டிலும் வரும் சுதந் திரம் இதில இல்லே."

"அம்மாடி ஸ்வாதி! நீ இன்னுமா தயாராகல்ல?" என்ற எதிராஜின் குரல் கேட்டதும்தான் புரிந்தது. ('ஓ! இன்றைக்கு வெள்ளிக்கிழ மையா?') அவசரமாய்க் கண்ணாடி முன்னால் நின்று பார்த்தாள். "சே.சே. இதென்ன ப்ளஸ்டு பெண் மாதிரி?" அவசரமாக பாவாடை தாவணியைக் களைந்து பட்டுப் புடைவை கட்டினாள். மாமி கொண்டு வந்த தங்க நகைகளைப் பூட்டிக் கொண்டாள். அழுந்தக் கட்டிய கனகாம்பரத்துக்கு நடுவில் கனமாக மல்லிகைப் பூவை வைத்துக் கொண்டாள். "பர்ஃபெக்ட்."

எதிராஜ் உள்ளே வந்தார். "இன் னுமா தயாராகல்ல? அவங்க வந்தாச்சும்மா." அவள் இடறவே தாங்கிக் கொண்டார். "பார்த்துடி யம்மா. விழுந்து வைக்கப் போறே. வா. ஹால் வரை நான் அழைச் சுட்டுப் போறேன்."

"அப்புறம்?"

"ஈஸ்வரோ ரக்ஷது."

ஹாலில் ரத்னக்கம்பள விரிப்பில் பெரியவர்கள் எல்லாரும் அமர்ந் திருக்க அவன் மட்டும் பாண்ட்டுக்கு பயந்து நாற்காலியிலேயே அமர்ந்து கொண்டிருந்தான். ஆடிய கால் பந்தும், ஓடியாடிய டென்னிஸும் அவன் உடம்பின் வலுவைச் சட் டையின் இறுக்கமான பிடிப்பு காட்டிக் கொண்டிருந்தது. அவன் சீற விட்டுக் கொண்டிருந்த பர்ஃப்யூ மின் மேனாட்டு மணம் அவனைச் சுற்றிலும் காற்றில் இருந்தது.

எழுந்து அவன் காதருகே வந்த அம்மா கேட்டாள். "ஏண்டா, பொண்ண மேல்நாடுன்னியே! அந்நிய பதார்த்த மெல்லாம் தின்பாளோ?"

சுரேஷ் முறைத்தான். "கல்யாண மாகட்டும். கேட்டுச் சொல்றேன்."

"கத்தாதேடா..." என்ற அம்மா போய் இடத்தில் அமர –

காப்பி ட்ரேயுடன் வந்தாள் ஸ்வாதியாகிய லிசா. ஆளுக்கு ஆள் கொடுத்தாள்.

அம்மாவின் முகத்தில் சந்தோஷ மிருந்தது. "உன் பேர் என்னம்மா?"

"ஸ்வாதி" என்றார் எதிராஜ்.

"ஐயா. பொண்ணு பேரு கூட கேட்டுத் தெரிஞ்சுக்காமலா பொண் பார்க்க வந்திருக்கோம்? பேர் கேட்கிற சம்பிரதாயம் பொண் ணோட குரலைக் கேட்கத்தான். சொல்லும்மா உன் பேரு என்ன?"

வெட்கமாக "ஸ்வாதி" என்றாள்.

"பெரியவங்களுக்கு நமஸ்காரம் பண்ணிக்கம்மா." என்று எதிராஜ் சொல்ல-

பொதுவாக எல்லாருக்குமாக குனிந்து வணங்கியவள் பழக்கமில் லாததினால் சரிந்துபோன முன் றானையால் தடுக்கிட–

சட்டென்று எழுந்த சுரேஷ் அவள் முன்றானையைப் போர்த்தி விட்டான்.

"டேய் இடியட்! இதுக்குள்ளே பொண்ணைத் தொடலாமாடா? போ. போய் உட்காரு." என்றார் ஜனார்த்தனம். சொன்னார். "எங்க சைடிலே கல்யாணத்துக்குப் பச்சைக் கொடி காட்டியாச்சு. நீங்க பொண் ணைக் கேட்டுச் சொல்லியனுப் புங்க. தேதி குறிச்சிடலாம்."

"இப்பவே கேட்டுட்டாப் போச்சு."

"பாவம். பொண்ணு பயந்திருக் கும் போலிருக்கு. உள்ளே கூட் டிட்டுப் போய்க் கேளுங்க."

"அதுக்கெதுக்கு மாமி தனியாகப் போய்க் கேட்கணும்? நான் எப்பவும் எதிலும் ஃப்ராங்க்கா இருக்கிறவ. இப்பவே சொல்றேன். எனக்கு இவ ரைப் பிடிக் கலை. இந்தக் கல்யா ணப் பேச்சை நீங்க நிறுத்திடலாம்."

"என்னம்மா, சொல்றே?" என் றாள் அம்மா அதிர்ச்சியாக.

"உண்மையாகச் சொல்றேன். என் அசல் பேர் லிசா. நான் ஒரு கிறிஸ்துவப் பெண். உங்க மகனை உயிருக்குயிரா காதலிச்சேன். மறுக் கல்லை. ஆனா அந்த உண்மையை உங்ககிட்டேர்ந்து மறைச்சு இந்தக் கல்யாணத்தை நடத்தணும்னார் – ஸாரி. எனக்குப் பிடிக்கல்லை. உங்க சம்மதமும் ஆசீர்வாதமும் இல்லாம தாலி கட்டிக்க எனக்கு விருப்ப மில்லை.

மாற்று மதத்திலே பிறந்தேன். அதில என் தப்பு எதுவுமில்லே... காதலிச்சேன். கல்யாணத்துக்கும் சம்மதிச்சேன். அது என் சொந்தத் தனி உரிமை. அதுக்காக நான் யாரையும் ஏமாத்திக் கல்யாணம் செய்துக்க விரும்பவும் இல்லை" எழுந்து கொண்டாள். "என் முடிவை நான் சொல்லிட்டேன். நீங்க உங்க விருப்பம் எதுவோ அதையே செய் யுங்க. சம்மதிச்சா சந்தோஷப்படு வேன். மறுத்தா – கொஞ்ச நாள் வேதனைப்படுவேன்."

நடந்தவளை "கொஞ்சமிரும்மா லிசா" என்ற அம்மாவின் குரல் நிறுத்தியது. திரும்பிப் பார்த்தாள்.

"நீ கிறிஸ்தவப் பெண் என்கிறது தெரியாமதான் சம்மதம் சொன் னோம்னு நினைச்சியா?"

நிதானமாகத் திரும்பிப் பார்த் தாள். "சொல்லிட்டாரா?"

"அவன் சொல்லலை. நமஸ்காரம் பண்றச்ச முன்றானை சரிஞ்சுதே, அப்பவே உன் செயின்லேயிருந்த சிலுவைக் குறியைக் கவனிச்சிட்டேன். என் ஒரே மகன் ஆசைப்பட்ட பெண்ணாச்சேன்னு தான் சம்மதிச் சேன். உன் நேர்மையைப் பார்த் தப்புறம் இப்ப மனப்பூர்வமா சொல் றேன்டி என் மருமகளே! லேபிள் எதுவானா என்ன? சரக்குப் பிடிச் சிருக்கணும். அதுதான் முக்கியம்." என்றாள் சந்தோஷமாக.



அடியார்க்கு நல்லான்

நனவுக் கோலங்கள்!

விடியும் முன்பாக
வீசுகிற மென்காற்றின்
பிடியில் சிறுநேரம்
பேசாமல் நடந்திடுவேன்!

ஓடை தருகின்ற
ஒய்யார ஜதியழகை
சாடையில் கவனித்து
சந்தங்கள் சேர்த்திடுவேன்!

என்னச் சிறகசையும்
இளமாதர் விழியோர
வண்ணக் கனவுகளை
வார்த்தைகளில் செய்திடுவேன்!

நாற்றில் தலைவாரி
நாணுகிற தென்றலிடம்
நேற்றைக் கனவுகளை
நிம்மதியாய்த் தந்திடுவேன்!

அந்திப் பொழுதுவர
ஆகாசக் கற்பனையில்
சிந்தனைச் சிலம்புகளை
சீதனமாய்ப் பெற்றிடுவேன்!

புன்னை மரத்தடியில்
பூங்குயிலின் ராகம்வர
என்னை மறந்தங்கே
ஏகாந்தத் தவமிருப்பேன்!

பழிகள் வரும்போது
பதறுகிற உள்ளத்தை
விழியின் ஊற்றுகளில்
விளங்கச் செய்திடுவேன்!

சிந்தும் மைத்துளியில்
சிந்துகளைச் சேகரித்து
சந்தப் பேழைகளில்
சரியாக வைத்திடுவேன்!

கற்பனைக் கோலமிட
கனியும் சீர்வரங்கள்
சொற்புனை பாசுரங்கள்
சொந்தமென நானிருப்பேன்!

நிலவில் – முற்றத்தில்
நினைவுகளின் மோனத்தில்
உலவும் ஞானத்தேர்
உள்ளத்தே பார்த்திடுவேன்!

அழகுக் கண்ணனின் ஐந்து கோலங்கள்

பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

1. ஸ்ரீதுவாரகை கிருஷ்ணன்

வடமதுரையில் அவதரித்த ஸ்ரீகிருஷ்ணன் ஆயர்பாடியில் வளர்ந்தான். அவன் அரியணை ஏறி அரசாட்சி புரிந்த இடம்தான் துவாரகை. இதனைத் துவாரகா எனவும் துவரைப்பதி எனவும், வண் துவரை எனவும் பலவாறு குறிப்பிட்டுள்ளனர்.

துவாரகை குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட்டிலிருந்து ஜாம்நகர் வழியே 218 கி.மீ. தொலைவில் உள்ளது புகைவண்டி நிலையத்திலிருந்து 1 கி.மீ. சென்றால் ரைவத மலையின் அருகில் உள்ள கண்ணன் திருக்கோயிலை அடையலாம். 'ரண்கோட்ராய் கோயில்' என்று இதனை அழைக்கின்றனர்.

துவாரகை கிருஷ்ணர் மூன்று அடி உயரமுள்ள கறுப்புக் கல் விக்கிரகமாக விளங்குகிறார். நான்கு கரங்களுடன் மேற்கு நோக்கிய நிலையில் காட்சி தருகிறார்.

வெள்ளிச் சிம்மாசனத்தின் மீது நின்ற கோலத்தில் எழுந்தருளியுள்ளார். சுற்று வட்டாரத்தில 33 பரிவார தேவதைகளுக்குத் திருக்கோயில்கள் உள்ளன. அவற்றுள் கல்யாண நாராயணர், கல்யாண நாச்சியார், ருக்மிணி, சத்யபாமா ஆகியோரின் திருக்கோயில்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரின் பதின்மூன்று பாசுரங்களில் துவாரகா கிருஷ்ணன் இடம்பெற்றுள்ளார்.

பாரதியார் இவரை, "துவரைக் கிறைவன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

துவாரகைக் கண்ணனுக்குத் துளசியிட்டு அர்ச்சனை செய்யலாம். குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி அபிஷேகமும் செய்விக்கலாம்.

துவாரகை முத்தி தரும் தலங்களில் ஒன்று. துவாரகையில் ஆதிசங்கரர் ஸ்தாபித்த திருமடமும் உள்ளது.

2. ஸ்ரீகுருவாயூரப்பன்

ஒன்பது கோள்களில் ஒன்றான வியாழனை குருபகவான் என்றும் பிரகஸ்பதி என்றும் அழைப்பர். இந்த குருவும், வாயுபகவானும் திருமாலைப் பூஜித்த திருத்தலமே 'குருவாயூர்' என்று அழைக்கப்பட்டது. 'குருபவனபுரம்' எனவும் கூறுவர்.

குருவாயூர் கேரள மாநிலத்தில் திருச்சூரிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ளது. மூலவரின் கர்ப்பக்கிருகத்தை 'ஸ்ரீகோயில்' என்று அழைக்கின்றனர்.

குருவாயூரப்பன் நின்ற கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் காட்சி தருகிறார். மேற்கரங்களில் சங்கு, சக்கரமும், கீழ்க்கரங்களில் தாமரை மற்றும் கதையும் தாங்கியுள்ளார்.

விடியற்காலை 3 மணிக்கு மூலவர் நிர்மால்ய தரிசனம் அளிக்கிறார். காலை 7 மணிக்கு உற்சவர் யானைமீது பிராகாரத்தில் மும்முறை வலம் வருகிறார்.

குருவாயூரப்பன் சந்நிதியில் இருந்து நாராயண பட்டத்திரி 1026 சுலோகங்கள் கொண்ட நாராயணீயத்தை இயற்றினார். ஒவ்வொரு பத்துப் பாடல் நிறைவடைந்ததும் குருவாயூரப்பன் தலையசைத்து அங்கீகாரம் அளித்தார். நாராயணீயம் சேங்காலிபுரம் ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் அவர்களால் பிரபலமடைந்தது. மேலும் பட்டத்திரி எழுதாமல் விட்டிருந்த ஜடபரத சரித்திரத்தை சேங்காலிபுரம் தீட்சிதர் அவர்களே இயற்றி, குருவாயூரப்பன் சந்நிதியில் அரங்கேற்றினார். நாராயணீயம் முழுவதையும் தமிழ் உரையுடன் அவர் வெளியிட்டுள்ளார்.

குருவாயூரப்பனின் தீவிர பக்தரான பூந்தானம் இலக்கண இலக்கிய விதிகளை அறியாதவர். எனினும் இவர் இயற்றிய கவிதைகளைக் குருவாயூரப்பன் விரும்பி ஏற்றுக் கொண்டார். மேலும், தமது பக்தனான பூந்தானத்தின் சொற்களை மெய்ப்பிக்கக் குருவாயூரப்பன் பல திருவிளையாடல்களை நிகழ்த்தியுள்ளார். குருவாயூரப்பன் தரிசனமும், நாராயணீயப் பாராயணமும் நோய்களை நீக்கும் என்பது பலரது அனுபவ பூர்வமான உண்மை.

3. ஸ்ரீ பார்த்தசாரதி

'பிருந்தாரண்யம்' என்று குறிப்பிடப்படும் திருவல்லிக்கேணியில் ஆனந்த விமானத்தின் கீழ் எழுந்தருளிய பெருமான் வேங்கடகிருஷ்ணன் என்ற மூலவர் ஆவார்.

வேங்கடகிருஷ்ணனின் கையில் சக்கரம் இல்லை. வலக் கையில் சங்கும் இடக் கையில் ஞானவாளும் ஏந்தியுள்ளார்.

பார்த்தசாரதி, ஸ்ரீதேவி, பூதேவி சந்நிதிகள் உள்ளன. பார்த்தசாரதியே மிகவும் பிரபலமானவர். திருத்தலம் இவர் பெயரில் 'பார்த்தசாரதி திருக்கோயில்' என்றே புகழ்பெற்றுள்ளது. அல்லிக்கேணி அழகன் முகத்தில் மீசை வைத்திருப்பது அற்புதக் காட்சியாகும்.

திருமழிசையாழ்வார், முதலாழ்வார்களைத் திருவல்லிக்கேணியில்தான் சந்தித்து மகிழ்ந்தார்.

தெள்ளிய சிங்கப்பெருமாள் சந்நிதி அண்மையில் திருப்பணியும், திருமுழுக்கும் செய்யப்பட்டு, புதுப்பொலிவுடன் திகழ்கிறது.

திருமங்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் அருளிச்செய்த பன்னிரண்டு பாசுரங்களைப் பெற்றவர் அல்லிக்கேணி அழகர்.

அமரர் சில்பியின் ஓவியங்கள்







இயற்றியவர் : ராதா பார்த்தசாரதி ராகமாலிகை

இசை : சாருமதி ராமசந்திரன் ஆதி தாளம்

பல்லவி

சிவரஞ்சனி

குருவாயூர் க்ஷேத்ரத்தில் கமலக் கண்ணன்
திருக்கோலம் கண்டோர் கலி தீர்வார் (குருவாயூர்)

அநுபல்லவி

தாய்மடி விளையாடும் சிங்காரன் - பவள
வாய் பதித்துக் குழல் இசைக்கும் கோபாலன் (குருவாயூர்)

சரணம்

நளினகாந்தி

மதி முகம் கண்டு அதி மோகம் கொண்டு
நிதி நீயென என்னப்பனைப் பணிந்து
கதி வேறிலையெனக் கரைந்தழைத்து - ஸ்ரீ
பதி யவனை வேண்டும் பக்தர்க்கருள் - புரியும் (குருவாயூர்)

தாமவதி

அழகன் ஸ்ரீக்ருஷ்ணன் அன்பின் சாகரன்
அடிமலர் பணிந்து நலம் வேண்டி வலம் வரும்
அடியார்க் கெல்லாம பவபயம் தீர
அபய கரம் தரும் ஆனந்த ரூபன் (குருவாயூர்)

மத்யமகாலம்

கழல் தவழும் சதங்கை கலகலக்க,
அரைபடிந்த மணி கிணுகிணுங்க
குழல் தரித்த மயில் பீலி அசையக்
குவலயம் களித்தசைந்தாட
அழகன் கண்ணப்பன் அருளால்
அல்லல் அனைத்தும் பறந்தோட
குழல் ஊதும் கோவிந்தன்
உவந்து ஆலயம் கொண்ட (குருவாயூர்)

பார்த்தசாரதிப் பெருமாளை மகாகவி பாரதியார் பலமுறை தரிசித்து மகிழ்ந்துள்ளார்.

துவாரகை, உடுப்பி, குருவாயூர் ஆகிய மூன்றும் மேற்குக் கரையில் அமைந்துள்ளன. அல்லிக்கேணியோ கிழக்குக் கரையில் உள்ளது.

4. ஸ்ரீ மாயாபுரி கிருஷ்ணர்

இமயமலையின் மேல் திருக்கேதாரம், பத்ரிநாத் முதலான பல சைவ - வைணவத் தலங்கள் உள்ளன. அவற்றுக்குச் செல்லும் நுழைவாயிலாக (துவாரமாக) விளங்குவது மாயாபுரி. இதனைச் சைவர்கள் ஹரத்வாரம் எனவும், வைணவர்கள் ஹரித்வாரம் எனவும் அழைக்கின்றனர். கங்கைக் கரையில் இருக்கும் நுழைவாயில் என்பதாலும், இமயத்தில் 300 கி.மீ. ஓடிவந்த கங்கையாறு இங்குச் சமவெளியில் நுழைவதாலும் இதனைக் கங்காத்வாரம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

ஹரித்வாரத்தில் கங்கை சுமார் ஒரு மைல் அகலத்துடன் பாய்கின்றது. கங்கைக் கரையில் பல திருக்கோயில்கள் உள்ளன. கங்கை இரண்டாகப் பிரியும் இடத்தில் தீவு போன்ற நிலப்பரப்பு உள்ளது. இங்கு, ஒரு கல்லில் இரண்டு பாதங்கள் உள்ளன. அவற்றை விஷ்ணு பாதங்கள் என்பர். ஆதிநாராயணர், ஆதிலட்சுமி, மாயாதேவி ஆகியோரின் திருக்கோயில்கள் ஹரித்வாரில் உள்ளன.

முக்தி தரும் தலங்கள் ஏழு. அவற்றுள் மாயாபுரி முதலிடம் பெற்றுள்ளது. மாயாபுரி கிருஷ்ணர் சர்வாலங்காரங்களுடன், பளிங்குக்கல் திருமேனியுடன் காட்சி தருகிறார். மாயாதேவியும் சிம்மவாகனத்தில் நான்கு கரங்களுடன் காட்சி தருகிறாள்.

5. உடுப்பி ஸ்ரீகிருஷ்ணர்

ஆயர்குலத்தோரின் ஆதாரத் தொழிற் கருவிகளான மத்தையும், கயிற்றையும் முறையே வல - இடக் கைகளில் ஏந்திய நிலையில் புன்முறுவல் பூத்த முகத்துடன் கிருஷ்ண விக்கிரகம் ஒன்றைச் செய்து தர கிருஷ்ணனிடமே வேண்டினாள் ருக்மிணி. கிருஷ்ணனும் தேவ சிற்பி விச்வகர்மாவைக் கொண்டு அத்தகைய விக்கிரகத்தை உருவாக்கிக் கொடுத்தான். ருக்மிணி அதனைப் பலகாலம் பூஜித்து மகிழ்ந்தாள். கிருஷ்ணாவதாரம் முடிந்து, பின்னர் ஏற்பட்ட பிரளயத்தில் துவாரகை மூழ்கியது. எனினும் ருக்மிணி பூஜித்த கிருஷ்ண விக்கிரகத்தை அர்ச்சுனன் நந்தவனம் ஒன்றில் ஒளித்துக் காத்தான்.

பல நூற்றாண்டுகள் கடந்தன. சௌராஷ்டிரக் கப்பல் ஒன்று கோபிச் சந்தன உருண்டைகளுடன் மேற்குக் கடலில் சென்று கொண்டிருந்தது. அது உடுப்பிக்கு அருகில் சென்று கொண்டிருந்த பொழுது கடும் புயல் தாக்கியது. அதனை ஞானதிருஷ்டியால் அறிந்தார் ஸ்ரீமத்வாச்சாரியார். தமது தெய்விக ஆற்றலால் புயலைத் தணித்தார். கப்பலில் இருந்த வணிகர்கள் கரைசேர்ந்தனர். இதுபோன்ற நிகழ்ச்சி ஷேக்ஸ்பியரின் 'டெம்பெஸ்ட்' நாடகத்திலும் இடம்பெற்றுள்ளது எண்ணி இன்புறத்தக்கது.

கப்பல் வணிகர்கள் மத்வரை நன்றியுடன் பணிந்து போற்றினர். காணிக்கைகளை ஏற்கும்படி வேண்டினர். துவைதத் துறவி கோபிச்சந்தன உருண்டைகள் சிலவற்றை மட்டும் ஏற்றுக்கொண்டார்.

அவ்வுருண்டை ஒன்றின் உள்ளே அர்ச்சுனன் காத்த அதே கிருஷ்ண விக்கிரகம் இருக்கக் கண்டு வியந்தார் மத்வாச்சாரியார். மகிழ்ச்சியுடன் அதனை உடுப்பியில் பிரதிஷ்டை செய்தார்.

மத்தும் கயிறும் ஏந்திய கோலத்தில் மேற்குக் கடற்கரையில் மீண்டும் எழுந்தருளிவிட்டார் ஸ்ரீகிருஷ்ணர்.


தட்சப் பிரஜாபதியின் சாபத்திலிருந்து விடுபட விரும்பிய சந்திரன், ஈசனை இத்தலத்தில் வழிபட்டான். அவனைத் தனது தலையில் சூடி இறைவன் சந்திர மௌலி ஆனான். சந்திரனை கர்நாடக மக்கள் 'உடுபா' என்பர். தமிழில் 'உடுபதி' என்போம். 'உடுபா' என்பதே 'உடுப்பி' என்று வழங்கி வருகிறது.

மாத்வ மடத்தைச் சேர்ந்த துறவிகளால் உடுப்பி திருக்கோயிலில் தொடர்ந்து பூஜைகள் நடந்து வருகின்றன.


கனகதாசர் என்ற தன் அடியவருக்காக உடுப்பி கிருஷ்ணர் மேற்குத் திசையில் திரும்பி விட்டார். இன்றும் அப்படியே காட்சி தருகிறார்.

வெள்ளிக் கிழமைகளிலும் நவராத்திரி நாள்களிலும் உடுப்பி கிருஷ்ணருக்குப் பெண் அலங்காரம் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.


உடுப்பி கிருஷ்ணரைப் பூஜிக்கும் மாத்வ மடாதிபதிகள் அருகேயுள்ள அனந்தேஸ்வரம் முதலான சைவத் தலங்களையும் பூஜித்து சைவ - வைணவ ஒற்றுமைக்கு வித்திட்டு வருகின்றனர் என்பதும் நாம் அறிந்து போற்றத்தக்க செய்தியாகும்.



ஓவியம் : அமரர் 'சில்பி' துவாரகை கிருஷ்ணன் (மதுரா) அமுதசுரபி தீபாவளி மலர் '94




ஓவியம் : அமரர் 'சில்பி'   ஸ்ரீ குருவாயூரப்பன் (குருவாயூர்)



ஓவியம் : அமரர் 'சில்பி'

ஸ்ரீ பார்த்தசாரதி
(திருவல்லிக்கேணி)




ஓவியம் : அமரர் 'சில்பி' ஸ்ரீ மாயாபுரி கிருஷ்ணர் - மாயாவதி தேவி - (ஹரித்துவார்) அமுதசுரபி தீபாவளி மலர் '94



ஓவியம் : அமரர் 'சில்பி'

ஸ்ரீ கிருஷ்ணர் (உடுப்பி)



போட்டோ : யோகா

நடிகர் திலகம்



 இளைய திலகம் போட்டோ : யோகா

பிரபுவுடன் ஒரு நாள்

ராஜலட்சுமி
ராதாகிருஷ்ணன்

காலை மணி ஏழு. 'அன்னை இல்ல'த்தின் உச்சியில் புத்தகத்தைப் பிரித்துப் படிக்கின்ற நிலையில் அமர்ந்துள்ள பாலகனின் சிலை எங்களை வருகவென அழைக்கிறது.

நேரத்தைக் கடைப்பிடிப்பதில் நடிகர் திலகத்தின் வாரிசு நம்பர் ஒன். வெளியே வருகிறார். காரில் அமர்கிறோம்.

கார் திரைப்பட நகரை நோக்கி விரைகிறது.

"சங்கிலி' தானே நீங்கள் நடித்த முதல் படம்?"

"ஆம்" என்று தலையசைக்கிறார்.

"எந்த ஆண்டு?"

"1981. ஜனவரி மாதம் குடியரசு தினத்தன்று திருமணம். 1982 ஜனவரி குடியரசு அன்று முதல் ஷூட்டிங். அதே ஆண்டு தமிழ்ப் புத்தாண்டன்று 'சங்கிலி' வெளியானது.

கார் நந்தனத்தைக் கடக்கிறது.

'சங்கிலி'யில் ஒப்பந்தமாவதற்கு முன்பே ஒரு பட வாய்ப்பு வந்தது. 'அமர காவியம்'. அது ஒரு ஹிந்திப் படத்தைத் தழுவி எடுக்கப்பட்டது. அப்பாதான் ஹீரோ. ஹிந்தியில் அமரர் அம்ஜத்கான் செய்த ரோலைத் தமிழில் என்னைச் செய்யச் சொன்னார்கள். அமிர்தம் ஸார் இயக்கம். முதல் முதலாக 'வில்லன்' வேடமா என்ற சிந்தனை. எனவே அது கைவிடப்பட்டது. என்னை முதலில் நடிக்க அழைத்தவர் அமிர்தம் ஸார் தான். அதன் பிறகு சி.வி.ராஜேந்திரன், அமரர் ஏ.எல். நாராயணன், மேஜர் ஆகியோர் நான் படவுலகில் நுழையக் காரணமானவர்கள்.



கார் மத்ய கைலாஸ் அருகில் செல்கிறது. பிரபு தலை தாழ்த்தி வணங்குகிறார்.

"இறை பக்தி உண்டா?" என்று கேட்கிறோம்.


"வருடந் தவறாமல் ஐயப்பன் கோயிலுக்கு இருமுடி கட்டி ஐம்பதுக்கும் குறையாத நபர்களோடு சபரி மலைக்குப் போகும் குடும்பச் சூழலில் வளர்ந்தவன் நான். சென்டிமென்ட்டா பார்த்தா என் கலையுலக வாழ்க்கையின் ஆரம்பத்தில் வேகமாக ஓடத் தொடங்கிய நான், சில ஆண்டுகளுக்குப் பிறகு சில மாதங்கள் ஓய்வாக இருந்த நேரத்தில் ஒப்பந்தமான படம்தான் கே.சங்கரின் 'நம்பினார் கெடுவதில்லை' என்ற ஐயப்ப பக்திப் படம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது".

காரின் வேகம் சட்டென்று குறைகிறது.

'டாக்டர் ஜெ. ஜெயலலிதா திரைப் பட நகர்' என்ற பெயர்ப் பலகையைக் கடந்து கார் விரைகிறது. நிற்கிறது. நேர் எதிரே இத்தாலியக் கட்டட முகப்பு.

"ஒரு நிமிஷம், வந்து விடுகிறேன்". ஒப்பனை அறைக்குள் மறைகிறார். வெளியே வரும்போது இளைய திலகத்தின் முகத்தில் சிராய்ப்பின் வடு. கரங்களில் ரத்தம். தோள் பட்டை ரத்தக் களறியாகக் காட்சி யளிக்கிறது. பிரபுவின் தோளின் மீது கைபோட்டு வருகிறார் இயக்குநர்

★ கட்டுரைக்காக



★ புகைப்படக் கலைஞர் ஆனா ரூனாவுடன் (திருச்சி அருணாசலத்துடன்)

பி.வாசு. நம்மைப் பார்க்கிறார், கன்னத்தில் குழி விழும் சிரிப்புடன்.

பணி தொடங்குகிறது. இயக்குநர் அன்றைய படப்பிடிப்பின் காட்சியை விவரிக்கிறார்.

படம் : 'கட்டுமரக்காரன்'. மீனவர்களின் வாழ்க்கையை மையப்படுத்திய கதை.

"சரி. டயலாக் என்ன?"

சொல்கிறார்கள்.

களத்தில் குதிக்கிறார்.

தூரத்தில் படப்பிடிப்பில் பிரபு. ஒரு நிமிட இடைவெளி கிடைக்கிறது.



★ திரைப்பட நகரப் பாதுகாப்பாளர் டைரக்டர் மாதவனுடன்

ஷூட்டிங் பார்க்க வந்த சிறு கூட்டம் பிரபுவை மொய்க்க... கரம் நீட்டி - கைகுலுக்கி - வணக்கம் சொல்லி - கை அசைத்துச் செல்ல... மீண்டும் படப்பிடிப்பு.


உயரமான அந்தக் கட்டடத்தின் மேல் பளபளக்கும் அரச உடையில் நம்பியார். காமிராவின் கோணம் நம்பியாரை நோக்கித் திரும்ப - நம்மருகில் வருகிறார் பிரபு.

நடித்த களைப்பு முகத்தில் தெரியவில்லை.

தொடர்ந்தோம். "நீங்கள் திரைப் படத் துறைக்கு வந்தபோது உங்கள் தந்தையின் அபிப்ராயம் எப்படி இருந்தது?

"என் தந்தைக்கு எப்போதுமே தன் தம்பி மீது பற்றும் பாசமும் அதிகம். 'தம்பி படித்தவர்; உலக அனுபவம் மிகுந்தவர்' என்ற எண்ணமும் மிகுந்திருந்ததால் எங்கள் குடும்ப நிர்வாகத்தை சித்தப்பாவிடம் ஒப்படைத்திருந்தார். நான் நடிக்கிற நேரம் நெருங்கியபோது அப்பாவிடம் சொன்னேன். 'எனக்குத் தெரியாது. உன் சித்தப்பா என்ன சொல்கிறாரோ... அப்படியே செய்' என்று சொல்லிவிட்டார். ஆக - சித்தப்பா ஒப்புதலுடன் அனைவரின் ஆசீர்வாதத்தோடு நடிப்பில் இறங்கினேன்". பேசும் பிரபுவின் கண்களில் கண்ணீரின் பளபளப்பு; சற்று மௌனம். பிறகு தொடர்ந்தார்.

"ஒப்புதல் கொடுத்த சித்தப்பா, "நீ, யார் மகன்?" என்பதை ஒவ்வொரு கணமும் நெஞ்சில் நிறுத்திக்கொண்டு நடிக்க வேண்டும். உன்னுடைய திறமை 'புலிக்குப் பிறந்தது பூனை



★ ஒளிப்பதிவாளர் அசோக்குமாருடன்



★ பேட்டியாளருடன்

யாகுமா?' என்று எல்லாரையும் பேச வைக்க வேண்டுமே தவிர... 'நடிகர் திலகத்தின் மகனாயிற்றே' என்று பொறுத்துக் கொண்டு போகும்படி இருக்கக் கூடாது. அவர் பெயரைக் காக்க வேண்டியது உன் கடமை" என்று உறுதியாகச் சொன்னார். இப்போது நடித்து விட்டு வந்தபோதுகூட சித்தப்பா சொன்ன சொற்கள்தான் எம்முன் வந்து நின்றன. இது தொடரும்" என்றார்.

"ஸார்! ஷாட் ரெடி".

பிரபு நகர - நம் அருகே வந்தவர் புதுமுகம் 'கரினா குரோல்' மெல்லிய உடல்வாகு. பனிச்சென்ற நிறம். முகத்தில் அச்சம் கலந்த வெட்கம்.

அந்தப் புதுமுகம் பேச்சின் நடுவே சொன்ன வார்த்தைகள் "ஓ... பிரபு! என்னால் நம்ப முடியவில்லை. எவ்வளவு பெரிய நடிகரின் மகன். ஆனால் புதிதாக வந்துள்ள எனக்கு நல்ல ஊக்கம் கொடுக்கிறார். தைரியம் சொல்கிறார். நல்ல நண்பர்". தோளைக்குலுக்கி அழகான சிரிப்போடு அவர் சொன்னபோது, அது நடிப்பல்ல நிஜம் என்று புரிந்தது.


காதலியோடு சற்று தூரம் ஓடும் கட்டுமரக்காரனை அரச பரம்பரையின் ஆள் துப்பாக்கியோடு மாடியில் நின்று குறி பார்க்கும் காட்சிக்கான ஆயத்தங்கள் நடக்கின்றன. பத்து நிமிட இடைவேளை.

நம்மருகில் பிரபு வர - வெள்ளுடையுடன் ஓர் உருவம். திரைப்பட நகரின் பாதுகாப்பாளராகப் பணியாற்றும் இலக்குநர் மாதவன். வணக்கங்கள் பரிமாறிக் கொள்ள மாதவன் கேட்கிறார், "அப்பா சௌக்கியமா? பரஸ்பர விசாரிப்பு. கைகுலுக்கல். நம்முடன் பிரபு. தொடர்கிறது பேச்சு.

"சங்கிலி' படத்திற்குப் பின் 'லாட்டரி டிக்கெட்', 'புதிய சங்கமம்', 'நலம்தானா?' என்ற படங்கள் வெளியாயின. ஆனால் எனக்கு 'நல்ல பெயரை' வாங்கித் தந்தது 'கோழி கூவுது'. அடுத்து 'வெள்ளை ரோஜா', 'மிருதங்கச் சக்கரவர்த்தி', 'கன்னி ராசி', 'சாதனை' ஆகிய படங்கள்" என்றபோது சின்ன நிறுத்தம்.

'சங்கிலி'யில் நடிகர் திலகத்தின் மகன் என்ற பாஸ்போர்ட்டுடன் நுழைந்தேன். ரசிகர்கள் தற்காலிக விசா கொடுத்தார்கள். பின்னர் என்னை நான் ஒரு சின்ன இடைவெளிக்குப் பின் நிலைநிறுத்திக் கொண்ட பிறகு நிரந்தர விசா கொடுத்தார்கள்" என்றார் நகைச்சுவையாய்.






★ நடிகர் தம்பியாருடன்



★ இயக்குநர் பி. வாசுவுடன்



★ படப்பிடிப்புப் பணியாளர்களுடன் ஒரு புன்னகை

இயக்குநர் வாசு வருகிறார் மேலும் சில காட்சிகள் விவரிக்கப்படுகின்றன. வடிவமாகின்றன. ரெடி... ஸ்டார்ட்... குரல்கள்.

மதிய இடைவேளை.

பிரபுவின் வீட்டிவிருந்து நல்ல மணத்தோடு கூடிய உணவு வருகிறது. அதை நல்ல மனத்தோடு பகிர்ந்து உண்கிறார். உணவு முடிகிறது. சற்று ஓய்வு. அவரது உதவியாளர் ஒரு வண்ணப் புத்தகத்தை நீட்டுகிறார். புத்தகத்தின் மேல் 'நவரசத் திலகம் பிரபுவின் சாதனை மலர் 1994' என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

உள்ளே அந்தப் புத்தகம் கொடுத்த செய்திகள், தகவல்கள் - அடேயப்பா!

நடிக்க வந்து ஆறு ஆண்டுகளில்... 1988 இல் மட்டும் பிரபு நடித்த படங்கள் 15. அதில் நூறு நாள்கள் ஓடியவை 12. ஒரே ஆண்டில் 12 நூறு நாள் படங்களை எந்த நடிகரும் இதுவரை கொடுத்ததில்லையாம்.



★ (இ-வ) தங்கை, பிரபு, மனைவி புனிதா, தங்கையின் கணவர்

நடிகர் திலகத்திற்குப் பிறகு ஒரே நாளில் இரு படங்கள் வெளியாகி இரண்டும் 100 நாள்கள் ஓடிய பெருமை இளவல் பிரபுவுக்கு மட்டுமே.

புள்ளி விவரங்களோடு விவரித்த விஷயங்கள் பிரபுவை நினைத்துப் பெருமிதப்பட வைத்தன.

"ஷூட்டிங் பார்ப்பது பொதுவாக எல்லாருக்குமே பிடித்த ஒன்று. நீங்கள் உங்கள் அப்பாவின் ஷூட்டிங் பார்த்திருக்கிறீர்களா?"

"நிறையப் பார்த்திருக்கிறேன். பப்பி அம்மா (பத்மினி)வோடு அப்பா நடித்த போதெல்லாம் நான் ரொம்பச் சின்னவன். கொஞ்சம் நினைவு தெரிந்த காலத்தில் சிலது பார்த்திருக்கிறேன். அதற்குப் பிறகு பெங்களூரில் படித்துக் கொண்டிருக்கிறபோது விடுமுறையில் வீட்டிற்கு வரும்போது பார்த்திருக்கிறேன். 'கௌரவம்' படத்தில் அப்பா 'கிங் ஜார்ஜ்' வேடம் போட்ட அன்று வீட்டில் எல்லாரும் போய்ப் பார்த்தோம்".

படப்பிடிப்பு தொடர்கிறது. எழுந்து செல்கிறார். பிரபு திரும்பி வரும்போது 'பேக்கப்'. எல்லாரும் புறப்பட ஆயத்தமாகிறார்கள்.

பிரபுவோடு காரில் ஏறப்போன நேரம்... ரசிகர் மன்றப் 'பிள்ளைகள்' சிலர் வருகிறார்கள். பொது நிகழ்ச்சி ஒன்றைக் குறித்து சிறிது நேரம் பேசியவர். காருக்குள் வருகிறார்.

"என் ரசிகர் மன்றத்து அன்பர்கள் அனைவரும் சமூக சேவையில் தீவிர மாக ஈடுபடுகிறார்கள். துடிப்பாகச் செயல் ஆற்றுகிறார்கள்" என்றார்.

கார், தொழில்நுட்பக்கல்லூரியைக் கடக்கிறது. பள்ளிப் பருவத்து நாள்களை விவரிக்கிறார். கார் தி.நகர் போக் ரோடில் நுழைந்து அன்னை இல்லத்தை நெருங்குகிறது.

உலகம் மெச்சும் உயர்ந்த நடிகரின் வாரிசை மணந்து அவருக்கும் இரண்டு வாரிசுகளைக் கொடுத்திருப்பவர் திருமதி புனிதா. முகத்தில் பனிச்சென்ற புன்சிரிப்பு நிரந்தரமாய்க் குடிகொண்டுள்ளது.

"சமூகத்தில் எங்களைப் போல் அதிக நேரம் வெளியே செலவிடும் ஆண்களுக்கு நல்ல மனைவி அமைய வேண்டும். என் தந்தைக்கு என் தாய் அமைந்ததுபோல் எனக்குப் புனிதா. என்னைப் புரிந்து கொண்டு, குடும்பத்தைப் புரிந்து கொண்டு, மகிழ்ச்சியாக...., நல்ல மருமகளாக – நல்ல அண்ணியாக – நல்ல தாயாக" பெருமகிழ்ச்சி வெளிப்படுகிறது பிரபுவிடமிருந்து.

பெற்ற மகனின் பெருமையை – தாயும் பகிர்ந்து கொள்கிறார். "என் கழுத்தில் மூன்று முடிச்சு போட்டவரால பெருமை அடைந்தேன் என்பது ஒருபுறம். இன்று என் வயிற்றில் பிறந்த மகனால் அதே பெருமை தொடர்கிறது" என்கிறார் திருமதி கமலா கணேசன்.



★ செவாலியர் சிவாஜிக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில், துணைவியாருடன் சிவாஜி

"பிரபு இன்று பிரபலமாகியுள்ளார் என்றால் அது ஒரு டீம் வொர்க்! எல்லாரும் என் திரைப்பட வாழ்க்கையின் அங்கத்தினர்கள். என்னை இயக்கியவர்கள், கதாசிரியர்கள், தயாரிப்பாளர்கள், பாடல் – வசனம் எழுதியவர்கள், பாடியவர்கள், படத்தளத்தில் வேலை செய்தவர்கள், லைட் பாய்ஸ், டிரைவர்கள், சக நடிகர்கள் என்று பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

நான் பிறந்த வீட்டின் உறவினர்கள், பெரியப்பா – சித்தப்பா, எங்களை பெங்களூரில் வைத்துப் படிக்க வைத்துக் கொண்டிருந்த என் அத்தையின் கணவர், என் சகோதரர்கள், சகோதரிகள், அவர்களின் கணவர்கள், சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகள் என்று நடிக்க வருவதற்கு முன்பே உறவினர் கூட்டத்தின் அன்பை போக் ரோட்டின் அன்னை இல்லத்தில் அனுபவித்தேன். நடிக்க வந்த பிறகு அதே உறவுகளின் அன்பை இந்தப் பரந்த உலகில் என் அன்பு ரசிகர்களின் உள்ளங்களில் அனுபவிக்கிறேன். அன்று வீடு என் உலகமாக இருந்தது. இன்று இந்த உலகம் என் வீடாக இருக்கிறது. என் தந்தையை பிரான்ஸ் நாடு பாராட்டியது. நான் நடித்த ஆங்கிலப் படம் அமெரிக்காவில் வெளியாகிறது" என்றார் உணர்ச்சிவசப்பட்டவராய்.

அந்த நெகிழ்வு சற்று நேரம் அமைதியைத் தந்தது.

"என் ரசிகர்களுக்கு மட்டுமல்ல; அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் எனது மனம் கனிந்த தீபாவளி வாழ்த்துகள்" என்று இரு கரம் கூப்பி – கன்னத்தின் சுழற்சி கொண்ட சிரிப்போடு – புன்னகைபூக்கும் மனைவியோடு வணங்கி விட்டு – நடிகர் திலகத்துக்கு நடக்கவிருக்கும் பாராட்டு விழாவிற்கு குடும்பத்தோடு செல்ல ஆயத்தமானார் இளையதிலகம் பிரபு.

படங்கள் : யோகா



★ 'கட்டுமரக்கார'க் கதாநாயகியுடன்



✱ பெருந்தகை பி.ஏ.சி ராமசாமி ராஜா

பெருந்தகை 'பிஏசிஆர்' நூற்றாண்டு பெரும் பயனளிக்கும் பல்லாண்டு


ஊர் கூடித் தேர் இழுக்கும் ஒருமைப்பாட்டுத் திருவிழாப்போல், நகர மக்கள் ஒருங்கிணைந்து, நகர நாயகரின் நூற்றாண்டுப் பெரு விழாவை நன்றிப் பெருக்குடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

நகரம்: இராஜபாளையம். நாயகர்: பி.ஏ.சி.இராமசாமி ராஜா. நாள்: 24.4.94.

விமரிசையாக விழாவெடுத்த அன்றைய நாளை, என்றென்றைக்கும் மக்கள் நினைவில் கொள்ளுமாறும், மக்களுக்கு நெடிய பயன் அளிக்குமாறும் நிலைபேறு கொண்ட அறச் செயல்களால், சீரோங்கவும் பேரோங்கவும் வைத்து, நிறைவு கொண்டார் - நூற்றாண்டு நாயகரின் திருக்குமாரர் பி.ஆர். இராமசுப்பிரமணிய ராஜா!

அழகிய அலங்கார வளைவுகள், அரங்கச் சொற்பொழிவுகள், படத் திறப்பு, மலர் வெளியீடு, அன்னம் பாலித்தல், இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியவையே நூற்றாண்டு விழாவில் இடம் பெறுவது இயல்பான வழக்கம். ஆனால் பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜா நூற்றாண்டுப் பெரு விழாவில் இயல்பாக அமைகின்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றதோடு, என்றென்றும் சமுதாயத்திற்குப் பயனளிக்கும் செயற்கரிய சீரிய அறச் செயல்கள் மலர்ச்சி பெற்ற அருமை - நூற்றாண்டுப் பெருவிழா பெற்ற தனிப் பெருமை!

மங்கல விழாக்களும், பொது நிகழ்ச்சிகளும் நிகழ்வதற்கேற்ற பிரம்மாண்டமான 'சமூகக்கூடம்' பல லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்பெற்று, நூற்றாண்டு விழா நினைவாக, விழா நாளில் அன்றைய தொழிற்சங்கத் தலைவரும், இன்றைய கவர்னருமான ஜி.இராமானுஜம் திறந்து வைத்தார். ராம்கோ ஊழியர்கள் அனைவரும் திருமணம் போன்ற தங்கள் குடும்ப நிகழ்ச்சிகளை இலவசமாக நடத்திக் கொள்வதற்கென இந்தச் சமூகக்கூடம் எழுப்பப்பெற்றுள்ளது!



✱ திரு பி.ஆர். இராமசுப்பிரமணியராஜா

உடல் உறுப்புகள் அனைத்தையும் சோதனை செய்யும் நவீன கருவிகள் அத்தனையும் அமைக்கப் பெறுகின்ற நூதனமான மருத்துவமனை, சென்னை அப்போலோ மருத்துவ அமைப்புடன் இணைந்து, 'தென் மாவட்டங்களில் இதுபோலொரு மருத்துவமனை இல்லை' என மதிப்பிடும் அளவிற்கு உருவாகவுள்ள 'ராம்கோ' - அப்போலோ மெடிகல் சென்டருக்கு, பெருவிழா நாளில், முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர்.வி. அடிக்கல் நாட்டினார்.

தொழிற் கல்வி பெறுவதற்குரிய தொழிற் பயிற்சி அமைப்பை (ITI) ஏறத்தாழ 75 லட்சம் ரூபாய் முதலீட்டில் உருவாக்கி, 'ராம்கோ தொழிற் பயிற்சி நிலையம்' எனப் பெயரிட்டு, நூற்றாண்டுப் பெருவிழா நாளில் தொழிலதிபர் ஏ.சிவசைலம் திறந்து வைத்தார். நகரின் மையப் பகுதியில், பகலில் சூரிய சக்தியால் இயங்கும் நவீனமான கடிகார அமைப்பு 5 லட்ச ரூபாய் செலவில் நூற்றாண்டுப் பெரு விழா நினைவாக அமைக்கப்பெற்றது.

பெருமதிப்புடனும், பேரன்புடனும், 'பி.ஏ.சி.ஆர்.' என அழைக்கப்பெற்ற அமரர் பி.ஏ.சி. இராமசாமி ராஜா நூற்றாண்டுப் பெருவிழா நினைவை, என்றென்றும் போற்றும் வகையில், கோடிக் கணக்கில் செலவிட்டு, சமுதாய நலப் பணிகள் மேற்கொண்ட பான்மை, விழாவிற்கு வித்தியாசமான தொரு மேன்மையை ஈட்டிக் கொடுத்தது!

பெருவிழா நாளின் முதல் நாள் மாலை, இராஜபாளையம் நகரில் நிகழ்வுற்ற பேரணியும், ஊர்வலமும் வித்தியாசமான நிகழ்ச்சியாகவே அமைந்தன! அரசியல் சார்புடைய பேரணிகளையும், சமயச் சார்புடைய ஊர்வலங்களையும் கண்டிருக்கிறோம்; ஒரு தொழிலதிபரின் நூற்றாண்டுப் பெருவிழா நிகழ்ச்சியாகப் பிரம்மாண்டமான பேரணியும், பெருமைகளை உணர்த்தும் ஊர்வலமும் நிகழ்ந்தது அதிசயமானது; அபூர்வமானதும்கூட! எத்தனையோ பேரணிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கும் விழாத் தலைவர் ஆர்.வி., இராஜபாளையத்தில் நடந்த பேரணி ஊர்வலத்தைக் கண்டு, பெரிதும் ஆச்சரியப்பட்டார்!

அறுபது ஆண்டுகளுக்கு முன்னர், சின்னஞ்சிறிய குக்கிராமமாக இருந்த

குன்றக்குடி
பெரிய பெருமாள்

இராஜபாளையத்தை, பெருந் தொழில் நகரமாகப் பெருமை பெற வைத்த பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜா ஆவார்!

பொருள் ஈட்டும் நோக்கத்தில்தான் தொழில்கள் தொடங்கப் பெறுகின்றன. தொழில் ஆக்கமே செல்வ நோக்கம்தான். வருமானத்தை அடை



✸ பேரணி ஊர்வலம் புறப்படுகிறது

இராஜபாளையம் வரலாற்றில் 1938 ஆம் ஆண்டு, என்றென்றும் நினைவில் கொள்ளத்தக்க பொன்னான ஆண்டாகும்! மக்களின் வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சிக்கான திருப்பணி, பெருந் தொழில் மூலம் வேகமாகச் செய்யப் பெற்று, புதிய ஒளி உதயமாகிப் புலரும் பொழுதாக அந்தப் பொன்னான ஆண்டு அமைந்தது! விவசாயத்தை மட்டுமே நம்பிக்கொண்டு 'வானம் பொழியுமா? வறுமை தொலையுமா?' என வாழ்ந்து வந்த மக்களின் உழைப்பை, மடைமாற்றம் செய்து, தொழில் வளர்ச்சிக்கு உதவுமாறு ஒரு புதிய வழித்தடத்தைச் செப்பனிட்டு வழங்கிய அமரர் இராமசாமி ராஜாவை, பிரபலத் தொழில் அதிபராகவும், பெரும் புகழ் கொண்ட பெருந்தகையாகவும் அடையாளம் காட்ட அடிகோலிய ஆண்டாகவும் 1938 ஆம் ஆண்டு அமைந்தது! 1935 ஆம் ஆண்டில் இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று, பஞ்சாலைத் தொழிலைப் பற்றி அறிந்து கொண்டு வந்த பி.ஏ.சி.ஆர். 1936 ஆம் ஆண்டில் இராஜபாளையத்தில் பஞ்சாலை ஒன்றை வேரூன்றச் செய்தார். அந்த ஆலை தொடங்கிய நேரம் அதி உன்னத அற்புத நேரமாக அமைந்தது!

ஒன்றன் பின் ஒன்றாகப் பல தொழில்கள் வளரவும், 'ராம்கோ' தொழில் நிறுவனங்களாகப் பெருகவும், வானம் பார்த்த வறண்ட பூமியில் வாழ்ந்து வந்தோரின் வாழ்வில் வளம் கொழிக்கவும், கிராமம் நகரமாகியது! மக்கள் தொகை நாளும் பெருகியது!

வதற்குத்தானே வணிகமும், தொழிலும்? ஆனால் பெருந்தகை பி.ஏ.சி. இராமசாமி ராஜா, பொருள் தேடும் நோக்கம் ஒன்றை மட்டுமே கொண்டு தொழில்களை உருவாக்கவில்லை. தாம் பிறந்து வாழ்ந்து வரும் பகுதி மக்களுக்கு, வேலை வாய்ப்பை அளித்து, அவர்கள் வருத்தமின்றி, வறுமையின்றி வாழ்ந்திருக்க வேண்டுமென்றே அப்பெருமகனாரின் அருள் உள்ளம் எண்ணிச் செயலாற்றியது. தொழில் துறைகளில் ஈட்டிய செல்வம், தமக்கும், தம் குடும்பத்திற்கும் மட்டுமே பயன்பட வேண்டுமென அப்பெருந்தகையின கருணை மனம் கருதவில்லை. எனவேதான் 1950 ஆம் ஆண்டில் கல்வி தர்ம ஸ்தாபனத்தை அறக்கட்டளையாகத் தொடங்கினார் அப்பெருந்தகை.

பி.ஏ.சி. இராமசாமி ராஜா கல்விப்பணி தர்ம ஸ்தாபனத்தின் அறக்கட்டளை - பி.ஏ.சின்னைய ராஜா ஞாபகார்த்த மேனிலைப்பள்ளி, டி.ஏ.கே.எம். ராமம்மாள் ஆரம்பப் பள்ளி, பி.ஏ.சி. இராமசாமி ராஜா பாலிடெக்னிக், பி.ஏ.சி.ஆர்.அம்மணி அம்மாள் மேனிலைப் பள்ளி, ஸ்ரீராம் தொடக்கப்பள்ளி, சின்மயா வித்யாலயா - பி.ஏ.சி. இராமசாமி ராஜா மேனிலைக் குடிமைப் பள்ளி ஆகிய கற்பகங்களை உருவாக்கியதோடு, பி.ஏ.சி.ஆர். சேதுராமம்மாள் கல்யாண மண்டபம், பி.ஏ.சி. இராமசாமி ராஜா மருத்துவமனை ஆகியவற்றையும் தோற்றமுறச் செய்துள்ளது.

பக்தியும், பண்பாட்டு உணர்வும் கொண்டிருந்த அமரர் பி.ஏ.சி.ஆர். இராஜபாளையம் பஞ்சாயத்துத் தலைவராகவும், நகரவை சேர்மனாகவும் அமைந்து சமுதாயநலப் பொதுப் பணிகளில் நாட்டம் கொண்டிருந்ததோடு, மனித நேயத்துடன் மகத்தான அறப்பணிகளை விரும்பிச் செய்து பெரும்புகழ் பெற்றார். அப் பெருமகனாரது ஒரே திருக்குமாரர் பி.ஆர். இராமசுப்பிரமணிய ராஜா, தந்தையாரின் அறச் சிந்தனைகளையே வாழ்வுப் பொருள்களாகக் கொண்டு வழி நடந்தும், வழி நடத்தியும் வருகிறார்

"சூரியன் மறைகிறபோது, தன் தேஜஸை எல்லாம் அக்னியில் வைத்துச் செல்லும்" என ஆதிகவி வால்மீகி ஒரு சுலோகத்தில் குறிப்பிட்டுள்ளார். பெருந்தகை பி.ஏ.சி.ஆர். தமது அருள் சார்ந்த கருணை உள்ளத்தை, புதல்வரிடமே வழங்கிச் சென்றுள்ளதாகக் கருதுகிறோம். எனவேதான் தந்தையின் நூற்றாண்டு விழாவிலும், கோடிக்கணக்கில் செலவிட்டுக் கடைக்கோடி மனிதனும் நலம் பெறும், மாபெரும் சமுதாய நலப் பணிகளை மனமார்ந்து ஆற்றி உள்ளார் பி.ஆர். இராமசுப்பிரமணிய ராஜா! 'பெருந்தகை பி.ஏ.சி.ஆர். நூற்றாண்டு, சமுதாயத்திற்குப் பெரும் பயன் அளிக்கும் பல்வாண்டு' என நெகிழ்ந்து மகிழ்கிறோம்! நெஞ்சாரப் போற்றுகிறோம்!



✸ ஊர்வலம்

இன்று உலகெங்கிலும் வரலாறு காணாத அமளி. ஒவ்வொரு நாட்டிலும் பல இன, மதக்குழப்பங்கள். கத்தி கட்டாரியை நம்பி வாழ்ந்த கயவர்களுக்கு 'கலானிஷிகாவ்' உயர் துப்பாக்கிகள். அரைமணி நேரம் இடைவிடாது சுடும் ஆற்றல்கொண்ட, ஏ.கே.47 துப்பாக்கிகள், எரிகுண்டுகள், 20 மைல் தொலைவில் கூடப்பாய்ந்து அங்குள்ள மக்களை ஒருவர் விடாது அழிக்கும் சக்தி வாய்ந்த பீரங்கிகள் போன்றவை கிடைத்துள்ளன.

அண்மையில் நான் டில்லி மாநகர் சென்ற போது என்னுடன் உலக வங்கியின் உயர் அதிகாரி ஒருவர்- யாழ்ப்பாணத் தூய தமிழர்- விமானத்தில் வந்தார். மிக அற்புதமான மனிதர். உலக நாடுகளையெல்லாம் அடிக்கடி சுற்றி வரும் இப் பெருமகனார் என்னிடம் கூறினார்: "அன்று நம் மூதாதையர் வாழ்ந்த விதத்தைப் பாருங்கள். எல்லாரும் ஒரு குடும்பமாக இருப்பார்கள். அடிதடி கிடையாது. அதே போல் கிராமங்கள் முழுவதிலும் ஒற்றுமை. சச்சரவே இல்லை."


அவர் மேலும் கூறினார்! "ஒரு முறை நான் காஷ்மீர் சென்றிருந்தேன். அங்கு காஷ்மீர் பண்டிதர் ஒருவர்- பல்கலைக்கழகப் பேராசிரியர்- என்னையும் அவரது தகப்பனார் திதி, விருந்துக்காக அழைத்திருந்தார். நானும் போனேன். என்ன ஆச்சரியம்? பல பண்டிதர்கள் வந்திருந்தனர். அவர் நடுவே இஸ்லாமியர்கள் பலர். பேராசிரியர் சொன்னார்,


"இந்த இஸ்லாமியர் எனது 'ஞாதிகள், அதாவது எங்கட்கு எல்லாம் ஒருவரே பாட்டன், முப்பாட்டன். எனவே எங்கள் வீட்டுத் திதியில் அவர்களும் கலந்து கொள்வார்கள்" என்றார். என் மனத்துக்கு இது மிகவும் இனிய செய்தியாக இருந்தது. அதே போல்தான் இலங்கையில் சிங்களவர் நடத்திய, மற்றும் இலங்கை அரசு நடத்திய வங்கிகளிலெல்லாம் தமிழர் நிறைந்திருந்தனர். ஒரு தமிழரைப் போட்டால், நேர்மை, நாணயம் இவை தவிர உயிரையும் கொடுத்து வேலை செய்வார் என்றார்கள் அன்று.

"இன்று பாருங்கள் சிங்களரும் தமிழரும் ஒருவருக்கொருவர் விரோதிகளாகச் செயல்படுகிறார்கள். காஷ்மீரைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டிய ஐக்கிய நாடுகள் சபையே துருப்புகளை அனுப்பி பாஸ்னியாவில் பல்லாயிரக்கணக்கானவரை அமைதியின் பெயரால் கொன்று குவித்து வருகிறது" என வருந்தினார் அப் பெரியவர். அந்தக் காட்சியைக் கண்முன்னே கண்டது போல் உலக வங்கி அலுவலர் கண்களில் நீர் சுரந்தது.

"ஆம்;நம் மக்கள் இனம் ஏன் அறிவற்ற மாக்கள் இனமாக மாறி அழிவுப் பாதையில் செல்கின்றது? மனித நேயம், பண்பாடு இவை மறைந்து விட்டதா?" என அழும் குரலில் வினவினார் இவ்வுலகக் குடிமகன். ஆம்; அவர் கூறியது முற்றிலும் உண்மை.

ஒரு நாள் நான் சைதாப்பேட்டையில் நின்று கொண்டிருந்தேன். கசாப்புக் கடைக்காக ஆடுகளை ஆட்டோவில் ஏற்றுகிறார்கள். பாவம் நாலு கால் பிராணி கால் வெளியே





தோழமை யோகம்

டாக்டர் கி.வேங்கடசுப்பிரமணியன்

நீட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு கடப்பாரையை வைத்து 'டப்டப்' என்று கால்களை முறித்து ஆட்டோவுக்குள் தள்ளுகிறார்கள். எதிரே 100 ஆண்டுகள் கடந்த ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. ஒரு புகழ்மிகு முதலமைச்சர் பொன்விழா வளைவு மறுபுறம். வராத காவிரித்தாயின் சிலையின் முன்பு இந்த அக்கிரமம் நடக்கிறது. வாய்விட்டு அலறக்கூட முடியாமல் ஆடுகள் வாயில்லாப் பிராணிகளாகத் தங்களது உயிரைத் தியாகம் செய்யப் போய்க் கொண்டிருக்கின்றன.

இந்த ஆடுகளைவிடக் கேவலமான முறையில் உலகெங்கும் மனிதன் நடத்தப்படுகிறான். அழிக்கப்படுகிறான், நசுக்கப் படுகிறான்.

Terrorists என்பவரை அன்றே வள்ளுவப் பெருந்தகை அடையாளம் கண்டு கொண்டவர். 'கயவர்' என்றார் இவர்களை.

வேறு எந்த உலக இலக்கிய நூலிலும் வள்ளுவன் கயமையை ஆராய்ச்சி செய்த மாதிரி யாருமே செய்யவில்லை. தீர்க்கதரிசியான வள்ளுவன் கூறுகிறான்: "மக்களே போல்வர் கயவர்". பாருங்கள் கயவர்கள் மனிதர் மாதிரியே இருப்பார்கள். ஆனால் அவர்கள் உள்ளம் முழுவதும் ஆலகால விடம். பிறர் படும் துன்பம் அவர்கட்கு ஒரு பொருட்டல்ல. அவர்கள் இலக்கை அடைய எது வேண்டுமானாலும் செய்வார்கள். கொஞ்சம் நம் அரசியல்வாதிகள் சாயல் அடிப்பதாகப் படுகிறதா? இருக்கலாம். அமெரிக்கச் சிந்தனையாளர் மார்க் ட்வைன் ஒரு முறை கூறினார்: "அரசியல்வாதிகள் தாம் முன்னேற எதுவும் செய்வார்கள். சமயம் கிடைத்தால் ஆதாயம் ஏற்படலாமென்றால் தேசாபிமானிகளாகக்கூட அவர்கள் மாறுவார்கள், அதனால் பலன் இருந்தால்" என்று எள்ளி நகையாடுகிறார். ("If needed and if profitable they may turn even as Patriots")

சரி: இக் கயமை இன்று உலகெங்கிலும் பரவிப் படர்ந்து வருகிறது. இதை எப்படி மாற்றமுடியும்?

மனிதனுக்கு மனத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும். ஆதிக் குரங்கு, மனத்தைப் பெற்றதால் மனிதனாகியது. ஆனால் இன்று அந்த மனம் காணாமல் போனதால் மறுபடியும் குரங்காக மாறி வருகிறான் மனிதன். இது ஒரு 'Reverse Darwinism' என்பார் இங்கிலாந்து யார்க் பல்கலைக் கழகப் பேராசிரியர் இயான் லிஸ்டர் (Yan Lister)

ஆம் இது முற்றிலும் உண்மை. எப்படி டார்வின் குரங்கிலிருந்து மனிதன் உருவானதை நிரூபித்தாரோ அதே போல் இன்று மனிதன் குரங்காக மாறி வருவதை நம் கண்முன்னே காண்கிறோம்.

ஒரே வித்தியாசம், இன்றையக் குரங்கு நாகரிகமான குரங்கு. ஏ.ஸி.என்னும் குளுகுளு அறையில் தூங்கும் குரங்கு. பல இலட்சக் கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கார்களில் போகும் குரங்கு. - ஒரு சிற்றுண்டிக்கு ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் பல ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்யும் பான்மை கொண்டது மனமற்ற இம்மனிதக் குரங்கு.

சரி, இக் குரங்கை மனிதனாக்க முடியுமா? காலம் கடந்துவிட்டதா? இல்லை. நம்முடைய மூதறிஞர்கள், சிந்தனையாளர்கள், அறிவாளிகள் இவர்கள் இந் நோய்க்கு ஒரு மருந்து வைத்துள்ளார்கள். நாம் அது பற்றி அறிய மாட்டோம். அவ்வளவே! ஆனால் இக் கொடிய நோய் முற்றிலும் பரவும் முன் நாம் நமது சான்றோர் வாக்கைக் கேட்போமா?

புலவர், மூதறிஞர், உலகின் மாமேதை என்று போற்றப்பட்ட நம் இராஜாஜி அவர்கள் கண்ட மருந்துதான் மனித இனம் உய்ய இன்று ஓர் அமுத கலசமாக அமைகிறது. அது என்ன? அதுதான் "தோழமை யோகம்".

இராஜாஜி கூறுகிறார்: "ஆகாயத்திலிருந்து மேகங்கள் சொரியும் மழை நீரெல்லாம் எப்படி சாகரத்தைத் தேடிச் செல்கின்றதோ, அவ்வாறே பக்தர்கள் எந்த எந்தப் பெயர் வைத்து எந்த எந்தத் தெய்வத்தைப் பக்தியோடு வணங்கினாலும் அந்த வணக்கம் நம்முடைய கேசவனையே, நம் சர்வேஸ்வரனையே சேரும் என நம் சாத்திரங்கள் கூறுகின்றன."

"ஆகாசாத் பதிதம் தோயம்
யதாகச்சதி சாகரம்
சர்வதேவ நமஸ்கார;
கேசவம் பிரதி கச்சதி"

இதையே வள்ளுவர் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்ற குறளில், முதற்குறளில் ஈசுவரனை, இராமனென்றோ, கிருஷ்ணனென்றோ, புத்த னென்றோ அழைக்காமல் "பகவன்" என்று பொதுப் பெயரிட்டுக் குறிக்கவில்லையா? இதனால்தான் வள்ளுவத்தை உலகப் பொதுநூல் என்கிறோம். தனக்குப் பின்னால் வரக்கூடிய மதங்களையும் கிறித்துவம், இஸ்லாம் இவற்றையும் இக்குறள் தழுவிப் போகிறது.

இப்படி எல்லாமே ஒன்றுதான் என்று இருக்கும்போது நாம் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதின் நோக்கமென்ன? மனிதன், மிருகமாகி வருகிறான் என்பது உண்மையா? ஆனால் மிருகங்கள்கூட மனிதனில் உயர்ந்தவை மாதிரி தோன்றுகின்றனவே!

பிரான்சிஸ் பேகன் என்ற இங்கிலாந்து நாட்டுப் பேரறிஞனை ஒருமுறை ஒருவர் "நாயே" என்று வைதார். உடனே பேகன் கூறினான்: "அன்பரே! ஒரு மனிதனுக்கு அவனை 'நாயே' என்று கூப்பிடும்போது ஏற்படும் பெருமை அள விடற்பாலது. ஏனெனில் சாதாரண மனிதனுக்கு இல்லாத பெருங்குணங்கள், அருங்குணங்கள் கொண்டது நாய் என்னும் பிராணி. நன்றிக்கு எடுத்துக்காட்டே நாய்தான்; நன்றி கொன்றமைக்கு என்றுமே இலக்கணமாகத் திகழ்பவன் மனிதன். எனவே ஏற்றமிகு நாயின் பெயரை எனக்குச் சூட்டினாயே. -இது நான் பெற்ற பேறு. உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பதென்றே தெரியவில்லை" என்று கூறி அகமகிழ்ந்தான் பிரான்சிஸ் பேகன்.

இதிலிருந்து நாம் அறிவது என்ன? நாய்க்கு இருக்கும் பண்புகள்கூட இல்லாத மனிதன் தன் சகோதரர்களைக் கொல்வதில் இன்பம் காணுவது எதனால்? தான் என்னும் மமதை, அகங்காரம் என்று பதில் கூறலாம். "நான்" என்னும் விஷத்தைத் தினம் தவறாது அருந்தும் மனிதன் என்று இராமகிருஷ்ண பரமஹம்சர் கூறவில்லையா? எனவே மூதறிஞர் இராஜாஜி கூறினார், தோழமை யோகத்தை நாம் வளர்க்கா விட்டால் உலகம் நாம் வசிக்க இயலாத நரகமாகிவிடும் என்று.

இன்று நாமே பார்க்கிறோம். நாகரிகத்தின் அறிகுறிகள் மெல்ல மெல்லச் சாகின்றன. செய்தித்தாள்களைப் பாருங்கள்: சாலையில் சென்ற பெண்ணை நண்பர்கள் குழாம் கற்பழித்தது. மனைவியை, தாயின் துணையுடன், சகோதரியின் அரவணைப் புடன், கணவன் மண்ணெண்ணெய் விட்டு எரித்தான். ஐந்து முறை ஏமாற்றிக் கல்யாணம் செய்தவர் ஆறாம் முறையும் கல்யாணம்! தேர்வில் பாதகம் செய்த மாணவரைக் கண்டித்த ஆசிரியர் குத்திக் கொலை; 'எப்படி இப்படித் தினம் செய்திகள் வருகின்றன? இவற்றிற்கு ஒரே காரணம் யாரிடமும் தோழமை உணர்ச்சி இல்லாமையே? 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடினான் பாரதி. "நீள் மலையும் கடலுமெல்லாம் எங்கள் கூட்டம்" என முழங்கினான் வரகவி.


எனவே மூதறிஞர் கூறுகிறார், 'தோழமை யோகம் பயில்!' இதை அவர் கூறும்போது தோழமையின் சிறப்புப் பற்றிக் கூறிய பிரஞ்சுத் துறவி லாரென்ஸ் என்பாரை மேற்கோள் காட்டிப் பேசுகின்றார். துறவி லாரென்ஸ் ஆண்டவனைத் தோழனாக வரித்துப் பாரதி பாடிய கண்ணன் பாட்டைப் போல் எழுதுகிறார். "கடவுளைத் தோழனாக நீ பாவித்தால் உன் உடன்பிறப்பையும் தோழனாகப் பாவிக்கும் பக்குவம் தானாகவே வந்துவிடும்" என்பார் இத்துறவி.

எனவே உலகம் உய்ய, வையம் வாழ, மனிதன் வாழ்வாங்கு வாழ ஒரே வழி, தோழமை யோகம் பயில்வதேயாகும். இதை மனித குலம் செய்யுமா?

"மனிதர் எல்லாரும் ஓர் குலம்; அவர்கள் அனைவருக்கும் இறைவன் ஒருவனே" எனும் குறிக்கோள், அமைதிக்கு வழி வகுக்கும் சிறந்ததோர் அடிப்படையாகும். சமயங்கள் இறைவனை அடையவும் மனிதரைத் தூய்மைப்படுத்தவும் உதவும் சாதனமே யாகும். அதுவன்றி மனிதரை மனிதர் வெறுக்கவும் பகைக்கவும், அழிக்கவும் தூண்டுவதல்ல. இந்த உண்மையை அறியாத மக்கள் சமயத்தின் பெயரால் பிணக்குகளையும், பேதங்களையும் வளர்த்து, வன் முறைக்கு ஆளாகி அழிகிறார்கள். அத்தகைய அழிவி லிருந்து மக்களைக் காக்கவும், மனித நேயத்தை வளர்க்கவும், இன, மதக் கலவரங்கள் தோன்றாமல் மனித குலம் தழைக்கவும், அமைதிக்கு வழி வகுக்கவும் பாடுபடுவதே நமது தலையாய கடமையாகும்.

கடந்த 47 ஆண்டுகளாய்ச் சீரிய குடியரசு அமைத்து, மக்களாட்சி மக்களுக்காக மக்களால் நிறுவி, பல ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டி, நம் நாடு முன்னேற்றப் பாதையில் அடி மேல் அடி வைத்து முன்னேறி வருகிறது. இருப்பினும், தற்போதும் நம் நாட்டின் நிலையென்ன? நம்மவர் கதியென்ன? அவற்றை எண்ணும்போதே நம் மனம் வருத்தமும், வாட்டமும் அடைகிறது. எங்கும், எம்மருங்கிலும் ஒழுக்கக் குறைவு, ஊழல், சட்ட அவமதிப்பு, சாதிச் சண்டை, மத வேற்றுமை, மொழி வெறி, வன்முறை ஆகியவையே தாண்டவமாடுகின்றன. நிம்மதியும், அமைதியும் சீர்குலைகின்றன.

அமைதிக்கு வழி



நம் பாரதநாடு பழம்பெரும் நாடு. அது நேற்று இன்று உருவானதன்று. உலகில் மற்ற நாடுகள் எல்லாம் காடும் மேடுமாய் விளங்கிய போது, நம் பாரதம் ஒரு பண்பட்ட நாடாகத் திகழ்ந்தது. ஏனைய நாட்டோர் எல்லாம் காட்டுமிராண்டிகளாய்த் திரிந்த போது, பாரத நாட்டு மக்கள் பண்பாடும், நாகரிகமும் சிறந்தோங்கி விளங்கினர்.

மேற்கே இயேசு நாதரும், நபி நாயகமும் அவதரிக்கும் முன்னரே நம் பாரத நாட்டில் பல இறை அவதாரங்கள் தோன்றி உலகிற்கு வழிகாட்டியாய்த் திகழ்ந்தனர். நம் நாட்டில் ஆன்மிகமும், வேதாந்தமும், விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும், கலையும், வாணிபமும் சிறந்து விளங்கின. பண்டைக் காலத்தில் நமது இந்து அரசர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சிறந்து விளங்கி சீரிய செங்கோல் ஆட்சி புரிந்து பொற்காலம் படைத்தனர். தங்களது அன்பாலும், பண்பாலும், பரோபகாரத்தாலும் உலக மக்கள் அனைவரது போற்றுதலையும், பாராட்டுதலையும் பெற்றனர்.

நாளடைவில் நம் நாட்டில் அந்நியர் ஆட்சி அடியெடுத்து வைத்தது. ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ச்சியாய் கிரேக்கர், கூனர், குஷானர், சாக்கியர், ஆரியர், முகம்மதியர், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலானோர் நம் நாட்டின் மீது படையெடுத்து ஆதிக்கம் செலுத்த லாயினர். பாரதத்தின் தந்தை, விடுதலைப் போரின் நாயகர் மகாத்மா காந்தி அடிகளின் தலைமையில் ஒருவாறு 1947-இல் வெள்ளையரை வெளியேற்றி நம்நாடு சுதந்திரம் அடைந்தது.



இலக்கியமாமணி
பொன் பரமகுரு

இவ்விதச் சீர்கேட்டிற்கும், சீரழிவிற்கும் காரணம் என்ன? முழுமுதற் காரணம் நாட்டில் தேசப்பற்று குறைவே! அடுத்து, நம்மிடையே பொதுநல மனப் பான்மை மங்கி, சுயநலப் பேராசை ஓங்கி இருப்பதே! நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நான் நான்கு தலைமுறை அரசியல்வாதிகளைச் சந்தித்துள்ளேன்.

முதலாவது, அரசியல் தியாகிகள். இவர்கள் உடல், பொருள், ஆவி அனைத்தும் நாட்டுக்கும், நாட்டவருக்கும் அர்ப்பணித்து, தங்கள் குடும்பத்தைக் கூடச் சரிவரப் பேணாமல், தொண்டாற்றிய தியாகிகள் ஆவர்.

இரண்டாவது, உண்மை அரசியல்வாதிகள். இவர்கள் நாட்டு நன்மையும், நம்மவர் நலனும் கருத்தில் கொண்டு சிறந்த தொண்டாற்றியவர்கள். இவர்களில் ஓரிரண்டு பேர் இலைமறை காயாகத் தப்பான வழியில் தவறுகள் புரிந்தனர்.

மூன்றாவது, அரசியல் சந்தர்ப்பவாதிகள் -இவர்கள் அரசியலையே தொழிலாகக் கொண்டு, எவ்விதக் கொள்கைப் பிடிப்புமின்றி, பணம், பதவி கிடைக்கும் பக்கம் சேரத் தொடங்கினர். அதனை வடக்கே "ஆயா, ராம்! காயா, ராம்!" என வேடிக்கையாகக் கூறுவதுண்டு. அதனாலேயே கட்சி மாறும் தடைச் சட்டமும் அமலாக்கப்பட்டது.

நான்காவது, தற்போதுள்ள அரசியல் சுயநல வாதிகள். இவர்கள் நாட்டைப் பற்றியோ, நாட்டவரைப் பற்றியோ சற்றும் கவலையின்றி, தான், தனது குடும்பம், தனது இனம், தனது கட்சி எனச் சுயநலமாய்ச் செயலாற்றுகின்றனர். "சர்வாதிகாரக் கொடுங் கோலாட்சி கொணரும் வீழ்ச்சியைவிட, நாட்டிற்குப் பெரும் வீழ்ச்சியை நல்கும் பொதுநலம் பேணாக் குடியாட்சி" என்கிறார் அறிஞர் மாண்டேகு.

இந்தச் சூழ்நிலையில் நாட்டைப் பற்றியும், நாட்டு மக்களைப் பற்றியும் கவனிப்பார் யார்? நாடே நாம், நாமே நாடு என்பது உலகறிந்த உண்மை. நாட்டுப் பற்றும், நாட்டவர் பற்றும் அற்றவன் நடைப் பிணத்துக்குச் சமம் என்கிறார் ஆங்கில உலக மகாகவி. இன்று நாம் அத்தகைய அவல நிலையில்தான் உள்ளோம். சாதி, மத, இன, மொழி, கட்சி வேற்றுமையால் நம்மிடையே இந்தியன் என்ற ஒருமைப்பாட்டு உணர்வேயின்றி, தேசப் பற்று குன்றி நாம் காட்சி யளிக்கிறோம். நம்மிடையே பொதுநலத்தை விடச் சுயநலமே பிரதானமாகக் காணப்படுகிறது. தான், தனது, தன்னினம், தன் கட்சி என்றே சிந்தனையும், செயலும் உள்ளன.

நாம் நம்மைத் தமிழன் என்றால், 6 கோடி மக்கள் உறவோடு அது முடிந்துவிடும். இந்து என்றால் 60 கோடியோடு உறவு முடிந்துவிடும். ஆனால், இந்தியன் என்றாலே 85 கோடி மக்களின் உறவைப் பெறுகிறோம். ஆகவே, இந்தியன் என்று நம் மனம் விரிந்து, பார்வை பரந்து இருத்தல் வேண்டும். அதுதான் தேசியம்! அரிய தியாகங்கள் புரிந்து, அரும்பாடு பட்டு நாம் அடைந்த சுதந்திரத்தை நாம் சதாவிழிப்புடன் கண்ணுங் கருத்துமாய்க் கட்டிக் காத்திட நமக்கு அடிப்படைத் தேவை தேசப்பற்றே! தேசியத்தையும், தேசப்பற்றையும் பேணிப் போற்றி வளர்த்திடல் வேண்டும். அதுதான் அமைதிக்கு வழிகோலும்.

மேலும், நம் நாட்டில் ஏற்படும் பல இன்னல் களுக்கும், அமைதியின்மைக்கும் முக்கிய காரணம் ஒழுக்கக் கேடுதான். "ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்" என்பது வள்ளுவர் வாக்கு. உயிரினும் மேலாகக் கருதப்படும் ஒழுக்கத்தை நாம் பேணிப் போற்றிட வேண்டும். சுதந்திரம் என்றால், தன்னொத்த மனிதனைச் சுரண்டச் சுதந்திரம் என்னாது, பண்பாடென்றால் பகுத்தறிவாலான பித்தலாட்டம் என்னாது, உண்மையும், உழைப்பும், நீதியும், நேர்மையும், தியாகமும், தொண்டும் நாட்டில் சிறந்தோங்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் அமைதி நிலவும்.

"வாய்மையே வெல்லும்" என்பது நம் நாட்டின் மேற்கோள் வாசகம். ஆனால், வாய்மை புறக்கணிக்கப் பட்டு பித்தலாட்டமும், ஏமாற்று வித்தையும், பொய்யும், புரட்டும் நாட்டில் தாண்டவமாடுகின்றன. உண்மை வாதி, பொதுமக்கள் விரோதி, பிழைக்கத் தெரியாதவன், சரிக்கட்டும் தந்திரத் திறனற்றவன், நுண்நயமோ நுண்திறனோ இல்லாதவன் என ஒதுக்கப்படுகிறான். தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் பறக்கவிடப்படுகின்றன. அவற்றைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. கவர்ச்சிப் பேச்சால் மக்களை ஏமாற்றி ஆட்சியைப் பிடிப்பதே குறிக்கோள் என்றாகி விட்டது. அதனால் அமைதி குலைகிறது. அமைதிக்கு வழி வகை செய்யத் தேர்தல் சீர்திருத்தங்கள் அவசியம் தேவை.

நம் நாட்டில் மக்களாட்சி, சட்டத்தின் அடிப்படையில், அதனை ஆதாரமாகக் கொண்டு நிகழ்கிறது. ஆங்கிலத்தில் அதனை "Rule of Law" என்பார்கள். ஆகவே, நாம் சட்டத்தை மதிக்கவும், கட்டிக் காக்கவும் வேண்டும். "நாம் நமக்காக வகுக்கும் சட்டங்களுக்குப் பணிவதே சுதந்திரம்" என்கிறார் அறிஞர், ரூசோ.

மக்கள் அதிகாரம் கொண்டு இயற்றப்படும் சட்டத்தைக் கடைப்பிடித்தல் நமது கடன். ஆனால், சட்டம் என்றாலே நம்மிடையே ஓர் அலட்சியம், அக்கறையின்மை காணப்படுகின்றன. அது கூடவே கூடாது. அதுதான் நம்மவருக்கும், மேல் நாட்டவர்க்கும் உள்ள முக்கிய வேறுபாடு.

இலண்டனில் படித்த நீதிபதி ஒருவர் தனது அனுபவத்தைக் கூறினார். ஒருநாள் மாலை அவரும், அவரது ஆங்கில நண்பரும் உலாவச் சென்றனர். அப்போது ஒரு கறிகாய்த் தோட்டத்திலிருந்து, ஒரு மூதாட்டி தன் கைகளில் சில கறிகாய்களுடன் தயங்கித் தயங்கி நடந்து வந்தாள். அதைக் கண்டு சந்தேகமுற்ற ஆங்கிலேய நண்பர் அம் மூதாட்டியை நிறுத்தி அக்கறிகாய் குறித்து விசாரித்தார்.

அப்போது இளகிய மனம் கொண்ட நம்மவர், "ஏன், வீணே அந்த மூதாட்டியைத் தொந்தரவு செய்கிறீர்?" எனக் கேட்டார்.

"அவள் அக்கறிகாய்களைத் திருடிச் செல்கிறாள். திருடுவது குற்றம் என்பது சட்டம். எனவே, நம் கண்முன்னே நடக்கும் குற்றத்தை நாம் தடுத்து, தக்க நடவடிக்கை எடுப்பது நமது கடன்" எனக் கூறினார், ஆங்கிலேய நண்பர்.

அம்மூதாட்டியைக் காவலரிடம் ஒப்படைத்தார். பின்னர், வழக்கு நீதிமன்றம் வந்தது. சாட்சி சொன்னார். நீதிபதி அம்மூதாட்டிக்கு அபராதம் விதித்தார். கட்டத் தவறினால் இரண்டு வாரம் சிறை தண்டனை எனத் தீர்ப்பு அளித்தார்.

அது கேட்ட மூதாட்டி, "அபராதம் கட்டப் பணம் இருந்தால், நான் ஏன் கறிகாயைத் திருடுகிறேன்? இந்த தள்ளாத வயதில் என்னைச் சிறைக்கே அனுப்புங்கள்" எனப் புலம்பிக் கண்ணீர் வடித்தாள்.

அதைக் கண்டு மனம் இரங்கிய ஆங்கிலேய நண்பர் தனது பையிலிருந்து அபராதத் தொகையைக் கட்டி, அம்முதாட்டியை முதியோர் இல்லத்தில் சேர்த்தார்.


அதன்பின் நம்மவரிடம், "நண்பரே! இப்போதுதான் இரக்கங்காட்ட வேண்டும்; குற்றம் புரியும் போதல்ல. தவறாமல் சட்டத்தை மதித்து, குற்றத்தைத் தடுப்பதற் கான வழிவகை செய்தல்; வேண்டும். நமது சட்டத்தை நாமே கடைப்பிடித்தல் வேண்டும்" என்றார்.

அத்தகைய சட்டத்தைக் காக்கும், மதிக்கும் மனப் பான்மையை நாம் வளர்க்க வேண்டும். அதில் நமக்கு விருப்பு வெறுப்பு கூடாது. சட்டத்தைக் காப்பதில் நமக்கு சிறிது சிரமமும், சங்கடமும் ஏற்படலாம். அதைப் பொருட்படுத்தாது சட்டத்தைக் காப்பதே நமது தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும்.

மக்களாட்சிக்கு உறுதுணையாக விளங்கும் சட்டத்தை அமல் நடத்தி, ஒழுங்கை நிலைநாட்டி, அமைதி காப்போர் காவலர். மேலும், மக்களது உடைமை களுக்குப் பங்கம் வராது பாதுகாத்து, பங்கம் விளைந் தால் குற்றவாளிகளை இனங்கண்டு நீதிமன்றத்தில் தக்க தண்டனைக்குள்ளாக்குவதும் காவலர் கடமை யாகும். காவலர் தங்கள் கடமையை ஏதோ காட்டிலோ, மேட்டிலோ, கடலிலோ, விண்ணிலோ ஆற்றுவதில்லை. நாட்டிலே, நகரத்திலே, கிராமத்திலே, மக்கள் மத்தியிலேதான் சட்டத்தை அமல் நடத்துகிறார்கள். அவர்கள் சட்டத்தை வெற்றிகரமாய் அமல் நடத்த மக்களின் உதவியும், ஒத்துழைப்பும் அவசியம் தேவை. காவலரிடமிருந்து தக்க உதவி பெற, மக்கள்,காவலருக்கு உதவவேண்டும். சட்ட விரோதமான காரியம் எது நடப்பினும் உடனே காவலருக்குத் தகவல் கொடுக்க வேண்டும். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும், உதவ வேண்டும். 'நமக்கேன் வம்பு' என அலட்சிய மாகவும், கவனக் குறைவாகவும் இருத்தல் கூடாது. குற்றம் நடந்த இடத்தைக் கலைக்காமலும், மக்களே அதைச் சோதனையிட்டுத் தடயங்களைக் குலைக் காமலும் இருத்தல் வேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தந்து, குற்றங்களைத் தடுக்கவும், அமைதியை நிலை நாட்டி, ஒழுங்கைப் பராமரிப்பதற்கும் மக்கள் காவலருடன் ஒத்துழைத்தல் வேண்டும்.

நம் நாட்டில் அமைதியைக் குலைக்கும் மற்றொரு பிரச்னை, மக்கள் தொகைப் பெருக்கம். 1947-இல் நம் நாடு சுதந்திரம் அடைந்தபோது மக்கள் தொகை 34 கோடிதான். ஆனால், இன்றோ அது 85 கோடியாகப் பன்மடங்கு உயர்ந்துள்ளது. நம் நாட்டில் நிமிடத்திற்கு 50 குழந்தைகள் வீதம், ஒரு நாளைக்கு 72 ஆயிரம் குழந்தைகளும், ஆண்டுக்கு 2 கோடியே 63 இலட்சம் குழந்தைகளும் பிறப்பதாய்க் கணக்கிடப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகப் பெரிய நிலப்பரப்புள்ள ருஷ்யாவின் மக்கள் தொகை 25 கோடியே. அடுத்துள்ள பெரிய நாடான கனடாவின் மக்கள் தொகை 3 கோடிதான். 116 கோடியுள்ள சீனாவுக்கு அடுத்து நம் நாட்டில்தான் மக்கள் தொகை அதிகம். ஆனால், அதற்கு ஏற்றாற்போல் அத்தியாவசியத் தேவைப் பொருள்களின் உற்பத்தி கிடையாது. எனவேதான், பற்றாக்குறையும், பட்டினியும், பஞ்சமும், அமைதி யின்மையும் ஏற்படுகின்றன. எனவே, நாட்டில் நல் வாழ்வும், முன்னேற்றமும், அமைதியும் திகழக் குடும்பநலக் கட்டுப்பாடு மிகமிகத் தேவை.



ஒரு வீடுதான் நாட்டின் ஆரம்ப அடித்தளம். பல வீடுகள் சேர்ந்ததே ஓர் ஊர். பல ஊர்களால் ஆனதே ஒரு நாடு. ஆகவே, வீடு வளம் பெற்றால்தான் நாடு வளம் பெறும். ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைகளை அளவோடு பெற்று வளமோடு வாழ்ந்தால்தான் நாடு நலம் பெறும். வசதியும், வாய்ப்பும் பெருகும். அமைதி நிலவும். நல்வாழ்வு மலரும். அவ்வாறின்றி மக்களை அதிகம் பெற்று அவதியுறும் நம்மை, "புற்றீசல் போலப் புதல்வரைப் பெற்றிங்கே புலம்புகின்ற அறிவிலிகாள்" என இடித்துரைக்கிறார் தாயுமானவர். ஆகவே, குடும்ப நலத்திட்டத்தைப் பரப்பி நாட்டில் அமைதிக்கு வழி வகுத்திட வேண்டும்.

தேவையில்லா மேல்நாட்டு நாகரிக மோகம் நம்மைச் செல்லரித்து வருகிறது. அதனை மாற்றி நம் பண்பாட்டை வளர்த்திட வேண்டும். "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனப் போற்றி மதித்த காலம் உண்டு. ஆனால், தற்போது அத்தகைய ஒழுக்க நியதி மறைந்து, மக்களிடையே கட்டுப்பாடு குன்றி, வன்முறை தாண்டவமாடுகிறது. காந்தி மகான் கற்றுத்தந்த சத்தியமும், அகிம்சையும் அவருடனே மறைந்திடாது, நாம் போற்றி வளர்த்திட வேண்டும். "இந்திய நாட்டின் நல்வாழ்வு நமது கிராமங்களின் நல்வாழ்வையே பொருத்தது. கிராமங்கள் முன்னேற்றம் அடையாத வரை நாடு வளர்ச்சியுறுமெனக் கருதுதல் பகற்கனவே" என்றார் காந்தியடிகள். அவ்விதமே நாம் கிராமச் சீர்திருத்தத்திலும், சீரமைப்பிலும், வளர்ச்சியிலும் பங்கேற்றல் வேண்டும். அதுதான் நாட்டின் அமைதிக்கு வழி வகுக்கும்.

பாரத நாட்டின் முடிசூடா மன்னராய், முதல் பிரதமராய்த் திகழ்ந்தவர் பண்டித நேரு. அவர் இரண்டு வேண்டாத காரியங்களைச் செய்தார்; வேண்டிய காரியம் ஒன்றைச் செய்யத் தவறினார்.

அவர் செய்த வேண்டாத காரியம் ஒன்று. மொழி வாரி மாநிலங்களைப் பிரித்தது. அதனை அவரது பேரன் அமரர் ராஜீவ் காந்தியே, "மொழிவாரி மாநிலங்களைப் பிரித்தது பெரும் தவறு. இன்றைய தேவை பண்பாட்டு ஒற்றுமை மூலம் நாட்டின் ஒருமைப்பாடே!" என்றார். நேரு செய்த மற்றொரு வேண்டாத காரியம், ஜம்மு காஷ்மீருக்கு அளித்த விசேட அந்தஸ்து. ஐதராபாத்தை நம் நாட்டுடன் இணைத்ததைப் போல காஷ்மீரையும் இணைக்க சர்தார் வல்லபாய் படேல் விரும்பினார். ஆனால், நேருதான் அதைத் தடுத்து, தனிச் சலுகையை காஷ்மீருக்கு அளித்தார். அதனால் விளையும் வன்முறையையும், அமைதியின்மையையும் நாம் இப்போது அனுபவிக்கிறோம்.

நேரு செய்யத் தவறியது, நாட்டிலுள்ள நதிகளை தேசிய மயம் ஆக்காதது. அதனை அவரது பேரன் அமரர் ராஜீவ் காந்தியே, "நாம் நதிகளின் நீரை வீணடிக்கிறோம். உண்மையில், நமது எதிர்மறையான நோக்கு காரணமாய் தேவைக்கு அதிகமான நீரால் நமது நிலபுலன்கள் பாழடைவதை நாம் அனுமதிப் போமே தவிர, பிறமாநிலங்கள் அந்நீரைப் பயன்படுத்த அனுமதியோம். மிகவும் நேர்த்தியான இயற்கை வளத்தை இவ்விதம் பாழாக்குவது சரியல்ல. நதிநீரைப் பயன்படுத்துவதில் கீழ்த்தரமான மனப்பான்மை கூடாது. மாநிலங்களுக்குள் ஏற்படும் நதிநீர்த் தகராறால் தீமையைத்தவிர நன்மை சிறிதுமில்லை. நீர் வீணாவதைத் தவிர யாருக்கும் பயன்படுவதில்லை" என்றார். எனவே, நதி நீர் தகராறால் வீண் அமைதிக் குறைவும், வன்முறையுமே விளைகின்றன.


"தனைத்தான் அடக்கல், பேசாமை, தன்னுள்ளத்தின்
பரிசுத்தம்
மனதின் அமைதி, பொறுமையினை மனத்தின்
தபசென்றோதுவரே."

என்கிறது கீதை. தன்னடக்கம், தற்புகழ்ச்சி பேசாமை, உள்ளத்தூய்மை, மன அமைதி, சினமற்ற பொறுமை ஆகிய நற்பண்புகளை மேற்கொள்ளலே மனத்தின் தபசாம். மனத்தைத் தன் வயமாக்கிய ஒருவன் விருப்பு வெறுப்பின்றி ஐம்புலன்களால் எதை அனுபவித்தாலும் அவன் அமைதியும், சாந்தமுமே அடைவான். "மனவசியமானவனுக்கு ஜீவ்வசியமாகும். ஜீவ வசியமானவனுக்கு ஜக வசியமாகும். ஜகவசியமான வனுக்குப் பரவசியமாகும்" என்பார்கள் எனதருமைத் தந்தையார் தெய்வத்திரு பொன்னையா சுவாமிகள். ஆகவே, மன அமைதிக்கு வழி, அலையாத மனமே! மன அமைதி இல்லார்க்கு ஏது சுகம்? மனதை நிலை நிறுத்தலே மாதவம். • "ஆங்காரம் உள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத் தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவது எக்காலம்?" என்கிறார் பத்திரகிரியார். அந் நிலையை எய்தினால் வாழ்வு உய்யும்; அமைதிக்கும் வழி வகுக்கும்.

போப்பாண்டவர் கூறியது போல், "குடும்பத்திலுள்ள அங்கத்தினர் ஒவ்வொருவரும் சுயநலமின்றி மற்ற வர்க்குச் சேவை செய்யும் தொண்டராயும், மற்றவரது பாரத்தைப் பகிர்ந்து கொள்ளும் பங்காளியாயும் விளங்குதல் வேண்டும்." அப்போதுதான் வீடும், நாடும் நற்பயன் பெற்று சிறந்தோங்கி விளங்கும். எங்கும் அமைதி நிலவும்.

கண்கண்ட தெய்வம் கபாலீஸ்வரர்

யோகா



நர்த்தன விநாயகர்

கபாலீஸ்வரர்



சென்னையிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் சுற்றளவில் உள்ள மற்ற ஆலயங்களை விடச் சிறந்து விளங்கும் சிறப்பான கோயில் மயிலாப்பூரில் இருக்கும் கபாலீஸ்வரர் கோயில் என்று கூறலாம். வெளிமாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் சென்னைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தவறாது தரிசித்துச் செல்லும் அதிசக்தி வாய்ந்த சிறப்பான கோயில் கபாலீஸ்வரர் கோயில் என்பது எல்லாருடைய சிறப்பான கருத்து.

கபாலீஸ்வரர் திருக்கோயில் இப்போதுள்ள இடத்தில் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு புதிதாகக் கட்டப்பட்டது என்றும், பழைய கோயில் சாந்தோம் கடற்கரையில் இருந்தது என்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் ஒரு சாரார் கூறுகிறார்கள். மற்றொரு சாரார் இக்கருத்தை மறுத்து, பழைய கோயில் இப்போதுள்ள இடத்திலேயே இருந்தது என்றும் அது இடிக்கப்பட்டவுடன் அவ்விடத்திலேயே புதிய கோயில் திரும்பக் கட்டப்பட்டதென்றும் கூறுகிறார்கள்.

திருமயிலை, சாந்தோம் ஆகிய பகுதிகளில் பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் மயிலையின் தொன்மையை உணர்த்துகின்றன. உடைந்த கல்தூண்கள் செயிண்ட் தாமஸ் ஆலயத்துக்குப் பக்கத்திலுள்ள ஆலயத்திற்குச் சொந்தமான தென்னந்தோப்பில் கண்டெடுக்கப்பட்டன. அந்தக் கல்தூணின் ஒரு பகுதியில் மூன்று புறமும் தமிழ் எழுத்துகள் கொண்ட கல்வெட்டுகள் உள்ளன. அந்தக் காலம், முதல் ராஜராஜனுடைய காலமாகும்.

சாந்தோமில் ஒரு தோட்டத்திலிருந்து முருகனோடு மயிலும் கூடிய கற்சிலை கண்டெடுக்கப்

பட்டது. மேலும் சாந்தோம் பேராலயத்தில் கிழக்குப் பக்கத் திருச்சுற்றில் வடமொழியில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. இதன் காலம் கி.மு. 12ஆம் நூற்றாண்டாகும். இக்கல்வெட்டில் கர்ப்பக்கிருகம் உட்பட எல்லாக் கட்டடங்களும் மயிலாப்பூரில் உள்ள புகழ்பெற்ற சிவனுக்கும், பார்வதிக்கும் உரியனவாகும் என்ற செய்தி உள்ளது.

சென்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து தெற்கில் எட்டு கி.மீ. தொலைவில் மயிலாப்பூர் உள்ளது. மயிலையிலுள்ள கச்சேரி சாலைக்கு தெற்குப் பக்கத்தில், மாட வீதிகளுக்கு நடுவில் அருள்மிகு கபாலீஸ்வரர் திருக்கோயில் காட்சியளிக்கிறது. திருக்கோயிலின் மேற்கே திருக்குளம் அமைந்திருக்கிறது.

சிவபெருமானுடைய திரு உருவங்களில் பிரம சிரச்சேத மூர்த்தியும்



துவஜாரோஹணம்



அஸ்திர தேவர்


ஒன்றாகும். பிரமன் சிவமூர்த்தியைப் போல தானும் ஐந்து சிரம் உடையவன் என்று செருக்கடைந்த காலத்தில் பிரமனின் நடுச்சிரத்தைக் கிள்ளி பலியேற்றிய இச்சிவ உருவத்தைக் கபால மூர்த்தி என்பர். கபாலம் என்பதற்கு மண்டையோடு என்பது பொருள். கபாலத்தை ஏந்தியவன் கபாலி எனப்பட்டான். சிவபெருமானை ஈசுவரர் என்றழைப்பர். கபாலம் ஏந்திய ஈசுவரன் கபாலீசுவரர் என விளங்கினார். கபாலீஸ்வரர் இருக்குமிடம் கபாலீஸ்வரம் என்றழைக்கப்படது. திருஞானசம் பந்தரின் பூம்பாவைப் பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் கபாலீஸ்வரம் என்றே திருமயிலைக் கபாலீஸ்வரர் கோயிலைக் குறிப்பிட்டுள்ளார்.

திருமயிலையில் சிவநேச செட்டியார் என்னும் செல்வ வணிகர் வாழ்ந்து வந்தார். அவருடைய மகள் பூம்பாவை ஒரு நாள் பூ கொய்யும் போது பூ நாகம் கடித்து இறந்தாள். இறந்த அவளது உடலைத் தீயில் சுட்டு, எலும்பையும் சாம்பலையும் திரட்டி ஒரு குடத்தில் அடைத்து அதனைக் கன்னி மாடத்தில் வைத்திருந்தார் சிவநேசர்.

அந்த நேரம் சம்பந்தர் திருவொற்றியூர் வரவே, சிவநேசர் அங்கு சென்று நடந்ததை அவரிடம் தெரிவித்து மயிலை வருமாறு சம்பந்தரை வேண்டினார். சம்பந்தரும் மயிலை வந்து எலும்புக் குடத்தைக்' கபாலீஸ்வரர் முன்னிலையில் வைத்து, திருவருளை நினைத்துப் பதிகம் பாடினார். பாடி முடித்தவுடன் பூம்பாவை உயிர் பெற்றெழுந்தாள். சம்பந்தர் தன் அருட் பாடலால் உயிர்ப்பித்தெழச் செய்ததால், அவரையே தன் மகளை மணந்து கொள்ளுமாறு சிவநேசர் வேண்டினார்.

ஆனால் "நான் அவளுக்கு மறுபிறவி தந்தமையால் எனக்கு அவள் மகள் முறையாகிறாள்" என்று விளக்கி மணமுடிக்க மறுத்துவிட்டார் சம்பந்தர். சிவநேசர் அவளை வேறு ஒருவருக்குத் திருமணம் செய்வதில்லை எனக் கன்னி மாடத்தே இருத்தி வைத்தார். பூம்பாவை சிவ தியானத்தில் இருந்து முக்தி அடைந்தார் என வரலாறு வழங்கி வருகிறது.

சைவத் திருக்கோயில்களின் அமைப்பின்படி கபாலீஸ்வரர் திருக்கோயிலும் அமைந்துள்ளது. கிழக்கில் பொன்னம்பல வாத்தியார் தெரு, மேற்கில் கிழக்கு குளக்கரைத் தெரு, தெற்கில் குமரகுருநாத முதலி தெரு, வடக்கில் வடக்கு மாடவீதி ஆகியவற்றை எல்லையாகக் கொண்டு



(குர்ணிகை) கொடியேற்று பூஜை ↑

திருச்சுற்று மதிலோடு கபாலீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

கபாலீஸ்வரத்தின் சிறிய மேலைக் கோபுரம் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இக் கோபுர நுழைவாயிலில் வடக்குப் பக்கத்தில் கற்பக விநாயகரும், தெற்குப் பக்கத்தில் பாலமுருகனும் காட்சி அளிக்கின்றனர். இப் பிராகாரத்திலிருந்து வழிபாடு தொடங்குவது முறையாகும். கற்பகவிநாயகரையும் பாலமுருகனையும் வணங்கிய பின்னர் இக் கோயிலின் மேற்குக் கோபுரத்தின் வழியாக கோயிலுக்குள் செல்ல வேண்டும். மேற்கு உள் பிராகாரத்தில் வடக்கே சென்றால் புன்னை வனநாதர் சந்நிதியைக் காணலாம். இக் கோயிலுக்குத் தலவிருட்சம் புன்னை மரமாகும். உமையம்மையார் புன்னை மரத்தடியில் சிவ லிங்க வழிபாடாற்றினார். இக் காட்சியை புன்னைவனநாதர் சந்நிதி விளக்குகிறது. உமையம்மையார் மயில் வடிவில் பூஜை செய்யும் காட்சியை இங்குள்ள சிற்பம் சித்திரிக்கிறது.

கிழக்கு உள் பிராகாரத்தில் முகப்பில் கிழக்கு நோக்கிய வண்ணம் சுந்தரேஸ்வரர் சந்நிதி உள்ளது. இங்கு சுந்தரேஸ்வரர் சிவலிங்க வடிவில் உள்ளார். கிழக்கு பிராகாரத்தில் வட கோடியில் சனீசுவரர் சந்நிதி உள்ளது. பின்பு நவக்கிரக சந்நிதி அமையப் பெற்றுள்ளது. ராஜகோபுரம் (கிழக்கு கோபுரம்) வாயிலுக்கு நேர் எதிரில் நர்த்தன விநாயகர் சந்நிதி உள்ளது.

தெற்கு பிராகாரத்தில் மேற்கு நோக்கியவாறு சிங்காரவேலர் சந்நிதி அமைந்துள்ளது. இங்கு சிங்கார வேலர், வள்ளி, தெய்வ யானையுடன் காட்சியளிக்கிறார். இக்கோயிலின் முன்புறம் பதினான்கு தூண்களுடன் ஒரு மண்டபம் உள்ளது. இம் மண்டபத்தில் கொடி மரம், மயில் உருவம், பலி பீடம் ஆகியவை உள்ளன. முருகன் (ஆறு முகன்) மயில் வாகனத்திலும், வள்ளி, தெய்வயானை இருவரும் இரண்டு யானை வாகனங்களிலும் வீற்றிருக்கிறார்கள்.

கபாலீஸ்வரர் உட்கோயிலினுள் செல்லும்போது நுழைவாயிலில் வலப்புறம் விநாயகர் திருஉருவம் இருப்பதைக் காணலாம். இதனையடுத்து மேற்கு நோக்கியும் வடக்கு நோக்கியும் அறுபத்து மூவர் திருவருவங்கள் உள்ளன. பின்பு வடக்கு நோக்கியவாறு பெரிய கன்



சிங்கார வேலர் வேங்கைமர வாஹனம்

ணாடி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இதில் நேர் வடக்கில் உள்ள நடராஜர் திருஉருவ பிம்பம் காணலாம்.

கபாலீஸ்வரர் திருச்சந்நிதி மேற்கு நோக்கி உள்ளது. நுழைவாயிலில் துவாரபாலகர் இருவர் நின்ற நிலையில் காவல் புரிகின்றனர். கருவறையில் கபாலீஸ்வரர் லிங்கத் திருமேனியாகக் காட்சியளிக்கிறார். இத் திருமேனிக்கு வெள்ளிக் கவசம் உள்ளது.

கபாலீஸ்வரர் சந்நிதிக்கு முன், வெளியில் இடப்புறம் தெற்கு நோக்கிய வண்ணம் கற்பகாம்பாள் சந்நிதி இருக்கிறது. இச் சந்நிதிக்கு முன் சிம்மத்தின் உருவமும் பலி பீடமும் உள்ளன. சந்நிதியின் தென்மேற்குக் கோடியில் பள்ளியறை உள்ளது. கற்பகாம்பாள் சந்நிதியின் பிராகாரத்தில் அபிராமி அந்தாதி பாடல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. உட்பிராகாரச் சுவர்களில் தெய்வக் காட்சிகளை விளக்கும் படங்கள் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. கற்பகாம்பாள் தெற்கு நோக்கியவாறு நின்று அருள் புரிவதைக் காணலாம்.

திருக்குளம், கோயிலின் மேற்குப் புறத்தில் உள்ளது. கோயிலின் கிழக்குப் பகுதியில் ராஜகோபுரம் உள்ளது. 20 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் உடைய பரப்பில் ஏழு தளங்களும் ஒன்பது கலசங்களும் கொண்டுள்ளது.



கற்பகாம்பாள்
கற்பக வ்ருட்ஷ வாஹனம்

இதன் உயரம் 40 மீட்டர். கோபுரம் ஏறத் தாழ கி.பி.1902 இல் கட்டப்பட்ட தெனக் கூறுகின்றனர்.

இக் கோயிலில் அதிகார நந்தி, இடபம், யானை, பெருச்சாளி, சிங்கம், புருடா மிருகம், புலி, கிளி, அன்னம், பூதன், பூதகி, தாரகாசுரன், மயில், நாகம், காமதேனு, ஆடு ஆகிய வாகனங்களும், சூரிய, சந்திர பிரபைகளும், சப்பரம், கற்பக விருட்சம், பல்லக்குகள் ஆகியவையும் உள்ளன.

இவ்வாறு கோயிலின் முதலில் கூத்தாடும் பிள்ளையார் விளங்க, நடுப்பகுதியில் கபாலீசுவரரும் கற்பகாம்பாளும் திகழ, சிங்கார வேலன் தெற்குப் பகுதியில் தனிச் சந்நிதியில் பொலிய, ஏனைய பரிவார தெய்வங்கள் பிராகாரத்தைச் சுற்றிலும் இருக்க கபாலீசுவரர் கோயில் அமைந்துள்ளது. இத் தலத்தில் இறைவன் மேற்கு நோக்கி எழுந்தருளி இருக்கிறான். சிவபெருமானுக்கு ஐந்து திருமுகங்கள் உண்டு. அவற்றுள் மேற்கு நோக்கிய திருமுகம் சத்தியோஜாதம் எனப்படும். இம்மூர்த்தி, வழிபடுவோர்க்கு உடனே காட்சி தந்து அருள் வழங்க வல்லது என்று கூறுகின்றனர்.


இவ்விறைவனை, 'நற்றாமரை மலர்மேல் நான்முகனும் நாரணனும் உற்றாங்குணர் சிலாமூர்த்தி' என்று திருஞான சம்பந்தர் சிறப்பித்துப் பாடியுள்ளார். மயிலுருவான அம்மையார் வழிபட, மயில் உருவத்தை நீக்கி அருளியது இச்

கபாலீஸ்வரர் வாஹனத்திற்கு எழுந்தருளல்







கபாலீஸ்வரர்



← அறுபத்து மூவர் காட்சி




தேர் இழுப்பவர்களில் ஒரு பகுதி




கபாலீஸ்வரர்
கற்பகாம்பாள் கல்யாண உற்சவம்

அறங்காவலர் தலைவர்
டாக்டர் நல்லி குப்புசாமி
குடும்பத்தினரும் மற்றவர்களும்



கபாலீஸ்வரர் பூத வாகன காட்சி



சிங்கார வேலர் அம்ஸ வாஹன காட்சி

சிவலிங்கமேயாகும். பிரமன், மறை, வெள்ளி, இராமர் முதலியோர் வழிபட்ட பெருமை உடையதாகும், பல்வேறு சிற்றிலக்கியங்கள் கபாலீஸ்வரர் மீது பாடப்பட்டுள்ளன.

வேண்டுவோர்க்கு வேண்டுவனவெல்லாம் தரும் விண்ணுலகத்துக் கற்பகத்தருவைப் போல மண்ணுலகத்துக் கற்பகமாய்க் காட்சியளிக்கும் இறைவனுடைய சக்தியே "கற்பகவல்லி" என்னும் திருப்பெயரில் இங்கே விளங்குகிறாள். அருளை அள்ளி வழங்குகிறாள். கற்பகவல்லியின் பொற்பாதத்தைப் புகழ்ந்து பலர் பாடியுள்ளனர். இக்காலத்தில் கபாலீஸ்வரர் கோயிலில் கற்பகவல்லியின் வழிபாடு மிகுந்துள்ளது. இது சக்தி வழிபாடு பெருகியுள்ளதைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இக் கோயிலில் காலை சந்திப்பூஜை, உச்சிகால பூஜை, பிரதோஷ கால பூஜை, இரவு கால பூஜை என நான்கு பூஜைகள் நாள்தோறும் நடத்தப் பெறுகின்றன.

உமையம்மையார் மயிலுருக் கொண்டு கபாலீசுவரரைப் பூஜித்தது, முருகப் பெருமான் மயிலைநாதனை வழிபட்டு சக்திவேல் பெற்றது, நான்முகன் பூஜை செய்து தனது பாபத்தைப் போக்கிக் கொண்டது ஆகிய சிறப்புகளைக் கொண்டது கபாலீசுவரம். கபாலீஸ்வரர் கோயிலில் ஆண்டு முழுவதும் பல்வேறு திருவிழாக்கள் கொண்டாடப் பெறுகின்றன. தினவழிபாடுகளை அர்ச்சகர்கள் செய்கின்றனர். அப்பொழுது மக்கள் பார்வையாளராக மட்டுமே இருக்க முடிகின்றது. ஆனால் திருவிழாக்கள் நடைபெறும் போது மக்கள் அனைவரும் திருத்தொண்டில் நேரடியாகக் கலந்து கொள்ள முடிகின்றது. கபாலீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக்களில் மிகவும் சிறப்பாக நடைபெறும் விழா பங்குனி உத்திர விழாவும் அறுபத்து மூவர் உலா விழாவுமாகும். மேலும் மாதந்தோறும் அமாவாசை, பௌர்ணமி நாள்களையொட்டி நடைபெறும் பிரதோஷ விழா இங்கு தனிச் சிறப்பு மிக்கதாகும்.

கி.பி.7 ஆம் நூற்றாண்டில் தோன்றியவர்கள் 63 நாயன்மார்கள். இவர்களில் பலர் இல்லறம் நடத்தியவர்கள்; பலர் துறவறம் பூண்டவர்கள். சிலர் முதியோர்; சிலர் இளையோர். மூவர் பெண்கள்; அறுவர் முடியரசர்; குறுநில மன்னர் ஐவர். இவர்கள் எல்லாரும் சிவபெருமானிடம் இடையறா அன்பு பூண்டொழுகினர். சைவ சமயத்தின் கோட்பாடுகளையும் சைவ சித்தாந்த நுட்பங்களையும் ஒன்று சேர்த்து விளக்கம் காணத் தக்க வகையில் அவர்களுடைய வாழ்க்கையும் வழிபாடும் அமைந்திருந்தன. இந்த



சிங்கார வேலர் கந்தருவன் வாஹன காட்சி



கபாலீஸ்வரர் அதிகார நந்தி வாஹனம்

நாயன்மார்களின் திருவுருவச் சிலைகள், சிவலிங்கப்பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாயன்மார்களுக்குரிய திருநட்சத்திர நாள்களை அறிந்து வழிபடும் வழக்கம் கபாலீஸ்வரர் கோவிலில் பின்பற்றப்படுகிறது. பிரம்மோற்சவத்தில் எட்டாம் நாள் அறுபத்து மூவர் விழாவாக சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அந்நாளில் அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடத்தப் பெறுகின்றன.

தற்போது கபாலீஸ்வரர் கோவிலின் அறங்காவலர்களான கே.ஆர்.வி. ரமணி, என்.என்.சீனிவாசராவ், செல்வ ஏகாம்பர முதலியார்,



பூவாகனம்




பக்தர்கள்

சி.எஸ். மணியன் ஆகியோர் சிறப்பாகப் பணிபுரிவதற்கு மிகவும் உறுதுணையாகவும் வழி காட்டியாகவும் திகழ்ந்து வருபவர், அறங்காவலர்களின் தலைவராக விளங்கும் நல்லி குப்புசாமி செட்டியார் அவர்கள். கபாலீஸ்வரர் கோவிலின் வரலாற்றில் நல்லி குப்புசாமி செட்டியாரின் தலைமையைக் கொண்ட குழு பணியாற்றி வரும் காலம் சிறப்புமிக்க ஒரு பொற்காலமாகத் திகழ்கிறது. இந்த வருடம் பிரம்மோத்சவத்தின் போது எடுத்த பல்வேறு அழகிய வண்ணப்படங்களை இந்தக் கட்டுரை அடங்கிய பக்கங்களில் கண்டு மகிழலாம்.



← கபாலீஸ்வரர்

வண்ணப்படங்கள், கட்டுரை:
யோகா





மறைமலை அடிகளார்

—பி.எல். இராசேந்திரன்

சென்ற நூற்றாண்டின் கடைசியில் தோன்றித் தனித்தமிழ் இயக்கம் தொடங்கிய பெருமையாளர் மறைமலை அடிகளார். இவர் தமிழில் மட்டுமின்றி வடமொழியிலும், ஆங்கிலத்திலும்கூடப் பெரும் புலமை பெற்றிருந்தார். இவரது இயற்பெயர் வேதாசலம். இவருடைய பெற்றோர், சொக்கலிங்கம் பிள்ளை - சின்னம்மை ஆவர்.

15ஆம் வயதில் தமிழ் பயிலத் தொடங்கி - 21ஆம் வயதிற்குள்ளேயே திருக்குறள், நன்னூல், தொல்காப்பியம், யாப்பருங்கலக்காரிகை போன்ற அரிய தமிழ் நூல்களை அப்படியே மனனம் செய்து ஒப்பிக்கும் வல்லமை பெற்றிருந்தார். புலவர்களும், புரவலர்களும் போற்ற வளர்ந்தார்.

1905இல் 'சைவ சித்தாந்த மகா சமாஜத்'தைத் தோற்றுவித்தார் இவர்; அதன் மாநாட்டுத் தலைமையும் ஏற்றார்.

தனித்தமிழ் இயக்கம் கண்டவரா இப்படி வடசொல் கலந்து பெயரிட்டிருப்பார் எனச் சிலர் ஐயுறலாம்.

'தாரே அழுகிக் கிடக்கிறபோது, ஒரே ஒரு வாழைப் பழம் மட்டும் நல்லபடி இருக்க முடியுமா?' என்பார் டாக்டர் மு.வ. தொடக்கக் காலத்திலும் பிற்காலத்திலும், தனித் தமிழில் எழுதியும் பேசியும் வந்த அடிகளார் முழுமையுமோ, பெரும்பகுதியோ அப்படி ஆகிவிடவில்லை. சென்னை வாழ்க்கை தொடங்கிய பின்புதான் அவர் பேச்சிலும் எழுத்திலும் சில வேற்று மொழிச் சொற்கள் கலந்ததாக அறிகிறோம்.

ஆனால் ஒன்று - என்ன எழுதினாலும் சரி; மீண்டுமொரு முறை கவனமாக அதைப் படித்துப் பார்த்து - வேற்று மொழிச் சொற்கள் ஏதேனும் ஒன்றாவது அதில் தலைகாட்டியிருக்குமேயானால், அதை நீக்கித் தூய தமிழ்ச் சொல் இட்டு நிரப்புவது மறைமலை அடிகளாரின் வழக்கமாக இருந்தது என்பார்கள் உடனிருந்தோர்.

திருஞான சம்பந்தர், இராமலிங்க அடிகள் போன்றோர் பால் பெரும் பற்றுக் கொண்டிருந்தார் மறைமலையடிகள். அருட்பா-மருட்பா போராட்டத்தில் முனைந்து இறங்கி, வெற்றி கண்டார். "தாங்காமல் தாங்கிச் சுகம் பெறுவதெக்காலம்" என்றார் தாயுமானவர். அவ்வகையான அறிதுயில் போன்ற ஆற்றல்களும் அமையப்பெற்றவர், இவர். சென்னையில், இளமைப் பருவத்தே மறைமலை அடிகளார் ஏற்றிருந்த குருநாதர் சோமசுந்தர நாயக்கர் என்பவராவார். 1898இல், சென்னை கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பதவி பெற்றார், அடிகளார். கல்வி நிலையந்தோறும் தொடர் சொற்பொழிவுகள் ஆற்றினார். 1911இல் சென்னை பல்லாவரத்தில் குடியமர்ந்தார்.

பார்வைக்குச் சாதுபோல் தோன்றினாலும், அப்போது அவர் குடியிருந்த தெருவில் மூண்ட ஒரு பெருஞ் சண்டையில் எவர் துணையுமின்றித் தனித்திறங்கி - இருசாராரையும் சமாதானப்படுத்திவைத்த நிகழ்ச்சி மறைமலையடிகளார் வாழ்வில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

"தென்னாடு பன்னெடுங்காலம் தன்னைமறந்து உறங்கியது; அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலை அடிகளுக்கு உண்டு. அடிகள் பேச்சு பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து, பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது. 'அடிகளே தென்னாடு; தென்னாடே அடிகள்' என்று கூறினால் மிகையாகாது!' என்று தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாணசுந்தரனார் அவர்களே அடிகளாரைப் போற்றிப் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

தந்தை பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம், தெ.பொ. வேதாசலம், பூவாளூர் அ. பொன்னம்பலம் போன்றோர் - சுயமரியாதை இயக்கம் தொடங்கி நாத்திகக் கருத்துகளைப் பரப்பி வந்த காலத்தில், அவர்களுக்கு எதிராக ஆத்திகக் கொள்கை, கோட்பாடுகளைத் தீவிரமாகப் பரப்பிப் பெருமை கொண்டவர் மறைமலையடிகளார். அதே நேரத்தில் - சாதியொழிப்பு, தீண்டாமை ஒழிப்பு முதலான சீர்திருத்தங்களை அடிகளார் பெரிதும் வரவேற்றார். மறுமணம், கைம்மை மணம், கலப்பு மணம், பெண் கல்வி ஆகிய புரட்சிகரக் கருத்துகளையும் மனப்பூர்வமாக ஏற்று வற்புறுத்தினார். தமிழர் திருமணமுறை இவரால் புகழ் பெற்றது. நாட்குறிப்பு எழுதும் வழக்கம் இவரிடம் இருந்தது. அதன் துணைகொண்டே இவர் வாழ்க்கை வரலாறு பிற்காலத்தில் எழுதப்பட்டது.

பண்டைத் தமிழர் பண்பாடு, பழந்தமிழ்நாட்டு நாகரிகச் சிறப்பு, சைவ சமய மேம்பாடு, சைவ-வைணவ ஒற்றுமை ஆகியவை அடிகளாரால் பெரும் ஆய்வுக்குப்பின் விளக்கப்பட்டன; வலியுறுத்தப்பட்டன. இதனைத் தெளிவாக்க இலங்கை வரை சென்று வந்தார் இவர்.

எழுத்திலாகட்டும், பேச்சிலாகட்டும், அடிகளார் பால் தனித் தமிழே மணக்கும். நூல்களை வாங்கிப் படிக்கும் ஆர்வம் மட்டுமல்ல; அரிய பல நூல்களைத் தேடி நூலகம் வரை சென்று படிக்கும் பேரார்வமும் குறிப்பெடுத்து வைக்கும் வழக்கமும் மறைமலையடிகளாருக்கு இருந்தது.

இறைவனை வடமொழியால்தான் தொழமுடியும் என்ற நிலைமாற்றித் தமிழாலும் வழிபடமுடியும் என வலியுறுத்திய இவர், இல்லறம் கண்டாலும் துறவறத்தின் மேல் பற்றுதலோடிருந்தார். மனைவி மக்களோடு வாழ்ந்தார். துணைவியார் பெயர் செளந்தரவல்லி, சாமிநாத ஐயரின் 'சிந்தாமணி' வந்தபோது முதல் மகள் பிறந்தார். தமிழ்மீது தணியாப் பற்றுக்கொண்டிருந்த அடிகளார் அம்மகளுக்குச் சிந்தாமணி என்றே பெயரிட்டார். அத் திருமகளார், மணம் காணுமுன்பே மறைந்து போனார். இதனைக் கருதியே போலும் அடிகளாரின் வரலாறு எழுதுவோர் பெரிதும் அவர் பெயரைக் குறிப்பிடுவது இல்லை.

அவருக்குப் பின் பிறந்தோர் - திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், திருநாவுக்கரசு, சுந்தரமூர்த்தி ஆகிய 4 ஆண்மக்கள், நீலாம்பிகை, திரிபுரசுந்தரி ஆகிய 2 பெண்மக்கள்.

தன்னலம் கருதாமல் தமிழ் நலம் கருதியே பாடுபட்டுவந்த மறைமலை அடிகளார் 15.7.1876இல் தஞ்சை மாவட்டம் நாகை அருகே உள்ள காடம்பாடியில் பிறந்தார்.

இனிய தமிழுக்காகவே தம் பெயரை மறைமலை ஆக்கிக் கொண்டார் அடிகளார். தளராமல் தமிழ்த் தொண்டாற்றி, 74 ஆண்டுக்காலம் வாழ்ந்த மறைமலை அடிகளார் 15.9.1950இல் மறைந்தார்.

"சுமங்கலிகள் வெள்ளைப் புடைவை கட்டுவது நல்லதல்ல" என்று, அனுபவம் மிக்க மாமியார் அறிவுரை சொன்னபோது, அதை உதறித் தள்ளி ஆத்திரப்பட்டவள், பிறகு தன் அனுபவத்தில் கண்டதென்ன?

வெள்ளையே கறுப்பாகிக் கொண்டிருந்தது ராஜம்மாளுக்கு. கரிய வளையங்களாய்ச் சுழன்று சுழன்று வந்து நெஞ்சைக் கவ்வும் பயம். பிள்ளையைப் பார்க்கும் போதெல்லாம் அவன் தலைக்கு மேல் தொங்கிக்கொண்டு தெரிகிற கத்தி. மனம் அந்தக் கற்பனையில் வெடித்துச் சிதறும். அவனுக்கு 'ஏதாவது' நேர்ந்துவிட்டால் அவள் தாங்கமாட்டாள்.

கண்களை மூடினால் இமைகளுள் நாகுப்பாட்டி, கோமளிப் பாட்டி, மீனாட்சி மாமி... பெண்மையழகின் பீடங்களுள் ஒன்றான கூந்தலை இழந்து வெள்ளை உடுத்து நின்ற வெளிறிய பிம்பங்கள். வெள்ளைச் சிலுவையில் அறையப்பட்ட சோகங்கள். நல்ல வேளையாய் ராஜம்மாள் காலத்தில் அந்த அலங்கோலங்கள் இல்லை. கூந்தலும் வர்ணமும் விலக்கல்ல. எனினும் வெள்ளை என்றால் உடனுக்குடன் அடிவயிற்றுச் சில்லிப்பு. காலங்காலமாய் வெள்ளைப் புடைவைக்குள் சாயமாக ஏறிவிட்ட அர்த்தங்கள்.

சொன்னால் உதயா கேட்க மறுக்கிறாளே!

"இதிலெல்லாம் என்னம்மா இருக்கு?" என்று நயமாய்ப் பேசி மழுப்பிவிடுகிறாள்.

"அதுக்கில்லே உதயா!..."

"எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லை. உங்களுக்கும் இல்லைன்னுதான் நினைக்கிறேன்."

"நான் கலர் உடுத்திக்கறதை வச்சு சொல்றியா? அமங்கலிகள் கலர் உடுத்தினாப் பரவாயில்லை உதயா! ஆனா சுமங்கலிப் பொண்ணு வெள்ளைப் புடைவை உடுத்தறது..."

"'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணி பூண்டு' அப்படின்னு சரஸ்வதியை வர்ணிச்சிருக்கு. வெள்ளை அமங்கலமாய் இருந்தால் வித்தைக்கும் கலைகளுக்கும் அதிதேவதையை அப்படி வர்ணிச்சிருப்பாளா?"

"நீ படிச்சவள், கெட்டிக்காரத்தனமாய்ப் பேசறே. எனக்கு அதெல்லாம் தெரியலையேம்மா! உன் உடம்பில் வெள்ளைப் புடைவையைப் பார்க்கறபோது மனசு அதிர்ந்துபோறதுதான் தெரியறது."

இத்தனைக்கும் இந்த வீட்டில் மாமியார் மருமகள் உறவு சுமூகமானது. பரஸ்பரம் கனிவு, நல்லெண்ணம்.

வெள்ளையாய் ஒரு பயம்



ஆர். சூடாமணி

ஆனால்... நாணாவை நினைத்தால்?

"நீதான் கொஞ்சம் உன் பெண்டாட்டிக்குச் சொல்லக்கூடாதாடா?"

நாணா இதமாய்ச் சிரித்தான் "நீ ஒண்ணும் கவலைப்படாதேம்மா."

அப்படியென்றால்? சொல்வானா?

நம்பிக்கை கண்களில் விரியும். ஆனால் அடுத்த முறை மீண்டும் உதயா வெள்ளை நைலக்ஸ் சேலை கட்டி 'பீச்'சுக்குக் கணவனுடன் செல்லும்போது...

அடப் பாவிப் பிள்ளையே! பெண்டாட்டிகிட்ட சொல்லப் பயமா?

நாணா நன்றாக இருக்கவேண்டும். ஆண்டவனே! என் குழந்தை நன்றாக இருக்கவேண்டும். அவனுக்கு ஒரு கேடு நேர்ந்தால் நான் உயிரோடு இருக்கமாட்டேன்.

அவளுடைய ஒரே செல்வம். வாழ்வில் யாருமற்றவளின் ஒரே ஆதாரம். இளமையில் கைம்மையும் புக்ககத்தினர் கொடுமையும் ஒரு சேரத் தாக்கியபோது அவள் சிரிப்புக்கு ஒரே ஒரு காரணமாக இருந்த உயிர் வித்து. அவள் உணரும் அன்புக்கெல்லாம் உள்ள ஒரே ஒரு வெளித் தோற்றம்.

அவள் மகன்!

இந்தப் பெண்ணின் வெள்ளைச் சேலையைப் பார்த்தால் அச்சானியமாயிருக்கிறதே!

"நான் என்ன, தினமுமா வெள்ளை கட்டறேன்? என் ஆசைக்கு எப்பவோ ஒண்ணு, இது கூடத் தப்புன்னா என்ன செய்யறது?" என்றாள் உதயா ஒருசமயம் கணவனிடம், அம்மா சொன்னதை அவளிடம் சொல்ல அவன் முயன்றபோது.

"அம்மா அந்தக் காலத்து மனுஷி..."

"அம்மா இருக்கட்டும். நீங்க நினைக்கறேளா சுமங்கலி வெள்ளை உடுத்தக்கூடாதுன்னு?"

"இல்லை. நிச்சயமா இல்லை. அம்மா சொல்றாளேன்னுதான்..."

"ஒருவேளை அம்மா ஒரு சாக்கா, அடிமனசில் இருக்கற எண்ணத்துக்கு?"



"நீ அப்படி நினைக்கறதானால் நாம் ரெண்டு பேரும் முதல்லேருந்து ஒருத்தரையொருத்தர் தெரிஞ்சுக்க முயற்சி செய்ய வேண்டியதுதான்."

"கோச்சுக்காதீங்கோ" அவள் அவனுடைய கையைப் பற்றி சமாதானமாய் அழுக்கிப் புன்னகை செய்தாள். "உங்களுக்கு இந்த மாதிரியான நம்பிக்கைகள் இல்லேங்கறது எனக்குச் சந்தோஷம். அம்மாவுக்குப் பிடிக்கலேதான். ஆனா, இன்னொருத்தர் சொல்றதுக்காக எல்லாம் ஒருத்தர் தன் செயல்களை மாத்திண்டே இருந்தால், அப்புறம் தன் வாழ்க்கை என்கிறதுக்கு என்ன அர்த்தம்? வெள்ளை எனக்குப் பிடிச்ச நிறம். நூலும் பட்டும் நைலானுமாய் ஒரு டஜன் வெள்ளைப் புடைவைகள் என்கிட்டே இருக்கு. உங்கம்மாவை மதிச்சுத்தான் முன்போல அடிக்கடி உடுத்தாம எப்பவாவது உடுத்தறேன். இது கூடக் கூடாதுன்னா அப்புறம் என்னையே நான் மதிச்சுக்க முடியாமப் போயிடும்."

"நீ உன் இஷ்டம் போல் இரு உதயா! நான் மறுபடி இந்த விஷயமா பேசமாட்டேன்."

★ ★ ★

பத்து வயதுப் பெண்ணுக்கு அப்பா சொன்னது இன்னும் அவள் செவிகளில் ஒலிக்கிறது.

"உதயாம்மா, மனுஷனைக் கோழையாக்கறதே இந்த மூட நம்பிக்கைகள்தான்."

முதல் முறை வெண்பட்டுப் பாவாடை உடுத்திய தினம் குடையாய்ப் பாவாடை விரிய சுற்றிச்சுற்றி ஆடி "நான் வெள்ளைப் பம்பரம்! நான் வெள்ளைப் பாரசூட்!" என விதவிதமாய்க் கூவினாள். கைகொட்டிக் குதூகலித்தாள்.

ப்ளஸ் ஒன் படிக்கும்போது பள்ளி நாடகத்தில் இவளுக்குத் தேவதை வேடம். பளபளக்கும் வெள்ளை ஸாட்டின் முழு அங்கியில் மெல்லிய, உயரமான உருவம் ஒயிலாக அசைந்தது. சின்னதாய் இரு வெள்ளைச் சிறகுகளும் முகத்தை மறைக்காமல் முடிய சல்லா வெள்ளைத் துகிலும் உண்மையாகவே அவளை வானத்து அப்சரஸாய் ஆக்கின. 'பாலே' நடனக்காரிபோல் பாதம் முழுமையாய்த் தரையில் பாவாத நளினத்துடன் தத்தித் துள்ளி முகத்திரை அலைய அவள் மேடையில் மிதந்து மிதந்து வலம் வந்தபோது எழுந்த கரகோஷம் ஆயுளுக்கும் மறக்காது.

"மை ஏஞ்செல்!" என்று சபேசன் மகளை அணைத்துப் பெருமைப் பட்டார்.

"எனக்கு வெள்ளை ரொம்பப் பிடிச்சிருக்குப்பா!"

"உனக்கு ரொம்பப் பாந்தமாயும் இருக்கு."

வெள்ளை வெள்ளையாய்த் துணிகள் வாங்கிக் குவித்து "ஆசை தீர உடுத்து!" என்றார் அப்பா.

அம்மா உயிரோடு இல்லை. இருந்திருந்தால் ஒருவேளை எதிர் காலச் சம்பந்திகளின் விமர்சனத்தை நினைத்துக் கவலைப்பட்டிருக் கலாம். இப்போதோ "நீ வெள்ளை ரோஜா" "நீ இமயப் பனித்துளி" "நீ மணிப்புறாவின் பட்டுச் சிறகு" என்றெல்லாம் அப்பா விதவிதமாய்க் கொஞ்சியபோது தடுப்புக்குரல் எதும் இல்லை.

"நீ வெண்தாமரையில் வெண் ணுடை புனைந்து வீற்றிருக்கும் கலைவாணி!"

அதற்கேற்றாற்போல் அவள் படிப்பில் முதல். நடிப்பில் ஆர்வம் உள்ளவள். இசையும் ஓவியமும் ரசிக்கத் தெரிந்தவள்.

கல்லூரி நாள்களில் சுரிதார் உடுத்தியபோது வெள்ளைப் பின் புலத்தில் அமைந்த டிஸைன்களே அதிகம் விரும்பினாள். புடைவை வாங்கினால் பெரும்பாலும் வெள்ளைதான்.

"அலுக்கலையா?" என்று ஒரு தோழி கேட்டபோது பதில் சொல் லாமல் புன்னகை பூத்தாள்.

தாயின் ஸ்தானத்தில் ஒரு சமயம் அத்தை சொன்னதுண்டு:

"சும்மா வெள்ளையே உடுத் தாதே உதயா!"

"ஏன் அத்தை? வெள்ளை அருமையான கலராச்சே! சுத்தம், தூய்மை... ஏன், நல்ல மனுஷாளையே 'வெள்ளை மனம் படைத்த வர்கள்'னு தானே சொல்றோம்?"

"வக்கணையா பேசிட்டா ஆச்சா? நாளைக்கே கல்யாணமானப்புறம் வெள்ளை கட்டிண்டா புக்காத்தில் அச்சானியம்னு நினைப்பா"

இதற்கு அவள் பதிலளிக்குமுன் சபேசனே குறுக்கிட்டார்:

"இதோ பார் அக்கா! சும்மா குழந்தையைப் பயமுறுத்தாதே. மனுஷனைக் கோழையாக்கி பயந்து பயந்து சாகடிக்கறதே இந்தமாதிரி மூட நம்பிக்கைகள்தான்."

"எப்படியோ போங்கோ அப்பா வும் பொண்ணும்!"

திருமணத்துக்குப் பிறகும் ஒரு தேவதைபோல் வெள்ளைப் பரவசத் தில் அவள் திளைத்திருந்தபோது வெள்ளையே கறுப்பாகிக்கொண்டி ருந்தது ராஜம்மாளுக்கு. வெள்ளை யைப் பார்க்குந்தோறும் கறுப்பு கறுப்பாய் பயம். கையும் காலும் முளைத்த பயம். பேய் போல் ஒரு முகம் வந்து ஒட்டிக்கொண்ட பயம்.

இரவில் கனவுகளில் வெள்ளைப் பிசாசு ஒன்று காற்றுப்போல் சர்ர்ர் ரென்று வீசிப்போகும். மறுகணம், "நாணா, ஐயோ என் ராஜா, போய்ட் டியாடா?" நள்ளிரவில் திடுக்கிட்டு எழுந்து உட்காரும்போது உடம்பு சிலிர்த்துச் சில்லிட்டிருக்கும். பொழுது விடிந்து மகனைப் பார்க்கும் வரை நிம்மதி இருக்காது.

"இந்த வெள்ளைப் புடைவை வேணாண்டி பொண்ணே! சுமங்கலிகளுக்கு ஆகாது."

"ஒரு மனுஷனின் உயிர் அவன் பெண்டாட்டியின் புடைவை நிறத் தில் தான் அடங்கியிருக்கா அம்மா?"

"விதண்டாவாதம் பண்ணாதே. சொல்றதைக் கேளு."

"அம்மா! உங்களுக்காக நான் வெள்ளை உடுத்தறதை எத்த னையோ குறைச்சுட்டேன். என் ஆசைக்காக அப்பப்போ நடுவில் ஒருநாள் உடுத்தறதை நீங்க அனுமதிக்கக் கூடாதா?"

அதுவும் நியாயம்தான். நல்ல பெண். தன்னிடம் மரியாதையிலோ கவனிப்பிலோ சிறிதும் குறை வைக்க வில்லை. நாணாவையும் சந்தோஷ மாக வைத்திருக்கிறாள். அழகான ஜோடியாய் அவர்கள் மலர்ந்த முகத்துடன் வீட்டில் வளைய வரு வதைப் பார்ப்பதே கண்கொள்ளாக் காட்சியாயிருக்கிறது. எனினும்...

கறுப்பு கறுப்பாய் பயம். வெள்ளை வெள்ளையாய் பயம்.

"அம்மா! அடுத்த வாரம் மியூஸிக் அகடமியில் ஒரு நல்ல கச்சேரி இருக்கு."

"போய்ட்டு வாங்களேன் ரெண்டு பேரும்."

"நீங்களும் வாங்களேம்மா. உங்களுக்கும் தானே சங்கீதம் பிடிக்கிறது?"

"உதயா சொல்றது ரொம்ப சரி, பாரேம்மா, எனக்குக் கூடத் தோணலே, அவள் சொல்றா! நீயும் வாம்மா, மூணு பேருமாய்ப் போகலாம்."

ராஜம்மாள் பூரித்துப் போனாள். இந்த நாளில் எந்த மகனும் மருமகளும் வீட்டிலிருக்கும் கிழ வியை ஒரு மனித உயிராய் மதித்துத் தம்முடன் வெளியே வர அழைக் கிறார்கள்? சட்டென்று கண்களில் மல்கிய நீரைத் துடைத்துக் கொண்டாள்.

"நீங்க ரெண்டு பேரும் கூப்ட்டதே போதும். எனக்குத்தான் பொழுது சாஞ்சா கண் அசந்து போறதே! நீ போய்க் கேட்டுட்டு வந்து எனக்கு எல்லாம் சொல்லுடி பொண்ணே.'

மருமகளின் கூந்தலை வாஞ்சை யோடு தடவிக் கொடுத்தாள். உதயா நீலச்சேலையில் மிக அழகாய் இருந்தாள். நேற்று சிவப்பு. கொஞ் சம் கொஞ்சமாய்த் தன் வழிக்கு வந்துவிடுவாள்... மிகவும் மன நிறை வுடன் மகனின் முகத்தைப் பார்த் தாள் ராஜம்மாள்.

கச்சேரி தினத்தன்று மாலை பட்டென்று அந்த நிறைவு தகர்ந்தது. ஹீரோ ஹோண்டாவை வீட்டு முகப்பில் கொண்டுவந்து நிறுத்தி விட்டு முகம் கழுவி உடை மாற்றி பான்ட்டும் சட்டையும் பளபளக்க நின்று "உதயா! இன்னுமா ரெடியா கலே?" என்று கூவிய நாணாவை நோக்கி "இதோ வந்துட்டேன்!" என்று குரல் கொடுத்தபடி மாடியி லிருந்து இறங்கிவந்து "போய்ட்டு வரேம்மா!" என்று விடைபெற்ற உதயாவின் உடலைச் சுற்றியிருந்தது ஒரு பக்கம் சிவப்பும் இன்னொரு பக்கம் பச்சையும் கரைபோட்ட வெள்ளைப்பட்டுப் புடைவை.


"என்ன உதயா இது? லட்சணமா ஒரு மஞ்சள் புடைவை கட்டியிருந் தியே! ஏன் மாத்திட்டே?"

"ரொம்ப கசங்கிப் போச்சும்மா. அதான் மாத்திட்டேன். இந்தப் புடைவை ரெண்டு வருஷம் முந்தி தீபாவளிக்கு அப்பா வாங்கிக் கொடுத்தது. அவசரத்துக்கு இது தான் மேலே இருந்துது. வரட்டு மாம்மா?"

பைக்கில் இருவரும் பறந்தார்கள்.

பாயசத்துக்கு நடுவில் வேப்பங் காயைக் கடித்தது போல் முகம் கோண உட்கார்ந்தாள் ராஜம்மாள். இவ்வளவு நல்ல பெண்ணிடம் இது என்ன பிடிவாதம்? என்னதான் கரைபோட்ட பட்டுப்புடைவை என் றாலும் வெள்ளை வேண்டாம் என்று மாமியார் சொன்னால் ஒரு நாட்டுப்பெண் கேட்கக் கூடாதா?

இரண்டு மணி நேரத்தை எப் படியோ கழுத்தைப் பிடித்துத் தள்ளி னாள். மனம் இனம் புரியாமல் தவித்தது. வழக்கமாய்ச் சாப்பிடும் நேரத்தில் பசி இல்லை. அவர்





அடியே! தீபாவளிக்கு பட்டுப் புடைவைதானே..? வாங்கிக் கொடுத்துத் தொலைக்கறேன். அழறதை நிறுத்து!

களும் வரட்டுமே... மகனின் முகத்தைப் பார்த்துவிட்டால் சாப்பாடு இல்லாமலே வயிறு நிறைந்துவிடும்.

மணி எட்டரை. வருகிற நேரம் தான்.

மணி ஒன்பது. அடிவயிற்றில் என்னமோ ஒரு கலக்கம். ஏன் இன்னும்... அதோ, அழைப்புமணி, ஆனால் பைக் வரும் சப்தமே கேட்கவில்லையே?

கதவைத் திறந்தாள். எதிரே உதயாவின் தகப்பனார் சபேசன். அவர் முகம் சரியாயில்லை.

ஏதோ விபரீதம் என்று மனம் அதிர்ந்தது.

"என்ன சம்பந்தி?" என்பதற்குள் உடல் முழுவதும் ஈர நெருப்பு.

"முதல்ல அப்படி உக்காந்துக் கோங்கம்மா. தைரியமாகக் கேளுங்கோ. பயப்பட ஒண்ணு மில்லே. கொஞ்சம் கவலையாயி ருக்கும், அவ்வளவுதான். அதுவும் பகவான் கிருபையில் சரியாயிடும்..."

தம்மையே சமாதானப்படுத்திக் கொள்பவர் போல் அவர் தயங்கித் தயங்கிப் பேசிய பீடிகையைக் கேட்டதுமே ராஜம்மாள் முகம் வெளிறிப் போனாள். "என்ன ஆச்சு?" என்றது கிணற்றுக் குரல்.

வந்த சபேசன் விஷயத்தைச் சொன்னார்: வித்வத் சபையை நோக்கி நாணாவும் உதயாவும் விரைந்து கொண்டிருந்தபோது ராயப்பேட்டை மணிக்கூண்டருகில் சாலைச் சந்திப்பில் இவர்கள் பைக்கின் மேல் பஸ் மோதி விபத்து. அலாக்காக நடைபாதையில் தூக்கி எறியப்பட்ட உதயாவுக்குத் தெய்வாதீனமாய் பெரிய அடி ஏதுமில்லை. விழுந்த அதிர்ச்சி தான். நாணாதான் பஸ்ஸில் சிக்கிவிட்டான். ஆழமான அடிகள், நிறைய ரத்தச் சேதம். உடனே ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு உதயா அவனை அங்கிருந்த சிலர் உதவியோடு டாக்சியில் தூக்கிப் போட்டுக்கொண்டு விரைந்தாள். விபத்து கேஸாகத் தீவிர சிகிச்சைக்கு ஏற்பாடானதும் ஆஸ்பத்திரியிலிருந்தே தந்தைக்குத் தொலைபேசியில் தகவல் சொல்லி, தனியாக இருக்கும் தன் மாமியாரிடம், அவர் நேரில் சென்று நாசுக்காக விஷயத்தைக் கூறி ஆஸ்பத்திரிக்கு அழைத்து வரும்படி கேட்டுக் கொண்டாளாம்.

அவருடன் டாக்சியில் மருத்துவ மனைக்குச் சென்று கொண்டிருந்த போது ராஜம்மாள் உடல் பதறியபடி இருந்தது. அதிர்ச்சி தந்த அரை மயக்க நிலையில் கனவில் உயிர்ப் பவள்போல இருந்தாள்.

ஆஸ்பத்திரி வார்டில் நாணா நினைவிழந்து படுக்கையில் கிடந்தான். தலையிலும் முகத்திலும் உடம்பிலும்... அப்பப்பா, எத்தனை கட்டுகள்! அவற்றில் ரத்தத் தடயங்கள், பிராண வாயுக்குழாய் முக்கை மூடியிருந்தது. மேலிருந்து ரத்தச் சொட்டுகள் உடம்புக்குள் இறங்கிக் கொண்டிருந்தன.

"நாணா... நாணா... என் பிள்ளை... என் உலகம்... என் குழந்தை... நான் இன்னும் இருக்க உனக்கு எமன் வருவானா? என் பிள்ளை இல்லாவிட்டால் நான் உயிரோடு இருக்கமாட்டேன்..."

அவனை அப்படியே எடுத்து மார்போடு அணைத்து வயிற்றோடு சேர்த்து அமுக்கித் தன்னுள் கரைத்துக்கொண்டு... பாதுகாத்து..

ராஜம்மாள் பார்வை நகர்ந்தது. அறையிலிருந்த பணிப்பெண்ணை அவள் கவனிக்கக்கூட இல்லை. சோர்ந்து கலங்கிக் கவலையுடன் நின்றிருந்த மருமகள் மீது பார்வை பாய்ந்தது. தெருப் புழுதியும் ரத்தக் கறைகளும் பதிந்திருந்த வெண் பட்டுப் புடைவையின் மேல் நிலைத்தது.

வெறிபிடித்துவிட்டது ராஜம்மாளுக்கு. "அம்மா..." என்று மிருதுவாய் அழைத்து அருகில் வர இருந்த உதயாவை ஒரு கடும் பார்வையால் வெட்டி நிறுத்தினாள். அது ஆஸ்பத்திரி என்ற பிரக்ஞையே இல்லை. கண்ணீர் பெருக ஆவேசக் குரலில் குடலிலிருந்து புயலாக வார்த்தைகள் வெடித்துக்கொண்டு வந்தன.

"வெள்ளை உடுத்தாதே உடுத்தாதேன்னு முட்டிண்டேனே, கேட்டியா? பாவி, என் பிள்ளையை முழுங்கிட்டியேடி! அவன் இல்லாம நான் உயிரோட இருக்கமாட்டேன். நீ இரு, நூறு வருஷம், வெள்ளைப் புடைவை கட்டிண்டு..."

மயங்கிச் சரிந்தவளை உதயாவும் சபேசனும் தாங்கிப் பிடித்துக் கொண்டு வெளியே நடத்தி வந்து, காத்திருந்த டாக்சியில் ஏற்றினார்கள்.

★ ★ ★

மூன்று வாரங்களில் நாணா முழுக்குணம் அடைந்து நெற்றியிலும் இடத் தோளிலும் லேசான தழும்புகளை மட்டும் சுமந்து ஆஸ்பத்திரியிலிருந்து நல்லபடியாய் வீடு வந்து சேர்ந்தான்.

வந்தவன் சூனியப் பார்வையாய் வீட்டை வெறித்துக்கொண்டு வெகுநேரம் நின்றான். ஏனென்றால் அவனை ஓடிவந்து வரவேற்க ராஜம்மாள் இல்லை. "என் பிள்ளை போய்ட்டான், என் நாணா போய்ட்டான்" என்ற அரற்றலின் உச்சத்தில் ஜன்னி கண்டு, மருத்துவத் திறமைகளைத் தன் பயத்தின் வீச்சால் முறியடித்து, வெள்ளைப் புடைவைமேல் உள்ள கோபம் தீராமலே ராஜம்மாள் தனது உயிரை விட்டிருந்தாள்.

சர்வசமய சமரசப் பிரார்த்தனை

இறைவன் ஒருவனே! அவன் நமக்காகப் பல நாமங்களையும் உருவங்களையும் தாங்கி இறங்கியும் வருகிறான்; இரங்கியும் வருகிறான். அவன் ஒருவன் என்பதை "ஏகோ தேவஹ" என்று வேதம் உணர்த்துகிறது. "ஏகன் அநேகன் இறைவனடி வெல்க" எனத் திருவாசகமும் தெரிவிக்கின்றது.

ஐந்து கண்டங்களுக்கும், 800 கோடி மக்களுக்கும், மேலே உள்ள பரம் பொருள் ஒன்றுதான். இதனை அறிந்தவர் உணர்ந்து கொள்ளக் கூடும்; புரிந்து கொள்ளவும் முடியும்.

உலக சமய உலக சமாதான மாநாடுகளைத் தொடங்கி வைக்க நாம் அமெரிக்காவிற்கும், மேற்கு ஜெர்மனிக்கும் சென்றபோது, எட்டு வகையான சமயங்களின் தலைவர்கள் ஒரு பெரிய அறையினுள், ஒருவர் கையை ஒருவர் கோத்துக் கொண்டு, இறைப் பொருளை, உலக சமய ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும் அருளும்படி அவரவர் தெய்வத்தை மானசீகமாக வேண்டினோம்; அதன் பின்னர், அழகான ஒரு பெரிய கூடத்தின் நடுவே, தங்கச் சட்டியில் சாம்பிராணிப் புகை அக்கூடத்தை வட்டமிட்டுச் சுற்றி நின்றது. இரண்டிரண்டு பேராக 4 பக்கங்கள் உள்ள வாயில் வழியாக, மெதுவாக நடந்து சென்று மேடையில் ஏறினோம். அங்கு ஒரு செவ்விந்தியர், நடுவில் உள்ள ஸ்டாண்டில் வைக்கப் பெற்றுள்ள தங்கச்சட்டியில் சாம்பிராணித் தூளைத் தூவி நன்மணத்தைப் பரவ விட்டுக் கொண்டிருந்தவர், தம் கையில் உள்ள மெழுகுவத்தியின் மூலமாக எங்களது பெரிய மெழுகுவத்திகளை ஏற்றிக் கொள்வதற்கு உதவினார். எட்டுப்பட்டகைகள்போல ஓர் ஒழுங்காக – அதிலும் அழகாக – வரிசையாக நின்று கொண்டிருந்த அறுநூறு பேர், எண் சமயவாதிகளும், வரிசையாக ஒழுங்காகச் சீராகச் சிறப்பாக ஒருசில நிமிடங்களிலே தத்தம் மெழுகுவத்திகளை ஏற்றிக் கொண்டனர்; ஒரு பக்கம் சாம்பிராணிப் புகை; கூடம் முழுதும் நிறைந்திருந்த மெழுகுவத்திகளின் ஒளி; மின் விளக்குகள் அணைக்கப்பட்டன; சாம்பிராணிப் புகையுடன் மெழுகுவத்திகளின் ஒளி சூழ்ந்த நிலையில், இன்னிசை கீதம் காற்றினிலே வரும் இன்ப ஒலியாக மெல்லென ஊர்ந்து வந்து எல்லோரது உள்ளத்தையும் கவர்ந்தது. ஒரு கணப் போது, நாம் தெய்வ லோகத்தில்தான் நிற்கின்றோமோ என்ற பிரமிப்பை ஏற்படுத்தியது. எண் சமயத்தைச் சார்ந்த எட்டுப் பேரும் அவரவர் சமயாச்சார்யார்களின் போதனைகளை அவரவர் மொழிகளில் படிக்கும்போது மற்றவர்கள் அன்புடன் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அக்கருத்துகளை, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நாங்கள் சொல்லும் போது, மற்றவர்கள் அனைவரும் அதனை ஆர்வமுடன் பக்திபூர்வமாகத் திரும்பச் சொல்ல, இந்த நிகழ்ச்சிகள் இருபது நிமிடங்களில் நிறைவேறின. இதனை எப்போதும் மனக்கண் மூலம் கண்டு களித்துக் கொண்டிருக்கும் நாம், இந்த தீபாவளி மலருக்கு சர்வசமயப் பிரார்த்தனைகளைக் காணிக்கையாக்குகின்றோம். எண் சமயப் பிரார்த்தனைச் சுருக்கங்களைப் பாருங்கள்; எதிலும் துவேஷமில்லை. எதிலும் வேற்றுமைகளும் இல்லை. மேலே போகப் போக எல்லாமே ஒன்றாகத் தெரியும். அது நன்று என்றும்



புரியும். இன்றைக்குத் தேவையானது சமரசம்; சன் மார்க்கமேயாகும்.

(1) Hinduism - Rig Veda 10-191-193

ஸமானோ மனஹ ஸமிதி ஸமானி |

ஸமானம் மனஹ ஸஹ சித்தம் ஏஷாம் ||

ஓம் ஷாந்தி ஷாந்தி ஷாந்திஹி ||

Common be our prayer

Common be our end

Common be our purpose

Common be our deliberation

Om Peace ; Peace ; Peace

உங்களது லட்சியம் ஒரே மாதிரி அமையட்டும்;

உங்களது சந்திப்புப் பொதுத் தன்மை பெறட்டும்.

உங்களது மனம் ஒரே மாதிரி விளங்கட்டும்.

மனங்களின் சிந்தனைகள் இணைந்து திகழட்டும்.

ஓம் அமைதி; அமைதி; அமைதி.

ப்ருஹதாருண்யகோ உபநிஷதம்.

From unreal lead me to the real

From Darkness lead me to light

From death lead me to immortality

Om Peace; Peace; Peace.

பொய்மையிலிருந்து மெய்மைக்கு வழிகாட்டு;

இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச்செல்

சாவிலிருந்து அமரத்வத்திற்கு வகையருள்

ஓம் ஷாந்தி; ஷாந்தி; ஷாந்திஹி

✧ ✧ ✧

(2) க்ரீக் மொழியில் உள்ள கிறிஸ்துவப் பிரார்த்தனை

Holy God, Holy & Strong, Holy & Immortal have mercy on us.

அருள்திரு சாயிமாதா
சிவ . பிருந்தாதேவி

பரிசுத்த தெய்வமே! பரிசுத்தமும் உறுதியுமான வரே; பரிசுத்தமும் அழிவுமற்றவரே; எங்கள்மீது கருணை காட்டும்! ஆமென்.

✧ ✧ ✧

(3) அராபிக் மொழியில் உள்ள குரான் - இஸலாமியப் பிரார்த்தனை

The Most merciful

Praise belongs to God

The Cherisher and Sustainer of creation

கருணையுடைய கடவுளே! படைப்பவனாகிப் பேணிப் பாதுகாத்துக் கருணையுடையவனாய் விளங்கு கின்ற கடவுளாகிய உனக்கே எல்லா மகிழ்ச்சியும் சொந்தம்.

✧ ✧ ✧

(4) ஆப்பிரிக்கப் பரம்பரை ஜிம்பாவீன் சமயம்

Wonderful one; you live in the midst of The Sheltering rocks; we pray to you, hear us Lord!

ஆச்சர்யப்படத்தக்க ஒன்றே; பாதுகாப்புத் தரு கின்ற - நிழல் தருகின்ற பாறைகளுக்கு இடையிலும் நீ இருக்கிறாய். நாங்கள் உன்னிடம் பிரார்த்தனை செய் கின்றோம் - இறைவனே! நீ அதனைக் கேட்பாயாக!

✧ ✧ ✧

(5) Zorastrianism. இரானியன் மொழியில் உள்ள ஜொராஸ்ட்ரானியன் பிரார்த்தனை!


Perfect eternal life we gain

Our souls grown strong

Our lives renewed



உயர்த்தப்பட்டவன்!



இருகரம் நீட்டி எவர்க்கும் உதவ
எப்போதும் தயாராய் இருக்கும்
நீயாதாழ்த்தப்பட்டவன்?
இல்லை, இல்லை, இல்லவே இல்லை.

பலகலைகளையும் பாங்குறக் கற்று
உலகினில் உத்தம வாழ்க்கை வாழும்
நீயா தாழ்த்தப்பட்டவன்?
இல்லை, இல்லை, ஒருபோதும் இல்லை.

கோயில் சொத்தைக் கொள்ளையடித்துக்
கோட்டைகள் கட்டும் கயவர்கள் நடுவே
உள்ளமேகோயில் உழைப்பே தெய்வம்
உள்ளதை எவர்க்கும் பகிர்ந்துண்போம் என
என்னும் நீயா தாழ்த்தப்பட்டவன்?
இல்லை, இல்லை, ஒருக்காலும் இல்லை.
நல்லதை வாயால் பேசிவந்தாலும்
அல்லதே செய்யும் அதர்மர்கள் இடையே
நல்லதை மட்டும் மனதில் எண்ணி
நாளும் அதையே செய்து வருகிற
நீயா தாழ்த்தப்பட்டவன்?
இல்லை, இல்லை, எப்போதும் இல்லை.

எனவே நண்பா!
இனியும் வேண்டாம் இழிசொல் உனக்கு,
உள்ளத்தாலே உயர்ந்தவன் என்றால்
உண்மையில் உயர்த்தப்பட்டவன் நீயே!

களங்கமில்லாத முடிவற்ற, வாழக்கையைப் பெறுகிறோம். நமது ஆன்மாக்கள், பலமுடையதாக வளரட்டும். நமது வாழ்க்கை புதுப்பிக்கப்படட்டும்.

✧ ✧ ✧

(6) ஹிப்ரு மொழியில் உள்ள ஜுடாயிஸம்

Make us Joyful with Thy
Salvation, and cleans hearts to serve Thee truly

உன்னுடைய கருணையினால் எங்கட்கு மகிழ்ச்சியை உண்டாக்கு; சுத்தமான எங்களுடைய இதயத்தினாலே உண்மையாக உனக்குச் சேவை செய்ய - ஆமென்.

✧ ✧ ✧

(7) பாலிபாஷையில் உள்ள புத்திஸம்

Has God control of The Senses: Is moderate of the Senses: Is moderate in eating full of faith and of high vitality.

கட்டுப்படுத்தப்பட்ட புலனடக்கம் மிதமான உணவு; முழு நம்பிக்கை, தீவசஞ்சாரம்

✧ ✧ ✧

(8) சீனமொழியில் உள்ள தோயிஸம்

The great Joa is universal
Like a flood; How can it be turned
To the right or to the left?
All creatures depend on it.

அண்டபிண்ட சராசரம் அனைத்தையும் மிகப் பெரிய சீனத்து தாவே மதம் வெள்ளம்போல் ஒன்றாக இணைக்கிறது - எப்படி வலப் புறம்; இடப் புறம் திரும்ப முடியும்? எல்லா உற்பத்திகளும் அதற்குள் அடக்கம்.

எள் மதங்களும் விரும்புகின்ற பிரார்த்தனைகள் அனைத்துமே பொதுவானதுதான், உன்னத நோக்கமும் உயர்ந்த கொள்கைகளும் சம நோக்கும் கொண்டவையாக இருக்கும்போது புரிந்து கொள்ளாதது போலச் சிலர் விரோதப் போக்குகளில் வீணாக நேரத்தை ஏன் வீணடிக்க வேண்டும்?

அனைத்துயிர் ஒன்று என்றெண்ணி
அரும்பசி எவர்க்கும் ஆற்றி
மனதினில் வஞ்சனை, சூது, களவு
சினத்தையும் தவிர்த்து விட்டால்
இந்த உலகமே அன்பிலே அடங்குமே
பந்த பாசங்கொண்டு, எல்லோரையும்
ஒன்றாக எண்ணுவோம்..அனைவருமே
உயர்வினைப் பெறுவோம்.

✧ ✧ ✧


எல்லா சமயங்களும் ஏக தர்மமாகிற ஒரே நீதியைத்தான் போதிக்கின்றன; மனிதன், மனித சுபாவத்தை உணராவிட்டால் அதற்கு மதம் என்ன செய்யும்?

எந்த மதமும் 'குத்து, வெட்டு, சண்டையிட்டுக் கொள்' என்று போதிக்கவில்லை என்பதை உணர்ந்து புத்திக் கூர்மையுள்ள எல்லாச் சமயத்தவரும் மனித நேயத்தை வளர்த்துக் கொண்டால் ஆங்கு ஆன்ம நேயமும் பூத்துக் குலுங்கும்.

"லோகா ஸம்ஸ்தாஹா சுகினோ பவந்து" ஂ

பஞ்சபூதங்களும் அஞ்சிடுமே!





ராகம் : சிந்து பைரவி — தாளம் : ஆதி.

பஞ்ச பூதங்களும் அஞ்சிடுமே – இந்தப்
பாரினில் மாசுகள் படர்ந்துவிட்டால்! – கொடும்
பஞ்சமும், நோயும் மிஞ்சிடுமே – நாம்
பரிதவிக்கும் நிலை வந்திடுமே!

எரிபொருளாலே வானம் கெடும்! – விட்டு
எறி கின்ற பொருளாலே வீதி கெடும்!
கழிவுகளாலே ஆறு கெடும்! – என்றும்
கவன மில்லாவிடில் ஊரு கெடும்!
எனவே – பஞ்சபூதங்களும் அஞ்சிடுமே.

வானத்தைப் புகையாக்கிக் குலைக்கின்றோம்! – இந்த
வையத்தைக் களராக்கித் தடுக்கின்றோம்!
தாகத்தைத் தீர்த்திடும் நீரினையும் – உயிர்
தந்திடும் காற்றையும் கெடுக்கின்றோம்!
அதனால் – பஞ்ச பூதங்களும் அஞ்சிடுமே

பெற்றவை யாவும் பலம் பெறவேண்டும்!
பேணும் உயிர் எல்லாம் வலம் வரவேண்டும்!
சுற்றுப்புறம் யாவும் வளம் பெற வேண்டும்!
சூழ்நிலைகள் அனைத்தும் நலம் பெற வேண்டும்!
இன்றேல் – பஞ்ச பூதங்களும் அஞ்சிடுமே.



கலைமாமணி கவிஞர் தஞ்சைவாணன்

குமரியில் சிற்பக்கலை

டாக்டர் எஸ். பத்மநாபன்

தமிழகத் திருக்கோயில்கள் ஆன்மிக உணர்வை வளர்த்து வருவதோடு சிற்பம், ஓவியம் இசை, நடனம் முதலிய பல்வேறு கலைகளையும் தொன்றுதொட்டு வளர்த்து வருகின்றன. தமிழகத்தில் உள்ள கோயில்களோ ஏராளம். அக்கோயில்களில் உள்ள சிற்பங்களோ கணக்கிலடங்கா. சிற்பச் சிறப்போ சொல்லிலும் எழுத்திலும் அடங்கக் கூடியவையல்ல. சுதை, கருங்கல், உலோகம், மரம், தந்தம் ஆகியவற்றால் பற்பல சிற்பங்கள் காலந்தோறும் உருவாக்கப்பட்டு கோயில்களில் இடம் பெற்றுள்ளன.


கல், மரம், உலோகம் இவற்றால் உருவாக்கப்பட்ட பல அரிய சிற்பங்கள் குமரி மாவட்டத்திலே உண்டு. குமரி மாவட்டத்தின் ஆன்மிகத் திருநகர் சுசீந்திரம். கல்லிலே கலையழகு காட்டி நிற்கும் பல சிற்பங்களை சுசீந்திரம் ஆலயத்திலே நாம் கண்டுகளிக்கலாம். சுசீந்திரம் ஆலயத்தின் சித்திர சபையில் பல தெய்வங்களின் திருவுருவங்கள் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. அலங்கார மண்டபத்தில் பதினெட்டு அடி உயரத்தில் வணங்கிய நிலையில் காட்சிதரும் அனுமனின் முழு உருவச் சிலை அழகிலும் கம்பீரத்திலும் பாரத நாட்டிலேயே சிறந்து விளங்குகின்றது. ஒரே கல்லில் வடித்தெடுத்த இசைத்தூண்கள் பல இசைக்கருவிகளின் நாதங்களை எழுப்பி எல்லாரையும் வியப்பில் ஆழ்த்துகின்றன. கருட மண்டபத்தில் உள்ள திருமலை நாயக்கரின் கற்சிலையிலே மூக்குத்துளை சிரசு வழியே காதுவரை செல்லுகிறது. காதிலுள்ள துவாரம் மறு காது வரை செதுக்கப்பட்டுள்ளது. விநாயகர் பெண் உருவிலே விக்னேஸ்வரியாகக் காட்சி தருவதும், பார்த்தசாரதி மும்மூர்த்தியாக நின்று கீதையை உபதேசம் செய்யும் காட்சியும், நவக்கிரகங்களும் பன்னிரண்டு ராசிகளும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளதும் கண்டு இன்புறத் தக்கவை.

சுசீந்திரம் ஆலயத்தில் காணப்படும் இசைத்தூண்கள் உலகப் புகழ் பெற்றவை. இத்தூண்களைத் தட்டினால் மிருதங்கம், கடம், பஞ்சவாத்தியம் ஆகிய இசைக்கருவிகளின் நாதங்கள் எழுகின்றன. ஒரே கல்லாலான பெரிய தூணின் மேற்பகுதியும் அடிப்பகுதியும் தவிர எஞ்சிய பகுதியை சிறிது சிறிதாகக் குடைந்து பிறகு தனித்தனியான பல சிறு தூண்களாக உருவாக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு செதுக்கப்பட்ட சிறிய தூண் ஒவ்வொன்றினையும் தட்டிப் பார்க்கும்போது அவற்றில் வெவ்வேறு வகையான இசை ஒலிகள் எழுவது வியப்பாக உள்ளது. சுசீந்திரம் ஆலயத்திலுள்ள அலங்கார மண்டபத்தில் நான்கு இசைத்தூண்களும், செண்பகராமன் மண்டபத்தில் பழுதுபட்ட நிலையில் இரண்டு இசைத்தூண்களும் உள்ளன.


நாயக்கர் காலத்தில் எழுப்பப்பட்ட இது போன்ற இசைத் தூண்களை மதுரை, நெல்லை, திருவனந்தபுரம் ஆலயங்களில் நாம் காணலாம். சுசீந்திரம் ஆலயத்திலுள்ள செண்பகராமன் மண்டபத் தூண் ஒன்றில் செதுக்கப்பட்ட மூன்று வளையங்களை நகத்தால் தட்டும்போது ஜலதரங்க இசை எழுகின்றது. இது விந்தையிலும் விந்தையாகும். இறைவன் "ஏழிசையாய், இசைப்பயனாய் இன்னமுதாய்" இலங்குகின்றார் என்று சைவசமயக்குரவர் சுந்தரர் கூறிய கருத்தை, தமிழகச் சிற்பி இங்கே கல்லிலே அழகுற வடித்துத் தந்துள்ளான்.

சுசீந்திரம் கருட மண்டபத் தூணிலுள்ள திருமலை நாயக்கரின் திருவுருவச்சிலை சிற்பக் கலைநுணுக்கத்தின் சிகரமாகத் திகழ்கின்றது. அவர் அணிந்துள்ள அணிகலன்கள் மிகவும் நுட்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அச்சிலையிலுள்ள மூக்குத்துளைகள் காது வரை செல்லுகின்றன. இடது மூக்குத்துளை வழியாகச் செலுத்தும் மெல்லிய குச்சி வலக் காது வழியாகவும், வலது மூக்குத் துளையில் செலுத்தும் குச்சி இடக் காது வழியாகவும், இப்படி ஒரு காது வழியே செலுத்தும் குச்சி மறுகாது வழியாக வரும்படி மிக நுண்ணிய வேலைப்பாடு மிளிர இச்சிலை செதுக்கப்பட்டுள்ளது வியப்பினை ஊட்டுகின்றது.

சுசீந்திரம் செண்பகராமன் மண்டபத் தூண்களில் வாலிவதம் மிகவும் அருமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. நாண் பூட்டிய ஸ்ரீராமபிரான் உருவம் பொறித்த தூணருகே நின்றால் சுக்கிரீவனோடு போராடும்



18 அடி உயரத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட அனுமனின் சிலை



தட்டினால் நாதம் தரும் இசைத் தூண்கள்


வாலியை நாம் காணலாம். ஆனால் வாலியின் அருகே நின்றால் இராமபிரானின் திருவுருவத்தைக் காணமுடியாது. ஸ்ரீராமபிரான் வாலியை ஒளிந்திருந்து கொன்றான் என்ற இராம காவியம் தரும் உண்மையை சிற்பி மிகவும் நுட்பமாக இத்தூண்களில் செதுக்கி யுள்ளான். இதுபோன்ற அரிய காட்சியை பூதப்பாண்டி பூதலிங்கசுவாமி ஆலயத்தூண்களிலும் நாம் கண்டு களிக்கலாம்.

கல்லிலும் மரத்திலும் உருவாக்கப்பட்ட பல கலைச் சிற்பங்களை திருவட்டாறு ஆலயத்திலே நாம் காண லாம். மூலவரின் முன்னால் உள்ள ஒற்றைக் கல் மண்டபம் பதினெட்டு அடி சதுரமும் மூன்று அடி உயரமும் கொண்ட ஒரே கல்லின் மேல் எழுப்பப் பட்டுள்ளது. அக்காலப் பொறியியல் திறனுக்கு இது ஒரு சான்றாகத் திகழ்கின்றது. பலி பீட மண்டபத்தின் இருபக்கமும் செதுக்கப்பட்ட தெய்வச் சிலைகள் மிகவும் அழகு மிக்கவை. பலிபீட மண்டபத் தூண் ஒன்றில் குழலூதும் கண்ணன் நாற்கரங்களுடன் காட்சி தருகிறார். அவரைச் சுற்றிலும் இடையிலே மயங்கி நிற்கும் விலங்குகள் தத்தமது நிலைமாறி நிற்கின்றன. பசுவின் கன்று புலியிடமும், புலிக்குட்டி பசுவிடமும் பால் குடிக்கின்றன. படமெடுத்த பாம்பின் தலைமீது ஓர் எலி இசையிலே மயங்கி நிற்கின்றது. கண்ணன் குழலோசை தரும் மயக்கத்தை சிற்பி மிகவும் நயம்படக் கல்லிலே வடித்துள்ளான். வேறொரு தூணில் சிவன் நடனமாட, பிரம்மனும் திருமாலும் பக்கவாத்தியங்கள் ஏந்தி நிற்பது காண வேண்டிய காட்சியாகும்.

கலை நுட்பங்களுடன் கூடிய மரத்தூண்களைக் கொண்ட உதய மார்த்தாண்ட மண்டபத்தில் விநாய கரின் திருமண ஊர்வலமும், பாற்கடலைக் கடையும் நிகழ்ச்சியும் மரப்பலகைகளில் அழகுறச் செதுக்கப் பட்டுள்ளன. கருவறையின் கூரையின் மேல், இரண்டு பக்கமும் மரத்தினால் செய்யப்பட்ட சங்கிலிகள் தொங்குகின்றன. உட்கோயிலின் மரக்கதவுகள் சிற்ப வேலைப்பாட்டின் சிகரமாகத் திகழ்கின்றன. இவ்வாறு திருவட்டாறு ஆலயத்திலே காணப்படும் கற்சிலைகள் தமிழ்நாட்டின் கலைத்திறனையும், மர வேலைப்பாடுகள் கேரள நாட்டின் கலைத் திறனையும் நினைவூட்டி நிற்கின்றன.

தமிழ் மொழியின் சொல்லாட்சி மிகவும் போற்றுதற் குரியது என்பது மொழியியலார் கருத்து. அரவணைப்பு என்னும் தமிழ்ச் சொல்லின் அமைப்பும் நயமும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. காதலர்கள் கட்டித் தழுவுவதை "அவர்கள் அன்போடு அரவணைத்தனர்" என்று கதாசிரியர்கள் எழுதுகின்றனர். அரவம் என்றால் பாம்பு. ஒன்றொடொன்று இணைவதில் பாம்புதான் உயிரினங்களின் முதன்மை வகிக்கிறது. இரண்டு பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து நிற்கும்





மரத்திலே செதுக்கப்பட்ட ஸ்ரீராமர் முடிசூட்டு விழாக் காட்சி

சிற்பம் ஒன்று திருவட்டாறு ஆலயத்தில் மிகவும் திறம்படச் செதுக்கப்பட்டுள்ளது. தமிழ்மொழியின் சொல்லாட்சிக்கு ஈடு, இணை இல்லை என்பதை உறுதி செய்யும்படி சிற்பி இதனை மிகவும் சிறப்பாகச், செதுக்கியுள்ளான்.

பத்மநாபபுரம் கோட்டையின் உள்ளே காணப்படும் இராமசாமி கோயிலில் இராமாயணக்கதை முழுவதும் 145 மரப் பலகைகளில் நாடக ரூபமாகச் செதுக்கப் பட்டுள்ளது. இராமர் பிறப்பு முதல் அனந்தசயனம் வரை திருமாலின் அவதாரப் பெருமையை இந்தப் புடைப்புச் சிற்பங்கள் அழகுற விளக்குகின்றன. இக் கலைக் கருவூலத்தை மர வேலைப்பாட்டில் பாரத நாட்டின் தலைசிறந்த கலைச் சின்னங்களில் ஒன்றாகக் கருதலாம். சுசீந்திரம், வடிவீஸ்வரம் ஆலயங்களில் காணப்படும் செப்புச் சிலைகள் மிகவும் அழகுமிக்கவை.

குமரி மாவட்டக் கோயில் தூண்களில் காண்போர் வியப்புறும் வண்ணம் பல விந்தையான சிற்பங்களைச் செதுக்கி சிற்பி தனது நுண்ணிய திறனை பல இடங்களில் நிறுவியுள்ளான். சுசீந்திரம் கோபுரவாயில் தூண் ஒன்றில் வயிற்றில் முகத்தையுடையஉதரமுகன் என்றழைக்கப்படும் கவந்தனின் விந்தையான சிற்பத் தைக் காணலாம். திருவிதாங்கோடு மகாதேவர் ஆலய வெளிப்பிராகாரத் தூண்களில் ஒரு பெண்ணின் கன்னிப்பருவமும், மணப்பருவமும், கருவுற்றநிலை, தாயின் நிலை, வயோதிகப்பருவம் இவற்றை மிகவும் நயம்படச் செதுக்கியுள்ளனர். பூதப்பாண்டி ஆலயத் தூண் போதிகை ஒன்றில் தாமரை மொட்டோடு கல்லினால் செதுக்கப்பட்ட சுழலும் கூடு ஒன்றினை இணைத்து சிற்பி செதுக்கிய பாங்கு வியப்பாக உள்ளது. திருவட்டாறு ஆலயத்தூண் ஒன்றில் இரண்டு பன்றிகளின் தலைகளை வைத்து நான்கு பன்றிகளாகக் காட்டியுள்ளான். வேறொரு தூணில் ஒரே உடலில் மூன்று தலைகளை வைத்து மூன்று குரங்குகளாகக் காட்டுகிறான். கன்னியாகுமரியிலுள்ள சுவாமி விவேகானந்தர் நினைவாலயத்திலுள்ள தூண்களில் நான்கு மான்களின் உடல்களில் ஒரே தலையை வைத்து சிற்பி நம்மைத் திகைக்க வைக்கிறான். ஒரே சிற்பத்தில் யானையும் காளையும் காட்சி தருகின்றன. இவ்வாறு விந்தையான பல சிற்பங்களைத் தூணிலே செதுக்கி சிற்பி நமக்கு வித்தை காட்டுகிறான்.

சில நேரங்களில் சிற்பங்கள் அற்புதமான வரலாறு எழுதத் துணை புரிகின்றன. அண்மையில் தேரூரில் கிடைத்த அவலோகிதர், தாராதேவி சிலைகள் அந்த வட்டாரத்தில் புத்த சமயம் பரவியிருந்த தகவலைத் தெரிவிக்கின்றன. சுசீந்திரம் ஆலயத்தில் கிடைத்துள்ள ஆதிசங்கரர் சிலையும், ஷண்மத தெய்வங்களின் சிலை களும் ஆதிசங்கரர் ஷண்மத ஸ்தாபகர் என்ற உண்மை யையும், அவர் தென்குமரி வந்த செய்தியையும் உறுதிப்படுத்துகின்றன. நாகர்கோவில் நாகராஜர் ஆலயத் தூண்களில் புடைப்புச் சிற்பங்களாகக் காணப் படும் பார்சுவநாதர், மகாவீரர், பத்மாவதி ஆகியோர் உருவங்களும், சிதராவில் காணப்படும் சமண சமயத் தீர்த்தங்கரர் திருவுருவங்களும் குமரி மண்ணில் ஒரு காலத்தில் சமண சமயம் தழைத்தோங்கியிருந்த வரலாற்று உண்மையைத் தெரிவிக்கின்றன.

கல்லிலும் மரத்திலும் உலோகத்திலும் கலை வண்ணம் காட்டும் பல சிற்பிகளைக் கொண்டது குமரி மாவட்டம். மைலாடி கலைக்கூடம் அழகிய கல் சிற்பங்களை உருவாக்கி உலகப்புகழ் பெற்றுள்ளது. சுசீந்திரத்தை அடுத்துள்ள காக்கம்புதூர், வடசேரி, திருப்பதிசாரம் போன்ற பல இடங்களில் தெய்வங்களின் திருவுருவங்களை அழகுடன் செதுக்கும் திறமை வாய்ந்த சிற்பிகள் பலர் இன்று தங்கள் கைவண்ணங்களைக் காட்டி குமரி மாவட்டத்தின் பெருமையை நிலைநாட்டி நிற்கின்றனர். மரத்தேர் செய்யும் ஒரு சிற்பக் கூடம் சில ஆண்டுகளுக்கு முன்பு இங்கே சிறப்புடன் திகழ்ந்தது.

500 ஆண்டுகளுக்கு முன்புகூட நமது கோட்டாற்றில் சிற்பக்கூடம் ஒன்று சிறப்புடன் திகழ்ந்தது என, கல்வெட்டுகளிலிருந்து நாம் அறிய முடிகிறது. அந்தக் கலைக்கூடத்தில் பல சிற்பிகள் தங்கிக் கலை வளர்த்தனர். அவர்களுள் கொம்மண்டை நயினான் முதலி என்பவரும் தம்பிரான்குட்டி முதலி என்பவரும் தலை சிறந்து விளங்கினார்கள் என்றும், அவர்கள் இருவரும் "சிற்பப்புரந்தரன்" என்னும் சிறப்பு விரு தினைப் பெற்றிருந்தனர் என்றும் பறக்கை, கரிய மாணிக்கபுரம் கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இங்கு முதலி என்பது முதல்வரைக் குறிக்கும். இவ்வாறு குமரி மாவட்டத்தின் கலைமரபு போற்றுதற்குரியது.

கர்மா...

விகாரத் தோற்றத்துடன், இருந்த இடத்திலிருந்து அசையாமல் சுருண்டு கிடந்த மகளைக் குணமாக்க, கடைசியாக ஒரு வழி கிடைத்தது என்ற நைப்பாசையுடன் சாமியார் ஒருவரைத் தேடிச் சென்றவருக்கு அங்கே கிடைத்த பதில்?

"ஏன் சார்... ஒரு முறை போய்த்தான் பாருங்களேன்..."

அன்றும் சாமிநாதன் சொன்னான். கூடத்து மூலையில் கந்தல் புடைவையில் சுருண்டு கிடந்த என் பெண் அலமேலுவைப் பார்த்து விட்டுச் சொன்னான். அலமேலு என்ற பெயர் எங்களுக்குத்தான். அவளுக்கில்லை. கூப்பிட்டால் திரும்பியா பார்க்கப் போகிறாள்...? என்ன என்றுதான் கேட்கப் போகிறாளா...? பொம்மை ஒன்று கிடக்கிற மாதிரி கிடக்கப் போகிறாள். கை வளைசல், கால் வளைசலோடு கூடிய பொம்மை.

பார்க்கப் பார்க்க அடிவயிற்றிலிருந்து துக்கம் புறப்பட்டது. நெஞ்சை அடைத்துக் கொண்டது. குழந்தையாக இருந்தபோது தேவலாம். இத்தனைப் பாடு இல்லை. இப்போது...?

இந்தப் பதினாறு வயதில் மூளை வளர்ச்சியற்ற. கைகால்கள் சூம்பிப் போன பெண்ணிற்கு அது ஒன்றுதான் குறைச்சல் என மாதா மாதம் வருகிறது. தவறாமல் வந்து விடுகிறது. மலம், சிறுநீர் எனத் துணி மாற்றுகிற நானும் என் மனைவியும் தவித்துப் போகிறோம்.

"ஈஸ்வரா... இது என்னடாப்பா சோதனை...? எடுத்துண்டாவது போயிடேன்..."

அந்த அளவுக்கு மனசு மென்மைத் தனம் இழந்து மரத்துப் போயிருந்தது.

இந்த நிலைமையில்தான் சாமிநாதன் மீண்டும் சொன்னான். எத்தனையோ முறை சொல்லியிருக்கிறான். ப்ச்சு... என்று வெறுப்பில் கேட்காமல் விட்டிருக்கிறேன்.

இன்றைக்கென்னவோ பொறி மாதிரி தட்டிற்று. போய்ப் பார்த்தால் தான் என்ன...? சாமிநாதன்தான் வாய் ஓயாமல் சொல்கிறானே...?

"எதிர்லே வெறுமனே உட்கார்ந்திருந்தா போறும் சார். மனசு ரொம்ப நிம்மதியா இருக்கும் சார்...".

"நிறைய பீடி பிடிப்பார். ஆனா கொஞ்சம்கூட பீடி வாசனை வராது..."

"எவ்வளவு இளங்க வரா... குறை குறையா எவ்வளவு கொட்றா... அப்படியே நிவர்த்தியாகியிருக்கு சார்..."

"அருள்வாக்கு மாதிரி ஏதாவது சொல்றாரா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே மாமி! சும்மா எதிர்ல உட்கார்ந்து நம்ம கஷ்டத்தைச் சொன்னால் போறும்".

"வெத்திலை, பாக்கு, பழம்னு ஏதாவது வாங்கிண்டு போகணுமா...?"

நான் கேட்டதும் சாமிநாதனின் முகம் பிரகாசித்தது.

"போறதா முடிவு பண்ணிட்டேளா?"

"போகலாம்னுதான் இருக்கேன்".

"இன்னிக்கே கிளம்பறேளா?"

"நாளைக்கு முதல் பஸ்ல கிளம்பலாம்னு யோசனை".

"கிளம்பிடுங்கோ. மூணே மணி நேரத்துலே போய்ச் சேர்ந்துடலாம். எதிர்ப்பக்க சந்துல ஒட்டல் இருக்கு. நந்தவன லாட்ஜுன்னு பேரு. அங்கே நடராஜ அய்யர்னு இருக்கார். என் பேர் சொல்லுங்கோ. உடனே கூட்டிண்டு போவார். கூட்டமாக இருந்தாலும் உள்ள கொண்டு போய் உட்கார்த்தி வைப்பார்".

"என்ன வாங்கிண்டு போகணும்னு சொல்லலையே...?"

"பழம் வாங்கிண்டு போங்கோ. சக்திக்கு முடிஞ்ச பழம். காலடில வச்சுடாதீங்கோ. இடக் கைப் பக்கம் கதவு இருக்கு. அதும் பக்கத்துல வைங்கோ. பதினைஞ்சு நாளைக்கு ஒருதரம் குடும்பத்தோட போயிடறது. அதுக்கு மேல தாங்காது..."

சொல்லிவிட்டு ஏதோ பஜனைப் பாடல் மாதிரியான வரிகளை முணு முணுத்தவாறே எழுந்து போனான் சாமிநாதன்.

"ஏன்னா... நெஜமாகவா போகப் போறேன்...?"

மனைவி கேட்டாள்.

"போகலாம்னுதான் இருக்கேன். எத்தனை நாளைக்குத்தான் படறது விடிவோ, முடிவோ வேணாமா...?"

"கிடைக்கும்னு நினைக்கிறேளா...?"

"சாமிநாதன்தான் அத்தனை சொல்றானே... பார்த்துடறது".

"நானும் வரட்டுமான்னா?"

"குழந்தைய யாருடி பார்த்துப்பா?"

மேலே கேள்வி இல்லை. அடங்கிப் போய்விட்டாள். பாவம் அவள். இந்தப் பதினைந்து, பதினாறு வருடங்களாக வீட்டை விட்டு அசைந்ததில்லை. வெளியில் எங்கும் போனதில்லை. சினிமா, டிராமா பார்த்ததில்லை. டி.வி. ஒன்றுதான். அதுவும் கூட கறுப்பு வெள்ளைதான். கலர் வாங்க முடியவே இல்லை.

கல்யாணமான முதல் மூன்று வருஷங்கள் – பின்னால் வரப்போகிற கஷ்டங்களை உணர்ந்தோ என்னவோ – சக்கைப் போடு போட்டாகிவிட்டது. வட்டியும் முதலுமாகத் தீர்த்துக் கொண்டாகிவிட்டது. முதல் குழந்தை. தலைச்சன் பிரசவம். எதிர்பார்ப்புடனே அவள் கிளம்பி அம்மா வீட்டிற்குப் போனாள்.

ஐந்தாம் மாதமே அவளுடைய அம்மா வந்து அழைத்துக் கொண்டு போய்விட்டாள். வளைகாப்பு சீமந்தம் எல்லாம்தான் நடந்தது. எந்தக் குறையும் இல்லை. ஆனால் குழந்தைதான் குறை: தீராத குறை. எதைத் தின்றால் பித்தம் தெளியும் என்று சக்திக்கு மீறி எது எதுவோ செய்து, ஆயுர்வேதம், அலோபதி, ஹோமியோபதி, யுனானி என்று இத்தனை வருடங்களும் அலைந்தாகிவிட்டது. சாமிநாதன் சொல்வதையும்தான் பார்த்து விடலாமே...

"ஏன்னா... பழம் வாங்கிண்டு போகச் சொன்னார். லாட்ஜுல போய் யாரையோ கூட்டிண்டு போகச் சொன்னார். டிபன், காபி, வண்டிச் சத்தம் எல்லாத்துக்கும் என்ன செய்யப் போறேள்?"

"கைல எவ்வளவு காசு இருக்கு?"

"மாசக் கடைசில என்ன இருக்கும்...? இருபதோ, முப்பதோ இருந்தால் அதிகம்".

"அதை எடுத்துண்டு வா. பழக் கடைக்காரன்கிட்ட முதல் தேதி தந்துடறேன்னு சொல்லிக் கடன் கேக்கறேன். தரானா பார்க்கறேன்".

தந்தான். கையிலிருந்த இருபதும் பக்கத்து வீட்டிலிருந்து கடனாகப் பெற்ற ஐம்பதும் எடுத்துக் கொண்டு கிளம்பினேன். விடியற்காலை ஐந்தரை மணிக்காற்று சில்லென்று முகத்தைத் தாக்கிற்று. இதமாக இருந்தது.

எட்டரை மணிக்கெல்லாம் போய் இறங்கியாகிவிட்டது. லாட்ஜைத் தேடிப் போய் நடராஜ அய்யரைச் சந்தித்து, சாப்பிடப் பிடிக்காமல் சாப்பிட்டு விட்டுப் போனபோது...



சின்னத்தெரு. வீட்டை ஒட்டி ஓடிய சாக்கடைக் கால்வாய். ஏகப்பட்ட சிறுநீர் நெடி. கண் எதிரிலேயே இரண்டு பெரியவர்கள் சிறுநீர் கழித்துக் கொண்டிருந்தார்கள். குழந்தை ஒன்று மலம் கழித்தது. அதற்கு ஓரடிக்கெல்லாம் படி. கதவு.

"இங்கா இருக்கிறார்?"

அடக்க முடியாமல் கேட்டேன்.

"இதெல்லாம் அவரை என்ன செய்ய முடியும்?" நடராஜ அய்யர் சிரித்தார்.

"ஆனாலும் இதற்கு ஒரு வழி செய்யலாமே?"

"செய்யலாம். எத்தனையோ பெரிய பெரிய அதிகாரிகள்ளாம் வரா. சொல்றோம். வழி பிறக்கல்லையே".

மீண்டும் அவரிடமிருந்து அதே புன்னகை. கூட்டம் விலக்கி என்னைக் கதவருகில் நிற்கச் சொல்லிவிட்டு உள்ளே போனார். சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். எழுந்து வாய் பொத்தி நின்று சொன்னார்.

"இவர் மெட்றாஸ்லேருந்து வந்திருக்கார். நம்ம சாமிநாதன் அனுப்பியிருக்கார்..."

"ஓ... சாமிநாதன்... எப்படி இருக்கார்?" என்னைப் பார்த்துக் கேட்டார். நான் அருகில் போய் நமஸ்கரித்து மறக்காமல் பழங்களைக் கதவருகில் வைத்தேன்.

"அப்படிப் போய் உட்காரு".

அவர் சொன்னதும் திண்ணையின் கீழே உட்கார்ந்தேன். கூட்டம் முண்டியடித்தது. ஒவ்வொருவருவராக வந்தனர். விழுந்து வணங்கினர்.

"சாமி... என் கொழந்தைக்கு ஒரு வாரமா காய்ச்சலங்க. இறங்கவே இல்லீங்க. சாமிதான் இறக்கணும்".

கற்கண்டு தந்து சொன்னார் :

"நல்லாயிடும் போ...".

"சாமி... என் சம்சாரம் கோவிச்சுக்கிட்டு வீட்டை விட்டுப் போயிட்டாங்க. திரும்பி வருவாங்களா?"

"ம்... ம்... போ..."

இந்துமதி

அடுத்து ஒரு கூட்டமே வந்தது. தலைவன் போலிருந்தவன் அழுதவாறு சொன்னான் :

"சாமி... என் தம்பிக்கு பிளட்கான் சர்ங்க. பார்க்காத டாக்டர் இல்லீங்க. எல்லாரும் கைவிட்டுட்டாங்க. சாமிதான் காப்பாத்தணும். காப்பாத்துவீங்களா?"

"ம்... ம்... குணமாயிடும். போ..."

இப்படி குறைகள். புலம்பல்கள்... கெஞ்சல்கள்... கற்கண்டும் பழமும் தந்து கொண்டே அடிக்கடி வாசல் பக்கம் பார்த்துக் கேட்டார் அவர்.

"இன்னும் விஜி வரலயா...?"

"வரலைங்க சாமி..."

'என்ன ஆச்சு...?' என முணுமுணுத்தவர் சிறிது நேரம் ஜனங்களின் வரவை நிறுத்தி கம்பிக் கதவை மூடச் செய்தார். உள்ளே உட்கார்ந்திருந்த யாரிடமோ பேசினார். கால்மணி நேரம் சென்றிருக்கும். மீண்டும் கேட்டார்.

"விஜி வந்தாச்சா?"

"இல்லைங்க சாமி..."

"ரிசல்ட் பார்க்க மட்டும்தானே போயிருக்கான்...?"

"அப்பிடியே ஆஸ்பத்திரிக்குப் போய் அவங்கம்மாவையும் பார்த்திட்டு வரேன்னாங்க..."

"சரி... சரி... வரட்டும்".

கதவு திறக்கச் சொன்னார். மீண்டும் மனிதர்கள், குறைகள். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவரது அசைவு, பார்வை, மணி தள்ளி ஜெபித்தது. கை உயர்த்தி ஆசீர்வதிக்கிற மாதிரி ஏதோ சொன்னது. ஐந்து நிமிடங்களுக்கு ஒருமுறை பீடி பற்ற வைத்தது... பீடி வாசனையே வராத மாதிரித்தான் இருந்தது.

"சாமி... விஜி வரான் சாமி..."

பதினைந்து வயதுச் சிறுவன் ஒருவன் வந்து அவர் எதிரில் நின்றான். அவர் பரபரத்த குரலில் கேட்டார்.

"என்ன ஆச்சு விஜி...?"

"பெயிலாயிட்டேன் சாமி!..."

"எதுல...?"

"கணக்குல...".

"ஒன்னுலதானா...?"

"இங்கிலீஷ்லயும் சாமி..."

சில விநாடிகள் பேசாதிருந்தார். பின்பு மெதுவாகக் கேட்டார்:

"சரி... அம்மாவுக்கு எப்படி இருக்கு?"

"டாக்டருங்க இன்னும் இருபத்து நாலு மணிநேரம் தாண்டறதுகூட சிரமம்னு சொல்லிட்டாங்க சாமி..."

"அப்படியா?"

அவர் யோசிக்க, பளீரென்று ஓங்கி அறைந்த மாதிரி இருந்தது எனக்கு. இந்த விஜி என்கிற விஜயபாஸ்கரன் பற்றி சாமிநாதன் சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. 'அவர் கூடவே இருக்கிற பையன். அவர் காலடியே கதி என்று கிடக்கிறவன்...'

"சாப்பிட்டியா...?"

"இன்னும் இல்ல சாமி".

"சரி. சாப்பிட்டு விட்டுப் போய் அம்மா பக்கத்துல இரு. மீதியெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம்"

"சரி சாமி".

விஜி அகன்றான். சில நிமிடங்கள் மௌனமாய்த் தலை குனிந்திருந்தவர் பின்பு நிமிர்ந்து என்னைப் பார்த்தார்.

"சொல்லுங்க...".

"ஒன்னுமில்ல சாமி. சும்மா. ஆசீர்வாதம் வாங்கிண்டு போக வந்தேன். அவ்வளவுதான்".

விழுந்து நமஸ்கரித்து எழுந்தேன். ஆப்பிள் ஒன்று தந்தார்.

வெளியில் வந்த உடனே பஸ் கிடைப்பது பற்றியும், பக்கத்து வீட்டுக் கடனைத் திருப்பிக் கொடுப்பது பற்றியுமான கவலைகள் சூழ மெல்ல நடக்க அரம்பித்தேன். ⁂

நெஞ்சக் கதவம்

இளங்கம்பன்



கொஞ்சும் கிளியே! குளிர்நிலவே! – ஒரு
கோடிமலர் நலம் கொண்டவளே!
நெஞ்சக் கதவைத் திறந்துவிடு – நீ
நின்றொரு வார்த்தை பேசிவிடு.

காலைப் பொழுதில் உன் வாசலிலே – வரும்
காலின் சிலம்பொலி யூசலிலே
நீலவிழிக் கோலம் காட்டுகிறாய் – என்
நெஞ்சமெனும் யாழை மீட்டுகிறாய்


மாலைப் பொழுதில் குடமெடுத்தே – எழில்
மா மலர்ப் பாதத் தடம்பதித்து
சோலைஎழில் கொஞ்ச நீநடப்பாய் – என்
சீவன் அதற்கு முன்னே நடக்கும்.

ஆயினும் ஒதுங்கிப் போவதென்னே – என்
அருகில் புதுமையாய் ஆவதென்னே?
நேயத்தின் வாதை உனக்கில்லையோ? – உன்
நெஞ்சிற்கும் காதல் சிறகில்லையோ?

நேசம் வளர்த்திடும் உன்நினைவில் – நான்
நித்தம் தளர்வதும் உன்நினைவில்
வாசம் இழந்ததோர் செம்மலராய் – மனம்
வாடித் தவிப்பதும் சம்மதமோ?



ஓவியம் : அமரர் 'சில்பி' - ஸ்ரீவல்லபகணபதி (திருவாணைக்கா) அமுதசுரபி தீபாவளி மலர் '94


வேலூர்
கல்யாண
மண்டபம்

பிள்ளையாரைப் போற்றும் பிள்ளைத்தமிழ்

குழந்தைகள் விளையாடுவதை லீலைகள் என்கிறோம். அவர்களின் லீலைகளைக் கண்டு மகிழ்கிறோம்; பரவச மாகிறோம்.

கண்ணபிரானின் லீலைகளும், சேஷ்டைகளும் உலகப் புகழ்பெற்றவை. அவனது தெய்விக விளையாட்டில் மனத்தைப் பறிகொடுத்தவர்கள் பலர். பெண்கள், புலவர்கள், ஞானிகள், தேவர்கள், பக்தர்கள் இப்படி பலதரப்பட்டவர்கள். கண்ணபிரானது லீலைகளில் மனங் கனிந்து பல கவிஞர்கள் பாடியுள்ளார்கள். அருணகிரி நாதரும் முருகப்பெருமானின் பால லீலைகளில் மனத்தைப் பறிகொடுத்தவர். பல பாடல்கள் பாடி யுள்ளார். இப்படி பல தெய்வங்களின் பால லீலைகளைப் போற்றிப் பலர் பாடியுள்ளார்கள்.

ஆனால் விநாயகப்பெருமானின் குழந்தைப் பருவத்தை எந்தப் புலவரும் பாடவில்லை. அப்பெருமானும் குழந்தைப் பருவத்தில் தவழ்ந்து விளையாடித்தானே இருக்கவேண்டும்? பழங்காலத்துப் புலவர்கள், கவிஞர்கள் பல தெய்வக் குழந்தைகளின் பிள்ளைப்பருவத்தைப் பாடி யிருப்பதை, 'பிள்ளைத்தமிழ்' பிரபந்தங்களில் காண் கிறோம். ஆனால் விநாயகப் பெருமானின் பிள்ளைத்தமிழ் பிரபந்தத்தை அக்காலப் புலவர்கள், கவிஞர்கள் யாரும் பாடவில்லை.

சற்றுப் பிந்தைய காலகட்டத்தில்தான் ஒரு புலவர் 'விநாயகப் பெருமான் மீது பிள்ளைத்தமிழ்' பிரபந்தத்தைப் பாடியுள்ளார். அவர்தான் 'சிவஞான முனிவர்' என்ற புலவர். 'கலசைச் செழுங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்' என்ற சிற்றிலக்கியத்தைப் பாடி அருளினார். அவர் பாடியது 'அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்' என்ற நூலாகும்.

கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் 'பிள்ளைத் தமிழ்' வகைப் பிரபந்தங்கள் சிற்றிலக்கிய நூல்களாகக் கருதப்பட்டு வந்தன.


விநாயகப் பெருமான்மீது பாடிய சிவஞான முனிவரைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

சிவஞான முனிவர் பிறந்த ஊர் விக்கிரமசிங்கபுரம். இவ்வூர் பாண்டி வளநாட்டில் பாவநாசம் என்னும் தலத்தைச் சார்ந்த ஊராகும்.

மகான் அப்பய்ய தீட்சதர் இயற்றிய 'சிவதத்துவ விவேகம்' என்ற மூல நூல் பாடல்களைத் தமிழில் சுவையுற மொழிந்துள்ளார். சிவஞான முனிவருக்கு சம்ஸ்கிருதத்தில் நல்ல ஞானமும் புலமையும் உண்டு.

இவர் 'பிள்ளைத் தமிழ்' தவிர, அந்தாதி, பதிகங்கள் போன்ற பல சிறு இலக்கியங்களை எழுதியுள்ளார்.

ஆதிசங்கரர் போல இப்பூவுலகில் முப்பத்திரண்டு ஆண்டுகளே வாழ்ந்தவர். இவர் எழுதிய பிள்ளைத்தமிழ் அரங்கேறிய ஆண்டு கி.பி. 1712 ஆகும். இந்நூல், தாம் சிவபதம் எய்துவதற்குப் பதினான்கு ஆண்டுகளுக்கு முன் அரங்கேறியதாகும்.





சிவஞான முனிவர் முதன் முதலில் விநாயகப் பெருமானின் பிள்ளைத் தமிழை எழுதி எப்படிப் புகழ்பெற்றாரோ, இவரைப் போன்று ஒட்டக்கூத்தரும் இரண்டாம் குலோத்துங்கன் மீது (கி.பி. 1133-1150) பிள்ளைத்தமிழ் பாடிப் புகழ்பெற்றவர். 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' தமிழ் இலக்கியங்களில் முக்கிய இடம்பெற்றதாகும். பொதுவாகப் புலவர்கள், கவிஞர்கள் எல்லாரும் தெய்வங்களின் மீதுதான் 'பிள்ளைத்தமிழ்' இலக்கியத்தைப் படைப்பார்கள். அரசர்கள் மீது பாடுவதும் உண்டு. ஆனால் ஒட்டக்கூத்தரோ ஓர் அரசன் மீது பிள்ளைத் தமிழையே பாடிப் புகழ்பெற்றவர். தெய்வங்கள் மீது பாடாமல், மனித உருவில் உள்ள ஓர் அரசனைப் பற்றிப் பாடியது வியப்புக்குரியதாகும்.

'பிள்ளைத்தமிழ்' இலக்கிய நூல்கள் சொல்லழகும், பொருளழகும் கொண்டவையாகும்.

சிவஞான முனிவர் பாடியருளிய 'கலசைச் செழுங் கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ்' என்ற நூலிலே பிள்ளையாரின் பால பருவத்தைப் பற்றி அழகு சொட்டும் தமிழில் எழுதியுள்ளார்.

'கலசை' என்ற ஊர் ஒரு சிவத்தலம். சென்னையை அடுத்துள்ள ஆவடிக்கும், திருவள்ளூருக்கும் இடையிலுள்ள தலம். இத்தலத்திற்குப் பல பெயர்கள் உண்டு. கலசைக்கு 'தொட்டிக் கலை' என்ற பெயரும் உண்டு. காலப் போக்கில் தொட்டிக்கலை 'கலசை' என்று சுருங்கிற்று.

கலசை என்ற பெயருடன் கலசாபுரி, கோவிருந்தபுரம் என்னும் பல பெயர்களும் இருந்தன.

இவ்வூரில் பசுக்கொட்டில்கள், நீர்த்தொட்டிகள் ஒரு காலத்தில் மிகுதியாக இருந்தன என்பதால் 'தொட்டிக் கலை' என்ற பெயரைப் பெற்றது. பிறகு கலசையாக மாறியது. இந்த விவரங்கள் எல்லாம் இவ்வூர் மக்களிடையே வழங்கி வருபவையாகும்.

இவ்வூர்க் கோயிலின் மூலவர் சிவபெருமான். ஆனாலும் இங்கு கோயில் கொண்டுள்ள விநாயகர் 'கலசைச் செழுங்கழுநீர் விநாயகர்' என்ற பெயரைப் பெற்றுள்ளார். ஆலயத்தில் சுற்றியுள்ள நீர் நிலைகளில் ஒரு காலத்தில் செழுங்கழுநீர்ப் பூக்கள் நிரம்பப் பூத்திருந்தன. அப்பூக் களால் விநாயகப்பெருமானுக்குப் பூசனை நடத்துவார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது.

விநாயகப் பெருமான் மீது முதன் முதலாக பிள்ளைத்தமிழ் பாடிப் புகழ்பெற்ற சிவஞான முனிவர்க்கு

கலசை விநாயகப் பெருமான்மீது அளவற்ற பக்தியும், பற்றும் ஏற்பட்டன.

தன்னைத் தாயாகக் கருதிக் கொண்டு, தாயன்பில் திளைக்கும் வகையில் விநாயகரை, செல்லப்பிள்ளையாகப் பாவித்துப் பாடினார். பிறகு 'அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்' என்ற பிரபந்தத்தை இயற்றினார். இவருடைய பாடல்கள் எல்லாம் பொருளும், அருளும் நிறைந்தவையாம்.

கவிஞர்கள் பிள்ளைத்தமிழைப் பல பருவங்களாகப் பிரித்துப் பாடுவார்கள். சிறுபறைப் பருவம், அம்புலிப் பருவம், தாலப் பருவம், சிறுதேர்ப் பருவம், முத்தப் பருவம், சப்பாணிப் பருவம், வருகைப் பருவம் போன்ற பல பருவங்களாக குழந்தைத் தெய்வங்கள் மீது பாடுவார்கள்.

சிவஞான முனிவரும் கலசை விநாயகர்மீது மேற் சொன்ன பருவங்களில் பாடி யருளியுள்ளார்.

வேலூர் கல்யாண மண்டபத்தில் காணும் இரு சிற்பங்கள் விநாயகப்பெருமானின் பால பருவத்தை விளக்கும் வகையில் உள்ளன.

ஆங்கிலேயர் தம் நாட்டுக்குக் கல்யாண மண்டபத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து எடுத்துச் செல்வதாக இருந்தது. காரணம் மண்டபத்தின் அழகுதான். ஆனால் அவர்களால் எடுத்துச் செல்ல முடியவில்லை.

இங்குள்ள ஒரு தூணின் மேற்புறத்தில்தான் இரு பால கணபதிகளின் சிற்பங்களைக் காண்கிறோம். அதிக வேலைப்பாடுகள் இல்லாவிடினும், சிற்பங்களில் குழந்தைத்தனத்தை அப்படியே காண முடிகிறது. சிற்பியின் கைவண்ணம், குழந்தை விநாயகர்சிற்பங்களில் நன்கு வெளிப்படுகிறது.



குழந்தை விநாயக சிற்பங்களில் ஒன்று தவழ்ந்து செல்லும் நிலையில் உள்ளது. தவழ்ந்து செல்லும் நிலை, குழந்தையின் குறும்புத்தனத்தை நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளது. தன் தும்பிக்கையில் கொழுக்கட்டை (அல்லது பழம்) ஒன்றை வைத்துக்கொண்டு தவழ்ந்து வரும்போது, பின்னே ஏதோ ஒரு சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்ப்பதுபோல சிற்பம் அமைந்துள்ளது. அந்தத் திருப்பம் மிகவும் இயல்பாகவும், அழகாகவும் உள்ளது.

மற்றொரு நிலையில் குழந்தை விநாயகர் தன் தும்பிக்கையில் இருந்த கொழுக்கட்டையை யாராவது பிடுங்கிச் சென்று விடுவார்களோ என்று எண்ணி அதைத் தன் கையில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு திரும்பிப் பார்க்கிறார்.

இவ்விரு சிற்பங்களும் ஜீவ சிற்பங்களே. குழந்தை நிலையில் உள்ள விநாயக சிற்பங்கள் அநேகமாக எந்தக் கோயிலிலும் இல்லை எனலாம்.

கண்ணபிரானைப் போல் இவருக்கு இருகரங்கள் தான். பிள்ளையார்பட்டியில் உள்ள விநாயகருக்கும் இரு கரங்கள் தான். இங்கு கண்ணன் தவழ்ந்து வரும் நிலையைப் போன்றே இவ்விரு சிற்பங்களும் உள்ளன.

'விநாயகர் பிள்ளைத்தமிழ்' பாடிய சிவஞான முனிவர், தன் பாடல்களில் குழந்தைப் பருவத்து விநாயகரை, பல பருவங்களில் பாடியுள்ளார் என்பதை முன்பே அறிந்தோம்.

வேலூர் கல்யாண மண்டபத்தில் உள்ள இரு பால கணபதிகளின் சிற்பங்களைப் பார்க்கும்போது, சிவஞான முனிவர் எழுதிய விநாயகர் பிள்ளைத் தமிழில் உள்ள 'வருகைப் பருவ'த்தில் விவரித்த பாடல்கள் நினைவுக்கு வருகின்றன.

அவற்றுள் ஒரு பாடல் சிற்பங்களுக்கேற்ப அமைந்திருப்பது மகிழ்ச்சி தருவதாகும்.

இருகை ஊன்றித் தவழ்ந்து மழ
  ஏற்றின் வருதோ றாங்கே
ஏறுழவன் புழைக்கை நெட்டுயிர்ப்பான்
  இருமா நிலத்தைக் குழிப்பதுவும்

பெருகுங் கடைக்காற் செயுஞ் செவியான்
  பிளப்ப தேய்ப்பப் பல்காலும்
பெயர்த்து மடங்கியசைந்தாடும்
  பீடுத் தந்தம் பொறி தமக்கு

மருவும் புலனை அவற்றிடமா
  மண்ணை அகழ்ந்தும் வெளிப்பரப்பை
வளைத்துங் கவ்விக கொடுத்துதவும்
  வண்மை காட்ட அசைந்தசைந்து

முருகு விரியுந் தொடைப் புயத்து
  முதல்வா வருக வருகவே!
முரிக் கலசைச் செழுங்கழுநீர்
  முனியே வருக வருகவே!

இதுபோன்ற பல பாடல்களை 'வருகைப் பருவத்தில்' விநாயகர் மீது பாடியருளினார் சிவஞான முனிவர்.

இரு பால கணபதி சிற்பங்களைக் காண நாமும் ஒரு முறை வேலூர்க் கோட்டையிலுள்ள கல்யாண மண்டபத்திற்குச் சென்று பார்ப்போமே! கண்ணனைப் போல் தவழ்ந்து செல்லும் கணபதியின் அழகையும் கண்டு மகிழலாமே!

சிவதனுசு

டாக்டர் கோவி. மணிசேகரன்

கவிச்சக்கரவர்த்தி கம்பரின் இராமாயண காவிய நாயகன் இராமபிரான், பலம் பொருந்திய சிவதனுசை வளைத்து, அந்த வெற்றித் திருக்கரத்தால் சீதாதேவியின் மணிக்கழுத்தில் மங்கல நாண் பூட்டியது உலகறிந்த செய்தி. அத்தகு முக்கியத்துவம் வாய்ந்த சிவதனுசு பற்றி முற்றிலும் புதிய கோணத்தில் ஆய்வுப் பார்வை செலுத்தும் அழகிய கற்பனை.

சொக்கத் தங்கத் தாம்பாளத்தில் நடுவே சோதியாய் மின்னும் நவரத்தினம் பதித்திருப்பது போல விளங்கியது, விதேக நாட்டின் நடுவே விளங்கி மின்னிய மிதிலை மாநகரம்.

திருமகனாய்ப் பிறந்து அயோத்திக்கு மருமகளாகப் போகும் சீதா பிராட்டியார் உறைந்து வருகிறாளாம். அதனால்தானோ என்னமோ அந்நகரம் எப்போதும் எழிலார்ந்த கோலாகலமாக விளங்கியது போலும்!

மாடமாளிகைகள் மீது அசைந்து கொண்டிருந்த கொடிகள் யாவும், வானரங்கில் தேவமாதர்கள் நடனமாடுவது போலக் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது.

மிதிலை மன்னர் ஜனகர், மகள் ஜானகியைக் குறித்து கவலை மேற்கொண்டவராக எப்போதும் காணப்பட்டார். தினமும் அது குறித்தே ஆலோசித்தாரேயன்றி அரச அலுவல்களில் அவரது கவனம் சென்றதாகக் காணோம்.

அன்பு மனையாளும் பட்டத்தரசியுமான தாரணிதேவியிடம், "நம் மகள் சீதைக்கேற்ற கணவன் யார்? எங்கிருக்கிறான்? பிறந்திருக்கிறானா? அல்லது பிறந்தானில்லையா? ஏர் முனையில் உதித்த எழிலரசி அவள். ☆கருப்பையில் குடியிராத கனக வல்லியவள். இவளுக் கேற்ற மணாளனை எங்குத்தேடுவேன்?" என்று எப்போதும் அரற்றிக் கொண்டே இருப்பார்.

தாரணிதேவிக்குக் கூட நாள்கள் கரையக் கரைய நாடிகள் தளர்ந்து போயின. உரிய மணாளனை எவ்விதம் தேர்வு செய்வோம்? மண்ணை உழுகிறபோது மழலையாய்க் கிடைத்தவள். அப்போது ஒரு புதையலுமா கூடவே கிடைக்க வேண்டும்? இது ஒரு தேவ சோதனையே போல அப்போது தெரிந்தது. அந்தப் புதையல்...

வலிமை வாய்ந்த வில்லும் அம்பும்.

அவற்றை எடுக்கப் பட்ட பாடு...

ஓ... சொல்லி முடியாது. எத்தனை நூறு பெயர்கள் சேர்ந்து முயன்று அவற்றை எடுத்து, இரும்பாலான வண்டியில் போட்டு இழுத்து வர நேரிட்டது? அப்போது...

ஆ! வானில் எங்கிருந்துதான் கருமேகங்கள் குவிந்தன! எப்படியெல்லாம் மின்னி இடித்தன! மிதிலையையே அடித்துச் செல்கிற மாதிரி மழை... இவற்றுக்கிடையே கேட்ட அசரீரி... அதியமே போன்று மின்னிக் கேட்ட அசரீரி...

"ஏ, ஜனகமகாராஜனே! இது சாதாரண வில், அம்பன்று, பன்னெடுங் காலத்துக்கு முன், சிவபெருமான் இங்குத் தவத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது அவருடைய இந்த வில்லையும் அம்பையும் பக்கத்தில் துணைபொருட்டு வைத்திருந்தார். தம்மை மறந்து தவத்தில் அவர் மூழ்கியிருந்ததால் வில்லும் அம்பும் மண்ணொடு புதைந்து போயின. இது சிவதனுசு. இதனைத் தொடுகிற வலிமை உமாதேவியான சக்தியொருத்திக்கே உண்டு. ஆயினும் மானுடருள் நல்லானும் வல்லானுமான எவனாவது இருப்பின் அவனால் இதனைத்தூக்க முடியும். அவன் சாதாரணப் பிறவியாக இருக்கமுடியாது. தேவப்பிறவியாக இருக்க முடியும்".

புரியவில்லை. குழந்தையும் சிவதனுசும் ஒரே நேரத்தில் ஒரே நிலத்தில் கிடைப்பானேன்? ஈசுவர விளையாட்டு.


பாதுகாப்போம்....

இதைத்தவிர ஜனகமன்னரால் வேறு எதைச் சிந்திக்க முடியும்?

இதோ சீதா பருவமடைந்த உருவப் பேரழகி! பாகன்ன சொல்லாள்; பளிங்கன்ன ஒளியாள்; வேலன்ன விழியாள்.

எப்போது நினைக்கிறாளோ அப்போதெல்லாம் மைவிழிக்கண் முடி, மலை மகளை நோக்கித் தவமிருப்பாள்.

தென்றல் நடை நடக்கிறபோது திருமாலின் வருமாளாய் திவ்விய சௌந்தரியம் காட்டிப் பவித்திரமாய்ச் சிரித்துப் பழகுகிறவர்களிடம் நல்லவளாய்ப் பதிவாள். இப்பேர்ப்பட்ட இளந் தேவதையை எப்பேர்ப்



பட்டவனிடம் ஒப்படைக்கப் போகிறோம் என்கிற கவலையிராதா?

இக்கவலை மன்னர் ஜனகரையும் மன்னி தாரணிதேவியையும் குன்னிக் குலைத்தது.

அன்று நிறைமதிநாள். பூரணச் சந்திரிகை கீழ்த்திசையில் சீதைபோல் சிவந்த மேனியாய்ப் புறப்பட்டு பின்னர் அவளது பாலன்ன மனம் போல் பால் நிலவாய்- வெள்ளை முழுமதியாய் தோற்றம் கண்டாள்.

அன்று முழுவதுமே அன்ன ஆகாரமற்ற விரதம். அவள் உமாதேவியின் உபாசகி. ஆயினும் திருமகள் அவதாரம்.

அலைமகளான அவள் மலைமகள் மீது தவம் பூண்டு, நாவில் கலைமகளை அமரச் செய்து மந்திரம் ஜபிப்பாள். அருகே சென்றால் ஏதோ அக்கினி ஜுவாலை

☆ அயோனிஜா.

போன்ற உணர்வு. எவர் உபதேசித்த ஏற்ற மிகு தோற்றமிது?

குழந்தைப் பருவமுதல் அவளிடம் குன்றாத அன்பு செலுத்திய செவிலித் தாய் பெயர் சக்தி. அவள் சொல்லுவாள்:

“கலைமகளை வணங்கினால் கல்வி தருவாள்; அலைமகளை வணங்கினால் செல்வம் தருவாள்; மலைமகளை வணங்கினால் மலை போன்ற சக்தி தருவாள். சக்தியைப் பெற்றால் எல்லாமே பெற்று விடலாமே! செல்வமும் கல்வியும் சக்தியில் சேரிடம்தானே?’

பக்தியால் பலகாலும் தவமிருந்து சக்தியாய் மாறிக் கொண்டு வரலானாள் ஜனகன் மகள் ஜானகி. நிதரிசனமாய், நிர்மலமாய் நின்ற அவளது கோலம் பலரைப் பயமுறுத்துவதாகவே இருந்தது. மன்னர் ஜனகரும் மன்னி தாரணியும் மருண்டதில் என்ன வியப்பு இருக்க முடியும்? மணாளனாக வரப்போகிறவன் யார்? மாயையிலிருந்த அவர்களுக்கு அவதார நோக்கின் நியாயம் புரியக் காரணமில்லை.

ஒரு நாள்.

பெற்றோரின் கவலைக்குக் காரணம் புரியாத சீதை, கொஞ்சம் கண்டிப்புடனேயே காரணம் கேட்டாள்.

“உன் கவலைதான் மகளே!” ஜனகர் முனகினார்.

“என் கவலையா?”

கலகலவென முத்துகள் நிறைந்த தங்கக் கிலுகிலுப்பையை ஆட்டி விட்டது போல் சிரித்தாள் சீதை. ஆயினும் அதில் ஒரு கனிரோசை அது செங்கண்மால் சங்கோசை என்பதை மாயைச் செவிகள் அறியுமோ?

‘தெரியின் அம்மா’ என்பது போலத் திகைத்தனர் பெற்றோர்.

“ஏன் சீதே இப்படிச் சிரிக்கிறாய்?” அன்னை தாரணி ‘அறியின் அம்மா’ என்பதொப்ப வினவினாள்.

“என்னைப் பற்றிக் கவலைப்பட என்ன இருக்கிறது தாயே?”

“உன் திருமணம்”

“மிதிலாபுரி மன்னருக்குத் திருமணம் செய்வது ஒரு பொருட்டா?”

“பொருட்டல்ல மகளே! பொருமுவது பொருத்தமான கணவனுக்கு?”

சீதை நாணித் தலைகுனிந்தாள்.

“சீதா! கணவன் என்றதும் நாணித் தலைகுனிந்தாய்! உனக்கேற்ற கணவனை ஏணிவைத்து எங்கே தேடப்போகிறோம்!”

“ஏணிவைத்துத் தேட வேண்டும் என்று உங்கள் வாயிலேயே வந்து வந்து விட்டது. ஏணிவைத்துத்தான் தேடவேண்டும். அவர் மண்ணின் மனிதரல்ல; விஷ்ணு!”

“விஷ்ணு!”

“ம்ம்! அவர்தான் என்னை மணம் புரியவேண்டும் என்று சக்தியைச் சரணடைந்திருக்கிறேன்.”

பெற்றோர் பிதுங்கலுற விழித்தனர். இவர்கள் விழிப்பு சீதைக்குப் புரிகிறது.

“தந்தாய்! விஷ்ணுவென்றால் விஷ்ணுவைப் போன்ற விநோதன் என்னை மணக்கப் போகிறவர்!”

“எங்கே? எப்படித் தேடுவோம்?”

“அதற்கு நீங்கள்தாம் வழி கண்டு பிடிக்க வேண்டும்!”

“வழி புரியவில்லையே?”

“என் அன்னை சக்தியை வேண்டுங்கள்; நாளையே வழி சொல்லுவாள்!”

“ஏ, சக்தி! என்று அப்போதே பெற்றவர் அலறலுடன் பிரார்த்தித்தனர்.

மறுநாள் காலை மங்கலமாகப் புலருகிறது.

ஏனோ அன்று விடியுமுன் எழுந்து கொண்டாள் விசாகப் பிரகாசினி ஜானகி. என்ன செய்வதென்று புரியவில்லை. சரி; குளித்து முடித்து தவத்தூக்கத்தில் ஆழ்ந்தால் என்ன? குளித்து முடித்து, பூசையறையுள் நுழைகிறாள்.

ஓ... பூசையறையைக் கூட்டிச் சுத்தம் செய்யவில்லையே! நாம் தான் வெள்ளி முளைக்குமுன் எழுந்து கொண்டோம். பணிப் பெண்ணுமா எழுந்து கொள்வாள்?

மயிற்பீலியால் செய்யப்பெற்ற விளக்குமாறை எடுத்து, தானே கூட்டிச்சுத்தம் செய்ய முனைந்தாள். ஏதோ சத்தம் கேட்டு மன்னர் ஜனகரும் எழுந்து கொண்டார். இவ்வளவு காலையில் யார் என்ன செய்கிறார்கள் என்று கவனிக்க வந்தவர், சீதை பூசையறையைச் சுத்தம் செய்வதைக் கவனித்தார்.

அரண்மனையே பேரமைதியில் இருக்க, விளக்குமாறு ஓசை மாடத்துக்கு மாடம் ஏணிவைத்து எட்டியது.

பூசையறையைச் சுத்தம் செய்து கொண்டுவந்த ஜானகி. அந்த அறையிலிருந்த சிவதனுசுவைக் கவனித்தாள். அங்கு அதிகமாய்த் தூசு படிந்திருந்தது. அதைத்தூக்க சக்தியால் தான் முடியும். பணிப்பெண் என்ன செய்வாள்?

நாம் தூக்கிப் பார்க்கலாமா?

சக்தி என்னிடம் இருக்கிற போது இந்தச் சக்தி ஏனிருக்கக் கூடாது?

வில்லைத் தூக்கினாள். அது மிக்கவும் இலேசாக இருக்கக்கண்டு வியந்து போனாள். ஏ, சக்தி! நான் வரம் பெற்றேன்; பலம் பெற்றேன்.

அவ்விடத்தைத் தூய்மையாக்கி, மீண்டும் வில்லைத் தூக்கிப் பழைய இடத்திலே வைத்துப் பணிந்தாள்; தவத்தில் முனைந்தாள்.

இவ்வளவையும் தொலைவில் இருந்து கவனித்த ஜனகமன்னர் ஆச்சரியத்தால் அதிர்ந்து போனார். நூற்றுக்கணக்கானவர்கள் தூக்க முயன்ற இந்தச் சிவவில்லை மகள் ஜானகி அநாயாசமாகத் தூக்கி வைத்து விட்டாளே! ஓ... இவள் சாதாரணப் பெண்ணல்லள்; அவதார நாயகி. இவள் சொன்னது போல் இவளை மணக்க விஷ்ணுவின் அவதாரமாகத்தான் ஒருவன் வர வேண்டும். வருவான்... வருவான்...

நேரே மனைவி தாரணியை எழுப்பி நடந்ததை நடுக்கமுடன் சொன்னார்.

“ஏ, தாரணி! கண்டு கொண்டேன். என்மகள் யார் என்று புரிந்து கொண்டேன். எந்த மகா சக்தி வாய்ந்த சிவதனுசுவை இவள் அநாயாசமாகத் தூக்கினாளோ, அப்படி எவன் ஒருவன் இந்தச் சிவதனுசுவை அநாயாசமாகத் தூக்கி முரிக்கிறானோ, அவனே ஜானகி யின் கணவன்; ஜனகனின் மருமகன்”

உள்ளம் நெகிழ, உடல் முழுவதும் சிலிர்ப்பு கொள்ள, கண்கள் கலங்க, கரங்கள் கூப்ப, “சக்தி! இந்தப்பிரகடனத்தை காலையில் உன் சந்நதி வந்து உனது கால்களில் வைப்போம். பின்னர் உலகுக்கு அறிவிப்போம்!” என்றாள், ஜனகரின் தவப்பத்தினி தாரணி.

சக்தி உமா மகேஸ்வரி ஆலயத்தின் மணிகளெல்லாம் இனிய ஒலிகளை எழுப்புகின்றன. அந்த ஒலிகளுடன் கலந்து சீதையை எப்படிப்பட்டவன் மணக்க வேண்டும் என்கிற பிரகடனமும் நானா திசைகளிலும் பரவுகிறது. அது இராம இலக்குவனுடன் மிதிலை நோக்கி வந்து கொண்டிருந்த விசுவாமித்திர முனிபுங்கவர் செவிகளிலும் அமுதமாய் நுழைகிறது.

→

பின்னுரை

விரஜமொழி நாட்டுப் பாடல் ஒன்றில் கிடைத்த செய்தி: சீதை, வீட்டைப் பெருக்கவேண்டியிருக்கையில், அங்கிருந்த சிவதனுசுவை அநாயாசமாக இடக்கரத்தால் தூக்குவதை ஜனகர் கண்டு வியந்தார். இவள் சக்தியின் அவதாரமென எண்ணி, இந்த வில்லையுடைப் பவருக்கே சீதை எனப் பிரகடனம் செய்தாராம். வேறு எந்த இராமாயணங்களிலும் இப்படி ஓர் அற்புதக் கற்பனையைப் பார்வையிட முடியவில்லை. எனவே இந்த நல்ல கற்பனை வரிகளை, எனது பார்வையில் எழுத்தோவியமாகச் சித்திரித்து இருக்கிறேன். ஆனால் சிவதனுசு எவ்விதம் கிடைத்தது என்பது எனது புதிய கற்பனையாகும். இதை எந்த இராமாயணமும் சரியாகச் சொல்லவில்லை.

அமுதம் சுரக்கும் 'அமுத சுரபி' மூலம் ஒரு மங்கலச் செய்தியைக் கூற ஆசைப்படுகிறேன். மூன்றாண்டு காலமாகப் பல்வேறு இராமாயணங்களை ஆய்ந்து, தெளிந்து, காலத்துக்கேற்ப எனது பார்வையில் புதிய இராமாயணம் பாடி வருகிறேன். பாலகாண்டம் பவித்திரமாய் நடந்து கொண்டிருக்கிறது.

இடையில் ஒரு குழப்பம். இரண்டு வினாக்களை உங்கள் முன்வைக்கிறேன். அறிவார்ந்த பெரியவர்கள் எனக்கு விடை எழுதினால் கழல் பணிந்து ஏற்பேன்.

1. வான்மீக இராமாயணம் கி.மு.மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டு என்கிறார்கள். நாகர் வமிசத்து பிம்பிசாரனும் கௌதம புத்தரும் வாழ்ந்த காலத்தில் இராமாயணமா? நம்ப முடியவில்லை. எனது கணிப்புப்படி அது முதற் சங்க காலத்துக்கு முந்தியகதை போகட்டும். அயோத்தியின் நாகரிகத்தை வான்மீகி ஓகோ என்று கூறுகிறார். இலங்கையில் அரக்கர்களே வாழினும் நாகரிகம் அயோத்தியைப் போலவே காணப்படுகிறது. இவ்விதமாக இருக்க இடைப்பட்ட நிலங்களில் வெறும் அரக்கர்களும் குரங்குகளும் தானா ஆட்சி செய்தனர்? இந்தக் குரங்குப்படைகளா இராவணனை எதிர்த்தன? அவதாரப் புருஷனான இராமபிரான் வில்லால் கலக்கினார் என்பதை வணங்கி ஏற்கலாம். ஆனால் குரங்கு நாகரிகம் புரியவில்லை. வால் முளைத்த குரங்குகள் பேசின என்பது புரியவில்லை. இராமபிரான் மொழி அவற்றுக்கு எவ்விதம் புரிந்தது? கங்கைக் கரையில் ஒரு



மோ. பாலசுப்பிரமணியம்

வேலவனே வந்திடுவாய், வேண்டும் வரம் தந்திடுவாய்!



அடியார்தம் இதயமதில் குடிகொண்ட குமரா! உன்
வடிவழகைப் பருகிடவே விழைகின்றேன் விரைந்துவா, நீ!

கனியிழந்த காரணத்தால் முனிவுடனே மலையேறிக்
கருணையெலாம் ஒருங்கொளிரும் அருட்கோலம் கொண்டவனே!

தேவர்குலம் களிப்புறவே அவுணர்களின் திறனழித்து
தெய்வானை கரம்பற்றிப் பரங்குன்றில் உறைவோனே!

பார்காக்கும் பரமனுக்கே பிரணவத்தின் பொருளுரைத்துப்
பேர்பெற்ற பெருமானே பிறவிப்பயன் பெற்றிடவே

செந்தூரில் போர்தொடுத்துச் சூரனையும் வென்றொழித்துச்
செந்தழலின் நிறமணிந்த வேலுடனே நின்றவனே!

பொதியமலை முனிவனுக்குச் செந்தமிழின் திறமுரைத்து
மதியணிந்த சிவனாரின் மரபுநெறி காத்தவனே!

சீரலைவாய்க் கடற்கரையில் போர்முடித்துச் சினந்தணிந்து
சூர்தடிந்த மகிழ்வுடனே சேவல்மயில் கொண்டவனே!

காதல்மகள் வள்ளியினைக் காந்தர்வ மணங்கொண்டு
கவின்பொழில்சூழ் திருத்தணிகை மலைமேவும் முருகோனே!

பழமுதிரும் சோலையிலே நலம்விளைக்கும் நாயகனாய்
அழகொழுகக் கொலுவிருக்கும் அருமறையின் திருவுருவே!

குன்றமெலாம் ஆடிவரும் குமரனெனப் புகழ்கொண்ட
கோலமயில் வாகனனே குவலயத்தைக் காப்பவனே!

குகனை நாகரிகமிக்கவனாகக் காட்டிய முனிவர், தெற்குக் குமரிவரை ஆண்டவர்கள் குரங்குகளா? கோதாவரியின் நாகரிகமும் காவிரியின் நாகரிகமும் எங்குப் போயின? என்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் இருந்திருப்பாரா?

2. இலங்கை என்பது இன்றிருக்கும் இலங்கையா? மகேந்திர மலை எங்குள்ளது?

அடியேன், வான்மீகி, கம்பனைப் பின்பற்றியே பாடிவருகிறேன். சிறிய திருவடியான அனுமன் பெருமானைப் பக்தியுடன் பாடப்போகிறேன். கம்பநாடன் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு இவ்விதம் ஆய்வு செய்யாது எவ்விதம் ஏற்றுப் பாடினார் என்பது புரியவில்லை. நான் கம்பனின் கால் தூசுக்கும் பொறாதவன். எனினும் ஐயம் யாருக்கும் எழலாம் அல்லவா?

இது ஹரப்பா மொகஞ்சதாரோ காலமாக இருந்தாலும் கிஷ்கிந்தை விளக்கம் பெறவில்லை.

எனக்கு எவரேனும் எடுத்துச் சொன்னால் கழல் பணிவேன். பேராசிரியர்கள் பலரிடம் இக்கேள்விகளைக் கேட்டுப் பதில் பெற முடியாது தவித்துக் கொண்டிருக்கிறேன். அருள் கூர்ந்து ஆய்வு நிறைந்த விடை கூறுங்கள்.

எனது பாயிரப்பாடல்களில் ஒன்று:

உலகம் நகைக்க உயர்ந்தோர் என்ன
திலகம் அன்ன திவ்விய இராமனின்
புலமை அற்ற புன்கவி இவனோ
நலங்கொள் கதையினை நவில்தலும்
நலமோ?

ஃ

அவளுக்கென்று...

லட்சுமி ராஜரத்னம்

கணவனை அனுப்பிவிட்டு உள்ளே வந்ததும், மஞ்சுவிற்கு ஏனோ ரொம்பக் களைப்பாக இருந்தது. உடம்பின் அயர்வு மனத்தையும் பாதித்தது. காலை ஐந்து மணிக்கு எழுந்தால் ஒன்பதரை வரை நிமிர முடியாத வேலை. காலை எட்டு மணிக்கு நாத்தனார் நிரஞ்சனாவிற்கு தட்டு வைத்து விட வேண்டும். அடுத்த பதினைந்து நிமிடம் கழித்து கொழுந்தன் ராம் வந்து விடுவான். இதற்குள் அவள் தன் குழந்தைகள் ரவி, தீபாவிற்கு குளிப்பாட்டி தலை சீவி, யூனிஃபார்ம் போட்டு, சாக்ஸ் அணிவித்து...

"அம்மா, இந்தப் பென்சிலைச் சீவிக் கொடும்மா" என்று ரவி பென்சிலை நீட்டுவான்.

"அம்மா, என் ஸயன்ஸ் நோட்புக் எங்கே?" என்று தீபா கூப்பாடு போட....

இரவு படித்துக் கொண்டே இருக்கும் பொழுது குழந்தை தூங்கிவிட புத்தகத்தை எங்கே எடுத்து வைத்தோம் என்று யோசிக்க வேண்டும். ஓ... நிமிர்ந்த வேகத்தில் சாமான்கள் வைத்த ஷெல்பில் வைத்தது ஞாபகம் வரும். ஓடிப் போய் எடுத்துத் தருவாள்.

"அண்ணி! என் ஷிபானுக்கு ஃபால்ஸ் தச்சுத் தரீங்களா?"

"ஆமாம்.... அண்ணி இங்கே ஊஞ்சலாட்றாங்க பார்." என்று சொல்ல வராது.

"எடுத்து சோபாவுல போடு. நேரம் இருந்தா தச்சுடறேன்"

இதன் நடுவில் கணவர் விஸ்வத்திற்கு இரண்டாவது டோஸ் காப்பி.

"அண்ணி! என் லைட் ப்ளு கலர் பேண்ட்டை அயர்ன் பண்ணக் கொடுத்துடுங்க அண்ணி" என்று ராம் சொல்லிவிட்டுப் போவான்.

தட்டில் டிபனைப் போட்டால் சாப்பிடமாட்டான் ரவி. 'உப்பு மாவா.... உவ்வே...' என்று பழிப்பு.

கோபம் பொங்கும். "உன் பெண்டாட்டிய வந்து பூரியோ, இட்லியோ செய்யச் சொல்லு."

அம்மாவின் கோபம் குழந்தைகளுக்குப் புரியாது..

பெண்டாட்டி என்றதுமே குழந்தையின் பால்முகம் நாணப்பட்டுச் சிவக்கும்.

"ஐயையே.... ரவிக்கு அதுக்குள்ள கல்யாணமா?" தீபா தான் கையைத் தட்டிச் சிரிப்பாள்.

"போடி..." என்று ஓங்கும் ரவியின் கைக்கு அகப்படாமல் அம்மாவின் முன்றானைக்குள் ஒளியும் தீபா, "அம்மா! ரவியின் பெண்டாட்டி எங்கேம்மா இருக்கா" என்று கேட்டு வைப்பாள்.

இறுக்கமான சூழ்நிலையில் விழும் இனிய சங்கீதம் இந்த நிகழ்ச்சி. ஆனால் அதை ரசிக்க மனமோ, பொழுதோ இல்லாத வேலை நிர்ப்பந்தம். அடித்துச் செல்லும் வெள்ளத்தில் இழுத்துக்கொண்டு ஓடும் அவசரம். காலை டிபன் செய்யும் பொழுதே மாலை என்ன டிபன் என்று யோசித்து ஓய்ந்து போவாள்.

விஸ்வம் எல்லாவற்றிற்கும் அவளைத் தான் யோசனை கேட்பான். காய்கறி நறுக்கும் பொழுது அவள் முன்பு தினசரியுடன் அமர்ந்து கொள்வான். ஷேர் மார்க்கெட் நிலவரத்திலிருந்து கம்பெனி நிலவரம் தன் வரை அலசுவான். நிரஞ்சனாவின் ஜாதகத்தை மகாலிங்கபுரத்திலும், சங்கர மடத்திலும் எழுதி வைத்துவிட்டு வர நாள் குறித்துக் கொடுப்பான்.

புளியும், மிளகாயும் எங்கே விலை குறைந்து கிடைக்கிறது என்றறிந்து அவள்தான் வாங்கி வர வேண்டும்.

இன்று நிரஞ்சனாவின் ஜாதகத்துடன் இரு ஜாதகங்கள் பொருந்தி இருப்பதைப் பற்றி விரிவான ஆலோசனையில் சற்று நேரம் இழுத்து விட்டது. சமையல் தாமதம். டைனிங் டேபிளில் எல்லாம் போட்டது போட்டபடி கிடந்தது. ஏனோ கோபம் பொங்கி வந்தது.

"மஞ்சு!"

வயதான சித்தப்பாவின் குரல், உள்ளறையிலிருந்து கேட்டது.

இவர்களுக்கெல்லாம் செய்ய நான்தானா அகப்பட்டேன் என்ற கோபம் தீச்சுவாலையாகப் பொங்கியது.

"மஞ்சு! ரொம்பப் பசிக்கிறதே?"

"வந்துட்டேன்." காது கேட்காத மனிதரிடம் எதைப் பேசி என்ன பலன்?

அந்தக் காலத்தில் விஸ்வம் படிப்பதற்கு நிறைய உதவி செய்தவர் இந்தச் சித்தப்பா.

ஒரே மகனையும் இழந்து, மனைவியையும் இழந்து, ஒரு விபத்தில் கேட்கும் சக்தியையும் இழந்து நீயே கதி என்று விஸ்வத்திடம் வந்து நின்றவரை, விஸ்வம் கை விடவில்லை.

"இங்கேயே இருங்க சித்தப்பா!" என்று இடம் கொடுத்து வைத்துக் கொண்டான்.

பொறுப்புகள் பெருகப் பெருக ஆற்றாமைதான் வெளிப்படுகிறது. சித்தப்பாவுக்கு சாதம் போட்டு டேபிளை சுத்தப்படுத்தி, தானும் சாப்பிட்டு...

போன் வந்தது. விஸ்வம் தான் பேசினான்.

"தீபாவளிக்கு என்ன பட்சணங்கள் பண்ணப் போறே?"

"ஐயோ.... ஐயோ....." தலையில் அடித்துக் கொண்டாள், "ஆபீஸ் போயும் இந்த ஞாபகம்தானா?"

"இல்ல மஞ்சு! தீபாவளி சமயத்துல டெல்லியிலிருந்து திவாரி வரானாம். கொஞ்சம் நிறையவே எல்லாம் பண்ணணும். மெட்ராஸ் வந்துட்டு ராமேஸ்வரம் போறானாம்."

ஆமாம்! தீபாவளிக்கு இன்னும் பதினைந்து நாள் கூட இல்லை. இந்த ஆண்டு பட்ஜெட் ரொம்ப சுருக்கம்தான். வருடா வருடம் அவளுக்குப் பட்டுப் புடவை எடுத்துத் தருவான் விஸ்வம். திடீரென்று நிரஞ்சனாவின் கல்யாணம் தகைந்தால் என்ன செய்வது என்று எல்லாவற்றையும் அவள் குறைத்தும், இழுத்தும் செலவு செய்ய முற்பட்டதில் பட்டுப் புடவையும் அடிபட்டுப் போயிற்று.

விஸ்வத்திற்கு எல்லாமே தாராளம்.

"இப்படி செய்தால் முடியுமா?"

"அந்த நாள்ல நான் நிறையக் கஷ்டப்பட்டாச்சு. இப்ப குழந்தைகள் சுகப்படட்டுமே!" என்று கூறிவிடு வான்.

விஸ்வம் பிறந்து மூன்று குழந்தைகள் இறந்து போன பின்புதான் ராமும், நிரஞ்சனாவும் பிறந்தார்கள். நிரஞ்சனா பிறந்த பின்புதான் அம்மா அதிக உதிரப் போக்கில் இறந்து போனாள். அடுத்த ஆண்டே அப்பாவும் காலமானார்.

திருமண வயது கடந்து விடுமோ என்று அஞ்சிய காலத்தில்தான் மஞ்சு அறிமுகமானாள். அம்மாவும் அவளுமாகச் சுழன்ற உலகத்தில் விஸ்வம் தன்னை இணைத்துக் கொண்டான்.

மஞ்சுவுடன் அம்மா இருந்ததால் மஞ்சு தன் வேலையை விடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆனால் விஸ்வம் கண்டிப்பாக "மஞ்சு! என் தம்பி தங்கைக்கு நீ தான் அம்மா. எனக்குக் குழந்தைகள் கூடத் தேவை இல்லை." என்று கூறி குழந்தைகள் பிறப்பதைத் தள்ளிப் போட்டுக் கொண்டிருந்தான்

தீபாவை உண்டான பொழுது மஞ்சுவின் அம்மா இறந்து போய் விட்டாள். அதனால் மஞ்சு வேலையைவிட வேண்டிய நிர்ப்பந்தம். விஸ்வம் கை நிறைய சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த காரணத்தால் பணத் தேவையும் அதிகம் இல்லை.

ஆனால் மஞ்சு இப்பொழுதெல்லாம் கொஞ்சம் வருத்தப்பட ஆரம்பித்திருந்தாள். தன் படிப்பு, திறமை எல்லாமே வீணாகிப் போவதாக எண்ணிக் கொண்டிருந்தாள். கலைந்த சேலையும், எண்ணெய்ப் பிசுக்கேறிய முகமும் தன் தனித்தன்மையை அழித்து விட்டதாகக் குமுறினாள்.

ரவி, தீபாவின் பிரின்ஸி வீட்டில் தன்னை உட்கார வைத்துப் பார்த்த பொழுது உவகையாக இருந்தது.

புடைவைக் கடையில் போன வாரம் பார்த்த அவள் தோழி சிந்து வேறு அவளை ஏளனப்படுத்துவது போலப் பேசிவிட்டுப் போயிருந்தாள்.

"என்ன மஞ்சு, நீதானா? இப்ப என்ன செய்யறே?"

"ஒரு நாத்தனார், ஒரு மைத்துனன், கணவர், இரு குழந்தைகள் என்று கொண்ட குடும்பத்தின் அரசி - அதாவது இல்லத்தரசி" என்றாள்.

"நீ - இல்லத்தடிமைனு சொல்லு. சதா மத்தவங்க பசி, மத்தவங்க தேவைனு பார்த்துக் கொண்டிருந்தா நீ எப்படி உன்னைக் கவனித்துக் கொண்டிருப்பே? அழுக்குப் புடைவைக்குள்ள மறைஞ்சு கிடக்கற அடிமைன்னு சொல்லு. இரண்டு குழந்தைகளைப் பெறுவது ஒரு சாதனையா?"

அவள் யோசித்தாள்.

"உன் கவிதைகள் எங்கே போச்சு? பேச்சுப் போட்டி எங்கே போச்சு? மடிப்புக் கலையாத டிரஸ் எங்கே போச்சு?"

தெளிந்த நீரைச் சேறாக்கி விட்டுப் போனாள் அவள். மெய்தான்! இட்லிக்கு அரைப்பதும், சப்பாத்தி பண்றதும், இதைத் தவிர வேறு என்ன செய்ய முடிகிறது? வெட்டிப் போட்ட ரவிக்கை பத்து நாளாய்த் தையல் மிஷினில் கிடக்கிறது. ஒரு பத்திரிகை படிக்க முடிகிறதா? கதைகள் படித்துவிட்டு எத்தனை விவாதங்களைப் பண்ணுவாள்?

> **குடும்ப நிர்வாகத்தைப் பெரிதாக எண்ணி மலைத்த மஞ்சுவுக்கு, இப்பொழுதெல்லாம் குடும்பப் பாரம் ஒரு சுமையாக இல்லாமல் சுவையாக மாறிட, எதிர் வீட்டுப் பாட்டி அப்படி என்னதான் மந்திரம் ஓதினாள்?**

இதெல்லாம் எங்கே போச்சு? யாரிடம் இதை எல்லாம் இழந்தாள்? மாலை நேரத்தில் ஒரு வாக்கிங்! குழந்தைகள் தின்பதற்குத் தேன் குழல் பிழியத் தான் நேரமிருக்கிறது. ரவி, தீபாவின் ஹோம் ஒர்க்கைக் கவனித்து-

நிரஞ்சனா, ராம் நண்பர்கள் வந்தால், கவனித்து-

அவர்களுக்கும் இவள் அண்ணி தான்!

"அண்ணி! இன்னொரு நாள் எங்களுக்கு அடை அவியல் வெண்ணெய் செய்து கொடுங்க" என்று அவர்கள் கேட்பதைத் தட்ட முடியவில்லை.

"ராம்! இன்னிக்கு ஸ்பெஷல் அயிட்டம் பண்ணப் போறேன். உன் ஃப்ரெண்ட்ஸ்களை அழைச்சிட்டு வரியா?" என்று தானே அழைத்து உபசரித்து-

இதிலெல்லாம் என்ன சாதனை இருக்கிறது?

கீழே விரித்துப் போட்ட ஜமக்காளத்தை உதறித் தூக தட்டுவது போல் மனத்தை உதறிவிட்டு என்னென்ன இனிப்புகள் பண்ணுவது என்று யோசித்தாள். எழுதி வைத்த ரெஸிபிகளைப் புரட்டினாள்.

தடதடவென்ற சப்தம்.

"மெல்ல..... மெல்ல..... பீரோ ஜாக்கிரதை."

"கண்ணாடியில இடிக்கப் போகுது."

"அப்படியே வச்சுட்டுத் தூக்கப்பா."

கதவைத் திறந்து பார்த்தாள். எதிர் ப்ளாட்டில் யாரோ குடி வருகிறார்கள் என்றதும், சுவாரஸ்யம் தட்டியது.

இப்படி வேடிக்கை பார்ப்பது கூட ரிலாக்ஸ்டாக இருந்தது. ஜன்னலைத் திறந்ததும் புழுக்கம் குறைக்க வரும் காற்றாக உள்ளே வருவது போல இறுக்கம் குறைந்தது. குறுக்கும் நெடுக்குமாக நாலைந்து இளைஞர்கள் ஏறி இறங்கி சாமான்களைத் தூக்கி வந்தார்கள்.

கடைசியில் வயதான ஒரு பாட்டி மெல்லப் படி ஏறி வந்தாள்.

"மெல்ல வா பாட்டி" என்று ஒருவன் கையைப் பிடித்துக் கொண்டான்.

இன்னும் யாராவது வருகிறார்களா என்று பார்க்கும் ஆர்வம். குழந்தைகள் வந்து விடுவார்கள், டிபன் செய்யவேண்டும் என்ற பரபரப்பு... சாயந்திரம் பாட்டியிடம் பேசலாம் என்ற முடிவுடன் வேலைகளைக்கவனித்தாள்.

"தீபாவளிக்குத் துணி எடுக்கலாமா?" என்று கேட்டபடி விஸ்வம் வர, அனைவருடன் கடைத்தெருவிற்குப் போனாள்.

அடுத்து வந்த தினங்கள்....

நிரஞ்சனாவுக்கு ஒரு ஜாதகம் பொருந்தி இருக்கிறது என்று பையன் வீட்டில் போய்ச் சொல்லி, பெண்பார்க்க அழைத்து... அவர்கள் பெண்பார்க்க வந்து... ஒரே தடபுடல் தான்!

நிரஞ்சனாவின் திருமணம் ஏற்பாடாகி விட்டது. அவளுக்கு வேலையும் அதிகம். நிரஞ்சனாவைப் பார்க்க மணமகனாகப் போகும் மோகன் அடிக்கடி வந்தான்.

தீபாவளி நெருங்கியது. திவாரி தன் குடும்பத்துடன் வருவதாக செய்தி வந்ததை விஸ்வம் கூறினான்.

டப்பா, டப்பாவாக இனிப்பு காரங்களை அடுக்கி வைத்தாள். இடுப்பு விட்டுப் போயிற்று. கொஞ்சம் ஓய்வு தேவை என உடம்பு கெஞ்சி



யது. யாரோ கதவைத் தட்டுவது போல் இருக்க, வாசல் கதவைத் திறந்தாள். அதே சமயம் எதிர் போர்ஷன் பாட்டியும் திறக்க....

பாட்டி இவளைப் பார்த்து பாசமாக ஒரு புன்னகை பூத்தாள்.

"கொஞ்சம் இருங்கோ பாட்டி."

உள்ளே ஓடி தட்டில் பல காரங்களை வைத்து, கொண்டு வந்து தருகிறாள்.

"அம்மாடி, எத்தனை பல காரங்கள்! நீயேவா செய்தே?" என்ற பாட்டி ஓர் இனிப்புத் துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

"ரொம்ப நல்லா இருக்கே?"

"தனியாவா இருக்கீங்க பாட்டி?"

பொக்கை வாயால் சிரிப்பு வழிந்தது.

"நாலு பேரன்கள் இருக்கான்கள். உட்கார்ந்துக்கோ... ரெண்டு பிள்ளை, ஒரு பெண் எனக்கு. எல்லாரும் கனடா, இங்லேண்ட், அமெரிக்கானு இருக்காங்க. இந்தப் பேரன்களும் எங்கிட்ட வளர்ந்தவங்க தான். இவங் களும் ஃபாரின்தான். எங்காத்துக் காரர் சின்ன வயசுல இறந்துட்ட தனால எல்லாரையும் வளர்த்து ஆளாக்கினேன். பொறுப்பு தீர்ந்து போச்சுன்னு நினைச்சேன். மிச்சக் குழந்தைகளையும் என் குழந்தைகள் என்னை நம்பி விடப் போறாங்க ளாம். ஃபாரின்ல வளர்ந்தா நம்ம கலாச்சாரம் வராதாம்."

கதை கேட்பதைப் போல மஞ்சு கேட்டுக் கொண்டிருந்தாள்.

"எனக்குப் படிப்பறிவு கிடையாது. பண வசதியும் இல்லாம என் குழந்தைகளை வளர்த்தேன். பூராப் பூரா திரேகு சிரமம்தான் பட்டேன். ஒவ்வொருத்தனும் இன்னிக்கு டாக்டர், இஞ்சினீயர்னு இருக்கா னுங்க. நமக்கு என்ன வேணும்?"

"ஏன் பாட்டி, உங்களுக்குன்னு ஒன்னும் வேண்டாமா? உங்களுக் குன்னு ஓர் ஆசை இல்லையா?"

"அசட்டுப் பெண்ணே! நீ என்ன படிச்சிருக்கே?"

"பி. ஏ. பாட்டி."

"படிச்ச படிப்பு வீண் போறதே. ஆபீஸ்ல வேலை பார்த்து சம்பாதித்து, என் சம்பாத்யத்துல இது பண்ணினேன். அது பண்ணி னேன்னு மகிழ்ந்து பாங்க் பாலன்ஸை எண்ணி வைக்கணும்னு நினைக்கறே? இதுக்கு கல்யாணம்னு ஒன்னு தேவையே இல்லை. ஆண் கொடுக்கற பாக்யத்தை வயத்துல வாங்கி ஜனனத்தை பூமிக்குத் தரும் பெரிய பேறு பெண்ணுக்குத் தானேடி கெடச்சிருக்குது? அது ஆணுக்கு இல்லையே?"

மஞ்சுவுக்குப் பேச வாய் வர வில்லை. பாட்டி எத்தனை பெரிய தத்துவத்தை அனாயாசமாகச் சொல்லிவிட்டாள்!

"நாளைக்கு என் பேத்தி வர்றா. இங்கே. என் கை ராசினு பிரச வத்துக்கு வர்றா" பாட்டி சிரித்துக் கொண்டாள்.

பாட்டியிடம் அயர்ச்சி இல்லை. தளர்ச்சி இல்லை. இதுதான் சாதனை... பாட்டிக்கு 90 வயசு இருக்குமா? நிமிர்ந்து பார்த்தால் இளநீரைப் பார்க்கலாம். வேரை யாராவது நினைக்கிறார்களா? பாட்டிதான் வேர். தான் இனிப்பாக இருக்கிறோம் என்று பலாவுக்குத் தெரியுமா? முள்ளாகப் போர்த்தி இருக்கும் பலாதானே இந்தப் பாட்டி....

"ஏன் எழுந்துட்டே? இந்தா இந்த மைசூர்பாக்கைத் தின்னு பார். வயசாச்சு... கிளற முடியல்ல. இன்னும் என் பேரன்களுக்கு நான் குமரிங்கற எண்ணம்..." பாட்டி நீட்டிய மைசூர்பாகு வில்லைகள் வாயில் போட்டதும் கரைந்தன.

பாட்டி எதையும் சுமையாக நினைக்காததினால்தான் சாதிக்க முடிகிறதா?

அவளும், வேரும், பழமுமாக இருக்க வேண்டுமானால்...?

எத்தனை வேலைகள் காத்துக் கிடக்கின்றன! இன்னும் என்ன இனிப்பு பண்ணலாம் என்று சிந்திக் கும் வேளையில் திவாரி குடும்பத் துடன் விஸ்வம் நுழைந்தான்.

"கைஸா ஹா பஹன் ஜி?" என்ற திவாரியின் குரல் தேனாக இருந்தது.

"ஆயியே...! பைட்டியே...! ஆப் கைஸே ஹை?" என்று விசாரித்த பொழுது மனசு இலேசாக இருந்தது.

யமுனைக் கரையில் ஒரு புத்தகம்!


அந்தப் புத்தகமே எழில் புத்தகம்!- அது
பொலியும் காதல் வித்தகம்!
பந்தத்தை விளக்கும் புத்தகம்!- இரு
பக்கமும் ஒன்றிய புத்தகம்!

சொற்கள் இறந்த கவடி அது!- காலச்
சுழலில் பதிந்த சுவடு அது!
உற்ற அன்பின் வெளிப்பாடு!- எந்த
உரையும் வேண்டா ஓர் ஏடு!

யமுனைக் கரையில் இருந்தாலும்- அதை
என்றும் வெள்ளம் நனைப்பதில்லை!
அமுதம் கல்லில் எழுந்ததுவா!- உலக
அதிசய மாகிச் சிறந்ததுவா!

விழிகளைச் சுழற்றிப் படியுங்கள்!- பல
விந்தை நினைவுகள் அதில் ஊறும்!
மொழியே அறியாப் பலருக்கும்- அந்த
மோகனப் புத்தகம் கதை கூறும்!

புத்தகப் பெயரோ தாஜ் மஹல்!- எந்தப்
பொழுதும் எரியும் காதல் அகல்!
புத்தகம் படித்தவன் கட்டிவைத்தான்!- அதுவே
புத்தகம் ஆகிட வெற்றி பெற்றான்!





தொ(ல்)லை பேசி
கதை: நாகராஜகுமார்
சித்திரம்: செல்வம்
எந்த நேரமும் போன் பக்கத்திலேயே இருடா. வைடா ரிசீவரை!
இருமம்மா. யாரோ ரெண்டு பேரு பேசிக்கிறாங்க. ஏதோ கொலையாம்!
நமக்கு வர்ற போன் சரியா கேட்காது. ஆனா 'கிராஸ் டாக்' மட்டும் தெளிவாக கேட்கும்
ஆமாம்மா!
என்ன ஆமாம்? போய் படி
டி.வி.யைப் பார்த்து திடீரென்று சிரிக்கிறான்
என்னடா ஆச்சு?
டி.வி.யிலே பாரேன். பிரதமர் சிரிக்கிறார்!
பொய்யா பேசுற? போய் படி! அப்பா வருகிற நேரமாச்சு.
நீதான் பொய் சொல்றே. அப்பா இன்னிக்கு ராத்திரி வர மாட்டார்
உனக்கெப்படி தெரியும்?
போன் போட்டு நான் பேசிட்டேன்.
போன்... போன்... போன்... உருப்படாத போன். இதை ஒழிச்சாத்தான் எனக்கு நிம்மதி
போன் மணி ஒலிக்கிறது.
ஹலோ... 2352912 ஹியர். என்னது கொள்ளையடிக்கப் போறியா? செய்... எங்கப்பா கூட இன்னிக்கு ராத்திரி வர மாட்டார்
...ஆமாம். இவ்வளவு நேரம் நான்தான் போனை காதிலே வைச்சுட்டிருந்தேன்.
யாருகிட்டே பேசுற?
முகமூடிக் கொள்ளைக்காரன் கிட்டே
மரியாதையா ரிசீவரை வைச்சுட்டு அந்தப் பக்கம் போயிடு. வர்ற போன்கால் எல்லாம் ராங் காலாவே இருக்கு


இரவு கதவு பலமாக தட்டப்படுகிறது!
யாரது
மீண்டும் கதவு தட்டப் படுகிறது
கண்ட நேரத்திலே வந்து உயிரை எடுப்பீங்களே. இருங்க வரேன்
அம்மா கதவை திறந்ததும்
ஐயோ யாராவது காப்பாத்துங்களேன். ஹெல்ப்... ஹெல்ப்...
அம்மா மயங்கி கீழே விழுந்தாள்
காலையில் கண் விழித்ததும் ஒவ்வொரு அறையாக ஓடிச்சென்று பார்க்கிறாள்.
ராத்திரி என்ன கனவா கண்டேன்? எல்லாரும் பத்திரமாகத் தானே இருக்கு...
முகமூடிக் கொள்ளையர்கள் வந்திருந்தால் இந்நேரம் எல்லாத்தையும் சூறையாடி விட்டு தானே போயிருப்பாங்க. கனவாகத்தான் இருக்கும்.
டேய் நந்து... எழுந்திரிடா மணி ஆகுது. ஸ்கூல் போகணுமில்லே
பதில் இல்லாமல் போக படுக்கையறைக்குள் போகிறாள்
படுக்கை காலியாக இருக்கிறது.
எங்கே போயிட்டான்? போன் பக்கத்திலேயே படுத்திருப்பானே.
ஹாலில் வருகிறாள் போன் ஒயர் துண்டிக்கப்பட்டு போன் இல்லாமல் தொங்குகிறது
என்ன பண்றது வேண்? அவர் வேற இல்லை. போனையும் காணோம்
அதே சமயம் பையன் ஓர் அறையில்...
ஹை... போன் ஒயர்...
போனுடன் தொங்கும் ஒயரையும் சுவரில் இருக்கும் ஒயரையும் இணைக்கிறான். நம்பர் பட்டன்களை அழுத்துகிறான். யாரோ வரும் சத்தம் கேட்கிறது. ரிசீவரை போனில் அமர்த்துகிறான். போன் மணி ஒலிக்கிறது.
②


ரிசீவரை எடுக்கிறான்
ஹலோ...
சர்மாபுரம் சாராயக் கடையா?
இல்லைங்க புதுநகர் போலீஸ் ஸ்டேஷன்
என்ன குழந்தை குரலா இருக்கு?
ஆமாங்க. நான் குட்டி இன்ஸ்பெக்டர்
திடீரென்று ஓர் ஆள் உள்ளே வருகிறான்
என்னது இன்ஸ்பெக்டரா? யாருக்குடா போன் பண்ற?
நான் எங்கே பண்ணேன்? அதுவாக வந்தது.
மற்றோர் ஆளும் வருகிறான்
ஏதுடா போன் சத்தம்?
இந்த குட்டி பிசாசு கொண்டு வந்தது.
இந்த பயல் நாம் நேற்று பேசிய திட்டத்தை போனில் கிராஸ்டாக்கில் கேட்டு இருப்பான் என்றுதானே கடத்தி வந்தோம். இங்கேயும் இந்த போனை கொண்டு வந்திருக்கான்
போன் நம்பர் 2352912 ஐ வைத்து நாம் இவன் வீட்டிற்குப் போய் இவனை தூக்கி வரும்போது போனைக் கட்டிப் பிடித்த பக்கத்திலேயே படுத்திருந்தான். எங்கே போனை பிடுங்கி எறிந்தால் சத்தம் போட்டு ஊரை கூட்டி விடுவானோ என்று ஒயரை கட் பண்ணி போனோடு கடத்தி வந்து விட்டோம்
மூன்றாம் ஆள் உள்ளே வந்து
அதுவே நமக்கு இப்போ வினையாப் போச்சு. நாம் இல்லாதபோது யார் யாருக்குப் போன் பண்ணினானோ?
ரஜனிகாந்த்துக்கு, விஜயகாந்துக்கு சத்யராஜுக்கு...
3



டேய்... ரஜினிகாந்த் தெரியுமா உனக்கு? அவரோட நின்னு நான் போட்டோ எடுக்கணும் கூட்டிப் போறியா?
சரியான ரஜனி பைத்தியம். எந்த ஆசை வருது பார் உனக்கு? தம்பி உனக்கு ரஜினியை உண்மையாலுமே தெரியுமா?
எனக்கு அவரைத் தெரியும். அவருக்கு என்னைத் தெரியுமா என்று எனக்குத் தெரியாது
வெளியே யதேட்சையாக போலீஸ் வேன் சைரன் ஒலி கேட்கிறது.
டேய்... வாங்கடா தப்பிச்சு டலாம்
நானும் வர்றேன்... நான் ஸ்பீடா ஓடுவேன்
எல்லாம் உன் போனாலே தான் வர்றது.
இங்கேயே சாவு
அவர்கள் ஓடி விடுகிறார்கள். பையன் போன் ரிசீவரை எடுத்து பட்டன்களை அழுத்துகிறான்
டாடி நான் நந்து பேசறேன்
எங்கேயிருந்து? உன்னை காணோம் என்று அம்மா ஆபீசுக்கு போன் பண்ணாங்க.
சர்மாபுரம் சாராயக கடையிலேர்ந்து
என்னடா உளர்றே?
அப்படித்தான் இங்கே வந்த போன்லே கேட்டாங்க
சரி எங்கொயரிலே விசாரிச்சு வர்றேன். பயப்படாதே
நானா? என்னைப் பார்த்துதான் எல்லாரும் ஓடிட்டாங்க. நீங்க பொறுமையா வாங்க. நான் இன்னும் நாலு ஐந்து பேருக்கு போன் பண்ணி பேசனும்
4
முற்றும்

இளமைக் கனவு நனவாகிறது!

குண்டுமணி

அந்தச் சிறுவனுக்கு எட்டு வயது. படுசுட்டி. அரைநிஜார் அணிந்திருந்தான். அவனது செஸ்ஸில் கிடைத்த முதல் வெற்றியைப் பற்றிப் பத்திரிகைக்குப் பேட்டி காண வந்தவர் கிராண்ட் மாஸ்டர் மானுவல் ஆரன்.


"உன்னுடைய விருப்பம் என்ன?" என்று ஆரன் கேட்டதும் அந்த விளையும் பயிரிடமிருந்து சடக்கென்று பதில் : "நான் செஸ்ஸில் உலகச் சாம்பியனாக ஆகப் போறேன்!" கூடியிருந்த அனைவருமே சிறுவனின் பதிலைக் கேட்டுத் திகைத்துப் போனார்கள்!

சின்ன வயதில் அன்னை, "படித்து முன்னுக்கு வா! உனக்கு விளையாட்டெல்லாம் ஒன்றும் வேண்டாம்!" என்று புத்திமதி சொல்வாள். ஆனால் சிறுவன் ஆனந்தின் அன்னை சுசீலாவுக்குச் செஸ் விளையாட்டில் தேர்ச்சி உண்டு. அதனைத் தன் பிள்ளைக்கும் ஆர்வத்தோடு கற்றுக் கொடுத்தாள். அது மட்டுமல்ல; அந்தச் சிறுவனைச் செஸ் பந்தயத்தில் கலந்து கொள்ளப் பல ஊர்களுக்கும் தானே துணையாகச் சென்று ஊக்குவித்தாள். சிறுவன் ஆனந்துக்கு அன்னையின் பக்கபலம் பல அரிய வெற்றிகளைக் குவிக்க உதவியது!

ஆனந்தின் தந்தை விசுவநாதன் தென்னக ரயில்வேயின் ஜெனரல் மானேஜராகச் சிறப்புப் பணியாற்றிக் கொண்டிருந்தார். மணிலாவுக்கு டெபுடேஷனில் சென்றபோது, மணிலாவில் ஆனந்துக்கு ஒரு பிலிப்பைன் செஸ் நிபுணரிடம் பயிற்சி பெற வாய்ப்பு கிடைத்தது. மணிலாவில் இருக்கும் தருணத்தில்தான் ஆனந்த், உலக சாம்பியன்களான கார்ப்போவும் கோர்ச் சினாயும் ஆடும் ஆட்டத்தைக் கண்டு ரசித்திருக்கிறான். பந்தயத்தைப் பார்த்த பிறகு ஆனந்துக்கு செஸ்ஸின் மேலுள்ள மோகம் வளர்ந்து விட்டது. ஆனந்த் சென்னையிலுள்ள டான்பாஸ்கோ பள்ளியில் மாணவன்.

விசுவநாதன் ஆனந்த் சென்ற இரண்டு வருடங்களாக உலக ஆட்டக்காரர்களில் இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அவர் 1987-ஆம் ஆண்டு பிலிப்பைனிலுள்ள பாசியோவில் உலக ஜூனியர்செஸ் போட்டியில் வென்று, சர்வதேச ஆட்டக்காரராக மிளிரத் தொடங்கினார்!

முதன்முதலில் சிறுவன் ஆனந்த் தால் செஸ் கிளப்பில் யதேச்சையாக அங்கத்தினராகச் சேர்ந்தான். அந்தத் தால் செஸ் கிளப்பில் பல செஸ் பயிற்சி முகாம்கள் நடந்துள்ளன. அவற்றிலெல்லாம் சிறுவன் ஆனந்த் ஆவலுடன் பங்கேற்றான். 1983-ஆம் வருஷம்தான் செஸ்ஸில் ஆனந்துக்குத் தேசிய அரங்கில் பங்கேற்கும் வாய்ப்பு கிட்டியது. பம்பாயில் நடந்த செஸ் போட்டியில் செஸ்ஸில் சாம்பியனான மானுவல் ஆரனைத் தோல்வி யுறச் செய்தார்! அந்த ஜாம்பவானை இதற்கு முன்பும் ஒரு தடவை சிறுவன் ஆனந்த் வெற்றி பெற்றுள்ளான். இந்த மகத்தான வெற்றியினால் செஸ் நட்சத்திரம் ஆனந்துக்குத் தர உயர்வு கிடைத்தது! தேசிய 'B' பகுதியில் ஆடிய ஆனந்த் தேசிய 'A' பிரிவுக்கு உயரும் தகுதியை முதல் முயற்சியிலேயே பெற்றார்!



1983-ஆம் வருடமும் ஆனந்த் அகமதாபாத் செஸ் பந்தயத்திற்குப் பிறகு மிகச் சிறந்த ஆறு செஸ் ஆட்டக் காரர்களில் ஒருவரானார்! இந்திய செஸ் குழுவில் நிரந்தர அங்கத்தினர் இவர்! நெதர்லாந்திலுள்ள விஜிக் ஆன்ஜு கிராண்ட் மாஸ்டர் பந்தயத்தில் பங்கேற்றார் இவர். 1990-ஆம் ஆண்டு மணிலாவில் இண்டர்ஸோன் பந்தயத்தில் சிறப்பாக ஆடி உலக செஸ் பந்தயங்களில் கலந்து கொள்ளும் தகுதி பெற்றார்.

சென்னை மீனம்பாக்கம் விமானநிலையம் செல்லும் வழியில் ஐந்து நட்சத்திர டிரிடண்ட் ஹோட்டல் உள்ளது. இதில் 1991-ஆம் ஆண்டு காண்டிடேட் செஸ் பந்தயம் நடைபெற்றது. இந்திய செஸ் நட்சத்திரம் ஆனந்த் இந்தப் பந்தயத்தில் அலெக்சி டிரீவ்வை முறியடித்தார்! குவார்ட்டர் பைனல் பந்தயத்தில் கார்ப்போவிடம் $4\frac{1}{2}$ - $3\frac{1}{2}$ பாயின்ட்களில் இளைஞர் ஆனந்த் தோற்றுப் போனார்!

பீல் சர்வதேச காண்டிடேட் செஸ் பந்தயத்துக்கு ஆனந்த் தகுதி பெற்று, 1994 வருட ஆரம்பத்தில் விங்க் ஆன்ஜியில் நடைபெற்ற போட்டியில் யூசுபோவைத் தோல்வியடைய வைத்தது மகத்தான சாதனை. சென்ற வருஷம் புரொபஷனல் செஸ் உலகப் போட்டியில் பங்கு கொண்டதும் கிரோனின்களில் இண்டர்ஸோன் பந்தய வெற்றியும் அவரது முன்னேற்றப் படிகள்.

'பீட்' பந்தயத்தில் குவார்ட்டர் பைனலிலும் பிசிஏ போட்டியில் செமிபைனலிலும் பங்கேற்கும் திறமை ஆனந்துக்குக் கிடைத்தது. உலக சாம்பியன் பதவிக்குச் செல்ல உதவும் 18-ஆவது பகுதி தனிநபர் செஸ் பந்தயத்தில் உலக சாம்பியன் காஸ்பரோவை தோல்வி யடைய வைத்தது, அந்தப் பதவி தூரத்தில் இல்லை என்பதைக் காட்டுகிறது. உலக சாம்பியனான காஸ் பரோவை 1991 டில்பர்க் போட்டியிலும் வென்றி ருக்கிறார்.

ஆனந்தைப் படுவேக ஆட்டக்காரர் என்று செஸ் நிபுணர்கள் வர்ணிக்கிறார்கள். மற்ற கிராண்ட் மாஸ்டர்களை விட இவருக்கு ஆட்ட வேகம் மிகுதி. ஆட்டத்தின் $\frac{1}{2}$ மணி முன்னதாக முடிக்கும் ஆற்றல் ஆனந்துக்கு உண்டு!

அரவிந்த் ஆரன் கிராண்ட் மாஸ்டர் மானுவல் ஆரனின் புதல்வர். மேலும் உலக செஸ் முன்னேற்றங் களைச் சிறப்பாக அலசுகிறவர் என்பதும் எல்லாரும் அறிந்த விஷயம்!

ஆனந்த புரொபஷனல் செஸ் உலகப் பந்தயத்தில் செமிபைனல் அடைந்திருப்பதும் 'Fide' செஸ் போட்டியில் குவார்ட்டர்பைனல் வந்திருப்பதும் ஆசிய அளவில் எந்த செஸ் ஆட்டக்காரரும் சாதித்திராத சாதனைகளாகும்.

தமிழக செஸ் கழகத்தின் காரியதரிசி காமேசு வரனுக்கு - ஆனந்த் பதின்மூன்று வயதாயிருக்கும் போது அவருக்கு மானேஜராகவும் கோச்சாகவும் - ஆனந்துடன் பின்லாந்திலுள்ள ஹெல்சிங்கிக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது.

"அயல்நாட்டுப் பயணத்துக்கு ஆனந்துக்கு ஒரு சூட்கேஸ் நிறைய அவரது அன்னை, கோட் ஓவர் கோட், ஸ்வெட்டர் என்று அனுப்பி வைத்திருந்தார். பந்தயச் சிந்தனையில் மூழ்கியிருந்த ஆனந்துக்கு அந்தப் பயணத்தின் மூன்று 'டி'ஷர்ட்களையே பயன்படுத்த முடிந்தது. ஹெல்சிங்கியில் செஸ் ஆட்டக்காரர்கள் அனைவரும் ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்ட போது ஆனந்த் தன் அறையில் அமர்ந்து அடுத்த நாள் பந்தயத்துக்கான திட்டங்களைப் பற்றித் தீர்மானித்துக் கொண்டிருந்தார்! அவருக்குக் கருமமே கண்! அடுத்த நாள் பந்தயத்தில் அவர் பத்தாவது ராங்க் பெற்றது அவரது கடுமையான உழைப்புக்குக் கிடைத்த பலன்! செஸ் ஆட்டத்தில் இப்படிக் கண்ணும் கருத்துமாக ஈடுபடும் ஓர் ஆட்டக்காரரைப் பார்ப்பது அபூர்வம்" என்று ஆனந்தின் சிறப்பை எடுத்துச் சொன்னார் காமேசுவரன்.

"நான் ஆனந்துடன் டீம் மானேஜராக ஸ்விட்சர் லாந்திலுள்ள பீலுக்குச் சென்றேன். ஆனந்த் கடைசிக்கட்ட ஆட்டத்தில் பதற்றப்படாமல் குளுமையான சிந்தனை யுடன் ஆடிக் கொண்டிருந்ததைக் கண்டு ஆச்சர்யப் பட்டேன். அந்தப் பந்தய வெற்றியிலிருந்து தான் ஆனந்த் இண்டர்ஸோனலுக்குத் தகுதி பெற்றார்! அவரது மனஉறுதிக்குக் கிடைத்த பரிசு அந்த வெற்றி!"

நியூயார்க்கிலிருந்து சென்னை திரும்பிய ஆனந்தின் பயண அனுபவத்தைப் பற்றி அறியத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது, காலில் 'முறிவு' ஏற்பட்டுப்படுக்கையில் படுத்திருந்த தந்தை விசுவநாதன் போனை எடுத்தார்!

"எங்கள் சுற்றுப் பயணம் சிறப்பாக அமைந்தது. ஆனால் எனக்குத்தான் கால் முறிவு ஏற்பட்டது! ஆனந்தை அழைக்கிறேன்! அவனோடு பேசித் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றார் தந்தை.

"ஹலோ, ஆனந்த்! சௌக்கியமா? உங்கள் பயணம் வெற்றிகரமாக அமைந்ததா?" என்று கேட்டேன்.

"நியூயார்க்கில் நான் வெற்றி முனையில் இருந்தாலும் சிறிய தவறுகளினால் உலக சாம்பியன் காஸ்பரோவிடம் தோல்வியுற்றேன். ராபிட் கேம், நல்ல அனுபவம்! லண்டன் பந்தயத்துக்குத் தகுதி பெற்றேன். ஹைதரா பாத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த கூடா காம்ஸ்கியுடன் அடுத்த வாரம் ஆடவிருக்கிறேன். ஹைதராபாத்துக்குப் புறப்படணும்!" என்று கூறினார். இனி உலக சாம்பியன் பதவியை எட்டிப் பிடிக்க, இறக்கை கட்டிக் கொண்டு பயணப்பட வேண்டியதுதான்! ஓயாத உழைப்பு! பலத்த சிந்தனை!

ஆனந்துக்குத் திருமணமாகவில்லையா என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. எத்தனையோ பேர் போட்டி போட்டுக் கொண்டு பெண்ணைத் தரக் காத்திருக்கிறார்கள். ஆனால், உலக சாம்பியன் பட்டம் கிடைக்கும் வரை அவருக்கு 'செஸ்' தான் மனைவியைப் போல் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பாள். இருபத்து நான்கு வயது வாலிபர் ஆனந்துக்கு இளமைக் கனவு நனவாகும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

செஸ், இந்தியத் தொட்டிலில் பிறந்து வளர்ந்த ஆட்டம். பவிஷ்ய புராணத்தில் பழங்காலத்தில் செஸ் போன்ற ஆட்டத்தை ஆடியதாக வரலாறு உள்ளது. சதுரங்கம் என்பது ஆதி நாள்களில் குறிப்பிடப்பட்ட செஸ்ஸின் பெயராகும். உலக செஸ் சாம்பியன் பதவியை ஓர் இந்தியர் பெற்று, செஸ் பிறந்து வளர்ந்த நாட்டுக்குப் பெருமை சேர்ப்பது இரட்டிப்பு மகிழ்ச்சி தரும். அந்த இனிய நாளை ஆவலுடன் எதிர் பார்ப்போம்!


வண்ணப்படம் :

நன்றி : செஸ்மேட்

நமது நாட்டின் முதுகெலும்பு போன்றது வேளாண்மைத் தொழில். வேளாண்மை செழிக்க வேண்டுமானால் அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர்கள் நம் விவசாயிகள். இவர்களது வல்லமையில்தான் விவசாயம் செழிப் புற்று விளங்க வேண்டும். விவசாயிகளோடு நேரிடைத் தொடர்பு கொண்டுள்ளவர்களுக்கு விவசாயிகளில் பல வல்லுநர்கள் இருப்பது தெரியும். ஆனால் இம்மாதிரியான வல்லுநர்கள் இருப்பது வெளி உலகிற்கும் தெரியவேண்டும். ஆனால், இவர்களைப் போன்றவர்களைப் பற்றிய விவரங்கள் வெளியுலகிற்குத் தெரிவதில்லை. இது எப்படியென்றால் கடலுக்கடியில் முத்து, பவளங்கள் இருப்பது போலாகும். இதை வெளியே கொண்டு வந்தபோது தான்



வாழையில் சுத்த சாகுபடி



செழிப்பான வாழைக்குலை

வாழைச் சாகுபடியில் வல்லுநர்

எஸ். எஸ். நாகராஜன்

இதன் பெருமைகளை நம்மால் உணர முடிந்தது. அதுபோல விவசாயிகள் மத்தியிலுள்ள வல்லுநர்களை நாம் அடையாளம் காட்டி அவர்களை நாம் ஊக்குவிக்க வேண்டும். இந்த வரிசையில் இன்று முன்னணியில் இருப்பவர் மகாதானபுரம் திரு. ராஜாராம் அவர்கள் ஆவார். தமிழ்நாட்டில் காவிரி முதலில் பாயக்கூடிய ஊர் மகாதானபுரம். காவிரியின் தென் கரையில் அமைந்துள்ள மகாதானபுரம், திருக்காம் புலியூர் மற்றும் கிருஷ்ணராயபுரம். இங்கு காவிரி முதலில் பாய்கிறது. மகாதானபுரத்தின் சிறப்புகளில் ஒன்று இங்குள்ள மகாலக்ஷ்மி அம்மன் கோயில். ஆடிப் பெருக்கு சமயம் இங்கு விசேஷமான பூஜைக்கு, பக்தர்கள் குவிவது உண்டு. இப்பகுதியின் முக்கிய பயிர் வாழை. மகாராஜபுரம் சந்தானம் என்றால் நமக்கு கர்நாடக சங்கீதம் ஞாபகத்திற்கு வரும். அதுபோல் மகாதானபுரம் ராஜாராம் என்றால் எல்லாருக்கும் வாழைச் சாகுபடி ஞாபகத்திற்கு வரும். இவரது வாழைச் சாகுபடியில் உறுதுணை புரிந்து வருபவர் இவரது மனைவி திருமதி ராஜாராம் ஆவார். இவர்கள் இல்லத்திற்குச் சென்றால் நோட் புத்தகங்களில் வாழைச்சாகுபடிக்குச் செய்த பல்வேறு பணிகள் தேதி வாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், சாகுபடி செலவும் எழுதப் பட்டிருக்கும். திரு. ராஜாராம் வேளாண்மைத் தொழிலில் பல விருதுகளைப் பெற்றுள்ளார். தமிழ் நாட்டில் வாழை சாகுபடியில குறிப்பாக பூவன் சாகுபடியில் முன்னணியில் நிற்பவர் விவசாயி திரு



நஞ்சையில் வாழை சாகுபடி

ராஜாராம். இவரது அனுபவம், வாழைச் சாகுபடி செய்பவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும்.

நன்செய் நிலத்தில் சாகுபடி செய்யப்படும் வாழையில் முக்கிய இடம் வகிப்பது பூவன் வாழையாகும். திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் நாகை காயிதேமில்லத், கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டும் நன்செய் சாகுபடி செய்யப்படுகின்றது. (படம் 3) தோட்டக்கால் பயிராகிய வாழையை நன்செயில் சிறப்பாக சாகுபடி செய்ய முடிகிறது என்றால் இதன் முழுப்பெருமையும் திரு ராஜாராம் போன்ற விவசாயிகளைசேரும். இவர்கள் அரும்பாடுபட்டு நன்செயில் கிடங்கு வெட்டி, தேவையான அளவு வடிகால் வசதியை செலவு பார்க்காமல் ஒற்றுமையாக ஒருங்கிணைந்து செய்கின்றனர். பூவன் வாழையில், மற்ற வாழை ரகங்களை விட பயிர் பாதுகாப்புச் செலவு குறைவு. வாடல் நோய், பாக்டீரியா, கிழங்கு அழுகல் நோய், கூன் வண்டு ஆகியவை பூவனைத் தாக்குவதில்லை.

பூவன் சாகுபடிக்குத் தரமான சட்டி இலைக் கன்றுகளை உபயோகிக்க வேண்டும். கன்றின் அடி பாகத்தில் உள்ள கிழங்கு பருத்து இருக்க வேண்டும். இத்தகைய அமைப்பு கொண்ட கிழங்கை சட்டிக் கன்று என்பார்கள். இத்தகைய கன்றுகளைத் தோட்டங்களில் தேர்ந்தெடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். எந்தத் தோட்டத்திலிருந்து கன்று எடுக்கலாம் என்று திட்டமிட்டவுடன் கொட்டை வாழை, (படம் 4) நோய் வாழை, தரமில்லாதார்கள் போடும் வாழை போன்றவற்றைக் கண்டு தாய் மரத்தில் குறியிட்டு வைக்க வேண்டும்.

கவனம்:

கன்று எடுக்கும்போது குறியிட்ட தாய் மரங்களிலுள்ள கன்றுகளை ஒதுக்கி விட்டு குறியிடப்படாத தரமான தாய் மரங்களின் கன்றுகளை எடுக்க வேண்டும். தேர்ந்தெடுத்த கன்றுகளைத் தரம் வாரியாக மூன்று வகைகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும். இவற்றை வயலில் நடும் சமயம் கவனத்தோடு நட வேண்டும்.

அதாவது வாய்க்கால் தண்ணீர் பாய்வதால் வயலின் தலை மடையில் நிலத்தின் வளம் சற்று கூடுதலாக இருக்கும். அதே போல் அடிக்கடி நீரை வடிய விடுவதால் கடைமடைப் பகுதியில் நிலத்தின் வளம் சற்றுக்குறைவாக இருக்கும். இடைப்பகுதியில் வயலில் சாதாரண வளம் இருக்கும். வாழைக்கன்றுகள் ஒரே சீராகவும், ஏற்ற இறக்கம் இல்லாமல் வளரவும், சிறிய கன்றுகளை வயலின் தலைப்பில் வளமான பகுதியிலும், பெரிய கன்றுகளை வயலின் கடைசியில் வளம் குறைந்த பகுதியிலும், நடுத்தரமான கன்றுகளை வயலின் நடுவிலும் நடவேண்டும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து விவசாயிகளுக்கு இந்த நுட்பத்தை எடுத்துக் கூறி வருபவர் திரு ராஜாராம்.

வாழை சாகுபடியில் விருதுகள் பலவும் பெற்றவர் இவர். (படம் 1) தரமான கன்றுகள் விவசாயிகளுக்கு மோகனூர், குளித்தலை, காட்டுப்புத்தூர் போன்ற இடங்களில் கிடைக்கும். தூத்துக்குடியிலிருந்தும் கன்றுகளைக் கொணர்ந்து நடலாம். வாழைக்கன்றுகள் ஏக்கரில் 800 கன்றுகளிலிருந்து 1000 கன்றுகள்

கொட்டை வாழை





விருதுகளுடன் ராஜாராம் தம்பதி

வரை நடப்படுகின்றன. இருப்பினும் உரச்செலவைக் குறைப்பதற்கும், நல்ல பருமனான குலைகள் பெறுவதற்கும் ஏக்கரில் 850 (7 அடி X 7 அடி) நடலாம் என்கிறார் திரு ராஜா ராம் (படம் 2) தோட்டத்தில் ஒரு மரத்தின் இலை மற்ற மரத்தின் இலையை இடிக்காமல் இருப்பது நல்லது. கன்றுகளை நன்செயில் நடும் முன் நிலம் உழப்படுவதில்லை. நெல் தாளின் மத்தியில் 7 அடிக்கு 7 அடி இடைவெளியுள்ளபடி கயிறு பிடித்து "லே அவுட்" செய்து கொண்டு மண்வெட்டி கொண்டு குழிகள் போட வேண்டும். கன்றுகளைக் குழியில் செங்குத்தாக நட்டு மண்ணைத் தள்ளி கால்களால் நன்கு மிதித்து விடவேண்டும். கன்று நட்டபின் நிலத்தைக் காய விட்டு விட வேண்டும். நன்செய் நிலத்தில் அதிக அளவுகளை மண்டிக் கொள்ளும். இவற்றை நன்கு கொத்தி யெடுத்து மண்ணிலேயே புதைத்து விட வேண்டும். உடனே அதாவது கன்று நட்ட 25 முதல் 30 நாள்கள் கழித்து கிடங்குகளை வெட்டி விடவேண்டும். படிப்படியாக கிடங்குகளை ஆழப் படுத்திக் கொண்டே போய் அதில் வெட்டியெடுக்கும் மண்ணைக் கன்றுகளுக்கு அணைக்கப் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். இந்தக் கிடங்குகளில் பாசன நீர் விடப்படும். நன்செய் வாழையில் அடிக்கடி கிடங்குச் சேறு எடுக்க வேண்டும். இரண்டு தடவை சேறு எடுத்ததும் அந்த மண் திரும்பவும் கிடங்கில் சரியாமல் இருக்க, பட்டங்களில் இழுத்துத் தட்டி விடவேண்டும். வாழைக்கன்றுகள் வரிசை இரண்டு உள்ளபடி (சில இடங்களில் மூன்று உள்ளபடி) கிடங்குகள் வெட்ட வேண்டும்.

இவ்வாறு பணிபுரியும் போது ஒரு திண்டில் (Raised Bed) எட்டு கன்றுகள் உள்ள படி கிடங்குகள் வெட்டிக் கொள்ளலாம். கன்று நட்ட 45-ஆம் நாள் நிலத்தைக் கொத்தி கிடங்குகளை சீர்படுத்தவேண்டும். இதுசமயம் கன்று ஒன்றுக்கு ஒரு தட்டுக் கூடை அளவு (10 கிலோ) தொழுஉரம் இடவேண்டும். கன்றைச் சுற்றி அரை வட்டத்தில் ஆறு அங்குல ஆழம் குழி தோண்டி அதில் உரம் வைத்து மண் தள்ளி விட்டு பாசனம் செய்யவேண்டும். பூவன் வாழைக்கு கன்று நட்ட 3-ஆம், 5-ஆம் மற்றும் 7-ஆம் மாதங்களில் கீழ்க்காணுமாறு ஒவ்வொரு மரத்துக்கும் உரமிட வேண்டும்.

உரம்	3-ஆம் மாதம்	5-ஆம் மாதம்	7-ஆம் மாதம்
யூரியா	110 கிராம்	155 கிராம்	90 கிராம்
சூப்பர்	155 கிராம்	155 கிராம்	---
பொட்டாஷ்	130 கிராம்	320 கிராம்	175 கிராம்

இத்துடன் 3-ஆம் மாதம் மறுபடியும் ஏக்கருக்கு 10 வண்டிகள் குப்பை எரு வைக்க வேண்டும். முற்போக்கு விவசாயி ராஜாராம் இதுசமயம் வாழைக்கு ஜிப்சமும் வைக்கலாம் என்கிறார். ராஜாராம் நெடுங்காலமாக வாழை சாகுபடி செய்வதோடு, வாழைக்கு 7-ஆம் மாதம் உரம் வைப்பது அவசியம் என்பதையும் கண்டுபிடித்தார். இவரது கண்டுபிடிப்பை விவசாய விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

3-ஆம் மாதம் உரம் வைக்கும் போது கன்றைச் சுற்றி 18 அங்குலம் தள்ளி கின்னம் பறித்து உரம் வைக்க வேண்டும். யூரியா, சூப்பர், பொட்டாஷ் ஆகியவற்றைக் கலந்து இடாமல் தனித் தனியாக இட்டால் தான் மரங்களுக்கு நிர்ணயிக்கப் பட்ட அளவு சரியாகக் கிடைக்கும். உரங்களின் அளவிற்கு ஏற்ற பிளாஸ்டிக் கப்பைக் கொடுத்து யூரியாவிற்கு ஓர் ஆள், சூப்பருக்கு ஓர் ஆள், பொட்டாஷ்க்கு ஓர் ஆள் என்று ஏற்பாடு செய்து உரமிடவேண்டும். நான்காவது ஓர் ஆள் இட்ட உரங்களை, குப்பையுடன் கலந்து இட வேண்டும். ஐந்தாவது ஆள், களை கொத்திக் கொண்டு உரத்தை மூட வேண்டும். ஐந்தாம், ஏழாம் மாதங்களில் 18 அங்குல தூரத்தில் கிடங்கு பக்கத்தை விட்டு அரை வட்டமாக கின்னம் பறித்து இரண்டு பேர் உரமிட, ஒருவர் மண் தள்ளிக் கின்னத்தை மூட வேண்டும். உரமிட்டவுடன் நீர் பாய்ச்ச வேண்டும்.

கன்று நட்ட ஏழாம் மாதம் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும். மூன்று அங்குல விட்டம், 14 அடி உயரமுள்ள மூங்கில் கம்பங்களை உபயோகிக்க வேண்டும். கம்பத்தின் அடியில் தார் பூசி நடவேண்டும். மூங்கில் கம்பத்தை மூன்று முறை முட்டு கொடுக்க உபயோகிக்கலாம். இதற்குச் செலவை மூன்று சாகுபடிகளுக்குப் பிரித்துக் கொள்ள வேண்டும். மரத்தில தார் வரும் வரை அடிக்கன்றுகளை அகற்றிக் கொண்டு வரவேண்டும். மரத்தில தார் வந்த பிறகு ஒரே ஒரு கன்றை விட்டு வைக்கலாம். இது கட்டைப் பயிராக (Ratoon crop) வரும். இதற்குப் பிறகு ஒரு கட்டைப் பயிரும் விடலாம். ஆக ஒருமுறை வாழை நட்டால் மூன்று பயிர்கள் எடுக்கலாம். பூவன் வாழையில் பிரத்யேகமான பயிர்ப் பாதுகாப்புப் பணிகள் கிடையாது. கன்றுகளை நடும் முன்,

கிழங்கில் சேற்றைப் பூசி அதன் மேல் ப்யூரடான் குருணை மருந்தைத் தூவி நடலாம். பூவனில் சுத்த சாகுபடி (clean cultivation) செய்தால் பிரச்னை வராது. (படம் 5) வளரும் மரத்திலுள்ள உலர்ந்த, பழுப்படைந்த சருகடைந்த இலைகளையும் அவ்வப்போது நீக்கி தோட்டத்தை சுத்தமாக வைத்திருத்தல் அவசியம். முற்போக்கு விவசாயி சிறந்த சாகுபடி மூலம் தரமான வாழைத்தார்களைப் பெறுகிறார். இவர் ஏக்கருக்கு சாகுபடி செலவு ரூ.15410/- ஆகும் என்கிறார். ஓர் ஏக்கரில் 700 தார்கள் விற்பனையில் வருவாய் ரூ.31,500/- கிடைக்கின்றது. சாகுபடி செலவு போக ஏக்கரில் லாபம் ரூ.16,000/- வரை கிடைக்கின்றது. பூவன் சாகுபடி செய்யும் விவசாயிகள் முதல் பயிரில் ஏக்கரில் ரூ.15,000/-க்குக் குறைவில்லாமல் லாபம் எடுக்க முடியும். இரண்டாவது மற்றும் மூன்றாவது வாழை சாகுபடிக்குச் செலவு குறையும். இந்தப் பயிர்களிலும் லாபம் முறையே ரூ.12,000, ரூ.10,000/-க்குக் குறை வில்லாமல் கிடைக்கும்.

பூவன் சாகுபடியில் விவசாயிகள் கவனத்திற்கு, கீழ்க்காணும் நுட்பங்களைக் கொணர திரு ராஜாராம் விரும்புகிறார்.

பூவன் சாகுபடிக்கு, சிறந்த பட்டம் மாசிப்பட்டம்தான். இருப்பினும் விரும்பும் விவசாயிகள் பூவன் வாழையை, பயமின்றி கார்த்திகைப் பட்டத்திலும் சாகுபடி செய்யலாம். கார்த்திகை நடவில "கட்டைத்தார்" கிடைத்தாலும் பழத்திற்கு நல்ல விலை கிடைக்கும். கார்த்திகை நடவிற்குக் கன்றுகள் குறைந்த விலையில் கிடைக்கும். கன்றுகளை வெட்டிய அன்றே நடுவது சிறந்தது. இல்லையேல் கன்று வாங்கி 15 நாட்கள் கழித்து ஊன்றலாம்.

பூவனில் தை மாதத்தில் ஊடக் கன்றுகளாக 100 நாட்டன் கன்றுகளை நட்டால் இதில் 75-க்கு மேல் பூவனோடு சேர்ந்து அறுவடைக்கு வந்து ரூ.1500/- வரை ஆதாயம் கொடுக்கும். பூவனில் கொட்டை வாழை பிரச்னையைத் தவிர்க்க தாமிரவருணி பாசனப் பகுதியில் சாகுபடி செய்யும் தோட்டங்களில் இருந்து சாகுபடி காலத்தில் கன்றுகளைப் பெற்று வரவேண்டும். பக்கக் கன்றுகளை கவனமுடன் குத்தியெடுக்க வேண்டும். மாதம் ஒரு முறை சாண் உயரம் வளர்ந்த பக்கக் கன்றுகளை கவனமுடன் தாய் மரம் பாதிக்கப்படாமல் அகற்றிவிட வேண்டும். மரம் தார் விடும் போது ஒரு கன்றினை விட்டு மற்றவற்றை அகற்ற வேண்டும்.

முதல் வாழைச் சாகுபடி முடிந்த பிறகு தோட்டத்தில் மறுதாம்புப் பயிராக விடப்பட்ட பக்கக் கன்றுகளைச் சீரான ஒரே உயரம் கொண்டிருக்கும்படி வெட்டிவிடுவது அவசியம் என்கிறார். அப்போது அறுவடை எல்லா மரங்களிலும் ஒரே சமயம் கிட்டும். தரமான தார்களை உண்டாக்க அவற்றைப் பனியில் இருந்தும், வெயிலின் சூட்டிலிருந்தும் பாதுகாக்க, தார்களைக் கண்ணாடி இலை கொண்டு மூடிவிடவேண்டும்.

இப்படிச் செய்தால் பழங்களின் மேல் புள்ளிகள் இல்லாமல் தரமாக இருக்கும். வாழைத்தாரில் கடைசித் தார் அதாவது "பீலி" வந்த மேல் வாழைப் பூவைக் கிள்ளி அகற்றி விடவேண்டும். அவ்வாறு கிள்ளாவிட்டால் காம்பு நீண்டு, பூ, சீப்புகளிலிருந்து நெடுந்தூரம் போய் காய்கள் பருமனாவது பாதிக்கப்படுகின்றது. கார்த்திகையில் வாய்க்காலில் அதிக அளவு நீர் இருக்காது. இது சமயம் தொடங்கும் சாகுபடிக்கு வடிகால் பிரச்னை இருக்காது. வடிகால் வசதியை வைகாசி, ஆனியிலிருந்து தீவிரமாக செய்து கொள்ளலாம். கார்த்திகை சாகுபடியில் திறமையான விவசாயிகள் முட்டு கொடுப்பதற்குக்கூட செலவு செய்வதில்லை.

விவசாயம் என்பது நெல் சாகுபடி மட்டும்தான் என்றில்லாமல் தோட்டக்கால் சாகுபடியாகிய வாழை சாகுபடியை நன்செயில் செய்ய இயலும் என்பதை எடுத்துக் காட்டிய ராஜாராம், விவசாயிகள் தங்கள் பொருள்களைத் தாங்களே விற்பனை செய்து லாபம் பெற வேண்டும் என்பதைக் காட்ட காவிரி வாழை மற்றும் விளைபொருள் கார்ப்பரேஷன் ஒன்று தொடங்கி செயல்படுத்திக்காட்டினார். வேளாண்குடி மக்கள் நலனுக்காக பல பணிகளைச் செய்து வருகிறார். நமது விவசாயிகள் திறமைமிக்கவர்கள். அவர்களால் சாதனைகள் புரிய இயலும். ஆனால் விவசாயிகளுக்கு, தங்களது வலிமை தங்களுக்கே தெரிவதில்லை. மற்றவர்கள் ஊக்கம் காட்டும் போது அவர்கள் திறமை வெளிப்படுகின்றது. அது போன்ற வேளாண்மைத் தொழிலில் தான் பெற்ற விருதுகள், மூலமும், பத்திரிகைகளின் பாராட்டுகள் மூலமும் திரு. ராஜாராம் அவர்கள் மேலும் அரிய பல சாதனைகள் நிகழ்த்துவார் என்று நம்பலாம்.

பி.வி.கிரி

அற்புத மனிதன்

உலகமெல்லாம் ஓதற்கு
உகந்த புலவன்
பலதுறைக் கருத்தும்
பகன்ற கவிஞன்!

அகரத்தில் தொடங்கிய
அற்புத மனிதன்
நிகரற்ற படைப்பால்
நெஞ்சில் நின்றவன்!

அன்பும், பண்பும்,
அறமும், அருளும்
என்றும் நிலைக்க
எழுதி வைத்தவன்!

கடவுள் வாழ்த்து,
கல்வி, கயமை,
குடிமை என்று
குறித்துத் தந்தவன்!

புகழும், இகலும்,
புலவி நுணுக்கமும்,
பகைத் திறமென்று
பாதை வகுத்தவன்!

மருந்து, மானம்,
மக்கட் செல்வம்,
பெருமை என்று
பேசிச் சென்றவன்!

காலம் அறிதல்,
காதல், ஊடல்,
ஞாலம் உணர
நியாயம் சொன்னவன்!

உலகம் போற்றும்
ஒரே ஒரு நூலை
பலவும் கற்ற
பாவலன் தந்தான்!

அவன்தான் வள்ளுவன்!
அழகிய முறையில்
புவனம் போற்றப்
பொதுமறை தந்தவன்!

மொரிஷியஸ் தீவில் தமிழ் மணம்

பேராசிரியர் ஜே.ஜி.கண்ணப்பன்

"உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்."

"ஏறுமயில் ஏறி விளையாடும் முகமொன்று
ஈசருடன் ஞானமொழி பேசும்முகம் ஒன்று"

என்று பல ஆன்மிகப் பாடல்களை உணர்ச்சியுடன் கூடிப்பாடி மகிழ்வுறும் தமிழர்களை மொரிஷியஸ் தீவில் காணமுடிகிறது.

இந்தியாவிற்குத் தென் மேற்கே, பூமத்திய ரேகைக்குத் தெற்கே, தென் ஆப்பிரிக்கா கண்டத்திற்குக் கிழக்கே யிருக்கும் ஒரு சிறிய தீவு மொரிஷியஸ் தீவு ஆகும்.

பம்பாயிலிருந்து புறப்படும் இன்றைய ஜெட் விமானம் சுமார் ஆறுமணி நேரத்தில் இந்தத் தீவையடைகிறது.

நீலக்கடல் சூழ்ந்த இந்தத் தீவு பச்சைப்பசேல் என்றுள்ளது. வளமையும் செழிப்பும் உடைய இந்தத் தீவில் வாழும் மக்கள் தேன்தமிழ் பேசும் தமிழ் வர்க் கத்தினர் ஆவர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, பல தலை முறைகளுக்கு முன்னரே தமிழர்கள் குடியேறிய இத் தீவில், தமிழ் ஆர்வம் கொண்ட தமிழர்களை இன் றும் பெரும் அளவில் காணலாம்.

அந்நாட்டுப் பிரதம மந்திரி, நாட்டின் தலைவர் மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்கள் யாவரும் தமிழர்களின் பாரம்பரியம் கொண்டவர் ஆவர். அவர்கள் பேசும் தமிழ் மொழியில் மழலை சார்ந்த இனிமையைக் காணமுடிகிறது.


நமது நாட்டின் கலாசார முறைகளை இன்றும் முழுவதுமாகக் கடைப்பிடித்து வருகின்றனர். வாழும் முறை, பக்தி, குடும்ப வாழ்க்கை, பெற்றோரைப் பேணுதல், ஆன்மிகம் எல்லாமே, நமக்கு வேறுபாடு இல்லாது இருப்பதைக் காண்கிறோம்.

இத்தீவைப் பிரஞ்சுக்காரர்கள் ஆக்கிரமித்து, பின்னர் ஆங்கிலேயர்கள் பெற்றுக் கொண்டார்கள். ஆகையினால் பிரஞ்சு மொழியும், ஆங்கிலமும் சரளமாகப் பேசப்படுகின்றன. எழுத்து மொழியாகவும் உள்ளது. எனினும் அந்நாட்டினரின் சாதாரணப் பேச்சு மொழி என்பது "Creole" என்பதாகும் இம்மொழிக்கு எழுத்து வடிவமில்லை.

பிரஞ்சு ஆங்கில ஆதிக்க சரித்திரத்தினால் மற்றும் இம்மொழிகள் எழுத்து வடிவத்திலும் இருப்பதாலும், ஆட்சி மொழியாகவும் உள்ளது. தமிழ் ஆட்சி மொழி யாயில்லை என்பது வருத்தத்திற்குரியது.

எனினும் அங்கு தமிழுக்கு முக்கியத்துவம் தரவேண் டும் என்ற அடிப்படை குடியாட்சியின் கொள்கையினால், நாணயங்களிலும், பண நோட்டுகளிலும் தமிழிலே எழுதப்பட்டுள்ளது. இ:்து வியக்கத்தக்கது.

இத்தீவில் குடியேறிய தமிழர்கள் இந்துக் கோயில் களைக் கட்டி, அங்கு தமிழிலே பிரார்த்தனை செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும். மனத்திற்கு நிறைவு தரும் செய்கையும் ஆகும். உள்ளக்கிளர்ச்சிக்கு வித்திடும் பண்பாகும். அங்கு நமது நாட்டில் கொண்டாடப்படும் எல்லா ஆன்மிகத் திருவிழாக்களையும் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடி வருகிறார்கள். முக்கியமாக ஒவ்வொரு நபரும் தன்னால் இயன்ற பங்கினை



எடுத்துச் செயல்படுத்துகின்றார்கள். எல்லாரும் இவ்விதமாகக் கூடிச் செயல்படும்போது, அத்தமிழ்ச் சமுதாயம் ஒரு குடும்பப் பொறுப்பாக ஆலயப் பணியையேற்று பூர்ண திருப்தியடைகிறார்கள் என்பது நமக்கெல்லாம் ஒரு படிப்பினையாகும்.

நமது கிராமங்களில் மக்கள் வழிபடும் முறைகளான "கூழ் ஊற்றுதல்" என்ற வகை மொரிஷியஸில் இன்றும் சிறப்பாகக் கையாளப்படுகிறது.

ஆலயங்கள் நிறைய உள்ளன. ஆலயக் கட்டட அமைப்பு, கோபுரம், சந்நிதி எல்லாமே முடிந்தவரை யில் நமது நாட்டினைப் போலவே உள்ளன. ஆகை யால் அந்த நாட்டில் இருக்கும்போது, நாம் வேறு நாட்டிலிருக்கிறோமே என்ற எண்ணம் எழுவதில்லை.

இந்தத் தமிழ் முறைப்பிரார்த்தனை, வாழும் முறை எத்தனை காலம் நீடிக்குமென வினா நம்மிடையே எழுகிறது. காரணம் இன்றைய இளைஞர்கள் இந்த முறையில் ஈடுபடுவதற்கான சூழ்நிலை குறைந்து வருவதைக் காண்கிறோம்.

இன்றைய நவீனம், மேலைநாட்டுக் கலாசாரம் மற்றும் வாழும் முறைகள் இதற்குக் காரணமாகும். எனினும் இன்றைய பெற்றோர் தமிழ் முறையினை இளைஞர் சமுதாயத்திற்குப் போதிக்காமல் இல்லை.

நமது தமிழ் மற்றும் கர்நாடக சங்கீதத்தின் மீது அங்குள்ள ஆர்வம் அளவிடற்கரியது. ஒவ்வொரு தமிழர் வீட்டிலும், பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவை வைத்துள்ளார்கள். அதனை ஓட்டி இசை கேட்டு மகிழும் முறை, அவர்கள் வாயிலாகக் கேட்பீர்களே யானால், நமக்கு அவர்கள் எவ்வாறு மனப்பூர்வமாக தமிழ் இசையை அனுபவிக்கிறார்கள் என்பதை உணர முடியும். கர்நாடக சங்கீதம் ஆனாலும் சினிமா பாடல்கள் ஆனாலும் அவற்றை ஒலிநாடாவில் பதிவுசெய்து தங்கள் இல்லத்தில் வைத்திருப்பதை ஒரு பெருமையாகவும் பொக்கிஷமாகவும் கொண் டுள்ளார்கள்.

தமிழின்பால் அந்நாட்டினர் காட்டும் ஆர்வம் என்ன? ஊக்கம் என்ன? சேவை என்ன? தியாகம் என்ன என்று அடுக்கப்பட்ட கேள்விகளுக்குத் திருப்தியான பதில்களை நாம் உடனே பெறலாம். ஏழாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டினை சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். மொரிஷியஸ் அரசு முழு அளவில் இந்த மாநாட்டில் அக்கறையுடன் பங்கேற்றது.

உலகிலுள்ள எந்த நாட்டிலும் தமிழ் மற்றும் தமிழர் மாநாடு நடப்பின் இங்குள்ள தமிழர்கள் சென்று பங்குகொள்கிறார்கள். மேலும் மொரிஷியஸ் தீவின் பெருமைகளைத் தெரிவிக்கும் முறையில் நடந்து கொள்ளுகின்றனர்.

மொரிஷியஸ் தமிழ்ச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்தி, அத்தீவிற்குப் பயணம் செய்யும் எந்தத் தமிழருக்கும் அவர்கள் அளிக்கும் விருந்தோம்பல் வியப்புக்குரியது.

தமிழுக்கென்று, 5கோடி ரூபாய் மதிப்பிற்கு தமிழ்ச்சங்கக் கட்டடம் எழுப்புகிறார்கள். இக்கட்டடம் 1994ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் முழுமை யாய்க் கட்டிமுடிக்கப்பட்டு தொடக்க விழா கொண் டாடுவதற்காக, வேகமான வேலைப்பாடுகள் நடந்து வருகின்றன.

அக்கட்டடத்தின் வளாகத்தில், தமிழ்க் கலாசாரப் படங்கள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்களை நிறுவுதற்குத் திட்டங்கள் தீட்டியுள்ளார்கள். அக்கட்டடம் பூர்த்தியாக நிறைவு பெறுமேயானால், நாம் அதனைச் சென்று



பார்வையிடுவோமேயானால், மொரிஷியஸ் தமிழ் உலகம் முழுவதிலும் பெற்றுள்ள பெருமைகளைக் காணலாம்.

இதற்கு, தமிழ்நாட்டிலிருந்து பழைமை நிறைந்த காட்சிப் பொருள்களை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆர்வமான இம்முயற்சியில் மொரிஷியஸில் வாழும் தமிழர்களின் ஒட்டுமொத்தமான ஒத்துழைப்பு காணப்பெறுவது நமக்கெல்லாம் ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் ஏற்படுத்துகிறது.

இக்கட்டடம் முழுமை பெறுமேயானால் அதன் தோற்றம் மிகவும் எடுப்பாகவும், மிடுக்காகவும் இருக்கும். இக்கட்டடத்தை உருவாக்கும் பணியில் பாடுபட்டு வரும் தமிழ்த் தோழர் திரு பழனிசாமி படையாச்சி மிகவும் உணர்ச்சி பூர்வமாக செயல்பட்டுவருகிறார்.

தமிழ் மொழியிலுள்ள திருக்குறளை, பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட படிவத்தைக் கண்டோம். தேவாரம், திருவாசகம் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவ்வித தெய்விகப் பணியினைச் செய்துவரும் ஒரு பெருமகனார் திரு முத்துக்குமரன் ஆவார்கள். அவருக்கு இப்போது வயது 93 ஆகிறது. அவருக்கு 12 பிள்ளைகள். யாவரும் நலமுடன் இருக்கிறார்கள்.

உலகத் தமிழர் மாமன்றம் தனது நான்காவது மாநாட்டினை மொரிஷியஸில் நடத்த முடியுமா என்ற ஒரு யோசனைக்கு, உடனே முடியும் என்ற பதில் அங்குள்ளவர்களிடம் கிடைத்தது. அதாவது தமிழுக்கு ஒரு பணி என்ற ஒரு தேர்ந்த கொள்கைக்கு ஒரு வாய்ப்பினை அவர்கள் உடனடியாகக் கொடுக்க விழைகிறார்கள்.


மொரிஷியஸில் சென்ற இடமெல்லாம் மேலை நாட்டு வாழ்க்கை முறையைக் காணலாம். உதாரண மாக ஊர் சுத்தம் மிகவும் போற்றுதற்குரியது. சிங்கப் பூரில் எப்படி தூய்மை கடைப்பிடிக்கப்படுகிறதோ, அதே அளவில் மொரிஷியஸிலும் காணலாம். மாசு படியாத காற்று, நீர் என்ற அக்கறை அரசினுடைய கடமை என்றெண்ணாமல், ஒவ்வொரு தனிமனிதனின் ஆர்வமான தனிப் பிரச்னை என ஏற்றுக்கொண்டு அன்றாட வாழ்க்கையில் ஒழுக்கத்தைக் கடைப் பிடிக்கிறார்கள்.

மொரிஷியஸ் நாட்டு மக்களும் அரசும் இந்திய நாட்டின் மீது மதிப்பு கொண்டுள்ளார்கள். அவர்கள் அடிக்கடி இந்திய நாட்டிற்குப் பயணம் செய்கிறார்கள். அவர்களுடைய கல்விக்கு இந்தியா வருவது மட்டு மின்றி, இந்தியக் கல்வி பட்டப்படிப்பிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இன்றும் இந்திய நாட்டில் பயின்ற அறிவியல், பொறியியல், மருந்துவ வல்லுநர்களைக் காணலாம். அவர்களின் திறமை நிறைந்த செயல் பாடுகள் ஒரு நல்ல சாதனையாகும்.

மேலும் நம் நாட்டுப் பொருள்களுக்கு அந்நாட்டு மக்கள் ஆர்வமான வரவேற்பைத் தருகிறார்கள். வாகனங்கள் மற்றும் பொறியியல் சாதனங்கள் அங்கு காணப்படுகின்றன.

அவர்கள் அளவளாவும் போது, நமது நாட்டின் மேல் தனிப் பாசம் கொண்டவர்கள் என்பதை எடுத் துக் கூறுகிறார்கள். இப்போழுதும் மொரிஷியஸ் இளைஞர்கள் இந்தியாவில் கல்வி பயின்று வருகிறார்கள்.

உலக வரைபடத்தில் மொரிஷியஸ் என்பது எளிதில் காண முடியாத அளவில் சிறிய தீவு. ஆனால் அத்தீவு தமிழ் மொழிக்குப் பெருமை தேடித் தருவதில் மிகப் பெரிய இடமாக இருந்துவருவது பெருமைக்குரியது.



முதல் குடைவரைக்குப் பக்கத்திலுள்ள
வல்லம் கோட்டப் பிள்ளையார்

வல்லம் குடைவரைகளும் புதிய கல்வெட்டுகளும்

செங்கற்பட்டு மாமல்லபுரம் நெடுஞ்சாலையில், செங்கற்பட்டிலிருந்து ஏறத்தாழ மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது வல்லம். ஊரை அடைய நெடுஞ் சாலையின் இடப்புறம் பிரியும் மண் பாதை வழியே உள் செல்ல வேண்டும். மிகப் பின்தங்கிய நிலையில் காட்சியளிக்கும் இச்சிற்றூரின் மேற்கில் அமைந்துள்ள மலைக் குன்றில் மூன்று குடைவரைகள் உள்ளன. குன்றின் மேற்பகுதியில் ஒரு குடைவரையும், இடைப்பகுதியில் சிறிய அளவிலான குடைவரையொன்றும் வெட்டப்பட்டுள்ளன. இரண்டாம் குடைவரைக்கும் சற்றுத் தள்ளி வடபுறத்தே மற்றுமொரு சிறிய குடைவரை உள்ளது.


முதற் குடைவரை

இங்குள்ள மூன்று குடைவரைகளுள் மேல் குடைவரைதான் அளவில் பெரியது. கருவறை, உள் மண்டபம், முகப்பு என அமைந்திருக்கும் இக்குடைவரை கிழக்குப் பார்வையாக உள்ளது. முகப்பின் இருபுறமும் உள்ள பாறைப் பிதுக்கங்களில் தேவ கோட்டங்கள் வெட்டப்பட்டுள்ளன. வலப்புறக் கோட்டத்தில் பிள்ளையாரும் இடப் புறக் கோட்டத்தில் சேட்டைத் தேவியும் உள்ளனர்.

குடைவரை முகப்பின் மையப் பகுதியில் இரண்டு முழுத்தூண்களும் பக்கச் சுவர்களையொட்டி இரண்டு அரைத் தூண்களும் உள்ளன. சதுரம், கட்டு, சதுரம் என்ற அமைப்பிலுள்ள இத்தூண்களின் சதுர முகப்புகளில் கல்வெட்டுகள் உள்ளன. கோப்பெருஞ்சிங்கனின் கல்வெட்டு, தூணின் கட்டுப் பகுதியில் தொடங்குகிறது. குடைவரையின் முன்புறம் திறப்பாக இருந்ததை மாற்றிப் பிற்காலத்தில் இந்தத் தூண்களுக்கிடையில் சுவரெழுப்பி மூன்று வாயில்களை அமைத்திருக்கிறார்கள். குடைவரையின் முன்னால் நின்று பார்க்கையில் பல்லவர் காலக் கலை யமைப்பாய்த் தேவகோட்ட அமைப் புகள் மட்டுமே காட்சியளிக்கின்றன. கதவுகளைத் திறந்து கொண்டு உள்நுழைந்த பிறகுதான் ஓர் அற்புதமான குடைவரை பிற்காலத் திருப் பணியாளர்களால் எப்படி அலங்கோலமாக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.


உள்மண்டபத்தின் பின் சுவர் மையப் பகுதியில் கருவறை குடையப் பட்டுள்ளது. இக்கருவறையில் பிற்காலத்து லிங்கத் திருமேனியொன்று நிறுவப்பட்டுள்ளது. கருவறை வாயிலின் இருபுறமும் பக்கத்திற்கொன்றாகக் காட்டப்பட்டுள்ள கோட்

டாக்டர் இரா. கலைக்கோவன்



வல்லம் குடைவரை தமிழ்க் கல்வெட்டு

டங்களில் வாயிற்காப்போர் வடிவங்கள். அணிகலன்களும், ஆடைகளும் இரண்டிற்கும் ஏறத்தாழ ஒன்று போலவே இருந்தாலும் உருவ அமைப்பில் சிறு வேறுபாடுகள் உள்ளன. பேரளவிலான உருள் தடிகளுடன் காட்சியளிக்கும் இவ்விரண்டனுள், தென்புறவடிவம்,



கொற்றவை வல்லம் - மூன்றாம் குடைவரை

இடக்கையைத் தடி மீது தாங்கி வலக்கையை இடுப்பில் வைத்துள்ளது. வடபுற வடிவம் வலக்கையைத் தடி மீதும் இடக்கையை இடுப்பிலும் கொண்டுள்ளது. இரண்டிற்குமே கோரைப் பற்கள் இருந்த போதும் தென்புற வடிவத்திற்கு மட்டும் தலையில் கொம்புகள் காட்டப் பட்டுள்ளன. இது நந்தியை உருவகப் படுத்துவதாக அறிஞர்கள் கருது கிறார்கள்.

குடைவரையின் வெளிக்கோட்டங்களில் காட்சி தரும் தென்புறப் பிள்ளையாரும் வடபுறச் சேட்டையும் பல்லவர் காலப் பிற்பகுதியைச் சேர்ந்ததாகலாம் என்று அறிஞர் திரு கூ.ரா. சீனிவாசன் கருதுகிறார். இராசசிம்மர் காலத்துக் கற்றளிகளிலேயே பிள்ளையார் வடிவம் முக்கியத்துவம் பெறத் தொடங்கி விடுகிறது. கயிலாச நாதர் கோயிலில், தனித் தெய்வமாகக் கருவறைப் புறச் சுவரில் பிள்ளையார் காட்சி யளிக்கிறார். காஞ்சிபுரத்திலுள்ள இறவாதான் ஈசுவரத்தின் புறச் சுவரிலும் பிள்ளையார் வடிவம் சிறப்பிடம் பெற்றுள்ளது. ஆனால், இந்த வடிவங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அமைப்பில், வேறெந்தத் திருக்கோயிலிலும், பிற்காலத்திலும் அமைக்கப் பெறாத கோலத்தில், தனித்துவம் வாய்ந்த திருத்தோற்றமாய் வல்லத்துப் பிள்ளையார் விளங்குகிறார். சிற்ப அமைதி கொண்டு பார்க்கும்போது இதை இராசசிம்மர் காலத்துப் படைப்பாய்க் கொள்ளலாமெனத் தோன்றுகிறது.

தமிழ்க் கல்வெட்டு: வல்லம் குடைவரைகள்.

இக்குடைவரையில் இருந்து மூன்று தமிழ்க் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இரண்டு முதலாம் மகேந்திரவர்மர் காலத்தவை. தென்புறத் தூணிலிருக்கும் தமிழ்க் கல்வெட்டு பகாப்பிடுகு, லளிதாங்குரன் என்னும் முதலாம் மகேந்திரவர்மரின் இரு விருதுப் பெயர்களைத் தருகிறது. வடபுறத் தூணிலிருக்கும் கல்வெட்டின் முதல்வர் மகேந்திரவர்மரின் சத்துருமல்லன், குணபரன் என்னும் விருதுப் பெயர்களைத் தருகிறது. ஏனைய மூன்று வரிகள் மகேந்திர வர்மரின் அடியார் வயந்தப் பிரியரசர் மகனார் கந்தசேனர் இக்குடைவரையைச் செய்வித்ததாகக் கூறுகின்றன. குடைவரை கல்வெட்டில் தேவகுலம் என்ற சொல்லால் குறிக்கப்படுவது சிறப்பாகும்.

கோப்பெருஞ்சிங்கரின் பதினான்காம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இக்கோயில் இருக்கும் பகுதியைக் களத்தூர் கோட்டத்து வல்ல நாடு என்று அறிவிக்கிறது. இறைவன் பெயர் திருவயந்தீசுவரமுடைய நாயனார். இக்கோயிலில் சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்காக சுந்தர நந்தி பம்மன் என்பார் மூன்று பசுக்களைக் கொடையாக அளித்தார். இவற்றைப் பெற்றுக் கொண்டு கதிரும் நிலவும் உள்ளவரை விளக்கெரிக்க உறுதி யளித்தவர் இக்கோயில் காணியுடைய சிவபிராமணர் சூரியபட்டன்.

இரண்டாம் குடைவரை

கருவறை, முகப்பு, உள்மண்டபம் என்றமைந்துள்ள இரண்டாம் குடைவரையும் வாயிலில் சுவரெழுப்பப் பெற்றுக் கதவும் பூட்டுமாய்க் காட்சி யளிக்கிறது. முழுத் தூண்களற்ற முகப்பின் வட, தென் மூலைகளில் பக்கத்திற்கொன்றாய் அரைத் தூண்கள் உள்ளன. மண்டபம் சற்று உள்வாங்கிய நிலையில் குடையப் பட்டிருப்பதால் கூரையின் முன் அமைப்பு வடிவமைக்கப்படாத கபோதமாய்ச் செயற்படுகிறது. உள் மண்டபப் பின் சுவரில் சிறு கருவறை. முருகன் மனைவியருடன் குடியிருக்கும் இக்கருவறையின் வாயிலின்

இருபுறமும் வாயிற்காப்போர் சிற்பங்கள். குடைவரையின் வெளிப்பகுதியில் பாறையின் தென்புறத்தே வடபார்வையாக வலம்புரிப் பிள்ளையாரின் சிற்பமொன்று தாமரை இருக்கையில் அமர்ந்துள்ளாற் போல் செதுக்கப்பட்டுள்ளது.

இக்குடைவரை இதுநாள் வரையிலும் பல்வேறு அறிஞர் பெருமக்களின் பார்வைகளுக்கும் ஆய்வுகளுக்கும் இலக்காகியிருக்கிறது. இருப்பினும் இக்குடைவரையின் உத்திரத்திலுள்ள தமிழ்க் கல்வெட்டு இப்பெருமக்களின் பார்வையில் விழவில்லை. டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தின் கல்வெட்டாய்வாளர் அர. அகிலாவும் மு. நளினியும் இக்கட்டுரையாசிரியருடன் கள ஆய்வில் ஈடுபட்டபோது இப்புதிய கல்வெட்டையும், இதே போன்றதொரு தொன்மையான கல்வெட்டை மூன்றாம் குடைவரையின் உத்திரத்திலிருந்தும் கண்டறிந்தார்கள். முதற் குடைவரையிலுள்ள கந்தசேனர் கல்வெட்டோடு ஒத்துப்போகும் எழுத்தமைதியில் அமைந்துள்ள இக்கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பால் இக்குடைவரைகளின் காலம் முன்னோக்கி நகர்ந்துள்ளது. லக்கச் சோமாசியார் என்பாரின் மகள் இத்தேவகுலத்தை எடுப்பித்ததாகக் கூறும் இக்கல்வெட்டு பல்லவர் காலத் தமிழ் எழுத்துகளின் வரிவடிவம் பற்றி ஆராயக் கிடைத்திருக்கும் மற்றோர் அரிய புதையலாகும்.

மூன்றாம் குடைவரை

இரண்டாம் குடைவரையை விடச் சற்றுக் கீழான மலைப் பகுதியில் குடையப்பட்டுள்ள மூன்றாம் குடைவரை வடகிழக்குப் பார்வையாக அமைந்துள்ளது. மற்ற குடைவரைகளைப் போலவே முகப்பு, உள்மண்டபம், கருவறை என்றமைந்துள்ள இதன் உள்மண்டபப் பின் சுவரில் சிறியதொரு கருவறை காணப்படுகிறது. பெருமாளும் தேவியும் உள்ள இக்கருவறையின் வாயிற்புறத்தேயும் பக்கத்திற்கொருவராய்க் காவலர்கள். மற்ற இரண்டு குடைவரைகளில் இருப்பது போல் கால்களைக் குறுக்கீடு செய்யாமல், பாதங்களை ஒன்றன் பக்கத்தில் ஒன்றாய் அமைத்து நேர்பட நிற்கின்றனர். சிம்ம ஊர்தியோ, மான் ஊர்தியோ இல்லாமல், மகிடன் எந்த வடிவத்திலும் அருகில் இல்லாத நிலையில், தலை கொய்து, தசை தந்து தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் அடியவர்களும் இல்லாமல் தனித்து நிற்கும் உள்மண்டபக் கொற்றவை அறிஞர்களால் அதிகம் பேசப்படாதவர்.

இங்கும் இரண்டாம் குடைவரையைப் போலவே உத்திரத்தின் வடபுற முகப்பில் கல்வெட்டொன்று



வாயிற்காப்போர்: வல்லம்

கண்டுபிடிக்கப்பட்டது. பல்லவப் பேரரசரின் மகள் கொம்மை கட்டிய கோயில் இது என்ற தகவல் கல்வெட்டில் கிடைத்தது.

பெண்களும் குடைவரைகளும்

தமிழகத்தில் குடைவரைக் கலை பல்லவர்களாலும் பாண்டியர்களாலும் பயிலப்பட்ட போதும் பல்லவர்களே காலத்தால் முற்பட்ட குடைவரைகளுக்கு உரிமையுடையவர்களாய் நிற்கிறார்கள். மண்டகப்பட்டு கல்வெட்டின் மூலம் மகேந்திரரே முதன் முதலாகக் கல்லில் கோயில் எழுப்பியிருக்க வேண்டுமென்ற உண்மை அறிஞர்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. தொடக்க காலப் பல்லவப் பாண்டிய குடைவரைகளையொட்டிச் சற்று பிற்பட்ட் காலத்தில் முத்தரையர்களும் குடைவரைகளைச் செய்வித்தனர். தமிழகமெங்கும் அடையாளம் காணப்பட்டிருக்கும் இப்பல மரபுக் குடைவரைகளுள் பெண்களோடு தொடர்புடையவை மூன்றே மூன்றுதான்.

திருப்பரங்குன்றம் குடைவரையைச் சாத்தன் கணபதி திருத்துவித்த போது நக்கன் கொற்றி கொற்றவைக்கும் சேட்டைக்கும் கோயில் செய்வித்ததாக ஜடில பராந்தகராகக் கருதப்படும் கோமாறன் கடையரின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு கூறுகிறது. திருமெய்யம் திருமால் குடைவரையை விடேல்விடுகு விழுப்பேர் அதி அரைசன் சாத்தன் மாறனின் அன்னை பெரும்பிடுகு பெருந்தேவி புதுக்கியதாக ஒரு கல்வெட்டு பேசுகிறது நார்த்தாமலையில் சாத்தன் பழியிலி எடுத்த பழியிலி ஈசுரத்திற்கு அவரது மகள் பழியிலி சிறிய நங்கை முக மண்டபம், இடபம், இடபக் கொட்டில், பலித்தளம் ஆகியவற்றை எடுத்ததாக நிருபதுங்கவர்மரின் ஏழாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு எடுத்துரைக்கிறது.

இம்மூன்றனுள் திருமெய்யம் புதுக்கப்பட்டது. கொற்றவை, சேட்டைக் கோயில்கள் பரங்குன்றம் புதுக்கப்பட்டபோது அதன் உடனமைப்பாகச் செய்யப்பட்டன. பழியிலி ஈசுவரத்திலோ சிறிய நங்கைக்கும் குடைவரைக்கும் தொடர்பில்லை. இந்நிலையில் வரலாற்றாய்வு மையத்தால் இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் இரண்டு புதிய கல்வெட்டுகளும் தமிழக வரலாற்றில் புதிய பக்கங்களைத் திறந்துள்ளன.

பல்லவ மரபில் பிற்காலத்தில் எடுக்கப்பட்ட கற்றளிகளோடு தொடர்புடையவர்களாக ரங்கபதாகை, தர்ம மகாதேவி போன்றோர் சுட்டப்பட்டாலும் குடைவரை எடுத்தவர்களாகப் பல்லவர் காலப்

ரா. பொன்ராசன்

ல, ள, ழ,

பயிற்சிக்கு ஒரு பாட்டு...

வேலை வேலை வேலை எந்த
வேலை என்றா லும் – அது
காலை மாலை கடும் வெயில்
வேளை என்றா லும்
நாளை நாளை நாளை என்று
நாள் கடத்தா மல் – அதை
நாம் முயன்று முடிக்க வேண்டும்
அப்போ தப்போதே!

ஏழை ஏழை ஏழை யாக
இருந்து விட்டா லும் – கொடும்
கோழை யாக மட்டும் என்றும்
இருக்கக் கூடாது!
வாழை யடி வாழை வீர
வைர நெஞ்ச ரே – எழுந்து
வாரும் நம்தம் கடமை செய்வோம்
இப்போ திப்போ தே!

ஸ்ரீ குரு ராகவேந்திரர்..!

நாவன்னா கந்தசாமி

(குறிப்பு: சகானா இராகத்தைத் தழுவியது இந்தக் கீர்த்தனை)

பல்லவி

மகாத்மியமோ – ஸ்ரீராகவேந்திரர்
மகாத்மியமோ.....! (மகாத்மியமோ)

அனுபல்லவி

கோபிச் சந்தன சற்
குருவே பிருந்தா வனமே! (மகாத்மியமோ)

சரணம்

ஸ்ரீராமனின் திண் தோளழகே;
கிருஷ்ணனின் கண்ணழகே!
வேத வியாசரின் கவித்துவமே;
விஷ்ணுவின் அநுக்கிரகமே! (மகாத்மியமோ)

நரசிங்கப் பெருமாளின் கம்பீரம்;
ஐவரும் ஐக்கிய மாகி
தேவரும் மூவரும் போற்றியே;
புகழ்ந்து கொண்டாடும்! (மகாத்மியமோ)

பெண்கள் யாரும் இதுநாள் வரையிலும் வெளிப்படவில்லை. இந்நிலையில் இப்புதிய கல்வெட்டுகள் இரண்டு குடைவரைகளுமே மகளிரால் செய்யப்பட்டவை என்று அறிவிப்பது பெருமைக்குரியதாகும். இரண்டாம் குடைவரை அரசு மரபு சாராத பெண்ணாலும், மூன்றாம் குடைவரை அரசு மரபு சார்ந்த பெண்ணாலும் எடுக்கப்பட்டுள்ளன. எந்த வேறுபாடுமின்றி ஒரே மலையில் சமுதாயத்தின் இருவேறு நிலைகளைச் சேர்ந்த பெண்கள் கோயிலெடுக்க முடிந்திருப்பது, அக்காலத்து மக்கள் மனநிலையையும் சமுதாயச் சூழலையும் தெளிவுபட உணர்த்துகிறது. கல்வெட்டில் லக்கச் சோமாசியார் மகள் பெயர் குறிக்கப்படவில்லையாயினும், பல்லவப் பேரரசரின் மகள் பெயர் கிடைத்திருக்கிறது. கொம்மை என்றழைக்கப்படும் இவ்வம்மையின் தந்தையான பல்லவப் பேரரசரை அடையாளம் காண வேண்டியுள்ளது. வயந்தப் பிரியரசர், விழுப்பேர் அதி அரசர் என்பது போல் பல்லவப் பேர் அரசர் என்பதும் ஒரு சிற்றரசரைக் குறிப்பதாகலாம். பல்லவர்களின் கிளையில் வந்த அரச மரபினராக இவர்களைக் கொள்ளலாம்.

கொம்மை மிக அழகிய பழந்தமிழ்ச் சொல்லாகும். சங்க இலக்கியங்களில் பல இடங்களில் எடுத்தாளப்படும் இச்சொல் அழகு, திரட்சி, பெருமை, இளமை என்னும் பொருள்களைத் தரப் பயன்படுத்தப்பட்டுள்ளது. அகநானூற்றுப் பாடல்கள் இரண்டிலும் குறுந்தொகைப் பாடல் ஒன்றிலும் தவிர பிற இடங்களில் எல்லாம் கொம்மை என்ற சொல் மார்பகத்திற்குரிய அடையாகவே எடுத்தாளப்பட்டுள்ளது. பரிபாடலில் வாரணி கொம்மை என்ற வரிக்குக் கச்சணிந்த இளமுலை என்று பொருள் தரப்பட்டுள்ளது. மார்பகத்தைக் குறிக்கும் சொல்லாகவும், மார்பகத்தின் இளமையை, அழகைத் திரட்சியைக் குறிக்கும் சொல்லாகவுமே கொம்மை சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது. பேரகராதி, கொம்மைக்குத் தரும் பல பொருள் விளக்கங்களில் இவையும் அடக்கம்.

இளமையும், அழகும் நிரம்பியவர் என்ற பொருளில் கொம்மை என்ற பெயரைப் பல்லவப் பேரரசர் மகள் பெற்றிருக்கலாம். இதில் மற்றுமொரு சிறப்பு, இதுவரை கிடைத்துள்ள பல்லவ மரபுப் பெயர்களில் இதுவே முதல் தமிழ்ப் பெயராகும். சங்க இலக்கியங்களில் பயின்று வந்துள்ள ஒரு சொல், பல்லவர் காலத்துப் பெண் ஒருவரின் பெயராகியிருக்கும் சிறப்பு வல்லம் குடைவரைக் கல்வெட்டுகளின் கண்டுபிடிப்பால் வரலாறாகியிருக்கிறது.

உபநயனம்

பிரதிபா ராஜகோபாலன்

வாழ்க்கையில் ஒருவன் எவ்வளவுதான் முன்னேறினாலும், அந்த முன்னேற்றத்துக்கு உறுதுணையாயிருந்தவர்களை மறக்கக் கூடாது. கண்ணை இமை காப்பதுபோல் காத்திருந்து, வித்து மரமாக வளர உதவிய உரமல்லவா அவர்கள்?

தற்செயலாக கோவிந்த ராஜுலுவை, மணிக்கூண்டு பக்கம் பார்த்துப் பேசிக் கொண்டிருக்கும் போது தான் வெங்கடசுப்பையர் சாரைப் பற்றித் தெரிய வந்தது.

அவரை, நாங்கள் அய்யர் வாத்தியார் என்று கூப்பிட்டோம். சக ஆசிரியர்கள் வியெஸ் என்று கூப்பிட்டார்கள்.

ஏரிப்பாளையத்தில் ஒரே ஸ்கூல் தான். ஐந்தாவது வரை தான் வகுப்புகள். அதில் படிக்கவே பையன்களைத் தேட வேண்டியிருந்தது.

முதல் வகுப்பில் சுபத்ரா டீச்சர். இரண்டாம் வகுப்புக்கு மரியம்மாள் டீச்சர். மூணாம் வகுப்புக்கு அய்யர் வாத்தியார். நான்காம் வகுப்புக்கு மருதாசலம். ஐந்தாம் வகுப்புக்கு கேத்த நாயக்கர்.

ஊர் சின்னதாயிருந்தாலும், மக்கள் ரொம்பவும் 'விவரம்' உள்ளவர்கள். கோயமுத்தூரை மான்செஸ்டர் என்றாலும், ஏரிப்பாளையத்தைச் சுற்றிலும் உள்ள பகுதிகளைத் தான், கோயமுத்தூரின் மான்செஸ்டர் என்று சொல்ல வேண்டும். நூற்பு ஆலைகள் நிறைய இருந்ததால், வேலைக்கு ஆட்கள் தேவையிருந்த காலம் அது.

"படிச்சது போதும்டா. கமலா மில்லுல ஸ்பின்னிங்ல வேலைக்கு ஆள் வேணுமாம். காத்தால, ஆறு மணிக்கு 'கேட்ல' நில்லு. டைம் ஆபீசுல சொல்லியிருக்கேன். புல் டவுசர் போட்டுட்டு வா. எடுத்துக்கு வாங்க. வாரக் கூலி. ஒரு வருசம் கழிஞ்சபிறகு பர்மனண்ட்டாக்கி, மாசச்சம்பளம் குடுப்பாங்க!"

பையன், புல் டவுசர் போட்டுக் கொண்டு போய் மறு நாளே மில்லில் சேர்ந்து கொள்வான். கையில் காசு வந்ததும் ஆளே மாறி விடுவான். அம்பாள் டாக்கீசுக்குத் தவறாமல் போவான். இருட்டில் பீடி குடிப்பான். வார விடுமுறையில் ராயல், ரெயின்போ, கர்னாடிக், ராஜா என்று எல்லாத் தியேட்டர்களிலும் மேய்ந்து விட்டு வருவான். தன் அனுபவத்தை, ஊரில் தன் சகாக்களுக்குப் பகிர்ந்து கொள்வான். 'பேசாம எங்கூட வா. ஸ்பின்னிங் மாஸ்டர்கிட்டே வேலைக்கு எடுத்துக்கச் சொல்றேன்" என்பான். இப்படித் தான் பசங்கள் பள்ளிக்கூடத்தை பகிஷ்காரம் பண்ணினார்கள். குடும்பத்தில் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா என்று எல்லாரும் மில்லுக்குப் போனதால், படிப்பை விட்டு வேலைக்குப் போவதை யாரும் குற்றமாக நினைக்கவில்லை. போகாமல் இருந்தால் தான் கேவலமாக நினைத்தார்கள்.

அநேகமாக அஞ்சாவது முழுசாப் படித்தவன் எவனும் இல்லை. கிராமத்துப் பசங்கள் இயற்கையாகவே வாட்ட சாட்டமாக இருந்தனர். வயசும் பதினஞ்சு ஆகியிருக்கும். ஒவ்வொரு வகுப்புக்கும் இரண்டு வருசமாவது தங்கிப் படிக்கிற பசங்கள் தான் அதிகம்.

இந்த மாதிரி கால கட்டத்தில் தான் அய்யர் வாத்தியார், ஏரிப் பாளையம் ஸ்கூலுக்கு மாற்றலாகி வந்தார்.

சுமாரான உயரம். நல்ல சிவந்த நிறம். அகலக் கரை வேட்டி. சிறகு விரித்தாற் போல கை வைத்த வெள்ளைச் சட்டை. அது அவரை இன்னமும் குள்ளமாகக் காட்டும். நெற்றியில் நடு மத்தியில் கோலிக் குண்டு அளவுக்கு ஒரு 'புருடு' புடைத்துக் கொண்டிருக்கும். அதன் மேல், விபூதி ஏறி இறங்கியிருக்கும். எதையும் தெளிவாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத்தான் அவர் பேசுவார்.

இரண்டாவது வகுப்பு வரைக்கும் ஒப்பேத்தி விட்டு, மூணாவது வந்து, அய்யர் வாத்தியார் பாடம் சொல்லி விட்டுக் கேள்வி கேட்க ஆரம்பித்த பின் தான், படிப்பின் பயங்கரமே தெரிந்தது. இதில் இத்தனை விஷயம் இருக்கும் என்று அப்போது தான் புரிந்தது.

அடி என்றால் அப்படி ஓர் அடி. தொடை வீங்கிவிடும். நாளைக்கு நாலாவது வாய்ப்பாடு ஒப்பிக்கணும் என்றால் ஒப்பித்தே தீரவேண்டும். சாயந்திரம் ஆறுமணி ஆனாலும் விடமாட்டார். அதே சமயம் சொல்லித் தருவதிலும் அவர் மன்னன். மர மண்டையிலும் 'கோந்து' போல ஒட்டிக் கொள்ளும். அடிக்குப் பயந்தே படிக்க ஆரம்பித்தோம்.

"எவனாவது வராம மட்டம் போட்டீங்க, தோல உரிச்சுப் போடுவேன்" என்று தினமும் சாயந்திரம் கடைசிப் பீரியடில் எச்சரித்து அனுப்புவார்.

"பையனுக்குப் படிப்புப் போதுங்க. ஜெனார்த்தனா மில்லுல, ஆள் எடுக்கறாங்க." என்று சொல்ல ஆரம்பித்த கந்தசாமியின் அப்பாவை, காரசாரமாகத் திட்ட ஆரம்பித்துவிட்டார், ஒரு தரம்.

"என்னய்யா, அறிவு இருக்கா உனக்கு? பத்து வயசுப் பையனை வேலைக்கு அனுப்பி, நீ சோறு திங்கணுமா? எல்லாருமே வாரக் கூலியாப் போய்ச் சேர்ந்துட்டா, ஸ்பின்னிங் மாஸ்டரா, டைம் கீப்பரா, மேனேஜரா வேலை செய்ய ஆள் வேண்டாமா? அதுக்குத் தகுந்தாப்ல படிச்சிருந்தாத்தானே அந்த வேலைக்குப் போகமுடியும்?"

"வாஸ்தவமுங்க"

"அப்புறம் என்ன, பையனை ஒழுங்கா ஸ்கூலுக்கு அனுப்பு"

தினமும் சாயந்திரம் வீடுவீடாகப் போய், படிப்பின் அருமையைப் பற்றி எடுத்துச் சொல்வார்.

படிப்பு வராத பையன்களுக்கு டியூஷன் எடுப்பார். அதற்குப் பணம் வாங்கிக்கொள்ள மாட்டார்.

அவர் முயற்சியால் தான் ஒவ்வொரு ஸ்டாண்டர்டுக்கும் இரண்டு வகுப்புகள் வந்தன.

தொழிலாளர்கள் நிறைந்த ஊர் என்பதால், கம்யூனிஸ்ட் கட்சி நன்றாக வேர் பிடித்திருந்த காலம் அது. மாதத்தில் ஒரு கூட்டமாவது நடக்கும். அப்போதிருந்த முக்கி

யமான கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் எல்லாரும் வந்து பொதுக் கூட்டம் நடத்திப் பேசி இருக்கிறார்கள்.

சாமண்ணா காபி கிளப்பிலும், பங்கஜம் சவுண்ட் சர்வீஸ் கடையிலும் 'ஜனசக்தி' வரும். அதைப் படித்து விட்டு, தங்கள் குறைந்த அறிவை வைத்துக் கொண்டு, இந்திய அரசியலை அலசிப் பிழிவார்கள், மக்கள்.

மூணாவது வகுப்பில் படிக்கும் போது, ரஷ்யாவில் முக்கிய தலைவர் ஒருவர் காலமாகி விட்டதால், எல்லாப் பையன்களையும் வகுப்பை விட்டு வெளியே வரச் சொல்லி, ஊருக்குள் மௌன ஊர்வலம் நடத்திக் கூட்டம் போட்டார்கள். ஊரின் முக்கிய மனிதர்கள் கூப்பிடும் போது, நாங்கள் சந்தோஷமாக ஊர்வலத்தில் கலந்து கொண்டோம்.

மறுநாள் அய்யர் வாத்தியார் விட்ட அறை இருக்கிறதே, இப்பவும் ஞாபகத்தில் வலிக்கிறது.

"ஏன்யா, அப்பாவிப் பசங்களை, இதிலெல்லாம் இழுக்கறீங்க?" என்று கட்சிக்காரங்களை, பகிரங்கமாகக் கோபித்துக் கொண்டார்.

ஒரு நாள் கோவிந்தராஜுலு வகுப்பில் நுழைந்த உடனே, ஒரு விஷயம் சொன்னான்.

"நிஜமாவா?"

"ஆமா! கோபால்! எங்க வீட்டுக்கு முன்னால, காங்கிரஸ் ஆபீஸ் மாடி இருக்குதில்ல, அந்த முக்குல, சினிமா எடுக்கறாங்க. வா, பார்க்கலாம்"

இன்டர்வெல் வரை மனசை அடக்கிக் கொண்டு, மணி அடித்த பின், ஒரே ஓட்டமாய் அந்த இடத்துக்கு ஓடினோம்.

நிஜம் தான்.


நாலைந்து வேன்கள், காமிரா, சுற்றிலும் வேடிக்கை பார்க்கும் மக்கள். கொட்டாப்புளி ஜெயராமன் கோழி திருடியது சம்பந்தமான ஒரு காட்சியைப் பல முறை எடுத்தார்கள். எங்களுக்கு அலுத்து விட்டது. 'சே, இவ்வளவு தானா சினிமா' என்று புரிய ஆரம்பித்த போது அய்யர் வாத்தியாரின் முகம் பிரம்ம ராட்சஸ் போலத் தெரிந்தது.

மீண்டும் ஒரே ஓட்டமாய் ஸ்கூலுக்குப் போய், வகுப்பில் நுழைந்த போது, பையன்கள் எங்களை ஒரு மாதிரிப் புன்னகையுடன் பார்த்தார்கள்.

"வாங்கடா, ஷூட்டிங் முடிஞ்சுதா?"

மேஜை மேலிருந்த காரமடைப் பிரம்பை எடுத்துக் கொண்டார். இரண்டு கைகளும் பழுத்துவிட்டன.

கொஞ்ச நாள் கழித்து முல்லை வனம் என்ற படத்தில் அக் காட்சி வந்தது. அம்பாள் டாக்கிசில் படம் பார்த்த போது, இந்த ஷூட்டிங்கை, ஏற்கெனவே பார்த்தோம் என்று



சொல்லிக் கொண்டபோது, மனசு ஆகாயத்துக்குப் பறந்தது.

கிராமத்தின் பகுதி நேர போஸ்ட் மாஸ்டராய் கொஞ்ச நாள் அவர் இருந்தார். அதனால், ஊரின் எல்லா வித மனிதர்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது.

ஊர்ப் பெரிய மனிதர்களிடம் சொல்லி, வாரக் கடைசி நாளன்று, எல்லாப் பசங்களுக்கும் மிட்டாய், பேரிச்சம் பழம், வேர்க்கடலை, வாழைப்பழம், என்று ஏதாவது ஒன்றைக் கொடுக்கச் செய்தார். அதனால், எல்லாருக்கும் ஸ்கூல் என்றாலே நல்ல இமேஜ் தோன்றத் தொடங்கி விட்டது.

மழை வரும் சமயங்களில் மூணாங்கிளாஸ் 'ஏ'பிரிவும், நான்



காவது 'பி'பிரிவும் பக்கத்திலுள்ள பத்ரகாளியம்மன் கோயிலுக்குள் ஷிப்ட் ஆகிவிடும். இப்போது கோயில் ரொம்ப 'மாடர்னாக', இருக்கிறது. அப்போது ஓட்டு வில்லைதான் மூன்று பக்கமும் திண்ணைகள் இடப்புறத் திண்ணையில் சப்பரமும் சிம்ம வாகனமும், காவித்துணி போட்டு மூடப்பட்டிருக்கும். வலப்புறத் திண்ணையில்தான் வகுப்புகள் நடக்கும். திண்ணைக்கு மேல், சுவர் முழுவதும் சித்திரங்கள் வரையப் பட்டிருக்கும். அதிலும் அனுமார் சித்திரம் தத்ரூபமாய் இருக்கும். பாடத்தில் மனசு போகாமல், சித்திரத்தில் மனசு பதிந்து, உதை வாங்கிய நாள்கள் சில .

ஆனால் சாருக்கு, யார் படிக்கும் பசங்கள், யார் படிக்காத பசங்கள் என்று தெரியும்.

மூணாவது வகுப்பிலிருந்து, நாலாவது வந்த பின், கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது. இருந்தும் அவர் போட்ட அஸ்திவாரத்தினால், படிப்பது ரொம்ப சுலபமாய் இருந்தது.

அஞ்சாவது வந்த பின், ஆடோமாடிக்காய் படிப்பில் ஆர்வம் வந்து விட்டது. இனி தொடர்ந்து எங்கே படிப்பது என்ற ஏக்கமும் வந்து விட்டது. கேத்த நாயக்கரும் அய்யர் வாத்தியாரும் டவுனில் உள்ள உயர் நிலைப்பள்ளியுடன் தொடர்பு கொண்டு, ஆறாவது வகுப்பில் எங்களைச் சேர்க்க ஏற்பாடு செய்தார்கள்.

"டவுனுக்குப் போறதான்னு யோசிக்க வேண்டாம். அது நல்ல ஹைஸ்கூல். இந்த மாதிரிப் பசங்கள எடுத்துக்க அவங்க யோசனை பண்ணினாங்க. ஆனா, வற்புறுத்திக் கேட்டுட்டதால, சம்மதிச்சிருக்காங்க. ஒரு டெஸ்ட் வைப்பாங்க. போய் எல்லாரும் எழுதுங்க." என்று ஊக்கம் கொடுத்தார்கள்.

இருபது பசங்கள் எழுதியதில், நாங்கள் நாலு பேர் தான் தேறினோம்.

டி.சி.வாங்கும்போது, "சார் கால்ல விழுந்து கும்பிட்டு, சர்டிபி கேட்டை வாங்கு" என்று அப்பா சொன்னதனால், அந்தச் சமயம் இருந்த அய்யர் வாத்தியார், கேத்த நாயக்கர், மருதாசலம் சார் ஆகியோரின் காலில் விழுந்து கும்பிட்டேன். எல்லா சார்களும் நெகிழ்ந்து விட்டார்கள்.

"தீர்க்காயுசா இருந்து, ரொம்ப நல்லாப் படிச்சு, சமூகத்துல உயர்ந்த அந்தஸ்துக்கு வரணும்" என்று அய்யர் வாத்தியார் வாழ்த்தினார்.

உயர்நிலைப்பள்ளிக்குப் போன புதிதில் அந்தக் கட்டடங்களும், ஹெட்மாஸ்டர் ஈ.வி.யும், மற்ற ஆசிரியர்களும், நடைமுறையில் இருந்த கண்டிப்பும் கறாரும் மனசை ஒடித்து விட்டன. ஆனால், ஏரிப் பாளையம் பள்ளியில் போட்ட அஸ்திவாரம், இங்கே ரொமபவும் உதவியது. படிப்பில் யாரும் பின் தங்கவில்லை.

பத்துப் பதினைந்து நாள் கழித்து, சாயந்திரம், சிம்னி விளக்கை அம்மா துடைத்துக் கொண்டிருந்த போது, வாசலைத்தாண்டி, திண்ணைக்கு வந்து அய்யர் வாத்தியார் உட்கார்ந்து கொண்டு 'கோபாலா கோபாலா!' என்று கூப்பிட்டார்:

வெளியே வந்து, "உள்ளே வாங்க சார்" என்று கூப்பிட்டேன்.

"இங்கேயே உட்கார்ந்துக்கிறேன். உள்ளே விளக்கு வெளிச்சத்தைப் பார்த்தாக் கண் கூசும்" என்றவர், "உன்னைப் பார்க்கவே வந்தேன். ஹைஸ்கூல் படிப்பு எப்படி இருக்கு? ரொம்ப ஸ்ட்ரிக்ட்னு கேள்விப் பட்டேன். அதுக்காக மனச விட்டுடாதே. ஒழுக்கமா இருக்கிற உன் மாதிரிப் பசங்களுக்கு அந்தக் கண்டிப்பு இன்னும் நல்லது தான். நல்லாப்படி. உனக்கு ஏதாவது சந்தேகம் இருந்தா, சாயந்திரங்கள்ல வா. சொல்லித்தர்றேன்"

"சரி சார்!"

நானும் மாணிக்கமும் சந்திர சேகரனும் கோவிந்தராஜுலுவும் தினம் சாயந்திரங்களில் அவரிடம் படித்தோம்.

அந்த வருஷம் பாஸ் ஆகி, ஏழாவது போன பின், ஹைஸ்கூலுக்கே அய்யர் வாத்தியார் வந்து, ஹெச்.எம். ஈ.வி.யிடம் வந்து எங்களைப் பற்றி நல்ல முறையில் சொல்லி ஸ்கூல் ஃபீஸ் கட்டுவதிலிருந்து விலக்கு வாங்கித் தந்தார். மெல்ல மெல்லப் பாடங்களில் மூழ்கினோம்.

தங்கம் மச்சர், ரத்னையா, பழனிசாமி, விவேகானந்தம், ஆடலரசு, வில்லியம்ஸ் பீட்டர், சேஷகிரிராவ், சி.ஆர்.பி. என ஆசிரியர் குழு, மனமாரச் சொல்லிக் கொடுத்தார்கள்.

ஏரிப்பாளையத்தில் வசித்தாலும், எண்ணம், கனவு, கற்பனை என் பவை, அதைத் தாண்டிப் பரந்து விரிந்து கல்வியின் நீள அகலங்கள், உயர ஆழங்கள் என்ன என்று தெரிய ஆரம்பித்தன.

பத்தாவது முடித்த பின், புகுமுக வகுப்பில் சேர்ந்த பின், மூணாவது கிளாஸ் வாத்தியார் தானே என்று அவரைப் புறக்கணிக்கவே இல்லை அவரும் தன் கடமை மூணாவதிலேயே முடிந்து விட்டது என்று விடாமல் நேரமும் சூழ்நிலையும் அனுமதித்த போதெல்லாம் கல்வியின் முக்கியத்துவத்தையும், எதிர் காலத்தில் நல்லவனாக இருந்து முன்னேற வேண்டிய அவசியத்தைப் பற்றியும் அழுத்தமாக எடுத்துச் சொன்னார்.

பட்டப் படிப்பு வகுப்பில் சேர்ந்த பின்னால் கூட, அரசினர் கலைக் கல்லூரியில் ஒரு பிற்பகல் நேரத்தில் என்னை விசாரித்துக் கொண்டு வந்துவிட்டார்.

"என்னோட அத்தை மகன் இங்கே பிசிக்ஸில் லெக்சரராக இருக்கான். உன்னை அறிமுகப்படுத்தி வைக்கிறேன்" என்று ஆர்வத்தோடு கூட்டிக் கொண்டு போய் அறிமுகப் படுத்தி வைத்தார்.

"ரொம்ப நல்ல பையன். வசதி இல்லாத குடும்பம், அமைதியான பையன். கொஞ்சம் கூச்ச சுபாவம். அடிக்கடி நீ கவனிச்சுக்கோ."

"உனக்குத் தெரியாத விஷயம். எனக்கு ஒன்னு தெரியும் சுப்பு! கோபால் நல்லாக் கதை எழுதுவார்" என்றார் பிசிக்ஸ் லெக்சரர்.

"அப்படியா? ஏன் கோபால் இது வரை என் கிட்டே சொல்லலே?"

அது தான், நான் அவரைக் கடைசியாகப் பார்த்தது.

மூணாவது வகுப்புக்கு வாத்தியாராக வந்தவர், மூணாவது வாத்தியாராகவே ரிடையராகி, கண் ஆபரேஷன் செய்து கொள்வதற்காக மதுரைக்குப் போனவர், அங்கேயே, தங்கிவிட்டார்.

என்னுடைய படிப்புக்குப்பின், வேலைக்காக வெளிமாநிலம் போனவன், நாலைந்து வருடங்கள் ஊர்ப் பக்கம் திரும்பவே முடியவில்லை.

அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றபோது தான் ஊருக்கு வர வேண்டிய கட்டாயம் வந்தது.

நண்பர்களும் என்னைப் போல, வேலையின் நிமித்தம் பல ஊர்களில் இருந்தார்கள். ஏரிப்பாளையம் பல வகைகளில் மாறிவிட்டது. அதன் முகமே விகாரமாக இருந்ததுபோல, ஒரு பிரமை தட்டியது.

பள்ளிக்கூடத்தின் தோற்றமே மாறியிருந்தது.

அதன் சுவர்கள் முழுதும் சினிமா சுவரொட்டிகள் சற்றுத் தள்ளி, சாராயக்கடை. ஸ்ட்ரைக் செய்யும் வாத்தியார்கள், 'எல்லாம்' கற்றுக்கொண்ட மாணவர்கள். மனோபாவமே மாறிப்போன மக்கள், கம்யூனிஸ்ட்களின் கோட்டையாக இருந்த ஊரில், மைதானம் முழுதும் பல கட்சிக் கொடிகள். புதிய தலைமுறை ஒன்று, எல்லாவற்றையும் குறுக்கு வழியில் அவசரமாகத் தெரிந்து கொண்டு, அதை வியாபாரமாக்கும் தந்திரங்களில் மனசைப் பதியவைத்து, புற்றுநோய் போல வளர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நாள் சாயந்திரம், டவுனுக்குப் போய்த் திரும்பும்போதுதான் மணிக் கூண்டு ஸ்டாப்பில் ஏறிய கோவிந்தராஜுலுவைச் சந்திக்க நேர்ந்தது.

இருவரும் நலன்களை விசாரித்துக் கொண்ட பின்தான், யதேச்சையாக அய்யர் வாத்தியாரைப் பற்றிய பேச்சு வந்தது.

"அவரு, மதுரையை விட்டு நம்மூருக்கே வந்துட்டார். ஆனா அவர் இருக்கிற விஷயமே, மூணு நாளைக்கு முன்னே தான் தெரிஞ்சது. நானும், ரெண்டு வருஷத்துக்கு அப்புறம் தான் ஊருக்கு வந்திருக்கேன். அதுவுமில்லாம, நம்ம அய்யர் வாத்தியாரை, ஊர்ல எல்லாரும் மறந்துட்டாங்க கோபால்! இப்ப இருக்கிறவங்களுக்கு , அவர் ஒரு வாத்தியார்னே தெரியாது..."

இருவரும், ஊருக்கு வந்து, முல்லைவனம் ஷூட்டிங் எடுத்தார்களே, அந்த வீட்டுக்கு முன் இருந்த சின்ன போர்ஷனில் அய்யர் வாத்தியாரைப் பார்த்தோம். ஏன் பார்த்தோம் என்றாகி விட்டது.

பழைய ஆளே அல்ல அவர். உடம்பில் எலும்பு தான் மிஞ்சியிருந்தது. அந்த நிறமும் தேஜஸும் மாறி, கறுத்து, சுருங்கிப் போயிருந்தது. நெற்றியிலிருந்த அந்தப் 'புருடு'தான், அவரை உறுதிப் படுத்தியது. எங்கள் பெயரைக் கேட்டதும், எழுந்து கொண்டார்.

"பார்வையே போச்சு கோபால்! பேருக்கு இருக்கேன். என்ன பண்றே? எங்கே இருக்கே? கல்யாணம், ஆயிடுச்சா, கதைகள் எல்லாம் ரொம்ப எழுதறியாமே?"

பழைய நினைவுகளினால் உணர்ச்சிகள் கரைந்தன. அழுகை பொங்கியது.

Prosperity 2000

All those born before the world war had an yearning for freedom of India and her Prosperity. Freedom was won in 1947 but prosperity was elusive. More than a dozen experts from different countries met in Madras two years ago to discover a viable strategy to usher Indian into Prosperity. A plan was drawn up and unanimously agreed upon to shift agriculture to commercial crops. Its salient features are,

Generation of 100 million jobs in 7 years,

Raising the entire population above poverty line,

Raise agriculture exports to Rs.40,000 crores

When presented to the Prime Minister, he found it exciting. This plan was accepted by the government and is incorporatted into the current Five Year Plan. The plan pleads with the government to be a catalyst by providing modals for demonstration so that the population at large will implement it by themselves.

This is published under the title *"Prosperity 2000"* by *Bharatiya Vidya Bhavan, Bombay* and is priced Rs.60\-

"நீங்க போட்ட பிச்சை சார்! வசதியா இருக்கேன் சார்! முக்கிய மான விஷயங்கள் முடிவு செய்யும் போது, நம்ம அய்யர் வாத்தியார் இப்ப என்ன சொல்லுவார்னு நானே கற்பனை செய்து ஒரு பதிலை வரவழைச்சுக்குவேன். அதன்படி தான் முடிவு எடுப்பேன். இப்பவும் நீங்க தான் எனக்கு வாத்தியார் சார்."

அவர் என்னுடைய கையைப் பிடித்துக் கொண்டு, "கோபால்! என்னோட சின்ன வயசுல, பிராமணன்கிற முறைல, பூணூல் போட்டாங்க. எங்கப்பா, சம்ஸ்கிருதப் பண்டிதர். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தான் படிச்சேன். அந்த வாத்தியார் சொன்னார். 'பூணூல் போடற இந்த விசேஷத்தை உபநயனம்னு சொல்றோம். நயனம்னா கண்ணுனு அர்த்தம். உபநயனம்னா கண்ணுக்குப் பக்கத்துலேன்னு அர்த்தம்.

பழைய காலத்துல உபநயனம் பண்ணின உடனே, குரு குலத்துல சேர்த்திடுவாங்க. ஒரு குருவோட பார்வையின் கீழே, அவர் பராமரிப்பின் கீழே, பையன் நல்லாப் படிச்சு சமுகத்தில் சிறந்தவனா வரணும்னு, தான் ஒரு குறிப்பிட்ட வயசுல உபநயனம் செய்து, குரு கிட்ட சேர்த்தினாங்க. இப்ப உபநயனம் வேறே, படிக்கிறது வேறேன்னு தனித்தனியா சம்பந்தம் இல்லாமப் போயிடுச்சுன்னார். இன்னும் அந்த வார்த்தைகள் என் மனசில அச்சாப் பதிஞ்சிருக்கு.

"அந்தக் காலத்துல சிஷ்யனும் குருவை மதிச்சான். குருவும் அந்த மதிப்பை வளர்த்திட்டார். நாமும் ஒரு குருவா வாத்தியாரா ஆகணும்னு நெனச்சேன். மனசார என் கிட்டே படிக்கிற, படிச்ச பசங்கள் முன்னேறணும்னு விரும்பினேன். எனக்குத் தெரிஞ்சதை மனப்பூர்வமாச் சொல்லிக் கொடுத்தேன். அதைக் கத்துட்டு, என் மாணவன் பிரகாசமாக முன்னேறும்போது, என் சந்தோஷத்துக்கு அளவே கிடையாது. இந்த வயசுல, பார்வை போன பின்னால, துணைக்கு என் பேரன் இருக்கான். அவன் உடம்பு ரீதியான துணை. என் நிஜமான துணையே, என் மாணவர்களோட நினைவுதான்" என்று சொல்லும் போதே, அவர் ஒளியிழந்த நயனங்கள், கண்ணீரைச் சிந்தின.

அவரின் குறுகிய எதிர்காலத்துக்கு, நிம்மதியான ஒரு வாழ்வைத் தரவேண்டும் என்ற முடிவோடு, அவரின் பாதங்களில் வணங்கி வீடு திரும்பும்போது, அவரின் சிறப்பும், உயர்வும் மனசுக்குள் பொங்கிக் கொண்டிருந்தன.

அய்யர் வாத்தியாரைப் போல, இன்னொருவர் கிடைத்தால், மீண்டும் படிக்கலாம் என்று எண்ணம் தோன்றியது.

ஆனால், கிடைத்தால் தானே?



கவிஞர் கா. வேழவேந்தன்

பேனாவின் குறிக்கோள்

'வாழ்வியல்' இலக்கை யெல்லாம்
'வள்ளுவர்' குறளில் சொன்னார்!
தாழாத 'பெண்வீரத்தின்
தனிச்சீரை' 'இளங்கோ' சொன்னார்!
ஆழமாய் 'அறத்'தைப் பற்றி
அழகுடன் 'சாத்தன்' சொன்னார்!
வீழ்ந்தநம் தமிழர் மீண்டும்
விழித்திடப் பேனா வேண்டும்!

கால்நடைப் பயணத் திற்கே
கட்டாயம் குறிக்கோள் தேவை!
நூல் ஒன்று குறிக்கோள் இன்றேல்
நுரையைப்போல் அழிந்தி டாதா?
'நாலடி' நீதி நூல்கள்
நாவெலாம் தவழ்வ தேன், ஏன்?
ஆல்போலே கிளைத்து நிற்கும்
அற்புதக் கருத்தால் அன்றோ?

மையலை, மயிலே என்றும்
மானென்றும், குயிலே என்றும்
ஒய்யார அன்ன மென்றும்
ஓயாமல் சொன்ன தெல்லாம்
ஐய்யய்யோ போதும், போதும்!
ஆக்கங்கள் சேர்ப்ப தற்கு
நெய்கின்ற கவிதைக் குள்ளே
நெடும்புதுக் கருத்தே தேவை!

கோளத்தின் மேல் ஓர் சின்னக்
கோவணம் போன்ற 'சப்பான்'
நாளெலாம் உழைத்த தாலே
நாடெலாம் திகைக்கும் வண்ணம்
ஆளாகித் தொழில்பெ ருக்கி,
அற்புதம் படைப்ப தெல்லாம்
நாள்தோறும் பேனா முள்ளால்
நம்மவர்க் குணர்த்த வேண்டும்!

நடிகையின் விரலில் மின்னும்
நகப்பூச்சின் வண்ணம் பற்றி
அடிகளால் கவிதை பண்ணும்
அற்பங்கள் தேவை தானா?
'விடியாதா பொழுதும்?' என்றே
விரக்தியின் விளிம்பில் நிற்கும்
குடிமகன் நிமிர, தீட்டும்
குறிக்கோளே கவிதை என்பேன்!

பார்வை சிறிது மங்கினாலும் வெளிச்சத்தைக் காண முடியவில்லையே எனப் பதறித் துடிக்கிற மனிதர்களுக்கிடையே, பார்வையற்ற சப்பாணி மட்டும், வெளிச்சத்தை வெறுத்து இருட்டை வரவேற்கிறானே, ஏன்?

இரவு எப்போது வரும்?

ஜெயரதன்

ரோட்டுலே சத்தத்தையே காணோமே! இருட்ட ஆரம்பிச்சிருச்சோ? அதுக்குள்ளாறயா இருட்டிடும்? மேலே வெயிலு உறைக்கவே இல்லியே? ஒருக்கா, நாமதான் பொளுது சாஞ்சதைச் சரியாகக் கணிக்கல்லையோ, என்னவோ ஒறங்கிட்டேன் போல....

சீக்கிரம் இருட்டிருச்சுன்னா எம்புட்டு நல்லா இருக்கும்? ஏன் கடவுள் ராத்திரிக்கு நேரம் சாஸ்தியாக் குடுக்காமப் போயிட்டான்? ராத்திரி நேரம் அதிகமா இருந்திச்சின்னா, ஒலகத்துலே சண்டை, சச்சரவு கொறச்சலா இருக்கும்னுதான் தோணுது. அவனவன் தின்னுட்டுத் தூங்கிப் போயிருவான். வெட்டிச் சண்டையில்லே, வெவகாரமில்லே. என்னுது உன்னுதுன்னு வெவகாரமில்லே. தூங்கையிலே கட்டின வேட்டிகூடச் சொந்தமில்லாமெப் போயிருது. கண்ணு முழிச்சதும் வேட்டியைத் தேடியில்ல, இடுப்பிலே சுத்திக்கிட வேண்டியிருக்குது!

ரயிலு ஊதுற சத்தம் கேக்குது. டாக்ஸி, ஆட்டோ, ரிக்ஷா அது இதுன்னு சனங்க வருவாங்க... துண்டை விரிச்சுவச்சம்னா ரெண்டு, மூணு ரூபா விளும். ராவுக்குச் சாப்பாட்டுக்கு சரியாப் போயிரும்...

ரயிலு ஊதி நேரமாயிருச்சே! ஏன் இன்னும் சனங்க போக்கு வரத்தையே காணோம்? சத்தமே-கேக்கலையே? மெய்யாலுமே ராவு வந்திருச்சா? இல்லே போலயே... சில்லுனு குளிரு வந்திடுமே.... வரக்காணமே...?

"அண்ணே!.. பெரியசாமியண்ணே.."

"அண்ணே!.. பெரியசாமியண்ணே.."

குரலையே காணமே! தூங்கிக் கீங்கிப் போயிட்டாரரோ? அட!... ஆளைக்காணமே... மூட்டைமட்டும் இருக்குது. எங்கிட்டோ போயிட்டாரு போல... எங்கே போயிருப்பாரு? சொல்லாமெ எங்கெனயும் போக மாட்டாரே!

ஆங்! அதோ சரட்டு சரட்டுனு காலைத் தேச்சி நடக்குற சத்தம் கேக்குதே! பெரியசாமியண்ணந்தேன்.

"அண்ணே!... எங்கண்ணே, போயிட்டீங்க?..."

"ஏலேய்! சப்பாணி!... ஒனக்குக் கண்ணு இல்லையே தவிர, காதுலே; கண்ணக் குடுத்திருக்காண்டா... டக்குனு கண்டுபுடிச்சிடறியே!.....



அன்னைக்கு இப்பிடித்தான் சுப்பம்மா என்னையப் பார்க்க வந்தா... வாய் வார்த்தை பேசலை. அதுக்குள்ள சுப்பம்மாக்காவான்னியே, எப்பிடிரா?..."

பெரியண்ணனுக்கு எப்பவுமே இதெல்லாம் ஆச்சரியம்தான். ஒத்தொருத்தருக்குன்னு பெசலா நடைச் சத்தம் இருக்குது. அதுமாதிரி, ஒத்தொருத்தர் ஒடம்புக்கும் ஒரு

வாசனை இருக்குது. தூரத்துலே வாரையிலேயே வாடை அடிச்சிடும். ஆளைக் கண்டுபிடிச்சிரலாம். ஒசரம், கனம், நிறம் இதையெல்லாம் கண்ணு கண்டுபிடிக்குது. நடையிலே கால் ஓரசுர சத்தத்தைக் காது கண்டுபிடிக்குது. ஓடம்பு வாசனையே மூக்கு கண்டுபிடிக்குது. இதென்ன பெரிய விசயம்? கண்ணில்லாதவனுக்குக் காதும் மூக்கும் கைவெரலும் அடையாளம் வச்சுக் கண்டுபிடிக்குது. அம்புட்டுத்தான்....


"எங்கேண்ணே போயிட்டீங்க?...."

"ரோட்டு முக்குலே சினிமா சூட்டிங். கமலும், குஸ்புவும் நடிச்சாக. அதான் ரோட்டுல வண்டியொண்ணும் போகல்லே. போலீசு எல்லாத்தையும் நிறுத்திடுச்சு.... அம்மாடி, குஸ்பு என்னா நெறம்றே?... உருளைக் கெளங்குக்குத் தோலை உறிச்ச மாதிரி... ஆத்தாடி!.... சும்மா... அப்பிடியே..... அளகுன்னா அளகு, அப்படி ஓர் அளகு!... நான் ஒரு பேமானி... குருட்டுப்பய நீ! ஒங்கிட்ட வந்து அளகு அதுஇதுன்னு சொல்றேனே!.... ஒனக்கு எப்பிடி அது தெரியும்?..."

பெரியசாமியண்ணன் அப்பிடித்தான் சொல்லுவாரு. எனக்குக் கண்ணு தெரியாதுதான். ஆனா பொறவியே அப்பிடியில்லே. எட்டு பத்து வயசு வரைக்கும் கண்ணு நல்லாத்தான் இருந்திச்சு... சிவப்பு, பச்சை, நீலம்னு எல்லாக் கலரும் எனக்குத் தெரியும். எங்க ஊர்க் கொளத்துலே தாமரைப் பூ பூத்துக் கெடக்கும். அதோட நெறமும், சுகமான வாசனையும் எம்புட்டு நல்லா இருக்கும்?

குஸ்பு, குஸ்புன்னு அளகைப் பத்திச் சொல்லுறாரே, எங்கம்மா எம்புட்டு அளகா இருப்பாங்க தெரியுமா? எங்கம்மாவைப் பெரியசாமியண்ணன் பாத்ததில்லே. பாத்திருந்தா இப்படிச் சொல்லியிருக்க மாட்டாரு... அப்பாடி! எம்புட்டு அளகா இருப்பாங்க எங்கம்மா! செவந்தின்னு பேரைப் பொருத்தமாத்தான் வச்சிருந்தாக... அவ்வளவு அளகா இருப்பாக... எங்கப்பாதான் அளகில்லே... கறுப்பா... குட்டையா குண்டா இருப்பாரு... சும்மாவாச்சும் அம்மாவைப் போட்டு அடிச்சுக்கிட்டே இருப்பாரு...

எனக்குச் சின்ன வயசுலே அம்மா பக்கத்துலேயே இருக்கப் புடிக்கும். அம்மாவோட பொடவைக்குன்னு ஒரு வாசம் இருக்கும். மெத்து மெத்துன்னு அதைத் தொட்டாலே அம்மாவைத் தொட்ட மாதிரி. சந்தோசமா இருக்கும். எப்பம் பார்த்தாலும் மெல்லிசாச் சிரிச்சுக்கிட்டே இருக்குற அம்மாவைப் போட்டு ஏன் அடிக்குறாரு இந்த அப்பா?



'ஏண்டி அங்கே போனே?... ஏண்டி இங்கே போனே? ஏன் இவன்கூடப் பேசறே?' அப்பிடீன்னு திட்டுவாரு. போட்டு அடிப்பாரு. அப்பங்கூட அம்மா பதில் பேசாம புடைவையை வாயிலே கவ்விக்கிட்டு அளுதுகிட்டு இருக்கும்... அப்பாவைப் போட்டு நாலு அடி அடிச்சிற மாட்டமான்னு எனக்குக் கோவம், கோவமா வரும். அந்தக் கோவத்துலே சொவரோரமாப் போயிக்கிட்டு இருக்குற எறும்பையெல்லாம் போட்டு நசுக்கிருவேன்.

நான் செவப்பா அளகா இருக்கேன்னு எல்லாரும் சொல்லுவாக. எனக்கும் அதுலே பெருமைதான். எங்கப்பாவுக்கு அதுதான் ரொம்பக் கோவம். 'இவன் ஏண்டி என்னை மாதிரியில்லே?... என் சாயலுமில்லே, நெறமுமில்லே? இது எப்பிடின்னு கேட்டு அடிப்பாரு.

இப்பிடி அடிச்சு அடிச்சே, எங்கம்மாவை வெரட்டி வுட்டுட்டாரு. ஒருநாள், எங்கம்மா எங்கயோ போயிட்டாக. யாரு கூடவோ ஓடிப் போயிட்டதாகச் சொல்லுவாக. 'எப்பிடி, ஓட முடியும்? எவ்ளோ தூரம் ஓட முடியும்? மூச்சு எறைக்காதான்னு அப்பல்லாம் நெனைச்சுக்குவேன். பெறகுதான் 'ஓடிப் போறது'ன்னா என்னன்னு புரிஞ்சிச்சு.

எனக்கு என்ன துக்கம்னா, எங்கப்பாவை விட்டுட்டுப் போனது சரி. என்னை ஏன் விட்டுட்டுப் போச்சு? நான் பிரியமாத்தானே இருந்தேன்! அம்மா, அம்மான்னு ஆசையாத்தானே இருந்தேன்! அதான் வெளங்கல்லே.

தாங்கமுடியாத கஷ்டம் வாரையிலே, புள்ளே, பொண்ணு அப்பிடிங்கற பாசம் கூடப் போயிரும் போல. நான்கூட நெனைச்சுக்குவேன். திடும்னு வெங்கடேசப் பெருமாளு எதுக்க வந்து 'ஒன் உயிரைக் குடுக்கிறயா இல்லே ஒன் புள்ளை உயிரைக் குடுக்கிறியா'ன்னு கேட்டா, எத்தனை பேரு தன் உயிரைக் குடுப்பாகன்னு...

இன்னொருத்தரைக் குத்தம் சொல்லுவானேன். நம்ம தலைச்சுழி நல்லா இல்லே, அம்மா போயிட்டா. அவ்ளோதான். அதுக்கும் பெறகு நான் பட்டபாடு நாயும்படாது. எங்கப்பா, யாரோ ஒரு கறுத்த பொம்பளையைக் கட்டிக்கிட்டாரு. அது பேய்மாதிரிக் கத்தும். எங்கப்பாவைக் கூட அடிச்சிடும். எனக்குச் சந்தோஷமாக்கூட இருக்கும். 'எங்கம்மாவைப் போட்டு அடிச்சயில்லே நல்லா வேணும்'னு நெனைச்சுக்குவேன். அரிசிப் பானையிலேந்து அரிசி எடுத்தாந்து, எறும்புப் பொந்துக்குள்ளே போடுவேன்...

நாளாக, நாளாக என் கஷ்டம் அளவுக்கு மீறிப் போயிருச்சு. ஆரம்பத்திலே வவுத்துக்குச் சோறு போட்டுடுத்தான் சித்தி அடிக்கும். அடின்னா என்ன அடி தெரியுமா? கையிலே கெடைக்கறதை எடுத்து அடிச்சிரும். நாளாக நாளாக வவுத்துக்குச் சோறுகூடப் போடாமெ அடிக்க ஆரம்பிச்சுது. மாட்டை வேலை வாங்குறமாதிரி வேலை வாங்கிச்சு... வவுத்துப்பசி ஆளைக் கொல்லும். கெறங்கி கெறங்கி வரும். நடைகூடத் தள்ளாடும். 'என்னடா ஆட்டம்? சாராயம் குடிச்சிட்டியா'ன்னு சித்தி அதுக்கு வேறெ அடிக்கும். அப்பனும் நேரில்லே. அவரு பங்குக்கு அவரும் அடிப்பாரு. என்னதான் செய்யறது?

அப்பல்லாந்தான் பக்கத்து வீட்டு ஆயா என் கிட்டப் பிரியமா நடந்து வவுத்துக்குக் கஞ்சி ஊத்து வாங்க. அந்தக் கஞ்சி எம்புட்டு ருசியா இருக்கும் தெரியுமா? ஆயாவூட்டுலே கன்னியம்மான்னு ஒரு பொண்ணு இருப்பா. அவகூட எங்கிட்டப் பிரியமா நடந்துக்குவா. எங்க சித்தி அடிச்ச எடத்துலே களிம்பு தடவி விடுவா. அவ கையாலே தொடுற போது, மெத்துமெத்துனு சொகமா இருக்கும். 'பாவம் தாயில்லாப் புள்ளை'ன்னு என்னைத் தன் மாரோட கட்டி அணைச்சுக்குவா. அது என்னமோ நல்லாயிருக்கும். ஒடம்புலே சுர்ருனு என்னமோ ஏறும். கன்னியம்மாளை நானும் இறுக்கமா கட்டிக்குவேன். மாரெல்லாம் மெத்து மெத்துனு சுகமா இருக்கும்...

மந்திரவாதி கதையை ஆயா சொல்லுறபோது ஒஹோன்னு இருக்கும். மந்திரக்கோலைக் காட்டி, சூன்யக் கௌவியைக் கல்லா மாத்தினான்னு ஆயா சொல்லுற போது நம்ம கையிலே அப்பிடி ஒரு மந்திரக் கோல் இருந்தா, இந்தச் சித்தியைக் கொரங்கா மாத்திடலாமேன்னு தோணும்...

"ஏன் ஆயா, மந்திரக்கோலு நமக்கெல்லாம் கெடைக்காதா?..."

"கெடைக்கும் ராசா!.. ராத்திரிலே காட்டுலே தேடினா, இருட்டுக்குள்ளார 'பளிச், பளிச்'சுனு மின்னிக்கிட்டுக் கெடக்கும். அது கையிலே இருந்திச்சின்னு வச்சுக்க, ஒன்னை யாரும் ஒன்னும் பண்ண முடியாது..."

"சித்தி கூடவா?"

"சித்தியென்ன ஒங்கப்பனும் ஒண்ணும் பண்ண முடியாது. அது இருந்திச்சின்னா கேட்டதெல்லாம் கெடைக்கும்..."

"எங்கம்மா கெடைக்குமா?..."

"ஊம்'...னு பெரிசா ஆயா தலையை ஆட்டும். 'எப்பிடியாச்சும் எனக்கு ஒரு மந்திரக்கோலைக் கெடைக்க வச்சுரேன்' அப்பிடீன்னு சுருப்பசாமிகிட்ட வேண்டிக்குவேன்...

ரோட்டுலே திரும்பியும் சத்தங் கொறைஞ்சு போயிருச்சு. வண்டிங்க போக்குவரத்தையே காணலை.

"அண்ணே.... ராவு வந்திரிச்சாண்ணே?... ரோட்டுல சத்தத்தையே காணமே..."

"...இவன் யார்ராவன்?... ராவு வந்திருச்சா, ராவு வந்திருச்சான்னு கன்னம் வைக்கிற திருடனாட்டம்... நீதான் பொட்டைப் பயலாச்சே... ஒனக்கு ராவென்ன, பகலென்ன?...'

"சத்தத்தையே காணமே.... அதான் கேட்டேன்..."

"யாரோ மந்திரியோ என்னவோ போறாகளாம். ரோட்டுல வண்டி வாகனத்தைப் போலீசு நிறுத்திடுச்சு... அதான் ரோட்டுலே சத்தமே இல்லே..."

அண்ணன் சொல்லிக்கிட்டு இருக்கையிலேயே 'விய்ங் விய்ங்'னு சத்தத்தோட ஒரு காரு போறசத்தங் கேட்டுச்சு. அத்தைத் தொட்டு 'விர் விர்'னு நெறையக் காருங்க போச்சு. மந்திரிமாருங்கதான் போறாக போல. எலக்சன் டயத்திலே அவுக பேசுற பேச்சுக்கும், இப்ப நடந்துக்குற பந்தாவுக்குந்தான் எம்புட்டு வித்தியாசம்? 'ஒங்களுக்கு ஒயக்க எங்களுக்கு உத்தரவு குடுங்க'ன்னு மேடையிலே பேசுறாக. ஜெயிச்ச பெறகு அவுகளைப் பாக்கவே பணம் தர வேண்டியிருக்குது. இந்த லச்சணத்துலே 'உத்தரவு' என்ன குடுக்கறது? எல்லாம் ஏமாத்து வேலையாப் போயிருச்சு...

ரோட்டுல மறுபடியும் சத்தங் கேக்க ஆரம்பிச்சிடுச்சு. ஜனங்க கசமுசன்னு போக ஆரம்பிச்சுட்டாங்க. சனங்க யாரும் இதைப் பத்திக் கவலைப்படறதாத் தெரியல்லே. சனங்களுக்குக் கோவம் வர்றதேயில்லே. சனங்களுக்குக் கோவம் வராத வரைக்கும்தான் இந்தப் பந்தாவெல்லாம் நடக்கும். நம்ம ஊரு சனங்களுக்குப் பத்தாது... "எலேய் சப்பாணி!... எதுக்குடா ராவு வந்திருச்சா, வந்திருச்சான்னு கேக்குறே?... ஒனக்கு ராவுக்கும், பகலுக்கும். என்ன வித்யாசண்டா தெரியும்?...

எந்த அத்தை மவளையாச்சு பார்க்கப் போறியா?...'

பெரியசாமியண்ணன் எப்பவும் இப்பிடித்தான் படால்னு தேங்கா ஒடைக்கிறமாதிரிக் கேட்டுப்புடுவாரு. மனசுக்குள்ற பூந்து பாக்கத் தெரியாது அவருக்கு. எல்லாத்யையும் வெலாவாரியா வெளக்கிச் சொல்லணும் அவருக்கு. என் மனசுலே என்ன இருக்குனு அவருக்கு என்ன தெரியும்?

"சும்மாத்தாண்ணே..."

பதில் சொல்லாமெ சமாளிச்சேன். என்னத்தைச் சொல்றது?

'டங்'குனு துண்டுலே ஏதோ காசு விளுந்த சத்தம் கேட்டுச்சு. எடுத்துப் பார்த்தேன். ஒரு ரூவாக்காசு!

"எலேய் சப்பாணி! யாரோ எட்டணாப் போட்டுட்டுப் போறாண்டா...'

அண்ணன் எட்டணான்னு நெனைச்சுட்டு இருக்காரு. அது ஒரு ரூவா. கொஞ்சம் கனமா, கொஞ்சம் பெரிசா இருக்கும். இப்பல்லாம் காசுலே வித்தியாசம் பாக்குறது கொஞ்சம் செரமமாத் தான் இருக்கு. பளைய எட்டணா அளவுக்குத்தான் புது ஒரு ரூவா இருக்குது. இருந்தாலும் நான் கண்டுபுடிச்சிடுவேன். பளைய எட்டணா சொரசொரன்னு இருக்கும். ஓரத்துலே வரிவரியா இருக்கும். புது ஒரு ரூவா வளவளன்னு, கன்னியம்மா களுத்து மாதிரி இருக்கும்.

ஆங்! கன்னியம்மா! அவ இருக்கிற வரைக்கும் நான் எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டேன். அவளும் கல்யாணம் ஆகிப் புருசன் வீட்டுக்குப் போயிட்டா. புருசன்னா பெரிசா ஒண்ணும் இல்லே. கெளவன். தலையெல்லாம் வளுக்கை விளுந்த கெளவன்.

கன்னியம்மா அப்ப ஒரேயடியா அளுதிட்டா.

"அளுவாத கன்னியம்மா!.... நான் ஒன்னியக் கட்டிக்கிடறேன். ரெண்டு பேரும் எங்கினாச்சும் ஓடிருவோம்.." னேன்.

என்னைக் கட்டிப் புடிச்சுக்கிட்டு 'ஓ'ன்னு அழுதா கன்னியம்மா.

'என்னைவிட நாலு வயசு சின்னவனாப் போயிட்டியே... அதுங்கூடப் பரவாயில்லே. ரெண்டு காசு சம்பாரிச்சியின்னா ஓடிரலாம்... ஓடி என்ன பண்றது? சாப்பாட்டுக்கு என்ன வளி?..."

என்னைக் கட்டிக்கிட்டு வாயிலே முத்தம் குடுத்தா. நானும் அவளை இறுக்கமாக் கட்டிக்கிட்டேன். அப்பிடியே ரெக்கை மொளைச்சுப் பறந்து போயிற மாட்டமான்னு இருந்திச்சு. எம்புட்டு நேரம் அப்பிடி இருந்தம்னு எனக்கு ஞாபகம் இல்லே. அதும் மார்லே மூஞ்சியை வச்சுக்கிட்டு ரொம்ப நேரம் இருந்தேன். அவ்வளவு சந்தோசமா எப்பவுமே இருந்ததில்லை...

மறுநாளே, கன்னியம்மாளைக் கூட்டிக்கிட்டுக் கெளவன் போயிட்டான். எனக்கு வீடே 'வெறுத்துப் போச்சு. கொஞ்ச நாளு களிச்சு, ஆயாக் கெளவியும் செத்துப் போக... எனக்கு எல்லாமே போயிட்ட மாதிரி இருந்திச்சு.

காட்டுலே ராவுலே மந்திரக் கோல் கெடைக்குமான்னு அலைஞ்சேன். ஒருநாள் அலையுற போது ஒரு தாடிக்கார ஆளைப் பார்த்தேன்.

"என்னடா தம்பி தேடுறே?"

"மந்திரக்கோலு கெடைக்குதான்னு பாக்குறேன்..."

பெரிசாச் சிரிச்சான் அந்த ஆளு. அவன் சிரிப்பே எனக்குப் புடிக்கல்லே.

"....மந்திரக்கோலை வச்சுக்கிட்டு என்ன பண்ணுவே?"

"..... என்ன வேணும்னாலும் பண்ணுவேன்... எங்கம்மாளைப் பார்ப்பேன். கன்னியம்மாகிட்டப் போவேன். கன்னியம்மாளுக்கு எம்மேலே எவ்ளோ ஆசை தெரியுமா?..."

"அட!... நம்ம கன்னியம்மா.. நான் கூட்டிக்கிட்டுப் போறேன்... எங்க வீட்டுக்கிட்டதான் அது இருக்குது..."

கன்னியம்மான்னதும் எனக்குச் சந்தோசம் தாங்கலே. அப்பிடியே அந்தாளுகூடக் கௌம்பிட்டேன். எனக்கு வீட்டுலே என்ன இருக்குது? ஆத்தாளும் இல்லே, அப்பனும் சரியில்லே, சித்தியானா அடிச்சுக் கொல்லுறா.

அந்தாளு ரயில்லே எங்கிட்டோ கூட்டிக்கிட்டுப் போறான். பேசுற பாசையெல்லாம் புரியாத ஊரு. ஒரு குடிசைக்குள்ற போயி 'உள்ளே போ. உள்ளதான் கன்னியம்மா இருக்கா'ன்றான். உள்ளே போனேன். ரெண்டு மூணு பேரு என்னைக் கெட்டியாப் புடிச்சுக் கிட்டாக. ஒருத்தன் வாயிலே துணியை அடைச்சான். கைகாலையெல்லாம் கட்டினான். இன்னொருத்தன் ஒரு பாட்டிலிலே எண்ணெய் மாதிரி எதையோ எடுத்து ரெண்டு கண்ணுலேயும் ஊத்தினான்...

அம்மா... அம்மா... என்ன எரிச்சலு தெரியுமா? தீயை வச்சது மாதிரி இருந்திச்சு. வாயைவிட்டுக் கத்தவும் முடியல்லே. நான் பட்ட பாடு...? ஆத்தாடி... அதையெல்லாம் நெனைச்சாக்கூடத் தாங்க முடியல்லே... இப்பக்கூட வலிக்குது...

"என்னடா... சப்பாணி? 'ஒ'ன்னு கத்திட்டியே?..."

பெரியசாமியண்ணன் பக்கத்துலே வந்து கையைப் புடிச்சுக்கிட்டுக் கேட்டாரு.

அன்னைக்கு வலிச்ச வலியை, இன்னைக்கு நெனைச்சு 'ஒ'ன்னு கத்திட்டேன் போல.

"ஒண்ணுமில்லேண்ணே!... ஆணியைக் கவனிக்காமெக் கையை ஊனிட்டேன். அதான் வலிதாங்காமெக் கத்திட்டேன்..."

ஒருமாதிரிச் சமாளிச்சேன்.

"பாத்துறா... கண்ணுதெரியாத போது கண்ட எடத்துலே கை ஊனலாமா?..." அப்பிடீன்னு சொல்லிக்கிட்டே போறாரு.


துண்டுலே இருந்த காசையெல்லாம் எடுத்து எண்ணிப் பார்த்தேன். மூணுரூபா சில்லரை இருந்திச்சு. பத்து பைசா, அஞ்சு பைசாச் சில்லரையெல்லாம் ஒரு முடிச்சா முடிஞ்சு வச்சேன். ஹோட்டல்கார பாய் வந்து வாங்கிக்கிடுவாரு. ஒரு ரூவாச் சில்லரைக்கு ஒண்ணேகால் ரூவா குடுப்பாரு. கால் ரூவா மிச்சம்... சாக்கிரதையா இருக்கணும். இல்லாட்டிச் செல்லாக்காசைக் குடுத்து ஏமாத்திடுவான்.

...கண்ணுலே ஆசிட்டோ என்னத்தையோ ஊத்திட்டானுக. கண்ணு பார்வை சுத்தமாப் போயிருச்சு. ஒருவாரம் களிச்சுப் பிச்சையெடுக்கச் சொன்னானுக. மாட்டேன்னு சொன்னதுக்கு நாயை அடிக்கிற மாதிரி அடிச்சானுக.

நானும் இத்தனை வருசத்துலே பாத்துட்டேன். யாரைப் பார்த்தாலும் அடிச்சிர்ரானுக. போலீசு வந்து காலாலெ மெறிக்கறாங்க. மத்தவனுக ஏதாவது கேட்டாக்க, முடியைப் புடிச்சுக்கிட்டு அடிக்கிறாங்க. அடிதான் மனுசனோட பாஷையாப் போச்சு. படிப்புன்றான். நாகரிகம்றான். எதுன்னா என்ன? தான் சொல்றதைக் கேக்கலைன்னா அடிக்கறான். காட்டு மனுசன் பாஷைதான் இன்னிக்கு வரையிலும் இருக்குது. படிப்பென்ன, இன்னொண்ணு என்ன? எல்லாம் சும்மா...

அவனுகளைவிட்டு ஓடிரணும்னு பார்த்தேன். குதிங்காலைக் கட்டையால அடிச்சு, ஒடைச்சிட்டானுக. என்னாலே நடக்கக்கூட முடியல்லே. கண்ணுந்தெரியல்லே. காலும் இல்லே. வேறெ என்ன பண்றது? எப்படியோ தட்டுத் தடுமாறி நாலு பேர்கிட்ட விவரம் சொல்லி என்னோட இடத்துக்கு ஓடி வந்துட்டேன். பிறகு, பிச்சையெடுக்கறதைத் தவிர வேறு வளியில்லாமெப் போச்சு. நாலு பேரு பாத்தா எரக்கப்பட்டு காசு நெறையப் போடுறாங்க. பெரியசாமியண்ணன், சுப்பம்மாக்கா எல்லாருக்கும் கூடக் குடுக்கறேன்னாப் பாத்துக்கங்களேன்...

ரோட்டுலே சத்தம் அடங்கிப் போயிருச்சு. காரு, ஆட்டோ சத்தங்கூடக் கொறைய ஆரம்பிச்சிருச்சு.



"டேய் சப்பாணி! ராவு வந்திருச்சா, ராவு வந்திருச்சான்னு கேட்டுக்கிட்டே இருந்தியே?... வந்திருச்சுரா... நான் போய் பாய் ஹோட்டல்லே பன்னு வாங்கியாரேன்..."

பெரியசாமியண்ணன் காசை வாங்கிக்கிட்டுப் போறாரு.

எனக்குச் சந்தோசமா இருந்திச்சு. ராவு வந்தாலே சந்தோசம்தான். ஊரு, ஒலகம் எல்லாம் அடங்கிப் போனதும் என்ஒலகம் ஆரம்பிச்சிடும். தலைக்கு மூட்டையை வச்சுக்கிட்டுப் படுத்துக்கிட்டேன்னா, என் கனவு ராச்சியம் ஆரம்பிச்சிடும். யார் தொந்தரவும் இல்லாமெ, எந்த எடைஞ்சலும் இல்லாமெ நான் என் மனசுக்குப் பிடிச்ச காட்சியையெல்லாம் கற்பனை பண்ணிக்கிட்டு படுத்துக் கெடப்பேன்.

...ரெண்டு காலை ஊனி, ராசா மாதிரி நடப்பேன். ஒட்டமா ஓடுவேன். வாய்க்காலைத் தாண்டுவேன். மரத்துலே ஏறி மாங்கா பறிப்பேன்....

எங்கம்மா வருவா. ஆத்தா... என்னைப் பெத்த ஆத்தான்னு' அவ மடிலே தலைவச்சுக்கிட்டுப் படுப்பேன். அவ என் தலையைக் கோதி விடுவா. செவப்பா, அளகா அம்மாவோட கைவெரலைத் தொட்டுப் பார்த்துக்கிட்டே இருப்பேன்... செவந்திப்பூ கணக்கா அம்மா சிரிப்பா.... ஊர்க் கொளத்துலே தாமரைப்பூ பூத்துக் கெடக்கும். பச்சை எலையும், பூவும் பாக்கத்தான் எம்புட்டு அளகு!

கன்னியம்மாவைப் பாப்பேன். மொகத்தைச் சாச்சு, என்னையப் பாத்துச் சிரிப்பா. "கன்னிம்மா... நீ ரொம்ப... அளகா இருக்கே"ன்னு சொல்லிக்கிட்டே அவளைக் கட்டிப் புடிச்சுக்குவேன். 'பிச்சை எடுத்தாச்சும் ஒன்னியக் காப்பாத்துறேன்'னு சொல்லுவேன். என்னைக் கட்டிப் புடிச்சு முத்தம் கொடுப்பா. நாங்க ரெண்டு பேரும் கையைக் கோத்துகிட்டு ஓடிப் போயிருவோம்...

இந்த நெனைப்பு, அது தரும் சுகம் இதுக்கெல்லாம் இணையே இல்லை. ராத்திரிலே, நிசப்தமான சூழ்நிலையிலே, எந்தத் தொந்தரவும் இல்லாமெ இப்படியே நென்னச்சுக்கிட்டே படுத்திருப்பேன். அதனாலேதான், ராத்திரி சீக்கிரம் வராதா, நீளமா இருக்காதான்னு கேக்குறேன்.

பெரியசாமியண்ணனுக்கு இதெல்லாம் எப்பிடிப் புரியும்? என்னத்தைன்னு அவர்கிட்டச் சொல்றது?



அவ்வளவுதான்! போன வேலையை விட்டுவிட்டு கடை வீதிகளைச் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும்! ராஜஸ்தானை, கைத்தொழில்களின் களஞ்சியம் என்கிறார்கள். வறட்சியான பாலைவனத்தையும் பொசுக்கும் வெயிலையும், திக்கு திசை தெரியாமல் செய்துவிடும் மணல் காற்றையும் கற்பனை செய்து கொள்ளுங்கள். இந்தக் குறைபாடுகளே தெரியாத அளவுக்கு இங்கே வளர்க்கப்பட்டு சிறப்புடன் விளங்கும் கைத்தொழில்களும், கலைப்பொருள்களும் வாழ்க்கையை வண்ணமயமாக்கி ஜீவனூட்டுகிறது.

ராஜபுதனத்து மன்னர்கள் அஞ்சா நெஞ்சம் படைத்த போர் வேந்தர்கள் மட்டுமல்லர், கலா ரசிகர்களும்கூட. இங்குள்ள கோட்டைகளிலும், அரண்மனைகளிலும் உள்ள விதவிதமான சிற்ப வேலைப்பாடுகளும், சுவர் ஓவியங்களும் இதற்கு சாட்சி சொல்லுகின்றன. 'Shoppers Paradise' என்று குறிப்பிடப்படும்

எல்லாம் கலை மயம்

லக்ஷ்மி ரமணன்

ராஜஸ்தானிலுள்ள ஜெய்ப்பூருக்கோ, உதய்ப்பூருக்கோ போகப் போகிறதாக உங்கள் சிநேகிதர்களிடம் சொல்லிப் பாருங்கள். அவ்வளவுதான். "பெட்ஷீட் வாங்கி வாங்க" என்பார் ஒருவர்.

"ஸ்படிகப் பிள்ளையார் அங்கே விசேஷமாமே?"

"ரத்தினக் கற்கள் வேணுமே."

"கோட்டா புடைவையும், அரக்கு வளையல்களும் கிஷன்கட் பெயின்டிங்கும்..."


"பித்தளை மோடாவும் மார்பிள் அம்பாரிக் கல்லும்"

"ஐயோ போதும்" என்று நீங்கள் அலறாவிட்டால் லிஸ்ட் இன்னும் நீண்டு கொண்டே போகலாம்.

இம்மாநிலத்தில் அப்படி என்ன கலைப் பொருள்கள் கிடைக்கின்றன என்பதைத்தான் சுற்றிப் பார்ப்போமே!

ராஜஸ்தான் ஓவியங்களுக்கு இப்போது தனி மவுசு இருக்கிறது. முகலாயர் ஓவியங்களிலிருந்தும், காங்கரா பள்ளத்தாக்கு ஓவியங்களிலிருந்தும் இவை வித்யாசமானவை. பண்டைக் காலத்திலிருந்தே தீட்டப்பட்ட ஓவியங்களை வெவ்வேறு [School of art] ஷைலிகள் என்று இனம் பிரித்தார்கள். மேவார், ஹடோதி, கிஷன்கட் என்று அவற்றுக்கான தனி பிராந்தியப் பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டிருந்தனவாம். கிஷன்கட் ஓவியங்கள் எல்லாமே ராதா கிருஷ்ணா (கருத்தை) தீம் [theme] கொண்டவை.

கிஷன்கட் அரசர் ஒரு கவிஞராம். (பதினாறாம் நூற்றாண்



சைப்பெட்டியின் மீது பித்தளை வேலைப்பாடு



டில் வாழ்ந்த இவர் பெயர் கிஷன்சிங்) அவர் கண்ணன் மீது புனைந்த கவிதைகளை வைத்து இந்த ஓவியங்கள் தீட்டப்படு கின்றன. இந்த ஓவியங்களில் சித்திரிக்கப்படும் வில் போன்ற புருவங்களும், தீர்க்கமான நாசி யும் மீனை நிகர்த்த விழிகளும் எந்தலான நெற்றியும் கிஷன்கட் ஓவியப் பள்ளிக்குரிய முத்தி ரைகள். இதில் 'பனிதனி' [Bani Thani] ஓவியம் மிகப் பிரபல மானது.

ஹடோதி ஓவியங்களை 'ஃபட்' [Phad] என்றும் குறிப்பிடுவதுண்டு. பாபுஜி என்ற நாயகனின் வாழ்க் கையில் நடந்த வீர தீர சாகசச் சம்பவங்களை இவை விளக்கு கின்றன. தற்போது இதில் வீர அபிமன்யு, அமர்சிங் ராணா பிரதாப் போன்றோரது வீரக் கதைகளையும் தீட்டத் தொடங்கி யுள்ளார்கள். இதில் மனித உரு வங்களும் மிருகங்களும் கோணல் மாணலாகவும் குண்டாகவும், அவற்றுக்கு பார்டர் கட்டுவது போல் டிசைன்களும் Modern art போல் உள்ளதால் பார்க்க அழகாக இருக்கிறது.


பிச்வாயி துணி ஓவியங்களை முன்னாள்களில் மேவார் கோவில்களில் மூலவ மூர்த்திக்குப் பின்னால் தொங்க விடுவது பத்ததியாக இருந்தது. பாகவதக் காட்சிகள், ராஸ லீலை, கௌரி பூஜை ஊர்வலம், அரச ஊர்வலம் இவற்றுடன் மினி யேச்சர் ஓவியங்களில் 'ராக மாலிகா' ஓவியங்களும் தீட்டப் படுகின்றன. ராகங்களை தேவ தைகளாகச் சித்திரித்து, அவற் றின் இயல்புக்கேற்பத் தீட்டப் படும் இந்த ஓவியங்களுக்கான 'பிரஷ்கள்' அணிலின் வாலி லிருந்து எடுக்கப்படும் முடிகளால் தயாரிக்கப்படுகின்றனவாம்.

அடுத்து பெண்களைக் கவரும் ஐட்டம் நகைகள்தாம். ராஜஸ்தானிப் பெண்கள் கிராமப் புறங்களில் பல கிலோ கணக்கான எடையுள்ள வெள்ளி நகைகளைக் கழுத்திலும், கைகளி லும், இடுப்பிலும், கால்களிலும் அணிந்து சர்வ சாதாரணமாக வளைய வருவதைக் காண நமக்கு வியப்பு ஏற்படுகிறது.

பிந்தி, போர்லா, டிக்கா, பீபல் பத்ரா என்பன தலையலங் காரங்கள், கரன்பூலும், பூல்ஜூம் காக்களும் காதணிகள், ஹஸலி, மாண்டலி, கந்தஸாரி என்பன கழுத்திலும், கங்கன் கடா, பாஜு பந்த் என்பன கைகளிலும், கண் டோர் ஒட்டியாணம்போல் இடுப் பிலும், பைஜாப் டங்கா, லச்சாரு கால்களிலும் அணியப் படுகின் றன. கிராமப்புறங்களில் திரு விழாக்கள் வந்தால் வெள்ளி நகைக் கடைகளைப் பார்ப்பதற் காகவே கூட்டம் சேரும். இப் போது காலத்துக்கேற்ப மிகவும் எளிய டிசைன்களில் எடை குறைவான வெள்ளி நகைகள் செய்யப்படுகின்றன. இடுப்புச் சங்கிலி, ஹஸலி, சாவிக்கொத்து.



← கொலு இல்லை! மண்ணினில் சமைப்புகள் 'மோலேலா' [MOLELA]



ஷேகாவதி [FURNITURE]

மெட்டிகள், கடா என்னும் தடி மனான வளைகள், காதணிகள் ஆகியவற்றிற்கு அதிக மவுசு.

ரத்தினக் கற்களுக்குப் பெயர் பெற்றது ராஜஸ்தான். வைரம், நீலம், முத்து, பவளம், மாணிக் கம், மரகதம், கோமேதகம், புஷ்ப ராகம், வைடூரியம் ஆகிய நவ ரத்தினக் கற்களும், Topaz, Sandstone, Kidney Stone, Jade, Tiger stone, opal, Garnet போன்ற சாதாரண ரத்தினங்களும் [Semi precious] இங்கே கட்டிங் செய் வதற்காக வெளிநாடுகளிலிருந் தும் இந்தியாவின் பல இடங்களி லிருந்தும் வருகின்றன.

இவற்றுக்குப் பாலிஷ் செய்து மெருகேற்றி, கற்களாகவும், இவற் றைப் பதித்து நகைகளாகவும் விற்கிறார்கள். கட்டிங்கின் போது ஏற்படுகிற சேதாரங்களையும் வீணாக்காமல் மாலைகளாகவும், தோடு, தொங்கட்டான்கள், வளையல்களாகவும் செய்து மலிவு விலைக்கு விற்கிறார்கள்.

ரத்தினக் கற்களைப் பதித்து தங்கத்திலும், வெள்ளியிலும் 'குந்தன்' நகைகள் செய்யப்படுகின்றன.

தங்கத்தில் எனாமல் டிசைன்கள் பதித்தால் 'மீனா காரி' வேலைப்பாடு எனப் படுகிறது. ஒரு புறம் 'மீனாகாரி' வேலைப்பாடும், பின்புறம் கற்கள் பதித்த குந்தன் வேலைப்பாடும் கொண்ட நகைகளை 'ஜடாவ் நகைகள்' என்கிறார்கள். மீனா காரி வேலைப்பாடு நாதத்வாரா விலும் உதய்ப்பூரிலும் பிரசித்தம். இங்கு இவை மலிவாகக் கிடைக் கின்றன.

ரத்தினக் கற்களை பூஜையில் வைக்கத் தகுந்த விக்கிரகங் களாகவும், கழுத்தில் சங்கிலியில் அணியக் கூடிய பென்டென்டு களாகவும் செய்து விற்கிறார்கள். ஸ்படிகப் பிள்ளையார் பல சைஸ்களில் இங்கு கிடைக்கும்.

'தேவா கலை' நகைகளை சித்தோருக்கு அருகிலுள்ள 'பிர



ஒட்டக முதுகில் [Hiden] கலை வண்ணம்

தாப்கர்' என்னும் இடத்தில் திறமைவாய்ந்த 'சோனி' குடும்பத் தார்கள் செய்கிறார்கள். இந்தக் கலை தன் பிறப்பிடத்தை விட்டு, பரவலாகப் பரவாததற்குக் காரணம் இதை உருவாக்கக் கூடிய கைதேர்ந்த நிபுணர்கள் இப்போது அதிகமாக இல்லாதது தான். தங்கத்தை உருக்கி மிக மிக மெல்லிய தகடாக்கி, அதில் டிசைன்களைச் செதுக்கி, வண



கலை குடம் அளவு!

ணைக் கண்ணாடிகளின் மீது அவைப் பட்டரண்டு ஒட்டி விடுகிறார்கள். இக்கலை மிக அபூர்வமானது. பாப்பரத்துக் கண்ணாடி மீது ஓவியம் தீட்டினாற்போல் இது இருக்கிறது.

அரக்கை உருக்கி பல வண்ணங்களில் தோய்த்து கற்கள் மற்றும் பாசி மணிகளை ஒட்டி அழகான வளைகளை இங்கே செய்கிறார்கள். [LAC] அரக்கை இன்னும் எப்படி எல்லாம் பயன்படுத்த முடியும் என்பதை ராஜஸ்தானுக்கு வருகிறவர்கள் தெரிந்து கொள்ளலாம். சட்டைப் பித்தான்கள், ஊதுவத்தி ஸ்டாண்டுகள், குங்குமச்சிமிழ்கள், காதணிகள், க்யூரியோக்கள், மோடாக்கள், நகைப் பெட்டிகள் என்று விதவிதமான பொருள்களைத் தயாரிக்கிறார்கள். காகிதத்தை அரைத்துச் செய்யும் பொம்மைகளையும் கடை வீதிகளில் நாம் பார்க்க முடிகிறது. கண்ணாடி, கல்பொட்டல், வெள்ளி வளையல்கள் இங்கே பல திணுசுகளில் கிடைக்கின்றன.

ராஜஸ்தானில் வற்றாது ஓடும் நதிகள் கிடையா. அதனால் மரக்கட்டைகளை ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு அனுப்பி வைக்க லாரிகளை மட்டும் நம்ப வேண்டியிருக்கிறது. வெளி மாநிலங்களிலிருந்து மரத்துண்டுகளை வரவழைக்காமலேயே இங்கேயே காடுகளில் கிடைக்கும் மரவகைகளைக் கொண்டே அதி அற்புதமான வேலைப்பாடுகளுடன் அலமாரிகள், சோபாக்கள், நாற்காலிகள், டேபிள்கள், பெட்டிகள், கட்டில்கள், கதவுகள் போன்றவற்றைச் சிருஷ்டிக்கிறார்கள் இவ்வூரின் தச்சுக் கலைஞர்கள்.

பூந்தி, கோட்டா, அல்வார், ஜெய்ப்பூர், அஜ்மீர் போன்ற இடங்களில்தான் காட்டுப் பிரதேசங்கள் அதிகம் இருந்தாலும் மரங்கள் அதிகம் இல்லாத 'பார்மீர்' (BARMER), சிகார், சூரு, ஆகிய இடங்களில்தான் பர்னிச்சர்கள் அதிக அளவில் தயாராகின்றன. அதிலும் 'ஷேகாவதி' பிராந்தியம் எனப்படும் சிகார், ஜுன்ஜுனு, சூருவில் மிக நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட பர்னிச்சர்கள் செய்யப்படுகின்றன. தற்போது இவை ஆங்கில ஸ்டைலிலும் இண்டோ-சீன ஸ்டைலிலும் கிடைக்கிறது. இது தவிர, மரத்தின் மீது 'நகாஷ்




நகை செட்கள்

வேலை' என்று குறிப்பிடப்படும் அரக்கு பாலிஷ் ஏற்றி ஓவியங்கள் தீட்டி மழமழப்பான பளபளப்பு நிறைந்த நகைப் பெட்டிகள், சின்ன மேஜைகள் போன்றவற்றைச் செய்கிறார்கள். மரத்தின் மீது வெள்ளி, தாமிரம், பித்தளை வேலைப்பாடுகள் செய்யப்பட்ட அழகிய சாதனங்கள் கிடைக்கின்றன.

உலோகங்களில் வேலைப்பாடுகள் செய்கிறவர்களை இங்கே 'கேசராக்கள்' என்று அழைக்கிறார்கள். பித்தளையின் மீது டிசைன்கள் வரைந்து அதில் எனாமல் வேலைப்பாடுகள் செய்வதும், அரக்கு கலர்களை நிரப்புவதும் (இதை Moradabadi வேலைப்பாடு என்கிறார்கள்) இங்கே பிரசித்தம். இதுமாதிரியான வேலைப்பாடமைந்த பித்தளை மோடாக்கள் வரவேற்பறைக்கு அழகூட்டும். வெண்கலத்திலும் பஞ்ச உலோகத்திலும், பித்தளையிலும், கறுப்பு மெட்டலிலும் லோகேஷ்வர், விநாயகர், கிருஷ்ணர், நடராஜர் போன்ற விக்கிரகங்கள் கிடைக்கின்றன. இவை பெருமளவில் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றனவாம்.

இன்னும் வெற்றிலைப் பெட்டி, விளக்குகள், திணுசு திணுசான பூக்கிண்ணங்கள், பூக்கூடைகள், தட்டுகள், க்யூரியோக்கள், யானைகள், மயில்கள்... உலோகத்தில் இங்கு ஓர் உலகமே காணலாம்! இது தவிர 'ஒயிட் மெட்டல்' அழகுப் பொருள்கள் கடைகளில் நிரம்பி வழிகின்றன. திருப்பதி வேங்கடாசலபதியிலிருந்து சாயிபாபா வரை, பார்த்தசாரதி உள்பட அத்தனை உருவங்களிலும் கிடைக்கின்றன.

இறந்த கால்நடைகளின் தோல்களை எடுத்துப் பதப்படுத்தி, மருந்திட்டு சுத்தப்படுத்தி, பல விதமான பொருள்களைத் தயார் செய்கிறார்கள். ராஜஸ்தானில் கால்நடைகள் என்றால் அதிகமாக ஒட்டகங்களைத் தான் குறிக்கும். பிகானீரில் உள்ள ஒட்டக வளர்ப்பு மையத்தில் அவற்றைப் பராமரிப்பதுடன் ஒட்டகத் தோலிலிருந்து பர்ஸ், ஜரிகை வேலைப்பாடு செய்த ஜூதிகள், கைப்பைகள், ஹூக்காக்கள், மோடாக்கள், சில இசைக் கருவிகள் போன்றவற்றை உருவாக்குகிறார்கள். ஒட்டக



கிஷன் கட் ஓவியம் (பனி தனி)

முதுகான [Camel Ride] பகுதியைப் பயன்படுத்தி 'குபி' [Kupi] என்கிற தண்ணீர் நிரப்பும் குடுவையைத் தயாரிக்கிறார்கள். இதில் குளிர்ந்த நீர் ஊற்றினால் ரொம்ப நேரத்துக்கு ஜில்லென்று இருக்குமாம். இசைக்கருவிகளில் சாரங்கி, நக்கரா, சங்க் ஆகியவை அடங்கும்.



பண்டைய நாட்களில் மண் கலயங்களும், பானைகளும், பொம்மைகளும் இந்தியக் கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருந்தன. கங்கா நகர் பகுதியில் காலிபங்கன் என்கிற இடத்தில் தோண்டி எடுக்கப்பட்ட உடைந்த மண் சட்டிகளும் பீங்கான் துண்டுகளும் சிந்து நதி நாகரிகத்தின் நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

உருவமற்ற மண்ணைப் பிசைந்து உருவங்களைச் சமைப்பவர்களைக் கடவுளுக்குச் சமமாகக் குறிப்பிடுவதுண்டு. பிரம்மதேவன் மண் எடுத்துப் பிசைந்து மனிதர்களைப் படைத்தான் என்பது நம்பிக்கையாதலால் மண்பாண்டம் செய்பவனும் ஒரு சிருஷ்டிகர்த்தா என்று ஊர்ஜிதமாகிறது. உதய்பூரிலிருந்து 40 கி.மீ. தொலைவிலுள்ள மொலேலா [MOLELA] கிராமத்தில் மண்ணில் வடித்த சிற்பங்களான TERRA KOTA WORK மண்பாண்டம் செய்பவர்களின் சிருஷ்டியில் புதிய பாணியைப் புகுத்தியுள்ளது.

கிராம தேவதைகள், ஆதிவாசிகளின் இஷ்ட தெய்வங்களான பாம்பு, புலி, தேள், காளை போன்றவை, பெண் உருவங்கள் குஜர்களின் கடவுளான தேவநாராயணன் குதிரை மீது வீற்றிருப்பதைப் போன்ற உருவம் துர்க்கை, காளி, விநாயகர் என்று அச்சு ஏதும் இல்லாமல் கையால் களிமண்ணைப் பிசைந்து உருவாக்கி, வடிவப்படுத்தி, சூளையிலிட்டு எடுத்து வர்ணம் பூசுகிறார்கள். இவை படிவ வடிவத்தில் [PLAQUE] இருப்பதால் சுவரில் பதித்து, சுவருக்கு ஒரு புதிய கவர்ச்சி, மிகுந்த தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். சில ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் இவற்றைத் தங்கள் ரிசப்ஷன் லவுஞ்சில் பதித்துப் பிரபலப்படுத்த இந்த மண் உருவங்கள் இன்று பொன் விலையில் விற்கப்படுகின்றன!

ஜெய்ப்பூரை ஆண்ட அரச பரம்பரையினர் ராஜா மான்சிங் அக்பர் காலத்திலிருந்தே டில்லியோடு சுமுகமான உறவு முறையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தார்கள். அதனால் இந்த நட்புறவின் சாயல், இங்கே நிலவியுள்ள கலாசாரத்திலும், பல கலைகளிலும் இயல்பாகவே தெரிகிறது. பதினாறாம் நூற்றாண்டில் பாரசீகத்தில் தயாரான நீல பீங்கான் தயாரிப்புகள் சாமர்க்கண்ட் வழியாக இந்தியாவில் நுழைந்த போது இங்கேயும் அதைத் தயாரிப்பதில் ஈடுபாடுள்ள கலைஞர்களையும், அதற்கான பிரத்யேகச் சந்தையையும் ஏற்படுத்தியது. முதலில் வெறும் நீல நிறத்தில் மட்டுமே தயாரிக்கப்பட்ட இது இப்போது ஆரஞ்சு, பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறங்களில் தீட்டப்படும் ஓவிய டிசைன்களையும் கொண்டதாக உள்ளது. சூளையிலிடுகையில் இவற்றின்மீது தடவப்படும் ரசாயனப் பொருள்கள் [Chemicals] டிசைன்களின் இந்த நிறங்களை நிரந்தரமானதாக்குகிறது.

ஜெய்ப்பூர் அரசர் சவாய்ராம் சிங்கின் காலத்தில் இதைத் தயாரிப்பதில் தேர்ந்த கலைஞர்களை அழைத்து அரண்மனையை அழகுபடுத்தச் சொல்லி ஆதரித்ததுடன் 'சில்ப கலா மந்திர்' என்கிற கலைக் கூடத்தையும் தொடங்கினாராம். இங்கே வளர்க்கப்பட்ட இக்கலை இன்று அகில உலக அளவில் பிரபலமடைந்துள்ளது. பூக்கிண்ணங்கள், பூந்தொட்டிகள், பெட்டிகள், கப், சாஸர்கள், தட்டுகள், இவற்றுடன் சுவரில் பதிக்கிற ஓடுகளும் இப்போது செய்யப்படுகின்றன. பெண்களைக் கவர்வதற்கு நீலப்பூ வேலைப்பாடமைந்த பீங்கானில் மணி மாலைகளும், காதணிகளும்கூட இருக்கின்றன.

ராஜஸ்தான் அரண்மனைகளைப் பார்வையிடுகையில் நம் கண்களில் படுகிற பொதுவான அம்சம் அவற்றிலுள்ள கம்பளத் தரை விரிப்புகள்தான் [CARPETS]. சிலவற்றைக் கீழே தரையில் விரித்தும், மற்றவற்றை மேலிருந்து தொங்கவிட்டும் இவற்றைக் காட்சிப் பொருளாக்கியுள்ளார்கள். இதனால் கம்பளத் தரை விரிப்புகள் நெய்யும் கலை இங்கு எத்தனை புராதனமானது என்பது நமக்குப் புரிகிறது. பல விதமான பூக்கள் டிசைனையும் கோல டிசைன்களையும், புலி, யானை, மயில் என்று வனவிலங்குகளும், இன்னும் கிராமக் கலை டிசைன்களையும் இத்தகைய தரை விரிப்புகளில் பார்க்க முடிகிறது.

ஒரு சதுர அங்குலத்துக்கு 600 முடிச்சுகள் வரையில் நெய்யப்பட்ட நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட கம்பள விரிப்

அரக்கு வளையல்கள்

புகளுக்கு விலை அதிகம். தீபாவளி போன்ற பண்டிகைக் காலங்களில் கடைக்காரர்கள் தள்ளுபடி விலையில் விற்கும்போது தான் சாமானியர்கள் இவற்றை வாங்குவது பற்றி யோசிக்க முடியும். 'நம்தா' [NAMDA] என்கிற தரை விரிப்புகளை மட்டரகக் கம்பள சேதாரங்களிலிருந்து செய்கிறார்கள். இவை விலை மலிவானவை.

பொம்மலாட்டப் பொம்மைகளும் அழகுப் பொருளாக ஜெய்ப்பூர், உதய்ப்பூர் போன்ற நகரங்களில் விற்கப்படுகின்றன. இவற்றை வரவேற்பறையில் தொங்கவிட்டு வைப்பதற்காக வெளிநாட்டு டூரிஸ்ட்கள் அதிக அளவில் வாங்குகிறார்கள்.

ராஜஸ்தான் 'பந்தேஜ்' (சுங்கடி) புடைவைகள், மதுரை சுங்கடி போல் பிரசித்தமானவை. இது தவிர, பக்ரு [BHAGRU], சாங்கனீர் [SANGANER], கோட்டா [KOTA] ஆகிய இடங்களில் அச்சு பிரின்ட்களை [Block Print] படுக்கை விரிப்புகளிலும், புடைவைகளிலும் பயன்படுத்துகிறார்கள். இவற்றின் நிறங்கள் மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு, பச்சை, ஊதா போன்ற 'பளிச்' என்றிருக்கிற நிறங்களில் உள்ளன. இந்த வண்ணங்களைத் தாவரங்களிலிருந்தும், பூக்களிலிருந்தும் வேர்களிலிருந்தும் கற்களிலிருந்தும் தயாரிக்கிறார்கள். ஜெய்ப்பூர் படுக்கை விரிப்புகள் தரமுள்ளவை. மலிவானவை. நீடித்து உழைக்கக்கூடியவை.

ரஜாய் எனப்படும் quith குளிர் காலத்தில் கம்பளிப் போர்வைகளுக்குப் பதில் போர்த்திக் கொள்ள இதமானவை. அரைக் கிலோ பருத்தியிலிருந்து, இரண்டு கிலோ வரை அடைத்த இந்த மெல்லிய மெத்தைகள் வெல்வெட்டிலும், பருத்தித் துணியிலும் கிடைக்கின்றன.

எம்பிராய்டரி வேலைப்பாடுகள் செய்வதில் ராஜஸ்தானிப் பெண்களை மிஞ்ச யாராலும் முடியாது. கண்ணாடி வைத்துத் தைத்த பாவாடைகள், சோளிகள், குஷன் கவர்கள், மேஜை விரிப்புகள், பூ வேலை செய்த தொங்கு தோரணங்கள், கிராமியக் கலை டிசைன்களில் பூ வேலைப்பாடு செய்யப்பட்ட சுவரில் தொங்கவிடக்கூடிய படங்கள் ஆகியவற்றைக் கடைத் தெருக்களெங்கும் காணலாம்.

கோட்டா [GOTA] என்கிற ஜரிகைப் பூ வேலைப்பாடுகளைச் செய்வதற்காகவே தேர்ந்த குடும்பங்கள் இங்கே இருக்கின்றன. கலியாண காலங்களில் ராஜஸ்தானிப் பெண்கள் ஜரிகை எம்பிராய்டரி செய்த பாவாடை



குந்தன் நகை



பொம்மலாட்ட பொம்மை

மேலாக்குகளை அணிகிறார்கள். சில சமயங்களில் இதன் விலை ரூபாய் பதினைந்தாயிரத்துக்கு மேல்கூட இருக்கும்!

ராஜஸ்தானைப் பற்றிக் குறிப்பிடுகையில் பளிங்குக் கல்லைப் பற்றி [Marble] யும் சொல்லியே தீர வேண்டும். இது ஒரு தனித் தொழிலாகவே இன்று விளங்குகிறது. பளிங்குக் கல் மக்ரானா என்கிற இடத்தில் அதிக அளவில் கிடைக்கிறது. மவுண்ட் அபுவில் உள்ள தில்வாடா கோயில்களிலும் பாலிக்கு அருகில் ரணக்பூரிலுள்ள ஜெயினர் கோயிலிலும் காணப்படும் பளிங்கு சிற்பக் கோயில்கள் பார்க்க அற்புதமாக இருக்கின்றன. இவை கட்டப்பட்டுப் பல நூற்றாண்டுகள் ஆனாலும், இன்று தோன்றியவைபோல் புதிதாக உள்ளன.

இந்த மரபில் வந்தவர்கள் என்பதை ருசுப்பிக்கும் வகையில் பளிங்குச் சிலைகளை வடிக்கும் சிற்பிகள் தெய்வத்தின் திருவுருவச் சிலைகளைச் சிருஷ்டித்து, இங்கிருந்து நாட்டின் பல பாகங்களுக்கும், அனுப்புகிறார்கள். இன்ன மாதிரியில் உயரத்தில் சிலை இருக்க வேண்டும் என்பதற்கான மாதிரி படத்தை முன் கூட்டியே அனுப்பி வைத்தால், முதலில் மண்ணில் அது மாதிரியான மூர்த்தியைச் செய்து கொண்டு, பிறகு அதை வைத்துக் கொண்டு பளிங்கில் செதுக்குகிறார்கள். சிறுசிறு விக்கிரகங்களும், க்யூரியோக்களும் கடை வீதிகளில் ஏராளமாகக் கிடைக்கின்றன. 'சோப் ஸ்டோன்' என்று ஒருரக வெள்ளைக் கல் பார்ப்பதற்கு பளிங்கைப் போலவே இருக்கும். ஆனால் இது தண்ணீரில் கரையக் கூடியது. பளிங்கைவிட விலை குறைவானது. அதனால் பளிங்கில் என்ன வாங்கினாலும் பார்த்து வாங்க வேண்டும்.

சந்தன மரத்திலும், தந்தத்திலும் சிற்ப வேலைப்பாடுகள் செய்யவும் இங்கு கலைஞர்கள் பலர் இருக்கிறார்கள். ராஜஸ்தானை 'இந்தியக் கைத்தொழில்களின் செல்வக் களஞ்சியம்' என அழைக்கிறார்கள். இதன் மத்தியில் நின்று பார்க்கையில் பாலையின் மணலும் வெப்பமும், வறட்சியும் தேடினாலும் தெரியவில்லை.



ஓவியம் : வி.ஏ. ராமச்சந்திரன் உரலில் கட்டுண்ட பெருமாயன் 'அமுதசுரபி' தீபாவளி மலர் 1994

உரலில் கட்டுண்ட பெருமாயன்

ஓவிய விளக்கக் கட்டுரை :
சி.ஏ. இராமச்சந்திரன்

'கண்ணிநுண் சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணிய பெருமாயன் என்னப்பனில்
நண்ணித் தென்குருகூர் நம்பி என்றக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே."

என்று ஸ்ரீ மதுரகவி ஆழ்வார் தம் ஆசாரியரான தென்குருகூர் நம்மாழ்வாரைப் பற்றிப் பாடிய பத்துப் பாசுரங்களில் முதற் பாசுரம் இது. வேதங்களுக்கு ஈடான இப்பாசுரங்களுக்குப் பல மகான்களும், ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகர் போன்ற வைணவ ஆசாரியர்களும் பலபடியாக வியாக்கியானங்களை அருளிச் செய்துள்ளனர்.

பிரும்மாதி தேவர்களாலும் எளிதில் தரிசிக்க முடியாத பரப்பிரும்ம சொரூபி ஸ்ரீமந் நாராயணன், சௌசீல்ய, சௌலப்பியமெனும் கலியாண குணங்களோடு எளிமையான இடையர்களோடு உறவாட எல்லாரது உள்ளங்களையும் களவாடும் ஆழிமழைக் கண்ணனாக அவதரித்தான். அவன் வெண்ணெயைக் களவாடி வாயது கையதுமாக கோபியரிடம் அகப்பட்டு, தன் தாய் யசோதையிடம் அடிபட்டு, உரலில் தன்னைக் கட்டுண்ணப் பண்ணி, அவன் தன்னடியார்களுக்கு அடியவனாகவும், அவர்களும் மிகச் சுலபமாகத் தன்னை நாடிப் பரமானந்தமடையும்படி அருளுவது எத்தனை விந்தையானது!

விண்ணோராலும், மண்ணோராலும் வணங்கப்படும் சர்வேசுவரன், பங்கயக் கண்ணனாக யசோதையால் எதற்கும் உதவாத உடைந்த உரலுடன், கன்றுக் குட்டியைக் கூட கட்ட லாயக்கில்லாச் சிறு கயிற்றினால் தன்னைக் கட்டுண்ணப் 'பண்ணினால், அவன் பெருமாயனல்லவா?

எல்லாராலும் தொழப்படும் பரமன் "அம்மா! என்னை அடிக்காதே, என்னைக் கட்டாதே," என்று பூவைப் பூவண்ணனாக தன் அன்னையைத் தொழுவதும், அவள் கன்னத்தைத் தொட்டு மன்றாடுவதும் எத்தனை இனிமையானது! இன்பமானது பாருங்கள்!

இதைத்தான் ஸ்ரீமதுர கவி ஆழ்வார் தம் முதற் பாசுரத்தின் முதல் இரண்டு அடிகளில் பகவானின் லீலையை வருணித்து, அத்திவ்விய ஆனந்த ருசியைவிட இறைதிருவடி ஞானத்தை எளிதில் நிச்சயமாக அடையும்படியாகச் செய்யும் ஆசாரியரின் திருநாமம் பேரின்பத்தைத் தருவதாயும், அத் திருநாமத்தை உச்சரிக்கும் போது நாவிற்கு இனிமை கூட்டுவதான பேருண்மையை-அநுபவரீதியாக அடுத்த இருவரிகள் மூலமாக வருணிக்கிறார்.

மேன்மையான ஆசாரியரருளால் மேன்மையான பாசுரத்தைப் பாடி ஆழ்வாரும் மேன்மையடைகிறார். மிகச் சிறிய தாம்பினால் மிகப் பெரிய தெய்வத்தையே கட்டுவது போல், மிகச் சிறு பாசுரத்தால் மிகப் பெரிய வேதார்த்தங்களை உள்ளடக்கிக் காட்டுகிறார் ஸ்ரீமதுர கவியாழ்வார்.

மற்ற எதற்குமே உபயோகமில்லாக் கயிறும், உரலும் முகில் வண்ணனுக்கு மட்டும் ஏற்றவையாகின்றன. பரந்தாமனுக்கு அநுகூலமாக அமைவதால் சரணாகதி மார்க்கமான பிரபத்தியின் முக்கிய முதல் அங்கமாக 'அநுகூல சங்கல்ப'மாக வெளிப்படுகிறது. வேறு உபயோகமின்மையால் பிரபத்தியின் இரண்டாவது அங்கமாக 'பிரதி கூலவர்ஜன'மாகப் பகவானுக்கு எதிரான விஷயத்தில் நாட்டமின்மையையும் விளக்குவதாயுள்ளது. தானே கண்ணன் பிரபத்தி வழியை எளிதில் காட்டுகின்ற விநோதத்தையே இச்சித்திரத்தில் காண்கிறீர்கள். பிரபத்தியின் ஆறு அங்கங்களையும் தானே நடத்திக் காட்டுகிறான். "அம்மா! இனி உன் பேச்சுப்படியே நடக்கிறேன். உனக்கெதிராக நான் ஒன்றும் செய்யமாட்டேன்.

நான் அகிஞ்சினன், போக்கற்றவன். உன்னைப் பிரார்த்திக்கிறேன்" என்று தன்னைத் தன் தாய் காப்பாற்றுவாள் என்ற முழு விசுவாசத்துடன் தானே யசோதையிடம் கட்டுண்டு தன்னையே அவளிடம் சமர்ப்பிக்கின்றான்.

இதையே சரணாகதி வழியான பிரபத்தியில் பெரியோர் 1) அநுகூல சங்கல்பம், 2) பிரதிகூலவர்ஜனம், 3) அகிஞ்சினத்துவம் (அநந்யார்ஹ பக்தி) 4) பிரார்த்தனா பூர்வம், 5) மகாவிசுவாசம், 6) ஆத்ம நிக்ஷேபணம் என ஆறு அங்கங்களாக விவரித்துள்ளனர். பக்தி மார்க்கத்தைவிட பிரபத்தியே மிகச் சுலபமானது என்று அநுபவபூர்வமாக விவரித்துள்ளனர்.

எதற்கும் பயன்படாத கயிறும், உரலும் தாமோதரனுக்கு மட்டும் பயன்படுகின்றன. அவற்றோடு தன்னைப் பிணைப்பதால், போக்கற்ற அசேதன வஸ்துகளுக்கும் ஆண்டவன் வலிய வந்து அருள் பாலிக்கிறான் என்றும் தான் வாழ எந்த ஒரு வழியுமறியாத திக்கற்ற நிலையில் தன்னைத் தஞ்சம் புகும்போது நிச்சயமாகக் காப்பாற்றுகிறான் என்றும் அறியப்படுகிறது.

பகவான் ஒருவனே கதி என்றிருப்பதை அநந்யார்ஹ பக்தி என்பர். இவ்வுண்மையைத்தான் கண்ணன் பார்த்திபனுக்கு ஸ்ரீமத் பகவத் கீதோபதேச மூலம் தெளிவுபடுத்துகிறான்.

"வேறு சிந்தனை ஏதுமின்றி என் ஒருவனையே எவர் உபசரிக்கிறார்களோ, அவர்களது யோக க்ஷேமங்களை நானே சுமக்கிறேன்" என்றும், "உன்னைக் காக்க மற்ற எல்லா வழிகளையும் துறந்து என் ஒருவனையே சரணமாகப் பற்றினால், உன் எல்லாப் பாபங்களையும் போக்கி, சர்வ துக்க நிவர்த்தியும், பரமப் பிராப்தியுமான முக்தியையே பிரசாதிக்கிறேன். இனி கவலை வேண்டாம்" என்றும் கூறுகிறான்.

திருமலைத் திருமாலும் தன் வலக்கரத்தால் தன் திருவடிகளைக் காட்டி, "யார் என்

திருவடிகளைத் தஞ்சம் புகுகிறாரோ, அவரைத் திருமகள் அமரும் இடத்திலமர்த்துகிறேன்' என்று இடத் தொடையில் இடக் கரம் வைத்துக் காட்டுகிறார்.

கோபியர், கண்ணனை யசோதையிடம் காட்டிக் கொடுத்த பின், யசோதையிடம் நந்தகோபாலன் அடிபடும் போது, கோபியர் கண்கள் கலங்குகின்றன. மேலும், அப்பாலன் அவன் தாயிடம் என்னென்ன அவதிகள் படப் போகிறானோ என்று நினைக்கையில், அவர்களது முகங்களில் பீதி படருகிறது. தங்களால் யசோதை இளஞ்சிங்கம் தனதன்னையிடம் மாட்டிக் கொண்டு அவதியுறும் போது அவர்களது குற்ற உணர்வு கண்ணீராகப் பெருக்கெடுக்கிறது. உள்ளங்கள் குமுறிப் போகின்றன.

ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமிகள், "அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்றன்னைச் சிறு பேரழைத்தனவும் சீறியருளாதே. வாசுதேவா! என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு உற்றோமேயாவோம், உனக்கே நாம் ஆட்சி செய்வோம்" என்றும் பலவாறு புலம்பி, பாதகங்கள் தீர்க்கும் மாயன் மணிவண்ணனின் செம்பொற் கழலடிகளைப் பார்த்துப் பூரிக்கின்றனர்.

நாமும் நம் வாழ்வில் இறையருளைப் பெருமையாகப் பெறுவதை விட்டு, அத்தெய்வத்தையே நம் சுய தேவைகளுக்காகக் கருவியாகவே பயன்படுத்திப் பகவானையும் நம் சம்சார பந்தங்களில் கட்டித் துன்புறுத்தும் போது நம் குற்ற உணர்வுகள் வெளிப்படுகின்றன. பின்னர் நாம் விழிப்படைந்து சர்வக்ஞனும், சர்வ சக்தனும், தயாளுவுமான சர்வேசுவரனிடம் நம் பாபங்களுக்கு மன்னிப்பு கோரி மனமுருகப் பிரார்த்திக்க முற்படுகிறோம்.

உயர்வற உயர்நலமுடைய அமரர்களுக்கதிபதி சாமானியரோடு சமமாகப் பழகும் கலியாண குணத்தை சௌசீல்ய குணமென்பர். சாமானியரான இடையர்களோடு தானும் ஒருவனாக கோவிந்தன் பழகும் போது, பொற்றாமரையடியோனை சௌசீல்ய சாகரன் என்றே பாரோர் புகழுகின்றனர்.

அமரர்களும், ஞான சிரேஷ்டர்களும் பகவானது ஞானம்,



பலம், ஐசுவரியம், விரியம், தேஜசு சக்தி முதலிய ஆறு திவ்விய குணங்களை அநுபவிக்கிறார்கள். ஆனால் முகுந்தனையே தஞ்சம் புகும் எளியோரும் தன்னை மிகச் சுலபமாக ஆனந்தமாயநுபவிக்கும்படி சௌலப்பிய, சௌசீலிய கலியாண குணங்களுடன், கண்ணன் அருள் பாலிக்கிறாள்.

மாதவனின் இத்திவ்விய குணங்களை அநுபவிப்பதிலே உயர்ந்த இன்பமும், இனிமை ருசியுமுள்ளன. இவ்விதம் மயர்வற மதி நலமருளும் கிருஷ்ண பரமாத்மா தன்னையே சரண்புகுந்தவர்களுக்கு அவர்களது துயரறுப்பவனாக இருந்து 'காப்பதால்' அவனை 'சௌலப்ய பரிபூரணன்' என்றழைத்துப் பரசவப் படுகிறோம்.

கேசவனுக்குப் போக்கிய மாயுள்ளவை கண்ணி நுண் சிறுத்தாம்பு. கண்ணி என்பது சிறு சிறு (ஆட்டு) ரோமங்கள். இவை ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு உடலில் அழுந்தும்படியான நுண்ணிய கயிறு (தாம்பு) ஆகி ஆழிமழைக் கண்ணனைக் கட்டும்படியாகின்றன. இங்கு கண்ணி கோபியராவர், அவர்கள் ஒன்று சேர்ந்து கண்ணனிடம் நெருங்கி அவனைத் தம் பேரன்புத் தாம்பால் நுண்மையாக அழுந்திக் கட்டி விடுகின்றனர். கண்ணி நுண் சிறுத்தாம்பினால் உரலோடு வாசுதேவனைக் கட்டும் போது தங்களை அத்தாம்பாகவே கோபியர் கருதுகின்றனர்.

உரலிலே கட்டுண்ட பெருமாயனின் விசித்திர சித்திர விளக்கத்தினால் மிகச் சுருக்கமாகப் பகவானின் பெருமையும், அவனது அவதார விசேஷமும், பகவத் கலியாண குணப் பிரதாபங்களும், பிரபத்தியின் இலட்சணங்களும், அதன் உயர்வும், உபநிடசாரமான கீதாவாக்கியங்களும், திருமலையாண்டான் தத்துவமும், ஆசாரியர் பெருமையும், முக்கியத்துவமும், பாசுர உயர்வும், ஆழ்வாரின் பெருமையும், அநந்யார்ஹ பக்தி பிரபாவமும், கோபியரின் உயர்ந்த உள்ளத்து நிலைகள் பற்றியும் உணர்ந்து போற்றியானந்திப்போம்.

எங்கும் திருவருள் பெற்று இன்புறுவராவர்.

'ராகவி'

நல்விடியல்

மானிடம் என்றே சொல்லி
மனதினை மயங்கச் செய்வார்
பூவினை உவமை சொல்லிப்
புத்தியை மழுங்கச் செய்வார்
வானிலும் உயர வேண்டின்
வகையாய் நீ அறிவைத் தேடு
ஆவியின் இனிய பெண்ணே!
அதுதான் உன் நல்விடியல்

எளியார் உள்ளம்

மோத்திதாசன்

வஞ்சகம் வீழும்;
ஓர்மை,
வாய்மையும் வெல்லும்;
நேர்மை!
துஞ்சிடா தென்பார்
துயரத்தின்
வயப்பட்டாராய்
எஞ்சிய காலம் எண்ணி
எடுத்தடி வைப்பார்
எளியர்!



கடைசி வார்த்தை

அறியாப் பருவத்தில் தன் வீட்டுக்கு வேலைக் காரியாக வந்து, தன் மனைவி மறைந்தபின், குடும்பத்தை அக்கறையாகக் கவனித்து வந்த ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்று அவர் எண்ணியபோது...

ஒரு ஞாயிற்றுக்கிழமை. காலை எட்டு மணி. மாடி ஹாலை அடுத்து இருந்த பால்கனியில் ஒண்ணேகால் மணி நேரமாக அன்றைய ஹிந்து மற்றும் எக்ஸ்பிரஸ்களை மேலோட்ட மாகப் பார்த்தும் ஓரிரு செய்தி மற்றும் கட்டுரைகளை அவசரமாகப் படித் தும் பூரண திருப்தி இல்லாமல், கோர்ட்டுக்குப் போகாத எம்.ஏ.பி.எல். ரமணி ராஜன் எழுந்தார். பேப்பர்ச் சுமையுடன் ஹாலுக்கு வந்து டீப் பாயின் மேல் அழகாக மடித்து வைத்துவிட்டு, அவருக்கே உரித்தான நிதான நடையுடன் குளியலறையை நோக்கி நடந்தார். கண்ணாடியைப் பார்த்ததும் வலக் கை தானாக இரு கன்னங்களையும் தாடையையும் வரு டியது. நேற்றைவிட அதிகம் சொர சொர... எங்கேயும் போகப் போவ தில்லை, பின் எதற்கு மழிப்பு என்ற கேள்வி ஒருகணம் எழுந்தாலும், மறுகணமே மனம் மாறியது. சொர சொரவை விட, வழவழ மேல்தான்... சோப்பை எடுத்தார். தேய்க்க ஆரம் பித்தார். கண்கள் கண்ணாடியில் அவரையே தேடின. தலைமுடி கடந்த சில வருடங்களில் அளவுக்கு மீறியே கொட்டிக் கொண்டு வரு கிறது. வழுக்கை இல்லைதான். ஆனால் அங்குமிங்குமாய் வெள்ளி இழைகள் தலை நீட்டி நாற்பத்தைந்து வயதை மேலும் ஐந்தாக உயர்த்து கிறதே!

பி.வி.ஆர்

குளித்துவிட்டு நேற்று இஸ்திரி போட்டு வைத்திருந்த கறுப்புக்கரை வேட்டியை - கடந்த நான்கு ஆண்டுகளாக வேட்டியின் கரை கறுப்புதான். - பொறுமையாகப் பிரித்துக் கட்டிக் கொண்டார். விபூதியையும் குங்குமத்தையும் நெற்றியில் பதித்துக் கொள்கையில் உதடுகளும் நாக்கும் சும்மா இருக்கவில்லை. மெலிதான குரலில் காயத்ரி ஒலித்தது. பத்துப் பன்னிரண்டு தடவை. அவருடைய ஆரம்ப பூஜையும் இதுதான்; முடிவு பூஜையும் இதுதான். நான்கு ஆண்டுகளாக அவர், கீழே எட்டாயிரம் ரூபாய்ச் செலவில் (பதினைந்தாண்டுகளுக்கு முன்) கட்டிய பூஜை அறையினுள் கால்கூட வைத்ததில்லை. சாவித்ரி காலை நாலரைக்கு எழுந்து பச்சைத் தண்ணீரில் குளித்து - அவளுக்கு கார்த்திகை - மார்கழிகளுக்கும், சித்திரை - வைகாசிகளுக்கும் வித்தியாசம் தெரியாது - ஈரத் தலையை முழுதும் உலரவிடாமல் ஒரு துவாலையில் கேசத்தை சிறு தேங்காயாகப் புதைத்துவிட்டு, மாற்றுப் புடைவையுடன் பூஜை அறைக்குள் பிரவேசிப்பாள். அவளுடைய குரல் சங்கீதமாய் வீடு முழுதும் எதிரொலிக்கும்.

முதலில் கணேச புஜங்கத்தில் ஆரம்பித்தால் ரெயில் மெதுவாக ஓடி, சஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, விஷ்ணு சகஸ்ர நாமம், ஸ்ரீஸ்துதி என்று ஒவ்வொரு ஸ்டேஷனாகக் கடந்து நாராயணீயத்தில் முடியும். கடிகாரமும் ஆறரையைக் காட்டும். வெள்ளிக்கிழமைகளில் ஒரு பெரிய கூடையில் பூக்கள் வரும். சாவித்ரியே ஆய்ந்து ஒரு பெரிய தாம்பாளத்தில் உதிரிகளை வைப்பாள். மாலை ஆறு மணிக்குள் பூஜை அறை துப்புரவாக புது அலங்காரத்தில் காணப்படும். அறுபத்தஞ்சு வயது கதிராமங்கலம் தீட்சிதர் ஆட்டோவில் வந்து இறங்குவார்.

சாவித்ரியின் திருப்திக்காக, மீண்டும் ஒருமுறை குளிப்பார். புது வேட்டியைக் கட்டிக் கொண்டு லலிதா சகஸ்ரநாமத்தை ஆரம்பிப்பார். அந்த சமயத்தில் ரமணிராஜன் கிளப்பில் டிபனை முடித்து விட்டு ரம்மி பூஜையில் ஆழ்ந்து போயிருப்பார். இரவு எட்டு மணிக்குத் திரும்பும் போது வீடு சந்தன, ஊதுபத்தி மற்றும் கற்பூரங்களால் மணக்கும். சாவித்ரி ஒரு வெள்ளித் தட்டில் சர்க்கரைப் பொங்கலையும் வடையையும் கொண்டு வருவாள்.

இதெல்லாம் நான்கு ஆண்டுகள் முன்வரை. ஒரு மாபெரும் நஷ்டம், ஈடே செய்ய முடியாத நஷ்டம் ஏற்பட்டுவிட்ட பிறகு எதிலுமே மனம் செல்லவில்லை. வாழ்க்கையிலிருந்து உப்பு, இனிப்பு இரண்டும் மறைந்துவிட்டன. மனத்தைத் தேற்றிக் கொள்ளவும் தெரியவில்லை. ஆனால் ஊராருக்காக அவ்வப்போது சிரித்து வந்தார்.

ரமணிராஜன் மெல்ல இறங்கி வந்தார். நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒரு வெள்ளிக்கிழமை இரவு பிறந்த வெறிச்சோட்டம் இன்னும் கலையவில்லை. கர்நாடக இசையைத் தவிர வேறு எதுவும் சாவித்ரி காதில் விழக்கூடாது. அந்த இசையை அவள் பொருட்டு அவர் தினமும் கேட்டார். பழைய நினைவுகள்தான் நாலாபக்கங்களிலிருந்தும் தாக்கியதே தவிர, மனம் இசையில் லயிக்கவில்லை. அதுவும் வெறிச்சோடிப் போயிருக்கிறதே!

கீழே ஹாலுக்கு வந்தபோது பூஜை அறையிலிருந்து சுந்தரகாண்டம் வந்தது. இவள் ஏன் இந்த வயதில் சுந்தரகாண்டம் சொல்ல வேண்டும்? ஒரே ஒரு காரணம்தான் இருக்க முடியும். கல்யாணம். அது விரைவில் நடக்க வேண்டும்.

திடீரென்று ரமணிராஜனுக்கு அவருடைய பொறுப்பு நினைவுக்கு வந்தது. சாவித்ரி தான் எடுத்திருக்கும் முடிவைச் சொல்லி, அதை அவர் செயல்படுத்த வேண்டும் என்று பல தடவை கூறியிருக்கிறாள்.

திடீரென்று சுந்தர காண்டம் நின்றது. அகிலி அவசர அவசரமாய் வெளியே வந்தாள்.

"ஸாரி மாமா... உங்களைக் காக்க வைச்சுட்டேன். இதோ இப்ப டிபனைக் கொண்டு வர்றேன்".

"இங்கே வா".

அவள் மெதுவாக முன்னேறி ரமணி அருகே வந்து நின்றாள். பார்வையால் என்ன என்று கேட்டாள்.

பதிலாய் அவர், "கொஞ்ச நாளா நீ தினமும் சுந்தர காண்டம் படிக்கிறே... ஏன், எதுக்கு... மனசில என்ன எண்ணம்?"

"அக்கா அடிக்கடி சொல்லுவா, வீட்ல நிம்மதி இருக்கும், சுபிட்சம் இருக்கும், மன வேதனை குறையும், குழப்பங்கள் நீங்கும். காரிய சித்தி உண்டாகும் சுந்தர காண்டத்தைப் படிச்சா அப்படீன்னு..."

"இப்ப வீட்ல நிம்மதி இல்லையா?"

"இல்லே மாமா..."

"சுபிட்சம்?"

"வெறும் பணமும் வசதியும்தான் சுபிட்சம்னா அது இருக்கு. ஆனா எல்லாரும் சந்தோஷமா அனுபவிக்கற போதுதான் சுபிட்சம் உண்டாறது".

"மன வேதனைன்னு சொன்னாயே...".

"அது ஒண்ணுதான் இந்த வீட்ல மண்டிக் கிடக்கு, மாமா".

"எதை மனசில வைச்சுண்டு குழப்பங்கள் குறையும்னு சொன்னே...?"

"ரேவதி அக்கா, மூர்த்தி அண்ணா இவங்க ரெண்டு பேரால உங்க மனசு குழம்பிக் கிடக்கே".

"அப்ப நீ சுந்தரகாண்டம் வாசிக்கறது எனக்காக, என் சுபிட்சத்துக்காகன்னு சொல்லு".

"நான் போய் டிபன்..."

"இரு... நான் சொன்னப்புறம் நீ போலாம்".



"சரி மாமா... கோவிச்சுக் காதீங்கோ..."

"நாளைக்கு சுந்தரகாண்டம் வாசிக்கறப்ப என் முன்கோபம் குறையணும்ங்கறதையும் லிஸ்ட்ல சேர்த்துக்கோ..."

"சரி மாமா... இப்ப நான் போலாமா?"

"இப்ப உனக்கு என்ன வயசு?

அவள் அவரைப் பார்க்காமல் தரையைப் பார்த்தாள்.

"பன்னண்டு வருஷம் முன்னால உன்னை பாலக்காட்லேர்ந்து சாவித்ரி பச்சை மண்ணாக் கொண்டு வந்து இந்த வீட்ல இறக்கினப்ப உன் வயசு ஒன்பது. இப்ப? எல்லா ஆட்டோ ரிக்ஷாக்கள் பின்னாலேயும் வெள்ளையா எழுதியிருக்காங்களே அந்த வயசு".

"நான்... நான்... டிபன்..."

"சாவித்ரி என் தலைமேல உன்னைக் கட்டி வைச்சுட்டுப் போயிட்டா. ஒரு பொறுப்பையும் திணிச்சிருக்கா... என் பொறுப்பை நான் நல்லபடியா சாவித்ரி மனசுபடி தீர்த்து வைக்கணும். நான் சொல்றது புரியறதா?"

"உங்க வார்த்தைகள் என் காதில விழறது. மாமா! ஆனா மனசெல்லாம் நீங்க இன்னமும் டிபன் சாப்பிடலையேன்னு..."

"சரி. போ, என்ன டிபன்?"

"வெண்பொங்கல், தொட்டுக்க கத்தரிக்கா கொத்சு".

"சாவித்ரி எனக்குன்னு ஸ்பெஷலா பண்ற டிபன்..." ரமணி சிரித்தார்.

"அக்காவோட கைமணம் இல்லேன்னாலும் தெரிஞ்சவரை செஞ்சிருக்கேன் மாமா! இஞ்சி, மிளகு, முந்திரிப் பருப்பு எல்லாம் போட்டிருக்கேன். நிறைய நெய்யும்..."

"சரி போ..." அவள் நகர்ந்தாள்.

"அகிலா".

நின்றாள்.

"என்ன மாமா?"

"சாவித்ரி, ரேவதி ரெண்டு பேரும் அக்கா. மூர்த்தி, அண்ணா. நான் மட்டும் எப்படி மாமாவாக முடியும்?"

"ஒன்பது வயசிலேர்ந்து கூப்பிட்டு வந்த பழக்கம். சொந்தமா இருந்தா அத்திம்பேர்னு கூப்பிடலாம். வேலைக்காரியா..."

"சரி சரி... போ... நாளைக்கு சுந்தரகாண்டம் படிக்கறப்ப என் பொறுப்பு சீக்கிரம் தீர்ந்து எனக்கு விடுதலை கிடைக்கணும்னு இராமரை வேண்டிக்கோ..."

"சரி, மாமா?"

இப்போதைய நிலைமையை எண்ணிப் பார்க்கும்போது, பன்னண்டு வருஷத்துக்கு முன்னாலே ஒருநாள் சாவித்ரி செய்து வைத்த காரியம் தவறு என்று தோன்றியது. தனியாக இருக்கும் அம்மாவைப் பார்த்து வருகிறேன் என்று சொல்லி பாலக்காடு சென்றவள் அங்கே அம்மாவைத் தோற்றுவிட்டு, பதினைந்து நாள்களுக்குப் பிறகு சென்னை திரும்பினாள். மாமியார் பற்றிய செய்தி கிடைத்ததும் ரமணி சென்றான் என்றாலும் அதிக நாள் தங்காமல் கிளம்பி விட்டான்.

பாலக்காட்டிலிருந்து சாவித்ரி தனியாக வரவில்லை. அகிலாவையும் அழைத்து வந்தாள். அன்று எதிர்காலம் பற்றி ரமணி நினைத்துப் பாராததால் இன்று உணரும் சுமையை அறிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது.

"என்ன சாவித்ரி! யார் இந்தப் பொடிப் பொண்ணு...?"

"அம்மாவோட தூரத்து சொந்தத்தில..."

"மெட்ராஸ் பார்க்க வந்திருக்காளா?"

"இல்லே... நம்மோட இருக்க வந்திருக்கா".

"என்ன சாவித்ரி உளர்றே..? இவளுக்கு என்ன வயசு? ஒன்பதா பத்தா?"

"ஒன்பதுதான். சுறுசுறுப்பா காரியம் செய்வா... துருதுருன்னு இருக்கா..."

"ஊர்ல ஆயிரம் பேர் இப்படி இருப்பா, சாவித்ரி! நம்ப வீட்டுக்கு எதுக்கு இவ?"

"அம்மாவோட கடைசி காலத்திலே இவதான் இருந்தா..."

"நம்ப கடைசி காலம் இன்னும் ஆரம்பிக்கலே..."

"இந்தப் பொண்ணுக்கு அம்மா இல்லே, அப்பா இல்லே..."

"பின்ன எப்படிப் பொறந்தா?"

"உங்க ஜோக் இருக்கட்டும். இவ எனக்கு உதவியா (சுத்துக்காரியம் செஞ்சுட்டுப் போகட்டும்".

"இவ அநாதை, ஏழை. இவளை நாம படிக்க வைக்கலாம்னு நீ சொல்லியிருந்தா நான் உன்னைப் பாராட்டியிருப்பேன், சாவித்ரி".

"இவளுக்கு இனிமே படிப்பு வராது... போன வருஷத்துக்கு முந்தின வருஷமே ஸ்கூல்லேந்து ஓடிவந்துட்டா".

"வம்பை விலைக்கு வாங்கறே... எதில போய் முடியப் போறதோ?"

"எல்லாம் நல்ல படியாதான் முடியும். ரேவதிக்கு வயசு பன்னண்டு. மூர்த்திக்கு பத்து. ரெண்டும் காலங்கார்த்தாலேயே யூனிபார்மை மாட்டிக்கறது. நாலு மணிக்குத்தான் வர்றது. காய்கறி நறுக்க, தேங்காயைத் துருவி அரைக்க..."

"சரி எப்படியோ போ... ஆனா ஒண்ணு. இவளை ரொம்ப நாள் நாம வைச்சுக்கப் படாது..."

"இவளுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி அனுப்பிச்சுடறேன்" சாவித்ரி சிரித்தாள்.

"ரேவதியைப் பத்தி இப்படி ஓர் எண்ணம் வரலையோ?"

"அது நம்ப ரெண்டு பேர் பொறுப்பு... இவ என் பொறுப்பு..."

"என்ன சம்பளம்?"

"நமக்கு என்ன தோணறதோ அதை பாங்க்ல கட்டிண்டு வருவோம். பத்துப் பன்னண்டு வருஷத்தில ஏழெட்டாயிரமாவது சேரும். அதைப்பத்தி இப்ப என்ன? ரேவதியும் மூர்த்தியும் அங்கே வராதது பத்தி எல்லாரும் குறையாப் பேசினா..."

"இதுகள்ளாம் மாடர்ன்... ஃபாதர் மதரே அவங்க காரியத்துக்காகத்தான். ஒண்ணுக்கும் பிரயோசனமில்லாத கிராண்ட் மதர் பத்தி ஏன் கவலைப்படப் போறாங்க? அந்த டெஸ்ட், இந்த ஸ்பெஷல் கிளாஸ்னு நம்ம உசிரைத்தான் வாங்கும்".

"சரி விடுங்க. பாவம்... எல்லாம் நம்ப காலம் மாதிரியா? நம்ப கல்யாணத்தப்ப எனக்கு வயசு பதினேழு. உங்களுக்கு இருபது. அப்புறம்தான்லா காலேஜ்லே சேர்ந்தேன். பி.எல் பட்டத்துக்கு முன்னாடியே ரேவதி..."

"சரி சரி எப்படியோ போ!"

"கோபமா?"

"போன்னு சொன்னேனில்லையா?"

"சரி, உங்களுக்குப் பிடிக்கலேன்னா அகிலியை அனுப்பிச்சுடறேன். எத்தனையோ வீடுகள் இப்படிப்பட்ட பெண்களைத் தேடிட்டிருக்கும்..."

"உள்ளே போ சாவித்ரி".

"நீங்க கோவிச்சுக்கறேள்".

"அது இருந்து தொலையட்டும். ஆனா ஒண்ணு. அவ என் முன்னாடி அநாவசியமா வரப்படாது. அவ பாலக்காட்டு பாஷையில உரக்கப் பேசப்படாது. என்னோட தஞ்சாவூர்த் தமிழ்தான்..."

"சரி".

"நீட்டா ட்ரஸ் பண்ணிக்கணும். மூக்கை ஒழுக விட்டுண்டு காய்கறி நறுக்கப்படாது. தேங்காய் துருவப் படாது".

"மூக்குன்னு இருந்தா சளின்னும் இருக்கும். ஆனா ஒழுகாமப் பார்த்துக் கறேன்".

"ரேவதி, மூர்த்தியோட அவ இழையப்படாது".

"சரி".

"அவளுக்குன்னு தனியா துணிகள் எடு. சோப்பு, பவுடர் வாங்கு. பின் கட்ல ஒரு ரூம் இருக்கே அதில தங்கச் சொல்லு".

"எல்லாத்தையும் விவரமா எழுதிக் கொடுத்துடுங்கோ".

"இந்தக் குறும்புக்கு ஒண்ணும் குறைவில்லே..."

"சரி சரி... அங்கேயே நில்லுங்கோ. கிட்ட நெருங்காதீங்கோ... இது கார்த்தால வேளை... திடீர்னு யாராவது வந்து..."

"உன்னை மத்தியானம் கவனிச்சுக் கறேன் சாவித்ரி!"

"மாமா!"

குரல் எழுப்ப ரமணி கண்களில் முட்டி கனத்து நின்ற நீரைத் துடைக்க முயலாமல், அகிலியையும் பாராமல்,

"டிபனை வைச்சுட்டுப்போ!" என்றார்.

ஆனால் அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும்.

"எனக்கும் அக்கா நினைப்புதான் வந்தது".

பொங்கல், நெய் மணக்க நன்றாகத்தான் இருந்தது. ஆனால் ருசிக்கவில்லை. மீண்டும் மீண்டும் பழைய நினைவுகள். இப்போது பெண் ரேவதி.

சென்னையில் எம்.பி.பி.எஸ். படித்து முடித்தவள் மேற்படிப்பை இங்கேயே தொடர்ந்திருக்கலாம். ஏதோ ஒரு பரீட்சை எழுதியவள் அதில் வெற்றி பெற்று, அமெரிக்காவுக்குப் பறந்தாள். இரண்டே இரண்டு ஆண்டுகள். போய் மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன.

சென்ற ஆகஸ்ட் மாதம் ஃபோன் வந்தது.

"அப்பா! நல்ல நியூஸ். நீங்க என்னை வாழ்த்தணும்..."

"அதான் மூணு மாசம் முன்னாடியே பரீட்சையில ராங்க்கோட பாஸ் பண்ணிட்டியே ரேவதி!"

"அதுக்குத்தான் நீங்க வாழ்த்தியாச்சே... இது... இது..."

"பையன் யாரு?"

"நம்ம நாடுதாம்ப்பா... குஜராத்தி. முட்டைகூட தொடமாட்டார். அவரும் டாக்டர்தான். நீங்க உடனே புறப்பட்டு வரணும்ப்பா... பிட்ஸ்பர்க்ல... கோயில்ல... அப்புறம் ரிஜிஸ்டர்ட்..."

"நீ சந்தோஷமா இருந்தா சரிதான் ரேவதி!"

"வரமாட்டீங்களாப்பா? அம்மா இருந்தா நிச்சயம் வருவா".

"அம்மா இருந்திருந்தா நீ அமெரிக்காவே போயிருக்க மாட்டே... நல்லா இரும்மா".

அவருடைய பெண். சாவித்ரி பெற்ற பெண். அவருடைய ஆசிகளைத்தான் கேட்கிறாள்; அனுமதியை அல்ல. ரமணிக்குத் துக்கமோ அழுகையோ வரவில்லை. சாவித்ரி அங்கே 'மேலே' இருந்து கொண்டு கண்ணீர் வடிப்பாளோ என்றுதான் சங்கடப்பட்டார்.

ரேவதி நேற்று ராத்திரி ஃபோனில் பேசினாள். அடுத்த வாரம் பாம்பே வருகிறாளாம். பரோடாவில் புருஷன் வீட்டில் ஒரு வாரம் தங்கிவிட்டு கணவனுடன் அவரைப் பார்க்க வரப் போகிறாளாம். வரட்டும், வந்து போகட்டும்.

பெண் இப்படி என்றால் பிள்ளை இன்னொரு விதம். பட்டப்படிப்பு முடிந்ததுமே இந்திய விமானப் படையில் தேர்வு கிடைத்தது. அவ்வளவுதான். எப்போது எந்த ஊரில் இருக்கிறான் என்பது கூடத் தெரியாமற்

போகலாயிற்று. மாதத்துக்கு ஒரு முறை, ஒரே ஒருமுறை ஃபோனில் 'சௌக்கியமா' என்று விசாரிப்பான். 'முடிந்தால் வருகிறேன்' என்பான். வயது இருபத்திரண்டு. ஆனால் பேச்சில் உலகத்தையே வென்றுவிட்ட தான கம்பீரம். எப்போது சென்னை வரப்போகிறான், அவரைப் பார்க்க? அவனுக்கும் தெரியாது. அவருக்கும் தெரியாது.

திடீரென விழிப்பு வந்தது.

பார்த்தார்.

அகிலி.

கையில் பாத்திரத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

"இன்னும் கொஞ்சம் பொங்கல்..."

"என் தட்டைப் பாரு. இதையே நான் இன்னும்..."

"உங்க மனசு சரியில்லே, மாமா!"

"அதுக்கு நிச்சயமா உங்கிட்ட மருந்து இல்லே, அகிலி!"

"மாமா!"

"என்ன?"

"எல்லாத்தையும் மறக்க எங்காவும் போய்ட்டு வாங்களேன்".

"எங்கே போனா எல்லாத்தையும் மறக்க முடியும், சொல்லு".

அகிலி பதில் கூறவில்லை.

"எங்கே போனாலும் நம்ம நிழல் நம்மோடதான் வரும் அகிலி! ரேவதி, சாவித்ரியோட மறுபதிப்பா இருப்பான்னு நினைச்சேன். கணக்கு தப்பாப் போயிடுத்து".

"அவ அந்த குஜராத்திப் பையனைப் பண்ணிண்டதில தப்பு இல்லே, மாமா...! ஆனா நீங்க தாரை வார்த்துக் கொடுக்கணும்னு அவளுக்குத் தோணியிருக்கலாம். ஏனோ தோணலே..."

"அவ பத்து பதினஞ்சு நாள்ள தன் புருஷனோட வர்றா".

"அப்படியா... அந்த சமயத்தில மூர்த்தியும் வந்தா நன்னாயிருக்கும். வீடு கலகலப்பா இருக்கும். சாப்பாட்டு விஷயத்தில நானும் என் கைவரிசையைக் காட்டுவேன்".

"இந்த மாசத்து ஃபோன் இனிமேத்தான் வரும். அப்ப சொல்றேன், நீ உன் கைவரிசையைக் காட்டப் போறேன்னு... போய் காபி - அரையே அரை டம்ளர் கொண்டுவா".

"கார்த்தால மதன்லால் ஃபோன் பண்ணினான். இன்னிக்கு முதலும் கட்டாயமா எடுத்துட்டு பன்னண்டு மணிக்கு வரானாம்".

"நான் இந்த வேலாதேவித் தொழிலுக்கே மூட்டை கட்டப்போறேன், அகிலி..."

சொன்ன பிறகுதான் ஏன் இவளிடம் சொன்னோம் என்று தோன்றியது.

"நான் போய்க் காபி கொண்டு வரேன், மாமா".

அவள் உள்ளே சென்றாள்.

பார்த்தார்.

உயரம். ஒற்றைநாடி. மாநிறம். புடைவையை நேர்த்தியாகக் கட்டியிருந்தாள். இவளுக்கு நல்ல இடத்தில் ஒரு பிள்ளையைப் பார்க்க வேண்டும்.

திடீரென்று சாவித்ரி.

ஒரு நாள்

"இந்தப் பொண்ணுக்கு நல்ல இடமாப் பார்க்கணும். நல்ல பொண்ணு. சூதுவாது தெரியாதவ. வீட்டுக்காரியமெல்லாம் ரொம்ப நன்னாச் செய்யறா".

"மொதல்ல ரேவதி".

"ரேவதிதான் மேலே மேலே படிக்கணும்னு சொல்றாளே".

"இப்ப இந்தப் பொண்ணுக்கு இருபது வயசுகூட ஆகலே... இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும் சாவித்ரி".

"எனக்கு ஓர் ஆசை".

"என்ன ஆசை?"

"ரேவதிக்கு நல்ல இடத்தில கல்யாணம் ஆகணும். மூர்த்தி பெரிய படிப்பு படிச்சு பெரிய வேலையில் சேர்ந்து கொடிகட்டிப் பறக்கணும். இந்த அகிலிப் பொண்ணு வெறும் சமையற்காரப் பொண்ணுதானேன்னு யாரும் மட்டம் தட்டாமப் பார்த்துக்கணும். அவளுக்கு டிக்ரி வாங்கி நல்ல வேலையில இருக்கிறவன் கிடைக்கணும்".

"இதுதானா உன் ஆசை?"

"ஆனா எல்லாம் நான் போறத்துக்குள்ளே நடக்கணுமே".

"சாவித்ரி! நீ என்ன உளர்றே?"

"என்னை மன்னிச்சுடுங்க".

"எதுக்கு?"

"இது நாள்வரை மறைச்சதுக்கு".

"எதை மறைச்சே?"

"உடம்பு சரியில்லே...".

"ஏன் சாதாரணமாத்தானே நடமாடறே. சாவித்ரி...! இன்னிக்குக் கார்த்தாலகூட நாலு மணிக்கு எழுந்து...

"என்னையும் மீறி மனசோட வலிமையில செய்யறேன்... ஆனா கொஞ்சம் கொஞ்சமா தளர்ந்து போயிண்டு வரேன்".

"என்ன உடம்புக்கு சாவித்ரி?"

"லுகேமியா".

ரமணி அதிர்ந்து போனான். உணர்ச்சிக் கொந்தளிப்பில் நா சிலையாயிற்று.

"பயப்படாதீங்கோ... வந்தவா யாரும் தங்கினதில்லே... நான் முன்னாடி, நீங்க பின்னாடி... அவ்வளவு தான்".

"சாவித்ரி! எவ்வளவு பெரிய விஷயத்தை இவ்வளவு எளிசாப் பேசறியே... இது எத்தனை நாளா?"

"ரெண்டு வருஷமா?"

"ரெண்டு வருஷமா எனக்குத் தெரியாம டாக்டர்ட்ட போயிட்டு வர்றே... டெஸ்ட் எல்லாம் எடுத்திருக்கே... ஏன் இப்படி... ஏன் இப்படி சாவித்ரி!.."

"உங்க மனசு நோகப்படாது, அழப்படாது".

"அப்ப ஏன் இன்னிக்கு சொன்னே?"

"ராத்திரி சொப்பனத்தில..."

"சொப்பனத்தில?"

"நான் போயிட்டிருக்கேன். மூர்த்தி முன்னாடி நடக்கறான். பின்னாடி தெரிஞ்சவா, தெரியாதவா..."

"போதும் நிறுத்து... இப்படிப்பட்ட சொப்பனம் எதுவும் பலிக்காது".

"ஆனா நான் அப்படி நினைக்கலே..."

"நீ நிச்சயமா சுமங்கலியாகத்தான் போவே, சாவித்ரி. ஆனா இப்ப இல்லே... ரேவதியோட பேத்திக்கும் கல்யாணமாகி..."

"டிராமா வசனம் பேசாதீங்கோ".

மீண்டும் கண்கள் கனத்தன.

"காபி".

"அகிலி!"

"என்ன மாமா?"

"போறதுக்கு கொஞ்ச முன்னாடி சாவித்ரி சில ஆசைகளைச் சொன்னா. அதுல ரெண்டு நிறைவேறல... ஏன்னா, என் பொறுப்பை ரேவதியும் மூர்த்தியுமே எடுத்துண்டாங்க. அவளே ஒருத்தனைப் பார்த்து, நான் இல்லாமலேயே தாலியைக் கட்டிண்டா. மூர்த்தி பெரிய படிப்புக்கு போகாம, டிக்ரி வாங்கினதும் ஏர்ஃபோர்ஸ்ல சேர்ந்துட்டான். அவன் பெரிய வேலையில சேர்ந்து கொடி கட்டிப் பறக்கணும்னா. இந்தியக் கொடியோட அவன் இப்பப் பறக்கறான். அதுவரை திருப்தி".

"தெரியும் மாமா".

"மூணாவது ஆசை..."

"அதுவும் என்னன்னு தெரியும்".

"ஹிந்து பேப்பர், மகாலிங்கபுரம் கோயில் இங்கேயெல்லாம் விளம்





எங்கே சொர்க்கம்?

'சந்தக்கவிமாமணி' தமிழழகன்

எங்கே சொர்க்கம்?
இருக்கும் இடங்கள்
தெரியுமா?

பெற்ற தாய்க்கும்
பிறந்த குழந்தைக்கும்
இடையில்தான்.

கற்ற கல்விக்கும்
கைகூப்பும் கடவுளுக்கும்
நடுவில்தான்.

உற்ற ஏழைக்கும்
உதவும் கரங்களுக்குமாய்
கொடையில் தான்.

பற்றற்றுச் செய்யும்
பலபல கடமைகளின்
விடையில்தான்.

பரப்படுத்தினா நல்ல பிள்ளை கிடைப்பான் அகிலி".

"நல்ல பிள்ளைன்னா என்ன அர்த்தம் மாமா? தண்ணி போடாதவன், சிகரெட் பிடிக்காதவன்னா...? இதெல்லாம் இருந்தும் நல்லவங்க இருக்காங்க. இது ரெண்டும் இல்லாமலே கெட்டவங்களும் இருக்காங்க..."

"குலம் கோத்திரம் பார்த்து..."

"அப்புறம்..."

"நம்ப வீட்டுக்குப் பின்னால ஒரு சின்ன அவுட் ஹவுஸ் இருக்கு, அகிலி! அதை உன் பேருக்கு எழுதி வைச்சுடறேன்... கல்யாணம் ஆனப்புறம் நீ சௌகரியமாத் தங்கிக்கலாம்".

"என்னை வெளியே அனுப்பப் பார்க்கறீங்க மாமா..."

"உனக்கும் வயசாயிடுத்து".

"அதுக்காக?"

"நீ வாழணும், இல்லியா?"

"வாழ்க்கைன்னா என்ன மாமா? ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒரே வீட்ல தங்கி கூடிக் குலாவி குழந்தைகளைப் பெத்துக்கறதுதானா?"

"எனக்குப் பதில் சொல்லத் தெரியலை அகிலி!"

"நான் இங்கேயிருந்து போயிட்டா நீங்க என்ன செய்வீங்க? இன்னோர் அகிலியைக் கொண்டு வருவீங்களா?"

"மாட்டேன்".

"அப்ப நான் எதுக்குப் போகணும்? ஒன்பது வயசில வந்தேன். இங்கே அக்கா என்னைக் கொண்டு வந்து விட்டுட்டுப் போயிட்டா. அவ போறப்ப கிட்டக்க நான் மட்டும்தான் இருந்தேன். நீங்க அவசர வேலையா மாயவரம் போயிருந்தீங்க. மூர்த்தி கிரிக்கெட் மாட்ச், ரேவதி காலேஜ். அவ என்ன சொன்னா தெரியுமா, மாமா?"

"என்ன? அதை இன்னும் ஏன் சொல்லாமலே இருந்தே?"

"சமயம் வர்றப்ப சொல்லிக்கலாம்னு இருந்தேன்".

"இப்ப வந்துட்டுதா?"

"எப்ப ஹிண்டு பேப்பர், மகாலிங்கபுரம் கோயில்னு ஆரம்பிச்சீங்களோ அப்பவே சமயம் வந்துட்டதாப் பட்டது".

"சாவித்ரி என்ன சொன்னா?"

"நான் இப்ப சொல்றது அவமேல் ஆணையா பேசற பேச்சு, மாமா! 'அகிலி! நான் போனப்புறம் ரேவதியும் மூர்த்தியும் இந்த வீட்டிலேயே இருப்பாங்கன்னு நிச்சயமாச் சொல்ல முடியாது. ஆனா உன் பேர்ல எனக்கு நம்பிக்கை இருக்கு... நீதான் கடைசிவரை அவரைக் கவனிச்சுக்கணும். கவனிச்சுப்பியா அகிலி?' இப்படிப் பேசினா. நானும் சரின்னேன்".

ரமணிக்கு என்ன பேசுவது என்று முதலில் புரியவில்லை. ஆனால் ஓர் எண்ணம் தோன்றியது.

"அப்படியானா நீ உன் புருஷனோட இந்த வீட்லேயே இரு".

"பேத்தாதீங்க மாமா! நான் என் புருஷனைக் கவனிப்பேனா, அல்லது உங்களையா?"

"நீ என்ன சொல்ல வர்றே?"

"நான் கடைசி வரை இந்த வீட்லதான் இருப்பேன்..."

"ஊளறாதே... ஊரும் உலகமும் என்னவெல்லாம் பேசும்".

"அவங்க ஊளறாம இருக்க ஒரு வழி என்னன்னு தெரிஞ்சுதான் அக்காவும் தன்னோட கடைசி நிமிஷத்தில அப்படிப் பேசியிருக்கா..."

"நீ இருபத்து மூணு. நான் நாப்பத்தஞ்சு..."

"ஏன் மாமா! மனுஷங்களுக்கு ஒரு வருஷம் போனா ஒரு வயசு ஏறுது. ஒரு வருஷம் போனா வாழ்க்கைக்கு வயசு அதிகமாறதா...? சொல்லப் போனா வயசே இல்லாததுதான் வாழ்க்கை மாமா... ஒரு நிமிஷமும் வாழலாம். ஒரு ஜன்மம் பூராவும் வாழாமலே இருக்கலாம்... இதை நான் சொல்லலே... மாமிதான் அடிக்கடி சொல்லுவா..."

"அகிலி!"

"உள்ளே வேலை இருக்கு மாமா... சமையலை ஆரம்பிக்கணும்..."

"அவசரப்படாதே அகிலி!"

"நான் நாலு வருஷமா நிதானமாத்தான் இருக்கேன், மாமா! இனிமேலா அவசரப்படப் போறேன்..? நீங்க மாடிக்குப் போங்க..."

ரமணி எழுந்தார். மெல்ல மாடியை படிப்படியாய் ஏறி மாடியை அடைந்தார். சாவித்ரி கண் முன் வந்தாள். சிரித்தாள். அகிலியிடம் கடைசி நிமிடம் கூறிய வார்த்தைகளை மீண்டும் சொன்னாள்.

வாழ்க, திலகன் நாமம்!

'ரகமி'

("வீரமராட்டிய சிங்கம்" என மிகப்பெருமையோடு அழைக்கும் லோகமான்ய பாலகங்காதர திலகர் 1920-ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் தேதி நள்ளிரவு தாண்டி அமரரானார். அந்த ஸ்வாதந்தர்ய மகாபுருஷரின் 75-ஆம் நினைவு ஆண்டு தொடங்கியுள்ளது. அவருக்கு நினைவாஞ்சலியே இக்கட்டுரையாகும்.)

"சத்ரபதி" வீரசிவாஜி மன்னன் பிறந்த வீரமராட்டிய மண்ணில் பிறந்த வீரப்புதல்வர்கள் எவருமே பிறருக்கு அடிமையாக வாழ விரும்பாதவர்கள். அதோடு பிறரையும் அடிமையாக வாழக்கூடாது என்பதற்கு வழிகாட்டியாகவும் விளங்கியவர்கள் எனலாம். அப்படிப்பட்ட வீரமண்ணில் பிறந்து "மராட்டியசிங்கம்" எனப் பாராட்டப்பட்ட ஒரு பிரமுகர் அந்த ஆண்டு "வீரசிவாஜி" உற்சவத்தையும், அடுத்து ஸ்ரீகணேஷ் பூஜாவையும் வெகு சிறப்பாக நடத்திய போது ஊர் மக்கள் திரண்டு கூடிய அக்கூட்டத்தில் ஒரு சிங்கம் கர்ஜிப்பது போல்:

"... பகவத்கீதையில் பகவான் கண்ணன் காட்டும் வழி என்ன? சுயநலக்கலப்பில்லாமல் பொதுநலத்திற்காகவும், தேசநன்மைக்காவும் நமது உறவினர்கள், ஆசிரியர்களையும் கூடக் கொல்லலாம்! அதனால் பாபம் இல்லை என்பது தான் வாக்கு- 'சத்ரபதி' சிவாஜியும் அதைத்தான் செய்தார். நாட்டுநலனுக்காக அப்ஸல்கானையும் அவர் கொன்றார்.



நம் வீட்டில் திருடர்கள் புகுந்துவிட்டால் அவர்களிட மிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள நமக்கு தக்க பலம் வேண்டாமா? பலம் இல்லாவிடினும் கூட வீட்டை விட்டு வெளியேறி, திருடர்களை வீட்டிற்குள் அடைத்து கதவைப் பூட்டி வீட்டோடு அவர்களைச் சேர்த்து நெருப்பு வைத்துக் கொளுத்திடத் தயங்கலாமா? அது போலவே தான், ஆங்கிலேய மிலேச்சர்கள் நமது புனிதமான இந்த பாரதத்தை ஆளுகின்ற அதிகாரத்தை யார் வழங்கினார்கள்? எவருமே அளிக்கவில்லை! இது அவர்களாகவே, நம்மை ஏமாற்றிய சூழ்ச்சியும், கையாண்ட விதமும்ஆகும். அந்த மிலேச்சர்கள் திருடர் களைப்போல நம் நாட்டிற்குள் புகுந்து நமது புண்ணிய பாரதபூமியைக் கைப்பற்றியதோடு நம்மையே ஆள்வதை இனி நாம் அனுமதிக்கலாமா?

"வீர மராட்டிய இளைஞர்களே! கிணற்றுத்தவளை போல் உங்கள் பார்வையைக் குறுக்கிக் கொண்டு ஆட்சியாளர்களின் அக்கிரமங்களைச் சகித்துக்கொண் டிருப்பதைக் கைவிடுங்கள். விழித்தெழுங்கள்! வீர முழக்கம் செய்யுங்கள்– கீதைபோதிக்கும் புண்ணியத் திருப்பணியை மனதில் எண்ணுங்கள். மகத்தான இந்திய நாட்டின் மகாபுருஷர்களின் வீரசாதனைகளை நினைவு கூருங்கள்!"என வீரமுழக்கமிட்டார். அந்தப் பிரமுகரின் வீராவேசமான பிரசங்கத்தைக் கேட்டதுமே அங்குகூடியிருந்த மாபெரும் கூட்டத்திலிருந்து, "திலக் மகராஜ் கீஜே!; லோகமான்ய திலகருக்கு ஜே! பாலகங்காதர திலக் ஜே! ஜய் லோக்மான்ய!" எனக் கோஷமிட்டது நாலாதிசைகளிலும் எதிரொலித்தது.'

அன்று மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட அந்த லோகமான்ய பாலகங்காதர திலகர் மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த கொங்கணத்தில் ரத்தினகிரி மாவட்டத்திலுள்ள கிசல் கிராமத்தில் 1856–ஆம் ஆண்டு ஜூலை 23ஆம்தேதி கங்காதரராவ், பார்வதிபாய் தம் பதியின் புதல்வராகப் பிறந்தார். பெற்றோ ரால் இவருக்கு இடப் பெற்ற பெயர் கேசவராவ். அடுத்து குழந்தைப் பருவத்தில் குடும்பத்தினர் அழைத்த பெயரோ 'பல்வந்த்ராய்' என்பது. "பால" எனசுருக்க மாக அழைத்து அதுவே பிற்காலத்தில் அவருடைய பெயரோடு ஒட்டிக்கொண்டது. கங்காதரராவ், பார்வதி பாய் தம்பதிக்கு முதல் மூன்று குழந்தைகளும் பெண்ணாகப் பிறந்து விடவே, நாலாம் முறையாக பார்வதி பாய் கர்ப்ப முற்றபோது, அடுத்துப் பிறக்கும் குழந்தையாவது ஆணாகப் பிறக்க வேண்டுமென்று இறைவி பவானியிடம் பிரார்த்திக்கொண்டதோடு இதற்கான கடும் விரதங்களையும் மேற்கொண்டாளாம். தெய்விக அருளால் நாலாவது பிறவி ஆண் குழந்தை யாகப் பிறந்ததினால் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குழந்தை திலகரிடம் அபார அன்பைக் காட்டியதோடு மிக்க செல்லமாகவே வளர்த்து வந்தனர்.


தனது ஏழாம் வயதிலேயே "பூனா சிடி ஸ்கூலில்" ஆரம்பக்கல்வியைத் தொடங்கிய சிறுவன் திலகர், தொடர்ந்து தனது படிப்பில் திறமையையும் காட்டினார். தமது தந்தை கங்காதரரைப் போலவே திலகரும் சம்ஸ்கிருதம், கணிதம் இரண்டிலுமே சிறந்து விளங் கினார். இவர் தனது 10ஆம் வயதில் தமது தாயாரை இழந்தார். அடுத்து இரண்டுமூன்று ஆண்டுகள் கழித்த துமே உறவினர்கள் ஒன்று கூடி ஒரேமகனான திலக ருக்குத் திருமணம் செய்துவிட எண்ணி திலகருக்கு 14 வயது பூர்த்தியாவதற்குள், 9 வயதான சத்தியபாமா பாய் என்ற சிறுமியை மணம் முடித்து வைத்தனர். ஆனால் திலகருக்குத் திருமணம் நடந்த அடுத்த ஆண்டே தந்தை கங்காதர ராவும் மரணம் அடைந்து விட்டார்.

பெற்றோரை இழந்த திலகர் வெகு சிரமப்பட்டு தமது கல்வியைத் தொடர்ந்தார். படிப்பில் பெரிதும் நாட்டம் கொண்ட அவர் தமது 21ஆம் வயதில் "பி.ஏ." பட்டப்படிப்பும், 23ஆம் வயதில் வழக்கறிஞருக்கான 'எல்.எல்.பி" சட்டப்படிப்பிலும்முதல்தரமாகத் தேர்வு பெற்றார். அந்நாளில் பட்டப்படிப்புகள் தேறியவர் களுக்கு சர்க்காரில் நல்ல உத்தியோகங்கள் உடனுக் குடன் கிடைக்கும். ஆனால் திலகரோ உத்தியோகம் எதிலுமே சேராமலும், சட்டப்படிப்பு தேறியதன் மூலம் தனியாக வழக்கறிஞர் வேலையையும் தொடங் காமல் ஏதோ தீர்க்கமான யோசனையிலேயே இருந்தார். படித்த படிப்பிற்கு எங்கேனும் உத்தியோகத்திற்குச் சென்றால் பணம் சம்பாதிக்கலாம். இதனால் நம் குடும்பம் மட்டும் பிழைக்கலாம். ஆனால் நம் பாரத நாட்டையும், மக்களையும் ஆங்கிலேய ஆட்சியிலிருந்து மீட்டு அவர்கள் சுதந்தரமாக வாழ்க்கையை நடத்த வேண்டாமா? இதற்காக எந்த உத்தியோகத்திற்குச் சென்றால் நல்லது?', பலமுறை தனக்குள்ளேயே கேட்டுக்கேட்டு சிந்தித்தார்.





சென்னை "திலகர் கட்டத்தில்" மகாத்மா காந்திஜியின் பிரசங்கம். பக்கத்தில் எஸ்.ஸ்ரீநிவாஸய்யங்கார்- காந்திஜியின் ஆங்கிலப் பிரசங்கத்தை திரு.எஸ்.சத்தியமூர்த்தி தமிழில் மொழிபெயர்த்தல்



"திலகர் கட்டத்தில்" எஸ். சத்தியமூர்த்தியின் பிரசங்கம் 'பெட்ரோமாக்ஸ்' விளக்கு வெளிச்சத்தில் விடிய விடிய நடத்தல்.

அச்சமயத்தில் புகழ்பெற்ற மராட்டிய எழுத்தாளர் விஷ்ணுசாஸ்திரி சிப்லுங்கர் என்பவர் ஆங்கிலேய அரசாங்கத்தினிடம் உத்தியோகம் பார்த்தவர், பிறருக்கு அடிமையாக வேலை செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு தமது அரசுவேலையை உதறித்தள்ளி பூனாவிற்கு வந்திருந்தார். சாஸ்திரியின் கொள்கைகளை அந்நாளில் மகாராஷ்டிர மக்கள் யாவரும் நன்கறிந்திருந்தனர். அவர் "நிபந்தமாலா" என்ற பத்திரிகையின் மூலம் தமது ஆழ்ந்த கருத்துகளை வெளியிட்டிருந்தார். பூனாவில் தேசியக்கல்வி கற்றுத்தர ஒரு பள்ளியைத் தொடங்கி அதன்மூலம் மக்களைப் பயன்படச் செய்ய வேண்டுமென்ற எண்ணமும் கொண்டிருந்தார்.

விஷ்ணு சாஸ்திரியின் கொள்கைகள் திலகரைப் பெரிதும் கவர்ந்தன. உடனே திலகரும் தமது நண்பரான ஆகர்கர் என்பவருடன் சேர்ந்து சாஸ்திரிக்கு உதவியான "நியூஇங்கிலீஷ் ஸ்கூல்" நடத்தத்தொடங்கினார். அரசாங்க உத்தியோகத்திற்கான பட்டப்படிப்பு குமாஸ்தாக்களைத் தேர்ந்தெடுப்பதைவிட நாட்டிற்காகப் பாடுபடும் உண்மையும் நேர்மையும் மிகுந்த குடிமகனுக்குத் தேவையான கல்வியை அளிப்பதே இந்தக் கல்வி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. அப்பள்ளியில் விஷ்ணுசாஸ்திரி ஆசிரியராகவும், நிர்வாகியாகவும், திலகர் ஓர் ஆசிரியராகவும் பொறுப்பேற்று நடத்தினர். ஆரம்பத்தில் அப்பள்ளியில் 19 மாணவர்கள் மட்டுமே சேர்ந்திருந்தனர். நாளடைவில் பள்ளியின் போதனா முறை பூனா மற்றும் சுற்றுப்பட்ட வட்டாரங்களில் பரவியது. பள்ளி தொடங்கிய சில ஆண்டுகளுக்குள் சுமார் 1,005 மாணவர்கள் சேர்ந்து படித்ததினால் அப்பள்ளிக்கும் அதில் பணியாற்றிய ஆசிரியர்களின் பெயர்களும் பிரபலமாயின. அன்று சாதாரணப் பள்ளியாகத் தொடங்கிய "நியூஇங்கிலீஷ்ஸ்கூல்" வெகு விரைவிலேயே பல பிரமுகர்களின் ஆலோசனையோடு "டெக்கான் எஜுகேஷன் சொசைட்டி"யின் பேராதரவோடு அப்பள்ளியையே ஒரு கல்லூரியாக மாற்ற ஏற்பாடாகியது. அந்த ஏற்பாடே "பெர்கியூஷன் காலேஜ்" என்ற பெயரில் தொடங்கியது. இன்றும் மராட்டிய மாநிலத்திலேயே சிறந்த காலேஜாக நற்பெயரோடு பெரும் வளர்ச்சியையும் அடைந்துள்ளதே அதன் சிறப்பை விளக்கும்

ஒரு சமயம் திலகரின் பழைய நண்பர்கள் நேரிலே அவரைச் சந்தித்து, "மிஸ்டர்திலக்! நீங்கள் படித்த படிப்புகளுக்கு சர்க்காரிலேயே நல்ல உத்தியோகம் பெற்றிருக்கலாம். அதோடு வழக்கறிஞர் பட்டப்படிப் பிற்கு நீங்கள் சொந்தமாகவே வழக்கறிஞராக 'பிராக்டிஸ்' செய்திருக்கலாம். இந்த இரண்டு உத்தியோகங்களைவிட்டு, உபாத்தியாயர் வேலையை ஏன் தேர்ந்தெடுத்தீர்கள்?" என்றதற்கு அவர், "நல்ல வேளையாக நான் பணத்திற்கு அடிமையாகிவிடவில்லை. அதுமட்டுமல்ல! இந்த அந்நிய ஆட்சிக்கு அடிமையாகி அரசாங்க வேலையை ஏற்க நான் தயாராக இல்லை... சொந்தத்தில் வழக்கறிஞர் வேலை என்பது- பொய் பேசுவதற்கு நம் அறிவைப்பயன்படுத்துவது- பெரும் குற்றமாகும். அதனால்தான் உலகிலேயே பாவமில்லாத் தொழில் எது என்று யோசித்தேன். பிள்ளைகளுக்கு ஞான அறிவுக்கண்களைத் திறக்கும் உபாத்தியாயர் உத்தியோகமே சிறந்ததென்று என் மனம் கூறியது. அதன் படியே அந்த உத்தியோகத்தையே ஏற்றுக் கொண்டேன்!" என்று பதில் கூறினார்.

இது கேட்டதும் அந்த நண்பர்களில் ஒருவர் சற்று கிண்டலாக, "என்ன காரியம்செய்துவிட்டீர்? 30 ரூபாய் சம்பளத்தில் பணியாற்ற உன் மனம் இதைத் தானா போதித்தது? இந்த உபாத்தியாயர் தொழில் உன் ஏழைமை நிலையை உயர்த்திட எப்படி உதவும்? நீ இறந்துவிட்டால்கூட உன் உடலைத்தகனம் செய்யக் கூட பணம் இல்லாத நிலையில்தான் இருக்கும்!" எனக்கூறி சற்று ஏளனமாக நகைத்தார்.

இதற்கு திலகர் மிகப்பொறுமையோடு, "மாதாபிதா, இவர்களுக்கு அடுத்த "குரு"ஸ்தானத்திலிருக்கும்

உபாத்தியாயர்களுக்கு எந்தவிதமான கெடுதலும் அணுகாதிருக்க எங்களுக்கு அடுத்து "தெய்வமே" இருக்கிறது. அந்த நிலைமை எங்களுக்கு ஏற்பட தெய்வமும் பொறுத்திருக்காது. அப்படி தெய்வமும் மறந்துவிட்டாலும் என் உடலை எடுத்து தகனம் செய்ய கார்ப்பரேஷன் அதிகாரிகள் மக்களின் சுகாதார நலனைக்கருதி எனது உடலை அப்புறப்படுத்த அவர்கள் ஓடோடி வருவார்கள். உமக்கு ஏன் இந்த வீண்கவலை?" என்றவாறு கேள்விகேட்ட நண்பரின் முகத்தில் அறைந்தாற்போல் பதிலளித்தார்.

நாட்டுமக்களுக்கு நமது தாய்நாடான பாரதத்தின் மீது பற்று ஏற்பட வேண்டுமென்ற காரணத்தினால் தனது உபாத்தியாயர் தொழிலோடு மக்களுக்கு நாட்டின் நலன் அறிய மராட்டிய மொழியில் "கேஸரி" என்ற பத்திரிகையையும், ஆங்கிலத்தில் "மராட்டா" என்ற பத்திரிகையையும்தொடங்கி அவற்றுக்கு ஆசிரியராக இருந்து செயல்பட்டார். அவ்விரு பத்திரிகைகளில் ஆங்கிலேய ஆட்சியினரின் தவறுகளை ஆதாரங்களோடு வெளியிட்டார். இவ்விரு பத்திரிகைகளும் மக்களுக்கு வியப்போடு ஆங்கிலேய ஆட்சியாளர்கள் மீது வெறுப்பும் ஏற்படக் காரணமாயின. இவற்றைக்கண்ட ஆட்சியாளர்கள் திலகரின் அன்றாட நடவடிக்கைகளில் "கழுகுப்பார்வை"யைச் செலுத்தினர்.

1893-ஆம் ஆண்டு பம்பாய் மாநிலத்தில் "இந்து முஸ்லிம்" கலவரங்கள் மூண்டன. கலவரங்கள் மேலும் பலத்து ரத்தக்களறியாக மாறின. இதைத் தடுப்பதற்காக முயற்சிகளில் போலீஸ் தடையேதும் செய்யாமலும் தலையிடாமலும் இருந்தது. கலவரங்களின் மூலக்காரணம் அரசாங்கமே முஸ்லிம்களைத் தூண்டிவிட்டுவிட்டு பின்னர் நடவடிக்கைகளில் அரசாங்கம் வாய் பொத்தி இருப்பதை திலகர் நன்கு அறிந்தார். இந்தச் செயலைக் கண்டித்து தமது "கேஸரி" பத்திரிகையில் ஆட்சியாளர்களைத் தாக்கி பிரசுரங்கள் செய்தார். அந்த ஆண்டு முதல் திலகர் பம்பாயில் கணபதி உற்சவங்களைச் சிறப்பாகக் கொண்டாடும் பெரும் முயற்சியில் ஈடுபட்டார்.

விநாயகர் ஊர்வலங்களில் சில முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்ட மேடைகளில் பாலகங்காதர திலகர் கம்பீரமாக ஏறி நின்று, "எனது வீரமிக்கமராட்டிய பூமியில் பிறந்த மராட்டிய வீரர்களே! 'அச்சம்', 'அடிமை' என்பது மராட்டியர் பரம்பரையிலேயே இருந்ததில்லை. ஆனால் இன்று மராட்டிய மாநிலத்தில் மதக்கலவரங்கள் ஏற்படுவதற்கு ஆங்கிலேய அரசுதான் காரணம். இப்பாரத நாட்டில் பிறந்த இந்துக்கள், முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் உடன் பிறந்த அன்புச் சகோதரர்களே. நம்மிடமிருக்கும் ஒற்றுமையைப் பிரிக்கவே அரசு செய்த சூழ்ச்சியே அக்கலவரங்களாகும். இனி நாம் பொறுத்திருக்கமாட்டோம். இனி நாம் ஆங்கிலேயருக்கு அடிமையாக இருக்கமாட்டோம். சுயராஜ்ஜியம் எமது பிறப்புரிமை! அதனை அடைந்தே தீருவோம்! விடுதலைதான் "சொர்க்கம்!" அடிமை வாழ்வு "நரகம்!" என்று வீர கர்ஜனை முழங்கினார்.


திலகரின் மேடைப் பேச்சுகள், அவரது "கேஸரி" பத்திரிகையில் அரசாங்கத்தைத் தாக்கி எழுதியதற்காக அவர் மீது ராஜத்துரோகக் குற்றங்கள் சுமத்தப்பட்டு பம்பாய் ஹைகோர்ட்டில் விசாரிக்கப்பட்டு அவருக்கு சிறைதண்டனையும் தீர்ப்பாகியது. இதுபற்றி திலகர் சிறிதும் அச்சப்பட்டவராகவே தெரியவில்லையாம். அடுத்து பம்பாயில் கடும் பஞ்சமும், தொடர்ந்து "பிளேக்" நோயும் வெகுதுரிதமாகப் பரவி மக்களைப் பெரும் துயரங்களுக்கு ஆளாக்கின. இந்த இரண்டு விஷயங்களில் ஆங்கிலேய அரசு எவ்வித நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் காலதாமதமே செய்தனர். இதனைக்கண்ட திலகர் தாமே பல இடங்களுக்குச் சென்று புதியபுதிய ஆஸ்பத்திரிகளைத்திறந்தார். பஞ்சத்தைப்போக்க கிராமம் கிராமமாகச் சென்று உணவுப் பொருள்களைத் தனது சொந்தப் பணத்தில் வாங்கி அவற்றைப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாக வழங்கினார். மக்களுக்குத் திலகர் மீது மிகுந்த அன்பும் மரியாதையும் ஏற்பட்டு எல்லாருமாக அவரை "லோகமானியர்" (மக்களால் மதிக்கப்படுபவர்) என்று அழைத்தனர். அன்றுமுதல் அவரை "லோகமான்ய பாலகங்காதர திலகர்!" என்ற முழுப்பெயரால் அழைக்கலாயினர்!

மக்களிடையே திலகருக்கு அபாரப் பெருமைகள் ஏற்படுவதோடு மக்கள் ஆங்கிலேய ஆட்சியினரை வெறுக்கும் நிலைமையை அறிந்த ஆட்சியாளர், அவர் "கேஸரி" பத்திரிகையில் ஆட்சியாளருக்கு எதிராகவெளியிட்ட விஷயத்தை ராஜத்துரோகமென்று காரணம் காட்டினர். அவரைக் கைது செய்து அவர் மீதுள்ள குற்றங்களுக்காக பம்பாய் ஹைகோர்ட்டில் விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கை விசாரிக்க பிரதம நீதிபதியோடு 9 ஜூரிகளும் இருந்தனர். அதில் 5 பேர் ஆங்கிலேயர்கள். மற்றவர்கள் இந்தியசுதேசிகள். அன்று கோர்ட்டில்திலகர் மீதுள்ள வழக்கைக் கவனிக்க பல முக்கிய பிரமுகர்களோடு பொதுமக்களும் குழுமியிருந்தனர். திலகரிடம் நீதிபதி, "மிஸ்டர் திலக்! உம் மீதுள்ள குற்றங்களுக்காக நீர் என்ன பதில் கூறப் போகிறீர்கள்?" என வினவினார்.

"நீதிபதி அவர்களே! நான் குற்றமற்றவன். ஆனால் அரசாங்கம், நான் எனது "கேஸரி" பத்திரிகையில் வெளியிட்டுள்ள விஷயத்தைச் சரிவரப் படிக்காமல், அதன்விளக்கம் என்னவென்று அறியாமலேயே என்மீது ராஜாங்கக்குற்றங்களைக் காட்டி நீங்களே முடிவெடுத்தால் இதற்குநான் என்னபதில் கூறுவது? "கேஸரி"யில வெளியான விஷயத்தைப் படிக்கும் எந்த ஒரு மராட்டிய



சுதந்தரப் போராட்ட காலத்தில் இணைபிரியாத மூவர் "பால்-லால்-பால்" (Bal - Lal - Pal) பாலகங்காதரதிலக்-லாலா லஜபதிராய், விபின்சந்திர பால்



பம்பாய் "பெர்கூஸன் காலேஜ்" விழாவில் கோபாலகிருஷ்ண கோகலேயும் (இடமிருந்துவலம் 2வது நபர்) பாலகங்காதர திலகரும் (வலமிருந்து இடம் முதல் நபர்)

னும் அதனைத் தவறாக எடுத்துக் கொள்ளவேமாட்டான்!" இந்த வழக்கில் தவறு என்றும், அதனால் நான் குற்றவாளி எனவும் நீதிபதிகள் கருதி எனக்கு தண்டனை அளிக்க முடிவு எடுத்தால், சட்டப்படி தீர்க்கமாகவே தீர்ப்பு கூறலாம்!" என்றார் திலகர்.

பதிலுக்கு நீதிபதி, "திலக்! நீர் மக்களிடையே நல்ல செல்வாக்குள்ளவர். உமது சொல்வாக்குகளை மக்கள் வழிகாட்டியாகவே பாவிக்கின்றனர். நீர் புத்தி சாமர்த்தியமும், விடா முயற்சியுமுள்ளவர். இப்படிப்பட்ட சிறப்புத்தன்மைகள் உம்மிடம் இருப்பதால் நீர் எமது பிரிட்டிஷ் அரசாங்கத்தினருக்கு வேண்டியவராக இருந்திருக்கலாமே?" என்றதற்கு லோகமான்ய திலகர் சற்று சினத்தோடு, "நீதிபதி அவர்களே! எங்கள் பாரதம் பிரிட்டிஷ் ஆட்சியாளரிடமிருந்து "சுயராஜ்யம்" பெறவேண்டுமென்று ஒவ்வோர் இந்தியரும் நாட்டிற்காக எந்தத்தியாகமும் செய்யத் துணிந்து போராடும்போது, அந்த இந்தியர்களில் ஒருவனான நான்மட்டும் உங்கள் பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்கு எப்படி வேண்டியவனாக மாறமுடியும்? இது போல் எந்த ஓர் இந்தியனுமே இருக்கமாட்டான். அது பற்றி சிந்திக்கவும் மாட்டான். சொல்லப்போனால் கனவும் கூடக் காணமாட்டான்! இதனை நினைவில் வைத்துக்கொள்ளும்!" என்றார் அழுத்தம் திருத்தமாக!

இதனைக் கேட்ட நீதிபதிக்கே சற்று வியப்பும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. தொடர்ந்து அவர், "திலகரே! உம் மீதுள்ள குற்றங்களுக்காக நியாய, அநியாயங்கள், வாதப்பிரதிவாதங்களைக் கொண்டு ஆராய்ந்ததில் சட்டப்படி உமக்கு 36 மாதக் கடுஞ்சிறைதண்டனை விதிப்பதற்கு பதிலாக 18 மாதக் கடுங்காவல்தண்டனையை விதிக்கிறேன்!" என, தீர்ப்பும் வழங்கினார்.

தீர்ப்பைக் கேட்டதும் திலகர் "நீதிபதி அவர்களே! இங்கே எனக்குத் தண்டனை அளிக்கப்பட்டுவிட்டது. இந்த நீதிமன்றத்தைவிட பெரிய நீதிமன்றம் ஒன்று இருக்கிறது. அங்குநான் குற்றவாளியே அல்ல! ஏனெனில் நான் வெளியிலிருந்து தேசத்திற்காக எவ்வளவு வேலைகளைச் செய்ய முடியுமோ, அதை விட அதிகமாக சிறையில் கைதியாக இருந்துகொண்டே செய்யமுடியும் என்பது இறைவனின் விருப்பம்போலும். சென்று வருகிறேன்!" எனக் கூறியதும் அவர் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்!

சில மாதங்கள் சென்றன. கொடுஞ்சிறையிலுள்ள திலகரை நேரிலே வந்து சந்தித்த ஓர் ஆங்கிலேய உயர் அதிகாரி "இனி நான் அரசாங்கத்தை எதிர்ப்பதில்லை!" என்று வாக்களிக்கும்படி நிர்ப்பந்திக்க, பதிலுக்கு அவர், "நிபந்தனைகளோடு மன்னிப்புக்கேட்டு விடுதலை பெறுவதைவிட கொடுஞ்சிறையில் நான் வாழ்வதே எனக்கு உகந்தது. வந்தவழியே திரும்பிச் செல்லுங்கள்!" எனக் கூறியதும் வந்த ஆங்கிலேய அதிகாரியே அசந்துவிட்டார்!

இதற்குப்பின் லோகமான்ய திலகரின் மீது பல குற்றங்கள் சுமத்தப்பட்டு, அதற்கான கடுஞ்சிறை தண்டனைகளை பம்பாய் டோக்ரிசிறை, ஆமதாபாத் சபர்மதி சிறை, ரங்கூனில் மாண்டலே சிறை ஆகியவற்றில் பல ஆண்டுகள் கடுந்தண்டனைகளை அனுபவித்தபின் உடல்தளர்ச்சியால் வெளியேறி கடைசி காலத்தில் பம்பாயிலேயேதங்கினார். 1920ஆம் ஆண்டு திலகரின் உடல்நிலை மேலும் பாதிப்புற்றது. மருத்துவர்கள் தீவிர சிகிச்சைகள் அளித்தும் எவ்வித பயனும் அளிக்காமல் ஜூலை 31ஆம் தேதி நள்ளிரவு தாண்டி 12:40 மணிக்கு (மறுதினம் ஞாயிறு ஆக.1) மரணம் அடைந்தார். அப்போது அவருக்கு வயது 64.

"லோகமான்ய பாலகங்காதர திலகர்" உயிருடன் வாழ்ந்த அந்நாளிலே நமது சென்னை திருவல்லிக்கேணி மெரினா கடற்கரை மீன்காட்சி சாலைக்கு (அக்வேரியம்) ப் பின்னாலுள்ள இடத்திற்கு 1908-ஆம் ஆண்டு தேசபக்தர் சுப்பிரமணியசிவா "திலகர் கட்டம்" எனப் பெயரிட்டார். "திலகர் கட்டம்" என்று பெயரைச் சொல்லும்போதே திலகரின் சுதந்தரப் போராட்ட நினைவுகள் அனைவருக்கும் தெரிய வந்தன. "திலகர் கட்டம்" என்று சொல்லும்போதே நமக்கு தேசிய உணர்ச்சியும் அந்த இடத்தில் மகாத்மா காந்தியடிகள், விபின்சந்திரபால், சரோஜினிநாயுடு, நேருஜி மற்றும் பல தேசியத் தலைவர்களின் பிரசங்கங்களெல்லாம் நடந்த புனித இடம் என்று எண்ணம் எழுகிறது. நம் பாரததேசம் 1947 ஆகஸ்டு 15இல் சுதந்திரம் அடைந்த பின் "திலகர் கட்டம்" என்று பெயர் காணாமல்; காற்றோடு பறந்தாகிவிட்டது!

இந்த ஆண்டு மகாத்மா காந்தியடிகளின் 125-ஆம் பிறந்த ஆண்டு! அதோடு லோக மான்ய திலகரின் 75ஆம் நினைவு ஆண்டு. இக் காலகட்டத்திலாவது தேசபக்தர், மராட்டிய சிங்கத்தின் பெயராகிய திலகரின் புனிதப் பெயருடைய அந்தத் திலகர் கட்டம் பெயர் மீண்டும் ஒலிக்க, லோகமான்ய பாலகங்காதர திலகரை "வாழ்க திலகன் நாமம்! வாழ்க வாழ்கவே!" எனக் கூறி அஞ்சலி செலுத்துவோமாக!

இனியேனும் இதயம் கொள்க!



கலைமாமணி மன்னர்மன்னன்

ஆடவரே, அப்படியே நில்லுங்கள்! உங்கள்
செவிமடலைத் திறந்து வைத்தே கேட்டிடுங்கள்.
ஓடவழி பார்க்காதீர், உருட்டும் விழி மாற்றிடுக!
உண்மைகளை நேர்கொண்டு உணர்ந்திடுக!
தேடரிய இலக்கியங்கள் திருநாட்டில் தோன்றிப்
பேதை எனப் பெண்குலத்தைச் சொல்லிவைக்க,
ஒடெனவே ஒண்டொடியை ஒடுக்கிவைக்கும்
ஒவ்வாத முறைகளிங்கே வந்ததாலே
மாடெனவே மடக்கி வைத்துப் பூட்டினீர்கள்!
மதிப்பிழந்து மகளிரெலாம் மடியலானார்.
பீடுடைய எச்செயலும் பெண்ணுக்கில்லை,
பெருமையெலாம் ஆணுக்கே எனப்பிதற்றும்
கேடுதரும் சமுதாயக் கொடுமைகளால்
கீழ்மக்கள் ஆனாரே பெண்டிர் எலாம்!
நாடதிலே, மக்களிலே சரிபாதி நங்கையரே
என்றாலும், எங்கும் ஆடவர்க்கே நாட்டாண்மை!
வேலைக்குப் போகின்ற பெண்வேண்டுமென்பீர்
வேலை முடிந்து மெய்யலுத்து வந்தாலும் ஓய்வில்லை.
சூலைச் சுமக்கின்ற காலத்தும் சோர்ந்திருக்க முடியாது.
சொல்லவுந்தான் கூடாது, சோம்பேறிப்பட்டம் வரும்!

பாளைச் சிரிப்பென்பீர், பல்லெல்லாம் முத்தென்பீர்
காலை மலர்ந்தவுடன் கழுதையென்றே கடிந்திடுவீர்!

வேலாகும் சொல்லாலே, வேலைகளின் சுமையாலே
சேலான விழிகளிலே செந்நீர் வந்த பின்னர்
தோலானேன்! நோயாலே தொய்ந்து விழலாக
மூளை கலங்கிற்றாம், மூச்சடங்கிப் பிணமானேன்!
ஓலையிலே கிடத்திவிட்டு ஒப்பாரி வைக்கையிலே
ஆளொருவன் வந்தானாம். ஆணுக்கு உயிர்கொடுத்துக்
கோளாறு நீக்கிக், கொண்டுவந்த கத்தியினால்
என்இதயம் எடுத்திருத்தி இறப்பைத் தடுத்துள்ளார்.
பாழாகப் பெண்ணினத்தைப் பதறடித்த ஆடவரே!
பாவையரின் இதயத்தை இனியேனும் ஏற்பீரோ!



"என்ன சார் தலை முடியெல்லாம் ஒரேயடியா நரைச்சுப் போயிருக்கு. மீசை மட்டும் அப்படியே இருக்கு. ஏதாவது கவலையா?"

"இல்லை... மீசை வருவதற்கு இருபது வருஷத்துக்கு முன்னாலே தலை முடி வளர்ந்திருந்ததே'



"இந்தச் சீட்டிலே எழுதியிருக்கிற மருந்தை வாங்கிச் சாப்பிடுங்க பத்து வயசு குறைஞ்சு இளமையாயிடுவீங்க."

"வேண்டாம் டாக்டர்! அப்புறம் என் பென்ஷன் கிடைக்காம போயிடும்"



"பயங்கர மிருகங்களை எல்லாம் உங்கள் கனவில் தினமும் பார்க்கிறதாகச் சொல்றீங்களே... ஏதாவது டாக்டரைப் பார்த்தீர்களா...?

"இல்லை... மிருகங்களை மட்டும் தான் பார்க்கிறேன்."



"என்ன சார் நீங்க? நான் சீக்கிரமா வருகிற போதெல்லாம் லேட்டா வர்றீங்க... நான் லேட்டா வருகிற அன்னிக்கு சீக்கிரமா வந்து... எக்ஸ்ப்ளனேஷன் கேட்கிறீங்களே"



"என்ன டாக்டர் நீங்க? சத்ரபதி சிவாஜியா வந்த என்னை சாதாரண மனிதனாக ஆக்கி திரும்பி அனுப்பு றீங்களே. உங்களுக்கு நியாயமா இருக்கா?"

கண்டு பிடியுங்கள்



விளையாட்டுகளின் பெயர்கள் இடம் பெயர்ந்துவிட்டன. சரியான விளையாட்டுகளைக் கண்டறியுங்கள்.

விடை : 1. கால்பந்து, 2. டென்னிஸ், 3. கிரிக்கெட், 4. ஓட்டப் பந்தயம், 5. நீச்சல்.




மனைவி : குட்டிப் பூனையைக் காணவில்லையே. நீங்க பார்த்தீங்களா?


கணவன் : அதுக்குத்தான் பாலைச் சூடாக வைக்காதேன்னு சொன்னேன்.

(பூனை விளக்கில் மறைந்திருக்கிறது).

எண்ணிப் பாருங்கள்!

ஓடுகின்ற குதிரைகள் எத்தனை என்பதைக் கண்டு பிடியுங்கள். சரியான எண்ணிக்கையை நண்பரிடம் காட்டிச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.





பூமிக்கு அடியிலிருக்கும் மண் புழுக்களில் எந்தப் புழு மேலே வருவதற்குச் சாத்தியமாகும். முயற்சி செய்து பாருங்கள்.



அதிசயம், ஆனால் உண்மை!

புதையலைத் தோண்டினால் யார் அதிர்ஷ்டசாலி? சேவல் கோழி தான்! இங்கிலாந்தில் இந்தச் சேவல் பழைய ஸ்டானிஸ்டட் அரச மாளிகையில் மைதானத்தைத் தோண்டியதில் ஆயிரம் பழைய நாணயங்களைக் கண்டெடுத்தாம்!

படங்கள் : ராஜகுமாரி

கருத்து : குண்டுமணி



 வள்ளல் அமரர் எம்.வி.ஜயராமன் வண்ணப்படம் : யோகா

மணிக்கொடி அளித்த

மாவள்ளல் ஜெயராமன்

இளைஞன் ஜெயராமனுக்கு அது ஒரு சோதனையான நேரம்.

குடும்பத்தில் எழுந்த வேறுபாடு காரணமாக அவரை வெளியேறச் சொல்லிவிட்டார்கள்.

காசுக்கு வழியில்லை.

படித்த படிப்போ வெறும் தமிழ்ப்படிப்பு. அப்போது அதற்கு மதிப்பு எதுவும் கிடையாது.

இதில் திருமணமாகி மூன்று குழந்தைகள் வேறு!


குடும்பத்தை விட்டுப் போகும்படி நிர்தாட்சண்யமாகச் சொல்லிவிட்டார்கள்.

எங்கே போக முடியும்?

கிட்டத்தட்ட வாழ்க்கையில் பாதி போய்விட்டது. வயது 36. தமிழை மட்டும் வைத்துக் கொண்டு எங்கே என்ன சம்பாதிக்க முடியும்? எப்படி வாழ முடியும்? எப்படி மனைவி மக்களை வாழ்விக்க முடியும்?

யாரும் அந்த நிலையில் திணறி இருப்பார்கள்.

புஷ்பா தங்கதுரை



வாழ்க்கை ஒரு பெரும் பாரமாகத் தோன்றியிருக்கும்.

இளைஞர் ஜெயராமன் கலங்கினாலும் தளரவில்லை!

ஆண்டவன் எப்படியும் வழி விடுவார் என்று நினைத்து ஊரை விட்டுப் புறப்பட்டார்.

1963 ஆம் ஆண்டு அது!

திருச்சியில் குடியேறினார்.

அவரது தமிழ் அவருக்கு ஓர் எளிய ஆசிரியப் பணியைக் கொடுத்தது.

தமிழில் அல்ப சொல்ப படிப்பில்லை! திருப்பனந்தாள் மடத்தில் படித்து, புலவராகி தமிழில் ஆராய்ச்சி மூலம் டாக்டரேட் பெற்றவர்.

திருச்சியில் சாதாரண வாழ்க்கைதான் வாழ்ந்தார், வருமானம் போதவில்லை.

பட்டணம் சென்று தம் அதிர்ஷ்டத்தைப் பார்க்க நினைத்தார்.

1965 இல் சென்னைக்கு வந்தார்.

கிடைத்த வேலை ஆசிரிய வேலை.

சாதாரணச் சம்பளம்.

கடன்கள் கூடின. சுமைதான் ஏறியது.

பட்டணம் வந்தும் துன்பங்கள்தான் பெருகின.

யாருக்கும் அந்நிலையில் மனம் இடிந்து நம்பிக்கை போயிருக்கும்.

ஜெயராமனின் மனதில் இன்னும் உறுதி கொஞ்சம் மிச்சம் இருந்தது.

வாழ்க்கை என்றாலே போராட்டம் என்று அறிந்தவர்.

தமது தமிழ்ப் புலமையால் படித்து, அறிந்த பழைய இலக்கியங்கள் அவருக்கு நிறைய மனஆறுதலாக இருந்திருக்க வேண்டும்.

தமிழ்ப் பெரியவர்களின் வரலாறுகளும் அவருக்கு வாழ்வில் பற்றையும் கொடுத்திருக்க வேண்டும்.

ஏழைமை அவரைத் துன்புறுத்தியபோது அந்த வலியை மறக்க அவர் நிச்சயம் தமிழைச் சுவைத்திருக்க வேண்டும்.

அவரது தமிழ் அவ்விதத்திலாவது உதவி இருக்கும்.

அவரது மனைவியாருக்கும் அவரது உறுதி ஆறுதல் அளித்திருக்கும். கட்டியதிலிருந்து கணவரோடு கஷ்டங்களைத்தான் அதிகம் கண்டவர்.

இந்நிலையில் கிறிஸ்துவ சாமியார் ஒருவரது யோசனை பேரில் கர்நாடகத்தில் உள்ள கொள்ளேகால் போய்ச் சேர்ந்தார்.

அங்கே கத்தோலிக்கக் கான்வெண்டில் ஆசிரியர் பணி!

வாழ்க்கை அங்கே ஒரே ரீதியில் போய்க் கொண்டிருக்க, அருகிலுள்ள பெங்களூர் அவரை இழுத்தது.



பெங்களூரில் மெதாடிஸ்ட் மிஷன் பள்ளியில் ஆசிரியராக வேலைக்கு அமர்ந்தார்.

அந்த 1960-70களில் ஆசிரியர்களுக்குச் சம்பள விகிதம் அதிகமாகவில்லை. ஜெயராமனுக்குச் சாதாரண வருமானம் தான்! எனவே அங்கேயும் மிகச் சாதாரண வாழ்க்கை தான்!

இந்த நிலை இப்படியே போய்க் கொண்டிருக்கக் கூடாது! உபரி வருமானம் ஏதாவது நிச்சயம் வேண்டும் என்ற மன அரிப்பு ஏற்பட்டது அவருக்கு!

அவருக்கு அப்போது உதவியது அவரது மற்றொரு திறன்!

தஞ்சை மண்ணில் பிறந்தவர்! மணிக்கொடி கிராமம் சொந்த ஊர்.

அங்கெல்லாம் அந்த நாளில் காற்று வெறும் காற்றாக வீசாது! கர்நாடக சங்கீதத்தோடு வீசும்.

ஜெயராமனுக்கு உணர்வில் அது புகாமல் இருக்குமா?

சங்கீதத்தின் மீது அவருக்கு மிகப் பிரியம்.

மோகம் என்றுகூடச் சொல்ல வேண்டும்.

இதன் காரணமாக அந்த நாளில் கிராமத்திலிருந்த போதே நல்ல ஆசிரியரைத் தேர்ந்தெடுத்து அவரிடம் வீணை கற்க ஆரம்பித்தார். ராகம் வாசிக்கிற அளவுக்கு நல்ல தேர்ச்சியும் பெற்றிருந்தார்.

'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து

இன்பம் சேர்க்க மாட்டாயா!'

என்று புரட்சிக் கவிஞர் பாடியதுபோல் அவரது வாழ்வின் சோதனைகளுக்கு இடையில் இன்பம் கொடுத்தது அவரது வீணைதான்.

இந்த வீணைதான் பெங்களூரில் இந்தச் சமயம் அவருக்கு உறுதுணையாக வந்தது.

பள்ளியில் ஆசிரியர் வேலை முடிந்து வீட்டுக்கு வந்ததும், மிகுதி நேரத்தை வெறும் சோம்பலிலும், பேச்சிலும் கழித்து விடாது, பலருக்கு வீணை கற்றுக் கொடுக்கத் தொடங்கினார்.

உபரி வருமானம் வந்தது. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் ஜெயராமன் வேலையில் ஈடுபட்டார்.

வளரும் குழந்தைகளுக்காகத் தம் கடமைகளை அவர் பூர்த்தி செய்ய வேண்டும். அவர்களைப் படிக்க வைக்க வேண்டும். உயர்ந்த பட்டங்களை அவர்கள் பெற வேண்டும்.

இவை ஜெயராமனது குறிக்கோள்கள்.

இதற்காக அவரது உழைப்பு கூடியது.

வீணை மட்டுமல்ல!

ஆசிரியர் பயிற்சி பள்ளி ஒன்று இருந்தது. அதில் பகுதி நேர வேலையையும் எடுத்துக் கொண்டார்.

ஒய்ச்சல் ஒழிவு இல்லை.

சைக்கிள் அவர் நண்பன்! அதுதான் அவரை அங்கங்கே வேலைக்குக் கொண்டு சென்றது.

வியாபாரத்திற்கு "Novelty of thought" வேண்டும் என்பார்கள்.

மின்னணுப் பொறியியல் பிரிவு



ஜெயராமனுக்கு அத்தகைய புதுமை எண்ணம் பிறந்த இடம் அவர் பணியாற்றிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிதான்!

இந்தப் பள்ளியில் சேருவதற்கு ஏராளமான மாணவ மாணவிகள் போட்டியிட்டு வருவார்கள்.

எல்லாருக்கும் இடம் கிடைக்காது.

இதனால் பலரும் அவதிப்பட்டார்கள்.

குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்து இந்தப் பள்ளியில் இடம் தேடி நிறைய மாணவ மாணவிகள் வருவார்கள். இடம் கிடைக்காமல் ஏமாறுவார்கள்.

இந்த நிலை கண்டு ஜெயராமனின் மனம் வேலை செய்தது.


ஓர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி தொடங்கினால் என்ன?

தொடங்கலாம். பணத்திற்கு எங்கே போவது? திட்டம் நல்ல திட்டம் என்று ஜெயராமன் உணர்ந்து விட்டார்.

பணம் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை! மாணவ மாணவிகளிடமே வசூலித்துக் கொள்ளலாம்.

ஆனால் பள்ளிக்கு அரசாங்க அனுமதி தேவை. என்ன செய்யலாம்?

மின்னணுப் பொறியியல் பிரிவு





எலக்ட்ரானிக் பொறியியல் பிரிவு

தைரியமாக ஒரு யோசனை.

அப்போது கர்நாடக முதல் மந்திரியாக திரு. தேவராஜ் அர்ஸ் இருந்தார்.

அவரை நேரில் சென்று பார்த்தார்.

"கர்நாடகத்தில் தமிழர்கள் சிறுபான்மையராக இருக்கிறார்கள். இந்தச் சிறுபான்மையருக்கு ஒரு தமிழ்ப் பயிற்சிப் பள்ளி தேவைப்படுகிறது. நான் அதை நிறுவத் தயாராக இருக்கிறேன். தாங்கள் அனுமதி வழங்க வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

மொழிக் கலவரங்களோ, மொழி வேறுபாடுகளோ தலைதூக்காத நேரம் அது.

அவர் வேண்டுகோளின் நியாயத்தை உணர்ந்து தேவராஜ் அர்ஸ் மனமுவந்து அனுமதியை அளித்தார்.

1970 இல் ஜெயராமனின் வாழ்க்கையில் முதல் அதிர்ஷ்டப்படியாக அவரது ஆசிரியப் பயிற்சிப் பள்ளி தொடங்கியது.

முதலில் வீட்டில்தான் பள்ளி தொடங்கியது.



எலக்ட்ரானிக் பொறியியல் பிரிவு

ஆனால் மாணவர்களின் நன்கொடைகள் சேரச் சேர பள்ளி வாடகைக் கட்டடத்திற்குச் சென்றது.

1970களில் பெங்களூரில் எல்லையில் இருந்த மர்த்தள்ளி என்ற கிராமத்திற்கு இந்தப் பயிற்சிப் பள்ளி சென்றது.

ஜெயராமனுக்கு திருப்பதி வேங்கடேசுவரர் மீது அபார நம்பிக்கையும் பக்தியும்.

எனவே அவர் பெயரில்தான் (வேங்கடேசுவரர்) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டது.

இந்தப் பள்ளி தொடங்கிய வேளை, ஜெயராமனது குடும்பத்துக்கு மட்டுமல்ல, அந்தப் பிரதேசத்திற்கே அதிர்ஷ்டம் ஏற்பட்டது.

எந்தவித மாறுதலும் இல்லாமல் ஆண்டு ஆண்டு காலமாய் உறங்கிக் கொண்டிருந்த மர்த்தள்ளி கிராமத்தை இந்தப் பள்ளிதான் உலுக்கி எழுப்பியது.


பள்ளி தொடங்கியதிலிருந்து வீடுகள், ஒட்டல்கள், கடைகள் எல்லாம் பெருகி வரத் தொடங்கின.

இப்போது பெங்களூரில் ஒரு பகுதியாக மர்த்தள்ளி மாறிவிட்டது.

பள்ளி நன்றாக வளர்ந்து வர, ஜெயராமனின் உற்சாகம் மேலும் பெருகியது.

இரண்டாவது ஆண்டே பெண்களுக்கான ஓர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியைத் தொடங்கினார்.

ஜெயராமனுக்கு அப்போது மூன்றாவது மகன் பிறந்த நேரம்! அவனது அதிர்ஷ்டம் என்று உணர்ந்து புதுக் கல்லூரிக்கு அவன் பெயரையே சூட்டினார். 'பாலசந்தர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி' கம்பீரமாக நடையிட்டது.



எலக்ட்ரானிக் பொறியியல் பிரிவு

ஜெயராமனது முக்கிய லட்சியம் தம் பிள்ளைகளை நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்பது! அதை அவர் பூரணமாக நிறைவேற்றி விட்டார்.

மூத்த மகன் ரமணி இஞ்சினீயரிங் படித்து பட்டம் பெற்றவர். சென்னை பூந்தமல்லி சாலையில் எம்.வி.ஜே. டவர்ஸில் வீட்டுச் சாதனங்கள் விற்பனை நிறுவனத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வருகிறார்.

இரண்டாம் மகன் மோகன் மருத்துவத்தில் எம்.எஸ். பட்டம் பெற்றவர். தமது புகழ்மிக்க தந்தை விட்டுச் சென்ற பிரம்மாண்ட கல்வி, தொழிற்கல்வி அமைப்புகளைக் கவனிப்பதே அவரது முழு நேரத்தையும் உறிஞ்சி விடுகிறது. தந்தையின் புகழுக்குச் சிறிதுகூடக் குந்தகம் வரக்கூடாது என்ற நினைப்பில் பணிவும், பண்புமாக அந்த வேலைகளை இரவும் பகலுமாகக் கவனித்து வருகிறார்.

மூன்றாவது மகன் சார்ட்டர்ட் அக்கௌண்டன்ட். தந்தையின் துறைகளாகப் பரிணமித்துள்ள கல்விச் சாலைகளைப் பேணிக் காப்பதில் இவரும் தம் முழு நேரத்தையும் செலவிடுகிறார். இவர் பெயர் பாலசந்தர்.

மூன்று மகன்களும் தங்கள் கீர்த்தி மிகு தந்தை உழைத்த உழைப்பையும், அதன் மூலம் பெற்ற உன்னதங்களையும் நன்கு உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர் விட்டுச் சென்ற பொறுப்புகளையும் கடமைகளையும் அவரது பெயருக்குச் சிறிதுகூடக் குந்தகம் வராமல் நிறைவேற்ற பக்தி சிரத்தையுடனும், அந்நியோந்யத்துடனும் பரஸ்பர பாச விசுவாசங்களோடும் நடத்தி வருகிறார்கள்.

நிச்சயம் குடும்பத்தின் பிரசித்தி 'LOGO'வாகப் பதிந்து விட்ட எம்.வி.ஜே. என்ற அந்த மூன்று எழுத்துகளையும் குடும்பப் பாரம்பரியத்தையும் இவர்கள் காப்பாற்றுவார்கள் என்பது உறுதி.

ஜெயராமனது இரு புதல்விகளும் திருமணமாகி, நல்ல நிலையில் இருந்து வருகிறார்கள்.

வெற்றியும், உற்சாகமும் வாழ்க்கையில் பெரிய தூண்டுகோல்கள்.

ஜெயராமனுக்கு அந்தத் தூண்டுகோல்கள் கிடைத்தன. உழைப்பதற்கு அவர் தயாராக இருந்தார். நிறைய உழைத்தார்.

தமது ஆரம்ப வெற்றிகளை அடுத்து, பாலிடெக்னிக் ஒன்றைத் தொடங்கலாம் என்று ஜெயராமன் நினைத்தார். வேகம் கிளம்பியது.

அப்போது கர்நாடக முதல்வராக இருந்த குண்டுராவை அணுகினார்.

ஜெயராமனது கல்விக்கான தொண்டுகளை குண்டுராவ் புரிந்து கொண்டார்.

பாலிடெக்னிக் பள்ளிக்கு அனுமதி அளித்தார்.

பள்ளி தொடங்கியது.

ஜெயராமன் ஓய்வாரா?

அவரைப் போன்றவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற மன அரிப்பு எப்போதும் இருந்து கொண்டே யிருக்கும்.

இஞ்சினீயரிங் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு விருப்பப்பட்டார். அதற்கு விண்ணப்பித்தார். அதற்கும் அனுமதி கிடைத்தது.

பெங்களூர் வொய்ட் ஃபீல்ட்ஸ் அருகில் பரந்த நிலத்தை வாங்கி, கட்டடங்களை எழுப்பினார். தொழிற் கூடங்களை அமைத்தார். இஞ்சினீயரிங் கல்லூரி தொடங்கினார்.

வேகமாக வளர்ந்தது அது!

அதைத் தொடர்ந்து College of Physical Education தொடங்கினார்.

இசையில் பெரிதும் ஈடுபாடு கொண்ட ஜெயராமன் இசைக்கல்லூரி ஒன்றும் நிறுவ முன் வந்தார்.

அதற்குப் போதுமான ஆதரவு கிடைக்காததால் அதை நிறுத்திக் கொள்ளும் படியாக வந்தது.

இவ்விதம் 1970களில் தொடங்கிய அவரது கல்விப்பணி 1980களில் விரிவடைந்து ஓர் ஆலமரமாக வளர்ந்துவிட்டது.

ஊரும் பேரும் தெரியாமல் பெங்களூரில் புகுந்த அவருக்குப் பெயரும், புகழும் போட்டி போட்டு வந்து தழுவின.

எம்.வி.ஜேயின் கல்வி நிறுவனங்கள் பெங்களூரில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கின.

இந்த நிறுவனங்கள் மூலம் அவரும், அவர் மூலம் நிறுவனங்களும் முன்னேற, ஜெயராமனுக்குள் அடங்கி இருந்த மனிதத்தன்மை சுடர் மிகுந்த ஜோதிபோல் வெளிவரத் தொடங்கியது.

ஜெயராமன் என்ற தயாள மனிதரின் கம்பீரத் தோற்றம் வெளிவரத் தொடங்கியது.

ஏற்கெனவே கடவுள் பக்தியும் விநயமும் உள்ளவர் அவர்.

(வருடந்தோறும் திருமலைக்குச் சென்று, வேங்கடேசுவரரின் திருமண உற்சவம் நடத்தி வழிபட்டு வருபவர்).

இந்த அனைத்துக் குணங்களும் அவரது ஈகைக் குணத்திற்குப் பெரிதும் வழிகோலியாக விளங்கின.

திரட்டிய கைகள் வழங்க முன் வந்தன.

கல்வி வழங்கியவர் பொருளையும் வழங்கத் தொடங்கினார்.


அவர் நன்கொடைகள் நானா திசைகளிலும் பறந்தன.

தமிழ் அவரது உயிர்.

தமிழிலே படித்து தமிழில் வளர்ந்து தமிழில் திளைத்தவர் அவர்.

தமிழ் இலக்கியம் அவர் நெஞ்சில் எப்போதும் ஐக்கியம்.

கல்லணை - யானை சிற்பம் பழுதுபார்க்க உதவியவர் திரு. எம்.வி.ஜே. அவர்கள்



தமிழ்ச் செய்யுளை யாராவது பாடினால் போதும், அல்லது பழைய இலக்கியத்திற்கு விரிவுரை எழுதினாலும் போதும், கவிதைத் தொகுதி வெளியிட்டால் போதும், ஜெயராமனை அணுகினால் தாராள நன்கொடை வந்து சேரும்.

அதைப் பெற்றவர்கள் பூரிப்பார்கள்! அந்தத் தொகையை அவர்கள் மனதே நினைத்திராது.

அவர் நன்கொடை பெறாத தமிழ் நிறுவனமே இராது.

பழைய காலத்தில் தமிழ் அரசர் போல அள்ளி வழங்கினார் அவர்! தமிழ் நாடு தந்த தற்காலக் குமணர் அவர்!

புலவர் யார் வந்தாலும் பொருள் சொரிவார்.

அவர்களோடு கவிதைகளைப் பேசித் திளைத்துப் போவார்.

நிறைய தமிழ்ப் புலவர் குடும்பங்களுக்கு வாழ்வு அளித்திருக்கிறார்.

வேங்கட்டராமையாவின் குடும்பம் ஒன்று அத் தாட்சிக்குப் போதுமே என்று கூறுவார்கள்.

பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் ஹால் எழுப்பி வாசக சாலையும் நிறுவியவர் அவர்.

திருப்பனந்தாள் மடத்தில் ஹாலும், புதிய வாசக சாலையும் ஏற்படுத்திக் கொடுத்தார்.

அரசியல், மதம் என்ற பாகுபாடு இல்லாமல் பெங்களூரில் ஏராளத் தமிழர்களுக்கு உதவி இருக்கிறார் அவர்.

எல்லா அரசியல் தலைவர்களுடனும் நல்ல தொடர்பு கொண்டிருந்தார். அவர்கள் சொல்லும் நற்பணி எதற்கும் அள்ளி வழங்கியவர்.

"எனக்குக் கடவுள் கொடுத்திருக்கிறார். நான் என் இஷ்டப்படி கொடுக்கிறேன்" என்று அடிக்கடி சொல்லிக் கொள்பவர் அவர்.

அந்தக் கடவுள்களையும் அவர் பாக்கி வைக்கவில்லை.

அவர் பிறந்த மணிக்கொடி கிராமத்தில் பிள்ளையார் கோயிலைப் புனருத்தாரணம் செய்து, கோயில் பூஜைகளுக்கு வேண்டி வைப்புப் பணம் வைத்துக் கொடுத்தவர்.

கும்பகோணம் கும்பேசுவரர் கோயிலில் விளக்கு வரிசை முழுதும் வழங்கி, அவற்றின் பராமரிப்புக்கு வைப்பு நிதியும் வைத்துள்ளார்.

திருக்கடையூர் கோயிலுக்கு யானை அளித்திருக்கிறார்.

இசையில் புலமை உள்ளவர், இசைக்கும் ஏதாவது செய்யாமல் இருப்பாரா?

அவரால் பயன்பெறாத சங்கீத சபா இருக்க முடியாது! சென்னையிலும் சரி, பெங்களூரிலும் சரி.

பாடகர் பலருக்கும் அள்ளி அள்ளி வழங்கி இருக்கிறார்.

படிப்பு தேடி வரும் ஏழைப் பையன்களுக்கும் சரி, பிழைப்பு தேடி வரும் ஏழைக் குடும்பங்களுக்கும் சரி, நிறைய உதவி இருக்கிறார் அவர். நிறைய சங்கங்களுக்கும் அமைப்புகளுக்கும் நிறைய வழங்கி இருக்கிறார்.

அவர் கொடைகளை எழுத எழுத நீளும்!

ஜெயராமனின் அரிய குணம் குறிப்பறிந்து அவர் வழங்குவது! கேட்டு வழங்குவதில்லை! உணர்ந்து வழங்குவார்.

ஒரு முழு வாழ்வு வாழ்ந்தால் அவர் ஒரு Legend ஆக மாறியிருப்பார்.

பொதுநலத்தில் இன்னும் பெரிய பிரமிப்புகளைச் செய்திருப்பார்.

அதனால்தான் கடவுள் அவரை அவரது 65 வயதிலேயே ([illegible]) தம்மிடம் சேர்த்துக் கொண்டு விட்டார் போலும்.

தமிழ்ப் புலவர்களும், தமிழும் தமிழ் அன்பர்களும் சென்று அவர் மறைந்தபோது, கண்ணீர் விட்டார்கள்.

அண்டை மாநிலத்தில் கர்நாடகக்காரர்கள் நீர் உகுத்தார்கள்.

குண்டுராவ், வீரப்பமொய்லி, ராமகிருஷ்ண ஹெக்டே, பங்காரப்பா போன்ற பெரும் தலைவர்கள் அவரது வீட்டில் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பெங்களூர் மாநகராட்சி அவரது பெயரையே அவரது தெருவுக்குச் சூட்டி அஞ்சலி செய்தது.

ஒரு தமிழர் கர்நாடகத்தில் இப்படி மதிக்கப்படுவதே அவரது பெருமையின் பெரும் அத்தாட்சி.

ஒரு பத்தாண்டுகளுக்குள் தம்மை உயர்த்திக் கொண்டது மட்டுமின்றி, கல்வியிலும் கொடையிலும் இவ்வளவு சாதனை செய்தவர் யாரும் இருக்க முடியாது.

திடீரென்று நட்சத்திரமாகக் கிளம்பினார். நட்சத்திரமாக மறைந்தார்.

அவரை நேரில் பார்த்தவர் யாரும் அவரை மறக்க முடியாது. எப்போதும் ஒரு புன்னகை! எப்போதும் ஒரு நல்வார்த்தை. ஓர் இளைஞர்போலவே சுறுசுறுப்பும் துறுதுறுப்பும் கொண்டு காட்சி அளித்தார்.



திருப்பனந்தாள் அதீனப் பீடாதிபதியுடன் திரு. எம்.வி.ஜே.

கூட்டத்தில் அவர் நிற்கும் இடம் கலகலப்பாக இருக்கும். அவர் வெண்கலத் தொனி கணீரென்று கேட்டுக் கொண்டிருக்கும்.

பார்த்தவர் மறக்க முடியாத முகக்களையும் வசீகரமும் உடையவர்.

அவர் வழித்தோன்றல்களாக, அவரது மகன்கள் ரமணி, மோகன், பாலசந்தர் மூவரும் அவரது பெயரைக் காப்பாற்றும் வண்ணம் அவரது வழியைப் பற்றி வருகிறார்கள்.

எல்லாரும் நன்கு படித்துள்ளவர்கள்.

அவர் நிறுவிய நிறுவனங்களைச் செவ்வையாக நிர்வகிக்கிறார்கள்.

பெங்களூர் எல்லையில் அந்தப் பரந்த பூமியில் எழுந்துள்ள எம்.வி.ஜே. இஞ்சினீயரிங் கல்லூரியையும், அதன் கட்டடங்களையும், அதன் வசதிகளையும் பார்த்தால் நாமும் மாணவனாகி அங்கே படிக்க வரக்கூடாதா என்று மனம் ஏங்கித் தவிக்கும்.

சென்னையில் பூந்தமல்லி சாலையில் ஜெயராமன் நிறுவியுள்ள எம்.வி.ஜே. டவர்ஸ் ஜெயராமனின் மற்றொரு மகத்தான சாதனை. கட்டடம் புதுமை! சுத்தம்! ஜெயராமன் மனம் போல் விசாலம்! அங்கே லிப்ட் ஒன்றே அதற்கு சாட்சி!

மூத்த மகன் ரமணியின் வீட்டுச் சாதன நிறுவனம் அங்கே திகழ்கிறது. மற்றொன்றில் அவரது மகனின் டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் பிரமாதமாக நடக்கிறது.

ஜெயராமனது முதலாம் ஆண்டு நிறைவு நாளில் அவரது அழகிய திருஉருவச்சிலையை பெங்களூரில் நிறுவத் தீர்மானித்திருக்கிறார்கள். இஞ்சினீயரிங் கல்லூரிப் பரப்பில் அதற்கான வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து வருகின்றன.

அவரது பெயரில் ஒரு தர்ம ஆஸ்பத்திரியை நிறுவவும் தீர்மானம்.

இந்தச் செய்திகளை வெகு அடக்கமுடனும், விநயத்துடனும் கூறியுள்ளவர் அவரது மகன் டாக்டர் மோகன்.

"தந்தை பெற்ற அழியாப் பெயரை அப்படியே நிலைநாட்ட விரும்புகிறோம். அவர் முன்னால் நாங்கள் பெரியவர்களே அல்லர். அவர் வழியில் அவர் விட்டுச் சென்ற நிறுவனங்களையும் லட்சியங்களையும் நடத்திப் போவது எங்களுக்குப் பெரும் பாக்கியமாகவே இருக்கும்" என்று சகோதரர் சார்பில் கூறுகிறார் மோகன்.

தந்தைக்கு ஏற்ற தனயர்கள் இவர்கள். ○○

கடைசி ரொட்டி

ராமனாத்தின் அறிமுகம் எனக்குக் கிடைத்த போது நான் ஓர் ஆரம்ப நிலை எழுத்தாளன்.

பிரசுரமானவற்றை விட, திரும்பி வந்தவை அதிகம். உற்சாகக் குறைவான இதனால் நான் சோர்வுற வில்லையே! எனக்குள் நான் விகசிப்படைந்து வருவது போன்ற பெருமை அப்பொழுதே உண்டு.

அவ்வப்பொழுது குறிஞ்சிப் பூ பூத்த மாதிரி ஏதோ ஒன்றிரண்டு சிறுகதைகள் வெளிவரும்.

சிறுகதைகளின் பேரில் எனக்கிருந்த ஆர்வத்தை, பத்திரிகைகள் சாகடித்துக் கொண்டிருந்தன.

சிறுகதைகள் எழுதுவதை அப்படியே நிறுத்திவிட்டு நாவல்கள் எழுத ஆரம்பித்து விட்டேன்.

மனோதைரியமே காரணம். என் ஆர்வம் வீண் போகவில்லை. சிறுகதைகளைவிட நாவலே நன்றாக எழுத முடிந்தது.

உள்ளூரில் உள்ள சினிமா ஸ்டுடியோவில் மாதச் சம்பளத்தில் பணியாற்றும், கே.கே.சௌந்தர், சிவசூரியன், சீனுவாசன் எனது நண்பர்கள்.

சவுண்ட் இன்ஜினியர் மணி எனது குடும்ப நண்பர்.

சினிமா தொடர்புடைய நண்பர்களுடன் அதிகம் நட்பு இருந்ததால் ஒரு நாவலின் சினிமா ட்ரீட்மெண்ட் எப்படி எழுதுவது, திரைக்கதை வசன அமைப்புகளை எப்படி எழுதுவது என்பதெல்லாம் சுலபமாக என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

சௌந்தர் அங்கே ஒரு துணை நடிகர். நானும் அவரும் நகரில் ஓடும் ஆங்கிலப்படங்களைப் பார்த்துவிட்டு அதன் கதை வசனம், தொழில் நுட்பம் என்று எல்லாவற்றைப் பற்றியும் சேலம் சீரங்க பாளையத்தில் உள்ள அவர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து நேரம் போவது தெரியாமல் பேசுவோம்.

கே.கே. சௌந்தர் ஒரு பட்டதாரியில்லை தான். ஆனால் ஒரு பிரபலமான படப்பிடிப்பு நிலையத்தில் நிரந்தரக் கலைஞராகப் பணியாற்றுவதால் சினிமா பற்றிய அத்தனை தொழில் நுட்பமும் அவருக்கு அத்துபடி. இந்த வகையில் அவரை அங்கே பயன் படுத்திக் கொள்ளவில்லையென்பது வேறு விஷயம்.

இரண்டு படங்களை இயக்கித்தர வேண்டுமென்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேலம் ஸ்டுடியோவிற்கு வந்திருந்த டைரக்டர் ராம்னாத்திடம் என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தியவரே சௌந்தர் தான்.

"பார்க்க சின்னப் பையன் மாதிரி இருக்காரேன்னு நினைக்காதீங்க. நல்ல எழுத்தாளர். பிரமாதமான

> **தன்னுடைய எழுத்தோவியம் ஒன்று, மிகப்பெரும் இயக்குநர் ஒருவரால் திரையோவியமாக மலர இருக்கும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்த நேரத்தில், இயக்குநரின் மரணச் செய்தி எட்டினால் இதயம் தாங்குமா?**

'தீம்' எல்லாம் வச்சிருக்கார். சினிமா ட்ரீட்மெண்ட், கதை வசனம், எல்லாம் எழுதுவார். உங்கள மாதிரி இருக்கறவங்க இவருக்கு ஆதரவு கொடுத்தீங்கன்னா ஃபீல்டுக்கு ஒரு நல்ல ரைட்டர் கிடைப்பார்."

வஞ்சனையில்லாத திறந்த மனத்துடன் கூடிய அறிமுகம்.

சர்வதேசத் தரத்தில் அவர் எடுத்து இயக்கிய பல படங்கள் அவர் புகழை சர்வதேச அளவில் உயர்த்தியிருந்த சமயம். அதில் சில படங்கள் அப்படியே ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டு உலகெங்கும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருந்தன.

ஓர் ஆரம்பகால எழுத்தாளர், புகழ் பெற்ற ஒரு சினிமா இயக்குநர் இந்த இரண்டு காரணங்கள் எங்கள் நட்பு நல்ல முறையில் வளர, போதுமான காரணமாக இருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் இதற்கு மேல் ஒரு காரணமும் இருந்தது.

நான் உள்ளூர் மின்சார விநியோக நிறுவனத்தில் ஒரு சாதாரண ஸ்டோர் உதவியாளன் தான். எழுத்தின் மேல் எனது ஆர்வத்திற்கு, பல பரிமாணங்கள் என்னிடம் உண்டு. சிறுகதைகள் எழுதுவதை நிறுத்திக் கொண்டு பெரிய நாவல்களை எழுதத் தொடங்கினேன்.

ஆங்கிலப் படங்களைப் பார்த்து விட்டு வந்த கையோடு முதல் வேலையாக நான் பார்த்த ஆங்கிலப் படத்தில் விஸ்தாரமான கதை-சில இடங்களில் நான் ரஸித்த வசனம் எல்லாம் எழுதிவைத்துக் கொள்வேன். கிட்டத்தட்ட அவை ஒரு முழுமையான ஆங்கிலப் படத்தின் திரைக்கதை வசனச் சுருக்கமாகவே இருக்கும். இதுவன்றி அந்தந்த ஆங்கிலப்படத்திற்கென்றே வரும் 'பிரஸ்நோட்' என்று சொல்லப் படும் மிக முக்கிய குறிப்புகள் அடங்கிய பாம்ப்லட்டை வாங்கிப் பார்த்து கதை திரைக்கதை வசனம், டைரக்ஷன், இசை, நடிக நடிகைகள் யார் யார் என்பதையும் எழுதிக் கொள்வேன்.

பின்னர் ராம்னாத்துடன் ஆங்கிலப் படங்கள் பற்றி விவாதிக்கும் போது இந்தக் குறிப்புகள் எனக்கு உதவின.

அவர் ஆங்கிலப் படத்தின் பெயரைச் சொன்னவுடன் மற்ற விவரங்களை மள மளவென்று நான் கூறிவிடுவேன்.

"பாலு WOMEN IN A DRESSING GOWN" என்று அவர் கேட்டு முடிக்குமுன்–

"யாமா மிட்சல் நடித்து டெட்வில்லிஸ் திரைக்கதை வசனம் எழுதியதுதானே? பார்த்தேன் ஸார். அதில்வரும் AMY மாதிரியான ரோலை யாராலும் செய்ய முடியாது ஸார்!

அவள் அழகே இல்லாத ஓர் அப்பாவி. அவள் உலகம் என்பது அவள் கணவன், அவள் வீடு மட்டும் தான். கணவன் தன்னிடம் ரொம்பவும் அன்பாக இருக்கிறான் என்று எண்ணி, பின்னர் எப்படி ஏமாந்து மனம் உடைந்துபோகிறாள்! அப்பாவி! அழகற்றவளாக அந்த AMY பாத்திரத்தில் மிட்சலின் நடிப்பு,

மகரிஷி

பிரமாதம். இப்படி கதையும். விமர்சனமுமாக ஆரம்பிக்கும் எங்கள் பேச்சு கிரகாம் க்ரீனின் ஸ்பானிஷ் கார்டனர், படம்பற்றியும் பெட்டி டேவிஸ் குருட்டுப் பெண்ணாக நடித்த டார்க் விக்டரி பற்றியும் இத்தாலிய நடிகை சில்வானா மேங்கோனாவின் அன்னா மற்றும் திஸ்ஈஸ்மைலவ் பற்றியும் விரிவடையும். ஜே ஜே பாத்திரமாக ஒன்றிப் போன பர்ட்லங்காஸ்டரின் ஸ்வீட் ஸ்மெல் ஆப் சக்ஸஸ். மாண்ட் கொமரி கிளிப்ட், பர்ட்லங்காஸ்டரின் ஃப்ரம் ஹியர் டு எடர்னிடி. ரிச்சர்ட் சன்னின் நெவர்ஸோ குட்பை, கேரி கிராண்டின் டே அன்ட் நைட்...

சரியான குறிப்புகளுடன் நான் பேசும் போது ராம்னாத் என்னையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருப்பார். இப்படிப்பட்ட சம்பாஷணை ஒன்றின் போதுதான் ஒரு சிறுவன் கோவேறு கழுதை பூட்டிய வண்டியுடன் நடிக்கும் நெவர் டேக்... படம் பற்றி பேச்சு வந்தது.

அவரைக் கவர்ந்தது போலவே அது என்னையும் மிகவும் கவர்ந்தது கவர்ந்தது என்பதை விட இருவரையும் பாதித்திருந்தது என்பது தான் வாஸ்தவம்.

"இம்மாதிரி ஒரு கதையும், அதில் நடிக்க அதே வயதுடைய சிறுவனும் கிடைத்தால் அந்தப் படத்தை நானே எடுப்பேன். சர்வ தேசப் படவிழாவில் அதைத் திரையிட்டு நமது பாரத தேசத்தின் பெருமையை நிலை நாட்டுவேன். எங்களிடமும் இம்மாதிரி கலைஞர்கள் இருக்கிறார்கள் என்று சவால் விடுவேன்."

டைரக்டர் ராம்னாத்தின் இந்த வார்த்தைகள் ஓர் உண்மையான கலைஞனின் உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே எனக்குப் பட்டது.

சிறுவனை மையமாக/ வைத்து சர்வதேசத் தரத்தில் ஒரு படமெடுக்க வேண்டும். அதற்கு ஒரு நல்லகதை வேண்டும். இப்படி ஓர் ஆர்வம் அவர் மனதில் இருப்பதைப் புரிந்து கொண்ட போது எனக்குள் ஒரு பரபரப்பு.

'என் அவருடைய 'கதை' ஆசையை நாம் பூர்த்தி செய்யக் கூடாது?' என்னால் முடியும் என்றே தோன்றியது.

இந்த சம்பாஷணை நடந்த பின் இரவு பகலாக உட்கார்ந்து சிறுவனொருவனை மையமாக வைத்து சினிமாக்கதை ட்ரீட் மெண்ட் ஒன்று எழுத ஆரம்பித்துவிட்டேன்.

அவரும் படப்பிடிப்பில் மூழ்கிப் போய்விட்டார். விடியற்காலமே எழுந்து ஸ்டுடியோவிற்குப் போவதும், நள்ளிரவில் ரிஹர்ஸல் ஹால் திரும்புவதும்....

இடையறாத படப்பிடிப்பு எடிட்டிங் ரீரெகார்டிங்....

ஒப்பந்தப்படி இரண்டு படங்கள் இயக்க வந்து ஒரு படத்தை இயக்கி முடித்துவிட்டார்..

❋ ❋ ❋

முன்கூட்டியே திட்டமிட்டு அறிவித்தபடி குறிப்பிட்ட தேதியில் படம் ரிலீஸாகி விட்டது.

ஆனால் எதிர்பார்த்த அளவு படத்திற்கு மக்களிடையே வரவேற்பு இல்லை.

பிரபலமான இயக்குனர் ஒருவரின் படம் தோல்வியைத் தழுவிய பிறகு தோல்விக்கான பல காரணங்களை அவ்வப்பொழுது புதிது புதிதாகக் கண்டுபிடித்துக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

தொழில் நுட்பரீதியில் எவ்விதக் குறைகளையும் கூறமுடியாத நிலையில்...

ஸ்டுடியோவினால் டைரக்டரிடம் திணிக்கப்பட்ட நடிக நடிகைகள்;

அவர் பாணிக்கு ஒத்து வராத கதை; பொருத்தமற்ற கதாநாயக கதாநாயகி ஜோடி;

என்ன விமர்சனம் செய்தாலும் தோல்வி தோல்விதான். பல சென்டர்களிலும் படம் ஒரு வாரத்தைத் தாண்டுவதே கஷ்டம் என்று செய்திகள் வந்து கொண்டிருந்தன.

ராமனாத் இந்த நிறுவனத்திற்குப் படம் இயக்க வரப் போகிறார் என்று செய்திவந்த போதே நானும் ஒலிப்பதிவாளர் கே.பி.எஸ். மணியும் ஆச்சர்யப்பட்டோம்.

'அவரது மனோபாவத்திற்கும் அவரது பாணிக்கும் இவர்கள் ஒத்துவரமாட்டார்களே! அவருடைய பாணிபடங்களே வேறு; இவர்களுடைய ஜனரஞ்சகத் தன்மையே வேறு. எப்படி சரிப்பட்டுவரும்?'

இம்மாதிரி பேச்சுகள் அவர் அந்த நிறுவனத்திற்குப் படம் இயக்க வருமுன்பும் இருந்தது. வந்து ஒரு படமெடுத்துத் தோல்வி அடைந்த போதும் இருந்தது.

❋ ❋ ❋

"வணக்கம் ஸார்"

"ஓ... பாலுவா... வாப்பா, உட்கார்" அவர் முகத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே அவர் முன் உட்கார்ந்தேன்.

தோல்வி அடைந்த அவர் படம் பற்றி நான் ஏதும் பேசவில்லை.

அவரே சொன்னார்:

"படம் ரிலீஸாகி ஒரு வாரமாகப் போறது. எந்த சென்டரிலும் நல்ல ரிப்போர்ட் இல்லே"

அவராக ஆரம்பித்ததால் பிறகு நானே கேட்டேன்.

"காரணம் சொல்ல முடியுமா ஸார்?"

சிரித்துக்கொண்டே பேசினார்:

"அவங்க என்னிடம் கொடுத்த சப்ஜக்ட், அவங்க இதுக்காக என்னிடம் கொடுத்த ஆர்டிஸ்ட், இவற்றை வைத்துக்கொண்டு என் தரப்பில் எவ்விதக் குறையும் சொல்ல முடியாத அளவு செஞ்சிருக்கேன்"

"நான் ஒண்ணு கேட்கலாமா ஸார்?"

"தாராளமா"

"இது உங்க பாணி சப்ஜக்டே இல்லை. இரண்டாவது உங்களோட ஆர்டிஸ்ட் செட்டப்பே வேற. மூன்றாவது மத்தவங்களோட குறுக்கீடு."

"நீ சொன்ன மூன்று காரணமும் கரெக்ட். அதிலும் நீ சொன்ன அந்த மூன்றாவது காரணம்; மத்தவங்களோட குறுக்கீடுன்னு சொன்னியே, அது நூற்றுக்கு நூறு சரி. இம்மாதிரி ஒருதனி நபர் ஆதிக்கத்தில் இருக்கும் சினிமா ஸ்டுடியோக்களில் தனி நபர் ஆதிக்கம் தலையீடு எல்லாம் இருக்கும் என்பதை நானும் எதிர்பார்த்தவன்தான். இவ்வளவு அதிகமா இருக்குமென்று நான் எதிர்பார்க்கல. இப்பொழுது ஒரு படத்தின் தோல்விச்சுமை பூராவையும் நான் சுமந்து கொண்டு நிற்கிறேன்."

என் கையில் பத்து முதல் பதினைந்து வயதுக்குள் ஒரு சிறுவனைக் கதாநாயகனாக வைத்து நான் எழுதிய "கடைசிரொட்டி" என்கிற சினிமாக் கதையின் விரிவான ட்ரீட்மெண்ட் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் இதைப் பற்றி இவரிடம் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது?

ஏராளமான விஷயங்களை மனதில் சுமந்து கொண்டு அந்தச் சின்ன அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

மீண்டும் அவரே பேச ஆரம்பித்தார்.

"நான் ஒரு சப்ஜக்ட்ட டீல் பண்ண ஆரம்பிச்சா, முதலில் ஒரு யுனிவர்சாலிடி இருக்கான்னு பார்ப்பேன். அப்படி அதில் அந்த அம்சம்



இல்லையென்றால் அதைப் புகுத்த முடியுமா என்று யோசிப்பேன்.

இரண்டாவது நான் தேர்ந்தெடுக்கற சப்ஜக்ட்ல டைவர்ஸிங் ஆஸ்பெக்ட் அதாவது திசை திருப்பும் அம்சங்கள் வரக்கூடாது. கதையை ஒரு நேர் கோட்டிலே நின்னுண்டு சொல்லிண்டே போகனும். அப்படி சொல்றதுக்கு உதவறமாதிரி சீக்வன்ஸ்- அதாவது சம்பவங்கள் மட்டும்தான் இருக்கனும்.

முன்றாவது ஒரு சீக்வனஸ ஆரம்பிக்கற போது சப்ஜக்ட் மேட்டர்ல தான் ஆரம்பிக்கனும். இதுக்கு ஓர் உதாரணம் சொல்றேன் கேளு. ஆரம்ப எழுத்தாளனாகிய உனக்கு இது உதவும்.

ஒரு கொலை நடக்கிறது. அந்தக் கொலைக்கான வழக்கு கோர்ட்ல நடக்கறது. கொலைகாரன் தண்டனை அடைகிறான். சம்பவத்துக்கும் கோர்ட் தீர்ப்புக்கும் நடுவே எத்தனையோ விஷயங்கள் இருக்கும். காலதாமதங்கள் ஆகும். இதை ஒவ்வொரு கட்டமாக் காட்டவேண்டிய அவசியம் சினிமா பார்முலாவுக்கு இல்லை.

ஒரு கொலை.

கொலைகாரனை, போலீஸார் பிடிக்கிறார்கள்.

வழக்கு நடக்கிறமாதிரி ஒரு நீதிமன்றக் காட்சி.

நீதிபதி தீர்ப்பை வாசிக்கிறார். அவ்வளவு தான். மூன்று மணி நேரத்துக்குள்ளே ஒட்டு மொத்தமான வாழ்க்கையோட்டத்தைக் காட்டற சாதனம் இது. ராமாயணம் எடுத்தாலும் சரி, மகாபாரதம் எடுத்தாலும் சரி. இதுதான் சினிமா சயன்ஸ், சினிமா தியரி.

என்னோட அணுகுமுறைக்கு இங்கே நிறைய குறுக்கீடுகள் இருந்தன. எல்லாத் தரப்பிலிருந்தும் இருந்தது. ஒரு டைரக்டர் என்ற முறையில் என்னைத் தனியா செயல்படவே விடல.

ஒவ்வோர் இயக்குனருக்கும் ஒரு தனித்தன்மையுண்டு. சீக்வன்ஸ பிரசண்ட் பண்ற விதத்திலே இதைப் பாக்கலாம். இங்கே இதுக்கு நிறைய

இடஞ்சல் இருந்தது. நான் எடுத்த 'விடுதலை' என்ற படத்தை நீ பார்த்திருப்பே. அது அப்படியொன்றும் வெற்றிப்படமில்லைதான். ஆனா தொழில் நுட்பங்களைப் பத்தி எல்லாப் பத்திரிகைகளும் ஒட்டு மொத்தமா பாராட்டி எழுதியிருந்தன. இந்தப்படத்தில் அதைக்கூட சரியா செயல்படுத்த என்னால முடியல. "போகட்டும் விடு. அதென்ன கையில ஃபைல்?"

"அன்னிக்கு சொன்னிங்களே, ஸார்! சிறுவனொருவனை மையமாக வைத்து எடுக்கற மாதிரி கதையொன்று கிடைத்தால் அந்தப் படத்தை நானே எடுப்பேன், உலகப் பட விழாவிலும் அதைத் திரையிட்டு சர்வதேச மதிப்பை நமக்குத்தேடித் தருவேன்னு சொன்னிங்களே. அது ஓர் உண்மைக்கலைஞனின் உள்ளுணர்வாக எனக்குப்பட்டது. அதை ஒரு சவாலா ஏத்துகிட்டு இந்தக் கதையை எழுதியிருக்கேன். பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவன்தான் ஹீரோ. கீ டயலாக்கோட விரிவான ட்ரீட்மெண்ட் எழுதிட்டேன்."

"இப்பத்தானே பேசிகிட்டு இருந்தோம்?"

"மனசிலே ஒரு வேகம் வந்துட்டாப் போதும்ஸார்! இரண்டு மாசம் தேவையில்லை. ரெண்டு மணி நேரமே போதும். அப்படிப் பட்ட நேரங்களில் சீக்வன்ஸ் எப்படிவரும் தெரியுமா?"

"இதை நான் படிக்கனுமே"

"அதுக்காகத்தான் ஸார் கொண்டு வந்தேன். இதுக்குமேலே என்னோட முதற் கனவும் இதுதான். உங்களோட அறிமுகம் எனக்குக் கிடைத்தபோது என் மனசிலே ஓர் உத்வேகம் ஏற்பட்டது. ஒரு தரமான கதையை உங்களிடம் தந்து அதன் மூலமா சினிமாவிலே எனக்கொரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக்கனும், உங்க அறிமுகத்தையும் நட்பையும் நல்ல முறையிலே பயன்படுத்திக்கனும். இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுடக் கூடாதுங்கற துடிப்பு... என்னோட ஆசையை சவுண்ட் இன்ஜினியர் கே.பி.எஸ் மணியிடம் கூட சொன்னேன். இந்தக் கதையை அவரிடம் படித்துக்காட்டினேன். உங்களுக்கு சப்ஜக்ட் நிச்சயமா பிடிக்கும்னு சொன்னார்."

"கே.பி.எஸ்.மணியைத் தெரியுமா?"

"என்னோட குடும்ப நண்பர் உங்க பேரைச் சொன்னாலே ரொம்ப எமோஷனாயிடுவார். அவ்வளவு ஈடுபாடு உங்க மேலே."

ராம்நாத் சிரித்துக் கொண்டார்.

கே.பி.எஸ்.மணி, அர்த்தனாரி மோடக், ஜி.ஆர்.நாதன், கே.எஸ்.சேது மாதவன் இந்த நிறுவனத்தோட அஸட்..

கதை பைலை மேலோட்டமாகப் புரட்டிக் கொண்டிருந்தவர் என்னிடம் சொன்னார்:

"என்னை நாளைக்கு வந்து பார். அதுக்குள்ளே படிச்சு முடிச்சுடறேன்."

❊ ❊ ❊

மறுநாள் நான் அவரை மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் பார்க்கப் போனேன்.

தடிமனான தன் கண்ணாடியை சின்ன மேஜைமேல் கழற்றி வைத்துவிட்டு அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார்.

சிந்தனையுடன் கூடிய தன் குறு நடையை முடித்துக் கொண்டவர் மேஜைமேலிருந்த கண்ணாடியை அணிந்து கொண்டு என்னைக் கூர்மையுடன் பார்த்தார்.

"உன்னுடைய 'கடைசி ரொட்டி' கதை என்னை ரொம்ப பாதிச்சுடுத்து பாலு! ஒரு சிறுவனை வைத்து இவ்வளவு அற்புதமா ஒரு கதையை உன்னால எழுத முடியுமென்று நான் நினைக்கவே இல்லை. 'கடைசி ரொட்டி'யைப் படித்து முடித்த போது நான் பிரமித்துப் போய்விட்டேன். இதில் ஒரு யூனிவர்ஸல் 'த்ரட்' இருக்கு. சர்வதேசத் தன்மையிருக்கு. இதை எந்த மொழியில் எடுத்தாலும் ஏன் உலக மொழிகள் எதில் எடுத்தாலும் படம் பிரமாதமா ஓடும்."

எனக்கு உடம்பு புல்லரித்தது.

ராம்நாத் முகஸ்துதி செய்யும் சுபாவம் இல்லாதவர். என்னை இப்படிப் புகழ வேண்டிய அவசியமும் அவருக்கில்லை. உபயோகமற்ற எழுத்தைப் புகழ்ந்து தவறான ஆசைகளை என்மனதில் விதைக்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவருக்கு இல்லை. அவர் மிகச் சிறந்த படங்களை எடுத்து உலகப் புகழ் பெற்றவர். ஏழைபடும்பாடு, மர்மயோகி கன்னியின் காதலி, தாயுள்ளம் போன்ற தரமான திரைக்காவியங்களைத் தந்தவர்.

மிகச் சாதாரண இந்த ஆரம்ப கால எழுத்தாளனைப் புகழ வேண்டிய அவசியமோ உற்சாகப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமோ அவருக்குத் தேவையில்லை.

என்றாலும் அவர் என்னைப் புகழ்ந்தார்.

"இதன் அழுத்தமான கதை என் மனதில் எத்தனை வருஷங்கள் ஆனாலும் அப்படியே இருக்கும். இப்பொழுது சேலத்தில் நான் இன்னும் எத்தனை நாள் இருப்பேன் என்று என்னால் சொல்ல முடியாது. இரண்டு படம் டைரக்ட் செய்யவேண்டும் என்ற ஒப்பந்தத்தில் இங்கே வரச் சொன்னாங்க. நான் எடுத்த முதல்படம் சரியாப் போகல. அதனால அடுத்தபட வாய்ப்பு தருவதும் தராததும் அவங்க இஷ்டம். எப்படியோ போகட்டும். நான் சென்னை போனதும் எனது உதவியாளர்கள் அரசு, சீனு இரண்டு பேரிடமும் இதுபற்றி கலந்து பேசி உனக்குத் தகவல் தருகிறேன். நான் அடுத்து எடுக்கப் போகும் படக்கதை உன்னுடையது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். இதை நானே எடுக்கப்போகிறேனா அல்லது வேறு கம்பெனிக்காக எடுக்கப்போகிறேனா என்பதை சென்னையில் யோசிப்போம். எதற்கும் நீ மெட்ராஸ் வரத் தயாராக இரு. மெட்ராஸிலிருந்து எந்த நேரத்திலும் உன்னைக் கூப்பிடுவேன். நீ உடனே வர வேண்டியிருக்கும்."

என் கைகள் இரண்டையும் அவரே பிடித்து இழுத்துக் குலுக்கினார்.

நான் நெகிழ்ச்சியுடன் கண் கலங்கி நின்று கொண்டிருந்தேன்.

எனது முதற்கனவு ஆசை, அபிலாஷை சினிமா உலகில் பிரவேசிக்க வேண்டுமென்ற நீண்ட நாளைய வேகம் நிறைவேறப் போகிறது... என்ற துடிப்பில் நீண்ட நேரம் வரை என்னையுமறியாமல் அவர் கரத்தைப் பிடித்து நானும் குலுக்கினேன்.

அநேகமாக அதுவே எங்கள் கடைசி சந்திப்பாகவும் கடைசி நேரக் கை குலுக்கலாகவும் விடை பெறலாகவும் போய்விட்டது.

அவர் சென்னை போய்விட்டார் என்ற செய்தியை கே.கே.சௌந்தர் சொன்னார்.


நான் வானத்தில் மிதந்து கொண்டிருந்தேன். புகழ் பெற்ற டைரக்டர் என் கதையொன்றை சினிமா எடுக்கப்போகிறார்.


சென்னை சென்றவுடன் எனக்கு அழைப்புவரும். நான் எந்த நேரத்திலும் சென்னை போகவேண்டியிருக்கும்.

அதற்கான ஆயத்தங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தேன்.

"ஒரு நல்ல டைரக்டர் உன் கதையைப் படமாக்கப் போகிறார். இது எல்லாருக்கும் கிடைக்கும் சந்தர்ப்பமில்லை. இதை நல்ல முறையிலே பயன்படுத்திக்கோ-" என்று கே.பி.எஸ். மணி சொன்னார்.

"எல்லாரையும் விட நான்தான் அதிக சந்தோஷமாக இருக்கேன்.





உங்கள அவரிடம் அறிமுகப்படுத்தி வச்ச என்னோட முயற்சி வீணாப் போயிடல. "கடைசி ரொட்டி" பிரமாதமான சப்ஜக்ட்னு என்னிடம் சொன்னார். உங்களுக்கு பிரமாதமான எதிர்காலமிருக்கு. மெட்ராஸ் போக ரெடியாயிருங்க... சினிமாக்காரங்க சமாச்சாரம். திடீர்னு தந்தி குடுப்பாங்க" சௌந்தர் உற்சாகப் படுத்தினார்.

❋ ❋ ❋

நான் குடியிருந்த கோமகள் நிலைய அவுட் ஹவுஸ்!

காலை நேரம்.

ஒரே இரவுக்குள் கரையான் அரித்து விட்ட எனது கதைகளில் கையெழுத்துப் பிரதிகளை மண்ணைத் தட்டி எடுத்துக்கொண்டிருந்தேன். சில மானஸ்கிரிப்ட்கள் கால் வாசியும், சில பாதியும், ஒரே இரவுக்குள் சேதப் பட்டிருந்தன.

மனத்தில் ஒரே துக்கம்.

மறுபடி இவற்றை எப்படிஎழுதுவது? ஒவ்வொன்றும் சுமார் முன்னூறு பக்கங்களுக்கும் குறையாது. ஏழு, எட்டு நாவல் கையெழுத்துப் பிரதிகளில் கரையான் ஒன்றைக்கூட விட்டுவைக்கவில்லை...

கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு என் சகோதரி சகுந்தலாவும் அவற்றைச் சுத்தம் செய்து எடுத்துவைக்க எனக்கு உதவிக் கொண்டிருந்தாள்.

"பாலு"

வெளியே யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

வெளியே வந்தேன்.

சவுண்ட் இன்ஜினியர் மணி நின்று கொண்டிருந்தார்.

வெளியே வந்த என்னை, தோள் மேல் கை போட்டு அணைத்துக் கொண்டு கோமகள் நிலையத்தின் முன்னே உள்ள பரந்த புல்வெளிப் பக்கம் அழைத்துச் சென்றார்.

அவர்முகம் வாடிப் போய் இருந்தது.

"ராம்னாத் போயிட்டார்ப்பா"

"மாமா! நீங்க என்ன சொல்றேள்?"

"டைரக்டர் ராம்னாத் நேத்திக்கு செத்துப் போயிட்டார். ஆபீசுக்கு தந்தி வந்திருக்கு. இங்கேருந்து சில பேர் கிளம்பி, கார்த்தாலயே மெட்ராசுக்குப் போயிருக்கா. இதை சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன். சௌந்தரும் மெட்ராஸ் போயிருக்கார். ராம்னாத் இந்த ஸ்டுடியோவுக்கு படம் டைரக்ட் பண்ண வந்த பின்பு உனக்கும் அவருக்கும் உள்ள நட்பு பற்றி எனக்கும் சௌந்தருக்கும் தான் நன்னாத் தெரியும். சௌந்தரும் மெட்ராஸ் போயிட்டார் "பாலுகிட்டே தகவல் சொல்லிருங்க ஸார்"ன்னு அவர் தான் சொன்னார்.

படம் தோல்வி அடஞ்சது என்னமோ வாஸ்தவம்தான். ஆனா அவரை இங்கே யாருமே சரியாவே புரிஞ்சுக்கல. அவர் வேதனைப்படும்படி யாரவது எதாவது பேசி மனசைப் புண்படுத்தியிருப்பாளோன்னு தோணுது. அவர் சாகர மனுஷனே இல்லை. ஏதோ ஒரு விஷயத்திலே மனசு ஒடஞ்சு போய்த்தான்!...

மணியின் குரல் அடைத்துக் கொண்டது. "அவர் இங்கே வந்திருக்கவே கூடாது பாவம்..."

செய்தித்தாளை வாங்கிப் பார்த்தேன். எனது துக்கம் மேலும் அதிகமானது. அதில் வேறு எந்தச் செய்தியும் இல்லாதமாதிரி அப்படியே போட்டுவிட்டு அலுவலகம் புறப்பட்டேன்.

வானவெளியில் நடைப் பயணமாய் மனம் அலைமோதியது.

மரக்கிளைகளின் இடுக்கு வழியே வானத்து நிலவைப் பார்க்கும் முயற்சி போல என் முதற்கனவு வெறும் புள்ளியாகி பின்பு சூனியமாகிவிட்டது.

மேலே மேகச் சந்தடி. நிலவு பறப்பது போல மாயத்தோற்றம். அந்தப் பெரிய மனிதருடன் பேசியது, அவர் தந்த உறுதி மொழியில் லயித்துப்போனது. ஆகாயத்தில் ஓர் அடுக்கு மாளிகை கட்ட முயன்றது-

பிரமை வெளியில் நான் சில நாள்கள் பிரமித்துப் போனது...

ராம்னாத் என்கிற அந்த உன்னதமான கலைஞனின் மரணத்தோடு என் சினிமா உலகப் பிரவேச முதற்கனவும் மரணமடைந்து விட்டது.

ஒரு நல்ல வாய்ப்பை இழந்த சோகத்தை விட, நல்ல நண்பரை இழந்த சோகமே என்னுள் அதிகமாக இருந்தது.

இதிலிருந்து மீள எனக்கு ரொம்ப நாள்களாகிவிட்டன.

என்றாலும் நான் மீண்டும் துளிர்த்து விட்டேன்.

"கடைசி ரொட்டி" பின்பு புழுதிப் புயல் என்ற நாவலாக உருவாகி விட்டது.

புத்தகத்தை ராம்னாத்துக்கு சமர்ப்பணம் செய்திருந்தேன்.

ஒரு சிருஷ்டி கர்த்தாவின் அதிக பட்ச அஞ்சலி அது. ○○○

மூல முதல்வனைப் பாடும் முதல் பதவர்ணம்



ஸுஜாதா விஜயராகவன்

ஆதிசங்கரர் வகுத்த அறுவகை மதங்களில் ஒன்று காணாபத்யம். கணபதியை வழிபடும் சமயநெறி. வேத காலம்தொட்டே 'தந்த்தி' எனப்படும் வக்ரதுண்ட மூர்த்தி உபாசனை நடைபெற்று வருகிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. பாரத தேசம் மட்டுமல்லாது ஆஃப்கானிஸ்தான், திபெத், நேபாளம், சீனா, பர்மா, தாய்லாந்து, இந்தோனேசியா, ஜப்பான், இலங்கை ஏன் மெக்ஸிகோவிலும்கூட - வேழமுகம் படைத்த விநாயக மூர்த்தி வழிபாடு பரவியுள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பல்லவர் காலத்தில் தான் விநாயகமூர்த்தி வடக்கிலிருந்து கொணரப்பட்டுப் பூசிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. கல்லிலும், சொல்லிலும், இசையிலும், ஓவியத்திலும் கணநாயகனின் மூர்த்தியும், கீர்த்தியும் வடிக்கப்பட்டுள்ளன. கஜானனக் கடவுளைப் போற்றும் பாடலுடன் கர்நாடக இசைக் கச்சேரியைத் தொடங்குவது வழக்கமாகி விட்டது. அவற்றுள் "ஸ்ரீ கணபதினி ஸேவிம்பராரே", "வாதாபி கணபதிம் பஜேஹம்", "சரணு ஸித்தி விநாயகா" என்று முறையே தியாகராஜர், முத்துஸ்வாமி தீக்ஷிதர், புரந்தரதாஸர் ஆகியோர் இயற்றியுள்ள கிருதிகள் மிகப் பிரபலமானவை.

பரத நாட்டியத்தை எடுத்துக் கொண்டால் கோயில்களில் ஆடப்பட்டு வந்த விநாயக கவுத்துவத்தைத் தவிர வழி வழியாக வந்த பாடல்கள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த சில ஆண்டுகளாக விநாயகர் பேரில் அமைந்த கிருதிகள், பாடல்கள் பரதநாட்டியத்தில் இடம் பெற்று வருகின்றன. எனினும் விக்னேசுவரர் பேரில் இசை மரபில் ஓரிரு தானவர்ணங்கள் இருப்பினும் நாட்டிய மரபில் பதவர்ணம் எதுவும் இல்லை என்பது விந்தை. நாட்டியத்தின் முக்கிய நிகழ்ச்சியான வர்ணம் சிருங்கார பாவத்தில் அமைவதே வழக்கம் என்பதால் பிரம்மச்சாரியாகத் தமிழ்நாட்டில் வழிபடப் பெறும் வேழமுகக் கடவுள் பற்றி வர்ணம் ஏதும் இயற்ற வழியில்லை என்று கருதப்பட்டிருக்கலாம்.

இசைக் கலைஞர் திரு டி.வி. கோபாலகிருஷ்ணன் இயற்றி, தனஞ்சயன் தம்பதி நாட்டியம் அமைத்துள்ள "வாரணமுக வா" என்னும் பதவர்ணமே மூலமுதல்வனைப் பற்றிய முதல் பத வர்ணமாகத் திகழ்கிறது. இது பக்தியை அடிப்படையாகக் கொண்டது. திருமண முகூர்த்தம் போன்ற வேளைகளில் ஒலிக்கத் தகுந்த மங்கல ராகமாகிய நாட்டைக் குறிஞ்சியில் அமைந்த இவ்வர்ணம் தெள்ளு தமிழில் ஒலி நயமும் பொருள் நயமும் சேர, அந்த ராகத்துக்குரிய எடுப்பும், கம்பீரமுமாகக் களை கட்டுகிறது. பல்லவியில் "நான் உன்னைத் துதிக்க வா" என்று துதிக்கையானை அழைக்கும் நயம் ரசிக்கத்தக்கது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக, கேட்டவர்க்கு அருளும் கற்பகத் தருவாக ஆற்றங்கரை, அரசமரத்தடி, தெருவோரம் என்று எங்கெங்கும் அமர்ந்து அருள் பாலிப்பவன் சித்தி விநாயகன்.

விக்னங்களை, அதாவது இடையூறுகளை நொடியில் நீக்க வல்லவன் என்பதால் விக்னேச்வரன், விக்னராஜன், விக்னஹரன் என்றெல்லாம் போற்றப்படுபவன். இன்னல்களை நீக்கி இம்மையிலும் மறுமையிலும் இன்பம் அளிப்பவன்.

எந்த ஒரு வினையும் அவனை முதலில் நினைந்து வழிபட்ட பின்னரே தொடங்கப் பெறும். எழுத்துக்குப் பிள்ளையார் சுழி; வழிப்பயணத்துக்குப் பிள்ளையார் துணை. பணியாரம் செய்வதானாலும் மாவைக் கிள்ளிப் பிள்ளையார் பிடித்து வைத்த பின்னரே பணி தொடங்குகிறது.

தோர்பிகர்ணம் (கைகளினால் காதுகளைப் பிடித்தல்) செய்தும், நீளவிழுந்து வணங்கியும், அகந்தை சிதறிப் போவதற்கு அறிகுறியாகச் சிதறு தேங்காய் உடைத்தும் கணேச்வரனை வழிபடும் முறைகளை அபிநயத்தில் காட்ட வகை செய்கிறது அனுபல்லவி.

"உமையவள் மகனே அருள்புரிவாய்" என்று சரணடைவதைக் காட்டுகிறது சரணம். அம்மைக்கு ஒருவன், அப்பனுக்கு ஒருவன் என்று தனித்தனியே உதித்த சிவ-பார்வதி குமாரர்களில் கணநாதன் பார்வதியின் உடலிலிருந்து வழித்தெடுத்த குங்குமப் பொதியால் உருவான சிந்தூர வர்ணன் அல்லவா! உமையவள் மகனே என்று அவனை விளிப்பது பொருத்தம்தானே!

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற உண்மையை உலகுக்கு அறிவிக்கவே சிவ-பார்வதியாகிய தன் பெற்றோரைத் தன் உலகமாக அறிவித்து வலம் வந்து ஞானப்பழம் பெற்ற ஞான ஸ்வரூபன் என்பதை எடுத்துரைக்கிறது முதல் ஸ்வரசாஹித்யம்.


தன் இளையவனான வேலன் வள்ளியை மணம் புணர, வேழமாக வந்து உதவிய நகைச்சுவை நாடகத்தை அடுத்த வரி நினைவூட்டுகிறது.

பாசம், அங்குசம், மோதகம், கபித்தம் (விளங்கனி) கரும்பு, தந்தம், ரத்னகும்பம் என்று பல்வேறு பொருள்களைத் தாங்கும் நான்கு கைகளும், ஒரு துதிக்கையும் படைத்தவன் ஐங்கரன். பஞ்ச இந்திரியங்கள், பஞ்ச தத்துவங்கள், பஞ்ச தன்மாத்திரங்கள் என்ற ஐந்தை உருவகப்படுத்தும் ஐந்து முகங்களைத் தாங்கும் உருவம் படைத்த கணபதி ஹேரம்பன் என்று துதிக்கப்படுகிறான். ஊழி முதலில் ஓம் எனும் மூலமந்திரத்தைச் சங்கநாதமாக முழங்கிக் கொண்டு ஆனந்தமயமாக நடனமாடிக் கொண்டு தோன்றியவன் ப்ரணவ ஸ்வரூபனான நிருத்ய கணபதி. அவனே விச்வகாரணன்; விக்னவாரணன்.

அகரமுதல எழுத்தாய் இலங்கும் மூலாதார மூர்த்தியை அகர வரிசையிலேயே வழிபடுகிறது நான்காவது ஸ்வர சாஹித்யம். "அறிவாக, ஆனந்தலயமாக, இருவினைகள் தீர்க்கும் ஈசன் மகனாக, உனது புகழ் ஊரெங்கும் பரவ நான் பாட (ஆட), எழில் வடிவமாக, ஏழை எனக்காக, ஒய்யாரமாக, ஓங்காரமாக வா" என்று ஒவ்வொன்றாய் வர்ணித்து உவகை கொண்டாடுகிறது.

"பிடிநடை" எனப்படும் ஒய்யாரமும், பிரணவ மந்திரத்துக்குரிய கம்பீரமுமாக லம்போதரன் (பெருவயிறன்) அசைந்து அசைந்து நடந்து வரும் அற்புதக் காட்சியைப் பாடலின் சொல்லழகும், சந்தமும், பொருள்நயமும், இசையும் இணைந்து அகக் கண்காணும் வண்ணம் படைக்கின்றன. நவரசங்களும் ததும்பும் இந்த உன்னத அனுபவத்தைப் புறக்கண்களாலும் கண்டு மகிழும் வண்ணம் நிருத்தத்தாலும் அபிநயத்தாலும் நிருத்யோபஹாரமாகப் (ஆடல் என்னும் அர்ப்பணமாக) படைக்கிறார்கள் கலைஞர்களான சாந்தா - தனஞ்சயன் தம்பதி.

டி.வி. கோபாலகிருஷ்ணன்



மிருதங்க வித்வான், கர்நாடக வாய்ப்பாட்டு வித்வான், இந்துஸ்தானி இசைக்கலைஞர், இசை ஆசிரியர், இசை ஆராய்ச்சியாளர், மேற்கத்திய ஜாஸ் இசையையும், கர்நாடக இசையையும் ஒன்றிணைத்துப் புதுமை படைப்பவர் என்ற பல சிறப்புகளைக் கொண்ட டி.வி. கோபாலகிருஷ்ணன் சொந்தமாகப் பாடல்கள் இயற்றி இசையமைத்துள்ளார் என்பது அவரது பெருமையின் மற்றுமொரு பரிமாணம்.

கொச்சி அரசவை ஆஸ்தானக் கலைஞராகத் திகழ்ந்த அவரது தந்தை திருப்புணித்துறா விஸ்வநாத ஐயர்தான் அவரது முதல் குரு. பின்னர் செம்பை வைத்தியநாத பாகவதரிடம் முறையாக இசை பயின்றார். கிருஷ்ணானந்த் என்பவரிடம் இந்துஸ்தானி இசைப் பயிற்சி பெற்றார். இசையை மொழி, நாடு முதலிய எல்லைகளுக்கு உட்படாத உலகளாவிய ஒன்றாகக் காணும் பார்வை இவருடையது.

சங்கரன் நம்பூதிரி, இசைஞானி இளையராஜா, ஸாக்ஸ ஃபோன் கதிரி கோபால்நாத், பாரதியாரின் பேரன் ராஜ்குமார் பாரதி என்று கூடி விடும் இசைமணிகள் பலர் டி.வி. கோபாலகிருஷ்ணனின் மாணவர்கள். 15 எல்.பி. ரிகார்டுகளும், 25 காஸெட்களும் வெளியிட்டுள்ளார். பெற்றுள்ள பட்டங்களும், விருதுகளும் பற்பல. குறிப்பிடத் தகுந்தது சங்கீத நாடக அகடமியின் விருது. மேலை நாடுகள் பலவற்றிலும் நமது இசையின் பெருமையைப் பரப்பி வருபவர். சிதார் மேதை ரவிசங்கர், பீட்டில்ஸ் பாடகர் ஜார்ஜ் ஹாரிஸன் ஆகியோருடன் இணைந்து கச்சேரி செய்த அனுபவமும் உண்டு. திரைப்பட இசைத்துறையும் இவருக்கு அந்நியமானதல்ல. "அந்தி மழை பொழிகிறது" என்ற - வைரமுத்துவின் பிரபலமான - பாடலில் ஒலிக்கும் ஆலாபனை இவருடையதுதான்.

"விநாயக சதுர்த்தி உற்சவக் கச்சேரிகள் செய்யும் போது, கச்சேரி தொடக்கத்தில் பாடும்படியாக கணபதி பெயரில் வர்ணம் எதுவும் இல்லையே என்று தோன்றியது எனக்கு. அச்சமயம் பெசன்ட் நகரில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலய நிர்வாகக் குழுவில் நானும் ஓர் அங்கத்தினனாக இருக்கவே, 'நாமே ஒரு வர்ணம் இயற்றிவிட்டால் என்ன' என்று நினைத்தேன். அப்படிப் பிறந்ததுதான் இந்தப் 'பதவர்ணம்'" என்று கூறுகிறார், திரு. டி.வி. கோபாலகிருஷ்ணன்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் இயற்றியதாகக் கூறப்படும் "கஜானனாய" என்ற தான வர்ணம் ஒன்று உள்ளது. ஆனால் புழக்கத்தில் இல்லை.

விநாயகப் பெருமானைக் குறித்துக் கர்நாடக இசையில் முதல் பத வர்ணம், சொல்லப் போனால் ஒரே வர்ணம் இயற்றியுள்ளவர் இவரே எனலாம். பரத நாட்டியத்துக்கென ஜதிஸ்வரம் ஒன்றும், மூகாம்பிகை பெயரில் ராகமாலிகை பதவர்ணமும் இயற்றியுள்ளார். தவிர, நாட்டிய நாடகங்களுக்கு இசை அமைத்திருக்கிறார்.

அகடமி ஆஃப் இந்தியன் மியூசிக் அண்ட் ஆர்ட்ஸ் என்ற அமைப்பை நிறுவி முழு நேரமும் இசைப் பணியில் ஆழ்ந்துள்ள இந்த அபூர்வக் கலைஞர், தான் ஈடுபட்டுள்ள ஒவ்வொரு துறையிலும் தனித்த முத்திரை பதித்து வருகிறார்.

ஸுஜாதா விஜயராகவன்

பதவர்ணம்

இயற்றியவர் : ராகம் : நாட்டைக்குறிஞ்சி
டி.வி. கோபாலகிருஷ்ணன் தாளம் : ஆதி

பல்லவி

வாரணமுகனை நான் உன்னைத் துதிக்க
வேண்டும் வரம் அருள்வாய் (வாரண)

அனுபல்லவி

என்றும் முதலில் உன்னைப் பாடியவாலே
இன்னல்களை நீக்கி இன்பமும் தருவாயே (வாரண)


சரணம்

உமையவள் மகனே அருள்புரிவாய்
உனதடியார் நலம் பெறவே



சிட்டை ஸ்வர ஸாஹித்யங்கள்

1. அம்மை அப்பனே என் உலகம் என
எடுத்தோதியவனே (உமையவள்)
2. மால்மருகனும் வள்ளியும் ஒன்றாகி
மணம்புரிய உறுதுணை நின்றவனே (உமையவள்)
3. தஞ்சமென உனதடி மலரிணைதனை
சேர்ந்திடுவேனே பக்தர் படைசரணடைய
கரணமைந்தும் வரம்தரவே முகமைந்தும் ஒளிபரவ
திருநடன கணபதியே (உமையவள்)
4. வாவா அகரமுதல் எழுத்தாக நீ வா
ஆனந்த நடையுடனே நீ வா
இருவினைகள் தீர ஈசன் மகனே பரிவோடு நீவா
எழில் வடிவாக, ஏழை எனக்காக
ஒய்யாரமாக, ஓங்காரமாக
உலகு புகழ் ஊரெங்கும் உனதடிமை நான் பாட (ஆட)
உவகையுடன் நாளதுவும் (உமையவள்)



-வாரணமுகா வா


-என்றும் முதலில் உன்னைப் பாடினாலே

-இன்னல்களை நீக்கி

-நான் உன்னைத் துதிக்க

-வேண்டும் வரம் அருள்வாய்


-இன்பமும் தருவாயே




-உமையவள் மகனே



-அருள் புரிவாய்





-உனதடியார் நலம் பெறவே


-அம்மை அப்பனே

-என் உலகம் என

-மால் மருகனும் வள்ளியும் ஒன்றாகி மனம்
புனர உறுதுணை நின்றவனே


-தஞ்சமென உனதடி மலரிணைதனை

-[illegible]






-சொந்தமுடனே பக்தர் படை சரணடைய




-கரமைந்தும் வரம் தரவே

-முகமைந்தும் ஒளிபரவ







-நீ வா

-திருநடன கணபதியே

-வாவா அகரமுதல் எழுத்தாக

-ஆனந்தநடையுடனே நீ வா

-இருவினைகள் தீர

-ஈசன் மகனே



-பரிவோடு நீ வா

-எழில் வடிவமாக

-ஏழை எனக்காக

-ஒய்யாரமாக

-ஓங்காரமாக



சாந்தா - தனஞ்சயன்

கலாக்ஷேத்ரா என்னும் ஆலமரத்தின் உரம் வாய்ந்த விழுதுகள் சாந்தா - தனஞ்சயன் தம்பதி. ருக்மிணி தேவியிடம் பயின்று, பட்டம் பெற்று, கலாக்ஷேத்திரத்தின் நாட்டிய நாடகங்களிலும் பங்குபெற்ற இத் தம்பதி நிறுவிய பரதநாட்டியப் பள்ளியாகிய **பரதகலாஞ்சலி** இவ்வாண்டு வெள்ளி விழாக் கொண்டாடுகிறது.

நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியரை உருவாக்கி, அரங்கேற்றி, வெற்றிகரமான பல நாட்டிய நாடகங்களையும் மேடையேற்றியுள்ளனர் சாந்தா - தனஞ்சயன் தம்பதி. அரசாங்க அழைப்பின் பேரிலும், அந்நிய நாட்டினர் வேண்டுகோளுக்கு இணங்கியும் தமது குழுவினருடன் உலக நாடுகள் பலவற்றுக்கும் கலைத்தூதுவராகச் சென்று வருபவர்கள். "நாட்டியம் பற்றி நாட்டியக் கலைஞன் கருத்துகள்" என்றதொரு நூலை உருவாக்கி வெளியிட்டுள்ளனர். நிருத்ய சூடாமணி, கலைமாமணி போன்ற பல விருதுகள் இவர்களைத் தேடி வந்துள்ளன. கலை தொடர்பான அமைப்புகள், நிறுவனங்கள் பலவற்றிலும் முக்கிய அங்கம் வகிப்பவர்கள்.

இராமநாடகம், நந்தனார் சரித்திரம் போன்ற சம்பிரதாய நாட்டிய நாடகங்களோடு நின்று விடாமல் **சங்கமித்ரா, ஸ்த்ரீ** போன்ற படைப்புகளில் பௌத்த, கிறிஸ்துவ சமயக் கதைகளையும் நாட்டியமாக வடிவமைத்த பெருமை இவர்களுக்கு உண்டு. சிதார் மேதை ரவிசங்கருடன் இணைந்து அவரது இசை அமைப்பில் போதை மருந்தின் தீமையை விளக்கும் "முறிந்த கிளை" என்ற புதுமையான நாட்டிய நாடகம் ஒன்றையும் இயக்கியுள்ளனர்.

சிறந்த இளம் நாட்டியக் கலைஞரான சத்யஜித்தின் பெற்றோரான இவர்கள் கர்நாடக இசையிலும் தேர்ச்சி பெற்றவர்கள். சாந்தா அருமையாகப் பாடி நட்டுவாங்கம் செய்து வருகிறார். தனஞ்சயன் மிருதங்கக் கலைஞரும்கூட. எனவே புதிய புதிய பாடல்களைத் தேடிப் போய் அவற்றுக்கு நாட்டிய வடிவமைக்கும் தாகம் இவ்விரு கலைஞர்களுக்கும் உண்டு.

விநாயகர் பற்றிய வர்ணத்தை டி.வி. கோபாலகிருஷ்ணன் முதன்முறையாகக் கோவிலில் பாடியதைக் கேட்டதும் அவரது அனுமதி பெற்று அதை நாட்டியக் கச்சேரியின் முக்கிய அம்சமாக வடிவமைத்த பெருமை இவர்களைச் சாரும்.

அயரா உழைப்பு, நாளும் புதிதாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற ஆர்வம், பழைமை கெடாமல் புதுமையை உருவாக்கும் அழகுணர்வு, இசை போன்ற மற்ற துறைக் கலைகளை ஆழ்ந்து ரசிக்கும் திறந்த மனம் என்ற பல பண்புகளே இவர்களது தொடர்ந்த வெற்றிகளுக்குக் காரணம்.

நாட்டியமாய் வடிவமைத்து ஆடுபவர்கள்:

சாந்தா - தனஞ்சயன்

புகைப்படம்: செல்வா



-உனது புகழ் ஊரெங்கும்



-உனதடிமை நான் பாட (ஆட)

-உவகையுடன் நாளதுவும்



நிழலும் சுடும்



ராஜேஷ்குமார்

அவள் செய்த ஒரு தவறு, தன் குழந்தையையே வேண்டாமென்று குழந்தைகள் காப்ப கத்தில் விட்டுவிட வைத்தது ஒரு நாள். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அந்தக் குழந்தையை ஆவலுடன் தேடிப் போனபோது?...

'வாசவி க்ளினிக்' என்று ஆங்கிலம் பேசிய பெயர்ப்பலகை அக்கட்டடத்தின் நெற்றியில் ஒட்டியிருக்க - ஹாஸ்பிடலின் அவுட் பேஷண்ட் வார்டில் சொற்பமாய் சிலர் உடல் உபாதைகளோடு காத்திருந்தார்கள். எல்லாரும் பெண்கள். 'பிசைலன்ஸ்' என்று உதட்டைக் குவித்து ஒரு பெண் சுவரில் எச்சரிக்க, நர்ஸ் லீலா நோயாளிகளிடம் விவரம் குறித்துக் கொண்டு - டோக்கன் கொடுத்து அங்கிருந்த நிறம் நிறமான பாலிமர் நாற்காலிகளில் அமர வைத்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான்-

வாசலில் ஒரு கார் வந்து நின்றது. கடல் வண்ண பியட் கார். காரின் கதவு ஒரு மலரின் இதழ் போல் விரிய அந்தப் பெண் இறங்கினாள். வயது இருபத்தைந்து இருக்கலாம். பொன்னிறம். சற்றே சதைபோட்ட உடம்பை, பூனம் கிறிஸ்பல் சேலை சுற்றிமிருந்தது. வலப்பக்க நாசியிலும், காதுகளிலும் வைரத்துணுக்குகள் கர்வமாய் மின்னின. அவர் உள்ளே நுழைந்து நர்ஸ் லீலாவை நெருங்க - லீலா ஏறிட்டாள்.

"எஸ்...."

"டாக்டரைப் பார்க்கணும்."

அவள் டோக்கனை எடுத்துக் கொடுத்தாள். வந்தவள் மெலிதாய் நகைத்தாள். "நான் ஒரு பேஷண்டா வரலை. டாக்டரம்மாவைப் பர்சனலா பார்க்க வந்தேன்..."

"உங்க பேர்...?"

"யமுனா...."

"இதே ஊர்தானே?"

"ஆமா...."

"ஏதாவது அவசரமான விஷயமா?..."

"ஆமா...."

"ஒரு நிமிஷம் உட்காருங்க. உள்ளே போயிருக்கிற பேஷண்ட் வெளியே வந்ததும் நீங்க போகலாம்..."

யமுனா உட்கார்ந்தாள்.

அவளுக்குப் பக்கத்து நாற்காலிகளில் அமர்ந்திருந்த இரண்டு பெண்கள் ஜன்னலுக்கு வெளியே பார்த்து - பேசிக் கொண்டது அவளுடைய காதுகளில் விழுந்தது.

"ஜன்னல் வழியா பாரு..! தெரியுதா?.."

"ஆமா.... அந்த மரத்துக்குக் கீழே வெள்ளைப் பெயிண்ட் அடிச்சு புத்தம் புதுசா ஒரு தொட்டில் தெரியுது..."

"இந்த ஏரியாவில பெண் சிசுக் கொலை அதிகம். பெண் குழந்தைங்க வேண்டாம்னு நினைக்கிறவங்க... இந்த தொட்டில்ல போட்டுட்டுப் போயிடுவாங்க. அந்தக் குழந்தைகளை இந்தக் காப்பகம் எடுத்துப் பராமரிக்கும்..."

"அரசுத் தொட்டில்ன்னு சொல்றாங்களே... அதுவா இது?"

"ஊஹும்.. அது வேற.... இது வேற.... டாக்டர் வாசவி தனியா இதை வெச்சிருக்காங்க... டாக்டரம்மாவுக்கு கொஞ்சம் இளகின மனசு. பெண் குழந்தைங்க பிறந்தா எருக்கம்பால் புகட்டியும், நெல்லைக் கொடுத்தும் பிஞ்சுக் குழந்தைகளைக் கொல்லும் வழக்கம் அதிகமா இருக்கிறதைப் பார்த்து அதிர்ச்சி ஆயிட்டாங்க. அதைத் தடுக்கணும்ங்கிற எண்ணத்துல.. சொந்தமா க்ளினிக்கைக் கட்டினதும் முதல் வேலையா... தொட்டிலை வெச்சுட்டாங்க..."

"டாக்டரம்மாவுக்கு நல்ல மனசு...."

"இப்படி ஊருக்கு ஒருத்தர் இருந்தா போதும்... பெண் குழந்தைகளைக் கொல்ற அநியாயம் நடக்காது..."

"க்ளக்...."

டாக்டரம்மாவின் அறைக் கதவு திறக்கப் பட- ஊசி போட்ட தோள்பட்டையைத் தேய்த்துக் கொண்டே ஒரு பெண் வெளியே வந்தாள். நர்ஸ் லீலா யமுனாவை ஏறிட்டாள்.

"நீங்க போங்க...."

யமுனா எழுந்து உள்ளே போனாள்.

நரை கொண்டை போட்டு - வாஷ் பேஸினில் கைகளைக் கழுவிக் கொண்டிருந்த டாக்டர் வாசவிக்கு நாற்பது வயது இருக்கலாம். சற்றே தளர்ந்த உடம்பு. நெற்றியில் பெரிதாய் குங்குமப் பொட்டு. வெள்ளைக்கோட் பாந்தமாய் பொருந்தியிருந்தது.

"உட்காரம்மா...."

யமுனா உட்கார்ந்ததும்- வாசவி டவலால் கைகளைத் துடைத்துக் கொண்டே தன் நாற்காலிக்குத் திரும்பினாள்.

"சொல்லும்மா..! என்ன உடம்புக்கு?..."

"என் உடம்புக்கு ஒன்றும் இல்லை டாக்டர்!"

"தென்...?"

"ஒரு பர்சனல் விஷயமா உங்ககிட்டே பேசணும்."

"சொல்லும்மா."

"எனக்குக் கல்யாணமாகி அஞ்சு வருஷம் ஆச்சு டாக்டர்!... இது வரைக்கும் குழந்தை இல்லை. இனிமே பிறக்கிறதுக்கு வாய்ப்பு இல்லைன்னு மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் ஊர்ஜிதம் பண்ணிடுச்சு..."

"சரி..."

"உங்க ஹாஸ்பிடல்ல இருக்கிற குழந்தைகள் காப்பகம் பற்றிக் கேள்விப்பட்டு அது சம்பந்தமா உங்ககிட்டே உதவி கேட்க வந்திருக்கேன்..."

"என்ன உதவி....?"

"எனக்கு குழந்தை பாக்கியம் இல்லாததனால உங்களோட காப்பகத்திலிருந்து ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்க முடிவு பண்ணிருக்கேன்."

"உன்னோட கணவர் இதுக்கு சம்மதிச் சுட்டாரா?"

"சம்மதிச்சுட்டார்..."

"அவர் எங்கே....?"

"முதல்ல என்னைப் போய் பார்க்கச் சொன்னார். நான் ஒரு குழந்தையைப் பார்த்து செலக்ட் பண்ணின பின்னாடி அவர் வந்து பார்ப்பார்."

"ஒரு நிமிஷம்!..." சொன்ன டாக்டர் வாசவி, தன் மேஜை மேல் இருந்த அழைப்பு மணியைத் தட்ட - நர்ஸ் லீலா உள்ளே வந்தாள்.

"பேஷண்ட்ஸ் இன்னும் எத்தனை பேர் இருக்காங்க...?"

"அஞ்சு பேர்..."

"அர்ஜெண்ட் கேஸ் ஏதாவது இருக்கா?..."

"இல்ல டாக்டர்.. காத்திட்டிருக்கிற அஞ்சு பேரும் மன்தலி செக்கப்புக்காக வர்றவங்க தான்..."

"சரி.... ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணச் சொல்லு.."

தலையாட்டி விட்டு லீலா போய்விட -டாக்டர் வாசவி யமுனாவை ஏறிட்டாள்.

"சோ... ஒரு குழந்தையை இங்கிருந்து தத்து எடுக்க முடிவு செய்திருக்கீங்க...?"

"ஆமா...."

"இது தீர்க்கமான முடிவுதானா?...."

யமுனா புன்னகை பூத்தாள். "இது திடீர்னு எடுத்த அவசர முடிவு இல்லை டாக்டர்! நானும் என் கணவரும் கிட்டத்தட்ட ஒரு வருஷமாக இதைப் பத்திப் பேசினோம். இப்ப தீர்க்கமா முடிவு எடுத்திருக்கோம்."

"நீ என்ன படிச்சிருக்கே?"

"பி.ஏ...."

"உன்னோட கணவர் என்ன வேலை பார்க்கிறார்?"

"அவர் ஓர் இண்டஸ்ட்ரியலிஸ்ட் - எலக்ட்ரானிக்ஸ் ஸ்பேர்பார்ட்ஸ் மேனுபாக்சர் பண்றார்...."

"இன்னிக்கு சாயந்தரம் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வந்திங்கன்னா ஹாஸ்பிடலுக்குப் பின்னாடி.... இருக்கிற குழந்தைகள் காப்பகத்துக்குப் போய் உங்களுக்குப் பிடிச்ச குழந்தையைப் பார்த்துக்கலாம்..."

"டாக்டர்....!" யமுனா குரலை இழுத்தாள். குரல் கம்மியிருந்தது.

"என்னம்மா?...."

"உங்ககிட்ட ஓர் உண்மையை மறைக்க விரும்பலை..."

"உண்மையா.. என்ன உண்மை...?"

"என் கணவரை விட்டுட்டு நான் மட்டும் இப்போ தனியா இங்கே வந்ததுக்குக் காரணம் இருக்கு...."

வாசவியின் நெற்றி சுருங்கியது.

"என்ன காரணம்?...."

"வந்து... வந்து.." குரல் தொண்டையிலேயே ஒட்டிக் கொண்டது.

"சொல்லம்மா...."

"அஞ்சு வருஷத்துக்கு முன்பு இதே ஹாஸ்பிடலுக்கு வந்து இங்கே இருக்கிற தொட்டிலில் என்னோட குழந்தையைப் போட்டுப் போனவள் நான்."

வாசவியின் கண்கள் அதிர்ச்சியில் விரிய - யமுனா தலைகுனிந்து தொடர்ந்தாள்.

"அப்ப... எனக்கு இருபது வயது டாக்டர்! கல்யாணமாகலை. ஓர் அயோக்கியனின் பலாத்காரத்துக்கு ஆளாகி கர்ப்பமானேன். அப்பா அம்மா சொந்த - பந்தம் எதுவுமே இல்லாத நான்... இந்த ஊருக்கு வந்து டெய்லரிங் மார்ட்ல வேலை பார்த்துக்கிட்டே ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகி... அந்தக் குழந்தையை வளர்க்க என்னோட சூழ்நிலை இடம் கொடுக்காததாலே.... இந்த ஹாஸ்பிடலுக்கு வந்து தொட்டிலில் அந்தக் குழந்தையைப் போட்டுட்டுப் போனேன்..."

யமுனாவின் கண்களில் இப்போது நீர் துளிர்த்தது. சிரமமாய், துக்கத்தை விழுங்கினாள்.

டாக்டர் வாசவி கேட்டாள்.

"என்ன குழந்தைன்னு சொன்னே?..."

"பெண் குழந்தை....."

"இப்ப.... நீ வந்த காரணம் எனக்குப் புரியுது. உன்னோட சொந்தக் குழந்தையையே கணவர்க்கு தெரியாமே தத்து எடுத்துக்கப் போறே?...."

"ஆமா டாக்டர்!"

"அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நீ தொட்டில்ல போட்டுட்டுப் போன குழந்தை இப்ப யார்கிட்ட இருக்கோ...?"

"டாக்டர்! அந்தக் குழந்தை யார்கிட்ட இருந்தாலும் சரி, அது எனக்கு வேணும். பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை டாக்டர்! நான் இப்ப நல்ல வசதியோடு இருக்கேன். நான் அழகாமிருந்த ஒரே ஒரு காரணத்துக்காக பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருத்தர் என்னைக் கல்யாணம் பண்ணிகிட்டார். எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை கிடைச்சும் குழந்தை பாக்கியம் இல்லை. நீங்க மனசு வெச்சா எனக்கு என்னோட குழந்தை திரும்பக் கிடைக்கும் டாக்டர்..!"

டாக்டர் வாசவி பெருமுச்சொன்றை விட்டபடி இடக் கையால் தன் மோவாயைத் தாங்கிக்கொண்டு யமுனாவை ஏறிட்டாள்.

"உன் குழந்தையை எந்தத் தேதியில் தொட்டிலில் போட்டுட்டுப் போனே உனக்கு ஞாபகம் இருக்கா?..."

"இருக்கு டாக்டர்.... எண்பத்தொன்பதாம் வருஷம் செப்டம்பர் மாதம் ஏழாம் தேதி..."

"குழந்தைக்கு ஏதும் அடையாளம்?"

"வலக் காதுக்கு கீழே பட்டாணி சைஸில் ஒரு மச்சம் இருக்கும்."

"வேற அடையாளம்....?"

"அந்த ஒண்ணைத்தான் எனக்கு ஞாபகம் இருக்கு."

"குழந்தை கறுப்பா.... சிவப்பா..?"

"சிவப்பு...."

"காப்பக ரிக்கார்ட்ஸ்ல பார்த்தா.... குழந்தை இப்ப யார்கிட்ட இருக்குன்னு தெரியும். ஆனா.. அதுல ஒரு சிக்கல்.."

"என்ன டாக்டர்....?"

"குழந்தைக்கு இப்போ.... அஞ்சு வருஷம் ஆகியிருக்கும். தத்து எடுத்துட்டுப் போனவங்க அந்தக் குழந்தையைத் திருப்பிக் கேட்டா!தருவாங்களா?"

"எப்படியாவது பேசி வாங்கிடலாம் டாக்டர்!... ஒரு தாயோட தவிப்பு அவங்களுக்குத் தெரியாதா என்ன?...."

"காப்பக விதிகள் பற்றி உனக்குத் தெரியாது யமுனா! ஒரு குழந்தையை யாருக்குத் தத்து கொடுத்தோம்ங்கிற விவரங்களை வெளியே யார்கிட்டேயும் நாங்க சொல்லக் கூடாது..."

"டாக்டர்!... ப்ளீஸ்... நீங்க மனசு வெச்சா என்னோட குழந்தை எனக்கு திரும்பக் கிடைக்கும்..."

கண்களில் நீரோடு தன் கால்களில் விழ முற்பட்ட யமுனாவின் தோள்களைப் பற்றினாள் வாசவி.

"சரி... வா... ரிக்கார்ட்ஸ் பார்த்துடலாம். அந்தக் குழந்தை யார்கிட்ட



இருக்குன்னு பின்னாடி - ஏதாவது முயற்சி செய்து பார்க்கலாம்."

ஹாஸ்பிடலுக்குப் பின்புறம் இருந்த குழந்தைகள் காப்பகத்துக்கு யமுனாவைக் கூட்டிக் கொண்டு போனாள் டாக்டர் வாசவி.

சிறிய கட்டடம்.

குழந்தையொன்று வீரிட்டுக் கொண்டிருக்க - ஆயா அதைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தாள்.

"ஆயா!.... ரூம் சாவியைக் கொண்டு வா..."

அவள் ஓடிவந்து இடுப்பில் செருகி வைத்திருந்த சாவிக் கொத்தை எடுத்துக் கொடுத்தாள்.

"குழந்தை ஏன் அழுவுது....?"

"தெரியல்லேம்மா...."

"க்ரைப்வாட்டர்... ரெண்டு சொட்டு குடு."

"சரிம்மா...."

அவள் போய்விட - வாசவி - அந்தப் பக்கத்து அறையின் பூட்டை விடுவித்தாள்.

உள்ளே போய் பீரோவைத் திறக்க - பீரோ முழுக்க முழுக்க - கத்தை கத்தையாய், பழுப்பேறிய காகிதங்கள். காலிகோ பைண்ட் செய்யப்பட்ட புத்தகங்களின் மேல் வருஷ எண்கள். ஃபோலியோ எண்கள்.

"எந்த வருஷம்னு சொன்னே?..."

"எண்பத்தொன்பது...."

வாசவி எண்களைப் பார்த்து - ஒரு புத்தகத்தை எடுத்தாள். நாப்தலின் நெடி அடித்தது.

"இப்படி... உட்காரம்மா..."

யமுனா உட்கார்ந்ததும் - வாசவி. புத்தகத்தைப் புரட்டினாள்.

"என்ன தேதி....?"

"செப்டம்பர் ஏழு...."

"குழந்தையை எத்தனை மணிக்குக் கொண்டு வந்து போட்டேன்னு தெரியுமா?"

"விடிகாலை அஞ்சு மணிக்கு."

புத்தகத்தின் தாள்கள் புரட்டப்பட்டன.

செப்டம்பர் மாதம் வந்தது. ஏழாம் தேதி நேராய் சுட்டுவிரலை வைத்தாள் வாசவி. எழுதப்பட்ட விவரங்களைப் படித்தாள்.

"பெண் குழந்தை - சிவப்பு நிறம், லேசாய் சுருட்டை முடி, வலக் காதுக்கு கீழே ஒரு மச்சம்..."

யமுனா பரபரத்தாள். கத்தினாள்.

"இ...இ... இதே குழந்தைதான்.... டா.... டாக்டர்."

வாசவி புன்னகையோடு தொடர்ந்தாள்: படித்தாள்.

"விடிகாலை ஐந்தரை மணிக்கு. தொட்டிலில் இருந்தது."

"கரெக்ட் டாக்டர்!... இப்ப அந்தக் குழந்தை யார்கிட்ட இருக்குன்னு பார்த்து சொல்லுங்க டாக்டர்... ப்ளீஸ்."

வாசவியின் பார்வை - லெட்ஜரைப் பார்த்துவிட்டு நிமிர்ந்தபோது - முகம் மாறியிருந்தது. மெல்லிய குரலில் சொன்னாள்.

"ஸாரி.... யமுனா...."

"என்ன டாக்டர்.....?"

"அந்தக் குழந்தை மூணு நாள்தான் உயிரோடு இருந்தது. குழந்தையோட இறப்புக்குக் காரணம் திடீர்னு வந்த ஃபிட்ஸ்.... எடை குறைவு."

யமுனா கண்கள் - நீலை குலைந்தன. உதடுகள் துடித்தன.

"டா.... டாக்டர்...."

சிந்தித்துச் செயல்படு



பல்லவி

நல்லது கெட்டது தெரியணும் - எது
நேர்மை வழியின்னு புரியணும் (நல்லது)

அனுபல்லவி

குள்ள நரிவேலை தொல்லை தரும்வேலை
கொடுத்திடும் உனக்கே சாவோலை தம்பி! (நல்லது)

சரணங்கள்

தேவைக்கு மேலே பொருளைச் சேர்ப்பவன்
திருடன் ஆவான் உலகிலே - நீ
யாவையும் எனக்கே சொந்தம் என்றால்
இருப்பதும் போகும் விரைவிலே என்பதால் (நல்லது)

உள்ளதைக் கொண்டே நல்லது செய்யணும்
ஊக்கம் நெஞ்சிலே இருக்கணும் - பெரும்
செல்வம் படைத்தோர் ஏழைக்கு உதவணும்
சிந்தித்து எதிலும் துணிந்து இறங்கணும். (நல்லது)

பட்டுக்கோட்டை இராசேந்திரன்

"டோன்ட் பி எமோஷனல்.... அந்தக் குழந்தையின் தலையில் அப்படி எழுதியிருக்கு.... என்ன பண்ண முடியும்?... உனக்கு வேண்டியது ஒரு குழந்தை தானே?.... காப்பகத்துல இப்போ மூணு குழந்தைங்க இருக்கு... அந்த மூணு குழந்தைகள்ல நீ எதை வேணுமின்னாலும் தத்து எடுத்துகிட்டு வளர்க்கலாமே?.... சாயந்தரமா உன்னோட ஹஸ்பெண்டைக் கூட்டிட்டு வா. இரண்டு பேரும் பார்த்து குழந்தையை செலக்ட் பண்ணுங்க."

யமுனா கண்களைத் துடைத்துக் கொண்டே தலையாட்டினாள்.

"சாயந்தரம் எத்தனை மணிக்கு வரட்டும் டாக்டர்?"

"அஞ்சு மணிக்கு வாம்மா.... நான் அங்கே வெயிட் பண்றேன்.."

யமுனா கும்பிட்டுவிட்டு - போர்ட்டிகோவில் நின்றிருந்த தன் காரை நோக்கி தளர்ந்த நடையோடு போனாள்.

டாக்டர் வாசவி காப்பகத்துக்குப் பின்னால் இருந்த தன் பங்களாவிற்குள் நுழைய - டி.வி. பார்த்துக் கொண்டிருந்த அந்த ஐந்து வயதுச் சிறுமி, "மம்மி...." என்று உற்சாகக் குரல் கொடுத்துக் கொண்டே ஓடிவந்து - வாசவியின் இடுப்பைக் கட்டிக் கொண்டாள்.

சத்தம் கேட்டு பக்கத்து அறையிலிருந்த - வாசவியின் கணவர் பாலசுப்ரமணியன் வெளிப்பட்டார்.

"என்ன வாசவி!... அவுட் பேஷண்ட்ஸ் இன்னிக்கு குறைச்சலா....? இவ்வளவு சீக்கிரமா வீட்டுக்கு வந்துட்டே....?"

"வரணும்னு தோணிச்சு, வந்தேன்..."

அவர் ஆச்சர்யமாய்ப் பார்த்தார்.

"ஏன் முகம் ஒரு மாதிரி இருக்கு?"

"ஒண்ணுமில்லை...."

வாசவி சோபாவில் தளர்வாய்ச் சாய்ந்து கொள்ள - குழந்தை, மடியில் வந்து உட்கார்ந்து கொண்டாள். குழந்தையின் கேசத்தைத் தடவிக் கொண்டே கணவரை ஏறிட்டாள் வாசவி.

"என்னங்க....?"

"ம்...."

"நாம உடனடியா ஒரு காரியம் பண்ணணும்."

"என்ன?..."

"நம்ம குழந்தை தர்சனாவோட வலக் காதுக்குக் கீழே இருக்கிற மச்சத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து எடுத்துடணும்."

"ஏன் திடீர்னு....?"

"காரணத்தை அப்புறமா சொல்றேன். மொதல்ல பிளாஸ்டிக் சர்ஜரி ஸ்பெஷலிஸ்ட் டாக்டர் விஜயகுமாருக்கு போன் செய்து அப்பாயிண்ட்மெண்ட் வாங்கணும்..."

பாலசுப்பிரமணியன் குழப்பமாய் வாசவியைப் பார்க்க - குழந்தை தர்சனா வாசவியின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

"மம்மி!.... என் ரைம்ஸ் சொல்லட்டுமா?...."

நேத்ரா

நா. ராமச்சந்திரன்

வாசலில் ரகுபதியின் நண்பன் பூபதி காலில் வெந்நீர் கொட்டிக் கொள்ளாத தோஷம்தான். அப்படிப் பறந்தான். ஸ்கூட்டர் மீது அமர்ந்திருந்த அவன் அது போட்ட சத்தத்தில் தான் கூப்பிடுவது ரகுபதியின் காதுகளில் விழுந்ததோ இல்லையோ என்று மீண்டும் ஒரு முறை "ரகுபதி! வாடா சீக்கிரம், நான் அவசரமாகப் புக்ஷாப்பிற்குப் போக வேண்டும்" என்று பலத்த குரலில் மறுபடியும் கூப்பிட்டவுடன் ரகுபதி விழுந்தடித்துக் கொண்டு வெளியே வந்தான்.

ரகுபதியின் மகனைப் பள்ளி ஒன்றில் சேர்க்க வேண்டும்... யூ.கே.ஜி.யோ எல்.கே.ஜி.யோ, அதற்காக நடையாய் நடந்து, படாதபாடுபட்டு நல்ல பள்ளிக்கூடம் ஒன்றில் குழந்தையைச் சேர்த்துக் கொள்ளச் சம்மதம் கூட வாங்கிவிட்டான்.

ஆனால் அந்தப் பாழாய்ப்போன டொனேஷன் குறுக்கே நின்றது. சொற்பச் சம்பளக்காரன் என்று கரடியாய்க் கத்திப் பார்த்து விட்டான். "சொற்ப சம்பளம் என்றால் பையனைக் கார்ப்பரேஷன் பள்ளியில் சேர்த்து விடுவதை விட்டு இங்கே ஏன் வருகிறீர்கள்?" என்று அதட்டினார் பள்ளியின் பிரின்ஸிபால். ரகுபதிக்குப் பதில் பேசவே முடியவில்லை. அந்தப் பெண்மணியை எதிர்த்துப் பேசவே ரகுபதிக்கு ஏனோ இனம் காணாத பயமேற்பட்டது. அவளின் கம்பீரத் தோற்றமே கூட, காரணமாக இருக்கலாம். ஐயாயிரம் ரூபாய் டொனேஷன் கொடுப்பதாக ஒப்புக் கொண்டு வந்து விட்டான். அந்தப் பணம் புரட்டத்தான் ரகுபதி அலையாக அலைகிறான்.

ரகுபதியின் நண்பன் நாணா அவனுக்கு ஐயாயிரம் ரூபாய் தர வேண்டும். கொடுத்து நாலைந்து வருடங்கள் ஆகிவிட்டன. திருப்பித் தருவதாகத்தான் நாணா பணத்தை வாங்கிக் கொண்டான். ஆனால், முடியவில்லை. நடுவில் வேலை வேறு போய்விட்டது. மீண்டும் ஒரு வேலைக்குச் சேர்ந்தவுடன் 'அதன் தொடர்பாகப் பல பிரச்னைகள். கடைசியில் பணம் என்னமோ ரகுபதிக்கு வந்து சேரவில்லை. அந்தப் பணம் கிடைத்தால் கூட, அதை டொனேஷனாகக் கொடுத்து விடலாம் என்று கணக்குப் போட்டான் ரகுபதி. அதற்காக அவனிடம் தொலைபேசியிலும் நேரிலும் பல தடவை கேட்டு விட்டான். பாவம். நாணா என்னமோ நல்லவன்தான். ஒரு தடவைகூட அவன் பணத்தைத் திருப்பித் தர முடியாது என்று சொல்லவில்லை. ஒவ்வொரு தடவையும் கேட்கும் போது நாளை, அடுத்த வாரம், சனி, புதன் என்று தவணை சொல்லிக் கொண்டிருந்தானே தவிர, பணத்தை என்னவோ எண்ணிக் கொடுத்த பாடில்லை.

இன்று காலை பூபதியோடு நாணா வீட்டிற்குச் சென்று அவனுடன் சண்டையே போட்டு விடுவது என்று தீர்மானித்துத் தான் பூபதியை வீட்டிற்கு அழைத்திருந்தான் ரகுபதி. அவன் என்னடா வென்றால் வாசலில் நின்றபடி அவசரப்படுத்திக் கொண்டிருக்கிறான்.

"எவ்வளவு நேரமாகக் கத்துகிறேன். காதில் விழவில்லையா?" என்று ஆத்திரத்தோடு கேட்டான் பூபதி.

"விழாமல் என்ன? பேண்ட் எடுத்து மாட்டினேனா, அதில் பட்டன் இல்லை. அதைக் கழற்றிப் போட்டுவிட்டு இன்னொரு பேண்ட் போட்டுக் கொள்வதற்குள் நாழிகை ஆகிவிட்டது. ம்.... ம்.... கிளம்பு" என்று சொல்லிக் கொண்டே ரகுபதி ஸ்கூட்டரின் பின் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டான். அப்போதுதான் அது நடந்தது!

பூபதியின் ஸ்கூட்டர் நகர்வதும், நேத்ரா தன் வீட்டு வாசற்படியிலிருந்து சாலையில் இறங்குவதும் சரியாக இருந்தது. ஸ்கூட்டர் கிளம்பி சாலையில் மெல்ல நகர்ந்து பிறகு வேகமாகச் சீறிய போது நேத்ரா அவர்களைக் கடந்து சென்று விட்டாள். அவள் கையில் சிறியதொரு கிண்ணம் இருந்தது. அதில் எண்ணெய் இருந்ததை ரகுபதி நன்கு கவனித்தான். அவள் சாலைக் கோடியிலுள்ள மரத்தில் கோயில் கொண்டிருந்த பிள்ளையாரை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாள். இது ரகுபதிக்கு நன்கு தெரியும். ஆனால் அவளைக் கண்டவுடன் ஏனோ அவன் மனம் சஞ்சலமடைந்தது.

நேத்ரா நல்ல அழகி. மதமதவென்று வளர்ந்திருந்தாள். அங்கங்களை லட்சணமாக அவளுக்கென்றே பிரமன் சிருஷ்டித்தான் போலும்! அவள் உயரத்திற்கும், பருமனுக்கும் எப்படி எப்படி அங்க அமைப்புகள் இருக்க வேண்டுமோ அப்படியே அளந்து வைத்தாற் போன்று முகம், மூக்கு, தோள்பட்டை, கைகள், கால்கள் இவை யாவும் அமைந்திருந்தன. ஆனால் அவள் கண்கள்! பெயருக்கு ஏற்றபடி அவள் நேத்திரங்கள் நீளமாக, எதையோ, எப்போதும் சொல்பவை போல அமைந்திருந்தன. கயல் கண்கள் என்று வர்ணிப்பார்களே அது இம்மாதிரியான கண்களைத் தானோ என்னவோ? ஒரு தடவை அவளைப் பார்த்தாலே போதும். அந்தக் கண்களின் ஆகர்ஷண சக்தியிலிருந்து மீண்டுவர வெகு நேரம் பிடிக்கும். ஆனால், அந்தக் கண்கள் ஏனோ சோக உணர்ச்சியையே வெளிப்படுத்துபவையாக இருந்தன. கருணையோடும், சில நேரங்களில், சிரித்த படியும் பேசும் போதெல்லாம் கூட நேத்ராவின் கண்கள் உமிழும் சோகத்தை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. தூய வெள்ளைப் புடைவையுடன், அப்போதுதான் குளித்து முழுகித் துவட்டிய கூந்தல் முதுகில் புரளப் புரள நெற்றியில் சிறிய சந்தனக் கீற்றுடன் கோயில் நோக்கிச் சென்று கொண்டிருந்தாள் அவள். வெகு சமீபத்தில் அவளை நெருங்கிப் பார்த்தால் தான் நெற்றியில் துலங்கும் விபூதிப் பொட்டும் அதன் கீழ் சோகமே வடிவமைப்பாகக் கொண்ட கண்களும் புலப்படும்.

"காரியம் இன்று எங்கு நடக்கப் போகிறது? இந்தப் பாழாய்ப் போன நாணா நல்ல நாளிலேயே பணம் கொடுக்கமாட்டான். இன்று நேத்ரா வேறு எதிரில் வந்து விட்டாள். காரியம் நடந்த மாதிரிதான்" என்று அங்கலாய்த்துக் கொண்டான் ரகுபதி.

நேத்ராவைப் பார்த்த அதிர்ச்சியிலிருந்து பூபதி இன்னும் மீளாத சமயம் ரகுபதி இப்படிப் பேசியவுடன், பூபதிக்கு ஒன்றும் புரியவில்லை. 'ரகு! என்ன சொல்கிறாய்?' என்று இரைந்தான்.

ஸ்கூட்டர், போலீஸ்காரன் சமிக்ஞைக்காக சற்று நின்றது. ரகுபதி, "பூபதி! உனக்கு நேத்ராவைத் தெரியாதா? பாவம் நல்ல பெண். கலியாணமாகி நாலைந்து வருடங்கள் தான் ஆகின்றன. ஒரு பையன்கூட இருக்கிறான். ஆனால் அவள் கணவன்தான் இல்லை. பாவம் அவன்! இலங்கைக்கு அமைதிப்படையுடன் சென்றவன் அந்தப் போரில் குண்டடிபட்டு இறந்துவிட்டான். கவர்ன்மெண்ட் அவளுக்கு ஒரு காஸ் ஏஜன்ஸி கொடுத்திருக்கிறது" ரகுபதி சொல்லி முடித்தவுடன் ஸ்கூட்டரும் புறப்பட்டது.

"சாதாரண விதவை வந்தாலே காரியம் நடக்காது. அதுவும் இளம் விதவை அவள். உன் காரியம் எங்கு நடக்கப் போகிறது?" என்று முத்தாய்ப்பு வைத்து ரகுபதியின் உற்சாகத்தைக் குலைத்து வைத்தான் பூபதி.

ஸ்கூட்டர், சாலையில் வேகமாக நழுவிக் கொண்டிருந்த போது. "பூபதி! வண்டியை நிறுத்து... ம்...ம்... சீக்கிரம் நிறுத்து. அதோ நாணா எங்கோ சைக்கிளில் பறந்து கொண்டிருக்கிறான். நம்மைப் பார்த்தால் நழுவிவிடுவான். இங்கேயே நின்று அவன் எங்கு போகிறான் என்று பார்ப்போம்" என்று ரகுபதி கூறியவுடன், பூபதி பிரேக் போட்டு ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்திக் கொண்டு நாணாவைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நாணா எங்கும் போக வில்லை. ரகுபதியைப் பார்த்தவுடன் அவனும் சைக்கிளை அவர்கள் பக்கம் திருப்பி அவர்களை நோக்கி வந்து கொண்டிருந் தான். 'பணம் இன்றும் புரட்டவில்லை என்று கைகளை விரிக்கத்தான் வந்து கொண்டிருக்கிறான் போலிருக்கிறது' என்று ரகுபதி மனத்திற்குள் நினைத்துக் கொண்டான். நேத்ரா வேறு எதிரில் வந்து தொலைத்திருக்கிறாளே!

நாணா சந்தோஷமாக சைக்கிளில் இருந்து கீழே குதித்தான். மிகக் குதூகலத்துடன் "ரகு! நல்ல வேளை. உன்னை இங்கு பார்த்தேன். உன் வீட்டிற்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன். இந்தா பிடி, ஐயாயிரம் ரூபாய். நல்ல சமயத்தில் நீ உதவியதற்கு மிக்க நன்றி" கூறியபடியே புது ஐம்பது ரூபாய் அடங்கிய ஒரு நோட்டுக் கட்டை ரகுபதியின் கைகளில் திணித்துவிட்டு, "ஜாக்கிரதையாக வீட்டிற்கு எடுத்துப் போய்விடு!" என்று அறிவுரை கூறிவிட்டு சைக்கிளில் ஏறிக் கொண்டான் நாணா.

ரகுபதிக்கு ஒன்றுமே புரியவில்லை. நாணா சைக்கிளில் வந்ததும், நன்றி சொன்னதும் கத்தை நோட்டுகளைக் கைகளில் திணித்ததும் அவனுக்குக் கனவு போலத் தோன்றிற்று. 'அடடா! நேத்ராவைப் பற்றி எவ்வளவு தவறாக எடை போட்டு விட்டோம்! நம்முடைய குறுகிய புத்தி மாறவே மாறாதா? என்று மனத்தில் நினைத்துக் கொண்டு பிரமிப்புடன் இருந்த அவனை பூபதி முதுகில் ஒரு தட்டுத் தட்டி சுய நினைவுக்குக் கொண்டு வந்தான்.

★ ★ ★

ரகுபதியின் மனைவி லீலாவிற்கு வேலை போய்விட்டது. ஒரு நாளைப் போல அவள் தினமும் காரியாலயத்திற்குத் தாமதமாகப் போய்க் கொண்டிருந்தாள். அது ஒரு தனியார் நிறுவனம். முதலாளி எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். பலனில்லை. "லீலா! நாளையிலிருந்து நீ லேட்டாக வந்தால் ஆபீஸில் உனக்கு வேலையில்லை" என்று கோபமாக அவர் ஒருநாள் எச்சரிக்கை விடுத்த போது லீலாவிற்கும் கோபம் வந்துவிட்டது. "நாளை என்ன சார் இன்றிலிருந்தே நின்று கொள்கிறேன்" என்று இராஜினாமா எழுதிக் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டாள். ஆயிரம் ரூபாய் சம்பளம் போயிற்று. கடந்த மூன்று மாதங்களாக வேலை இல்லை. கை ஒடிய அப்ளிகேஷன் எழுதியது தான் மிச்சம்!

ரகுபதிக்குத் தெரிந்த ஒரு பெரிய மனிதர் லீலாவுக்கு வேலை வாங்கித் தருகிறேன் என்று சென்ற வாரம் சொல்லியிருந்தார். அவரை வேண்டுமானால் ஒரு தடவை போய்ப் பார்த்துவிட்டு வரலாமே என்ற நப்பாசை ஒருநாள் ரகுபதிக்குத் தோன்றிற்று. அன்று எதற்காகவோ நாடு தழுவிய விடுமுறை.- பந்த்தோ ஹர்த்தாலோ - கடைகள் எல்லாம் மூடிக் கிடந்தன. இதுதான் நல்ல சமயம், அவரைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடலாம் என்று தீர்மானித்து வாசற்பக்கம் வந்தவன் வீட்டைத் தாண்டாமல் நின்று விட்டான். 'போகிறதுதான் போகிறோம். நேத்ரா எதிரில் வரும் சமயமாகப் போனால் என்ன? ஒருவேளை காரியம் கைகூடினாலும் கூடும்' என்ற ஓர் ஆசை ரகுபதியின் மனத்தில் ஊற்றெடுத்தது. நாணாவைப் பணம் கேட்கச் சென்றபோது நேத்ரா எதிரில் வந்தாள். நாணா கல்லுளிமங்கன். லேசில் அவனிடமிருந்து பணம் புரளாது. அவனிடமிருந்தே அன்று எதிர்பாராத விதமாகப் பணம் கிடைக்கவில்லையா? அது எதனால்...? நேத்ராதான் காரணம் என்று அவன் உறுதியாக நம்பினான். அவள்பால் அவனுக்கு ஏதோ சொல்ல முடியாததொரு மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று.

இப்படி வாசற்படிக்கு அருகே ரகுபதி நின்று கொண்டிருந்த சமயம் நேத்ரா பையும் கையுமாக வீட்டு வாசலிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். அதே பதவிசான நடை. தேர் வருவது போலிருந்தது. ஆனால் அவள் கண்கள்!... இமைகளைத் தூக்கி நேத்ரா ரகுபதியை ஒரு கணம் பார்த்தாள். அந்தக் கண்களில் வீசுவது தீட்சண்யமா அல்லது சோகத்தின் சாயல்களா? தடுமாறிப் போனான் அவன். ஆனால் அவள் மட்டும் அவன் கிளம்பும் சமயம் குறுக்கே வந்தது பரமதிருப்தியாக இருந்தது.

ரகுபதி நண்பர் வீட்டிற்குச் சென்ற போது, அவர் வீட்டுக் கூடத்தில் செய்தித் தாள் படித்துக் கொண்டிருந்தார். ரகுபதியைக் கண்டவுடன் அவருக்கு வாயெல்லாம் பல்.

"ரகு! உன்னைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன். உன் காரியம் சக்ஸஸ். உன் மனைவிக்கு நாளை இண்டர்வியூ லெட்டர் வருகிறது. நன்றாகப் பதில் சொல்லச் சொல். வேலை கிடைத்துவிடும்" மகிழ்ச்சி பொங்கக் கூறினார் நண்பர். ரகுபதி அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு சிறிது நேரம் அவரிடம் அளவளாவி விட்டு வீட்டிற்குத் திரும்பினான்.

நேத்ராவைப் பற்றிய எண்ணங்கள் ரகுபதியின் மனத்தில் சுழன்று கொண்டிருந்தன. அவளுக்கு இப்படியொரு ராசியா? "இனி. அவள் முகத்தில் விழிக்காமல் எந்தக் காரியமும் செய்யக் கூடாது' என்ற எண்ணமே அவன் நினைவில் அப்போது மேலோங்கி நின்றது.

நண்பர் கூறியபடியே நிறுவனத்திலிருந்து ரகுபதியின் மனைவி லீலாவிற்கு அழைப்பு வந்துவிட்டது. அன்று காலை பத்து மணி

நேத்ரா வெள்ளைப் புடைவைக்காரி என்பதால், அபசகுனம் என்று மற்றவர்கள் நினைத்து வெறுத்தனர். ஆனால், அதையே சுப சகுனம் என்று நிரூபிக்க ரகுபதி முயன்றபோது...



ஆபீஸிற்கு மணி ஏழு ஆகும் போதே லீலாவைத் துரிதப்படுத்தினான் ரகுபதி.

"லீலா! ஏழு மணிக்கே கிளம்பி விடு. அப்போதுதான் நல்ல வேளை" என்று அவன் கூறிய போது அவன் மனத் திரையில் நேத்ராதான் வந்து நின்றாள். அதே வெள்ளைப் புடைவை. குளித்துத் துவட்டிய கூந்தல். பளீரென்ற முகத் தோற்றம். அதே சமயம் அமைதி நிரம்பிய சோகப் பார்வை. அதோ, நேத்ரா கையில் என்ணெய்க் கிண்ணத்துடன் கிளம்பி விட்டாள். பிள்ளையார் கோயிலை நோக்கி வந்து கொண்டிருக்கிறாள்...

லீலாவைக் கரகரவென்று இழுக்காத தோஷம்தான். இருவரும் வாசற்பக்கம் இறங்கி வந்து விட்டார்கள். தெருவில் நடந்து வரும் போது நேத்ரா அவர்களைத் தாண்டி நடந்து சென்று கொண்டிருந்தாள்.

லீலாவிற்கு ஆத்திரமும் அழுகையுமாக வந்தது. 'நல்ல காரியத்திற்குச் செல்கிறோம். அதுவும் வேலை விஷயம். அந்தச் சமயம் பார்த்து

இந்த நேத்ரா சனியன் எங்கிருந்து வந்து தொலைந்தது? இந்த அப சகுனத்தில் வேலை எங்கு கிடைக்கப் போகிறது என்ற ஆத்திரத்தில் ரகுபதியை வைதுதீர்த்தாள். "இதற்குத் தான் இப்படி அவசரப்படுத்தினீர்களா? இந்த அமங்கலி குறுக்கே வந்து விட்டாள். இனி வேலை கிடைத்த மாதிரி தான்..." என்று ரகுபதியைச் சாடிக் கொண்டே வந்தாள் லீலா. ரகுபதி வாயைத் திறக்கவே இல்லை. மனிதக் குவியலாக வந்த பஸ் ஒன்றில் அவளைத் திணித்து 'டாட்டா' காட்டிவிட்டு வீடு திரும்பினான் அவன். 'நேத்ராவின் பெருமை லீலாவுக்கு எங்கே தெரியப் போகிறது' என்று வேறு அவன் மனத்தில் நினைத்துக் கொண்டான்.

அன்று ஆபீஸில் மதிய வேளை ரகுபதிக்கு டெலிபோன் வந்தது. மறுமுனையிலிருந்து லீலா மகிழ்ச்சி பொங்கப் பேசினாள். "உங்கள் நண்பருக்கு நல்ல மரியாதை இருக்கிறது போலிருக்கிறது. மானேஜர் என்னை ஒன்றுமே கேட்கவில்லை. சர்டிபிகேட்களை ஒரு தடவை பார்த்துவிட்டு நாளையிலிருந்து வேலையில் சேர்ந்து விடு என்று சொல்லிவிட்டார். உங்கள் நண்பருக்கு உடனே போன் செய்து நன்றி சொல்லி விடுங்கள்" என்றாள்.

ரகுபதிக்கு இருக்கை கொள்ளவில்லை. இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு சுலபமாக லீலாவிற்கு வேலை கிடைத்துவிடும் என்று அவன் கனவில்கூட நினைக்கவில்லை. 'எல்லாம் நான் வணங்கும் முருகப் பெருமானின் அருள்' என்று அவன் கண்களை மூடிய போது அவன் மனத் திரையில் நேத்ரா வந்து காட்சியளித்தாள். அதே வெள்ளைப் புடைவை, சந்தனக் கீற்றுடன் கூடிய நெற்றி.... சோகம் ததும்பிய கண்கள்...

அன்று மாலை ரகுபதியின் வீட்டில் ஒரே குதூகலம்தான். லீலா வாய் ஓயாமல் தன் புது ஆபீஸைப் புகழ்ந்து கொண்டிருந்தாள். இனிமேல் கட்டாயம் நேரம் தவறாமல் காரியாலயத்திற்குச் சென்று விடுவேன் என்று சத்தியம் கூடச் செய்தாள். ஆனால் ரகுபதி வெகு சீக்கிரம் ஸ்கூட்டர் ஒன்று வாங்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். இருவரும் காரியாலயங்களுக்குச் சென்று வருவது சுலபமாக இருக்கும் என்று எடுத்துக் கூறி ஒரு விரிவுரையே ஆற்றிவிட்டாள்.



"எனக்கு எதற்கு ரத்தத் திலகம்?"

"முதன் முதலா ஆபரேஷன் செய்யப் போறீங்க! உங்களுக்கு ரத்தக் காயம் ஏற்படாமலிருக்கத் தான் திருஷ்டி!"

'ஸ்கூட்டர் வாங்கியாக வேண்டும்' என்று எந்த முகூர்த்தத்தில் லீலா சொன்னாளோ அது உடனே நிறைவேறும் தருணம் வந்து விட்டது. ரகுபதியின் கம்பெனியில் ஸ்கூட்டர் வாங்குவதற்கு முன் பணம் தருவதாகச் சொன்னவுடன் அதற்கான முதல் வேண்டுகோள் ரகுபதியிடமிருந்து தான் வந்தது.

ஒரு நல்ல நாளில் ஸ்கூட்டர் வந்து வீட்டில் இறங்கியது. அதற்கு முறைப்படி பூஜை போட்டு மறுநாள் காலை ஞாயிற்றுக் கிழமை முதன் முதலில் ஸ்கூட்டரை வெளியே எடுத்துப் போக வேண்டுமென்று திட்டமிட்டிருந்தான் ரகுபதி. அன்றைய தினம் என்ன காரணத்தினாலோ லீலா வீட்டில் இல்லை. முதல்நாளே அவள் தமக்கை ஊரிலிருந்து வந்திருக்கிறாள் என்று நங்கை நல்லூருக்குச் சென்று விட்டாள். ரகுபதி ஸ்கூட்டருக்குச் சந்தனம் குங்குமம் எல்லாம் சாத்தி வெளியில் கொண்டு நிறுத்திவிட்டு ஸ்கூட்டரை உதைக்காமல் காத்திருந்தான். அவன் கவனமெல்லாம் நேத்ராவின் வீட்டு வாசல் பக்கமே இருந்தது. அவள் கோயிலுக்கு வரும் சமயம்தான் ஸ்கூட்டரிலமர்ந்து 'ஸ்டார்ட்' செய்து அவளுக்கு எதிரே போக வேண்டும் என்பது அவன் ஏற்பாடு. அவள் எதிரில் வந்தால் தானே அவனுக்குத் திருப்தி!

நேத்ராவின் தலை தெரிந்தது. ரகுபதி ஸ்கூட்டரை உதைத்து ஸ்டார்ட் செய்தான். வண்டியும் சிறிது தூரம் சென்றது. ஆனால், வெளியில் கிளம்பின நேத்ரா என்ன காரணத்தினாலோ வாசலில் இறங்கவில்லை. எதையோ மறந்து விட்டு வந்தவளைப் போல மீண்டும் உள்ளேயே சென்றுவிட்டாள். ரகுபதியும் ஸ்கூட்டரை நிறுத்தாமல் அவள் வீட்டைத் தாண்டிச் சென்று விட்டான். அது அவனுக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. நேத்ரா எதிரில் வரும் அதிர்ஷ்டம் இல்லாமலே போய் விட்டதே என்று தனக்குள் துயரப்பட்டுக் கொண்டான்.

ஸ்கூட்டர் புதிதல்லவா? தெருவில் வழுக்கிக் கொண்டு வெகு நன்றாக ஓடியது. கிளட்சு, பிரேக், கியர் எல்லாம் சுத்தமாக வேலை செய்தன. ரகுபதி வேங்கட நாராயணா சாலை வழியாக பனகல் பார்க்கை ஒரு சுற்று சுற்றிவிட்டு மீண்டும் வேங்கட நாராயணா சாலைக்கே திரும்பி வந்தான். இப்போது ஸ்கூட்டரின் வேகம் சற்று கூடிற்று. நடேசன் பார்க்குக்கு வரும்போது எதிரில் வரும் ஒரு லாரிக்காக ஸ்கூட்டரை இடப் பக்கம் திருப்பினான் ரகுபதி. அங்கு அப்போதுதான் பசுமாடு ஒன்று சாணம் போட்டிருந்தது. அதில் ஸ்கூட்டரின் முன் சக்கரம் பதிந்து வழுக்கி விடவே ரகுபதி ஸ்கூட்டருடன் இடப் பக்கம் உள்ள ஒரு சுவரில் மோதி மடேரென்று கீழே விழுந்துவிட்டான்.

ரகுபதி கண்விழித்த போது தான் ஒரு நர்ஸிங் ஹோமில் கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தான். நல்லவேளையாக அடி ஏதும் பலமாக இல்லை போலும்! அவனைச் சுற்றி அவன் மனைவி, மாமனார், மாமியார் இன்னும் சில நண்பர்கள் நின்று கொண்டிருந்தார்கள். "தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று. டாக்டர் பயம் ஒன்றும் இல்லை என்று சொன்னவுடன் தான் எனக்கு மூச்சே வந்தது" என்று அங்கலாய்த்துக் கொண்டாள், ரகுபதியின் மாமியார்.

"நான் வந்தவுடன் போகலாம் என்று எவ்வளவோ சொன்னேன். என் பேச்சைக் கேட்டால் தானே? போதாக் குறைக்கு அந்த அமங்கலி நேத்ரா வேறு எதிரில் வந்திருப்பாள். அவள் வராவிட்டாலும் அவளுக்காக இவர் காத்துக் கொண்டிருப்பார். முதன் முதலில் ஸ்கூட்டர் ஓட்டும் போது சகுனம் எதுவும் பார்க்க வேண்டாமா? நேத்ரா போன்ற பெண்கள் எதிரில் வந்தால் இந்த கதிதான்.." என்று மூச்சுவிடாமல் பேசினாள் லீலா.

லீலா பேசியது அவ்வளவும் ரகுபதியின் காதுகளில் விழத் தான் செய்தன. "அடிப்பாவி! நேத்ராவைப் பற்றி ஒன்றும் சொல்லாதே. நான் ஸ்கூட்டருடன் வெளியே கிளம்பும் போது நேத்ரா எதிரில் வரவே இல்லை." என்று இரைந்து கத்தவேண்டும் போல் இருந்தது ரகுபதிக்கு. ஆனால், வலியின் அதிர்ச்சியில் வார்த்தைகள் அவன் வாயினின்றும் வர மறுத்தன.

மரங்களை வளர்ப்போம்!

'ஸ்ரீரங்கம் ஸ்ரீதரன்'



ஆலமரத்தின் கீழ் அமர்ந்து ஞானம் போதிக்கும் இறைவன் தட்சிணாமூர்த்தியின் திருக்கோலம்.

மரங்கள், மனித சமுதாயத்திற்கு, பல நன்மைகளை அளிக்கின்றன. இவற்றைப் போற்றி வளர்க்க வேண்டும். சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கும் மரங்கள் இன்றியமையாதனவாக விளங்குகின்றன. இதன் பொருட்டு மரம் நடுவிழாக்கள் நடைபெறுகின்றன. கல்லூரி, பள்ளி மாணவர்களும் மரத்தைப் போற்றி வளர்க்க ஈடுபடுமாறு செய்யப்படுகின்றனர்.

நமது வாழ்வில் மரங்கள் இன்றியமையாத இடத்தைப் பெற்று விளங்குகிறது. இந்தியாவில் மரத்தை வழிபாடு செய்வது தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது. ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும் உள்ள அரச, வேப்ப மரம் இணைந்து வளர்ந்திருப்பதை, வழிபாடு செய்வதைக் காணலாம். திருமணங்கள் மரங்களை முன் வைத்து நடக்கின்றன. ஆலமரத்தின் கீழ் அமர்ந்து ஞானத்தைப் போதிக்கும் இறை வடிவான தட்சிணாமூர்த்தியை ஆலயங்களில் வழிபடுகிறோம். கோயில்களில் ஸ்தல விருட்சங்களாக ஒவ்வொரு மரம் விளங்குகிறது. ஊர்ச் சபைக் கூட்டங்கள் மரத்தடியில் நடைபெற்றன. பௌத்த சமயத்தில் போதி மரத்தின் கீழ் புத்தபெருமான் ஞானம் பெற்றதைக் குறிக்கும் வகையில் சிற்பங்கள் அவரை மரவடிவில் சித்திரிக்கப்படுவதைக் காணலாம். இவ்வாறு மரங்கள் மனித வாழ்வுடன் ஒன்றி விளங்குவதைக் காண்கிறோம்.

ஸ்தல விருட்சங்கள் :

தமிழகத்தில் ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு ஸ்தல விருட்சம் உள்ளது. 'விருட்சம்' என்றால் தாவரம் என்பது பொருள். மரங்கள் மட்டுமல்லாது புல், செடி, கொடி, மரங்கள் (குறைந்த காலம் வாழ்பவை





மரங்கள் சூழ்ந்த திருக்கோயிலும், குளமும். கோயம்பேடு, சென்னை.



கொள்ளிடம் ஆறும், மரங்களும் சூழ்ந்த எழிலான திருவரங்கம் கோயிலின் தோற்றம்.

- பல ஆண்டுகள் வாழ்பவை) போன்றவை ஸ்தல விருட்சங்களாக விளங்குகின்றன. இவற்றில் சில மருந்தாகவும் பயன்படுகின்றன. இதனால் இவை வழிபாட்டிற்கு உரியனவாகவும் விளங்குகின்றன. உதாரணத்திற்கு சில எடுத்துக்காட்டுகளைக் கூறலாம்: புல் (தர்ப்பை) - திருநள்ளாறு; கோரை - திருச்சாய்க்காடு. செடிகள்:- துளசி - திருவிற்குடி; அலரி - கரவீரம், வெள்ளெருக்கு - எருக்கத்தம்புலியூர். கொடி:- முல்லை - திருமுல்லை வாயில்; மரம்:- வாழை - திருப்பைஞ்ஞீலி; தில்லை - சிதம்பரம்; நெல்லி மரம் - திருநெல்லிக்கா; வில்வம் - திருவெறும்பூர்; இலந்தை -கீழ்வேளூர்; பனை - திருப்பனந்தாள், திருவோத்தூர்; மூங்கில் - திருநெல்வேலி; அரச மரம் - திருநல்லூர்; மாமரம் - திருமாந்துறை, காஞ்சிபுரம்; பலாமரம் - குற்றாலம், திருச்செந்துறை; ஆலமரம் - திருக்கச்சூர்; தென்னை - திருத்தெங்கூர், கடம்பமரம் - மதுரை; மருத மரம் - திருவிடை மருதூர்; மகிழ மரம் - திருவொற்றியூர்; வேம்பு மரம் - திருப்புள்ளிருக்கு வேளூர் (வைத்தீசுவரன் கோவில்); நாவல் மரம் - திருஆனைக்கா. ஸ்தல விருட்சங்கள் பல மக்கள் வாழ்க்கையுடன் இணைந்து விளங்குவன. திருமணம் ஆகாதவர்கள் திருப்பைஞ்ஞீலி கோவில் ஸ்தல விருட்சமான வாழை மரத்திற்குத் தாலி கட்டி வழிபடுகின்றார்கள். இவ்வாறு செய்வதால் விரைவில் திருமணம் நடக்கும் என்று நம்பிக்கையுடன் வழிபடு கின்றார்கள். இன்றும் இக்கோயிலில் இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. திருவோத்தூர் கோயிலில் அவ்வூரில் இருந்த காய்க்காத ஆண்பனை எல்லாம் பெண் பனையாக மாறிய வரலாறும் நடைபெற்றதாகக் கூறுவர்.

ஊரும் -மரமும்

இத்தகைய சிறப்பு வாய்ந்த மரங்களை, பண்டைக் காலத்திலிருந்தே போற்றி வளர்த்தனர் என்பதை கல்வெட்டுகள் அளிக்கும் செய்திகளால் அறிய முடிகிறது. பண்டைக் காலத்தில் ஓர் ஊரை அமைக்கும் பொழுது மரங்களை நடுவது அக்கால வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. "மருவும், தமனகமும், இருவாட்சியும், செண்பகமும், செங்கழுநீரும், மாவும், பலாவும், தெங்கும் உள்ளிட்ட பயன் தரு மரங்களை நடவும் இடவும்" என திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது. கடற்கரையில் இருந்த நிலங்கள் சில சமயங்களில் மணல் அடித்து, பயிரிட ஏதுவின்றிப் போதல் உண்டு. இதுபோன்ற இடங்களைச் சீர்திருத்தி பனையும், இலுப்பையும் பயிராக்கலாம் என, சீர்காழியில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழன் காலக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது.

மரங்கள் நின்ற இடங்களை 'தோட்டம்' என்றும், 'கொல்லை' என்றும் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. மா, வாகை, வேம்பு, பனை, புளி, கொழிஞ்சி போன்ற மரங்கள் நடப்பட்டதை அறிய முடிகிறது. இம்மரங்களில் இடுமரம், படுமரம், முதுமரம், இளமரம் என பலவகைகள் குறிக்கப்படுகின்றன. இதில் பயன்தரும் மரங்களான தென்னை, பனை, இலுப்பை, மா, பலா ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் காணலாம்:

தென்னை

தென்னை மரங்கள் பயிரிடப்பட்ட தோட்டங்கள் கோயில்களுக்கு அளிக்கப்பட்டன. திருவண்ணாமலைக்

கோயிலுக்கு 48,000 தென்னை மரங்கள் கொண்ட தோப்பை, தானமாக மங்கையர்க்கரசி என்பவள் அளித்தாள் என ஒரு கல்வெட்டு கூறுகிறது. திருவாவடு துறை கோயிலுக்கு 1000 தென்னை மரங்கள் அடங்கிய தோப்பு அளிக்கப்பட்டது. சிதம்பரத்தில் தென்னை மரங்கள் இருபுறமும் நின்ற வீதி 'விக்கிரம சோழன் தெங்குத் திருவீதி' என்று அழைக்கப்பட்டது. திருப்பனந் தாள் கோயிலிலிருந்து இறைவன் கொள்ளிடத்திற்கு எழுந்தருளும் சாலையில் 750 தென்னை மரங்கள் வளர்க்கப்பட்டன என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. தஞ்சை மாவட்டம் திருக்கண்ணபுரம் சௌரிராஜப் பெருமாள் கோயில் கல்வெட்டு தென்னை பயிரிடுதலைப் பற்றிய மிகச் சுவையான செய்தியைத் தருகிறது. கோயிலை அடுத்த வீதியில் வீடு கட்டிக் கொள்ள நிலம் தரப்பட்டு, வீடு கட்டிக் கொண்டது போக காலியான இடத்தில் தென்னையை நட்டு,பாதுகாப்பாக வளர்க்க வேண்டும். இதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு ஒரு பகுதியில் கோயிலுக்குத் தேங்காய் எண்ணெய் அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலமளிக்கப்பட்டது. மேற்கண்ட செய்தியால் மரங்களை யும் வளர்க்கலாம்; மேலும், அதன் வருவாயினால் கோயிலும் பயன் அடைந்தது என்பதை அறியும் பொழுது பண்டைய மக்களின் செயலை நம்மால் போற்றாமல் இருக்க முடியாது.

பனை

தென்னை போலவே பனை மரமும் முக்கியமாகக் கருதப்பட்டது. திருவாவடுதுறைக் கோயிலுக்கு 100 பனை மரங்கள் இருந்த தோப்பு தானமாக அளிக்கப் பட்டது. இதனை 'பயன் தரு மரம்' என கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இதுபோன்று 'கமுகு' (பாக்கு) மரங்களும் நடப்பட்டன.

இலுப்பை

இலுப்பை மரங்கள் நிறைந்த தோட்டங்களும் கோயில்களுக்கு பண்டைய நாளில் தானமாக அளிக்கப் பட்டன. இதன் எண்ணெயைக் கொண்டு கோயில்களில் விளக்கு எரிக்கப்பட்டது. கோயில் தேர்களைச் செய்வதற்கு இலுப்பை மரம் மிக அவசியமாகத் தேவைப்படுகிறது.

மா, பலா

பல கோயில்களில் மா, பலா மரங்கள் ஸ்தல விருட்சங்களாக உள்ளன. இதைத் தவிர மா, பலா வாழை மரங்கள் கோயில் நந்தவனத்தில் நடப்பட்டு அதிலிருந்து கிடைக்கும் பழங்கள் கோயிலுக்கு அளிக்கப்பட்டன. சிதம்பரத்தில் ஆடவல்லான் பெரு மானுக்கு ஆண்டு முழுவதும் படைக்க,நிலம் தானம் அளிக்கப்பட்ட செய்தியை கல்வெட்டுகள் கூறுகின்றன


ஊர்ச்சபை கூடியது,

கிராமங்களிலுள்ள ஊர்ச் சபைகள் மரத்தினடியில் கூடி விவாதித்ததை கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. கோனேரிராஜபுரத்தில் ஊர்ச்சபை 'இராசேந்திரன்' என்று பெயரிட்டு அழைக்கப்பட்ட ஒரு மரத்தினடியில் கூடியது என்று அறியும் பொழுது வியப்பாக உள்ளது. ஜம்பை என்ற ஊரில் அவ்வூர்ச் சபை, ஊரில் உள்ள புளிய மரத்தினடியில் நடைபெற்றது. பொதுக் காரியங் களுக்கும் மரங்களின் அவசியத்தை உணர்ந்திருந்தனர் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

மரங்களை வெட்டக்கூடாது

மரங்களின் அவசியத்தை உணர்ந்த நாம் இப் பொழுது மரங்களை வெட்டக்கூடாது என்று இயக்கம் நடத்தி வருகிறோம். பண்டைக் காலத்திலும் மரங்களை வெட்டக்கூடாது என்று தீர்மானம் செய்திருந்ததையும் கல்வெட்டுகள் எடுத்துக் கூறுகின்றன.

காஞ்சிபுரத்திற்கு அருகில் உள்ள திருப்பனங்காடு என்ற தலம் பனை மரத்தை ஸ்தல விருட்சமாகக் கொண்டது. இறைவன் பெயரே பனங்காட்டுடையார் (தாளபுரீசுவரர்) என்பதாகும். பனை மரங்கள் நிறைந்த ஊர் இது. இவ்வூரில் உயிருடன் இருக்கும் பனை மரங்களை வெட்டுபவர்கள் தண்டனைக்கு உள்ளா வார்கள் என்று விஜயநகர மன்னர் காலக் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. இக்கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஊர் நிலம் அளக்கும் அளவுகோலில் இரு முனை களிலும் பனை மரம் செதுக்கப்பட்டிருந்தது. பனை மரத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் தந்திருந்தார்கள் என்ற செய்தியை இதன் மூலம் அறியலாம்.



மரங்கள் சூழ்ந்து விளங்கும் மகாமகக்குளம், கும்பகோணம்.

புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் என்ற ஊரில் உள்ள கீரனூர் உத்தமநாதசுவாமி கோயிலில் உள்ள மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டில், கீரனூர் ஊரைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் ஏதும் சச்சரவு உண்டாகும் காலத்தில் மரங்கள், கிணறுகள் இவற்றுக்கு எவ்விதத் தீங்கும் செய்யக் கூடாது என்று ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்ற செய்தியை அறிய முடிகிறது.

நன்னிலம் வட்டம் போழக்குடி என்ற ஊரில் கிடைக்கும் கல்வெட்டுச் செய்தியில் அவ்வூரில் உள்ள குளத்தைச் சுற்றியுள்ள மரங்களை வெட்டுவதற்குத் தடை விதிக்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது. மேற்கண்ட செய்திகளினால் நம் முன்னோர் மரங்களின் அவசியத்தை உணர்ந்திருந்தனர் என்பதை நம்மால் அறிய முடிகிறதல்லவா!

நந்தவனங்கள்

கோயில்களில் தெய்வ வழிபாட்டிற்காகவும் மக்கள் பயன்பாட்டிற்காகவும் நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. நந்தவனங்கள் பற்றிய பல செய்திகளை, கல்வெட்டுகளினால் நம்மால் அறிய முடிகிறது. தமனகம், இருவாட்சி, மருவு, செண்பகம், செங்கழுநீர் போன்ற மலர் தரும் செடிகளுடன் பயன் தரும் மரங்களான மா, பலா, தென்னை, கமுகு, வாழை போன்றவையும் பயிரிடப்பட்டன. இதிலிருந்து கிடைக்கும் பொருள்களில் கோயிலுக்குப் பயன்பட்டது போக மீதம் இருப்பவற்றிலிருந்து வரும் வருவாய் கோயிலுக்குக் கிடைத்தது. கோயில்களில் பல நந்தவனங்கள் இறைவன், மன்னன் அமைத்த அதிகாரிகள் பெயரால் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டன என்பதையும் அறிகிறோம். பாழ்பட்டுக் கிடந்த நிலத்தைச் சீர்திருத்தி நந்தவனங்கள் அமைக்கப்பட்டன. நரசிம்ம நாயக்கன் என்பவன் தன் மாதா, பிதா உள்ளிட்டார் நன்மைக்காக திருவரங்கப் பெருமானுக்கு திருமாலை சாத்த நந்தவனம் அளித்த செய்தியை திருவரங்கம் கோயில் கல்வெட்டு கூறுகிறது.

நந்தவனங்களைப் போற்றிப் பாதுகாப்பதற்கு அளிக்கப்பட்ட நிலம் 'நந்தவனப்புறம்' என அழைக்கப்பட்டது. இங்கு பணிபுரிந்து பராமரித்தவர்கள் 'நந்தவனக் குடிகள்' எனப்பட்டனர். நந்தவனத்திலிருந்து கோயில்களுக்கு மலர் எடுத்துத் தொடுக்கப்பட்டு இறைவனுக்கு சாத்தப்பட்டது. மலர் மாலையை 'திருப்பள்ளித் தாமம்', 'திருமாலை' என்றெல்லாம் கல்வெட்டுகள் அழைக்கின்றன. திருமாலைக்காக விடப்பட்ட நிலம் 'திருமாலைப் புறம்' என்று அழைக்கப்பட்டது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட மாலையில் என்ன மலர்கள் இருந்தன, என்பன போன்ற செய்திகளை, கல்வெட்டுகள் விரிவாகக் கூறுகின்றன.

கோடைக் காலத்தில் இத்தோப்புகளிலும் நந்தவனங்களிலும் இறைவன் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி தரும வசந்த விழாக்களும் நடைபெறுகின்றன. கோடைக் காலத்தில் குளிர்ச்சியாக விளங்கும் இனிமையான இயற்கைச் சூழ்நிலையை மக்கள் அநுபவிக்கவும் இவ்விழாக்கள் உதவுகின்றன என்றால் மிகையில்லை.

முருகநாயனார், செருத்துணையாண்டார், கழற்சிங்கர் போன்ற நாயன்மார்களும், தொண்டரடிப் பொடியாழ்வாரும் இறைவனுக்கு நந்தவனப் பணி செய்தும், மலர் மாலை கட்டி அளித்தும் இறைவன் கருணையைப் பெற்ற வரலாற்றினை நாம் அறிவோம்.

எனவே, பண்டைக் காலத்தில் மரங்களின் அவசியத்தை உணர்ந்து மரங்களை வளர்த்தனர்; போற்றிப் பாதுகாத்தனர் என்பதை வரலாற்றுச் சான்றுகளால் அறிய முடிகிறது. இது இன்றைய சூழ்நிலைக்கும் பொருந்தும். மரம் வளர்த்தால் மழை பெருகும். மழை பெய்தால் வளம் பெருகும். வளம் பெருகினால் நாமும் நாடும் நலமுடன் வாழ்வோம்!



"அச்சொல்..."

பின்னலூர் மு. விவேகானந்தன்

மின்னும் விழிகளின் வீச்சில்
எண்ணம் கலந்தது பேச்சில்
இதழோரங்களின் இடைச்சொல்
எதிர்கொண்டழைத்த காய்ச்சல்

என்னிடம் ஏனிந்தப் பாய்ச்சல்
என்னவள் உதிர்த்த அச்சொல்

எங்கிருந்தோ வந்த நச்சுவேல்
என்னிதயத்தைத் தைத்தமுள்!

மனத் திரையில் சிறு கிழிசல்
பனித் திரையில் சினமேச்சல்
நிசப் பதங்களில் நெரிச்சல்
நீண்ட சிந்தனையில் குடைச்சல்!

இங்கிதமறிந்து சொல்லும் 'சொல்'
இன்பத்தை ஊட்டும் 'கள்'
ஓங்கினும் பொருளிலாப் பொய்ச்சொல்
பொங்குகடல் நுரைப் பூக்கள்

சொல்லால் வந்த உளைச்சல்
பொல்லா தென்றே உரைச்சொல்
கல்லாக்கிக் கிணற்றில் கிடத்தில்
நில்லாது போகும் நெஞ்சத்தில்!

திருவடிப் பெருமை

ஓவிய விளக்கக் கட்டுரை :
சி.ஏ. இராமச்சந்திரன்

மாலை நேரம். மகேந்திர மலையின் அடிவாரத்தில் வானரக் கூட்டம் மாருதியைச் சுற்றி அமர்ந்து இலங்கையிலுள்ள ஸீதா பிராட்டியைத் தேடிக் கண்டுபிடிக்க கடலைக் கடக்க வல்லவர் யார் என்பதைத் தீர் மானிக்க முன்வந்தனர்.

அனுமனின் வீர பராக்கிரமங் களை ஜாம்பவான் முதலியோர் பாராட்டி, அவன் ஒருவனே காகுத்தனருளால் கடலைக் கடக்க வல்லவன் என்று விளக்கி அவனுள் மறைந்திருந்த பலத்தை உணரச் செய்தனர்.

ஆஞ்சநேயனும் ஆர்வம் பொங்க, "நம் இராமபிரானுக் காகக் கடலைக் கடந்து, இலங் கையை இடந்து, அரக்கரை அழித்துப் பிராட்டியை மீட்டு வருவேன். தங்களாசியும், இரா மனது கிருபையும் எனக்கு இரு சிறகுகளாயிருக்க வானில் பறந்து செல்வேன்" என்ற வண்ணம் அம்மாமலையின் உச்சிக்குத் தாவினான்.

வாயு மைந்தன் அதிக உற் சாகத்துடனும், ஊக்கத்துடனும் உரக்க, 'ஜெய் ஸ்ரீராம்' என்ற போது கூடவே, 'ஜெய் ஸ்ரீராம்' என்ற வானரக் கோஷமும் சேர்ந்து வானை எட்டியது.

இராம பக்த ஹநுமான் விண் ணும் மண்ணும் ஒன்றாகும் படி பேருருவம் எடுத்தான். அவன் வளர்ச்சி ஆன்மிக வளர்ச்சி யானது. இராம பக்தியாகப் பெருகி மேலோங்கியது. ஆன்மிக எழுச்சியாலும், வளர்ச்சியாலும் இராம பக்தன் தெய்விக பல முடையவனாக உயர்ந்தான். அனுமனது விசுவரூபத்தை அள விடத் தம்மாலும் ஆகாதெனக் கம்பரும் கருதுகிறார்.

மின்னற் கொடியேந்தி விசும் பில் மேகங்களும் அனுமன் பாதகமலங்களில் அணியும் வீரக் கழல் போலமைந்தன. அவனது பெருவடிவால் முன்பு பெரிய தாகத் தோன்றிய மகேந்திர மலை இப்பொழுது ஒரு கல்லைப் போல் சிறுத்துத் தோற்றமளித் தது. அவன் இவ்வண்டத்தையே தாங்கும் தூண் போல் ஓங்கி நின்றான்.

கம்பர் வியந்து ஆனந்திக்கும், அனுமனின் பேருரு வடிவத்தை நாமும் கண்டு வியந்து ஆனந் திப்போம்.

மின்னெடுங் கொண்ட றாளின்
வீக்கிய கழலினார்ப் பத்
தன்னெடுந் தோற்றம் வானோர்
கட்புலத் தெல்லை தாவ
வன்னெடுஞ் சிகர கோடி
மகேந்திரமண்டந் தாங்கும்
பொன்னெடுந் தூணின் பாத
சிலையெனப் பொலிந்து நின்றான்

கம்பராமாயணம்.

மாருதி பொன்னெடுந் தூண் போல் வானளாவி நிற்க மகேந் திர மலையே அத்தூணின் பாத சிலையாயிருந்தது.



ஓங்கி உலகளந்த உத்தமன் திரிவிக்கிரமனின் மேலே உயர்த் துத் தூக்கிய திருவடி எத்தனைப் பெரியதாக இருந்ததோ அத் தனை உயரமாகப் பெருவடிவம் கொண்டு நின்றதாயும், எம் பெருமானது திருவடியை ஒத் திருந்தமையாலும் அனுமன் திரு வடி என்றழைக்கப் படுகிறான்.

பெருவரு வேலைதாவும
புந்தியான் புவனந் தாய
பெருவடி வுயர்ந்த மாயோன்
மேக்குறப் பெயர்ந்த தாள்போ
லுருவுறிவடி வினும்பர்
ஓங்கினனுவமை யாலுந்
திருவடி யென்னுந் தன்மை
யாவர்க்குந் தெரிய நின்றான்.


பின்னர் நடந்த போரில் இராமனைத் தோளில் சுமந்த சேவையால் திருவடி என்னும் திருநாமம் பெற்றான்.

தன்னுருவத்துடன் சேர்ந்து தன் கழுத்திலிருந்த மாலையும் வளர்ந்து அம் மாலையின் ஒளி வையமெல்லாம் வீசியது. அவ் வொளி கொண்டு கம்பரும் அனு மனது பெருவடிவின் நிழல் நீண்டு இலங்கையை இரு ளடிக்கச் செய்ததாகக் காண் கிறார். இலங்கையையடைந்த இருள், போர் நிழலாக இருந் ததாம். அனுமன் கடலைத் தாவு முன்னரே அவனது நிழல் கடலைத் தாண்டி இலங்கையிற் சென்று அதனை இருளாக்கிய தால் அது இலங்கையின் வீழ்ச்சியைக் குறிக்கும் ஒரு முன்னறிவிப்பாகக் கருதுகிறார் கம்பநாட்டாழ்வார்.

விண்ணில் பெரிய திருவடி யாம் கருடன், சிறிய திருவடியாம் அனுமனின் பெருவடிவத்தைக் கண்டு அதிசயிக்கும் படியாக அமைந்துள்ளது இவ்வோவியம்.

மாருதியின் திருவடிகளில் மலைமீது மேகச் சரங்கள் அலங்கரிப்பது போல் மலை யடிவாரத்தினில் வானரக் கூட்டம் முல்லைச் சரம் போல் காட்சி தருவதுதான் எத்தனை அழகு!

ஓம் சர்வதுக்க ஹராய நம:
ஓம் ஆஞ்சநேயன்
பொன்னடி போற்றி!



'அமுதசுரபி' தீபாவளி மலர்

திருவடிப் பெருமை

ஓவியம் : வி.ச. ராமச்சந்திரன்

இயற்கை போற்றுதும்!

சுமார் இருபது வருடங்களுக்கு முன் ஒரு மாலைநேரம். பெங்களூரில் எங்கள் வீட்டுக்கு எதிரே இருந்த ஏரிக்கு நேர்மேலே திரள் திரளாய் மேகங்கள். பால்கனியில் நின்று நான் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அக்கரையில் மரங்களுக்குப் பின்னே மறைந்து விட்டிருந்த கதிரவனின் கிரணங்கள், மேகங்களைத் தீண்டி மஞ்சளும் சிவப்புமாய் வர்ணஜாலம் காட்டிக் கொண்டிருக்க -

வானொலியிலிருந்து மிதந்து வந்தது அந்தக் கன்னடப் பாட்டு. அந்த நேரமோ, அந்தச் சூழலின் விசேஷ சக்தியோ, என்னுள் ஜில்லென்று இறங்கி நெஞ்சின் ஆழத்தில் பதிந்தது. அதன் பின்னர், அதை மறுபடி மறுபடிக் கேட்டேன். தமிழில் மொழிபெயர்த்தேன். என் டைரியில் கூடப் பதித்துக் கொண்டேன். அது - இதோ :

"பறவையின் பாட்டுக்குத் தலை தூக்கிடும் மலர்
நானாகிட ஆசை
பசுவின் கழுத்து மணியின் ஒலியும் நானாகிட ஆசை
படரும் வானவில்லின் மேலொரு முகிலாகிட ஆசை
பொன்னின் நிறத்தொரு மானின் விழியின் ஒளியாகிட ஆசை
தோட்டத்துக் கிளையின் நுனியில் திரளும் தேனாகிட ஆசை
கடலின் நீல நீரில் புரளும் மீனாகிட ஆசை..."

இயற்கையின் அம்சங்களை அனுபவித்து, அதில் ஒன்றி விடத் துடிக்கும் கவிஞனின் இதயத்துடிப்பு துல்லியமாய்க் கேட்பதாய் எனக்குத் தோன்றியது. எத்தனை நாளானாலும் பசுமை மாறாமல் என் நினைவில் அப்படியே நிலைத்திருந்தது.

மூன்றாண்டுகளுக்கு முன் 'ஸ்ரீராமசரித மானஸ்' காவியத்தை, பரத நாட்டிய நிகழ்ச்சியாய்த் தயாரித்த போது, அதில் இயற்கையை மாறுபட்ட கண்ணோட்டத்தில் அளித்த வர்ணனை கிடைத்தது. சீதையை அசோக வனத்தில் சந்தித்த அனுமன், அவளிடம் இராமனின் விரகத்தை வர்ணிக்கிறான். "சீதையைப் பிரிந்ததில் எல்லாமே விபரீதமாகத் தோன்றுகிறதாம் இராமனுக்கு. இளந்தளிர்கள், நெருப்பின் நாக்குகளாகவும்; மாளாத இரவில் சந்திரன், சூரியனைப் போல வெம்மையாகவும்; தாமரை மொட்டுகள், நட்டுவைத்த ஈட்டிகளைப் போலவும்; தண்ணென்று இறங்கும் மழை, கொதிக்கும் எண்ணெயை வார்த்தாற் போலவும்; தென்றல், சர்ப்பத்தின் மூச்சுக் காற்றாகவும்..."

தலைவியைப் பிரிந்து உழலும் மனதுக்கு இயற்கை ரம்மியமின்றி விபரீதமாகக் காட்சியளிக்கிறது.



☆ நீர் நிலையும் பிரதிபலிப்பும்



☆ உலகமனைத்தையும் காண்பதும் அவனால்தான்... (சூரியனைப் பற்றிய சம்ஸ்கிருதப் பாடலுக்கு)



☆ பரந்த வயல்வெளி (கிராமச் சூழ்நிலையை விளக்கும் மலையாளப் பாடலுக்கான புகைப்படம்)



☆ தேனாகிட ஆசை (கன்னடப் பாடல் வரிகளுக்கு)



☆ பெண்களின் காது ஜிமிக்கி போல் அலை மேல் ஆடும் அல்லி...

☆ மலர்களைப் பற்றிய தெலுங்குப் பாடலுக்கு...

அப்படியானால், நம் மனநிலையின் பிரதிபலிப்பாகத்தான் நாம் இயற்கையை ரசிக்கிறோமாவென்ற கேள்வி என்னுள் எழுந்தது.

நான் வேறு சில இந்திய மொழி இலக்கியங்களில் இயற்கையைப் பற்றிய பகுதிகளைத் தேடத் தொடங்கினேன். பல சமயம் இயற்கையின் ஏதாவது ஓர் அம்சத்தைப் பற்றிய வர்ணனை என் நெஞ்சைத் தொட்டது.

உதாரணமாக, தமிழில் சுப்பிரமணிய பாரதியின் 'மழை' கவிதையில் -

'திக்குகள் எட்டும் சிதறி - தக்கத்

தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட....'

என்ற தொடக்க வரிகளே அசுரத்தனமாக எட்டுத் திசையும் இடிய, பெய்யப்போகும் மழைக்கு பயம் கூட்டுகின்றன. பேய் மழையைப் படம் பிடித்துக் காட்ட இதைத் தவிர உயிரோட்டமான வர்ணனை வேறெங்கு கிடைக்கும்?

பாரதியின் இக்கவிதைக்கு மாற்றாக, மராத்தியில் பாலகவியின் கவிதை, சிராவண (ஆவணி) மாதத்தில் சரசரவென்று பூக்கம்பிகளாய்ச் சற்று நேரம் தூறி, சற்று நேரம் நின்று, மெய்சிலிர்க்க வைக்கும் மழையையும் அந்தச் சூழலின் வர்ணனையையும் வெகு நயமாய் எடுத்துரைக்கிறது.

சூரியனின்றி உயிர்த்திருக்குமோ உலகம்? அவன்தானே இயற்கைக்கும் சுற்றுச் சூழலுக்கும் காரணமே. யாக்ஞவல்கியரின் சூர்யாரிய ஸ்தோத்ரம் அவனை 'பரஹித நிரதோ ரவிஹி...' என்று வர்ணிக்கிறது. பிறருடைய நிமித்தமே அவன் இருக்கிறானாம்.

இப்படி தெலுங்கில் மலர்களைப் பற்றி... மழை மாதத்தில் கிராமச் சூழலைப்பற்றி... என்றெல்லாம் கவிதைகளைத் தேர்ந்தெடுத்தபோதுதான் சட்டென்று தோன்றியது. இதையே வைத்துக்கொண்டு ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்தினாலென்ன... என்று. விளைவுதான் 'பிரகிருதியின் வந்தே' (இயற்கை போற்றுதும்) என்ற நிகழ்ச்சி.



இதில் ஒவ்வொரு நடனத்துக்கும் முன்பாக அது குறிக்கும் அம்சம் பற்றி நானே எடுத்த சில கலர் டிரான்ஸ் பரன்சிகளையும் காட்டினோம். நிகழ்ச்சி பெரும் வெற்றி பெற்றது. எங்கள் அமைப்பான, கலைக்கூடமே தயாரித்து அளிக்க, தூர்தர்ஷனிலும் Prime Timeஐப் பெற்றது. அதில் வரும் சில நடனப் போஸ்களையும் சில காட்சிகளையும் வண்ணப் படங்களில் இங்கு இணைத்துள்ளேன்.

கட்டுரை, படங்கள் : **கோமளா வரதன்**

நட்புக்கு மட்டும்...

ஜனகன்



கையிலிருந்த புத்தகத்தில் கவனம் செல்லவில்லை. புத்தகத்தை மூடி மேஜையின் மீது வைத்தான், சுவாமிநாதன். அப்பா, பாய் மீது உட்கார்ந்து கொண்டிருந்தார். தலையணையை முட்டுக் கொடுத்து, சுவரில் சாய்ந்தவாறு, காலை நீட்டி வைத்துக் கொண்டிருந்தார். தலையிலும், முகத்திலும் நரைத்த முடி காடாய் வளர்ந்திருந்தது. பாதி பார்வை மங்கி விட்டிருந்தது. தள்ளாமையால் நடமாட்டமும் குறைந்து போயிற்று.

'எப்படி இருந்த அப்பா' பெருமூச்சு விட்டான், சுவாமிநாதன்.

சூட்டும், டையும் ஷூவுமாய் ஓடியாடி சம்பாதித்த அப்பா. குழந்தைகளுடன் உற்சாகமாக விளையாடி, அம்மாவுடன் கலகலப்பாகப் பேசிய அப்பா. சுந்தரிக்கும், சியாமளாவுக்கும் நல்ல வரனாகத் தேடி 'ஜாம்', 'ஜாம்' என்று கோலாகலமாகக் கல்யாணம் செய்த அப்பா. சுறுசுறுப்பாக இருந்த அப்பாவை, ஒரே நாளில் கீழே சாய்த்துப் படுக்க வைத்து விட்டான், ஒரு லாரிக்காரன்.

அப்பா, ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருந்தார். அப்போது திடீரென்று, ஒரு குழந்தை குறுக்கே ஓடி வந்தது. குழந்தைக்கு அடிபட்டுவிடக் கூடாதே என்று 'சடன் பிரேக்' போட்டார். பின்னால் 'குஷோசா'க வந்து கொண்டிருந்த லாரி, அப்பாவின் ஸ்கூட்டரில் மோதி விட்டது. அப்பாவைத் தூக்கி எறிந்தது, முதுகுத் தண்டு வடத்தில் சரியான அடி. அன்று படுக்கையில் படுத்த அப்பாவுக்கு இன்றுவரை படுக்கைதான். செய்யாத சிகிச்சையில்லை; பார்க்காத வைத்தியர் இல்லை. அம்மா நேர்ந்து கொண்டு ஏறி இறங்காத கோயி லில்லை. விரதமும், நோன்பும், அப்பாவைப் பற்றிய கவலையும் சேர்ந்து அம்மாவைச் சாய்த்து விட்டன. பூவுடனும், பொட்டுடனும் போவ்து என்றால் பெண்களுக்கு சந்தோஷமான விஷயமில்லையா? அம்மா சிரித்துக் கொண்டே போய்ச் சேர்ந்தாள்.

சுந்தரி, பம்பாயில் குடித்தனம் நடத்துகிறாள். சியாமளா, பெங் களூரில் இருந்தாள். கனடாவிற்குப் போய் மூன்று வருடமாகிறது. சுவாமிநாதன்தான் அப்பாவைக் கவனித்துக் கொள்ள வேண்டிய தாயிற்று. அம்மா போனபின், சமையல் வேலையும் சேர்ந்து கொண்டது. வீட்டு வேலை அத் தனையும் அவன்தான் செய்தான். அப்பாவுக்கு டிபன் கேரியரில் சாப் பாடும், ஒரு செம்பில் தண்ணீரும் வைத்து விட்டு ஆபீசுக்குப் புறப்படுவான். அப்பா சாப்பிட்டு விட்டு எல்லாவற்றையும் ஓரமாக வைத்துவிட்டுப் படுத்துத் தூங்குவார். ஆபீசிலிருந்து வீடு திரும்பியவுடன் வேலைகள் காத்துக் கொண் டிருக்கும்.

> **புராண காலத்தில்தான் யயாதியும், பீஷ்மரும் தந்தை யின் சுகத்துக்காக, தன் சொந்த சுகங்களை இழக்க முன் வந்தார்களென் றில்லை. இதோ.... இன் றும் சுவாமிநாதன்களை இந்தப் புனித பாரத பூமி ஈன்றளித்துக் கொண்டு தான் இருக்கிறது.**

அப்பாவைக் குளிப்பாட்டுவது, டிரஸ் போட்டு விடுவது, அப்பாவின் துணியைத் தோய்ப்பது, க்ஷவரம் செய்து விடுவது... என எல்லாமே நாளடைவில் சுவாமிநாதனின் வேலையாகிவிட்டன. அம்மா இருந் தால் எப்படிப் பார்த்துக் கொள்ளு வாளோ, அப்படிப் பார்த்துக் கொண்டான்.

அப்பாவுக்காக ஆஸ்பத்திரி, பிழைப்புக்காக ஆபீஸ் என்று ஓடிக் களைத்த சுவாமிநாதனின் உலகம் மிகச் சிறியது. அப்பாவைத் தனியே விட்டுவிட்டு அவன் ஒருநாள் கூட வெளியே எங்கும் சென்றதில்லை.

விளையாட்டுப் போல இருபத்தைந்து ஆண்டுகள் ஓடி விட்டன. அப்பாவைப் பார்த்துக் கொள்ள வேண்டியிருந்ததால், ஆபீசில் பிரமோஷன், டிரான்ஸ்பர் ஆகியவற்றைத் தவிர்த்தான். அப்பாவுக்குக் காது மந்தமாகி, கண் பார்வை குறைந்து, நடமாட்டம் குறைந்து போன பிறகு பேச்சு

வார்த்தையும் மிகவும் குறைந்து போய்விட்டது.

ஆபீஸ் போய்விட்டுத் திரும்பும் வரை கூட அப்பாவைத் தனியாக விட்டுவிட்டு வரமுடியாதது போல் ஒரு நிலை விரைவில் ஏற்படலாம். வேலையிலிருந்து வாலண்ட்டரி ரிட்டையர்மெண்ட் வாங்கிக் கொள்ளலாமா என்றுகூட யோசித்தான்.

அலுவலக நண்பர்கள் திருமண அழைப்பிதழை நீட்டும்போதும், குழந்தை பிறந்ததற்கு இனிப்பு வழங்கும் போதும், சுவாமிநாதனின் மனசுக்குள் ஒரு சின்னப்புயல் வீசும். அப்பாவுக்காக வாழும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்படும். ஆனால், அவனில்லாத அப்பாவை, அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

படுத்த படுக்கையாகிவிட்டாலும், கண் பார்வை சரியாக இருந்தபோது, அப்பா மகாபாரதம் படிப்பார். படித்ததை சுவாமிநாதனுக்குச் சொல்லுவார். 'யயாதி'யின் கதையை சுவாரஸ்யமாகச் சொல்லுவார்.

"யயாதிக்கு இளமை மீது அசாத்திய ஆசை. மனைவிக்குத் துரோகம் செய்துவிட்டான். இதைக் கேள்விப்பட்ட யயாதியின் மாமனார் விசுவாமித்திரர், யயாதி, முதுமை நிலையையடைய வேண்டும் என்று சாபமிட்டு விடுகிறார். 'இந்தச் சாபத்திலிருந்து விடுபட, உன் புத்திரர்கள் ஒருவரிடமிருந்து இளமையைத் தானமாகப் பெற்றால் தான் முடியும்' என்று சாபவிமோசனமும் சொல்லியிருந்தார். சுவாமிநாதா! என் கதையே வேறு. உன் இளமையை வேறு வகையில் நான், கொள்ளையடித்து விட்டேன்" என்று சொல்லிவிட்டு ஒருநாள் முழுதும் குலுங்கிக் குலுங்கி அழுதிருக்கிறார், அப்பா.

பீஷ்மரின் பிரம்மச்சர்யம் குறித்தும் பேசியிருக்கிறார், அப்பா. "அம்பை, பீஷ்மர் மீது இத்தனை கோபம் கொண்டிருக்கத் தேவையில்லை", என்று சொல்லுவார் அப்பா. "ஒன்று விட்ட சகோதரர்களுக்காக நாட்டைத் துறந்தது சரிதான். ஆனால் வாழ்க்கையைத் துறந்தது அவசியமில்லாத காரணத்திற்காக என்பது போல் எனக்குப் படுகிறது, சுவாமிநாதா!" என்பார், அப்பா.

ஏதோ ஒரு வைராக்யத்திற்கு பிரம்மச்சர்யம் கடைப்பிடிப்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான விஷயம்தான். ஆனாலும், இதன் மூலம் பெண்களுக்குக் கிடைக்கும் பெயரும், புகழும், ஆண்களுக்கு அவ்வளவாகக் கிடைப்பதில்லை என்று அப்பா அடிக்கடி சொல்வதுண்டு.

தனது பிரம்மச்சர்யம் பற்றிய ஞாபகம் வந்தது, சுவாமிநாதனுக்கு. இது வைராக்யம் சார்ந்த பிரம்மச்சர்யம் அல்ல. பிடிவாதம் நிறைந்த பிரம்மச்சரியமுமில்லை. அம்மா இல்லாத நிலையில், அப்பாவைப் பார்த்துக் கொள்ள வேறு ஒருவரும் இல்லாத நிலையில், கல்யாணச் சிந்தனை மனத்தில் எழவில்லை. நோயாளித் தகப்பனை வைத்துக் கொண்டு போராடிக் கொண்டிருந்த சுவாமிநாதனுக்குப் பெண் கொடுக்க ஒருவரும் முன் வரவில்லை.

ஆபீஸில் இருக்கும் போதுகூட வீட்டு ஞாபகமே இருந்ததால், 'அப்பா, இப்பொழுது எப்படி இருக்கிறாரோ?' என்ற கவலையே மனசு முழுவதும் இருந்ததால், உடம்பு தனது தேவையைக் கேட்டு அவனைத் துன்புறுத்தவில்லை. அப்பாவின் காலம் முடியும் வரை, வேறு சிந்தனைக்கு இடமில்லை என்று முடிவு செய்து கொண்டு விட்டான்.

பார்வையையும் கவனத்தையும் அப்பா படுத்துக் கொண்டிருந்த பாயிலிருந்து பெயர்த்து எடுத்தான். காலண்டரைப் பார்த்தபோது, தேதியின் விசேஷம் தெரிந்தது. சுவாமிநாதனின் பிறந்த நாள் அது. ஐம்பத்தி மூன்றாவது பிறந்த நாள்.

அம்மா இருந்த வரை, ஒவ்வொரு குழந்தையின் பிறந்த நாளன்றும் வடை, பாயசம் வைத்து சாதம் போடுவாள். கோயிலுக்கு அழைத்துக் கொண்டுபோய், அர்ச்சனை செய்வாள். ஓடியாடி உற்சாகமாக வேலை செய்து கொண்டிருந்த அப்பா படுத்துக் கொண்டவுடன், அம்மாவால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இரண்டு பெண்களைக் கரையேற்றி விட்ட திருப்தி அவளுக்கு நிறைவைத் தந்து விட்டது போலும்!

சுவாமிநாதன் அப்படி நினைக்கவில்லை. அப்பாவின் காலம் முடியும் வரை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்துவிட வேண்டும் என்றே நினைத்தான். சாவை வேண்டுவது, ஒரு வகையில், சுயநலம் சார்ந்தது. கடமைகளிலிருந்து தப்பிக்க சாவை எதிர்கொள்ளும் மனச் சிந்தனை, ஆரோக்யமான தல்ல என்பதே அவன் எண்ணம்.

அப்பாவுக்கு எண்பத்தி மூன்று வயசாகி விட்டது. படித்து 'டிகிரி' வாங்கினார். நல்ல வேலையில் சேர்ந்தார். சொந்தமாய்த் தொழில் தொடங்கி அமோகமாகச் சம்பாதித்தார். திருமணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார். இரண்டு பெண்களுக்குத் திருமணமும் செய்து பார்த்துவிட்டார். பிறகு முப்பது வருஷத்திற்குமேல் படுத்த படுக்கைதான். அவரைப் பொறுத்தவரை வாழ்ந்த வாழ்வும் போதும், பட்ட கஷ்டமும் போதும். போய்விடுவதுதான் நல்லது.

சுவாமிநாதனுக்கு அப்பா காலமாகிவிட்டால், என்ன செய்வது என்று தெரியவில்லை. கல்யாணம் செய்து கொள்ள முடியுமா என்று யோசித்தான். ஐம்பத்தி மூன்று வயதிற்குப் பிறகு வாழ்க்கையைத் தொடங்குவது சரியா? என்று தயங்கினான்.


அப்பாவுக்காகவே வாழ்ந்து பழக்கப்பட்டாகி விட்டது. அப்பாவுக்காக வாழும் வாழ்க்கையில் ஓர் அர்த்தம் இருப்பது தெரிந்தது. சொந்தமாக, தனக்கென்று ஒரு வாழ்க்கைக்காக மனசைத் திருப்பிக் கொள்ள முடியுமா என்று ஒரு கேள்வியும் எழுந்தது.

ஒருநாள் வழக்கம்போல் படுத்துக் கொண்டிருந்தபோது – அப்பா கையை அசைத்து மெலிந்த குரலில் முனகுவது கேட்டது. தாகமாக இருக்கிறது போலும்! தண்ணீர் கேட்கிறாரோ? வேகமாக எழுந்து சென்று செம்பிலிருந்து சரித்து டம்ளரில் தண்ணீர் எடுத்துக் கொடுத்தான்.

அப்பா, சரிந்து விட்டார்.

சுவாமிநாதனுக்கு இது அதிர்ச்சியைத் தரவில்லை. எதிர்பார்த்தது தான். அப்பாவுக்குச் சேவை செய்வதில் அவனுக்கு அலுப்பு தட்டவில்லை. ஆனால் அப்பாவுக்கு, கஷ்டங்களைத் தாங்கிக் கொள்ளும் சகிப்புத் தன்மை போய்விட்டது. சுவாமிநாதனுக்குப் பாரமாக இருக்கிறோமே என்ற கவலை அவரை அரித்துத் தின்று கொண்டிருந்தது. அவன், மற்றவர்களைப் போல கல்யாணம் செய்து கொண்டிருந்தால், தன்னை இத்துணை பாசத்துடன் கவனித்திருப்பானா என்பது சந்தேகமே.

சுந்தரிக்கும், சியாமளாவிற்கும் தந்தி மூலம் தகவல் அனுப்பினான். அவர்கள் வரவில்லை. இரங்கல் தெரிவித்து தந்தியும் கேபிளும் வந்தன. அவன் எதிர்பார்த்தது



தான். அவர்களுக்கு கணவன், குழந்தைகள்தான் முக்கியம். அதுதான் அவர்களுடைய உலகம். அப்பாவின் மூத்த சகோதரர் வந்திருந்து காரியங்களை மேற்பார்வையிட்டார். இவன், அவர்களுக்குச் சொல்லியனுப்பவில்லை. அவர்களாகவே வந்திருந்தார்கள்.

எல்லாம் முடிந்து விட்டன. வீடு வெறிச்சோடிக் கிடந்தது. பாய் இருந்த இடமும், தலையணை வைத்திருந்த சுவரின் கீழ்ப்பகுதியும் அப்பாவை நினைவூட்டிக் கொண்டிருந்தன.

மேஜை மீதிருந்த புத்தகத்தைப் பார்த்தான்.

அப்பா படித்த மகாபாரதப் புத்தகம். சிவப்புப் பென்சிலால் பல இடங்களில் அடிக் கோடிட்டிருந்தார். மெதுவாகப் பக்கங்களைப் புரட்டினான், சுவாமிநாதன்.

ஒரு பக்கத்தில் அப்பா, கிறுக்கல் கையெழுத்தில் எழுதியிருந்தார்.

'திருதராஷ்டிரனுக்குக் கண் குருடு என்பதால், தன் கண்களையும் கறுப்புத் துணி கட்டிக் குருடாக்கிக் கொண்டு கடைசி வரை வாழ்ந்த காந்தாரிக்கு, மகாபாரதத்தில் சிறப்புக் கிடைக்காமல் போனது ஏன்?'

'நீதிவழி நடந்தவர்களை வெற்றி பெறச் செய்யவும், மற்றவர்களைத் தோல்வியுறச் செய்யவும் கிருஷ்ண பரமாத்மா, ஒரு ராஜதந்திரியாகச் செயல்பட்டிருக்கிறான். கிருஷ்ணன் பெயரும், புகழும் நிலைத்து நின்றுவிட்டதே.'

அப்பாவின் குறிப்புகளை மறுபடியும் படித்தான், சுவாமிநாதன்.

மறுநாள் -

சுவாமிநாதன் கொடுத்திருந்த கீழ்க்காணும் விளம்பரம் முக்கியமான நாளிதழ்களில் வெளியாகியிருந்தது.

'ஐம்பத்தி மூன்று வயது நிரம்பிய, பிக்கல்-பிடுங்கல் இல்லாத ஒரு பிரம்மச்சாரிக்கு, நாற்பது வயது தாண்டிய பெண் தேவை. அமைதியான, நிம்மதியான தாம்பத்ய வாழ்க்கைக்கு, உத்திரவாதம் உண்டு.

மனிதா! மனிதா!

டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

மனிதா, உன்னை வளப்படுத்து - தேன்
மலர்போல் நெஞ்சை மணப்படுத்து!
கனிபோல் பண்பை நிலைப்படுத்து - நல்ல
கவிபோல் வாழ்வைக் கலைப்படுத்து!

பொய்ம்மை எல்லாம் தடைப்படுத்து - மண்ணில்
பொன்போல் அன்பை நடைப்படுத்து!
செய்கை எல்லாம் ஒளிப்படுத்து - நம்
தேசம் வாழக் களிப்படுத்து!

உழைப்பை என்றும் உரப்படுத்து - நல்
உணர்வில் ஊக்கம் வரப்படுத்து!
பிழைக்கும் வழியை நெறிப்படுத்து - வாழ்வில்
பேசும் அறத்தை முறைப்படுத்து!

நாம் மகிழ்வோம்

கருவை வேணு

அருள் பார்வை பட்டதால்
அனல் எண்ணம் மாறியது;

அன்புப் பார்வை பட்டதால்
அமைதி எண்ணம் வந்தது;

வாழ்த்துப் பார்வை பட்டதால்
வணங்கும் எண்ணம் வளர்ந்தது;

அனைத்தும் ஜோதி மயம் என்றதால்
ஆணவம் ஓடி ஒளிந்தது;

வாழும் வகை சொன்னதால்
வாழ நாம் கற்றுக் கொள்வோம்;

கூடி வாழும் கொள்கை சொன்னதால்
கோடி நன்மை நாம் பெறுவோம்!

தீபத் திருநாள் சிந்தனையாயிதை
தினமும் எண்ணி நாம் மகிழ்வோம்!


தேடுகிறேன்

குடந்தை புகழேந்தி

சங்க இலக் கியங்கள்
சதிராட என் நாவில்
தங்கத் தமிழ் மொழியின்
தரத்தை உயர்த் திட்டேன்
வங்கக் கட லோரம்
வாழ்ந்து சிறப் படைந்தேன்!
தங்கம் நிகர் பெண்ணொருத்தி
தவம்செய்து காத லித்தாள்!

விற்பன்ன ராய்த் தமிழில்
வீதி வலம் வந்தேன்
உற்பாதக் கொடுமை யினால்
உழன்றபின் மறைந் தொளிந்தேன்
முற்பிறவி முடித்த போது
முன்வினைப் பய னதனால்
அற்பப் புள்ளாய் நானும்
அவனியிலே பிறந் திட்டேன்!

இறப்பு முடிந்த பின்னே
இவ்வுலகில் மீண்டும் வந்து
இறக்கை கொண்ட புள்ளாய்
எழில்வானில் பறக் கின்றேன்!
மறக்க முடியாக் காதலியை
மனம் ஏங்கித் தேடுகிறேன்!
இறக்கை கொண்ட என்னையவள்
இனந் தெரிந்து கொள்வாளா?



முல்லைச் சிரிப்பழகு

ஐயாறப்பன்

முல்லைச் சிரிப்பழகே - அலைகள்
மோதும் கடலழகே.
நெல்லின் வயலழகே - எட்டத்தில்
நிற்கும் மலை அழகே.

புல்லின் பனிஒளியே - கோயில்
பூசை மணிஒலியே
கொல்லர் புயவலியில் - தோன்றிக்
கூத்திடும் பொன்மகளே!

சொல்லின் பொருள் அழகே - உயர்ந்தே
தோன்றும் கவி அழகே
நல்லவர் எங்குளரோ - அங்குநீ
நன்மை விளைத்திடுவாய்.

செல்வம் குவித்திடுவாய் - அன்புளம்
சேரத் தழுவிடுவாய்
வல்லமை வேண்டுகிறேன் - அன்னையே
வாழ்வை உயர்த்திடுவாய்.

வேலி

இருக்கலங்காட்டியும் ரகுபதி வாத்தியாரு, டீக்கடை சாமிநாதன் மொகத்தில முழிக்கிறது போல வீட்டு வாசல்ல வந்து உக்காந்துட்டான். இப்ப எழுந்திருச்சி வர முடியாதுன்னா சொல்ல முடியும்? இத்தினி வருஷக் காலத்தில ஒரு நாளாச்சும் வீட்டு வாசலுக்கு இது போல ஆளுங்க வந்து உக்காந்து பேசிருந்தா என்ன ஏதோன்னு யோசனை பண்ணிருக்க மாட்டார்.

டீக்கடை சாமிநாதன்னு சொன்னா, என்ன லேசுப்பட்ட ஆளா?'ஜபரதசை' பண்ணிக்கிட்டு இருக்கிறவன். ஊர்ல சின்னத்தனம் பண்ணுறவனுங்களுக்கெல்லாம் வழிகாட்டிக்கிட்டும் அவனுகளுக்கு ஒத்துமை ஒர்மையா நின்னுகிட்டும் பேசிக்கிட்டும் 'பெரிய மனுசத்தனமா' இருக்கிறவன்.

வீட்டு வாசலுக்கு வந்த மனுசனுங்கள காக்க வச்சிருந்துட்டு மெதுவா எழுந்திருச்சு வர்றதுங்கிறது மனுசத்தனம் இல்லங்கிற நம்பிக்கை உள்ளவராச்சே வாத்தியாரு.

"என்ன சாமிநாது? ஏதாச்சும் சேதி இருக்கா?"ன்னு கேட்டுக்கிட்டே வாத்தியாரு வெளியே வரவும்,

"இருக்கே. அதான்..." சொல்லிக் கொண்டே பீடியை மீண்டும் ஒரு 'தம்' இழுத்து, நெருப்பைத் தரையில் வைத்து அமுக்கி, நெறித்து மீதி பீடியை காதில் செருகிக் கொண்ட சாமிநாதன், எழுந்திருப்போமா வேண்டாமாங்கிற தோரணையோட இருந்தான்.

"உக்காரு, உக்காரு..."ன்னு சொல்லிக் கொண்டே வாத்தியாரும் அவன் எதிரக்கக் கிடந்த கயித்துக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டார்.

"பன்ன எடத்த வாங்கி ரீஜ்டர் பண்ணிட்டிங்கன்னு ஊர்ல பேச்சு' அடிபடுதே. அந்த எடத்தப் பத்தி சொல்லிட்டுப் போவலாம்ன்னு தான் வந்தேன்."

அவன் அப்புடிச் சொன்னதும் வாத்தியாருக்கு பகீர்'ன்னு இருந்துச்சி. 'இவன் அடி வச்ச எடம் அத்தநாசம் குட்டிச்சுவரு'ன்னு சொல்லுவாங்களே, மனசுக்குள் நெனச்சுக்கிட்டு இருந்தவர். "போன வாரம் தான் ரிஜிஸ்டர் ஆச்சு. அதான் உன்கிட்டக்கக் கூட சொல்லி வச்சிருந்தேனே. தோதா நேரமும் கூடிடுச்சு, முடிச்சிட்டேன்"

"வாங்கினதுக்கு ஒண்ணும் குந்தகம் வந்திடல சாரு. இருந்தாலும்..."ன்னு இழுத்து அவரை ஒருவிதமா பார்த்தான்.

அவரும் என்னா சாமிநாதுங்கிறது போல அவன் முஞ்சை உன்னிப்பா பார்த்தார்.

ஊரோடு ஒத்து வாழும்படி ஆன்றோர் அறிவுரை கூறிப் போயினர். ஆனால் எந்தக் கட்டுப்பாட்டுக்கும் அடங்காத சிலருடன் ஒத்துவாழ்வதென்பது ஆன்றோரின் அறிவுரைக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.

"நீங்க வாங்கிருக்க மனைகட்டுக்குத் தென்னண்ட வேலி என்னோடது. அத இத்தினி வருஷமா வெங்கிட்டுசாமி புள்ள தான் அடைச்சு வச்சுக்கிட்டு இருந்தாரு. சரி இருக்கப்பட்ட மனுசன் அடைச்சு வச்சுக்கிட்டுமேன்னு தான் இருந்தேன். இப்ப நீங்க வாங்கிட்டீங்கன்னதும் அந்தப் பொலிய சரி பண்ணி வேலி போட்டுடலான்னு முடிவு செஞ்சுட்டு வந்திருக்கேன்..."

"அதுக்கென்ன சாமிநாது? ஒன்னோட வேலிய நீ அடைச்சுக்கப் போற. பெரும் போத்தா வாங்கிப் போட்டு அடைச்சுடு. வேலிகால்ல நாலு மரங்க வளந்தா கண்ணுக்குப் பாந்தமா இருக்கும். நானும் ஒரு கூரையப் போட்டுக்கிட்டு ஒனக்குப் பக்கத்தூட்டுக்காரனா வரப் போறேன். நமக்குள் என்னப்பா? நீ போய் நல்லா செய்..."

"அதுக்கில்ல சாரு. நீங்க வந்து கிட்டக்கிருந்து வேலிய வச்சிடுங்க. அப்பறம் நான் கூடகுறைச்சல் செஞ்சிட்டேன்னு சொல்லிடப்படாதுங்கள்ல..."

"அதுக்கென்ன சாமிநாது. நீ போ. நான் பின்னாலேயே வந்துடுறேன்."

வாத்தியாரு கொஞ்ச நாழிக்கெல்லாம் புறப்பட்டுப் போனார். சொந்த சம்பாத்தியத்தில வாங்கின கொல்லையாச்சே! சந்தோஷம் பிடிபடவில்லை. கேணியோட பத்து தென்னைமரம், காய்க்கிறது போல் ஒரு மாங்கன்னு. அது நெறைய தவிட்டுக் குருவிக. துள்ளித் துள்ளி ஓடி மோந்து கொள்ளும் அணில்க. இந்த இடத்தில் கட்டுச் செட்டா ஒரு கீத்து வூடு கட்டிக்கிட்டு... கற்பனை ரொம்ப அதிகமாத்தான் ஆமிட்டு வாத்தியாருக்கு.

தென்னண்ட பக்கத்து வேலியை நாலஞ்சு பேர் சடசடன்னு வெட்டித் தள்ளினார்கள், முன்ன பின்னப் பார்க்காமல் வெடவு பிரிக்க கயிறு கட்டி முடிச்சதும் பொலிய நவுத்தத், தான் இப்புடி நடிச்சிருக்கான் சாமிநாதன்னு, வாத்தியாருக்குப் புரியாம இல்ல. பழைய வேலிய உள்ளே தள்ளினதும் அவருக்கு 'சுருக்'குன்னது.

"என்ன சாமிநாது? ஒரு தப்புடி என்னோட கொல்லைக்குள்ளத் தள்ளி பொலிக் கோலுற?"

"எது சார் உங்க கொல்லை? புரியாம பேசாதீங்க. இது பள்ளிக்கூடத்துப் பாடம் இல்ல சாரு. இந்த ஊருக்கு வந்து, இப்ப தான் புதுசா இடம் வாங்கிருக்கீங்க. இங்கேயே பரம்பரையா பொறந்து வளந்த எனக்கே சொல்லித்தாறீங்களே. நல்லா இருக்கு சார்! பொலி எங்க வரும்ன்னு எனக்குத் தெரியாததா?"

அது இதுன்னு 'சால்சாப்பு' சொன்னாலும் அவன் நெனப்பை வாத்தியாரு புரிந்து கொள்ளாமல் இல்லை.

பக்கத்துக் கொல்லைக்காரன். இங்க தான் நாமும் வீட்டைக் கட்டிக்கிட்டு வந்து குடிவரப்

சோலை சுந்தரப்பெருமாள்

போறோம். ஒரு தப்புடிக்காவ இந்த மோசக்காரப் பயகிட்டக்க ஒண்ணக் கொடுத்துட்டு ரெண்ட வாங்கிக் கட்டிக்க வேணாம். பாக்கிறவங்க நம்மத்தான் கேவலமாப் பேசுவாங்க. கேவலமாப் போயிடும். போறான் போ. போம்போது தலையில அள்ளிக்கட்டிக்கிட்டாப் போவப் போறான்?

"சாமிநாது! ஒன்னோட மனசுக்கு நல்லதா படுறதச் செஞ்சுட்டுப்

போப்பா..." பளிச்சின்னு சொல் விட்டு கொல்லைய விட்டு வெளியே வந்த வாத்தியாருக்கு மனசே சரியில்லை தான்.

'பால்'ன்னா மோருங்கிற ஊரா வளந்துகிட்டே வருதேங்கிற கவலை ரகுபதி வாத்தியாருக்கு. எந்தச் சின்னக் காரியமானாலும் சனங்க ளோட சனங்களா ஒத்துமை ஓர் மையா நின்னு பழக்கப்பட்டுப் போனவருக்கு, தனக்கு வேண்டிய வங்கள சேத்துக்கிட்டு வேண்டாத வங்கள ஒதுக்கி வச்சிட்டு, 'அகட பகட' பேசற மனுசன் இல்ல. பத்து பேரா 'போனா வந்தா' நாலு இப்படியும் அப்புடியும் தான் இருக் கும். அதுக்கு அனுசரணையாப் போய்த் தான் நடந்துக்கணும்னு விட்டுக் கொடுத்துக்க வேண்டியத விட்டுக் கொடுத்தும், இழுத்துப் புடிக்க வேண்டியத இழுத்துப் பிடிச்சும் நிக்கிற பெரிய மனசுல்ல அவருக்கு? இன்னிக்கு நேத்தா வந்துச்சு?

இந்த ஊருக்கு பள்ளிக்கூடம்னு ஆரம்பிச்சு வைச்சு மொதோ வாத்தி யாரா வந்து, பள்ளிக்கூடம்னு உருப்படியா ஆக்கின மனுசன்ல்ல. வாத்தியாரோட தோளோட தோளா நின்னது வெங்கிட்டுசாமி புள்ள தான். பண்ணைக்கு தட்டுமுட்டு சாமான் போட்டு வச்சிருந்த வீட்டக் காலி பண்ணி பத்து ரூபா வாடகைக்குக் கொடுத்தார்.

கல்யாணம் பண்ணிகிட்டு புது சம்சாரத்தோட 'அரி ஓம்'ன்னு இந்த வீட்டுக்கு வந்து பொறந்தப் பொண்ணு, இன்னிக்கு பெரிசாயி ரெண்டு வருஷமாச்சு, இந்த வீடே சொந்த வூடு போலத் தான்னு இருந்தவருக்கு போன மாசம் வரைக்கும் சொந்தமா வீடு வாங்கி யாவணுங்கிற எண்ணமே வந்ததே இல்ல.

'இந்தா பாருங்க! இன்னுமே நமக்குன்னு சொந்தமா ஒரு குச்சு வேணும். கடன ஒடன வாங்கி ஏற்பாடு பண்ணுங்க.' வாத்தியா ரோட சம்சாரம் சொன்னதில ரொம்ப நாயம் இருக்கத்தான் செய்யுது. இத்தினி வருஷம் வேலபாத்து சம்பாத்தியம் பண்ணிருந்தக்கூட ஒரு குச்சு வக்கக்காம இருந்தா வரப்போற மாப்பிள்ளை நம்மள காரிக்கிட்டுத் தான் துப்புவான். அந்த நெனப்புல தான் நல்ல எடமாவும் கொஞ்சம் சொல்பமான வெலையில் வந்தா சொல்லுங்கன்னு நாலுபேருகிட்டச் சொல்லி வச்சிருந்தார் வாத்தியாரு.

பண்ணக்கார வெங்கிட்டுசாமி புள்ள, வாத்தியாரு வூட்டுக்கே வழியக்க வந்ததும் வாத்தியாருக்கு என்ன செய்றது ஏது செய்யிற துன்னு புடிபடலை. ரொம்ப தர்ம சிந்தனையோட ஊருக்கு நல்லது கெட்டதுன்னா முன்னுக்கு நிக்கிற வரு. காசு பணம்னு பாக்காம ஊருக்காவ பாடுபட்ட குடும்பம். கொஞ்ச நாளா ரொம்பப் பண மொடையிலயும், அண்ணன் தம்பிக் குள் தகராறு வந்து எகனைக்கும் மொகனைக்கும் நிக்கிறாங்க. இருக் கிற கடனை எப்படி தீத்து பாகம் பண்ணிக்கிறதுன்னு அல்லாடிக் கிட்டு இருக்கிறப்ப வாத்தியாரு வூட்டு வாசலுக்கே வந்து நின்னது வாத்தியாருக்கு திகைப்பு வந்து இருக்கக் கூடாது தான்.

"என்னாங்க, நீங்க சொல்லி அனுப்பிருந்தா நான் வந்து பாத்திருப்பேனே."

"அதனால என்ன சார்! நேத்தே வர்ரதுனுன்னு இருந்தேன். ஒரு சேதி இருக்கு அதான்..."

"சொல்லுங்க..."

"வடக்குத் தெருவில மரமட்டைங் களோட அம்பது குழி வீட்டு மனை இருக்கு. அத வித்திடலாம்னு இருக்கோம். நீங்க வாங்கிறது போல இருக்கீங்கன்னு கேள்விப்பட்டேன் அந்த எடத்த நீங்க..."

"நான் எடுத்துக்கிறேன். வெலை யச் சொல்லுங்க."

"நான் என்ன சார் வெல சொல்லப் போறேன்? ஊர்ல என்ன கடைசி வெல போயிருக்கோ அதுக்கு, குழிக்கு பத்து ரூபா கொறைச்சலாவே போட்டுக் கொடுங்க. என்னோட தம்பிபுள் ளைங்க 'கூடகுறைச்சல்' பேசிக்கிட்டு நிக்கிறானுங்க. பாகம் பிரிக்கப் போறோம். இந்த வீடு, தம்பி புள்ளைங்களுக்கு தான் வேணும்னு விடாப்பிடியா நிக்கிறானுங்க. அத னால..." வெங்கிட்டுசாமிபுள்ள ரொம்பவும் சங்கடப்பட்டார்.

"நாளைக்கே வேணும்னாலும் வீட்டக் காலி பண்ணிக் கொடுத் துடுறேன். அதான் எடம் தாரதா சொல்லிட்டீங்க. அதிலயே ஒரு சின்னக் கூரையாப் போட்டுக்கிட்டு... வாத்தியாரு சொல்லி முடிப் பதற்குள்,

"பத்தரத்த கொடுத்து அனுப்பி வைக்கிறேன். வாரக் கடைசிக்குள்ள முடிச்சிக்கிட்டா தேவலாம்..."ன்னு சொல்லி விட்டு பொகக்குன்னு பொறப்பட்டுப் போன வெங்கிட்டு சாமி புள்ளைய பாத்துக்கிட்டே நின்னுட்டார்.

கண்ணுக்கு முன்னாலேயே எப்படியெல்லாம் வாழ்ந்து இப்ப இப்படி சரிஞ்சு போயிட்டத பார்த் துக்கிட்டும், சில மனுசனுங்க எப்படி யெல்லாம் தலைகாலு புரியாம நிக்கிறானுங்களேன்னு மனசுக் குள்ளே நெனச்சுக்கிட்டு நின்னுட் டார் வாத்தியாரு.

வீடு போய் குளிச்சு முழுகி பள்ளிக்கூடம் பொறப்படும் போது, சைக்கிளை, கூட ஒரு மிதி மிதிச்சு, சாமிநாதன் வேலி போடுறத பாத் துட்டுப் போயிடலாங்கிற மனசோடு கொல்லைக்கு வந்தவருக்கு தூக்கி வாரிப் போட்டது. தான் கிட்டக்க இருந்து ஒரு தப்படி உட்டுக் கொடுத்து 'பொலி' கோலி கயித்தக் கட்டிவிட்டுப் போனப்புறம் இன்னும் ஒரு தப்புடி சேத்து வெடவு பிரிச்சு போத்தும் போட்டு அவ்வளவு சுருக்கா வேலி போட்டு இருக் கான். அதைப் பாத்ததும் 'பகீர்'ன்னு தான் இருந்துச்சு.

"என்ன சாமிநாது இப்படி அநியாயமா வேலிய நவுத்தி வச்சிட்ட?"

"சாரு வாய அடக்கிப் பேசுங்க. எங்க பொலி எங்க இருக்குன்னு. பாருங்க."ன்னு ரோட்டுக்கு உள்ள எல்லைக் கல்லைக் காட்டி, "இந்த ஊர்ல அனுபவப்பட்ட மனுசன் வேதங்குடியாரு சொன்னப்புறம் தான் மாத்தி பொலிகோலி வேலி போட்டு இருக்கேன்..."

வாத்தியாருக்கு ஆத்திரம் நெஞ்சை அடைத்தது. வேலியப் பிரிச்சு எறிஞ்சிடணும்னு போல ஒரு வெறிதான். இருந்தாலும், அடக்கிக் கிட்டாரு. அந்த வேகத்தோடேயே கிராமத்தலைவர கூப்பிட்டுக்கிட்டு வந்து வாத்தியாரு அவருகிட்டக்க எல்லாத்தயும் சொல்லி, அவன் செஞ்சிருப்பதக் காட்டுனப்புறம் வாத்தியார தனியா, கூப்பிட்டார் தலைவர்.

"என்ன சார் செய்யப் போறீங்க? அவன் வேலியக் கோலிட்டான். இந்த எடம் எல்லாம்; 'நத்தம்சாரி' அது யாருகிட்டக்க அனுபவத்தில இருக்கோ அது அவங்களுக்குன்னு தான் யாரும் சொல்வாங்க. உங்க வேலியப் பிரிக்கிறதுக்கு முன்னா லேயே நாலு பேரக் கூப்பிட்டு வச்சுகிட்டு செஞ்சிருக்கலாம். அதை யும் விட்டுட்டு நீங்களாவே ஒரு தப்படி வேற உட்டுக் கொடுத் துட்டீங்க. அதையே சாக்கா வச்சுக் கிட்டு இது வரைக்கும் என்னோட

நெலம்ன்னு தான் சொல்லுவான். எதுக்கும் அவன தனியாப் பாத்து பேசிட்டு உங்களுக்குச் சேதி சொல்லுறேன்."ன்னு சொன்னதும் வாத்தியாரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

'சரி பேசி முடிக்கட்டும்'ன்னு பள்ளிக்கூடம் வந்து சேந்தாலும் அவர் மனசுக்குள்ள எரிச்சல் போன பாடு இல்லை.

ஊருக்கு நூறு வீடு இருக்கிறப்ப ஆரம்பிச்சு வச்ச பள்ளிக்கூடம் இது. இப்ப நாலு பங்கு ஜனங்க பெருத்துப் போன பின்னாலயும் பள்ளிக்கூடம் மட்டும் அப்படியே. கணக்கா நாலு வாத்தியாருக. புள்ளைகளுக்குச் சொல்லித்தரதுக்கு அர்ப்பணம் பண்ணிக்கனுன்னு யாரு நெனைக்கிறா? ஏதோ போய், வெட்டிக் கொத்திட்டு சம்பளத்த வாங்கினோம் வந்தோம்ங்கிறது போல பண்ணிட்டாங்க. அத நெனச்சா ரகுபதி வாத்தியாருக்கு பத்திக்கிட்டு தான் வரும். பத்தாததுக்கு அதிலேயும் ரெண்டு வாத்திமாருங்க லீவு தான் இருக்கேன்னு சேந்தாப்போல லீவ் போட்டுட்டு 'காளவாய்'க்கு கல்லு அறுக்கிறவனுக்கு மேம் பார்வை பார்த்துக்கிட்டு நிக்கிற வாத்திமார்கள் பக்கத்திலேயே நின்னுக்கிட்டு, பாக்கிறப்ப இன்னும் புடுங்கிக்கிட்டு தான் வருது. நமக்கென்ன 'போ'ன்னு இருந்திடவா முடியுது ரகுபதி வாத்தியாரால்?



மனசு சரியா இல்லாம இருந்தும், பள்ளிக் கூடம் வுட்டதும் புறப்பட்டுப் போவோம்ன்னு நெனப்பு வர்ல. ரெண்டாம் கிளாஸ் நாதியத்தது போலக் கிடக்கே. அந்தப் புள்ளைங்க என்ன பாவம் செஞ்சதுங்க? அந்தப் புள்ளைகளைக் கூட்டி வச்சு நாலு வரியாச்சும் படிப்புச் சொல்லிக் கொடுத்தா தான் நிம்மதியா தூங்கலாம் போல... நெடல் வாடையா இருக்கிற பரந்த இடத்தில் புள்ளைங்களக் கூட்டியாந்து வச்சுக்கிட்டு உக்காந்துட்டார். மேலக் காத்து மானாவாரியா வீசிடாம வாவு வழியா அடிச்சதும் மனசுக்கு கொஞ்சம் இதமா தான் இருந்துச்சு.

'அறம் செய்ய விரும்பு'

'ஆறுவது சினம்'

இயல்வது கரவேல்'

புள்ளைகளைச் சேந்து சொல்லச் சொல்லி, சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

டீக்கடை சாமிநாதனும், சின்னப் புள்ளையும் சேந்தாப்போல பள்ளிக் கூடத்துக்கு வரவும் வாத்தியாருக்கு தூக்கிவாரிப்போட்டது. சின்னப் புள்ள கிராமத்தலைவருக்கு சோத்துக் கையி. எந்தக் காயை எங்க சல்லுசா நவுத்தனும்னாலும் தலைவருக்கு சின்னப் புள்ளதான் யோசனை பாசனைக்கு வருவார்.

"முந்தா நாள் இப்படித்தான், சாரே! பண்ண வுட்டக் காலி பண்ணிக் கொடுத்திடுறேன்னு சொல்லிட்டீங்கன்னு கேள்விப்பட்டேன். பொழைக்கத் தெரியாம இருக்கீங்களே சாரு! எத்தினி வருஷமா குடியிருக்கீங்க? வேற ஒருத்தனா இருந்திருந்தா வூடே என்னோடதுன்னு சொல்லிடுவான். இப்பயும் ஒண்ணும் மோசம் போயிடல. 'பகடை'* கொடுத்தாதான் வீட்டக் காலி பண்ணுவேன்னு சொல்லுங்க. (பகடை: குடியிருக்கும் வீட்டைக் காலி பண்ணிக்கொடுக்க வீட்டுச் சொந்தக்காரரே வாடகைக்கு இருப்பவருக்குக் கொடுக்கும் தொகை) இல்லாட்டா, நீங்க கிராமத்துக்கு ஒரு ரூபா பணம் கட்டி 'மனு' கொடுங்க. நாங்க இருந்து முடிக்கிறோம். பண்ணக்காரன ஒரு மாதிரிக்கு கொண்டாந்திடலாம்." சின்னப்புள்ள சொன்னது தான் தாமதம்.

"இந்தச்சேதிய சொல்லிக்கிட்டு என்கிட்ட வராதீங்க" ஒத்தவரியில் பதில் சொன்னதும் மூஞ்சி வெளிறிப் போய் வாய்பேசாம எழுந்திரிச்சிப் போன ஆளு. இப்ப திடீர்ன்னு டீக்கடை சாமிநாதனை அழைச்சிட்டு வர்றதப் பாத்ததும் ரகுபதி வாத்தியாருக்கு 'குப்பு'ன்னு வியர்த்துக் கொட்டியது. இருந்தாலும், சமாளிச்சுக்கிட்டு கிட்டக்க வந்தவர்

களை, "வாங்க! வாங்க!ன்னு கூப்பிட்டு, "உள்ள போய் உக்காரலாமா?"ன்னு கேட்டுக் கொண்டே அவரும் எழுந்திருச்சிட்டாரு.

சின்னப்புள்ள, "அதுவும் சரி தான். புள்ளைங்கள அனுப்பிட்டு வாங்க." சொல்லிவிட்டு வாத்தியாரோட ரூமுக்கு போவவும் சாமிநாதனும் அவரோடேயே போனான்.

'இப்ப இப்படி வந்து நிக்கிறானுங்களே என்னவா இருக்கும்? வாத்தியாரு மனசப் போட்டு கொழப்பிக்கிட்டு வந்து அவர் சீட்டில் உக்காந்தார். சாமிநாதன் மட்டும் வெளியே உக்காந்ததில் வாத்தியாருக்கு உள்ள கோவத்தில் கொஞ்சம் தணிந்திருந்தது. செவுத்தில மாட்டிருந்த கடிகாரம் 'ப்பீம் ப்பீம்'ன்னு அஞ்சு தடவ கூவி ஒஞ்சது.

"சாரு! ஊருக்கு நல்லது கெட்டது சொல்லிக்கிட்டு நாலு பேருக்கு நாயம் பேசி தீத்து வைக்கிற உங்க பேருல சாமிநாதன் மனு கொடுத்திருக்கான். உங்க பேருல வந்திருக்கிற மனுவுக்கு எப்படி ஊரு கூட்டி நாயம் பேசுறதுன்னு தான் தலைவரு தலை பிச்சுக்கிட்டு இருக்காரு. அதான் என்ன அனுப்பி வைச்சு சாமிநாதனையும் கூட்டிக்கிட்டுப் போய் நேருக்கு நேரா பேசி முடிச்சிட்டு வாங்கன்னு சொல்லி அனுப்பிருக்காரு."

"பெரியவங்க நீங்க. இந்த ஊருல ஆண்டு அனுபவிச்சு நல்லது கெட்டதப் பாத்துட்டு இருக்கிறீங்க. நீங்கல்லாம் பாத்துச் சொன்னா நான் மாட்டேன்னா சொல்லப் போறேன்? சாமிநாதுதென்னண்டப் போலி தன்னோடதுன்னு சொன்னதும் நானே ஒரு தப்புடி கூடவே உட்டுக் கொடுத்திருக்கேன். இப்ப இன்னும் மேல மேலப் போனா எப்புடிங்க?"

"சாரு! நீங்க வாங்கிருக்கிற எடத்த, சாமிநாதனே வாங்கிறதுக்கு பேசிகிட்டு இருந்திருக்கான். வெலை படியாமத்தான்... அதுக்குள்ள நீங்க கூடுதலாக் கொடுத்து வாங்கிட்டீங் கன்னு அவனுக்கு எற்கனவே உங்க பேர்ல ஏக 'காண்டு' இருந்திருக்கு. இப்ப அதப் பயன்படுத்திக்கப் பாத்திருக்கான். அவனுக்கு அந்த எடத்தின் பேர்ல உள்ள 'நெளிவு சுளிவு' ஒன்னு உடாமத் தெரியும். அதப் பயன்படுத்திக்கிட்டுத் தான் உங்ககிட்டக்க அவனோட 'கோல்மால்' வேலையப் போட்டுக் காட்டிட்டான். இப்ப எல்லாத்தியும் தீர வௌங்க விசாரிச்சு பாத்துட்டு தான் நான் வந்திருக்கேன். சாமி



நாதனோட அப்பன்காரன், வெங்கிட்டுசாமி புள்ளையோட அப்பாரு பண்ணையில் காரியம் பார்த்துக்கிட்டு இருந்தான். அந்தத் தோதுலத்தான் பண்ணைக்கு நெலம் வாங்கிறப்ப அந்த நெலத்தோட சேந்தே இருந்த கொல்லையையும் சேத்து முடிச்சிருக்கான். போனாப் போவுதேன்னு தான் காரியக்காரனுக்கு இப்ப இருக்கிற எடத்த எனாமா சாசனம் பண்ணிக் கொடுத்திருக்காங்க. அதுவும் அந்த மனை 'நத்தம் சாரி' அதுல எப்படிங்க பொலி இதுதான்னு வெட்டு ஒன்னும் துண்டு ரெண்டுமாச் சொல்லமுடியும்?"

எல்லாத்தியும் சின்னப்புள்ளைங்களப் போலத்தான் கேட்டுக் கொண்டு உக்காந்திருந்தார், ரகுபதி வாத்தியாரு.

"சாரு! நான் உங்ககிட்டக்க சொல்ல வேண்டியதச் சொல்லிட்டேன். அப்பறம் உங்க அபிப்பிராயம். சாமிநாதனன்னா கூப்பிடட்டுமா? நீங்க ஏதாச்சும் பேசிப் பாக்கிறீங்களா?"

"நான் இன்னுமே என்னத்தப் பேசப் போறேன்? பெரியவங்க நீங்க சொல்லி முடிச்சிடுங்க"ன்னு சொல்லும் போது 'அநியாயக்காரப் பாவி பசங்களா உங்களுக்காவா இத்தினி வருஷமா ராப்பகலான்னு பாக்காம உழைச்சேன் பாருடா. அதுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்டா'ன்னு கத்த வேண்டும் போலிருந்தது.

இரும்பு அடிக்கிற எடத்தில 'ஈ'க்கு என்ன வேலை இருக்கு? வாத்தியாரு கத்தித்தான் என்ன ஆவப்போவுது? எல்லாத்தியும் சேத்து ஒரேயடியா மென்னு முழுங்கிக்கிட்டாரு.

"சாரு! இன்னுமேயாலும் ஊரு போற போக்கில போனாத்தான் நம்மளும் மனுசத்தனமா வெளியே வரமுடியும். நான் வரட்டுங்களா?..." சின்னப்புள்ள எழுந்திருச்சதும் வாத்தியாரால் வாய் திறக்க முடியவில்லை. எழுந்திருச்சு அவரோடேயே வெளியே வந்து வழி அனுப்பி வைச்சார். அவர் மனசெல்லாம் முள்ளாய்...

இது நாள் வரைக்கும் 'நத்தம் சாரி'ன்னா என்னன்னு தெரிஞ்சுக்காமத் தான் இத்தினி வருஷமா இந்த ஊர்ல பழம் தின்னு கொட்டை போட்டிருக்கோம். அத நெனைக்கும் போது வாத்தியாருக்கு, தான் படிச்ச படிப்பு மேல கோவம் கோவமாய் வந்தது.

வெங்கிட்டுசாமிபுள்ளையப் போய் பாத்தா புதுசா ஏதாச்சும் வழி மிருந்தா சொல்லுவாருங்கிற நப்பாசையில பொறப்பட்டுப் போனார் வாத்தியாரு. 'இத்தினி வருஷமா காக்கா குருவி போல சிறுவ சிறுவ சேத்து வச்சு இப்ப மொத்தமா எடுத்துக் கொடுத்து வாங்கி இப்படி அநியாயமா பங்கு போட்டுக் கிறானுங்களேங்கிற ஆயாசம் அவரை அடித்து வீழ்த்திக் கொண்டிருந்தது.

என்னிக்கும் 'கப்சிப்'ன்னு இருக்கும் தெருவில, இன்னிக்கு அந்தத் தெரு சனங்களே கூடி நின்னு வெங்கிட்டுசாமி புள்ள வீட்டையே வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னதப் பாத்ததும் வாத்தியாருக்கு ஒண்ணுமே வௌங்கவே இல்லை. கூட்டத்தோடு கூட்டமா வெங்கிட்டுசாமிபுள்ளய நாலஞ்சு பேரா சேந்து ரத்தம் ஒழுவ ஒழுவத் தூக்கி வண்டியில் ஏத்தியதைப் பாத்ததும் 'பகீர்'ன்னு ஆயிட்டு. அந்தாண்டப் பொறமா பாத்தா பத்து பதினைஞ்சு பேரு கூடி வெங்கிட்டுசாமி புள்ளயோட தம்பி புள்ளைங்க மூணு பேரையும் புடிச்சு, கையில வச்சிருந்த கட்டைகளைப் புடுங்கி எறிஞ்சிட்டு அவர்களை அசமடக்க முயற்சி செய்துகிட்டு இருந்தாங்க.

இது நாள் வரைக்கும் ரெண்டாம் பேரு தெரியாம இருந்த அவரோட சம்சாரம், "ஏலே! தாம் புள்ளைங்கள ஒரு நாளாச்சும் தூக்கிப் பார்த்திருப் பாருங்களாடா? உங்களைத் தூக்கி தோள்ளப் போட்டுக்கிட்டு கொஞ்சிக்கிட்டுக் கெடந்த மனுசனையாடா கை நீட்டி அடிச்சிங்க?..." என்று கேட்டு அழுவதைக் கேட்டதும் ரகுபதி வாத்தியாரின் கண்கள் அவரை அறியாமலேயே கலங்கின, அதுக்கு மேல் அவரால் எடுத்த அடி. வைக்க முடியாமல்...

வெள்ளிக் கிலு கிலுப்பை

சாரதாவிற்கு உறக்கத்திலும் விழிப்பிலும் அதுவே எண்ணமாக இருந்தது. எப்போது மகள் திவ்யாவைப் போய்ப் பார்ப்போம், பேரனை எடுத்துக் கைகளில் ஏந்தி உச்சி முகர்ந்து நெற்றியில் மூச்சுக் காற்று இழைய இழைய இதழ் பதித்து... இவள் கணவனின் ஆசியையும் சேர்த்து அந்தப் பூஞ்சிறகை வாழ்த்துவோம் என்று ஏங்கினாள்.

ஆனால் இதற்கெல்லாம் பெரும் பணம் வேண்டியிருந்தது. திவ்யா 'உண்டாய் இருக்கிற' செய்தி அறிந்ததும், வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி என்பார்களே அது போன்று பணம் சிறுகச் சிறுகச் சேர்த்து...

புறநகர்ப் பகுதியில் சின்னக் குடியிருப்பு அது. முழுவதும் வாடகைக்கு விட்டபோதும் மாதம் எழுநூற்றி ஐம்பதுதான் வந்தது. ஒரு சின்ன அறையில் முடங்கிக்கொண்டாள் சாரதா. இவள் சாப்பாடு, உடுப்பு, வீட்டு வரி, பம்ப்செட் ரிப்பேர், தோட்டப் பராமரிப்பு என செலவு கைக்குள் அடங்காமல் இவளை எப்போதும் அலைக்கழித்து வருகின்றன.

திவ்யா இவளின் கடைசி செல்ல மகள். இரண்டு மகன்கள் பிறந்து சின்னவன் ஐந்தாம் வகுப்பு முடிக்கும் தருவாயில் பிறந்தவள்.

ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் இவள் கணவன் தியாகு சேல்ஸ் மேனாய்ச் சேர்ந்து படிப்படியாய் உயர்ந்து மானேஜரானார். அறுபது வயதில் நிர்வாகம் வீட்டிற்கு அனுப்பி விட்டது. அவராலும் வேலை பார்க்க இயலவில்லை. இருபது வயது திவ்யா திருமணத்திற்கு நின்றாள்.

சின்னவனும் பெரியவனும் என்ஜினீரிங் முடித்து நல்ல வேலைகளிலும் சேர்ந்து விட்டிருந்தனர். அவர்களுக்கு வேலை தேடிப் பெற நிறையத் தொகைகளைச் செலவு செய்தார் தியாகு. அவர்கள் வேலைக்குப் போன மறுவருடமே பெரிய இடங்களில் பெண்களைத் தேடித் திருமணம் செய்துவைத்து விட்டார். இதோடு உங்கள் கடமை சரி என்பது போல பெரியவன் கல்கத்தாவிலும் சின்னவன் புனேயிலும் செட்டிலாகி விட்டனர்.

அப்பாவின் ஓய்வு, தங்கையின் திருமணம் அதைத் தொடர்ந்து அவள் செலவுகள் என அவர்கள் எதையும் கண்டு கொள்ளத் தயாராய் இல்லை. அப்பா சத்தமில்லாமல் தூக்கத்திலேயே தம் பயணம் முடித்துக் கொண்டபோது கூட, அவர்கள் வந்தார்கள்: போனார்கள். ஏதோ தூரத்துச் சொந்தம் போல நடந்துகொண்டார்களே தவிர அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. எப்போதும் அப்பாவின் மடியிலும் தோளிலும் இருந்த பிள்ளைகளா இவர்கள் என உள்ளுக்குள் மாய்ந்து போனாள் சாரதா. கணவன் போனது ஓர் அடி என்றால், இது இன்னும் வேதனை கொடுத்தது. முதல் சிரார்த்தம் கூட பெரியவன் கல்கத்தாவில் செய்து கொண்டான். இவள்தான் ஏதோ தன் வரையில் தன் ஆத்ம திருப்திக்குச் செய்தாள்.

இவள் கணவன், பெண்ணின் திருமணம், அவள் பிள்ளைப் பேறு என தனித்தனியாக பணம் சேர்த்து வைத்திருந்தார். மகளின் திருமணத்தை, சாரதாதான் முன்னே நின்று நடத்தினாள்.

தலைதீபாவளி, தலைப் பொங்கல், ஆடிச் சீர் என்று செய்தாள். அதுவே மூச்சு முட்டிற்று. திவ்யாவின் கணவன் பாங்கில் பெரிய உத்தியோகத்தில் இருந்தான், ஒரே மகன். நல்லவன். திவ்யா என்றால் உயிராய் இருந்தான். இப்படிப்பட்ட மாப்பிள்ளை அமைந்ததில் சாரதாவிற்குப் பரம திருப்தி.

திருமண மண்டபத்திலேயே மருமகள்கள் தங்கள் சுயரூபம் காட்டினார்கள். அகலக்கரை ஜரிகை போடாத பட்டுச் சேலைகள் வாங்கிக் கொடுத்ததாய் முகம் தூக்கினார்கள்: ஒதுக்கினார்கள்; ஒதுங்கினார்கள். அது தங்கள் நாத்தியின் திருமணம், தாங்கள் தான் முன்னே நின்று திருமணம் நடத்த வேண்டும் என்பதை மறந்தார்கள். பிள்ளைகளும் தலையாட்டி பொம்மைகளாய் நடந்துகொண்டபோது சாரதாவிற்கு வெறுத்துப் போயிற்று.

"ஆமாம்மா. தண்ணியா இவ்வளவு செலவு செய்யறியே, மருமகளுங்களுக்கு அவங்க எதிர்பார்க்கிற மாதிரி எடுத்தா என்ன? புகுந்த வீட்ல விசேஷம்னா இந்த சலுகை கூட இல்லேன்னா எப்படி?"

"என்னாலே என்ன முடியும் பெரியவனே! உங்கப்பா வச்சுட்டுப் போனதுக்குள் திவ்யாவை நல்ல படியா அனுப்பி வைக்கணுமேன்னு எனக்கிருக்கு. நீங்க இரண்டு பேரும் முன்னே நின்னு செய்யணும். ஆனா ஒதுங்கிப் போயிட்டீங்க. உங்களை உதவின்னு நான் கேட்டேனா?"

"இதை மட்டும் சொல்லாதேம்மா. உனக்காக நானோ அண்ணனோ மாசாமாசம் பணம் எதுவும் அனுப்பலை. ஆனா வீட்டு வாடகை வருதே. நீதானே வாங்கறே? அதுல பைசா கேட்டோமா நாங்க?"

"ஆமாம்மா! தம்பி சொல்றது சரிதானே? உன் ஒருத்திக்கு மாசம் ஆயிரம் ரூபாயா? அதை நினைச்சுப் பாரு."

அவர்கள் மணம் புரிந்தபின் அவர்களிடம் உதவி என்று வாய் திறக்க மனம் வரவில்லை சாரதாவிற்கு. கேட்டாலும் பணம் பெயராது. வீணான பேச்சு எழும். அதை எதற்கு விலை கொடுத்து வாங்க வேண்டும்?

திவ்யாவின் பிள்ளைப் பேறு என்று ஆயிரம் ரூபாய் பாங்கில் நிரந்தர வைப்பில் போட்டிருந்தார் அவள் கணவன். அது பல வருடங்களில் ஏதோ கொஞ்சம் தொகையாய் வளர்ந்திருந்தது. மகளை அழைத்து வரப் போய் இருந்தாள் சாரதா. திவ்யாவின் மாமியார் ஒரு மாதிரி என்று நன்றாகவே தெரியும்.

ஹம்ஸா தனகோபால்



ஆனால் அப்படிச் சொல்லுவாள் என எதிர்பார்க்கவே இல்லை.

எதிலும் கறார், கண்டிப்பு. அந்தம்மா என்ன சொல்கிறாளோ அதுதான் அந்த வீட்டின் எழுதப்படாத சட்டம். அவரின் பேச்சுக்கு மறு பேச்சு பேசாதவர் மாப்பிள்ளை. அவன் அன்பு, கருணையெல்லாம் நாலு கவருக்குள் அடக்கம் என்பதை, திவ்யா பல முறை சொல்லியிருக்கிறாள்.

"இங்கே பாருங்க சாரதா! நீங்க தனி பிரசவம் சமயத்தில் ஒண்டியா என்ன செய்வீங்க? உங்க பிள்ளைகளும் சரியில்லை. அதெல்லாம் சரிப்படாது. திவ்யா இங்கேயே இருக்கட்டும். நாங்க பார்த்துக்கறோம். செலவை நீங்க ஏத்துக்கணும்."

சாரதா வாய்ப்பேச்சு இழந்து நிற்க, "நீங்க குழந்தையைப் பார்க்க வரப்ப எங்க வழக்கப்படி சீர் எடுத்து வாங்க. சீர் எடுத்துட்டுத் தான் நீங்க குழந்தையைப் பார்க்க வரணும். வெறுங் கையை வீசிட்டு அல்லது எதையாவது வாங்கிவராம வந்தா அப்புறம் என்னைப் பேசிப் பயன் இல்லை. இப்பவே சொல்லிட றேன். எதிலேயும் நாம கறாரா இருக்கணும் இல்லையா?" என்றாள் சம்பந்தி அம்மாள்.

கணவனின் சேமிப்பு, தன் சேமிப்பு என சேர்த்து ஐயாயிரத்திற்குக் காசோலை அனுப்பி வைத்தாள், மகளின் பிரசவத்தின்போது தாய் உடன் இருப்பது உலக நியதி. ஆனால் இப்படி ஒரு சட்டம் சம்பந்தி போடுவாள் என எதிர்பார்க்கவில்லை சாரதா. திவ்யா தன் கலக்கத்தை உள்ளுக்குள் புதைத்து பரிதாபமாய் தாயைப் பார்த்தாள். அது மட்டுமே அவளால் முடிந்தது.

தங்கச் சங்கிலி இரண்டு சவரன், மோதிரம் இரண்டு, வெள்ளி அரைஞாண், வெள்ளித் தட்டு ஐநூறு கிராமில், வெள்ளி ஸ்பூன், வெள்ளிக் கிலுகிலுப்பை இருநூற்றி ஐம்பது கிராமில் ... இப்படி ஒரு லிஸ்ட் எழுதியே கையில் கொடுத்து விட்டாள் சம்பந்தி அம்மாள்.

இப்போதும் கூட தங்கச் சங்கிலி பற்றிக் கவலை இல்லை. கழுத்தில் கிடக்கும் இரண்டு சவரன் சங்கிலியை அழித்து மோதிரம் சங்கிலி எனச் செய்து விடலாம். வெள்ளி சாமான்களுக்கு எங்கே போவது?

பேரன் பிறந்து பத்து நாளாகியும் சாரதாவால் புறப்படமுடியவில்லை. மனம் முழுதும் மகள் அருகே, குழந்தையின் காலடியில் என அலைந்தபோதும்...

இந்த வெள்ளிக்கிலுகிலுப்பை, வெள்ளித்தட்டு ஸ்பூன் அவளை மிரட்டிற்று. வெள்ளி அரைஞாண் அவசியம். ஆனால் இதெல்லாம்... உறக்கம் வராமல் சுவரில் சாய்ந்து இருளில் தேடுவாள். உறக்கம் வராத போது பெரியவனுக்கும் சின்னவனுக்கும் கடிதங்கள் எழுதிப் போட்டாள்.

பெரியவன் அடுத்த வாரமே பதில் எழுதிவிட்டான். அவனால் இப்போதைக்குத் திவ்யாவின் குழந்தையைப் பார்க்க வரமுடியாதாம். அவன் மனைவிக்குக் கருப்பையில் கட்டியாம். அதற்காக மருத்துவம் பார்க்கவே ஏராளமாய்ச் செலவு ஆகிறதாம். கடிதம் எழுதி அனுப்பி விட்டான்.

சின்னவனோ புதிதாய் ஃப்ளாட் வாங்கியிருப்பதாயும் சம்பளத்தின் பெரும்பகுதி பிடித்தம் எனப் போய் விடுவதால் வீட்டை நிர்வகிப்பதே பெரும்பாடாக இருப்பதாயும் அம்மாவிடம் உதவிக்கரம் நீட்டா திருப்பதே பெரிய விஷயம் எனவும் எழுதிவிட்டான்.

சாரதா அங்கும் இங்கும் கடனுக்கு அலைந்தாள். அவ்வப்போது குழந்தைகள், பெண்கள் உடைகள் எனத் தைத்துக் கொடுப்

சம்பந்தி அம்மாளின் கறாரான போக்குக்குப் பயந்து, தன் கணவரின் நினைவாகக் காப்பாற்றி வந்த தாலியையே உருக்கி பிறந்துள்ள பேரனுக்குச் சீர்வரிசையாக வெள்ளிக் கிலுகிலுப்பை வாங்கிக் கொண்டு ஆவலோடு போனவள், கண்ட காட்சி?



பாள். அதுவும் வயது கூடி வருவதால் முடிவதில்லை. கையில் நடுக்கம். தைக்க மிஷினில் அமர முடிவதில்லை. கால்கள் வலித்தன.

அந்த வருமானம் சேமிப்பு எல்லாம் சேர்த்தால் கூட வெள்ளித் தட்டு, அரைஞாணுக்கே சரியாகி விடும். வெள்ளிக் கிலுகிலுப்பை இருநூற்றி ஐம்பது கிராமில் குழந்தையால் தூக்க இயலுமா? ஆனால் இப்படி கேட்க முடியுமா என்ன. பாவம் திவ்யா! இந்தத் தாயைப் பற்றி என்ன நினைப்பாள்! வெளியே சொல்ல முடியாமல் உள்ளுக்குள் மருகுவாள்.

இன்றோடு பதினோரு நாள்களாகி விட்டன. அன்றிரவு பக்கத்து வீட்டுத் தொலைபேசியில் மாமியார்தான் அழைத்து திவ்யாவிற்கு மகன் பிறந்திருப்பதாய் சொன்னாள். அப்படியே சூசகமாய் வெள்ளிச் சாமான்கள், தங்கச்சங்கிலி விவகாரம் சொல்லவே செய்தாள். நீ வருகிறாயோ இல்லையோ ஆனால் சீர்வரிசைகள் மட்டும் அவசியம் வரவேண்டும் என்கிற அதிகாரம் அதில் நன்கு தொனிக்கவே செய்தது.

நாள்கள் நகர நகர, உண்ணவோ உறங்கவோ முடியாமல் வேதனைப் பட்டாள் சாரதா. மூச்சு விடுதல் கூட சிரமமாயிற்று.

அவளை விட்டுப் பிரிந்த கணவனின் நினைவு உள்ளத்தை உறுத்தும்போதெல்லாம் அவருக்கும் அவளுக்கும் ஏற்பட்ட முதல் பந்தத்தின் அடையாளமான தாலியை உள்ளே பீரோவிலிருந்து எடுப்பாள். வெல்வெட் பெட்டியில் பொதிந்து பெரும் வைரமாய்ப் பாதுகாத்து வந்தாள். அன்றும் அப்படித்தான் மனம் தவித்து உருகுகையில், முடிவெடுக்க முடியாமல் சிதறுண்டு நிற்கையில் அந்தத் தாலியை எடுத்து கையில் பார்த்தாள் சாரதா. கணவனையே நேரில் பார்ப்பது போல சமாதானம் அடைந்தாள். இந்த திவ்யா பெண்ணாய்ப் பிறந்தபோது எத்தனை சந்தோஷப்பட்டார்!

பொறி தட்டினாற் போல அந்த எண்ணம் தோன்றிற்று சாரதாவிற்கு. வேறு வழியில்லை. இவளுக்குப்பிறகு யாருக்காவது அது போகும். அதை அவர்கள் மாற்றத்தான் போகிறார்கள். அதற்கு இப்போதே...

அந்த எண்ணம் தோன்றினதும் மனம் லேசானது. அதே நேரம் கணவனின் நினைவிற்கு குந்தகம் வருமோ என்கிற எண்ணம். அது பிரமை எனத்தள்ளினாள் சாரதா.

வெள்ளிக் கிலுகிலுப்பை, வெள்ளித் தட்டு வகையறாக்களுக்கு இந்தத் தாலி சரிக்கட்டும். வேண்டும் என்றால் இவளால் கொஞ்சம் போட இயலும். கோயம்புத்தூர் போக வர, பழம் 'இனிப்பு' புது சேலை என எத்தனை செலவுகள்...!

மறுநாளே இவள் கோவையில் போய் இறங்கிவிட்டாள். ஆர். எஸ். புறத்தில் சின்ன பங்களா. இவள் படியேறினபோது பிற்பகல். எங்கும் அமைதி. ஓடிப்பிடித்து விளையாட.. வீட்டில் மாப்பிள்ளை இல்லை.

மகள் கூடத்தில் குழந்தையுடன் அமர்ந்திருந்தாள். ஊஞ்சலில் சம்பந்தி அம்மாள் படுத்திருந்தாள். இவ்ளைப் பார்த்ததும் திவ்யா எழுந்து வந்து அணைத்துக் கொண்டாள்.

"வா சாரதா, நான் எஸ்டிடில சொல்லி எத்தனை நாளாச்சு? இப்பதான் பேரனைப் பார்க்க மனசு வந்ததா?" சம்பந்தி அம்மாள் குத்தலாய் வரவேற்பு வாசித்தாள்.

"மனசெல்லாம் இங்கேதான் அண்ணி! உடம்பு முடியாமப் போச்சு. உடனே கிளம்ப முடியல. பேரன் என்ன சொல்றான்?"

குழந்தையை எடுத்து தாயின் மடியில் வைத்து பூரித்தாள் திவ்யா. பெரிய தாம்பாளம் எடுத்து வரச் சொல்லி அதில் சீர்வரிசைகளை யெல்லாம் எடுத்து வைத்தாள் சாரதா. தங்கச் சங்கிலியைக் குழந்தையின் கழுத்தில் அணிவித்து மோதிரம் போட்டாள், அந்தப் பிஞ்சு விரல்களில். உச்சி முகர்ந்து அணைத்தாள். பட்ட கஷ்டமெல்லாம் கரைந்துவிட்டது போலத் தெரிந்தது.

இதற்குள் சீர்வரிசையை ஒரு பார்வையில் அளந்து திருப்தி பட்டுக்கொண்டாள் சம்பந்தி அம்மாள். கால் கிலோ கிலுகிலுப்பையைத் தொட்டுப் பார்க்கக் கூடச் சிரமப்பட்டது குழந்தை. உச்சி முகர்ந்து முத்தமிடுகையில் சாரதாவிற்குக் கண்கள் கலங்கிவிட்டன. அவள் கணவனின் நினைவை உருக்கித்தான் இதையெல்லாம் வாங்கி... அந்த நினைவை மறக்கப்பார்த்தாள்.

"அண்ணி, பேரன் அசல் மாப்பிள்ளை போலவே இருக்கான். இந்தக் கண்ணும் மூக்கும் அசல் அவரேதான்."

"அப்படித்தான் எல்லோரும் சொல்றாங்க."

சம்பந்தி கிலுகிலுப்பை எடுத்து ஆட்டினாள். வெள்ளி மணிகளின் சுநாதம் வீடு எங்கும் நிறைய... திவ்யா பூரித்து சிரிக்க... சாரதாவின் மடியிலிருந்து குழந்தை அவள் கழுத்தில் கிடந்த பவழ மாலையைப் பிடித்து இழுத்தது. அதன் கையில் கிலுகிலுப்பை வைத்து ஆட்ட முற்பட்டாள் திவ்யா. கிலுகிலுப்பை ஒலி எழுப்ப...

குழந்தையின் கவனம் வேறு எங்கோ... திவ்யா வீறிட்டாள்.

"அம்மா! குழந்தைக்குச் சத்தம் கேட்கல போலயிருக்கு. அப்ப... அப்ப..."

"உண்மையாவா சொல்றே திவ்யா...? "சம்பந்தி அம்மாள் குழந்தை முகத்தில் அருகே கிலுகிலுப்பை ஆட்ட அது வேறெங்கோ பார்த்தது.

புரிந்தது. சாரதாவிற்கு இது பெரும் இடியாக இருந்தபோதும் இந்தக் கிலுகிலுப்பை வாங்கி வர அவள் தன் மூச்சுக் காற்றையே - தாலியையே அல்லவா விலை பேசினாள்?

குழந்தையின் செவிட்டுத் தனத்தைவிட இது பெரிதும் அவளைப் பாதிக்க, குரல் எடுத்து அழலானாள் சாரதா.

கிலியுடன் தான் கொடுத்த லிஸ்ட்படி பொருள்கள் இருப்பதை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் சம்பந்தி அம்மாள். ○



"கல்யாணம் முடிஞ்சு போன பிள்ளைவீட்டு சம்பந்தி எதுக்கு ஓடிவர்றார்?"

"பந்தலில் கட்டியிருந்த வாழை மரத்தண்டை விட்டுட்டாராம். தண்டைத் துண்டுபோட்டுத் தரச் சொல்றார்..."



"கரண்ட் வரும் வரை மத்தாப்பூ கொளுத்திக் காட்டிட்டிருங்க அத்தான்..."

"மாமனார் அழைப்பு அனுப்பியும் போக சலிச்சுக்கிறியே ஏன்?"

"கடலைமாவு சலிக்கணும். அரிசிமாவு சலிக்கணும். மைதாமாவு சலிக்கணும் உடனே வாங்கன்னு எழுதி இருக்காரே.."





"திருட்டுப்போன என் சைக்கிளை நேத்து கண்டுபிடிச்சுத் தந்தீங்களே! இன்று அதுலே, பெல், பெடல், ஹாண்டில் பார், சீட், காரியர், செயின், டைனமோ, முன் சக்கரத்தைக் காணோம் சார்!"

ஹி..ஹி..ஹி...!

சுதர்ஸன்...

எனக்குள் ஓவியன்

நடிகர் சிவகுமார்

கோவை மாவட்டம் சூலூரில் உயர்நிலைப் பள்ளி படிப்பு முடிந்ததும், கோவை பி.எஸ்.ஜி கல்லூரியில் எஞ்சினீயரிங் படிக்க பி.யூ.ஸிக்கு நானும் விண்ணப்பித்தேன். ஓவியம் தீட்டும் என்னுடைய ஆற்றலைக் கண்ட நண்பர்கள் சென்னை ஓவியக் கல்லூரியில் சேர்ந்து படிக்கலாமே என்று யோசனை சொன்னார்கள்.

மெரினா கடற்கன்ரயிலுள்ள உழைப்பாளர் சிலையையும், காந்திஜி சிலையையும் வடித்த வங்காள சிற்பி, ஓவியர் தேவி பிரசாத் ராய் சௌத்ரி அப்போது முதல்வ்ராயிருந்தார்.

கல்லூரியில் சேருமுன்பு நடிகர் திலகம் சிவாஜி சிபாரிசில் மோகன் ஆர்ட்ஸ் என்ற திரைப்பட விளம்பரக் கம்பெனியில் சில மாதங்கள் பயிற்சி எடுத்தேன்.

தியேட்டர் வாசலில் 'வணங்காமுடி' படத்திற்கு 60 அடி உயர கட்-அவுட்டில் சிவாஜியை வரைந்து வைத்தார்கள். அதைத் தீட்டியவர் பெரும் ஓவியர்; நிறையப் பணம் கொடுத்திருப்பார்கள் அவருக்கு என்று நினைத்தேன். விசாரித்தபோது சதுர அடிக்கு 16 பைசா கட்டணம் என்றார்கள்.

கை வண்டிக்காரனை விடக் குறைவாகக் கூலி பெறும் அந்த ஓவியர்களை நினைத்து உருகினேன். பெரிய பெரிய சதுரங்களாக, செவ்வகங்களாக 10' X 15' - 10' X 20' அடியில் சட்டமடித்து அதன்மீது காடா துணி அடித்து - வஜ்ஜிரத்தை சாக் பவுடருடன் கலந்து குழம்பாக்கி அந்தத் துணி மீது பூசிக் காய வைப்பார்கள்.

புரொஜக்டர் போன்ற கருவி மூலம், கண்ணாடியில் பதிவு செய்யப்பட்ட, நடிக நடிகையரின் புகைப்பட நெகட்டிவைப் பயன்படுத்தி, பெரிய ஸ்கெச் போட்டுக் கொள்வார்கள். பின்னர் ஓவியரின் கற்பனைக்கேற்ப அசல் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டே பேனரில் நடிகரின் உருவத்தை வண்ணத்தில் பெரிதாக வரைவார்கள்.

கோடைகாலங்களில் தகரக் கொட்டகையின் அடியில் உஷ்ணத்தில் உருகி உடம்பெல்லாம் வியர்வை ஆறாக ஓட, கொதிக்கும் டீயைக் குடித்தவாறு தோள் பட்டை வலி எடுக்கும் அளவுக்கு பெரிய பிரஷ்களை வைத்து ஓவியம் தீட்டுவார்கள்.

வெளியூர்களுக்கு பேனர்கள் சுருட்டி ரயில் மூலமாக, லாரி மூலமாக அனுப்புவார்கள். உள்ளூருக்கு படம் வெளியாகும் நாளன்று விடிவதற்குள் பேனர்களை டயர் வண்டியில் வைத்து தள்ளிச் சென்று தியேட்டரில் அலங்காரம் செய்வார்கள்.

அன்று வேலை முடிந்த கையோடு ஆயில் பாத், கோழி பிரியாணி, ஆனந்தம், கொண்டாட்டம் எல்லாம் இருக்கும்.

தியேட்டர் முன் எப்படி விளம்பரம் செய்வோம் என்று மாதிரிக்குக் காட்ட, நான் நடிக, நடிகையர் உருவங்களை வெவ்வேறு சைஸில் பென்சில் ஸ்கெச் செய்து அனுமதிக்காக வெளியூர்களுக்கு அனுப்புவேன்.


ஓவியர் ஆர்.நடராஜன், சுந்தரமூர்த்தி, பிரும்மம், பதி, வஜ்ரவேலு, வேலாயுதம் போன்றோர் எனக்கு உற்சாகமூட்டியவர்கள். அமரர் ஓவியர் கே.மாதவன் இவர்களுக்கெல்லாம் மானசீக குரு.


ஓவியக் கல்லூரியில் ஆறு ஆண்டு கால வாழ்க்கை அற்புதமாக இருந்தது. எளிய, இனிய, படபடப்பற்ற இயற்கைச் சூழலில் ஓவியக் கலையைக் கற்றோம்.

'ஸ்பாட் பெயிண்டிங்' என்று சொல்லும் முறையில் அந்தந்த இடங்களுக்கு நேரில் சென்று மணிக்கணக்கில் அமர்ந்து ஓவியம் தீட்டுவதை எனக்குச் சொல்லிக் கொடுத்தவர் என் சீனியர் மாணவர் அல்போன்ஸ். இன்று கல்லூரியின் முதல்வராக இருப்பவர்.

அகில இந்திய அளவில் புகழ்பெற்ற கே.சி.எஸ். பணிக்கர், ஏ.பி. சந்தானராஜ், அந்தோணிதாஸ், கிருஷ்ணாராவ், ராம்கோபால், முருகேசன், முனுசாமி போன்ற ஓவியர்கள் எனக்கு ஆசான்கள்.

1959லேயே முதலாண்டு படிக்கும்போதே செஞ்சி சென்று தேசிங்கு ராஜன் கோட்டையை ஓவியமாகத் தீட்டினேன். அடுத்து காஞ்சி, பாண்டிச்சேரி, திருச்சி, தஞ்சை, மதுரை, திருப்பதி, திருத்தணி, குற்றாலம், கன்னியாகுமரி, திருவண்ணாமலை, ஸ்ரீரங்கம், பேரூர், சுசீந்திரம் எனப் பல ஊர்களின் கோயில்களையும், சிற்பங்களையும் 'ஸ்பாட் பெயிண்ட்டிங்' செய்தேன்.





டியூப்ளே தெருவில் நிறுவப்பட்ட டியூப்ளே சிலை, புதுச்சேரி கடற்கரையை அடுத்த சாலையில் அன்று இருந்தது. இன்று டியூப்ளே சிலையை அங்கிருந்து அகற்றி, கடற்கரைச் சாலையில் தென்கோடியில் உள்ள பூங்காவில் வைத்துள்ளனர்.

ஓவியக் கல்லூரியில் எனக்கு ஓராண்டு சீனியர் மாணவராகப் பயின்றவர் ஆர்.டி.தயாளன், 'ரியலிஸம்' பாணி ஓவியத்தில் மிகுந்த ஈடுபாடுள்ள இவர் பெற்றோருடன் புதுச்சேரியில் வசித்து வந்தார். பிறந்த ஊர் விருதுநகர்.

அக்டோபர் மாதம் வரும் தசரா விடுமுறையில் புதுச்சேரி சென்று தயாளன் வீட்டில் தங்கினேன், ஒரு நாள் முழுக்க ஊரைச் சுற்றிப் பார்த்து ஓவியம் தீட்ட ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்தேன்.

பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரியில், ஒவ்வொரு தெருவும் நூல் பிடித்து அளந்தாற்போல நேராக- எந்தவித வளைவோ-கோணலோ இல்லாமல் அமைக்கப்பட்டிருந்தது. கிழக்கு நோக்கிச் செல்லும் பாதைகள் இரயில் நிலையம் உள்ள பாதையில் முடியும். இப்படி ,கண்ணை மூடிக் கொண்டு நேராய் நடக்கும்படி அற்புதமாய் இருந்தன.

அரவிந்தர் ஆஸ்ரமம் அமைதியே உருவான ஓர் ஆலயம். ஜன சந்தடிமிக்க புதுச்சேரியில் ஈ, காக்கை கூட குரல் எழுப்பாத, அரவிந்தர்- அன்னை ஆஸ்ரமத்திலுள் அமைதி வேண்டி வெளிநாட்டினர் மண்டியிட்டு, சப்பணமிட்டு அமர்ந்து கண்களை மூடி தியானம் செய்யும் நேர்த்தி, அன்னை குடியிருந்த அவ்விடத்தின் மீது மரியாதையையும், பக்தியையும் ஏற்படுத்திவது.

கல்கத்தாவிலிருந்து வந்த அரவிந்தரும், பிரான்ஸ் நாட்டிலிருந்து வந்த அன்னையும் கடைசி நாள்களில் வாழ்ந்து இறைவனோடு கலந்த ஆஸ்ரமம் அது. ஒரே இடத்தில் இன்று இருவரின் பூத உடல்களும் அடக்கம் செய்யப்பட்டு, வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட சமாதி மக்களின் மனத்துயரை ஏற்றுக் கொள்ளும் புனித மண்டபமாய்க் காட்சியளித்தது.

பக்கத்திலேயே பாரதி வாழ்ந்த வீட்டையும் பார்த்தேன். உலப்டேரி ஐந்து மைல் தொலைவிலுள்ளது; சிறு பூங்கா உருவாக்கிக் கொண்டிருந்தனர். செல்லும் வழியெல்லாம் தென்னந்தோப்பும், ஆங்காங்கே தென்னங்கீற்றுகளால் வேய்ந்த குடிசைகளும், அதனடியில் சுத்தமாய் வடித்த கள்ளையும், சாராயத்தையும் ஒருகை பார்க்கும் ஏழை மக்கள். கூட்டம் கூட்டமாய் ஆணும் பெண்ணும் சைக்கிள் ரிக்ஷாக்களில் பறந்து கொண்டிருந்தனர்.

டியூப்ளே சிலை துப்பாக்கி செய்யப பயன்படும் இரும்பினால் உருவாக்கப்பட்டது. நல்ல கறுப்பு நிறம். பகலில் 'லைட் அண்ட் ஷேட்' கொடுத்து வரைவது கடினம்.

எனவே அதிகாலை 5 மணிக்கு 107, கொசக்கடை தெருவிலிருந்து, ஒரு பக்கம் பெடல் இல்லாத சைக்கிளில் சவாரி செய்து 3 மைல் தொலைவில் கலங்கரை விளக்கு அருகே இருந்த டியூப்ளே சிலைப் பகுதியை அடைந்தேன். சூரிய உதயத்துக்கு முன் ஸ்கெச் செய்து, 6.30க்கு கடலின் மேற்பரப்பில் செங்கதிரோன் எட்டிப் பார்த்த போது சிலைமீது விழுந்த மஞ்சள் வெயிலை அப்படியே ஓவியமாய்த் தீட்டினேன். இது வரைந்தது 22.10.1961.



அந்த நாள்களில் 'நவ இந்தியா' தினசரியில் 'இளம் ஓவியர்களுக்கு ஒரு வாய்ப்பு. உங்கள் அபிமான நட்சத்திரங்களை வரைந்து அனுப்புங்கள். சிறந்த ஓவியம் எங்கள் இதழில், உங்கள் பெயர், முகவரியுடன் வெளியிடப்படும்' என்ற விளம்பரம் வந்தது.

ஓவியக் கல்லூரி மாணவர்களுடன் சவால் விட்டு, போஸ்ட் கார்டில் வரைந்த சிவாஜி, பத்மினி, டெய்ஸி இராணி (பேபி) மூன்று ஓவியங்களை மூன்று வாரம் அனுப்பினேன். தொடர்ந்து மூன்றும் பத்திரிகையில் வந்தன.

அந்த ஓவியத்தை ரசித்து, அதன் கீழ் இருந்த என் கிராமத்து முகவரிக்கு, காஞ்சிபுரத்தைச் சேர்ந்த துரை. சௌந்தரராஜன் என்ற இளைஞர் கடிதம் எழுதி, பேனா நண்பராகிவிட்டார்.


காஞ்சிபுரக் கோயில்களை வண்ண ஓவியமாய்த் தீட்ட முடிவு செய்து, முகம் பார்த்தறியாத பேனா நண்பருக்குக் கடிதம் எழுதிவிட்டு, அவர் வீடு சென்று நேரில் அறிமுகம் செய்து கொண்டு 4 நாள்கள் தங்கி வரதராஜபெருமாள், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி

அம்மன், கைலாசநாதர் கோயில்களை ஓவியம் தீட்டினேன்.

ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தின் பிராகாரமான இவ்வோவியத்தை மூன்றரை மணி நேரத்தில் தீட்டி முடித்தேன். கொளுத்தும் வெயிலில் அலைந்து திரிந்து மாலையில் கிணற்று நீரில் குளித்து விட்டு மொட்டை மாடியில் அமர்ந்து நுங்கும் நுரையுமாக ஒரு லிட்டர் பாலை ஒரே மூச்சில் குடித்து விட்டு, பாலசுப்பிர மணியம், சௌந்தரராஜன், கண்ணன், சத்தியமூர்த்தி ஆகியோருடன் அமர்ந்து அந்நாளைய சினிமா பாடல் களை ஆனந்தமாகப் பாடி அயர்ந்து தூங்கினோம்.

பஸ் கட்டணம், மூன்று வேளை உணவு, குதிரை வண்டி வாடகை எல்லாமாய்ச் சேர்த்து காஞ்சிபுரம் சென்று நான்கு நாள்கள் தங்கி வர ஆன செலவு 20 ரூபாய்.

இந்த ஓவியம் தீட்டியது 6.5.1962.



கிறிஸ்துமஸ் இரவு முழுகக உறங்காமல், கத்தோலிக்க கிறிஸ்துவர் குடியிருப்பான புதுப்பேட்டையில் 15ரூபாய் வாடகையில் இருந்த நான் இயேசு பிறந்த நாளைக் கொண்டாடி விட்டு, அதிகாலை மூன்றரை மணிக்குக் குளித்து தயாராகி, சைக்கிள் ரிக்ஷாபிடித்து பாரிமுனை சென்று நண்பன் சேனாதிபதியுடன் முதல் பஸ்ஸில் திருவண்ணாமலை பயணம்.

விருதுநகர் நாடார் சத்திரத்தில் தங்க சென்னையில் இருந்து அனுமதிக் கடிதம் கொண்டு சென்றதால் தங்கும் வாடகை இலவசம்.

காலைக் கடன், குளியல் எல்லாம் வெளியில். முதல் நாள் இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். மொத்தமாக ஆறு ஓவியங்கள் தீட்டினோம்.

சந்நிதி தெருவில் கீழ்க்கோடியில் ஒரு வீட்டுமாடியில் அனுமதி பெற்று மூன்று மணி நேரத்தில் இந்த ஓவியத்தைத் தீட்டினோம். திருவண்ணாமலையின் பின்புறமிருந்து 4 கோபுரங்களையும் இணைத்து ஓவியமாய்த் தீட்ட எட்டு மணி நேரமாயிற்று.

காலை சிற்றுண்டியை பலமாக முடித்துக் கொண்டால், பகல் உணவைத் தவிர்த்து மாலை வரை தாக்குப்பிடிக்கலாம். அப்படி பல முறை செய்ய நேர்ந்தது.

ரமண மகரிஷி ஆஸ்ரமம் அன்று எளிமையும், அமைதியுமாய்க் காட்சி தந்தது. அரை மணி நேரம் தியானம் செய்தேன்.

இன்று சலவைக் கற்களால் இழைக்கப்பட்டு, டாம்பீகமும் வியாபார நோக்கமும் கலந்து சலசலப்பு மிக்கதாகக் காட்சியளிக்கிறது.

இந்த ஓவியம் தீட்டியது 27.12.1963.

நாகர்கோயிலில் இரவு தங்க இடம் தேடித் தவித்து, சலூன் உரிமையாளர் உதவியோடு, கோட்டார் பரக்கி ரோடு ஜங்ஷனில் மாடி கட்டடத்தில், 35 ரூபாய் வாடகை வீட்டுக்காரர் கேட்க, படிக்கிற ஏழைக் குடும்பத்து மாணவர்களாகிய எங்களுக்கு இலவசமாக அறையைக் கொடுத்து மூன்று நாள் உணவும் போட வேண்டும் என்று பயமுறுத்த கடைசியில் அந்தப் பெரியவர் நாள் ஒன்றுக்கு ரூபாய் 1.50 வாடகை மட்டும் பெற்றுக் கொண்டார்.

அங்கு தங்கியபோது குற்றாலத்தில் தங்க, வழிதேடினோம். பக்கத்து அறையில் குடியிருந்த திரு.சுப்பையா என்பவரும், திராவிடக் கழகத்தைச் சேர்ந்த முகம்மதப்பா என்ற பெரியவரும் (இவரும் பெரியார் போல நீண்ட வெள்ளைத் தாடி- கறுப்புச் சட்டையுடனிருந்தார்) தென்காசியில் நாராயண தாஸ் காந்தி என்ற இளைஞருக்கு ஒரு கடிதம் கொடுத்தார்கள்.

தென்காசியில் நாராயண தாஸ் காந்தியை எளிதில் கண்டுபிடித்து விட்டோம். தன் வீட்டை விட, வசதியான முகைதீன் பிச்சை என்ற நண்பரின் புதிய வீட்டில் தங்க அவர் ஏற்பாடு செய்தார்.

கையிலிருந்த காசையெல்லாம் செலவழித்து குற்றாலம் போய்ப் பார்த்தால் அருவியில் சொட்டு நீர் கூட விழவில்லை, ஆயிரங்கண் போதாது வண்ணக் கிளியே, குற்றால அழகை நாம் காண்பதற்கு வண்ணக் கிளியே, என்ற பாடல் மீது அளவு கடந்த வெறுப்பு வந்தது.



சிவகுமார் வரைந்த கோட்டுச் சித்திரம்



குற்றாலம் அப்படி காய்ந்து போய்க் கிடந்தது! நல்லவேளை அன்றிரவு பெய்த மழையில் ஓரளவு தண்ணீர் வந்தது. முழுமையாக நீர்வீழ்ச்சி இருக்கும்போது தான் அது பிரமிப்பாக இருக்கும்.

தண்ணீர்வரத்து குறைவாய் இருந்ததால், பக்கத்திலிருந்த மரத்தைப் பிரதானமாக்கி, அருவியை 'கம்போஸ்' செய்து இந்த ஓவியம் தீட்டினேன்.

18.5.1964இல் இது தீட்டப்பட்டது. இதுதான் கடைசியாக நான் தீட்டிய 'ஸ்பாட் பெயிண்ட்டிங்'. இதை வரைந்து விட்டு சென்னை திரும்பியபோது திரைப்படத்தில் நடிக்க எனது மாமா மகன் ரத்தினம் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார்.

சிறு வயதில் 'ஆனந்த விகடன்', 'கல்கி', 'அமுதசுரபி' தீபாவளி மலர்களில் ஓவியர்கள், கோபுலு, சில்பி, மணியம் ஆகியோரின் கைவண்ணம் கண்டு சிலிர்த்திருக்கிறேன்.

சென்ற ஆண்டு ஓவிய மேதை கோபுலு அவர்களை வீட்டுக்கு அழைத்து எனது ஓவியங்கள் அனைத்தையும் காட்டி அவர் பாராட்டினைப் பெற்றது மறக்க முடியாத நிகழ்ச்சி.

தொகுப்பு: நாகராஜகுமார்

மின்னூர் சீனிவாசன்

'இலட்சியக் கவிஞன்!'



யாழ்போல இசைத்திடுவான்
எண்ணங்கள் அசைய மனத்
தாழ்ப்பாளைத் திறந்திடுவான்,
தான் வாழ மறந்திடுவான்!
பாழ்மடமைப் பேதத்தைப்
பார் வேட்டை யாடிடுவான்
வாழ்விப்பான் மானுடத்தை
வளர்த்திடுவான் நேயத்தை!

மதவழியாற் பிரிந்தோர்க்கு
மன வெளியில் ஒருமைகண்டு
விதவிதமாய்ப் பிரிந்துநின்று
வேறென்றும் கூறென்றும்
கதவடைப்பாய் மனமடைத்துக்
கதியறியாக் காலத்தே
பதந்தருநற் பண்ணிசைப்பான்!
பாதையது காட்டிடுவான்!

குளிர் காயும் பாவனையில்
குலையாத விண் சுதியில்
ஒளிர்கின்ற கதிரோன்முன்
இப்பூமி யுருண்டைதான்
தன்முதுகு திருப்புவது
தான் கண்டும் பேதங்கள்
பன்முகமாய்ப் பலதிசையாய்ப்
பாரில் எழச் செய்கின்றார்!

உலகைத்தான் பிரித்திடுவார்
உணர்வினிலே மரித்திடுவார்!
அலகில்லா எந்திரங்கள்
அவை நம்மை வென்றிடுமே!
பலவகையாய்ச் சிதறுண்டே
பாங்கறியா மானுடமே
கலந்துறவு கொண்டாடக்
கவிஞனவன் வந்திடுவான்.



'அமுதசுரபி' தீபாவளி மலர் 1994

நடிகர் சிவகுமார்

வண்ணப்படம் :



சூரிய உதயத்துக்கு முன் ஸ்கெட்ச் செய்து, அதிகாலை 6.30-மணிக்கு கடலின் மேற்பரப்பில் செங்கதிரோன் எட்டிப் பார்த்த போது டியூப்ளே சிலை மீது விழுந்த மஞ்சள் வெயில் அப்படியே ஓவியமானது.

★ டியூப்ளே சிலை, புதுச்சேரி – 22.10.1961.

ஓவியம் : நடிகர் சிவகுமார்



ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தின் நுழைவாயிலான இவ்வோவியம் மூன்றரை மணி நேரத்தில் தீட்டப்பட்டது.

★ ஏகாம்பரேஸ்வரர் கோயில், காஞ்சிபுரம் – 6.5.1962

ஓவியம் : நடிகர் சிவகுமார்.



★ திருவண்ணாமலை – 27.12.1963

திருவண்ணாமலை சந்நிதித் தெருவில் கீழ்க்கோடியில் ஒரு வீட்டு மாடியில் அமர்ந்து வரையப்பட்டது.

ஓவியம் : நடிகர் சிவகுமார்

'அமுதசுரபி'– தீபாவளி மலர் – 1994



★ குற்றாலம் – 18.5.1964

குற்றாலத்தில் தண்ணீர் வரத்து குறைவாய் இருந்ததால், பக்கத்திலிருந்த மரத்தைப் பிரதானமாக்கி, அருவியைக் 'கம்போஸ்' செய்து வரைந்த சித்திரம்.

ஓவியம் : நடிகர் சிவகுமார்

'அமுதசுரபி' – தீபாவளி மலர் – 1994



சம்பங்கி என்றழைக்கப்படும் இம்மலரின் ஆங்கிலப் பெயர் (TUBEROSE). புதிய சிருஷ்டி என்று ஸ்ரீ அன்னை குறிப்பிடுகிறார். வாழ்வில் புதிய சூழலைக் காண விரும்புவோர் இம்மலரை ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பித்துப் பலன் அடையலாம்.

வண்ணப்படங்கள் : ரமாமணி (மோனாலிஸா)

நன்றி : ஸ்ரீஅரவிந்த அன்னை



இந்த மலரின் ஆங்கிலப் பெயர் குல்மோகர் (GULMOHUR). ஸ்ரீ அன்னை இம்மலரின் ஆன்மிகக் குணத்தை சித்தி (Realisation) எனக் குறிப்பிடுகிறார்கள். நிறைவுகளைத் தரும் இம்மலரை ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பித்துப் பிரார்த்தித்தால் பலன் அடையலாம்.

செம்பருத்தி (HIBISCUS) வகையைச் சேர்ந்த இந்த மலரை ஸ்ரீஅன்னை, மலரின் ஆன்மிக குணத்தைப் புதிய சிருஷ்டியின் அழகு (Beauty of the New Creation) என்று குறிப்பிடுகிறார்.





சாலை ஓரங்களில் தானாக மலரும் செடியில் பூக்கும் ஆவரம்பூ. பொன்னாவரை என்றும் கூறுவர். தாவரப் பெயர் (CASSIA SPECIES). ஸ்ரீ அன்னை இந்த மலரின் ஆன்மிகக் குணத்தை கவனமான மனம் (Attentive Mind) எனக் குறிப்பிடுவர். கவனக் குறைவாக இருப்பவர்கள் இம் மலரை ஸ்ரீ அன்னைக்குச் சமர்ப்பித்துப் பிரார்த்தித்தால் நல்ல பலனை அடையலாம்.



இ.எஸ்.டி.

தொ.மு.சி. ரகுநாதன்

அரசாங்கத்தில் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் பணியாற்றி உயர் பதவியையும் வகித்து ஓய்வு பெறும் ஒருவர், ஓய்வு பெறும் காலத்தில் தமக்குக் கிடைக்கும் மொத்தப்பணம், இன்சூரன்ஸ் முதலியவற்றிலிருந்து கிட்டும் தொகை, ஓய்வூதியமாகத் தாம் பெற்று வரும் பணம் ஆகியவற்றைக் கொண்டு, ஓய்வுக் காலத்தில் என்ன செய்வார்?

இந்தப் பணபலத்தைக் கொண்டு, தமது சொந்தக் குடும்ப வாழ்க்கை வசதிகளை நன்கு உறுதிப்படுத்திக் கொண்டு, தாம் உண்டு, தம் வீடு வாசல் உண்டு என்று ஓய்வாக இருந்து தமது முதுமைக் காலத்தைக் கழிப்பார் என்பதே பொதுவான பதிலாக இருக்கும்.

ஆனால், தாம் இவ்வாறு பெறும் பணத்தையே முதலீடாக்கி, மறைந்து விட்ட தமது மனைவியின் நினைவாக இலக்கியப் பரிசுத் திட்டம் ஒன்றை நிறுவுவது, அதன் மூலம், ஆண்டுதோறும் பல்லாண்டு காலம் இலக்கியப் பணியாற்றி வந்துள்ள முதுபெரும் தமிழ் எழுத்தாளர்களைத் தக்க முறையில் பாராட்டிக் கௌரவிப்பது, அத்துடன் அந்தந்த ஆண்டில் வெளிவந்த சிறந்த தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை எழுதிய பத்து பதினைந்து எழுத்தாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கிப் பாராட்டுவது, இதற்கென ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா ஒன்றைச் சிறப்பாக நடத்துவது, விழாவிற்கு வருகைதரும் பாராட்டுக்குரிய எழுத்தாளர்கள் அனைவருக்கும் தக்க முறையில் போக்குவரத்துச் செலவும், தங்கும் வசதியும் அளித்து, அவர்களுக்குப் பரிசுகளோடு சால்வையும் கேடயமும் வழங்கிச்சிறப்பிப்பது, விழாவில் கலந்து கொள்ள வரும் ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் மதிய உணவும், மாலைச் சிற்றுண்டியும் அளித்து விருந்தோம்புவது, இவ்வாறு பரிசளிப்பு விழா நடத்துவதோடு நின்று விடாமல், விழாவில் ஆற்றப்பட்ட இலக்கியச் சொற்பொழிவுகளை நூலாக வெளியிடுவது, மற்றும் தமிழ்நாட்டின் பெண் எழுத்தாளர்கள் பலரது சிறுகதைகளையும், மூத்த சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளையும் சேகரித்து, அந்த எழுத்தாளர்களுக்குத் தக்க சன்மானங்கள் அளித்து, அந்தக் கதைகளைத் தனித் தனி நூல்வடிவில் வெளியிடுவது அல்லது வெளியிடுவதற்கான நிதியாதாரத்தை வழங்கி உதவுவது, மேலும் வேறு பல நல்லிலக்கிய வளர்ச்சிப் பணிகளுக்கும் விளம்பரம் எதையும் தேடிக் கொள்ளாமலே நிதியுதவி செய்வது...

இத்தகைய பணிகளில் ஓய்வு பெற்ற அரசு உயர் அதிகாரி ஒருவர் ஈடுபட்டிருக்கிறார் என்றால் அவர் அதிசய மனிதராகத்தானே இருக்க வேண்டும்! அத்தகைய அதிசய மனிதர்தான் "லில்லி தேவசிகாமணி' நினைவு இலக்கியப் பரிசுகள் திட்டத்தின் நிறுவனரான பெரியவர் இ.எஸ். தேவசிகாமணி அவர்கள்.

நண்பர்களால் இ.எஸ்.டி. என்று மதிப்புணர்வோடு குறிப்பிடப் பெறும் திரு.இ.எஸ். தேவசிகாமணி அவர்களோடு எனக்குச் சென்ற ஈராண்டுக் காலமாகத்தான் பழக்கம். அவரது இலக்கியப் பரிசுத் திட்டம் தொடங்கப்பட்ட 1992ஆம் ஆண்டில் கௌரவிக்கப்பட்ட மூத்த எழுத்தாளர்களில் நானும் ஒருவன். தாம் அளிக்கும் இந்தக் கௌரவத்தை ஏற்றுக் கொள்ளுமாறு என்னிடம் நேரில் கோருவதற்காக, இந்தத் திட்டத்தின் செயலரான திரு. செ. ஞானனோடு கோவையிலிருந்து நெல்லையிலுள்ள எனது வீட்டுக்கு அவர் வந்த காலத்தில்தான் அவரோடு எனக்கு நேர்முக அறிமுகமும், நட்பும் ஏற்பட்டன. தமிழ் நாட்டில் நல்லிலக்கியம் வளர வேண்டும் என்பதில் அவருக்கிருந்த மனப்பூர்வமான ஆர்வம், ஈடுபாடு, மனிதத்துவத்தையும் மனித மேம்பாட்டையும் முன்னேற்றத்தையும் கருப்பொருளாகக் கொண்ட இலக்கிய முயற்சிகளைப் போற்றி ஆதரிப்பது என்ற குறிக்கோளில் அவருக்கிருந்த ஆழமான பிடிப்பு முதலியவற்றை அந்த முதல் சந்திப்பின்போதே நான் கண்டுணர முடிந்தது. இதன் பின் அவரும் நானும் இந்த ஈராண்டுக் காலத்தில் கோவையிலும், நெல்லையிலும் பல முறை சந்தித்திருக்கிறோம். அபிப்பிராயங்களையும், ஆலோசனைகளையும் பரிமாறிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சந்திப்புகளின் மூலம் அவர் இலக்கிய ஆர்வமும் ஈடுபாடும் மிக்கவராக மட்டுமல்லாது, சிறந்த பண்பாளராகவும், அன்புள்ளம் படைத்தவராகவும், மனிதத்துவமும், மானிட கௌரவமும் மிக்கவராகவும் விளங்கி வருவதையும் கண்டுணர்ந்திருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் தமக்கென்று எந்தப் பிரதிபலனையும் விளம்பரத்தையும் எதிர்பார்க்காமல், இலக்கிய வளர்ச்சிக்குத் தம்மாலான ஆதரவையும் ஊக்குவிப்பையும் வழங்க வேண்டும் என்ற அக்கறை மிக்க கர்மவீரர் ஒருவரையே அவரில் நான் காண்கிறேன். மேன்மேலும் கண்டு வருகிறேன். உண்மையில் எழுபது வயதை எட்டி விட்ட இந்தப் பருவத்தில் எனக்கு இத்தகைய இலக்கிய நண்பர் ஒருவர் கிட்டியதை எண்ணி, நான் பெருமிதமும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

லில்லி தேவசிகாமணி இலக்கியப் பரிசுத் திட்டத்தில் சிறுகதைகளுக்கு மட்டுமே பரிசுகள் வழங்கப்படுகின்றனவே, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை போன்ற பிற இலக்கியத் துறைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாதா என்ற கேள்வி எழுத்தாளர்கள் பலருக்கும் எழுந்தது. எனக்கும் எழுந்தது. இதற்குத் திரு. இ.எஸ்.டி. கூறும் பதில் என்ன? அவரே ஒரு பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்.

"தமிழில் நாவல், கவிதை, கட்டுரை நூல்கள் வருடம் முழுவதும் ஏராளமாக வெளி வந்து கொண்டிருக்


கின்றன. இவற்றைப் படித்துத் தேர்வு செய்வது இயலாத காரியம். வருடத்தில் ஜனவரி முதல் டிசம்பர் முடியவுள்ள ஓராண்டில் வெளியிடப்படும் இத்தகைய நூல்கள் அனைத்தையும் நடுவர்களிடம் கொடுத்து, மூன்று மாத கால அவகாசத்தில் பரிசுக்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்துவிட முடியாது. மேலும் சிறுகதைத் தொகுப்புகள் குறைந்த அளவிலேயே வருகின்றன. எனவே அவற்றைச் சுலபமாகத் தேர்வு செய்ய முடிகிறது. எனது இலக்கியப் பரிசுகள் திட்டம் மூலம் வழங்கப்படும் பரிசு, சிறுகதை எழுத்தாளர்களை ஊக்குவிக்கத்தானே தவிர, படைப்பின் பலனைப் பெற்றுவிட்டோம் என்று எழுத்தாளர்கள் அடங்கிப் போவற்கு அல்ல.

"மேலும் சிறுகதை படிக்கும் பழக்கமும், எழுதும் ஆர்வமும் நம் இளைஞர்களிடம் நிரம்பி உள்ளன. ஆனால் அவர்களிற் பலர், புதுமைப்பித்தனையோ, அழகிரிசாமியையோ, மௌனியையோ அல்லது மேலைநாட்டுச் சிறந்த படைப்பாளிகளான டால்ஸ்டாய், அனடோல் பிரான்ஸ், ஆன்டன் செகாவ், மாக்சிம் கார்க்கி, சாமர்செட் மாம், எட்கார் ஆலன்போ ஆகியோரின் கதைகளையோ படித்ததில்லை. பெரும்பாலான வணிகப் பத்திரிகைகளைப் படித்து விட்டு, அவற்றில் கதை எழுதுபவர்கள் மிகச் சிறந்த சிறுகதைகளைப் படைப்பது என்பது இயலாத காரியம். இம்மாதிரியான போக்கு தமிழில் சிறுகதை வளர்ச்சியில் தேக்கநிலை ஒன்றை ஏற்படுத்தி வருகிறது. படைப்பில் அவசரப் போக்கு படைப்பாளியின் அனுபவக் குறைவு, விடா முயற்சியின்மை, மேல்நாட்டில் சிறுகதை இலக்கியம் பற்றிய பரிச்சயம் இல்லாமை, தான்தோன்றித்தனம் ஆகியவற்றையே சிறுகதையின் தேக்கத்துக்குக் காரணங்களாகக் கூறலாம். இந்நிலையை விளக்குவதன் மூலமும், படைப்பாளர்களைப் பரிசளித்துப் பாராட்டி ஊக்குவிப்பதன் மூலமும், தமிழ்ச் சிறுகதை இலக்கியம் செழித்து வளரும் என்ற எதிர்பார்ப்போடுதான் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளேன்".

தமிழ்நாட்டின் இன்றைய சிறுகதை உலகின் பொதுவான நிலை பற்றிய ஒரு கறாரான கணிப்பே மேற்கூறிய கூற்றில் அடங்கியுள்ளது எனலாம். ஆம். இ.எஸ்.டி. அவர்கள் சரியான சமூகப் பிரக்ஞையோடும், இலக்கியக் கண்ணோட்டத்தோடும்தான் தமது இலக்கியப்பரிசுத் திட்டத்தை உருவாக்கி நடத்தி வருகிறார். இதற்கெல்லாம் மேலாக நான் அவரிடம் கண்டு அதிசயிக்கும் ஒரு குணாம்சம் உண்டு. அவருக்கு இப்போது வயது எழுபத்தி நான்காகிறது. சிறிது காலத்துக்கு முன் அவருக்கு லேசான இருதயத் தாக்கும் ஏற்பட்டது. அவரது கண் பார்வை பாதிக்கப்பட்டுள்ளது. தள்ளாமை தலைகாட்டியுள்ளது. நடந்தால் பக்கத்தில் துணைக்கு ஒருவர் கூட வரவேண்டியுள்ளது என்றாலும் இந்த நிலையிலும் அவர் ஊக்கமும் உற்சாகமும் குன்றாதவராக, இலக்கிய நண்பர்களை ஊர் தேடி வந்து சந்திக்கிறார். அளவளாவுகிறார். தமது திட்டத்தை மேலும் மேம்படுத்துவது பற்றி ஆலோசனைகள் நடத்துகிறார். இலக்கிய உலகு பற்றி விவாதிக்கிறார். ஏற்றுக் கொண்ட லட்சியத்தில் அவருக்குள்ள இத்தகைய ஈடுபாட்டையும், நேர்மையையும், அர்ப்பணிப்புணர்வையும் காணும்போது எனக்கு இவ்வாறுதான் கூறத் தோன்றுகிறது.

இ.எஸ்.டி. (E.S.D.) Earnestness, Sincerity and Dedication. ☸

வேட்ட மங்கலம்



என் மனைவியும், பிள்ளைகளும் தங்கி வருவது, கடற்கரைக்குச் செல்லும் சாலை ஓரத்திலுள்ள ஒரு பழைய வீட்டில். செம்மண் குழைத்து, பச்சை செங்கல்லைக் கொண்டு கட்டி, தென்னை ஓலை வேய்ந்தது. எப்போதாவது மழைக்கு முன்னால் இற்றுப்போன ஓலையைப் பிரித்தெறிந்துவிட்டு புது ஓலை வேய்ந்து வருவதால், பேய் மழைகளைச் சிரசில் தாங்கிக்கொண்டு அப்படியே நிற்கின்றது. இப்போது, ஓலை வேய்ந்து ஆறேழு ஆண்டுகள் ஆகிவிட்டன.

தமிழ் நாட்டின் இன்னொரு தொங்கலில் ஒருகிராமத்தின் ஒதுக்குப்புறத்திலுள்ள அரிசி ஆலை ஒன்றில் எனக்குப் பணி- கணக்கெழுத்து. மகன் அனுப்பிய கடிதத்தை தபால்காரன் தரும்போதும் கூட நான் நிமிர்த்திய கணக்குப் புத்தகத்தின் கோடுகள் மீது பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தேன். பேனாவை மூடாமலேயே விரல் இடுக்கில் வைத்துக் கொண்டு உறையைக் கிழித்து வெளியே எடுத்த கடித வரிகளில் பார்வை நகர்ந்தது. "மேற்கூரை இற்றுவிட்டது, மழைக்கு முன் ஓலைகட்ட வேண்டும்" கடிதத்தில் கடைசியாக எழுதிய வாசகம் என்னை நிலைகுலைய வைத்தது. "வாப்பா, ஊருக்கு வரவேண்டாம்; கடலில் நீராட வேட்டமங்கலம் யானையை ஊர்வலமாக கொண்டு வருகிறார்கள். ஊரில் வெட்டும் கொலையும் நடக்கலாம்."

அந்தக் கடிதத்தை விரித்துப் பிடித்தபடி எவ்வளவு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தேன் என்று சொல்லத் தெரியவில்லை.

"மாமா"

நைனா கூப்பிட்டபோது தான் எனக்குச் சுற்றுப்புற விழிப்பு ஏற்பட்டது. கால்கள் கழன்றாடும் ஒரு நாற்காலியில் பல வருடங்களாகக் குந்தி உட்கார்ந்து தண்டியான நாள் வழி, பேரேடுகளின் பக்கங்களைத் திருப்பிக் கொண்டிருப்பதில், அலுப்பில்லாத சுகம். காலையில் ஒன்பது மணிக்குப் போய் உட்கார்ந்தால் இரவு வரை, கொள் முதல், விற்று வரவு, பற்று, வரவு, இப்படி பக்கங்களைப் புரட்டிக் கொண்டே இருக்கவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை விடுமுறை. ஆனால் எனக்கு அன்று விடுமுறை நாளல்ல. அன்றுதான் நைனாவின் தனிப்பட்ட கணக்கு எழுதுவது; நைனாவின் வீட்டில் மாடி அறையில் வைத்து அன்றைய மதிய உணவு மாமி கையால் பரிமாறப் படும். இப்படியாக, காகித மணத்தையும், மை வாடையையும் முகர்ந்து கொண்டு நகர்த்தும் ஆண்டுகளில் எப்போதாவது கிடைக்கும் ஒரு விடுமுறை. அதுவும் அந்த ஆண்டில் அடைமழை பெய்து களத்தில் நெல் காயப்போட முடியாத நிலை வந்தால் மட்டும். மழையைச் சூல்கொண்ட மேகங்கள் வான வீதியில் அலைந்து திரிவதைக் கண்டால், நைனாவுக்குத் தெரியும் மழை ஒரு பிடிபிடிக்குமென்று. அந்நேரம் நைனா உத்தரவு தருவார்.

"மாமா, ஊருக்குப் போயிட்டு வாங்கோ"

வருடத்திற்கு ஒரு முறையோ இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையோ, விடுமுறையில் மனைவி மக்களைப் பார்க்க ஊருக்கு ஜயந்தி ஜனதாவில் ஏறும் போதுதான், என் அடி மடியிலிருந்து நைனாவின் உயிர் நாடியான "வெள்ளத்தாள்" கணக்கு நைனாவின் கைக்குப் போகும்; அவ்வளவு நம்பிக்கை நைனாவுக்கு என் மீது.

மகன் எழுதிய கடிதத்திலுள்ள கடைசி வாசகங்களைப் பல முறை வாசித்தேன். வரிகளுக்கிடையிலெங்காவது சிறிதொரு நம்பிக்கையின் பூனை உரோமம் தெரிகிறதா என்று. அரசு போட்ட சாலை வழியாக எல்லாருக்கும் உரிமைப்பட்ட கடலில் நீராடச் செல்லும் வேட்டமங்கலம் யானையை ஒரு மிருகமாகவும், அதன் பின்னால் வரும் மக்களைச் சக மக்களாகவும் பார்க்காமல், அவற்றை ஓர் அடையாளத்தின் அடிப்படையில் வெறித்தனமாக ஏன் பார்க்க வேண்டும் இந்த நஞ்சை மனிதத்தின் மகோன்னத இதயத்தில் கலக்கிவிட்ட இரகசியக் கரங்கள் யாவை? சிந்தனைகள் பல தடங்களைத் தேடிக்கொண்டிருந்த போது, இரத்த உறவுகளே சவக் குழிகள் பறித்த கதைகள்! நைனா ஒரு தடவை சொன்ன நினைவின் புள்ளியில் மனம் நின்றது.

மனவாடு கணக்குப்பிள்ளை ஒருவர் நைனாவுக்குத் தோண்டிய

தோப்பில் முஹம்மது மீரான்

சவக்குழியிலிருந்து நைனா உயிர்த்து வர வருடங்கள் பல எடுத்தன. மனவாடு அதிகப் பற்றாகக் கேட்ட தொகையை நைனா கொடுக்காத கோபம். நைனா நெல் களத்தில் நின்று கொண்டிருக்கும் போது அரசு ஜீப் ஒன்று ஆலைக்குள்ளேயே வந்துவிட்டது. நாலைந்து அதிகாரிகளும் அதிலிருந்து இறங்கினர். உமிக்குழியை நோக்கி விரைந்தார்கள். அவர்களே அந்த இடத்தில் வைத்திருந்தது போல் உமிக்குழிக்கு மேல் பகுதியிலுள்ள வாரிக்கிடையிலிருந்து வெள்ளைத்தாள் கத்தையை உருவி எடுத்தார்கள்.

நைனா நெல் களத்திலேயே தளர்ந்து உட்கார்ந்துவிட்டார். மனவாடுதான் 'மொட்டை மனு' போட்டதென்று நைனா பலமாக நம்பக் காரணம், வருமானவரி அதிகாரிகள் வந்த அன்றிலிருந்து மனவாடு வேலைக்கு வரவில்லை.

அரிவாளைத் தூக்கிக்கொண்டு நைனா சுற்றிச்சுற்றி வந்தார். மனவாடு கையில் அகப்படவில்லை.

"அந்தத் திமிர்பிடிச்ச பையன் கையிலே கிடைச்சிருந்தான்னா தலையைச் சீவி கையிலே எடுத்துட்டுப் போய், போலீஸிலே சரணடையணுமென்னு தான் நினைச்சேன் மாமா". பல ஆண்டுகளுக்குப் பின் இதைச் சொன்னபோதும், நைனாவின் முகம் சினந்து போயிருந்தது.

வருமான வரி அதிகாரிகள் பின்னிய வலையில் சிக்கி பாப்பராய்ப் போன நைனா, சொந்த ஊரில் மானாவாரி நிலத்தில் மிளகாய்வத்தல் விவசாயம் செய்தார். சாகுபடியான மிளகாய்வத்தலை நைனா என்னுடைய கமிஷன் கடையில் விற்பனைக்குக் கொண்டு வந்தார்.

கொரியாவுக்கு மிளகாய் வத்தல் ஏற்றுமதியான போது, நைனாவின் தலைக்கு மேல் இருண்டிருந்த வானத்திலிருந்து கருமேகங்கள் விலகிவிட்டன. என் பங்காளி மச்சினன் கல்லாப்பெட்டிக்கு அடியில் படுகுழி தோண்டி என்னை வெறுமையாக்கிய திண்டாட்டத்தில், கடைத் திண்ணைகளில் உட்கார்ந்து காஜா பீடி புகைத்துக் கொண்டிருந்தேன்.

"ஏய் முட்டாத்துலுக்கா! ஏன் கம்மா இருக்கே? என் கூட வாவேய்! நான் ரைஸ்மில் திறக்கப்போறேன்." நைனாவோடு ரயில் ஏறினேன்.

நைனா மகிழ்ச்சியாக இருக்கும் போது என்னை 'முட்டாள் துலுக்கன்' என்றுதான் அழைப்பார். எனக்குக் கோபமே வராது. இருந்தாலும் விட்டுக் கொடுப்பதில்லை. "மஞ்சு யோசனைதான்; வண்டிதான் சாடு சப்பட்டை" என்று திருப்பி பரிகாசம் செய்வேன். நைனாவுக்கும் கோபம் வராது.

நைனா பொக்குவாய் கிழியச் சிரிப்பார். விஷம் தீண்டாத பால் சிரிப்பு!

ஈராண்டு வறட்சியில் புல் பூண்டுகளும் கருகிப்போன கிராமத்தின் மேல், வானத்தில் சூலி மேகங்கள் பையப்பைய நீர் வீங்கிய கால்களை வைத்து நடந்த போது, நைனா நெல் களத்தில் நின்று வானத்தைப் பார்த்தார்.

"மேற்கு மூலை இருண்டிருக்கு ஒரு பிடிபிடிக்கும்", நைனாவின் வானிலை முன் அறிவிப்பு பிசகுவதில்லை. வானம் இப்படியே இருண்டு கொண்டிருக்கும். எதிர்பாராமல் கொட்டும், கொட்டினால் சில வேளை ஒரு மாதம் வரை துவராமல் கொட்டிக்கொண்டே இருக்கும். நெல்காயாத இந்த நாள்கள்தான் என்னுடைய விடுமுறை நாள்கள். ஊருக்குப் போகலாம்; கூரை வேயலாம், பிள்ளைகளையும் பார்க்கலாம்.

"ஏய், முட்டா துலுக்கா, ஊருக்குப் போறியென்னா போயிட்டு வாவேய்" நைனாவை முழித்துப் பார்த்தேன்.

"என்னா மாமா முழிக்கீரு?"

"மகன்கிட்டே இருந்து கடிதம் வந்திருக்கு"

"என்னவாம்?"

"வேட்டமங்கலம் யானை வருது. ஊரில கொழப்பம்"

"ஊட்டுக் கூரை கெட்டனுமென்னு சொன்னீருமே...?

"சொன்னேன்."

"அப்போ போய் ஊட்டுக்கு கூரையக் கட்டும்; மாமியும் மாப்ளமாரும் நனையாம கெடக்கட்டும்,"

நான் பேசவில்லை.

"என்னவேய் பேசாம இருக்கீரு?"

"வேட்டமங்கலம் யானை வருது நைனா...?"

"யானை வந்தா ஒமக்கென்ன ஓய்?" என் கோழைத்தனத்தை நினைக்க நைனாவுக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

அப்பவும் நான் பேசாமல் நெல் களத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒன்றிரண்டு மழைத்துளிகள் நெல்களத்திலுள்ள ஓட்டுத்தரையில் வீழ்ந்தன.

"ஏலே என்ன பாக்கிறீக? மழை வாரது தெரியலையாலே? களத்தைக் கூட்டுங்கலே..." நைனா கூப்பாடு போட்டார்.

உருது பேசக்கூடிய முஸ்தபா பாட்சாவும், தெலுங்கு பேசக்கூடிய விஸ்வநாதனும், மலையாளம் பேசக்கூடிய பிலிப்பும் அடங்கிய தொழிலாளிகள் சுறுசுறுப்படைந்தனர். இந்தத் தொழிலாளிகள் இனி எத்தனை நாள்கள் இது போன்ற ஒற்றுமையுடன் ஒரே களத்தில் சுறுசுறுப்பாக செயல்படுவார்கள்; இன்னும் எவ்வளவு காலம் மாமாவின் உயிர்நாடி என் அடிமடியில் பாதுகாப்பாக நம்பிக்கையோடு இருக்கும்?... ஞாயிற்றுக்கிழமைகளில் மாமி பாசத்தோடு தரும் மதிய உணவு இனி எவ்வளவு காலத்திற்கு எனக்கு அமிருதமாயிருக்கும்?... நான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

"என்ன மாமா! ஊருக்கு போவண்டாமா...?" நைனா மீண்டும் நினைவூட்டினார்.

"பின்னே பாப்போம்" நைனாவின் முகத்தைப் பார்க்க ஏனோ என்னால் முடியவில்லை. நெல் களத்திலேயே பார்வையை ஊன்றிக் கொண்டிருந்தேன்.

துளிகள் பெரும் மழையாக கோரிச்சொரியும் முன், தொழிலாளிகள் களத்தில் காய்ந்து கொண்டிருந்த நெல்லைக் குவியலாக்கி 'டார்ப்பாய்' கொண்டு மூடினார்கள்.

மழை 'சோ'வென அள்ளிக் கொட்டுமென்று எதிர்பார்த்தது தான். களத்திலுள்ள மடைகள் வழியாக மழைத் தண்ணீர் ஓடிப் பெருகியது. வாரியிலிருந்து செரிந்த தண்ணீர் ஓடை எடுத்து ஓடியது.

மாலை நான்கு மணிகூட ஆகவில்லை; சுற்றுச்சூழல் இருண்டுவிட்டதால், அலுவலக அறையில் அறுபது வால்ட் பல்பு எரிந்தது. இரவு ஒருமணிக்குத்தான் இரயில், பாம்பே- கன்னியாகுமரி 'ஜயந்தி ஜனதா'. ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள நகரத்திலிருந்து வேறொரு நகரப் பேருந்து ஏறித்தான் ரயில் நிலையம் செல்ல வேண்டும். ஓர் இரவும் ஒரு பகலும், ரயில் பயணம் செய்திறங்குமிடத்திலிருந்து, பன்னிரண்டு கிலோ மீட்டர் பஸ் பயணத்தில் ஊர் போய்ச் சேரலாம்.

பஸ் செல்லும் சாலை ஓரங்களில் கொடி, தோரணங்களால் அலங்

காரம் செய்யப்பட்ட வளைவுகள்; வளைவுகளில் வரவேற்பு வாசகங் கள்; முன்பு ஒரு விடுமுறை கிடைத் தது, இதே போன்ற வேட்டமங்கலம் யானை, கடலில் நீராட வரும் உற்சவ நாளில்; அன்று பஸ்ஸில் செல்லும்போது சாலை ஓரத்தி லுள்ள சுவர்களில் எழுதப்பட்டிருந்த வாசகங்கள் மனதைக் கசக்கிப் பிழிந்தன.

இந்த உள்ளங்களில் நஞ்சைக் கலக்கியது யார் என்ற கேள்வி, என் நெஞ்சில் பல நாள்களாக நின்று கொண்டிருந்தது. இப்பவும் இல்லாமலில்லை. இம்முறையும் அதை வாசிப்பதற்காக இந்த இர வோடு இரவு ரயில் ஏறி பயணம் தொடரவா?

மகன் அனுப்பிய கடிதத்தை மீண்டும் ஒருமுறை வாசித்தேன். அறுபது பல்பு வெளிச்சத்திலும் அந்த வாசகங்களில் எந்த மாற்றமும் தெரியவில்லை. அதே வாசகங்கள். அவை என் மனத்தைக் காயப் படுத்திக்கொண்டேயிருந்தன.

தளிர் இலைகளைகீச்சம் காட்டிக் கொண்டிருந்த கடற்காற்றின் தூய்மையில் நிண நெடியும், வீடுகள் பற்றும் புகை வாடையையும் முகர்ந்து கொண்டிருந்த எனக்குள் ஏதோ ஓர் உணர்ச்சி நுரைக்கத் தொடங்கியது.

"சாப்பிடுங்கோ மாமா..." மாமி- நைனாவின் மனைவி- ஞாயிற்றுக் கிழமைகளில் மதிய உணவு விளம்பும் போது கூறும் தாய்மையின் இனிய வார்த்தைகள் என் காதுகளில் முழங்கின.

நாளை, எனக்கு உணவு பரிமாறிய இந்த மாமியை நான் எந்தக் கண்ணோடு பார்க்க நேரிடும் என்ற எண்ணம் என்னைக் குழப்பிக் கொண்டிருந்தது.

பதினொரு ஆண்டுகள் ஒரே பள்ளியில் ஒரே பெஞ்சில் என்னுடன் உட்கார்ந்திருந்த பொன்னய்யனின் பிள்ளைகள் இன்று என் பிள்ளை களைப் பார்க்கும் கண்களில் கனல் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு நெஞ்சு பதைபதைத்தது.

வேட்டமங்கலத்தில் நடக்கும் ஒரு வார உற்சவத்தின் கடைசி இரவில் கம்பக்கட்டு-வாண வேடிக்கை பார்க்கச் செல்லும் போதெல்லாம், இரவு உறங்கியிருந்தது பொன்னய்யனின் வீட்டில்; அவனு டைய அம்மா பரிமாறித்தந்த வெள்ளரிக்காய் சாம்பாரின் ருசி இன்னமும் நாக்கில் நின்று கொண்டிருக்கிறது.

முத்துக்குடை பிடித்த சாந்திக் காரன் போற்றி உட்கார்ந்து, தங்க முலாம் பூசிய முகபடாம் அணிவித்த வேட்டமங்கலம் யானை செண்டை மேளங்களுடன் நீராட கடலுக்கு ஊர்வலமாக வருவதைப் பார்க்க நெஞ்சில் அறைந்து அழுதது; அடம்பிடித்த என்னை வாப்பா தோளில் எடுத்துக்கொண்டு கோயில் யானையைக் காட்டித்தர சாலை ஓரத்தில் நின்றது; ஊர்வலத்தோடு வந்தவர்கள் வாப்பாவைக் கண்டு வணக்கம் சொன்னது; என் கன்னத் தில் பல விரல்கள் செல்லமாகக் கிள்ளியது, யாரோ ஒருவர் அன்ப ளிப்பாக வாங்கித் தந்த வாலுள்ள பலூன்! நினைவுகளின் வனப் பாதைகள் எனக்கு முன்னால் நீண்டு கிடந்தன.



வேட்டமங்கலம் யானை கடலில் நீராட வரும் வழியருகில், பள்ளிக் கூடம். அன்று பள்ளிக்கு விடுமுறை வேட்டமங்கலம் உற்சவ காலத்தில் தான் கரும்பு தின்பதும், பொரி கடலை கொறிப்பதும், பேரீச்சம் பழம் தின்று கொட்டையைத் துப்பு வதும், வளர்ந்து மரமாகி நிறைய பேரீச்சம்பழம் தின்பதற்காக ஒவ் வோர் உற்சவ காலத்திலும் அதன் கொட்டைகளை முளைத்த மண்ணில் புதைத்துப் போடுவதும் உற்சவத்திற்குப் போய் வரும் பெண்கள் தலையிலிருக்கும் கொழுந்து வாசம் மூக்கைத் துளைக்கும் போது உம்மாவின் முன்றாணையைப் பிடித்து அழுதால் காக கிடைக்கும். உற்சவம் காணச் செல்லும் வழியோரங்களிலுள்ள வீடுகளின் முன்பகுதியில் தண்ணீர்ப் பந்தல்கள். பங்குனி வெயிலில் நடந்து செல்வோரின் உள்ளங் கையில் உப்பில் போட்ட மாங்காவை அகப்பையால் எடுத்து வைப் பார்கள். கோட்டிய கையில், பச்சை வாழைத்தடை வழியாக குடி தண்ணீர் வந்துவிழும். சில வீடுகளில் மோரும், உப்புமாங்காயும். அதைக் குடித்துக் குடித்து நடப்பதே ஓர் ஆனந்தம்!

"குடியுங்கோ, வவுறு நிறையக் குடியுங்கோ." கோடிச் சேலை உடுத்தி, காதில் பாம்படம் தொங்கும் பெண்களின் முகங்களில் மலர்ச்சி யும், தாக நீர் நல்கிய மன நிறைவும் தேங்காய் எண்ணெயில் பொரித்த களியோடக்க, நாயர் வீட்டு அரிசி முறுக்கு, ஆலங்கா, கருப்பட்டிப் பாணியில் முக்கி உருட்டிப் பிடித்த பொரி உருண்டை! அந்த வாசம், இப்பவும் மூக்கினில் தங்கிக் கொண்டிருக்கிறது.

மூன் சிறை கேசவன் நாயர் குழுவினர் நடிக்கும் 'வேலுத்தம்பி தளவாய்' நாடகம்; திருவட்டார் லக்ஷ்மிபாய் தங்கச்சியின் நடனம்; காப்பில் நடராஜனுடைய கதா காலக்ஷேபம் 'மாந்தாதா' எல்லாம் நேற்று செம்மண் தரையில் முட்டுக் கட்டி உட்கார்ந்து பார்த்ததுபோல்; கேட்டதுபோல்.

வேட்டமங்கலத்துக்கு மேலுள்ள ஆகாசம் பாதி ராவில் ஓசையோடு சிரிப்பதைக் காணத் திரண்டிருக்கும் நெரிசலில் ஒரு துகளாய் நின்று கொண்டிருந்த ஆவல்மிக்க நிமி டங்கள். நேரம் வெளுக்கும் வரை ஆகாசம் பூத்து, பூப் பூவாய்ச் சொரிந்து கொண்டிருந்தது.

மகன் கடிதத்தில் குறிப்பிட்டி ருந்தபடி, நாளை இரவு சம்பக்கட்டு; மறுநாள் காலையில் கடலில் நீராட யானையை ஊர்வலமாக அழைத் துச் செல்வார்கள்.

கனவிலும் துரோகத்தைப் பற்றி எண்ணாமல் உண்மையாய் உழைத்து வந்தவனுக்கு, என் சொந்த ஊரைப்பற்றி என்னும் சூழ்நிலை ஏற்பட்ட நிலையில் மட்டும் எனது மனம் ஏன்தான் இப்படி அலைபாய்கிறதோ?

அப்போது எதுவும் நடக்கலாம். வெறி ஊட்டப்பட்ட மிருக உணர்வு களுக்கு மனிதாபிமானம் பலியா கலாம்.

மண்சட்டியிலும் மூங்கிலிலும், நாய்த்தோலும், பூனைத்தோலும், ஒட்டித் தயார்செய்த விளையாட்டுக் கொட்டுகள் வாங்கி, யானை, ஊர் வலத்தோடு இணைத்து கொட்டிக் கொண்டு நடந்தது, ஓர் இரச னையாகவே இருந்தது. வீட்டில் வந்ததும் தம்பிமார்களுக்கும், தங்கை களுக்கும், பொரி கடலையும், பேரீச் சம்பழமும், பங்கு வைத்துக் கொடுப் பதால், நடக்கும் சண்டையை இன்று நினைக்கும் போது இன்னும் இரசனையாகவே இருக்கிறது.

இவற்றையெல்லாம் என் பிள் ளைகள் அனுபவிக்கத்தங்கி நிற்கா மல் திசைமாறிப் பறந்துவிட்ட காலம், என் மனத்தில் ஓர் ஆறாத பிரிவு வலியாகவே இருந்து கொண் டிருக்கிறது.

கே.எஸ்.ஜார்ஜ் காசநோயில் இறந்த செய்தி, பத்திரிகையில் வாசித்த போது என் மனம் சிறகு கட்டியது, வேட்டமங்கலம் உற்சவப் பந்தலுக்கு. அப் பந்தலில் வைத்து தான் அவரைக் கண்டதும், அவரு டைய நாடக இசைகள் கேட்டதும், எத்தனை கலைஞர்களைப் பார்க்க வாய்ப்பு தந்த பந்தல் அது!

நிணநெடியையும், சாம்பலின் காரமான வாடையையும் என் மூக் கைத் துளைத்துத் திணிக்க அங்கு வந்த காற்றின் கால் தடங்களைத் தேடி மனம் பயணம் செய்தது.

"மாமா" குரல் கேட்டு தலை நிமிர்ந்தேன். ஒளிமயமான அறை. முன்னால் விரித்துவைத்தபடி கிடக் கும் தடித்த கணக்குப் புத்தகம். விரல் இடுக்கில் முனை காய்ந்த பேனா, நைனா பொக்கு வாய் நிரம்பப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தார். எப்பவும் என் னுடன் நெருக்கமாக நின்றுகொண் டிருக்கும் நைனா என்னிலிருந்து அகன்று நிற்பதாகத் தோன்றியது. டேபிள் பேன் சுழற்றி விட்ட காற்றில் நைனாவின் மேல் துண்டு என் உடம்பை உராய்ந்து கொண்டிருந் தது. இருந்தாலும் எங்களுக்கிடை யில் அந்நேரம் முதல் ஓர் இடைவெளி வந்து விட்டது. ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

"ஊருக்குப் போகலையா"?

"போகல்ல. ஊர்லே குழப்பம், வேட்ட மங்கலம் யானை வருது"

"வந்தா ஒமக்கென்னவாம்...?"

"பயமா இருக்கு."

"என்னவேய் பயம்?"

நைனா இறங்கிப் போன பிறகு சுவர் மணியைப் பார்த்தேன். பத்தே கால். வழக்கமாக இட்லி சாப்பிடும் பிள்ளைவாள் கடை அடைத்திருக் கும். நைனா இவ்வளவு நேரம் இங்கேதான் இருந்தாரா? என்ன செய்து கொண்டிருந்தார்...?

எழும்பி நெல்களத்திற்கு வந்தேன்.

இரவு மணி பத்து கடந்து விட்டதால், இரண்டாவது ஷிப்டில் ஆலை இயங்கிக் கொண்டிருந்தது. என் இதயம் வழியாக மோட்டார் பெல்ட் ஓடிக்கொண்டிருந்தது. அது என்னையும் கலங்கி மறியும் என் ஊரையும் இணைத்தது.

நாளை மறுநாள் வேட்டமங்கலம் யானை ஊர்வலமாகச் செல்லும் காட்சி மனத்தில் படபடப்பை உண்டு பண்ணிக்கொண்டிருந்தது. என் மனைவி, மக்கள், ஓலை வேய்ந்த பழைய மண் வீடு, என் உறவினர்கள், என்னுடைய கிராமம்! பைத்தியம் பிடித்துப்போன என் கிராமத்தை ஒரு சுற்று சுற்றி வந்தேன். நீறாய்க் கிடக்கும் வீடுகள், வெட்டிச் சாய்க் கப்பட்ட தென்னைகள், வாழைகள், இரத்தம் காய்ந்து பொருக்காய்க் கிடக்கும் சலனமற்ற தெருக்கள்; பயந்து மிரண்டோடிய மக்களின் காலடித்தடங்கள்.

குழல் விளக்கொளியில் நெல் களத்தில் நின்றுகொண்டு நைனா போன வழியில் தேங்கிய இருட்டை வெறித்துப் பார்த்தேன். இருட்டி லிருந்து என்னைத் திருப்பி வெறித் துப் பார்க்கும் நைனாவின் கண் களைக் கண்டேன். என் உள்ளில் உணர்ந்த ஒரு சக்தி, நைனாவி லிருந்து என்னைப்பிரித்து பல கல் தொலைவில் கொண்டு நிறுத்தியது. எங்களுக்குள் இனி நடந்து நெருங்க முடியாத படியான முட் புதர்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதைகளின்

இரு தொங்கல்களில் இருவரும்; நைனாவின் ஒவ்வொரு சொல்லிற்கும் அசைவிற்கும், வித்தியாசமான புது அர்த்தங்கள் தேடியது என்னுடைய உணர்வு.

தேடிப் பிடித்த புது அர்த்தங்களில் நைனா எனக்கு எதிரியாகி விட்டார்.

இப்போது நான் எதிரி முகாமில். எனக்குச் சுற்றிலும் எதிரிகள், நைனா, நைனாவின் பிள்ளைகள்; மாமி எல்லாரும்.

இங்கு நான் தனித்தவன்!

மரண பயம் என்னைச் சூழ்ந்து கொண்டது. தற்காப்புக்கான வழிகள் தெரியாத குழப்பத்தில் சிக்கித்தவித்தேன்.

பொன்னய்யனின் பிள்ளைகள் உடம்பில் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களுக்கு என் பிள்ளைகளோ, என் பிள்ளைகள் உடம்பில் மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களுக்கு பொன்னய்யனின் பிள்ளைகளோ பலியாவது எந்நேரமென்று தெரியாது.

நாளை மறுநாள் பகல், வேட்டமங்கலம் யானை கடலில் நீராட ஊர்வலமாகச் செல்கிறது!

நேரம் விடிந்து புலரும் பகல் ஞாயிறு. மதிய உணவு, நைனாவின் மனைவி கையால் ருசிமிகுந்த அந்த சாம்பாரும், அவியலும், இனி தனக்கு ருசிமிகுந்ததாக இருக்குமா? இவர்களெல்லாம் என்னையும் என் பிள்ளைகளையும் கொல்வதற்குப் பகடைக்காய் நகர்த்தும் பகைவர்கள்?

என்னுடைய அடிமடியில் மாமாவின் உயிர்நாடி 'வெள்ளைத்தான்' கணக்கு!

வருமான வரி அதிகாரிகள், ஜீப்பில் என் கண் முன்னால் பாய்கின்றனர். ஓட்டுத் தரையில் நான் வளர்தத நெருப்பில், என் அடிமடியிலிருந்து எடுத்துப் போட்ட நைனாவின் உயிர் நாடி பற்றி எரிந்து சாம்பலாகிக் காற்றில் பறக்கின்றது. நைனா பாப்பராகி நடுத். தெருவில் கம்பூன்றி நடந்து செல்கிறார்.

நைனாவின் உயிர் நாடியை' அலுவலக மேஜை வலிப்பிற்குள் பத்திரம் பண்ணினேன்.

தீய எண்ணங்கள் முளைத்துப் போன மனத்தை மறைத்துக் கொண்டு, நைனாவின் வெள்ளை மனசுக்கு முன் இனி கூசி நிற்கவா...?

நான் இருட்டைக் கீறினேன்.


நகரத்தின் ஆள் ஓய்ந்த விளிம்பில், பாதி ரா இருட்டில் ஒளிர் விட்டுக் கொண்டிருந்தது, இரயில் நிலையம். அங்கு கிடந்த பெஞ்சில், வடக்கிலிருந்து தெற்குத்திசை நோக்கிச் செல்லும் 'ஜெயந்தி-ஜனதா' இரயிலுக்காக உட்கார்ந்திருந்தேன்.

உட்கார்ந்திருந்த என் கண் முன்னால் கிராமம் பற்றி எரிந்து கொண்டிருந்தது.

'இரயில் இறங்கிய இடத்திலிருந்து மலர் மாலை ஒன்று வாங்கி, வேட்டமங்கலம் யானை ஊருக்குள் நுழையுமிடத்தில் அணிவித்தால், கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கும் நெருப்பு அணைந்து விடக்கூடுமோ?'

குருஸ்தலம் ஆலங்குடி

— கலைமாமணி மா. வரதராஜன்



★ ஸ்ரீ கலங்காமற் காத்த விநாயகர்

வான் பொய்ப்பினும் தான் பொய்க்காத காவிரி பாயும் சோழ நாட்டிலே, தஞ்சை மாவட்டத்தில் வலங்கைமான் வட்டத்தில் கும்பகோணம் - மன்னார் குடி பஸ் மார்க்கத்தில் உள்ளது ஆலங்குடி. கும்ப கோணத்திலிருந்து தெற்கே 17 கி.மீ. தொலைவிலும் நீடாமங்கலத்திலிருந்து வடக்கே 7 கி.மீ தொலைவிலும் உள்ளது. தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டு 274 திருத்தலங்களில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களில் 98-ஆவது தலமாக விளங்கிவரும் தலம் ஆலங்குடியாகும்.

இந்தத் தலம் காசி ஆரண்யம், திருஇரும்பூளை, ஆலங்குடி என்ற பெயர்களால் வழங்கப் பெறுவது. திருஞானசம்பந்தப் பெருமானால் "எழிலார் இரும் பூளை" என அருளப் பெற்றது.

வடவரையை மத்தாக்கி, வாசுகியை நாணாக்கி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது அமிர்தம் வருவதற்கு முன்பாக ஆலகால விஷம் வந்ததாம். அதனைக் கண்டு அஞ்சி நடுநடுங்கி அபயம் புகுந்த தேவர்களின் வேண்டுகோளுக்கிரங்கிய சிவபெருமான், தோழனாகிய சுந்தரமூர்த்தியைக் கொண்டு விஷத்தை எடுத்து வரச் செய்து, அதனைத் தம் கண்டத்துள் அடக்கி "நீல கண்டம்" என்று பெயர் பெற்ற தலம் இந்த ஆலங்குடிதான். அதனால்தான் காளமேகப் புலவரும் இங்குள்ள சிவனைப் போற்றிப் பாடியிருக்கிறார். இவ்வூரில் விஷத்தால் எவருக்கும் யாதொரு தீங்கும் ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆலகால விஷத்தை உண்டு காத்தருளியதால் இறைவனுக்கு ஆபத்சகாயேஸ்வரர் என்ற பெயர் உண்டு. இறைவியின் பெயர் ஏலவார்குழலி அம்மை ஸ்தல விருக்ஷம் பூளைச்செடி.

நாம் இப்போது அன்பர்களை இந்த குருஸ்தலத்திற்கு அழைத்துச் செல்கிறோம். பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கே அரை கி.மீ. நடந்து போகிறோம். அதோ உயரமான மதில்களுடனும் ஐந்து நிலை ராஜ கோபுரத்துடனும் காட்சியளிக்கிறதே, அதுதான் அருள்மிகு ஆபத்சகாய சுவாமி திருக்கோயில்.

ஊரின் மத்தியில் உள்ள இந்தத் திருக்கோயில் நான்கு புறமும் அகழியால் சூழப் பெற்றுள்ளது தென்புறம் அமைந்த கோபுரத்தில் பழைமையான சிற்பங்கள் நிறைந்திருக்கின்றன. கோபுர வாயிலுள்ளே நுழைந்ததும் மேலக் குடைவரையில் கலங்காமல் காத்த விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. அவரை வணங்கி உள்ளே நுழைந்தால், முதல் பிராகாரம் காணப்படுகிறது. எதிரே தெற்கு நோக்கி இருப்பது ஏலவார்குழலி அம்மை சந்நிதி.

கொஞ்சம் உள்ளே போய் மேற்கு நோக்கித் திரும்பு கிறோம். அங்கு ஆலயத்தின் செயல் அலுவலர் திரு. ஆர். ராதாகிருஷ்ணன் அலுவலகத்தில் இருக்கிறார். நம்மை நாம் அறிமுகப்படுத்திக் கொள்கிறோம். அவர் மிகுந்த அன்புடன் வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் செல்கிறார்.

இப்போது நாம் அவருடைய அலுவலகத்தை அடுத்துள்ள இரண்டாவது வாயிலைக் கடந்ததும் உள்ளே தென்புறம் உள்ள கீழ்த் திருமாளப் பத்தியில் சூரியர் சந்நிதி இருக்கிறது. தென்புறம் உற்சவ சுந்தர மூர்த்தி சுவாமிகள் அழகிய திருக்கோலத்துடன் காட்சியளிக்கிறார்.

அடுத்தாற்போல் தெற்குத் திருமாளப் பத்தியில் (உள் பிராகாரத்தில்) சமயக் குரவர் நால்வரின் திருவுருவங்களும், சூரியேசர், சோமேசர், குரு மோக்ஷேசுரர், சோமநாதர், சப்தரிஷிநாதர், விஷ்ணு நாதர், பிரம்மேசர் ஆகிய சப்த லிங்கங்களோடு காசி விசுவநாதர், விசாலாட்சி, அகத்தியர் உள்ளனர்.

மேலத் திருமாளப் பத்தியில் ஆக்ஞா கணபதி சோமாஸ்கந்தர், பெரும் திருவுருவத்துடன் கூடிய கலங்காமல் காத்த விநாயகர், நின்ற கணபதி, சந்திர சேகரர், சுப்பிரமணியர், வள்ளி, தெய்வயானை, பக்தர், சண்டேசுரர், கல்யாண சாஸ்தா, ஸப்த மாதா முதலிய உற்சவர்களும் அடுத்து முருகன், இலக்குமி, இருப்பிடமும் காண்கிறோம்.



★ உற்சவர் தக்ஷிணாமூர்த்தி

வடக்குத் திருமாளப் பத்தியில் நவக்கிரகம், சபாபதி, சிவகாமி அம்மை, சம்பந்தர், மாணிக்க வாசகர் முதலியோர் காட்சி தருகிறார்கள். சபாநாதர் சந்நிதியில் திருமுறைக் கோயில் அமைந்துள்ளது. அடுத்து உற்சவ தக்ஷிணாமூர்த்தி சனகாதி நால்வருடன் காட்சி தருகிறார்.

கீழ்த்திருமாளப் பத்தி வடபுறம் பைரவர், சந்திரன் சந்நிதி உள்ளது. சுவாமி மகாமண்படத்தில் நந்தி, செப்புத் திருமேனியுடன் பலிபீடம் உள்ளது. மகாமண்டப வாயிலில் துவாரபாலகரும் கருவறையில் கிழக்கு நோக்கி ஆபத்சகாயரும் அர்த்த மண்டபத்தில் பள்ளி யறை சொக்கரும் போக சக்தி அம்மையும் உள்ளனர்.

தெற்கு கோஷ்டத்தில் கணபதியை அடுத்து இத் தலத்துச் சிறப்பு மூர்த்தியாகிய யோக தக்ஷிணாமூர்த்தி சின்முத்திரையுடன் உபதேசக் கோலத்தில் காட்சி யளிக்கிறார்.

மேலக் கோஷ்டத்தில் லிங்கோத்பவரும் வட கோஷ் டத்தில் பிரம்மா, துர்க்கை, சண்டேசுரரும், அடுத்து ஞானகூபம் என்னும் தீர்த்தக் கிணறும் உள்ளன. வெளியே சுக்கிரவார அம்மன் சந்நிதி உள்ளது. இந்த உற்சவ சுக்கிர வார அம்மனின் வலப்புறம் சரஸ்வதியும் இடப்புறம் லக்ஷ்மியும் இருக்கிறார்கள். வெள்ளிக்கிழமை தோறும் இந்த அம்மன் புறப்பாடு உண்டு.

தெற்கு நோக்கிய அம்மன் சந்நிதி தனியான பிராகாரத்துடன் உள்ளது. துவார சக்தி, செப்பு நந்தி பலி பீடமும் வடபுறம் வசந்த மண்டபமும் கீழ்ப்புறம் யாக சாலையும் பாக சாலையும் உள்ளன.

கீழ்க்கோபுர வாயில் தென்புறம் சப்த மாதாவின் ஆலயமும் ஈசானிய திக்கில் பாதாள பைரவி, காளி யம்மன் ஆலயமும் தெற்குக் கோபுர வாயில் கீழ்ப்புறம் மேற்கு நோக்கி கல்யாண சாஸ்தா ஆலயமும் தேர் முட்டிக்கருகில் கிழக்கு நோக்கியுள்ள ஆலயத்தில் கல்யாண வீரபத்ரர் தக்ஷிண விநாயகர் சந்நிதியும் உள்ளன.

திருக்கோயிலை வலம் வந்துவிட்டு செயல் அலுவலர் அலுவலகம் திரும்புகிறோம். அலுவலர் நமக்கு ஜோதி இராமலிங்க சிவாச்சாரியாரிடம் நம்மை அறிமுகப் படுத்தி வைக்கிறார். சிவாச்சாரியார் இந்தத் தலத்துச் சிறப்புகளை ரொம்பவும் பொறுமையோடு நமக்கு எடுத்துரைக்கிறார்.

பல தலங்களையும் தரிசித்து, இந்தத் தலத்திற்கு வந்து கொண்டிருந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அகத்திய காவிரி என்னும் வெட்டாறு, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்த காரணத்தால், கரையில், அடியார் களுடன் மனம் கலங்கி நிற்க, காசியாரண்யேஸ்வரராகிய ஆபத் சகாயர் ஓடக்காரனாக வந்து இக்கரைக்குக் கொண்டு வந்து விடுவதாகச் சொல்லி, பவுன்கள் பெற்று, முதலில் அடியார்களில் சிலரை இக்கரை கொண்டு வந்து சேர்த்து, மீண்டும் சுந்தரரிடம் போய் அடையாளச் சன்மானம் கேட்டுப் பெற்று அவரை ஏற்றி வருகையில், நடு ஆற்றில் திருவிளையாடலாக சுழல் ஏற்படும்படி செய்து, பற்றுக்கோலை நழுவவிட்டு எடுப்பதைப் போல் பாசாங்கு செய்து, தானும் தண்ணீரில் விழுந்து தத்தளிப்பது போல் நிற்க, படகில் உள்ள நாயனார் இறைவனை வேண்ட ஓடம் சிறிது தூரம் சென்று பாறையில் மோதி நொறுங்கியது.

சிவபெருமான் ரிஷபாரூடராகத் தோன்றியாவரையும் தூக்கிக் காப்பாற்றியதாக வரலாறு. பின்பு சுந்தரர் தலத்துக்கு வந்து, முறைப்படி வணங்கி வழிபட்டு தக்ஷிணாமூர்த்தியைத் தரிசித்து ஞானோபதேசம் பெற்றார். இந்தத் தலத்தில் உள்ள குருமூர்த்தியைக் குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு சிவஞானம் எளிதில் கைகூடும்.

அந்தக் காலத்தில் அரசாண்ட ஈச சோழ ராஜா திருவாரூரில் நடைபெற்ற விழா ஒன்றில் எல்லாத் தலங்களிலும் உள்ள சுந்தரமூர்த்தி திருவுருவங்களைக் கொண்டு வந்து விழா நடத்தினான். எல்லாச் சுந்தர மூர்த்திகளையும் விட ஆலங்குடி சுந்தரரின் திருவுரு அவன் மனத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டது. அதைத் திருவாரூரிலேயே வைக்க வேண்டுமென்று விரும்பினான். அதை அறிந்த ஆலங்குடி ஆதி சைவ சிவாச்சாரியார்கள் குழந்தைக்கு அம்மை போட்டிருப்பது

போல் தொட்டில் கட்டி ஆலங்குடி கொண்டு வந்து சேர்த்தனர். அந்த அம்மைத் தழும்புகளை இன்றும் பெருமான் மீது காணலாம்.

சுவாசனன் என்ற அரசன் பஞ்சமா பாதகங்களை அஞ்சாமல் செய்து அழிந்து நரகம் அடைந்து துன்புற்றான். பிறகு பூலோகத்தில் பைசாசமாக அலையும் போது, அகத்தியரைச் சந்தித்து அவரையும் துன்புறுத்த முயலும் போது, அவர் உபதேசித்தபடி இத்தலத்தை அடைந்து தீர்த்தமாடி வழிபட்டு, இழந்த செல்வத்தையும், பேரரசையும் திரும்பப் பெற்றான்.

முசுகுந்த சக்ரவர்த்தி தன் மந்திரியும் சிவபக்தருமான அமுதோகர் என்பவருடைய சிவபுண்யத்தில் பாதியேனும் தனக்குத் தத்தம் செய்யும்படி கேட்க, மந்திரி சம்மதிக்காததால், அவர் தலையைக் கொய்யும்படி உத்தரவிட, கொலைஞர் வாளேந்தியவுடன் சிவனாணையால் உயிர் உடனே நீங்கிற்று. இதன் அடையாளமாக அமுதோகன் என்ற சப்தம், தலம் முழுவதும் எதிரொலிக்க, அரசன் வியந்து அபசாரத்தை நினைந்து இத்தலத்து இறைவனை வழிபட்டுப் பாபம் நீங்கப் பெற்றான்.

கஜமுகாசுரனால் தேவர்களுக்கும் நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்கு 'கலங்காமல் காத்த விநாயகர்' எனப் பெயர் உண்டாயிற்று.

ஆதி சங்கரர் இத்தலத்து குருமூர்த்தியைத் தரிசித்து சிவஞானம் பெற்றார். விசுவாமித்திரர் பூஜித்த ஸ்தலம் இது. திருஞான சம்பந்தரால் பதிகம் பெற்றது. அப்பர் அடிகளால் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சேர்த்துப் பாடப் பெற்ற சிறப்புடையது. திருஞான சம்பந்தர் தமது பாடல்களால் இத்தலத்து அம்மனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

குருவாரம், பிரதோஷம், தினசரி குருஹோரையில் நாம் பிரார்த்தனை செய்வது மிகவும் உகந்தது. குருதக்ஷிணாமூர்த்திக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி, 24 நெய் தீபங்கள் ஏற்றி, 24 முறை மௌனப் பிரதட்சணம் வந்து கொண்டைக் கடலை நிவேதனம் செய்தால் குருதோஷங்கள் விலகும்.

குரு பெயர்ச்சி நாளன்று, கன்னி, துலாம், தனுசு, கும்பம், மேஷம், மிதுனம், கடக ராசிக்காரர்கள் இங்குள்ள உற்சவ மூர்த்திக்கு 24 நெய்தீபம் ஏற்றி வழிபாடு செய்வது மிகவும் புண்ணியம். கோட்சார ரீதியாக குரு பகவான் அருள் வேண்டியும் குருபகவான் ஜென்மராசிக்கு 3,4,6,8,10,12 இல் இருக்கும் போதும் குரு தசை நடைபெறும் போதும் இந்த குருஸ்தலத்திற்கு வந்து குருபகவானை வழிபடுவோர்க்கு வேண்டியன எல்லாம் கிடைக்கும்.

இத்தலத்தில் காலை சந்தி காலை 8.30 மணிக்கு. தயிர்ச் சாதம் நிவேதனம்.

12.30க்கு உச்சிக் காலம் தயிர்ச் சாதம் நிவேதனம்

மாலை 6 மணிக்கு சாயரக்ஷை. புளிச் சாதம் நிவேதனம்.

இரவு 8.30 க்கு அர்த்த சாமபூஜை சம்பா மிளகு பொங்கல் நிவேதனம்.

சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று தீர்த்தவாரி நடைபெறும். எட்டாம் திருவிழாவன்று குருவுக்குத் தேர்த் திருவிழா.

மாசி மாதம் மூன்றாவது குருவாரத்தன்று பஞ்ச மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறும். மாலை சந்தனக் காப்பு. குருவுக்கு விபூதி அபிஷேகம். அதே போல் நான்காவது குருவாரத்திலும் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெறும். அன்று குருபகவானுக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

வருடந்தோறும் குருமாறுதலின் போது லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்கள். குருப்பெயர்ச்சிக்கு முன்னும் பின்னும் லட்சார்ச்சனை நடைபெறும்."

விடைபெறும் போது செயல் அலவலர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். இத்திருக்கோயிலில் உலக நலன் கருதி நித்ய பூஜா ஆராதனைக் கட்டளை என்பதாக ஒன்றை நிறுவி, அதற்காக ரூ. 750 கட்டணமாகப் பொது மக்களிடமிருந்து பெற்று, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு மேற்படி கட்டளை நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளதாம். கட்டளைக்குக் கட்டணம் அனுப்புவோர் தங்கள் திருமண நாள், பிறந்த நாள் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் தங்களுக்கு உகந்த நாள் எதுவோ அதற்கு ஆங்கிலத் தேதியைக் குறிப்பிட்டு அன்றைய தினம் கட்டளை நடத்திட ஏற்பாடுகள் செய்யும் படி எழுதி அனுப்பினால் செய்யலாம் என்று சொன்னார்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

செயல் அலுவலர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வர சுவாமி திருக்கோயில், ஆலங்குடி-612 801, வலங்கைமான் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.



★ ராஜகோபுரம்


குயிலின் ஏக்கம்

"மஹி"

ஒற்றைக் குரல் கொடுக்கும்
ஓசைக் குயில் சோகம்
சற்றைக் கொரு தடவை
சலனப் படுத்து வதால்
கற்றைக் குழல் முகிலின்
காதலினால் ஏங்கு கிற
மற்றைய மனமயில்கள்
மயங்கித் தயங்கிடுது.

எங்கோ குயில் கொடுக்கும்
ஏக்கக் குரல் சத்தம்
சங்கேதக் காதல் மொழி
சாற்றிடுது காற்றிலதை
நங்காதில் கேட்ட வுடன்
நலம் யாவும் ஒலியாகி
தங்கிடுது நம்-மனதுள்
தவித்திடவும் வைக்கிறது.

குரலுக்கு எதிர்க் குரலாய்
குக்குக்கூ என்ற ஒலி
முரலுவதும் அதைக் கேட்டே
மூண்டெழுந்து ஆங்காரக்
குரலுடனே குயில்கூவ
எதிர்க் குரலும் நின்றுவிட
குரலினிலே ஒரு சோகம்
கைக்கிளையின் பரிதாபம்




உன்னை நினைக்கையிலே...

கருமலைப் பழம் நீ

நெல்லறுக்கப் போற புள்ளே!
நின்னு கொஞ்சம் பாரு புள்ளே!
பாதையிலே முள்ளிருக்கும்
பார்த்துநட சின்னப்புள்ளே!
காலிலே முள்ளு தைச்சா
கண்ணிரண்டில் ரத்தம் வரும்!
பார்த்துநட சின்னப்புள்ளே!
பாதையிலே முள்ளிருக்கும்!

தாழை மடல் விரியும்
தனிக்காட்டில் பூமணக்கும்!
வாழை இலை சிரிக்கும்
வண்டு வந்து முகம் பார்க்கும்!
வாய்க்கால் நீர்திரண்டு
வயலெங்கும் சுதி சேர்க்கும்!
நாய்க்குடை நிழலினிலே
நண்டுவந்து விளையாடும்!

தென்னையிளங் கீற்றினிலே
சிட்டு ரெண்டு பேசுதடி!
உன்னை நினைக்கையிலே
உள்ளமெலாம் வியர்க்குதடி!
கன்னம் சிவந்திருக்கும்
கனியிதழில் தேன்வடியும்!
இன்னும் தனித்திருந்தா
இளமையன்றோ சூடேறும்?




இன்சொல்

புலவர் கோ. கோவிந்தசாமி

அன்றலர்ந்த தாமரையாம் அதனைப் போல
அன்றாடம் முகத்தினிலே மலர்ச்சி யோடு
துன்பமதை யகற்றிவிட்ட எந்த நாளும்
துவளாத நிலையோடு இருக்கும் மாந்தர்
இன்பமதை எந்நாளும் காண்பர் நீவ
இருள்சூழ்ந்த வாழ்வினிலும் ஒளியைக் காண்பர்
வன்மமுடன் வருவோரை மயங்கச் செய்யும்
வண்டமிழ்த்தேன் சொற்களினை இயம்பி னாலே

இனிதான சொற்களையே கூறார் வாழ்வில்
இடர்தனை எதிர்கொண்டு துயருள் வீழ்ந்து
கனி இருப்பக் காய்தன்னை விழைவார் செய்கை
காலமெலாம் அவலத்தை நல்கு மன்றோ?
தனிமையிலே சிந்திப்பீர் செயல்கள் ஆற்றித்
தரணியிலே நலமோடு வாழ்வ தற்கும்
பனிவகற்றும் ஆதவன்போல் அவலம் போக்கும்
பண்புடைய சொற்களையே நவில்வீ ரென்றும்.



நள்ளிரவில் அந்த மனிதர் நடுநடுங்கிக் கூச்சலிட்டு எழுந்து, கதறி, மற்றவர்களின் தூக்கத்தையும் கெடுக்கும் அளவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி தான் என்ன?

அதிர்ச்சி

வல்லிக்கண்ணன்

இரவின் அமைதியைக் கொன்றது அந்தக் கூக்குரல். யாரோ கொலை செய்யப்படுவதால் எழுகிற அலறல் போல ஒலித்தது அது. மனிதக்குரல் போல் அல்லாது பயங்கரமாக வீறிடும் ஏதோ ஒரு மிருகத்தின் கதறல் போல அது தொனித்தது. அச்சம் கொண்டு அடித் தொண்டையிலிருந்து கதறியதான அந்த ஓலம் கேட்போருக்கு அச்சம் தந்தது.

அந்தத் தனிவீட்டின் மாடியில் இருட்டினூடே எழுந்த அந்த நீண்ட கூச்சல், கீழே வீட்டினுள் படுத்துத் தூங்கியவர்களை உலுப்பியது. என்னவோ ஏதோ எனப்பயப்பட வைத்தது.

விழித்தவர்களில் ஒருவர் தட்டுத்தடுமாறி மின் விளக்கின் ஸ்விச்சைக் கண்டு பிடித்து அமுக்கவும், பளிச்சென ஒளி பரவியது வீட்டில். வெளிச்சம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சிறிது தைரியம் கொடுத்தது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, என்னது? எது? என்ன சத்தம்? யாரு இப்படி பயங்கரமாய்க் கத்தியது? என்று கேள்விகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

'மாடியிலே தான் கேட்டுது. மாமா தானே அங்கே படுத்திருக்காங்க?' என்று ஒரு பெண்குரல் குறிப்பிட்டது.

'ஆமா மாமாவுக்கு என்ன நேர்ந்திருக்குமோ' என்று சந்தேகப்பட்டார் ஒருவர்.

ஒருவர் டார்ச் எடுத்துக்கொண்டு மாடிக்குப் போனார். அவர் பின்னாலேயே சிலர் போனார்கள்.

முன்சென்றவர் ஸ்விச்சைப் போடவும், வெடித்துச் சிதறியது வெளிச்சம். ஒளியில் குளித்துக் காட்சி தந்த மனிதர் மீது குவிந்தது அனைவர் பார்வையும்.

அவர் 'குறுகுறு என்று' உட்கார்ந்திருந்தார். அவர் உடல் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தது. அடிபட்ட மிருகத்தின் மிரண்ட பார்வை போல பீதி நிறைந்த கண்களால் அவர் அங்கு வந்தவர்களைப் பார்த்தார்.

'என்ன மாமா, நீங்கதான் அப்படி சத்தம் போட்டீங்களா?'

'என்ன அண்ணாச்சி, என்ன நடந்தது?'

'பூனை கீனை மேலே விழுந்ததனாலே பதறி அடிச்சுக் கூப்பாடு போட்டீகளா?'

ஒவ்வொருவர் ஒவ்வொன்று கேட்டனர். அவர்கள் பார்வைகள் அறை நெடுகிலும் துழாவின. ஒன்றுமில்லை. வித்தியாசமாக, விபரீதமாக, எதுவுமே தென்படவில்லை.

மாமா என்று குறிப்பிடப்பட்ட அந்த நபர் பேச்சற்றுப் போனவர் போல, மிரள மிரளப் பார்த்தவாறு உட்கார்ந்திருந்தார்.

பலரும், என்னவென்று அறிந்து கொள்ளும் தவிப்பில் ஏதேதோ கேட்க, என்ன சொல்வது என்று விளங்காதவராய் அவர் இருந்தார்.

'ஏதாவது சொப்பனம் கண்டீகளா, மாமா?'

'ஊம்ம்' என்ற ஆமோதித்தார் அவர்.

மற்றவர்களின் அறியும் அவா தூண்டப் படவும், "என்ன கனா அண்ணாச்சி?..." "பயங்கரமான சொப்பனமா மாமா?..." "கழுத்தைப் புடிச்சு நெரிக்கிற மாதிரி இருந்துதா மாமா?..." "என்னமா சத்தம் போட்டீங்க! பக்கத்து வீட்டுக்கெல்லாம் கூட கேட்டிருக்கும். அப்படி கத்தும்படி சொப்பனத்திலே என்ன வந்துது மாமா?" என்று பலப்பல கேள்விகள் பிறந்தன.

அவர்களுடைய தொணதொணப்பிலிருந்து தப்புவதற்காக அவர் ஏதாவது சொல்லியே தீரவேண்டியிருந்தது. 'நான் எங்கோ போய்க்கிட்டிருக்கேன். திமுனு நாலஞ்சு பேரு வந்து என்னை புடிச்சுக்கிட்டு, அப்படியும் இப்படியும் இழுக்கிறாங்க. இவனைக் கயித்தைக் கட்டி மரத்திலே தொங்கவிடுவோம்கிறான் ஒருத்தன். நீண்ட கத்தியாலே சதக்குனு என் வயித்திலே குத்துறான் இன்னொருத்தன். ஒரு தடியன் என் குரல்வளையைப் பிடிச்சு அமுக்தி... சே, ரொம்ப மோசமான கனவு'– திக்கித்திணறிச் சொன்னார் அவர். இன்னும் பயத்தின் பிடியிலேயே அவர் இருப்பதாகத் தோன்றியது.

'உத்திரத்துக்கு அடியிலே படுத்திருக்கீங்க, அதுதான். உத்திரத்துக்கு நேர்கீழே படுத்துக்கிடந்தால் இப்படித்தான் கண்ட சொப்பனம் எல்லாம் வரும்' என்று உறுதியாய்ச் சொன்னார் ஒருவர்.

'வடக்கே தலைவச்சுப் படுத்திருந்தீகளா, மாமா? அப்ப தான் சரியான தூக்கமும் இருக்காது; மோசமான சொப்பனங்களும், தோணும்' என்று அறிவித்தாள் ஓர் அம்மாள்.

மணியைப் பார்த்தார் ஒருவர்.

சரியாகப் பன்னிரண்டு!

நடுச்சாம நேரம். பேய்கள் உலாவரும் வேளை.

'ஆ அதுதான்!' என்று மர்மமாகச் சொல் உதிர்த்தார் ஒரு பெரியவர். 'இந்த மச்சிலேயே ஒரு பொம்பிளை ஒருசமயம் தூக்குப் போட்டுச் செத்துப் போனா. அவ ஆவி இங்க தான் சுத்திக்கிட்டுத்திரியுது. அது தான் இவரைத் தொந்தரவு செய்திருக்கும்' என்றார்.

"அப்படித்தான் இருக்கும்" என்று மற்றவர்கள் ஒத்து ஊதினார்கள்.

'இன்னும் நேரம் நிறையக் கிடக்குது. தூக்கத்தைக் கெடுத்து இருப்பானேன்? எல்லாரும் கீழே போய்ப் படுப்போம்' என ஒருவர் நல்ல யோசனை சொன்னார்.

மாமா என்று பலரால் அழைக்கப்பட்ட நபருக்கும் அந்த யோசனை கூறப்பட்டது. அவரும் அதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

அனைவரும் கீழே போனார்கள். வசதியாய்ப் படுத்தார்கள். பயங்கரமாகக் கத்தி அனைவரையும் பதறி எழச் செய்த நபரும், உத்திரத்தின் கீழே வராத ஒரு இடத்தில், கிழக்கும் மேற்குமாய், கிழக்கே தலைவைத்துப் படுத்தார்.

தூக்கம் உரிய வேளையில் ஒவ்வொருவரோடும் உறவுகொண்டது. பயந்து அலறியவரும் தன்னை அறியாமலே தூக்கத்தில் ஆழ்ந்து விட்டதாகத் தோன்றியது.

அவருக்கு நாற்பது வயதுக்குள் இருக்கும். ஆரோக்கியமானவராகத் தான் தென்பட்டார். மனஉளைச்சல் மனிதனைப்படுத்திக் கொண்டிருந்ததோ என்னவோ!

சுவர்க்கடிகாரம் இரண்டு மணி என அடித்துச் சொன்னது.

அந்த அறையில் எல்லாரும் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

மீண்டும் அந்த பயங்கர அலறல் வெடித்தது. நெஞ்சின் மீது எதுவோ உட்கார்ந்து கொண்டு, கழுத்தைப் பிடித்து பலமாக அமுக்குவதால் மூச்சுத் திணறி, வேதனையால் சிரமப்பட்டு, ஓங்கிக் குரல் எடுத்துக் கத்த முயன்று, அப்படிக் கதற முடியாமல் திணறித் தவிக்கிற முறையில் அந்தக் குரல் ஒலித்தது.

தூங்கிக் கொண்டிருந்த அனைவரையும் உலுக்கி எழச்செய்தது அது.

யாரோ வேகமாக ஸ்விச்சைப் போட்டார்கள். பாய்ந்து சிந்திய வெளிச்சத்தில், அந்த அப்பாவி மனிதன் நெளிந்து புரண்டு தவிப்பது தெரிந்தது. அவர் முகம் விகாரமாகத் தோன்றியது.

'மாமா மாமா' என்று பதறித் தெறித்தன குரல்கள். 'எழுந்திருங்க, முழிச்சிருங்க' என்று துரிதப்படுத்தினார் ஒருவர்.

அந்த ஆசாமி திகைப்புடன் விழித்து எழுந்தார். திருதிருவென விழித்தபடி உட்கார்ந்தார். கால்களை மடக்கி, முழங்கால்கள் மீது முகம் பதித்து, மற்றவர்கள் முகங்களைப் பார்க்க நாணப்படுகிறவர் போல் இருந்தார்.

'திரும்பவும் என்ன மாமா இது?' என்று ஒரு பெண் கேட்டாள்.

'உங்களுக்கு என்ன பண்ணுது? ஏன் இப்படி பதறிப் பதறிக் கத்துறீங்க?' என்று ஒருவர் விசாரித்தார்.

'உச்சிப்பட வேளையிலே எங்கேயோ பயந்திருக்கான். அது தான்' என்று ஒரு பெரியவர் சொன்னார்.

பயந்து அலறியவர் எதுவும் சொல்லவில்லை. என்ன சொல்வது என்று புரியாத மவுனநிலையில், 'பிடித்து வைத்த பிள்ளையார்' மாதிரி அசையாது உட்கார்ந்திருந்தார்.

ஒவ்வொருவராக அலுத்துச் சலித்து, தரையில் சாய்ந்தார்கள். "இன்னும் விடிய நேரம்கிடக்கு; தூங்குங்க" என்றார்கள். "விளக்கு எரியட்டும். அணைக்க வேண்டாம்" என்றது ஒரு குரல்.

மாமாவும் உட்கார்ந்து அலுத்துப் போய் படுக்கையில் சரிந்தார். கண்களை விழித்தபடி கிடந்தார். எவ்வளவு நேரம் அப்படி இருக்க முடியும்? கண்கள் தாமாக மூடின. மெது மெதுவாக தூக்கமும் வந்தது.

சுவர்க்கடிகாரம் மூன்று ஒலிகளை உதறியது. அப்புறம் ஒற்றை ஒலியைச் சிந்தியது. பிறகு நான்கு ஒலிகளைக் கொட்டியது. டிக்-டிக் ஓசை ஓயாது ஒலித்துக் கொண்டிருந்தது.

மீண்டும் அந்தக் கோரமான ஒலி அந்த ஆளின் அடித்தொண்டையிலிருந்து வெளிப்பட்டு, தெளிவு படுத்த முடியாத நீண்ட குரலாகச் சிதறியது. பயம் அதன் அடிநாதமாக இருந்தது.

எல்லாரும் அலறிப்புடைத்து எழுந்தார்கள்.

எல்லா விளக்குகளையும் எரிய விட்டார்கள்.

"என்ன மாமா இது?... உங்க மனசிலே இருக்கிறதைத் தான் சொல்லுங்களேன்... யாராவது பயமுறுத்தினாங்களா மாமா?... எங்காவது எதைக் கண்டாவது பயந்தீங்களா?... அய்யோ, இன்னிக்கு என்ன தான் நடந்துது? ஏன் இப்படி பதறிப் பதறி அலறுறீங்க?..."

அவர்கள் தெரிந்து கொள்ள விரும்பினார்கள்.

மாமா தனது அமைதியையும் கெடுத்துக் கொண்டு, வீட்டில் உள்ள அனைவரது அமைதியையும் சீர்குலைத்து, என்ன ஏது என்று எதுவும் சொல்லாமல் முரண்டு பிடிப்பதனால் என்ன பிரயோசனம்? அந்தி சந்தியிலே பயந்திருந்தால், பேய் பிசாசு குத்தம் என்று சொன்னால், தகுந்த மந்திரவாதியைப் பார்த்து உரிய நடவடிக்கை எடுக்கணும். உள்ளுக்குள்ளே ஏதாவது கொணக்கிக்கிட்டு இருந்தது. என்றால், டாக்டரைப் பார்த்து நோய்க்கு சிகிச்சை பண்ணணும்...



வீடு கலாமுலாமாயிற்று. ஆள்ஆளுக்கு ஆலோசனைகளை உதறினார்கள்.

"ஒண்ணும் சொல்லாமல் இருந்தால் என்ன தான் அர்த்தம்? பகலிலே என்ன நடந்துது? ராத்திரியிலே இப்படி பதறிப்பதறி அலறும்படியா ஏதோ நடந்துதான் இருக்கணும். சொல்லுங்க. வாய் திறந்து சொல்லுங்க. மனசிலே புதைச்சு வச்சு கஷ்டப்பட்டு, மத்தவங்களையும் கஷ்டப்படுத்தி, இதெல்லாம் எதுக்கு?..."

பேச உரிமை உடையவர்கள் பேசி, தூண்டித் துருவி, துளைத்தெடுத்தார்கள். மனசில் இருப்பதைச் சொல்லி விடுவது நல்லது என்று அவரை உணர வைத்தார்கள்.


திகைத்துப் போய் உட்கார்ந்திருந்த அவர் சிறிது சிறிதாகத் தனது அனுபவத்தைச் சொன்னார். அவருக்கு அதிர்ச்சி ஏற்படுத்திய அனுபவம் அது. விபரீதமான பயங்கர அனுபவம் தான்:

அன்று பிற்பகல் ஒன்றரை மணி இருக்கும். வேலை செய்யும் இடத்திலிருந்து அவர் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

ஆள் நடமாட்டம் அதிகமில்லாத பாதை. அங்கு ஒதுங்கிய ஓர் இடத்தில் தனித்து நின்றது. 'பொதுக்கழிப்பிடம்'- 'பப்ளிக் கன்வீனியன்ஸ்'. அவர் அதனுள் புகுந்தார். அந்தச் சமயம் வேகமாக ஒருவன் உள்ளிருந்து வெளியே ஓடி வந்தான். வாசலில் அடிஎடுத்து வைத்திருந்த அவரை இடித்துத் தள்ளிவிடுவது போல் முரட்டுத்தன வேகத்தோடு அவன் வெளிப்பட்டான். "மாடு மாதிரி கண்ணு தெரியலே, எதிரே ஆளு வர்றதைப் பார்க்க வேண்டாமா?" என்று அவர் குறைபட்டுக் கொண்டார். ஆனால்

கவிஞர் ஆற்றலரசு

அதிசய வாழ்வு



யாரறிவார் யாரறிவார் அதிசயம் - உலகில்
யாரறிவார் வாழ்க்கை எனும் ரகசியம்!
தன்னையறிந்து வாழ்வதிங்கு அவசியம் - என்றும்
தரமறிந்தே வாழ்வதுதான் இலக்கியம்!

பிறப்பு என்றால் இறப்பு உண்டு நிச்சயம் - உயிர்
பிறவிமீண்டும் இல்லைஎன்றால் புண்ணியம்!
கடமைகளைச் செய்வதுதான் கண்ணியம் - அன்பு
காணும் நெஞ்ச வாழ்வெல்லாம் திருத்தலம்!

காற்றும் நீரும் விண்மீன்களும் தெய்வமே - இதை
கைகூப்பி வணங்குவோர்க்கு யோகமே!
மாற்றம்செய்ய முடியாதது விதியப்பா - அதை
மதியாலிங்கு மாற்றுவதும் விதியப்பா!


இரு துருவங்கள்

கலாபாரதி

இறைவன் படைப்பில்தான் எத்தனை அழகு! எத்தனை அழகு!
அத்தனையும் அற்புதம்! அத்தனையும் ஆனந்தம்!

நீலப் பெருங்கடலும், நீலநெடுவானும்,
நித்திலமும், வெண்ணிலவும்,
கோலமயில், கிளி, குன்றொத்த யானையும்தான்
கொத்தவரும் நாகமும் கோடிகோடி அழகாகும்.

இறைவன் படைப்பில்தான் எத்தனை அவலங்கள், அலங்கோலங்கள்!
இயற்கையென்னும் பெயரில் தள்ளப்படும் வக்கிரங்கள்



கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, முடம், சப்பாணி
எத்தனையோ ஊனங்கள்!
வானகத்தின் கோர ஒலி செத்துவிட்ட
காட்டுமுயல் மானின் துர்நாற்றம்.

எதிர்மறை இரு துருவங்களை
எடுத்துக் காட்டவா, இறைவா, இத்தகு படைப்புகள்!
புதிர்உறையும் தத்துவங்கள் எனக்குப்
புரியவே இல்லை - விடை எனக்கு விளங்கவில்லை.

அந்தத் தடியன் எதையும் கவனிக்க வில்லை. எதிலிருந்தோ தப்பி ஓடுவது போல, ஒரு பதற்றத்துடன், தாவிப் பாய்ந்து ஓடினான்.

அவர் மறு எட்டு எடுத்து வைப் பதற்குள் இன்னொருவன் வெளிப் பட்டான். அவன் வயிற்றிலிருந்து ரத்தம் பொங்கி வடிந்தது தான் அவர் பார்வையை முதலில் தாக்கியது. அங்கே ஒரு கத்தி செருகப்பட்டிருந்தது. ரத்தம் மேலும் மேலும் குபுகுபுன்னு வந்து கொண்டிருந்தது. அவன் மூச்சு இழுத்து மூச்சு விடுபவன் போல் வாயைப் பிளந்து பிளந்து மூடினான். எதுவும் சத்தமிட வில்லை. முதலில் ஓடிய தடியன் தான் அவனைக் குத்தியிருக்க வேண்டும். கத்தியால் குத்தி விட்டு அவன் தப்பி ஓடியிருக்கிறான் என்று மாமாவுக்குப் புரிந்தது.

பட்டப்பகலில், ஒரு தெருவில், 'பப்ளிக் கன்வீனியன்'சுக்கான ஓர் இடத்தில் ஒரு கொலை முயற்சி! பளீரிடும் ரத்தமும் வயிற்றில் செருகிய கத்தியும் இந்த உண்மையை அவர் மூளையில் அறைந்தன. அவர் பதறினார். உள்ளே போகாமல், இயல்பாக எழுந்த தற்காப்பு உணர்வு உந்த வேகமாகத் திரும்பி ஓடலானார். ஓடுவது தவறு; நாம் தான் குற்றம் செய்து விட்டு ஓடுகிறோம் என்று பார்க்கிற யாராவது எண்ண நேரிடும் என உள்ளுணர்வு புலப்படுத்தியது. அதனால் ஓட்டத்தைக் கட்டுப் படுத்தினார். திரும்பித் திரும்பிப் பார்த்த படி வீட்டை நோக்கி வேகமாக நடந்தார். நல்ல வேளை. ரோடில் யாரும் இல்லை. குத்துப்பட்டவன் கொஞ்ச தூரம் நடந்து, தள்ளாடி விழுந்தது தெரிந்தது. அப்புறம் அவர் திரும்பிப் பாராமலே நடந்தார். கடவுளே! யாரும் வராமல் இருக்கணும்; போலீஸ் வராமல் இருக்கட்டும் என்று மனசில் பிரார்த்தித்துக் கொண்டே வேகம் வேகமாக நடந்தார். அவர் தவறு செய்ய வில்லைதான். இருந்தாலும் போலீஸ் சந்தேகப்படும். விசாரணை, ஸ்டேஷன் என்று இழுத்துப் போகும். வீண்பொல் லாப்பு எதுக்கு? மனசுக்குள் பயம் திக்திக்கென்று அடித்தது. அடித்துக் கொண்டேயிருந்தது. கத்திக்குத்தும், பொங்கி வழியும் ரத்தமும், ஓசையின்றி வாயை வாயைப் பிளந்த அந்த ஆளின் முகத்தோற்றமும் அவர் கண்ணுக் குள்ளேயே நின்றன. மனசில் ஆழப் பதிந்துவிட்டன. அந்த பயங்கரம் அடிக் கடி பூச்சாண்டி காட்டியது. அத்துடன் போலீஸ் வந்து தன்னைப் பிடித்து மிரட்டக்கூடும் என்று பயம் வேறு. அதனாலே இதை யாரிடமும் அவர் சொல்லவில்லை; சொல்ல விரும்ப வில்லை. அதுவே மனசைக் குடைந்து கொண்டிருந்தது. தூக்கத்தில் பயங்கரக் கனவாய் வந்து அவரை அலறச் செய்தது...

அவர் சொல்லச் சொல்ல மற்றவர்கள் கிலிபிடித்தவர்களாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந் தார்கள். 'என்ன சொல்வது என்றே அவர்களுக்கு விளங்கவில்லை.



சென்னை கந்த கோட்டத்துள்வளர் தலம் ஓங்கு கந்தவேள்



அண்ணன் வீடு

அனுராதா ரமணன்

புவனா வந்திருக்கிறாள்.

வீட்டு வாசற்படியில் அடியெடுத்து வைக்கும்போதே சிரிப்பும், கூச்சலும் எதிர்கொண்டழைக்கிறது. சியாமளாவின் முகம் சுருங்குகிறது. ஒரு க்ஷண நேரத்தில் உஷ்ணம் தலைக்கேறுகிறது.

ஆட்டோ டிரைவரிடம் பணத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பிய மகாதேவன் - மனைவியின் முகத்தையும், வீட்டுக்குள்ளிருந்து வரும் ஆரவாரத்தையும் ஒரு சேரக் கண்டவர் தடுமாற...

முதலில் வெடித்தது சியாமளா தான்.

"அவ வந்துட்டா.."

"..................."

"ஏங்க... ஒருத்திக்கு வெட்கம், மானம், சூடு, சொரணை எதுவுமே இருக்காதா? புருஷன் உத்தியோக விஷயமாக டூர் போனா - இவ உடனே, நம்ம வீட்டுக்கு வந்து டேரா போடணுமா?"

"அதில்லே சியாமா... வந்து.."

"என்ன வந்து... போய்... யோசிச்சுப் பாருங்க. பத்து பதினஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே நீங்க போகாத டூரா? கையில ஒரு பிள்ளை, வயித்துல ஒரு பிள்ளைன்னு ஒண்டியா இருந்து, நான் சமாளிக்கலையா?"

"வாஸ்தவம். ஆனா, இவ இருக்கற இடத்துல அது மாதிரி படிச்ச, நாகரிக ஜனங்கள் கிடையாது. பக்கத்துலேயே குப்பம். பொழுது விடிஞ்சு, பொழுது போனா அடிதடி, தகராறு... இவ கொஞ்சம் வசதியான எடத்துப் பொண்ணு. பயந்த சுபாவம்.."

"அதுக்காக... மாசத்துல இருபது நாள் இங்கே வந்துடறதா? அங்கே குடியிருக்க முடியலையின்னா எடத்தை மாத்தறது... இல்லேன்னா ஊருலேயிருந்து அப்பா, அம்மா - மாமியார், மாமனார்னு யாரையாவது கொண்டு வந்து துணைக்கு வச்சுக்கறது... நாம என்ன சொந்தமா... பந்தமா? உங்களை அண்ணன்னும் என்னை மன்னின்னும் வாய் நிறையக் கூப்பிடறப்ப - எனக்கு வயிறு பத்தி எரியறது - உங்க கூடப் பொறந்த தங்கைகூட இது மாதிரி கூப்பிட்டதில்லே.."

"..................."

"ஆபீஸ் சமாச்சாரத்தை, ஆபீசோட வச்சுக்கணும். இன்னிக்கு வீட்டுக்காரர் ஊருல இல்லேன்னு உங்க ஆபீஸ் ஸ்டெனோ நம்ம வீட்டுல வந்து தங்கறா... நாளைக்கு, 'நாங்க எல்லாரும் கல்யாணத்துக்குப் போறோம்; எங்க குழந்தைங்களைப் பார்த்துக்குங்க'ன்னு உங்க ஆபீஸ் பியூன் வந்து பசங்களை இங்கே தள்ளிட்டுப் போவான். நான்தான் இருக்கேனே... வந்தவங்களுக்கு எல்லாம் வடிச்சுக் கொட்ட.."

மகாதேவன் வாயைத் திறக்கவில்லை.

இது போன்ற சமயங்களில் அவர் பேச ஆரம்பித்தால் - அப்புறம் அவருக்கே அந்த வீட்டில் இடம் கிடைக்காது என்பது அவருக்குத் தெரியும்.

கறுத்த முகத்துடன் சியாமளா வீட்டுக்குள் நுழைய - பின்னாலேயே பதுங்கினாற்போல மகாதேவனும் நுழைய...

உள்ளே சோபாவில் குறுக்கு வாட்டில் சாய்ந்தபடி - அவரது பிள்ளை முரளி... கையில் ஒரு தட்டில் சப்பாத்தி குருமா...

இந்தப் பக்கம் தரையில் உட்கார்ந்து டி.வி. திரையில் ஒரு கண்ணும், டிபன் தட்டில் இன்னொரு கண்ணுமாய் இளையவள் ரமா...

மூன்றாவது வாண்டு, புவனாவின் தோளில் உப்பு மூட்டையாய் சவாரி செய்து கொண்டிருந்தது.

"ஹேய்... அப்பா, அம்மா வந்தாச்சு.."

"ஏம்மா லேட்டு? கறிகாய் வாங்கிட்டு வந்துடறோம்னு பொய்தானே சொன்னே? எங்களுக்கெல்லாம் பசி வந்துடுத்து.."

பதின்மூன்று வயதுச் சிறுவன் முரளி, ஆங்காரத்துடன் பெற்றவளை அதட்ட...

அவள், இது வரையில் சேர்த்து வைத்திருந்த கோபத்தை எல்லாம் குழந்தைகள் மீது விசிறினாள்.

"லேட்டானா என்னடா? அதான் உப்புமா செஞ்சு வச்சிட்டுப் போயிருந்தேனே! உங்களுக்கு சோத்துக்கில்லாம நடுத்தெருவுலயா விட்டுட்டுப் போனேன்? இந்த வீட்டுல அடியெடுத்து வச்ச நாள் முதலா - நான், எங்கேயாவது வெளியில வாசல்லே போயிருக்கேனா? எனக்கு மட்டும் ஆசை இல்லையா? இதோ அடி நிலத்துல இருக்கான் எங்க அண்ணா... ஒரு நாள் அவன் வீட்டுக்குப் போய் 'அக்கடா'ன்னு இருந்திருக்கேனா? முளைச்சு மூணு இலை விடல்லே. அதட்டறியே... உன்னை எல்லாம் வைக்கிற எடத்துல வைக்கணும்.."

அண்ணன் என்று உரிமையோடு உறவு கொண்டாடிக் கொண்டு புவனா அடிக்கடி தங்கள் வீட்டில் வந்து தங்குவதை விரும்பாத மகாதேவன், அதைத் தடுக்க விரும்பி, ஒருநாள் அவள் வீட்டுக்குச் சென்ற பொழுது, அங்கே அவன் கேள்விப்பட்ட செய்திகள்...?

அவ்வளவுதான். சிறுவன் புறங்கையால் கண்ணைத் தேய்த்துக் கொண்டே, கையிலிருந்த டிபன் தட்டை அப்படியே தரையில் வைத்து விட்டு எழுந்து விட்டான்.

"ஏன் வேட்டுன்னுதானே கேட்டான் அவன்! அதுக்கு ஏம்மா இப்படி கத்தறே? உனக்கே தெரியும்... அவனுக்கு உப்புமா பிடிக்காதுன்னு... நல்ல வேளை... புவனா அக்கா வந்தாளோ - அவனுக்கு சப்பாத்தி குருமா செஞ்சு தந்தா... அதையும் பாதியிலேயே... போம்மா... உனக்கு யார் மேலேயோ இருக்கற கோபத்தை எல்லாம் எங்ககிட்டத் தான் காட்டுவே.."

ரமா, முரளியை விடவும் சின்னவள் என்றாலும், 'வெடுக் வெடுக்'கெனப் பேசுவதில் தாயை மிஞ்சுபவள்.

புவனா - முரளியின் தட்டை எடுத்துக்கொண்டு அவன் பின்னாலேயே ஓடினாள்... அவனிடம் என்ன சொல்லி சமாதானப்படுத்தினாளோ, அடுத்த ஐந்தாவது நிமிஷத்தில் புன்னகையுடன் மகாதேவனுக்கும் சியாமளாவுக்கும் டைனிங் டேபிளில் தட்டு போட்டுப் பரிமாறினாள்.

அப்பொழுதுகூட சியாமளாவின் கோபம் தணியவில்லை.

"கோதுமை மாவு - சனிக்கிழமை ராத்திரி டிபனுக்கு வேணுமேன்னு தானே நான் - ரவையைப் போட்டு உப்புமா செஞ்சு வச்சேன்? இந்த சப்பாத்தியும் குருமாவும் எனக்கு செய்யத் தெரியாதா? என்னமோ இவளுக்குத்தான் எல்லாம் தெரியும் கற மாதிரி... அது எப்படித்தான் இன்னொருத்தர் வீட்டு சமையற் கட்டுக்குள்ளே உரிமையோட நுழைய முடியறதோ..?"

இவள் பேசியது, புவனாவின் காது வரையில் போகாவிட்டாலும், மகாதேவனின் மனசை வலித்தது...

எத்தனையோ சமயங்களில் நமக்கு மற்றவர் உதவி செய்கிறார்கள். அதுபோல நாமும் பிறருக்கு உதவ வேண்டிய அவசியமும் ஏற்படுகிறது.

சில நேரங்களில், நாம் செய்கிற உதவி நமக்கே உபத்திரவமாக அமைவதும் உண்டு.

அப்படித்தான்... இந்த புவனாவுக்கு இவர் உதவியதும்... பின், அதுவே இவருக்குத் தலைவலியானதும்.

ஏழெட்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள்.

மாலையில், அலுவலக வேலை முடிந்து, மகாதேவன் வீட்டுக்குக் கிளம்பும் போது, அதே அலுவலகத்தில் அவரிடம் ஸ்டெனோவாகப் பணிபுரியும் இந்த புவனா வந்து நின்றாள்.

"சார்!"

"என்னம்மா?"

"எனக்கு ஓர் உதவி செய்யணும்.."

"கண்டிப்பா. என்னால செய்யக் கூடியதா இருந்தா - நிச்சயம் செய்வேன். சொல்லு.."

"ரெண்டு நாளா என் வீட்டுக்காரர் ஊர்லே இல்லே. எங்க ஏரியாவுல ரௌடி கும்பல் அதிகம். தனியா இருக்கேன்னு தெரிஞ்சு ரொம்பவும் தொந்திரவு கொடுக்கறாங்க.."

"உதவிக்கு உன் அம்மாவோ - இல்லேன்னா - உன் ஹஸ்பெண்டோட அப்பா அம்மாவோ இருந்தா அழைச்சிட்டு வந்து வச்சுக்கலாமே... இன்னிக்கு சரி... இனிமே உங்க வீட்டு மனுஷங்களைத் துணைக்கு வச்சுக்கணும் நீ. இல்லேன்னா இடத்தை மாத்தியாகணும்.."

"அதில்லே... நாங்க ரெண்டு பேரும் லவ் மாரேஜ். அதனால ரெண்டு பக்கப் பேரண்ட்ஸுக்கும் எங்க மேலே கோபம். வரமாட்டேங்கறாங்க... இந்த இடம் எங்களுக்கு குறைஞ்ச வாடகைக்குக் கிடைச்சிருக்கு. இதை விட்டுட, என் கணவருக்கு இஷ்டமில்லே. நீதான் பயப்படாம இருக்கணும்கறார். அதான்.."

முதல் முறை புவனா - மகாதேவனின் வீட்டுக்கு வந்தபோது உபசரிப்பு நன்றாகத்தான் இருந்தது... இரண்டு நாள்... காபியும், டிபனுமாய் அமர்க்களப்பட்டது. போதாக்குறைக்கு புவனாவே வேறு சியாமளாவின் கைக்காரியங்களைப் பிடுங்கிச் செய்த போது அவள் சந்தோஷமாய் மகாதேவனிடம் சொன்னாள்.

"ரொம்ப நல்ல பொண்ணுங்க..."

ஆனால் -

அடுத்த மாதமே மூன்று நாள்கள் போல புவனா - மறுபடியும் விஜயம் செய்தாள்.

"என் தம்பி வர்றதாச் சொல்லி லெட்டர் போட்டிருந்தான். ஆனா இன்னும் வரல்லே..."

அப்பொழுதும் சியாமளா எதுவும் சொல்லவில்லை.

"அதனாலே என்ன? உன் ஒருத்திக்காக நான் என்ன ஒரு படி அரிசியா வடிச்சுடப் போறேன்?"

- இப்படி பெருந்தன்மையாகத் தான் பதில் சொன்னாள்.

பின் இதுவே வழக்கமாகிப் போன போது...

சியாமளா ஒன்றும் அப்பாவி இல்லை. குழந்தைகள் வேண்டுமானால் புவனாவின் சமையலிலும், அவள் பாடம் சொல்லித் தருவதிலும் சந்தோஷமாய் ஆரவாரிக்கலாம்.

அக்கம் பக்கத்து வீட்டுப் பெண்கள் யாரும், இது பற்றி கேட்காத போதே - ஏதாவது கேட்டு விடப் போகிறார்களே என்று பதறினாள்.

"நேத்து சாயந்திரம் உங்க வீட்டுக்கு வந்தேன் சியாமளாக்கா! போன மாசம் ஒரு கப் சர்க்கரை வாங்கிட்டுப் போனேன் இல்லையா? அதைக் கொடுக்க வந்தேன். நீங்க இல்லே... ஆனா, உங்க வீட்டுக்கு அடிக்கடி தங்க வருமே ஒரு பொண்ணு... அதுதான் இருந்திச்சு. கொடுத்திட்டு வந்திட்டேன்".

இப்படி எதிர் வீட்டுக்காரி சொன்னாள். உடனே சியாமளா, மகாதேவனிடம் பாய்வாள்.

"கேட்டீங்களா! அடிக்கடி தங்க வருமே ஒரு பொண்ணுன்னு பொடி வச்சுப் பேசறா... அவ யாருன்னு இன்னும் தனக்கு அறிமுகப்படுத்தலைன்னு சொல்லாமச் சொல்றா... ஏன், இந்த ஒரு கப் சர்க்கரையை, நான் வீட்டுல இருக்கறப்பவே கொண்டு வந்து தந்திருக்க வேண்டியதுதானே? 'எவளோ ஒருத்தி புதுசா வந்திட்டுப் போனாளே... அவ யாராயிருக்கும்; அவளுக்கும் இந்தக் குடும்பத்துக்கும் என்ன உறவாயிருக்கும்'னு மனசுக்குள்ளே குடைஞ்சிட்டிருப்பா... அதான்..."

மகாதேவனுக்கு மனைவியின் தவிப்பு நன்றாகவே புரிந்தது. ஆனால், அதற்காக புவனாவிடம் 'நீ இனிமேல் வராதே' என்று முகத்திலடித்தாற் போலச் சொல்லவும் தயக்கமாக இருந்தது.

ஒரு பெண்ணுக்கு - தனக்காகவே புரியாதோ? இத்தனைக்கும் சியாமளா எத்தனை ஆழமாய் குத்திக் காட்டிப் பேச முடியுமோ - அவ்வளவுக்கும் பேசிவிட்டாள்.

"எதிர் வீட்டுக்காரி, உன்னை என் நாத்தனார்னு நினைச்சிட்டாளாம்..."

"அப்படியேதான் நினைச்சுக்கட்டுமே... நானும் உங்களை மன்னின்னே அழைச்சிட்டுப் போறேன்..."

"அது எப்படி? அவருக்கே நாலு தங்கைகள் உண்டு. போதாக்குறைக்கு உன் ஜாதி வேறன்னு - நீ பேசற பேச்சிலேயிருந்து தெரியறதே... வீட்டோட தங்கினாப்பல தங்கை ஆகிட முடியுமா?"

"முடியாதுதான் மன்னி! ரத்தத்தாலே உறவானாத்தான் உறவா? மனசால தங்கையா நான் நினைச்சுக்கக் கூடாதா? நீங்கதான் ஏத்துக்கக் கூடாதா?"

"அது சரி... இதோட ஏழெட்டுத் தடவை உன் வீட்டுக்காரர் டூர் போயிட்டார்னு, நீ பாட்டுக்கு இங்கே வந்து தங்கிட்டே... ஒரு தடவையாவது உன் புருஷன், 'என் பொண்டாட்டிய

கவனிச்சிட்டதுக்கு ரொம்ப தாங்க்ஸ்'னு எங்ககிட்ட வந்து சொன்னதே இல்லையே... அத்தனை மரியாதை தெரியாத மனுஷனா உன் புருஷன்?"

"அப்படியெல்லாம் இல்லே மன்னி! அவர் கொஞ்சம் கூச்ச சுபாவம். அவ்வளவுதான். அவரே வந்து சொல்லணும்னு சொல்லிட்டே தான் இருக்கார். அழைச்சிட்டு வர்றேன்".


"நான் சொல்லி, நீ ஒண்ணும் அழைச்சிட்டு வரவேண்டாம். அடிப் படை மரியாதையே தெரியாதவன் - எப்படி ஆபீசரா இருந்து புரட்ட றான்? இத்தனை வருஷமாறதே... இது வரைக்கும் சொந்த அண்ணன் வீட்டுக்கே என் வீட்டுக்காரர் என்னை அனுப்பினதில்லே. 'ஏன், நம்ம வீட்டுல அரிசி இல்லையா, பருப்பு இல்லையா'ன்னு நசுக்கறாப்பல கேட்பார்".

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, புன்னகையுடன் புவனா வினால் எப்படி வளைய வர முடி கிறது என்பதுதான் மகாதேவனின் ஆச்சர்யம்.

இத்தனைக்கும் புவனா - அந்த வீட்டில் இரண்டு நாள் தங்க வந்தால் - ஒரு வாரத்துக்குத் தேவையான காய்கறிகளை வாங்கிப் போட்டுக் கொண்டுதான் வருவாள்.

இந்த முறை சியாமளா தீர்மான மாய்ச் சொல்லி விட்டாள்.

"இதப் பாருங்க. அந்தக் கடன் காரன் இங்கே வந்து நன்றி சொல்லாட்டாலும் ஒழியறது. நீங்க அவ வீட்டுக்குப் போய் அவனைப்



பார்த்து, நாக்கைப் பிடுங்கிக்கற மாதிரி நாலு வார்த்தை கேளுங்க. இன்னொரு தடவை அவ இங்கே வந்தா - ரசாபாசமா ஏதாவது பேசிடுவேன்... ஆமா..."

மகாதேவன் தீர்மானித்து விட்டார்; அன்று புவனாவின் வீட்டுக்குப் போய், அவள் கணவனைச் சந்திப்பது என்று...

அவருக்கே கூட ஆத்திரம்தான். அடுத்தவர் வீட்டுப் பிரச்னையினால் - நம் நிம்மதி எத்தனை தூரத்துக்குக் கெடுகிறது?

தீர்மானித்து விட்டாரே தவிர, புவனாவிடம் சொல்லவில்லை. அலுவலகப் பதிவு நோட்டில் விலாசம் இருக்கிறது... மெதுவாய் சாயந்திரம் ஏழு மணி சுமாருக்குப் போனால் - வசமாகப் பிடித்து விடலாம்.

புவனா வீடு இருந்த தெரு உண்மையிலேயே சேரிப் பகுதிதான். ஆனாலும் நினைத்தது போல கலவரம் நடக்கும் பகுதியாகத் தெரியவில்லை.

இருட்டில் வீட்டு எண் சரிவரத் தெரியாததால் - அங்கிருந்த சிலரிடம் விசாரித்தார் மகாதேவன்.

"ஏம்மா... இங்கே புவனேஸ்வரின்னு ஒரு பொண்ணு..."

"அதாரு புவனேஸ்வரி? இங்கே இருக்கறது அங்காள பரமேஸ்வரி தான். அதோ இருக்கு பாரு கோவில்..."

"இல்லேம்மா... புவனேஸ்வரி - புவனான்னு... வீட்டுக்காரர் கூட அடிக்கடி வேலை விஷயமா வெளியூர்..."

இதற்குள் அங்கிருந்த ஒருத்தி குறுக்கிட்டாள்.

"யாரு? அந்த செவத்த பொண்ணா? அதான்டி... தினமும் அவ புருஷனும், மாமியாருமாப் போட்டு அடிச்சு தெருவுல தள்ளுவாங்களே..."

"என்னது?"

"அக்கா! அந்தப் பொண்ணு பாவம். இந்த முரடனை நம்பி வந்திடுச்சு. பெத்தவங்க இதே துக்கத்துல போயிட்டாங்க. வேற போக்கிடமில்லே. மாமியார்க் கிழவியும், மாமனார்க் கிழவனும் அந்த நாசமாப் போறவனுமாச் சேர்ந்து அடிப்பாங்க பாருங்க. நாயடி. ராத்திரி முழுக்க வெளியே தள்ளிக் கதவைச் சாத்திருவாங்க. நாங்க யார் தலையிட்டாலும் வாயில வந்தபடி பேசுவாங்க".

"..............."

"இப்பத்தான் கொஞ்ச நாளா... தன்னோட அண்ணன் மெட்ராசுக்கே மாத்தி வந்திட்டாருன்னு சொல்லி - அடி தாங்காதப்ப எல்லாம் அழுதிட்டே கிளம்பிப் போவா... ஒவ்வொரு சமயம் பார்க்கணும்... கொட்டற மழையில தெப்பலா நனைஞ்சிட்டு, கதவைப் பார்த்திட்டே உட்கார்ந்திருக்கும்".

"................"

"நாங்களா இருந்தா சரிதான் போடான்னு கிளம்பிடுவோம். இது பாவம். வாயில்லாப் பூச்சி. அண்ணனை அழைச்சுட்டு வந்து, நியாயம் கேட்க வேண்டியது தானேன்னு கேட்டோம்... அவருக்குத் தெரிஞ்சா மனசு வருத்தப்படுவாரு... வேண்டாம்னு சொல்லும்..."

இப்போது கும்பலில் ஒருத்தி கேட்டாள் :

"ஆமா... நீங்க யாரு?"


மகாதேவனின் கண்களில் கண்ணீர் குளம் கட்ட... அவர்கள் சுட்டிக் காட்டிய வீட்டைப் பார்த்தபடியே சொன்னார் :

"நான்தாம்மா அந்த அண்ணன்".

இப்பொழுது அவரது நடையில் - புவனாவின் புருஷனைத் தட்டிக் கேட்க வேண்டிய ஆவேசம். சரிப்பட்டு வராவிட்டால், அவளை நிரந்தரமாகத் தங்கள் வீட்டோடு அழைத்து வரக் கூடிய வேகம்...

விஷயம் தெரிந்தால் சியாமளா உருகி விடுவாள்... அவளும் பெண் தானே!

என்ன... நாலு தங்கைகளோடு ஐந்தாவது ஒருத்தி... குறைந்துவிடப் போகிறதா என்ன..?



அண்மைக்காலத் தமிழ்ச் சிறுகதைகள் சில போக்குகள்

பேராசிரியர் எழில்முதல்வன்

காலந்தோறும் இலக்கிய வகைகள் புதிது புதிதாய்த் தோன்றுகின்றன. ஒவ்வோர் இலக்கிய வடிவமும் அவ்வக் காலத்திற்கேற்ப அதன் உள்ளடக்கத்திலும் வடிவிலும் வனப்பிலும் மாற்றம் பெற்று வருகின்றன. இம்மாற்றம் தவிர்க்கவியலாதது. மனித வாழ்வே பல மாற்றங்களுக்கு ஆளாகி வரும் நிலையில் அவ்வாழ்வின் வெளிப்பாடான இலக்கியங்களும் அதன் போக்குகளும் மெல்ல மெல்ல மாறத்தானே செய்யும்?

சிறுகதை என்னும் இலக்கிய வகை, வடிவத்தில் வாமனராகத் திகழ்ந்தாலும், அதன் அளப்பரிய ஆற்றலில் திரிவிக்கிரம அவதாரமாகவே விளங்குகிறது. சிறுகதை என்னும் குழவியை ஈன்றெடுக்கும் தாய் எழுத்தாளர்கள். அதைப் பாலூட்டிப் பாராட்டி வளர்க்கும் செவிலியர் இதழாசிரியர்கள். அக்குழவியின் குறுகுறு நடையில் நெஞ்சைப் பறிகொடுத்து அக் குழந்தையின்பத்தை அனுபவிப்பவர்கள் வாசகர்கள். அக்குழந்தையின் வளர்ச்சி சரியானதுதானா, சராசரியானதுதானா, சவலையாகாமல் உரத்தோடு வளர்கிறதா என்றெல்லாம் ஆராய்பவர்கள் திறனாய்வாளர்கள். விமரிசன நோக்கில் காணும்போது, இக்காலச் சிறுகதைகள் உயிரும் உணர்வும் மிக்க குழவிகளாகத் தெரியவில்லை. ஒரே மாதிரியான அச்சில் வார்க்கப்பட்ட பொம்மைகளாகத் தெரிகின்றன. தாயாக இருந்து கலைக்குழவியை ஈன வேண்டியவர்கள், தம் கருப்பையைப் பொம்மைத் தொழிற்சாலையாக மாற்றிக் கொண்டுவிட்டார்களோ, என்று எண்ணத் தோன்றுகிறது. தேவை மிகுதியாகும்போது, உற்பத்தி பெருகும்; உற்பத்தி பெருகப் பெருகத் தரமும் ஓரளவு தாழும். இது நாம் காணும் நடைமுறை உண்மை. இது இலக்கியத்திற்கும் பொருந்திவரும் உண்மையேயாகும். இனி அண்மைக் காலத்தே காணப்படும் சில மாற்றங்களைக் காண்போம்:

ஒரு சமூகம் கட்டுக்கோப்புக்குள் இயங்குவதற்குப் பயன்படும் ஒழுகலாறுகள், கருத்துகள், பண்புகள் முதலியன மனிதனின் சிந்தனை நிலையிலும் உயர்வு நிலையிலும் இயங்கும்போது அவையே சமூகத்தின் மதிப்புகள் ஆகின்றன. சமூக மதிப்புகள் என்றும் ஒரு படித்தாய் இருக்குமென்று கூறுவதற்கில்லை. இவை காலந்தோறும் மாற்றம் பெறும். ஒரு காலத்தில் சிறந்ததென்றும் உயர்ந்ததென்றும் கருதப்பட்டு வந்த சில வாழ்வியல் நெறிகள் காலப்போக்கில் மறுபரிசீலனைக்கு ஆளாகும்; சில மறுக்கப்படும்; சில தேவையான அளவுக்குத் தழுவிக் கொள்ளப்பெறும். இந்தப் போக்கினைப் பதிவு செய்வது இலக்கியத்தின் தலையாய பணி எனலாம். மதிப்பு மாற்றத்தைப் பிரதிபலிக்கும் பல நல்ல சிறுகதைகளை நாம் காண முடிகிறது.

இறந்தோர்க்கு ஈமக் கடன் செய்வதும், ஆண்டு தோறும் இறந்த நாளில் அவர்தம் நினைவாக சிரார்த்தம் செய்வதும் இந்துக் குடும்பங்களில் இன்னும் நடைமுறையில் இருந்து வரும் வழக்கமாகும். ஆனால், இக்கிரியைகளில் இடம்பெறும் நிகழ்வுகள் பலவற்றிற்கு யாரும் பொருளறியார். பொருளறியாமல் நிகழ்த்தப் பெறுவனவற்றில் புனிதத்திற்கு இடமேது? ம.ந.ராமசாமி என்பார் எழுதிய "யந்மே மாதா" என்னும் கதை, சடங்குகளின் பொய்ம்மையை அம்பலப்படுத்துகிறது. கதைத் தலைவன் வெங்கடேசன் இளமையிலேயே தன்னையும் தன் தாயையும் புறக்கணித்து, ஒழுங்கீனமாய் வாழ்ந்து மறைந்த தந்தைக்கு, உள்ளத்தில் ஈடுபாடில்லாமலே சிரார்த்தம் செய்கிறான். அச்சடங்கைச் செய்விக்க வந்த சாஸ்திரிகள் 'யந்மே மாதா' என்னும் மந்திரத்தைச் சொல்லும்போது, குறுக்கிட்டு அம்மந்திரத்தின் பொருள் யாதென சாஸ்திரிகளைக் கேட்கிறான். அவரோ, "தெரியாது ஸ்வாமி! நான் படிச்சவன் இல்லே, என் தோப்பனார் எனக்குச் சொல்லித்தந்தார். அவருக்கே அர்த்தம் தெரியுமோ, தெரியாதோ? நாங்க பரம்பரைப் புரோகிதாள். ஏதோ வயத்துப் பொழப்புக்காக இப்படி மந்திரம் கத்துண்டு, வாழ்க்கையைத் தள்ளறோம்" என்கிறார்.

சம்ஸ்கிருதம் படித்திருந்த வெங்கடேசன், சாஸ்திரிகளுக்கு அதன் பொருளை விளக்குகிறான். "எனது தாய் பதிவிரதா தர்மங்களை முழுதுமாக அநுஷ்டிக்காமல் அதன் காரணமாக நான் பிறந்திருந்தால், இந்த அக்னியில் நான் இடும் ஹவிஸுக்கு உரிமை கோரி எனது சொந்தத் தகப்பனார் வருவார், அப்படி அவர் இந்த ஹவிஸைப் பெறாமல் தடுத்து நான் எந்தத் தகப்பனாருக்கு இந்த சிரார்த்தம் செய்கிறேனோ அவர், அதாவது எனது தாயின் கணவர், இந்த ஹவிசைப் பெற வேண்டும் என்பதே அம்மந்திரத்தின் பொருள்; என் தாய் உத்தமியென்று எனக்குத் தெரியும், இவள் உத்தமி இல்லை என்று சொல்கிற மந்திரம் எனக்கு வேணாம், இந்த சிரார்த்தமும் வேணாம், நிறுத்துங்கோ" என்கிறான்.

சாஸ்திரிகள் இதைக் கேட்டதும், "ஸ்வாமிகளே! இப்ப நீங்க சிரார்த்தம் பண்ணப் போறேளா இல்லையா?





அசோகமித்திரன்



ராஜம் கிருஷ்ணன்



வாஸந்தி



சிவசங்கரி

சொல்லுங்கோ" என்று கேட்கிறார். "பண்ணப் போறதில்லே, அதுக்காக நீங்க போயிட வேணாம். சமையல் எல்லாம் ரெடியா இருக்கு, சாப்பிட்டுட்டுப் போங்கோ. கொடுக்க வேண்டிய தட்சணையைக் கொடுத்துடறேன்" என்கிறான் வெங்கடேசன். சாஸ்திரிகளின் தொழிலுக்கும் ஒரு தர்மம் உண்டல்லவா? அவர் கூறுகிறார்; "எனக்கு, சிரார்த்தம் பண்ணி வைக்காமல் சாப்பிட்டாலும், தட்சணை வாங்கறது நியாயம் இல்லேன்னு தோணறது. நாங்க வர்றோம்" என்று போய்விடுகிறார்.

சனாதன சம்பிரதாயத்தைப் போற்றிப் பேணும் ஒரு பிராமண குலத்து இளைஞனே சிரார்த்தம் வேண்டாம் என்கிற ஒரு புரட்சிகர முடிவை எடுப்பது போல் கதையில் காட்டப்படுகிறது. மாறி வரும் மதிப்புகளைப் பதிவு செய்து காட்டும் இக்கதை சிறுகதை உலகில் குறிக்கத்தக்க சிறப்புடையது.

நம் தமிழ்ச் சமுதாயத்தில் கடந்த கால் நூற்றாண்டுக் காலத்தில் தோன்றி வளர்ச்சி பெற்று வரும் புதிய இலக்கியங்களின் பின்னணியிலும் நாம் சிறுகதைகளை மதிப்பீடு செய்தாக வேண்டும். பெண்ணிய இலக்கியத்தின் எழுச்சியும் அதன் குரலும் நம் படைப்பாளர்களைச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றன. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? என்று கேட்ட நிலை மாறி, இன்று பெண்களும் கல்விகற்றுப் பல துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாகப் போட்டியிடும் நிலையைக் கண்டு வருகிறோம். ஒரு காலத்தில் இருக்கும் சமூக அமைப்பை அப்படியே ஏற்றுக்கொண்டு தேவையான அளவுக்குச் சில சீர்திருத்தங்களைச் செய்து கொண்டால் போதும் என்று மகளிர் கருதினர். இது மிதவாதப் பெண்ணியம் எனக் கருதப்பட்டது. இன்றோ மிதவாதப் பெண்ணியம் அகற்றப்பட்டு அந்த இடத்தில் தீவிரவாதப் பெண்ணியம் தனியாட்சி புரிகிறது. இந்நாளைய பெண்கள், குடும்பம், பணியாற்றும் களம், இன்னும் இவைபோல் எவ்வெவ்விடங்களிலெல்லாம் அடக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் ஆளாகிறார்களோ அங்கெல்லாம் கலகக் கொடி உயர்த்தத் தயாராகிவிட்டனர். தம்மை அடக்கி ஒடுக்கி அடிமையாக்கும் அமைப்பு யாதாயினும், அது குடும்பமேயாயினும் அவ்வமைப்பை உடைத்தெறிந்து விட்டு அதனின்று வெளியேறலாம் என்னும் சிந்தனைக்கு வந்துள்ளனர். ஆணாதிக்கத்தின் பிடியினின்று தம்மை விடுவித்துக் கொண்டு சிறகடித்துப் பார்ப்பதே அவர்தம் இலக்காகும்.

பெண்ணியத்தின் எழுச்சியால் பிறந்துள்ள கதைகள் பல. ராஜம் கிருஷ்ணனின் கதைகள் பெண்ணடிமையை எதிர்த்துக் குரல் கொடுப்பனவே எனலாம். எனினும் இவரைத் தீவிரவாதப் பெண்ணியலார் என்று முத்திரை குத்த முடியாது. சிவசங்கரி, வாஸந்தி, இந்துமதி போன்றோரின் எழுத்துகளில் தீவிரவாதப் பெண்ணியத்தின் சாயலைக் காணலாம்.

இன்றைய சமுதாயம் போட்டிகள் நிறைந்த தடகளம் போன்றது. ஒவ்வொருவனும் தன் ஆளுமையை மற்றோர் முன் நிறுவுவதன் வாயிலாகத் தன் அடையாளத்தைக் காட்டிக் கொள்ள அவாவுகிறான். இந்த அடையாளம் அர்த்தமற்றுப் போகும்போது, இன்றைய மனிதன் மனமுறிவுக்கும் சோர்வுக்கும் ஆளாகிறான். தன்னையே தன்னிடமிருந்தும், இந்தச் சமுதாயத்திடமிருந்தும் அந்நியமாக்கிக் கொள்கிறான். இந்த அந்நியமாதலும் அடையாளச் சிக்கலும் அண்மைக்காலச் சிறுகதைகளில் நிரம்பவே பேசப்படுகின்றன.

ந.முத்துசாமியின் சிறுகதை உலகம் அந்நியமாகி நிற்கும் மக்களைக் கொண்டது. அவர் காட்டும் மனிதர்கள் பலர் தன்னையே தன்னிடமிருந்து அந்நியமாக்கிக் கொண்டு தற்கொலை உணர்வால் உந்தப் படுகின்றனர். ந.முத்துசாமி போலவே ஆதவனும் இந்தப் பாடுபொருள்களை நிரம்பவே கையாண்டுள்ளார். ஆதவனின் "ஒரு அறையில் இரண்டு நாற்காலிகள்" என்னும் சிறுகதை அடையாளச் சிக்கலை நன்கு காட்டுகிறது. டில்லியில் ஒரு நடுவண் அரசு அலுவலகத்தில் பணியாற்றும் ஒரு தமிழரைப் பற்றியும், அவருடன் ஒரே அறையில் இருந்து பணியாற்ற நேரும் ஓர் உத்தரப்பிரதேச அலுவலரையும் பற்றிய கதை. இருவரும் ஒருவரோடொருவர் பழக முயன்றும் இருவருக்குமிடையே ஏதோ ஒரு திரை அவ்வப்போது விழுந்து கொண்டே வருகிறது. இருவருமே தம் சொந்த ஆளுமையை மறைத்து, பொய்யான முக மூடியை அணிந்து கொள்வதே இதற்கு அடிப்படைக் காரணம் எனக் கதையில் உணர்த்தப்படுகிறது. கைலாசம் என்னும் தமிழ்நாட்டு இளைஞர் அகர்வால் எனும் உ.பி.நண்பரோடு இயல்பாகப் பழக முடியாத நிலையைத் தம் இன்னொரு நண்பரோடு மிக விவரமாகப் பகிர்ந்து கொள்வதே கதை. கதையின் முடிவில் அவர்கள் இருந்த அறையில் அவ்விருவருக்கும் இடையே ஒரு தடுப்பை உருவாக்கும் முயற்சி சுட்டப்படுகிறது.

முன்பெல்லாம் நம் தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்கள் சில செய்திகளைக் கதைக்குப் பாடுபொருளாக்குவதை நாகரிகக் குறைவாகக் கருதினார்கள். சில தீமைகளை எழுத்தில் மறைமுகமாகக் கூடச் சுட்ட வேண்டாம் என்று கருதினர். ஒருவகையான அறவியல் நோக்கு அவர்களைத் தடுத்தாட் கொண்டு வந்தது. இப்போது, நிலைமாறியுள்ளது. எதையும் விதி விலக்குகள் ஆக்காமல் எதை வேண்டுமானாலும் சிறுகதைப் பொருளாக்கலாம் என்கிற உணர்வு தலையெடுத்துள்ளது.

ஒருபாற் காமம், கட்டுப்பாடற்ற பாலுணர்வு, அஃறிணை உயிர்களோடும் உறவு கொள்வது, இது போன்ற பாலியல் வக்கிரங்களைத் தமிழ்ச் சிறுகதையாசிரியர்கள் வெளிப்படப் பேச முந்துகின்றனர். சா.கந்தசாமி, நீல பத்மநாபன், ஆ.மாதவன் போன்றோர் கதைகளில் இதுபோன்ற போக்கைக் காணலாம். பாலியல் வக்கிரத்தின் உச்ச நிலையை ஆ.மாதவனின் "கோமதி" என்னும் கதையில் காணலாம். வாசகர்கள் வந்தவழிக் கண்டு கொள்க.

கல்கி, ந.பிச்சமூர்த்தி, பி.எஸ்.ராமையா போன்ற முன்னைய சிறுகதை எழுத்தாளர்கள் தம் எழுத்தில் கதை சொல்வதையே மிக முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தனர். சிற்சில நிகழ்ச்சிகளைப் பின்னிப் பிணைந்து நாடகப் பாங்கோடு சொல்வதையே அவர்கள் சிறுகதை என்று கருதினர். இந்நாளைய எழுத்தாளர்கள் இந்த வாய்பாட்டு முறை வேண்டா என்று ஒதுக்குகின்றனர். கதையைக் கவிதை நிலைக்கு உயர்த்தி, படிப்போரின் சிந்தனையைத் தூண்டுகின்றனர். அவர்களது கதை சிந்தனைக்குரிய சொல்லோவியமாக மாறுகிறது. கதையில் ஸ்தூலமாகத் தெரியும் நிகழ்ச்சிப் பிணைப்புகள் மிகுதியாக இல்லையெனினும், சூக்குமமாக நுனித்தறியும் கருத்தமைவைக் காணமுடிகிறது.

அசோகமித்திரனின் "போட்டோ" என்னும் கதை இங்கு நினைவுகூரத் தக்கது. திருமணம் முடிந்த நிலையில் மணமக்களோடு சேர்ந்து படம் எடுத்துக் கொள்ள சில நண்பர்கள் விரும்புகிறார்கள். அதற்கான

ஏற்பாடுகளைச் செய்கின்றனர். மகிழ்ச்சிகரமாக் நடக்க வேண்டிய செயல், இறுதியில் சம்பந்தப்பட்ட மண மக்களுக்கு எவ்வளவு பெரிய அவஸ்தையாகி விடுகிறது என்பதே கதையில் காட்டப்படும் செய்தி. இச்செய்தியும்கூட ஆசிரியரால் வெளிப்படப் பேசப்படவில்லை. ஏதோ ஒரு மெல்லியக்கத் திரைப்படத்தைப் பார்ப்பது போன்ற உணர்வே உண்டாகிறது. தொடர்ந்து வரும் நிகழ்ச்சிப் பின்னலோ, திடீர்த் திருப்பங்களோ கதையில் வரவில்லை. போட்டோ எடுப்பதைப் பற்றிய சற்றே கற்பனை கலந்த கட்டுரைபோல் இக்கதை அமைந்துள்ளது.

கதைகள் கவிதை நிலைக்கு உயர்த்தப்படுகிறபோது, கவிதைக்கே உரிய அணிநலன்களையும் திட்ப நுட்பங்களையும் முருகியல் வீச்சினையும் உடையதாக அமைவது இயல்பேயன்றோ? படிமம், குறியீடு, உள்ளுறை, இறைச்சி என்றெல்லாம் பழங்காலக் கவிதையில் பேசப்பட்டவை, இந்நாளைய சிறுகதைகளிலும் இடம் பெற்று வருகின்றன. சிறந்த குறியீட்டுக் கதைகளுக்கு உதாரணமாக நீல. பத்மநாபனின் "கடிகாரம்", சுந்தரராமசாமியின் "பல்லக்குத் தூக்கிகள்", ந.முத்துசாமியின் "மழைக்கோட்டும் கந்தல் குடையும்" முதலியன வற்றைக் குறிப்பிடலாம்.


சுவாச நோயால் அவதியுற்றுப் படுக்கையில் கிடக்கும் ஒருவன் தன் அறைச் சுவரில் மாட்டியிருக்கும் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருக்கிறான். அது ஒரு பழைய காலத்துக் கடிகாரம். அடிக்கடி நின்று போய்விடும். அதனைத் திரும்பத் திரும்பப் பெண்டுலத்தை ஆட்டி ஓடவிடுமாறு அவன் தன் மனைவியிடம் கூறுகிறான். அவளும் வேண்டா வெறுப்போடு கடிகாரம் தொடர்ந்து ஓடும் என்னும் நம்பிக்கையின்றி ஓட விடுகிறாள். கதையில் நான்கு முறை கடிகாரம் பற்றிய குறிப்பு வருகிறது. காலையில் 7.30-க்குத் தொடங்கும் அவனது உயிர்-மரணப் போராட்டம் இரவு 3.30-க்கு முடிவு பெறுகிறது. கதையில் அக்கடிகாரமும் ஒரு பாத்திரம் போல் மாற்றப்பட்டுவிட்டது. இது கடிகாரத்தின் கதையா? மனிதனின் கதையா? கடிகாரம் காலத்தின் குறியீடா? எழுதப்படாத எத்தனையோ உணர்வுகளை அலையலையாய் எழுப்பும் கடிகாரம் சிந்திக்கச் சிந்திக்க எத்தனையோ நுண்பொருளைத் தருகிறது.

முன்னைய தலைமுறை எழுத்தாளர்கள் தம் படைப்பில் நுவல் பொருளுக்கு மட்டுமே முதன்மை தந்தனர்; உத்தியைக் கையாளும் பொருட்டு அவர்கள் விசேட கவனத்தை எடுத்துக் கொண்டனரென்றோ, அதற்காகவே அவர்கள் கதையைத் தேடிப் புனைந்தனரென்றோ கூறுவதற்கில்லை. இப்போது உத்திகளுக்காகவே கதைகள் எழுதப்படுகின்றன. அல்-நேர் (Non-Linear) வடிவம் என்கின்றனர்; பொய்மாய நடப்பியல் (Magic Rialism) என்கின்றனர், பின்-நவீனத்துவம் (Post-Modernism) என்கிறனர். இவை எல்லாம் மருட்டும் வித்தைகளோ என்று நினைக்கத் தூண்டுகின்றன. ஒரே வகையான படைப்புகள் ஒரு மொழியில் நிரம்ப வருகிறபோது, அவற்றின் பொதுமைத் தன்மையை இனம் கண்டு பெயரிடுவதே இலக்கிய மரபு. மேலை நாட்டினர் உதிர்த்துப்போன சில கலைத்துறைச் சொற்களைப் புரிந்தும் புரியாமலும் உள்வாங்கிக் கொண்டு குல்லாய்க்கேற்ற கதைகளைத் தேடி வருகின்றனர் சிலர்.

மாற்றங்கள் இன்றேல் வளர்ச்சியில்லை; மாற்றங்களே வளர்ச்சியாகவும் ஆக முடியாது. சிறுகதை உலகில் நிகழ்ந்து வரும் மாற்றங்களைச் சரியாக மதிப்பீடு செய்ய நாம் இன்னும் கொஞ்சம் காலம் காத்திருக்கவே வேண்டும்.

நிலை வாழ்வு

பாவலர். கருமலைத் தமிழாழன்



பேராசை எனும்கொடியே
பெருமிதமாய்ப் பறக்கிறது
வேரோடு மானுடமே
வேதனையில் சாகிறது!
மனிதரினை மனிதர்கள்
மதிக்கின்ற காலம்போய்
மனிதரினைத் தொழுகின்ற
மகத்துவமே மணக்கிறது!

இசைலயத்தை எழுப்பிவிடும்
இயல்பான இதயமெலாம்
வசைலயத்தை மீட்டுவதே
வாடிக்கை கொண்டுளது!
அன்பான அமுதத்தை
அளிக்கின்ற மனமெல்லாம்
துன்பத்தை நீட்டுகின்ற
கொடுமைகளைச் செய்கிறது!

தத்துவங்கள் எல்லாமே
தவிக்கின்ற நிலையினிலே
சத்தியமும் உண்மைகளும்
சாக்கடையில் புரள்கிறது!
நீதியினை ஆள்பவனோ
மூலையிலே தூங்குவதால்
பாதையெலாம் பொய்மைகளே
பான்மையுடன் நடக்கிறது!

புரையோடிக் கொண்டிருக்கும்
புறவுலக நாற்றத்தில்
நிறைவேறா ஆசையிலே
நித்தநித்தம் இறப்பவனே!
நிம்மதியே இல்லாமல்
நிற்பதினும் போராடி
இம்மண்ணை மாற்றுவதில்
இறப்பதுவே வாழ்வாகும்!

செந்நீரில் உதித்த கண்ணீர்க் கல்லறைகள்

நிலவன்

வேலூர்ப் பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் ஆர்க்காடு நெடுஞ்சாலையில், 'தினத் தந்தி' நாளிதழ் அலுவலகத்திற்குப் பக்கத்தில் பதித்த கண்களைத் திரும்பப் பெறாத புதிய அனுபவத்தை அளிக்கிறது திப்புசுல்தான் குடும்பக் கல்லறைத் தோட்டம்.

கர்நாடக மண்ணில் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர், ஆங்கிலேயரை எதிர்த்தவர்கள் ஹைதர்அலி, அவரது வீரமகன் திப்புசுல்தான். அவர்களின் குடும்பத்தினர், வீர சுதந்திரம் வேண்டி நின்று வேகமாய்ப் போரிட்டதால் தூர மண்ணான வேலூர் மண்ணில் மீளாத் துயிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

கல்லறைத் தோட்டத்திற்குள் நுழையும்போது தியாகத்தின் திக்குகளை ஸ்பரிசிக்கிற உணர்வு மேலோங்குகிறது. ரம்யமான பச்சைப் பலேலென்ற சூழல் வரவேற்கிறது. இருநூறு ஆண்டுகளுக்கு முந்தைய வரலாற்றுச சிறப்புகளின் சுவடுகள்...

நீள நடைபாதை...

வலப் பக்கமும் இடப்பக்கமும் பளிரென்று வெள்ளையடிக்கப்பட்ட சின்னச் சின்ன இசுலாமியக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் கல்லறைகளடங்கிய கட்டடங்கள். சுற்றுச் சுவர்கள், ஏராளமான சிறிய, பெரிய மரங்கள், பூச்செடிகள்.

கருஞ்சலவைக் கற்களாலும், சுதையாலும் நவீன வேலைப்பாடுகளுடன் கருத்தைக் கவர்கின்றன; கல்லறைகள்.

திப்புசுல்தானின் மகளான பாத்திமா பேகத்தின் ஆசிரியைகளின் கல்லறைகள்...

அவரது அரண்மனையிலிருந்த கோஷாக்களின் கல்லறைகள்...

அவரது ஆத்மார்த்தமானவர்களாக் கடைசிவரை அவரோடிருந்த வீரர்களின் கல்லறைகள்...

மொத்தமாய் நூற்றிருபதுக்கும் அதிகமான கல்லறைகள்...

வெறும் கல்லறைகள் என்ற எண்ணம் எழுதற்கிடங்கொடாதவையாய் நெஞ்சை நெகிழ்விக்கும் கதைகளை உள்ளடக்கியுள்ளன.

ஹைதர் அலியின் மனைவிகளான, திப்புசுல்தானின் தாய் பக்ஷிபேகம் பல்ஹா பேகம் ஆகியோர் வீரத் திருமகனோடு வாழ்ந்தபோது எப்படி பின்னிப் பிணைந்து இருந்தார்களோ, அதேபோல் அழகான கட்டடத்தில் அமைந்த கல்லறைகளில் பக்கத்துப் பக்கத்தில் புதையுண்டிருக்கிறார்கள்.

ஆனால் ஹைதர்அலி ஆங்கிலேயரால் கொல்லப்பட்டு மைசூரிலிருந்து பதின்மூன்று கிலோ மீட்டர் தூரத்தில் தனியே புதையுண்டிருக்கிறார்.

வேலூர்க் கோட்டையில் ஹைதர் அலி சிறைவாசம் செய்த இடம் ஹைதர் மகால் என்றும், திப்பு சுல்தான் சிறைவாசம் செய்த இடம் திப்பு மகால் என்றும் இன்றும் வழங்கப்படுகின்றன.

1799 –


ஆங்கிலேயருக்கும் திப்புசுல்தானுக்கும் கடுமையான சண்டை.

திப்பு கொல்லப்பட்டார்.


திப்புவின் கல்லறை ஸ்ரீரங்கப்பட்டினத்தில் கம்பீரமாய்க் கவனத்தை ஈர்த்திடும் விதத்தில் அமைந்தது.

அவரது குடும்பத்தினர், உறவினர் மற்றும் மெய்க்காப்பாளர்களை ஆங்கில அரசு அங்கிருந்து வேலூர்க் கோட்டைக்குக் கொண்டு வந்து சிறையிலடைத்தது. கொடுமைப்படுத்தியது; குத்தியது; வெட்டியது; வீழ்த்தியது.

1804.



✱ திப்புசுல்தான் குடும்பக் கல்லறையும் மதிக்கும்



✸ 200 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட மிகப்பெரிய கிணறு

ஹைதர்அலியின் இன்னொரு மனைவியான பல்ஹறா பேகம் மரணம் அடைந்தார். தொடர்ந்து. திப்புசுல்தானின் மகள் துல்காரா பேகம், திப்புவின் முதல் மந்திரி பூர்ணியா, பூர்ணியாவின் மகள், அமைச்சர்களான முஸ்தா சாகிபு, அன்வர் ஆகியோரின் உயிரையும் விட்டு வைக்கவில்லை ஆங்கில அரசு.

1806 ஜூலை 10.

பன்றி, மற்றும் பசுத் தோலினால் தயாரிக்கப்பட்ட புதிய தொப்பியை ஆங்கில அரசு இந்து, இசுலாமியச் சிப்பாய்களுக்குக கொடுத்தது.

இரவு ஏழு மணிக்கு –

அணிய மறுத்த இந்து, இசுலாமியச் சிப்பாய்கள் திடீரென்று ஆங்கிலேயச் சிப்பாய்களைத் தாக்கினர்.

ஏராளமான ஆங்கிலேய இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

தக்க சமயம் இதுவே என்று கருதிய துல்காரா பேகத்தின் கணவனும், திப்புவின் மருமகனுமான மிர்ஜாராஜா ஹுஸைன் சிறைச்சாலையிலிருந்து தப்பி மைசூருக்கு ஓடினார். அங்கே ஆங்கிலேயரை எதிர்த்து ஆட்சியமைக்கப் பலரையும் நாடினார்.


அதற்குள் ஆங்கிலேயர் கலகத்தை முறியடித்துவிட்டனர்.

கொன்று குவிக்கப்பட்ட திப்புவின் குடும்பத்தினர் சிப்பாய்கள் இக்கல்லறைத் தோட்டத்தில் கல்லறைகளாயினர்.

1831களில் மிர்ஜாராஜா ஹுஸைன், 1835களில் திப்புவின் இன்னொரு மகளான பாத்திமா பேகம், திப்புவின் மனைவியான பாதுஷா பேகம் இக்கல்லறையின் எண்ணிக்கையில் தங்களையும் கூட்டிக் கொண்டனர்.

✸ ஹைதர்அலியின் மனைவிகளின் கல்லறைகள்





* பாத்திமா பேகம் (திப்புசுல்தானின் மகள்) கல்லறை

மண்டபங்கள் கட்டாத கல்லறைகள், இங்கே மரங்களையே மண்டபங்களாக்கிக் கொண்டுள்ளன.

பழம்பெரும் மசூதி திப்புசுல்தான் மசூதி என்றே அழைக்கப்படுகிறது.


வலப்புறத்தில் எக்காலத்தும் வற்றாத நீர் நிரம்பிய பூதாகாரமான மிகப்பெரிய குளம் போன்ற ஆழமான கிணறு, இருநூறு ஆண்டு வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு உபயோகத்திலிருந்து வருகிறது.

நகரின் மத்தியில் இப்படியும் ஓர் இடமா என்று வியக்க வைக்கின்ற திப்புசுல்தான் குடும்பக் கல்லறைத் தோட்டத்தின் மெச்சத்தக்க பராமரிப்பின் பொருட்டு முகப்பின் இரு பக்கங்களிலும் அங்காடிகள் கட்டப்பட்டுள்ளன.

நாளும் பார்வையாளர்களைக் குவிக்கின்ற வீரம் விளைந்த மண்ணுக்கு மேலும் கீர்த்தி சேர்க்கின்ற செந்நீரில் உதித்த கண்ணீர்க் கல்லறைகள், தந்தையையும், மகனையும், அவர்களது குடும்பத்தினரையும் வாழ்வாங்கும் வாழ்விக்கும் நினைவுச் சின்னங்கள்!

படங்கள் :

விடிவெள்ளி ஆறுமுகம்



* மிர்ஜா ராஜா ஹுசைன் (திப்புசுல்தானின் மருமகன்) கல்லறை



கண்ணகி

ராஜம் கிருஷ்ணன்

‘ஜான்னவி அபார்ட்மென்’டில் எட்டுவீடுகள் தாம். நான்கு நான்காக இரண்டே தளங்கள். இதில் நான் காம் நம்பர் கோமதிக்கு ரேவதியின் பாட்டிதான் அப்பளம், பருப்பு ‘சப்ளை’ செய்யும் வாடிக்கை... இந்தத் தொழில் தொடங்கிய நாள் முதல் வந்த வாடிக்கையாளரான அவள், கிருஷ்ண நாய்க்கன் தெருவை விட்டு, இந்த வித்தார ‘அபார்ட்மென்ட்டுக்குக்’ குடிவந்து மூன்று மாதங்களே ஆகின்றன. ரேவு ஒருநாள் பள்ளிக்கூடம் செல்லு முன் அப்பளக்கட்டுக் கொடுக்க வந்தபோது தான் கீழ்த்தளத்துப் பாட்டியைப் பார்க்க நேர்ந்தது.

“ஏம்மா? அப்பளம் விலைக்கா?” என்று கேட்டாள்.

“ஆமாம் பாட்டி! உங்களுக்கு வேண்டுமா?”

“மிளகு அப்பளமா? ஒரு கட்டுக் குடு!” என்றாள் பாட்டி.

“இப்ப ஸ்கூலுக்குப் போறேன். சாயங்காலமாக் கொண்டு வந்து தாரேன்!” என்றாள் ரேவு.

சாயங்காலம் அப்பளக்கட்டுடன் வந்தபோது கதவு திறந்தே இருந்தது. உள்ளே அவள் அடிவைத்ததும், அந்த அறையின் விரிப்புகள், சோபா- இருக்கைகள், சுவரில் அலமாரிகளில் உள்ள நேர்த்தியான பொருள்கள் எல்லாவற்றையும் கண்டு மலைத்தாள். பூப்போட்ட கஃப்தான் அணிந்த ஓர் அக்கா- அவள் பியூட்டி பார்லரில் தலையலங்காரம் செய்து கொண்டிருக்க வேண்டும்- மேசைநிறைய வீடியோ கேஸட்களைப்பரப்பி வைத்து ஏதோ பார்த்துக் கொண்டிருந்தாள். வெள்ளைவெளேரென்று வேட்டி, மூக்குக் கண்ணாடியணிந்து, ஒரு தாத்தா, சாய்வு நாற்காலியில் அமர்ந்து இருந்தார்.

“அப்பளம் கேட்டீங்களே?...”

“ஓ, நீயா! வாம்மா... என்ன விலை?”

“பதினஞ்சு ரூபாய்...”

பாட்டி அப்பளத்தை வாங்கிக் கொண்டு ரூபாயைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

இப்படித்தான் அந்தக்குடும்பம் இவர்களுக்கு வாடிக்கையாயிற்று. ரேவுவின் பாட்டி இங்கு வரவே மாட்டாள். ஏனெனில், ரேவுவுக்குத் தான் பள்ளிக்குச்செல்லும் வழியில் இருந்தது அந்த இடம்.

இந்த வீட்டுக்குள் வந்து சிறிது நேரம் நிற்க வேண்டும் என்று ரேவுவுக்கு ஆசையாயிருக்கும். எத்தனை பெரிய டி.வி! அந்த அக்காவின் பெயர் வினி. ஸ்டெல்லாவில் படிககிறாளாம்.

இவளைப் பார்த்தால், புன்னகை செய்வாள், வாசலில், சாம்பல் வண்ண வண்டுபோல் ஒரு கார் நிற்கிறதே, அதில்தான் வினி ஏறிச் செல்கிறாள். தாத்தா ‘டிரைவர்’ ஆசனத்தில் இருந்து ஓட்டிச் செல்வதை அவள் பல நாள்கள் பார்க்கிறாள்...

இன்று, புத்தகப்பை இல்லாமல் காலை நேரத்தில் வந்து மணியை அடிக்கிறாள். அழைப்பு மணியா அது? பல பல மெட்டுகள்- ஒவ்வொரு தடவைக்கு ஒரு மாதிரி சங்கீதம் பாடும் மணி...

பாட்டிதான் கதவைத் திறக்கிறாள்.

“ரேவுவா? என்னம்மா?”

ரேவு தயங்கித்தயங்கி... “ஒரு... போன் பண்ணிக்கட்டுமா பாட்டி?” என்று கேட்கிறாள்.

“ஓ, வாம்மா...!”

ரேவு உள்ளே வந்து கீழே கம்பளத்தில் கால் படாமல் ஓரமாக நிற்கிறாள். தொலைபேசியில் வினி பேசிக் கொண்டிருக்கிறாள். வசதியாக ஒரு வட்டமான சிறு ஸ்டூலில் உட்கார்ந்து சிரிக்கச் சிரிக்கப்பேசுகிறாள். இங்கிலீஷில்... ஆம், எவ்வளவு வேகமாக இங்கிலீஷில் பேசுகிறாள்? ரேவுவினால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை. அவள் தருமப் பள்ளிக்கூடத்தில் தமிழ்மீடியம்- நைன்த் வந்தபிறகுகூட இப்படி இங்கிலீஷ் பேச முடியவில்லை. வினிபேசுகிறாள்; இடை இடையே சிரிப்பு...

ஆராயாமல், குற்றமற்ற கோவலனைக் கொன்றதற்காக மதுரையையே எரித்தாள் கண்ணகி, அன்று. இதோ... குற்றமற்ற தன் அன்னையை வஞ்சித்த தந்தையை எண்ணிக் கண்ணகியின் மறுபதிப்பாய்க் குமுறுகிறாள் இந்த இளம்பிஞ்சு.

"உட்காந்துக்கோம்மா! ஏன் நிக்கிறே?" என்று தாத்தா உள்ளிருந்து வந்து சொல்கிறார்.

சோபாவில் உட்காரக் கூச்சமாக இருக்கிறது. பச்சைப்பாவாடை, கட்டம் போட்ட சட்டை, பச்சைத் தாவணி. ஒன்பதில் தாவணிபோட வேண்டும் என்பது சட்டம். எண்ணெய் தொட்டுத் தலைவாரிப் பின்னிக்கொண்டுவிட்டாள். போன் பேசிவிட்டு வீட்டுக்குச் சென்று சமாசாரம் சொல்லி விட்டுப் பள்ளிக் கூடம் செல்ல வேண்டும். நெல்லு மிஷின் சந்து வழியாகக் குறுக்கே போய் விடுவாள். பிரேயருக்குள் போகவேண்டும்.

ரேவு அந்த அறையில் காணப்படும் புதுமைகளை வியப்பின் மிகுதியால் விழுங்கும் கண்களுடன் நேரம் செல்வதறியாமல் அமர்ந்திருக்கிறாள். பூக்களின் குவியல்களாய் ஒருகடிகாரம். பட்டாம்பூச்சி ஒன்று டிக் டிக்கென்று பூக்களில் உட்கார்ந்து உட்கார்ந்து நகருகிறது. பளிங்குயானை... மணித்தேரில் அழகிய புத்தர் பிரதிமை. அது தங்கமா? இருக்கும். வினியின் அம்மா, அப்பா இருவரும் துபாயில் இருக்கிறார்களாம். அங்குதான் தங்கம் மலிவாமே!? அலமாரி கொள்ளாத ஆடியோ, வீடியோ கேசட்கள். டூ இன் ஒன்... சுவரில் வினியின் முழு அளவுப்படம் ஒன்று தொங்குகிறது. அதில் தலையில் தொப்பி வைத்துக்கொண்டு, ஃபிராக் போன்ற உடை அணிந்து சிரிக்கிறாள்...

ரேவுக்கு வந்த காரியம்- வேர் மறந்து சஞ்சாரம் செய்வது மிகவும் சந்தோஷமாக இருக்கிறது... இப்போது தான் கவனிக்கிறாள், தொலைக்காட்சியில் ஏதோ ஒருபடம் ஓடிக்கொண்டிருப்பதை. தொலைபேசியில் பேசுவதற்காக, ஒலியை நிறுத்தி இருக்கிறாள் என்று புரிகிறது.

அதுகூட ஏதோ இங்கிலீஷ்படம் போல் தோன்றுகிறது. நம் ஆட்கள் இல்லை. வேறு ஏதேனும் நல்லபடம் போட்டிருக்கக்கூடாதா?

பாட்டிதான் வந்து அவசரப்படுத்துகிறாள். "வினி...! எத்தனை நேரம் பேசுவே? போதும்! ரேவு காத்துட்டிருக்கு பாரு!"

"ஸாரி... ஸாரிடி நிமா... பாட்டி கோச்சிக்குது... ஓகே... பை... பை...!"

வினி வாங்கியை வைக்கிறாள். பிறகுதான் தொலைக்காட்சி ஒலி வைத்திருப்பது தெரிகிறது. டிரம், கிட்டார், இன்னும் என்னென்னவோ வாத்தியங்களுடன் குதித்துச்சத்தம் போடும் 'பாப்' மியூஸிக்.

ரேவு மனமில்லாமல் எழுந்து தொலைபேசியருகே வருகிறாள், வெண்ணெய்க் கடைக்காரனின் ஃபோன் அழுது வழியும். நம்பர்களைச் சுற்றிச்சுழற்ற வேண்டும். இது... எவ்வளவு அழகு! சொகுசாக, குமிழ்பித்தான்களைத் தொட்டாலே போதும். தன் உள்ளங்கையில் எழுதிவந்த இலக்கங்களைப் பார்த்துக் கொண்டே தொடுகிறாள்.

மணி அடிக்கிறது.

"ஹலோ... டாக்டர் முத்துவேல் எப்ப வந்து பார்ப்பார்?"

"... தினமுமா... நாலுமணியிலிருந்து ஆறுமணி வரையிலுமா?... ஓகே... தாங்க்ஸ்... பை..."

வினி கூறிய மாதிரியே 'பை' என்று கூறி வைக்கிறாள்.

"வினி, அந்த மியூஸிக்கை நிறுத்து!" என்று பாட்டி கடுமை காட்டுகிறாள்.

"ஏம்மா, ரேவு? யாருக்கு உடம்பு சரியில்ல?"

"எங்கம்மாவுக்குத்தான் பாட்டி! ஜுரம்.. ஒரு மாசத்துக்கு மேலா... மஞ்சளா வாந்தி எடுத்தா. மஞ்சக்காமாலைன்னு பாட்டி மந்திரிக்கக் கூட்டிட்டுப் போயி மந்திரிச்சாங்க. சரியாகல. அம்மாவால இப்பல்லாம் ஒன்னும் செய்யமுடியலையா? பாட்டி எப்பவும் எரிஞ்சு விழறாங்க. எங்க தெரு நளினாபாய் டாக்டர் தான், இந்த முத்துவேல் டாக்டர் போன் நம்பர் குடுத்து கூட்டிட்டுப் போகச் சொல்லியிருக்காங்க. அவருக்கு ஃபீஸ் நூறு ரூபாயாம்...."

"அடாடா...! உனக்கு அப்பா இல்லையாம்மா?"

"இல்ல பாட்டி, அவர் குடிச்சுக் குடிச்சு ரோட்டில விழுந்து செத்துப் போனாரு!"

துயரமும் வெறுப்பும் மோதியடித்துக் கொண்டு வருகின்றன.

"ம், இதொரு கர்மம்... பாவம், எப்பம்மா?"

"நான் ரெண்டாவது படிக்கறச்சயே. இப்ப நைன்த்..."

"ஐயோ, பாவம்!"

"எங்கம்மா, தீர விசாரிக்காம, தெரியாம, கழுத்தை நீட்டி என்னையும் வேறு பெத்துக்கிட்டா... அவருக்கு முன்னேயே கலியாணமாகி, குடிக்கிறார்னு, முதல் பெண் சாதி டைவர்ஸ் வாங்கிட்டுப் போயிட்டாங்களாம்! எங்கம்மா..."

சட்டென்று யாரோ தலையில் குட்டினாற்போல் ரேவு நிறுத்திக் கொள்கிறாள்.

"போகணும் பாட்டி... இந்தாங்க, போனுக்கு எவ்வளவு...?"

"... வேணாம்மா... இதுக்கெல்லாம் காசு வேணாம்..."

"தாங்க்யூ! நான் வரேன் பாட்டி!"

ஸ்டர்லிங் ரோடு சந்திப்பில் காலை நேர நெருக்கடியில் சாலையைக் குறுக்கே கடப்பது கடினமாக இருக்கிறது.

ஓட்டமாக விரைந்து காவல் நிலையம் கடந்து, சந்து வீட்டுக்குள் புகுந்து புறப்படுகிறாள். மேலே, தையல் பள்ளி, டைப் அடிக்கும் பயிற்சி நிலையம், கீழே குழந்தைக் காப்பகம்... இரைச்சல்கள்- நிறுத்தி வைத்த இருசக்கர வாகனங்கள் கடந்து ஒன்றன்பின் ஒன்றான பொந்து போன்ற தங்கள் வெளிச்சமில்லாத அறைக்குள் நுழைகிறாள். பாட்டி வீட்டில் இல்லை. அப்பளக் கட்டுப் பார்சல் எடுக்கத் தாம்பரம் சென்றிருப்பாள். அம்மா... அம்மா தான், கீழே தரையில் உட்கார்ந்து, ஒரு பழைய சேலைத்துணியினால், கீழே பரந்து கிடக்கும் கூழ் அப்பளத்தை அழுத்தி, எண்ணிக் கட்டிக்கொண்டிருக்கிறாள். அம்மாவின் முகம் ஒரேயடியாக வெளுத்திருக்கிறது. கண்கள் சோர்ந்து உதடுகள் சிவப்பேயில்லாமல்... ஓ...!

"அம்மா! நீ ஏம்மா வேலை செய்யிற?"

"இல்லம்மா, சித்த முன்னே ஒருத்தர் வந்து பத்தியம்னு, கூழ் அப்பளம் கேட்டாரு. பத்துமணிக்குள்ள தாரேன்னேன். உக்காந்து கிட்டே செய்யிறது தானே?"

"போம்மா! டாக்டர் முத்துவேல் இன்னிக்குச் சாயங்காலம் நாலு மணிக்கு அண்ணா கிளினிக்குக்கு வருவாராம். நான் கூட்டிட்டுப் போறேன்... ஜான்னவி அபார்ட்மெண்ட் வீட்டில்... அவங்க போனுக்குக் காசு கூட வாங்கிக்கல..."

"டாக்டரெல்லாம் வாணாண்டி கண்ணு! ரொம்பச் செலவாகும். கசாயத்திலயே கொஞ்சம் தேவலாம். ஆகஸ்ட் 15 நாடகத்துக்கு டிரஸ் வேணும்னு சொன்னியே! வாங்கிக்கம்மா!"

"ஓ, ஸ்கூலுக்கு நேரமாயிட்டதும்மா!"

ரேவு ஓட்டமாகப் பள்ளிக்கு விரைகிறாள் புத்தகப்பை, தண்ணீர் குப்பிச் சுமை... நல்ல வேளையாகப் பாட்டி இல்லை. இருந்தால்,

நேரமாகிவிட்டதற்காக வறுத்துக் கொட்டியிருப்பாள்...

பாட்டியாம் பாட்டி! அந்த வினியின் பாட்டிக்கும் இவளுக்கும் எத்தனை வித்தியாசம்! ஒரு நாளேனும் அன்புமுகம் உண்டா? சனியன், சனியன், இது ஒரு பொண்ணில்லன்னு யாரு அழுதாங்க? இதில்லன்னா எம்மகள ராஜாத்தி போல இன்னொரு கலியாணம் கூடக்கட்டியிருப்பேன்? அட ஆம்புள யானாலும் பிறந்திச்சா? இது இப்பவோ நாளையோன்னு நிக்கிது... பெரிசாயித்தொலஞ்சிடும்!... என்ற பேச்சுகள் மனதுக்குள் மோதுகின்றன. "ஆண்டவனே! அம்மாவுக்கு ஏதானும் ஆனால்...? ஒண்ணும் வரக்கூடாது...! வேப்பமரத்தடிப் பிள்ளையாரே, அம்மாளைக் காப்பாத்து! டாக்டர் முத்துவேல் பார்த்தால்... சரியாயிடும்... நூறு ரூபாய்... அவங்கவீட்டில எத்தனை கேசட்! ஒரு நூறு ரூபாய் குடுக்க மாட்டாங்களா? சீ, அப்படிப்போய்ச் கேட்கலாமா?..."



பள்ளியில், பிரார்த்தனை மணி யடித்து விட்டார்கள். வெளியேநின்று விட்டுத்தான் ரேவு போகிறாள்.

நல்லவேளை... முதல் வகுப் பிலேயே காத்யாயினி டீச்சர், நாடகத்தில் பங்கெடுக்கிறவர்களைக் கூப்பிட்டு விடுகிறார். ஏனெனில் ஆகஸ்டு பதினைந்துக்கு நான்கு நாள்களே இருக்கின்றன.

ரேவுவுக்குக் கண்ணகி பாத்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது

புவனேசுவரி பாண்டியன் நெடுஞ்செழியன். சுமித்ரா- ராணி- கோப்பெருந்தேவி. வாயிற்காவல னாக ரம்யா.

அவர்களுக்கெல்லாம் பேச்சுக் குறைவானாலும், வேடங்கள் உண்டு. ரேவுவுக்குப் பெரிய வேடம் ஒன்று மில்லை.

ஆனால் ரேவதிக்கு- முக்கியமான பாத்திரம்- வேடம். பூச்சு, நகை ஏதுமில்லை. ரேவுவுக்கு நீண்ட கூந்தல். "எண்ணெய் வைக்க வழி யில்லை. எதுக்கு இது? சுத்திரிச்சுத் தொலை!" என்று பாட்டி சொல் வாள். அம்மாவுக்குக் கண்களில் நீர் பொங்கும்.

இப்போது, ரேவு தலைப் பின் னலை அவிழ்த்து விரித்துக் கொள் கிறாள். இது ஒத்திகைதான் என் றாலும், ஆண்வேடக்காரிகள், தலை யில் ஒரு குட்டையைக் கட்டிக் கொண்டு மேலே சட்டை மட்டும் போட்டிருக்கிறார்கள்.

எட்டில் படிக்கும் புவனேசுவரி- வாட்டசாட்டம் .. அவள் நாற்காலி சிம்மாசனத்தில்... பக்கத்தில், சுமித்ரா- தலையில் தாவணியினால் அரை முட்டாக்குடன்...

இடுப்பில் ஒரு பச்சைத் துண்டு டன் ரம்யா...

கண்ணகி அவள்... தாவணியை இடுப்பில் இறுக்கிச் செருகியவளாக, கையில் ஒரு கண்ணாடி வளை யலாகிய சிலம்புடன்...

"வாயிலோவே! வாயிலோயே!

அறிவு அறை போகிய பொறி அறு நெஞ்சத்து.

இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!... வாயிலோயே!"

ஆத்திரம்... ஆத்திரம்... அம் மாவை ஏமாற்றிய கயவன்... மற்ற வன் கழித்தபின்னும் இன்னொருத் தியை ஏமாற்றிப் பசப்பி... அவன் இரத்தத்தில் அவள் ... தீ...தீ!

"வாயிலோயே!"

அறிவு அறை போகிய பொறி அறு நெஞ்சத்து-

இறை முறை பிழைத்தோன்...

பாட்டி... பாட்டியா? குடிலம்... இது பொட்டை. இதை நீ குட்டிக் குட்டி, அடித்து வளர்க்கலாம். அவன் பிண்டம். அத்தனை துர்க் குணமும் ஊறி இருக்கும்... அடி....! அடி...!

வினாத்தெரியாத பருவத்தில் அடித்து அடித்து நெஞ்சை ரணமாக்கிய பாட்டி.

"தேரா மன்னா! செப்புவது உடையேன்!

...

சொற்கள் அனற்கங்குகளாகத் தெறிக்கின்றன. கையிலுள்ள கண் ணாடி வளையல் சிலம்பு உடைந்து தெறிக்கிறது.

ஆத்திரம்... ஆத்திரம்...! இந்த உலகைப் பஸ்மமாக்கு!

என் அம்மாவை யார் ஏமாற்றிய வன்?

கயவாளி கோவலன்! கண்ண கியை விட்டுவிட்டு மாதவியுடன் கொட்டம் அடித்தான்! கயவாளி! அவனை வெட்டு! கண்ட துண்ட மாக்கு! அவன் கணவன்! குடிகா ரன்! மோசக்காரன்! பெண்களைக் கதறவிடும் பதர்களை வெட்டிப் போடு! வெட்டு!

"பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்...

ஒட்டேன் அரசொடு ஒழிப் பேன்... ஒழிப்பேன்... ஒழிப்பேன்...!

அக்கினியே! மதலையர், வஞ்சகம் அறியாப் பஞ்சையர், ஏதிலர், ஏழையர், இவர்கள் அனைவரையும் விட்டு விட்டுத் தீத்திறத்தார் பக்கம் சேர்வாயாக! கயவர், கசடர், கள்வர், நெஞ்சாரப் பொய்புகலும் புல்லர், போக்கிரி, வீணர், அனை வரையும் ஒழிப்பாய்! அக்கினி! அக்கினி...!"

சொற்கள் கனற்பொறிகளாகப் படிந்து சுழல்கின்றன.

'ஒழிப்பேன்... ஒழிப்பேன்... கயவர் கசடர், கள்வர், பொய்யர்,

போக்கிரி, வீணர்... ஒழிப்பேன்... ஒழிப்பேன்...!'

அக்கினிச்சுவாலையின்... சுழற்சி... தீ நாக்குகள் சுழன்று பரவ, வானம் வையகம் சுழல... அவள் சுழன்றாடு கிறாள்.

கண்ணகி... நான் கண்ணகி... ஒழிப்பேன்... பஸ்மமாக்குவேன்!

அவளுடைய ஆட்டம் கண்டு காத்யாயனி டீச்சர் ஸ்தம்பித்துப் போகிறாள்.

என்ன ஆட்டம்... ஆடுறா இந்தப்புள்ள...!

"ரேவு... ரேவு...!"

தீத்திறத்தார் பக்கம், அக்கினி... சேர்வாயாக!

சேர்வாயாக... எரிப்பாயாக! எரிப்பாயாக!... எரிப்பாயாக!"

சுழன்று சுழன்று கண்கள் செருக அவள் கீழே விழும் தருணத்தில் டீச்சர் அவளைப் பாய்ந்து ஏந்திக்கொள்கிறாள்.

"ஏய் எல்லாம் தள்ளிப்போங்க! போய் சோடாவோ, கூல்டிரிங்கோ ஏதாவது வாங்கிட்டு வாங்க!"

யாரோ முகத்தில் தண்ணீரைத் தெளிக்கிறார்கள்.

ரேவு... ரேவதி... என்ன ஆச்சு புள்ள உனக்கு? இப்படி ஓர் ஆட்டம்...?

"இந்தாம்மா, சில்லுனு, குடி... இதை..."

தம்ளரில் ஊற்றி சில்லென்ற பானத்தை அவள் வாயில் ஊற்று கிறாள், காத்யாயனி டீச்சர்... முன்னுச்சி நரைத்த, மூக்குக்கண் ணாடி போட்ட டீச்சர்...

இவளையும் கட்டியவன் ஏமாற் றினானா? இல்லையேல் அப்பன் வஞ்சித்தானா?

"ஏம்மா எப்படியோ பாக்கிறே? காலைல சோறு சாப்பிடாம வந்திட்டியா? கூல்டிரிங்க் எல்லாம் குடிச்சிக்க!"

"டீச்சர், நீங்க யாரிட்டன்னாலும் ஏமாந்தீங்களா?

எங்கப்பன்... எங்கம்மாளை ஏமாத்தி, அவசுகம், சொத்து பத்து எல்லாம் சுரண்டிட்டுப்போனான்! எங்கம்மாக்கு உடம்பு சரியில்லை எங்கம்மா... எங்கம்மா..."

அவளுக்கு வார்த்தைகள் வர வில்லை... அழுகைதான் பொங்கிப் பொங்கி வருகிறது.

"முத்துவேல் டாக்டருக்கு நூறுரூபாய் ஃபீஸாம்!... வீடு நிறைய கேசட் வச்சிட்டிருக்கா. மணிக் கணக்கா போன்ல சிரிச்சுப் பேசறா. விதவிதமா டிரஸ் போடுறா... அவ பாட்டி அன்பாப்பேசுறா. ஏன்னா... அவப்பா... அம்மாளை மோசம் செய்யல. ஏமாத்தல... நான்... நான்... எங்கம்மா செத்துப்போனா... பாட்டி என்னைப் புரட்டி எடுத்திடும்... அம்மா...! நீ... செத்துப்போகாதே!"

விம்மல் வெடித்து வருகிறது.

கண்ணகி போல எல்லாத்தையும் எரிக்கணும், அழிக்கணும்...

டீச்சர்... டீச்சர்...

விசும்பலைத்தவிர ஒரு சொல் புரியவில்லை.

டீச்சர் அவளை அன்பாகத் தட்டுகிறாள்.

...ஓ...நோ... என்ன புள்ளே நீ...! ஷ் அழக்கூடாது... ம்..."

"டீச்சர்... அவ..."

ரஞ்சனி டீச்சர் பக்கம் குனிந்து குசுகுசுக்கிறாள்.

மற்றவர்கள் நமுட்டுச்சிரிப்புச் சிரிக்கிறார்கள்.

"இந்தாங்க, எல்லாம் அவங்க வங்க எடத்துக்கு கிளாஸுக்குப் போங்க! இன்னைக்கு இனிமே ரிகர்சல் இல்லை!"

ரேவதி, திடுக்கிட்டு நாணி எழுந்து நிற்கிறாள்.

"ஸாரி டீச்சர், நான்... தப்பாப் பண்ணிட்டேனா?"

டீச்சர் அவள் கண்களைத் துடைக்கிறாள்.

"நீ நல்லாப் பண்ணினே. இதைவிடக் கண்ணகியா யாருமே ஆக்ட் பண்ண முடியாது. நீ இப்படி பெஞ்சில் உட்கார்ந்துக்க ரேவு! நான் எச்.எம்.கிட்ட சொல்லிட்டு, ஓர் ஆட்டோ கொண்டுவந்து உன்ன வீட்டுக்கு அழைச்சிட்டுப்போறேன்..."

"எனக்கு என்ன ஆயிடிச்சு டீச்சர்?"


"ஒண்ணும் ஆகலைம்மா, இந்த எய்ட்த், நைன்த் பெண்களுக்கு ஆவுற சமாசாரந்தான். நல்ல வேளை ஆகஸ்ட் பதினைஞ்சுக்கு இன்னும் நாலு நாளிருக்கும் போதே நீ பெரிய மனுஷியாயிட்டே! யேய், ஏன் அழுவறம்மா! எல்லாப் பொம்பிளை பிள்ளைகளுக்கும் ஆவுறது தான்..."

எச். எம். அவளை வந்து வாழ்த்துகிறாள். ஆட்டோவில் காத்யாமினி டீச்சர் வீட்டுக்குக் கூட்டிச் செல்கிறாள்.

அது தடதட வென்று பூமியை அதிரச் செய்வது போல் ஓடுகிறது. அம்மாவின் உடம்பு, முத்துவேல் டாக்டரின் ஃபீஸ், வினியின் வீட்டு வண்மை வரிசைகள்- பாட்டியின் குடிலமுகம், அன்பே தெரியாத குரல்...எல்லாம் அந்த அதிர்வில் கரைந்து கரைந்து உருகுகின்றன. ஒரே இருள் பரவினாற்போன்று பிரமை. அதற்குள் ஒருசிறு துடிப் பாய் ரேவு... ரேவு... அவள் கண்ணகியாவாளா? ஃ

இலந்தை. சு. இராமசாமி

கண்ணுறங்கு, கண்ணுறங்கு!



களத்து மேட்டில் கதிரறுக்கக்
கருக்கரிவாள் தூக்கி வந்தேன்
குளத்து மேட்டுப் பிள்ளையாரே
குழந்தையை நீ காக்க வேணும்.

வேப்பமரக் கொப்பினிலே
வீசிப் போட்டேன் என்சேலை
என்சேலைத் தூளியிலே
என்மகனே கண்ணுறங்கு

மரக்கொம்பு வளைஞ்சுவரும்
மன்னவனே உந்தனுக்கு
சுருக்கா நான் வந்திடுவேன்
சுகமா நீ கண்ணுறங்கு

காக்கா கதை சொல்லும்
கருங்குருவி வாலாட்டும்
கூக்கூ குயில்பாடும்
குழந்தையே கண்ணுறங்கு

வேப்பமரக் காத்துப்பட்டா
வேறுவினை சேராது
காப்பா மகமாயி
கண்ணுறங்கு என் மகனே

பஞ்சு மெத்தை சூடாகும்
பாளம்பாளம் கொப்புளிக்கும்
எஞ்சாமி பஞ்சு மெத்தை
ஏதுக்கடா நம்மளுக்கு?

தெக்கேருந்து காத்துவரும்
சீராமன் சந்நிதிக்கே
மொக்குமல்லி தான்வெடிக்கும்
மூக்கெல்லாம் தான் மணக்கும்


மஞ்சள் வெயில் தங்கமடா
மரகதமாம் பச்சைஇலை
பிஞ்சுக் குழந்தே உன்
பேர் கூட மாணிக்கம்.

பாலுனக்கு வேணுமின்னு
பாடுபடப் போறேண்டா
காலுதைச்சு நீயழுதா
கண்ணீர் வருகுதடா!

நாலெழுத்து நீபடிச்சு
நஞ்சை புஞ்சை வாங்கோணும்
பால்கொடுத்த எந்தனுக்கு
பட்டுச்சேலை எடுக்கோணும்


நீ சிரிச்சா நான் சிரிப்பேன்
நீயழுதா நானழுவேன்
ஆசைவச்சேன் உன்மேலே
அழவேணாம் கண்ணுறங்கு

ஆத்தாடி நேரமாச்சு
அழைக்கிறாக பொம்பளைக
ஆத்தா நான் போய்வாரேன்
அழுவாதே கண்ணுறங்கு!


ஹி.. ஹி.. ஹி... ஹி...!



அம்பத்தூர், கல்லைநகர், ஸ்ரீயோகமாயா புவனேஸ்வரி, (ஸ்ரீபரத்வாஜ ஆச்ரமம்) 'அமுதசுரபி' தீபாவளி மலர் 1994



ஸ்ரீபரத்வாஜ் ஸ்வாமிகள்

அம்பிகையைப் போற்றும் ஆன்மிகச் செல்வர்கள்

புவனேஸ்வரி தாசன்

ஸ்ரீவித்யை என்பதான தேவீ உபாஸனை சாக்ஷாத் ஆதிபரா சக்தியான ஸ்ரீபுவனேஸ்வரியைக் குறித்துச் செய்யப்படும் சக்தி வழி பாடாகும். இந்த வழிபாட்டினால் பிரும்மா படைத்தல் தொழிலையும், மகாவிஷ்ணு காத்தலையும், சிவபெரு மான் லயத்தைச் செய்யும்படியான யோக்கியதை கிட்டியதாக பகவான் ஆதி சங்கரர் ஸௌந்தர்ய லஹரியில் வர்ணிக்கிறார்.

லோகமாதா புவனேஸ்வரியை யார் ஆராதனை செய்கிறார்களோ அவர்களுக்கு சம்சார ஸாகரத் துன்பம் இல்லாமல் போகிறது. இந்தப் பிறவியில் அனைத்துச் செல்வ சுகங்களையும், பின் மோக்ஷ சாம்ராஜ்யத்தையும் அருள்பவள் புவனேஸ்வரி. இந்தத் தேவியைத் துதித்துப் போற்றி, ஜபித்து, அர்ச்சித்து அருளில் திளைத்த அடியார்கள் கோடிக்கணக்கானவர்கள், புவனேஸ்வரி உபாசனையில் நீங்காத செல்வும், குறையில்லா வாழ்வும், பக்தனுக்குக் கிடைத்து விடும். இதனால் இறுமாப்பு அடையாத வாறு அடக்கத்துடன் அனுபவிப்பான். ஆனால் அதில் லயித்து விட மாட்டான். அப்படி அவனும் குதூகலத்துடன் கூத்தாடும் நேரம் ஒன்று உண்டு. தேவியின் கருணை ததும்பும் தோற்றத்தைக் கண்டதும் ஆனந்தத்தை அடக்க முடியாமல் அப்படிக் கூத்தாடுவான். நீருண்ட மேகத்தைக் கண்ட மயில்போல், தேவியைத் தான் கண்டதால் ஏற்பட்ட களிப்பு மட்டுமல்ல அது. "மேகம் தோன்றி விட்டது மழை பொழியும், மக்களின் வாழ்க்கை வளம் பெறும்" என்ற களிப்பால் தேவி உபாசகன் மகிழ்வான்.

இப்படி தேவியின் அருள் எங்கும் பரவி, எங்கும் ஆனந்தம் பரவ இருப்பதை உணர்ந்து, உபாசனை பலத்தால் ஆனந்தம் கொள்பவர் தான் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி சுவாமிகள். அன்னையின் நாம ஜபத்தை- உண்ணும்போதும், உறங்கும்போதும், ஜபித்து எந்த நாளும் எந்த வேளையும் மணக்கும் மலர்களை அவளது மலர்ப்பாதத்தில் சேர்ப்பித்து, தன் இதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருக்கும்படி செய்து, தாமே தேவியாக மாறி, பக்தர்களுக்கு அருள் புரியும் ஞான சூரியனாக விளங்கி மெய்யன்பர்கள் உய்யும் பொருட்டு, ஸ்ரீயோகமாயா



✱ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள்

புவனேச்வரி பீடம் என்பதான ஸ்ரீ பாரத்வாஜ ஆச்ரமத்தை நிர்மாணம் செய்து, அருள்பாலிக்கும் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகள் ஐம்பது வருட காலமாய் நித்யப்படி நடத்துகிற திருவாராதன நிகழ்ச்சியைப் பார்ப்போம்.

சென்னை அம்பத்தூர் ரெட்ஹில்ஸ் சாலையிலுள்ள கங்கை நகர் ஸ்ரீபாரத்வாஜ ஆச்ரமமாய் இருந்தாலும் சரி, ஸ்வாமிகள் வெளியூர் சென்றிருந்தாலும் அவர் ஸ்ரீயோக மாயா புவனேஸ்வரிக்குச் செய்து வரும் வழிபாடு தடையின்றி நடைபெறுகிறது.

தினமும் விடிகாலை ஐந்தரை மணிக்கு பஞ்சகவ்ய (பசுஞ்சாணம், கோமயம், பசுந்தயிர், பசுநெய், பசும்பால் கலந்த கலவை) ஸ்நானம். இதனைக் கொண்டு ஸ்நானம் செய்வதால் திரிகால ஞானமும், தேககத்தியும் கிடைப்பதாக ஆன்றோர்களும், சித்தர்களும் கூறுவர். பின் காயத்ரி விதி ஜபம், தேவி உபாசனையில் பெரும் அங்கமான ஸ்ரீமகாகணபதி சதுராவ்ருத்தித் தர்ப்பணம்- இது நானூற்று நாற்பத்து நான்கு நடவை சுத்த கங்கா ஜலத்தால் தர்ப்பணம் செய்வது.

இதைத் தொடர்ந்து பசும்பால் கொண்டு ஸ்ரீசக்ரத்திற்கு சோடசீ பிந்து தர்ப்பணம்- இது மிகவும் விசேஷமான ஒன்று. பின் மரகத சிவலிங்கத்திற்கும், மரகத மகாமேருவுக்கும், ருத்ராபிஷேகம். பால், தேன், தயிர், பஞ்சகவ்யம், குங்குமம், மஞ்சள், சந்தனம், பன்னீர் ஆகிய திரவியங்கள் கொண்டே தினமும் திருமஞ்சனம். பிறகு ஸ்ரீமகாகணபதி திரிசதியுடன் பலவித வாசனை மலர்களால் புஷ்பார்ச்சனை தொடங்கும். இதற்குள் தேவி அலங்காரம் செய்யப்பட்டு மண்டபத்தில் எழுந்தருளச் செய்து ஆராதனை தொடங்கும்.

முதலில் தேவியின் நகரமான ஸ்ரீநகரம் எனப்படுகிற கோட்டைகளும், அகழிகளும், / வாபிகளும் அமைந்துள்ளன. அங்குள்ள தேவ தேவியருக்குச் செய்யப்படும் மணித்வீபேஸ்வர பூஜை. பின் அன்றைய திதிக்குத் தேவதையான திதி நித்யா பூஜை. தர்ப்பணம். இதனைத் தொடர்ந்து ஸ்ரீசக்ர ஆவரண பூஜை. தேவியைச் சுற்றியிருக்கிற பீடங்களுக்கும், தேவதைகளுக்கும் உள்ள பூஜை லலிதா ருத்ர திரிசதி, ஸ்ரீபுவனேஸ்வரி திரிசதி, மீனாக்ஷி அஷ்டோத்ரம், பிரத்தியங்கிரா பூஜை. இந்தப் பிரத்தியங்கிராதேவி, யார் ஆதி பராசக்தியான புவனேஸ்வரியைப் பூஜிக்கின்றார்களோ அவர்களுக்கு மெய்க்காப்புப் படை போன்று பாதுகாவலாக இருப்பவள். லக்ஷ்மி அஷ்டோத்ரம் கொண்டு புஷ்பார்ச்சனை. தவிர தினமும் காலையில் லலிதா ஸஹஸ்ரநாமம், காயத்ரீ ஸஹஸ்ர நாமம், புவனேஸ்வரி ஸஹஸ்ரநாமம், பிரத்யங்கிரா ஸஹஸ்ரநாமம், பாலா ஸஹஸ்ரநாமம், பலவித புஷ்பங்கள் கொண்டு அர்ச்சனையும், மாலையில் துர்கா ஸஹஸ்ர நாமமும், ராஜ ராஜேச்வரி ஸஹஸ்ர நாமமும், புஷ்பம் அல்லது , குங்குமத்தால் நடைபெறும்.

யோகமாயா புவனேஸ்வரிக்கு அதிகாலையில் குங்குமப்பூவுடன் பசும்பாலும், காலை எட்டு மணிக்கு சுத்தான்னமும், மதியம் அலங்கார சாதமாகவும் நைவேத்யமும், மாலையில் கதலிப்பழமும் பாலும் நைவேத்யம் உண்டு. பிரதிமாதம் இரண்டு அஷ்டமி தினங்களில் பதின்மூன்று விளக்குகளில் தேவி மகாத்மியத்திலுள்ள பதிமூன்று சக்திகள் ஆவாஹனம் செய்து, சண்டி பாராயணம் "ரூபம்தேஹி ஜயம்தேஹி யசோதேஹி த்விஷோ ஜஹி" "ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே" என்று ஒவ்வொரு ஸ்லோகத்திற்கும் பின்னால் சொல்லப்பட்டு எழுநூறு ஸ்லோகங்கள் கொண்டு திவ்ய மங்கள சப்தசதி தீபார்ச்சனம் நடைபெறும். இன்றையதினம் எள்ளுப் பாயஸம், எள்ளுருண்டை, தேனில் தோய்த்த உப்பில்லா வடையும், என் கலந்த சாதமும் நைவேத்யம் உண்டு.

ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடுகின்ற தினம் ஸ்வாமிகள் நடத்துகிற பௌர்ணமி தினம்தான். அன்று அறுபத்துநான்கு விதமான அபிஷேகம், லட்சார்ச்சனை, சோடச உபசாரம் அனைத்தும் நடக்கும். பௌர்ணமியன்று இரவு ஆசிரம மேல்விதானத்தில் முழு நிலவைப் பெரிய கண்ணாடியில் பிரதிபலிக்கும் படியாகச் செய்து, ஸ்ரீவித்யா சந்த்ரகலா ஸ்வரூபிணியான அம்பிகைக்கு ஸ்ரீஸுக்த பிரகாரம் ஆவாஹனம் செய்யப்பட்டு, பூஜை நடைபெறும்.

அஷ்டமி தினங்களிலும் சரி, பௌர்ணமியிலும் சரி, நவராத்திரி மற்றும் புண்ய விசேஷ நாள்களிலும் சரி, அன்னதானம் ஸ்வாமிகளின் சிறப்பு அம்சமாகும். வயிறு நிறைய விருந்து சாப்பாடு. இந்த உணவு அறுசுவை உணவு. தேவி ஸ்வீகரித்த அமுத உணவு.

கங்கை ஓடுகிற ரிஷிகேசத்திலும், காவிரி பாய்கிற ஒகேனக்கல், பாலாம்பிகை க்ஷேத்திரமான வைத்தீஸ்வரன் கோயில் குளம் இங்கெல்லாம் மார்பளவு நீரில் நின்று பஞ்சதசீ ஜபம், பூஜை நடக்கும். பக்தர்களின் கொடிய நோய் தீர, வியாபாரம் பெருக, பருவத்தில் கன்னிப் பெண்களுக்குத் திருமணம் நடைபெற, தீராத வியாதி விலக, ஐஸ்வர்யம் பெருக, காலையில் ஸ்ரீவாஞ்சா கல்பகணபதி ஹோமம், சதமுலிகா ஹோமம், ஸ்வர்ண மங்கள கௌரீ பூஜை, சோடச மகாலக்ஷ்மி பூஜை இவற்றைச் செய்தருளுவார்கள்.

புவனேஸ்வரி ஸ்வாமிகள் செய்யும் இப்பூஜைகள், ஜபங்கள் எல்லாம் உலக நலன் கருதிச் செய்கின்றாரேயன்றி தன் சுயநலனுக்கு இல்லை. இதனைத் தொடர்வதற்கு இளவரசு ஸ்ரீபரத்வாஜ் சுவாமிகளைத் தயார் படுத்தி தீக்ஷையளித்த விவரம் அனைவர்க்கும் தெரிந்ததே. தந்தை புவனேஸ்வரி ஸ்வாமிகளின் அடியொற்றி காலையில் காயத்ரீஜபம், கணபதி ஜபம், மாலை, பஞ்சதசீ ஜபத்தினைத் தொடர்ந்து பாலா ஸஹஸ்ரநாமமும், லலிதா ஸஹஸ்ர நாமத்துடன் புஷ்பங்களால் அர்ச்சனையைச் செய்வார். தந்தையின் நலனைக்கவனிப்பது, ஆசிரமத்தில் பக்தர்களுக்கு அன்பு செலுத்தி உபசரிப்பது, விசேஷபூஜைகள் அனைத்தும் முன்னின்று நடத்துவது, பரிகாரத்திற்கு வரும் அன்பர்களின் குறை தீர்ப்பது, நதிதீரங்களில் ஜபம் செய்வது, தந்தைக்கு உடனிருந்து உபாசனைக்கு உதவுவது என அனைத்துப் புண்ய கார்யங்களைச் செய்தும், சொற்பொழிவு ஆற்றுவது. யாக காரியங்களில் விசேஷ அக்கறை காட்டுவது அல்லாமல் அவற்றை முன்னின்று நடத்துவது, கும்பாபிஷேகங்களில் ஈடுபட்டு, தந்தையுடன் நடத்துவது என, பொது வேலைகளிலும் நமது பரத்வாஜ் ஸ்வாமிகள் செய்தருள்வது நமக்கெல்லாம் பெருமையே. யோகமாயா புவனேஸ்வரி பீடத்தில் நடக்கும் பூஜை ஹோமங்களைத் தரிசித்தும், அன்னையின் அருள் திறத்தால் நீங்காத செல்வம் நிறைந்து இருக்க வேண்டுமென்றும் பிரார்த்தித்து, பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் ஆசிகளைப் பெற்று, ஸ்ரீபரத்வாஜ ஸ்வாமிகளின் அன்பில் திளைத்து, ஆனந்தம் பெறுவோம். ஸ்ரீ



BPL லின் தயாரிப்பு வரிசை

எலெக்ட்ரானிக் துறையின் ஏகச் சக்கரவர்த்தி பிபிஎல்

ஸ்ரீ. வே.

1961.

இந்தியாவில் எலெக்ட்ரானிக் துறை அதிகம் வளர்ச்சி பெறாத நேரம்.

இந்நேரத்தில் சின்னஞ் சிறு அரும்பாக உள்ளே நுழைந்தது BPL நிறுவனம். தெற்கே கேரளத்தில், சிறிய நகரமான பாலக்காட்டில் சிறிய தொழிற் கூடம் ஒன்றை நிறுவியது.

முதல் உற்பத்தி ஒரு சிறிய பொருள் தான்!


ஆனால் இதன் தயாரிப்பில் முழு மனத்தையும் செலுத்தியது. BPL இரண்டு விஷயங்களில் லட்சியத்தை வைத்தது. ஒன்று, 'உயர்ந்த தரம்; நம்பி வாங்கலாம்', என்று மக்களிடையே பெயர் பெற வேண்டும்.

இரண்டு, தொழில் நுட்பத்தை மனிதன் வசதிக் காகப் பயன்படுத்தவேண்டும்.

நிறுவனம் வளர்ந்தது. தயாரிப்புகளும் வளர்ந்தன, நிறுவனம் பெரிதாகி இரண்டாகப் பரிணமித்தது. சீக்கிரத்தில் மூன்றாகவும் துளிர்விட்டது.

இன்று ரூபாய் ஆயிரத்திருநூறு கோடிக்கு மேல் மூலதனத்துடன் ராட்சத நிறுவனமாக வளர்ந்து நாடெங்கும் கிளை ஊன்றிவிட்டிருக்கிறது BPL! தயாரிப்புகளை, பல்வேறு வகைகளில் ஏகமாகப் பெருக்கியிருக்கிறது. பத்து நிறுவனங்களின் கூட்டு அமைப்புடன் மாபெரும் நிறுவனமாக உருவாகி உள்ளது.

TPG நம்பியார், சேர்மன் BPL



எட்டுத் துறைகளில் இந்த நிறுவனம் முன்னணியில் நிற்கிறது. அவை:

எலெக்ட்ரானிக் நுகர் பொருள்கள்.

வீட்டு வசதிச் சாதனங்கள்.

ரெப்ரிஜரேட்டர்கள்.

கணினிகள்.

செய்தித்துறை,

ஆபீஸ் நிர்வாகங்களுக்கான தன்னியக்க வசதி முறைகள்.

கம்போனன்ட்கள். (உதிரி பாகங்கள்)

தொழிலகம், மருந்துவம், அளவு இயல்/மூன்றுக்குமான கருவி வகைகள்.

இந்திய எலெக்ட்ரானிக் துறை தவழும் நிலையில் இருந்தபோதே, BPL முன் யோசனையோடு ஸன்யோ-ஜப்பான் நிறுவனத்துடன் சம பங்கீட்டு முறையில் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டது.

ரொபாட்டிக்ஸ், ஹோம் ஆட்டோமேஷன், ஸாஃப்ட் எனர்ஜி, ஆட்டோ எலெக்ட்ரானிக்ஸ், ஸெமி கண்டக்டர்கள், சூரிய சக்தி அடிப்படையில் சாதனங்கள், இவை அனைத்திலும், ஸன்யோ- ஜப்பான் நிறுவனம் உலக ரீதியில் தலைமை ஸ்தானம் வகிக்கிறது.. இந்தப் பெரும் நிறுவனத்துடன் BPL பல்லாண்டுகளாகவே ஒத்துழைத்து இவர்களது செயல்முறை நுணுக்கங்களைச் சுவீகரித்துள்ளது.

இதன் மூலம் இந்தியாவில் எலெக்ட்ரானிக் துறையில் மிகமிக உன்னதமான தரங்களை உருவாக்கி உள்ளது.

ஸன்யோவுடன் கொண்ட பன்னிரண்டு ஆண்டு தொடர்பில் BPLஇன் ஒவ்வொரு தயாரிப்பும் உலகத் தரத்துக்கு இணையாகத் திகழ்கிறது.

அதி நவீன நுட்பத்திறன் அடிப்படையில் BPL வழங்கும் வகை வகையான பொருள்களைப் பாருங்கள்!

ஹோம்-தியேட்டர் ஸிஸ்டம். (வீட்டில் தியேட்டர் வசதி)

வண்ண டெலிவிஷன்.

வீடியோ காஸட் ரிக்கார்டர்கள்.

மைக்ரோ கன்வெக்ஷன் சமைக்கும் வகை முறை.

வாஷிங் மெஷின்கள்.

மினரல் வாட்டர் மெஷின்கள்

ரெஃப்ரிஜரேட்டர்கள்.

இந்தத் தயாரிப்புகள் யாவும் தற்போது இந்திய மார்க்கெட்டில் நடுநாயகமாக விளங்குகின்றன.

தவிர பிரிட்டன், ஹாலந்து, ஜப்பான், ஜெர்மனி நாடுகளிலும் இவற்றுக்கு மகத்தான வரவேற்பு கிடைத்துள்ளது.

BPL எலெக்ட்ரானிக் துறையில் இந்தியாவில் முதன்மை நிறுவனம் என்றோம். முன்னோடி நிறுவனம் என்றோம்.


எனவே நாட்டில் BPL அநேக புதுப் புதுத் தயாரிப்புகளை அறிமுகப்படுத்தியதில் ஆச்சரியமே இல்லை.


உதாரணத்திற்குப் பாருங்கள்!

புரட்சிகரமாக ஃப்ராஸ்ட் இல்லாத ரெப்ரிஜரேட்டரை அறிமுகப் படுத்தியுள்ளது BPL.

அலட்ரா ஹை-டெக் BR 3504 என்ற இந்த ரெப்ரிஜரேட்டரின் கருத்தைக் கவரும் சிறப்பு அம்சங்களைப் பாருங்கள்.

நான்கு கதவுகள் ரெப்ரிஜரேட்டர் இது!





ரி-பாலிஷ்ட் இஞ்செக்ஷன் வார்ப்பு முறையில் உருவாகும் நலைக்கும் கருவித் தொட்டி

உள்ளே வெவ்வேறு தட்ப வெப்ப நிலையில் தனித் தனி அறைகள். விசேஷ 'நெடி-அகற்றி' உள்ளே எழும் நெடிகளை அகற்றுகிறது. உச்சவரம்புத்திறன் கொண்ட ரேஷியோ கம்ப்ரஸ்ஸர் (டிராபிகல் பிரதேசத்திற்கு ஏற்ப அமைந்தது)

இன்னும் பற்பல அம்சங்கள் இதில் நிறைந்துள்ளன.

மக்களின் உணவுப் பாதுகாப்பு முறைகளில் புதுப்புது மாற்றங்களைக் கொண்டு வரப்போவது இந்த ரெப்ரிஜரேட்டர்!

அது மட்டுமல்ல! வாழும் வாழ்க்கை முறையிலேயே, புரட்சிகர மாறுதல்களைச் செய்யப் போகிறது. அதுவே BPL லின் நோக்கம்!

அடுத்ததாக கலர் டெலிவிஷன் துறையில்:-

F & Fast (Flat & Full Square Tube) என்று கூறப்படும் சதுரமும், சம பரப்புமுள்ள ட்யூப்கள் இறக்குமதி செய்து, டி.வி. ஸெட்களில் பொருத்தி உள்ளது BPL.

BPL வழங்கும் FHR 'தி எம்பரர்' டி.வி. இது.

இது 15 சதவீதம் கூடுதல் படப் பரப்பளவு கொண்டது.

அடுத்தபடி இன்னொரு முதல்.

ஒளி உலகின் அதிசயப் படைப்பாக டிஜிடல் ஃபிடலிடி ஸிஸ்டம் டி.1000ஐ அறிமுகப்படுத்தியுள்ளது இந்த நிறுவனம்.

அதி உச்ச 1200 வாட் PMPO சக்தி கொண்டது.

இந்தியாவில் உள்ள மிகத் திறமை வாய்ந்த D-Fi ஸிஸ்டம் இதுதான்! இதனுடன் D-Fi வரிசையில் உள்ள Hi-end ஆடியோ ஸிஸ்டம் படைத்த Portable CD களும் Stand Alone CD System மும் தயாரிக்கப் படுகின்றன. தவிர புதிய Karaoke VCR 5301K என்பதையும் அறிமுகப்படுத்தியுள்ளது, இந்த நிறுவனம்! பொழுது போக்கு உல்லாசங்களில் முற்றிலும் புதுப் பரிமாணங்களைத் திறந்து விட்டிருக்கிறது அந்த வி.ஸி.ஆர்.

இரு மைக் இன்புட்களும், எக்கோ மைக் வால்யூமும் சேர்ந்து உங்களுக்குப் பிடித்தமான பாட்டை அதன் ஒரிஜினல் பின்னணி சங்கீதத்துடனேயே நீங்கள் பாடு வதற்கு வகை செய்கிறது. உல்லாசப் பார்ட்டியா? அதில் உற்சாகத்தை அள்ளி வீசப்போவது இது!

இன்னொரு முதன்மை இவர்களது வி.எச்.ஆர்.5311-வி.ஸி.ஆர்.


உங்கள் டி.வி.யில் "என் டி எஸ் ஸி" வீடியோ காஸட்டைக் காட்டுவதற்கு வகை செய்கிறது இந்தப் புதுமை வி.ஸி.ஆர்!

இதன் மூலம் நீங்கள் அமெரிக்கா அல்லது மற்ற நாடுகளில் பதிவு செய்த காஸட்களை உங்கள் டி.வி.யில் பார்க்க முடியும். டி.வி.யில் இதற்காக எந்த மாற்றமும் தேவையில்லை.

மூல காஸெட்டில் உள்ள தெளிவையும், ஒலிச் சுத்தத்தையும் இதில் அப்படியே அனுபவிக்கமுடியும்!

வருங்காலத்தில் எலக்ட்ரானிக் சந்தைகள் உலகளாவி வளரப் போகின்றன. இதனால் பலநாட்டு நிறுவனங்களுக்கு இடையே பெரும் போட்டா போட்டிகள் ஏற்படப் போகின்றன.

இதை முன்கூட்டியே ஆலோசித்து பெரியதிட்டங் களை வகுத்துள்ளது BPL. இதற்காக ஸன்யோ-ஜப்பான் நிறுவனத்திடமிருந்து புத்தம்புது உலகத்தர தொழில் நுட்பங்களை அப்போதைக்கு அப்போது பெற்றுக் கொள்கிறது.



தானே உதிரிபாகம் பொருத்தும் கருவி

'20 லட்ச சதுர அடிக்கு அதிகமான பரப்புள்ள கட்டட அமைப்புகளை BPL எழுப்பி, ஆக்கப்பூர்வ வசதி அனைத்தும் கொண்ட தொழிலகத்தை நிர்மாணிக்க இருக்கிறது. ஆசியாவிலேயே மிகப் பெரிதான தொழிலகமாக இது இருக்கப்போகிறது.

ஸன்யோ- ஜப்பான் FAST உடன் (Factory Automation Systems Technology) இணைந்து தருவி உற்பத்தி, ரொபாடிக்ஸ், CAD / CAM முதலியவற்றுக்கு அதிநவீன வசதிகளைச் செய்து தரப்போகிறது.

பொருள்களுக்கான வடிவமைப்பு, தர உயர்வு, உற்பத்திப் பெருக்கு ஆகியவற்றையெல்லாம் முழுக் கட்டுப்பாட்டுடன் செயல்படுத்த இந்த நவீன வசதிகள் உதவப் போகின்றன. இத்தனையும் எதற்கு?

வருங்காலத்தில் பெருகப்போகும் வாடிக்கையாளரின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத்தான். கலர் டி.வி.யின் தேவை மட்டும் ஐந்து ஆண்டுகளில் இருமடங்காகப் போகிறது என்பதை இவர்கள் கணித்திருக்கிறார்கள்.

தரம் ஒன்றையே தனது லட்சியப் பொறுப்பாக ஏற்றிருக்கும் BPL நிறுவனம், கன்ஸ்யூமர் எலெக்ட்ரானிக் நிறுவனங்களில் தனிச்சிறப்பு அடைந்திருக்கிறது. இந்திய அரசாங்கத்தின் Department of Electronics அடுத்தடுத்த மூன்று வருடங்களாக இந்த நிறுவனத்திற்கு விருது அளித்துள்ளது.

BPL லின் தரம் உலகெங்கிலும் பாராட்டுகளைப் பெற்றுள்ளது. அவர்களது கலர் டி.வி.கள், மதிப்பு வாய்ந்த German BZT ஸர்டிபிகேட்டையும், பிரிட்டிஷ் டெஸ்ட்ஹவுஸ் ஸர்டிபிகேட்டையும் பெற்றுள்ளது.

கடுமையான சோதனைகளுக்குப்பிறகே பிரிட்டிஷ் ஸர்ட்டிபிகேட் கொடுக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் எலெக்ட்ரானிக்கில் 'அதாரிட்டி' என்று கூறப்படும், ஜெர்மன் வீடியோ பத்திரிகையான,



குறைமை பயக்கும் தொழிற்கருவி
(ப்ரியான் காஸில் உபயோகிப்பது)

'ஜெர்மன் வீடியோ மாகஸின்', ஜெர்மனியில் விற்கப்படும் 12 கலர் டி.வி.களில் ஒன்றாக BPL டி.வி.யையும் தேர்ந்தெடுத்துள்ளது.

இன்னும் சொல்வதானால், இந்தியாவில் மிகப் பெரிய டி.வி.ஏற்றுமதி நிறுவனமாக விளங்குவது BPL.

பிரிட்டன், ஜெர்மனி, பாரிஸ், துபாய், தோஹா, மஸ்கட், ரஷ்யா போன்ற (Hard Currency) மார்க்கெட்களுக்குச் செல்லும் ஏற்றுமதியில் 62 சதவீதம் நிரப்புவது BPL லின் ஏற்றுமதிகள்தான்.

இதன் மூலம் மதிப்பு வாய்ந்த, "எக்ஸ்போர்ட் ஹவுஸ்" ஸ்தானத்தை இந்தியாவில் பெற்றிருக்கிறது BPL.

பெங்களூரில் அர்க்கரேயில் உள்ள BPL தொழிலகம் யாவரும் விரும்பும் ஐ எஸ் ஓ 9002 சர்டிபிகேட்டை அடைந்திருப்பது, இந்த நிறுவனத்தின் தர நிர்ணயக் கோட்பாட்டையே புலப்படுத்துகிறது.

'இன்றை' வடிவமைக்க, 'நாளையை' உருவாக்க...

நாளை என்னவாக அமையும் என்பதை இன்றைக்கு எண்ணுகிறது BPL.

தனது செயலாற்றலில் சகிப்பு, பொறுப்பு, முனைவு மூன்றையும் தாரக மந்திரமாகக் கொண்டுள்ளது.

ஆராய்ச்சி, வளர்ச்சிக்கென, (RD) ஐந்து மையங்கள் மூலம் தன் தயாரிப்புத் தரங்களை உயர்த்திக் கொண்டே போக இடைவிடா முயற்சிகளை எடுக்கிறது. இதன் மூலம் ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கவும் BPL முனைகிறது.

இதோ இனி வரப்போகும், அவர்களது புதுமைத் தயாரிப்புகள்:

ஸெல்யூலர் ஃபோன்

கார்ட்லெஸ் டெலிபோன்

ஸோலார் ஏர் கண்டிஷனர்

ஹோம் தியேட்டர் ஸிஸ்டம்கள்

டிஷ் வாஷர்கள் (பாத்திரம் கழுவிகள்)

உணவு ப்ராஸஸர்கள்.

மினரல் வாட்டர் மேக்கர்கள்.

வாய்ஸ் ஆக்டிவேடட் கார் ஸ்டீரியோ.

(குரலைக் கேட்டுப் பாட ஆரம்பிக்கும் கார் ஸ்டிரியோ)

Fuzz logic மின் இஸ்திரிப்பெட்டி.

இவை அனைத்தும் எதிர் காலத்திற்கென்றே உருவாக்கப்பட்டவை.

உன்னதப் பயிற்சி பெற்ற ஆறாயிரம் பணியாளர் படை எதிர்காலத் தேவைகளுக்கு BPL லில் எப்போதும் சித்தமாக இருக்கிறது.

குழுவின் ஆதர்சத்திலும் லட்சியத்திலும் அவர்களுக்கும் பங்கு உண்டு.

அந்த ஆதர்சம்...

இன்றைக்கு வாழ்வோரைக் கவனி.

நாளையின் வசதி தானே வரும்.

புலிப்பாறை

மீ.ப.சோமு

"இந்தப் படத்தைப் பார்த்தால் இதே மகாபலிபுரம் மாதிரித்தானே இருக்கிறது! ஏதோ புதிய கதையாக இருக்கும் என்றல்லவா எதிர்பார்த்தேன்!" என்றாள் மோகனசுந்தரி. அவளுடைய முகத்தில் ஒரு மோகனமான குறும்புப்புன்னகை நெளிந்தது.

"படம் மகாபலிபுரந்தான்! என்னிடம் இருக்கிற இந்த ஆல்பம் முழுவதுமே மகாபலிபுரந்தான்!" என்றான் சேதுமாதவன். அவனுடைய முகத்தில் ஒரு தாபம் இருந்தது!

"அப்படியானால் உங்களுடைய ஆராய்ச்சி எல்லாம் முழுக்க முழுக்க மகாபலிபுரத்தைப் பற்றித்தான் போலும்!" என்றாள் மீண்டும் மோகனசுந்தரி. அந்தக் குரலிலே தான் என்ன மிடுக்கு!

"உங்களுக்கு ஏன் மகாபலிபுரத்தின் பேரில் இத்தனை வெறுப்பு?" என்று பரிதாபமாகக் கேட்டான் மாதவன். உண்மையில் அவனுக்கு மோகனசுந்தரியின் அந்தக் குறும்பு சரியாகப் பிடிபடவில்லை!

"மகாபலிபுரத்தின் பேரிலே தானே? எனக்குத்தானே! ஆமாம்; ஒரே வெறுப்பு! முதலில் அந்தப் பெயரே எனக்குப் பிடிக்கவில்லை! மாமல்லனுடைய திருநாமத்தினால் வழங்கவேண்டிய அந்த வண்ணப் பெயரான மாமல்லபுரத்தை ஏன் மகாபலிபுரம் என்று சொல்கிறீர்கள்? நீங்கள் மட்டும் என்ன! அநேகர் அப்படித்தான் சொல்லுகிறார்கள், மகாபலிபுரம் என்று! எனக்கு அது கட்டோடு பிடிக்கவில்லை. சாதாரண மக்கள் அப்படிச்சொன்னால் கூடப் பரவாயில்லை. உங்களைப் போன்ற சரித்திர ஆராய்ச்சியாளருங்கூட அதை மகாபலிபுரம் என்று சொல்வதைக் கேட்டால் எனக்குக் கோபந்தான் வருகிறது!" என்றாள் சுந்தரி. அந்தக் குரலிலே ஒரு கோபம் இருந்தது! கோபம் என்றால் அனலாகச் சுடுகிற கோபம் இல்லை! பனிக்கட்டியைப் போன்று இருக்கமும் அதேசமயம் குளிர்ச்சியும் ஒருங்கே இணைந்த கோபம் அது! சேதுமாதவனுக்கு உள்ளம் ஜில்லிட்டது!

"சரி; இனிமேல் மாமல்லபுரம் என்றே சொல்லுகிறேன். இதற்காக ஏன் இத்தனை கோபப்படுகிறீர்கள்? அந்தக் கோபத்தில் என்னுடைய ஆல்பமும் கூட அல்லவா உங்களுக்கு வெறுப்பை உண்டாக்குகிறது!" என்றான் மாதவன்.

"ஆல்பமதானே? ஆல்பத்தில் எனக்கு உண்மையிலேயே வெறுப்புத்தான். முழுக்க முழுக்க மாமல்லபுரத்தின் படங்கள், புதிதாக ஒன்றுமே இல்லை. எல்லாம் பல முறை எத்தனையோ பத்திரிகைகளிலும், புத்தகங்களிலும் வந்து வந்து பார்த்துப் பழகிப்போன பத்தாம் பசலிப் படங்கள்! நீங்கள் ஏன்தான் இப்படி 'நெகடிவ்'களை வீணாக்குகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை- இன்று இருக்கிற விலையில் பணம் கொடுத்தால்கூடப் பிலிம் கிடைப்பதில்லையே!"

இப்படிச் சொன்னபோது மோகனசுந்தரி முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக்கொண்டாள். மாதவன் அந்தக் கடுமையான முகத்தைக் கூர்ந்து பார்த்தான்! அந்தக் கடுமைக்குள்ளே தான் எத்தனை அழகு! எழில் மிகுந்த பெண்கள் கோபப்படும்போது அந்தக் கன்னங்களில் உண்டாகிற இரத்தச் சிவப்பும், கண்களிலே நெளிந்து சுழல்கிற உணர்ச்சிப் பிரவாகமும் எத்தனை அபூர்வமான அழகுகள்! சேதுமாதவனுக்கு அந்த அழகை அப்படியே தன்னுடைய 'காமிராவுக்குள் பிடித்துப்போட்டுக் கொள்ள வேண்டும் என்று தோன்றிற்று! ஆனாலும் அத்தனை தூரம் உரிமை எடுத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு அவர்களுக்குள் நட்பு உண்டாகவில்லையே இன்னும்!

ஆமாம், அவர்களுடைய நட்புக்கு அத்தனை உரிமை இன்னும் ஏற்படவில்லை. சொல்லப்போனால் அந்த நட்புக்கு வயது ஒன்றரை மணி நேரந்தான்!

சுமார் தொண்ணூறு நிமிஷங்களுக்கு முன்னால்தான் அவள் அவனிடம் பேச ஆரம்பித்தாள்! அதற்குள் அவள் அத்தனை கோபத்தை அவன் மீது கொட்ட ஆரம்பித்து விட்டாள். ஆனால் அவனுக்கோ இன்னும் அத்தனை தெம்பு உண்டாகவில்லை.

மாமல்லபுரத்தை நோக்கி ஓடிச் செல்லும் அந்த ஒய்யாரமான சாலையில் ஒரு பாறையின் மீது மாதவன் உட்கார்ந்து கொண்டிருந்த போது தான் முதன் முதலாக மோகனசுந்தரியைப் பார்த்தான். நீண்டு படர்ந்த ஒயிலான காரிலே தன்னந் தனியாகச் சென்று கொண்டிருந்தாள் அவள்! சாலையின் வளைவிலே அந்தக் கார் அப்படியே தன்னுடைய பரந்த உடலைத் தூக்கிக்கொண்டு லாகவமாகத் திரும்பியபோதுதான் அவன் அவளைப் பார்த்தான்! அந்த 'ஸ்டியரிங்' சக்கரத்தை அவள் இரண்டு கைகளாலும் அணைத்துக்கொண்டு அப்படி ஒரு நொடி நொடித்துத் திரும்பிய அந்த அழகு, சேதுமாதவனுடைய கண்கள் வழியாக மனம் என்ற 'பிலிம்' தகட்டிலே அப்படியே போய்ப் பதிவாகி விட்டது! அந்தப் பதிவை இனி யாராலும் அவனாலுங்கூட, அழிக்க முடியாது!

கார் நகர்ந்து சென்றது. அப்படி செல்லும்போதே அந்த 'ஸ்டியரிங் சக்கரத்தில் சாய்ந்தவாறு ஒரு பார்வை! எழிலான அந்த இளந் தோள்களோடு சரிந்தவாறு ஒரு கோணத்திலே வந்தது அந்தப் பார்வை! அதற்குத்தான் எத்தனை கூர்மை! அந்தக் கூர்மைக்குத்தான் எத்தனை வேகம்! அந்த வேகத்துக்குத்தான் எத்தனை இங்கிதம்! அந்த இங்கிதத்துக்கு- அதை எப்படிச் சொல்வது என்று சேதுமாதவனுக்குப் புரியவில்லை! அப்படியே பாறையின்மேல் கழற்றிவைத்த காமிராவோடு பிரமித்துப்போய் உட்கார்ந்துவிட்டான்.

சேதுமாதவன் இதற்கு முன்பு எத்தனையோ பல அழகிகளைச் சந்தித்திருக்கிறான். உயிரோடு கண்ட அழகிகளை விட உயிரற்ற கல்லிலே உயிர்த் துடிப்போடு கூடிய ஆயிரம் ஆயிரம் அழகிகளை அவன் கண்டதுண்டு. ஆனால் அதெல்லாம் ஆராய்ச்சிக் கண்ணோடு கண்ட அனுபவம். பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம் என்று கால அளவைகளினால் கணக்கிட்ட

காரியம் அது! ஆனால் இப்பொழுதோ?

2

காலம் கடந்த ஒரு தத்துவம்- அதற்குப் பெயர் என்ன என்று அவனுக்குத் தெரியவில்லை- அந்தத் தத்துவம் காரிலே சென்ற பெண்மணியின் கண்களிலே மிதந்தது! அந்த மிதப்பிலிருந்து புறப்பட்டு வந்த பார்வையின் கூர்மை அவனுடைய ஆராய்ச்சி அறிவையெல்லாம் ஊடுருவிக்கொண்டு உள்ளத்தின் உள்ளே சென்று ஜீவாதாரமான உணர்ச்சி பூமியைத் தாக்கிவிட்டது! சேதுமாதவன் தன்னுடைய கண்களைக் கசக்கி விட்டுக்கொண்டு வந்த காரியத்தைப் பார்க்கலாம் என்று பாறையிலிருந்து புறப்பட்டான்.

✿ ✿ ✿

சேதுமாதவன் மாமல்லபுரத்துச் சிற்பங்களை வைத்து 'பல்லவர் கால ஆராய்ச்சி'யை நடத்திக்கொண்டிருந்த ஒரு சரித்திர மாணவன், வயதில் இளைஞனேயானாலும், ஆராய்ச்சி அறிவிலும் திறமையிலும் பெரிய பெரிய நிபுணர்களுங்கூடத் திகைக்கக்கூடிய அளவுக்கு நுட்பமான சாதனைகள் பல புரிந்துள்ளவன் அவன்! அப்படிப்பட்ட ஆராய்ச்சியாளன் இப்பொழுது காரிலிருந்து புறப்பட்டுவந்த பார்வையின் கூர்மையை ஆராய முடியாமல் ஒரே பிரமையில் நடந்து கொண்டிருந்தான் கடற்கரையை நோக்கி!

'கடற்கரையை நோக்கி நடந்து வந்த சேதுமாதவன் மீண்டும். திகைத்துப் போய் நின்றான்! காரணம், கடல் மணல்களுக்கு மேல் காலத்தோடும் அலைகளோடும் உப்புக் காற்றோடும் போரிட்டுக் கொண்டு நின்ற அந்தக் கோயில்களின் வெளிச் சுவர்களுக்கு மேல் கம்பீரமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள் அதே அந்தக் காரிகை!

மாதவனுக்கு இப்பொழுது ஒரு வகையான அச்சம் உண்டாயிற்று, அது அச்சமா அல்லது கூச்சமா? அச்சமேதான்! திரும்பி நடந்து விடலாமா என்று யோசிப்பதற்குள், அந்தப் பெண்மணி அங்கிருந்து எழுந்தாள். விரைவாக எழுந்தாள், எழுந்து நடக்க ஆரம்பித்தாள்! இவன் இருந்த இடத்தை நோக்கியே நடக்க ஆரம்பித்தாள். மாதவன் திகைப்பிலிருந்து விடுபடுவதற்குள், அந்தப் பெண் இவன் இருந்த இடத்திற்கே வந்துவிட்டாள்!

"ஸார்! மன்னிக்கவேண்டும், எனக்காக நீங்கள் ஒரு பில்ம் வீணாக்க முடியுமா?"- இவ்வாறு கேட்டாள் அவள், மாதவனைப் பார்த்து! அந்தக் கேள்வியிலே நூறு கோடி நளினம் ஒன்று சேர்ந்து குழைந்தது! ஒரு பில்ம் என்ன, ஒரு கோடி பில்ம் கூட அந்த நளினத்துக்



காகச் செலவிடலாம்போல் தோன்றிற்று மாதவனுக்கு! அதை எப்படி வார்த்தையிலே சொல்வது! ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"ஒன்றுமில்லை. இந்தக்கோயிற் சுவரிலே ஒரு பெயர் எழுதியிருக்கிறது. அதைப் படம் எடுத்துத் தருகிறீர்களா?" என்று கேட்டாள் அவள்.

"ஓ! பேஷாக! எந்தப் பெயரைச் சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டுக் கொண்டே சேதுமாதவன் அவளை நோக்கி முன் நடந்தான்.

"என்னோடு வருகிறீர்களா?" என்று கூப்பிட்டுக் கொண்டே அந்த இளம் நங்கை சேதுமாதவனுக்கு மாமல்லபுரக் கோயிலிலே ஒரு மூலை இடத்தைக் காண்பித்தாள். சேதுமாதவன் கூர்ந்து பார்த்தான்.

"புலிப்பாறை கஜேந்திர நாயகர்" என்று யாரோ அந்தச் சுவரில் காவிக் கட்டியினால் எழுதியிருந்தார்கள்.

"இந்த எழுத்தையா சொல்கிறீர்கள்! இது யாரோ இங்கே வந்த பிரயாணி ஒருவரின் கிறுக்கு எழுத்து! சரித்திர முக்கியத்துவம் ஒன்றும் இதற்குக் கிடையாது!"

"என்ன சொன்னீர்கள்? யாரோ கிறுக்கனின் எழுத்தா? மிஸ்டர்! இது என்னுடைய பாட்டனாரின் கையெழுத்து! பல்லவநத்தம் ஜமீன்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அந்த, கஜேந்திர நாயகரின் கையெழுத்து சார் இது! இதற்குச்சரித்திர முக்கியம் இல்லையென்று சொல்லி விட்டீர்களே! பரவாயில்லை. போனால் போகிறது. சரித்திர முக்கியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் என் சம்பந்தப்பட்டவரை எல்லாவகையிலும் இதற்கு முக்கியம் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்வீர்கள் அல்லவா?!" என்றாள் அவள், பாதிப்புன்னகையோடு.

"மன்னிக்க வேண்டும், விஷயம் தெரியாமல் ஏதோ உளறி விட்டேன். பல்லவநத்தம் ஜமீன்தாரின் கையெழுத்தா இது! ரொம்ப சந்தோஷம்; ஆனாலும் காவிக் கட்டியினால் எழுதியிருக்கிறதே, இதை எப்படிப் புகைப்படத்திலே பிடிப்பது?" என்று குழப்பத்தோடு கேட்டான் சேதுமாதவன்.



அவள் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. பொல்லாத ஒரு சிரிப்புச் சிரித்தாள்.

"சரி; பரவாயில்லை. விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் ஏதேதோ படங்கள் எடுத்திருக்கிறீர்களே இந்தச் சுவரை இதற்கு முன்பு படம் எடுத்ததே இல்லையா?"

"இல்லை! நான் எடுத்துள்ள படங்கள் எல்லாம் முக்கியமாக அழகிய சிற்பங்களும் கல்வெட்டு களுந்தான்!"

"அப்படியா? அப்படியானால் ஏன் அப்படி?"

"நான் ஒரு சரித்திர மாணவன். பல்லவர் காலத்தைப் பற்றிய ஓர் ஆராய்ச்சியை இங்கே செய்து கொண்டிருக்கிறேன்!"

"ஓ! அப்படியா விஷயம்? அதனால்தான் தினந்தோறும் அந்தப் பாதையோரத்துப் பாறையிலே வந்து உட்காருகிறீர்களோ"

"ஆமாம். நீங்கள் எப்படி அதை..." என்று ஒரே வியப்போடு வார்த்தைகளை முடிக்க முடியாமல் இழுத்தான் சேதுமாதவன்.

"சரித்திர ஆராய்ச்சியாளர்களைப் பற்றி நான் ஓர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு சரித்திர மாணவி இல்லை. என்றாலும் எனக்கு அது ஒரு 'ஹாபி'. சரித்திரம் இல்லை, சரித்திர ஆராய்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சி!"

இப்படிச் சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே மேலும் கூறினாள்:

"சரி, இந்தக் காவியெழுத்திலே உங்களுக்கு அக்கறையில்லை, இப்படி மணலிலே உட்கார்ந்து உங்கள் ஆல்பத்தையாவது நான் பார்க்கலாமா?"

இவ்வாறு கேட்டான் அவள்! சேதுமாதவனுக்கு அந்தத் துணிச்சல் ஒரே திகைப்பாகவே இருந்தது. ஆல்பத்தை எடுத்து அவளுடைய கையிலே கொடுத்தான்.

அதன் பிறகுதான் அவள் மாமல்லபுரத்தின் புகைப்படங்களைப் பற்றித் தொடக்கத்தில் கூறியவாறு விமரிசனம் செய்யத் தொடங்கினாள்.

"சரி உங்களிடம் புதிய படங்கள் ஒன்றும் காணோம். உங்களுக்கு இந்த இடத்தை விட்டால் வேறு சரித்திர முக்கியம் வாய்ந்த இடங்கள் ஏதும் இந்த வட்டாரத்தில் இருப்பதாகவே தெரியவில்லை போலிருக்கிறது!" என்றாள் மோகனசுந்தரி, மீண்டும் தன்னுடைய வழக்கமான குறும்புப் புன்னகையோடு.

"என்ன சொல்லுகிறீர்கள்? வேறு முக்கியமான இடங்கள் இந்தப் பக்கத்தில் இருக்கின்றனவா? அடடா! எனக்குத் தெரியாமலேயே போய்விட்டதே!" என்று கைகளை உதறினான் சேதுமாதவன். உடனே அந்த மணலை விட்டு எழுந்தான்.

"பார்த்தீர்களா? ஆராய்ச்சி என்றதும் எதிரே இருக்கிற ஆட்கள் கூட உங்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. எழுந்துவிட்டீர்களே! உங்கள் சரித்திரப் பேராசிரியர் தாத்தாவிடம் சொன்னது சரியாகத்தான் இருக்கிறது!" என்றாள் மோகனசுந்தரி, புன்முறுவலோடு அந்த வழக்கமான குறும்பை நன்றாகச் சேர்த்துக் குழைத்த வண்ணம்!

"என்ன என்ன! உங்கள் தாத்தாவிடம் எங்கள் ஆசிரியர் என்னைப் பற்றிச் சொன்னாரா? அப்படியானால், எங்கள் ஆசிரியருக்கு உங்கள் பாட்டனாரைத் தெரியுமா! புலிப்பாறை கஜேந்திர நாயகர் அவர்களை..." என்று மாதவன் பேச்சை முடிப்பதற்குள் மோகனசுந்தரி குறுக்கிட்டாள்.

"ஆமாம். அதெல்லாம் ஒரு பெரிய கதை. தாத்தாவை மட்டுந்தான் தெரியும் என்று நினைத்தீர்களோ? இல்லை. உங்கள் ஆசிரியருக்கும் மோகனசுந்தரி என்ற என்னுடைய முழுப்பெயரும் தெரியும். அது எதற்கு இப்போது! சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். உங்களுக்கு இப்போது வேண்டியதெல்லாம் உங்கள் ஆராய்ச்சிக்கு உகந்த புதிய இடங்கள் தானே? அப்படியானால், நாளைக்கு என்னோடு புறப்படத் தயாராக இருங்கள். மாலை ஐந்து மணிக்கெல்லாம் அதே இடத்தில் உங்களுடைய வழக்கமான பாறையிலே இருங்கள். நான் அழைத்துப் போகிறேன்!"

இவ்வாறு சொல்லிவிட்டுப் புறப்பட்டு நடந்தாள் அந்தக் கட்டிளம் நங்கை.

சேதுமாதவன் சரியென்று சொல்லிக்கொண்டே ஓர் இயந்திரத்தைப் போலக் கைகளைக் கூப்பினான். மனத்தில் இதுவரையில் இல்லாத ஒரு புதிய அனுபவமாக இருந்தது அது.

3

மாதவன் மறுநாள் மாலைவரை ஒரு புதிய உலகிலே இருந்தான். மோகனசுந்தரியின் பாட்டனாருக்கும் தன்னுடைய சரித்திரப் பேராசிரியருக்கும் என்ன சம்பந்தம்? அவர் ஏன் தன்னைப் பற்றிக் கஜேந்திர நாயகரிடம் சொல்ல வேண்டும்? என்னதான் சொல்லியிருப்பார் தன்னுடைய ஆசிரியர்? தன்னிடம் அவள் முதலில் தன்னைப்பற்றி ஒன்றுமே தெரியாதவள் போல அல்லவா பேச்சை ஆரம்பித்தாள்! இதெல்லாம் என்ன விஷயம்?– ஒன்றுமே புரியவில்லையே. "பிறகு சொல்கிறேன்!" என்று ஒரே வாக்கியத்தில் முடித்து விட்டாளே! ஆவலை இப்படியா தூண்டி விடுவது? அதிலும் எதற்கெடுத்தாலும் ஆராய்ச்சி, ஆராய்ச்சி என்று பழகிப்போன தன்னிடம் வந்தா இப்படியெல்லாம் புதிர் போடுவது?

மாதவன் தன்னைத்தானே நொந்துகொண்டான். தன்னுடைய சாமர்த்தியக் குறைவைத் தானே சபித்துக் கொண்டான்.

ஒரு பெண்ணோடு பேசுவதற்கு ஏன் இத்தனை கூச்சம்? அவள் என்ன புலியா, சிங்கமா? தெளிவாக அவளிடமே கேட்டிருக்கலாமே! "யார் நீங்கள், எதற்காக என்னிடமும் என்னுடைய ஆராய்ச்சியிடமும் உங்களுக்கு இத்தனை கவலை? எதற்காக நீங்கள் ஒன்றுமே தெரியாதவர் போலப் பேச்சை ஆரம்பித்துப் பிறகு இப்படியெல்லாம் புதிர் போட வேண்டும்?–" இவ்வாறெல்லாம் அவளிடம் நேருக்கு நேராகவே கேட்டிருக்கலாமே!

மாதவன் இப்படிப் பலவகையான சிந்தனைகளில் குழம்பிக் கொண்டே மறுநாள் மாலை, அரைமணி நேரம் முன்னதாகவே அந்தப் பாறைக்கு வந்தான். வியப்பு என்னவென்றால் இவன் வருவதற்கு முன்னமேயே அந்த மோகனசுந்தரி அங்கே வந்து காரிலே தயாராக உட்கார்ந்து கொண்டிருந்தாள்!

"வணக்கம்" என்றான் சேது. மாதவன்; கைகூப்பினாள் மோகனசுந்தரி.

"எனக்காக ரொம்ப நேரம் காத்துக் கொண்டிருக்கிறீர்களோ? மன்னிக்கவேண்டும்."

"மன்னிக்கவா! எதற்காக? நீங்கள் சொன்ன நேரத்துக்கு அரை மணி நேரம் முன்னதாகவே வந்திருக்கிறீர்களே, அதற்காகவா!"

"இல்லை. நான் சொல்ல வந்தது..." என்று இழுத்தான் மாதவன்.

"எனக்குத் தெரியும், நீங்கள் முன்னதாகவே வந்து விடுவீர்கள் என்று. அதனால்தான் அதற்கும் முன்னதாகவே நான் வந்துவிட வேண்டும் என்று நினைத்தேன்!"

இவ்வாறு அந்தக் குறும்பு மிக்க அழகி சொன்னபோது மாதவன் அவளுடைய முகத்தைப் பார்த்தான். சரித்திரப் பார்வையில்லை! மனிதப்பார்வை அது. இதயத்தின் ஆழத்திலிருந்து ஒரு தாபத்தோடு வந்தது அது. இதற்கு முன்பு அவன் யாரையும் எதையும் அப்படிப் பார்த்ததில்லை. ஏனோ அவனையும் மீறி அப்படிப் பார்த்தான். அவள் சிரித்தாள்.

"என்ன பார்க்கிறீர்கள்? இப்படிப் பட்ட குறும்புக்காரப் பெண்களுங் கூட இந்தக் காலத்தில் இருக்கிறார்களா என்று யோசிக்கிறீர்களோ! பாவம் நீங்கள் என்னத்தைக் கண்டீர்கள்? நீங்கள் வாழ்வது பல்லவர் காலத்தில் அல்லவா?"

இப்படிச் சொல்லிவிட்டு, ஸ்டியரிங்கில் சாய்ந்தவாறே "புறப்படுங்கள்! கொஞ்சம் முன்னதாகவே போனால் புலிப்பாறையைப் பற்றிய ஒரு ரசமான கதையை உங்களுக்குச் சொல்லலாம்! உங்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படலாம்!"

"என்ன? கதையா, சரித்திரமா?' என்று ஆவலோடு கேட்டான் மாதவன். அத்தனை திகைப்புக்குள்ளும் சரித்திரமும் ஆராய்ச்சியும் பலமாகத்தான் அவன் உள்ளத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தன!

"ஆமாம், புறப்படுங்கள்!" என்றாள் மோகனசுந்தரி, காரை குர்குர் என்று முடுக்கிக்கொண்டே!

சேதுமாதவன் மெதுவாகக் காரின் ஓரமாக நடந்துவந்து பின் பக்கத்துக் கதவைத் திறந்தான்.

"என்ன ஸார்! பெண்களோடு ஆண்கள் சரிநிகர் சமானமாக முன்னேறவேண்டும் என்று நாங்கள் எல்லாம் மேடைகளிலே பேசுகிறோம்! நீங்களானால் பின்னுக்குப் போகிறீர்களே! முன்னுக்கு வாருங்கள்!" என்றாள் மோகனசுந்தரி அதே பழைய குறும்போடு. சேதுமாதவனுக்கு உடம்பு பதறியது. சரித்திர காலத்திலிருந்து இந்த நவநாகரிக யுகத்துக்கு வர அவனுக்கு அத்தனை காலம் பிடிக்கிறது போலும்! பதில் பேசாமல் முன் பக்கத்துக்கு வந்தான். அவள் கதவைத்திறந்தாள். மாதவன் உள்ளே வந்ததும் கதவை மீண்டும் அடைத்துச் சிறைசெய்தாள் மோகனசுந்தரி.

கார் வேகமாகப்
புறப்பட்டது!

4

"இதுதான் புலிப்பாறை! இதைப் பற்றித்தான் சொன்னேன்!" என்று சொல்லிக்கொண்டே காரை நிறுத்தினாள் மோகனசுந்தரி.

"கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இதில் ஆராய்ச்சி செய்வதற்கு ஒன்றும் இல்லை என்றல்லவா சொன்னார்கள்!"

"யார் சொன்னது?"

"எங்கள் ஆசிரியரே சொல்லியிருக்கிறார், இதைப் பற்றி அதிகமான சான்றுகள் ஒன்றும் இல்லை என்று! ஏதோ ராஜசிம்ம பல்லவன்..."


"சார், மிஸ்டர் மாதவன்! தயவு செய்து உங்கள் சரித்திரக் காருக்குப் பிரேக் போட்டு நிறுத்துங்கள்! ராஜசிம்மன், விஷ்ணு வர்மன், ராஜ விஷ்ணு வர்மன், விஷ்ணு ராஜ வர்மன்,- இந்த மாதிரிப் பெயர்களைக் கேட்டாலே எனக்குக் கோபம் வருகிறது! ஒரு புத்திசாலி இளைஞரை இந்தப் பெயர்களெல்லாம் சேர்ந்து எவ்வளவு தூரம் கெடுத்துவிட்டன என்பதை உங்கள் ஆசிரியர் எங்கள் தாத்தாவிடம் சொன்னார், சரித்திரம் சரித்திரம் என்று சொல்

நற்காலம் வழிகாட்டட்டும்!

பூவை எஸ். ஆறுமுகம்

காலத்தின் மணல்வெளியில் பதிந்திட்ட அடிச்சுவடுகளின்
கரையோர முத்திரையில் முகம்காட்டும் சரித்திரத்தின்
கோலத்தில் சிரிக்கின்ற காலத்தின் விதிவழியைக்
கச்சிதமாய் விஞ்ஞானம் கண்டிடுவது என்றைக்கோ?...
ஞாலத்தின் கண்ணாடியாம் காலத்திற்கு அகம்பார்க்க
ஞானமுடன் அமைந்திட்ட சரித்திரங்கள் ஒன்றிரண்டா?
காலமெனும் புதிர்க்கோளம் சுழன்றிடவே சுடர்தெறிக்கும்
கனவுகள்தாம் எத்தனையோ?- காலமே! நீபுதிர்தான்!...

மண்ணளந்த மனிதன் விண்ணளக்கும் விந்தைகளின்
மகிமைதனை உலகரங்கில் நிகழ்காலம் போற்றும்!
கண்சிமிட்டும் நேரத்தில் பேரதிசயங்கள் நிகழ்த்துகின்ற
கணிப்பொறியின் மாட்சிமைக்குப் புதுமைக்காலம் உதாரணம்!
மண்பரப்பில் ஏழைகளின் சிரிப்பினிலே இறையவனை
மனிதநேயமுடன் தரிசிக்கும் 'மாண்பினுக்குப்' பொற்காலம் சாட்சி!
பண்பாடும் பண்பாட்டில் பாரதத்தின் மக்களெல்லாரும்
பண்படனே ஒன்றுபட்டுயர்ந்திட நற்காலம் வழிகாட்டட்டும்!...



கிறீர்களே தவிர, எதிரே இருக்கிறதைப் பார்க்கத் தெரியவில்லையே உங்களுக்கு என்று தான் எங்கள் தாத்தாவிடம்..."

"என்ன என்ன! உங்கள் தாத்தாவிடம் எங்கள் ஆசிரியர்..."

"இல்லை இல்லை. ப்ரேக் ப்ரேக் ப்ரேக் போடுங்கள். அதெல்லாம் இப்பொழுது சொல்லமாட்டேன். இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லப்போவது ஒரு வரலாறு!"

"வரலாறா?" என்று சொல்லிக் கதவைத் திறந்துகொண்டே காரிலிருந்து உற்சாகமாக இறங்கினான் சேதுமாதவன்.

"அந்தப் பாறையிலே புலிக்குப் பக்கத்தில்- அதாவது அந்தக் கற்புலிக்குப் பக்கத்தில்- போய் உட்காருங்கள். நான் சாலையின் ஓரமாகக் காரை நிறுத்திப் பூட்டிவிட்டு வருகிறேன்!" என்றாள் மோகனசுந்தரி.

5

"வரலாறுதான். ஆனாலும் பல்லவர் காலமில்லை. நீங்களும் நானும் வாழ்கிற இந்தக் காலம்! இதற்கு என்ன காலம் என்று சொல்வது! கலி காலம் என்று சொல்லலாமா!"

சேதுமாதவன் சிரித்துவிட்டான். நன்றாக மனம்விட்டுச் சிரித்தான் அவன்! வாழ்வில் இதுபோன்று அவன் சிரித்தது அவனுடைய சிறு வயதிலேதான்! கால ஆராய்ச்சிக்கு முந்திய காலம் அது!

"பேஷ்! அப்படிச் சிரியுங்கள் மிஸ்டர் மாதவன்! உங்கள் ஆசிரியர் இப்படி நீங்கள் சிரிப்பதைப் பார்த்தால் எத்தனை சந்தோஷப்படுவார் தெரியுமா? ஊஹும்! அதை ஏன் இப்பொழுது சொல்கிறேன்! கதையைக் கேளுங்கள்!"

"கதையா?" என்று திகைப்போடு கேட்டான் மாதவன்.

"இல்லை இல்லை. வரலாறு!" என்று சொல்லிக் கொண்டே ஆரம்பித்தாள் மோகனசுந்தரி.

"கஜேந்திர நாயகர் இந்த வட்டாரங்களில் ஒரு செல்வாக்கு மிகுந்த ஜமீன்தார்" என்று அவள் ஆரம்பித்ததும் மாதவனுக்கு முகம் சுருங்கியது. உடனே அவள் "அதாவது பல்லவர் காலத்திலே வீரகேசரி என்னும் ஒரு குறுநில மன்னன் இருந்தான் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படிப்பட்ட ஒரு செல்வாக்கு மிகுந்த குறுநில மன்னரைப்போல என்று கற்பனை செய்து கொள்ளுங்களேன்! சரித்திர காலத்தோடு தொடர்பு படுத்திப் பேசாவிட்டால் உங்கள் முகம் சுருங்குகிறதே! பாவம், பழங் கற்பனையை வைத்துக் கொண்டல்லவா இன்றைய வாழ்க்கைக்கு வருகிறீர்கள் நீங்கள்!" என்றாள் அந்தக் குறும்பு நங்கை.

"இல்லை! இல்லை! நான் நினைத்தது என்னவென்றால்..."

"நீங்கள் நினைத்ததுதானே! அதுதான் தெரிகிறதே முகத்தில். கதையை- இல்லை இல்லை- வரலாற்றைத் தொடர்ந்து கேட்கிறீர்களா?"

மாதவன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு நிலைமையைச் சமாளித்தான். அப்படிச் சமாளிப்பதில் அவனையும் அறியாமல் ஒரு நூதன சுகம் அவன் உள்ளத்தில் இருந்தது.

"சரி சொல்லுங்கள்!" என்றான் சிரித்துக் கொண்டே.

"கஜேந்திர நாயகருக்கு மிருகங்களை வேட்டையாடுவதில் அபார மான மோகம். சரித்திர காலத்தில் வருகிற அரசர்களைப் போலவே தான்! ஆனால், ஒரு வித்தியாசம். பழைய காலத்துச் சரித்திர நாடகங்களிலே குடி மக்கள் ஒரு கூட்டமாக வந்து முகாரி ராகத்தில் "மன்னா எங்கள் முறை கேளும்!" என்று கோஷ்டி கானம் பாடுவார்கள்! பாட்டு முழுவதும் முடிந்ததும் விஷயம் என்னவென்று புரியாத மன்னர், "குடி மக்களே! என்ன காரியமாக நம்மைப் பார்க்க வந்தீர்கள்! அதை உடனே வசனத்திலே சொல்லுங்கள்!" என்று கூறுவார். அவர்கள் ஒரு கரடுமுரடான வாக்கியத்தில் வனவிலங்குகள் தங்கள் காட்டிலே வந்து புகுந்து பயிர்களையும் ஆடு, மாடுகளையும் அழிப்பதாகச் சொல்லுவார்கள். மறுகணம் மன்னர்வேட்டைக்குப் புறப்படுவார், தமது பரிவாரங்களோடு! இப்படித்தான் நடக்கும் சரித்திர காலத்தில். ஆனால் கஜேந்திர நாயகர் அப்படியில்லை. தம்முடைய ஜமீனைச் சேர்ந்த மக்கள் தம்மிடம் வந்து கோஷ்டி கானம் பாடுகிறவரை பொறுத்திருக்கமாட்டார். இவரே அவ்வப் போது காட்டுக்குள் சென்று வன விலங்குகளை வேட்டையாடுவார். அது அவருக்கு ஒரு பழக்கம்!"

இவ்வாறு சொன்னாள் அவள்! "மோகன சுந்தரி! நீங்கள் சொல்வது..." என்று அவன் ஆரம்பிப்பதற்குள் அவள் குறுக்கிட்டாள்.

"தயவு செய்து மோகன சுந்தரி என்று கூப்பிடாதீர்கள். எங்கள் தாத்தா அந்தக் காலத்துச் சரித்திர நாடகங்களைப் பார்த்துப் பார்த்து அந்தப் பழக்கத்தில் இப்படி ஒரு பட்டத்து இளவரசியின் பெயரை எனக்கும் வைத்துவிட்டார்! இதை மறுபடி மறுபடி ஏன் ஞாபகப் படுத்துகிறீர்கள் நீங்கள்?"

இப்படி ஒரு போடு போட்டாள் அவள். ஏதோ தைரியத்தையெல்லாம் வரவழைத்துக்கொண்டு அந்த நங்கையின் பெயரை முதன் முதலாக அவன் உச்சரித்ததற்கு இப்படி ஒரு போடா? சேதுமாதவன் திகைத்தான்.

"திகைக்காதீர்கள். என்னை எங்கள் வீட்டில் மோகனா என்று அழைப்பார்கள். ஆனால், தனியாக என்னை அப்படி அழைப்பது எனக்குப் பிடிக்கவில்லை. அதைப் பற்றி இப்பொழுது ஏன் பேசவேண்டும்! உங்கள் ஆசிரியருக்கல்லவா அது தெரியும்? இப்பொழுது கதைக்கு வருவோம்..."

"சரி" என்று ஒரே வார்த்தையில் கூறிச் சமாளித்துக் கொண்டான் மாதவன்.

"எங்கள் பாட்டனாருக்கு அடிக்கடி வேட்டைக்குப் போகிற பழக்கம் உண்டு. இப்படிப் போய்க்கொண்டிருந்தவர் திடீரென்று தம்முடைய வேட்டைப் பழக்கத்தையே நிறுத்தும்படியாக ஒரு நிகழ்ச்சி நடந்தது இந்தப் புலிப்பாறையிலேதான்!"

"ஓ! அப்படியா!" என்று கேட்டான் மாதவன்.

"பார்த்தீர்களா? இப்பொழுது தான் கதையிலே சூடு பிடிக்கிறது உங்களுக்கு. கேளுங்கள். எங்கள் பாட்டனார் தம்முடைய வேட்டைப் பழக்கத்தை நிறுத்தும்படியாக அப்படி என்ன செய்தது இந்தப் புலிப்பாறை என்று திகைக்கிறீர்கள் அல்லவா? அப்படித்தான் எல்லா



தீபாவளிக்கு 12 ரக பட்சணங்கள் செய்யச் சொல்றீங்களே, அவ்வளவு எதுக்கு?

அதில் ஏதோ ஒன்றாவது வாய்க்கு ருசியா சாப்பிடும்படி அமையாதா என்று ஒரு நப்பாசைதான்!

— விக

ரும் அந்தக் காலத்தில் திகைத்தார்கள். பிறகு விசாரித்துப் பார்த்தால் நாம் எல்லாம் அஞ்சி நடுங்குகிற புலியினிடத்தில் அவருக்கு ஏற்பட்டு விட்ட ஒரு விநோதமான பிரியந்தான் அவருடைய விரக்திக்குக் காரணம் என்று தெரிய வந்தது!'

"புலியினிடத்தில் பிரியமா?"

"ஆமாம், மனிதன் மான்களிடத்திலே பிரியம் கொள்ளலாம் என்றால் புலியினிடத்தில் ஏன் பிரியப்படக் கூடாது? வேட்டை நாயை அன்போடு கொஞ்சுவதில்லையா? துஷ்டத்தனமான மனிதர்களிடமே பிரியம் கொள்கிறானே மனிதன். அப்படியானால் புலியினிடத்தில் ஏன் பிரியப்படக் கூடாது! பேஷாகப் பிரியப்படலாம். காதலே கொள்ளலாம். ஆனால் எங்கள் தாத்தாவின் பிரியம் அப்படியில்லை. அது ஒரு வகையான கருணை."

"கருணையா?" என்று கேட்டான் மாதவன் வியப்போடு!

"ஆமாம்; ஒரு சமயம் இந்தப் புலிப்பாறை வட்டத்தில் நீண்டு கொழுத்து வளர்ந்திருந்த இரண்டு பெரிய புலிகள் எங்கோ காட்டுக்குள்ளிருந்து வழி தப்பி வந்து விட்டன. அவற்றினால் இந்த வட்டாரத்து ஆடுமாடுகளுக்கு மட்டுமல்லாமல், யாதவர்களுக்கும் வழிப் போக்கர்களுக்கும் மிகுந்த தொல்லை ஏற்பட்டு வந்தது. நாளடைவில் குழந்தைகளும் பெண்களுமாகப் பல உயிர்களுக்கு நஷ்டம் உண்டாகத் தொடங்கியது. இது ஜமீன் வட்டாரம் எங்கும் ஒரு பெரிய பீதியைக் கொடுத்தது.

எங்கள் தாத்தா இந்தப் பீதிக்கு ஒரு முடிவு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தார். புலிப் பாறைக்கு அருகிலே சில நாள் கூடாரம் அடித்து இருந்தாவது அந்த இரண்டு புலிகளையும் சுட்டுத் தீர்த்துவிடுவது என்று தீர்மானித்தார்.

அவ்வளவுதான்; புலியைச் சுடுவதற்கான ஏற்பாடுகளுடன், தம்முடைய வீரச் சேனையையும் உடன் அழைத்துக் கொண்டு எங்கள் தாத்தா இந்தப் புலிப்பாறைக் காட்டுக்கு வந்து முகாம் போட்டார். மனித நடமாட்டம் அதிகமாக இருந்தால் துஷ்டமிருகங்கள் ஒதுங்கி விடும் அல்லவா? இதை உத்தேசித்து மிகவும் சாமர்த்தியமாகப் பல முன்னேற்பாடுகள் செய்து கொண்டு புலிப் பாறைக்கு அருகிலே முகாம் அடித்துக் கொண்டார் அவர்.

மனிதர்கள் கூட்டமாக அங்கே கூடிவிட்டதால் இவர்கள் பயந்த



உங்ககிட்ட வாங்கின வெடிகளில் ஒன்று, இரண்டைத் தவிர மீதியெல்லாம் புஸ்வாணம் ஆயிடிச்சு...

வாங்கற லாட்டரி டிக்கெட் எல்லாத்துக்குமா பரிசு விழுது? ஒன்று, இரண்டைத் தவிர மற்றதெல்லாம் புஸ்வாணமாகலையா.. அதுபோலத்தான் இதுவும்..!

— விசு

படியே அந்தப் புலிகள் புலிப்பாறையின் பக்கமாக வருவதை நிறுத்தின. இதற்கு முன்பு இரவு நேரங்களில் அந்த இரண்டு புலிகளும் பாறைக்கு மேலே நிலவிலே நடந்து செல்வதைப் பார்த்திருப்பதாகக் கூறிய மக்கள் எல்லாம் இப்பொழுது உள்ளம் கலங்கினார்கள். கையில் ஆயுதம் இல்லாதபோது கண்ணிலே தெரிந்த மிருகங்கள், இத்தனை ஏற்பாடுகளோடு நிற்கும்போது கண்ணாம்பொத்தி விளையாடுகின்றனவே என்று வருந்தினார்கள். அந்த இரண்டு புலிகளையும் கொன்று தீர்க்கவேண்டும் என்று அவர்களுக்கு அத்தனை கவலை!

இப்படியிருக்கும்போது தான் எங்கள் தாத்தா ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு ஏதோ சத்தம் கேட்டு மரத்தில் கட்டியிருந்த பரணிலிருந்து எழுந்து பார்த்தார்.

பால் போன்று நிலவு பொழிந்து கொண்டிருந்தது. அந்த வெண்மையான தூய நிலவின் ஒளியில் ஜமீன்தார் புலிப்பாறையிலே கூர்ந்து பார்த்தார். பூதாகாரமான ஒரு புலி கம்பீரமாக நிமிர்ந்து நின்று இப்படியும் அப்படியும் ஒரு பார்வை பார்த்தது. சாதாரணமான மனிதர்களுக்கு என்றால் அப்படியே உடம்பெல்லாம் வெல வெலத்துப்போயிருக்கும். ஆனால் ஜமீன்தார் கஜபதி நாயகருக்கு அப்படியில்லை. 'இரண்டு புலிகள் என்று சொன்னார்களே! ஒரு புலிதானே வந்திருக்கிறது' என்று கையிலே துப்பாக்கியைப் பிடித்த வண்ணம் கண் பார்வை எட்டுகிற வரைக்கும் நிலவின் ஒளியிலே பாறை முழுவதும் கண்களால் அளந்து பார்த்தார். இரண்டாவது புலி அந்தப் பக்கத்தில் எங்கும் தென்படவே காணோம்! மறுகணம் 'டுமீல்' என்றது துப்பாக்கி. அப்படியே ஒரு துள்ளுத் துள்ளிப் பாய்ந்தது புலி! குண்டுக்குத் தப்பியல்ல! குண்டை நெற்றிப் பொட்டிலே வாங்கிக் கொண்டு தான்! அடுத்த விநாடி அந்தப் பாறையிலே விழுந்து சுருண்டது அது!

அவ்வளவுதான்! மறு நிமிஷம் ஜமீன்தாரின் முகாமிலிருந்து அத்தனை பரிவாரங்களும் சத்தமிட்டுக் கொண்டு ஓடி வந்தார்கள்! 'புலி, புலி' என்று எங்கு பார்த்தாலும் கதறல்!

ஜமீன்தாரின் வீரச்சேனை முழுதும், அடிபட்டுக் கிடந்த அந்தப் பயங்கரமான புலியைச் சூழ்ந்து நின்று கொண்டு வெற்றிகரமாக ஆரவாரம் செய்தனர். ஜமீன்தார் மட்டும் இந்த ஆரவாரத்தில் சேர்ந்து கொள்ளவே இல்லை. அவருடைய மனம் முழுதும் இரண்டாவது புலி என்ன ஆயிற்று என்ற யோசனையிலேயே இருந்தது.

இரண்டு நாள் கழிந்தது. அந்த இரண்டு நாளும் இரவு முழுதும் ஜமீன்தார் தூங்கவே இல்லை. அடிபட்டுச் செத்தது ஆண்புலி. நிச்சயம் அதைத் தேடிக்கொண்டு அதே இடத்துக்கு மோப்பம் பிடித்தவாறு பெண்புலி வந்தேதீரும் என்பது அவருக்குத் தெரியும்! அந்த மகத்தான வரவை எதிர்நோக்கியவாறு இரண்டு இரவுகள் பரணிலேயே நின்றார் அவர்!

மூன்றாம் நாள் இரவு! ஜமீன்தார் எதிர்பார்த்தது வீணாகவில்லை. பெண்புலி வந்தது. ஆனால் கம்பீரமாக வரவில்லை. ஏதோ பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கிப் பாறைகளிலே மோந்து பார்ப்பதும் திகைப்பதும், அங்கங்கே நின்று மறுகுவதுமாக வந்தது அது! அதோ அதனுடைய விழிகள் பளிச்சென்று இரண்டு மின்சாரக் குமிழ்களைப் போல் நிலவின் ஒளியில் எரிந்தன! ஆனால் அந்த மின்சார வெளிச்சத்திற்குள்ளே ஒரு நீர்ப்படலம்! ஜமீன்தார் குறி பார்த்துக் குறிபார்த்துக் கூர்மை பெற்றிருந்த தம்முடைய தீர்க்கமான கண்களால் நோக்கினார், அந்தப் பெண்புலியின் கண்களிலே கலக்கம் தெரிந்தது.

கஜேந்திர நாயகர் கையில் பிடித்த துப்பாக்கியுடன் அசையாமல் நின்று மேலும் பார்த்தார்.

பெண் புலி அந்தப் பாறைகளிலே அங்கங்கே நின்றது. தன்னுடைய பெரிய அகன்ற முகத்தைப்



பாறைகளோடு சேர்த்து வைத்து மோப்பம் பிடித்தது. கால்களைத் தள்ளாடித் தள்ளாடிப் பதித்துக் கொண்டே பாறைகளின் மேலே நடந்து சென்று இந்தப் புலிக் குகைக்கு அருகிலே வந்தது.

மிஸ்டர் சேது மாதவன்! அதோ பாருங்கள். குகையின் முகப்பிலே பாறையில் எத்தனை புலி முகங்கள் தெரிகின்றன பார்த்தீர்களா? எத்தனை அழகாக உயிர்த் துடிப்போடு இந்தப் புலி முகங்களைக் கல்லிலே செதுக்கியிருக்கிறான் சிற்பி! எத்தனை ஜீவகளை துடிக்கிறது பாருங்கள். இந்த ஜீவகளையைத்தான் அந்தப் பெண் புலியும் பார்த்தது.

ஆமாம். இந்தப் பாறையிலே தெரிகின்ற புலிமுகங்கள் ஒவ்வொன்றிற்கு அருகிலும் வந்து நின்று கொண்டு, தன்னுடைய முகத்தைக் கல்முகத்தோடு சேர்த்து வைத்துக் கொண்டு மோப்பம் பிடித்தது பெண் புலி! முகத்தோடு முகம் வைத்து மருண்டது, மறுகியது, உருகியது, உறுமியது. நாக்கினால் அந்தக் கல் முகத்தை வருடியது!

ஜமீன்தார் கூர்ந்து பார்த்தார். அந்த நிலவின் ஒளியில் பெண் புலியின் கண்களிலிருந்து நீர்த் துளிகள் சொட்டுச் சொட்டாகச் சிந்தியது நன்கு தெரிந்தது. உயிருள்ள மனித உள்ளங்கள் உயிரற்ற கல்லைப் போல் தங்களைக் கடினமாக ஆக்கிக்கொள்ள முயல்கிற இந்த வேட்டையுலகிலே, கல்லினால் ஆன புலி உயிர்ப் புலிபோல் நின்று ஒரு நிஜப்புலியின் உள்ளத்தை உருக்குகிற அந்தக் காட்சியைக் கண்ட கஜேந்திர நாயகருக்குக் கண் கலங்கியது. துப்பாக்கி கையிலிருந்து சோர்ந்தது.

இதற்குள் அந்தப் பெண் புலி ஒரு சத்தம் போட்டது. குகையின் வாசலில் நின்று அது ஓலமிட்ட அந்தப் பரிதாபக் கூச்சல் குகையின் உள்ளே சென்று எதிரொலித்தது. ஜமீன்தாரின் உள்ளத்திலும் எதிரொலி செய்தது! அதற்குள் ஜமீன்தாரின் ஆட்கள் அத்தனை பேரும் புலியின் கதறலைக் கேட்டு அங்கே ஓடி வந்துவிட்டார்கள். "துப்பாக்கி! துப்பாக்கி!!" என்று கதறல் கேட்டதும், நாலைந்து பேர் துப்பாக்கிகளோடு அங்கே வந்து குறிபார்த்து நின்றார்கள்.

"சுடாதீர்கள்! அந்தப் புலியைச் சுடாதீர்கள்!" என்று கதறிக் கொண்டே ஜமீன்தார் பரணிலிருந்து கீழே குதித்தார்.

இத்தனை மனிதச் சந்தடிக் குள்ளும் கலவரம் அடைந்துபோன பெண்புலி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து காட்டுக்குள்ளே சென்று மறைந்துவிட்டது!"

இப்படிக் கதையைச் சொல்லிக் கொண்டே போன மோகன சுந்தரி இந்த இடத்தில் கதையை நிறுத்தி விட்டுச் சேதுமாதவனைப் பார்த்தாள்.



"என்ன பார்க்கிறீர்கள்! மேலே சொல்லுங்கள். அந்தப் பெண்புலி என்ன ஆயிற்று? அதை யாரும் கொன்றுவிடவில்லையே!" என்று ஆவலாகக் கேட்டான் மாதவன்.

"பேஷ்! நீங்கள் கதையைத் தொடர்ந்து கேட்கிறீர்களா என்று பார்த்தேன்; அவ்வளவுதான்!"

"கேட்கிறேன், தயவுசெய்து சொல்லுங்கள். அந்தப் பெண்புலி பத்திரமாக இருக்கிறதா?"

"இல்லை! அதைச் சொல்லத் தான் கஷ்டமாக இருக்கிறது. எந்தப் பாட்டனார் அந்தப் புலியைச் சுடாதீர்கள் என்று சொன்னாரோ அதே பாட்டனார் தம்முடைய கையினாலேயே அந்தப் புலியைச் சுட்டார் என்றால் நீங்கள் அதை நம்புகிறீர்களா?"

"என்ன! உங்கள் தாத்தாவே அந்தப் பெண்புலியைச் சுட்டுக் கொன்றுவிட்டாரா? உண்மையாகவா?" என்று கேட்டான் மாதவன்.

"ஆமாம். முதலில் அவர் அந்தப் பெண் புலியைச் சுடவேண்டாம் என்று தான் நினைத்தார். நினைத்த மறுநாளே ஊர் திரும்பிவிட்டார். ஆனால், அதற்குப் பிறகு அந்தப் பக்கத்துக்காரர்கள் வந்து ஓர் அதிசயமான சம்பவத்தைச் சொல்லத் தொடங்கினார்கள்.

தினந்தோறும் இரவு நேரங்களில் புலிப்பாறையின் மேல் ஒரு புலி வருகிறது என்றும், வந்து அந்தப் பாறையின் மேல் ஏறி நடந்து சென்று புலிக் குகைக்கு அருகிலே போய் அந்த வாசலிலே நிற்கிற கற் புலியின் முகத்தோடு தன் முகத்தை வைத்துப் படுத்து உறங்கி வருகிறது என்றும் கிராமத்தார் வந்து ஜமீன்தாரிடம் சொன்னார்கள். அந்தப் புலியினால் மற்றப்படி ஆடு மாடுகளுக்கோ மனிதர்களுக்கோ எவ்விதத் தீங்கும் இல்லை என்றும் அவர்கள் கூறி

இந்த அதிசயத்தை வியந்து பேசினார்கள்.

தினமும் இதே பேச்சைச் கேட்கக் கேட்க ஜமீன்தாரின் மனத்தில் உருக்கம் அதிகமாயிற்று. மறைந்து போன ஆண் புலியின் பிரிவினால் பெண்புலி என்ன பாடு படுகிறது என்பதை எண்ண எண்ண அவருக்கு உள்ளத்திலே ஒரு வேதனை உறுத்தியது. ஒரு நாள் இரவு இவரே அந்தக் காட்சியைப் பார்க்கலாம் என்று பரிவாரங்களோடு புலிப்பாறைக்குச் சென்றார்.

பரணின் மேல் நின்று கொண்டு நிலவிலே பெண் புலியின் வரவை எதிர்நோக்கினார் கஜேந்திர நாயகர்.

பூரண நிலவு வானத்தில் மிதந்து கொண்டிருந்தது. புலிப்பாறை பளிங்குக் கல்லாகக் காட்சிதந்தது. அந்த மோன வேளையிலே பாறையின் மீது கால்களினால் தவழ்ந்து தவழ்ந்து வந்தது எது? அந்தப் பெண்புலிதானா? ஆகா! அதன் உடம்பா அத்தனை தூரம் மெலிந்து போயிற்று! பயங்கரத்தோடு கூடிய ஒரு வசீகரம் நெளிகிற அந்த எழில் மிகுந்த பெண் புலியா அப்படி உருமாறிப்போயிருந்தது! ஜமீன்தாருக்கு இதயத்தில் சுருக்கென்றது.

பெண் புலி காலால் நடவித் நடவிப் பாறையின் மேலே ஏறியது. இதோ, குகையின் வாயிலை அடைந்துவிட்டது. அடடா! அந்தக் குகை வாயிலை அடைந்ததுந்தான் அதனுடைய முகத்திலே எத்தனை மகிழ்ச்சி!

பக தன்னுடைய கன்றை மோந்து கொடுப்பதையும், நாவினால் பரிவோடு நக்கி மடி சரப்பதையும் பலமுறை பார்த்திருக்கிறார் ஜமீன்தார்! அந்தக் காட்சி தான் இப்போது நினைவுக்கு வந்தது அவருக்கு! அத்தனை பரிவோடு புலிக்குகையின் வாசலிலே இருந்த கற்புலியின் முகத்திலே தன் முகத்தை ஒன்றவைத்து மறுகியது பெண் புலி!

ஜமீன்தாருக்கு இப்பொழுது புரிந்தது! காதல் என்ற உணர்ச்சியானது மனிதனுடைய தனியுடைமை யல்ல! அது உயிர் வர்க்கங்கள் அனைத்தையுமே ஈர்த்து இணைக்கிற தெய்வீக ஆற்றல் என்று எண்ணினார் கஜேந்திர நாயகர். கண் கலங்கினார்.

'கணவனிடம் வைத்த அன்பு இந்தப் பெண்புலியை என்ன பாடு படுத்துகிறது!' என்று நினைத்துப் பார்த்தார்.

கண்ணனிடம் வரம் கேள்

நித்தியானந்தம்

நிரந்தர அருள்தரும் மாதவனை நினை! நினை!
நினைத்தது நடப்பதை விரைவில் பார்! பார்!
வரம்பல கண்ணனைக் கேள்! கேள்! வாழ்வில்
அமைதியும் செல்வமும் வரும்! வரும்!

கோவிந்தா கோவிந்தா என்றுசொல் தினமே!
கோடி பாவங்கள் உடனே மறையுமே!
ஆவி பிரியும் முன்னே திருமால்
ஆலயம் அடிக்கடி சென்றால் நலமே!

ஏழுமலை சூழ மலைமேல் அமர்ந்து
ஏழு ஜென்மங்களின் பாவம் தீர்த்து
ஊழ்வினை யாவும் விரைவில் விலக்கும்
உலகம் காக்கும் பரந்தாமா! ஸ்ரீராமா!

மறுகணம் 'டுமீல்' என்றது அவருடைய துப்பாக்கி! பெண்புலியின் நெற்றிப் பொட்டிலே பாய்ந்தது, ஜமீன்தார் குறி பார்த்துச் சுட்ட குண்டு!

புலிப்பாறையின் கற்புலிகளுக்கு நடுவே சுருண்டு சரிந்து கல்லாக உருண்டது பெண்புலி! இனி அதற்கு உணர்ச்சியில்லை. இனி அதற்கு ஏக்கம் இல்லை. துயரம் என்பது இனி அதன் வாழ்விலே கிடையாது. உயிர்த்துடிப்போடு ஜீவன் துடிதுடிக்கிற சிற்பப் புலிகளுக்கு மத்தியிலே உயிரற்ற கற்புலியாகச் செத்துக் கிடந்தது, சற்று முன்பு வரை உயிரோடு வாழ்ந்த பெண் புலி!" என்று கதையை முடித்தாள் மோகனசுந்தரி.

"அடடா! என்ன பரிதாபம்!" என்றான் மாதவன்.

"பரிதாபந்தான்! ஆனாலும் அன்பும் இரக்கமும் கூடத் துப்பாக்கியிலிருந்து குண்டாக வெளிவரக் கூடும் என்று தெரிகிறதல்லவா? கருணைகூட உயிர்க்கொலைக்குக் காரணமாக அமைகிறது பார்த்தீர்களா? இதனால்தான் எங்கள் பாட்டனாரைப் புலிப்பாறை கஜேந்திர நாயகர் என்று எல்லாரும் கூப்பிடத் தொடங்கிவிட்டார்கள். உண்மையில் இந்தச் சம்பவத்திற்குப் பிறகு எங்கள் பாட்டனார் வேட்டையாடுவதையே நிறுத்திவிட்டார்!" என்றாள் மோகன சுந்தரி.

"மோகனசுந்தரி- மன்னிக்க வேண்டும், மோகனா! இந்தக் கதையைக் கேட்ட பிறகு உங்களோடும் உங்கள் தாத்தாவோடும் எத்தனையோ ஆண்டுகள் பழகியது போன்ற பிரமை உண்டாகிறதே எனக்கு! அது எதனால்?"

"அதெல்லாம் என்னைக் கேட்காதீர்கள். உங்கள் சரித்திரப் பேராசிரியர் சொல்வார். அவரைக் கேளுங்கள்!" என்றாள் மோகன சுந்தரி!

"அப்படியென்றால்?"


"ரிஷ்ய சிருங்கரைத் தவ உலகிலிருந்து மனித உலகுக்குக் கொண்டு வருவதற்காக ஒரு மோகனா வேண்டியிருந்தது. அது போல இந்தச் சரித்திர ஆராய்ச் சித்தவத்திலிருந்து உங்களைக் கொஞ்சம் தரையிலே கொண்டு வந்து விடுவதற்கு நான்தான் அகப்பட்டேனாம்! இப்படிச் சொன்னவர் உங்கள் சரித்திரப் பேராசிரியர். அவருக்கு என்னிடத்திலும் உங்களிடத்திலும் அத்தனை பிரியம். உங்கள் தாத்தாவுக்கும் எங்கள் தாத்தாவுக்கும் ஏதோ ஓர் உறவு என்றுகூட ஏதேதோ சரித்திர ஆதாரங்களோடு பேசினார் அவர்! அந்தச் சரித்திர ஆராய்ச்சியெல்லாம் எனக்குத் தெரியாது. அவரையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்! நம்முடைய இந்தச்சந்திப்பே அவருடைய ஒத்திகைதான்! இப்பொழுது நேரமாகி விட்டது. நாம் புறப்படலாம்; இல்லையென்றால்... நிஜமாகவே புலிகள் நடமாடுகிற இடம் இது!" என்று சொல்லி எழுந்தாள் மோகனசுந்தரி.

ஆறுமாதம் கழித்துப் பல்லவ நத்தம் ஜமீன்தார் கஜேந்திர நாயகரின் பேத்தி மோகனசுந்தரிக்கும் சரித்திர ஆராய்ச்சியாளர் சேதுமாதவனுக்கும் மகோன்னதமாகத் திருமணம் நடைபெற்றது. ஒய்வு கிடைக்கும்போதெல்லாம் அவர்கள் அந்தப் புலிப்பாறைக்குப் போகத் தவறுவதில்லை என்று ஜமீன் வட்டாரத்தில் எல்லாரும் பேசிக் கொண்டார்கள்!

அவ்வையார் மரணமிலாப் பெருவாழ்வினர்



டாக்டர் தி. முத்து-கண்ணப்பர்



பண்டைக் காலம் முதல் இன்றளவும், தமிழ் கூறும் நல்லுலகத்தினர் அனைவரும் அறிந்துள்ள ஒரே பெண் பாற் புலவர் அவ்வையாரே. அவ்வையார் என்றால் அன்னையார் என்பது பொருள். பத்து மாதம் சுமந்து பெற்று, உண்ணும் அன்னத்தையும், அன்னை மொழியாம் தமிழ் அமுதத்தையும் குழைத்துக் குழந்தைக்கு ஊட்டி வளர்ப்பவள் அன்னை. அக் குழந்தை கல்வி கற்கும் வயதடைந்ததும், முதல் முதலாக அன்பு அன்னையைப் பிரிந்து, பள்ளிக்குச் செல்கிறது. அங்கு ஆசிரியையாகிய அன்னையார் குழந்தைக்கு எழுதப்படிக்கக் கற்றுத் தருகிறார். முதல் முதலாக அந்தக் குழந்தை அறியும் நீதி நெறிப் பாடல் ஆத்தி சூடி. குழந்தைக்கு முதலில் அறிமுகமானவள் அதனைப் பெற்றெடுத்த அன்னை; பின்னர், பள்ளியில் தாய்மொழி புகட்டும் அன்னை (ஆசிரியை). அதன் பின்னர், அந்தக் குழந்தை, நீதிநெறிப் பாடல் மூலமாக அறிவது ஆத்திசூடி பாடிய அவ்வையாகிய அன்னை.

'அறம் செய விரும்பு', 'ஆறுவது சினம்', 'இயல்வது கரவேல்', 'ஈவது விலக்கேல்', 'எண் எழுத்து இகழேல்" என்று தமிழ் உயிர் எழுத்து வரிசையாக அமைந்த ஆத்திசூடிப் பாடல்களையே, எழுதப்படிக்க நன்றாக அறிவதற்கு முன்னரே, அக்குழந்தை பயில்கிறது. அதனைப் பாடியவர் அவ்வையார் என்று ஆசிரியை கூற அது அவ்வையார் பெயரைத் தெரிந்து கொள்கிறது.

'ஔ' என்னும் எழுத்தைக் குழந்தை அறிந்து கொள்ள, தடியொன்றை ஊன்றிக் குனிந்து கொண்டுள்ள முதிய கிழவியின் உருவப் படம் நூலில் காணப்படுகிறது. தடியூன்றிக் குனிந்து முகமலர்ந்து காணப்படும் அந்த மூதாட்டியின் உருவம் பிஞ்சு நெஞ்சத்தில் ஆழப் பதிந்து விடுகிறது. பின்னர், அத் திருவுருவம் உள்ளத்தில் என்றும் நீங்காது நின்றுவிடுகிறது. வயதான மூதாட்டிகளைக் காணும் போதெல்லாம் அவ்வையாரின் நினைவும், உருவும் நெஞ்சில் நிழலாடுகின்றன. கல்விக் கூடங்கள் மூலமாக இந்த நிலை காலங்காலமாக நிலவி வருகிறது. இவ்வாறாக அவ்வை அன்னையார், தமிழ் அறிந்த அனைவர் நெஞ்சங்களிலும் நீங்காது குடிகொண்டு விடுகிறார்.

எனவே, அவ்வையாரே, அனைவராலும் நன்கு அறியப் பட்ட உண்மையான தமிழ் அன்னையாக விளங்குகிறார்.

தமிழகத்துக்கு எத்தனையோ பெருமைகளும், தனிச் சிறப்புகளும் உள்ளன. உலகத்திலேயே முதன் முதலாகத் தோன்றிய பெண்பாற் புலவர் அவ்வை பெருமாட்டியார் தான் என்று கூறின், அது மிகையாகாது. முதற் பெரும் புலவர் பெருமாட்டியை உலகத்துக்குத் தந்தது தமிழகமே என்றால், அது தமிழகத்துக்கே தனிப் பெருமையல்லவா?

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பாடிய பாட்டுக்கொரு புலவன் பாரதியாரே,

"கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே, நம் அனைவரினும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட அவ்வை பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும். தமிழ்நாட்டு நாகரிகத்துக்கு இத்தனை பெரும் செல்வமாகவும், இத்தனை ஒளிசான்ற வாடா விளக்காகவும், தனிப் பேரடையாளமாகவும், தமிழ் மாதொருத்தியின் நூல்கள் விளங்குவது நமக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ?"

என்று வியந்து பாராட்டிக் கூறியுள்ளமை, அவ்வையாரே, புலவர் அனைவரினும் மிகமிக உயர்ந்தவர், சிறந்தவர் என்பதற்குத் தக்க சான்றாகுமன்றோ?

அவ்வையார் அருளிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்கள் மிக உயர்ந்த நீதி நெறிகளை உணர்த்தும் அற்புதப் படைப்புகள். உலகின் வேறெந்த மொழியிலும் இத்தகைய அரும்பெரும் நீதி இலக்கியங்களைக் காண முடியாது.

அவ்வை பிராட்டியின் பெற்றோர், பிறப்பிடம், காலம் முதலியவற்றை அறுதியிட்டு உறுதியாய்க் கூற இதுவரை உரிய சான்று ஏதும் கிடைக்கவில்லை. அவரைப் பற்றி ஏராளமான கதைகள் வழங்குகின்றன. அவற்றில் பல, வெறும் கட்டுக்கதைகள். ஆனால் அவர் விநாயக வழிபாட் டினர் என்பதை மட்டும் உறுதியாகக் கூற முடியும். அதற்குப் பல சான்றுகள் உள்ளன. அவ்வையாரின் அரிய படைப்புகளாகக் குறிப்பிடத்தக்கவை ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி முதலியன.

அவற்றில், ஆத்தி சூடியில் இறைவணக்கமாக அவ்வையார் பாடியிருப்பது, "ஆத்திசூடி அமர்ந்த தேவனை ஏத்தியேத்தித் தொழுவோம் யாமே" என்னும் ஈரடிப் பாடலே. 'ஆத்தி மாலை சூடிய சிவபெருமான் விரும்பும் மைந்தனாகிய விநாயகப் பெருமானை வணங்கித் துதிப்போம்' என்பது இதன் பொருள்.

கொன்றை வேந்தன் என்னும் மற்றொரு நூலிலும்,

"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே"

-என்று பாடியுள்ளார்.

'கொன்றைப் பூவைச் சூடியுள்ள சிவபெருமானின் செல்வனான விநாயகக் கடவுளின் திருப்பாதங்கள் இரண்டினையும் நாம் எந்நாளும் துதித்துத் தொழுவோம்' என்பது இவ்வடிகளின் பொருள்.

அரும்பெரும் நீதி நூலான மூதுரையில் உள்ள கடவுள் வாழ்த்தைப் பார்ப்போம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

- என்பதே அப்பாடல்.

'பவளம் போலும் சிவந்த திருமேனியையும், (துப்பு - பவளம்) துதிக்கையையும் உடைய விநாயகக் கடவுளின் திருவடிகளை நாள் தவறாமல் அர்ச்சித்து வழிபாடு செய் வோருக்கு, நல்ல சிந்தனையும், சொல்லாற்றலும், செந் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் அருட்பார்வை யும் (செல்வமும் செல்வாக்கும்) உண்டாகும்; அவர் உடலைப் பிணி ஏதும் நாடாது' என்பது இப்பாடலின் பொருள்.

மற்றொரு நூலான நல்வழியில் 'நான்கு தருகிறேன் நீ மூன்று எனக்குத் தந்தருள்க!' என்று கொடுக்கல் வாங்கல் முறையில் விநாயகப் பெருமானை, அவ்வையார் மிக மாக வேண்டுகிறார்.

"பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா"

இப்பாடலுக்கு விளக்கமே வேண்டுவதில்லை. அவ்வை பிராட்டியார், அழகிய தாய்மையான மாணிக்கம் போன்ற யானை முகனை, வேண்டுவதெல்லாம், சங்கம் வளர்த்த முத்தமிழ்ப் புலமையைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு நிகழ்ச்சியும், அவ்வை அடிகளார் விநாயக வழிபாட்டினரே என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

ஒருமுறை சேரமான் நாயனாரும், சுந்தரமூர்த்தி அடிகளாரும் முறையே ஆதியுலாவையும், பொன்வண்ணத் தந்தாதி என்னும் நூலையும் பாடி அரங்கேற்றக் கயிலாயத்துக்குச் சென்று கொண்டிருந்தனர். அச் செய்தி அவ்வையாருக்குத் தெரிந்தது. அவர்களோடு தாமும் செல்ல வேண்டுமென்று அவசரமாக விநாயகர் பூஜை செய்தார். அதனையுணர்ந்தவிநாயகப்பெருமான், பதற்றப் படாமல் அமைதியாக வழிபாடு செய்தால் தாமே அவரை, அவ்விருவர்களுக்கு முன்னர்க் கயிலாயத்தில் கொண்டு சேர்ப்பதாகக் கூறினார். அவ்வையாரும் அவசரமின்றி அமைதியாகப் பூசை செய்து முடித்தார். உடனே விநாயகர் அவ்வையாரைத் தம் துதிக்கரத்தால் தூக்கி, அவ்விரு வருக்கும் முன்னர்க் கயிலாயத்தின் வாயிலில் கொண்டு நிறுத்தினார்.

சேரமான் நாயனாரும், சுந்தரமூர்த்தி அடிகளும் முறையே வெள்ளைக் குதிரை மீதும், வெள்ளை யானை மீதும் ஏறி மிக விரைவாகக் கயிலாயத்தை அடைந்தனர். அங்குத் தங்களுக்கு முன்னரே அவ்வையார் சென்றிருப் பதைக் கண்டு இருவரும் திடுக்கிட்டு, 'இது என்ன மாயமந்திரம்?' என்று வியப்படைந்தனர். அந்த நிகழ்ச்சி யின் காரணத்தை வினவியபோது, அவ்வையார், சேரமானை நோக்கி, "உயர்குடிப் பிறந்த மன்னனே! மதுர மொழி பேசும் நல்ல உமையம்மையின் மைந்தனாகிய விநாயகப் பெருமானின் மலரடிகளை உறுதியாக எண்ணித் தொழுபவர்களுக்கு இது ஓர் அரிதான செயல் அல்லவே. மேகம் போல் இடியிடித்து, பூமி அதிருமாறு விரைந்து ஓடும் யானையும், தேரும் அதன் பின் தொடர்ந்து வந்த குதிரையும், (ஒருநாழிகையில்) காதவழி கடக்கும்; இந்தக் கிழவியாகிய யானும் கடந்து வந்தது அந்தக் காதவழி தூரம்தான்" என்னும் பொருளமைந்த, பின்வரும் பாடலைப் பாடினார்.

"மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினைய வல்லார்க்கு அரிதோ முகில்போல் முழங்கி
அதிர வருகின்ற யானையும் தேரும் அதன் பின் சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே!

அவ்வையார், விநாயகப் பெருமானை வழிபட்டுப் பூரணத்துவம் பெற்றுப் பொலிந்த குண்டலினி யோகியார், அத் தத்துவநிலையை முற்றும் உணர்ந்த சித்தர், பெருமாட்டியார்.

இறைநிலையடைவதற்குரிய பல நெறிகளில் ஒன்று குண்டலினி யோக நெறி. இறைவன் ஒவ்வொருவர் உள்ளத்துள்ளும் உறைகிறான். 'கடவுள் நீயே' (தத்வமசி – அதுவே நீ என்னும் உண்மையை உணர்ந்து உய்வதற்குரிய முக்கிய நெறி குண்டலினி யோக நெறி. அக்குண்டலினி நெறியை 'விநாயகர் அகவல்' என்னும் பாடலில் அவ்வையார் மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் விளக்கியுள்ளார்.

இப்பாடல் ஆண்டுதோறும் விநாயக சதுர்த்தித் திருநாளைக் கொண்டாடும் ஒவ்வொரு வீட்டிலும் பாடப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அப்பாடலில் விநாயக பெருமானின் தோற்றப் பொலிவை முதல் பதினான்கு அடிகளில் சொல்லோவியமாகச் சுவைபடச் சித்திரிக்கிறார்.

"சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பும் பலவிசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்,
வன்ன மருங்கில் வளர்ந்து அழகு எறிப்ப,
பேழைவயிறும், பெரும்பாரக் கோடும்,
வேழ முகமும், விளங்குசெந் தூரமும்,
அஞ்சு கரமும், அங்குச பாசமும்,
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்,
நான்ற வாயும், நாலிரு புயமும்,
மூன்று கண்ணும், மும்மதச் சுவடும்,
இரண்டு செவியும், இலங்கு பொன் முடியும்,
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய் ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே"

என்பதே அச் சொற் சித்திரக் கவி.

'குளிர்ந்த, நறுமணம் கமழும் செந்தாமரை மலர் போன்ற பாதத்தில் நீர் அணிந்துள்ள சிலம்பு பலவிதமான இன்னிசையை எழுப்புகிறது. பொன் அரைஞாணும், வெண் பட்டாடையும் உமது அழகிய இடுப்பில் பொருந்தியுள்ளன; பெரிய வயிறும், நீண்ட உறுதியான தந்தமும், யானை முகமும், நெற்றியில் செந்தூரத் திலகமும் விளங்குகின்றன; ஐந்து கரங்கள்; அவற்றில் இருகரங்களில் அங்குசம், பாசம் என்னும் ஆயுதங்களை ஏந்தியிருக்கிறீர்; நெஞ்சில் நிலைத்திருக்கும் நீலநிற மேனியர்; நீண்ட



துதிக்கையும், வளமை பொருந்திய தோள்களும், மூன்று கண்களும், மும்மதங்களில் அடையாளங்களும், இரண்டு செவிகளும் உடையீர்; அழகிய பொற் கிரீடம் ஒளிவிடுகிறது; முவிழைப் பூணூல் திகழும் மார்பினை உடையீர்; சொற்களால் வருணிக்க முடியாத தூய மெய்ஞ்ஞானமாகிய அற்புதமானவரும், வேண்டியதையருளும் கற்பகத் தரு போன்றவருமான யானைமுகப் பெருமானே!" என்பதே இப்பாடலின் பொருள்.

இப்பாடல், வேண்டியவர் வேண்டியதையளிக்கும் அற்புதமான கற்பகத்தரு போன்ற விநாயக பெருமானின் தோற்றப் பொலிவை நம் மனக்கண் முன்னர்ப் பிரத்தியட்சமாகக் கொண்டு வந்து நிறுத்துகின்றதன்றோ?

இவ்விநாயக பெருமானை, அவ்வையார், இந்நில உலகில் தமக்குக் குருவாகத் திருமேனி தாங்கி வந்து, தம் தலைமீது அவர் திருவடிகளை வைத்தருளி, 'இதுதான் நிலையானது; இது ஒன்றுதான் மெய்ப்பொருள்' என்பதை உணரச் செய்தவர் என்கிறார்.

"குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள் என"

என்று கூறிப் பின்னர்,

"குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் விளங்க உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்து அறிவித்தவர்".

என்று போற்றுகிறார்.

அதாவது குண்டலினி என்னும் சக்தியுடன் கூடியிருக்கும் 'அஜபா' எனும் வாயால் உரைக்க முடியாத மந்திரத்தை, வாய் திறந்து சொல்லும் மந்திரமாக வெளிப்படையாகக் கூறுதற்கு உரியது போல் உபதேசித்து, மூலாதாரத்திலிருந்து பற்றி எரியும் ஞானக் கனலை (மூச்சுக்) காற்றால் மேல் எழச் செய்யும் நெறி முறையை விநாயகர் தமக்கு உணர்த்தியருளியதாகப் பெருமிதத்தோடு எடுத்துரைக்கிறார்.

நிறைவாக,

"அஞ்சக் கரத்தின் அரும்பொருள்தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே"

எனக் கூறி அமைகிறார்.

அதாவது, 'பஞ்சாட்சரத்தின் – ஐந்தெழுத்தின் அரிய நுட்பமான பொருளை நிலைபெறச் செய்து, உள்ளத்தில் தெளிவை உண்டாக்கி, ஞான தத்துவங்களை விளக்கித் தம்மை ஆட்கொண்டருளிய ஞானவடிவாகிய விநாயகப் பெருமானின் நறுமணம் கமழும் திருவடிகளைச் சரணடைந்ததாகக், கூறி நிறைவடைகிறார்.

அவ்வையார் இயற்றியுள்ள மற்றொரு நூலான 'அவ்வை குறள்' அல்லது 'ஞானக்குறள்' என்னும் நூலும் முழுக்க முழுக்கக் குண்டலினி யோக முறையை எளிமையாகவும், மிகத் தெளிவாகவும் விளக்கும் அரிய நூல் என்பதும் இக் கருத்துக்குச் சிறந்த சான்றாகும்.

எனவே, இவையனைத்தும் அவ்வை அடிகளார், விநாயகப் பெருமானையே தம் வழிபடு தெய்வமாகவும், குருவாகவும் கொண்டு, அவரால் குண்டலினியோக முறை உபதேசிக்கப்பட்டு, மரணமிலாப் பெருவாழ்வு எய்தியவர் என்பதை உள்ளங்கை நெல்லியென எடுத்துக் காட்டுகின்றன.



எம்.டி.ஆர். ப்ராடெக்ஸின் ஒரு தொழிற்சாலையின் தோற்றம்


மணக்க மணக்க எம்.டி.ஆர். மசாலா பொடிகள்

டி. ஆர். ஜி.

பெங்களூர் என்றவுடன் எல்லாருடைய எண்ணத்திலும் லால்பாக், கப்பன் பார்க், விதான்சௌதா தவிர மாவல்லி டிபன் ரூம் – உணவு விடுதியும் செல்ல வேண்டிய ஒன்று என்று ஒரு சிறப்புத் தகுதியை, தென்னகத்திலுள்ள அனைவரிடமும் பெற்றுள்ளது. தென்கன்னடாவைச் சார்ந்த உடுப்பியில் இருந்து 1924 ஆம் ஆண்டு பெங்களூரிலுள்ள மாவல்லி என்ற இடத்தில் திரு. யக்ஞப்பாவால் தொடங்கப்பட்டது. எம்.டி.ஆர். முதலில் உடுப்பி ஹோட்டல் என்ற பெயரிலேயே தொடங்கப்பட்டது. 1926 முதல் தற்போதுள்ள பெயருக்கு மாற்றப்பட்டது. சுமார் 1947 வரை பெங்களூரிலேயே உயர்ந்த (Caterer) உணவு தயாரிப்பாளர்கள் என்ற பெயர் பெற்று விளங்கியவர்கள். இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு வெளியிடங்களில் சமைத்துப் பரிமாறுவது என்ற முறையை நிறுத்திக் கொண்டு, தங்கள் விடுதியில் மட்டுமே உணவு வகைகள் தயாரித்து அளித்து வருகின்றனர். தொடக்கக் காலங்களில் மூன்று சகோதரர்களும் ஏழு எட்டு ஆட்கள் மட்டுமே வேலை செய்து வந்த இந்த நிறுவனம் இன்று சுமார் 110 பேர் வேலை செய்யும் பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. ஒவ்வொரு சிறப்பு உணவு வகைக்கும் சிறந்த தயாரிப்பாளர்கள் என்று இந் நிறுவனத்தில் உள்ளார்கள். இந் நிறுவனத்தில் 1943இல் இருந்து தொடர்ந்து வேலை செய்யும் சிறப்பு (expert) உணவு தயாரிப்பாளர்கள் (வயது சுமார் 75) இருப்பது போல் வாடிக்கையாளர்களிலும் இன்றும் இருக்கிறார்கள். 1934லிருந்து தொடர்ந்து எம்.டி.ஆர்.க்கு வந்து சிற்றுண்டிகள் சுவைப்பவர்களுக்கு உதாரணமாக ஓய்வுபெற்ற – சட்ட செகரட்டாரியைக் குறிப்பிடுகிறார் திரு. ஹரிச்சந்திர மைய்யா. 1968இல் யக்ஞப்பாவின் மறைவிற்குப் பிறகு திரு. ஹரிச்சந்திர மைய்யாதான் நிர்வகித்து வருகிறார். 1960 ஆம் வருடம் முதல் தற்போதுள்ள புதிய கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

"தொடக்கக் காலங்களில் வெள்ளித் தட்டு, டம்ளர், டவரா போன்றவற்றிலேயே எல்லாருக்கும் சிற்றுண்டி பரிமாறி வந்தனர். தற்போது யார் விரும்பிக் கேட்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் இவ்வசதி அளிக்கப் படுகிறது. மாறி வரும் காலத்திற்கேற்ப பரிமாறும் முறை மட்டும் மாற்றப்பட்டுள்ளது. உணவு வகைகள் தயாரிப்பிலோ, தரத்திலோ என்றுமே துளியளவுகூட மாறுதல் இல்லை" என்று கூறுகிறார் திரு. ஹரிச்சந்திர மைய்யா.

திரு. யக்ஞப்பா என்றும் கடின உழைப்பிற்கும், உண்மைக்கும், தூய தரத்திற்கும் பெயர் பெற்றவர். அவருடைய கண்காணிப்பில் வளர்ந்த திரு. ஹரிச்சந்திர மைய்யாவும், திரு. யக்ஞப்பாவின் மகன் திரு. சதானந்த மைய்யாவும் அவர் எண்ணப்படியே தரத்திற்கு, மிகுந்த கவனம் செலுத்தி வருகின்றனர். இன்று சுமார் 2500க்கும் மேற்பட்டவர்கள் ஒரு நாளைக்கு வந்து சிற்றுண்டி சுவைத்துச் செல்கின்றனர். இவர்களுடைய ரவா இட்லி தூய பம்பாய் ரவையிலிருந்து (Suji) தயாரிக்கப்படுகிறது. சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக இவர்களுடைய இட்லி, தோசை, மசாலா தோசை,



பி. சதானந்தமைய்யா



பி. ஹரிசந்திரமைய்யா

காராபாத் இனிப்பு வகைகளில் சந்திர ஹாரம், பாதம் அல்வா, குலோப் ஜாமுன் பெருவாரியான மக்களின் நாவினால் சுவைக்கப்பட்டு பாராட்டுப் பெற்றுள்ளன. 1944இல் 'சந்திர ஹாரம்' என்ற திரைப்படம் வெளி யிடப்பட்டபோது தயாரிக்கத் தொடங் கிய சிறப்பான இனிப்புக்கு இங்கு சந்திரஹாரம் என்று பெயரிட்டுள் ளனர்.

திருநெல் வேலி அல்வா போல் மாவல்லி 'சந்திரஹாரம்' மக்க ளிடையே மிகப் பிரபலமான இனிப்பு. ஞாயிறு மட்டும் தயாரிக்கப்படும் இந்த இனிப்பு தயாரிக்கப்பட்ட சில மணி நேரத்திலேயே விற்றுத் தீர்ந்து விடுகிறதாம். வேறு எங்கும் இந்தத் தரமும் சுவையும் காண முடியாத நிலையில் இங்கு உணவருந்த வரு பவர்கள் விருப்பத்திற்கிணங்க இவர் களுடைய ரவா இட்லி மிக்ஸ் சிறிய அளவில் தயாரித்து விற்கப்பட்டு வந்தது.

1975லிருந்து 'எமர்ஜன்சி' அமல் செய்யப்பட்ட பொழுது நிறையக் கட்டுப்பாடுகள் காரணமாக இவர் களால் சிற்றுண்டி சாலையைச் சிறப் பாக நடத்துவதற்கு இயலவில்லை. நிரந்தரமாக எம்.டி.ஆர்.ஐ மூடி விடலாமா என்ற எண்ணத்தில்கூட இருந்தார்கள். உணவு பரிமாறும் வேலையில் இருப்பவர்களுக்கு விற் பனையாளர்கள் வேலை தரப்பட்டு முதன் முதலில் எம்.டி.ஆர். ரவா இட்லி மிக்ஸ் விற்பனைக்கு வந்தது. சமையல் வேலை செய்வோருக்கும் உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களைக் கொண்டே மசாலா பொடிகள் முதலில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தன. விரத காலங்களிலும், அரிசி உணவைத் தவிர்க்க வேண்டிய காலங்களிலும், நீரிழிவு வியாதி உள்ள வர்களும் இவர்களுடைய ரவா இட்லி யைப் பெரிதும் உபயோகிக்கிறார்கள்.

தொடக்கக் காலங்களில் எம்.டி.ஆர். கட்டடத்திலேயே மசாலா பொடிகள் தயாரிக்கப்பட்டு வந்தன. 1984 வரை சிறுதொழில் முறையி லேயே இவர்களுடைய உடனடித் தயாரிப்புகள் (Instant Products) தயாரிக்கப்பட்டு வந்தன. அதுமுதல் 1988 வரையிலான கால கட்டடத்தில் பல்பொருள் அங்காடி தொடங்கி அதில் விற்பனை செய்து வந்தனர். 1988ஆம் ஆண்டு ஸ்ரீவித்யா ரோடு கட்டடத்தில் தயாரித்து விற்பனை செய்யப்பட்டது.

1991 ஆம் ஆண்டு கர்நாடக அரசு தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத் திய தொழிற்பேட்டையில் சுமார் மூன்றரை ஏக்கர் நிலத்தை வாங்கி திரு. சதானந்த மையாவின் நேரடி கண்காணிப்பின் பேரில் தொழிற் சாலை பெங்களூருக்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் 'பொம்மசந்தரா' என்ற இடத்தில் கட்டப்பட்டது. முதல் கட்டமாக 24,000 சதுர அடி தொழிற் சாலைக்காகக் கட்டப்பட்டது. இட நெருக்கடியும், தேவையும் அதிக மானதால் மேலும் 8,000 சதுர அடி கட்டடம் வளர்ந்து வருகிறது. திரு. சதானந்த மையா பொறியியல் பட்ட தாரியானதால் அவர்களுக்குத் தேவை யான முறையில் இவருடைய வரை படத்தைக் கொண்டு முழுத் தொழிற் சாலையும் அமைக்கப்பட்டுள்ளதால் முழு உபயோகமும் அடைய முடி கிறது.

இவர்களுடைய தயாரிப்பான 'பாதாம் மிக்ஸ்' எங்கும் பிரபல மடைந்துள்ளதற்குக் காரணம், நாம் நேரே காணும்போது நன்கு விளங்கு கிறது. உயர்ந்தரக பாதாம் பருப்புகள், பூச்சி துளைக்காதவை யாக, குவியல் குவியலாய்க் குவித்து வைத்துள்ளார்கள். சுவைக்காக சர்க் கரை, பால்பவுடர், ஏலம், காஷ்மீரத்தி லிருந்து தருவிக்கப்பட்ட குங்குமப்பூ, போன்ற வாசனைத் திரவியங்கள் பலவற்றை சரியான விகிதத்தில் கலந்து மாவாக்கி, 200 கிராம் பாலிதின் பைகளிலும் 500 கிராம், 1 கிலோ பெட் பாட்டில்களிலும் இட்டு விற்பனை செய்கிறார்கள்.

திடீர் சாம்பார் சாதத்திற்கான (பிஸிபேலாபாத்) அரிசி, பருப்பு வகைகள் முன்கூட்டியே வேகவைத்து (prebaked) பொடி செய்து கொள் கிறார்கள். மிளகாய்ப் பொடி, சாம்பார்ப் பொடி, ரசப்பொடிக்கான கலவையை ஓர் அட்டவணையாகத் தயாரித்து வைத்துள்ளார்கள். எக் காரணம் கொண்டும் இந்த அட்ட வணைக்கு மாறுதலாகத் தயாரிக் காததால் எப்போதும் ஒரே மாதிரி யான பொடிகள் தயாரிக்கப்படு கின்றன. வீட்டில் உலக்கையில் இடிப்பது போன்றே இயந்திரத்தில் மிளகாய், தனியா போன்றவை சரி யான விகிதப்படி இட்டு இடிக்கப் படுகின்றன. பிறகு இயந்திர சல்லடை யில் சலித்து பேக்கிங்கிற்கு வருகிறது.


பிறகு அதை, பாலிதின் பைகளில் அடைக்க முதலில் அமெரிக்காவி லிருந்து ஓர் இயந்திரம் தருவிக்கப் பட்டது. அதிலிருந்து மேலும் தேவைக் கேற்ப வடிவமைத்து மேலும் ஓர் இயந்திரம் இங்கேயே தயாரிக்கப்பட் டுள்ளது. காற்றுப்புகா வண்ணம் இருக்க, பையின் மேல் பாலிதின் பூசப் படுகின்றது. பையின் மேல் அச்சிட் டுள்ள சமையல் குறிப்புகள், தயாரித்த தேதி, அளவு, விலை மற்றும் தேவை யான விவரங்கள் கம்ப்யூட்டர்கள் உதவியுடன் இயக்கப்படும் இயந்திரத் தினால் விநாடிக்குச் சுமார் 64,000 எழுத்துகள் என்ற முறையில் மை தெளிப்பான் மூலம் மிக நுண்ணிய முறையில் அச்சிடப்படுவது நம்மை மிகுந்த வியப்பில் ஆழ்த்தாமல் இல்லை. அவ்வளவு உயர்ந்த தொழில்நுட்பம் உள்ள தொழிற் சாலையாக எம்.டி.ஆர். விளங்கு கின்றது.

தொடக்க காலத்தில் ஒரே விற்பனையாளர் (sole distributor) முறையில் விற்பனை செய்து வந்தனர். அதனால் ஏற்பட்ட இடை யூறுகள் காரணமாக தற்போது நேரடி விற்பனை தொடங்கப்பட்டுள்ளது. பெங்களூரில் 20 ஸ்டாக்கிஸ்ட்டுகளும், சென்னையில் 11 மற்ற இடங் களில் மொத்தம் 64 டாக்கிஸ்ட்களும் கொண்டு இவர்களுடைய திறமை வாய்ந்த 100க்கும் மேற்பட்ட விற் பனைக் குழுவின் மூலம் விற்பனை செய்கிறார்கள்.

தொழிற்சாலை கட்டுவதற்கு முன் ரூபாய் ஒன்றரைக் கோடி அளவி லிருந்த விற்பனை தற்போது 10 கோடி ரூபாய்க்கு உயர்ந்துள்ளது. வெளி நாடுகளுக்கும் இவர்களுடைய மசாலாக்கள் மணம் பரப்பச் செல் கின்றன. "தொழிற் சாலையிலுள்ள சுமார் 110 தொழிலாளர்களுக்கும் காலையில் சிற்றுண்டி, காபி, மதிய சாப்பாடும், சுமார் 4 மணிக்கு டீயும் இங்கேயே வழங்கப்படுகின்றன. இவர்களுடைய குடியிருப்புகளிலேயே தங்கியுள்ளவர்க்கு இரவு உணவும், வெளியே தங்கியுள்ளவர்களுக்கு சமையலுக்குத் தேவையான ரேஷன் சாமான்களாகவும் கொடுக்கிறோம். இதற்கு ஒரு தொழிலாளிக்கு மாதம் சுமார் ரூ. 2,600/- செலவாகிறது" என்று திரு. சதானந்தமையா குறிப் பிட்டார்.

தொழிற்சாலையில் வேலை செய்வோருக்கு மட்டுமின்றி வெளியி லுள்ள மக்களுக்கும் இவர்களுடைய 'திடீர்' தயாரிப்புகளின் மூலம் சுவை யான உணவு படைப்பது இவருக்குப் பெரிதும் மகிழ்ச்சியூட்டுவதாக இருக் கிறது.

அலுவலக ஊழியர்கள் வந்து போவதற்காக ஒரு பேருந்து உப யோகத்தில் உள்ளது. தந்தையைப் போல் தனையனும் காலை 4.30 மணிக்கு எழுவது முதல் இரவு மணி 10.30க்குப் படுக்கப் போகும் வரை முழுக்கவனத்துடன், மேலும் எப்படி நிறுவனத்தை முன்னேற்றம் செய்ய லாம் என்ற எண்ணத்திலேயே செயல் படுவதால் இவர்கள் தயாரிக்கும் எல்லாப் பொருள்களும் இந்தியாவில் முதலிடம் பெறும் நாள் விரைந்து நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று வெளிச்சமாகிறது.





ஊறுவதற்கு முன் உப்பில் ஊறும் காய்கள் அடைக்கப்பட்டுள்ள பிளாஸ்டிக் கேன்கள்



யெந்திரச் சல்லடையால் மிளகாய்த்தூள் சலிக்கப்படுகின்றது



பாக்கிங்கிற்கு

தயாரான தூள்



ஊறுகாய் 'பெட்' பாட்டிலில்

அடைக்கப்படுகின்றன



பாதாம் மிக்ஸ் அரைபடுகிறது



பாதாம் மிக்ஸ் பாட்டில்களில் Shrink wrapping

முறையில் சீல் செய்யப்படுகிறது



மூடியிட்டு சீல் செய்து விற்பனைக்குத் தயாராகும் ஊறுகாய்கள்

மணி மகுடத்தில் மற்றும் ஒரு மாணிக்கம்

செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலை செட்டியாரின் தீர்க்க தரிசனத்தால் தமிழ்நாட்டிற்குப் பல பெருமைகள். அவர் அமைத்த கல்வி ஆலயம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரத்தில் நடராசர் திருக் கோயில் போன்று அழியாது விளங்கு கிறது.

அவர் திருக்குமாரர் அமரர் முத்தையா செட்டியார் ராஜா சர் விட்ட பணியிலிருந்து தொடர்ந்து பல தொழில் முன்னேற்றங்களை நிகழ்த்திச் சாதனை புரிந்தார்கள். அவரது திருக்குமாரர் டாக்டர் எம்.ஏ.எம். என மூன்று எழுத்து களால் அன்புடன் அழைக்கப்படும் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் செட்டி நாட்டரசர் பரம் பரை என்னும் மகுடத்தில் ஒரு மாணிக்கத்தைப் பதித்திருக்கிறார். டிரான்ஸ்போர்ட், சிமெண்ட் ஆலை, கல்விக் கூடங்கள் எனப் பல பெருமை தரும் பணிகளுடன் காற்றாடி மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலை களை, 1994ஆம் ஆண்டின் மகத்தான சாதனையாகப் புரிந்துள்ளார்கள்.

அருட்கொடைகள் பல செய்த அருட்சிறப்பாலும், கல்விச் செல்வத் தைப் பலருக்கு அள்ளித் தரும் பெரும் பணியாலும் அனைவரும் போற்றக் கூடிய பெருமையினைப் பெற்றிருக் கின்ற செட்டி நாட்டரசர் குடும்பம், மிக அமைதியாக ஒரு மாபெரும் பணியை நாட்டிற்கு அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது.

இயற்கையின் துணையோடு காற் றின் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்யலாம் என்கிற முறை அண்மைக் காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட வுடன் செட்டிநாட்டு அரச வாரிசு டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் முனைப்போடு செயல் படத் தொடங்கி விட்டார்.


அதன் விளைவுதான் செட்டிநாடு காற்று மின் நிலையம்.

இந்தியாவில் உள்ள 97 சிமெண்ட் ஆலைகளில் தமிழ்நாட்டில் இயங்கு கிற 8 சிமெண்ட் ஆலைகளும் அடக்கம். திருச்சியில் இருந்து கோவை மார்க்கத்தில் 65 கி.மீட்டர் தூரத்தில் கருவூர் அருகே இருக்கும் புலியூரில் புகழ் பெற்ற செட்டிநாடு சிமெண்ட் ஆலை மிகத் தரமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. (ஆலையின் சிறப்பு பற்றி வரும் 'அமுதசுரபி' இதழ் ஒன்றில் வெளிவரவிருக் கிறது). அந்த ஆலையின் வளர்ச்சியை நேரே கண்டறிந்த மனநிறைவுடன் செட்டிநாட்டு அரசச் சாதனைகளில் மற்றொன்றான 1994ஆம் ஆண்டின் சாதனையான - காற்று மின் நிலை யத்தைக் காணப் புறப்பட்டோம்.

கோயமுத்தூர் நெடுஞ்சாலையில் சின்னதாராபுரம், முருங்கைக்காய்கள் நிறைந்த மூலனூர் வழியாக ஆங் காங்கே அமராவதி ஆற்றைக் கடந்து விரைந்தால் பூளவாடி.

பூளவாடி கிராமம் நெருங்க நெருங்க தூரத்தில் பொம்மை களாகத் தெரியும் காற்றாலைகள், அருகே சென்று நின்று அண்ணாந்து பார்த்தால் ராட்சஸ உருவங்களாகப் பிரமிப்பூட்டுகின்றன.





காற்று சக்தியை இயந்திர சக்தியாக மாற்றி, பிறகு இயந்திர சக்தியை மின்சக்தியாக்கி நாட்டை வளமாக்குகின்றன இந்தக் காற்றாலைகள்.

நீர், நெருப்பு, அணுசக்தி, சூரிய ஒளி, கடல் அலை, கோபர் கேஸ் (சாண வாயு) மூலம் மின்சக்தி பெறலாம் என்பதுடன் காற்றின் மூலமும் மின்சக்தியைப் பெற முடியும் என்கிற உண்மையை நிரூபிக்க அரசு தன் ஆராய்ச்சியைச் செய்தது.

1986ஆம் ஆண்டு முதல் 1991ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் பல இடங்களில் காற்று வீச்சின் அளவை ஆராய்ச்சி செய்ததன் பயனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுள் ஒன்று பூளவாடி. இந்திய அரசின் 'இந்தியன் ரினியபேல் எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜன்ஸியும்', தமிழக அரசின் 'தமிழ் நாடு எனர்ஜி டெவலப்மெண்ட் ஏஜன்ஸியும்' காற்றின் மூலம் மின்சக்தியை உற்பத்தி செய்ய முன்வருபவர்களுக்கு நிதி உதவி காத்திருக்கும் நேரத்தில் காற்றாலை அமைக்கும் மூலதனத்தைத் தாமே அளித்து, பூளவாடி காற்று மின்சக்தி நிலையத்தைத் தொடங்கி விட்டது செட்டிநாடு நிறுவனம்.

மொத்தம் 16 காற்றாடிகள் பூளவாடியில். ஒவ்வொன்றும் 100 அடி உயரம். காற்றாலை விசிறியின் விட்டம் 26 மீட்டர்கள். மூன்று விசிறிகள். விசிறிகள் இணையும் இடத்தில் கியர் பாக்ஸ். விசிறிகள், கியர் பாக்ஸின் மொத்த எடை 18 டன். 2.8 மீட்டர் ஆழ அடித்தளத்தில் 100 அடி உயரத்தில் விசிறிகள் சுழல்கின்றன.

விசிறி கியர் பாக்ஸின் உதவியுடன் சுழல்கிறபோது கியர் பாக்ஸுடன் இணைக்கப்பட்டு மேலே பொருத்தப்பட்டிருக்கும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் தயாராகிறது.

காற்றின் வேகம் ஒரு விநாடிக்கு 14 மீட்டராக இருக்கும்போது 250 கிலோ வாட் மின்சக்தி உற்பத்தியாகிறது. இந்த மின்சாரம் நேரே டிரான்ஸ்ஃபார்மருக்கு வருகிறது.

காற்றாலை நிறுவ உதவியிருக்கிறார்கள் NEPC நிறுவனத்தார். ஒரு காற்றாலை நிறுவ ஆகும் செலவு ஒரு கோடி ரூபாய்.

காற்றடிக்கும் திசை நோக்கித் திரும்பும் வகையில் காற்றாடிகள் அமைக்கப்பட்டுள்ளன. விசிறியின் விட்டத்தைப் பொறுத்து இடைவெளி தேவை. நீளவாக்கில் 130 மீட்டர்; அகலவாக்கில் 180 மீட்டர் இடைவெளிவிட்டு ஒரு வரிசைக்கு நான்கு வீதம் காற்றாடிகள். மொத்தம் நான்கு வரிசை. 16 காற்றாடிகள். வரிசைக்கு ஒன்று வீதம் மின்சாரம் சேகரிக்கும் யூனிட். ஒரு காற்றாலைக்கு ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இங்கிருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அனுப்பப்படும் மின்சாரத்தைக் குறிக்கும் மீட்டர்களும், தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து காற்றாடிகளை இயக்கத் தேவைப்படும் மின்சாரத்தைப் பெற்ற அளவுக்கான மீட்டர்களும் காற்றாலைக் கம்பத்துக்குள் இயங்குகின்றன.

1994ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் பூஜை செய்து, ஜூலை மாத இறுதிக்குள் அஸ்திவார வேலைகள் முடிந்து, ஆகஸ்ட் மாதம் இயந்திரங்கள் முடுக்கப்பட்டு செப்டம்பர் 7 ஆம் நாள் மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டது செட்டிநாடு காற்று மின் நிலையம்.

உற்பத்தி தொடங்கிய நாளில் இருந்து இதுவரை செய்யப்பட்டுள்ள மின் உற்பத்தி மூன்றரை லட்சம் யூனிட்கள். கடந்த மாதத்தில் காற்றின் வேகம் தடையின்றி வீசி இருந்தால் 7 லட்சம் யூனிட் மின்சாரத்தை உற்பத்தி செய்து இருக்க முடியுமாம்.

நாட்டின் மின் தேவைக்கு, கோவை மாவட்டம் உடுமலை வட்டத்தில் 14 காற்றாடிகளையும், பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டத்தில் 12 காற்றாடிகளையும் விரைவில் நிறுவ இருக்கிறார்கள்.

பல ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள காற்றாலை சாதனங்கள் தன் பணியைச் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகளை மேற்பார்வையிடுவோர் (மனித சக்தி) ஐவர் மட்டுமே! இதற்குக் காரணம் கம்ப்யூட்டர் கண்ட்ரோல் நிர்வகிப்பதே.

காற்றின் வேகம் விநாடிக்கு 3.5 மீட்டர் (குறைந்த பட்ச வேகம்) இருக்கும்போது இயங்கத் தொடங்கும் விசிறிகள் தொடர்ச்சியாக தன் பணியைச் செய்து கொண்டு இருக்கும் அதே நேரத்தில் - காற்றின் வேகம் விநாடிக்கு 25 மீட்டருக்கும் அதிகமாக இருக்கும்போது விசிறிகள் தாமாகத் தம் இயக்கத்தை நிறுத்தி விடுகின்றன. அதிக வேகத்தில், காற்றில் மின்சாரம் தயாரிக்க முடியாது என்கிறார்கள்.

பூளவாடியில் இயங்கிக் கொண்டிருக்கும் சத்தமில்லாத இச்சாதனை மூலம் 1 மெகாவாட் மின்உற்பத்தி நிகழ்ந்து கொண்டிருக்க வரப்போகிற இன்னும் 26 காற்றாலைகள் மூலம் மேலும் பல மெகாவாட் மின் உற்பத்தியை நாட்டின் வளர்ச்சிக்குத் தர ஆயத்தமாகி விட்டார்கள் செட்டிநாடு காற்று மின் உற்பத்தி நிலையத்தார்.

ஒவ்வொரு காற்றாடியும் 30 வருடங்கள் உத்திரவாதத்துடன் இயங்கி இந்தியாவின் வளர்ச்சியை உலகத் தரத்திற்கு உயர்த்த ஓயாமல் உழைக்கும் செட்டி நாட்டரசர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்களைப் பாராட்டும் அதே வேளையில் மின் உற்பத்திக்கு இன்னுமொரு வழி பிறந்த நேரத்தைக் கொண்டாடி மகிழ்வோம்.

செட்டி நாட்டரசர் குடும்பத்து மகுடத்தில் மற்றுமொரு மாணிக்கம் இந்தக் காற்று ஆலை. அவர் தம் பணியை, ஆலைகள் இருக்கும் இடம் சென்றே பார்த்தபோது, டாக்டர் செட்டியாரின் வெற்றிக்கு நான்கு காரணங்களை அறிந்தோம் (1) திட்டமிட்டுப் பணிபுரிதல், (2) எதிர்காலத்தைப் பற்றிய பரந்த தொலைநோக்கு ஞானம், (3) பணியை முடிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் தொழில் நுட்பப் பணியாளர்கள் (4) தொழிலாளர்களிடம் மிகுந்த அன்பு செலுத்தி அவர்களது ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளுதல் ஆகியனவே அவை. நாட்டின் முன்னேற்றத்திற்கு டாக்டர் எம்.ஏ.எம். ஆற்றிவரும் பணிகளைச் சந்தடியின்றி, சத்தமின்றிச் செய்வதன் மூலம் மக்கள் மனத்தில் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டார் எனக் கூறலாம்.

படங்கள் : யோகா

— நாகராஜகுமார்

சைனாவில் 10 நாள்கள்

டாக்டர்
கிருஷ்ண ஸ்ரீநிவாஸ்

சைனாவை, பத்து நாள்களில் சுற்றி வந்தேன். கம்யூனிஸ்ட் சைனா அல்ல... ஜனநாயக சைனா.

"நம் உலகக் கவிஞர்கள் காங்கிரஸ் தொடங்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 14 நாடுகளில் மகாநாடு நடத்தி விட்டோம். இந்த 15 ஆவது காங்கிரஸை, டெய்பேயில் நடத்துகிறோம். நீங்களின்றி இந்தக் காங்கிரஸ் இல்லை. கட்டாயம் வர வேண்டும்" என்று கூறி விமான டிக்கெட்டும் என் ஆருயிர்ச் சகோதரன் டாக்டர் டின்-வென் சுங் அனுப்பி விட்டதால், மறுக்க முடியாமல், தைவானுக்குக் கிளம்பினேன். என்னுடன் பேராசிரியர் சையத் அமீருத்தீன் வந்தார். எனக்கு முன்பே பெருங்கவிக்கோ வா.மு.சே. கிளம்பி விட்டார். ஹாங்காங் வழியாக உச்ச நீதிமன்ற எஸ்.மோகன் தம்பதி, ஆந்திரக் கவி அரசர் ஜே.பாபு ரெட்டி, கர்நாடகக் கவிஞர் ஹிரக். சிங்கப்பூரிலிருந்து கவிஞர் [illegible] குமணன் தம்பதி ஆகியோர் வந்[illegible]தனர். சிங்கப்பூரில் விசா வாங்கிக் கொண்டு நானும் சையதும் ஆகஸ்ட் 27 ஆம் தேதி டெய்பேயை அடைந்தோம்.

சோ, மோகன தம்பதியுடன் நான்.



விமான நிலையத்தில் எங்களுக்கு ஓர் அதிசயம் காத்திருந்தது. எமிக்ரேஷனுக்கு, எல்லாரும் அடித்துக் கொண்டு முன்னேற, எங்களை ராஜதந்திரிகள் செல்லும் பாதையில் அழைத்துச் சென்று, எங்களை கௌரவித்தார்கள்.

ஒரு மணி நேரத்தில் மகாநாடு நடக்கும் ஏஷியா உல்க் ஹோட்டலை அடைந்தோம். 937 ஆம் அறை எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. கீழே வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

என்னைக் கட்டித் தழுவ ஓடி வந்தார் சுங். பத்து நிமிடங்கள் மெய் மறந்திருந்தோம். "சகோதரா! நாம் என்றும் பிரியக்கூடாது. உனக்கு வயது 81 எனக்கு 80. இந்தக் காங்கிரஸ் ஸ்தாபனத்தை ஏற்படுத்திய நால்வரில், நாம் இருவர் மட்டும் உயிரோடிருக்கிறோம். என்ன குதூகலமான சந்திப்பு இது!" என்று பூரித்துப் போனார்.

மற்ற கவிஞர்களும் என்னைக் கண்டு ஓடிவந்தார்கள். ஜப்பானின் மகாகவி அரிமா, கொரியாவின் கவி அரசர் சோ, சைனாவின் லீகிங், ஆஸ்திரேலியாவின் கிரிப்ஸ், துருக்கியிலிருந்து நோபல் பரிசு பெற இருக்கும் உஸ்மான் டுர்கே, ஆப்பிரிக்காவின் நியோமி, டென்மார்கின் எஸ்தர் கிரஸ், ஜெர்மனியின் மான்ஹீம், அமெரிக்காவில் இருந்து ரோஸ்மேரி, நண், பெர்நார்ட், மற்றும் பலர், இஸ்ரேலிலிருந்து அடா, பூஒ, மாக்டா, மில்லர் இதுபோல் நாற்பது நாடுகளிலிருந்து நானூறு மகாகவிகள் வந்திருந்தார்கள். ஒவ்வொரு கவியும் ஐம்பதாயிரம் ரூபாய் செலவழித்துக் கொண்டு, கவிதைவெறியில் செலவைப் பொருட்படுத்தாது வந்திருந்தார்கள். மகாநாட்டில் கலந்து கொள்ள ஒவ்வொருவரும் முப்பதாயிரம் பணம் கட்டி வந்திருக்கிறார்கள். எனக்கு எல்லாம் இல்வசமாகக் கொடுத்திருந்ததால், என்னால் வரமுடிந்தது. சாதாரணமாக எவரும் வரமுடியாது. கவிதைக்காகப் பல லட்சம் ரூபாய் செலவு செய்வதை, இங்குதான் காண முடியும்.

ஆகஸ்ட் 28 காலை 9.30 மணிக்கு மகாநாடு தொடங்கப்பட்டது. அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள். நீதிபதி மோகனின் வரவேற்புரை எல்லாரையும் கவர்ந்தது.


கவிஞர்களுக்கு என்னை அறிமுகம் செய்யும்போது, "நோபல் பரிசு பெற இருக்கும் கிருஷ்ணா நம்மிடையே இருக்கிறார்" என்றதும் கரகோஷம் மண்டபத்தை அதிரச் செய்தது. ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகள் தொடங்கு முன் இந்த அறிவிப்பை வெளியிடத் தலைவர்கள் தவறவில்லை. இந்த எதிரொலி நோபல் கமிட்டியினரின் செவிக்கு எட்டும் என்று நான் நம்புகிறேன். வந்தவர்கள் எல்லாரும் என் புகைப்படத்தை எடுத்துக் கொண்டதால், தங்கள் நாட்டுக்குத் திரும்பியதும், நிச்சயம் அவர்கள் தேசியப் பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதுவார்கள். ஏற்கெனவே நான் ஆண்டுதோறும் வெளியிடும் "உலகக் கவிதை"த் தொகுப்புகளை எல்லாக் கவிஞர்களுமே போற்றி விரிவாக எழுதியிருக்கிறார்கள். இந்தக் கவிஞர்கள் மகாநாடு ஒரு "யுனைடெட் நேஷன்ஸ்" போலவே உருவாகிவிட்டது. கவிதை மூலம் சமாதானமும், சகோதரத்துவமும் ஏற்படுத்த உலகக் கவிஞர்கள் துடிக்கிறார்கள்.

பேராசிரியர் யூ "கவிதை மடியவில்லை" என்ற நீண்ட பிரசங்கம் செய்து எல்லாரையும் மகிழ்வித்தார். இஸ்ரேல் நாட்டின் மில்லர் பாட்டு இசைத்ததும் நாங்கள் எல்லாரும் பூரித்தோம்.

மதிய உணவுக்குப் பின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப் பட்டன.

"இன்றைய கவிதை" என்ற கட்டுரையை நான் படித்து எல்லாரையும் சிந்திக்க வைத்தேன்.

3.30 மணிக்கு கவிதைகள் படிக்கும் நேரம்.



சிங்கப்பூரில் இருக்கும் கிருஷ்ணன் கோயிலில், மகாலஷ்மி முன் நானும் கோகிலா குமணனும் நிற்கிறோம்.

முதன் முதலாக நான் இயற்றிய "டெய்பே, கேட்வே" என்ற கவிதையை உருக்கமாகப் படித்தேன். எல்லாரும் மகிழ்ந்து ஆரவாரம் செய்தார்கள்.

மற்ற இரண்டு நாள்களிலும், கவிதை படிப்பதும், கட்டுரைகள் வாசிப்பதுமாக இருந்தது. பல தேசத்துக் கவிஞர்கள், தங்கள் நாட்டு மொழியிலேயே படித்து, ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட்டார்கள்.

தமிழகத்தின் பெருங்கவிக்கோ, தமிழிலேயே தம் கவிதையைப் படித்து எல்லாரையும் பிரமிக்க வைத்தார்.

கவிஞர் சேது குமணன் எழுதிய ஆங்கிலக் கவிதையை அவர் மனைவி கோகிலா உருக்கமாகப் படித்து எல்லாருடைய பாராட்டையும் பெற்று விட்டார்கள்.

29 ஆம் தேதி இரவு நடந்த விருந்தில் எனக்கு, "ஹாப்பி பர்த்டே" கூறி என்னை எல்லாரும் வாழ்த்தினார்கள். மாலை நேரங்களில் சங்கீத நிகழ்ச்சிகள். 30. ஆம் தேதி மாலை, நாங்கள் சுங் இன் வீட்டுக்குச் சென்றோம். அங்கே என் புகைப்படம் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்தது. "சீன கிராமம்" என்ற பழைமையான இடத்துக்கு அழைத்துச் சென்றார்கள். சைனாவின் புராதனப் பெருமையை உணர எங்களுக்கு வாய்ப்புக் கிட்டியது.


இறுதி நாளில், எனக்கு "உலகக் கவிச்சக்ரவர்த்தி" என்ற பட்டம் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

அடுத்த காங்கிரஸ் ரஷ்யாவை விட்டுப் பிரிந்த கஸகஸ்தானில் என்று அறிவிக்கப்பட்டது. அந்த நாட்டின் அதிபர் தம் ஆலோசகரை அனுப்பி வைத்து, எங்களை அழைத்தார். அடுத்த ஜுலையில் அந்த மகாநாடு நடைபெறும். அதன்பின் ஜப்பான், ஆஸ்திரேலியா, டென்மார்க், சிங்கப்பூர் நாடுகளில் நடக்க இருக்கின்றன.

இஸ்ரேலிய பூஹ ஸீன் கவிதைகளை ஹீப்ரு மொழியில் மொழி பெயர்க்க என்னிடம் அனுமதி பெற்றிருக்கிறார்.

செப்டம்பர் முதல் தேதியிலிருந்து 4 ஆம் தேதி வரை, நாங்கள் சைனா முழுவதும் பஸ்ஸில் சுற்றிவர ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மியூஸியத்தில், சீன பாஷையின் வளர்ச்சியை எழுத்து மூலம் அழகாக ஜோடித்திருக்கிறார்கள். அதன் பிரதி ஒன்றை இங்கே காண்கிறோம். ஏதோ ஒரு படம் போல் எல்லா எழுத்துகளும் காட்சி அளிக்கின்றன கற்றுக் கொள்வது கடினம்.



எங்களை ரொம்பவும் கவர்ந்தது, சூரிய - சந்திர ஏரி அதன் முன் ஹுவான் ஸ்வாங் கோயில் காட்சி அளிக்கிறது. 2500 ஆண்டுகளுக்கு முன், இந்தியா வந்த இந்த மேதை அன்றைய இந்தியாவில் நம் நிலைமையை எழுதியிருக்கிறார். அவர் உருவத்தைப் பார்த்துக் கொண்டே, அவரை நாங்கள் வணங்கினோம். மறக்க முடியாத மேதை அவர்.

இந்தியா திரும்பும் வழியில் சிங்கப்பூரில் மூன்று நாள்கள் நானும் சையதும் தங்கினோம். எங்களை அன்புடன் வரவேற்றார்கள், சேது பாஸ்கர் தம்பதி. சேது பாஸ்கர், வரும் விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதில் நிகரற்றவர். சிரித்த முகம். நிதானப் பேச்சு. உபசரிக்கும் ஆர்வம். இவ்வுலகில், இப்படி மற்றொரு அரிய தம்பதியைக் காண்பது மிகவும் அபூர்வம்.


ஊரைச் சுற்றிப் பார்க்க தன் காரை எங்களிடம் ஒப்படைத்தார்.

விமானத்தில் இந்தியா திரும்பும் போது எனக்கு ஏற்பட்ட ஆச்சரியமான சம்பவங்களை நினைத்து நினைத்துப் பூரிக்கிறேன். ஐம்பது ஆண்டுகளுக்குள் டெய்பே, ஹாங்காங், பாங்காக், சிங்கப்பூர் நகரங்கள் செல்வத்தின் சிகரத்தையே அடைந்துவிட்டன. ஓயாத உழைப்பு, தேக்கமே இல்லாத பொருளாதார ஓட்டம், உள்ளத்தில் வைர உறுதி, கதவடைப்பே இல்லாத நாள்கள் - இவையே இந்த அபூர்வ முன்னேற்றத்திற்கு உதவிய தாரக மந்திரங்கள்.

இந்தியா இவர்களைப் பின்பற்றி அடுத்த நூற்றாண்டிலாவது இவர்கள் வரிசையில் சேருமா?

ஃ.

திருமலை வையாவூர்



இந்திய புண்ணியத் தாயின் மடியில் எண்ணற்ற ஞானிகள் அவதாரம் செய்து மக்களுக்கு அருள்பாலித்து இருக்கிறார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் தமிழகத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி எண்ணிலடங்கா அருட்பாடல்களை அருளிச் செய்து அதன் மூலம் பக்தி மார்க்கத்தைப் பரப்பியும், ஆலயங்களை நிர்மாணம் செய்தும் வருகிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய இராமலிங்க சுவாமிகளும் 'வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபில் யான் ஒருவன்' என்று தன்னை அடையாளம் காட்டிக்கொண்டார். அந்த மரபின் வழிவந்தவர்தான் கோவிந்த உபாஸகர் தவத்திரு சீதாராம சுவாமிகள்.

தவத்திரு சீதாராம சுவாமிகள் நுங்கம்பாக்கம், பஞ்சா நகரில் ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதனம் என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலம் தம்மைத் தேடிவரும் பக்தர்களின் குறைகளை தாயுள்ளம் கொண்டு கேட்டு பரிகாரம் கண்டு வருகிறார்.

காஞ்சி பரமாசாரிய சுவாமிகளால் 'பகவான்' என்ற அருளாசி பெற்ற ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் பழம் பெருமை வாய்ந்த, தமிழகத்தின் தென் திருப்பதி என்று அழைக்கப்படும், செங்கை மாவட்டம் வேடந்தாங்கல் அருகாமையில் உள்ள திருமலைவையாவூரில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் சந்நிதியில் எண்ணிலடங்காத திருப்பணிகளைச் செய்திருக்கிறார்.

கடந்த 20 வருடங்களுக்கு முன் புதர் மண்டி, வழிபாடு அற்றுக் கிடந்த இந்த ஆலயத்தை பகவான் ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் பெருமாளின் வழிகாட்டுதலின்



தெய்விகத் தம்பதியர்

பேரில் புனருத்தாரணம் செய்தார். சுமார் 12 லட்சம் ரூபாய் செலவில் மலையின் அடிவாரத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு வீர ஆஞ்சநேயர் சன்னிதியை சீரமைத்திருக்கிறார். அதேபோல அருள்மிகு சுதர்சன ஆழ்வார் சன்னிதியை 40 லட்சம் ரூபாய் செலவில் கருங்கற்களைக் கொண்டு கட்டிக்கொண்டு வருகிறார். இந்த ஆலயத்தின் திருப்பணி நிறைவு பெற்று இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. மலைமேல் வாகனங்கள் செல்ல சாலை அமைத்திருக்கிறார். தடைபட்ட உற்சவங்களை தொடர்ந்து தொய்வின்றி நடத்தி வருகிறார். இதன் காரணமாக இந்த ஆலயம் கடந்த 15 வருடங்களாக மக்களிடையே பிரபலம் அடைந்து இருக்கிறது.

அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப் பெருமாள் சன்னிதி, மற்றும் இதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஒரு கோடி ரூபாய்க்கான திட்டங்களை வகுத்து செயல்பட இருக்கிறார். இதன் காரணமாக பள்ளிக்கூடங்களை நிறுவுதல், இலவச மருத்துவமனை அமைத்தல் போன்ற சமூகநலப் பணிகளை பகவான் ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் மேற்கொண்டு செயலாற்றத் திட்டங்களை வகுத்திருக்கிறார்.

பகவான் ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் கடந்த 18 ஆண்டுகளாக 2 குடைகளுடன் திருமலைவையாவூர் திருத்திலத்திற்குப் பாத யாத்திரை மேற்கொண்டு குடைகளை பெருமான் சன்னிதியில் சமர்ப்பித்து வருகிறார். கடந்த ஆண்டும் சுவாமிகள் சுமார் 8 லட்சம் ரூபாய் செலவில் திருத்தேர் செய்து இரண்டு குடைகளுடன் திருமலை வையாவூர் சன்னிதிக்கு வழங்கி இருக்கிறார்.

அதேபோல இந்த வருடம் 19 ஆவது ஆண்டாக பகவான் ஸ்ரீமத் சீதாராம சுவாமிகள் அருட்தலைமையில் இரண்டு குடைகளுடன் பாத யாத்திரை கிண்டி, பல்லாவரம், தாம்பரம், கூடுவாஞ்சேரி, சிங்கப்பெருமாள் கோயில், செங்கற்பட்டு புக்கத்துரை ஆகிய ஊர்களில் ஆங்காங்கு தங்கி, 1.10.94 புரட்டாசி மூன்றாவது சனிக்கிழமை மாலை நேரத்தில் தென் திருப்பதியாம் திருமலை வையாவூர் அடைந்தது. வழிநெடுக மக்கள் பாத யாத்திரையை வரவேற்று உபசரித்து உவகை கொண்டு பாராட்டிப் போற்றினர்.

ஆதிசேஷனே மலையாகத் திகழ, அதன் மீது பிரசன்னமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் சன்னிதியில் ஸ்ரீமத் சுவாமிகள் அந்த இரண்டு திருக்குடைகளையும் அந்தக் கோயிலுக்காகத் திருக்கோயில் நிர்வாக அதிகாரியிடம் சமர்ப்பித்தார்கள்.

தூய மஞ்சளாடையும், தாயினுமினிய அன்பும், நேயமிக்க உரையும் மாயவனின் திருமந்திரங்களும் கொண்டு தர்ம பத்தினியுடன் நடந்து வந்த ஸ்ரீமத் சுவாமிகளின் திருப்பாதங்கள் திருமலைவையாவூர் புனித மண்ணில் பொருந்தியபோது, சூழ்ந்திருக்கும் பக்த கோடிகள், ஊர் மக்கள் அனைவரும் ஆனந்த பரவசம் கொண்டு அன்பு மழை பொழிந்தனர்.

தெய்விகத் தம்பதியரின் திருப்பாதங்களுக்கு பக்தி சிரத்தையுடன் பூஜை புரிந்தனர். இவ்வண்ணம் ஆங்காங்கே நடைபெற்ற பாத பூஜையை பவித்ரமுடன் சுவாமிகள் ஏற்று அனைவருக்கும் ஆசிகள் அருளினார்.

ஸ்ரீமத் சுவாமிகளையும், அவர் திருப்பத்தினியையும் தரிசித்த மக்கள் திருமலை வையாவூரிலே பெருமாளும் தாயாருமாகவே இவர்கள் எழுந்தருளியிருக்கின்றனர் என்று ஆனந்த பரவசம் கொண்டு களித்திருந்தனர்.

'அமுதசுரபி' தீபாவளி மலரில் தெய்விகத் தம்பதியரின் வண்ணப் படத்தை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

– சியாமளா

போலோ — ஒரு ராஜ விளையாட்டு!

❑ போலோ விளையாட்டு பிரிட்டிஷார் ஆட்சி அமைத்து வழங்கிய ராஜ விளையாட்டு. ஜெய்ப்பூர் மகாராஜா போலோ விளையாட்டுக்கு மிகுந்த ஆதரவு கொடுத்தார். 1960 ஆம் ஆண்டு ராணி எலிஸபெத் இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது அவரோடு எடின்பரோ கோமகன் பிலிப்பும் வந்திருந்தார். பிலிப் கோமகனுக்கு மரியாதை காட்டும் பொருட்டு ஜெய்ப்பூர் மன்னர் போலோ பந்தயத்துக்கு ஏற்பாடு செய்திருந்தாராம்!

❑ சென்னையில் ஹரண்ட் கிளப் போலோ ஆட்டத்துக்காகத் தொடங்கப்பட்டு, புச்சிபாபுவின் பேரர் எம்.வி. வெங்கட்ட ராமானுஜலு (பப்) அதனை 'ரைடிங் கிளப்' ஆக்கிப் போலோவுக்கு வழிவகுத்தார்.

1961 ஆம் வருடம்தான் சென்னை போலோ, ரைடிங் கிளப் உருவாக்கப்பட்டு போலோ ஆட்டத்துக்குப் புரவலர்களாக எம்.ஏ.எம். ராமசாமி, ஏ.சி.முத்தையா, எம்.வி. பிரகாஷ் அமைந்தனர்.

1968 ஆம் ஆண்டு ஓ.டி.ஏ. என்ற ராணுவ அதிகாரிகள் அகடமியும் போலோ ரைடிங் கிளப்புடன் சேர்ந்து அதன் வளர்ச்சிக்கு உதவின. அந்தக் காலத்தில் பிரிகேடியர் நம்பியார் போலோவுக்கு மிகுந்த ஊக்கம் தந்தார். ஜெனரல் குமாரமங்கலமும் அந்தக் காலத்தில் தலைசிறந்த போலோ விளையாட்டுக்காரராகத் திகழ்ந்தார்!

மேக் போலோ கிளப்பை நிர்வகித்து நடத்துபவர் அஸ்வின் முத்தையா. இவர் பன்னிரண்டு வயதிலேயே போலோ ஆட்டத்தைக் கற்றுத் தேர்ந்தவர்! இவரது தந்தை ஏ.சி. முத்தையாவும் போலோ ஆட்டத்தில் விற்பன்னர்! அஸ்வின் முத்தையா இன்று இந்திய போலோ கழகத்தின் ஸ்டேவர்ட். இன்று சென்னையில் நடைபெறும் போலோ பந்தயங்கள் சிறப்பாக நடைபெறுவதற்கு ஆதார சுருதி இவர்தான்!

புரவலர் புச்சிபாபுவின் வம்சத்தில் வந்த புச்சி பிரகாஷ்தான் தமிழகப் போலோ கழகத்தின் பொருளாளர்! அஸ்வின் முத்தையாவைப் பற்றிக் கேட்டபோது, "இன்று அஸ்வின் முத்தையா சென்னையில் நடக்கும் போலோ பந்தயங்களை வெகு சிறப்பாக நிர்வகித்து நடத்தி வருகிறார். தமது வர்த்தகம், கடுமையான பணிகளுக்கு நடுவே விளையாட்டுப் பந்தயங்களுக்கும் நேரம் ஒதுக்கிப் பாடுபடுவது போலோவின் அதிர்ஷ்டம்" என்றார். "சென்னையில் நடக்கும் போலோ பந்தயங்களை நடத்துவதற்கு ரூபாய் 6 லட்சம் செலவாகலாம்" என்றார் புச்சி பிரகாஷ். ரேஸ் கிளப் உதவியின்றி அனைத்து நிதிகளையும் திரட்டி போலோ பந்தயங்களைச் சிறப்பாக நடத்துவது பாராட்டுக்குரிய அம்சம்!

❑ போலோ விளையாட்டு ஒரு குழுவுக்கு நான்கு குதிரை வீரர்கள் வீதம் இரு குழுக்கள் 4 சக்கர்கள் போட்டியிடும். ஒரு சக்கருக்கு ஏழு நிமிட ஆட்டம்தான்! குதிரைகளில் அமர்ந்தபடியே இரு நடுவர்கள் ஆட்டத்தை நிர்வகிப்பர். மைதானத்துக்கு வெளியே ஒரு நடுவர் அமர்ந்து சந்தேகத்துக்கிடமான விஷயத்தில் தீர்ப்பினைத் தருவார்! குதிரைகளைத் திறமைசாலி போலோ ஆட்டக்காரர்கள் படு வேகமாக ஓட்டிச் சென்று, பந்தையும் தட்டிச் சென்று கோலுக்குள் போடுவது பார்க்கக் கண்கொள்ளாக் காட்சி. ஒரு தடவை பரங்கிமலையிலுள்ள மொஹரித் ஸ்டேடியத்துக்குள் நுழைந்து போலோ ஆட்டத்தைப் பார்த்தால், அதன் மகிமையில் சொக்கிப் போய்விடுவீர்கள்! போலோ ஒரு ராஜ விளையாட்டு!




அதிக அளவு நிர்வாக வேலைகளுக்கு நடுவே மேக் குழுவின் காப்டன் அஸ்வின் முத்தையா ஓ.டி.ஏ. கோப்பைப் பந்தயத்திலும் ஒருவராய் தங்கக் கோப்பைப் பந்தயத்திலும் ரன்னர் கோப்பைகள் பெற்றிருப்பது பாராட்டுக்குரியது!

"ஜனாதிபதி கோப்பை, கோலங்கா கோப்பைப் பந்தயங்களில் இன்னும் சிறப்பாக ஆடி எங்கள் மாக் குழுவின் பெருமையை உயர்த்துவேன்!" என்று நம்பிக்கையுடன் பேட்டியில் சொன்னார் அஸ்வின் முத்தையா.

"அந்தக் காலத்தில் மேஜர் வி.பி. சிங்கும் ஜெய்ப்பூர் மகாராஜா பிரேம் சிங்கும் சென்னை போலோ ஆட்டக்காரர்களுக்கு வேண்டிய பயிற்சி அளித்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த பயிற்சியினால் சென்னை போலோ குழுவினர் பம்பாயில் 1969 இல் ராணுவக் குழுவினரையே வென்றிருக்கிறார்கள்" என்றார் இன்றைய போலோ ஆட்டக்காரர் புச்சி பிரகாஷ். இவர் சிங்கப்பூர், அமெரிக்கா, மலேஷியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கும் சென்று போலோ பந்தயங்களில் பங்கேற்றுள்ளார், புச்சிபாபுவின் வம்ச வாரிசு!

—குண்டுமணி





ஸ்ரீ சனீஸ்வர பகவான் கோயில்
ஸ்ரீ தர்பராண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
திருநள்ளாறு

(காரைக்கால் பகுதி - பாண்டிச்சேரி - யூனியன் பிரதேசம்)

ஒரு வேண்டுகோள்

ஏழாம் நூற்றாண்டு திருக்கோயிலான ஸ்ரீசனீஸ்வர கடவுள் ஆலயம் காரைக்காலில் உள்ள திருநள்ளாற்றில் அமைந்துள்ளது. இதன் வடக்கே சிதம்பரம் (55 கி.மீ) தரங்கம்பாடி (12 கி.மீ) மேற்கே தஞ்சாவூர் (100 கி.மீ.) கும்பகோணம் (60 கி.மீ.) தெற்கே வேளாங்கன்னி (35 கி.மீ.) நாகூர் (20 கி.மீ.) அமைந்துள்ளன. இந்தத் தனிசிறப்புமிக்க கோயில் ஸ்ரீசனி பகவானுக்கு என்று அமைக்கப்பட்ட ஒரே கோயிலாகும். உலகில் எவ்விடத்திலும் திரு சனிபகவானுக்கு திருக்கோயில் இல்லை. இங்கு சனிபகவான் அருளாசி வழங்கி வரமளிக்கும் கடவுளாக அமைந்துள்ளார். யாரெல்லாம் இத் திருக்கோயிலுக்கு வந்து ஸ்ரீசனிபகவானை வணங்கி தங்கள் குறைகளை நீக்க வேண்டி முறையிடுகிறார்களோ அவர்கள் குறைகளை நீக்கி மகிழ்ச்சியான நலமான வாழ்வு வாழ அருளாசி வழங்குகிறார்.இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை சனிபகவான் ஒரு ராசியிலிருது மற்றொரு ராசிக்கு மாறும்பொழுது சனிப் பெயர்ச்சித் திருவிழா நடைபெறும். அக் காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் இங்கு வந்து இவ் விழாவில் கலந்து கொண்டு சனி பகவானை வணங்கிச் செல்கிறார்கள். கடந்த 11.2.94 அன்று மகர ராசியிலிருந்து கும்பராசிக்கு சனி பகவான் மாறியபோது சுமார் பத்து லட்சம் பக்தர்கள் இங்கு வந்து சனி பகவானையும் தர்பராண்யேஸ்வர சுவாமியையும் வணங்கி அவர்களின் அருளுக்குப் பாத்திர மாகியுள்ளார்கள். ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான பக்தர்களும், சுற்றுலா பயணிகளும் இத்திருக்கோயிலுக்கு வந்து செல்கின்றனர்.

சனீஸ்வர பகவான் கோயில் தேவஸ்தானம் இக் கோயிலையும் புண்ணிய நளகுளத்தையும் பழுதுபார்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். ராஜஸ்தானிலுள்ள மக்ராணாவிலிருந்து தருவிக்கப்பட்ட சலவைக்கற்கள் திருக்கோயில் நடையில் பொருத்தப்பட்டு அழகு செய்யப்பட்டுள்ளது. ஏழு அடுக்கு கோபுரம் கட்டும் பணியும் தொடங்கப்பட்டுள்ளது. இது இன்னும் ஒரு வருட காலத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு வரும் பக்தர்கள் திருத்தலப்பயணம் செய்பவர்களுடைய வசதிக்காக இலவச தங்கும் விடுதிகளும், பயண விடுதிகளும் கோயிலின் அருகாமையிலேயே கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

பக்தர்கள் மேற்குறிப்பிட்டுள்ள புண்ணிய கைங்கர்யத்திற்கு தங்களால் ஆன நிதி உதவியை அளிக்கக் கோரப்படுகிறார்கள். தங்களுடைய நன்கொடைகளை காசோலையாகவோ, டிமாண்ட் டிராப்டாகவோ எக்ஸிகியூடிவ் ஆபிசர் (கோயில்கள்) ஸ்ரீதர்பராண்யேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருள்ளாறு - 609607 பாண்டிச்சேரி மாநிலம் என்ற முகவரிக்கு அனுப்பி ஸ்ரீதர்பராண்யேஸ்வர சுவாமியின் (சிவக்கடவுள்) அருளுக்கும் ஸ்ரீசனிபகவான் அருளுக்கும் பாத்திரமாகி வாழ்வாங்கு வாழ வேண்டுகிறோம்.

நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் 80G1 961(4) இன்கீழ் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ரத்தன் சிங்

தனி அதிகாரி

ஸ்ரீதர்பராண்யேஸ்வரசுவாமி தேவஸ்தானம்

திருநள்ளாறு - காரைக்கால்



கண்ணீர் விட்டோ வளர்த்தோம்?

எல்லையற்ற துன்பங்களை ஏற்று, அரும்பாடுபட்டுத் தாம் சுதந்தரம் வாங்கித் தந்த பிறகு பாரதம் இன்று எப்படி உள்ளது எனப் பார்வையிட வந்தால் அண்ணல் காந்தியடிகள் எப்படியெல்லாம் நெஞ்சம் புண்பட்டு வருந்துவார் என்கிற அழகிய கற்பனை.

திலகவதி

"தம்பி! நீங்கதான் அமர்சிம்ங்கறவரா?"

வாயிலிருந்த சிகரெட்டை ஆழமாக உறிஞ்சியபடி கேள்வி கேட்டவரைத் திரும்பிப் பார்த்தான் அமர்.

பொக்கைவாய்க் கிழவர்; வழுக்கைத் தலை.

இடுப்பில் தார்ப் பாய்ச்சிக் கட்டிய நாலுமுழம் கதர்த்துணி. மூக்குக் கண்ணாடி. முகத்தோடு ஒட்டாமல் துருத்திக்கொண்டிருக்கிற காதுமடல். நீண்டமூக்கு, வெள்ளைக்காராமணி நிறம். நீண்டு மெலிந்த கைகள்.

அமர் சிகரெட் துண்டைக் கீழே எறிந்து ஷூவால் மிதித்தான்.

அந்தப் பெரியவரை இதற்கு முன் எங்கோ பார்த்த மாதிரி இருந்தது அவனுக்கு.

"நீங்கதானே ரோஜாக்கட்சியோட இளைஞரணித் தலைவர்?"

அட! பொல்லாத கிழவராயிருக்கிறாரே!

"உங்களுக்கு எப்படித் தெரியும்...?"

கிழவர் சிரித்தார். மோகனமான புன்னகை. "தெரிஞ்சு கிட்டுதானே வர்றேன்? உங்கப்பா பேரு சிதம்பரம். உங்க தாத்தா பேரு மகாதேவன். அவரு அந்தநாள் சுதந்திரப் போராட்ட வீரர். அந்தக் காலத்துல மகாதேவனுக்குக் கொஞ்சம் காந்தி பைத்தியம்கூட இருந்திச்சு. உங்க வீடு அம்பத்தூர்ல இருக்கு. அதனால தானே நீங்ககூட அம்பை அமர்சிம்னு பேரு வச்சிகிட்டிருக்கீங்க?"

யார் இந்தக் கிழவர்? ஜோஸ்யரா, யக்ஷரா? சித்தரா?

"நீங்க தாத்தாவோட சிநேகிதரா?"

"அப்படியும் வச்சுக்கலாம்." என்று கிழவர் மறுபடியும் தன் பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தார்.

அவர்கள் நின்றுகொண்டிருந்த பஸ் நிறுத்தத்துக்கு எதிரே இருந்த பெரிய சினிமா போஸ்டரில் அரை நிர்வாணமாக நின்று கொண்டிருந்த பெண்ணைக் கண்டு முகம் திருப்பிக் கொண்டார். "அகிம்சையின் அவதாரமாக இருக்கவேண்டிய இந்தச் சகோதரி ஏன் இவ்வாறு மிருக இச்சைக்குத் தூண்டுகோலாகப் பயன்

படுத்தப்பட்டிருக்கிறார்... இதை யெல்லாம் உங்கள் இயக்கம் எதிர்ப்ப தில்லையா?"

அமர்சிம் அவரை மேலும் கீழும் பார்த்தான். "உங்களை நான் தாத் தான்னு கூப்பிடலாமா?" என்றான்.

"தாராளமாக் கூப்பிடுங்க. நான் எல்லாருக்குமே தாத்தாதானே?" என்றார் கிழவர்.

"தாத்தா..! அவங்களை யாரும் கட்டாயப்படுத்தி இப்படிப் போஸ் கொடுக்கச் சொல்லலை. உண்மை யைச் சொன்னா அவங்க இப்படி யொரு சந்தர்ப்பத்தைத் தேடிப் பிடிச்சு, கிடைச்சாப் போதும்னு கெஞ்சிக் கேட்டு சான்ஸ் வாங்கி யிருப்பாங்க. இதுல இவங்களுக்கு நடுவே போட்டி வேற. என்னன்னு தெரியுமா? யார் ரொம்பக் குறைஞ்ச துணிங்களை உபயோகிக்கறதுன்னு. இவங்களைப் போய் நாங்க என்ன எதிர்க்கறது? இவங்கள மாதிரி ஆளுங்கள வச்சுத்தான் நாங்களே கட்சிக்குக் கூட்டம் சேர்க்கறோம்..."

"கூட்டம்... சேர்க்கறதா?" பெரியவர் ஆச்சரியப்பட்டார்.

"வேற என்னவாம்? ஜனநாய கம்னா என்ன நெனச்சிகிட்டீங்க..."

"ஜனநாயகம்னா என்னாங்க?"

இதுகூடத் தெரியலையா என்பது போல அமர்சிம் அவரை உற்றுப் பார்த்தான். ஒரு வேளை கிண்டலா?

"நம்பகட்சிக்குப் பின்னால நிறைய கூட்டம் இருக்கணும். எதிர்க்கட்சிக் காரன் பின்னால இருக்கறதைவிட அதிகமான கூட்டம் இருக்கணும். அப்பதான் நாம்ப எலெக்ஷன்ல அதிக ஒட்டு வாங்கி ஆட்சியைப் பிடிக்க முடியும். மக்களைக் கவர இது மாதிரி சினிமா ஸ்டாருங்க ரொம்பத் தேவை. எங்க தலைவ ராவது பரவாயில்லை, பேரு வாங்கின ஸ்டாருங்கள இழுக்கறாரு. எதிர்க்கட்சிக்காரங்க ஒரேயொரு டி.வி. டிராமாவுல தலையைக் காட்ன சோட்டா பசங்களைக்கூட பிடிச்சுப் போடறாங்க..."

பெரியவர் உன்னிப்பாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இப்ப நான் எதுக்கு இந்த வேகாத வெயில்லே இங்க வந்து நின்னு கிட்டிருக்கிறேன்? இரும்பு நெஞ்சன் இமயவரம்பனைச் சந்திக்கறதுக் காகத்தான். வர்ற வாரம் எங்க தலைவரோட ஐம்பத்தி நாலாவது பொறந்த நாளை இளைஞரணி சார்பில கொண்டாடறோம். போன ஆகஸ்டுலேயே தொடங்கி ஒவ்வொரு மாவட்டத்துலயும் நம்ப கட்சியைச் சேர்ந்த பல கிளை அமைப்பு களும் தலைவரோட பொறந்தநாளை ஜமாய்ச்சுட்டாங்க. இந்த மகளிர் அணிக்காரங்க தாளிச்ச தாளிப் பிருக்குதே. அடேயப்பா... அதை விடப் பிரமாதமா நம்ப செஞ்சு காட்டணும். அதுக்குத்தான் இரும்பு நெஞ்சன் ஏற்பாடு..."

பெரியவருக்கு ஒன்றும் புரிய வில்லை. ஒரு மாதிரியாக விழித்த அவரைக் கண்டு காரணம் அறியாத வனாக அமர் "என்ன தாத்தா? தலை யைக் கிலையைச் சுத்துதா? அப் படிப் போய் உட்காரலாமா?" எதிரி லிருந்த கடையைக் காட்டினான். 'அருட்பிரகாச வள்ளலார் ஒயின்ஸ்' என்று அட்டகாசமாகப் போர்டு தொங்க, பல வர்ணத் திரவங்கள் அழகிய கண்ணாடி பாட்டில்களில் முறையாக அடுக்கப்பட்டிருந்தன.

"வாங்க... எங்கப்பாவோட கடை தான்..."

"ஆ... இப்பத்தாம்ப்பா தலை நெஜமா சுத்துது. மகாதேவன் பையனா மதுவகைகளை விக்கறது?" பெரியவர் தலையில் அடித்துக் கொண்டார்.

"சரி... வாங்க காப்பி குடிச்சுகிட்டே பேசலாம்..."

"வேணாம். காப்பி... டீ... எல்லாம் லாகிரி வஸ்துக்கள்தானே?"

"சரியாப்போச்சு. அப்ப என் னத்தைத்தான் குடிக்கிறது?"

"இளநீர், பதநீர், பழச்சாறுகள், பால், சாப்பிடலாமே! அதிலும் வெள்ளாட்டுப்பால் கெடைச்சா நான் கூட குடிப்பேன்"

"சரி... வாங்க... உங்களுக்குப் பழச்சாறே வாங்கித் தர்றேன்" இரு வரும் கடைக்குள் நுழைந்தார்கள். கல்லாவுக்குப் பின்னிருந்த இளைஞர் அமருக்குப் பணிவாக வணக்கம் சொன்னார். காலியாக இருந்த மேஜையைப் பார்த்து அமர்ந்தார்கள்.

"இரண்டு ஆரஞ்சு ப்ரஷ் ஜூஸ்" என்று ஆர்டர் கொடுத்துவிட்டு, "தாத்தா! வேற எதாவது சாப்பிட றீங்களா?" என்று கேட்டான் அவன்.

"வேர்க்கடலை கெடைக்குமா?"

அமர், எதுவும் சொல்வதற்குள் சர்வர் முந்திக்கொண்டு "அது பட் டாணிக் கடையிலதான் இருக்கும்" என்றான் கிண்டலாக. பெரியவரிடம் இனிமேல் பிறர் முன்னிலையில் பேசக் கூடாது என்று முடிவு செய்து கொண்டான் அமர். சர்வர், டேபிளை விட்டு நகர்ந்தான்.

"தாத்தா! உங்களைப் பத்தி எதுவுமே சொல்லலையே" என்றான்.

"சொல்றேன்... நீ மொதல்ல உன்னைப்பத்திச் சொல்லு. அம்பை அமர்சிம்னு பேர் வச்சிருக்கியே. அது என்ன அது. அப்படி ஒரு பெயர்?"

"அரசியல்லே இப்படி எதுகை மோனையா கவன்னாவுக்கு கவன்னா அவன்னாவுக்கு அவன்னா நாவன் னாவுக்கு நாவன்னான்னு பேரு வச்சிக்கறது ஒரு மாதிரி பழகிப் போயிடிச்சு... ஒரு சென்டிமெண்ட்... அதாவது ராசி...ன்னு வச்சுக்குங் களேன். இப்ப நம்ப இமயவரம்பன், இரும்பு நெஞ்சன்னு பட்டம் வ்ச்சுக் கலையா, அப்பிடிதான். அப்புறம் என்ன? அமர்நாத் சிதம்பரம்ங்கற பேரை இப்படி சுருக்கிட்டேன்" பெரியவர் வியப்போடு அவனைப் பார்த்தார். பட்டங்களை அவர்க ளாகவே வைத்துக் கொள்வார் களாமே...

"அப்புறம்?"

"அப்புறம் என்ன, பெரியப்பா மோகன்தாஸ் அமெரிக்காவிலேயே தங்கிட்டாரு. புள்ளைங்க டாலர்ல புரளுதுங்க. எங்க அண்ணன் அணு விஞ்ஞானியா அகில இந்தியப் புக ழோட இருக்கிறான். மாநிலத்தின் சாராய வியாபாரமே அப்பாவை மையமா வச்சுத்தான் சுத்துது. இவங் களுக்கு ஈடா நான் தலை எடுக் கணும். என்ன செய்யறதுன்னு யோசிச்சேன். கட்சியில காலை வைச் சேன். குறைஞ்ச பட்சம் எம்.எல்.ஏ., எம்.பி.; அதிக பட்சம் மந்திரி. இதான் என் கனவு..."

"ஓஹோ! அதை எப்படி அடையப் போற..."

"தாத்தா! இது ஒண்ணும் கஷ்ட மில்ல. கட்சியில முக்கிய புள்ளின்னு ஊர்ல காட்டணும். ஊர்ல முக்கிய புள்ளின்னு கட்சியில காட்டணும். ஒன்னு அரை வேலையை முடிச்சுக் காட்டி பண வசூல்லே எறங்கணும். பணம் வந்துடுச்சுன்னா கூட்டம், வேடிக்கை, வெடி, பந்தல், அலங் காரம் மஹாபோஸ்டர்னு ஒரு கலக்கு கலக்கி முக்கியஸ்தர்களைத் திரும்பிப் பார்க்க வச்சுடலாம். ஊர்வலம், பேரணி, தர்ணா எதுனா பேர்வச்சு நம்ப கையில எவ்வளவு ஆள்பலம் இருக்குதுன்னு ஒரு ஷோ காட்டிட லாம். சரி... அமர் ஒரு வோட் பேங்க்னு நெனச்சுக்குவாங்க. அப் படியே நம்பளுக்கு ஒரு முக்கியத் துவம் வந்துடும்".

"வோட்டுக்கு என்ன செய்வே?"

"நான் என்ன செய்வேன்? அதான் கட்சித் தலைமையிடத்துல இருந்தே தேர்தல் செலவுக்குன்னு பொட்டி பொட்டியா குடுத்துடுவாங்களே. அதுல வாக்காளருங்களை 'கவனிச் சுட்டா' போச்சு".

பெரியவர் வெகுவாக அதிர்ந்து போனார். ஒரு விதமாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு கேட்டார்.

"எதிர்க்கட்சிக்காரங்க சும்மா இருப்பாங்களா?"

"அவங்க மட்டும் என்ன யோக்கியமா? எங்க மேல வெரலை நீட்டினா அவங்க வெவகாரங்களை விலாவாரியா நாங்க புட்டு வச்சிடுவோமே! அவங்களுக்கும் நெளிவு சுளுவு தெரியும். மத்த விஷயங்களைப் பேசுவாங்க... தேர்தலன்னைக்கு இந்த விஷயத்திலே மட்டும் ரெண்டு பேருமே அப்படியே கமுக்கமா இருந்துடுவோம்..."

ஜூஸ் வந்தது.

"சரி... தாத்தா! நீங்க யாருன்னு சொல்லவேயில்லையே..."

ஏதோ பெருங்குற்றம் செய்துவிட்டதைப்போல தயங்கிய குரலில் "நான்தாம்ப்பா காந்தி... எம்.கே. காந்தி" என்றார் பெரியவர்.

"என்ன?" வெடித்துக் கிளம்பியது அமரின் குரல். பக்கத்து மேசையைச் சுத்தம் செய்து கொண்டிருந்த பையன் முதல் எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சத்தத்தைக் குறைத்துக் கொண்டு, ஆயினும் அதிர்ச்சி நீங்காதவனாக "யூ மீன் காந்தித் தாத்தா... மகாத்மா... தேசப்பிதா..."

காந்திஜி தலையை மேலும் தாழ்த்தி இன்னும் கொஞ்சம் குனிந்து கொண்டு, 'ஆம்' என்றார்.

"இது எப்படி சாத்தியம்? உங்களுக்கு எப்படி தமிழ் தெரியும்... எதுக்காக தமிழ்நாட்டுக்கு வந்தீங்க? அதிலும் என்னைத் தேடிப் பிடிச்சு..."

மேற்கொண்டு அவன் கேள்விகளை அடுக்காதபடி அவனைக் கையமர்த்தினார்.

"நானும் இப்ப அதை நெனச்சுதான் ஏன் வந்தேன்னு வேதனைப் படறேன். ம்... கோட்சே நன்றிக்குரியவர். நான் நூற்றிருபத்தைந்து வயசு வரை இருப்பேன்னு அந்தக் காலத்தில சொல்றதுண்டு. கடவுள் போன வாரம் சொர்க்கம் விசிட் வந்தப்ப, 'என்ன காந்திஜி! உங்களோட நூற்றி இருபத்தைந்தாவது பொறந்தநாளை பாரதம் கொண்டாடுது. நீர் என்னமோ அது வரை உயிரோட இருப்பேன்னீரே. இருந்திருந்தா எப்படியிருக்கும்னு ஒரு தடவை போய்ப் பார்த்துட்டுத்தான் வாருமே'ன்னார்.

பாரதத்திலே குறிப்பாக எங்கு போகலாம்னு யோசித்தேன். தமிழரும் தமிழ்நாடும் எப்பவுமே எனக்கு நெருக்கம். தென்னாப்பிரிக்காவில இருந்தப்பவே தமிழ் கத்துகிட்டு அப்புறம் அதை மத்தவங்களுக்கும் சொல்லித்தந்திருக்கேனே. அது ஒரு தைரியம். ஆங்கிலேய பாணி உடை, குஜராத்தி பாணி எல்லாத்தையும் உதறித்தள்ளிட்டு காந்தி பாணிங்கற இந்த நாலு முழ வேட்டி கட்டிக்கற முடிவைக்கூட உங்க மதுரையிலதான் எடுத்தேன். எல்லாம் போக நம்ப சம்பந்தி ஊராச்சே இது? எம் மகன் தேவதாஸ் உங்க ராஜாஜி மகள் லட்சுமியைக் கட்டிகிட்டதைத்தான் சொல்றேன்.

அதனால "தமிழ்நாட்டுப் பக்கமே போய்ப் பார்க்கிறேன்"னேன். "பேஷ்"ன்னார் கடவுள். அவரும் அப்படி ஒரு தடவை இங்கே வந்து கந்தசாமிப் பிள்ளைங்கறவரை சந்திச்சதையும் அதையும் ஒரு பொல்லாத எழுத்தாளன் புதுமைப்பித்தன்கறவர் கதையா எழுதிட்டதையும் சொல்லிச் சிரிச்சாரு. நான் தமிழ்நாடு வந்த கதை இதுதான். வர்றதுன்னு ஆன பிறகு நவகாளி கலவரத்தில் என் கூட இருந்த உங்க தாத்தாவைப் பத்தி நான் சொன்னதை வச்சு மிச்ச தகவலுங்களையும் சேகரிச்சாங்க. மொதல்ல உங்களை சந்திச்சா பயணத்தின் நோக்கத்தில் பாதி முடிஞ்சாப்பலன்னு நீங்க இருந்த எடத்துல என்னை இறக்கி விட்டுட்டுப் போயிட்டாங்க... நான் கொஞ்ச நாளைக்கு உங்க வீட்ல தான் இருக்கப் போறேன்".

→

மறந்து போன மனித நேயம்!

— எஸ். குமாரகிருஷ்ணன்

○ சின்னஞ்சிறிய சிட்டுக் குருவியும்
கண்ணப்பர்போல் வாயினில் கொத்திப்
பட்டுக் குஞ்சுகளின் பசிபோக்கிடும்!

○ ஆறறிவில்லாத அப்பாவிப் பூனையும்
பாவிமனிதன் பார்த்த பின்னே
ஐந்தாறு குட்டிகளை ஆறேழு இடம்மாற்றும்!

○ அருவருப்புப் பன்றிகள்கூட
அம்மாவாய் ஆனபின்னே
குட்டிகள் காத்திட உறுமிப்பார்க்கும்!

○ ஆனால் -
மனிதன்மட்டும் நேயம் மறந்து
பத்துமாதம் சுமந்து பெற்ற
பெண்சிசுவை மண்ணில் வீசுவதேனோ?

பயிர் விளையாக் கழனி

— புலவர் வீ. செ. கந்தசாமி

ஒழுக்கத்தை உயிர்மூச்சாய்க் கொண்டு வாழ்ந்தால்
உயர்வதற்கு வழியில்லை என்பா ருண்டு
இழுக்கத்தில் பெரும்பொருளைச் சேர்ப்பதேதான்
இவ்வுலக மாதர்களின் இலக்கு என்றால்
புழுக்களுக்கு மலக்குட்டை மகிழ்வளிக்கும்
பூவுலகில் மனிதர்களும் அவைபோல் தானோ
வழுக்காது வாழ்வாங்கு வாழ்வா ரன்றோ
வானுலகில் தெய்வமென வைக்கலாகும்.

தோகையிலா மயிலுக்குக் கவர்ச்சி யில்லை
தூய்மையிலாத் தேனுக்குச் சிறப்பு இல்லை
பாவையிலாக் கண்ணுக்குப் பார்வை யில்லை
பயிர் விளையாக் கழனியினால் பயனுமில்லை
நாவடக்க மில்லார்க்கு நலனுமில்லை
நல்லவர்கள் செயலிழந்தால் நன்மையில்லை
சேவையிலா வாழ்க்கையிலோர் நிறைவே இல்லை
செறிவான ஒழுக்கமிலார் மனித ரில்லை.

"இருங்க... ஆனா நீங்கதான் காந்திஜிங்கறது மத்தவங்களுக்குத் தெரிஞ்சா அதனால எங்களுக்குப் பிரச்னை வரலாம். அதனால நீங்களாக சொல்லாதிருக்கணும். ஆமா... அது எப்படி உங்களை எனக்கு அடையாளம் தெரியலை? பள்ளிக்கூடப் புத்தகங்களிலேயிருந்து சிலைங்க வரை எத்தனை இடங்களிலே பார்த்த முகம்... ம்..." அமர் மோவாயைச் சொறிந்து கொண்டான்.

"நாற்பத்தஞ்சு வருஷத்துக்கு மேலே சொர்க்கவாசம் ஆவுது பாருங்க. ஒரு வேளை அதனாலே இருக்கும். சரி..." காந்திஜி பேசி முடிப்பதற்குள்ளாகவே இமயவரம்பன் இவர்களைத் தேடிக் கொண்டு வந்தான்.

"மாப்ளே! யாரது புதுசாத் தாத்தாவைத் துணைக்கு இட்டாந்துக்கற?"

"ஆமா.... மாப்ளே! தாத்தாவை ஒரு பாதுகாப்புக்காக அழைச்சிட்டு வந்தேன்" அமரின் குரலில் எரிச்சல் தலை நீட்டியது.

"அட அதுக்கில்லப்பா. புதுசாருக்கேன்னு கேட்டேன்"

"நாப்பத்தஞ்சு வருஷத்துக்கு மேல ஆச்சு காணாமப் போயி. இப்ப எப்படியோ வழியைக் கண்டு பிடிச்சு வந்தாரு. இந்த ஊர்லயே அதிசயமான வஸ்து நீதானே, உன்னைக் காட்டலாமேன்னு அழைச்சிட்டு வந்தேன்".

"போ... மாப்ளே... தமாஷ் பண்றே..." என்று சற்று நெளிந்த இமயவரம்பன், "சரி, அத்த வுடு. ஒரு சந்தோஷமான நியூஸ் இருக்குது கேளு" என்று தொடங்கி, தாழ்ந்த குரலில் அமரிடம் அவன் விழா சார்பாக செய்திருக்கிற எல்லா ஏற்பாடுகளையும் சொன்னான். "நாம்ப எதிர்பார்த்ததுக்கு மேலே நெறையப் பணம் வசூலாயிடும் போலிருக்கு. பெரிய பெரிய ஆளுங்கள்ளாம் கதறிகிட்டு பணம்தர ஒத்துக்கிட்டாளுங்க. இதுவரையில தலைவருக்கு வெள்ளியிலதானே நினைவுப்பரிசு தந்திருக்காங்க? நாம்ப தங்கத்துல செஞ்சுடுவோம். நினைவுப் பரிசுக்குள்ளே தஞ்சாவூர் சித்திரபாணியிலே தலைவரு படம் வச்சு அவரு போட்டிருக்கிற வாட்ச், லைனர் செயின், மோதிரம் கூட எல்லாம் நிஜ அமிட்டேஷன்களாகவே பி.கே. ஜுவல்லரியிலே சொல்லி வாங்கிப் போட்டு. வேட்டி. சட்டை, மேல்துண்டு எல்லாம் புஷ்பராகம், கால் செருப்பு வெள்ளின்னு செஞ்சுடலாம்".

அமர் பரமானந்த வயப்பட்டான். "இமயவரம்பன்னா இமயவரம்பன் தான்".



அடியே! காபியில் இனிப்பு அதிகம், ஒரேயடியா திகட்டுது... எப்படி குடிக்கிறது..?

கொஞ்சம் சர்க்கரை கொண்டு வந்து தரேன், அதை வாயில் போட்டு சப்பி பிறகு குடிங்க... காபி இனிக்காது!

"கே.எஸ். நகர்லே ஒரு ஜாதிப் பூசல் இருக்குது. எதிர்க்கட்சிக்காரனுங்க நம்ப ஊர்வலத்துக்கு முன்னாடி அதைத் தூண்டி விட்டுடுவாங்கங்கறதால நான் முன்னேற்பாடா அந்தந்த ஜாதித்தலைவருங்க கிட்டேயும் சொல்லி சரி பண்ணி வச்சுடறேன். நிமிர்ந்து பார்த்தா கழுத்து வலிக்கற மாதிரி கட்-அவுட்- ஊர்வலத்துக்கு முன்னே போக ஐம்பத்து நாலு யானை, குதிரை, ஒட்டகம் எல்லாம் ஏற்பாடு செய்துட்டேன். காண்டாமிருகம், ஒட்டைச் சிவிங்கி, புலி, சிங்கம்லாம் சர்க்கஸ் கம்பெனியில வாடகைக்குக் கேட்டிருக்கேன். பெரிய நடிகர், நடிகைங்களையும் ஏற்பாடு செய்துட்டேன். கூட்டம் அள்ளிடும் பாரு. இது வரைக்கும் யாருமே பார்க்காத அளவுக்கு அலங்கார வளைவுங்க, பனைஉயரப் போஸ்டர், பேப்பர் விளம்பரம் எல்லாம் தயாராகிக்கிட்டிருக்குது. வேற எதுனா ஐடியா இருந்தா சொல்லு".

"வேற என்ன மாப்ளே சொல்றது? எத்தினியோ கட்சிக்குச் செய்யறவன். உன் அனுபவம் எனக்கு ஏது? வெறும் பிஸினஸ். கமிஷன்னு கூலிக்கு மாரடிக்காம ஒவ்வொண்ணையும் பாத்துப் பாத்து செஞ்சிருக்கியே... உனக்கு எப்பிடி நன்றி சொல்றதுன்னே தெரியல மாப்ளே.."

"அட! வுடு மாப்ளே... இலவசத்துக்கா செய்யறோம்? ஜெயிக்கிற குதிரைன்னு தெரிஞ்சு பணம் கட்றோம். நீ வேணா பாரு இந்த விழாவுக்கப்புறம் எங்கியோ போயிடுவே. அப்ப இந்த இமயனை மறக்காமலிருந்தா சரி..."

இமயவரம்பன் புறப்பட்டுப் போனான். அமர் ஜுஸுக்குப் பணம் கொடுத்தான். காந்திஜி அதிக சோகம் தாங்கி வார்த்தைகளற்று உட்கார்ந்திருந்தார்.

"தாத்தா... தாத்தா! என்ன பலமான யோசனை?"

"ம்... அம்பேத்கர், அன்னி பெசண்ட்லாம் சொன்னது சரியோன்னு இப்பத் தோணுது" மெல்ல முனகிக் கொண்டார். "தங்கத்தாலே நினைவுப் பரிசுன்னீங்களே. அது அப்புறம் என்ன ஆகும்?"

"தாத்தா! அதை நல்லபடியாக செஞ்சு தரணுமேங்கறதுதான் என் கவலை... அதுக்கப்புறம் அது என்ன ஆனா என்ன...?"

"தென்னாப்பிரிக்காவிலே இருந்து புறப்பட்டு நான் இந்தியா வந்தப்ப எனக்குத் தந்த பரிசுகளையெல்லாம் ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தி அதை மக்கள் நலத்துக்கு உபயோகப்படுத்தும்படி சொன்னேன். என் பையனுங்க மணிலாலும் ஹரிலாலும் அப்ப ரொம்பச் சின்னவங்க. அவங்களுக்குக் கொடுத்த பரிசுங்களைக்கூட அவங்க டிரஸ்டுக்குக் குடுத்துட்டாங்க. என் மனைவி கஸ்தூரிபாதான் அவங்களுக்குக் கொடுத்த வைரநெக்லசைத் தர முடியாதுன்னு தகராறு செய்தாங்க. தனக்காக இல்லேன்னாலும் தனக்கு வரப்போற மருமகளுக்காவது வேணும்னு வாதாடி ஒரே சண்டை. கடைசியில அதையும் டிரஸ்ட்ல ஒப்படைச்சுட்டுத்தான் வந்தோம். அதை நெனச்சுக்கிட்டேன்" காந்திஜி பழைய வற்றை நினைவு கூர்ந்தார்.

"ஏன்... ஏதாவது ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் பிராப்ளமா?"

"இல்லையப்பா... பொதுமக்களின் நன்மைக்குப் பாடுபடறதுக்குன்னுதான் அரசியலுக்கு வர்றோம். அது ஓர் உத்யோகமோ, தொழிலோ, வியாபாரமோ இல்லை. பொதுமக்கள் பணம் பொதுமக்களையே போய்ச் சேரணும்ங்கற கொள்கை. ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் பிரச்னையில்ல. இந்தியாவிலேயே இருக்கறப்பவும் அப்படிதான். பூகம்ப நிவாரணம், அகதிகள் நிவாரணம்ன்னு அப்பப்ப நிதி வசூலிக்க மக்களிடம் போவேன். வாங்கிய நிதியை ரொம்ப அழகான வெள்ளிப் பெட்டியில் வச்சுத் தருவாங்க, அதுக்காக விழா அமைப்பாளர்களை நான் கடிஞ்சுகிட்டதுண்டு. அந்தப் பெட்டியையும் ஏலம் போட்டு அந்தப் பணத்தையும் நிதியிலே சேர்த்துடுவேன். என்னால் முடிஞ்சது அவ்வளவுதான். மோதிலால், சொந்த வீட்டையே கொடுத்தாரு. உங்க சிதம்பரம்பிள்ளை பூர்வீக சொத்தையே வெள்ளையரோடு மோதி அழிச்சாரு. அவரு படிச்சு வாங்கின பட்டத்தைக்கூட வெள்ளைக்காரநுங்க கான்சல் செய்

தாங்க. வக்கீல் தொழிலும் பார்க்க முடியலே. சொத்தும் போயிடிச்சு... இப்படி எத்தனையோ பேர்... விவரம் தெரியாத பத்து வயசுப் பொண்ணு பார்த்வான்லே கையில போட்டிருந்த அத்தனை வளையலையும் கழட்டி நிதிக்குக் கொடுத்துடுச்சு... அப்படி சின்னப் பிள்ளைகளிலேயிருந்து தொண்டுக் கிழவர்வரை ஒண்ணா யிருந்து ரத்தம் சிந்தி, உயிர் கொடுத்து வாங்கினதப்பா இந்த சுதந்திரம். ஏதோ கடையில போய் ரூபாய் நோட்டைத் தந்து பிஸ்கட் வாங்கினாப்பலே காந்தி சுதந்திரம் வாங்கித்தந்தார்னு சொல்றதுல அர்த்தமில்லே. கோபுரத்தை பொம்மையா தாங்குது?"

பர்த்வானில் பத்துவயதுப் பெண்ணிடம் அவர் வளையல்கள் வாங்கியதையும், அந்த நாளில் காந்திஜி நடத்திய கூட்டங்களுக்கு வந்த பெண்கள் அணிந்திருந்த நகைகளையெல்லாம் அப்படியே நிதிக்காகக் கழற்றித் தந்ததையும் தாத்தா பல தடவை அவனுக்குச் சொல்லியிருக்கிறார். நிதி திரட்டுவதற்காக மட்டுமல்ல, பெண்கள் நடமாடும் நகைக்கடைகளாக ஏராளமான தங்க நகைகளைப் பூட்டிக் கொள்வதும், மூக்கைத் துளைக்கும் வாசனைத் திரவியங்களைப் பூசிக்கொள்ளுவதும், கண்ணை உறுத்தும் சரிகைப் பட்டாடைகளை அணிந்து கொள்வதும் அவர்களுடைய கௌரவத்தைக் குலைப்பதாகும் என்று காந்திஜி சொல்வாராம்.

"சரி தாத்தா! ஓர் ஆட்டோவைப் புடிச்சு வீட்டுக்குப் போலாமா...?".

"ஆட்டோவா? அது எதுக்கு வீண் செலவு? நடந்தே போயிடலாம்"

"நடந்து போற தூரமில்ல தாத்தா! ரொம்பத் தள்ளியிருக்குது வீடு..."

"சரி... அப்ப ரயில்லே தேர்ட் கிளாஸ் டிக்கட் எடுங்க. போகலாம்..."

"ரயில்லே மூணாங் கிளாஸ் கிடையாது. ரெண்டாங் கிளாஸ்தான். அதுக்கும் ரயில் சௌகர்யம் நம்ப வீட்டுக்கு இல்ல... வாங்க ஆட்டோவுல போலாம்..."

"இருங்க... இந்த நாட்டின் ஏழைக் குடிமகன் எப்படிப் பயணம் செய்வான் சொல்லுங்க. மக்கள் தலைவர்களும், மக்கள் பிரதிநிதிகளும் பெரும்பான்மை மக்களின், கடைசிக் குடிமகனின் வாழ்க்கை முறையைத்தான் பின்பற்றணும்னு நெனைக்கிறேன். அதனாலேதான் இந்தியாவுக்குள்ளே பயணம் செய்ய நான் விமானத்தை உபயோகிக்கமாட்டேன்னு சொன்னது".

அமர், தலையில் அடித்துக் கொண்டான். "சரி வாங்க பஸ்ஸைப் பிடிப்போம்..."

காந்திஜியை பஸ்ஸில் இருந்தவர்களில் சிலர் உற்றுப் பார்த்தார்கள். அவருடைய ஆடை அலங்காரம் அதற்குக் காரணமாக இருக்கலாம்.

"ஆமா... ஜாதிப்பூசல்னு இமயவரம்பன் ஏதோ சொன்னாரே... இன்னுமா ஜாதி ஒழியலை...?"

"ஜாதி ஒழியறதாவது? அதான் சங்கம் வச்சு வளக்கறாங்களே... எப்படி ஒழியும்? ஸ்பெஷல் உரம் போட்ட விவசாயப் பயிர் மாதிரி தளதளன்னு வளருது. அதுல நமக்கும் வசதி இருக்கு. எலெக்ஷன், ஊர்வலம்னு ஆள் தேவைப்படறப்ப சங்கத்துல நம்பாளுங்களுக்கு சொன்னாப் போதும். வீணா அலைய வேண்டியதில்லை..."

காந்திஜி அதற்குப்பிறகு வீடு வரும்வரை எதுவுமே பேசவில்லை.

"என்ன தாத்தா பேசாம இருக்கீங்க?" அவரிடம் பேச்சுக் கொடுத்தான் அமர்.

"இல்ல... நான் இதைப்பத்தி மொதல் வேலையா அம்பேத்கரைக் கலந்து பேசணும்..."

வீட்டுக்குள் நுழைந்ததும், ஊஞ்சலில் உட்கார்ந்திருந்த பெரியவர் மகாதேவன், காந்திஜியை அமர் அறிமுகம் செய்து வைப்பதற்கு முன்பாகவே தடதடவென்று வந்து... "ஆ... பாபு... பாபு..." என்று காந்திஜியின் கைகளைப் பிடித்துக்கொண்டு தழு தழுத்தார். மகாதேவன் தாத்தாவைத் தழுவிக்கொண்டார். பாட்டி கைகூப்பி வணங்கினாள். சலசலப்பைக் கேட்டு பூஜை அறையிலிருந்து வெளிப்பட்ட சிதம்பரம் என்ன ஏது என்று விவரம் தெரியாமல் நெடுஞ்சாண் கிடையாக காந்திஜியின் பாதங்களில் வீழ்ந்தார்.

"என்னோட ரெண்டாவது பிள்ளை சிதம்பரம். கப்பலோட்டிய தமிழன் நினைவா வச்சது. பெரியவனுக்கு உங்கபேரைத்தான் வச்சேன் மோகன் தாஸ். பொண்ணுக்கு பாவின் நினைவா கஸ்தூரி; பெரியவளுக்கு கவிக்குயில் ஞாபகமா சரோஜினின்னு பேரு..." மகாதேவன், தன் குடும்பத்தை அறிமுகப்படுத்தினார்.

காந்திஜியின் கவனம் பெருத்த தொப்பையும் ஊதிப்போன சரீரமுமாக காலில் விழுந்துவிட்டு தரையிலிருந்து சட்டென எழமுடியாமல் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் சிதம்பரத்தின் மீதே இருந்தது.

"மனிதர் காலில் மனிதர் விழும் அடிமைப்புத்தி இன்னுமா போகவில்லை? சுதந்திரம் நம் மனிதர்களின் தன்மானத்தை வளர்க்கவில்லையா? அதிலயும் நாயக்கர் சுயமரியாதையைக் கொள்கையா வச்சு, கட்சி வளத்தின தமிழ்நாட்டிலா இப்படி?"

முழங்காலைப் பிடித்துக்கொண்டு எழுந்தார் சிதம்பரம். "யாருப்பா இவரு?" என்று காந்திஜியைப் பற்றி விசாரித்தார்.

"நான் எம்.கே. காந்திங்க. நீங்கதான் இந்த சாராய..." சொல்லக் கூடாததைச் சொல்லிவிட்ட அருவறுப்பில் காந்தி முகம் சுருங்க வாக்கியத்தைப் பாதியிலேயே நிறுத்தினார். "பூரண மதுவிலக்கை இங்கதான் ராஜாஜி அறிமுகம் செய்தாரு...ம்... அதெல்லாம் எதுக்குன்னு நெனைக்க றீங்க? மக்களுடைய நன்மையை நெனைச்சுப் பார்க்க வேண்டாமா...?"

"மக்கள் கள்ளச் சாராயம், விஷச் சாராயம் குடிச்சுக் கஷ்டப்படறதைத் தடுக்கத்தான் இந்த ஏற்பாடு செய்திருக்கோம்" என்றபடி இடுப்பைப் பிடித்துக் கொண்டார் சிதம்பரம்.

"ஏதோ கீல்வாயு மாதிரி இருக்குது. வைத்தியம் செய்துக்கன்னா மாட்டேங்கறான் பாபு!" மகாதேவன் புகார் சொன்னார்.

"இல்ல பாபு... பிஸினசை ஓர் ஒழுங்கு செய்துட்டு அமெரிக்கா போய் ரெண்டு மாசம் தங்கி எல்லாச் செக்-அப்பும் செய்து முடிச்சுட்டு வந்துடலாம்னு இருக்கிறேன்..."

"அந்நிய மோகத்தை ஒழிங்க. நானே உங்க உணவைச் சீர் செய்து மண்பத்து போட்டு, நீராவிக் குளியல், ஆரியக்குளியல்னு இயற்கை வைத்தியத்துலயே உங்க உடம்பைச் சரி செய்துடறேன் பாருங்க" என்றார் காந்தி.



டாக்டர்! எங்கப்பா இறந்து போறதுக்குமுன்ன நீங்க எடுத்த 'எக்ஸ்-ரே' படம் வேணும், தருவீங்களா..?

அதெதுக்கு இப்ப..?

அவருடைய போட்டோ எதுவும் வீட்ல இல்லை. எக்ஸ்-ரே படத்தை யாவது ஃப்ரேம் போட்டு மாட்டி மாலை போடலாமேன்னு தான்...!

"வாட்... மண் பத்தா?" அருவருத்து முகம் சுளித்தார் சிதம்பரம்.

எல்லா விருந்தினருக்கும் பானங்கள் தரச் சொல்லி வைத்திருந்தபடி கோகா கோலாவையும் கண்ணாடி டம்ளரையும் காந்திஜியின் முன்னால் நீட்டினாள் பணிப்பெண். காந்திஜியின் கவனம் சுவரில் தொங்கிய அவரது படத்தின் மேல் இருந்தது. "மகாதேவன்! நீங்களுமா இந்தத் தவறைச் செய்யணும்? இது எனக்குப் பிடிக்காதுன்னு உங்களுக்கு நல்லாத் தெரியுமே... டாக்காவிலே ஒரு பெரியவரு எம் படத்தைக் கழுத்துச் செயினில் போட்டிருந்தது என்னை எவ்வளவு வேதனைப்படுத்திச்சுன்னு உங்களுக்குத் தெரியுமே. தனி மனித வழிபாடு என்பது சமூகத்தின் ஆன்மா பின்னடைந்து சகதியில் கிடப்பதன் அடையாளம்னு சொல்லி நீங்கள் தானே அதை அவர் கழுத்திலிருந்து கழட்டினீங்க? எவ்வளவுதான் நல்லவராகவும் இணையற்றவராகவும் இருந்தாலும் தனிமனிதன் முக்கியத்துவம் பெறுதல் ஜனநாயகப் பண்பில்லைங்கறதுனாலேயே நான் கட்சியிலிருந்து விலகியிருக்கக்கூட முடிவு பண்ணினது உங்களுக்குத் தெரியாதா?"

"பாபு! மன்னிச்சுக்குங்க. இது என் மூத்தமகனின் வேலை. நான் சொல்லியும் கேட்கலை. ஒவ்வொருத்தர் ஒவ்வொரு கட்சி. யார் ஆட்சியைப் பிடித்தாலும் காரியம் சாதிக்க வசதிங்கறாங்க. என் பேச்சுக்கு மதிப்பில்லை".

காந்திஜி சமாதானம் அடையவில்லை. "போதாக்குறைக்கு பூமாலை வேறு போட்டிருக்கீங்க. பூக்களை இப்படிக் கேவலப்படுத்த வேண்டாம்னுதானே நான் கதர்நூல் மாலைகளையே கூட்டங்களின்போது போடச் சொன்னேன்?"

"அது பூ இல்லை பாபு... ப்ளாஸ்டிக்" என்றான் அமர், டி.வி.யைத் திருகிக்கொண்டே.

"அட! டி.வியா! பரவாயில்லையே... இதன் மூலம் அரிச்சந்திரன் நாடகம் மாதிரி நல்ல நிகழ்ச்சிகளைக் காட்டி மக்கள் மனதில் உன்னத உணர்வுகளைத் தோற்றுவிக்கலாமே" மகிழ்ந்து போனார் மகாத்மா. பேட் என்ற பெயரில் அரைகுறை ஆடையில் ஒரு பெண்ணும் விநோதமான உடையில் ஓர் ஆணும் ரசாபாசமான காரியங்களைச் செய்து கொண்டிருந்தார்கள். கண்சிமிட்டும் வேளையில் அவர்கள் பனிமலை, தார்ப் பாலை, மலைச்சரிவு, தென்னஞ் சோலை, வயல், பூந்தோட்டம், கடற்கரை, கோவில் என்று பல இடங்களில் சேஷ்டைகளைச் செய்தார்கள்.

மகாதேவன் தாத்தா பதறிப்போய் டி.வி.யை அணைத்தார்.

பரிதி

டாக்டர் இராசதேவன்

காரிருள் கதிரோன் செயல்தான்
கண்டவர் கேட்டோ ரெல்லாம்
கண்முன்னே வந்து வந்து
காதல்தான் செய்த தாலே
ஆரிது ஆண்டவன் செயலோ
அல்லது அரிய இயலோ
பாரிது பரிதியின் ஒளியே
பாரெலாம் எழும் கலையே!

தீபஒளி

முருகனடிமை (ச. சாரதா)

தீபம் நீ இல்லை என்றால்,
தீபகற்பம் எங்கும் இல்லை;
இருள் மறைந்த தினமே தீபஒளி;
அசுரன் அகன்ற தினமே தீபாவளி.

ஐப்பசியில் புத்தாடை பூண்டு;
ஐயமின்றிப் பொங்கி வரும் தீபஒளி;
ஆரவாரமுடன் அகிலமும் சிறக்க;
அவனியில் தோன்றிய தீபாவளி;

ஐப்பசியே ஆரம்பத்தீபம்
தீபத்திருநாள் என்றும் தங்கிட,
தீபஒளியுடன் என்றும் வாழ்ந்திட,
தீபமுதல்வனைப் போற்றுவோம்.

"இது ஒன்றுக்காகவே சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கலாம் போலிருக்கிறதே" என்றார் காந்திஜி.

அமர் அவரைச் சந்தித்ததையும், பேசிக் கொண்டிருந்ததையும் வீட்டாருக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். காந்திஜி சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பிளாஸ்டிக் மாலை போட்ட இளம் பெண்ணின் படத்தின் முன்னால் நின்றிருந்தார் காந்திஜி.

"வரதட்சணைக் கொடுமையில் இவளை அவ புருஷனும் மாமியாரும் மண்ணெண்ணெய் ஊற்றி எரிச்சுட்டாங்க..." புடலங்காய் புடலங்கொடியில் காய்க்கும் என்கிற தொனியில் அதைச் சொல்லிவிட்டு சிதம்பரம் அடுத்த படத்திலிருந்த இளைஞனைக் காட்டி, "இவன்தான் பெரியவன். அணு விஞ்ஞானி" என்றான்.

காந்திஜி பயமும் பதைப்புமாய்த் தவித்துப் போனார்.

"பாபு! நீங்க ஓய்வெடுங்க... மிச்சத்தை அப்புறம் பேசிக்கலாம்" என்று மகாதேவன் உதவிக்கு வந்தார்.

"ராட்டினம் வச்சிருக்கீங்களா? கொஞ்ச நேரம் நூத்தா மனசுக்கு ஆறுதலா இருக்கும்".

மகாதேவன், ஒரு பதிலும் சொல்லாமல் தலைகுனிந்து கொண்டார்.

மறுநாள் காலை மகாதேவன் எழுவதற்குள் காந்திஜி எழுந்துவிட்டிருந்தார்.

"நாலு முழம் கதர்த் துண்டு இருந்தா கட்டிகிட்டு நேத்துப் போட்டிருந்த துணிங்களைத் தொவைச்சுப் போட்டுடலாம்னு பாத்தேன்".

"கதர் வேட்டி இருக்கு, தர்றேன். குளிச்சுட்டு வாங்க. துணிங்களை வேலைக்காரி துவைச்சுடுவா".

"இல்லை மகாதேவன்! எரவாடா ஜெயில்லே பாத்ததில்லையா நீங்க? என் துணியை நானே தொவைச்சுக்குவேனே".

அமர், காலைப் பத்திரிகையைக் கொண்டு வந்து நீட்டினான். காந்திஜி புரட்டினார். சூரத்தில் பிளேக், பெங்களூர் உருது செய்தியறிக்கையை எதிர்த்து நடைபெற்ற கலவரத்தில் பதினொரு பேர் சாவு, உத்தர காண்ட் கிளர்ச்சி, குடிசைப் பகுதிகளில் தீ விபத்து, பத்தொன்பது வயதுப் பெண்ணைச் சிதையிலேற்ற முயற்சி என்று ஒவ்வொரு செய்தியாகப் படிக்கப் படிக்க அவர் சிதைந்து, நொறுங்கி, வேதனைப்படுவது தெளிவாகத் தெரிந்தது.

"மகாதேவன்! உங்கள் தலைவர்களைச் சந்தித்து நான் பேச வேண்டும்" என்றார் உறுதியான குரலில்.

"பாபு! கதவேயில்லாத குடிலில் நீங்க இருந்தீங்க..., வெறும் திரைச்சீலை மட்டும் தொங்கும். இப்ப அப்படியில்லை. தீவிரவாதம் பயங்கரமா வளர்ந்து இரும்புக் கோட்டைக்குள்ளே நம்ப தலைவருங்களைத் தள்ளியிருக்குது" என்றார் மகாதேவன்.

"அந்தக் காலத்திலேயும்தான் இனவெறி, மதவெறி, தலைவிரிச்சு ஆடி ரத்த ஆறு ஓடலையா? அந்தச் சூழ்நிலையில்தானே நவகாளி, டெல்லி, பஞ்சாபெல்லாம் நாம்ப கிராமம்

கிராமமா சுத்தினோம்? வேறு எங்கேயோ ஏதோ தப்பாப் போயிடுச்சு... சரி... உங்க தலைவருங்களோட தாராளமா கருத்துப் பரிமாறிக்கற அறிஞர்கள்... எழுத்தாளர்கள் இருப்பாங்களே..."

மகாதேவன் திருதிருவென விழித்தார்.

"என்ன மகாதேவன்! நான் பெர்னாட்ஷா, டால்ஸ்டாய் எல்லாரையும் தெரிஞ்சு வச்சுக்கலையா...? கவிஞர் தாகூரோட அபிப்பிராயங்களை வலுவில போய்க் கேட்கலையா...? அப்படி யாராவது இருந்தா அவங்களை யாவது பார்க்கறேனே..."

மகாதேவன், தலையையே பார்த்துக் கொண்டிருந்தார். "எழுத்தாளர்கள், கலைஞர்களையெல்லாம் அவார்டு குடுத்து வருஷா வருஷம் கௌரவிப்பாங்க" என்று முனகுவது போலச் சொன்னார்.

காந்திஜி, நீண்ட நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார். அவர் குரலும் மனமும் உடைந்து போயின.

"மகாதேவன்! நான் புறப்படறேன். நாடு இப்படி இருக்கும் போது நான் சொர்க்கத்தில் இருப்பது சரியல்ல என்று எனக்குள் ஒரு குரல் சொல்கிறது. என் இடம் இதுதான். பாரதம்தான். சொர்க்கத்திலிருந்து விடுதலை பெற்று வந்து மறுபடி இந்த மண்ணில் பிறப்பேன். அடிமைத் தளைகள் அத்தனையையும் அறுப்பேன். சுயராஜ்யம் என்பது ஆட்சியைப் பிடிப்பதல்ல அடக்குமுறையை எதிர்ப்பது என்று என் மக்களுக்குச் சொல்வேன். ஜன நாயகம் என்பது ஜனங்களில் ஒருவன் நாயகனாவது மட்டுமல்ல. வலிமையற்றவனுக்கும் வலிமை உடையவனுக்குத் தரப்படும் அதே வாய்ப்புகளைத் தருவதுன்னு வலியுறுத்துவேன் நான். வருகிறேன்..."

வேகமாய் நடந்து மறைந்தார் மகாத்மா.

வாழ்க நீ எம்மான் – இந்த
வையத்து நாட்டிலெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வரும் காந்தி
மகாத்மா! நீ வாழ்க! வாழ்க!

என்று தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்த மகாதேவனைப் பார்த்து,

"தாத்தா! அந்தத் தாத்தா போய்ட்டாரா?" என்றான் அமர்.

"இல்லடா வருவாரு. அதனாலேதான் பாடலையே மாத்தி, வாழ்விக்க வரும் காந்தின்னு நம்பிக்கையோட நான் பாடறேன்" என்றார் மகாதேவன்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிய

ஸ்ரீசாரதா புஜங்கப்ரயாதாஷ்டகம்



தமிழாக்கம்:
'பாரதி காவலர்' கே. ராமமூர்த்தி

அமுதம் நிறை கலசங்கள்
குடமெனக் குவிந்தபடி
கரங்களில் உடையவளாம்;
அருளினைப் பொழிந்திடும்
நெஞ்சினளாம்;
பாலனம் புரிந்து
காத்திடும் அம்பிகையாம்;
புனிதர்க்கெல்லாம்
பொற்பதம் தருபவளாம்;
திங்கள் முகப்பொலிவு,
எழிலார்ந்த இதழ்க்கனிவு;
பீடுடைய வடிவினளாம்;
என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் –
மனம்மொழி, மெய்சேரத்
துதிக்கின்றேன்.

விழிக்கடையில் அளப்பரிய
கருணை பொங்கும்
நோக்குடையவளாம்;
பொற்கரத்தில் ஞான
முத்திரை உடையவளாம்;
கலைகளின் நித்யவாசினியாம்;
புனிதம் நிறை பொன் அணி
மங்கலம் உடையவளாம்;
தெய்வதமாய் என்றும்
திகழ்ந்திருப்பவளாம்;
துங்கபத்திரை நதிவாழ்
தூயவளாம்;
என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் –
மனம்மொழி, மெய்சேரத்
துதிக்கின்றேன்.

முடிவகிர்ந்து பின்னலிட்டு,
குஞ்சலங்கள் கொண்டவளாம்;
மானை நிகர்த்த
மருண்ட நோக்குடையவளாம்;
கிள்ளையோடிருக்கும் வாணியாம்;
வானவன் இந்திரனும்
வணங்கிடும் தேவியாம்;
அமுதபானம் விளைத்திடும்
மந்தஹாச வதனமுடையவளாம்;
அலையெனச் சரிகின்ற
கருங்கூந்தல் அழகொடு
நெஞ்சை ஈர்ப்பவளாம்;
என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் –
மனம்மொழி, மெய்சேரத்
துதிக்கின்றேன்.

மானொடு மடவன்னத்தில்
மாட்சியுற வீற்றிருந்து,
சிம்மமதில்
ஆரோகணித்து,
கரியினையும் பரியினையும்
வாகனமாக்கி,
காளையில், கமுகில்
கவினுற அமர்ந்து
நவராத்திரி நற்பொழுதில்
நலம் சுரந்திடுபவளாம்;
இனிமையின் உருவாகி
என்றும்தரிசனம் தருபவளாம்
என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் –
மனம் மொழி, மெய்சேரத்
துதிக்கின்றேன்.

படைக்கின்ற நான்முகனும்
பள்ளிகொண்ட மாலவனும்
மலைவாழும் மாதவனும்
துதிக்கின்ற
சீர்படைத்தவளாம்
தேசுநிறை
நகைமுகம் உடையவளாம்;
திருச்செவிகளில்
குண்டலங்கள்
ஊஞ்சலென அசைந்தாடி,
அழகுக்கு அழகூட்டும்
திருச்செவிகள் உடையவளாம்;
என் தாயாகும் சாரதாம்பாளை
சந்ததமும் –
மனம்மொழி, மெய்சேரத்
துதிக்கின்றேன்.

அமர காதலன் அம்பிகாபதி

தியாகச் செம்மல்
அன்பு வேதாசலம்

இந்தியத் திருநாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு மாவட்டம் தஞ்சை. சோழப் பேரரசன் இராஜராஜன் உலகம் போற்றும் வண்ணம் அரசோச்சிய பொற் காலத்தில் கலை - இலக்கியம் - இசை - நடனம் போன்ற அருங்கலைகள் சிறப்போடு போற்றி வளர்க்கப்பட்டன.

ஆயிரக்கணக்கான கலைஞர்களுக்கும் - கவிஞர்களுக்கும் - புலவர்களுக்கும் மானியம் அளித்து அருங்கலைகளைப் போற்றி வளர்த்து இறவாப்புகழ் பெற்றுத் திகழ்ந்தான்.

மாமன்னன் இராஜராஜனை அடியொற்றிப் பல சோழ மன்னர்கள் அரசுகட்டில் ஏறி ஆட்சி புரிந்தார்கள். அவர்களில் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மூன்றாம் குலோத்துங்கன் என்ற மன்னன் தஞ்சைத் தரணியை ஆண்டுவந்தான். அவனது அவையில் கவிஞராகத் திகழ்ந்த கம்பன், உலகப் புகழ்பெற்ற "இராமாவதாரம்" என்னும் கம்பராமாயணத்தை யாத்தான்.

கம்பனைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகள் பல வழங்கிய போதிலும், அவை அனைத்தையும் உண்மை வரலாறுகள் எனக் கொள்வதற்கில்லை. எனினும் இராம காதையிலிருந்தும் சில தனிப் பாடல்களிலிருந்தும் தெரிய வரும் சில குறிப்புகள் கூர்ந்து சிந்திக்கத்தக்கன.

கம்பன் திருவழுந்தூரில் பிறந்தான், ஆதித்தன் புதல்வன், வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவன். ஆதி காவியமாகிய வால்மீகி இராமாயணத்தை முழுமையாகக் கற்று அதில் ஈடுபாடு கொண்டு, தமிழில் ஒரு பெருங்காப்பியத்தை இயற்றத் துணிந்தான்.

கம்பராமாயணத்தை இயற்றுவதற்காக வெண்ணெய்யூர்ச் சடையப்ப வள்ளல் பெரும் உள்ளத்தோடு அனைத்து உதவிகளையும் அளித்துக் கம்பனைக் காப்பாற்றினான்.

"கல்வியில் பெரியவன் கம்பன்" என்றும், "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்றும் வழங்கும் உலக வசனங்கள் கம்பனது கவிதைகள் மக்களது உள்ளங்களை எந்த அளவிற்குக் கவர்ந்திருந்தன என்பதை எடுத்துக் காட்டும்.

செயங்கொண்டார் - ஒட்டக்கூத்தர் போன்ற பெருங் கவிஞர்கள் சோழப் பேரரசின் "கவிச்சக்கரவர்த்தி" என்ற பட்டம் பெற்றிருந்தனராயினும் அவர்களை மக்கள் கவிச்சக்கரவர்த்தி எனப் பாராட்டவில்லை - ஏற்கவில்லை.

கம்பனுக்கு "கவிச்சக்கரவர்த்தி" என்ற பட்டத்தைப் பொதுமக்கள் அளித்துச் சிறப்பித்துப் பாராட்டி மகிழ்ந்தனர்.

கவிச்சக்கரவர்த்தி கம்பனுக்கு இணையாக கவிதை புனையும் ஆற்றல் பெற்ற அம்பிகாபதி என்ற ஓர் அருமைப் புதல்வனைக் கம்பன் பெற்றிருந்தான்.

கம்பராமாயணத்தின் சிறப்புப் பாயிரப் பாடல்கள் சிலவற்றை மகன் அம்பிகாபதி இயற்றியதாக வரலாற்றுப் பேராசிரியர் சிலர் கூறுவர். தந்தையின் புகழ்மிக்க கம்பராமாயணப் பெருங்காப்பியத்தைப் பாராட்டி, பாடல்கள் இயற்றும் அளவிற்கு ஆற்றலும் - திறமையும் - புலமையும் பெற்றிருந்தான் கவிஞன் அம்பிகாபதி.

அம்பிகாபதியின் வாழ்க்கை வரலாறு ஒரு காதல் காவியமாகும். உலக இலக்கிய வரலாற்றில் பெரும் புகழ் பெற்ற லைலா - மஜ்னு, ரோமியோ - ஜூலியட், அனார்கலி - சலீம் ஆகியோரைப் போன்று உலகம் போற்றுகின்ற அளவிற்கு, கவிஞன் அம்பிகாபதிக்கும் அரசகுமாரி அமராவதிக்கும் ஏற்பட்ட காதல் சரிதை இறவாப்புகழ் பெற்றுத் திகழ்கிறது.

இளைஞன் - பாட்டிசைக்கும் பாவலன் அம்பிகாபதி, காரிகைகளைக் கவரும் எழில்கொஞ்சும் பேரழகனாகவும் திகழ்ந்தான். சோழப் பேரரசனின் அருமை மகள் இளவரசி அமராவதி, வர்க்கபேதம் - வருணபேதம் பாராமல் பாட்டிசைக்கும் பாவலனாகிய அம்பிகாபதியை உளமாரக் காதலித்தாள். அம்பிகாபதியும் நெஞ்சார இளவரசியின்பால் காதல் வயப்பட்டான். இச்செய்தியை ஒற்றர் மூலம் அறிந்த சோழமன்னன் அதிர்ச்சியுற்று வெகுண்டெழுந்தான். இச்செய்தியின் உண்மை நிலையினை அறியும் பொருட்டு, மன்னன் தனது அரண்மனையில் ஒரு விருந்து வைத்து, கம்பரையும், அம்பிகாபதியையும், அமைச்சர்களையும், கவிஞர்களையும் விருந்துக்கு அழைத்தான்.

வருகைதந்த விருந்தினர்களுக்குத் தனது மகள் - அரசிளங்குமரி அமராவதியையே உணவு வழங்கச் செய்தான். அமராவதி கையில் உணவுக் கிண்ணத்தை ஏந்தி விருந்து படைக்க ஒயிலாக நடந்து வந்தாள். அவளைக் கண்ட அம்பிகாபதி தன்னை மறந்து, அவையை மறந்து, உலகை மறந்து தன் காதலியின் எழில் கொஞ்சும் வடிவழகை வருணிக்கத் தொடங்கி,

"இட்டடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க
வட்டில் சுமந்து மருங்கு அசைய"

என்று பாடத் தொடங்கினான். இதைக் கேட்ட கம்பன் திடுக்கிட்டு, துடிதுடித்து தன் மகனுக்குப் பெரும் தீங்குவரும் என அஞ்சி, கலைமகளைத் தியானித்தான். அந்நிலையில் தெருவில் ஒரு பெண் குரல் கேட்டது. அவள் கொட்டிக்கிழங்கோ கிழங்கு என விலை கூறிச் சென்றாள். உடனே கம்பன் தன் மகன் பாடிய பாட்டிற்குப் பொருத்தமாக எஞ்சிய பாடலைப் பாடி முடித்தான்.

இட்டடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க,
வட்டில் சுமந்து மருங்கு அசையக், - 'கொட்டிக்
கிழங்கோ கிழங்கு' என்று கூறுவாள் நாவில்
வழங்கோசை வையம் பெறும்.

நிலத்தில் மிதித்துள்ள அடி வருந்தவும், நிலத்தினின்று எடுக்கப்பட்ட மற்றோர் அடி பூமியில் அழுந்தியதனால் கொப்புளம் காணவும், வட்டிலைக் கையில் தாங்கிச்

காதலே இனிது!

— தங்க. சிவராசன்

அவன் : காலங்கள் தோறும்
காதலே இனிதெனக்
காவியம் யாவும் கூறும்!
ஞாலங்கள் தோறும் தேடிக் களைத்தேன்!
காதலிப்பார் இல்லை யாரும்!

ஒரு குரல்: காதலிப்பார் இல்லையெனக்
கலங்கிடும் இளைஞரே!

உங்கள் பார்வைக்கு ஏங்கிடும்
கன்னியர் இருவரை அறியீர்!

அவன் : காத்துக் கிடக்கும் கன்னியர்
யாரெனச் சொல்லிடுவாயே!
மனதால் சேர்த்து அணைத்திடுவேனே!

குரல் : கன்னியரில் ஒருத்தி தாய்நாடாம்!
இன்னொருத்தி இனிய தாய்மொழியே!
மண்ணுலகில் இவர்தம் காதலுக்கே
மாற்று உண்டா? கூறிடுவீரே!

சிறுத்த இடையானது அசையவும், "கொட்டிக் கிழங்கோ கிழங்கு" என்று கூறுவாள் நாவில் இருந்து எழுகின்ற சொற்களானது உலகம் மதிக்கத்தக்கதாகும்.

தகாத முறையில் தன் மகளைக் காதலித்தமைக்காக மன்னன், அம்பிகாபதிக்குக் கொலைத் தண்டனை விதித்தான். தண்டனையை அறிந்த கம்பன் துடித்துப் போனான். கம்பனின் மனவேதனையையும் அம்பிகாபதியின் புலமையையும் கண்ட அமைச்சர்களும், புலவர்களும், அம்பிகாபதியின் மரணதண்டனையை நிறைவேற்ற வேண்டாம் என மன்னனை வேண்டினர். புலவர்களின் வேண்டுகோளினை ஏற்று மன்னன் ஒரு நிபந்தனை விதித்தான். சிற்றின்பம் கலவாத பேரின்பப் பாடல்களாக நூறு பாடல்கள் பாடி முடிக்க வேண்டும். அங்ஙனம் பாடி முடித்தால் மரணதண்டனையை நிறைவேற்றாது நிறுத்துமாறு கட்டளையிட்டான்

மன்னனின் இந்த நிபந்தனையை ஏற்று. பேரின்பப் பாடல்களாகப் பாடத் தொடங்கினான் அம்பிகாபதி. முதலில் கடவுள் வாழ்த்தைப் பாடினான். கடவுள் வாழ்த்தைப் பாடி நூறு பேரின்பப் பாடல்களையும் பாடத் தொடங்கினான். தொண்ணூற்று ஒன்பது பாடல்களையும் பேரின்பப் பாடல்களாகவே பாடி முடித்தான். மேல் மாடத்திலிருந்து காதலனின் பாடல்களைச் செவிமடுத்த அரசகுமாரி கடவுள் வாழ்த்துப் பாடலையும் சேர்த்து நூறு பாடல்கள் பாடி முடித்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்து திரையை விலக்கிக்கொண்டு தனது எழில் முகத்தைக் காட்டினாள். அவளது முகதரிசனம் கண்ட அம்பிகாபதி காதல் உணர்ச்சி வயப்பட்டு நூறாவது பாடலை, சிற்றின்பக் கருத்து அமைந்த பாடலாகப் பாடி முடித்தான்.

சற்றே பருத்த குழலே அசையத் தரளவடம்
குற்றே அசையக், குழைஊசலாட, துவர்கொள்
செவ்வாய்

நற்றேன் ஒழுக, நடனசிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத், தலையலங்காரம் புறப்பட்டதே!

தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு அம்பிகாபதி உயிர்துறந்தான். அவனது பிரிவாற்றாமை தாளாது அமராவதியும் உயிர் நீத்தாள். துயரம் தாளாது கம்பன் துறவு பூண்டு நாட்டைவிட்டு வெளியேறினான்.

அம்பிகாபதியின் வாழ்வு அழியாப் பெருவாழ்வு. வாழ்வில், தான் உணர்ந்த காதலின் நுட்பத்தை நுகர்ந்த இன்பத்தின் எக்களிப்பைக் 'கற்பனை' எனும் வண்ணத்தில் குழைத்து 'தமிழ்' எனும் கிழியில், 'அகப்பொருள்' ஒழுகும் உயிர் ஓவியமாகத் தீட்டி, இறந்தும் இறவாப் பெரும் புகழுடன் நம்மிடையே வாழ்ந்து வருகிறான் அம்பிகாபதி. ❀

குலோத்துங்கன்

மானிடத்தினை வறுமை வென்றதோ...?

மனிதர் அல்லது மற்றுயிர் அறியாத்
தனியது வறுமை. தரணியின் பிணிகளில்
கொடிய யாவினும் கொடியது. வறியவர்
மடிவது மில்லை; வாழ்வது மில்லை
சித்திர வதை, யெனச் செப்பும் கொடுமையின்
நித்திய வடிவமே நிரப்பு. மானிடம்
தோன்றிய நாள்முதல் தொடர்ந்து நிழலென
ஞான்றும் வருவது நாணமும், மானமும்
உடலும், ஆவியும், உயர்வு தேடிடும்
திடமும், நெஞ்சின் திட்பமும் அரித்துச்
சிதைக்கும்கறையான்; செம்மையின்பகைவன்;
வதைத்து எளியரை வாட்டும் கூற்றுவன்.

அறிஞரைக் கவிஞரை, அறவழி காக்கும்
நெறியினர் தம்மை, நேர்மையி னின்றும்
வழுவாப் பெரியரை, வான்புகழ் மேதைதான்
றெழுவோர் இனத்தை, இசிக்கும் இப் பீடைமேல்
கோபம் கொண்டு, "கூண்டோ டழிகெனச்"
சாபம் தரஒரு தவத்தினர் இலையோ?
ஒப்பு இலாததென் றுயர்ந்த மானிடம்
குப்பை கூளமாய்க் குவிந்து நைந்திட
வருத்தும் இப்பகை வளர்வ தல்லது
சிறுத்து மாய்ந்திடும் சின்னம் காண்கிலம்.

★ ★ ★

வானவில் மீதினில் வாழ்வு தேடுநர்,
கானலின் நீரினைக் கவிதை யாக்குநர்
மாயமான் வேட்டையில் மனது பாய்ந்தவர்
காயமும், ஆவியும் கனவில் ஆழ்ந்தவர்,
கோடியில் கோடியில் குறைந்திடா, உயிர்
வாடியும், மெலிந்தும் வறண்டு மாய்வது.
காணும், கேட்கும் கண்ணிலர்; மற்றிவர்
பேணும் கல்வியும், பெரிதெனப் பீத்தும்
சாதனை என்பவும் 'தரித்திர' அசுரனின்
சோதனை முன்பு தோற்றன; தோற்றன
நாணி எம்முயிர் நடுங்கு தையகோ...!
மானிடத்தினை வறுமை வென்றதோ?

காக்கை குருவி எங்கள் சாதி

விக்கிரமன்

அந்த ஆண்டுப் பொங்கலை எப்படியோ ஒப்பேற்றி விட்டாள் செண்பகம். நாளைக்குக் கன்னுப் பொங்கல். காணும் பொங்கல் என்றும் அழைப்பார்கள். 'எங்கள் உடன்பிறந்தவர்கள் நலமுடன் வாழ வேண்டும்' என்று பொங்கலிட்டு, காக்கை, குருவிகளையும் கூவி அழைத்துப் பொங்கல் படைக்கும் திருநாள்.

வீட்டில் மணி அரிசி இல்லை. நேற்றைய பொங்கல் நாளைக் கழித்துவிட்டாள். மறுநாளைக்கு? வறுமையை வெளியே தெரியப் படுத்திக் கொள்ளாமல், முகத்தில் கவலையைக் காட்டிக் கொள்ளாமல் செண்பகம் இத்தனை ஆண்டுகளை ஓட்டிவிட்டாள். அப்பப்பா, எப்படி முடிந்தது?

"எப்போதும் உன்னால் எப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க முடிகிறது செண்பகம்?" என்று அவளுடன் சிறுவயதில் ஒன்றாகப் படித்த பள்ளித் தோழி பலமுறை கேட்டிருக்கிறாள். அவளும் செண்பகத்தைப் போல் காதல் கல்யாணம் செய்து கொண்டவள்தான்.

"எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்கிறேன். ஆசைக் கனவுகளை மனதில் எப்போதும் தங்க வைத்துக் கொள்வதில்லை. அதனால் வேதனைப்படக் கூடிய வருத்தப்படக் கூடியவை நடந்துவிட்டால் அதை நான் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறேன்; ஏமாற்றத்தால் நான் கலங்கி விடுவதில்லை. புன்சிரிப்பு, அல்லது கலகலவென்று சிரிப்பது எனக்கு மாற்று மருந்தாக அமைந்து விடுகிறது" என்று செண்பகம் சொல்லும் போது, அவள் தோழி வியப்பால் தோளைக் குலுக்கிக் கொள்வாள்.

'இவளால் முடிகிறது. நம்மால் முடியாது' என்று முணு முணுத்துக் கொள்வாள்.

செண்பகத்தால் மட்டும் முடிகிறதா? மனத்தைக் கல்லாக்கிக் கொள்ளும் சமயங்களில் மேலும் கடினப்படுத்திக் கொள்வாள். நெகிழ விடக் கூடிய வேளைகளில் தெள்ளிய நீரோடை ஆக்கிவிடுவாள். அது இயற்கையாகக் கைவந்த கலையாகி விட்டது.

பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் அவள் முத்துவைக் கண்டபோதுதான் அவர்கள் இருவரும் சேர்ந்து காதல் மாளிகைக்கு அடிக்கல் நாட்டினர். முத்து எந்த சாதி என்று அவள் கேட்டதுகூடக் கிடையாது. இரண்டு இதயங்களுக்குள் ஏற்படும் உருவமற்ற ஓசைக்கு - பிணைப்புச் சக்திக்குச் - சாதி மத வேற்றுமைகள் என்னவென்றே தெரியாது. இதய மற்றவர்கள் தாம் ஏதேதோ பெயரிடுகிறார்கள்.

முத்துவை அவளுக்குப் பிடித்திருந்தது. பார்வை, அறிமுகம், மறைமுகப் பேச்சு, சந்திப்பு, நெருக்கம் என்று அவர்கள் அன்பு வளர்ந்தது. ஒருவரையொருவர் நன்றாகப் புரிந்து கொள்ளப் பல நாள்களைச் சந்திப்பிலேயே கழிக்க வேண்டியிருந்தது. சந்திக்கும் நாள்களிலும் சில மணித் துளிகள்தாம் பேசிக் கொள்ள இயலும் என்றாலும் முத்துவின் குணங்களை அவள் நன்றாகப் புரிந்து கொண்டாள்.

காதல் வயப்பட்ட இளம் உள்ளங்கள் ஆசைக் கோட்டைகளைக் கட்டுவதும், புதிய உலகைப் படைக்கப் போவதாக சபதம் பூண்பதும் இயல்புதான். ஆனால் செண்பகம் தனக்குள்ளேயே வட்டமும், சதுரமும், கோடும் போட்டுக் கொண்டாள். எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொண்டாள் என்றுகூடச் சொல்ல முடியாது; எதிர்பார்ப்பே இல்லை என்பதைப் போல் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டாள்.

முத்துவிடம் இதயத்தை ஒப்படைத்தாகிவிட்டது. இனி மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அதற்குத் தக்கபடி விளைவுகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான் என்று தீர்மானித்து விட்டாள்.

அவள் நினைத்தது போல், காதல் பாதை, விரிக்கப்பட்ட இரத்தினக் கம்பளமாக இல்லை. முள்ளும், கல்லும், புதைகுழியுமாகவே இருந்ததை நொடியில் புரிந்து கொண்டாள். எல்லாக் காதலர்களுக்கும் ஏற்படுவது போல் வீட்டிலே கடுமையான எதிர்ப்பு. முத்துவின் வீட்டிலும் எதிர்ப்புதான். அதை முத்துவே சொல்லும்போது அவனிடம் குழப்பம் நிறைந்திருந்தது. காதலைக் கூடத் துறக்கத் தயாராயிருந்தான்.

"சொத்து எல்லாம் என் அப்பாவின் சுய சம்பாத்யம். ஒரு பைசா கூடக் கொடுக்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்" என்று முத்து கண் கலங்கக் கவலையுடன் தெரிவித்தபோது செண்பகம் கலங்கவில்லை.

"ஆஸ்தியும் பணமும் வேண்டுமா, அல்லது நான் வேண்டுமா என்று முடிவு செய்து கொள்ளுங்கள், முத்து! நீங்கள் என்னைத் துறந்து மறப்பதால் நான் தங்கள் மேல் துளிகூட வருத்தப்படமாட்டேன். தந்தை, தாய் பார்த்து வைக்கும் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு நீங்கள் சௌக்கியமாக வாழ நான் வாழ்த்துவேன். அடுத்த பிறவியிலாவது நாம் இருவரும் ஒன்றுபடப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பேன்" என்று முத்துவிடம் சொன்னாள்.


முத்து உறக்கம் வராமல் பல இரவுகளைக் கழித்தான். தன் தூய காதலைத் தந்தையிடம் விளக்கிச் சொல்லத் தைரியம் போதவில்லை. தன்னை மிக விரும்பும் தாயாரிடம் தன் நிலையை எடுத்துக் கூறினான். அவள் உடனே பத்ரகாளியாகி விட்டாள். அவனைப் பெற்றது, வளர்த்தது, பாசம் பொழிந்தது, அவன் திருமணத்தைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருப்பது - இவற்றையெல்லாம் சொல்லிப் பிலாக்கணம் வைத்தாள்.

தந்தை - எப்போதுமே கண்டிப்பானவர். "காதலை மறந்துவிடு! அல்லது வீட்டை விட்டுப் போ!" என்று உத்தர விட்டுவிட்டார். செண்பகம் வீட்டில் அதைவிடப் பெரிய எதிர்ப்பு. "அவனை மறந்துவிடு. அல்லது எங்களை மறந்துவிடு" என்று கண்டிப்பாகக் கூறி விட்டனர். உடனே தான் அணிந்து கொண்டிருந்த தோடு, மூக்குத்தி உட்பட சகல நகைகளையும் கழற்றிக் கொடுத்துவிட்டு, முத்துவுடன் வெளியேறினாள் செண்பகம். முத்துவும் வீட்டிலிருந்து மாற்று உடையைக்கூட எடுத்துக் கொள்ளவில்லை.

நண்பர் ஒருவர் வீட்டில் இரண்டு நாள்களைக் கழித்துவிட்டு குடித்தனத்திற்கு வீடு தேடி அலைந்தான். கல்யாணமாகாமல் வீட்டை விட்டு ஓடி வந்தவர்களுக்கு வீடு கிடைக்கவில்லை. ஒரு தனி வீட்டை வாடகைக்கு நண்பர் ஒருவர் ஏற்பாடு செய்து கொடுத்தார். முத்துவுக்கு நிலையான வருமானமில்லை என்பதைத் தெரிந்து கொண்ட செண்பகம் திடுக்கிடவில்லை. எந்தத் துயரத்தையும் தாங்குவதற்குத் தன்னைத் தயார்ப்படுத்தி வைத்துக் கொண்ட செண்பகம், தனி வீட்டில் சில மாதங்களே குடித்தனம் நடத்தினாள். பிறகு சிறு அறை ஒன்றில் ஒரு வேளைச் சாப்பாட்டுடன் காதல் யாத்திரையைத் தொடங்கினாள்.

காதலிப்பதற்கு முன்பு காதலைப் பற்றிச் சற்று அதிகமாக அவள் கனவு கண்டாள் என்பது உண்மைதான். நடைமுறையில் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றம், மற்றும் பெற்றோரின் உறவுத் துண்டிப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட அதிர்ச்சிக்கு ஆறுதலாக இருந்தவன் செண்பகத்தின் தம்பி பாஸ்கரன்தான்! பத்து வயதுச் சிறுவனாக இருந்த பாஸ்கரன் பாசத்தில் நூறு வயதுக் கிழவனைப் போல் நடந்து கொண்டான்.

செண்பகத்தின் குடும்ப வாழ்க்கை பொருளாதாரச் சிக்கலில் தடுமாறியது; முத்து நிரந்தரமாக ஒரு வேலையிலும் தங்கவில்லை. வருமானம் போதவில்லை. இதற்கிடையே பெண்



குழந்தை ஒன்று பிறந்துவிட்டது. பிறந்த வீட்டு ஆதரவு இல்லை. அப்பா இறந்து விட்டார். ஒரு சமயம் அம்மாவிடம் போனாள். அம்மாவே தன் பிள்ளைகளின் ஆதரவில் வாழும் போது, சாதி விட்டுச் சாதி மணந்து வீட்டை விட்டு வெளியேறிய செண்பகத்தை அவள் ஏற்கவில்லை. அப்போதும் தம்பி பாஸ்கரன் தன் சகோதரிக்காகக் கடுமையாக வாதாடினான்.

அவளைப் பார்த்து அவள் அண்ணன்மார்கள் சிரித்தனர். பிறகு சீறினர். "பைசா சம்பாதிக்க முடியாத நீ புனிதக் காதலுக்கு உதவவேண்டும் என்று பேசுவது பைத்தியக்காரத்தனம்" என்று கூறிவிட்டனர்..

"உன் நியாயத்தை, பரிவு, பச்சாதாபத்தை, நீயே சம்பாதிக்கும்போது பார்த்துக் கொள்" என்று மற்ற சகோதரர்கள் கண்டிப்பாகக் கூறி விட்டனர்.

"அப்படியே செய்கிறேன்; விரைவில் செய்கிறேன். நான் சம்பாதித்து வந்து என் அக்காவை நல்ல நிலையில் அமர்த்துகிறேன்" என்று சவால் விட்டு வெளியேறினான், பாஸ்கரன். அவன் எங்கு போனானோ தெரியவில்லை.

பதினான்கு வருடங்கள் ஓடோடி விட்டன. மிக எளிதாக இதைக் கூறி விட்டோம். தன் வாழ்க்கையில் ஒளி பிறக்காதா? என்று வேதனைப்படாத நாளில்லை.

காதல் பரிசாகப் பிறந்த மகள் இப்போது மளமளவென்று வளர்ந்து, செண்பகத்தின் மடியில் ஒரு நெருப்பாகக் காட்சியளித்தாள். மகளை நினைக்கும்போது வயிற்றில் சுரீர் என்றது. அவளுக்குக் கல்யாணம் செய்ய இனிமேல்தான் பணம் சேர்க்க வேண்டும். தனக்கு மிக ஆதரவாக இருந்த பாஸ்கரன் எங்கு போனானோ, என்ன ஆனானோ - தனக்காக அவன் செய்த தியாகத்தை நினைக்க நினைக்க அவள் உடலை உருக்கியது.

ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் கழிந்த மறுநாள், கனுப் பொங்கல் நாளன்று காக்கைக்கும் குருவிக்கும் பொங்கல் வைக்கும் அவள், தன் உடன்பிறந்தவர்கள் நலனுக்காக இலை விரித்து அதில் வண்ண வண்ணப் பொங்கல் வைப்பாள்.

அவளுடைய நான்கு செல்வங்களும் வரிசையாக அமர்ந்து பொங்கலிடும்போது "யாரும்மா உன் உடன் பிறந்தவர்கள்? அவர்கள் தன் தங்கையை நினைத்துப் பார்க்கிறார்களா?" என்று குத்தலாகக் கேட்பார்கள்.

"எங்களுக்கு உடன் பிறந்தவர்கள் இல்லை - யார் நலனுக்காக நாங்கள் பொங்கல் வைக்க வேண்டும்?" என்று கேட்பார்கள்.

விழிகளில் நீர் துளிர்க்க சோகத்தைப் புலப்படுத்திக் கொள்ளாமல், "உன் மாமன்மார்கள் - என் சகோதரர்கள் நினைக்கவில்லை என்பதற்காக, பாசஉணர்வு வற்றிப் போய் விடுமா? நம் உறவு முறையை மறந்து விடக் கூடாது. என் அண்ணன்மார், தம்பிகள் நன்றாக இருந்தால் அவர்கள் மனம் திருந்தி என்றாவது ஒருநாள் நமக்கு ஆதரவு தரலாம். அதனால் நான் மௌனமாக என் கடமையைச் செய்கிறேன். அதில் நீங்கள் தலையிட வேண்டாம். பெரியவர்கள் சொல்வதைக் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டு, 'நாம் கேட்டோமா?' என்று நினைத்துக் கொண்டாள்.

ஒவ்வொரு கனுப் பொங்கல் அன்றும் அதே கேள்வி அதே பதில். "என் அருமை மகள்களே! காக்கை குருவியைப் பாருங்கள், அவை ஒற்றுமையாக இருந்து கலந்து உண்பதை. அவற்றின் நலனுக்காகவாவது நாம் பொங்கலிட வேண்டும்" என்று அறிவுரை கூறுவாள்.

அன்று பொங்கலை எப்படியோ கொண்டாடி விட்டாள். ஒரு புதுத் துணி இல்லை. புது நகையில்லை. புன்னகை மட்டுமே செண்பகத்தின் முகத்தில் பிரகாசித்தது.

மறுநாள் காலை ஆறுமணி. கனுப் பொங்கல் வைக்கத் தன் பெண்களை எழுப்பினாள் செண்பகம்.

"நான் வரமாட்டேன் போ! நம்மைத் திரும்பிப் கூடப் பார்க்காத எங்கள் மாமன்மார்களுக்காக - உங்கள் சகோதரர்களுக்காக - நாங்கள் ஏன் பொங்கல் வைக்க வேண்டும்?" என்று பெண்கள் ஒரே குரலாகக் கூவி விட்டனர்.

வீட்டு மொட்டை மாடிக்குச் சென்று செண்பகம், மீதியிருந்த கொஞ்சம் கொஞ்சம் வெண்பொங்கலையும் சர்க்கரைப் பொங்கலையும் கலந்து இலையிலிட்டாள். அவள் கண்கள் கலங்கின. குரல் எழவில்லை. "கா-கா" என்று கூவினாள்.

ஒரே பெண்ணாகச் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தபோது, அதே காணும் பொங்கல் நாளன்று, அவள் வீட்டு மாடியில் ஒரே குதூகல அமர்க்களம். தாயின் தலைப் பெண்ணான அவளும், அவளுக்குப் பின் பிறந்த தங்கையும் அண்ணன் தம்பிகளுடன் வீட்டு மொட்டை மாடிக்குச் சென்று பொங்கல் படைத்த காட்சி இன்றளவும் மறக்க வில்லை.

தம்பி பாஸ்கரன் அவள் அருகே அமர்ந்து பொங்கல் வைத்து மகிழ்வதையெல்லாம் மறந்து விட்டு குடும்பத்தாருடன் போரிட்டு, துறந்து சென்ற அவன் எங்கே இருக்கிறான்? இப்போது இருபத்தெட்டு வயதாகியிருக்கும். கல்யாணம் செய்து கொண்டு சுகமாக வாழ்வான். அவன் மனைவிக்குத் தன்னைப் பற்றிச் சொல்லியிருப்பான்.

கண் கலங்காத செண்பகம் அன்று ஏனோ கலங்கினாள். சுற்று முற்றும் பார்த்தாள். யாருமில்லை. "இறைவா! என் உடன்பிறந்தவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடு. நல்வாழ்வு ஆரோக்கியம் ஆகிய எல்லாவற்றையும் கொடு" என்று கூறிக்கொண்டே விழி நீரைத் துடைத்துக் கொண்டாள். "அடுத்த பொங்கலுக்குள் விடிவு காலத்தைக் காட்டு" என்று பிரார்த்தித்துக் கொண்டாள்.

மாடிப் படியேறி அவள் மூத்த மகள், "அம்மா, அம்மா" என்று அழைத்துக் கொண்டு வந்தாள்.

"அம்மா! பெட்டி படுக்கையுடன் யாரோ ஒருவர் வந்து உன் பெயரைச் சொல்லிக் கொண்டு வீட்டு வாசலில் நிற்கிறாரம்மா" என்றாள்.

'பெட்டி படுக்கையுடனா? யாராக இருக்கும்?' கேள்விக் குறியுடன் செண்பகம் கீழே இறங்கிச் சென்று பார்த்தாள். முதலில் அவளுக்கு வந்தவரை அடையாளம் தெரியவில்லை.

"அக்கா! என்னை அடையாளம் தெரியவில்லையா?" என்ற குரலிலிருந்து அறிந்து கொண்டாள்.

"பாஸ்கரனா? வா தம்பி! சௌக்கியமாயிருக்கிறாயா? எத்தனையோ வருடங்களுக்கு முன்பு பெற்றோரிடம் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டுச் சென்று விட்டாய். பதினெட்டு வருடங்களாக இருப்பிடம் தெரியாமல் இருந்து விட்டாயே! அது சரிதானா தம்பி! அம்மா எவ்வளவு வருத்தப்பட்டாள் தெரியுமா? எனக்காக நீ பெற்ற தாயிடம், உடன்பிறந்தவர்களிடம் கோபித்துக் கொள்ளலாமா? அவரவர்கள் வாழ்க்கையை அவரவர்களே வகுத்துக் கொள்ள வேண்டும். இப்போது, என்னைத் தேடி வந்ததை அறிந்தால் அம்மா இன்னும் வருத்தப்படுவாள் தம்பி! என் சகோதரர்கள் என்னை நினைக்கிறார்களோ இல்லையோ, நான் ஒவ்வோர் ஆண்டும் அவர்களை மறப்பதில்லை. குறிப்பாக உன்னை மறக்கமாட்டேன். எனக்காகத் தியாகம் செய்த நீ நன்றாக இருக்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்வேன். சற்று முன்புதான் என் சகோதரர்கள் நல்வாழ்விற்காகப் பொங்கலிட்டேன். நீ நன்றாக இருக்க வேண்டும் தம்பி!" ஆவலும் அன்பும் ததும்பக் கூறி விழிநீரைத் துடைத்துக் கொண்டாள்.

→

ஜெ. கமலநாதன்

கண்ணன் கருணை



குழலொலி கேட்கும் இடங்களில் எல்லாம்
குறுநகை புரியும் கண்ணன்முகம்
எழில்மிகு பிள்ளை இசைதரும் வேளை
உயிரினமெல்லாம் மன்னசுபிடம்!

உயிரைக்காத்து நலங்கள் சேர்த்து
இனிமை தருவது அவன் பாட்டு
பயிர்கள் தென்றலில் ஆடுதல்போலே
மானுடம் ஆடும் அதைக் கேட்டு!

அமைதியை நாடும் மனமே! – அந்த
அழகுப் பிள்ளையைத் தினம்பாடு
சுமைகளைப் போக்க வருபவன் அந்தக்
கண்ணன் சந்நிதி தனைத் தேடு!

கண்ணனின் பெயரைச் சொல்வதினாலே
பயிர்கள் எல்லாம் தழைக்கின்றன
காரிருள் மேனியன் கருணை யினாலே
உயிர்கள் எல்லாம் பிழைக்கின்றன!

துயரில் வாடும் உயிரைக் காக்க
தூமணிப் பிள்ளை வருகின்றான்
பயமேன் என்று முன்னால் நின்று
அருளை அள்ளித் தருகின்றான்!

பாஸ்கரன் தன்னைப் பற்றி விவரித்தான். வீட்டிலுள்ளவர்களிடம் சபதம் செய்து வாழ்ந்து காட்டுவதாக துபாய் சென்ற விவரத்தைக் கூறினான்.

"உன் நியாயத்தை, பரிவு, பாச பச்சாதாபத்தை நீ சம்பாதிக்கும் போது பார்த்துக் கொள்" என்று என் அண்ணன்மார்கள் கூறினார்கள். சபதம் எடுத்தேன். அக்கா! இவ்வளவு நாள் கஷ்டப்பட்டு வேண்டிய அளவு சேர்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். இதோ பணம், உனக்குத் தான். இனி உன்னை என் அண்ணன் மார்களும், அம்மாவும் மதிப்பார்கள்" என்றான் உணர்ச்சி பொங்க.

"தம்பி! நீ நன்றாக, உடல்நலத்துடன் இருக்கிறாயே? அதுபோதும் எனக்கு. உடன் பிறந்தவர்கள் நலனுக்காக நான் இவ்வளவு நாள்கள் பிரார்த்தனை செய்தது வீண் போகவில்லை. மிகவும் மகிழ்ச்சி. தம்பி! என் கணவர் சம்பாதித்து நான் நிமிர்ந்து நிற்க வேண்டுமே தவிர, மறுபடியும் பிறந்த வீட்டு ஆஸ்தியின் உதவியுடன் அல்ல. என்னால் வாழ முடியும் என்பதை நிலைநாட்டி விட்டேன். இந்த நாட்டில் பணம் செல்வாக்கு இல்லாமல் காதல் திருமணம் புரிந்து கொண்டு நிமிர்ந்து வாழ்வது கடினம் என்று எனக்குத் தெரியும். கனவுகள் கைகூடவில்லை என்பதற்காக நான் சோர்ந்துவிடவில்லை. ஆனால் அவர்தான் இடிந்து போய்விட்டார். ஒருபெண் – இரண்டு மூன்று பெண்கள் – நான்கு பெண்கள் என்று தொடர்ந்து பிறந்தனர். குடும்பக்கட்டுப்பாட்டில் அவர் – உன் அத்தான் – நம்பிக்கை வைக்கவில்லை. நாலாவது குழந்தை பிறந்தவுடன்தான். பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற கவலை அவரைப் பெரிதும் உலுக்கியது. உன்னைப் போல் அவரும், துபாய்க்குப் புறப்பட்டு விட்டார். ஒரு வருடம் நிறையவே பணம் அனுப்பினார்" என்று கூறி நிறுத்திய செண்பகத்தின் கண்கள் கலங்கின.

பாஸ்கரன் கவலையுடன் அவளைப் பார்த்தான். "நானே கேட்க வேண்டும் என்று நினைத்தேன், அக்கா! அத்தான் எங்கே? ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் உங்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று நினைத்தேன். உங்களைப் பற்றிய செய்தியை எனக்கு எழுதுபவர்கள் இல்லை. அக்கா! உங்கள் துன்பமும் துயரமும் நீங்கவில்லையா?" என்று பரபரப்புடன் பாஸ்கரன் கேட்டான்.

முன்பே கல்லாகிப் போன செண்பகம் சொன்னாள்: "தம்பி! துபாயில் ஏற்பட்ட கார் விபத்து ஒன்றில் அவர் இறந்துவிட்டார். நான் அவர் உடலைக் கூடப் பார்க்க முடியாத பாவியாகி விட்டேன். உம்; அந்தத் துயரம் ஏற்பட்டு, பத்து வருடங்கள் ஆகிவிட்டன. இனி, என் எதிர்காலத்தைப் பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. என் மூத்த மகளைப் பற்றித்தான் தம்பி! எனக்கு நேர்ந்த துயரச் சம்பவங்கள் அவளுக்கு நேர்ந்துவிடக் கூடாது. நல்ல மணாளனாகப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்ற ஒரே கவலைதான்" என்றாள். அடக்கி வைத்திருந்த சோகப் பிரதிபலிப்பு கண்ணீராக மாறியது.

"அக்கா! நீங்கள் கண்ணீர் விடலாமா? துயரத்திற்கும் துக்கத்திற்கும் துன்பத்திற்கும் என்றாவது விடிவு காலம் உண்டு. அடித்தளத்தில் அமுக்கப்பட்டவர்கள் என்றுமே அடித்தளத்தில் இருப்பதில்லை; அமுக்கப்பட்டிருப்பதும் இல்லை. உங்கள் பொறுமை, பிரார்த்தனை வீண் போகவில்லை. நான் வந்து விட்டேனே. இனி உங்களோடுதான் இருக்கப் போகிறேன். இன்று முதல் என் சகோதரி பெரிய பணக்காரி" என்றான்.

செண்பகம் அவனை நிமிர்ந்து பார்த்தாள். "என்ன தம்பி சொல்கிறாய்? எங்களுடன் வாழப்போகிறாயா? நாங்கள் ஒதுக்கப்பட்டவர்கள். கீழ்ச் சாதிக்காரனை நான் மணந்ததால் கீழ்ச்சாதிக்காரியாகி விட்டேன். நீ உயர்ந்த குலத்தவன்" என்று செண்பகம் கூறும்போது பாஸ்கரன் அழுத்தந் திருத்தமான குரலில், "அக்கா! உங்கள் மகளை நான் மணப்பதென்ற முடிவுடன்தான் வந்திருக்கிறேன். என்னை யாரும் தடுக்கவோ தடை செய்யவோ முடியாது. இப்போது யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர்?" என்று பாஸ்கரன் கூறும்போது அவர்களைச் சுற்றி காகங்களும், குருவிகளும் பொங்கலை ஆவலுடன் தின்றுகொண்டிருந்தன.

செண்பகத்தின் மூத்த மகள் விவரமறிந்து, நாணத்தால் முகம் சிவக்கப் படிக்கட்டு வழியே கீழே விரைவாக இறங்கிச் சென்றாள்.

விழிகளில் நிறைந்த நீர் முத்துகளை மெல்லக் கோத்தெடுத்தாள் செண்பகம்.